




கறுப்புக் கொடி மறியல்

போக்குவரத்து ஊழியர்கள் ஸ்ட்ரைக், மாணவர் போராட்டம், தொழிலாளர் வேலை நிறுத்தம் போன்றவற்றைத் தவிர பொதுவாகத் தமிழக அரசியல் அமைதியாகத்தான் நடைபெற்றுக்கொண்டிருந்தது. ஆனால், திடீரென்று வன்முறைக் கலவரங்கள் தோன்றி, அதன் விளைவாக எதிர்க்கட்சியினர் நூற்றுக்கணக்கில் கைது செய்யப்பட்டு, காவலில் வைக்கும்படி நேர்ந்திருக்கிறது. இதைத் தொடர்ந்து அரசியல் பகையை வளர்க்கும் வகையில் பேச்சும் எதிர்ப் பேச்சும் வலுக்கத் தொடங்கியிருக்கின்றன.

அண்மையில் தமிழகத்திற்கு வருகை தந்த முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி ஆட்சியின்போது தி. மு. க. மந்திரிசபை பதவி நீக்கம் செய்யப்பட்டதற்குக் கண்டனம் தெரிவிப்பதற்கு அடையாளமாக, அவர் செல்லும் இடங்களிலெல்லாம் கறுப்புக் கொடி காட்டுவது என்று தி.மு க-வும், தி.க-வும் முடிவு செய்தன. ஜனநாயக மரபுப்படி அரசு இதற்கு ஒப்புதலும் தந்தது.

ஆனால், மதுரையிலும் திருச்சியிலும் நடந்த வன்முறைத் தாக்குதல்களையும் பயங்கரக் கல்வீச்சுக்களையும் கண்ட பிறகு, அரசு தடுப்பு நடவடிக்கையாக சென்னையில் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டத்திற்குத் தடை விதித்தது. அதையும் மீறி, கூட்டம் கூடிக் கலவரம் விளைவித்ததால் மறியலுக்குக் காரணமாயிருந்த தி.மு.க.தலைவர்களையும்,தொண்டர்களையும் கைது செய்யவேண்டிய அவசியம் அரசுக்கு ஏற்பட்டது. கலவரம் மேலும் பரவி, சட்டம் அமைதி குலைவதைத் தடுப்பதற்காக துப்பாக்கிச் சூடு நடந்ததும், அதனால் இருவர் பலியாக நேர்ந்ததும் நெஞ்சை உருக்கும் செய்திகளாகும்

இந்த துப்பாக்கிச் சூடு நிகழ்ச்சியைப் பற்றி ஒரு நீதி விசாரணை நடைபெறும் என்று நேரம் கடத்தாமல் அரசு அறிவித்தது, நியாயம் வழங்கப்பட வேண்டும் என்ற அதன் ஆர்வத்தைக் காட்டியது. அதைத் தொடர்ந்து, வன்முறைக் கலவரங்களில் தி. மு. க. தலைவர்களின் பங்கைப் பற்றி சி. ஐ. டி. இலாகாவினர் விசாரணை நடத்தி வருவதாகவும் போலீஸ் கமிஷனர் அறிவித்திருக்கிறார்.

இந்நிலையில், ஆளும் கட்சித் தலைவர்களும், அமைச்சர்களும் 'தி. மு. க. சதித் திட்டம் தீட்டியது' என்றும், 'வன்முறைக் கலவரங்களை வேண்டுமென்றே தூண்டிவிட்டிருக்கிறது' என்றும் தொடர்ந்து பேசி வருவது, அரசியல் காழ்ப்புணர்ச்சியை விசிறிவிட உதவுவதோடு, நடைபெறப் போகும் விசாரணைகளுக்கும் ஊறு விளைவிக்கக்கூடும்.

பாரபட்சமற்ற விசாரணை நடைபெறுவதற்கான சூழ்நிலையை உருவாக்கித் தருவது ஆளும் கட்சியின் கடமையல்லவா?



ஒரு தலைவர் உருவாகிறார்!

நேரம் பகல் 12-30 மணி. மதுரையில் இருந்து சென்னை நோக்கி வரும் வைகை எக்ஸ்பிரஸ் செங்கல்பட்டை அடைகிறது. காலை பத்து மணிக்கே செங்கல்பட்டுக்கு வந்துவிட்ட நாகூர் பாசஞ்சர், வைகையைப் பார்த்து விஷமப் புன்னகையுடன் கேட்டது:

''தலை போற அவசரத்திலே ஓடியாந்தியே, இப்போ என்ன சொல்றே?''

''உன்னோடை வம்படிக்க எனக்கு நேரமில்லை. நான் மதராஸ் போய் உடனே மதுரைக்கு திரும்பியாகணும்... கொஞ்ச நேரத்துலே நான் கிளம்பிடுவேன்..'' — வைகை, ரொம்பவும் பெரிய மனுஷத்தனத்துடன் வீராப்பு பேசியது.

பிளாட்பாரத்து ஒலிபெருக்கி தொண்டையைக் கனைத்துக் கொள்ளாமல் கரகரப்புடன் பேசத் தொடங்கியது:

''மதுரையிலிருந்து சென்னை போகும் வைகை எக்ஸ்பிரஸ், செங்கல்பட்டை விட்டு இப்போது கிளம்பாது. அடுத்த அறிவிப்பிற்காகக் காத்துக் கொண்டிருக்கும்படி பயணிகள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்...'' — ஆங்கிலத்திலும், பிறகு தமிழிலுமாகப் பயணிகளின் வயிற்றில் புளியைக் கரைத்தது அந்த ஒலிபெருக்கி.

தபதபவென்று பயணிகள் கீழே இறங்கினார்கள். கும்பல் கும்பலாகக் கூடி நின்று பேசத் தொடங்கினார்கள்.

''சைதாப்பேட்டையில் ஒரே கலாட்டாவாம்..''

''ஸ்டேஷனையே கொளுத்திட்டாங்களாமே...!''

''கறுப்புக் கொடி காட்டக்கூடாதுன்னு ஆர்டர் போட்டதுக்கு ரியாக்ஷனா?''

''இங்கே கூட காலேலே கல் அடிச்சாங்களாம்... அதோ, டீ கொண்டு போறானே, அவன்தான் சொன்னான்..'' —ஒவ்வொரு பெட்டியின் முன்னும் இப்படிப் பலவித கமெண்ட்டுகள்!

ஒரு மீசைக்காரர் அப்போதுதான் நாங்கள் நிற்கும் இடத்துக்கு வந்து ''என்னங்க, வண்டியை இங்கே ஏன் நிப்பாட்டிட்டாங்க?'' என்று ஒன்றுமே தெரியாத பரமசாதுவாகக் கேட்கிறார்.

''மதராஸ்லே கலாட்டாவாம்.. டிரெயின்களைப் பார்த்தா ஸ்டவ் ஞாபகம் வந்துடுதாம்.. உடனே எரிய விட்டுடறாங்களாம்..''

''ஏன், எதுக்காம்?''—புதியவர் தொடர்கிறார்.

''கறுப்புக் கொடி காட்றாங்களே..''

''யார் காட்றாங்க... யாருக்கு காட்றாங்க..?''—அப்பாவியாகக் கேட்கிறார்.

''தி. மு. க. காரங்க. இந்திரா காந்திக்கு..''

''அப்படியா...!'' என்று ஆச்சரியத்துடன் கேட்டுக்கொண்டே போகிறார் அவர். அவரது நடையில் சிறு மாற்றம். பத்தடிகூட நடந்திருக்க மாட்டார். மற்றொரு கும்பலை நெருங்குகிறார்.

அங்கு நடந்துகொண்டிருக்கும் டிஸ்கஷனில் திடீரென்று தலையிட்டு,

''தி. மு. க. அரசு டிஸ்மிஸ் ஆனவுடன் ஒரு தடவை இந்திரா காந்தி சென்னைக்கு வந்தாங்களே..அப்போ ஏன் கறுப்புக் கொடி காட்டலே. இப்ப என்ன வந்ததாம்..?'' என்று கேட்கிறார்.

''எதிர்ப்பு தெரிவிக்கணும்னு இப்போதான் அவங்க மனசுலே பட்டிருக்கும்..''

''அதுக்கு கலாட்டா பண்ணணுமா?''

''யாரையா இந்த ஆள்? ஒண்ணும் புரியாத ஆசாமியா இருக்காரே....

கலாட்டா பண்ணினது, கல்லே விட்டெறிஞ்சது எல்லாம் காங்கிரஸ்காரங்க, தெரியுமா?''

''அப்படியா சேதி!'' — நியூஸைக் கேட்டுக் கொண்டே மெள்ள நழுவுகிருர், அடுத்த கும்பலின் பக்கம். இப்போது நடையில் மிடுக்கு கூடுகிறது.

''காங்கிரஸ்காரங்க ரொம்ப மோசம். தி.மு.க. கறுப்புக் கொடி காட்டினு இவங்களுக்கு என்னவாம்? அதற்காக வன்முறையில் இறங்குவதா?''—மீசைக்காரரின் தமிழே மாறுகிறது.

''அதெல்லாம் இல்லே. இப்போ தான் கேள்விப்பட்டேன்.. கலைஞரை கைது செய்துட்டாங்களாம் .. சைதாப்பேட்டையில் துப்பாக்கிச் சூடாம்..பத்து பேருக்குமேலே செத்துட்டாங்களாம்..'' —ஓடி வந்த ஒருவர் நேரில் பார்த்தது போல் கூறுகிருர். அதைக் கேட்ட மீசைக்காரருக்கு ஒரு புதிய தெம்பே பிறந்து விடுகிறது! மீண்டும் நாங்கள் நிற்கும் பக்கமே பீடு நடைபோட்டு வேகமாக வருகிருர்.

''என்ன சார் அக்கிரமமா இருக்கு.. கலைஞரைக் கைது செய்வதா? எதிர்ப்பைத் தெரிவிக்க கறுப்புக் கொடி காட்டுவது ஒரு குற்றமா? சகோதர சகோதரிகளே.. வாருங்கள், நம் உயிரைக் கொடுத்தாவது இந்த அநியாயத்தை எதிர்ப்போம்.. ஜனநாயகத்தைக் காப்போம்.... உரிமைக்குக் குரல் கொடுப்போம்..'' —இப்போது பேச்சுத் தமிழை விடுத்து மேடைத் தமிழில் பிரசங்கம் செய்ய ஆரம்பித்தார் மீசைக்காரர்.

அந்தந்த சமயத்துக்குத் தக்கவாறு 'பிளேட்டை' மாற்றிக் கொள்ளக் கற்றுக் கொண்டு விட்டார்!

பிளாட்பாரத்து ஒலிபெருக்கி உச்சஸ்தாயியில் அலறத் தொடங்கியது:

''யுவர் அட்டென்ஷன் ப்ளீஸ்.. வைகை எக்ஸ்பிரஸ் சென்னைக்குப் போகாது. அதற்குப் பதிலாக 136 வைகை எக்ஸ்பிரஸ், 135 ஆக மாறி செங்கல்பட்டிலிருந்து மீண்டும் மதுரைக்கே புறப்படும். சென்னை செல்ல வேண்டிய பயணிகள் தங்கள் இஷ்டப்படி காரோ, பஸ்ஸோ ஏற்பாடு செய்து கொண்டு செல்லுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிருர்கள்!''

''இது என்ன சார் அநியாயம்....?'' என்ருர் மீசைக்காரர். தி. மு. க-வையும் கருணநிதியையும் மறந்து, திடீர் என்று அந்தர்பல்டி அடித்தார். காற்றடிக்கும் திசையை நோக்கித் திரும்பினுர்.

''ரயில்வே நிர்வாகத்தை விடக் கூடாது'' என்று முழங்கினுர்.

''ஆமாம்.. விடவே கூடாது..''

—அவருடைய திடீர் தொண்டர்கள் கூடவே குரல் கொடுத்தார்கள்.

ஸ்டேஷன் மாஸ்டர் அறையை நோக்கிப் படையெடுத்தார் 'தலைவர்'. அவர் கையில் கொடியோ, கழுத்தில் மாலையோ இல்லாததுதான் பெருங் குறை!

''திடீரென்று எங்களை சொந்த ஏற்பாடு பண்ணிக்கொள்ளச் சொன்னுல் என்ன அர்த்தம்? அடுத்த வைகை வரும் வரை நாங்கள் அசைய மாட்டோம்.... 136, 135ஞ்சா மாறினு எங்களுக்கு என்ன..? அது 235-ஞ்சா மாறினுத்தான் எங்களுக்கு என்ன? இப்போ எங்களுக்கு ஒரு வழி சொல்லியாகணும்.. யாருக்கு யார் கறுப்புக் கொடி காட்டினுல் எங்களுக்கென்ன? யாரைக் கைது செய்தால் எங்களுக்கென்ன.... அரசியலே தெரியாத, தெரிந்து கொள்ள விரும்பாத எங்களை இப்படி நட்டாற்றில் தவிக்க விடுவது அநியாயம்.. அக்கிரமம்.. தக்க பதில் கிடைக்கும்வரை நாங்கள் ஓய மாட்டோம்...''—மீசைக்காரரின் ஆக்ரோஷமான பேச்சு நீண்டுகொண்டே போகிறது. சற்று முன் ஏதுமே அறியாமல் இருந்தவர், சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு எல்லாம் அறிந்தவர் போல் பேசத் தொடங்கி விட்டார்!

பத்தே நிமிடத்தில் அங்கே ஒரு தலைவர் உருவாகி விட்டார்!

—குமரன்

61 வயதினிலே..!

மெரீனா—

1. பால லீலைகள்

சோவியத் ருஷ்யாவில் புரட்சி ஏற்பட்ட அதே வருஷம், அதே அக்டோபர் மாதம், அதே தினத்தில் இந்தியாவில் மற்ருெரு முக்கியமான நிகழ்ச்சி நடைபெற்றது. அன்றைய தினம் சென்னை நகரில் சரவணன் பிறந்ததுதான் அந்த முக்கிய நிகழ்ச்சி. ''யார் இந்த சரவணன்?'' என்று கேட்கிறீர்களா, என்ன, முன்பின் யோசிக்காமல் இப்படிக் கேட்டு விட்டீர்கள்? இவர் தான் '61 வயதினிலே' கதாநாயகன்... ஸாரி, கதாநாயகர்!

சோவியத் புரட்சி தனது அறுபதாவது ஆண்டு விழாவைக் கோலாகலமாகக் கொண்டாடிக் கொண்டிருக்கும் இந்நேரத்தில், சரவணனும் தனது அறுபதாவது வயதைக் கடந்து, 61 வயதினில் 'ஜாம் ஜாம்' என்று பீடு நடை போட்டுக் கொண்டிருக்கிருர். பாவம், யாருமே அவருக்கு மணிவிழா நடத்திப் பண முடிப்புக் கொடுக்கவில்லை. காரணம், அவர் ஓர் அரசியல்வாதியாகவோ எழுத்தாளராகவோ இல்லாமல் இருப்பதுதான்!

கதாநாயகர் என்ருல் அவரது பால பருவத்தைப் பற்றிக் கூருமல் இருப்பது மரியாதை இல்லை என்பதால் இங்கு கொஞ்சம் சொல்ல வேண்டியிருக்கிறது. மற்றபடி அது ஒன்றும் அத்தனை மரியாதைக்குரியதல்ல!

சரவணன் பிறந்தது புரசைவாக்கத்தில். சரவணப் பெருமாள் முதலித் தெரு என்ற வேட்டைக்காரன் தெருவில். தெருவின் பெயருக்கும், அவருக்கு சரவணன் என்று நாமகரணம் சூட்டப்பட்டதற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. துபாஷ் சரவண முதலியாரின் பேரனுகப் பிறந்துவிட்ட ஒரே காரணத்திற்காக அவருக்கு அந்தப் பெயர் வைக்கப் பட்டது, அவ்வளவுதான்.

பெற்ருேர் தவம் செய்யாமலே பிறந்து, நாளொரு நோயும் பொழுதொரு கவலையுமாக வளர்ந்து அவர் கொட்டை போட்ட (மாங்கொட்டை, பலாக் கொட்டை, புளியங்கொட்டை முதலியன) அந்தத் தெருவுக்கு 'வேட்டைக்காரன் தெரு' என்ற பெயர் ஏன் ஏற்பட்டது என்று சரவணனுக்கு இன்றுவரை தெரியாது. அதைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற முயற்சியும் அவர் எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. ஆனுல், வேட்டைக்காரத் தெருவில் பிறந்ததாலோ என்னவோ, தனது இள வயதிலேயே—அதாவது ஏழெட்டு வயதிலேயே, சரவணன் அந்தப் பேட்டையெங்கும் வேட்டைக்குச் செல்லத் தொடங்கினுன். அப்போதெல்லாம் பிரதான மந்திரி முருகேசனையும் தளபதி கபாலியையும் உடன் அழைத்துச் செல்லத் தவறமாட்டான் சரவண மன்னன்!

வேட்டைக்கு என்று சொன்னேன் அல்லவா? சரவணன், தெருத் தெருவாகச் சென்றது பறவை வேட்டைக்குத்தான். ஆனுல், வழியில் ஓணுனையோ, நாயையோ கண்டுவிட்டால் குறி பார்க்காமல் விடமாட்டான். ஒன்றும் சிக்காவிட்டால், அந்த வெறுப்பில் தெருவிளக்கு பல்பு ஒன்றையாவது 'சுட்டு' விட்டுத்தான் திரும்புவான். ஒரு சமயம், தென்னை மரத்திலிருந்த கள் பானையொன்றை 'சுட்டு', கள் எல்லாம் கீழே கொட்டிய காட்சியைக் கண்டு ரசித்திருக்கிருன்.

சரவணன் அந்தக் கால மன்னர்களைப் போலவே வில்லுடன்தான் வேட்டைக்குப் போவான்! ஆனுல் அது கவுண்டி வில்! அம்புகளுக்குப் பதிலாகச் சிறு கற்களைத்தான் எடுத்துச் செல்வான். அரை நிஜார் பாக்கெட்டுத்தான் அவனுடைய அம்புராத்தூணி!

சரவணனிடம் நிருபர் யாராவது, ''உங்களுடைய இளமைப் பருவத்தில்

நடந்த மறக்க முடியாத சம்பவம் என்ன?'' என்று கேட்க நேர்ந்தால், ஒரு நாள் மில்லர்ஸ் ரோடு கில்லி தோப்பில் குருவி ஒன்றை அடிக்கப்போய், மாங்காய் ஒன்று கீழே விழ, அதை எடுத்து கடிக்கும்போது தோட்டக்காரன் ஓடி வந்து, தன்னை மரத்தில் கட்டி வைத்துப் பூஜை நடத்திய நிகழ்ச்சியைத் தான் கூறுவார். அதை அவர் மறந்ததே இல்லை. ஏனெனில், அன்றுதான் தமது 'வில்'லைத் தூக்கி எறிந்துவிட்டு வில்லுக்கும் கல்லுக்கும் 'குட் பை' சொன்னார்.

'வாலு போச்சு கத்தி வந்தது டும் டும்' என்பதுபோல், சரவணனுக்கு வில்லு போய் துப்பாக்கி வந்தது. தீபாவளிக்காக அவனுடைய பம்பாய் மாமா வாங்கித் தந்த பொம்மைத் துப்பாக்கியை வைத்துக் கொண்டு, தெருத் தெருவாய் அலைந்திருக்கிறான். அதில் 'கேப்'பை வைத்துப் பையன்களுக்குப் பின்னால் ரகசியமாகச் சென்று "டமால்' என்று வெடித்து அவர்களைப் பயமுறுத்தி அதைக் கண்டு சிரித்திருக்கிறான். இவனைவிடச் சிறுவர்களாகத் தேடிப் பிடித்து 'சுட்டுடுவேன்' என்று கூறி அலற வைத்திருக்கிறான்.

அவனைவிடப் பெரிய பையன்களையும் ஒரு சமயம் பயமுறுத்தி யிருக்கிறான் சரவணன். திடீரென்று ஒரு நாள் பள்ளிக்கு ஒரு மிலிட்டரி துப்பாக்கியுடன் வந்தான் அவன். அது அவனைவிட உயரமாக இருந்தது. அதைக் கையில் வைத்துக் கொண்டு சுடுவதுபோல் அவன் குறி பார்த்தபோது, அங்கு பெரியதொரு ஷூட்டிங் நடந்து, 'ஜாலியன் வாலாபாக்' படுகொலை மீண்டும் நிகழப் போகிறது என்று நடுநடுங்கி, பையன்கள் நாற்புறமும் சிதறி ஓடி, ஹெட்மாஸ்டரிடம் சென்று முறையிட்டார்கள். சரவணனை உடனே போலீசில் பிடித்துக் கொடுக்க வேண்டும் என்று கூக்குரல் எழுப்பினார்கள். இதைக் கேட்டு ஹெட்மாஸ்டரே ஒரு கணம் பயந்து போய், பள்ளிக்கூட ப்யூன்கள் இருவரை அனுப்பி வைத்தார். அவர்கள் மெள்ளப் பதுங்கியவாறு சென்று பின்னாலிருந்து





“உன் கன்னத்தில் நீர் வழிந்தால் என் பர்ஸ் காலியாகுதடி கண்ணம்மா...!’’

—சுதர்ஸன்

●

சரவணனைப் பிடித்துத் துப்பாக்கியைக் கைப்பற்றி, ஹெட்மாஸ்டர் முன் கொண்டு வந்து நிறுத்தினார்கள். விசாரணையின்போது, சரவணனின் மிலிட்டரி சித்தப்பா எங்கிருந்தோ கொண்டு வந்து ரிப்பேருக்காக வீட்டில் வைத்திருந்த துப்பாக்கியை அவருக்குத் தெரியாமல் எடுத்து வந்து, விளையாட்டுக்காகச் சுடுவதுபோல பையன்களைப் பயமுறுத்தியதாக ஒப்புக்கொண்டான். இந்த 'ஜாலியன் வாலாபாக்' லீலைக்காக ஒரு நாள் 'பெஞ்சின் மீது' நின்றான் சரவணன்!

சரவணனின் பால லீலைகளான கில்லி, காத்தாடி, பம்பரம், கோலி போன்றவற்றின் சீசன்கள் மாறி மாறி வந்து கொண்டேயிருக்கும். ஒவ்வொரு சீசனையும் தொடங்கி வைத்தது யார் என்று தெரியாது. கூடிப் பேசி, தேதி குறிப்பிட்டது போல் எல்லோரும் திடீரென்று ஒருநாள் அந்த விளையாட்டில் ஈடுபடுவதைக் கண்டு சரவணன் அதிசயித்திருக்கிறான். கில்லி சீசன் ஆரம்பித்து விட்டால் தண்டு சீவ உட்கார்ந்து விடுவான். காத்தாடி காலம் என்றால், 'மாஞ்சா' போடுவதில் தீவிர கவனம் செலுத்துவான். மாஞ்சா என்றால் சும்மாவா? கிளாஸ் பொறுக்க வேண்டும், மாஞ்சா மருந்துகள் வாங்க மருந்து கடைகள் ஏறி இறங்க வேண்டும். சில மருந்துகளின் பெயர்களைப் பரம ரகசியமாக வைத்துக் கொள்ள வேண்டும். கிளாஸை இடித்து, பொடி பண்ணி, வஸ்திரகாயம் செய்து, இடித்த மருந்துகளுடன் அதை அளவோடு கலந்து, மாஞ்சா போடுவதில் சரவணன் 'எக்ஸ்பர்ட்' என்று பெயர் வாங்கினான். அதற்காக சனி, ஞாயிறு இரு தினங்களும் அவனுக்கு 'ஹெல்ப்' பண்ண ஒரு பட்டாளமே தயாராய் நிற்கும். லீடரின் கண் அசைவிற்காகக் காத்திருக்கும்.

காத்தாடி சீசன் போய் பம்பரம் சீசன் வந்தால்போதும்; அவன் பாக்கெட்டில் பம்பரங்களும் ஜாட்டிகளும் நிரம்பி விடும். கோலி சீசன் தொடங்கி விட்டாலோ, பம்பரம் பரணுக்குப் போய் விடும். பாக்கெட்டுகளில் பல தினுசான கோலிக்குண்டுகள் இடம் பெறும். குழி ஆட்டமும் முட்டி காய்ச்சுவதும் அவனுக்கு அவ்வளவாகப் பிடிக்காது. 'இரண்டு சின்ன கோலிகளைப் போட்டு பெரிய கோலியால் அடிக்கும்' விளையாட்டு என்றால் உயிரையே விட்டு விடுவான். அந்தக் காலத்தில் அதற்கு சிகரெட்டு பாக்கெட்டுகளை வைத்துத் தான் பந்தயம் கட்டுவார்கள். கோல்டுபிளேக் சிகரெட் பெட்டியின் மேல்அட்டை ஆயிரம் ரூபாய்; கீழ்அட்டை ஐந்நூறு ரூபாய். மதிப்பில், அடுத்தது ப்ளேயர்ஸ் நேவிகட். எலிபெண்ட்மார்க்கும் ஸிஸர்ஸூம் அதை விடக் குறைந்த மதிப்பு. தெருத் தெருவாய் அலைந்து இந்த பாக்கெட்டுகளைப் பொறுக்குவது அந்த சீசனின் முக்கிய காரியமாகி விடும். ஷோ முடிந்ததும் குளோப் தியேட்டர் (இப்போது ராக்ஸி) பக்கம் போனால், வெளியே உள்ள குப்பைத் தொட்டியில் பலரகப்பட்ட சிகரெட் பாக்கெட்டுகள் கிடைக்கும். சில அபூர்வ வெளிநாட்டு பாக்கெட்டுகள் கிடைத்தால் அதற்கு எத்தனை மதிப்பு நிர்ணயம் செய்வது என்பது பெரிய பிரச்னையாகிவிடும். அதற்காக மகாநாடே கூடிப் பொது முடிவு எடுப்பார்கள். குப்பைத் தொட்டியிலிருந்து 'லட்சக் கணக்கில்' சம்பாதித்துக் கொண்டு, நிமிர்ந்த மார்போடு, 'தன்னிடம் பந்தயம் கட்ட உலகில் ஆளில்லை' என்பதுபோல் புரசைவாக்கம் ஐரோடில் வீறு நடைபோட்டு நடப்பான்.

வருடம் பூராவும் அடுத்தடுத்து வரும் இந்த சீசன்களில் முழுக்கவனம் செலுத்த வேண்டியிருந்ததால், விளையாட்டு சீரியஸ் விஷயமாகி, சரவணனுக்குப் படிப்பு என்பது ஒரு பொழுதுபோக்காகி விட்டது! லூதர்மிஷன் ஹைஸ்கூலில் பொழுது நன்றாகப் போனதால், அதை விட்டு விரைவில் வெளியேற மனமில்லாதவனாக, அவசரமோ அவமானமோ படாமல் ஒவ்வொரு வகுப்பிலும் அ

அமரத் தங்கி, உல்லாசமாகப் பொழுதைக் கழித்து வந்தான்.

பிற்காலத்தில், தன் பள்ளி நாட்களைப் பற்றிப் பிறரிடம் பேசும்போது படிப்பைப்பற்றியோ, மார்க்குகளைப் பற்றியோ பெருமை அடித்துக்கொள்ள ஒன்றுமில்லாத காரணத்தால், அப்போது நிலவிய அரசியல் கொந்தளிப்பைப்பற்றி வீராவேசமாக நினைவு கூர்வது சரவணனுக்கு மிகவும் பிடித்திருந்த பொழுது போக்கு.

காந்திஜியின் சத்யாக்ரக இயக்கத்தின்போது போலீசாரிடம் தானும் அடிபட்டதாகப் புளுகுவதில் அவருக்கு அலாதி திருப்தி. அந்தப் பொய்யை மெய் என்று பிறரைநம்ப வைக்கத்தனது வலக்கால் முட்டியில் இருக்கும் ஒரு தழும்பைக் காட்டுவார். அந்தத் தழும்பு எப்படி ஏற்பட்டது என்பதை அவர் மறந்து விட்டிருந்தாலும், நிச்சயமாக அது போலீஸ் லத்தியால் ஏற்பட்டது அல்ல என்பது அவருடைய மனச்சாட்சிக்குத் தெரியும். கிட்டத்தட்ட நூறு பேரிடம் அது லத்தி அடியால் ஏற்பட்ட காயம் என்று அவர் சாதித்த பிறகு, தானும் அதையே நம்ப ஆரம்பித்து, தன்னை ஒரு தியாகியாகக் கூடக் கற்பனை செய்து கொள்வது உண்டு.

பண்டித மோதிலால் நேரு மாண்ட போது சென்னையில் நடந்த மறியல்களை நேரில் கண்டதுபோல் வர்ணிப்பார் சரவணன். உண்மையில் அன்றைய தினம் அவர் வீட்டைவிட்டு வெளியே செல்ல அனுமதிக்கப்படவில்லை. இவரும் இன்னும் நாலைந்து பேரும், காரில் சென்ற ஒரு வெள்ளைக்காரக் குடும்பத்தை வழிமறித்து, அவர்களைக் காரை விட்டு இறங்க வைத்து, 'வந்தே மாதரம்', 'மகாத்மா காந்திக்கு ஜே', 'மோதிலால் நேருவுக்கு ஜே' என்று முழங்க வைத்த பிறகே மீண்டும் செல்ல அனுமதித்தார்களாம்! ஆபீசில் இளைஞர்களை வைத்துக் கொண்டு கற்பனையில் கண்ட இந்த வீரசாகசச் செயலைப் பற்றி மணிக் கணக்காக அளப்பார். சிலர் நம்புவார்கள். சிலர் ''சும்மா டுப் அடிக்காதீங்க ஸார்'' என்று கிண்டல் செய்து விட்டுப் போவார்கள்.

சரவணனுக்கு குஷி பிறந்து விட்டால், 'பண்டித மோதிலால் நேருவைப் பறி கொடுத்தோமே—பறி கொடுத்தோமே, மனம் பரிதவித்தோமே...' என்ற அந்தக் காலப் பாடலை உச்சஸ்தாயியில் பாடிக் காட்டுவார். அவருடைய பிள்ளைகளும் பெண்ணும் அதைக் கேட்டுக் கை கொட்டிச் சிரிப்பார்கள். அப்போது மோதிலால் நேரு யார் என்பதுகூடத் தெரியாத ... இறந்தவரைப் பற்றிய அந்தப் பாடலைப் புரசைவாக்கம் ஆதியப்ப முதலி தெருவில் 'ஜாலியாக' பாடிக் கொண்டு சென்ற நாட்களை நினைத்தால் அவருக்கே சிரிப்பு வரும்.

ஆபீசில் யாராவது தேர்தலைப் பற்றிப் பேச்சை ஆரம்பித்தால்போதும், பழைய நினைவுகள் அவர் முன்பு வந்து குதிக்கும்..

''இதெல்லாம் என்ன தேர்தல்? அந்தக் காலத்திலே சத்தியமூர்த்திக்கும் சர் ஏ. ராமசாமி முதலியாருக்கும் மத்திய சட்ட சபைக்காக நடந்துதே, அது தேர்தல்! இப்ப ஒத்தரையொருத்தர் நாக்குலே நரம்பில்லாமெ திட்டிக்கறுங்களே..... சே.....! அப்போ அவங்க ரெண்டு பேரும் ஜென்ட்டில்மென் மாதிரி பேசிப்பாங்க, பழகுவாங்க...! ரெண்டு பேரும் ஒரே மேடையிலே பேசுவாங்க.... ஒண்ணு ஓட்டு கேக்க வருவாங்க... எலெக்ஷன்னு அது எலெக்ஷன்... இப்போ நடக்கிறதெல்லாம் பிஸாத்து எலெக்ஷன்'' என்றுநன்ருக அறுக்க ஆரம்பித்து விடுவார். 'யாருக்கு ஓட்டுப் போட்டீங்க?' என்று நண்பர் கேட்டால் போதும், ''அட போடா, எவனுக்கோ ஒத்தனுக்குப் போட்டேன். யாருக்குப் போட்டா என்ன, எல்லாரும் ஒரே குட்டையிலே ஊறின மட்டைங்கதான். அத்தனை பேரும் சுயகாரியப் புலிங்க... நம்ம ஓட்டை வாங்கிக்கினு நம்பளுக்கே நாமம் போடுவானுங்க... பிஸாத்துப் பசங்க'' என்பார்.

இப்படித்தான் இரண்டு நாட்களுக்கு முன், பனகல் பார்க்கில் தினம் நடைபெறும் 'ஓய்வு பெற்ருேர் மகாநாட்டில்' அரசியலையும் அரசியல்வாதிகளையும் ஆசை தீரத் திட்டிவிட்டு சரவணன் வீட்டுக்குள் காலடி எடுத்து வைத்த போது அவர் முகம் 'கடுகடு'வென்றிருந்தது.

''பங்கஜம்'' என்று ஒரு சத்தம் போட்டார்.

''என்னங்க?'' என்ருள் பங்கஜம் வெளியே வந்து.

''அந்த தடி ராஸ்கோல் கிரிக்கெட் கிரௌண்டிலேருந்து வந்துட்டானு? இவனுக்கு எந்நேரமும் கிரிக்கெட்டுதான்.. தெருத் தெருவா நின்னு பேசிக்கிட்டு... தூ.. படிப்பு எழுத்தே கிடையாது...'' என்று இரைந்தார் சரவணன்.

''ஆமா, உங்க காலத்திலே நீங்க தெருத் தெருவா போய் கில்லி விளையாடினீங்க... இப்போ இவன் கிரிக்கெட்டு விளையாடருன். ஏன் சத்தம் போடறீங்க? மானம் போவுது.. உள்ளே வாங்க'' என்ருள் பங்கஜம்...

—தொடரும்

புதிய ஸுமீத் வீட்டுத்தலைவிகளுக்கு வியப்பூட்டுகிறது!

“இது மிக்ஸரைவிட அதிக பயனுள்ளது... இது ஒரு முழுமையான கிட்சன் மெஷீன்!”



400 வாட், 230 வோ. ஏஸி/டிஸி 30 நிமிட ரேடிங்

QBM 7356 TM

புதிய ஸுமீத் வியக்கத்தக்கது. இதன் வகையில் இது இந்தியாவிலேயே முதலாவது. இப்பொழுது, எளிதில் சுத்தம் செய்யக்கூடிய, சுகாதாரமான ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் ஜாடியுடன் கிடைக்கிறது. ஜாடியின்மீதுள்ள அக்ரிலிக் மூடி வழியாக உள்ளே நன்றாகப் பார்க்க முடியும். இதில் ஈரமான மற்றும் உலர்ந்த பண்டங்களை அரைக்க மூன்று அலகு அமைப்புகள் உள்ளன. தவிர இவற்றால் கடையலாம், கலக்கலாம் மற்றும் சாறு பிழியலாம். சப்பாத்தி, பூரி மற்றும் அப்பளத்துக்காகவும் விழுது போன்ற மாவு தயாரிக்க விசேஷ மாவு பிசையும் இணைப்பு பாகம் உள்ளது; கேக் மாவுக் கலவையை நன்றாகக் கலப்பதற்கு விசேஷ கேக் ஹூக்; இவற்றுக்கெல்லாம் பின்பலமாக. 30 நிமிடங்கள் வரை நிற்காமல் ஓடக்கூடிய வலுவான ஹெவி-ட்யூடி மோட்டார்.

இவை அனைத்தும் உங்கள் சமையல் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கெனவே விசேஷமாக வடிவமைக்கப்பட்டவை; உங்களுக்கு ஒரு மிக்ஸர் மட்டுமின்றி, ஒரு முழுமையான ‘கிட்சன் மெஷீன்’ தருவதற்காகத் தயாரிக்கப்பட்டவை. சரி வாருங்கள், அது இயங்குவதை நேரிலே காண்போம்.

புதிய ஸுமீத் மாவு பிசையும் இணைப்பு பாகம் இன்றியும் கிடைக்கிறது, சிக்கன விலையில். தவிர, மாவு பிசையும் இணைப்பு பாகத்தைத் தனியாகவும் வாங்கலாம். உங்களிடம் உள்ள ஸுமீத் மிக்ஸரில் அதைப் பொருத்தி, ‘கிட்சன் மெஷீனாக’ உபயோகித்துக் கொள்ளலாம்.

PCA பவர் கன்ட்ரோல் அண்ட் அப்ளையன்ஸஸ் கம்பெனி

61 வயதினிலே..!

மெரீனா —

2. காதல் லீலைகள்

மா பெரும் ருஷ்யப் புரட்சி நடைபெற்ற தினத்தன்று பிறந்ததாலோ என்னவோ, சரவணன் அந்தக் காலத்திலேயே ஒரு புரட்சியைச் செய்து காட்டினார். அவரது பரம்பரையில் அதுவரை யாருமே காதல் திருமணம் செய்து கொண்டதில்லை. அந்தப் புரட்சிக்கு வித்திட்டு, அதை வெற்றிகரமாக நடத்தி, குடும்பத்தையே ஒரு கலக்குக் கலக்கிய பெருமை அவருக்கு உண்டு. காளைப் பருவத்தின் காதல் லீலைகள் சரவணனின் வாழ்க்கைச் சரிதத்தில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படாவிட்டாலும், 'அட் லீஸ்ட்' 'எவர்சில்வர்' எழுத்துக்களிலாவது பொறிக்கத்தக்கவையாகும்!

கல்வியை ஒரு பொழுதுபோக்காகக் கருதிய சரவணன், எஸ்.எஸ்.எல்.சி. கோட்டையைப் பிடிக்கப் படாதபாடு பட்டான். கோட்டை வாசலை நெருங்கியபோதே அவனுக்குப் பதினெட்டு வயது நிரம்பி விட்டிருந்தது. மும்முறை முயன்று, முழுமூச்சுடன் தாக்கி, அதைத் தகர்த்து, கோட்டையினுள் நுழைந்தபோது கிட்டத்தட்ட இருபத்தோரு வயதாகி விட்டது! பச்சையப்பன் கல்லூரியில் இன்ட்டர் சேர்ந்தபோது அவன் பையன் இல்லை, பையர்! கருகருவென்று மீசை வளர்ந்திருந்த ஆண் மகன். ஆசிரியர்கள் சற்று மரியாதையுடன் நடந்து கொள்ள வேண்டியிருந்த 'பர்சனலிடி'! இப்போதெல்லாம் சரவணன், கில்லியோ கோலியோ விளையாடுவதை விட்டு விட்டு, சுப்ரமணிய பிள்ளைத் தெரு சிறிய மைதானத்தில் 'பாட்மின்ட்டன்' ஆடினான். பூந்தமல்லி சாலையிலுள்ள 'லேக்'கில் புட்பால் விளையாடினான். மில்லர்ஸ் ரோடு தோப்பில் தெருக்கூத்துப் பார்ப்பதை விடுத்து, ராக்ஸி தியேட்டரில் இங்கிலீஷ் சினிமாக்கள் பார்க்கத் தொடங்கினான். பாக்கெட்டில் பம்பரத்திற்குப் பதில் சிகரெட் பாக்கெட்டும் வத்திப் பெட்டியும் இருந்தன!

இளங் காளையாகிவிட்ட சரவணனுக்கு இணை பிரியாத தோழன் ஒருவன் கிடைத்தான். முதன் முதலில் அவனது பழக்கம் ஏற்பட்டது ஸ்ரீ கங்காதரேச்வரர் தெப்போற்சவத்தின்போது. அதுவும், குளத்தைச் சுற்றி வந்த தெப்பத்தில் அமர்ந்து, நாதசுர இசையிலும், தேவதாசியின் அபிநயத்திலும் அவன் மனத்தைப் பறி கொடுத்துக் கொண்டிருந்த போது அந்தத் தோழன் எங்கிருந்தோ திடீரென்று வந்து குதித்தான். கண்ணுக்குப் புலப்படாத அந்த நண்பன் கண்ணுக்குத் தெரியாத மலர் அம்பைத் தொடுத்தான். அது சரவணன் மனத்தைத் துளைத்துப் பூரிக்கச் செய்தது. பொல்லாதவனாயிற்றே இந்த மன்மதன்!

தெப்பம் ஒரு பக்கமாகச் சாய்ந்தது. அது கவிழ்ந்து விடுமோ என்று பயந்த சரவணன் சட்டென்று எழுந்து நின்று கலவரத்துடன் ஒரு நாட்டிய 'போஸ்' கொடுத்தான். அந்தக் கணம் எதிர் மூலையிலிருந்து 'களுக்'கென்று ஒரு சிரிப்பொலி கேட்டது. அந்தத் திசையில் சரவணன் தன் பார்வையைத் திருப்பிய போது, ஒரு பெண் சட்டென்று தன் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள். அது மின்வெட்டோ? அவள் ஒரு தேன்சிட்டோ?

சரவணனுக்கு 'குப்'பென்று வியர்த்துக் கொட்டியது. தேவதாசியின் நாட்டியத்தைப் பார்ப்பதை விடுத்து, 'களுக்' ஒலி வந்த மூலையையே பார்க்கத் தொடங்கினான். அந்தப் பெண்ணின் கண்ணிமைகள் துடியாய்த் துடித்தன. அதைக் கண்டு சரவணனின் இதயம் துடியாய்த் துடித்தது. இதைக் கண்டு மன்மதன் விஷமச் சிரிப்பு சிரித்தான்!

மறுநாளிலிருந்து சரவணனின் நடமாட்டம் சுந்தரம் பிள்ளைத் தெருவின்

பக்கம் திரும்பியது. மன்மதனின் சதியால் தெப்பத்தில் அவன் சிந்தையைக் குலைத்த பங்கஜத்தின் வீடு அங்குதான் இருந்தது. தெப்பம் முடிந்ததும் அவளைத் தொடர்ந்து சென்று அவள் வீட்டைக் கண்டுபிடித்துக் கொண்டு வந்தான் சரவணன். அன்று இரவு பூராவும் அவன் தூங்கவில்லை. 'பொழுது எப்போது விடியும், காலையில் அந்தப் பக்கம் எப்போது போகலாம்?' என்றே சிந்தித்துக் கொண்டிருந்தான்.

திடீரென்று தினம் காலையில் ஒரே 'ரூட்'டில் ரெகுலராக 'வாக்' போகத் தொடங்கிய சரவணன், முத்தியால் செட்டித் தெருவில் நுழைந்து, பிரதிட்சணமாக நடந்து, சுந்தரம் பிள்ளைத் தெரு வழியாக வருவான். வழியில் 'என்ன இந்தப் பக்கம்?' என்று கேட்பவர்களிடம் ஆளுக்கொரு பொய்யைச் சொல்லுவான். காலேஜ் விட்டதும் சுந்தரம் பிள்ளைத் தெரு வட்டாரத்தில் தான் காம்ப்! பாட்மின்ட்டன் போச்சு! புட்பால் போச்சு. படிப்பு போச்சு. பங்கஜம் பங்கஜம் பங்கஜம்தான்! உலகமே தனக்கும் அவளுக்காகவும்தான் இருப்பதாக நினைத்தான்.



கோயிலுக்கு அதிகம் போகாத சரவணன் ஸ்ரீகங்காதரேச்வரரின் தீவிர பக்தனானான். பங்கஜாட்சி அம்பிகை சந்நிதியில் கண் மூடி நின்றான். அம்பிகையின் பெயரையே தாங்கியிருந்த கன்னிகையை நினைத்து ஏங்கினான். வெள்ளிக்கிழமைகளில் அவள் அங்கு நிச்சயம் வருவாள் என்று அவனுக்குத் தெரியும். அவளை, அருகில் காண வேண்டும் என்று துடிப்பான். அருகில் கண்டு விட்டாலோ, அசடுவழிவான். உடலெல்லாம் வியர்த்துக் கொட்ட, திடீரென்று ஒரு திகில் அவனைக் கவ்விக் கொள்ளும். தப்பித் தவறி அவளது கண்கள் அவனை நேருக்கு நேர் சந்தித்து விட்டாலோ, 'ஷாக்' அடித்தவன்போல் அதிர்ந்து விதிர்ந்து போய் விடுவான்.

இவ்வாறு ஒரு வருடத்திற்கு மேல் ஒருதலைப் பட்சக் காதலாகைப் பயித்தியம் பிடித்துத் திரிந்த சரவணன், பங்கஜத்தின் மனத்தைத் தெரிந்து கொள்ள பட்டபாடு, அப்பப்பா! அது அவனுக்கும் கங்கையைத் தலையில் வைத்திருக்கும் ஈச்வரருக்கும்தான் வெளிச்சம்!

நாற்பது ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால், ஓர் இளைஞனும் 'இளைஞி'யும் ஒருவரையொருவர் ஊரறிய விரும்புவது என்பது அத்தனை சாதாரண விஷயமல்ல. காதல், இலைமறைவு காய்மறைவாய் இருந்த 'கர்நாடக' காலம் அது. அப்போது 'ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன்' என்று நண்பனிடம் கூறுவதற்குக்கூட வாலிபன் தயங்குவான். இப்போது, 'நாங்கள் இருவரும் காதலர்கள்' என்று சர்வ சாதாரணமாக, 'ஓட்டலில் காப்பி சாப்பிட்டேன்' என்பது போல் அத்தனை 'காஷுவலா' கூறுவது தான் பாஷன். அப்படிக் கூறவிட்டால் தனக்கு நாகரிகப் பட்டம் கிடைக்காது என்பதற்காக ஒருத்தியைக் காதலிப்பதாக பொய் சொல்லும் காலம் இது.

சரவணன் தன் 'காதலை'ப் பரம ரகசியமாகவே வைத்திருந்தான். தளபதி கபாலியிடம்கூட அதைப் பற்றி மூச்சு விடவில்லை. ஏக்கப் பெருமூச்சே துணையாக, தன்னந் தனியாக அலைந்து திரிந்து கொண்டிருந்தான். ஒரு நாள் பங்கஜத்திடம் ஏதாவது பேசிவிட வேண்டும் என்று தனக்குத்தானே ஏதேதோ திட்டங்கள் தீட்டுவான். அவற்றைச் செயல் படுத்த வாய்ப்புக் கிடைத்தபோது தைரியம் வராது. வெற்றிகரமாக வாபஸ் வாங்கி விடுவான்!

வேளை வந்தது. ஒருநாள் மாமூல்படி 'வாக்' போகும்போது, பங்கஜத்தின் தந்தை மோகனரங்க முதலியார், ஜட்கா வண்டிக்காரர் துலுக்காணத்திடம், 'வூட்லே மூர்மார்க்கெட் போகணுங்கறுங்க.. சாயரட்சை நாலு மணிக்கு வா' என்று சொன்னதை, கூர்மையாகத் தீட்டிவைத்திருந்த அவனது காது கேட்டு விட்டது. இந்த அரிய வாய்ப்பை நழுவ விடலாமா?

அன்று மாலை மூன்றரை மணிக்கே டாணா தெரு முனைக்குச் சென்று, ஒரு டிராமில் ஏறிக்கொண்டு மூர்மார்க்கெட்டுக்குச் சென்றான் சரவணன். அங்கு அரையணாவுக்கு வேர்க்கடலையை வாங்கிக் கொரித்துக் கொண்டே, துலுக்காணத்தின் ஜட்கா வருகிறதா என்று ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தான். அருகில் செப்படி வித்தைக்காரர் பாம்புக்கும் கீரிக்கும் சண்டை விடப் போவதாக ஆசை காட்டிக் கொண்டே, கூட்டத்தினரிடம் தனது 'மந்திர' தாயத்தை விற்றுக்கொண்டிருந்ததைக் கண்டான். 'இந்த தாயத்தை முண்டாவில் கட்டிக் கொண்டால் எந்தப் பொண்ணையும் வசியம் செய்யலாம்' என்று மோடி மஸ்தான் கூறிய போது, தானும் ஒன்று வாங்கி வைத்துக் கொண்டால் என்ன என்று தீவிரமாக யோசித்தான். ஒரு வருஷமாக வெட்கம் மானத்தை விட்டு, கழுதையாகச் சுற்றி, நாயாக அலைந்தும் பங்கஜம் அவனைத் திரும்பிக்கூடப் பார்க்காதது 'வசியக் கோளாறு' என்றே அவனுக்குத் தோன்றியது. தாயத்து தன் முண்டாவில் இருந்தால், பங்கஜம் ஓடோடி வந்து தன் கழுத்தை இறுகக் கட்டிக்கொண்டு 'இத்தனை நாள் உங்களை அழவைத்ததற்கு மன்னியுங்கள்' என்று கூடக் கூறலாம் என்று நம்பினான். 'ஒரு வேளை அப்படி நடந்துவிட்டால், மூர்மார்க்கெட்டில் அத்தனை பேருக்கு மத்தியில் தன் மானம் கப்பலேறி விடுமே' என்று அஞ்சி தாயத்து வாங்கும் எண்ணத்தையே கைவிட்டான்.

அங்கு வரும் ஜட்கா வண்டிகளையெல்லாம் ஒன்று விடாமல் ஆராய்ந்து கொண்டிருந்தான் சரவணன். ஐந்து மணிக்கு மேலாகி விட்டது. புரசைவாக்கத்தில் நாலு மணிக்குப் புறப்பட்டால் அரை மணியில் வந்து விடலாமே. 'இந்தத் துலுக்காணம் கள்ளுக்கடைக்குப் போயிருப்பான். அவன் ஒரு இடியட். எப்போ குடிக்கிறது, எப்போ குடிக்கக் கூடாதுன்னே தெரியாது. குதிரைக்கும் சரியா கொள்ளும் புல்லும் வாங்கிப் போட மாட்டான். அது பசி தாங்காமெ வழியிலே எங்கேயாவது காலை மடக்கிக் கொண்டு அப்படியே உட்கார்ந்து கொண்டிருக்கும்...'—சரவணனுக்கு இப்படி ஏதேதோ கற்பனைகள்.. அப்பாடா! அதோ வந்து விட்டது துலுக்காணத்தின்





ஜட்கா! அதோ ஒவ்வொருவராகக் கீழே இறங்குகிறுர்கள். யாரோ ஒரு பெரியம்மா.. அடுத்தபடி, ஒரு எட்டு வயதுப் பையன்..அவனையடுத்து ஒரு பெண்.. 'அதுதான் பங்கஜமா? சே! அது குண்டா, குள்ளமா இருக்கே! பங்கஜம் எவ்வளவு ஜோரா, அட்ராக்டிவ்வா இருப்பா..! அதுயாரு..அசப்பில் பங்கஜம் மாதிரியே பெரியவளா ஒருத்தி.. கரெக்ட், அவளோட அம்மாவேதான். காலையிலே தினம் 'வாக்' போறபோது பால்காரனேட மல்லுக்கு நின்னு பால் வாங்குவாளே அவளேதான்.. கோயிலுக்குக்கூட பங்கஜத்தோட வருவாளே. வைகுண்ட ஏகாதசி அன்னிக்கு வெள்ளாளத் தெரு பெருமாள் கோயில்லே பார்த்தேனே.. அன்னிக்கு அவளோட பங்கஜம் வராமெ ஏமாத்திட்டாளே..'

ஒரு நாள் அம்மாவும் பெண்ணும் கார்ப்பொரேஷன் டிஸ்பென்ஸரிக்குப் போவதைப் பார்த்துவிட்டு, தான் கூடவே போனதும், அங்கிருந்த டாக்டர் பெயரைக் கேட்டபோது 'பங்கஜம்' என்று அம்மா சொன்னபோது அவளுடைய பெயரைத் தெரிந்து கொண்டதும் சரவணனுக்கு இப்போது நினைவுக்கு வந்தது. 'யெஸ் யெஸ்.. அதோ, பங்கஜம் கீழே இறங்கரு..அவளேதான் ..அவ கால் எவ்வளவு அழகா இருக்கு..! நல்ல கலர். முகம், கை, கழுத்தைவிட கால் சேப்பாயிருக்கு.. ஒரு நாள் கங்காதரேச்வரர் குளத்து கீழ்ப் படியிலே நின்னு அவ கால் கழுவினப்போ பார்த்திருக்கேன்.... அப்போ கொஞ்சம் இருட்டிடுச்சு. கலர் இவ்வளவு நல்லா தெரியலே..'

அடுத்தபடி என்ன செய்வது? மின்வெட்டு வேகத்தில் தீர்மானித்தான் சரவணன். தான் வேர்க்கடலை தின்பதைப் பார்த்தால் அவள் ஒருவேளை கேவலமாக நினைத்து விடலாம் என்று மீதிப் பொட்டலத்தைத் தூக்கி யெறிந்தான். அடுத்து, அவளுக்குத் தன் வருகையை எப்படியாவது தெரியப்படுத்தியாக வேண்டும் என்று முடிவு செய்தான். தனக்காக இத்தனை தொலைவு வந்திருக்கிறுன் என்று தெரிந்தால் அவள் ரொம்பவும் 'இம்ப்ரெஸ்' ஆகி, அந்த 'எக்ஸைட்மெண்ட்'டில் நிச்சயம் பேசி விடுவாள்!

அவர்கள் பின்னுலேயே, இருபது அடி 'டிஸ்டென்ஸ்' விட்டே சென்றுன் சரவணன். அவர்கள் ஒரு கடையில் நுழைந்தால் அவன் பக்கத்துக் கடையில் நுழைந்து, அங்கிருக்கும் சாமான்



''நானும் என் கணவரும் எந்த வேலை செய்தாலும் சமமா பங்கிட்டுக்குவோம்...!''

''அப்படியா?''

''ஆமாம்! நான் அரிசியை ஊற வைப்பேன். அவர் அரைச்சிக் கொடுத்துடுவார்!''

—நா. சஞ்சீவி

கண்ணுல் பங்கஜத்தையே பார்த்துக் கொண்டிருப்பான். ஆனுல், அவள் இவன் பக்கம் திரும்புவதாகக் காணும். இவன் பக்கம் என்ன, எந்தப் பக்கமும் திரும்பவில்லை. சரியான சனியன்!

பொறுமையை இழந்தான் சரவணன். அவர்கள் இருந்த கடையிலேயே நுழைந்து, ஒரு 'ஸெல்லுலாயிட்' பொம்மையைக் காட்டி, விலையை விசாரித்தான். தைரியமாகப் பேச வேண்டும் என்று உள்ளூர தீர்மானித்து, பங்கஜத்தின் எதிரில் இங்கிலீஷில்தான் விலையைக் கேட்க வேண்டும் என்று முடிவுசெய்து, உளறிவிடப் போகிருேமே என்ற பயத்தில் 'வாட்டீஸ் தி ப்ரைஸ்' என்று ஆங்கிலத்தில் பலக்கக் கேட்டான். அந்த சத்தம் அவன் காதுகளையே துளைத்தது.

எதிர்பாராத அந்தக் கூச்சலைக் கேட்டு, எல்லோரும் அவன் பக்கம் திரும்பினர்கள். அவனுடைய ஐடியாவே அதுதானே......

பங்கஜத்தின் தாய், சரவணனை அடையாளம் கண்டு, ''நீங்க புரசைவாக்கம் தானே?'' என்று விசாரித்தாள்.

''ஆமாம்.. நீங்கள்ளாம் யாரு தெரியலையே.. நீங்ககூட புரசைவாக்கமா?'' என்று கேட்டான் சரவணன்.


''இல்லே, வில்லிவாக்கம்'' என்றுள் பங்கஜம் சட்டென்று.

—தொடரும்


உங்கள் குழந்தைக்கு அதிக சக்தி
அளித்து முன்னணியில் நிறுத்திட
கோகோ சுவைமிக்க போர்ன்விடா

61 வயதினிலே!

மெரீனா



3. சரவணன் பி.ஏ.,!

சற்றும் எதிர்பாராத விதமாக சம்மட்டி அடியாக விழுந்த பங்கஜத்தின் பதிலைக் கேட்டு ஒருகணம் திக்குமுக்காடிப் போன சரவணன், மரியாதையாக வாலைச் சுருட்டிக் கொண்டு அங்கிருந்து வேகமாக நழுவி, சென்ட்ரல் ஸ்டேஷனுக்குச் சென்று டிராமில் ஏறிக் கொண்டான். பங்கஜத்தைப்பற்றி இனி நினைக்கவே கூடாது என்று உறுதி செய்து கொண்டான். புரசைவாக்கத்திற்குப் போவதற்குப் பதில் வேறு எங்கேயாவது ஓடிவிட்டால் என்ன என்றுகூட நினைத்தான். நண்பனாக அன்புடன் தழுவிக் கொண்ட அதே மன்மதன், தற்போது விரோதியாக அவன் நெஞ்சை முறுக்கிப் பிழிந்தான்.

துலுக்காணத்தின் ஜட்காவில் வீடு திரும்பிய போது, பங்கஜத்தின் மனம் பலவாறாக அலைபாய்ந்து கொண்டிருந்தது. 'சே, பாவம்! மூஞ்சிலே அடிச்ச மாதிரி 'வில்லிவாக்கம்'னு சொல்லியிருக்க வாணாம். 'அவன்' மூஞ்சி எப்படி மாறிடிச்சு! நல்லா வேணும்...! என்னாத்துக்கு ரவுடி மாதிரி இத்தினி தூரம் தொரத்திகினு வரணும்? சே! அவனை ரவுடின்னு சொல்லிட முடியாது.. இதுவரைக்கும் எங்கிட்டே தப்பு தண்ட்டாவா நடந்துகிட்டதே இல்லை. இருந்தாலும் யாருக்காவது தெரிஞ்சுட்டா என்னா கதி? இப்படி சூடா ஒண்ணு கொடுக்கணும்னு ரொம்ப நாளா நினைச்சுகினு இருந்தேன். இன்னிக்கு நல்லா வாங்கிக் கட்டிகினான். இனிமே நம்ம கையிலே எதுவுமே வெச்சுக்க மாட்டாரு துரை..! பாவம்! அவன் மனசு ரொம்ப வேதனைப்பட்டிருக்குமோ...?'

—பங்கஜத்தின் சிந்தனையோட்டத்தைத் தாய் அறிவாளா? ''நீ ஏண்டி அந்தப் பையன்கிட்டே அப்படிச் சொன்னே? உனக்கு வாய்த்துடுக்கு அதிகமாய்க் போவுது ஒரு ஆம்பளேகிட்டே நீ எதுக்கு முகம் கொடுத்துப் பேசறே..? வயசுப் பொண்ணுக்கு வெக்கம் மானம் வாணாமா? தூ..! இனிமே இப்படியெல்லாம் செஞ்சே, நீ வூட்லேயே அடைஞ்சு கிடக்க வேண்டியதுதான்...வெளிலேயே இட்டுகினு போகமாட்டேன்..'' என்று வழியெல்லாம் கத்திக்கொண்டே வந்தாள். திருடிக்குத் தேள் கொட்டியது போல் 'கம்'மென்று இருந்தாள் பங்கஜம். சரவணனைப் பற்றிய உண்மையைத் தாயிடம் எப்படிக் கூறுவாள்...?

மறு நாள் காலை எழுந்ததும் வழக்கப்படி 'வாக்'கிங் புறப்பட்ட சரவணன், முன் வைத்த காலைப் பின் வைத்தான்! ஆனால், அவன் மனம் சுந்தரம் பிள்ளைத் தெருவை நோக்கிச் சென்றது. அவன் கால்களும் கூடவே சென்றன. பங்கஜத்தின் வீட்டையும் நெருங்கி விட்டன. ஆனால், அந்த வீட்டைத் திரும்பிப் பார்க்கக்கூடாது என்று கங்கணம் கட்டிக் கொண்டான் சரவணன்.


யாரையுமே விடாத விதி சரவணனை மட்டும் விட்டுவிடுமா! வீட்டுக் குறட்டில் பங்கஜம் இரண்டு வயதுக் குழந்தையை வைத்துக் கொண்டு விளையாட்டு காட்டிக் கொண்டிருந்தாள். அதை ஓரக் கண்ணால் கவனித்துவிட்ட சரவணன் பல்லைக் கடித்துக் கொண்டு தரையைப் பார்த்தபடி நடந்தான். ஆனால் அவனுடைய காது வழக்கப்படி கூர்மையாகத் தீட்டப்பட்டு, அந்த வீட்டின் பக்கம் திருப்பப்பட்டிருந்ததால், பங்கஜத்தின் குரல் தெளிவாகக் கேட்டது. அவள் குழந்தையிடம் சொல்லிக் கொண்டிருந்தாள்: ''ஸாரிடா கண்ணு! இனிமே அப்படியெல்லாம் பேச மாட்டேன்.'' அதைத் தொடர்ந்து குழந்தையின் கன்னத்தில் அவள் தன் இதழ்களை அழுத்திப் பதித்து முத்திரையிட்ட ஒலியும் சரவணனின் காதில் விழுந்தது. கையில் கட்டியிருந்த மானசீக கங்கணத்தை அவிழ்த்துப் போட்டுவிட்டு, சட்டென்று பங்கஜத்தின் வீட்டின் பக்கம்

பார்வையைத் திருப்பினுன். பங்கஜம் தன் 16 வயதினிற்குரிய வெட்கத்துடன் ஐந்து அவுன்ஸ் விஷமத்தையும் கலந்து, அவனைப் பார்த்து ஒரு கலப்படச் சிரிப்பை லேசாக உதிர்த்துவிட்டு, மூன்ரும் பிறைச் சந்திரனைப் போல், பார்த்துக் கொண்டிருந்த போதே சட்டென்று மறைந்து விட்டாள்.

முதல் நாள் மூர்மார்க்கெட்டிலிருந்து டிராமில் வீடு திரும்பிய போது சரவணனுக்கு எல்லாமே கசப்பாக இருந்தது. இன்று எல்லாமே இனித்தது! முதல் நாள், புரசைவாக்கத்தைவிட்டு எங்கேயாவது ஓடி விடலாமா என்று நினைத்தவனுக்கு மறு நாள் அதே புரசை வாக்கம் பாலும் தேனும் ஓடும் சுவர்க்க பூமியாய்க் காட்சி யளித்தது!

அந்தக் கணம் சரவணன் உள்ளத்தில் பிறந்த நம்பிக்கையொளி கொழுந்து விட்டு எரிய ஆரம்பித்தது. நினைத்ததை முடித்துவிடவேண்டும் என்ற உறுதியோடு புரட்சிக் கொடியை மேலே உயர்த்தினுன். அந்தக் குடும்பத்தின் 'முதல் காதலன்' என்று தனக்குள்ளேயே பிரகடனப்படுத்திக் கொண்டான். அம்மாவின் செல்லப் பிள்ளையாதலால் முதலில் அவளிடம் ஜாடைமாடையாகச் சொன்னுன். அவள் காதில் போட்டுக் கொள்ளவில்லை என்று தெரிந்தபோது அடித்துப் பேசினுன். வீட்டைவிட்டே ஓடி விடுவேன் என்று பயமுறுத்தினுன். ரயிலுக்கடியில் விழுந்து உயிரை விட்டு விடுவேன் என்று 'அல்டிமேட்டம்' கூட கொடுத்தான். ஒரு நாள் மாலை, பொன்னியம்மன் கோயில் உற்சவத்திற்குக் கணவனுடன் சென்றபோது, சண்பகம்மாள் மகன் விஷயமாக அவர் காதை வெகு நாசூக்காகக் கடித்தாள்! கோலி சோடாவை உடைத்தது போல் சடாரென்று முகமெங்கும் கோபம் பொங்கி வழிந்தது ராஜாபர்தர் முதலியாருக்கு.

"என்னுது...? இந்த ராஸ்கோலுக்கு கல்யாணமா கேக்குது? ஒழுங்கா படிடான்னு பொண்ணுங்க பின்னுலேயா பொறுக்கிகிட்டிருக்கான்? காத்தாடி, பம்பரம் போல இதையும் ஒரு விளையாட்டுன்னு நினேச்சுகிட்டிருக்கானு? தொலேச்சுப்பிடுவேன் தொலேச்சு! அவனை முதல்லே பி.ஏ., பாஸ்பண்ணச் சொல்லு. அப்புறம் எந்தக் கழுதையை வேணு மானுலும் கட்டிக்கச் சொல்லு" என்று தீர்ப்பளித்து விட்டார். சண்பகம்மாள், இதை 'ஒரு மாதிரி' சரவணனிடமும் தெரியப்படுத்தி விட்டாள்.



அன்று இரவு சரவணனுக்கு ஒரு கனவு. துலுக்காணத்தின் குதிரையில் ஏறிக் கொள்கிருன். அது வேட்டைக்காரன் தெருவிலிருந்து ஒரே தாவலில் சுந்தரம் பிள்ளைத் தெருவில் போய்க் குதிக்கிறது. வீட்டு வாசலில் நின்றிருந்த பங்கஜத்தை ஒரே தூக்காகத் தூக்கிப் பக்கத்தில் அமர்த்திக் கொண்டு, பிருத்விராஜ் மாதிரி சிட்டாய்ப் பறக்கிருன் சரவணன். துலுக்காணம் குதிரையைத் துரத்திக் கொண்டு ஓடி வருகிருன். தளபதி கபாலி கவுண்டிவில்லால்துலுக்காணத்தை அடிக்கிருன். பின்னுல் கோச்சு வண்டியில் வந்த மோகனரங்க முதலியார் ரத்த வெள்ளத்தில் கிடந்த துலுக்காணத்தைத் தூக்கிப் போட்டுக் கொண்டு கார்ப்பரேஷன் டிஸ்பென்ஸரிக்குப் போகிருர்... இது மாதிரி ஒரே பிதற்றலாக ஒரு கனவைக் கண்டு அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்தான் சரவணன். சண்பகம்மாள் அவனுக்கு ஒரு தம்ளர் பச்சைத் தண்ணீர் கொடுத்துக் குடிக்கச் சொல்லி,

நெற்றியில் குளத்தங்கரைப் பிள்ளையார் கோயில் திருநீறை இட்டாள்.

அந்தப் பிள்ளையாரைத்தான் சரவணன் மலையாய் நம்பியிருந்தான். வெள்ளிக்கிழமைதோறும் அவருக்கு சூரைத் தேங்காய் 'சாங்ஷன்' பண்ணினான். எதிரிலுள்ள ராமர் கோயில் அனுமாருக்கும் அவ்வப்போது வடை மாலை அதிர்ஷ்டம் அடித்தது. அவர்கள் சிபாரிசில்லாமல் எப்படி பி.ஏ., பாஸ் பண்ணுவது? 'படித்துப் பாஸ் பண்ணுவது' என்ற வழியில் அவனுக்கு என்றுமே நம்பிக்கை இருந்ததில்லை!

பி. ஏ., பாஸ் பண்ணுவது அவனது லட்சியமல்ல; அது ஒரு சாதனம்தான். அவனுடைய லட்சியமெல்லாம் பங்கஜத்தின் கரம் பற்றுவதுதான். 'அவளை அடைய பி. ஏ-வை ஒரு கண்டிஷனாகப் போட்டுத் தொலைத்து விட்டாரே அப்பா.... பங்கஜத்தைக் கல்யாணம் செய்துகொள்ள பி.ஏ., பட்டம் எதற்கு? அதற்கு இன்ட்டர் முதலாண்டு போருதா? அவள்தான் ஈவார்ட் ஸ்கூலில் ஸெவன்த் ஸ்டாண்டர்டோடு படிப்பை நிறுத்திக்கொண்டு விட்டாளே...! இது தெரியாத அப்பா வீணாக எனக்கு எதற்குப் பணத்தைச் செலவழித்துக் கொண்டிருக்கிறார், பாவம்....!'

பழைய காலத்தைப் போல 'ஜல்லிக் கட்டு' பந்தயம் வைத்திருந்தாலோ, அல்லது புலிப்பால் கொண்டு வரச் சொல்லி யிருந்தாலோ கூடக் கவலைப்பட்டிருக்க மாட்டான் சரவணன். ஆனால், இந்தப் பாழும் பி.ஏ., தன் வம்சத்தில் இதுவரை யாருமே ஏறியிராத எவரெஸ்ட் சிகரம் ஆயிற்றே! 'பி. ஏ., எம். ஏ.,' என்று பட்டங்களைக் கண்டு பிடித்தவர்களை நெஞ்சாறச் சபித்தான் சரவணன். பல்கலைக் கழகத்தைத் தனது திருமணத்திற்குக் குறுக்கே நிற்கும் வில்லனாகக் கருதினான். பீச்சுக்குப் போறபோதெல்லாம் 'யுனிவர்ஸிடி பில்டிங்'கைப் பார்க்கப் பிடிக்காமல் வெறுப்புடன் முகத்தைத் திருப்பிக் கொள்வான்.

தன்னுடைய பி. ஏ., கவலையைவிட பங்கஜத்திற்கு வேறு இடத்தில் கல்யாணம் ஆகிவிடாமல் இருக்க வேண்டுமே என்ற கவலைதான் சரவணனுக்குப் பெரிதாக இருந்தது. எனவே, பங்கஜத்தின் பித்துக்குளி மாமன் ஒருவனைச் சிநேகம் பிடித்துக் கொண்டு அவ்வப்போது செய்திகளை அறிந்து கொள்வான். அதற்கு லஞ்சமாக அவனுக்காக நிறைய தண்டச் செலவு அழுதிருக்கிறான். பங்கஜா லாட்ஜில் (அந்தப் பெயரே அவனுக்குப் பிடித்திருந்தது) தின்ற பொங்கல் வடைக்கும் வேணு கடையில் குடித்த கலருக்கும் கணக்கு வழக்குத்தான் உண்டா? ராக்ஸி தியேட்டரில் சினிமா வேறே! 'கிங்காங்'குக்குப் பங்கஜத்தை அழைத்து வருவதாகச் சொல்லி அந்தப் படுபாவி ஏமாற்றி விட்டானே. அன்று பல்டானா ஷாப்பில் மூன்று நெஸல்ஸ் சாக்லேட் வாங்கி வைத்திருந்தான் சரவணன். அவற்றில் இருந்த இங்கிலீஷ் சினிமா நடிகைகளின் படங்களைக்கூட பங்கஜத்திற்குக்கொடுக்க வேண்டும் என்று திட்டம் தீட்டி வைத்திருந்தான். அன்று அத்தனை சாக்லேட் டையும் மாமன் தடியனே





''கோட்டூர்புரத்தின் பெயரை இப்படி மாற்றினல் என்னப்பா?''

''எப்படி?''

''போட்டூர்புரம்!''

—சேகர்

●

விழுங்கினுன்! சரவணனுக்கு வயிற்றைப் பற்றி எரிந்தது. 'ஆகட்டும், இந்த பி.ஏ., கைக்குக் கிடைக்கட்டும். அப்புறம் பங்கஜம் என் கைக்குள்ளே அடக்கம். அப்புறம் அந்த மாமனே எவன் சீண்டப் போகிறுன்..? நூறு சாக்லேட் வாங்கி அப்படியே பங்கஜத்திற்கு அபிஷேகம் செய்யறேனு இல்லேயா, பார்....'

நான்கு ஐந்து வருடம் முக்கி முனகி, திக்கு முக்காடி, திண்டாடித் தெருவில் நின்று ஒருவழியாக பி. ஏ., பட்டத்தைப் பெற்று; நேரே அம்மாவிடம் சென்று, திருமணத்திற்கான அப்ளிகேஷனேக் கொடுத்தான் சரவணன். ஆனல் அப்பா அதை நிராகரித்து விட்டார்! அந்த 'குவாலிஃபிகேஷன்' போருதாம். திருமணத்திற்கு பி.ஏ-வுடன் ஒரு உத்தியோகமும் வேண்டுமாம். 'சே! என்ன அப்பா இவர்! கொடுத்த வாக்குறுதியை மீறுகிருரே..!'

இத்தனே நாள் அரைப் பயித்தியமாய்த் திரிந்த சரவணன், இப்போது முழுப் பயித்தியமானுன். 'பாடி' நன்ருக இருந்தால்தான் உத்தியோகம் கிடைக்கும் என்று கூறி, தளபதி கபாலி தன் வாத்தியாரான விறகுக் கடைக்காரரிடம் சரவணனே அழைத்துச் சென்ருன். அந்தக் கடையின் முன்புறம் விறகு வியாபாரம் நடைபெற்றுக் கொண்டிருக்கும். அடுக்கப்பட்டிருந்த விறகுகளுக்குப் பின்னல் தேகப் பயிற்சி வகுப்புகள் நடைபெறும். பெரிய பெரிய வஸ்தாதுகளெல்லாம் வந்து 'சலாம் வாத்தியாரே' என்று முதலாளிக்குத் தண்டம் சமர்ப்பித்து விட்டுப் போவார்கள்.

''தம்பி சரவணு...நீ ரெகுலரா கடைக்கு வா. ஒரே மாசத்திலே உன்னே படாவஸ்தாதாக்கிடறேன். பாக்ஸிங் செய்யலாம், குச்சி சொயட்டலாம், குஸ்தியும் போடலாம்... ஆனு தினம் ஊறவெச்ச கொத்துக்கடலே துன்னணும். கொஞ்சம் நல்லெண்ணெயும் குடிக்கணும்...'' என்ருர் வாத்தியார்.

''வாத்தியாரே, பையனுக்கு கல்யாணம் ஆவணும்...அதுலேதான் ஏங்கிப் போயிருக்கான். பொண்ணுகூட ரெடியாயிருக்குது...'' என்ருன் தளபதி கபாலி. அவன் இப்போது ஒரு சைக்கிள் ஷாப் ஓனர். ஈரோடில் லூதர் மிஷன் ஸ்கூலுக்குப் பக்கத்தில் கடை.

''பொண்ணு யாரு துரை?'' என்று கேட்டார் வாத்தியார் கண்ணேச் சிமிட்டிக் கொண்டே. சரவணன் தயங்கினன். ''சுந்தரம்பிள்ளேத் தெரு. பி. அண் சி. மில்ஸ் மோகனரங்க முதலியார் இல்லே, அவரோட ரெண்டாவது பொண்ணு...பங்கஜம்னு பேரு...'' என்று கபாலி கூறினன்.

சரவணன் கதிகலங்கிப் போனுன். தன் விஷயம் எப்படி கபாலிக்குத் தெரிந்தது? அதைப்பற்றி அவனிடம் இதுவரை வாயைக் கூட திறந்ததில்லேயே....கடையில் உட்கார்ந்தபடியே சரவணனின் நடமாட்டத்தை யெல்லாம் கபாலி மிக உன்னிப்பாகக் கவனித்து வருகிருன் என்பது சரவணனுக்கு எப்படித்தெரியும்?

''அடேடே...! மாணிக்கத்தோட அண்ணன் மகளா?... தம்மாத்தூண்டு இருந்தபோது நம்ம கடைக்குக்கூட இட்டாருவாரே...நல்ல ஃபாமிலி.... தாராளமாக கட்டிக்கலாமே.....'' என்ருர் வாத்தியார்.

''இவரு ரெடி வாத்தியாரே, ஒரு உத்தியோகம் இல்லாட்டி எவன் பொண்ணேக் குடுப்பான்..,?''— பேச்சுவாக்கில் சொல்லிவைத்தான் கபாலி.

''ப்பூ...இதானு பிரமாதம்...? நம்ம கண்ணபிரான்கிட்டே சொல்லி எங்கேயாவது நுழைச்சுடறேன்... சர்ட்டிபிகேட்டெல்லாம் எடுத்துகிட்டு சாயந்தரம் கடையாண்டே வா... கண்ணபிரான் இங்கே வருவாரு... சொல்லி வுட்டுடறேன்... அப்புறம் அவரைக் கெட்டியாப் புடிச்சுக்கோ..'' என்ருர் வாத்தியார்.

அப்போது கடைக்குள் நுழைந்த ஒருத்தி, புகையிலேயைக் கிள்ளி வாயில் போட்டபடியே, ''என்னு முதலியாரே, யாபாரத்தைக் கவனிக்காமெ பேசிகினே இருந்தா எப்படி?'' என்று ஒருவித சுவாதீனச் சிரிப்புடன் கேட்டாள்.

''ஆ...! பெரிய யாபாரம் செய்ய வந்துட்டே.. ரெண்டு சுள்ளிதானே வேணும்... பொறுக்கிக்கிட்டு கல்லா பொட்டிமேலே துட்டைப் போட்டுட்டுப் போம்மே'' என்று சொல்லிக்கொண்டே சரவணனே அப்படியே விட்டுவிட்டு வியாபாரத்தைக் கவனிக்கக் கடைக்குள் சென்ருர் வாத்தியார்.

61 வயதினிலே...!

எழுதியவர் —

4. காதலியைத் தேடி...!

'இந்திரன் கெட்டதும் பெண்ணாலே, சந்திரன் கெட்டதும் பெண்ணாலே' என்ற பாட்டைக் கேட்கும்போதெல்லாம் 'ஆனால் சரவணன் உருப்பட்டது பெண்ணாலே' என்ற மூன்றாவது அடியைச் சேர்த்துக் கொள்வார் சரவணன். தெப்பத்தில் பங்கஜத்தைப் பார்த்திராவிட்டால், தன் வாழ்க்கையே குட்டிச்சுவராயிருக்கும் என்பது அவருடைய அசைக்க முடியாத எண்ணம். அவளுக்காகத்தானே பி. ஏ., பாஸ் பண்ணினார். கௌரவமான உத்தியோகத்தைத் தேடிக் கொண்டார். இல்லாவிட்டால், பிரதான மந்திரி முருகேசன் லாண்டரி வைத்ததுபோல— தளபதி கபாலி சைக்கிள் ஷாப் வைத்தது போல—இவரும் வெற்றிலை பாக்குக் கடையில் தன் ஆயுசைக் கழித்திருப்பாரோ என்னவோ!

பங்கஜத்தை எளிதாகக் காதலித்து விட்டாரே தவிர, அவளைக் கல்யாணம் செய்து கொள்வதற்குள் சரவணனுக்குப் போதும் போதும் என்றாகிவிட்டது! திருமணம் ஆன நிமிடத்திலிருந்து அவருக்கு வாழ்க்கையின் ஒரே நம்பிக்கை, ஒரே துணை, ஒரே அட்வைசர் பங்கஜம் தான். அவர் ஒரு சிறுகதை எழுத்தாளராகியிருந்தாலோ அல்லது புதுமைக் கவிஞராக மலர்ந்திருந்தாலோ 'பங்கஜதாசன்' என்றுதான் புனைபெயர் வைத்துக் கொண்டிருப்பார். அதைப் பற்றிச் சிறிதும் கூச்சப்பட்டிருக்க மாட்டார்.

அடேடே! சரவணனுக்கு எப்படிக் கல்யாணம் ஆயிற்று என்று இன்னும் சொல்லவில்லையா? ஐயாம் ஸாரி...

வாத்தியாரின் தயவால் கண்ணபிரானின் சிபாரிசு கிடைத்து வெள்ளாளத் தெரு பண்டாபீஸ் ஒன்றில் உத்தியோகத்தில் அமர்ந்தான் சரவணன்.

அந்த பண்டாபீசில் மோகனரங்க முதலியாருக்குப் பற்று வரவு இருந்தது. அதன் காரணமாக அவருக்கும் சரவணனுக்கும் பழக்கம் ஏற்பட்டது. அவருக்கு அவ்வப்போது தேவையான உதவிகளெல்லாம் செய்து கொடுத்து, மிகச் சிரமப்பட்டு 'நல்ல பையன்' என்ற பெயரைச் சம்பாதித்துக் கொள்ளப் படாத பாடுபட்டான் சரவணன். அவர் எதிரில் சிகரெட் பிடிக்காமல் மிக ஜாக்கிரதையாக இருந்தான். அவருக்கு தேவாரம், திருப்புகழ் என்றால் உயிர் என்று தெரிந்துகொண்டு, லாடர்ஸ் கேட் ரோட் பஜனை மடத்துக்குப் போய், யாரிடமோ அப் புத்தகங்களைக் கேட்டு வாங்கி 'நெட்ரு' பண்ணினான். பட்டணம் கந்தசாமி கோயிலுக்குப் போய் அந்த விபூதிப் பிரசாதத்தைப் பத்திரப்படுத்தி, மோகனரங்க முதலியார் பண்டாபீசுக்கு வந்தபோது அவருக்குப் பய பக்தியோடு கொடுத்தான். இவனது திருப்புகழ் பாராயணத்தையும் விபூதி நெற்றியையும் பார்த்து ராஜாபாதர் முதலியார், 'இந்த இள வயதில் இத்தனை பக்தியா!' என்று ஆச்சரியப்பட்டுப் போய்விட்டார். கபாலி மூக்கின்மேல் விரலை வைத்தான். முருகேசன் மூர்ச்சை போட்டு விழாத குறைதான்.

இவ்விருவரும் சந்தித்தால் சரவணனின் காதல் பைத்தியத்தைப் பற்றித் தான் பேசிக் கொள்வார்கள்.

''கபாலி, இந்த பங்கஜம் பொண்ணு கல்யாணம் ஆறத்துக்கு முன்னாலேயே நம்ம சரவணனை இப்படி அடையாளம் தெரியாம மாத்திட்டாளே! கல்யாணம் ஆயிட்டா, காஷாயமும் திருவோடும் கொடுத்து இவனை சாமியாராவே ஆக்கிடுவான்னு நினைக்கிறேன்'' என்று ஒரு ஜோக்கூட அடித்தான் முருகேசன்.

வாத்தியாரிடம் போய் பஸ்கி கற்றுக் கொள்வதும், முருகேசன் லாண்டரியிலும், கபாலி சைக்கிள் ஷாப்பிலும் உட்கார்ந்து அரட்டையடிப்பதும் தன் வருங்கால மாமனாருக்குப் பிடிக்காமல் இருக்கலாம் என்று தானே ஊகம் செய்து கொண்டு, அவர்களிடமிருந்து முன் யோசனையுடன் ஒதுங்கிக் கொண்டான் சரவணன். தன் ரௌடித்

தனத்தை யெல்லாம் 'தியாகம்' செய்தான். தியாகம் இல்லாத காதல் ஒரு காதலா?

காதலித்தாகி விட்டது. அப்பா விருப்பப்படி பி. ஏ., பாஸ் பண்ணி ஒரு டீஸண்ட் உத்தியோகத்தில் அமர்ந்து, மோகனரங்க முதலியாரிடமும் நல்ல பெயர் வாங்கியாகி விட்டது. இனிமேல் கல்யாணம் செய்துகொண்டு செட்டில் ஆகவேண்டியதுதான் பாக்கி.

அம்மாவிடம் சொல்லிப் பெண் கேட்கச் சொல்வதா? அல்லது மோகனரங்க முதலியாரிடம் பேச்சுவாக்கில் தன் விருப்பத்தைத் தெரிவித்து மேற்கொண்டு ஆக வேண்டியதைக் கவனிக்கச் சொல்வதா? இவ்விரண்டைத் தவிர வேறு ஒரு வழியும் அவன் புத்திக்கு எட்டவில்லை. பங்கஜத்திற்குக் காதல் கடிதம் எழுத வேண்டும் என்றோ, எப்படியாவது எங்கேயாவது அவளை 'மீட்' பண்ணி, இருவருமாக ஒரு முருகன் கோயிலில் மாலை மாற்றிக் கொண்டு நேரே பெற்றோரிடம் சென்று 'எங்களை ஆசீர்வதியுங்கள்' என்று சொல்லவேண்டும் என்றோ அந்தக் கால காதலனான சரவணன் நினைக்கவேயில்லை. அவர் செய்யாததை, செய்வதற்குப் பயந்ததை சரவணனின் மூத்த மகன் சங்கர் செய்து காட்டினான். தன் காதலிக்குக் காதல் கடிதம் மட்டுமா எழுதினான்? காதல் தந்திகூட அடித்திருக்கிறான் சங்கர். அது ஒரு தனிக் கதை. இப்போது அதற்கு என்ன அவசரம்? இன்னும் சரவணனின் கல்யாணமே முடிந்தபாடில்லையே...!

சிங்கத்தின் குகைக்கே சென்று அதன் பிடரியைப் பிடித்து உலுக்குகிறவன் தானே சுத்த வீரன். சரவணன், மோகனரங்க முதலியாரை அவருடைய வீட்டிலேயே சந்திக்கத் திட்டமிட்டான். பங்கஜத்தை ஸர்ப்ரைஸ் செய்யவேண்டும். எல்லாரையும் வைத்துக்கொண்டு தன் மனத்தில் உள்ளதைக் கூறிவிடவேண்டும். "இதில் என்ன தப்பு? பொய் சொல்லவில்லையே, கொள்ளையடிக்கவில்லையே... யாரையும் மோசம் செய்யவில்லையே... "இஷ்டம் இருந்தால் முதலியார் 'சரி' என்று சொல்லப் போகிறார்... இஷ்டமில்லை யென்றால் 'முடியாது' என்று சொல்லப் போகிறார். அவ்வளவுதானே!' "கடவுளே, கந்தசாமிக் கோயில் முருகா, குளத்தங்கரைப் பிள்ளையாரே, ராமர் கோயில் ஆஞ்சநேயா, கங்காதரேச்வரா, வெள்ளாளத் தெரு ஸ்ரீநிவாசப் பெருமாளே, பொன்னியம்மனே..... மோகனரங்க முதலியாரை 'முடியாது' என்று மட்டும் சொல்ல வைத்து விடாதீங்க.. அப்புறம் என்ன செய்வது என்றே எனக்குத் தெரியாது.'

இந்த 'சப்ஜெக்ட்'டை எப்படி ஆரம்பிப்பது என்று பலமுறை ரிகர்சல் செய்து கொண்டுவிட்டு, ஒரு நாள் சுந்தரம் பிள்ளைத் தெருவுக்குச் சென்றான் சரவணன். கையில் நாற்பது பக்கம் பச்சை நோட் புக் ஒன்று இருந்தது. அதில் சில நன்கொடையாளர்களின் பெயர்ப் பட்டியல் இருந்தது. அவனும் அவனது நண்பர்களும், கங்காதரேச்வர் பிரம்மோற்சவத்தை யொட்டித் தொடங்கிய தண்ணீர்ப் பந்தலுக்கான நன்கொடை லிஸ்ட் அது. இந்த நன்



கொடையைபண்டாபீசுக்கு வரும்போது முதலியாரிடம் சுலபமாக வசூலித்திருக்க லாம். ஆனல், அவர் வீட்டுக்குச் செல்ல ஏதாவது ஒரு சாக்கு வேண்டாமா?

அந்த வீட்டு வாசலுக்கு வந்தான். பங்கஜம் வழக்கமாக நின்று தலே சீவிக் கொள்ளும் முன் அறை ஜன்னல் பக்கம் அவன் கண்கள் ஆசையோடு அலேந்தன. அக்கதவுகள் சாத்தப்பட்டிருந்ததைக் கண்டு அவன் துணுக்குற்ருன். அதுவே அவனுக்கு ஓர் அபசகுனமாகத் தோன்றியது. பின்னர் வாசற்கதவை நோக்கினன். அது பூட்டப்பட் டிருந்தது. 'காலே வேளேயில் வீட்டைப் பூட்டிக் கொண்டு அத்தனே பேரும் எங்கே போயிருப்பார்கள்?'— குழம்பி ஞன் சரவணன். அக்கம்பக்கத்தில் விசாரித்துப் பார்க்கலாம் என்று நினைத்துத் திரும்பியபோது, தாழ்வாரத் தூணில் தொங்கிய அந்த போர்டு அவன் கண்ணில்பட்டது — 'TOLET' வீடு குடிக்கூலிக்கு விடப்படும்'—சரவணனுக் குக் கண்கள் இருண்டு போய் சப்தநாடி யும் ஒடுங்கின.

'வீட்டைக் காலி செய்து விட்டார்களா!



எங்கே போயிருப்பார்கள்? முந்தாநாள் முதலியார் பண்டாபீசுக்கு வந்திருந்த போது என்னிடம் ஒன்றுமே சொல்ல வில்லேயே! இத்தனே பொறுப்பில்லாத மனுஷன மோகனரங்கம்...? சே! இந்தப் பித்துக்குளி மாமன் ஊரோடு போனதிலேருந்து எனக்கு ஒரு கை உடைஞ்ச மாதிரியாயிடுச்சு... அவன் இல்லாமெ இந்த வீட்டு 'ஸீக்ரெட்' ஒண்ணுமே தெரியமாட்டேங்குது...'

பரீட்சை ரிசல்ட்டைப் பார்க்கச் சென்று, போர்டில் பெயில் என்றிருப் பதைக் கண்டு காலமெல்லாம் கலங்கி யறியாத சரவணன் இந்த TOLET போர்டைக் கண்டு நிலேகுலேந்து போனன். அப்போது எதிர் வீட்டில் தன் வாடிக்கைக்காரருக்கு கிராப் வெட்டிக் கொண்டிருந்த ஏழுமலே, ''முதலியா ரையா தேடறே தம்பி? நேத்தி மத்தியா னம் அவங்க வீட்டைக் காலி செய்து கிட்டுப் பெரம்பூருக்கு போயிட்டாங் களே.. அங்கே பழைய வூடு ஒண்ணு வாங்கிட்டாராம்'' என்ருர்.

''பெரம்பூர்லே எங்கே?'' என்று கேட்டான் சரவணன். அவனுக்கு உடனே அங்கு பறந்து சென்று விட வேண்டும் என்று ஒரு வேகம்.

''தெரியாது தம்பி.. இந்த வயசுலே நான் எப்படி அங்கே போய் கிராப் வெட்ட முடியும்? அதனலே அட்ரஸ் கேட்டுக்கலே'' என்ருர் ஏழுமலே.

அக்கம்பக்கத்தில் ஓரிருவரை விசாரித்துப் பார்த்தான். ஒருத்தருக்கும் சரியான விவரம் தெரியவில்லே.



''கனவு எதனாலே வருதுன்னு ஆராய்ச்சி பண்ணப் போறாங்கன்னு பேப்பர்லே நியூஸ் வந்திருக்கு, பார்த்தீங்களா?''

''இதுக்கு ஏன் ஆராய்ச்சி? கனவு தூங்கறதுனாலேதான் வருது!''

—எஸ். ராஜேஸ்வரன்

●

'ஸ்டேஷன்கிட்டேதான்னு சொன்னாரு' என்றார் ஒருவர். ''பாரதி ஸ்ட்ரீட்டோ' 'ஜவஹர் நகரோ' என்னவோ சொன்னாரு, ஆனா நம்பர் தெரியாது' என்றார் மற்றொருவர். 'இதைக்கூட ஒழுங்கா விசாரித்து வைத்துக் கொள்ளுவதற்குத் துப்பில்லாத ஜென்மங்கள்' என்று அவர்களைச் சபித்தான். வீட்டுக்கு வரும் வழியில், 'திடீரென்று வீட்டைக் காலி செய்தது போல் பங்கஜத்திற்கு திடீரென்று எங்கேயாவது கல்யாணத்தையும் முடித்துவிடுவாரோ?' என்று நினைத்தபோது அடிவயிற்றில் 'பகீர்' என்றது சரவணனுக்கு. 'என் மனசு ஏன் கெட்டதையே நினைக்குது. நல்லதை நினைக்க மாட்டேங்குதே. கந்தசாமி கோயில் முருகா, குளத்தங்கரைப் பிள்ளையாரே.''

அன்று மாலை பெரம்பூர் ஏரியாவில் சுற்றிக் கொண்டிருந்தான் சரவணன். ஸ்டேஷனுக்கு அருகிலுள்ள தெருக்களிலெல்லாம் புகுந்து புறப்பட்டான். திறந்திருந்த ஜன்னல்களுக்குள் எல்லாம் பார்வையைச் செலுத்தினான். இரண்டு மூன்று கோயில்களுக்குச் சென்று பங்கஜமோ, அவளுடைய அம்மாவோ கண்ணில் தென்படுகிறார்களா என்று தேடினான். ஆனால் அவர்கள் நிழலைக்கூடக் காண முடியவில்லை. ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்து பிளாட்பாரத்தில் சிறிது நேரம் அலைந்து கொண்டிருந்தான். பின்னர் பஸ் ஸ்டாண்டில் வந்து ஒவ்வொரு பஸ் வந்தபோதும் அதிலிருந்து யாராவது இறங்குகிறார்களா என்று சோதனை போட்டான். 'இனிமேல் பங்கஜத்தை பார்க்கவே முடியாமல் போய் விடுமோ.' இப்படியோர் எண்ணம் தோன்றியதும், கெட்ட கனா ஒன்று கண்ட மாதிரி பரபரத்துப் போனான் சரவணன். துக்கம் தொண்டையை அடைக்க, அவன் கண்கள் கலங்கி விட்டன, பாவம்.

சரவணன் பங்கஜத்தைப் பார்த்து 604800 நொடிகள் ஆகிவிட்டன; அதாவது ஒரு வாரம்! இந்த இடைவெளியை திரேதாயுகம் போய் துவாபரயுகம் வந்து விட்டது போல் உணர்ந்தான் அவன். ஏதோ ஒரு ஜென்மத்தில் அவளைப் பார்த்தது போலவும், இனி வேறொரு ஜென்மத்தில் அவளைப் பார்த்தால்தான் உண்டு என்றும் தோன்றியது அவனுக்கு. 'எத்தனை ஜென்மம் எடுத்தாலும் பிரம்மச்சாரியாவே இருந்து பங்கஜத்தை கல்யாணம் செய்து கொள்வேன்' என்று அடிக்கடி தனக்குள்ளேயே கூறிக்கொண்டான். தான் சந்திக்கும் ஜென்மத்தில் ஒருவேளை அவளுக்குக் கல்யாணம் ஆகியிருந்தால், அவள் காலடியிலேயே விழுந்து உயிரைப் போக்கிக் கொண்டு விடுவது என்றும் தீர்மானித்து வைத்திருந்தான். பித்து நன்றாகத் தலைக்கேறி விட்டது!

ஒருநாள் பண்டாபீசில் தன் ஸீட்டில் உட்கார்ந்திருந்த போது 'வேலையை ராஜினாமா செய்துவிட்டால் என்ன?' என்று தோன்றவே, ராஜினாமா கடிதத்தை எழுதிக்கொண்டு நேரே செகரட்டரியின் அறைக்குச் சென்றான்.

இவன் வாயைத் திறப்பதற்கு முன் செகரட்டரி, ''சரவணா, சுந்தரம் பிள்ளைத் தெரு மோகனரங்க முதலியார்பெரம்பூரிலே வீடுவாங்கிட்டுப் போயிட்டாராம். இதான் அவரோட புது அட்ரஸ். இனிமே எல்லா கம்யூனிகேஷன்ஸையும் இந்த அட்ரசுக்கே அனுப்பு'' என்று கூறி ஒரு காகிதத்தை அவனிடம் கொடுத்தார்.

அந்த அட்ரஸை 'அலாக்கா' வாங்கிக் கொண்ட சரவணன், ஸீட்டுக்கு வந்து தன் ராஜினாமா கடிதத்தைச் சுக்கு நூறாகக் கிழித்துப் போட்டான். 'கடும் தலைவலி' என்று லீவு லெட்டர் எழுதிக் கொடுத்துவிட்டுப் புறப்பட்டுவிட்டான்.

அன்று மாலை ஆறு மணிக்கு பெரம்பூரில் மோகனரங்க முதலியாரின் வீட்டில் நுழைந்ததும் தன் பெற்றோரை அங்கு கண்ட சரவணனின் தலை மெரி-கோ-ரவுண்டு போல் சுற்றியது.

ராஜாபாதர் முதலியாரும் சண்பகம் மாளும் சற்றும் எதிர்பாராமல் அங்கு தங்கள் மகனைக் கண்டதும் திருதிருவென்று விழித்தார்கள்.

—தொடரும்

61 வயதினிலே..!

மெரீனா —

5. சரவணனுக்கு சவால்!

மோகனரங்க முதலியாரின் சகலை வஜ்ரவேலு முதலியார். அவரும் புரசைவாக்கத்திலேயே மூக்காத்தாள் தெருவில் வசித்து வந்தார். கஸ்டம்ஸில் ராஜாபாதர் முதலியாரின் 'தோஸ்து'. இருவருக்குமே வீட்டிலிருந்து சாப்பாடு வரும். மத்தியானம் ஒன்ருக அமர்ந்து, பதார்த்தங்களைப் பரிமாறிக் கொணடு நிதானமாகச் சாப்பிடுவார்கள். அப்போதுதான் ஊர் அக்கப்போர் அமர்க்களப்படும். குடும்ப விஷயங்களும் அடிபடும்.

ஒரு நாள் 'லஞ்ச்' சாப்பிடும்போது தன் மகன் சரவணனைப் பற்றிய பேச்சை ராஜாபாதர் தொடங்க, 'அவனுக்கு ஒரு கல்யாணத்தைச் செய்து விடுவதுதானே' என்று வஜ்ரவேலு யோசனை சொல்ல, 'நல்ல குடும்பத்தைச் சேர்ந்த பொண்ணு இருந்தா சொல்லுங்க' என்று ராஜாபாதர் கூற, தன் பெண் சந்திராவைப் பற்றி வஜ்ரவேலு விவரிக்க, கல்யாணப் பேச்சு 'ஜாம் ஜாம்' என்று அரங்கேறியது.

பல நடன நட்சத்திரங்களின் கலை வாழ்க்கை அரங்கேற்றத்துடன் முடிந்து விடுவதுபோல், இந்தக் கல்யாணப் பேச்சும் அரங்கேற்றத்துடனேயே நின்று விட்டது. பெண் பார்க்கும் படலமோ, பிள்ளை பார்க்கும் படலமோ தொடரவில்லை. அதற்குக் காரணம், சரவணன் போட்ட முட்டுக்கட்டையே. வஜ்ரவேலுவின் பெண்ணைப் பற்றி சண்பகம்மாள் சமையலறையில் தன் மகனின் காதில் போட்டதும், சரவணன் அட்டகாசமாகச் சத்தம் போட்டான்:

''நீங்க ரெண்டு பேரும் என்னை என்னன்னு நினைச்சிட்டிருக்கீங்க? சுந்தரம் பிள்ளைத் தெருவுலே பொண்ணு இருக்குன்னு நான் சொன்ன, மூக்காத்தாத் தெருவுலே ஒரு பொண்ணு இருக்குதுன்னு நீங்க சொல்றீங்களே...அப்படிப் பார்க்கப் போன, தெருவுக்குப் பத்து, பன்னண்டு பொண்ணுங்க இருக்கும்... ஒண்ணு ஒண்ண இட்டாந்து, 'இவளைக் கட்டிக்கிறியா, அவளைக் கட்டிக்கிறியா?'ன்னு கேப்பீங்க போலிருக்கே? இதோ பாரும்மா, என் மனசுக்குப் பிடிச்ச பொண்ணைத்தான் நான் கட்டிக்க முடியும்... முன்னேபின்னே தெரியாதவளையெல்லாம் என் தலேலே கட்டப் பார்க்காதீங்க...''

''இதென்னப்பா பேச்சு! உங்கப்பாவும் நானும் முன்னேயே தெரிஞ்சு பழகித்தான் கல்யாணம் செய்துகிட்டோமா..? கல்யாணத்தன்னிக்குத்தான் முதல் தடவையா பார்த்துகிட்டோம்... அது கூட குனிஞ்ச தலே நிமிராமெ ஒருத்தரையொருத்தர் ஓரக் கண்ணுலே பார்த்துக்கிட்டதுதான்...''

''அதெல்லாம் அந்தக் காலம்...எட்டு வயசுலேயும் ஒம்பது வயசுலேயும் பொம்மைக் கல்யாணம் செஞ்சு வெச்சதை இப்போ சொல்லி என்ன பிரயோஜனம்...? நான் மீசை முளைச்ச ஆம்பளை, தெரிஞ்சுக்க... இஷ்டப்பட்ட பொண்ணைக் கட்டிக்க எனக்கு 'ரைட்' இருக்குது. ஒத்தரும் கேட்க முடியாது....''

''ஒண்ணு சொல்றேன் கேட்டுக்க சரவண. அப்பா அம்மா பார்த்து கல்யாணம் செஞ்சு வெச்சா, நாளைக்கு ஒரு கஷ்டமோ நஷ்டமோ வந்தா, 'பாவம், நாம் செஞ்சு வெச்ச கல்யாணமாச்சே...'ன்னு பரிதாபப்பட்டு ஆதரவுக்கு வருவாங்க...அப்படியில்லாமெ பொண்ணோ பிள்ளையோ பெத்தவங்க இஷ்டத்துக்கு விரோதமா யாரையாவது இஸ்துகினு போய்க் கட்டிகிட்டு அப்புறம் அவதிப்பட்டா, பெத்தவங்ககூடத் திரும்பிப் பார்க்க மாட்டாங்க..'சொல் பேச்சுக் கேக்காத கழுதை எக்கேடு கெட்டுப் போனு என்ன?'ன்னு விட்டுடுவாங்க.. தப்பு பண்ணினதைக் காலம் பூராவும் சொல்லிச் சொல்லிக் காண்பிச்சுக்கிட்டிருப்பாங்க. நாலு மனுஷாளு ஆதரவு வேணும்னு முறைப்படி கல்யாணம் பண்ணிக்கிறதுதான் நல்லது ... நீங்க நல்லாயிருக்கணுமேன்னு தானேப்பா இதெல்லாம் சொல்றேம்...''

''ஏம்மா, என்ன நீபாட்டுக்கு பேசி கினே போறே..? உங்க இஷ்டத்துக்கு விரோதமா அவளை இஸ்துகினு போகப் போறேன்னு சொன்னேன்?... பி. ஏ., பாஸ் பண்ணி, ஒரு உத்தியோகமும் தேடிக்கிட்டா, சுந்தரம் பிள்ளைத் தெரு பொண்ணைக் கட்டிக்கலாம்னு அப்பா சொன்னரே.... அதை அப்படியே காத்துலே பறக்க வுட்டுட்டு, இப்போ திடீர்னு மூக்காத்தா தெருவுக்குப் போன என்ன அர்த்தம்னுதான் கேட்டேன்.''

இத்தனை நேரம் திண்ணையில் பேப்பர் படித்துக் கொண்டே அம்மாவுக்கும் பிள்ளைக்கும் நடந்த சமையலறை டயலாகை ஒரு காது கொடுத்துக் கேட்டுக்கொண்டிருந்த ராஜாபாதர், மகன் தன்மீது குற்றம் சாட்டியதைக் கேட்டு, பயங்கரப் புயல் போல் சீறிக்கொண்டு வந்தார்.

''அட அறிவுகெட்ட முண்டமே! உனக்குக் கல்யாணம் செஞ்சு வெக்கறேன்னு சொன்னது உண்மைதான். சுந்தரம் பிள்ளைத் தெரு முதலியார் நம்ம வூட்டுக்கு வந்து பிள்ளை கேட்டாதானேடா நான் மேற்கொண்டு பேச முடியும்? ஏண்டா பொறம் போக்கு! அவர் வீடேறிப் போய் என்னைப் பொண்ணு கேக்கச் சொல்றியா?''

''கேட்டா என்னவாம்...? அவங்கதான் வந்து பிள்ளை கேக்கணும்னு சாஸ்திரத்திலே எழுதி வெச்சிருக்கா?''

—தைரியமாக ஒரு போடு போட்டான் சரவணன். வீட்டுக் கூடத்திலேயே, பெற்றவர்களுக்கு முன்னிலையிலேயே முதன் முறையாகப் புரட்சிக்கொடியை ஏற்றி விட்டான்.

ராஜாபாதருக்கு நாடி நரம்புகளெல்லாம் துடித்தன. தன் பேச்சுக்கு எதிர் பேச்சுக் கேட்டறிந்திராத அவர், மகனின் முழக்கத்தை ஒரு 'போர்' பிரகடனயாகவே ஏற்றுக் கொண்டார்.

''மோகனரங்க முதலியாரிடம் போய்ப் பெண் கேட்பதா? அதைவிட கங்காதரேச்வரர் குளத்தில் விழுந்து உயிரை விடுவேன்டா'' என்று உறுமினர். 'குன்றத்தூர் சேக்கிழார் பரம்பரையில் வந்த ராஜாபாதர், மெட்ராஸ் முதலியார் வீட்டுப் படியேறிப் பெண் கேட்பதா?' அவர் மனம் கேட்டது.

''முடியாதுடா. நான் அங்கே போக மாட்டேன். அவரே வந்து கேட்டார்னு என் சம்மதத்தைக் குடுக்கிறேன். அப்படி இல்லேன்னு நீ என்ன செய்வியோ செஞ்சுக்க'' என்று ஓர் இரைச்சல் போட்டுவிட்டுக் குளிப்பதற்காக பாத்ரூமுக்குள் போனவர் கதவை 'தடால்' என்று அறைந்து சாத்தினர்.

மோகனரங்க முதலியாரை எப்படித் தன் வீட்டுக்கு வந்து கல்யாணப் பேச்சை ஆரம்பிக்கச் சொல்வது என்று சரவணன் தலையைச் சொறிந்து கொண்டிருந்த போதுதான், அவன் தலையில் பேரிடி விழுந்தது போல் புரசைவாக்கம் வீட்டைக் காலி செய்து கொண்டு அவர் பெரம்பூருக்குக் குடி பெயர்ந்தார்.



அந்த விலாசமும் தெரியவில்லை. தூக்குப் போட்டுக் கொண்டு சாகலாம் என்று எண்ணும் அளவுக்குச் சரவணனின் மனநிலை தடம் புரண்டு போயிருந்த நேரம் அது.

ஒரு நாள் 'பார்வதி பவன்' கட்டடத்தில் இருந்த சாயபு கடையில் ஒரு சிகரெட்டை வாங்கிப் பற்றவைத்துக் கொண்டு முத்தியால் செட்டித் தெருவிற்குள் திரும்பினன். எதிரில் ராஜா பாதரின் நண்பர் நாராயண ஐயர் வந்தார். சட்டென்று சிகரெட்டைக் கீழே போட்டு அதைக் காலால் மிதித்தான். வாயிலிருந்த புகையை வெளியே விடுவதற்குள் ஐயர் வெகு அருகில் வந்து நின்று பேச்சுக் கொடுக்கவே, புகையை 'கப்'பென்று விழுங்கிவிட்டுப் பலமாக இரண்டு முறை இருமினன்.



''என்னப்பா சரவணு, உடம்பு சரியில்லையா, இருமறியே?'' என்று கேட்டார், இங்கிதம் என்றால் வீசை என்ன விலை என்று கேட்கும் நாராயண ஐயர்.

''ஆமாம் சார். ரெண்டு நாளா கோல்டு'' என்று கூறியபடி நழுவப் பார்த்தான் சரவணன்.

நாராயண ஐயர் போன ஜென்மத்தில் உடும்பாகத்தான் இருந்திருக்க வேண்டும். அவர் பிடியில் சிக்கிக் கொண்டால் லேசில் தப்பிக்க முடியாது.

''எங்கே போறே...? அன்னதான சத்திரத்திலே 'கந்த புராண' லெக்சர் இருக்கு...வா... கேட்டுட்டுப் போகலாம்'' என்று கையைப்பற்றி அழைக் காத குறையாகக் கூப்பிட்டார்.

''நீங்க போங்க, நான் ஒரு ஃப்ரெண்டைப் பார்த்துட்டு நேரே அங்கே வந்துடறேன்'' என்று ஒரு பொய்யைச் சொல்லி விட்டு ஐயரிடமிருந்து பிய்த்துக் கொண்டு ஓடினன் சரவணன்.

சற்று தொலைவு சென்றதும் சிறுவர்கள் தெருவில் பம்பரம் விளையாடிக் கொண்டிருந்ததைப் பார்த்ததும் அவனுக்குப் பழைய ஞாபகங்கள் வந்தன. கை ஊறிற்று. இரண்டு 'குத்தாட்டம்' ஆட வேண்டும் என்று துடித்தான். ஒரு பையனிடம் பம்பரத்தைக் கேட்டு வாங்கி, ஜாட்டியை வேகமாகச் சுற்றி, 'ஊக்'கை நாக்கில் தொட்டுக் கொண்டு ஓங்கிக் குத்தினன். சுழலும் பம்பரத்தை ஜாட்டியால் தூக்கிப் போட்டு 'அப்பீட்'எடுப்பது போல் தன் கையில் ஏந்தி, ஒரு பரட்டைத் தலையில் அதைச் சுழலவிட்டுஅவன் அலறுவதைக் கண்டு சிரித்தான். 'பண்டாபீஸ் மாமா' பம்பரம் விட்டதைக் கண்டு பையன்களுக்கெல்லாம் குதூகலம் தாங்க முடியவில்லை.

பம்பரம் ஆடியும் வெறுப்புத் தீரவில்லை சரவணனுக்கு.

குப்பைத் தொட்டியின் அருகில் ஒரு பழைய பாட்மின்ட்டன் பந்து கிடந்தது. அதைக் காலால் உதைத்துக்

கொண்டே ஏதேதோ யோசித்தவாறு, சுப்பிரமணிய பிள்ளைத் தெருவுக்கு வந்தான். இவனுடைய ஃபேஸ்ட் ஃபார்ம் ஜியாகரபி வாத்தியார் (வெண்டைக்காய் மோர்க் குழம்பு) இவனைப் பார்த்து விட்டு, ''சரவணா, வீடு அடமானம் விஷயமா பண்டாபீசுக்கு வரணும். அங்கே நாளைக்கு இருப்பியா?'' என்று கேட்டார். ''இருப்பேன், வாங்க ஸார்'' என்று மரியாதைக்குக் கூட நிற்காமல் நடந்து கொண்டே கூறினான். 'வகுப்பில் அவருக்கு எத்தனை பயந்திருக்கிறான்! அவர் வகுப்பு என்றாலே வயிற்றில் புளியைக் கரைக்குமே. இப்போது, அவர் யாரோ ஒரு சாதாரண மனிதர் போல் ஆகி விட்டாரே! அவரல்லவா இவனிடம் மரியாதையுடன் பேசுகிறார்!

திடீரென்று பாட்மின்ட்டன் பந்து ஞாபகம் வந்தது சரவணனுக்கு. திரும்பிப் போய் அதைக் கண்டு பிடித்துக் காலால் எட்டி உதைத்தான். அது ஒரு சாக்கடையில் போய் விழுந்தது. பெரிதாக எதையோ இழந்து விட்டது போல் அவனுக்கு துக்கம் வந்தது. ஏற்கெனவே கெட்டுப் போயிருந்த அவனுடைய 'மூடு' குட்டிச்சுவராகி விட்டது. குளத்தங்கரைப் பிள்ளையார் நினைவு வந்தது. அடுத்த கணம் அங்கு செல்ல வேண்டாம் என்று தீர்மானித்தான். எத்தனை செய்தும் அவர் தன்னைக் 'கண்டுக்கவே'யில்லை என்று அவர்மீது அவனுக்கு ஓர் ஆதங்கம்.

'இனிமேல் வெள்ளாளத் தெரு பிள்ளையாரைச் சுற்றிப் பார்ப்போமே' என்று முடிவு செய்து அவரை நாடிச் சென்றான். அர்ச்சகர் கற்பூரம் ஏற்றி ஆரத்தி காட்டிச் சரவணனிடம் தட்டைக் கொண்டு வந்தபோது அது 'டப்'பென்று அணைந்து விட்டது. அவ்வளவுதான். உலகமே இருண்டு விட்டது போலத் தோன்றியது அவனுக்கு. எல்லாமே தனக்கு எதிராகச் சதி செய்வதாக நினைத்து, உடலிலே சக்தியற்றுப் போய்த் தள்ளாடித் தள்ளாடி நடைப்பிணமாய் வீடு வந்து சேர்ந்தான்.

இந்த மன நிலை மறு நாள் வரை நீடித்தது. பண்டாபீசில் உட்கார்ந்திருந்தவன் திடீரென்று ராஜினமா செய்யவேண்டும் என்று தீர்மானித்து, ராஜினமா கடிதத்துடன் செகரட்டரியின் அறையில் நுழைந்ததற்கு இந்த மனநிலைதான் காரணம். மோகனரங்க முதலியாரின் பெரம்பூர் விலாசம் கிடைத்ததும் அவன் கவலை எல்லாம் நீங்கி பறந்தோடிச் சென்றவன், எதிர்பாராமல் அங்கு தன் பெற்றோரைக் கண்டதும் தடுமாறிப் போனான்.

அவர்கள் எப்படி அங்கே வந்து சேர்ந்தார்கள்?

சண்பகம்மாளின் தொந்தரவு சகிக்க முடியாமல், தன் சுய மரியாதையையும் சுய கௌரவத்தையும் விட்டுக்கொடுத்து மோகனரங்க முதலியாரைப் பார்த்துப் பேச ஒப்புக்கொள்வதைத் தவிர ராஜாபாதருக்கு வேறு வழியில்லாமல் போய்விட்டது. மோகனரங்கம் தன் 'தோஸ்து' வஜ்ரவேலுவுக்கு சகலை என்று தெரிந்ததும், அவரிடம் விலாசத்தை வாங்கிக் கொண்டு பெரம்பூருக்குப் புறப்பட்டு வந்தார்.

தன் பெற்றோரை மோகனரங்க முதலியார் வீட்டில் பார்த்ததும் முதலில் பேச்சடைத்துப் போன சரவணனின் முகத்திலிருந்து அசடு வழிந்து, அந்த ஹால் முழுவதும் ஓடிற்று! அவன் பேச்சு அதில் வழுக்கி, உளறலாக் உருண்டது...

''புரசைவாக்கம் பண்டாபீசிலிருந்து வந்திருக்கேன். அடுத்த மாசம் ஜெனரல் பாடி மீட்டிங் இருக்கு. சொல்லிட்டுப் போகலாம்னு வந்தேன்'' என்று கூறிவிட்டு ஒரே ஓட்டமாக வெளியே ஓடிவிட்டான். அசல் பைத்தியம் போல், பாதயாத்திரையாகவே மேடவாக்கம், கெல்லீஸ் வழியாகப் புரசைவாக்கம் திரும்பியவன், வழியில் பைத்தியக்கார ஆஸ்பத்திரி வாசலில் சற்று நேரம் நின்றான். உள்ளே சென்று அட்மிட் செய்துகொண்டு விடலாமா என்றுகூட ஒரு கணம் சிந்தித்தான்!

அன்று பஸ்ஸில் வீடு திரும்பிய ராஜாபாதரும் சண்பகம்மாளும் 'சொரத்தே' இல்லாமல் இருந்தார்கள். மோகனரங்க முதலியார் அவரிடம் 'பிடி' கொடுத்தே பேசவில்லை. பங்கஜத்திற்கு இன்னும் ஒசத்தியான பையனைப் பார்த்துக் கொண்டிருப்பதாக அவர் ஜாடைமாடையாகக் கூறியது ராஜாபாதருக்கு 'சுருக்'கென்று தைத்தது.

''உன்னாலேதான் சண்பகம் என் மரியாதையைக் கெடுத்துக்கிட்டேன். இனிமே நான் அந்த வாசப்படி மிதிக்கமாட்டேன். அந்தப் பொண்ணுதான் அவனுக்கு வேணும்னா, சாமிக்கண்ணு பையன் செஞ்ச மாதிரி அவளை இஸ்துகினு எங்கேயாவது ஓடச் சொல்லு'' என்றார் ராஜாபாதர், உரத்த குரலில். அது சரவணனின் கன்னத்தில் 'பளார்' என்று அறைவது போலிருந்தது.

இடைவேளை

4 வாரங்கள் மட்டும்



இதோ 8 காரணங்கள்:
அதிகபடி இடவசதி அளிக்கும் வெளிப்புறம் பொருந்தும் மூடி
சுலபமான மற்றும் பாதுகாப்பான கட்டமைப்பு
தனித்தன்மை வாய்ந்த சேப்டி வால்வு முறை வழிகளில் பாதுகாக்கிறது
நாள்பட உழைக்கும் உறுதியான மற்றும் கனமான அடிப்பகுதி.
Prestige
தரத்திற்கு உத்தரவாதம் அளிக்கும் ISI முத்திரை
உணவின் மணமும் சத்தும் முழுமையாக பாதுகாக்கப்படுகிறது
நாடு முழுவதும் அமைக்கப் பெற்ற சேவை நிலையங்கள்.
4 முதல் 12 லிட்டர்வரை பல கொள்ளளவுகளில் கிடைக்கிறது.
இந்தியாவின் முதலாவது
பிரஷர் குக்கர்
இன்னமும் வெகுவாக
பயன் படுத்தப்படுகிறது
Prestige
ப்ரஸ்டிஜ் டி டி. (பிரைவேட்) லிட்., பெங்களூர்-560016

MCA/TT/50-Tam


நெடுங்கால
நீடிப்பு
உழைப்பிலே
சிறப்பு
பின்னி
பருத்தித்
துணிகள்!
தொடர்ந்தாற்போல்
இறுக்கமும் இழுவையும்
வரத்தான் செய்யும்.
ஆனால் நீங்கள் நடக்கும்போது, குதித்து ஓடியாடும்போது, திரும்பும்போது அல்லது இழுக்கும்போது வலுவான துணிகள் மட்டுமே அவற்றுக்கு ஈடு கொடுக்க முடியும்.
பின்னி பருத்தித் துணிகளின் ஒவ்வொரு இழையிலும் வலிமை உள்ளது; உறுதி உள்ளது; வாழ்க்கை ஓட்டத்தில் நன்றாக ஈடு கொடுக்கின்றது.
துணியை அணியும்போது சொகுசுடன் குளுமை தருகின்றது!
பின்னி பருத்தித் துணிகள்!
உடுக்கக் குளுமை–உழைப்பில் வலிமை

CAS BC 2 TM 77

16 வயதினிலே..!

மெரீனா —

சென்னை புரசைவாக்கம் சரவணப்பெருமாள் முதலித் தெருவில் பிறந்த சரவணனுக்கு எஸ்.எஸ்.எல்.சி. படிக்கும்போதே மோகனரங்க முதலியார் பெண் பங்கஜத்தின் மீது காதல் ஏற்படுகிறது. பி.ஏ., பாஸ் செய்துவிட்டு பண்டாபீஸ் ஒன்றில் வேலைக்கு அமர்ந்த பிறகு அவளைக் கல்யாணம் செய்து கொள்ளத் துடிக்கிறான். முதலில் இதற்கு இஷ்டப்படாத தந்தை ராஜாபாதர் மனைவியின் தூண்டுதலின் பேரில் மோகனரங்க முதலியாரிடம் சென்று பெண் கேட்கிறார். மோகனரங்க முதலியார் இந்த சம்பந்தத்திற்கு ஒப்புக்கொள்ளாததால் ராஜாபாதருக்கு மானம் போகிறது. 'இனிமே அந்த வீட்டு வாசப்படி மிதிக்க மாட்டேன்' என்று சபதமிடுகிறார். 'இவனுக்கு அந்தப் பொண்ணுதான் வேணும்னு அவளை இஸ்துகினு ஒடச் சொல்லு' என்று மனைவியிடம் உறுமுகிறார். இடைவேளைவரை நடந்த கதை இதுதான்.

இது ஒரு 'கதை'யா? இதற்கு இடைவேளை ஒரு கேடா?

—ஒரு விமரிசகரின் கேள்வி

6. காதல் கல்யாணம்!



சரவணன் மாம்பலம் யோகாம்பாள் தெருவிலுள்ள தமது வீட்டில் தோட்ட வேலை செய்து கொண்டே அடிக்கடி புரசைவாக்கம் நாட்களை நினைத்துக் கொள்வார். இளவயதில் தெருத் தெருவாகச் சுற்றியதையும், படிக்காமல் இரவு பகலாக விளையாடியதையும், நண்பர்களுடன் சண்டை போட்டதை யும், கங்காதரேச்வரர் கோயில் பிரும் மோற்சவத்தின்போது தண்ணீர் பந்தல் வைத்ததையும், அதற்காக நன்கொடை வசூலித்ததையும், பங்கஜத்தைப் பார்ப்பதற்காக சுந்தரம் பிள்ளைத் தெருவில் வட்டமிட்டதையும், பண்டாபீஸில் உத்தியோகம் பார்த்த தையும், பங்கஜத்தையே கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்று பைத்தியம் பிடித்து அலைந்ததையும், அது முடியாவிட்டால் தற்கொலை செய்து கொள்ளக்கூடத் தயாராயிருப்பதாகக் கடிதம் எழுதியதையும்...

தன் பெண் பங்கஜத்தை சரவண னுக்குத் தாரை வார்த்துக் கொடுக்க மோகனரங்க முதலியார் தயாராயில்லை என்று தெரிந்ததும் அழுகை அழுகையாக வந்தது சரவணனுக்கு. 'நேரே பெரம் பூருக்குப் போய், பங்கஜத்தின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு வந்து

கல்யாணம் செய்துகொண்டு விட்டால் என்ன?' என்று நினைத்தான். 'இதற்குத் தான் அப்பாகூட பர்மிஷன் கொடுத்து விட்டாரே.'

இந்த அபார ஐடியாவைப் பற்றிக் கபாலியிடம் 'கன்ஸல்ட்' செய்தான்.

''நீ சரியான குன்ரோல்டா. மோகன ரங்கமுதலியார் போலீஸ் கம்ப்ளெயிண்ட் கொடுத்து உன்னை உள்ளே தள்ளிடுவார்'' என்று எச்சரித்தான் கபாலி.

''என்ன கபாலி, என்னை பச்சா பையன்னு நினைச்சியா? நானும் மேஜர், அவளும் மேஜர். நாங்க இஷ்டப்பட்டா போலீசு, சட்டம் எதுவும் ஒண்ணும் செஞ்சுக்க முடியாது தெரியுமா?''

''எனக்கும் 'லா' தெரியும் ப்ரதர். அந்தப் பொண்ணு இஸ்டப்படலேன்னு நீ என்ன செய்வே? 'படியேறி வந்து பலாத்காரம் செஞ்சான்'னு உன் மேலே கிரிமினல் கேஸ் போடுவாங்க..''

இதைக் கேட்டதுமே, போலீஸ் 'லாக்-கப்'பில் இருப்பது போல் கற்பனை செய்து கொண்டு பயந்து நடுங்கி விட்டான் சரவணன்.

''கபாலி, இப்போ என்னை என்னதான் செய்யச் சொல்றே?''

''பேசாமெ 'என்கூட வர இஸ்டமா?'ன்னு கேட்டு பங்கஜத்துக்கு ஒரு லெட்டர் எளுது. 'இஸ்டம்'னு அது பதில் போட்டா, அந்த 'அதாரிட்டி'யை வெச்சுகிட்டு, மோகனரங்க முதலியார் மேலே நாம போலீஸ் கம்ப்ளெயின்ட் குடுக்கலாம்.''

''எப்படி?''

''இஸ்டத்துக்கு விரோதமா ஒரு பொண்ணை வூட்லே மடக்கிப் போட்டிருக் காரு...அவளைக் காப்பாத்தி என் கிட்டே உடனே ஒப்படைக்கணும்னு 'பெட்டிஸன்' போட்டா போலீஸ் 'ஆக்ஸன்' எடுத்துதானே ஆவணும்.''

இந்த அபார ஐடியாவைக் கேட்டு தளபதியை இறுக்கித் தழுவிக் கொண்டு, பங்கஜா லாட்ஜுக்கு அழைத்துச் சென்று அவனுக்கு ஸ்வீட்டோடு டிபன் காப்பி வாங்கித் தந்தான் சரவணன்.

மறு நாள் பங்கஜத்திற்கு ஒரு கடிதம் எழுதினான். எழுதி எழுதி, படித்துப் படித்து, அடித்து அடித்து, திருத்தித் திருத்தி, நாலு பக்கக் கடிதத்தை நாலு வரியாகக் குறைத்து, அதைக் கபாலிக்குப் படித்துக் காட்டி, அவன் திருத்தங்களையும் சேர்த்து மிக நம்பிக்கையோடு போஸ்ட் பண்ணினான். அன்று பண்டாபீஸுக்கு லீவு போட்டான்.

ஒரு வாரமாயிற்று. பங்கஜத்தினிட மிருந்து பதிலே வரவில்லை. தினம் காலை யில் போஸ்டாபீசுக்குப் போய்ப் போய் ஏமாந்த சரவணன், மறுபடியும் கபாலி யிடம் கன்சல்ட்டேஷனுக்குச் சென்றான். வேறே எங்கே போவான்?

கபாலி யோசிக்கவேயில்லை. ''சரவணா, உன் கேஸ் குளோஸ். அந்தப் பொண்ணை





''திரௌபதி வேஷத்திலே நடிக்க ஒரு ரிக்கார்டு டான்ஸ்காரியை அழைச்சுகிட்டு வந்து சான்ஸ் கொடுத்த என் புத்தியை செருப்பாலே அடிக்கணும்..!''

''ஏம்பா?''

''பின்னே என்னப்பா? துகிலுரியற சீன்லே எப்படி கதறியழுது நடிக்கணும்..! இவ ஜாலியா சிரிச்சிக்கிட்டு துச்சாதனன் முதுகிலே தட்டிக் கொடுத்து 'வெரிகுட்.. வெரிகுட்'ன்னு சொல்றுப்பா...!''

—வி. ஜே. செல்வராஜ்

●

மறந்துடு'' என்று கூறிவிட்டு, 'நட்' ஒன்றை முடுக்குவதில் முனைந்தான்.

''அது மட்டும் என்னாலே முடியாது கபாலி. பங்கஜத்தைக் கட்டிக்க முடியலேன்னா நான் இப்பவே செத்துடத் தயார். எனக்கு ஏதாவது வழி சொல்லேன், ப்ளீஸ்!''

''சாவறத்துக்கா?''

''இல்லே, பங்கஜத்தைக் கட்டிக்க.''

நண்பனின் நிலையைக் கண்டு பரிதாபப் பட்டான் கபாலி.

''இப்படிச் செஞ்சு பாரு. மோகன ரங்க முதலியாருக்கு ஒருலெட்டர் எளுது. 'பங்கஜத்தை எனக்குக் கட்டிக் கொடுக் காட்டி நான் உசிரை வுட்டுடுவேன். சனிக்கிழமைக்குள்ளே பதில் வரலேன்னா, ஞாயிற்றுக்கிழமை காலேலே கங்காத ரேச்வரர் கொளத்துலே என் பொணம் மொதக்கும். அந்தப் பாவம் உங்களைத் தான் சேரும்'—அப்படின்னு சுருக்கமா எளுது. அதோட காப்பியை உங்க அப்பா வுக்கு ஒண்ணும், பண்டாபீஸ் செகரட் ரிக்கு ஒண்ணும் அனுப்பிவை.''

''செகரட்ரிக்கு எதுக்கு?''

''காரணத்தோடதான் சொல்றேன். சொல்றபடி செய்.'' — மன்னனுக்குத் தளபதி கட்டளையிட்டார்.

''செய்யறேன். சனிக்கிழமை வரைக் கும் பதில் வரலேன்னா நான் குளத்திலே மிதக்க வேண்டியதுதானா?''—கேட்கும் போதே சரவணனின் கண்கள் கலங்கின. நெஞ்சுக்குழியில் ஏதோ அடைத்தது.

''சாவறத்துக்கு பயப்படறயா? 'பங்கஜம் கிடைக்கலேன்னா சாவறத்துக் குத் தயார்'னு இப்போ சொன்னியே பிரதர்?''—சிரித்தான் கபாலி. அவனால் எப்படித்தான் சிரிக்க முடிகிறதோ?

''சரவணா, இந்த மூணு பெரியவங் களும் உன்னை சாவ விடமாட்டாங்க, பயப்படாதே. இந்த லெட்டர் போனா, ஒண்ணு நீ பங்கஜத்தைக் கட்டிக்குவே, இல்லேன்னா ஜெயில்லே இருப்பே'' என்றான் கபாலி சர்வசாதாரணமாக, 'பஞ்சர்' ஒட்டிக்கொண்டே.

சரவணன் ஒன்றும் புரியாமல் திகைத் தான். அவன் முகத்தைப் பார்க்காமலே பேசினான் கபாலி:

''மோகனரங்க முதலியாருக்கு தன் பொண்ணை உனக்குக் கொடுக்க இஸ்டமில்லேன்னு வெச்சுக்க, நீ தற்கொலை பண்ணிக்கிறேன்னு பயமுறுத் தறதாகப் போலீஸ் கம்ப்ளெயிண்ட் கொடுப்பாரு. அப்புறம் அது பெரிய கேஸாயிடும். உன்னை ரெண்டு மூணு வருஷம் தீட்டிடுவாங்க.''

''ஐயையோ! அப்படின்னா லெட்டர் பேச்சே வாணம், வேறே ஏதாவது வழி சொல்லு.''

''லெட்டர் வாணான்னா தந்தி அடி!'' என்று பெரிய 'ஜோக்' அடித்து விட்டதாக நினைத்துக் கொண்டு 'கலகல' வென்று சிரித்தான் கபாலி. சரவண னுக்கு 'பொல பொல'வென்று கண்ணீர் வந்தது.

''அழுவாதே சரவணா. மோகனரங்க முதலியார் போலீசுக்குப் போனா, எப்படி யாவது உன்னை வெளியே கொண்டாரது என் பொறுப்பு, போ. தைரியமா இன் னிக்கே நான் சொன்ன பிரகாரம் லெட்டர் எழுதிப் போடு'' என்று சரவணனை அனுப்பி வைத்தான் கபாலி.

கபாலி சுத்தமான மனத்துடனேயே இப்படி அட்வைஸ் பண்ணினான் என்று நம்பி, மூன்று பேருக்கும் கடிதம் எழுதிப் போட்டான் சரவணன். அவன் நம்பிக்கை வீண் போகவில்லை. ஒரு வாரத்தில் அவனுக்கு பங்கஜத்திடம்



''நானும் அவளும் ஒத்தரை ஒத்தர் மனசார நேசிச்சோம்!''

''அப்படியா?''

''ஆமாம்! நான் சாப்பிட்டா அவளுக்கு ஜீரணம் ஆகும். எனக்குப் புரை ஏறினா அவ தன் தலையை தட்டிக்குவா... நான் கொட்டாவிவிட்டால் அவளுக்குத் தூக்கம் வரும்...எனக்கு நெஞ்சைக் கரிச்சால் அவ சோடா குடிப்பா...!''

''ஆச்சரியமா இருக்கே! கடைசிலே என்ன ஆச்சு...?''

''நான் அவளைக் கல்யாணம் பண்ணிக்கிட்டேன். அவ வளைகாப்பு பண்ணிக்கிட்டா!''

—வி. ஜே. செல்வராஜ்

கல்யாணம் இனிதே நடந்தேறியது. அந்தக் கல்யாணத்தில், முருகேசனின் லாண்டரியில் வெளுத்த யாருடைய சட்டையையோ போட்டுக் கொண்டு, காலரைத் தூக்கி விட்டுக்கொண்டு அலைந்து கொண்டிருந்தான் கபாலி!

மோகனரங்க முதலியார் போலீசுக்குப் போவதற்கு பதில் ஏன் திருமணத்தை நடத்தி வைத்தார் என்பது சரவணனுக்குப் புரியாத புதிராகவே இருந்தது. அந்தப் புதிர் முதலிரவு அன்றுதான் அவனுக்குப் புரிந்தது.

அன்று இரவு பூராவும் ஓயாத பேச்சு! பங்கஜத்தை முதன்முதலில் தெப்போற்சவத்தில் பார்த்தது முதல் நடந்ததையெல்லாம் ஒன்று விடாமல் அவளிடம் பேசித் தீர்த்தான். சொல்லக் கூடாததையெல்லாம் சொல்லி உளறினான். தன்னைப் பற்றி அவள் என்ன நினைத்தாள் என்பதையெல்லாம் கேட்டுக் கேட்டு அறுத்தான். அவளைக் கொஞ்சிய படியே, ''என்னைக் கல்யாணம் செய்துக்க உனக்கு இஷ்டமான்னு கேட்டு நான் எழுதின லெட்டருக்கு நீ ஏன் பதில் போடலே?'' என்று கேட்டான்.

''அதைப் படிச்சதும் நான் பயந்தே போயிட்டேன். அதை யாராவது படிச்சுடப் போறுங்களேன்னு பாத்ரூமுக்கு எடுத்துகிட்டுப் போய் இன்னொரு தரம் படிச்சுட்டு, சுக்குநூறு கிழிச்சுப் போட்டுட்டேன். ஏதாவது பதில் எழுதலாம்னு நினைச்சேன். லெட்டரைக் கிழிச்சுப் போட்டுட்டதாலே உங்க வீட்டு அட்ரஸ் என்னன்னு தெரியலே. அதனாலே 'கம்'முனு இருந்துட்டேன்'' என்றாள் பங்கஜம்.

''அது சரி, நான் உங்கப்பாவுக்கு லெட்டர் போட்டேனே, அதைப் படிச்சுட்டு அவரு என்ன செஞ்சாரு?''

''தா தைன்னு குதிச்சாரு. அம்மாகிட்டே சத்தம் போட்டாரு... 'இந்தப் பண்டாபீஸ் பையன் தற்கொலை பண்ணிக்குவேன்னு பயமுறுத்தறானே.. அவனைப் போலீசுலே பிடிச்சுக் குடுக்கறேன், இல்லியா பாரு'ன்னாரு.''

''நிஜமாவா? அப்புறம் எப்படி மனசு மாறினாரு...?''

'''அவரைப் போலீசுலே புடிச்சுக் குடுத்தா, விஷம் குடிச்சு செத்துடுவேன்'னு நான் சொன்னேன். அப்பா மறுநாளே உங்க வூட்டுக்கு புறப்பட்டுப் போனாரு...'' என்றாள் பங்கஜம்.

''நிஜமாவா அப்படிச் சொன்னே? அப்படின்னா என் மேலே உனக்கு அவ்வளவு ஆசையா கண்ணு?'' என்று கேட்டுக் கொண்டே உணர்ச்சிவசப்பட்டு பங்கஜத்தை இறுக்கிக் கட்டிக் கொண்டு படாதபாடு படுத்தினான் சரவணன்.

''ஐயே, வுடுங்க...கிளாஸ் வளையெல்லாம் நொறுங்குது...கையிலே ரத்தம் வருது பாருங்க'' என்று அவள் கத்தியதும்தான் தன் பிடியைத் தளர்த்தினான்.

அந்த இரவையும் அந்த நிகழ்ச்சியையும் அடிக்கடி நினைவுபடுத்திக் கொள்வார் சரவணன். ரிடையர் ஆன அன்று உணர்ச்சிவசப்பட்டு, பங்கஜத்தின் கையைப் பற்றியவாறே தன் கடந்த கால வாழ்க்கையைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தபோது, ''பங்கஜம், உன் கையிலே இருக்கே இந்த வடு, இது எப்படி ஏற்பட்டுதுன்னு ஞாபகம் இருக்கா?'' என்று கையைத் தடவியபடி, அசடு வழிய அவளை ஒரு தினுசாகப் பார்த்தார்.

''அட, சொம்மா இருங்க. புள்ளைக்கு கல்யாணம் செய்ற வயசாயிடுச்சு. இப்போ போய்..?'' என்று ஒதுங்கி நின்றாள் பங்கஜம்.

—தொடரும்

மன்மத லீலை



காஞ்சனமாலா




மன்மத னின்வர வையெதிர் நோக்கி
இரவில் ஒருநாள் ரதிகாத் திருந்தாள்
கன்னமி ரண்டிலும் கண்ணீர் பெருக
மைவிழி நோக அவள்பார்த் திருந்தாள்.

இருவரின் மேலவன் கணைதொடுத் ததனுல்
உலகில் அவர்கள் துன்பம் கொண்டனர்
இரவில் தான்வரத் தாமதம் செய்ததன
காரணம் அதுவே என்றவன் சொன்ஞன்.

உலகில் பலரைத் தன் மலர்க் கணையால்
காதல் துன்பத்தில் ஆழ்த்தும் மதனன்
அழகுடன் பொருந்திய தன்னெழில் காதலி
ரதியையும் காதல் துயருடன் கண்டான்.

—வி. காஞ்சனமாலா,
பி. யு. சி,
எதிராஜ் கல்லூரி, சென்னை.

மாணவர்



ராஜாராம்

அசரீரி!

நான் மதரை தியாகராஜர் கல்லூரியில் புகுமுக வகுப்பு படித்துக் கொண்டிருந்த போது ......

சீவக சிந்தாமணியில் அசரீரி ஒலிக்கின்ற பகுதியை டாக்டர் ஜெயராமன் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். வகுப்பு நேரம் முடிய சில நிமிடங்கள் இருக்கவே, வருகைப் பதிவு எடுத்தார். அடிக்கடி வகுப்புக்கு வராத ஒரு மாணவர் அன்றும் வரவில்லை. அவரது



உதயகுமார்

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் டாக்டர் சி. பாலசுப்பிரமணியன் மேற்பார்வையில் ஆராய்ச்சி மாணவர் பா. உதய குமார் எம். ஏ., 'பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடல்கள்—ஓர் ஆய்வு' என்ற தலைப்பில் ஆய்வு நிகழ்த்தி, எம். பில்., பட்டம் பெற்றுள்ளார். திரைப்படப் பாடல்களைப் பற்றி சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு அளிக்கப்பட்ட முதல் ஆராய்ச்சிக்கட்டுரை இதுவே யாகும். மேலும் இவர் தன் டாக்டர் பட்டத்திற்கு அறிஞர் அண்ணாவைப் பற்றி ஆராய்ச்சி செய்கிருர்.

•

சாமர்த்திய முதல்வர்!

மதுரைப் பல்கலைக் கழக ஆசிரியர்கள் போராட்டம் செய்த நேரத்தில் செமஸ்டர் பரீட்சை நடந்தது. எங்கள் கல்லூரி ஆசிரியர்கள், சூப்ரவைசர்களையெல்லாம் உள்ளே போகக் கூடாது என்று மறித்துக் கொண்டிருந்தனர். அப்போது எங்கள் கல்லூரி முதல்வர் வந்தார். அவரை உள்ளே செல்லக்கூடாது என தடுத்தனர். ஆனுல் முதல்வர் சுவரைத் தாண்டிக் குதித்து உள்ளே சென்றுவிட்டார். மாணவர்கள் ஒழுங்காகப் பரீட்சை எழுத வேண்டும் என்ற அக்கறை அவருக்கு!

—என். காசிவிஸ்வநாதன்,


இதோ 8 காரணங்கள்:
அதிகபடி இடவசதி அளிக்கும் வெளிப்புறம் பொருந்தும் மூடி
சுலபமான மற்றும் பாதுகாப்பான கட்டமைப்பு.
தனித்தன்மை வாய்ந்த சேப்டி வால்வு மூன்று வழிகளில் பாதுகாக்கிறது.
நாள்பட உழைக்கும் உறுதியான மற்றும் கனமான அடிப்பகுதி.
Prestige
தரத்திற்கு உத்தரவாதம் அளிக்கும் ISI முத்திரை.
உணவின் மணமும் சத்தும் முழுமையாக பாதுகாக்கப்படுகிறது.
நாடு முழுவதும் அமைக்கப் பெற்ற சேவை நிலையங்கள்.
4 முதல் 12 லிட்டர்வரை பல கொள்ளளவுகளில் கிடைக்கிறது.
இந்தியாவின் முதலாவது பிரஷர் குக்கர் இன்னமும் வெகுவாக பயன் படுத்தப்படுகிறது
Prestige
பிரஸ்டிஜ் டி டி. (பிரைவேட்) லிட்., பெங்களூர்-560016

61 வயதினிலே..!

மெரீனா —

7. முதல் ஷாக்!

சரவணனுக்குக் கல்யாணம் ஆன போது கிட்டத்தட்ட இருபத்தேழு வயதாகி விட்டது. நல்ல வளர்த்தியான சரீரமானதால் கல்யாண கோலத்தில் ரொம்ப வயதானவனைத் தோற்றமளித்தான். பங்கஜத்திற்கு இருபது வயதாகியிருந்தாலும், அவன் பக்கத்தில் ரொம்ப சிறியவளாகவே தோன்றினாள். கபாலி கூட, 'சரவணா, உனக்கு பங்கஜம் ரெண்டாந்தாரம் போலேருக்குடா' என்று கேலி செய்தான்.

பங்கஜத்தை கைப்பிடித்த வேளையோ என்னவோ, சரவணனுக்கு உத்தியோக உயர்வு கிடைத்தது. பண்டாபீசிலிருந்து ஒரு நல்ல 'பாங்க்'குக்குப் போனார். அந்த 'பாங்க்'கிலேயே படிப்படியாக முன்னேறி சீஃப் காஷியராக ரிடையரானார். ராயப்பேட்டை, மயிலாப்பூர், ஆள்வார்பேட்டை, மாம்பலம் என்று மாறி மாறி வாடகை வீடுகளில் குடியிருந்துவிட்டு, ரிடையராவதற்கு இரண்டு வருடங்களுக்கு முன் யோகாம்பாள் தெருவில் ஒரு பிளாட் வாங்கி ஒரு சிறு வீட்டைக் கட்டிக் கொண்டார்.

கல்யாணம் ஆகி ஐந்து வருஷம் கழித்துதான் அவர்களுக்கு முதல் பையன் சங்கர் பிறந்தான். அடுத்த ஐந்து வருஷத்தில் மோகன். அதற்கு அடுத்த ஐந்தாவது ஆண்டு, சுசீலா.. ''அடுத்த ஐந்தாண்டுத் திட்டம் என்னப்பா, ஆணா பொண்ணா?'' என்று ஒரு சமயம் கபாலி கேட்டபோது, ''ஐந்தாண்டுத் திட்டமெல்லாம் ஓவர். இனிமே குடும்பக் கட்டுப்பாடு திட்டம்தான்'' என்று பதில் சொன்னார் சரவணன். சொல்லிவிட்டாரே தவிர, அதைச் செயல்படுத்த படாதபாடுபட்டார். பங்கஜத்திற்கும் அவருக்கும் எத்தனையோ வாக்குவாதங்கள், மனஸ்தாபங்கள், மௌன விரதங்கள், உண்ணாவிரதப் போராட்டங்கள்!

''ஐம்பது வயசுலே குழந்தை பெத்துக்கிட்டா ஊர் சிரிக்கும்.''

''எனக்கு ஐம்பதா ஆவுது? நாப்பத்தஞ்சுதானே பங்கஜம். உனக்கு முப்பத்தெட்டுதானே.''

''ஐயே, போதுமே! சொம்மா கெடங்க! எந்நேரமும் உங்களுக்கு இதான் பேச்சு..தூ, மானம் போவுது!''

''தே..என்ன பேசிட்டேன்னு இப்படி அலுத்துக்கறே..? புருசன் பொஞ்சாதிக்குள்ளே இதுகூடவா பேசிக்க மாட்டாங்க..? எங்க பாங்க்லே ராகவாச்சாரி இருக்காரு பாரு, அவருக்கு ஐம்பது வயசாவுது....அவருக்குப் போன மாசம்தான் ஒரு குழந்தை பொறந்தது தெரியுமா..? வூட்லே பொஞ்சாதியோட பேசிக் கொஞ்சறதெல்லாம் எங்கிட்டே வந்து சொல்லுவாரு.. தமாஷா இருக்கும்..அவங்களும் நம்மை மாதிரி 'லவ்' மேரேஜுதான்..''

''ஆரம்பிச்சுட்டீங்களா..? 'லவ்'வும் எளவும்..மூணு பசங்க பொறந்தப்புறம் கூட இதெல்லாம் என்னாங்க பேச்சு..?''

''முப்பது பசங்க பொறந்தாத்தான் என்ன பங்கஜம்..? அதை மறந்துட முடியுமா? கங்காதீச்வர குளமும், தெப்பமும், சுந்தரம் பிள்ளைத் தெருவும், மூர் மார்க்கெட்டும் இன்னும் ஏழு ஜென்மத்துக்கு ஞாபகமிருக்குமே.. பங்கஜம், வர்றியா ஒரு நாள் புரசைவாக்கம் போயிட்டு வரலாம்..எல்லா இடத்தையும் நல்லா சுத்திப் பார்த்துட்டு வரணும் போலேருக்கு.''

''ஆமாங்க..பசங்களை இட்டுகிட்டு ஒரு நாள் போயிட்டு வரணும்..சங்கரும் மோகனும் கேட்டுகிட்டே இருக்காங்க. நீங்கதான் ஒண்ணுவிடாமெ அவங்ககிட்டே எல்லாத்தையும் சொல்லி வெச்சிருக்கீங்களே.. அவங்களுக்கு வேட்டைக்காரத் தெருவையும் மில்லர்ஸ் ரோடு தோப்பையும் பார்க்கணுமாம்..''

''புரசைவாக்கமே கம்ப்ளீட்டா மாறிப்பூட்சி பங்கஜம்.. என்ன கடைங்க, என்ன ஜனம், எவ்வளவு வூடுங்க... அடேயப்பா, அடையாளமே தெரியலே.. மவுண்ட் ரோடு, மயிலாப்பூர் கெட்டுது

போ..பங்கஜம், ஓங்க வூட்டை இட்சி முச்சூடும் மாத்திக் கட்டிட்டாங்க...பக்கத்துலே கரிக்கடை ஒண்ணு இருந்தது பாரு, அது இப்போ கார் ஷெட்டா யிடுச்சு..''

''அங்கே எதுக்குப் போனீங்க?''

''சொம்மாதான்..ஒரு நாள் திடீர்னு நெனைச்சுக்கினேன்.. பழைய நினைவெல்லாம் வந்துட்சு..சுந்தரம் பிள்ளைத் தெருவை ஒரு ரவுண்டு அடிச்சுகினு வந்தேன். பங்கஜம்.. பங்கஜம்..ஒரு நாள் உங்க வூட்டாண்டே நான் 'வாக்கிங்' வரப்போ... கையிலே ஒரு குழந்தையை வெச்சுகிட்டு நீ என்ன செஞ்சே ஞாபகமிருக்கா..?''

''கொஞ்சிக்கிட்டிருந்திருப்பேன்..''

''அதான் கேக்கறேன்.. எப்படிக் கொஞ்சிக்கிட்டிருந்தே?''

''ஊக்கும்.. இத்தினி வருஷம் கழிச்சு அதைத்தான் ஞாபகம் வெச்சுகிட்டிருக்கேனாக்கும்..''

''ஏ......ஏ.... திருட்டுக்கொட்டு ....நீ அந்தக் குழந்தையை என்ன செஞ்சே தெரியுமா..? இப்படி கிட்டே வா காட்றேன்..''

''ஐயோ..ஐயோ..! சுசிலா அழுவுது, நான் போறேன்..எதைப் பேசினாலும் பழசு எதையாவது ஞாபகப்படுத்திகிட்டு..''

''தே.. போன வாரம் குமுதத்திலே ஒரு கதை வந்துதே படிச்சியா.. பங்கஜம்? அது நம்ம லவ் ஸ்டோரி மாதிரியே யிருந்தது.. டிராயிங்கூட ரொம்ப ஷோக்கா போட்டிருந்தான்.. ரொம்ப நேரம் அதையே பார்த்துகினு இருந்தேன்..''

''உங்களுக்கு வேறே என்ன வேலே! அன்னிக்குக்கூடத்தான் காய்கறி வாங்கப் போனப்போ பனகல் பார்க்காண்டே சினிமா போஸ்டரைப் பார்த்துகினு நின்னுட்டீங்க..நீங்க பின்னாலே வரீங்கன்னு நினைச்சுகிட்டு நான் ராகவய்யா ரோடு வரைக்கும் வந்துட்டேன். திரும்பிப் பார்த்தா, உங்களைக் காணோம்..!''

''ஞாயித்துக்கிழமை அந்த சினிமாவுக்குப் போயிட்டு வரலாம் பங்கஜம்.. 'லவ்' சீன்ஸெல்லாம் ரொம்ப நல்லா இருக்குதாம்...''



"நான் வரலே, நீங்க வேணுமானா போயிட்டு வாங்க.. ரெண்டு வயசு குழந்தையை எடுத்துக்கிட்டு சினிமாவுக்குப் போனா எங்கம்மா திட்டுவாங்க.."

"அப்படின்னா உங்கம்மாவை இங்கே வரச் சொல்லு... குழந்தையை அவங்க கிட்டே வுட்டுட்டு நாம்ப ரெண்டு பேரும் சினிமாவுக்குப் போயிட்டு வரலாம்.."

"உங்களுக்கு சரியான பயித்தியம் தான் பிடிச்சுப் போச்சு..அம்மாவுக்கு உடம்புக்கு முடியலே..பெரம்பூர்லேருந்து பஸ்லேல்லாம் வர முடியாது..சுசீலா அழுவுது, நான் போறேன்."

நாற்பது வயதிலென்ன, ரிடையரான ஐம்பத்தைந்து வயதிலும் இப்படித் தான் இருந்தார் சரவணன். அப்போது அவருடைய முதல் பையன் சங்கருக்கு வயது இருபத்திரண்டு. பி. காம்., முடித்து விட்டு, யுனிவர்சிடியில் எம். காம்., படித்துக் கொண்டிருந்தான். மோகன் எஸ்.எஸ்.எல். சி-யை முடித்து விட்டு கல்லூரியில் நுழைந்திருந்தான். கடைக்குட்டி சுசீலா சாரதா வித்யாலயாவில் மூன்றாம் பாரம் படித்துக் கொண்டிருந்தாள். சரவணன் தன் குழந்தைகளோடு செலவிடும் நேரத்தைக் காட்டிலும் மனைவியுடன் செலவிடும் நேரம்தான் அதிகமாயிருக்கும். ரிடையராகி விட்டதால் அவரது உலகம் சுருங்கிச் சுருங்கி பங்கஜத்தின் கம்பெனியில் அடங்கி ஒடுங்கிவிட்டது. மார்க்கெட்டுக்குப் போனாலும், சிவ - விஷ்ணு கோயிலுக்குப் போனாலும், 'வாக்' போனாலும் பங்கஜம் கூடவே வரவேண்டும். 'கால் வலிக்கிறது, தலை வலிக்கிறது, இடுப்பை வலிக்கிறது' என்று அவள் சாக்குப் போக்குச் சொன்னாலும் விடமாட்டார். வீட்டுக்கு அருகிலுள்ள ஜீவானந்தம் பார்க்குக்காவது அவளை அழைத்துச் சென்று, ஏதாவது உரக்கப் பேசிக் கொண்டே அங்குள்ள சிமெண்ட் பாதையில் சுற்றிச் சுற்றி நடந்து வருவார். தெருவில் போகிறவர்களெல்லாம் இந்த அதிசயத் தம்பதியை வேடிக்கை பார்ப்பார்கள்.

ஒரு சமயம் மார்கழி மாதம், மாலை ஆறு மணிக்கு வெங்கட்நாராயணா தெருவில் பங்கஜத்துடன் சரவணன் 'வாக்' போய்க் கொண்டிருந்தார். பங்கஜம் எத்தனை தடுத்தும் கேளாமல் சரவணன் அவள் கையைப் பற்றிக்கொண்டு மிக நெருக்கமாக நடந்து கொண்டிருந்தார். "வேப்பேரியில் ஆங்கிலோ - இண்டியன்ஸெல்லாம் எத்தனை வயசானாலும் எவ்வளவு 'க்ளோஸா' நடந்து போவாங்க

அகிலனும் லட்ச ரூபாயும்



எழுத்தாளர் அகிலனுக்கு ஞானபீட பரிசாகியஒரு லட்ச ரூபாய் சமீபத்தில் கிடைத்தது. 'லட்சம்' என்பது அவருக்கு மிகவும் பிடித்த ஓர் எண். 'லட்ச ரூபாய்' என்ற குறிப்பு அவரது கதைகளில் பல இடங்களில் வருகிறது!

'எரிமலை' சிறுகதையில் புவனேசுவரி என்ற விலைமாது மாதம் ஒரு லட்சத்துக்கு மேல் சம்பாதிக்கிறாள். (பக்கம் 18)

'எங்கே போகிறோம்' நாவலில் அரசாங்க காண்டிராக்டர். 'தேனெடுத்தவன் புறங்கையை நக்கறதுக்கு பதிலாத் தேனையே நக்கிட்டான்.' அதாவது சுமார் ஒரு லட்ச ரூபாயை 'விளையாடி' விட்டான்' (பக். 21)

'காந்தி வந்தார்' என்ற சிறுகதையில் ஊரை ஏமாற்றிப் பல லட்சம் திரட்டிய தண்டபாணி, கடைசியில் மனம் மாறி அவரே ஒரு லட்ச ரூபாயைக் கொண்டு போய் வருமான வரியாகக் கட்டுகிறார். இன்னொரு லட்சத்தைத் தன் உத்தமமான நண்பர் ஒருவருக்குத் தர முன்வருகிறார்; நண்பர் மறுத்து விடுகிறார். (எரிமலை' பக். 65, 69)

'நந்திச் சித்தர்' சிறுகதையில் ஒரு லட்ச ரூபாய்க்குத் தன்னை இன்ஷூர் செய்திருக்கும் குப்புசாமி, ரயில் விபத்தில் தான் இறந்து விட்டதாக வதந்தியைப் பரப்புகிறான். வறுமையில் வாடும் அவர் குடும்பத்துக்கு இன்ஷூரன்ஸ் தொகையான ஒரு லட்சம் கிடைக்கிறது. (பக். 52)

'பொன்மலர்' நாவலில் ஆறுமுகம் என்றொரு நல்ல மனிதர், அவரை தேர்தலில் தோற்கடிக்க அவருடைய அரசியல் எதிரி ஒரு புதிய முறையைக் கையாளுகிறார். ஆறுமுகம் தேர்தலிலிருந்து விலகிக்கொள்ளத் தன்னிடம் ஒரு லட்சம் லஞ்சம் கேட்டதாகவும், தான் மறுத்து விட்டதால்தான் அவர் இப்போது போட்டியிடுவதாகவும் கதை கட்டி விடுகிறார். அவருடைய ஆட்கள் 'லட்ச லஞ்சம் ஆறுமுகம்!' என்று கூவத் தொடங்குகிறார்கள். எதிர்பார்த்தபடியே ஆறுமுகம் தேர்தலில் தோல்வி அடைகிறார்.

—கோ. கிருஷ்ணகுமார்



''என்னங்க அது? ஸ்கூட்டர்லே அரிவாளைக் கட்டிக்கிட்டுபோறாரு..?''

''நேத்து காத்தாடி நூல் கழுத்தை அறுத்துடுச்சாம்.. அதுக்காகத் தற்காப்பு!''

—என். ஜெயகுமார்.

தெரியுமா?'' என்று தன் நெருக்கத்திற்கு சமாதானம் வேறே கூறினார். எதிரில் ஒரு ஸ்கூட்டரில் வேகமாக வந்த சங்கர், தன் 'பேரண்ட்ஸ்' மாதிரியிருக்கிறதே என்று சற்று 'ஸ்லோ' பண்ணிவிட்டு, அவர்கள்தான் என்று தெரிந்ததும், இன்னும் வேகமாகச் சென்று விட்டான். அன்றைக்குப் பங்கஜத்திற்கு மானமே போய் விட்டது. ''தெருவுலே அஞ்சடியாவது தள்ளி வந்தால்தான், இனிமே உங்களோட 'வாக்' வருவேன்'' என்று கண்டிஷன் போட்டாள்!

பங்கஜம் 'வாக்' வருவதற்கு மறுத்தபோதெல்லாம் சரவணன் சோமசுந்தரம் பார்க் கட்டைச் சுவரில் உட்கார்ந்து புட்பால் விளையாட்டை வேடிக்கை பார்ப்பார். புரசைவாக்கம் 'லேக்'கில், தான் விளையாடின நாட்களை நினைத்து நினைத்து ஏங்குவார். அங்கு இவரைப் போல் பொழுது போகாதவன் யாராவது கிடைத்தால் அந்த நாட்களை நினைவு கூர்ந்து அறுத்து அறுத்து ரத்தக்களறி ஆக்கி விடுவார்!

இப்போதெல்லாம் சரவணன் தனியாகத்தான் 'வாக்' போகிறார். பனகல் பார்க்கில் ஒரு 'ரிடையர்டு பெஞ்ச்'சில் பர்மனென்ட்டாக ஒரு 'சீட்டை' ரிசர்வ் செய்துகொண்டார்; பென்ஷனர்ஸ் கிளப்பில் சந்தா இல்லாத 'லைஃப்' மெம்பராகி விட்டார்.


தனது 61 வயது தொடக்க நாளன்று அவர் பனகல் பார்க் போகவில்லை. அதற்கு பதிலாக 16 வயதினிலே சினிமாவுக்குப் போனார்- பங்கஜத்துடன்தான்! பிள்ளைகள் கேலி செய்யப் போகிறார்களே என்று 'தசாவதாரம்' சினிமாவுக்குப் போவதாகச் சொல்லிவிட்டுத்தான் கிளம்பினார். பங்கஜமும் அப்படித்தான் நினைத்தாள்.

இருவரும் தியேட்டருக்குள் நுழைந்தபோது விளக்குகள் அணைந்து, விளம்பர 'போர்'கள் முடிந்து, நியூஸ் ரீல் ஓடி, மெயின் பிக்சர் தொடங்கும் நேரம். இருட்டில் தட்டுத் தடுமாறி, யார் காலையோ மிதிச்சு, தங்கள் 'சீட்'டுகளைக் கண்டுபிடித்து உட்கார்ந்தார்கள்.

இடைவேளை வந்தது. விளக்குகள் எரிந்தன. முன் 'ரோ' கோடியில் சங்கர் உட்கார்ந்திருப்பதைப் பார்த்துத் திடுக்கிட்டார் சரவணன். அவன் பக்கத்தில் ஒரு பெண் அமர்ந்திருப்பதைப் பார்த்ததும் அவர் மீசை துடித்தது. அவள் கழுத்தைச் சுற்றிக் கையைப் போட்டு, தலையோடு தலை இடித்து பரம ரகசியமாக சங்கர் ஏதோ பேசிக்கொண்டிருந்ததைக் கண்டதும் அவரது ப்ளட் ப்ரஷர் ஏறியது.

''பங்கஜம், எனக்கு இந்த சினிமா புடிக்கலே. வா, வூட்டுக்குப் போகலாம்'' என்று எழுந்தார் சரவணன்.

பங்கஜத்துக்கு ஒன்றுமே புரியவில்லை.



''உங்க பொண்ணுக்கு என்ன நகை போட்டிருக்கீங்க..?''

''கே. பி. சுந்தராம்பாள் சொன்ன நகையை போட்டிருக்கேன்..!''

''அது என்னது?''

''பொறுமை என்னும் நகை யணிந்து கொள்ள வேண்டும் பெண்கள்...!''

—இரா. இராமசாமி



61 வயதினிலே..!

— மெரீனா —

8. தந்தையும் மகனும்!

தியேட்டரிலிருந்து திரும்பி வரும் போது, சரவணன் அதிகமாகப் பேசவேயில்லே. பங்கஜம் கேட்ட கேள்விகளுக்கு நேரடியாகவும் பதில் சொல்லவில்லை.

''என்னுங்க, படம் நல்லாத்தானே எடுத்திருக்காங்க. அந்தப் புள்ளே சப்பாணியைப் பாத்தா பரிதாபமாயிருந்தது. அது மயிலைக் கல்யாணம் செய்துக்குதா இல்லியான்னு பார்க்கறதுக்குள்ளே எழுந்து ஓடியாந்துட்டீங்களே.. படம் ஏன் உங்களுக்குப் புடிக்கலீங்க?'' என்று பங்கஜம் துருவித் துருவிக் கேட்டாள்.

''என்னே ஒண்ணும் கேள்வி கேக்காதே. நான் இப்போ கோவத்துலே இருக்கேன்'' என்று சுருக்கமாகப் பதில் சொல்லி அவள் வாயை அடைத்து விட்டார் சரவணன்.

மறு நாள் மாலே அகஸ்தியர் கோயிலிலிருந்து திரும்பியபோதுதான் மெள்ள பேச்சைத் தொடங்கினர் சரவணன்:

''பங்கஜம், நம்ம சங்கருக்கு சீக்கிரமே ஒரு கல்யாணத்தை செஞ்சு வெச்சுடணும்....நீ என்ன சொல்றே?''

''அவனுக்கு வேலே ஆனதுலேருந்து நான் இதைத்தான் சொல்லிக்கிட்டு இருக்கேன், நீங்கதான் காதுலேயே போட்டுக்கலே.''

''இப்போ கண்ணுலே பார்த்துட்டேன். காதுலே போட்டுக்கறேன்...''

''என்ன சொல்றீங்க?''

''சங்கர் நடத்தை சரியில்லே..நம்ம பையன் இவ்வளவு கேவலமா போவான்னு நான் நினேக்கவேயில்லே.. நம்ம மானம் சந்தி சிரிக்கிறதுக்குள்ளே அவனுக்கு ஒரு கல்யாணம் செஞ்சு வெச்சுடறதுதான் நல்லது..''

''எனக்கு ஒண்ணுமே விளங்கலீங்க. பதியும்படி தான் சொல்லுங்களேன்..''

—பேசிக்கொண்டே நடேசமுதலியார் பார்க்குக்குச் சென்று இருவரும் அமர்ந்து கொண்டனர்.

''பங்கஜம், இன்னும் கொஞ்சம் கிட்டே வாயேன், சொல்றேன்.''

''ஒண்ணும் வேணும்..எனக்கு இங்கேயே காது கேக்கும், சொல்லுங்க..''

''பங்கஜம், நேத்து தியேட்டர்லே சங்கரை ஒரு பொண்ணோடை பார்த்தேன். ரெண்டு பேரும் கொஞ்சிக் குலாவிகிட்டு இருந்தாங்க. அந்தக் கண்றாவியைப் பார்க்கப் புடிக்காமெதான் இன்ட்டர்வெல்லே எழுந்து வந்துட்டேன். உங்கிட்டே சொன்னு தூங்க மாட்டியேன்னு தான் அப்போ சொல்லலே.. எனக்கு ராத்திரிபூரா தூக்கம் வரலே பங்கஜம்.. காலேலேருந்து வயித்தை என்னவோ சங்கடம் பண்ணிக் கிட்டேயிருக்கு..''

''அட,இதுக்காகவா மனசைப்போட்டு குழப்பிக்கிட்டு உடம்பைக் கெடுத்துக்கறீங்க... இன்னிக் காலேலேயே சங்கர் கிட்டே கேக்கறதுதானே?''

''நீ சுளுவா சொல்லிட்டே..எனக்கு அவன் மூஞ்சிலே முழிக்கவே பிடிக்கலே. எனக்கிருந்த கோவத்துலே 'பளார் பளார்'னு கன்னத்துலே அறைஞ்சிருப்பேன், ராஸ்கோல்...பொறுக்கி, அப்பனுக்கும் ஆத்தாளுக்கும் தெரியாமெ அந்நியப் பொண்ணோடை ஊர் சுத்தறான்.. சினிமாவுக்குப் போறான்...!''

இதைக் கேட்டுப் பங்கஜம் தனக்குள் சிரித்துக்கொண்டாள்.

''என்ன சிரிக்கறே?..எனக்கு வயித்தைப் பத்திகிட்டு வருது, உனக்கு சிரிப்பு வருதா..?''

''இல்லே, என்னே ராக்ஸி தியேட்டருக்கு இட்டுக்கிட்டு வரச் சொல்லி என் மாமங்கிட்டே சொல்லி அனுப்பிச்சீங்களே, அது ஞாபகத்துக்கு வந்தது. கூடவே சிரிப்பும் வந்தது....''

''அதுக்கும் இதுக்கும் என்ன கம்ப்பாரிஸன்..? தனியாவா உன்னே சினிமா வக்கு இட்டுகினு போகணும்னு

ஆசைப்பட்டேன்...மாமன் கூடத்தானே வரச் சொன்னேன்?''

''அப்போ உங்களுக்குத் தைரிய மில்லே.. எனக்கும் வர்றத்துக்கு தைரியமில்லே.. அதெல்லாம் அந்தக் காலம். இந்தக் காலம் வேறே..இப்போ சங்கருக்கும் தைரியமிருக்கு..கூப்பிட்டா அந்தப் பொண்ணும் வருது.''

''மூளை கீளை இருந்து பேசறீயா இல்லியா நீ? உன் பேர்லே இஷ்டப்பட்டு, உன்னைக் கல்யாணம் கட்டிக்கணும்னு ஒரு ஆசையோட சினிமாவுக்கு கூப்பிட்டிருப்பேன்... இவன் செய்யறது சுத்த தறுதலைத்தனம் பங்கஜம். தெருப் பொறுக்குறான். ஊர் மேயறான்... களுதை!''

''அட சொம்மா கெடங்க.. மேலே மேலே பேசிக்கினே போனா ஆயுடுச்சா..? நீங்க என்மேலே இஷ்டப்பட்ட மாதிரி சங்கர் அந்தப் பொண்ணுமேலே இஷ்டப் படறது இன்னா தப்பு..?''

''ஆமா, இன்னா நீ அவங்க ரெண்டு பேருக்கும் இத்தினி பரிஞ்சுக்கினு வரே...? அந்தப் பொண்ணோட அவன் ஊர் சுத்தறது உனக்கு முன்னாடியே தெரியும் போலேருக்கே..?''

''அதெல்லாம் தெரியாது..ஜெர்மன் கிளாஸ் ஒண்ணு போய்க்கிட்டிருந்தான் பாருங்க..அப்போ ஒரு பொண்ணைப் பத்தி சொம்மா சொல்லிகிட்டிருப்பான். நிர்மலான்னு பேராம்..அவன் காலேஜ் லெக்சரர் பொண்ணும். ரொம்ப புத்தி சாலி, நல்லா பேசுவா, பழகுவான்னு சொல்லுவான்.. அந்தப் பொண்ணுத் தான் இருக்கும். நான் இன்னிக்குக் கேட்டுடறேன்..''

''ஓஹோ.. எல்லாம் உனக்கு தெரிஞ்சுதான் நடக்குதா? அவனுக்கு நீ உள்கையா?''

''தே, உள் கையும் இல்லே, வெளிக் கையும் இல்லே, சொம்மா கெடங்க.. நம்ம சங்கர் ஒண்ணும் தறுதலைப் பையன் இல்லே.. லிமிட் தாண்டி போக மாட்டான்...இந்தக் காலத்திலே ஒவ்வொரு சேதி காதுலே வுழறதைப் பார்த்தா கதி கலங்கிப் போவுது... நீங்க என்னாடான்னா இதையே பார்த்துக் குதிக்கிறீங்க.. ஸ்கூட்டர்லே போறதும், பீச்சுக்குப் போறதும், சினிமாவுக்குப் போறதும் ரொம்ப சாதாரணங்க... உங்களுக்கும் வயசாயிடுச்சேயொழிய அனுபவம் பத்தாது....''

''நீ பெரிய மேதாவி.. உலகத்தையே கரை கண்டவ....உன் புள்ளை உனக்கு ஒசத்தி. அதான் அவனைப் பத்தி ஒசத்தியாவே பேசறே..நாம பெத்து வளர்த்து, படிக்கவெச்சு, வேலை தேடித் தந்து ஒழுங்கா கல்யாணம் செஞ்சு வைக்கலாம்னு பார்த்தா, இந்தப் பசங்க எவ பின்னாலேயோ சுத்திக்கிட்டு, அவளைத் தான் கல்யாணம் செய்துப்பேன்றாங்களே, இது இன்னா நியாயம்? உனக்குத்தான் சொரணை இல்லேன்னா, எனக்குக் கூடவா இல்லே..? என் வயித்தெரிச்சல் தீர நடுக் கூடத்திலே தூக்குப் போட்டுக்கிற மாதிரி அவனை நாலு வார்த்தை கேக்கறேனா இல்லியா பார்.. ராஸ்கோல்..''

பங்கஜம் மறுபடியும் சிரித்துக் கொண்டாள்.

''இன்னிக்கு இன்னா எல்லாத்துக்கும் நீ சிரிச்சுக்கினே இருக்கே...? நான் பேசறது ஒனக்கு அத்தினி எளக்காரமா இருக்கா..?''

''அதெல்லாம் இல்லீங்க.. நீங்க என்னைத்தான் கல்யாணம் செய்துக்கணும்னு உங்க வூட்டிலே பிடிவாதம் பிடிச்சப்போ, உங்க அப்பா கூச்சல் போட்டார்னு சொன்னீங்களே, அவரும் உங்களை மாதிரித்தானே நினைச்சிருப் பாரு. பெத்து வளர்த்து, படிக்க வெச்சு...வேலை தேடித் தந்து...''

சிரிக்கிறாள்.

சரவணன் 'சடா'ரென்று எழுந்திருந் தார். ''வா போகலாம், பங்கஜம்... இன்னிக்கு என்னவோ ரொம்ப குளுருது.''

''எனக்கு ஒண்ணும் குளிரே தெரியலையே..நேரமாவுது, பொறப்படலாம்.. என்னாங்க, சங்கருக்குக் கல்யாணம் செய்யணும்னு சொன்னீங்களே.... எதுவுமே சொல்லாமெ கிளம்பினா எப்படி?''

''செய்யத்தான் போறேன். சோம சுந்தரம் பிள்ளைத் தெரு சபாபதி முதலியார் இல்லே... அவரு பொண்ணு இந்த வருஷம் பி.ஏ. பாஸ் பண்ணிடும்... ரொம்ப கெட்டிக்காரி...நீகூட அதை பார்த்திருக்கே பங்கஜம்.. சின்மயாநந்தா லெக்சர்லே காண்பிச்சேனே... அந்தப் பொண்ணுதான்... உனக்குப் பிடிச்சிருக்கா...?''

''எனக்குப் பிடிச்சிருந்து என்னங்க பிரயோஜனம்...? சங்கருக்குப் பிடிக் கணுமே...ஐயே... பிளாட்பாரத்திலே தான் அத்தினி இடம் இருக்கே. கொஞ்சம் தள்ளிதான் நடங்களேன்.''

சங்கர் ஸ்கூட்டரை ஓர் ஓரமாக நிறுத்திவிட்டு ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு, வர பஸ்களை யெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கிறான். ஒரு பஸ்ஸில் நிர்மலா வந்து இறங்குகிறாள்.

''ஓய்...ஸோ லேட் நிர்மல்? நான் 'ட்வென்ட்டி மினிட்ஸா' வெயிட் பண்ணிக்கிட்டிருக்கேன்.''

''ஐயாம் ஸாரி சங்கர்... கிளம்பற சமயத்திலே எங்க அத்தை வந்துட்டாங்க... அவங்களோட கொஞ்சம் பேசிட்டு எதையோ சாக்குச் சொல்லிட்டு கிளம்பி வந்தேன். நான் ரெண்டு பஸ் மாறி வரணுமே... உங்களைப்போலயா? 'டைன்'னு ஸ்கூட்டர்லே வந்து இறங்கிட நீங்க.''

''பஸ் ஸ்டாண்டுலே வெயிட் பண்றது கஷ்டமாயிருக்கு நிர்மல்... எவனாவது வந்து, 'என்ன சங்கர் இங்கே நின்னுகிட்டிருக்கே?'ன்னு கேக்கறான். எதையாவது உளற வேண்டியிருக்கு...''

''தனியா வெயிட் பண்றதுன்னா எனக்கும் கஷ்டமாயிருக்கு, தெரியுமா? போன சனிக்கிழமை உங்களுக்காக இங்கே காத்துகிட்டிருந்தப்போ, ஒரு 'ஓல்ட்மேன்' என்னை சும்மா மொறைச்சுப் பார்த்துக்கிட்டே யிருந்தான்.. எனக்கு நெர்வஸா போயிடுச்சு..''

''சப்பல்ஸைக் கயட்டி ரெண்டு குடுக்கிறதுதானே .... அனிமெல்ஸ்...! புடவைத் தலைப்பிலே முதுகை நல்லா போர்த்திக்கோன்னு நீயும் கேக்க மாட்டேங்கிறே.... எல்லாத்தையும் திறந்து போட்டுக்கிட்டு நின்னா அப்படித்தான் மொறைப்பானுங்க.... உனக்கு எவ்வளவு சொன்னாலும் புத்தி இல்லே.''

''ஆரம்பிச்சுட்டீங்களா? எங்கிட்டே உங்களுக்கு ஏதாவது குத்தம் கண்டு பிடிச்சுகிட்டே இருக்கணும்.. பஸ்லே ஒரே புழுக்கமா இருந்தது. அதான் தலைப்பைக் கொஞ்சம் லூஸா விட்டேன்.... நீங்க சொன்னதிலேருந்து வெளியிலே கிளம்பறபோது நான் உடம்பை நல்லா போர்த்திக்கிட்டுத்தான் வரேன், தெரியுமா....?''

''சரி.. சரி.. எங்கேயாவது காபி சாப்பிட்டுட்டு எக்ஸிபிஷன் போகலாமா?''

''ஐயையோ..! எக்ஸிபிஷனா? எங்க மாமா வூட்லே எல்லாரும் இன்னிக்கு



எக்ஸிபிஷன் போகப் போறதா சொல்லி கிட்டிருந்தாங்க.. அங்கே வாணும்?''

''ஆமா, அந்தக் கும்பல்லே நம்பளைத் தான் பார்க்கப் போறுங்களாக்கும்... எங்கேயாவது கூப்பிட்டா எதையாவது சாக்கு சொல்லு. இன்னிக்கு எக்ஸிபிஷன் போகலாம்னு நான் சொன்னப்போ அன்னிக்கு நீ சரின்னு சொன்னியே..?''

''ட்ரூ.. ஆனு இன்னிக்கு மாமா வூட்லே போகப் போறுங்கன்னு மத்தியானம்தான் தெரியும்.. ஒண்ணும் இல்லாதத்துக்கெல்லாம் ஏன் அப்சட் ஆறீங்க? சங்கர், அஷ்டலட்சுமி டெம்ப்பில் போகலாமா? அப்படியே கொஞ்ச நேரம் பீச்சுலே ஒக்காந்து பேசிட்டு வரலாம்.''

''ரொம்ப லேட்டாகுமே..''

''பரவாயில்லே..'நான் பெயின்ட்டிங் எக்ஸிபிஷன் பார்த்துட்டு ராத்திரி லேட்டாத்தான் வருவேன்'னு அம்ம கிட்டே சொல்லிட்டு வந்துட்டேன்...

''சரி.. ஒக்காரு.. மயிலாப்பூ சாந்தா பவன்லே டிபன் சாப்பிட்டுட் சாந்தோம் வழியா பெசண்ட் நக போயிடலாம்.

''நிர்மல், ஒரு விஷயம் சொல்றேன் 'ஷாக்' ஆயிடாதே.... அன்னிக் '16 வயதினிலே' போயிருந்தோமே.. நம்ம ரெண்டு பேரையும் எங்க அப்பா அம்மா பார்த்துட்டாங்க...''

''ஐயோ, நெஜமாவா? ஏதாவது கேட்டாங்களா?என்ன சொன்னீங்க..?''


''என்னென்னமோ சொன்னேன்... வா, பேசிகிட்டே போகலாம்...''

ஸ்கூட்டர் படுவேகமாக புறப்பட்டது.

— தொடரும்

அன்பு மகனே..!


கல்லூரி ஹாஸ்டலில் தங்கியிருக்கும் மாணவன் பணம் கேட்டு எழுதினுல், வெவ்வேறு தொழில் புரியும் நான்கு தந்தைகள் என்ன பதில்கள் எழுதுவார்கள் என்று ஒரு கற்பனை..



உபன்யாசகர்:

கோவிந்த நாம சங்கீர்த்தனம்.. தன் அப்பா உத்தானபாதன் மடியிலே ஆசையாய் உட்காரப் போன துருவனைப் பார்த்து அவன் சித்தி, 'நீ உங்கப்பா மடியிலே உட்காரணும்னு எனக்கு மகனுகப் பொறக்கணும்' அப்படீன்னு சொன்னுளாம். உடனே துருவன் காட்டுக்கு தபஸ் பண்ணப் போனுனும். உனக்கு அடிக்கடி பணம் தேவைப்படறது. அதுக்கு நீ குபேரனுக்கு மகனு பொறந்திருக்கணும். நம: பார்வதி.. பதயே..

உபன்யாச சக்ரவர்த்தி
அப்பாசாமி பாகவதர்.




சினிமா வசனகர்த்தா:

பணம் கேட்டு எழுதுகிருயா மகனே, பணம்?

நீ மார்க் வாங்கும்

உன் அப்பன் பொன் முட்டையிடும் வாத்து என்று நினைத்தாயா அல்லது வள்ளல் பாரியின் பரம்பரை என்று எண்ணினுயா? கேள் மகனே, கேள்..கேட்பது உன் உரிமை. மறுப்பது என் கடமை.. ஹஹ்ஹா.....

சிக்கில் சிங்காரவேலன்.



வானிலை அறிவிப்பாளர்

வங்காள விரிகுடா கடலில் 750 கிலோ மீட்டர் தூரத்தில் புயல் மையம் கொண்டு, தென் மேற்கே நகரும்போது, உன் அக்காவைப் பெண் பார்த்தார்கள். நிலைமை தீவிரமடைந்து கல்யாணம் நிச்சயமாகிவிட்டது. அதன் காரணமாக அடுத்த 48 மணி நேரத்திற்குள் உனக்குப் பணம் அனுப்புவது பற்றி எந்த முடிவும் எடுப்பதற்கில்லை. முடிந்தால் பணம் அனுப்புகிறேன், அனுப்பாமலும் இருப்பேன்.

இந்திரஸேன் பூபதி.



வட்டிக்கடை முதலாளி:

நான் உனக்கு 16-7-77 முதல் 16-10-77 வரை அனுப்பிய பணத்திற்கு ஆகும் வட்டித் தொகைக்காக, நீ இப்போது கேட்டுள்ள பணத்தை எடுத்துக் கொண்டு விட்டேன்.



வெயதினிலே..!

ஜெரீனா—

9. அபூர்வ ஜோடி!

சிரித்துப் பேசிக்கொண்டு ஜாலியாக பெசண்ட் நகர் மகாலட்சுமி கோயிலுக்குச் சென்ற சங்கரும் நிர்மலாவும் திரும்பி வரும்போது எலியும் பூனையுமாக 'உர்'றென்று முகத்தை வைத்துக் கொண்டு மௌனமாகவே பிரயாணம் செய்தார்கள். இது இவர்களுக்குப் பழகிப் போய்விட்டது.

எங்கு போனாலும் இருவருக்கிடையேயும் ஏதாவது தகராறு வரும். சங்கர் 'மூடு' சட்டென்று அவுட்டாகி விடும். 'சள்'ளென்று விழுவான். நிர்மலாவும் லேசுப்பட்டவளல்ல. எதற்கெடுத்தாலும் எதிர்த்து வாயாடுவாள். ஸீரியஸாக 'ஆர்க்யூ' பண்ணுவாள். சங்கர் 'ஷட்டப்' என்று சத்தம் போடுவான். அவள் கண் கலங்கி விடுவாள்.

''சே, உன்னாலே என் ஈவினிங் ஸ்பாயிலாயிடுச்சு'' என்று எரிச்சலுடன் எழுந்திருப்பான் சங்கர். அவளும் எழுந்திருப்பாள். ஸ்கூட்டரில் உட்கார்ந்து 'சடார்' என்று ஸ்டார்ட் செய்வான். அவள் 'சட்'டென்று ஏறி பில்லியனில் அமருவாள். அவளை 'ட்ராப்' செய்கிற வரை இருவரும் பேசிக் கொள்ளவே மாட்டார்கள். இறங்க வேண்டிய இடத்தில் ஸ்கூட்டரை நிறுத்துவான். அவள் இறங்கிக் கொள்வாள்.

''நெக்ஸ்ட் என்னிக்கு மீட் பண்ணலாம்?'' என்று ஆங்கிலத்தில் கேட்பாள் நிர்மலா. அவர்களுக்குள் தகராறு ஏற்பட்டால் இருவருமே ஆங்கிலத்தில்தான் பேசிக் கொள்வார்கள்.

நிர்மலாவின் கேள்வியைக் காதில் போட்டுக் கொள்ளாதது போல், பதில் ஏதும் சொல்லாமலே 'விர்'றென்று பறப்பான் சங்கர். நிர்மலாவோ, 'இவர் ஏன் இப்படி நம்மை அழவிடறூர். இவரைக் கல்யாணம் செய்து கொண்டால் திண்டாட வேண்டியதுதான். இவரைக் காதலித்ததே தப்போ?' என்று குழம்பியவாறு, 'லேட்'டாக வந்ததற்கு வீட்டில் என்ன காரணம் சொல்லலாம் என்று யோசித்துக் கொண்டே நடப்பாள். அவளை எப்படிச் சமாதானப்படுத்துவது என்று திட்டமிட்டுக் கொண்டே வீடு வந்து சேருவான் சங்கர்.

அடுத்த இரண்டு மூன்று நாட்கள் இருவரும் சந்தித்துக் கொள்ள மாட்டார்கள். டெலிபோன் மணியடிக்கும்போதெல்லாம் 'சங்கர்தான் பண்ணுகிறுன்' என்று பாய்ந்து ரிசீவரை எடுப்பாள் நிர்மலா. 'கால்' வேறு யாரிடமிருந்தாவது வந்திருந்தால் எரிச்சல் அடைவாள். மூன்ருவது நாள் சங்கர் ஆபீசுக்கு போன் செய்து விடுவாள். அதற்கு மேல் அவளால் பொறுக்க முடியாது. மூன்ருவது நாள் நிர்மலாவிடமிருந்து 'கால்' வராவிட்டால், நான்காவது நாள் சங்கரிடமிருந்து அவளுக்கு 'போன்' வந்துவிடும். மூன்று நாட்களுக்கு மேல் இருவராலும் தாக்குப் பிடிக்க முடியாது. சண்டையோ கூச்சலோ, வாக்குவாதமோ தகராறோ, எப்படியாவது சந்தித்துக் கொண்டாக வேண்டும்: பேசியாக வேண்டும். கண்ணே, மணியே, கற்கண்டே, கனிரசமே, இளந்தென்றலே, இன்ப நிலவே, என்ற கொஞ்சு மொழிகளைப் பரிமாறிக் கொள்ளாமல், 'ஓகே, ஐ நோ' 'தட்ஸ் ஆல் ரைட்' 'ஷட்டப்' 'வில் யூ ஸ்டாப் தட் நான்ஸென்ஸ்' 'யு ஆர் ஸாடிஸ்ட்டிக்' 'ஆர் யு ஜெலஸ்' 'ஒய் டு யு டூஸ் மி லைக் திஸ்' என்று ஏசியும் பேசியுமே பாசத்தை வளர்த்துக் கொண்ட அபூர்வ ஜோடி அது.

அன்று அஷ்டலட்சுமிகளின் தரிசனம் முடிந்து, அர்ச்சனை செய்த தேங்காய் மூடியைப் பாறையில் உடைத்து, பீச் மணலில் அமர்ந்து சுவாரஸ்யமாக மென்று கொண்டிருந்தபோது திடீரென்று அவர்களுக்குள் சண்டை மூண்டு விட்டது. குழந்தைகள் விளையாடும் பலூன் எப்போது வெடிக்கும் என்று

யாராவது சொல்ல முடியுமா? அப்படித் தான் இவர்களுடைய சரச சல்லாபமும்.

பெசண்ட் நகர் பீச் மணலின் விசேஷமோ என்னவோ அன்று இரண்டாவது முறையாக அவர்களுக்குள் கருத்து வேற்றுமை தோன்றி, சண்டையாக வெடித்தது.

''எத்தனை நாள் ரெண்டு பேரும் இப்படியே இருப்பது?'' என்று ஆரம்பித்தாள் நிர்மலா.

''எப்படி?'' என்று அர்த்தம் புரியாதவன் போல் கேட்டான் சங்கர்.

''உங்களுக்கு எல்லாமே விளையாட்டுத்தானா? பி சீரியஸ் சங்கர்.''

''பி சீரியஸா இருக்கமாட்டேன்.. ஏ சீரியஸாத்தான் இருப்பேன்..?''

''சரியான அறுவை! உங்களுக்கு எந்நேரமும் தமாஷா பேசிகிட்டிருந்தா போறும்.. சும்மா இப்படி ஊரைச் சுத்திட்டு, உங்க ஆசையைத் தீர்த்துக்கிட்டு....''

''ஷட்டப்..வாட் டு யு டாக்..? என் ஆசையை மட்டும்தான் தீர்த்துக்கிறேனா..? உன் ஆசையைத் தீர்த்துக்கலையா..?''

''இப்போ எதுக்கு ஷவுட் பண்றீங்க?''

''பின்னே என்ன? இங்கே வரணும்னு நானா ஆசைப்பட்டேன்? நீதானே ஆசைப்பட்டே... உனக்காக இதுவரைக்கும் எவ்வளவு பெட்ரோல் செலவு செய்திருக்கேன் தெரியுமா?''

''ஐயாம் ஸாரி..இனிமே உங்களோட நான் எங்கேயும் வரலே.. உங்களுக்கு தண்டச் செலவு வெச்சதுக்கு எக்ஸ்க்யூஸ் கேட்டுக்கறேன்..இதுவரைக்கும் எனக்காக பெட்ரோலுக்கும் ஓட்டலுக்கும் சினிமாவுக்கும் எத்தனை செலவழிச்சிருப்பீங்கன்னு ஒரு 'கணக்கு' கொடுங்க, நான் அந்தப் பணத்தை உங்களுக்குக் கொடுத்துடறேன்.''

''ஐ டோண்ட் லைக் திஸ் அரொகண்ட் டாக்..எங்களைவிட நீங்க பணக்காரங்கங்கிறதை நீ அடிக்கடி பாயிண்ட் அவுட் பண்ணிகிட்டிருக்கே.. நான் 'நோட்' பண்ணிகிட்டுத்தான் இருக்கேன்..''

''ஓ மை காட்! விளையாட்டுக்கு சொன்னா, இதைப் போய் சீரியஸா எடுத்துக்கிட்டு..பண விஷயம் உங்களுக்கு ஒரு பெரிய காம்ப்ளெக்ஸ்..''

''உனக்குத்தான் காம்ப்ளெக்ஸ்.. உங்கப்பா காலேஜ் லெக்சரர்..உங்கம்மா ஜமீந்தார் ஃபாமிலி...உங்க பெரியப்பா பெரிய பிஸினஸ்மேன்.... எங்கப்பா ஆஃப்டர் ஆல் ஒரு ரிடையர்டு பாங்க் காஷியர் தானே..எங்க நிலைமை தெரிஞ்சு தானே நீ என்னோட பழகினே...என்னைக் கல்யாணம் பண்ணிக்க இஷ்டமில்லேன்னா ஃப்ராங்க்கா சொல்லிடேன். ஐ வில் கெட்டவுட் ஆஃப் யுவர் லைஃப் ஈவன் நௌ... இதோ கிளம்பறேன்'' என்று சொல்லிக் கொண்டே எழுந்து பாண்ட்டிலிருந்த மணலைத் தட்டிக் கொண்டான் சங்கர்.

''சே...யு அர் ஆல்வேஸ் லைக் திஸ்... ஏதாவது தமாஷா பேசலாம்னு ஒக்காந்தா உடனே முருங்கை மரத்திலே ஏறிக்கறீங்களே...''

''நிர்மல், எனக்கு உன்னோடே பேசவே பிடிக்கலே.. யு ஆல்வேஸ் கெட் ஆன் மை நெர்வ்ஸ், ஐயாம் கோயிங்.''

''பின்னே நீங்க மட்டும் அடிக்கடி பணம் செலவாறதைப் பத்திப் பேசினா எனக்கு ஹர்ட்டிங்கா இருக்காதா..?''

''ஒரு பேச்சுக்குச் சொன்னா ஏன் ஹர்ட்டிங்கா எடுத்துக்கணும்..? உங்கிட்டேதானே சொல்றேன்...ஊர்லே இருக்கிறவங்க கிட்டேல்லாமா சொல்லிகிட்டிருக்கேன்? பணம் செலவாறதுன்னு கூட உங்கிட்டே சொல்ல எனக்கு 'ரைட்' இல்லையா?''

''நானும் உங்ககிட்டே தானே சொல்றேன். வேறே யார்கிட்டேயாவது சொல்றேனா?''

''பொய் சொல்லாதே.. ரவிகிட்டே என்னைப் பத்தி கேவலமா பேசியிருக்கே. கஞ்சன்னு சொல்லியிருக்கே.. தெரியாதுன்னு நினைச்சியா?''

''என்ன உளர்றீங்க..? டோண்ட் இமாஜின் திங்ஸ்.''

''நான் ஒண்ணும் கற்பனை பண்ணலே..உனக்கு ரவிதான் ஒசத்தி.. எப்ப பார்த்தாலும் அவனோடதான் போன்லே அரட்டை அடிச்சுக்கிட்டிருக்கே. தர்ஸ்டே உன் வீட்டுக்கு போன் செய்தப்போ அரை மணி நேரம் எங்கேஜ்டா இருந்தது. யு ஆர் சீட்டிங் மி....நீ என்னை ஸின்ஸியரா லவ் பண்ணலே... ஐ நோ தட்...''

''ஐயோ, ஐயோ.. சரியான லூஸ் நீங்க.. தர்ஸ்டே பூரா எங்க வீட்டு போன் அவுட் ஆஃப் ஆர்டர்.. வெள்ளிக்கிழமைதான் ரிப்பேர் ஆச்சு....''

''ரவியோட நீ பேசறதே யில்லியா? அவன் உங்க வீட்டுக்கு வர்றதே

இல்லையா? நெஞ்சுலே கையை வெச்சு அஷ்டலட்சுமி மேலே ப்ராமிஸ் பண்ணு பார்க்கலாம்..''

''அவர் போன் பண்ணினு நான் ரிஸீவ் பண்ணாம இருக்க முடியுமா? வீட்டுக்கு வந்தா பேசறது தப்பா..? எங்க பெரியப்பாவோட பிஸினஸ் பார்ட்னரோட ஸன்.. பிஸினஸ் விஷயமா பேச வருவார்..''

''அப்படின்னு உங்க அங்கில்கிட்டே பேசிட்டுப் போகட்டும். உங்கிட்டே அவனுக்கு என்ன பேச்சு..?''

''ஜஸ்ட் லைக் தட்..அதுலே என்ன தப்பு..?''

''ஜஸ்ட் லைக் தட்டா..? ஐ நோ எவ்ரி திங்.... போனு போறதுன்னு எல்லாத்தையும் பொறுத்துகிட்டிருக்கேன். ஒரு நாள் எனக்கு கோபம் வந்தா என்ன ஆகும்னு சொல்ல முடியாது.. இப்படியே சிரிச்சுச் சிரிச்சு என்னை ஏமாத்திடலாம்னு நினைக்காதே. ஒரு பெரிய ரகளை பண்ணாமெ விட மாட்டேன்.''

''சங்கர் .. வில்யு ஸ்டாப் திஸ் நான்ஸென்ஸ்..? போனு போறதுன்னு டாலரேட் பண்ணினு லிமிட் இல்லாமெ பேசிக்கிட்டே போறீங்களே'' என்று கூறிக்கொண்டே நிர்மலா எழுந்தாள். அதற்குள் 'விருவிரு'வென்று நடந்து சென்று, தன் எரிச்சலை யெல்லாம் காலில் தேக்கி ஸ்கூட்டரை உதைத்து ஸ்டார்ட் செய்து அதில ஏறிக் கொண்டான் சங்கர். நிர்மலா பில்லியனில் ஏறி அமர்ந்து கொண்டாள். ஸ்கூட்டர் நகர்ந்தது. இருவரும் மௌன விரதம் ஏற்றுக் கொண்டனர்!

அன்று மாலை மகாலட்சுமி கோயிலில் ஸ்ரீ ஆதிலட்சுமி சந்நிதியில் சங்கரும் நிர்மலாவும் அர்ச்சனை செய்து கொண்டிருந்தபோது, சரவண முதலியாரும் பங்கஜம்மாளும் அடையாறு ஸ்ரீ அனந்த பத்மநாப சுவாமி ஆலயத்தில் தரிசனம் செய்து கொண்டிருந்தார்கள். அப்பா மனசு மாறி, நிர்மலாவின் பெரியப்பா



யார் இவர்?

(பக்கம்—2)



நெருக்கடி காலத்தில் சிறையில் பூட்டப்பட்டு விடுதலை ஆன பிறகு மரணமடைந்த சினேகலதாரெட்டி.

—சேலம் அறவழியன்

வும் குறுக்கே நிற்காமல் தங்கள் திருமணம் இனிதே நடந்தேற வேண்டும் என்று கண்களை மூடி சங்கர் அங்கே மானசீகமாகப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தான். இங்கேயோ தந்தை, தன் மகனுக்கு புத்தி மாறி, லெக்சரர் பெண்ணை மறந்துவிட்டு, தங்கள் அந்தஸ்துக்குத் தகுந்த சபாபதி முதலியார் பெண்ணை மணந்து கொண்டு சௌக்கியமாய் இருக்க வேண்டும் என்று மனத்திற்குள் பிரார்த்தித்துக் கொண்டிருந்தார். பங்கஜம்மாளின் கவலையோ வேருக இருந்தது. அப்பாவுக்கும் பிள்ளைக்கும் சண்டை முற்றிப்போகாமல், ஒருத்தருக்கு ஒருத்தர் சமாதானமா போய், சங்கர் ஏதாவது ஒரு பெண்ணை மணந்து கொண்டு நல்லபடியா குடியும் குடித்தனமுமாக இருக்கவேண்டும் என்று அனந்தசயனத்தில் இருக்கும் ஆனந்த சொரூபனைப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தாள்!

வருஷத்துக்கு ஒருமுறை இந்தக் கோயிலுக்கு வருவார் சரவணன். வந்தால் சாயந்திர வேளைப் பூஜையைப் பார்க்காமல் புறப்பட மாட்டார். அங்குள்ள பெரியவர் மிகவும் சிரத்தையுடன் பூஜை செய்வதைப் பார்க்கும்போது தன்னையும் அறியாமல் மனம் கரைந்து கண்ணீர் பெருக்குவார். அன்று பூஜை முடிந்து, பிரசாதம் பெற்றுக் கொண்டு வெளியே வந்தபோது, சரவணனின் மனம் வழக்கத்தைவிட நிம்மதியாக இருந்தது.

''பங்கஜம்,இந்தக் கோயிலு எவ்வளவு மாறிடுச்சு பார்த்தியா?... புதுப் புது சந்நிதிகள் என்ன, மண்டபம் என்ன, கோபுரம் என்ன...மளமளன்னு பெரிய கோயிலாயிடுச்சே.. .அடேயப்பா..!''

''என்னங்க..இன்னிக்கு மகாலட்சுமி கோயிலுக்கும் போயிட்டு வந்துடலாமா? எவ்வளவு நாளாகேட்டுகிட்டிருக்கேன்.''

''சே...சே...! இனிமே போய்வர நேரமிருக்காது.. சாயந்தரமே அங்கே போய்ட்டு வந்திருக்கணும்...இன்னொரு நாள் மத்தியானமா கிளம்பிப் போயிட்டு வரலாம்...''

''ஆமா, இப்படியே சொல்லிச் சொல்லி ஏமாத்திக்கிட்டே யிருங்க.''

—பேசிக்கொண்டே இருவரும் பஸ் ஸ்டாண்டில் வந்து நின்றார்கள்...அதே சமயம் மகாலட்சுமி கோயிலிலிருந்து திரும்பிய சங்கர், ஸ்கூட்டரை ஓர் ஓரமாக நிறுத்திவிட்டு, கடையில் சிகரெட் வாங்கிப் பற்றவைத்துக் கொண்டு திரும்பிக் கொண்டிருந்தான்.

''பங்கஜம், அதோ உன் பிள்ளையைப் பார்த்தியா...வாய்லே சிகரெட்டோட .....என் வயத்தைப் பத்திக்கிட்டு வருது'' என்று சரவணன் சொல்லிக் கொண்டிருந்தபோதே, சங்கர் ஸ்கூட்டரில் ஏறி உட்கார்ந்து ஸ்டார்ட் செய்தான். கீழே நின்றிருந்த நிர்மலா மௌனமாக ஏறி பின்னல் அமர்ந்தாள். இருவரும் இன்னும் மௌனம் தான்!

''அடே, அவன் பின்னலே ஒரு பொண்ணும் போவுதே, அதான் அந்த நிர்மலா போலேருக்கு...?'' என்று பங்கஜம்மாள் கூற, சரவணன் கலவரத்துடன் திரும்பிப் பார்த்தார். அதற்குள் ஸ்கூட்டர் காற்ருகப் பறந்து விட்டது.

''அட ராஸ்கல்...மனசுலே இவன் என்னன்னு நினைச்சுகிட்டிருக்கான்... இன்னி ராத்திரி ரெண்டுலே ஒண்ணு தீர்த்துட்டுத்தான் மறு வேலை'' என்று உரக்க சத்தம் போட்டார் சரவணன்.

— தொடரும்

வெயிலினிலே..!

மெரீனா —

10. சரவணன் சிரிக்கிறார்!

அன்று இரவு வீடு திரும்பியதிலிருந்து சரவண முதலியார் 'சிடு சிடு'வென்றிருந்தார். இரண்டாவது மகன் மோகன் வந்து காலேஜ் ஸ்போர்ட்ஸ் பற்றி ஏதோ பேச முயன்றபோது 'சள்'ளென்று எரிந்து விழுந்தார். செல்லப் பெண் சுசிலாவிடம் கூட சுமுகமாகப் பேசவில்லை. ''அப்பாவுக்கு இன்னிக்கு என்னம்மா வந்துது? 'உர்'ருன்னு உறுமிக்கிட்டிருக்காரே'' என்று அம்மாவிடம் அலுத்துக் கொண்டாள் சுசிலா.

பங்கஜம்மாள் சாப்பிட அழைத்தபோது, ''நீயே துன்னு, எனக்கு இன்னும் கொஞ்சம் வெக்கம் மானம் இருக்குது. சோறு புடிக்கலே, பட்டினி கிடந்து செத்துப் போறேன்'' என்று சரவணன் சீறினார். பங்கஜம் பனங்காட்டு நரி. இந்தச் சலசலப்புக்கெல்லாம் அஞ்சமாட்டாள்.

''உங்களோட எந்நேரமும் இதே பெரிய ரோதனையா போச்சு..! இப்போ எழுந்து வரப் போறீங்களா, இல்லியா?'' என்று உரிமையோடு கேட்டாள் பங்கஜம்.

''வாணன்னு வாணந்தான்! நீ உன் வேலையைப் பார்த்துகினு போறியா இல்லியா? இப்போ வர கோவத்துலே கழுத்தை நெறிச்சுக் கொன்னுடுவேன். எல்லாமே ஒன்னாலேதான்.''

''என்னாலேயா?''

''ஆமா...! அவனுக்கு ஸ்கூட்டர் வாங்க வாணன்னு முட்டிகிட்டேனே கேட்டியா? 'பையன் ஆசைப்படறான்.. வாங்கிக் கொடுங்க'ன்னு நீதானே பெரிசா 'ரெகமெண்ட்' பண்ணினே?''

''ஆமா, அதுக்கு என்னாப்போ?''

''என்னாவா! சாயந்தரம் உன் கண்ணாலேயே பார்த்துட்டு கேள்வி கேக்கறயே? அந்தப் பொண்ணை ஸ்கூட்டர்லே ஏத்திகிட்டு ஊர் சுத்திகிட்டிருக்கானே.. நம்ம மானம் கப்பல் ஏறுதே..ஆவட்டும், இன்னிக்கு அவன் வூட்டுக்கு வரட்டும்.. தத்தாரி ராஸ்கோல்..'' — பல்லைக் கடித்தார்; மீசை துடித்தது; அவரது முகம் விகாரமாயிற்று.

பங்கஜம் சிரித்துக் கொண்டாள்.

''மனுஷன் நெஞ்சு வெந்துகிட்டிருக்குது.. சிரிக்கிறியே.. எம்மா நெஞ்சழுத்தம் உனக்கு....?''

''பழசை நினைச்சுக்கிட்டேன், சிரிப்பு வந்ததுங்க.. அந்தக் காலத்திலேயே உங்ககிட்டே ஸ்கூட்டர் இருந்திருந்தா நீங்களும்தான் என்னை பின்னாலே வெச்சுகிட்டு ஊரெல்லாம் சுத்தியிருப்பீங்க..''

''சீ..! வாயைக் கழுவு..என்னையும் உன் புள்ளை மாதிரி எச்சக்கலை பொறுக்கின்னு நினைச்சியா?''

''அந்தக் காலத்திலே, தினம் நீங்க சுந்தரம் பிள்ளைத் தெருவை பிரதட்சிணம் செய்துகிட்டிருந்தப்போ, ஒரு நாள் சொப்பனம் ஒண்ணு கண்டதா சொன்னீங்களே, மறந்துட்டீங்களா?''

''என்ன சொப்பனம்?''

''நீங்க நம்ம துலுக்காணம் வண்டிக் குதிரை மேலே ஏறிக்கிட்டு, எங்க வூட்டாண்டே பாஸ்டா வந்து, என்னை அப்படியே அலாக்காத் தூக்கி வெச்சுகிட்டு பறந்தீங்களே.. எங்கப்பாகூட கோச்சு வண்டிலே உங்களைத் துரத்திக்கிட்டு வந்தாரே..உங்க ஃப்ரெண்டு கபாலி உண்டியில்லாலே எங்கப்பாவை அடிச்சுக் கொன்னாரே..''

''தே..எனக்கே மறந்துடுச்சு..அதையெல்லாம் இன்னும் ஞாபகம் வெச்சுகினு.... சரியான..''

''நீங்க செஞ்சதை யெல்லாம் மறந்துட்டு இப்போ பையன் மேலே பாயறீங்களேன்னு சொல்றேன். உங்க ஆசையை நீங்க கனவா கண்டீங்க, அப்பா கனவு கண்டதை பையன் அப்படியே நடத்திக் காட்டறான்.... குதிரைக்குப் பதிலா ஸ்கூட்டர்....''

''ஓஹோ! பழசைச் சொல்லி என்னை மடக்கப் பார்க்கறயா? சங்கர் செய்யற தெல்லாம் தப்பில்லேங்கிறயா..? ஸ்கூட்டர் வாங்கிக் கொடுத்திருக்காட்டி இவன் இப்படிச் சுத்துவானு..? எல்லாம் ஒன்னுலேதான்....''

''அட, சொம்மா கிடங்க..ஸ்கூட்டர் இல்லாட்டி ஆட்டோலே போவான்.. இல்லே, டாக்ஸிலே சுத்துவான்.. றெக்கை முளேச்சு வெளிலே சுத்தற ஆம்பளேப் பசங்களே கண்லே விளக் கெண்ணெயைப் போட்டுக்கிட்டா நாம காவல் காக்க முடியும்..? சங்கர் மேலே எனக்கு நம்பிக்கையிருக்கு! சுப்பையா மவன் போல தினம் ஒரு பொண்ணுேடை சுத்தற தறுதலே இல்லே அவன்.. ரெண்டு மூணு வருஷமா அந்தப் பொண் ணுேட பழகருன். அவளேக் கல்யாணம் செய்துக்கணும்னு ஆசைப்படருன்... தப்பு தண்ட்டா ஏதாவது நடந்துடப் போவுதேன்னு வயத்துலே நெருப்பைக் கட்டிகிட்டு நான் அவஸ்தைப்படறது எனக்கும் அந்த ஆண்டவனுக்கும்தான் தெரியும்... அதுக்கு முன்னே நாம முயற்சி பண்ணி கல்யாணத்தைச் செஞ்சு வெச்சுடணும்... இதைப் பத்தி உங்களோட நிதானமா ஒக்காந்து பேசலாம்னு என்னமோ கள்ளு குடிச்ச குரங்கு மாதிரி குதிக்கிறீங்களே....?''

''நீ சொல்ற மாதிரி அவன் யோக்கிய மான பையனு இருந்தா அதைப்பத்தி அவனே எங்கிட்டே வந்து ஏன் சொல்லக் கூடாது? உங்கிட்டே வந்து கொஞ்சிட் டுப் போருனே. நீ ஏமாந்தவ, எதைச் சொன்னுலும் அப்படியே நம்பிடுவேன்னு அவனுக்குத் தெரியும். அதான்....''

பங்கஜம் மற்றுமொருமுறை லேசாகச் சிரித்துக் கொண்டாள்.

''என்னு சிரிக்கிறே? மறுபடியும் பழசு ஏதாவது ஞாபகம் வந்திருச்சா?''

''கரீக்டா கண்டுபிடிச்சுட்டீங்களே! நீங்க என்னேக் கல்யாணம் செய்துக்க ணும்னு ஆசைப்பட்டப்போ, உங்கப்பா கிட்டேயா சொன்னீங்க...அம்மாகிட்டே தானே சொன்னீங்க? நல்லா ஞாபகப் படுத்திப் பாருங்க..''

''பங்கஜம், நான் ஒரு பெரிய தப்பு செஞ்சுட்டேன்னு இப்போ தோணுது.. அப்போ எங்க வூட்லே நடந்ததை யெல்லாம் கல்யாணம் ஆன புதுசுலே உங்கிட்டே சொன்னேன் பாரு, அது பெரிய முட்டாள்தனம்.. ஒண்ணெண் ணேயும் ஞாபகம் வெச்சுகிட்டு, சமயம் வர்றப்போ நீ ஷோக்கா காலே வார்றே.''

''உங்க காலே வார்றத்துக்காக நான் சொல்லிக் காட்டலீங்க....உங்களுக்கு உலக அனுபவமே போறலேங்கிறத்துக் காகத்தான் சொல்றேன்..இந்த மாதிரி விஷயங்களையெல்லாம் எந்தப் புள்ளேயும் அப்பாகிட்டே சொல்லமாட்டான்.. அம்மாகிட்டேதான் சொல்லுவான்.. உங்க காலத்துலேயும் அப்படித்தான், இந்தக் காலத்துலேயும் அப்படித்தான்.. நாளேக்கே சங்கருக்குப் பையன் பொறந் தாலும் இப்படித்தான் இருப்பான்.''

''பங்கஜம், என்னமோ யுனிவர்சிடி ப்ரொபஸர் மாதிரி நீபாட்டுக்கு லெக்சர் அடிச்சுகிட்டுப் போறே, நானும் கேட்டு கிட்டே இருக்கேன்.. நான் பி. ஏ. படிச்சிருக்கேன் தெரியுமா?''

''நீங்க எத்தனே வருஷம் படிச்சு, எப்படிப் பாஸ் பண்ணினீங்கங்கறதும் எனக்குத் தெரியும்... படிப்புக்கும் பசங்களே வளர்க்கறத்துக்கும் என்னங்க சம்பந்தம்?படிச்சுட்டு நீங்க உத்தியோகம் பார்க்கப் போயிடறீங்க... வூட்லே பசங்களோட நாங்கதானே மல்லுக்கு நிக்க வேண்டியிருக்கு...வெளியே அவங்க ஆயிரம் படிக்கிருங்க, பார்க்கருங்க, கேக்கருங்க... காலம் மாறிப் போயிருக் கிறதைப் புரிஞ்சுக்காமெ, நம்ம இஷ்டப் படி வளர்லேன்னு பசங்களே விரோதியா நினேச்சு எந்நேரமும் சண்டை போட்டு கிட்டு இருக்க முடியுமா?...சம்பாதிச்சுக் கொண்டு வந்து கொட்டிட்டா குடும்பம் நடந்துடும்னு ஆம்பளேங்க நினேக் கிருங்க.. உப்பு, புளி மட்டும்தான் குடும்பமா? பசங்களோட வயத்தை மட்டும் கவனிச்சா போறுமா, அவங்க மனசையும் கவனிக்கணுங்க.. ஆம்பளேங் களுக்கு 'தாட் பூட்'டுன்னு குதிக்கத் தான் தெரியும்.. பொம்பளேங்கதான் எல்லாத்துக்கும் ஈடுகொடுத்தாவணும்.. சம்சாரக் கடல்ங்கிருங்களே...... அது சாதாரண சமுத்திரம் இல்லீங்க.. அதுலே தினம் ஒரு புயல் அடிச்சுகிட்டிருக் கும்.. அதைச் சமாளிச்சாவணும்...''

''பங்கஜம், உன் அழகைப் பார்த்து அப்போ மயங்கினேன்... இத்தினி வருஷத்துக்கப்புறம்தான் நீ பெரிய புத்தி சாலின்னு தெரிஞ்சுக்கிறேன்..இப்படிக் கொஞ்சம் கிட்டே வாயேன்..''

''அட, சொம்மா கெடங்க... எனக் குப் பசிக்குது...நீங்க இப்போ சாப்பிட வரப்போறீங்களா இல்லியா...?''

''எனக்குக் கூடப் பசிக்குது... பிளேட்டைப் போடு...ரெண்டு பேரும் இன்னிக்கு ஒண்ணு ஒக்காந்து சாப்பிடலாம்..''



மறு நாள் காலை ஆறு மணியிருக்கும். சரவண முதலியார் தம் அன்றாட வழக்கப்படி தொரட்டுக் கம்பை எடுத்துக் கொண்டு போய், அந்தத் தெருவிலும் அடுத்த தெருவிலும், நான்கு ஐந்து பங்களாக்களின் காம்பவுண்டு சுவரை ஒட்டியுள்ள பூச்செடிகளிலிருந்து மல்லிப்பூ, நந்தியாவட்டை, அரளி, செம்பருத்திப் பூக்களைத் 'திருடி'க் கொண்டு வீட்டினுள் நுழைந்து கொண்டிருந்தார்.

தாழ்வாரத்தில் நின்றிருந்த சுசிலாவைப் பார்த்துப் பங்கஜம் சத்தம் போட்டுக் கொண்டிருந்தாள்.

''வயசுப் பொண்ணுக்குக் காலங் கார்த்தாலே வெளியே என்னடி வேலை? அந்தப் பேப்பரை உள்ளே போய்ப் படிக்கக் கூடாதா?''

சுசிலா முணுமுணுத்துக் கொண்டே உள்ளே சென்றாள்.

''என்ன பங்கஜம், எதுக்கு சுசியைத் திட்டறே?''என்று கேட்டார் சரவணன்.

''பின்னே என்னாங்க. தினமும் ஜன்னல்லேருந்து நான் பார்த்துக்கிட்டேயிருக்கேன்... காலைலே ஆறு மணிக்கெல்லாம் இங்கே வந்து நின்னுகிட்டிருக்கா... அந்த சமயம் பார்த்து ஸ்கூட்டர்லே ஒரு பொறுக்கி இந்தப் பக்கமாவே பார்த்துகிட்டுப் போறான். அதுவும் சும்மா போறானா? 'மயிலு-மயிலு' ன்னு கூப்பிட்டுகிட்டே போறான்...''

சரவணன் சிரித்துக் கொண்டார்!

—தொடரும்

எம். எஸ்ஸி இரண்டாம் ஆண்டு படிக்கும் ராமானுஜம்தான் செயின்ட் ஜோசப் கல்லூரி ஹாஸ்டலின் 'ஜெனரல் காப்டன்.'

ஐயாயிரம், பத்தாயிரம் மீட்டர் ரன்னிங் ரேஸ்களில் கலந்து கொண்டு பல பரிசுகளைக் குவித்து காலேஜுக்குப் பெருமை தேடித் தந்திருக்கிறார் ராமானுஜம். வாக்கிங் ரேஸில் சென்னை மாநில அளவில் 'இண்டர் காலேஜ் ஸ்டேட் ரிகார்ட்'டை முறியடித்தவர்.

இவர் தினமும் ஹாஸ்டலிலிருந்து கிளம்பி, கொள்ளிடம் வழியாக ஸ்ரீரங்கம்வரை ஒவ்வொரு நாளும் ஆறு மைல் நடந்துவிட்டு வருகிறார்.

'''விளையாட்டில் ஈடுபட்டால் படிப்பில் கோட்டை விடுவாய்'என்று சிலர் என்னை பயமுறுத்தினார்கள். ஆனால் பி.எஸ்ஸியில் முதல் வகுப்பில் தேறினேன்'' என்கிறார் ராமானுஜம் மகிழ்ச்சியோடு.

திருச்சி நேஷனல் காலேஜ் முதல்வர் திரு. என். கிருஷ்ணமூர்த்திக்கு ஐம்பது வயதானாலும் ஓர் இளைஞரைப் போலவே சுறுசுறுப்புடன் பணியாற்றுகிறார்.


பிறந்த ஊர் சேலம் என்றாலும், தந்தை நடராஜன் தொழில் சம்பந்தமாக மைசூரில் குடியேறியதால்,ஆரம்பப் படிப்பு சேலத்திலும், உயர்நிலைப்பள்ளிப் படிப்பு மைசூரிலும் தொடர்ந்தது.

'தான் ஒரு சராசரி மாணவன்தான்' என்று கள்ளமில்லாமல் கூறும் கிருஷ்ணமூர்த்தி, ஹானர்ஸ் படிப்பை மைசூர் சென்ட்ரல் காலேஜில் முடித்தார்.

''எங்கள் நேஷனல் காலேஜ் என்றால் 1919-ம் ஆண்டிலிருந்து ரொம்பப் பிரசித்தம். சாரநாதன் என்பவர் இந்தக் கல்லூரியின் முதல்வராகப் பணி புரிந்திருக்கிறார். இவரைப் பற்றிப் புகழ்ந்து பேசாதவர்கள் திருச்சியில் கிடையாது. இவருடைய கடுமையான உழைப்பையும், சேவையையும் பார்த்து இந்தக் கல்லூரியை 'சாரநாதன் கல்லூரி' என்றுதான் அழைப்பார்களாம்.

''அவருக்குப் பிறகு ராமையா, வரதாச்சாரி போன்ற மேதைகள் எல்லாம் இந்தக் கல்லூரிக்கு முதல்வராக இருந்திருக்கிறார்கள். இவர்கள் காலத்தில் இந்தக் கல்லூரியை 'மக்கள் கல்லூரி' என்று அழைப்பார்கள்.

''இந்தக் கல்லூரியில்தான் முன்னாள் [illegible]



● 'எக்ஸ்போ '78' கைத்தறி கண்காட்சியை உதவி ஜனாதிபதி ஜாட்டி துவக்கி வைத்த அன்று 'இறை வணக்கம்' பாட சீர்காழி கோவிந்தராஜனுக்கு டெலிபோனில் அவசர அழைப்பு கொடுத்தார் மத்திய அரசின் கூட்டு கைத்தறிஅபிவிருத்தி கமிஷனர் டாக்டர் என்.பி. சேஷாத்ரி. அந்த அவசரத்திலும் சீர்காழி, கவிஞர் எஸ். டி. சுந்தரத்திடம் கைத்தறியைப் பற்றிய கவிதை ஒன்றை வாங்கி, விழாவில் கணீரென்று பாடிவிட்டார்.

● கவர்னர் பிரபுதாஸ் பட்வாரி அண்மையில் டெல்லிக்குச் சென்றிருந்தபோது கூட்டமாக நின்று கொண்டிருந்த பெண்களிடம் நெருங்கி, ''நீங்கள் உங்களை அழகுபடுத்திக் கொள்வதற்காக பவுடர், லிப்ஸ்டிக் என்று ஏன் வீணாகச் செலவு செய்கிறீர்கள்? ஒரு காஞ்சிபுரம் பட்டுச் சேலையை வாங்கிக் கட்டுங்கள்.. பிறகு உங்கள் அழகைப் பாருங்கள்..'' என்று சொன்னாராம். கண்காட்சியைச் சுற்றிப் பார்க்க வந்தபோது சேஷாத்ரியிடம் கவர்னரே இந்தத் தகவலைத் தமாஷாகக் கூறினாராம்.

● சீர்காழிக்குப் பின்னால் நிற்கும் சேஷாத்ரி, அடுத்த கைத்தறி கண்காட்சியை ஆகஸ்ட் மாதம் ரஷ்யாவில் நடத்த இருப்பதாகத் தெரிவித்தார்.

—விஜய்

சபை உதவிச் செயலாளராக இருக்கும் சி. வி. நரசிம்மனும் படித்தார்கள். அமரர் 'கல்கி'கூட இங்கே படித்தவர்தான். அவர் படித்தபோது கல்லூரிக்கு மிகவும் பாடுபட்டு நிறைய நிதி திரட்டிக் கொடுத்திருக்கிறார்'' என்று தன்னடக்கத்தோடு தன்னைவிட கல்லூரியைப் பற்றிய பெருமைகளை நிறையச் சொன்னார் கிருஷ்ணமூர்த்தி.

நமது நிருபர்

16 வயதினிலே..!

மெரீனா—

11. ஸ்கூட்டர் தலைவலி!

சங்கரைப் பற்றிச் சரவணன் புகார் செய்யும்போதெல்லாம், அவருடைய பழைய வாழ்க்கையை நினைவுபடுத்திக் கிண்டலாகச் சிரிப்பாள் பங்கஜம். அப்போதெல்லாம் சரவணனுக்குக் கோபம் பொத்துக்கொண்டு வரும். இப்போது அவருக்கு ஒரு நல்ல 'சான்ஸ்' கிடைத்தது. மனதார, வாய்விட்டுக் 'கடகட'வென்று சிரித்தார்.

''எதுக்கு சிரிக்கிறீங்க? என் வயித்தைப் பத்திகிட்டு எரியுது, உங்களுக்கு அது வேடிக்கையாயிருக்கா?''

''பங்கஜம்.. உன் பதினாறு வயசுலே நீ செஞ்சதைத் தான் இப்போ தன் பதினாறு வயசுலே சுசீலா செய்யறா.. அதைப் புரிஞ்சுக்காமெ அவளைத் திட்டறயேன்னு சிரிச்சேன். அந்தக் காலத்திலே சுந்தரம் பிள்ளைத் தெருவிலே காலையிலே நான் 'வாக்' போற சமயத்திலே நீயும் இப்படித்தானே உங்க வூட்டு குறட்லே வந்து நிப்பே.. மறந்துட்டியா?''

''நீங்க 'வாக்' போற போது நான் ஒண்ணும் வந்து நிக்கலே.. நான் வெளியே வர சமயமா பார்த்து நீங்க தான் 'வாக்' வருவீங்க..''

''சரி, இப்பவும் அப்படியே நினைச்சுக்க.. சுசீலா பேப்பர் படிக்கிற போது, அவன் ஸ்கூட்டர்லே வறான்.. அதாவது அவன் ஸ்கூட்டர்லே 'வாக்' போறான்.. இது உன் தெருவா? 'ஏண்டா வரே'ன்னு நீ அவனைக் கேக்க முடியுமா?''

''நீங்க எதுக்கு அந்தப் பொறுக்கிக்குப் பரிஞ்சுகிட்டு வரீங்க..?''

''பரிஞ்சுகிட்டு வரலே பங்கஜம்.. உன்னைப் புரிஞ்சுக்கச் சொல்றேன்..''

''நான் எல்லாம் புரிஞ்சுக்கிட்டுத்தான் இருக்கேன். அந்தத் தடியனுக்குப் புரிய வைக்கறேனா இல்லியா பாருங்க.... அவன் நாளைக்கு இந்தப் பக்கம் திரும்பி 'மயிலு மயிலு'ன்னு சத்தம் போடட்டும்.. அவன் தலையிலே சாணியைக் கரைச்சுக் கொட்டி துடைப்பக்கட்டையாலேயே அடிக்கிறேனா இல்லியான்னு பார்த்துகிட்டே இருங்க..''

''அவன் போலீஸ்லே கம்ப்ளெயிண்ட் கொடுப்பான். 'நான் இந்தியாவின் தேசியப் பறவையோட பேரைச் சொல்லிக்கிட்டுப் போனேன்... இந்த அம்மா



துடைப்பத்தாலே அடிச்சாங்க'ன்னு சொல்லுவான்.. அப்போ நீ என்ன செய்வே..பயித்தியம், வாயை மூடிகினு உள்ளே போ....''

''நீங்க எப்போதும் இப்படித்தானே விதண்டாவாதம் பேசுவீங்க... எதிர் வீட்டு சொர்ணத்தம்மாகூட தினம் இந்தப் பொறுக்கியை 'நோட்' பண்ணி கிட்டுத்தான் இருக்காங்களாம்... இவனைப் பத்தி உங்களை போலீஸ் கம்ப்ளெயிண்ட் கொடுக்கச் சொன்னுங்க.''

''என்னன்னு கம்ப்ளெயிண்ட் கொடுக்கிறது? இப்படி ஒருத்தன் வூட்டாண்டே சுத்தருன்னு சொன்னு 'உங்க பொண்ணை உள்ளாற இருக்கச் சொல்லுங்க ஸார்.. அவ ஏன் அந்த டயத்திலே வெளிலே வந்து நிக்கறு'ன்னு கேப்பாங்களே.. அதுக்கு என்ன பதில் சொல்றது..?''

பங்கஜம் முணுமுணுத்துக் கொண்டே உள்ளே சென்ருள். சரவணன் சிரித்துக் கொண்டே அவளைப் பின்தொடர்ந்தார்.

*

மறு நாள் காலை பங்கஜம்மாள் ஐந்தே முக்கால் மணிக்கே வாசல் பெருக்கி, சாணி தெளித்துக் கோலம் போட்டு விட்டுத் துடைப்பமும் கையுமாக, ஸ்கூட்டர் பொறுக்கியின் வருகைக்காகக் காத்திருந்தாள். சரியாக ஆறு மணிக்கு ஸ்கூட்டர் வந்தது. வழக்கப்படி அவன் இந்த வீட்டின்பக்கம் திரும்பினன். பழைய கட்டைத் துடைப்பம்தான் அவனை வரவேற்றது. அதைப் பார்த்தவன் அசடு வழியும் தன் முகத்தைச் சட்டென்று திருப்பிக் கொண்டான். ஸ்கூட்டரின் வேகத்தை அதிகப்படுத்தி 'விர்'றென்று பறந்து விட்டான்.

இந்தக் காட்சியை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த எதிர் வீட்டு சொர்ணத்தம்மாள் 'களுக்'கென்று சிரித்து விட்டாள்.

''திருட்டு ராஸ்கல்..எப்படிப் பயந்துகிட்டு ஓடருன் பார்.. எச்சக்கலைப் பொறுக்கி நாய்'' என்று ஆசை தீரத் திட்டினள்.

''நாளைக்கு மறுபடியும் வந்தான்னு நடு ரோடுலே நிறுத்தி வெச்சு துடைப்பத்தாலேயே அடிக்கிறேன் பார்'' என்று சொல்லிக் கொண்டே உள்ளே திரும்பி வந்தாள் பங்கஜம், போர் முனையிலிருந்து வெற்றிவாகை சூடி வரும் வீராங்கனை போல்.

உள்ளேயிருந்து சிரித்துக் கொண்டே வந்தாள் சுசீலா.

''அவன் ஏன் இனிமே இந்தப் பக்கம் வரப் போருன்? சோதா ராஸ்கல்! நான் தையல் கிளாஸ் போகிறபோதெல்லாம் எங்கிட்டே வந்து இவன் பேச்சுக்



கொடுப்பாம்மா..நான் காறித் துப்பிட்டு வந்துடுவேன்.... அப்புறம் வீட்டைக் கண்டுபிடிச்சு ஒரு வாரமா இங்கே வந்து சுத்திக்கிட்டிருக்கான்.... நின்னு ஏதாவது பேசினுன்னு செருப்பைக் கயட்டிக்கலாம்னு நினைச்சுத்தான் தினம் வெளியே வந்து நின்னுகிட்டிருந்தேன்.... தைரியமில்லாமெ 'மயிலு மயிலு'ன்னு கத்திட்டு ஓடறுன்...''

''அது என்னடி மயிலு...?அப்படின்னு என்னடி அர்த்தம்?''

'''16 வயதினிலே' படத்திலே நொண்டி சப்பாணி அந்தப் பொண்ணைப் பார்த்து 'மயிலு மயிலு'ன்னு கூப்பிடறுன் பாரும்மா.... அதைப் பார்த்துட்டு இந்தப் பொறுக்கி என்னைப் பார்த்து இப்படிக் கூப்பிடறும்மா.''

''கூப்பிடுவான் கழுதை! நாளைக்கு மறுபடியும் வந்து இவன் அப்படிக் கூப்பிடட்டும்..அவன் காலே உடைச்சு நொண்டி சப்பாணி ஆக்கிடறேன் பார்'' என்று சொல்லிக் கொண்டே பெருமிதத்துடன் உள்ளே சென்றுள் பங்கஜம். தான் பெத்து வளர்த்த பெண்ணைப் பற்றி அவளுக்கு அளவிட முடியாத பெருமை. அம்மாவிடம் கையும் களவுமாக மாட்டிக் கொண்ட சுசீலா, அப்போதைக்கு எதையோ சொல்லிச் சமாளித்திருக்கிறுள் என்பது அவளுக்கு எப்படித் தெரியும், பாவம்!

*


சுசீலாவுக்கு காலேஜ் படிக்க வேண்டும் என்று கொள்ளை ஆசை. ஆனல், சரவணமுதலியார் பிடிவாதமாக மறுத்து விட்டார். சங்கரும் மோகனும்கூட சுசீலாவுக்காக வாதாடிப் பார்த்தார்கள். பிரயோஜனமில்லே. பங்கஜத்துக்குக்கூட உள்ளூர ஆசைதான். கணவனிடம் ஜாடைமாடையாகச் சொல்லியும் பார்த்தாள். எத்தனையோ விஷயங்களில் பங்கஜம் கிழித்த கோட்டைத் தாண்டாத சரவணன், சுசீலா மேல்படிப்பு விஷயத்தில் இடித்த புளியாக, சிறிதும் அசைந்து கொடுக்காமல் கல்லுளிமங்கனுக இருந்து விட்டார்.

''பங்கஜம், சுசீலா கெட்டிக்காரப் பொண்ணுதான். படிக்க வெச்சா அமர்க்களமா மார்க் வாங்கிப் பிரமாதமா பாஸ் பண்ணிடுவா. ஆனு, வாணும். இது நம்ம காலம் போல இல்லே. ரொம்ப கெட்டுக் கிடக்குது. பொட்டைப் பசங்களை பள்ளிக்கூடத்துக்கும் காலேஜுக்கும் அனுப்பிச்சுட்டு, பெத்தவங்க வயத்துலே நெருப்பைக் கட்டிக்கிட்டு இருக்க வேண்டியிருக்கு.. படிக்காட்டாலும் பரவாயில்லே,கெட்டுப் போகாமெ இருந்தா போதும்னு தோணுது.... புள்ளைப் பசங்க அப்படி இப்படி இருந்தாலும் பரவாயில்லே. பொட்டைப் பசங்க ஏடாகூடமா ஆயிடுச்சுன்னு என்ன கதி? அதுக்கு நாம இடம் கொடுப்பானேன், சொல்லு'' என்று ஒரு நாள் மனைவியிடம் ரகசியமாகத் தன் மனத்தைத் திறந்தார் சரவணன்.

''நீங்க ஒண்ணு! வெளியே போய் வர பொண்ணுங்களெல்லாமே கெட்டுப் போயிடுதா? படிக்கிற பொண்ணு ஒழுங்கா படிச்சுகிட்டிருக்கும்..கெட்டுப் போறதுங்க எப்படியும் கெட்டுத்தான் போவும்..அதது ஊட்லே வளர்க்கிற விதத்திலே இருக்கு.. நம்ம குழந்தைங்க ஒரு நாளும் பாதை தவறிப் போகாதுங்க..''

''என்ன சொல்றே நீ..? தில்லகேணி குருசாமி மவ விஷயம் தெரிஞ்சும் இப்படிப் பேசறயே.. அவங்க ஊட்டுலே எவ்வளவு கண்டிப்பா வளர்த்தாங்க.. கடைசிலே அந்தப் பொண்ணு புத்தி எப்படிப் போச்சு பார்த்தியா....?

கருப்பையா மூப்பனர் வெளியே செல்லும்போது சிறிய லேடீஸ் கைப்பை மாதிரி ஒன்றை எடுத்துச் செல்கிறுர். அதில் சிகரெட், தீப்பெட்டி, பணம் எல்லாம் வைத்துக் கொள்கிறுர் அவர்.



கருப்பையா மூப்பனுர்



ம. பொ. சி.

ம.பொ.சி. தினமும் டி. வி. நிகழ்ச்சிகளைப் பார்க்கிறார். வாரம் ஓர் இந்திப் படம் ஒலிபரப்பு செய்யப் படுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறார் அவர். புதன்கிழமைவரை டி. வி. நிகழ்ச்சிகள் போரடிக்கின்றனவாம்!

தொகுப்பு: **மங்களம்**

இந்த வூட்லே அப்படி ஒண்ணு நடந்தா நீயும் நானும் உயிரோட இருக்க முடியுமா, சொல்லு பங்கஜம்?''

''சொம்மா குருசாமி மவளைப் பத்தியே பேசிக்கிட்டு இருக்கீங்களே.. ஒழுங்கா இருக்கிற பொண்ணுங்க ஆயிரம் இருக்கே, அவங்களை நினைச்சுப் பாருங்களேன்.. கெட்டது நடந்துடும்னு நினைச்சு பயந்துகினே இருந்தா அப்புறம் எதுவுமே செய்ய முடியாது..''

''இந்த வேதாந்தமெல்லாம் எனக்கும் தெரியும்..நீ சொம்மா இரு..சுசீலா காலேஜுக்குப் போகமாட்டா.. வேணுமானா தையல் கிளாசுக்குப் போவட்டும். சீக்கிரத்திலேயே ஒரு நல்ல பையனா பார்த்துக் கல்யாணத்தைச் செய்து வெச்சுடலாம்'' என்று கூறி அப்போதைக்குப் பங்கஜத்தின் வாயை அடைத்துவிட்டார் சரவணன்.

அதற்குப் பிறகு ஓராண்டு ஆகியும் அவள் கல்யாணத்தைப் பத்தி வாயைத் திறக்கவேயில்லை சரவணன். ஒரு நாள் காலை வெளியே போய்விட்டு சாப்பிடக் கூட வராமல், மாலை ஐந்து மணிக்குத் தான் வீடு திரும்பினார். பகல் முழுவதும் பங்கஜம் 'சொல்லாமல் எங்கேயும் போக மாட்டாரே' என்று கவலைப்பட்டு உருகிப்போனவள், அவரைக் கண்டதும், ''என்னங்க, எங்கே போய் வந்தீங்க? சோறு துன்னீங்களா இல்லியா?'' என்று மருகினாள்.

''மூணாவது வூட்டுக்கு போன் பண்ணி சொல்லச் சொன்னேனே.... அவங்க சொல்லலையா..? சுசீலா கல்யாண விஷயமா ரெண்டு மூணு இடத்துக்குப் போயிருந்தேன்..''

''என்ன திடீர்னு எங்கிட்டேகூட

''பங்கஜம், முன்னே நீ சொன்னயே ஞாபகமிருக்கா... நம்ம குழந்தைங்க பாதை தவறிப் போகாதுன்னு...?''

''ஆமா, இன்னிக்கும் அதையேதான் சொல்றேன்..''

''அப்புறம் இன்னொண்ணும் சொன்னியே...கெட்டது நடந்துடும்னு நெனைச்சு பயந்துக்கினே இருந்தா அப்புறம் எதுவுமே செய்ய முடியாதுன்னு..''

''ஆமா, சொன்னேன்...''

''அப்படின்னா, தெருவுலே தினம் நம்ம வூட்டைப் பார்த்துக்கினே ஒருத்தன் ஸ்கூட்டர்லே போறான்னு அன்னிக்குத் துடிச்சுப் போய் 'ஆய் ஊய்'ன்னு சத்தம் போட்டு துடைப்பக் கட்டையைத் தூக்கிக்கினியே ஏன்...? சுசீலா பொண்ணு கெட்டுப் போயிடு மோங்கிற பயம்தானே..?''

''பின்னே பெத்தவளுக்கு அந்தப் பயம்கூட இருக்காதா..?''

''அப்படி வா வழிக்கு..! நானும் பெத்தவன்தானே... எனக்கு மட்டும் இந்த பயம் இருக்காதா..? ஸ்கூட்டர் காரனைப் பார்த்ததும் எனக்கும்தான் 'பகீர்'னுது! உங்கிட்டே தமாஷா பேசினாலும் என் கடமையைச் செய்யாமே இருக்கோமேன்னு மனசு அடிச்சுகிட்டுது. அவ கல்யாணத்தை எப்படியும் முடிச்சுடணும்னு தோணிச்சு....அது விஷயமாத்தான் போய்வந்தேன். பங்கஜம், நாற்பது வருஷத்துக்கு முன்னே, நீ தினம் வாசல்லே வந்து நிக்கணும்னு ஆசைப்பட்டேன்.... இப்போ நம்ம பொண்ணு வாசல்லே வந்து நிக்காமெ இருக்கணுமேன்னு கவலைப்படறேன்...''


ஸார்! உட்காருங்க; நிக்கறீங்களே!
பரவாயில்லே ஸார்!
நீங்க நிக்கிறது எனக்கு ரொம்பக் கஷ்டமா இருக்குங்க
தாங்க்ஸ்! பரவாயில்லே ஸார்!
இருக்கிற இடத்திலே ஆளுக்குப்பாதியா உட்காரலாம்! வாங்க!
இல்லே; பரவா-யில்லே
நான் இடமில்லாமெ நின்னு கஷ்டப்படறதிலே உங்களுக்கு அவ்வளவு கஷ்டமாயிருந்தா...
?
உங்க இஷ்டப்படியே உட்கார்ந்துண்டுட-றேன்!
அப்பாடா!... இப்போ நன்னா காத்து வருது

16 வயதினிலே..!

ஜெரீனா—

12. முடிவற்ற கதை!

அந்தச் செய்தியை சொர்ணத்தம்மாள் வந்து சொன்னபோது பங்கஜம் தவியாய்த் தவித்தாள். தன் வயிற்றில் பிறந்த பெண்ணா இப்படிச் செய்கிறாள்? கண்டிப்பும் கருருமாகத் தான் வளர்த்த சுசிலாவா இதற்குத் துணிந்தாள்? பங்கஜத்திற்கு நெஞ்சு வலித்தது; வயிற்றைக் கலக்கியது. தொண்டை உலர்ந்து போயிற்று.

சாயந்தரம் ஆறு மணிக்கு, இருட்டியும் இருட்டாமலும் இருக்கும் அந்தி வேளையில், சோமசுந்தரம் பார்க்குக்கு வெளியே, கட்டைச் சுவரின் மேற்கு மூலையில் சுசிலாவும் ஸ்கூட்டர் தடியனும் சிரித்துப் பேசிக் கொண்டிருந்ததை சொர்ணத்தம்மாள் பார்த்து விட்டாள். 'அடிப்பாவி மகளே!' என்று மனத்திற்குள் நினைத்துக் கொண்டவள், 'இதைப் பற்றி பங்கஜத்திடம் சொல்லலாமா வேண்டாமா?' என்று ஒருநாள் யோசித்து விட்டு, சொல்லாவிட்டால் தலை வெடித்து விடும் என்று தோன்றியதால், இரண்டாம் நாள் சொல்லியே விட்டாள். பெண்கள் மனத்தில் எந்தச் செய்தியும் அதிக நேரம் தங்காது. அதுவும் 'இது மாதிரி' விஷயமென்றால் அரை நொடியும் தங்காது!

முதல் காரியமாக சுசிலா தையல் கிளாசுக்குப் போவதை நிறுத்தினாள் பங்கஜம். 'கிளாஸ் பொண்ணு வீட்டுக்கு போயிட்டு வரேம்மா' என்று சுசிலா உத்தரவு கேட்டால் ஆயிரம் குறுக்குக் கேள்விகள் கேட்டாள். மகள் ஜன்னல் பக்கம் வந்து நின்றாலே சந்தேகப்படத் தொடங்கினாள். வாசல் தாழ்வாரத்திற்கு வந்து விட்டாலோ, தானும் கூடவே வந்து பழியாக நின்று கொள்வாள். தெருவில் எந்த ஸ்கூட்டர் போனாலும் பங்கஜத்திற்கு 'அலர்ஜி' யாக இருந்தது!

திடீரென்று வீட்டில் எமர்ஜென்ஸி கெடுபிடி நிலவுவதைக் கண்ட சுசிலா, தான் ஸ்கூட்டர்காரனை 'சீக்ரெட்டா' மீட் பண்ணுவது அம்மாவுக்குத் தெரிந்திருக்க வேண்டும் என்று 'கரெக்டா' ஊகித்து விட்டாள். ஒரு வாரமாக அவனைப் பார்க்காதது அவளுக்கு நரக வேதனையாக இருந்தது. வீட்டில் எல்லாரிடமும் எரிந்து எரிந்து விழுந்தாள். அவள் 'மூடு அவுட்'. சாதாரணமாக மோகனுடன் சிரித்துப் பேசுவாள். அதுவும் அடியோடு போய்விட்டது.

''நாள் பூராவும் வீட்டிலேயே அடைஞ்சு கிடக்கணுமா? 'என்னை மிஸாலே உள்ளே தள்ளியிருக்கீங்களா?''' என்று அம்மாவிடம் ஒரு நாள் சத்தம் போட்டாள் சுசிலா.

அதற்காக, ஒரு நாள் சொர்ணத்தம்மாளைத் துணைக்கு அழைத்துக் கொண்டு, பங்கஜம் சுசிலாவுடன் கிருஷ்ணவேணி தியேட்டருக்குச் சென்றாள். அங்கே பெரியார் சிலைக்கருகில் அந்த ஸ்கூட்டர் தடியன் நின்று கொண்டிருப்பதையும், சுசிலா அந்தப் பக்கமாகப் பார்த்து லேசாகச் சிரித்ததையும் அவளைப் பார்த்து அவன் கை ஜாடை காட்டியதையும் சொர்ணத்தம்மாள் பார்த்து விட்டாள். இதைப் பங்கஜத்திடம் சொல்லுவதா வேண்டாமா என்று தீர்மானிப்பதற்குள் பங்கஜமே அவனைப் பார்த்து விட்டாள்! ''சினிமாவுக்குப் போவதை தெரிஞ்சுகிட்டு இந்த ராஸ்கல் எப்படி இங்கே வந்தான்?''

அந்தக் காலத்தில் துலுக்காணத்தின் குதிரை வண்டியில் தன் குடும்பத்தோடு சாயந்திரம் மூர்மார்க்கெட்டுக்குப் போனது எப்படி சரவணனுக்குத் தெரிந்தது? அதைக் கல்யாணத்திற்குப் பிறகு அவரிடமே கேட்டுத் தெரிந்து கொண்டாள் பங்கஜம். ஸ்கூட்டர்காரன் அங்கே எப்படி வந்தான் என்பதைப் பற்றி சுசிலாவிடம் விசாரிக்க முடியுமா?

அன்று பங்கஜம் சினிமாவே பார்க்கவில்லை. ஸ்கூட்டர் தடியன் எங்கேயாவது உட்கார்ந்திருக்கிறானா என்றே தியேட்டர் முழுவதும் ஆராய்ந்து கொண்டிருந்தாள். வீட்டுக்குத் திரும்பியது முதல் பித்துப் பிடித்தவள் போலிருந்தாள். சோறு இறங்கவில்லை.

ராத்திரி தூக்கமும் பிடிக்க வில்லை.

அவள் தன் இளமைப் பருவத்தை நினைவுபடுத்திக் கொண்டாள். அப்பா அம்மாவிற்குத் தெரியாமல் சரவணன் மீது ரகசிய அன்பை வளர்த்துக் கொண்டதையும், அவருக்காக உயிரை விடவும் தயாராயிருந்ததையும் நினைத்துப் பார்த்தாள். தன் பெண் சுசீலாவும் ஒருவன் மீது எப்படியோ, எதற்காகவோ மனத்தைப் பறி கொடுத்து விட்டிருக்கிறாள். அவனுக்காக உயிரை விடவும் அவள் தயாராயிருக்கலாம். துடைப்பக்கட்டை வரவேற்பு அளித்தவனுக்கு ஆரத்தியோடு வரவேற்பு அளிக்க வேண்டியிருக்குமோ? பங்கஜம் மனம் ஒடிந்து போனாள்.

மறு நாள் பங்கஜம் ஒரு தீர்மானத்திற்கு வந்து விட்டாள். கல்யாணப் பேச்சை ஆரம்பித்து



சுசீலாவின் மனதைத் தெரிந்துகொண்டு விட வேண்டும். இந்த விஷயத்தை இனிமேல் ஆறப் போடுவதில் அர்த்தமில்லை.

'உனக்குக் கல்யாணம் செய்யப் போகிறோம். மாப்பிள்ளை பார்த்திருக்கிறோம்' என்று ஒரு தாய் மகளிடம் நேருக்கு நேர் சொல்லிவிட முடியுமா? எனவே, ஹாலில் சுசீலா உட்கார்ந்திருக்கும் சமயத்தில், வாசல் தாழ்வாரத்தில் சொர்ணத்தம்மாளிடம் கல்யாணப் பேச்சைத் தொடங்கி, வெள்ளிக்கிழமை மாப்பிள்ளை வீட்டார் பெண் பார்க்க வரப் போகும் செய்தி சுசீலாவின் காதில் பட வேண்டும் என்பதற்காகச் சற்று உரக்கவே கூறிவிட்டு, ஜன்னல் வழியே மகளின் முகபாவத்தையும் கவனித்தாள். அது சலனமற்று இருந்தது.

வெள்ளிக்கிழமை வந்தது. பிள்ளை வீட்டார் வந்தனர். மாப்பிள்ளைப் பையனும் வந்தான். சுசீலாவைப் பார்த்தனர். 'மற்ற விஷயங்கள்' பேசப்பட்டுக் கல்யாணமும் 'செட்டில்' ஆகி விட்டது. சுசீலா வாயைத் திறக்கவேயில்லை. பங்கஜத்திற்கு ஒன்றுமே புரியவில்லை. 'சுசீலா எதிர்த்து ஒரு வார்த்தைகூடப் பேசவில்லையே. ஸ்கூட்டர் தடியனும் இவளும் ஓடிப் போவதற்கு ஏதாவது ரகசியத் திட்டம் தீட்டி வைத்திருப்பார்களோ...?' இது மாதிரியான செய்தி அவ்வப்போது காதில் விழுகிறதே. கதைகளில் படிக்கிறோமே...

பங்கஜம் ஏமாந்தாள். பெற்றோர் நிச்சயித்த பையனை சுசீலா மகிழ்ச்சியுடன் 'ஜாம் ஜாம்' என்று கல்யாணம் செய்து கொண்டாள். ஆனால், கல்யாணத்திற்கு ஸ்கூட்டர்காரன் வரவில்லை. சுசீலா அவனுக்கு இன்விடேஷனே கொடுக்கவில்லை. அவனும் அதைப் பற்றிக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. ஸ்கூட்டரில் இப்போது அவன் வியாசராவ் தெருவில் அடிக்கடி சுற்றிக் கொண்டிருக்கிறான். அவன் வரும் சமயம் பார்த்து ஒரு பெண் 'கேட்'டருகில் வந்து நிற்கிறாள். அதைக் கவனித்த அத் தெரு பெண்மணிகள் வம்பளக்கவும் தொடங்கி விட்டனர்.

பாவம், பங்கஜம்! அவள் பழைய காலத்து மனுஷி. காதல் கோளாறுக்கும் காலத்தின் கோளாறுக்கும் வித்தியாசம் தெரியாதவள். பருவத்தின் சேஷ்டைகள் காலத்துக்குக் காலம் மாறுபட்டுக் கொண்டேயிருக்கும் என்றோ, நவநாகரிக அலைகள் மெய்யான சபலங்களுக்கும் உண்மையான அன்பிற்கும் வித்தியாசம் தெரியாமல் எல்லாரையும் குழப்பி நாசவேலை புரியும் என்றோ அறியாதவள்.

ஸ்கூட்டர்காரன் ஆழமில்லாத, அழுத்தமில்லாத, பொறுப்பற்ற 'நுனிப்புல் காதலன்' என்பதும், சுசீலா, அவன் விரித்த கவர்ச்சி வலையில் தாற்காலிகமாகச் சிக்கி, அதிருஷ்ட

வசமாகத் தப்பித்துக் கொண்ட 'மக்கு காதலி' என்பதும் பங்கஜத்திற்கு எப்படித் தெரியும்?

சுசீலாவின் விசித்திர மனப்போக்கு பங்கஜத்திற்குப் புரியாததைப் போலவே, சங்கரின் திடீர்ப் போக்கும் சரவணனுக்குப் புரியாத புதிராகவே இருந்தது. சங்கர், நிர்மலாவிடம் மனத்தைப் பறி கொடுத்து, அவளைத் தான் கல்யாணம் செய்து கொள்வேன் என்று பிடிவாதமாக இருந்ததை முதலில் மிகவும் மூர்க்கத்தனமாக எதிர்த்த சரவணன், மெள்ள மெள்ள தன் மனத்தை சமாதானப்படுத்திக் கொண்டார். பங்கஜம் சங்கருக்காக வாதாடிய போதெல்லாம் தாறுமாறுகப் பேசினாலும் அவர் தன் கடந்த கால வாழ்க்கையையும், பங்கஜத்தை எப்படியாவது அடைய வேண்டும் என்று புரசைவாக்கத் தெருக்களில் பித்துப் பிடித்து அலைந்ததையும் நினைவுபடுத்திக் கொள்வார். 'அப்போது எனக்கிருந்த ஆசையும் வெறியும் நியாயமென்றால், நிஜமென்றால், நிரந்தரம் என்றால், சங்கரின் காதல் மட்டும் எப்படி அர்த்தமற்றதாகும்?' என்று தனக்குள்ளேயே ஒரு கேள்வியைக் கேட்டுக் கொண்டு,'பாவம், பையன் ஆசைப்பட்டால் கல்யாணம் செய்து கொள்ளட்டுமே' என்ற முடிவுக்கும் வந்தார்! அவரது இந்த முடிவிற்கு மற்றொரு முக்கிய காரணமும் உண்டு. 'அப்பா சம்மதிக்கலேன்னு நாங்க ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக்கிறதுன்னு முடிவு செய்து விட்டோம்' என்று நண்பன் ராஜாவிடம் சங்கர் கூறியது சரவணன் காதுக்கு எட்டிவிட்டது!

சுசீலாவின் கல்யாணம் நடந்தேறியவுடன் சங்கரின் கல்யாணத்தில் முனைந்தார் சரவணன், வயதாகிக் கொண்டிருக்கிறதே! ஒவ்வொரு பொறுப்பாகக் கழிக்க வேண்டாமா?

தனக்குப் பெண் கேட்க தன் தந்தை பெரம்பூர் சென்றது போல், நிர்மலாவின் வீட்டிற்குத் தான் செல்வதென்று தீர்மானித்து,அதற்கான நாளும் நேரமும் கூட ஐயரிடம் குறித்துக் கொண்டு வந்து விட்டார் சரவணன்.

இந்தச் செய்தியை பங்கஜம் சங்கரிடம் கூறிய போது சங்கர் மகிழ்ச்சி அடையவில்லை. மாறாக, கொதித்தெழுந்தான். நேரே அப்பாவிடம் போனான்.

''அப்பா, நீங்க அந்த வீட்டுப் பக்கம் போக வாணாம். அந்த வாசப் படியை மிதிச்சாலே பாவம்'' என்று முழங்கினான்.

''ஏண்டா, என்ன நடந்தது? அந்தப் பொண்ணுக்கு வேறே இடத்திலே கல்யாணம் நிச்சயம் செய்துட்டாங்களா?''



''என்னை ஒண்ணும் கேக்காதீங்க.. இனிமே இந்த வீட்டுலே அவ பேச்சையே எடுக்க வாணாம்.''

''சங்கர், வாயைத் திறந்துதான் சொல்லேன். ஏண்டா மூடி மறைச்சுப் பேசறே?'' என்று பங்கஜம் பரிவுடன் கேட்டாள்.

''அம்மா, நீங்க ஏதாவது கேட்டால் நான் 'ஓ'ன்னு அழுதுடுவேன்'' என்று சொல்லிவிட்டு, ஸ்கூட்டரை ஸ்டார்ட் செய்து வெளியே 'விர்'றென்று பறந்து விட்டான் சங்கர். சரவணனும் பங்கஜமும் ஒருவரை ஒருவர் பார்த்து விழித்தார்கள்.

*

நிர்மலாவின் துரோகத்தை நினைக்கும் போதெல்லாம் சங்கருக்கு அழுகை பீரிட்டுக் கொண்டு வந்தது. நெஞ்சு வலித்தது. 'ஹார்ட் அட்டாக்' வந்து திடீரென்று இறந்து விடுவோம் என்று கூட எண்ணினான்.

அவள் ரவியோடு பேசுவதும் பழகுவதும் அவனுக்குப் பிடிக்கவில்லையென்றாலும், 'பிஸினஸ் சம்பந்தமாக அவன் அந்தக் குடும்பத்துக்கு ரொம்பவும் நெருங்கியவனாக இருப்பதால், அவனுடன் நிர்மலா கலகலப்பாகப் பழக வேண்டியிருக்கிறது, வேறொன்றும் இருக்காது' என்று மனத்தை ஓரளவு அமைதிப்படுத்திக் கொண்டான். ஆனால், ஒரு நாள், ரவியையும் நிர்மலாவையும் இந்தி சினிமா ஒன்றில் பார்த்ததாக நண்பன் ராஜா சொன்னபோது, சங்கரின் இதயம் சுக்குநூறாக வெடித்துத் தூள்தூளாகி விட்டது.

மறு நாள் மாலை சங்கரும் நிர்மலாவும் சந்தித்துக் கொண்டார்கள். சாதாரணமாகப் பேசிக்கொண்டிருந்தவர்களுக்குள் திடீரென்று தகராறு முற்றிவிட்டது.

''நிர்மல், நேத்து நீ ரவியோட சினிமா போயிருந்தியா?''

''நான்சென்ஸ்..என்ன பேத்தறீங்க?''

''ராஜா சொன்னானே.''

''உளர்றான்... நம்மைப் பிரிப்பதற்காக சூழ்ச்சி பண்றான்..நீங்க என்னை நம்பப் போறீங்களா. அவனை நம்பப் போறீங்களா?''-அவள் கண் கலங்கியது. சங்கருக்கும் கண் கலங்கி விட்டது.

''ஐயாம் ஸாரி நிர்மல், உன்னை நான் நம்பறேன்'' என்று கூறி அவள் கன்னத்தில் வழிந்த கண்ணீரைத் துடைத்து விட்டான்.

''ரவியோட தனியா எங்கேயும் போக மாட்டேன்னு பிராமிஸ் பண்ணு'' என்று கேட்டான்.

'பிராமிஸ்' என்று கையிலடித்துக் கொடுத்தாள் நிர்மலா.

ராஜா யாரையோ பார்த்துவிட்டு, தவறாகச் சொல்லியிருப்பான் என்றே சங்கர் நினைத்தான். ராஜா சொன்னது உண்மைதான் என்பது நிர்மலாவின் மனச்சாட்சிக்குத் தெரியும்!

ஒரு வாரம் கடந்தது. ஒருநாள் மாலை, 'எங்கே மீட் பண்ணலாம்?' என்று கேட்டு நிர்மலாவுக்கு போன் பண்ணினான் சங்கர். அவளோ, ஆஸ்பத்திரியில் இருக்கும் தன் சின்னம்மாவைப் பார்க்கப் போவதாகக் கூறி 'எக்ஸ்க்யூஸ்' பண்ணச் சொன்னாள். அவனுக்கு ஏமாற்றம்தான். இருந்தாலும் அவள் கூறியதை நம்பி, 'ஓகே, நாளைக்கு மீட் பண்ணுவோம்' என்று ரிஸீவரை வைத்து விட்டான்.

அன்று மாலை ஆறு மணிக்கு, தனிமையின் தவிப்புத் தாங்காமல் 'பீச்' பக்கம் சென்றான் சங்கர். அங்கே காதலர் பாதையில் ஜோடி ஜோடியாகக் கை கோத்துக் கொண்டு செல்பவர்களைப் பார்த்து ஏக்கப் பெருமூச்சு விட்டான். 'அதோ, அந்த இருவரும் எத்தனை ஜாலியாக சிரித்துப் பேசிக் கொண்டு போகிறார்கள்.. யார் அது? நிர்மலா மாதிரி இருக்கிறதே? நிர்மலாவேதான். அது... அது? ரவிதான், சந்தேகமேயில்லை. அவள் முதுகை அணைத்தபடி அவன் கை..!'

சங்கருக்குக் கண்கள் இருண்டு, மார்பு படபடவென்று அடித்துக் கொண்டது. அங்கேயே உயிர் பிரிந்துவிடும் போல் தோன்றியது. நேரே போய், 'துரோகி, பொறுக்கி, நடத்தை கெட்ட நாயே' என்று திட்டிவிட வேண்டும் என்று துடித்தான். 'ரவி 'பளார்' என்று அறைந்து விட்டால்?' 'அப்படித்தான் செய்வேன்' என்று நிர்மலாவும் கூறிவிட்டால்... மனம் கலங்கி, ஸ்கூட்டரை எடுத்துக் கொண்டு வீட்டுக்குத் திரும்பிவிட்டான். வரும் வழியெல்லாம் என்னென்னவோ கற்பனைகள். 'தன்னுடன் வெளியே வராத நாட்களெல்லாம் அவள் ரவியுடன் தான் சுற்றுகிறாளோ..? தாங்கள் சென்ற அதே இடங்களுக்குச் சென்று, அவனுடனும் அதே ரகசியப் பேச்சுக்கள் பேசி, இன்பக் கனவுகள் கண்டு, சரச சல்லாப நெருக்கத்தில் சிரித்து மகிழ்ந்து.. ஐயையோ, மோசம் போய்விட்டோமே... நான்கு வருஷங்கள் பழகி, என்னைத் தவிர வேறு யாரையும் 'லவ்'

பண்ணவில்லே என்று சத்தியம் செய்து கொடுத்து, என்னைத்தான் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்று கோயிலிலெல்லாம் வேண்டிக் கொண்டு விட்டு... அடிப்பாவி...! ஏற்கெனவே கல்யாணம் ஆன ஒரு தடியனோடு ஊர் சுற்ற எப்படிடீ உனக்கு மனசு வந்தது..? நம்பினவனை ஏமாற்றி, பொய் சொல்லி, ஏதேதோ சால்ஜாப்புகள் சொல்லி, அழுது, சிரித்து, மயக்கி, சத்தியத்திற்கு மேல் சத்தியம் செய்து... அடி மோசக்காரி... கிராதகி...!'

ரவியைப்பற்றி சங்கர் பேசினல் 'ப்ரெண்ஷிப்' 'கம்பானியன்ஷிப்' 'வாட்டீஸ் ராங் இன் திஸ்'.. 'தப்பா நினேக்கிறத்துக்கு என்ன இருக்கு?' என்று நிர்மலா ரொம்பவும் சாதாரணமாகக் கேட்பது வழக்கம்...

இப்போது சிந்தித்துப் பார்த்தான்... 'என்ன தப்பு?' என்று கேட்பாளே.... கல்யாணம் ஆக வேண்டிய ஒரு பெண், கல்யாணம் செய்து கொள்கிறேன் என்று ஒருவனுக்கு வாக்குக் கொடுத்துவிட்டு, கல்யாணம் ஆன வேறு ஒருவனுடன் நெருங்கிப் பழகி, அந்தரங்கத் தொடர்பு கொண்டிருப்பது ராங் இல்லே யென்ருல், இந்த உலகத்தில் வேறு எதுதான் ராங்? நம்பினவன் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு, இன்னெருவனுடன் ரகசிய நட்பை வளர்த்துக் கொள்வது 'ஜஸ்ட் ப்ரெண்ஷிப்'பா? பச்சை துரோகத்திற்கு, ஒழுக்கங்கெட்ட நடத்தைக்குப் பெயர் நட்பா? அட நாசமாய்ப் போகிற நியூ லேவ் நாகரீகமே...! சங்கருக்கு ரத்தம் கொதித்தது...

அன்று இரவு நிர்மலாவுக்குப் போன் பண்ணி, எடுத்த எடுப்பிலேயே, ''சாயந்தரம் பீச்சுக்குப் போயிருந்தியா?'' என்று கேட்டான் சங்கர்.

'இல்லே' என்று மறுத்தாள் அவள்.

''ரவியோட நீ பீச்சுக்குப் போகலே? நிஜத்தைச் சொல்..''

அவள் மென்று விழுங்கினுள். யதேச்சையாக ஆஸ்பத்திரிக்கு ரவியும் வந்ததாகவும், சின்னம்மா ஸீரியசாக இருந்ததால் தனக்கு ரொம்ப டிப்ரஸிங்காக இருந்ததாகவும், சாற்ருட பீச்சுக்குப் போகலாம் என்று ரவி அழைத்துச் சென்றதாகவும்...ஒரு கட்டுக் கதையை, அப்போதைக்கு மனதில் தோன்றிய கற்பனைகளைக் கயிறு திரித்துக் கொண்டிருந்தாள் அந்த நெஞ்சழுத்தக்காரி.

''சீ... லோஃபர்... என் மூஞ்சியிலேயே விழிக்காதே'' என்று பட்டென்று ரிஸீவரைக் கீழே வைத்தான் சங்கர்.

யார் இவர்?

வி-ம்...பக்க விடை



வேறு யாருமல்ல. சிறுகதை மன்னன் ஜெயகாந்தன். 'உண்மை சுடும்' என்ற சிறுகதை தொகுப்பின் முன்னுரையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

—சு. சந்தனமாரி

பாவம், நிர்மலாவை உண்மையாக நேசித்து, பரிபூரணமாக நம்பிய ஒரு 'மாடர்ன் யூத்' சங்கர். அந்தக் காலத்தில் சரவணன் பங்கஜத்தை நெஞ்சார நேசித்ததைப் போலவே இவன் நிர்மலாவை உயிருக்குயிராக நேசித்தான்.. சங்கர் ஒரு காவியக் காதலன்.. ஆனுல், நிர்மலாவோ...

ஆழமற்ற, அழுத்தமற்ற, மனச்சாட்சியற்ற நுனிப்புல் காதலி.. ரவியோ, காதலும் இன்றி, பண்பும் இன்றி, கைப்பிடித்தவளுக்கும் துரோகம் இழைத்து, நட்பு என்ற சாக்கில் நடத்தை கெட்டுத் திரியும் ஒரு சந்தர்ப்பவாதி...

இம்மாதிரியான 'முக்கோண மோத'லின் முடிவு எதுவாக இருந்தாலும் ஒன்று மட்டும் நிச்சயம். 16 வயதினிலே இன்ப விளையாட்டாகத் தொடங்கி, பின்னர் துன்ப வினையாகத் தொடர்ந்து, 61 வயதினிலே உலகைப் புரிந்து கொண்டு அமைதியாக வாழ உதவும் உணர்ச்சிமயமான பயிற்சி இது.

ரவிகளும் நிர்மலாக்களும் ஸ்கூட்டர்காரன்களும் வாழும் உலகத்தில்தான் சுசீலாக்களும், சங்கர்களும் வாழ வேண்டியிருக்கிறது. வெவ்வேறு மனப்பான்மையும் மனப்பக்குவமும், குடும்பப் பண்பும் வாழ்க்கைச் சூழ்நிலையும் நிறைந்த கேரக்டர்கள் மன அளவில் கலந்து, உணர்ச்சிகளுக்கு அடிமையாகி, முட்டி மோதி, சிரித்து சரசமாடி, அழுது புரண்டு, கூடிப் பிரிந்து, பிரிந்து கூடி, மடிந்து, மறைந்து, இறந்து, பிறந்து...

ஆதாம் ஏவாள் நாளில் தொடங்கிய இயற்கையின் இந்தப் பயிற்சி முடிவில்லாத கதையாகத் தொடர்ந்து கொண்டிருக்கிறது...

ஆனுல், இந்தத் தொடர்கதை இத்துடன் முடிவடைகிறது.



			100-க்கு
டைரக்ஷன்	:	எஸ். பி. முத்துராமன் ..	55
கதை	:	பஞ்சு அருணாசலம் ..	35
வசனம்	:	பஞ்சு அருணாசலம் ..	35
நடிப்பு	:	கவிதா 50 முத்துராமன் 40 ..	45
காமிரா	:	பாபு ..	65
இசை	:	இளையராஜா ..	40
எடிட்டிங்	:	ஆர். விட்டல் ..	45
வண்ணம்	:	ஜெமினி கலர் லாபரேட்டரி ..	60
தயாரிப்பு	:	எஸ். பாஸ்கர் ..	50
			430
		கதையோடு ஒத்துப் போகாத க்ளைமாக்ஸ் காட்சிக்காக (குறைப்பு)	—25
			405

45/100

சில எண்ணங்கள்...

இந்தப் படத்திற்கு காமிரா ஒரு 'ப்ளஸ் பாயிண்ட்'. அழகான கோணங்களில் வண்ணத்தை அள்ளித் தெளித்திருக்கிறார் ஒளிப்பதிவாளர். 'சர்ச்'சில், திருமண சீன் 'ஏ' கிளாஸ். அங்கு ஸ்ரீகாந்த்தும் வந்திருக்கிறார் என்பதை மிகத் துல்லியமாகக் காட்டி யிருக்கிறார். நல்லவேளை, அதிகமான 'Zoom' ஷாட்டுகளைப் போட்டு கண் டாக்டரிடம் ஓட வைக்கவில்லை. 'ஒரு வானவில்' பாட்டை நீர்வீழ்ச்சியின் அருகாமையில் மிக அற்புதமாகப் படமாக்கி இருக்கிறார். அத்துடன் அந்த படகுப் பாட்டும் அதில் வரும் சூரிய அஸ்தமனக் காட்சியும் ஒளிப்பதிவாளரின் கைவண்ணத்தால் நம் மனத்தில் நிற்கின்றன. திரைக் கதை இலக்கணத்தில் வெகு அருகாமையில், அதாவது இடைவெளி அதிகமில்லாமல் பக்கத்துப் பக்கத்தில் அமைந்துவிட்ட இரு பாட்டுக்களில் இரண்டாவது பாட்டாயிற்றே இது! சாதாரணமாகப் படமாக்கப்பட்டிருந்தால் தொய்ந்திருக்கும்.

குறை கூற வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை, ஆரம்பத்தில் அந்த ஹால் லாங் ஷாட்டில் மைக்நிழலைத் (Mike shadow) தவிர்த்திருக்க வேண்டும். கண்ணை உறுத்துகிறது. அதே போல 'சர்ச்'சில், பூசை முடிந்த பிறகு எல்லோரும் வெளியே வரும் காட்சியில் ஃபோகஸ் சரியில்லை (Out of focus). உதவியாளர் ஏமாந்து விட்டாரா?

குறுக்கு வழியில் அசோகனின் குதிரைகள் காரை மடக்க வரும்போது புதருக்குப் பின்னால் சில ஆட்கள் மறைந்து கொள்வது நன்றாகத் தெரிகிறது. ஒருவேளை காட்சிக்கான விளக்கங்களைக் (Instruction) கொடுத்துவிட்டு உதவி டைரக்டர்கள் தாம் ஓடி ஒளிந்து கொள்கிறார்களோ? பாவம், எடிட்டராவது காட்சியின் ஆரம்பத்தைச் சிறிது குறைத்து, ஓடி ஒளிவது தெரியாமல் செய்திருக்கலாம்.

மலைச்சாரலில் அந்தப் பெண்ணின் நடைக்கும் சதங்கைச் சப்தத்திற்கும் சம்பந்தமே இல்லையே. 'நான் என்ன செய்வேன்? ரீ ரிகார்டிங்போது எடுத்துக் கொடுத்த ஒலி—அப்படியே போட்டு விட்டேன்' என்ற எடிட்டரின் அங்கலாய்ப்பு காதில் விழுகிறது. ஆனால் கோவளம் ஹோட்டலில் முத்துராமனின் வசனம் சரியாக இருக்க, தேங்காய் சீனிவாசன் வசனம் ஏன் வாயசைவுடன் பொருந்தாமல் இருக்கிறது? அக்கறை இல்லாத 'டப்பிங்கா?'


செந்தமிழில் பேச்சு; சரித்திர நாடகத்தில் வருவதைப் போன்ற உடை, பயணம் செய்வதோ குதிரையில், லம்பாடி உடையில் பெண்கள், புதுமையான கோடரி, பீங்கான் கோப்பையில் டீ..இது என்ன மலைஜாதி, ஆர்ட் டைரக்டர் ஸார்?

கதாநாயகன் சந்திக்கும் மூன்று பெண்களும் ஒரே மாதிரியாக இருப்பதற்குக் காரணம், அவர்கள் மூவரும் ஓர் ஏழைக் குடும்பத்தில் ஒரே சமயத்தில் பிறந்தவர்கள். (பிரசவத்தின்போது கட்டாயம் வெளியில் மழையும் மின்னலுமாக இருக்கும்; டாக்டரைக் கூப்பிட முடியாமல் தகப்பன் திண்டாடிக் கொண்டிருப்பான்!) அப்படிப்பட்ட தகப்பன், பணத்திற்காகக் குழந்தைகளை யாராருக்கோ விற்று விட்டான் என்றோ, அல்லது காட்டில் விறகு வெட்டும்போது காணமற் போய் விட்டார்கள் என்பது போலவோ ஏதாவது ஒரு நொண்டிச் சாக்கு கடைசியில் சொல்லவே எல்லோரும் விரும்புவார்கள். ஆனால் டைரக்டர் முத்துராமன் அவர்களோ அதைப் பற்றிக் கவலைப்படாமல், 'இது ஒரு கதை. இதில் வரும் கதாநாயகன் மூன்று பெண்களைச் சந்திக்கிறான். அந்த மூன்று பெண்களும் ஒரே மாதிரி தோற்றமளித்தால் இப்படியெல்லாம் நடக்கக் கூடும் என்பதே நாங்கள் சொல்லப் போகும் கதை' என்ற புதுப் பாணியில் கதையைக் கையாண்டிருக்கிறார். பாராட்டப்பட வேண்டிய துணிச்சல்.

'ப்ளேன்' செட் படுமோசம். நகைப்புக்குரியதாக இருக்கிறது. அதில் போய் தீபாவளிப் புகையைவிட்டு மேலும் சிரிக்க வைத்திருக்கிறார்கள். விமானம் உயரத்தில்பறந்துகொண்டிருக்கும்போது விமானத்திற்குள் புகை வருமளவிற்கு ஓட்டை விழுந்து விட்டால் உள்ளே பிராண வாயு குறைந்து (Decrease in cabin pressure) எல்லோரும் 'ஆக்ஸிஜன் மாஸ்க்' அல்லவா அணிந்து கொண்டிருக்க வேண்டும்?

தெரியாததைச் செய்யாமல் இருக்க வேண்டும். செய்துதான் ஆகவேண்டுமென்றால் அதை முழுமையாகத் தெரிந்து சரிவரச் செய்ய வேண்டும். இரண்டுங்கெட்டானாக இப்படிக் காட்சி அமைப்பதனால்தான், 'சரிசரி, தமிழ்ப் படம்தானே, இப்படித்தான் இருக்கும்' என்று பார்ப்பவர்கள் முணுமுணுக்கும் நிலை ஏற்படுகிறது.

—விகடன் விமரிசனக் குழு



விகடன் 14 - 12 - 1947

வாசன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெடுக்காக ஆனந்த விகடன் அச்சகத்தில் அச்சிட்டு



நான் ஒரு இ.ஜி.ஓ!

ஸரஸ்காந்தன்

தபால்காரர் 'பொத்' என்று ஓர் உறையை வீசி எறிந்து விட்டுப் போனுர். நான் எழுதின கதைதான் வழக்கம்போல் திரும்பி வந்திருக்கிறது என்ற எண்ணத்துடன் எழுந்து போய்ப் பார்த்தேன். மத்திய அரசு முத்திரையிட்ட உறை. அப்படி என்ன குற்றம் செய்து விட்டேன் நான் என்று நடுக்கத்துடன் பிரித்தேன். 'நான் கதைகள் எப்படி எழுதினேன், அதற்கு வேண்டிய மேல்நாட்டுப் பத்திரிகைகளை எப்படி வரவழைத்தேன் என்று ஏதாவது விசாரணைக் கமிஷன் நியமிக்கப் போகிருர்களோ?' என்று நெஞ்சு படபடத்தது. நல்ல செய்திதான். என்னை இ. ஜி. ஓ. ஆக நியமித்திருக்கிருர்களாம். அதாவது எம்ப்ளாய்மென்ட் ஜெனரேடிங் ஆபீஸர்... வேலைகளை உற்பத்தி செய்யும் அலுவலர்.

நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி விட்டது. இதை நீக்குவதற்கு என்ன செய்யலாம்?

உருப்படியான சில யோசனைகள் எனக்குத் தோன்றின. மனமிருந்தால் மார்க்கமுண்டு. படித்த நம் இளைஞர்களுக்குக் கற்பனை சக்தியே இல்லை. வேலை அவர்களைத் தேடி வருமா? அவர்கள்தான் வேலையைத் தேடிப் போக வேண்டும். உதாரணமாக, ஆபீஸர் ராமநாதனுடைய பாட்டி கிராமத்திலிருந்து வருகிருள், காசிக்குப் போகிற வழியில் பேரனைப் பார்த்துப் போகலாமென்று. ராமநாதனுக்கோ ஆபீஸில் டைரக்டர்கள் மீட்டிங். ராமநாதனுடைய பிரதிநிதியாகப் போய் பாட்டியைப் பார்த்து ஜாக்கிரதையாக 'கங்கா-காவேரி' எக்ஸ்பிரஸில் ஏற்றி வைக்கும் வேலையை ஒரு பட்டதாரி இளைஞன் செய்யக்கூடாதா? கல்லூரிக்குப் பக்கத்தில் வீடு இருந்தால் அங்கே குடியிருக்கும் இளைஞன், மத்தியான வேளையில் (அதுவும் புதுப் படம் ரிலீஸாகிற வெள்ளிக்கிழமையன்று) கல்லூரிக்கு வந்து, கிளாஸ் 'கட்' செய்து சினிமா போக விரும்பும் மாணவ நண்பருக்கு ப்ராக்ஸியாக வகுப்பில் உட்கார்ந்து நோட்ஸ் எடுத்து சாயங்காலம் தியேட்டர் வாசலிலேயே கொண்டுபோய்க் கொடுக்கிற வேலையைச் செய்யலாமே!

இன்னும், மவுண்ட் ரோடில் மாலை ஐந்து மணியிலிருந்து பஸ்ஸுக்காகக் கால் கடுக்க நிற்கும் பயணிகளுக்கு உதவியாக, 'இப்படியே பேசிக்கொண்டே போய்விடலாம்' என்று பேச்சுத் துணை கொடுத்து தியாகராயநகரில் அவர் வீடு வரை கொண்டுபோய் விடலாமே.

நல்ல உடல்வாகு உடைய 'ஸ்போர்ட்ஸ்மென்'களுக்கு இன்னும் அதிகமான வேலைவாய்ப்புக்கள் உள்ளன. முதல் தேதியன்று பிக்பாக்கெட் கொடுத்துவிட்டு 'அதோ ஓடருன் அதோ ஓடருன்' என்று நின்ற இடத்திலிருந்து கொண்டே அலறும் சம்சாரிக்கு

உதவியாகத் திருடனைத் துரத்திப் போய்ப் பிடித்து பணத்தை மீட்டுத் தரலாம். காலையிலும் மாலையிலும் பஸ் ஸ்டாப்பில் வம்பு செய்கிற காலிகளிடமிருந்து மாணவிகளைக் காப்பாற்ற பெற்றோருடன் கான்ட்ராக்ட்பேசி மெய்க்காப்பாளர் வேலையும் செய்யலாம் கராத்தே பயின்றுள்ள மாணவர்கள்!

தங்கள் பொதுக் கூட்டங்களுக்கு ஆள் சேர்க்கும் அரசியல்வாதிகள், தங்கள் குழந்தையின் பரதநாட்டியத்தைப் பார்த்து ரசிக்கக் கூட்டம் தேடும் பெரிய மனிதர்கள், தங்கள் வெளி நாட்டு அனுபவங்களைக் கேட்பதற்கு ஆள் தேடும் கிளப் மெம்பர்கள்! இவர்களிடம் மணிக்கு இவ்வளவு என்று கட்டணம் வசூலித்து அவர்களுடைய அறுவையைச் சகித்துக் கொள்ளலாமே வேலையில்லாத இளைஞர்கள்!

காலேஜிலும் டி. வி-யிலும்நடைபெறும் 'க்விஸ்' போட்டிகளில் அபரிமிதமான மதிப்பெண்கள் பெறும் மாணவர்கள், ஒரு சைக்கிள் ரிக்ஷாவில் ஏறி சென்னையைச் சுற்றி வந்து 'மொபைல் க்விஸ் ப்ரோக்ராம்' நடத்திப் பணம்



''வாசனையுள்ள பிராணி எது?''
''சாம்பிராணி!''

—சாந்தா கருணாகரன்.



''விமலா! உனக்கு எந்த வாசனை பிடிக்கும்?''

''எனக்கு பக்கத்து வீட்டு சீனு வாசனைத் தான் பிடிக்கும்.''




—பி. ப. சுந்தரராசன்.

ஊரார் பிள்ளையை 'ஊட்டி' வளர்த்தால் தன் பிள்ளையை?...

'கொடைக்கானல்' வளர்க்கும்!

— ராஜகோபால்.





ஒரு பெரிய பணக்காரர் நதிக்குச் சென்று மீன்களுக்குப் பொரியிடுகையில் கையில் எப்பொழுதும் படி ஒன்றை எடுத்து செல்வார். ஏன்?

'ஆற்றில் போட்டாலும் அளந்து போடு' என்பதனால்.

—ஜி. கிருஷ்ணமூர்த்தி.

''பாபு ஓடும் பஸ்ஸில் தான் ஜோக் அடிப்பான். ஏன் தெரியுமா?''



''அப்போதுதான் எல்லோரும் குலுங்கிக் குலுங்கிச் சிரிப்பார்களாம்.''

— எஸ். என். ராஜாராம்.

''கவாஸ்கருக்கு இனிமேல் குமாஸ்தாக்களைக் கண்டாலே பிடிக்காது.''



''ஏன்?''

''முதல் இரண்டு டெஸ்ட்களிலும் 'கிளார்க்' பந்தில்தான் கவாஸ்கர் 'அவுட்'.''

பெண்களுக்கும் சில யோசனைகள். ''சாளேசுவரம் வந்து கண்ணை மூடிண்டிருக்கு, என்ன தெரியறது நேக்கு!'' என்று வீட்டில் நாளெல்லாம் குறைப்பட்டுக் கொண்டு விட்டு, ''சௌகார் நடிச்ச படமாடி'' என்று நீட்டி முழக்கிக் கொண்டு 'மாட்னி ஷோ' போக ஆசைப்படும் எச்சுமிப் பாட்டிக்குத் துணையாக மத்தியான வேளையில் சினிமாவுக்குப் போகலாம். லேடீஸ் கிளப்பில் மிஸஸ் ராமமூர்த்தியைப் பற்றி வம்பளப்பதற்கு ஒன்றும் கிடைக்கவில்லையே என்று குறைப்பட்டுக் கொண்டிருக்கும் மிஸஸ் வேதாசலத்துக்கு துப்பறியும் வேலையில் ஈடுபட்டு அன்றைய வம்புக்கு விஷயம் சேகரித்துக் கொடுக்கலாம்.

யாரோ கதவைத் தட்டவும் என் யோசனை ஓட்டம் தடைபட்டது. தபால்காரர்! அந்த உறை எனக்கு இல்லையாம்: நாலு வீடு தள்ளி யாரோ ஒருத்தர் புதிதாகக் குடி வந்திருக்கிறாராம். அவருக்காம். சே...! என் 'பிரிலியண்ட் ஐடியாஸ்' அத்தனையும் வேஸ்ட்! இதுக்கு செலவழிச்ச நேரத்திலே பக்கத்துலே ஓட்டல்லே இட்டிலிக்கு அரைச்சுக் கொடுத்திருந்தா நாலு ரூபாயாவது சம்பா

பிரமை

காயத்ரி



வாசலில் நிழலாடவே லெக்சரர் விரிவுரையை நிறுத்திவிட்டு வாசலை நோக்கினார். பியூன் ரெங்கசாமி நின்றுகொண்டிருந்தான். 'என்ன ரெங்கசாமி' என்று விழியாலேயே அவர் வினவ,

''சார்! பிரபாகரன் என்கிற ஸ்டூடன்ட்டை உடனே பிரின்சிபால் அழைச்சிட்டு வரச் சொன்னார்'' என்று ஒரே மூச்சில் சொல்லிவிட்டுச் சென்றுவிட்டான்.

பிரபாகரன் வகுப்பறையை விட்டு வெளியேறினான். வெளியேறும்போது பெண்கள் அமர்ந்திருந்த பகுதியைக் கவனிக்கத் தவறவில்லை. ஆனால் அவ்வாறு பார்த்ததுதான் தப்பாகிவிட்டது. ஜெயந்தி அவனைப் பார்த்த பார்வை அவனுக்கு உண்மையிலேயே நடுக்கத்தை ஏற்படுத்திவிட்டது. தன் விதியை நொந்தபடி வெளியே வந்தான்.

பத்து நாட்களுக்கு முன்பு நிகழ்ந்த நிகழ்ச்சி. அவனது கல்லூரியின் இலக்கிய சங்கத்தின் துவக்க விழாவின் சிகரமாக அமைந்த பேச்சுப் போட்டி ஒன்றில் பேச்சுக் கலையின் நுணுக்கம் முழுவதையும் அறிந்தது போல் பேசி நடுவர்கள் மட்டுமல்லாது கூடியிருந்த மாணவ-மாணவியர் கும்பலையும் கவர்ந்தான். குறிப்பாக, 'கங்கிராஜுலேஷன்ஸ்' என்று தேனினும் இனிய குரல் வந்த திசையை நோக்கிய போதுதான், கல்லூரி அழகு ராணியும் தன் வகுப்பிற்கும் தனிப் பெருமை தந்து கொண்டிருப்பவளுமான அந்த அப்சரஸ்ஸை-ஜெயந்தியை—தான் தன் பேச்சாற்றலால் கவர்ந்து விட்டோம் என்பதை உணர்ந்தான். அவன் சற்று நிதானித்து 'நோ மென்ஷன்' என்று பதிலளித்தான். அவள் அத்துடன் நில்லாது அவன் பரிசு பெற்ற சுழற்கோப்பையையும் வாங்கிப் பார்த்துவிட்டுத் தந்தபோது அவனது மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. அவள் சென்ற திசையே அவன் பார்த்துக்கொண்டு நின்றபோது, உடன் இருந்த மாணவர்கள் அவனிடம், ''என்னடா! அந்த அழகு ராணி உன் இதயத்தை எடுத்திட்டுப் போயிட்டாளா?'' என்று கிண்டல் செய்தபோதுதான் அவன் பழைய நிலைக்கு மீண்டான். பின்னும் பயங்கரமான கிண்டல்கள். ''டேய்! நீ ரொம்ப கொடுத்து வச்சவன்டா. அவளோட அருட் பார்வை கிடைக்காதா என்று ஒவ்வொருத்தனும் நூறு இருநூறுன்னு செலவு செய்துவிட்டு திரியறப்போ உன்னை செலக்ட் பண்ணிட்டாளேடா அந்த அப்சரஸ்'' என்று அவனிடம் தங்களது ஆற்றாமையை வெளிப்படுத்திக் கொள்ளத் தவறவில்லை அவனது நண்பர்கள்.



என். வரதராஜன் (காயத்ரி) எம்.ஏ.,
(இரண்டாம் ஆண்டு) அஞ்சல் வழி கல்வி, மதுரை பல்கலைக் கழகம்.

ஆனால் நேற்று காலை ஜெயந்தி அவனிடம் ஷேக்ஸ்பியரின் காதல் காவியமான 'அண்டனி அண்ட் கிளியோபாட்ரா' புத்தகத்தைக் கேட்டபோதுதான் அவன் மனம், 'பிரபாகரா! சந்தர்ப்பம் உன் வாழ்நாளின் கதவைத் தட்டும்போது தவற விட்டுவிட்டு வருந்தாதே' என்று ஓலமிடத் துவங்கியது.

இந்த பத்து நாட்களாக எழுதி, பின் கிழித்து, பின் எழுதி ஓரளவு மன சாந்தமடையச் செய்த தனது காதல் மடலை அப்புத்தகத்தில் வைத்துக் கொடுத்துவிட்டான். அதை பிரின்சிபாலிடம் கொடுத்து விட்டிருக்கிறாள் ஜெயந்தி, சந்தேகமில்லை.

பிரின்சிபால் ஏற்கெனவே முசுடு. முன்னமேயே ஒரு 'மீட்டிங்'கில் வேறே சொல்லி இருக்கார். 'இது ஆண்களும் பெண்களும் இணைந்து படிக்கிற கல்லூரி. மற்ற கல்லூரிகளைவிட இந்தக் கல்லூரியில்தான் நெறி, ஒழுக்கம், கட்டுப்பாடு இவை மிகுந்திருக்கணும். இந்தக் கல்லூரி மாணவன் கல்லூரிக்கு மட்டம் அடித்துவிட்டு சினிமா போறதைக்கூட என் மனம் மன்னிச்சுவிடும்.

ஆனால் அதே சமயத்தில் ஒரு பெண்ணுக்குக் காதல் கடிதம் எழுதினான் என்ற செயலை என்னால் மன்னிக்கவே முடியாது.' 'ம்! டிஸ்மிஸ் பண்ணிடுவார். என் எதிர்காலமே நாசமாய்ப் போய்விடும்' என்ற நினைவுகள் ஒருபுறம் சூழ்ந்து கொண்டிருக்க, இந்த நினைவுகள் எதற்கும் கட்டுப்படாமல் அவனது கால்கள் பிரின்சிபால் அறை வாசலை அடைந்து விட்டன.

பியூனும் கதவைத் திறந்து அவன் நுழைய வழிவிட்டான். பிரின்சிபாலைப் பார்த்தான் பிரபாகரன். அவர் ஏதோ பேப்பரில் கையெழுத்துப் போட்டுக் கொண்டிருந்தவர் சட்டென்று தலை நிமிர்ந்தார். அவரது முகத்திலிருந்து எதையும் பிரபாகரனால் உறுதி செய்து கொள்ள முடியவில்லை. முகம் அப்படிப் பட்டது.

''நீ செய்தது உனக்கே நன்றாக இருக்கிறதா பிரபாகர்?'' என்று அவர் ஆங்கிலத்தில் வினவியபோது அவரது உள்ளத்தின் சூட்டைக் குரலின் சூடு காட்டிக் கொடுத்தது.

பிரபாகரனுக்குப் பேசவே நா எழவில்லை. தலை குனிந்து நின்றான்.

''ஜெயந்தி சொன்ன போது கூட நான் நம்பவில்லை. ஆனா அந்தக் கடிதத்தைப் பார்த்த போதுதான் உறுதியாச்சு.''

பிரபாகரன் சப்தநாடியும் ஒடுங்கிப் போய் நின்றபோதும்கூட 'சரியான 'ஹிட்ச்காக்'காக இருப்பார் போலிருக்கே! இந்தா டிஸ்மிஸ் ஆர்டர்னு கையில் கூப்பிட்டுக் கொடுத்தாப் போறும். அதை விட்டுவிட்டுக் கதை அளக்கிறாரே' என்ற நினைவும் ஒரு மூலையில் தோன்றாமலில்லை.

''ஏம்பா?'பீஸ் கட்ட அப்பாகிட்டேயிருந்து பணம் வரப் பத்து நாள் ஆகும் சார். எக்ஸ்டென்ஷன் கொடுங்க'ன்னு ரூல்ஸை ரிலாக்ஸ் பண்ணிக் கொடுத்துட்டுப் போறேன். அப்படியும் இல்லாதபோனா நாலாவது கட்டிவிட்டு அப்புறம் வாங்கிக்கறேன். அதை விட்டுட்டு நீ பேசாம இருந்திட்டே. அந்த கிளார்க்கும் கவனிச்சு எங்கிட்ட சொல்லாம 'சஸ்பென்ஷன்' ஆர்டர் எழுதிக் கொடுக்க, நானும் அதைக் கவனிக்காமல் கையெழுத்துப் போட்டுவிட்டேன். ஜெயந்தி உங்க அப்பாவிடமிருந்து வந்திருந்த கடிதத்தைக் காட்டிச் சொல்லவில்லையானால் ரொம்பக் கஷ்டமா போயிருக்கும். இன்னிக்குத்தான் ஒனக்குக் கொடுத்த டியூ டேட். போய் பணத்தைக் கட்டிவிட்டு வகுப்புக்குப் போ. உங்கப்பாவிடமிருந்து பணம் வந்த பின்னாடி கொடு; இப்ப ஒண்ணும் அவசரமில்லை'' என்று கூறி முடித்துப் பணத்தை அவன் முன்னர் வைத்த பின்னர்தான் பிரபாகரனுக்கு மூச்சு வந்தது.

யந்திரகதியில் 'தாங்க்ஸ்' சொல்லிவிட்டுப் பணத்தைக் கட்டி ரசீதை வாங்கிக் கொண்டு வகுப்பறையை அடைந்தான். அவசர அவசரமாக, தான் நேற்று 'ஆண்டனி அண்ட் கிளியோபாட்ரா'வுடன் வைத்திருந்த தமிழ்ப் புத்தகத்தை விரித்துப் பார்த்தான். அதில் அவனது காதல் கடிதம் நிம்மதியாக அவனைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தது. அதைச் சுக்கலாகக் கிழித்துப் போடும் போதுதான் அவனுக்குப் புரிந்தது. தன் காதல் கடிதமென்று நினைத்துத் தன் தந்தையின் கடிதத்தை அப்புத்தகத்தில் வைத்து ஜெயந்தியிடம் கொடுத்துவிட்ட தவறு புரிந்தது. 'ஜெயந்தி பிரின்சிபாலிடம் தன்னைக் காட்டிக் கொடுத்திருப்பாளோ?' என்ற பிரமையிலிருந்து விடுபட்டான் பிரபாகரன்.



மிருணாள் சென் பாராட்டிய படாபட்!

சுஜாதா சினி ஆர்ட்ஸின் 'தியாகம்' படத்திற்கு சில இடங்களில் படாபட் ஜெயலட்சுமி டப்பிங் பேச வேண்டியிருந்தது. ஓரிரு முறை அந்தப் படத்தைப் பார்த்துவிட்டு சரியாக, அநாயாசமாகப் பேசிவிட்டார் படாபட்.

பிரபல டைரக்டர் மிருணாள் சென் 'ஒக ஊரி கதா' என்ற தெலுங்குப் படத்தை டைரக்ட் செய்தார். அதில் காலஞ்சென்ற உதயசங்கரின் மகள் மம்தா சங்கர் கதாநாயகி. அவருக்குத் தெலுங்கு சரியாக வரவில்லை. படம் முடிந்த பிறகு கதாநாயகியின் குரலை டப்பிங் செய்யத் தீர்மானித்தனர்.

படாபட் வரவழைக்கப்பட்டார். காலை 11 மணிக்கு டப்பிங் பேச ஆரம்பித்து மாலை 5 மணிக்குள் சுமார் ஐம்பது காட்சிகளுக்கான வசனங்களைக் கதாநாயகியின் உதட்டசைவுக்குச் சரியாக உணர்ச்சியோடு பேசி முடித்துவிட்டார் படாபட்.

''இப்படியும் பேச முடியுமா? ஒரே நாளில், அதுவும் ஆறு மணி நேரத்திற்குள் பேசி முடித்து விட்டாரே...யார் அந்தப் பெண்?'' என்று வியந்து, படாபட்டின் பெயரைப் படத்தின் டைட்டிலில் போடச் சொன்னாராம் டைரக்டர் மிருணாள் சென்.

—பி. எஸ். பி.



இந்தி நடிகர் அம்ஜத்கான் பங்களூரில் ஓர் ஓட்டல் நடத்துகிறார். பெயர் — டோப்காபி.

Topkapi- ஒரு கட்டடத்தின் மாடியில் இருக்கிறது.

—கே. ஆர்.



சுஜாதாவை அழ வைத்த நகைச்சுவை நடிகர்

"தங்கவேலு அண்ணன் சிறந்த நகைச்சுவை நடிகர் என்று தான் எனக்குத் தெரியும். சோகக் காட்சியில் அவர் நடித்து நான் பார்த்ததே இல்லை. அண்மையில் 'மாரியம்மன் திருவிழா' படத்திற்காக தங்கவேலு அண்ணனும் சிவகுமாரும் நடித்த காட்சி ஒன்று ஏ. வி. எம். ஸ்டுடியோவில் படமாக்கப்பட்டது.



சிவகுமாரைக் கட்டிப் பிடித்து, 'நீ அழாதேடா...நீ அழுதால் என் நெஞ்சே வெடிச்சிடும்...' என்று தங்கவேலு அண்ணன் உருக்கமாகப் பேசி நடித்ததைப் பார்த்து நான் அழுதே விட்டேன்.

இன்னொருவர் நடிப்பைக் கண்டு நான் கண்ணீர்விட்டு அழுதது அப்போது தான்'' என்றார் சுஜாதா.

—நாகை தருமன்

பட உலகில்

1-1-78 இதழில் '16 வயதினிலே' படப் பாட்டுக்களான 'செந்தூரப் பூவே'... 'சோளம் வெதக்கையிலே' என்ற இரண்டு பாடல்களையும் இயற்றியவர் கங்கை அமரன் என்று குறிப்பிடப் பட்டிருந்தது. அது தவறு. 'சோளம் வெதக்கையிலே' என்ற பாட்டை இயற்றியவர் கவிஞர் கண்ணதாசன்.

சென்னை-73. எஸ். சிவகுமார்.

● பாட்டுப் புத்தகத்திலேயே இரண்டு பாட்டுக்களையும் இயற்றியவர் கங்கை அமரன் என்றுதான் போட்டிருக்கிறார்கள். வாங்கிப் பாருங்கள்.

கம்ப்யூட்டர் தோரஹா



எல்லாவிதமான கற்பழிப்புக் காட்சிகளையும் திரையில் காட்டி ஹாலிவுட் தயாரிப்பாளர்களுக்கு அலுத்துவிட்டதாம். இப்போது டெமன் ஸீட் (Demon Seed) என்ற படத்தில் ஒரு பெரிய கம்ப்யூட்டர், வீட்டில் தனியாக இருக்கும் விஞ்ஞானியின் மனைவியை பலவந்தமாக விஞ்ஞானகூடத்திற்கு அழைத்துச் சென்று கற்பழிக்கிறது!

விஞ்ஞானியின் வலது கை போல இருந்து வரும் அந்த கம்ப்யூட்டருக்கு, மனித உருவில் தனக்கு ஒரு குழந்தை பிறந்து தன் வம்சத்தை வளர்க்க வேண்டும் என்பது நீண்ட நாள் ஆசை.

இதன் விளைவாக, கதாநாயகி ஒரு குழந்தைக்குத் தாய் ஆகிறாள். மனித உருவில் குழந்தை பிறக்கிறது—ஆனால் அதன் தலைக்குள் மூளைக்குப் பதில் ஒரு சிறு மினியேச்சர் கம்ப்யூட்டருடன்!




'சிரி சிரி முவ்வா' புகழ் ஜெயப்ரதாவிடம் பேசிக் கொண்டிருந்தபோது, "உங்களது பெயருக்கும் புகழுக்கும் காரணம் என்ன?" என்று கேட்டேன்.

"அவர்தான்" என்று ஒரு திசையில் கையைக் காட்டினார்.

அது யாரென்று பார்த்தால் - வெங்கடேசப் பெருமாள் - காலண்டர்.

—ராம்



'சிறந்த நடிகை' விருது, நடிகை லட்சுமிக்குக் கிடைத்தது குறித்து நடிகை 'ஊர்வசி' சாரதா சொன்னதாவது:

"எனக்கு ஊர்வசி விருது கிடைத்ததை விட அதிக சந்தோஷம் அடைகிறேன். எனக்கு இந்த விருது கிடைத்தபோது யாரும் பாராட்டவில்லை. பொறுமையால் வெந்து கொண்டிருந்தார்கள். இப்போதாவது மனம் மாறி சிலர் லட்சுமியைப் பாராட்டுகிறார்களே!"

செய்தித் தாளில் வேறு எதையும் கவனிக்கத் தவறினாலும், சந்தானம் 'ராசி பலனை'க் கவனிக்கத் தவறுவதில்லை.

காலையில் மேஷ ராசிக்கு நேராக 'பண வரவு' என்றிருந்ததைப் பார்த்ததிலிருந்து, பேப்பர் வெய்ட் வைக்கப்படாத பேப்பர்கள் அவனது 'டேபிளில்' இருந்து பறந்த மாதிரி அவனது மனமும் பறந்து கொண்டிருந்தது.

'டி. ஏ.' பில் வருமோ என்று அன்றைய தபாலில் எதிர்பார்த்தான். வரவில்லை. வேறு ஏதாவது வழியில் வருமோ என்று மணி நான்கு வரை கூடப் பார்த்தாகிவிட்டது, வரவில்லை! பின் எப்படிப் பண வரவு?

மின்னல் வேகத்தில் ஓர் ஐடியா. 'ஆமாம், அப்படித்தான் இருக்கும்!' —அவன் முடிவு செய்து கொண்டான்.

சுவரில் தொங்கிக் கொண்டிருந்த அந்த ஹைதர் காலத்துக் கடிகாரத்தை எரிக்க மாட்டாத குறையாகப் பார்த்தான் சந்தானம். 'சனியன், ஓடுகிறதா இல்லையா..? ஓடுகிறது. 'பெண்டுலம்' அசைந்து கொண்டுதான் இருக்கிறது! ஒருவேளை ஸ்லோவா!'

''சார்! உங்க 'வாச்'சில் டைம் என்ன ஆகுது?''


''ம்!'' ஃபைலில் மூழ்கியிருந்த 'ஹெட் கிளார்க்' முத்துகிருஷ்ணன் அவனை ஏற இறங்கப் பார்த்தார்.

இந்த மனுஷனை ஏண்டா கேட்டுத் தொலைத்தோம் என்றிருந்தது அவனுக்கு. சமாளித்துக் கொண்டு, ''நம்ம 'வால் க்ளாக்' கொஞ்சம் பாஸ்ட்டா ஓடற மாதிரி தெரியுது சார். அதான் கேட்டேன்'' என்றான்.

இரண்டையும் ஒரு நோட்டம் விட்ட அவர், ''ராமசாமி.. ராமசாமி.. அப்பா ராமசாமி!'' என்று கூவினார்.

''சார்!'' — வெளியில் நின்றிருந்த கடைநிலை ஊழியர் ராமசாமி, புகைத்துக் கொண்டிருந்த பீடியை ஒரு சுண்டு சுண்டி 'ஸ்டைலாக' விட்டெறிந்து விட்டு, ''சொல்லுங்க சார்'' என்றபடி எதிரில் வந்து நின்றான்.

''ஏம்மா கண்ணு! இதெல்லாம் கொஞ்சம் நீ பார்த்துக்கப்படாதா? பார்! அதைக் கொஞ்சம் சரி பண்ணு. ஒரு நிமிஷம் பாஸ்ட்டா ஓடித் தொலையுது.. அதுகூட நம்ம 'செகண்ட் கிளர்க்' சார்தான் கவனித்தார்'' என்றார், ஓரக் கண்ணால் சந்தானத்தைக் கவனித்தபடி.



ராமசாமியிடம் தட்டிக் கொடுத்து, 'அம்மா கண்ணு, ராஜா'ன்னு சொல்லித்தான் வேலை வாங்குவார். அதட்டிப் பேச முடியாது. அவன் கிளார்க்குன்னும் பார்க்கிறதில்லே, 'ஹெட் கிளார்க்'குன்னும் பார்க்கிறதில்லே. 'எடுத்துப் போட்டேன்; கழுத்தை முறித்தேன்'கிற மாதிரி பதில் சொல்லிவிட்டு, மேலதிகாரியிடம் தான் அப்படிச் சொல்லவே இல்லை என்று துண்டு போட்டுத் தாண்டுவான். சத்தியம் அவனுக்குச் சர்க்கரைப் பொங்கல்!

ஓசியில் கிடைத்த பீடியைப் பாதியில் எறிந்த ஆத்திரத்தில் அவன் பத்து நிமிஷமாகக் குறைத்துவிட்ட பொழுது, 'நுணலும் தன் வாயால் கெடும்' என்ற பழமொழியைச் சந்தானம் மனத்தில் சொல்லிப் பார்த்துக் கொண்டான்.

மணி நான்கு முப்பது. சந்தானம் இன்னும் அரைமணி நேரம் காத்திருக்க வேண்டும். இதற்குள் 'இன்ஜினீயர்' வராமல் இருக்க வேண்டும். வந்து விட்டால் அவர் போகும்வரை சீட்டை விட்டு அப்படி இப்படி நகர முடியாது. அந்தப் பழிகார இன்ஜினீயர் வராமல் இருக்க வேண்டும் என்று தன் குல தெய்வத்தை வேண்டிக்கொண்டான்.

''சார்! என்னுடைய ஃபைலெல்லாம் பார்த்திட்டீங்களா?'' — வார்த்தைகள்



சப்திக்கப்பட்ட பிறகுதான் நினைத்தான், 'இது, தான் செய்த இரண்டாவது தவறு' என்று.

'ஹெச். சி.' முத்துகிருஷ்ணன் தலை உயர்த்தி அவனைப் பார்க்கவில்லை. குனிந்து ஃபைல்களைப் பார்த்துக் கொண்டிருந்த நிலையிலேயே கேட்டார்:

''என்னங்க சந்தானம்! உங்க மிஸஸ் 'டெலிவரி'க்குப் போயிருந்தவங்க வந்துட்டாங்களா? 'ஒன் அவர் பெர்மிஷன்' போட்டிருக்கலாம் இல்லையா?'' — வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதில் தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக அந்த அலுவலகத்தில் அவர்தான் 'வின்னர்!'

'தப்புதான். அதுவும் இன்னிக்கு ஒன் அவர் பெர்மிஷன் போடாதது மன்னிக்க முடியாத தப்புதான்.. சண்டாளா! என் நிலைமை தெரிந்தால் நீ இப்படியெல்லாம் பேசமாட்டாய்!'

''அதெல்லாம் ஒண்ணும் இல்லை சார்! இன்னும் டெலிவரியே ஆகலியே! அதற்கப்புறம் இரண்டு மூன்று மாதங்களாவது ஆகுமே!'' என்று ஓர் அசட்டுச் சிரிப்புடன் சீட்டை விட்டு எழுந்தான்.

அந்த தினசரியை இரண்டாவது முறையாகப் பார்த்தான். சந்தேகமே இல்லை. 'பண வரவு' என்றுதான் இருந்தது. பேப்பரை மிக அனுவசியமாக விட்டெறிந்து விட்டு சீட்டில் வந்தமர்ந்தான். 'வால் க்ளாக்'கைப் பார்த்தான்; வயிற்றெரிச்சலாக இருந்தது!

மணி ஐந்து அடிக்க இன்னும் முழுதாகப் பத்து நிமிடங்கள் இருந்தன. 'டிராய'ரில் இருந்த 'டயரி'யை எடுத்து ஒரு நோட்டம் விட்டான். எல்லாமே 'அக்யூரேட்', எள்ளளவும் பிசகாமல்.

தேதி இருபத்தெட்டு: கடித அனுகூலம் - மனைவியிடமிருந்து கடிதம்

வந்தது. இருபத்தொன்பது; நண்பரால் உதவி - சுந்தரம் வீடு மாற்றுவதில் மிகவும் ஒத்துழைத்தார். முப்பது: வாகன சுகம் - அதிகம் இல்லையென்றாலும், 'ஜாவா'வில் இரண்டு கிலோ மீட்டர். ஒன்று: மகிழ்ச்சியான நாள் — சம்பளம் கிடைத்தது.

இன்று தேதி இரண்டு-பண வரவு. விட்டால் ஒரே ஓட்டம். டிராயரில் டயரியை வைத்துவிட்டுத் தலை நிமிர்ந்த பொழுது, வந்தது தலைக்குக் கல்லு.

ஜீப் வந்து நிற்கவும், இன்ஜினீயர் இறங்கவும், சந்தானத்தின் தலை பற்றி எரியவும் சரியாக இருந்தது.

'ஐந்து மணிக்கப்புறம்கூட எவன் உழைக்கறது?' 'ஓ.டி—யா தர்றானுங்க?'

அவனுக்கு வந்த எரிச்சல் அடுத்த விநாடி இன்ஜினீயர் கூறிய வார்த்தைகளைக் கேட்டுத் தணிந்து தண்ணீரானது.

''மிஸ்டர் முத்துகிருஷ்ணன்! 'யூ ப்ளீஸ் சென்ட் ஆல் தி ஃபைல்ஸ் டு மை ரெஸிடென்ஸ் த்ரு ராமசாமி! ஐ ஏம் சோ டயர்ட் டுடே'' என்று கூறிவிட்டு மீண்டும் ஜீப்பில் ஏறிக்கொண்டார்.

ஜீப் பறந்த பொழுது சந்தானமும் இறக்கை கட்டிக்கொண்டு பறந்தான். அதானே கேட்டேன்! ராசி பலன் பொய்யாகி விடுமா? மணி எட்டானாலும் உட்கார்ந்து அறுக்கக்கூடிய மனுசனுக்கு இன்னைக்கு என்ன வந்தது? அதெல்லாம் ராசி பலன் செய்ற வேலை! அவன் மனம் மகிழ்ச்சியால் துள்ளியது.

சைக்கிளில் ஏறியதோ, அத்தனை 'ட்ராஃபிக்'குகளையும் கடந்து ஏறத்தாழ மூன்று கிலோ மீட்டர் தூரம் வந்ததோ அவனுக்கே தெரியாது!

அது ஓர் அங்கீகரிக்கப்பட்ட 'கிளப்!' வெளியில் ஜாவாக்களும், என்ஃபீல்டுகளும், ஃபியட்டுகளும், அம்பாஸடர்களும்—உள்ளே இருக்கின்ற விளையாட்டு வீரர்களின் தரத்தைப் பறைசாற்றிக் கொண்டு நின்றன.

சந்தானம் அங்கு தனது சைக்கிளை ஓர் ஓரமாக ஒளித்து வைத்த மாதிரி நிறுத்தினான்.

நாளை என் கடன்களெல்லாம் ஒழிந்தன. அவன் மனம் மகிழ்ச்சியால் நிறைந்தது. மாடிப்படிகளில் ஒவ்வொன்றாக ஏறிச் சென்றதாக அவனுக்கு நினைவில்லை! ஒரு நிமிடம் அந்த 'கிளப்'பில் தனது பார்வையைப் பம்பரமாகச் சுழற்றினான்.

மேலே வரிசை வரிசையாக 'டபுள் டபுள்' ட்யூப் லைட்டுகள்; ஃபேன்கள். கீழே வட்ட வட்ட மேஜைகள்; அதனைச் சுற்றி ஆறு ஆறு பேராக ஒன்பது ஒன்பது பேராக விளையாட்டு வீரர்கள்.

சுவாமி படத்திற்கு ஊதுவத்தி கொளுத்தி வைத்த மாதிரி, பதின்மூன்று கார்டுகளை விரித்துப் பிடித்திருந்த விரல்களின் இடுக்கில் சிகரெட்டுக்கள் மணம் பரப்பிக் கொண்டிருந்தன.

ரம்மி!

'ரம்மியமாக இருப்பதால் இதற்கு ஒரு வேளை 'ரம்மி' என்று பெயர் வைத்திருப்பார்களோ!'—இப்படி எண்ணிய சந்தானம், நோட்டீஸ் போர்டை மேலெழுந்தவாரியாக ஒரு நோட்டம் விட்டான்.

'அட்மிஷன் ஃபீஸ்' ரூபாய் இருபது. மாதாந்திர 'சப்ஸ்கிருப்ஷன்' 'ரூபாய் ஐந்து' என்று எழுதப்பட்டிருந்தது. வேறெதையும் படித்துக் கொண்டு கால விரயம் செய்ய அவனுக்கு மனமில்லை.

'ஃபூ! இவ்வளவுதானா!' அந்த 'கிளப்'பில் தானும் இன்றிலிருந்து ஒரு 'மெம்பர்' என்ற பெருமையே அவனுக்குத் தாங்க முடியாததாய் இருந்தது.

இரவு மணி ஒன்பது. வயிற்றுப் பசியும் தெரியவில்லை, ஒரு மண்ணும்



மனநோய் மருத்துவமனையில் இருக்கும் இருவர்

''டேய், நான் இடி இடிக்கிற மாதிரி சப்தம் போடறேன். நீ மழை பெய்யற மாதிரி சப்தம் போடு. உடனே டாக்டரும் நர்ஸம்மாவும் மழை வருதுன்னு பயந்துகிட்டு ஓடிப் போயிடுவாங்க..நாம தப்பிச்சுக்கலாம்..''

''அட போடா..அது எல்லாம் நடக்காது!''

''ஏன்?''

''இன்னிக்கு டாக்டரும் நர்ஸம்மாவும் குடை கொண்டு வந்திருக்காங்களே!''

— வி. ஜே. செல்வராஜ்



'தீயவை கேளாதே, தீயவை காணாதே, தீயவை கூறாதே' என்ற மூன்று குரங்குகளை அறிவோம். ஆனால்— 'தீயவை கேள், தீயவை காண், தீயவை கூறு' என்று கூறும் இந்த மூன்று குரங்குகள் பொம்மையை நியூயார்க் சைனா டவுனில் கண்டதாகக் கூறுகிறார் எமரி கெலன் என்ற கார்ட்டூனிஸ்ட்.

— ரா, வீ.

தெரியவில்லை! வழக்கமாக மாலை அலுவலகம் முடிந்ததும் 'லைட்'டாக டிபன் பண்ணுவான். இன்று அதுவும் இல்லை.

நூறு ரூபாய் கொடுத்து வாங்கிய டோக்கன் 'அவுட்'! ஆனால் சந்தானத்துக்கு ராசி பலனில் இருந்த நம்பிக்கை இன்னும் 'அவுட்' ஆகவில்லை.

''பாய்! கம் ஆன்.... டோக்கன் ஃபார் ஒன்மோர் ஃபிப்டி ருபீஸ்.... ஒன் செகண்ட். இந்தா, வில்ஸ் ஃப்ளேக் ஒன் பாக்கெட், மீதி உனக்கு!''— பணத்தைக் கொடுத்தனுப்பினான். விளையாட்டை மும்முரமாகக் கவனித்து விளையாடினான்.

மணி பத்து முப்பது. பக்கத்து டேபிள்கள் இரண்டொன்று காலியாகிக் கொண்டிருந்தன. ரூபாய் நூற்றைம்பதுக்கும், மெம்பர்ஷிப் இருபத்தைந்துக்கும் சேர்த்து அவனுக்கு இப்பொழுதுதான் முதன் முறையாகத் 'திக்'கென்றது.

''ஏன் சார், எல்லாரும் எழுந்துட்டார்கள்?''— தான் ஒன்றும் அவ்வளவு ஈனஸ்வரத்தில் கேட்கவில்லை என்று அவனுக்கு நினைப்பு.

''யெஸ், தட்ஸ் ஆல்! திஸ் ஈஸ் தி ஃபைனல் கேம்! நாம்கூட முடித்துக் கொள்ளப் போகிறோம்!''

''.........!''

''ஆர் யூ நியூ டு திஸ் க்ளப்? தி க்ளப் ஈஸ் ஒன்லி அப் டு டென்தர்ட்டி!''

பத்தரை ஆனதோ, மீதி சம்பளம் தப்பியதோ! அந்த வேகம், துடிப்பு, மிடுக்கு, பரவசம் எதுவுமே இப்பொழுது அவனிடம் இல்லை.

துன்பங்களுக்குக் காரணம் தேடிப் புறப்பட்ட புத்தர் மாதிரி அமைதியாகச் சென்று கொண்டிருந்தான். அவன் மனம் தியானத்தில் லயித்தது. சைக்கிள் மிக மெதுவாக ஊர்ந்துகொண்டிருந்தது. பார்ப்பவர்கள், 'பாவம்' என்று சொல்லுமளவுக்கு அவனுடைய தோற்றத்தில் மாறுதல்கள்.

இரண்டு முறை கேட்ட விசில் சப்தத்தைத் தொடர்ந்து, ''ஹலோ! மிஸ்டர், மிஸ்டர்!'' என்ற குரல் கேட்டு சைக்கிள் அனிச்சையாக நின்றது.

''என்ன சார்! பார்த்தா நாகரீகமா...''

''சாரி சார்! லைட்டு இருக்கு. போடுவதற்கு மறந்து விட்டேன், சாரி சார்!'' —கெஞ்சாத குறையாக அந்த போலீஸ்காரரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டான், அவ்வளவு பெரிய 'கிளப்'பின் மெம்பர் சந்தானம்.

''சரி சரி! லைட்டைப் போட்டுக்கிட்டுப் போங்க!''

'எங்கே போறது?' என்று கேட்காத குறையாக சைக்கிளைத் தள்ளிக் கொண்டே சென்றவனுக்கு, எதிரில் வந்து கொண்டிருந்த நண்பன் சுந்தரம் முகத்தில் அறையும் தூரத்தில் வந்து நின்றபொழுதுதான், அவன் சுந்தரம் என்று தெரிந்தது.

''என்னடா சந்தானம்! புது வீட்டுக்குப் போனாலும் போனாய், ஆளைப் பார்க்கவே முடியலியே? ஆமாம், சாயங்காலம் என்ன அவ்வளவு வேகம்? 'சந்தானம் சந்தானம்'ன்னு கத்தறேன். என்ன, ஏதாவது விசேஷமா..?''

''ஒண்ணும் இல்லை சுந்தர்..சும்மா..''

''அது சரி! அன்றைக்கு ஒரு இங்கிலீஷ் நாவல் கொடுத்தாய் இல்லையா? அதில் இரண்டு ரூபாய் இருந்தது! அதற்காகத் தான் சாயங்காலம் கூப்பிட்டேன். உன் காதில் விழவே இல்லை!'' என்று கூறி, இரண்டு ரூபாயை எடுத்து சந்தானத்திடம் கொடுத்தான்.

சந்தானத்தின் கண்கள் அகல விரிந்தன.

''இருக்கட்டும் சுந்தர் உன்னிடமே!'' என்றான். 'இன்றைய நிகழ்ச்சியை நான் என் வாழ்க்கைக்கு ஒரு பாடமாக எடுத்துக் கொள்ளப் போகிறேன்' என்று வாய்விட்டுச் சொல்ல வேண்டும் போல் இருந்தது. சொல்லவில்லை.


''அதோ, அம்மா வளையல் கடையி லேயே நின்னுகிட்டு இருக்காடா...!''
''நீங்க மீன்துறை ஸ்டாலைப் பார்த்துட் டீங்களா ?''
''நீங்க மின் து ஸ்டாலைப் பார்த் டீங்களா ?''
CHUNGU
SUREH B
PLASTIC
RAJ TOYS
மிலன் சாட் பண்டா
மிலன் சாட் பண்டா
''இது என்ன 'பேல்' பூரியா..? இல்லே 'ஹோல்' பூரியா...?''
காட


அறநிலையத் துறை
ஐந்து மணி
வேண்டிய 'குழந்தைகள்
விபத்து ஏதுமில்லாமல்
தாமதித்து வந்து
படுகிறது!''
வெளியே
கண்காட்சியே!
வாணி
யார் வந்து இதை எப்படி எடுத்து வாசிக்கறாங்கன்னு பார்க்கலாம். உட்காருங்க!''

கடலில் காளான் முளைத்தது எப்படி யென்பது புரிந்துவிட்டதா? ராகவன் உள்ளூற அழுதான்.

அந்த பேட்டிக் கட்டுரை!

விமலா அதைச் சுட்டிக் காட்டிக் கதறினாள்: ''ஐயோ, இதைப் பாருங்களேன்! ரமேஷ் நம் பிள்ளை இல்லை போல் இருக்குதுங்க. கடவுளே!''

பம்பாயிலிருந்து வெளி வருகிற அந்த ஆங்கில வார சஞ்சிகையில், ஐந்து வருட சிறைத் தண்டனைக்குப் பின் விடுதலையாகியிருந்த அரசாங்க மகப்பேறு மருத்துவமனை மாஜி நர்ஸ் ஒருத்தியின் பேட்டி, அவள் புகைப் படத்துடன் வெளியாகியிருந்தது.

ஓர் எட்டு வருட காலத்தில், பதினைந்துக்கு மேற்பட்ட குழந்தைகளை அவள் இடம் மாற்றியிருக்கிறாளாம்!

இயல்பாகவே பணக்கார வர்க்கத்தின் மீது குரோதம் கொண்டிருந்த அவள், தருந்த சந்தர்ப்பம் அமைந்ததும், பணக்காரத் தாயின் குழந்தையை ஏழைத் தாயின் பக்கத்திலும், ஏழையின் குழந்தையைப் பணக்காரியின் பக்கத்திலும் வைத்து விடுவாளாம். தற்போது பூனாவில் வசிக்கிற அவள், தன் செயலை வெகுவாய்ப் பாராட்டிக் கொண்டிருந்தாள். 'நான் செய்திருப்பது ஒருவகை விதி மாற்றம். சேரியில் வளர வேண்டிய சில குழந்தைகள், இன்று மாளிகையில் ஓடி விளையாடுகின்றன. பங்களாக்களில் வளர வேண்டிய குழந்தைகள் இப்போது பொய்யான திருட்டு அப்பன் பின்னாலோ, கூலி வேலை செய்கிற தாயின் பின்னாலோ சுற்றிக் கொண்டிருக்கின்றன. இந்தச் சாதனைக்காக ஐந்து வருட சிறைத் தண்டனை என்ன பிரமாதம்?'

விமலாவின் பீதியில் அர்த்தம் இருக்கிறது. அவளுக்குப் பிரசவம் ஆனது, அந்த நர்ஸ் குறிப்பிட்டிருக்கிற அதே மகப்பேறு மருத்துவமனையில்தான்; அந்த எட்டு வருடத்தில் ஒரு நாள்தான்.

பிரசவம் ஆன மூன்றாவது நாள் தூங்கி விழித்தபோது, தன் பக்கத்தில் வேறு ஒரு குழந்தை இருப்பதைக் கண்டு திடுக்கிட்டதாகவும், குழந்தையின் கழுத்தில் கிடந்த அடையாள எண் வில்லையைக் கொண்டு இந்த விபரீதத்தைக் கண்டுபிடித்ததாகவும், அதன் பிறகு தன் குழந்தை கொண்டு வரப்பட்டதாகவும் அன்று விமலா சொன்னதை ராகவன் நினைத்துப் பார்த்துக் கொண்டான். அந்தக் குழந்தைகூட உண்மையானது இல்லையா? அதனால்தான் புல்லாங்குழலிலிருந்து துந்துபியின் இரைச்சல் வெளிப்படுகிறதோ?

அவர்கள் ஒரே புதல்வன் சுரேஷுக்கு இப்போது பன்னிரண்டு வயது ஆகிறது. கான்வென்டில் படிக்கிறான். நல்ல இன்டலிஜெண்ட். ஆனால், எந்தப் பெற்றோரும் பெருமைப்பட முடியாத அந்தச் செயல்!

திடீர் திடீரென்று வீட்டில் எதை யாவது திருடுகிறான். ஆரம்பத்தில் தின்பண்டம் சில்லறைப் பணம் என்று இருந்தது, ரொக்கம் வெள்ளிப் பாத்திரம் என்று வளர்ந்து, இப்போது தாயின் சேலை வரை வந்திருக்கிறது!

விமலாவுக்கு அவன் பேரில் உயிர். பாக்கெட் மணிக்குக் குறைவிருக்காது.



அவன் விரும்பியதை யெல்லாம் வாங்கிக் கொடுப்பாள். அப்புறம் இந்த இழிந்த புத்தி ஏன்? ஆயினும் அவள், அவனை யாருக்கும் - குடும்பக் கண்ணியத்தைப் பெரிதாய் மதிக்கும் தன் கணவனுக்குக் கூடக் காட்டிக் கொடுக்கவில்லை. குறிப்பிட்ட வயது வரம்பில் சில சிறுவர்களுக்கு வரக்கூடிய இது ஒரு சாதாரணத் தினவுதான். போகப் போகச் சரியாகி விடும் என நம்பினாள். நிலைமை கட்டு மீறிப் போகவே ஒரு நாள், ''வீட்டில் அடிக்கடி ஏதாவது காணாமல் போகிறதுங்க. சுரேஷைச் சந்தேகப்படத் தோணுது'' என்று ஒரு மூன்றாந்தரத் தோரணையில் ராகவன் காதில் போட்டாள்.

அவன் நம்ப மறுத்தான். கடலில் காளான் பூக்கிறதாவது? குடும்பப் பாரம்பரியத்தில் அவனுக்கு அசாதாரண நம்பிக்கை. அவன் தந்தை பூதான இயக்கத்தில் பற்றுக் கொண்ட ஒரு காந்திய வாதி. தாத்தா வக்கீல். கொள்ளுத் தாத்தா ஒரு பிரபல சங்கீத வித்வான். விமலாவின் பாரம்பரியமும் பண்பாடு மிக்கதே. எனவே, ஒரு நேர்க்கோட்டின் நகல் நேர்க்கோடாய்த்தானே இருக்க முடியும்?

தன் விலை உயர்ந்த சேலை ஒன்று அன்று காணாமற் போனதும் விமலா அழுதே விட்டாள். பெற்ற அன்னையின் ஆடையையே களவாடிச் செல்வதைக் கண்ணியமான ஒரு தாய் எப்படி மற்ற காரியம் மாதிரி கருத முடியும்? அழுகையும் ஆத்திரமும் விம்மித் தெறிக்க, எல்லா நடப்பையும் தெளிவாக ராகவனிடம் சொல்லிவிட்டாள்.

கட்டி முடிக்கப்பட்ட புது வீட்டில் தீப்பிடித்துக் கொண்டாற்போன்ற





அதிர்ச்சி அவனுக்கு. குடும்ப கண்ணியம், சமூகப் பெருமை என்ற அம்சங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காகக் கொள்கை, கோட்பாடு என்று தூங்கி விடாது பொருளீட்டப் பழகிக் கொண்டிருந்த அந்த வர்த்தகன், வாலறுந்த தும்பி மாதிரி சோஃபாவில் சரிந்து சாய்ந்தான்.

''வாசல் கதவைச் சாத்தி வை விமலா!'' என்றான் பீதிக் குரலில்: ''சுரேஷின் நடவடிக்கை வெளிக் காதுக்கு எட்டி விடாமல் பார்த்துக் கொள்வதுதான் இப்போதைய நமது முதல் கடமை.''

மைந்தனை எப்போதும், எதற்காகவும் கண்டித்துப் பழக்கப்படாத அவன், அதற்கான ஒத்திகை பார்த்துக்கொண்டு சுரேஷை விசாரித்தான்.

''ப்ளீஸ்! என்னை மன்னிச்சிடுங்க டாடி. இனி அம்மாதிரி நடக்கமாட்டேன்'' என்று அவமானத்தால் முகம் கறுக்கப் பையன் கண் கலங்கியதும், அவன் கண்களும் கலங்கி விட்டன. தட்டிக் கொடுத்துப் பழகிய கையால் திடீரென்று குட்டுவது பெரிய கொடுமை என்று தோன்றியது. மைந்தனை அணைத்து அருகில் இருத்திக் கொண்டான். தங்கள் குடும்பக் கண்ணியத்தை எடுத்துச் சொன்னான். இழி குண வரிசையில் முதல் இடம் வகிப்பது திருட்டுத்தான் என்றும், திருடனை எந்தச் சமுதாயமும் எந்த மக்களும் விரும்பமாட்டார்கள் என்றும் உபதேசித்தான்.

ஆனால், சில நாட்களுக்கு மேல் அவன் நல்ல விதமாய் நடந்து கொள்ளவில்லை.

அப்புறம் என்ன செய்வது? கல்வி அறிவற்ற மூட ஜன்மம் மாதிரி நாளெல்லாம் சிறுவனைப் போட்டு உதைப்பதா? அல்லது ஒரே புதல்வனை இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளிக்குத்தான் அனுப்பிவிட முடியுமா?

நாளைக்கு வெளியிலும் அவன் இம்மாதிரி நடக்கத்துவங்கிவிட்டால் என்கிற கவலை அந்தப் பெற்றோரின் உறக்கத்தை வேட்டையாடிக் கொண்டிருந்தது. கலைஞர்களும் காந்தியவாதிகளும் தோன்றிய இந்தப் பரம்பரையில் இப்படியொரு குறை குணம் எப்படி ஜனிக்கலாம் என்கிற விசாரம் ராகவனை வாட்டி வருத்திற்று.

''அன்ஸாரி மாமாவுக்குத் தெரிவித்தால் ஏதாவது பரிகாரம் சொல்வாரே!'' என்றாள் விமலா.

''கூடாது!'' என்று உடனே மறுத்தான் ராகவன்: ''தேவரிஷியின் பர்ணசாலையில்

பால் வடியும் வதனம்


'பால் வடியும் வதனம்'
தரும் பவுடர் இது
பாத்துக்கிட்டு நிக்காதீங்க—
போனா வராது
பிளாட்பாரத்தில் கூவியவன்
குரலைக் கேட்டேன்
பாய்ந்து நானும் இரண்டு டப்பா
வாங்கி விட்டேன்

கோழி கூவக் கேட்டெழுந்து
குளித்து விட்டு தலையைச் சீவி
பால்வடியும் வதனம் தரும்
பவுடரை முகத்தில் தூவி
பார்ப்பவரின் மனம் கவர
பெருமையுடன் தெருவில் நின்றேன்
திடீரென்று குளுமை வர
திகைத்தேன்! மழை பெய்யக் கண்டேன்!
முகத்தில் பட்ட மழைத்தண்ணீர்
பவுடருடன் கலந்து வர
மேனியெல்லாம் பால் வழிய
மெய்சிலிர்த்து நின்று விட்டேன்
உண்மையிலே என் முகத்தில்
பால்தான் வழிகிறது
பிளாட்பாரத்தில் வாங்கியது
'பால் பவுடர்' என்று புரிகிறது!

—மெலட்டூர்

சாத்தான் பிறந்து விட்ட துர்ப்பாக்கியத்தை இன்னொருவர் உணர்வது எந்த வகையிலும் நல்லதல்ல. பையனை வளர்க்கத் தெரியாமல் கெடுத்து விட்டதாக நம்மைத்தான் குறை கூறுவார்.''

காலஞ்சென்ற தன் தந்தையின் நெருங்கிய நண்பரான பெரியவர் அன்ஸாரியிடம் அவன் பெருமதிப்பு வைத்திருந்தான். பெருங்குணமும் விசாலக்



''ஐயா, தமிழ் வளர்ச்சி இயக்குநர் அலுவலகம் இதுதானுங்களே?''

''யெஸ்! வாட் டு யூ வாண்ட் ப்ளீஸ்!''

—ப. சௌந்திரராஜன்

கல்வி அறிவும் பெற்றிருந்த அவரிடம் ஆசி பெருமல் பொதுவான குடும்பக் காரியம் எதையும் அவன் தொடங்குவதில்லே. ஆனுல், தன் தொழில் விவகாரம் குறித்து மட்டும் அவரிடம் ஒருபோதும் பேசமாட்டான்.

பதினேந்து வருடங்களுக்கு முன்பு, பெரிய அளவில் உணவுப் பொருள் வர்த்தகத்தை அவன் துவக்கியபோது அவர் கூறிய அறிவுரை அவன் நினேவில் இருக்கிறது: 'மக்கள் சேவையில் உன் தந்தை பரம்பரைச் செல்வத்தைக் கரைத்து விட்டாலும் நாணயம், நேர்மை என்கிற மதிப்பற்ற செல்வத்தை நிரம்பச் சேர்த்து வைத்திருக்கிருர். அவற்றை அஸ்திவாரமாய்க் கொண்டு உன் தொழில் மாளிகை வளர்வதையே நான் விரும்புகிறேன்.'

மிக விரைவில் லட்சாதிபதியாக விரும்புகிறவனுக்கு அந்தக் கொள்கை உடன்பாடாக முடியுமா? எனினும் அவர் மதிப்பை இழக்க விரும்பாததால் அது விஷயமாய் அவரிடம் பேசுவதில்லே. இப்போது சுரேஷ் பிரச்னேயை அவருக்குத் தெரிவிக்கத் தயங்குவதும் அப்படியொரு காரணம்தான். மதிப்பு வைத்திருக்கிறவர்களிடம் தனது அழுக்கைக் காட்டுவது நல்லதல்லவே?

அந்த பேட்டிக்கட்டுரை வெளியான பிறகு பிரச்னேயே திசை திரும்பிவிட்டது. திருடனல்ல; கொலேயே செய்கிற அளவுக்குத் தாழ்ந்து போனுலும் அவன் தங்கள் பிள்ளேதான் என்பது உறுதிப்பட வேண்டும். அதற்கு என்ன வழி? 'என் பிள்ளே என் பிள்ளே'யென்று பாசத்துடன் பல காலம் வளர்த்த பிறகு திடீரென்று அவன் யார் பிள்ளேயோவென்று தெரிய வருவதைவிட ஒரு பயங்கரம் என்ன இருக்க முடியும்? இதெல்லாம் சுரேஷுக்குத் தெரியாது.

விமலாவின் எண்ணத்தைப் புரிந்து கொள்ள விரும்பி ஒரு நாள் கேட்டான்: ''உண்மையில் சுரேஷ் நம் பிள்ளே அல்லவென்று தெரியவந்தால் அவனே இழக்கச் சம்மதிப்பாயா விமலா? ஒரு பேச்சுக்குக் கேட்கிறேன்.''

தலேதலேயென்று அடித்துக் கொண்டு 'ஓ'வென்று அழுதாள். அடுத்த சில நாட்களுக்கு அவள் யாருடனும் பேசவில்லே. இத்தனே தப்புக்கு இடையிலும் ஒரு வார்த்தையால்கூட மைந்தன் மனத்தைச் சுடாதவள், இப்போது சுரேஷைப் பார்க்கவே வெறுத்தாள்.

இப்படி அவன் அநாதையாக்கப்படுவதைக் காண ராகவனின் உள்ளம் அழுதது. என்னவானுலும் அவனுக்கு சுரேஷை இழக்க முடியாது. அந்த உறுதியை அல்லது சுரேஷ் தங்கள் பிள்ளேதான் என்ற நம்பிக்கையை விமலாவுக்கு ஏற்படுத்த வேண்டும்.

''சுரேஷ் நம் பிள்ளேதான் என்பதற்குரிய சாட்சியங்கள் அவன் அங்க அடையாளங்களில் இருக்கின்றன விமலா'' என்றுன் ஒரு நாள். ''அந்த எட்டு வருட காலத்தில் சில நூறு குழந்தைகளாவது அந்த மகப்பேறு மருத்துவமனேயில் பிறந்திருக்க வேண்டும். ஆனுல், பதினேந்து குழந்தைகள்தான் இடம் மாற்றப்பட்டிருக்கின்றன. அந்த விபத்துக்கு ஆளாகாத மற்ற குழந்தைகளில் ஒன்ருய் ஏன் நம் குழந்தை இருக்கக்கூடாது?'' எனத் தர்க்க ரீதியாய்க் கேட்டான்.

''இருக்க முடியாது. அவன் நடத்தை சொல்கிறதே!'' என விம்மினுள்.

''இப்பிரச்னேக்குத் தற்கால மருத்துவப் பரிசோதனேகள் உதவக்கூடும்.''

''வெறும் அனுமானங்களால் தீர்கிற பிரச்னேயில்லே இது'' என்றவள், 'ஐயோ! எந்தத் திருடனின் மகனே இங்கே வளர்கிருனே! என் பிள்ளே எந்தக் குடிசையில் இருக்கிருனே!' எனப் புலம்பத் துவங்கி விட்டாள்.

அவளேப் பைத்தியமாகாமல் காப்பாற்ற ஏதாவது செய்தாக வேண்டும் போல் இருந்தது.

''வாருங்கள், பூனுவுக்குப் போவோம். அந்த நர்ஸிடமே கேட்போம்'' என்று ஒரு நாள் அவள் சொன்னதை ஏற்றுக் கொண்டான். பூனுவில் அந்த ராட்சஸியைக் கண்டுபிடித்தார்கள். தங்கள் பரிதாப நிலேயைச் சொன்னுர்கள்.

வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள வந்தவாசியிலிருந்து செய்யாற்றுக்குப்போகும் வழியிலுள்ள ஒரு சிற்றூரின் பெயர் 'நரகலோகம்.' பஸ் கண்டக்டர், ''நரகலோகம் போகிறவர்களெல்லாம் இறங்குங்கள்!'' என்று உரக்க அறிவிக்கையில் பஸ்ஸில் சிரிப்பொலி எழுகிறது.

—கோ. செல்வராசன், சென்னை-81.



பேட்டியில் தான் சொல்லியிருப்பவை அனைத்தும் உண்மையே என்றாள் அவள், பெருமையுடன். ஆனால், அவர்கள் விஷயத்தை சரியாய்ச் சொல்ல முடியாது என்றாள். ''எதற்கும் டயரியைப் பார்க்கிறேன்.''

அந்த டயரியில் மாற்றப்பட்ட குழந்தைகளின் குறிப்பான அடையாளங்கள், பெற்றோரின் பெயர்கள், யார் குழந்தை யாரிடம் மாற்றப்பட்டது என்ற சகல விவரங்களும் இருந்தன. ஆனால் அதில், அவர்கள் பெயர் இடம் பெற்றிருக்கவில்லை!

அவர்களுக்கு அப்பாடா என்று இருந்தது. ''உடனே ஊர் போக ஏற்பாடு பண்ணுங்களேன். என் மகன் சுரேஷைக் கட்டிக் கொண்டு அழ வேண்டும் போலிருக்கிறது!'' என்று ஆனந்தக் கண்ணீர் உகுத்தாள்.

புதிய வயிற்று வலி நின்றதும் பழைய தலைவலி தலை தூக்கிற்று. சுரேஷ் திருந்தவில்லையானால் தங்களுக்கு என்றுமே நிம்மதி இருக்க முடியாது என்பதை உணர்ந்தார்கள். இவ்விஷயத்தை வெளியே எடுத்துச் சொல்வதைவிட அன்ஸாரி மாமாவைக் கலந்து ஆலோசிப்பது நல்லது என தீர்மானித்தார்கள். அன்று எதிர்பாராமல் வீட்டுக்கு வந்திருந்த அவரிடம் எல்லா நடப்பையும் விவரமாய்ச் சொன்னான் ராகவன்.

சிறிதும் ஆச்சரியப்படாது கேட்டுக் கொண்டிருந்த அன்ஸாரி, திடீரென்று உண்மையைப் புரிந்து கொண்டு விட்ட மாதிரி வருத்தப் புன்னகையுடன் மெள்ள தலையாட்டினார். ''எல்லாக் காரியமும் காரணத்தைப் பொறுத்ததுதான்!'' என்றார், தமது வெண்தாடியைத் தடவி விட்டபடி.

''ஒரு சின்னக் கதை சொல்கிறேன். கேள், ராகவா'' என்றவர், ''பாரசீக நாட்டில் அபூசாலிஹ் ஜங்தோஸ்து என்று ஒரு மகான் இருந்தார். ஒரு நாள் நதி ஓரமாய்க் காட்டில் நடந்து கொண்டிருந்த அவர், புத்தம் புது ஆப்பிள் ஒன்று நதிக் கரைப் பக்கம் மிதந்து வரக் கண்டார். அதைச் சாப்பிட வேண்டும் போல் இருந்தது. எதிர்க் கரையில் இருந்த ஆப்பிள் தோட்டத்திலிருந்துஅது தவறித் தண்ணீரில் விழுந்திருக்க வேண்டும் என நினைத்தார். அந்தப் பக்கம் வேறு பழத் தோட்டம் கிடையாது. தண்ணீரில் இறங்கிப் பழத்தை எடுத்துக் கடிக்கையில், தோட்டக்காரனிடம் அனுமதி பெறாமல் சாப்பிடுகிறோமே என்ற ஞானம் வந்தது. ஆயினும் சாப்பிட்டு விட்டார். கொஞ்ச தூரம் சென்றதும் இளம் வனவாசிப் பெண் ஒருத்தி எதிர்ப்பட்டாள். அவளைப் பார்த்ததும் தவச் சுவரைப் பிளந்து கொண்டு அவருள் காமத்தீ குபீரென்று கனன்றெழுந்தது. திடுக்கிட்டுப் போனார். தம் தவப்பயனே நாசமாகிவிட்டது போன்று வருந்தினார். கடையனுக்கு உண்டாகக்கூடிய இவ்வுணர்ச்சி தம்மைத் தாக்கக் காரணம் என்ன என யோசித்தார். சொந்தக்காரனிடம் அனுமதி பெறாமல் பழத்தைச் சாப்பிட்டதன் விளைவுதான் இது என்பது புரிய வந்தது. கவனி ராகவா. உரியவரிடம் அனுமதி பெறாமல் சாப்பிடப்பட்ட ஒரு பழம், ஒரு யோகியின் தவப்பயனையே அந்தக் கணத்தில் கெடுத்து விட்டதென்றால்..'' என்று அவர் நிறுத்தியதும், அவன் திடுக்கிட்டு அவரைப் பார்த்தான்.

'ராகவா, உன் ரகசிய நடப்பு எதுவும் எனக்குத் தெரியாதென்று நினைத்துக் கொள்ளாதே. கோடானு கோடி மக்களை வஞ்சிக்கிறமாதிரி பொய்க் கணக்கு எழுதி அரசாங்கத்தை ஏமாற்றினாய். உணவுப் பொருட்களைப் பதுக்கி வைத்துக் கொள்ளை லாபம் சம்பாதித்தாய். இம்மாதிரி தேடிய பாவப் பொருளை உண்டு கொழுத்த அப்பனின் குணம் கெட்ட ரத்தத்திலிருந்து நன்னடத்தையுள்ள மைந்தன் எப்படி உருவாக முடியும்? நல்ல குடும்பத்தில் தீய குழந்தை பிறப்பதன் ரகசியம் இதுதான்' என்று அவர் கூறவில்லை.

இப்படிச் சொன்னார்: ''உண்மையான குற்றவாளி, ஒவ்வொரு குற்றவாளியின் தந்தையே.''



நீர்ப்புந்துங்கள்

-சுரமாலி-

அலுவலகத்திற்குப் புறப்படுவதற்கு கால் மணி நேரம்தான் இருந்தது. பிரம்மசாரிகளுக்கே உரித்தான வேகத்துடன் பற்களைத் துலக்கிக் கொண்டிருந்தேன் வாசலில் நின்று கொண்டு. அந்த அறையில் என்னைத் தவிர பாலு இருந்தான். அவனும் என்னைப் போல் ஸ்டெனோவாகத்தான் வேலை பார்க்கிறான். அவனும் வாசலில் நின்று கொண்டு தலையைத் துவட்டிக் கொண்டிருந்தான்.

நாங்கள் அந்த அறையில் குடிபுகுவதற்குத்தான் எவ்வளவு சிரமப்பட்டோம்! கடைசியாக, எங்கள் இருவர் முகத்தையும் ஏற இறங்கப் பார்த்துவிட்டு நீண்ட நேரம் யோசித்த பின்னர்தான் வீட்டுக்காரர் வாடகைக்குவிடச் சம்மதித்தார்.

பற்களைத் தேய்த்துக் கொண்டிருக்கும் போதே பாலு ராத்திரி சொன்னது ஞாபகத்துக்கு வரது. ''பாலு, நீ சொன்னியே, மாடிக்கு ஏதோ 'கலர்' வந்திருக்கின்னு. எங்கேடா கீழேயே வரக் காணோம்?'' என்று கேட்டேன்.

பாலு ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்டே, ''போடா, நம்ம இரண்டு பேரையும் பார்த்து அவளுக்கு என்ன கிடைக்கப் போறது? ஏய், அவள் பேச்சு டிரஸ்ஸெல்லாம் பார்த்தா நாகர்கோவில் மாதிரி தெரியுதடா.''— அடுக்கிக் கொண்டே போனான்.

அப்போது மாடிப்படியிலே சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன். அந்த மாடி வீட்டு கோமதி மாமியோட, அவளும் இறங்கி வந்து கொண்டிருந்தாள். பாலு அவளைப் பற்றிச் சொன்னது குறைச்சல்தான் என நினைத்தேன். அவளுடைய கண்களுக்கு மட்டுமே நூறு மார்க் கொடுக்கலாம் போல இருந்தது.

எனக்குப் பழக்கமே அதுதான். சாயங்காலம் வாக்கிங் போறச்சே, போற வர்ற கலர்களுக்கெல்லாம் பாலுகிட்டே மார்க் போட்டுச் சொல்வேன். அவன் சில சமயம் ப்ளஸ் போடுவான்; சில சமயம் மைனஸ் பண்ணுவான்.

நான் இப்படி நினைத்துக் கொண்டிருக்கும்போதே, மாமி பாலுவோட பேசிட்டு இருக்கா. நான் அந்தப் பெண்ணையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

ஏதோ பேசிவிட்டு, அந்த மாமி அந்தப் பொண்ணுடன் நகர்ரு. அந்த டுவிங்க்கிள் ஸ்டார்—அதுதான் நான் அவளுக்கு வெச்ச நேம், என்னைக் கொஞ்சம் திரும்பிப் பார்த்துட்டுப் போனு.

எனக்கு என்னவோ போல இருந்தது. குளிப்பதற்குத் தொட்டியை நிரப்பிக் கொண்டிருந்தேன்.

பாலு, ''நான் சொன்னது சென்ட் பர்ஸெண்ட் கரெக்டுடா. அவளோட பேரு நிர்மலாவாம், நாகர்கோவிலாம். நம்ம ஊர் கான்வென்ட்டிலே டீச்சர் வேலைக்கு ட்ரை பண்ண வந்திருக்காளாம்'' என்று சொல்லிக் கொண்டிருந்தான்.

நான் 'சடசட'வென்று அந்தக் குளிர்ந்த நீரைத் தலையில் ஊற்றிக் கொண்டிருந்தேன், எதையோ நினைத்துக் கொண்டு.

அன்றைக்கு சாயங்காலம் பாலுவும் நானும் செஸ் போர்டை வச்சுண்டு தொண தொணத்துக் கொண்டு இருந்தோம்.

மாடிப்படியிலே யாரோ வர்ற சப்தம் கேட்டு நாங்க திரும்பினோம். மாமி நின்னிண்டிருந்தா. ''டேய் ரவி, படிக்க ஏதாச்சும் புத்தகம் இருக்கா?'' சடசடன்னு, கிடக்கிற புத்தகங்களை எடுத்து கட்டா மாமிட்ட கொடுத்தேன்.

மனசே சரியில்லே. அந்த டுவிங்க்கிள் ஸ்டார் நினைப்பாவே இருந்துச்சு. 'நம்பளையாவது அவளாவது...'—சிந்தனைக்கு அணை போட்டுக் கொண்டேன். ஒரு வாரம் போய்விட்டது அவள் வந்து.

பாலுவை வம்புக்கு இழுத்தேன்: ''டேய், எப்படிடா டுவிங்க்கிள்? உன்னைத்தாண்டா அவள் நோட் பண்றா.''

அவன் 'வெலவெல'த்துப் போய்விட்டான்: ''டேய், உன் சத்தத்தைக் குறை. நீ நினைக்கிற மாதிரியில்லே. நல்லா கவனிச்சிட்டேன். பொண்ணு நல்ல மாதிரியாத் தெரியறது. திரும்பிப் பார்க்கிற வேலை எல்லாம் இவட்ட இல்லடா.''

எனக்கும் அப்பத்தான் மூச்சே வர்றது. எப்படியோ அவள் இந்தப் பாலுகிட்டே வளையல்லே. பாவம், பாலு! என்னைவிட நல்லவன். அவன் சிநேகம் கிடைக்காட்டா, நான் நிச்சயம் கெட்டுப் போயிருப்பேன்.

இரண்டு பேரு குடும்பமும் பெரிசு. அவனுக்கும் ரெண்டோ மூணோ கல்யாண வயசிலே தங்கச்சிங்க இருக்குது. என்னைப் பொறுத்தவரை நான்தான் கிட்டத்தட்ட எங்க வீட்டுச் சொத்து. மூத்த பையன்.

கண்டிப்பா வளர்த்ததனாலே கொஞ்சம் நல்லாப் படிச்சு பி.ஏ., ஸெகண்ட் கிளாசிலே பாஸ் பண்ணிண்டு இந்த அரசாங்க வேலையிலே ஒட்டிண்டு இருக்கேன். என் மூணு தங்கச்சிக்கும் கல்யாணம் நடத்தினதுக்கு அப்புறம்தான், என் கல்யாணத்தைப் பத்தி நான் நினைக்கலாம். அதுதான் நியாயமும்கூட.

அன்னிக்கு சனிக்கிழமை. அலுப்புடன் ஆபீஸிலிருந்து வந்துவிட்டு, அந்த நாற்காலியிலே உட்கார்ந்து, 'லெட்டர்ஸ் டு தி எடிட்டர்' காலத்திலே ஆழ்ந்திருந்தேன்.

ஏதோ ஒரு பொண்ணு குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன். என்கூட அந்த நிர்மலா தான் நின்னுகிட்டு இருந்தா. கையிலே ஏதோ வைச்சிருந்தா. அவ பார்த்த பார்வையும் ஒரு மாதிரியா இருந்தது. எனக்கு ஒண்ணுமே ஓடலே.

பாலு சொன்னது ஞாபகத்துக்கு வந்தது. 'அவளைப் பார்த்தா ரொம்ப நல்ல குடும்பப் பெண்ணு....' எவ்வளவு உண்மை.

''இந்த போஸ்டல் ஆர்டர் நீங்க கொடுத்த அந்த இல்லஸ்ட்ரேட்டட் வீக்லியில் இருந்தது''ன்னு சொல்லி அவ கொடுத்தா. நான் வாங்கி வைச்சேன். கையைத் தொட்டது மாதிரியும் இருந்தது; தொடாத மாதிரியும் இருந்தது. போகும்போது ஒரு மாதிரியா சிரிச்சா. ஒரு வேளை லவ்வோ?

கையும் காலும் ஓடலே. அடுத்த நாள் அந்த நிர்மலா, (அந்த நிர்மலமான முகத்துக்குப் பொருத்தமான பெயர் தான்) உண்மையிலேயே என்னைப் பார்த்துச் சிரித்தாள். நானும் பதிலுக்கு அசடு வழிந்து வெச்சேன். இரண்டு மூன்று நாட்களாக ஆபீஸிலும் சரி, வீட்டிலும் சரி, ஒரே குஷாலாக இருந்தேன். நிர்மலாவைப்பத்தி நினைக்கவே இனிப்பாக இருந்தது.



அந்த நினைவின் அலைகளுக்கு உருக் கொடுக்கவோ என்னவோ அந்த வெள்ளிக்கிழமை, நிர்மலா அந்தக் கடிதத்தைக் கொடுத்துவிட்டு ஒருவித நாணத்துடன் விருட்டென்று மறைந்துவிட்டாள். அந்தக் கடிதத்தைப் பிரிக்கு முன்னரே உடம்பெல்லாம் ஒரே உஷ்ணம்.

பாலு திடீரென்று வந்துவிடக் கூடாதே. மிகவும் ஜாக்கிரதையாகப் பிரித்தேன். அது ஓர் ஆங்கிலக் கவிதை. காதல்தான் அதன் கரு. புரிந்தும் புரியாத நிலை.

ஓ! காதலிக்க ஆரம்பித்தும் தைரியமில்லாமல், நான் இருக்கும் நிலையைப் பார்த்துத்தான் காதலின் இலக்கணத்தை அந்தக் கவிதையில் தந்திருக்கிறாளோ? உண்மைதான். ஆணாகிய நானல்லவோ ஆரம்பித்திருக்க வேண்டும்.



வசதியாக உட்கார்ந்து கொண்டு, இருக்கிற ஆசை வார்த்தைகளையெல்லாம் அள்ளித் தெளித்து, அவள் உள்ளக் கிளர்ச்சியைத் தூண்டும் விதத்தில் எழுத ஆரம்பித்தேன்.

அவளிடம் நான் கொண்ட மயக்கம் அந்த என் கடிதத்தில் முழுமையாக அரங்கேறி இருந்தது. பத்திரமாக அவளிடத்தில் ஒப்படைத்து விட்டேன்.

அந்தக் கடிதம் எங்கள் காதலுக்கு ஓர் இனிய பாலமாக அமைந்தது. நிர்மலா என்னை அப்படியே தன்னுள் ஐக்கியப்படுத்திக்கொண்டு விட்டாள்.

அவள் எழுதிய பதில்கள் நான் தினந்தோறும் படிக்கும் தேவாரமாக அமைந்தது.

அவள் எழுதிய கடிதங்கள் வரிசைக் கிரமமாக என் சூட்கேஸை அடைக்க ஆரம்பித்தன. ஒவ்வொன்றும் அவள் வாழ்வின் இலட்சியம், என் மேலுள்ள அன்பு, எங்கள் திருமணம் ஆகியவற்றைக் கதை கதையாய் சொல்லியது.

நான் நிர்மலாவுடன் நீண்ட நேரம் தனியாகப் பேச ஏற்படுத்திக் கொண்ட முயற்சிகள் யாவும் தோல்வியில் முடிவடைந்தன. அதனால் அவள் உதடுகளைச் சுவை பார்த்துவிட வேண்டும் என்ற என் திருட்டு ஆசையும் தோல்வி கண்டது. மாமி வருவாள் அல்லது யாராவது வந்து அறுத்து விடுவார்கள்.

கடிதங்கள் மட்டுமே எங்களுக்குள் இருந்த பிணைப்பை முதியதாக்கிக் கொண்டிருந்தன.

அவள் என்னை விட்டுப் பிரியும் அந்த நாளும் வந்தது. கான்வென்ட்டில் வேலையில் சேருவதற்கான முயற்சிகள் வெற்றியைத் தராததனால், நிர்மலா தன் ஊருக்குப் புறப்பட ஆயத்தமாகி விட்டாள்.

ஒரு பாட்டை முணுமுணுத்துக் கொண்டு கண்ணாடியின் முன் நின்றிருந்தேன். கண்ணாடியில் நிம்மியின் கலங்கலான முகம் தெரிந்தது. திரும்பி அவளைப் பார்த்தேன்.

அவள் எனக்கு அந்தத் தங்க நிறக் கைக்குட்டையைக் கொடுத்தாள். பிரித்துப் பார்த்துவிட்டு நிமிர்ந்தேன்.

''அடாடா! ஸ்வெட்டருக்கு கழுத்து வைக்க மறந்துட்டேனு...? ஒரு நிமிஷம் அப்படியே இருங்க.. வட்டமா மேலே கத்திரிச்சு விட்டுடறேன்..!''



கண்ணீர் திரண்டு அவள் அழகிய விழிகளைத் திரை போட்டிருந்தது. ''நீங்க உங்க வீட்லே பர்மிஷன் வாங்கிட்டு, என்னைப் பெண் பார்க்க வாங்க. உங்களை எதிர்பார்த்துக்கிட்டு இருப்பேன்.. சொல்றேன்னு தப்பா எடுத்துக்காதீங்க, நீங்க கிறிஸ்டியனு மாறினுத்தான் சம்மதிப்பாங்க.''

என் கண்களும் கலங்கிவிட்டன. அவளைத் தேற்றும் வகையில், ''நிம்மி, நிச்சயம் இந்த கிறிஸ்மஸ் உங்க வீட்டிலே தான்'' என்றேன். அவள் சென்று விட்டாள்.

என் கடிதங்களில் இனிய வார்த்தைகளால் அவள் நம்பிக்கைக்குப் போட்டிருந்த உரம் தான் 'நான் நிச்சயம் அவளைத் தேடி வருவேன்' என்ற அவள் நினைவுகளுக்குக் காரணமாய் அமைந்திருக்க வேண்டும். அவள் தந்த கைக்குட்டையால், நனைந்திருந்த என் கண்களைத் துடைத்துக் கொண்டு இந்த உலகத்திற்கு வந்தேன்.

கலங்கிய என் கண்கள் நிர்மலமானதும், என் குடும்பத்தார் கண்முன்னே தோன்ற ஆரம்பித்தார்கள். என் சம்பளத்தையே நம்பியிருக்கும் அந்த உயிர்கள். என் தங்கைகள், தங்கள் கழுத்து நிறைவதற்காக என் கைகளையே உற்றுப் பார்ப்பது போலிருந்தது.

நானுவது அப்பாவிடம் போய், ''நான் கிறிஸ்டியன் ஆகணும், அந்த நிர்மலாவை மேரேஜ் பண்ணிக்கணும்''னு சொல்றதாவது? அப்படிக் கற்பனை செய்து பார்த்தாலே பயமாயிருக்கு.

குடும்பத்துக்கு நல்ல மூத்த பையன் என்கிற பெயரை இந்த நிர்மலாவுக்காக என்னுல் தியாகம் பண்ண முடியாது. நான் காதலை மதிக்கிறேன். ஆனு வீட்லே என் தங்கச்சிகள் வாழ்க்கையை மிதிக்கத் தயாராயில்லை.

சட்டென்று என் கற்பனைகளை நிறுத்திக் கொண்டேன். சே!

நிர்மலா என்னை விட்டுப் போன அந்தச் சில மணி நேரத்துக்குள், என் மனத்திலிருந்த அந்தக் காதல் கொஞ்சம் கொஞ்சமாக வந்த வழி தெரியாமல் அஸ்தமனம் ஆவது தெரிந்தது.

மாதங்கள் நடை போடுகின்றன. மாதா மாதம் என் பணம் குடும்பத்தாரைக் கண்டு ஒரு வாழ்த்தை எனக்குப் பெற்றுத் தருகிறது. நல்ல நிறைவு. இந்த நிறைவுக்கு வேண்டி நான் காதலை இழக்கத் தயாராகி விட்டேன் — ஒரு கோழையாய், வீட்டுக்கு அடங்கின பிள்ளையாய்.

எனக்கு ஒரு லட்சுமியையாவது, சரஸ்வதியையாவது வீட்டில் தேடித் தருவார்கள். எனக்கு இந்த நிர்மலா வேண்டாம். இல்லை, என்னுல் அவளை அடைய முடியாது.

அந்த கிறிஸ்மஸூம் வந்தது. நிச்சயம் அவள் என் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருப்பாள்.


'உன்னை என்றும் மறவாத அன்புச் சகோதரன்' என்றெழுதி ஒரு நல்ல கிறிஸ்மஸ் வாழ்த்தை என் நிர்மலாவுக்கு அனுப்பி வைத்தேன்.



அனுபவம் என்பது ஓர் அருமையான சீப்பு. ஆனுல், முடி உதிர்ந்து முழுவழுக்கை விழுந்த பின் தான் அது கிடைக்கிறது.

—ரா. வீ.

வழியில் ஒரு துணை



வை.சுப்ரமண்யன்

மணி ஐந்துதான் ஆகியிருந்தது. அப்போதே பகல் தேய்ந்து, இருள் பரவி, காரைக் கவ்விக் கொண்ட மாதிரி இருந்தது. நசநசப்பான ஒரு நச்சுத் தூறல்...கதவுக் கண்ணாடிகளை அவன் மேலே இழுத்து விட்டான். குளிருக்காக வும், காட்டுப் பிரதேசம் நெருங்கி வரு கிறதே என்ற எச்சரிக்கைக்காகவும்தான்.

ஒரு கிலோ மீட்டர் தாண்டியிருப் பான். திடீரென்று இடதுபுறம் சாலையின் இறக்கத்தில், சற்றுத் தொலைவில் சரசர வென்று சப்தம் கேட்டது. கண்ணாடியை இரண்டு இன்ச் இறக்கிவிட்டுப் பார்த் தான். மறு விநாடி அவன் உடம்பு சில்லிட்டது. உடனே ஹெட் லைட்ஸை ஆன் செய்துவிட்டு வேகத்தை அதிக மாக்கினான். ஒரே மூச்சில் இரண்டு கிலோ மீட்டர் தாண்டிய பிறகுதான் அவனால் சரியாக மூச்சு விட முடிந்தது.

இவ்வளவு பெரிய—திமிர் வடிவாய் நின்ற யானையை இப்போதுதான் அவன் பார்க்கிறான். காரின் சப்தம் கேட்ட நொடியில் 'யாரங்கே?' என்று கேட்கிற பாவனையில் அது திரும்பிப் பார்த்ததும் அவன் உணர்வுகள் ஒடுங்கிவிட்டன.

'பண்டிபூர் எல்லை வந்துவிட்டால் கவலை இல்லை!'—இப்படி நினைக்கும் போதே அவன் கண்கள் கூர்ந்தன. சாலை யில் தடங்கலாக ஏதோ கண்ணுக்குத் தென்பட்டது. சாலை ஓரமாக ஒரு கார் நின்றிருந்தது. காருக்குப் பக்கத்தில் நின்றபடி யாரோ கைக்குட்டையை அசைத்து அவன் காரை நிறுத்த முயன்றது புரிந்தது.

அந்த காரைக் கடக்கும்போது பக்கத் [illegible] கொண்டிருந்த [illegible] தெரிந்தது. பரிதாபம் வடிக்கும் கண்க ளுடன் ஒரு பெண்.

அவன் காரை நிறுத்திவிட்டுவிரைவாக இறங்கி வந்தான். அவள் பதட்டத்துடன் அவனிடம் சொன்னாள்: ''ஸார், மை டிரைவர் இஸ் நாட் டூயிங் வெல். ப்ளீஸ் ஹெல்ப் மீ!''

அவனுக்கும் சிறிது அதிர்ச்சி ஏற் பட்டது. ஏற்கெனவே படபடக்கும் உள்ளம். ''ஓ எஸ்! கண்டிப்பாக என்னால் முடிந்ததைச் செய்கிறேன். டிரைவருக்கு என்ன உடம்பு?'' என்றான்.

''என்னவோ தெரியவில்லை ஸார். மைசூரிலிருந்து வந்து கொண்டிருக் கிறோம். திடீரென்று அரை மணி நேரத் துக்கு முன்னால் 'மயக்கம் வருகிற மாதிரி இருக்கு. ஓரத்திலே வண்டியை நிறுத்திட றேன்' என்று இங்கே ஸ்டாப் பண்ணி விட்டான். பயங்கரமான நிலை ஸார்! இது டேஞ்சரஸ் ஏரியா. எந்த நிமிஷத்திலே எந்த மிருகம் வந்து தாக்குமோ என்று துடித்துக் கொண்டிருக்கிறேன்.''

''சரி, நாம் ஒரு நிமிஷம்கூட வேஸ்ட் பண்ணக்கூடாது. இப்போது தான் ஒரு மதயானையைப் பார்த்துவிட்டு என் உடம்பு இன்னும் ஆடிக் கொண் டிருக்கிறது...நீங்கள் என் காரில் ஏறிக் கொள்ளுங்கள்...'' என்று அவன் சொல்லி முடிக்கவில்லை; அவள், 'நன்றி' சொல்லியபடி காரில் ஏறிக் கொண் டாள்.

''வாட் அபௌட் த டிரைவர்?'' என்று அவன் அவளிடம் மெல்லிய குர [illegible] ''[illegible] வாமேல் உங்க ளுக்கு எதுவும் சந்தேகம் கிடையாதே!''

[illegible]



இந்த நோட்டைப் பற்றி
ஒரு சுவையான செய்தி
பக்கம்....38

இந்த மாதிரி அவனுக்கு ஏற்பட்டதில்லை. அவனை இங்கே தனியாக விட முடியாது. அவனையும் அழைத்துப் போய்விட வேண்டும். ப்ளீஸ்!'' என்று அவள் கெஞ்சினாள்.

அவன் டிரைவரை மெல்ல இறக்கித் தூக்க முனைந்தான். அவளும் இறங்கி வந்து உதவ முயன்றாள்.

டிரைவர் தானாகவே காரின் பின் ஸீட்டில் ஏறிக்கொண்டான்.

கார் கிளம்பியது.

சில விநாடிகளுக்குப் பின் அவள் அமைதியாகப் பேசினாள்: ''நீங்கள் இப்போது வராவிட்டால் என் கதி என்ன ஆகியிருக்குமோ?... நான் ஊட்டிக்குப் போக வேண்டும். இந்த நிலைமையில் மைசூருக்கே திரும்பி விடலாம். இரண்டு இடங்களுக்கும் பஸ் கிடைக்கும்.. ஆனால் டிரைவரை இப்படி விட்டுவிட்டுப் போக என்னால் முடியாது. இவனை ஒரு டாக்டரிடம் சீக்கிரம் காண்பித்தால் தேவலை ஸார்!''

''பண்டிபூர் போனவுடன் டாக்டரிடம் காண்பிக்கலாம். இன்னும் கொஞ்ச தூரம்தான். நான் அங்கேதான் ஸ்டே பண்ணப் போகிறேன்'' என்றான் அவன்.

சில நிமிடங்களில் அவர்கள் பண்டிபூரை அடைந்தனர். அவன் ஃபாரெஸ்ட் டிபார்ட்மெண்ட் ஆபீஸ் வாசலில் காரை நிறுத்தி, உள்ளே சென்று கெஸ்ட் ஹவுஸில் தங்குவதற்கு அனுமதி வாங்கி வந்தான்.

கெஸ்ட் ஹவுஸில் இரண்டு தனிப் பகுதிகள். ஒன்றில் வாட்ச்மேன் மேற்பார்வையில் டிரைவரை விட்டுவிட்டு மற்ற பகுதியில் அவளைத் தங்கியிருக்கச் சொன்னான் அவன். உள்ளே கூட நுழையாமல், நேரே டாக்டரை அழைத்து வரக் காரைத் திருப்பிக் கொண்டு சென்றான்.

டாக்டர் வந்து பார்த்து டிரைவருக்கு ஊசி போட்டார். 'ஒருமணி நேரத்தில் அவன் நார்மலாக இருப்பான்' என்று சொல்லி விட்டுப் போய்விட்டார்.

டிரைவர் அப்போதே நார்மலுக்கு வந்துவிட்டாற்போன்றிருந்தது. ''வண்டி 'நடுவழியிலே அம்போ'ன்னு கிடக்குதே! நான் நல்லா யிட்டேனம்மா... ஐயாகூட அவர் வண்டியிலே போய் நம்ம வண்டியை எடுத்து வந்துடறேன். நாம இப்பவே ஊட்டிக்குப் புறப்படலாம்'' என்றான்.

அவள் ஒப்புக்கொள்ளவில்லை. டிரைவருக்குச் சமாதானம் சொல்லி அவனை ஓய்வு எடுத்துக் கொள்ளச் சொன்னாள். காலையில் போய்க் கொள்ளலாம் என்றாள்.

மணி ஏழு இருக்கலாம். சில்லென்ற காற்று விடுதியைச் சூழ்ந்தது. மிருகங்களின் நடமாட்டம் கண்டு பறவைகளும் குரங்குகளும் ஓர் அலறல் சப்தத்துடன் நிலைகுலைவது தெரிந்தது.

அவள் பார்வை மருட்சி கொண்டது. விடுதிக்குள் நெடுகிலும் மருண்டு மருண்டு பார்த்துக் கொண்டிருந்தாள். என்ன செய்வதென்று புரியாத நிலையில் பிரமித்து ஓர் ஓரமாய் நின்றிருந்தாள்.

திடீரென்று அவள் குரல் ஒலித்தது: ''மிஸ்டர் கிருத்திவாஸ்! எனக்கு இன்னொரு உதவி செய்ய முடியுமா உங்களால்?''

''என்ன இப்படி ஒவ்வொன்றுக்கும் கெஞ்சுகிறீர்கள்! இந்த மாதிரி இக்கட்டில் உதவுவதுதானே மனிதத்துவம்! சொல்லுங்கள். என்ன செய்ய வேண்டும்...? உங்களுக்கு என் பெயர் எப்படித் தெரிந்தது?'' என்றான் அவன்.

''கார் கீ செயினில் உள்ள பிளாஸ்டிக் வில்லையில் பொறித்திருக்கிறதே! உங்கள் பெயர்தானே அது?''

''எஸ்... எஸ்...! நல்ல ஆப்ஸர்வேஷன் உங்களுக்கு!''

''ஊட்டியில் என் அத்தை கவலைப் படுவாள். எப்படியாவது ட்ரங்க்கால் பண்ணியோ, டெலிகிராம் கொடுத்தோ தகவல் சொல்ல வேண்டும்...''

''என்ன தகவல்?''

'இரவு எதிர்பாராமல் பண்டி பூரில் தங்கும்படி நேர்ந்துவிட்டது. காலையில் புறப்பட்டு வருகிறேன். புரோகிராமை நாளை மாலை வைத்துக் கொள்ளும்படி அவர்களிடம் சொல்லுங்கள்—**ஜம்னு**.'

கிருத்திவாஸ் மெஸேஜ் கொடுக்கப் போய்விட்டான்.

அரை மணி நேரத்தில் அவன் திரும்பி வந்தபோது அவன் காருக்குப் பின்னல் ஜம்னுவின் காரும் வந்தது.

விடுதி வாசலில் நின்றிருந்த ஜம்னு கேட்டாள்: ''எப்படி என் காரைக் கொண்டு வந்தீர்கள்? ஆச்சரியமாயிருக் கிறதே!''

''ஒரு காரை இரவு பூராவும் கண் காணமல் விட்டு வைத்துவிட முடியுமா? ஃபாரெஸ்ட் டிபார்ட்மெண்ட் ஆபீஸில் சொல்லி ஏற்பாடு செய்து ஒரு டிரைவரை அழைத்துப் போய் எடுத்து வந்து விட்டேன்.... ஊட்டிக்கு டெலிகிராமும் கொடுத்தாகி விட்டது.''

ஜம்னுவின் முகத்தில் மகிழ்ச்சி இழையோடியது.

கிருத்திவாஸ் குளித்துவிட்டு உடை மாற்றிக் கொண்டு விடுதி சமையற்கார ரிடம் சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய் தான்.

வாசலில் ஒரு நாற்காலியைப் போட்டுக்கொண்டு உட்கார்ந் தான் கிருத்திவாஸ். ஜம்னு வெளி ஹாலில் ஓர் ஓரமாக நின்று காட்டுப் பகுதியை மேம்போக்காகப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளும் உடை மாற் றிக் கொண்டு தலை வாரி முடிந்திருந் தாள். மான் தோல் நிறத்தில் புடவை. அவள் கண்களை மட்டும் கிருத்திவாஸ் நன்ருக நினைவில் வைத்திருந்தான். இன்னும் ஒருமுறை அந்தக் கண்களைப் பார்க்க வேண்டும் என்ற ஒரு ரகசிய விழைவோடு இருந்தான். அவள் தோற்றமும்



எது அதிகம்?

அமைச்சர்கள் ஒரு நாள் சம்பளத்தைப் புயல் நிவாரணத்திற்குத் தருவதைவிட தங்கள் ஒரு நாள் பிரயாணப் படியைத் (T.A.) தந்தால் அதிகமாக இருக்கும்.

—டெக்கான் ஹெரால்ட்

கண்களும் அவனுள் ஒரு புள்ளிமானைப் பார்க்கும் நினைவை எழுப்பின.

வாட்ச்மேன் இன்னொரு நாற்காலியைக் கொண்டு வந்து கிருத்திவாஸின் எதிரில் போட்டு, ''உட்காருங்கம்மா! நிப்பானேன்? அவன் சமையல் செஞ்சு முடிக்க எப்படியும் ஒரு அவருக்கு மேலே புடிக்கும்'' என்றான்.

அவள் முகத்தில் ஒரு சிறுநகை பூத்தது. தற்செயலாய்த் திரும்பிய கிருத்திவாஸின் பார்வையில் அந்தப் பூஞ்சிரிப்பு பதிந்து விட்டது. அவள் அவன் எதிரே வந்து உட்கார்ந்து கொண்டாள்.

''ஃபாரெஸ்ட் ஏரியாவில் தங்கியிருப்பதனால் உங்களுக்கு ஒன்றும் பயம் இல்லையே?'' என்றான் கிருத்திவாஸ்.

''பயமென்ன? நான் இதற்கு முன்னாலேகூட நாலைந்து முறை இங்கே வந்து தங்கியிருக்கிறேன். காலேஜ் எக்ஸ்கர்ஷனில் இரண்டு தடவை...அப்புறம் எங்கள் குடும்பத்தோடு இரண்டு மூன்று தடவை...'' என்றாள் ஜம்னா.

''என்னைவிட உங்களுக்கு அனுபவம் அதிகம்...நான் இப்போதுதான் இங்கே வருகிறேன். நான் ஒரு ஃபாரின் கன்ஸர்னில் செகரட்டரியாக இருக்கிறேன். லண்டனிலிருந்து எங்கள் சேர்மன் அண்ட் பார்ட்டி சென்னைக்கு வந்திருக்கிறார்கள். அவர்கள் நாளைக்கு இங்கே வருகிறார்கள்-முதுமலை, பண்டிபூர் காடுகளை யெல்லாம் சுற்றிப் பார்க்க. அதற்கு முன்னேற்பாடுகள் செய்யத்தான் நான் முதலில் புறப்பட்டு வந்திருக்கிறேன்... அவர்கள் நாளைக்கு இதே இடத்தில்தான் தங்குகிறார்கள்...'' என்றான் கிருத்திவாஸ்.

''அதற்குள் எனக்கு 'ஒப்ளைஜ்' பண்ண வேண்டிய நிர்ப்பந்தம் வேறே உங்களுக்கு...'' என்றாள் ஜம்னா.

''திரும்பத் திரும்ப இப்படிச் சொல்லாதீர்கள்...''

அப்போது தொலைவிலிருந்து வீறிடும் சப்தம் கேட்டது. பறவைகளின் ஓலம் அதைத் தொடர்ந்தது.

வாட்ச்மேன் அவர்கள் பக்கம் வந்து நின்று காட்டுப் பகுதியை நோக்கியபடி சொன்னான்: ''ஆஹாஹா! ஒரு பைஸனை அடிச்சிடுச்சி சிறுத்தை!''

ஜம்னாவும் கிருத்திவாஸூம் திக்பிரமையுடன் சிறிது நேரம் இருந்தனர்.

''இப்ப மானுங்களெல்லாம் ஓடியாந்தாலும் ஓடியாரும்.... பாத்துகிட்டே இருங்க'' என்றான் வாட்ச்மேன்.

ஜம்னாவுக்கு மான் என்றதும் பிரமை உணர்வு அப்படியே நீங்கி முகத்தில் மலர்ச்சி தோன்றியது. கிருத்திவாஸ் தன்னை மறந்து அவளைச் சில விநாடிகள் பார்த்தான்.

விடுதியின் பின்புற ஹாலில் டைனிங் டேபிள் முன் சாப்பிட உட்கார்ந்தனர் ஜம்னாவும் கிருத்திவாஸூம். பரிமாற ஆரம்பிக்குமுன் அவர்கள் பார்வைகள் தனித்தனியே சிறிது நேரம் சுற்றிச் சுழன்று கொண்டிருந்தன. ஒரு மின்வெட்டில் இருவர் பார்வைகளும் நேருக்கு நேர் சந்தித்தன. அவள் முகம் சிவ்வென்று சிவந்து தாழ்ந்தது. கிருத்திவாஸின் உள்ளத்தில் மான் விழிகளாய் அவள் விழிகள் சுழன்றன.

நடுவில் பாயசம் பரிமாறினான் சமையற்காரன்.

''என்னப்பா இது தடபுடல்! பாயசம் வைக்கச் சொல்லி நான் ஆர்டர் பண்ணவில்லையே!'' என்றான் கிருத்திவாஸ்.

''நானுதான் வச்சேன் ஸார்! அடுத்த வருஷம் நீங்க வரணும். ஒரு பிள்ளைக் குழந்தையோட வரணும். இப்படி வேண்டிக்கிட்டு வச்சிருக்கேன்'' என்றான் அவன்.

இருவர் மனங்களிலும் ஒரே மாதிரி உணர்வு 'துணுக்'கென்றது. ஜம்னாவின் முகம் சிறிது கறுத்துவிட்டது. மேலே சாப்பிடத் தோன்றாததால் இலையில் கையை அளைந்து கொண்டிருந்தாள்.

இருவரும் விரைவில் எழுந்தனர்.

வாட்ச்மேனிடம் கிருத்திவாஸ் சொன்னான்: ''அந்தக் கட்டிலை வாசலில் எடுத்துப் போடப்பா. நான் வெளியிலேயே படுத்துக்கிறேன்.''

''நல்லா படுப்பீங்க! அறைக் கதவைச் சாத்திகிட்டுப் படுத்தாலே நிம்மதியா தூங்க முடியாது. சிறுத்தை நடமாட்டம் இருக்கும் ஸார் ராவுலே! நர வாசனை கண்டுபிடிச்சின்னு விடாது. பேசாமெ

உள்ளே படுங்க... எங்க பேரிலே ரிப்போர்ட் எழுதும்படியா செய்யாதீங்க'' என்றான் வாட்ச்மேன்.

வேறு வழியில்லை. கிருத்திவாஸ் அந்தக் கோடியிலும் ஜம்னு இந்தக் கோடியிலும் கட்டில்களைப் போட்டுக் கொண்டு படுத்தனர். இருவருக்குமே தூக்கம் வரவில்லை. தன்னையறியாமல் இரவு இரண்டு மணிக்குத் தூங்க ஆரம்பித்தபோதும் கிருத்திவாஸின் நினைவில் ஜம்னுவின் மான்விழிகள் படபடத்துக் கொண்டிருந்தன. விரும்ப முடியாத நிலையில் இப்படி ஓர் இரவில் எங்கோ வந்து தான் அடைபட்டிருக்கும் சூழ்நிலையை நினைந்து நினைந்து அவள் பெருமூச்சு விட்டாள்.

ஆயினும் ஏதோ ஒருவகையில் கிருத்திவாஸின் அருகாமையில் இருப்பது இதமான ஒரு பாதுகாப்பாக இருப்பது போலத் தோன்றியது அவளுக்கு.

மணி ஐந்து அடித்தது. காபியுடன் எழுப்பினான் சமையற்காரன். பல் துலக்கிக் கொண்டு ஜம்னுவும் கிருத்திவாஸும் காபி சாப்பிட்டனர்.

வாசலில் வாட்ச்மேனின் குரல் கேட்டது: ''இப்பதான் மானுங்க வரும்; வந்து பாருங்க.''

இருவரும் வெளியில் வந்தனர்.

''கொஞ்சம் அருகில் போய் மான்களைப் பார்த்து வரலாம், வருகிறீர்களா?'' என்றாள் ஜம்னு.

கிருத்திவாஸ் எதிர்பார்க்கவில்லை இப்படி. மகிழ்வுடன் அவளோடு நடந்தான்.

தொலைவில் மான்கள் வரிசையாகச் சென்று கொண்டிருந்தன. நூற்றுக்கணக்கான மான்களின் கால்கள் வேகத்தில் அடிபெயரும்போது வெள்ளை வெள்ளையாக ஒளி மினுக்கிக் கொண்டிருந்தது. ஜம்னுவுக்கு மகிழ்ச்சி தாளவில்லை. சிரித்த முகத்துடன் அகன்ற விழிகளுடன் அவள் பார்த்துக் கொண்டிருந்தாள். 'அந்தக் கூட்டத்திலிருந்து பிரிந்து வந்து தன் பக்கலில் நிற்கும் ஒரு தனி மான் இவள்' என்று நினைத்தான் கிருத்திவாஸ்.

'ஆயினும் இவளும் ஒரு மாய மான் போன்றுதான். இன்னும் சற்று நேரத்தில் பிரியப் போகிறாள். இவளைப் பற்றி ஒரு வரம்புக்குமேல் நினைப்பதே தவறு' என்று எண்ணினான்.

''போகலாமா?'' என்றான்.

''போகலாம்.... விடுதிக்குப் போன பிறகு நான் எங்கே போவதாக இருக்கிறேன், தெரியுமா உங்களுக்கு?'' என்றாள் ஜம்னு.

''ஊட்டிக்குத்தான். அப்படித்தான் நான் டெலிகிராம் கொடுத்திருக்கிறேன்'' என்றான் கிருத்திவாஸ்.

''என் முடிவை மாற்றிக் கொண்டு விட்டேன். நான் மைசூருக்கே திரும்பி விடப் போகிறேன்!'' என்றாள் ஜம்னு.


அவனுக்குச் சிறிது அதிர்ச்சியாக இருந்தது. ''ஏன்? நேற்றிரவு இங்கே தங்க நேர்ந்து விட்டதில் உங்கள் மனசுக்கு அமைதி இல்லாமல் போய் விட்டதா? என்னால் உங்களுக்கு ஏதாவது அசௌகரியம்....'' என்றான் அவன்.

''அதெல்லாம் ஒன்றுமில்லை. இந்த நிமிஷம் நான் உயிரை உடலில் வைத்துக் கொண்டிருப்பது உங்களால்தான்.... எதற்காக ஊட்டிக்குப் புறப்பட்டு வந்தேனோ அதற்கு அவசியமில்லை. இதை நேற்று இரவே முடிவு செய்துவிட்டேன்'' என்று தீர்மானமான குரலில் சொன்னாள் ஜம்னு.

''ஊட்டியில் ஏதோ புரோகிராம் என்று தந்தியில் குறிப்பிடச் சொன்னீர்களே....?''



''உப்புமாவிலே பத்து கடுகு போட்டா போதாதா..? மொத்தம் பதினொரு கடுகு எண்ணினேனே.. உனக்கு விலைவாசியைப் பத்தி கவலையே இல்லையே..!''
—ஜி. ஏ. ஞானி



அதிசய ரூபாய்நோட்டு!

இந்த பத்து ரூபாய் நோட்டில் நம்பர் அச்சாகியுள்ள இடத்தைப் பாருங்கள். ரூபாய் நோட்டின் இடது பக்கக் கீழ்ப்புறத்திலோ, வலது பக்க மேற்புறத்திலோ அச்சாக வேண்டிய நம்பர், வெள்ளையாக விடப்பட்டுள்ள பகுதியிலும் 'தஸ் ரூப்யே' என்று இந்தியில் எழுதப்பட்டுள்ள இடத்திலும் அச்சாகி இருக்கிறது! 'நாசிக்'கில் தவறிப் போய் இது இப்படி அச்சாகி யிருக்கிறது.

—ரதிப்ரியன்

''அதற்குத்தான் அவசியமில்லை என்று தீர்மானித்து விட்டேன். ஊட்டியில் என் அத்தை வீட்டில் வைத்து என்னைப் பெண் பார்க்க இருக்கிறார் ஒருவர். அத்தை செய்த ஏற்பாடுதான் இது. என் அப்பாவுக்கு 'ப்ளட் ப்ரெஷர்.' அம்மா அவர் கூடவே இருக்கவேண்டும். அதனால்தான் என்னை மட்டும் அனுப்பினார்கள்....''

''அவர்களுக்கு ஏமாற்றமாக இருக்குமே....?''

''அதற்கு என்ன செய்வது? அந்த யாரோ ஒருவருடன் எனக்குப் பிணைப்பு இல்லை என்பதை தெய்வம் நேற்று மாலையே எனக்கு உணர்த்திவிட்டது. தெய்வத்தையும் மீறி நான் அந்த முயற்சிக்கு ஈடு கொடுக்க முடியாது...''

''அப்படி முடிவு கட்டி விடாதீர்கள். நல்ல காரியத்தை இப்படி உதறுவது சரியென்று எனக்குப் படவில்லை....''

ஜம்னா ஒரு நிமிடம் யோசித்தாள்: ''மிஸ்டர் கிருத்திவாஸ்! என் மனத்தில் உண்மையாகத் தோன்றியதைச் சொல்கிறேன்.. நாம் இருவரும் இரவில் ஒரே அறையில் தங்கிய பிறகு—''

சட்டென்று சொன்னான் கிருத்திவாஸ்! ''நாம் முறை பிசகாக நடந்து கொண்டு விடவில்லை! பேச்சில்கூட நான் கவனத்துடன் இருந்தேன்!''

''உங்களை நன்றாகப் புரிந்து கொண்டேன். உங்களைவிடக் கண்ணியமாக வேறு யாராலும் நடந்து கொண்டு விட முடியாது. ஆனாலும் இந்த முரணான சூழ்நிலை என்னைப் பின்வாங்க வைத்து விட்டது. இந்தச் சூழ்நிலைக்கு என் டிரைவரும் வாட்ச்மேனும் சமையற்காரரும் சாட்சிகளாக இருக்கிறார்கள். இதற்கும் மேல் என் மனச்சாட்சி என் பயணத்தைத் தொடர விடவில்லை. உங்களை என்னால் மறக்க முடியாது.''

சில நிமிடங்கள் மௌனமாக அவர்கள் அங்கேயே நின்றனர். கிருத்திவாஸின் மனச்சாட்சி குரல் கொடுத்தது. "ஓர் அணுவளவாவது நான் உங்களை மனம் நோகும்படி பேசியிருந்தாலோ, நடந்து கொண்டிருந்தாலோ என்னை...''

''நோ நோ நோ! அப்படியெல்லாம் பேசாதீர்கள்.... ஆனால் தெய்வம் என் வழியைத் திசை திருப்பிவிட்டது என்ற நம்பிக்கையில் ஓர் அணுவளவாவது உங்களிடம் நான் எதிர்பார்ப்பது ஒன்று உண்டு....''

''என்ன மிஸ் ஜம்னா?''—அவன் அவள் பெயரை இப்போதுதான் இயல்பாக முதன் முதலில் ஓர் அவசரத்தோடு உச்சரித்தான். கண்களைத் துடைத்துக் கொண்டு புன்னகையுடன் அவனை நிமிர்ந்து பார்த்தாள் ஜம்னா.

''உங்களை நான் பார்த்துவிட்டேன். என்னை நீங்கள் பார்த்து விட்டீர்கள். இன்னொருவர் என்னைப் பார்ப்பதை உங்கள் மனம் விரும்புமா?''

கிருத்திவாஸின் நெஞ்சச் சுமை நொடியில் குறைந்து விட்டது. ''வாழ்க்கை முழுவதும் உன்னையே பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் என்பதுதான் என் விழைவு ஜம்னா!''

அவள் முகம் மின்னலாய்ப் பளிச்சிட்டது. ''இதுதான்— இதுதான் நான் உங்களிடம் எதிர்பார்த்தது. நான் மைசூருக்குத் திரும்புவதில் தவறு இல்லையே?'' என்றாள் ஜம்னா.

''இல்லை! ஆனால், இப்படி ஒரு சூழ்நிலை ஏற்பட்ட கட்டாயத்தினால் நீ உன் வாழ்க்கை முழுதுக்கும் என்னுடன் பிணைந்துவிட வேண்டுமா என்று யோசித்துக்கொள், ஜம்னா.''

அவள் சிரித்தாள்: ''வாழ்க்கை முழுதும் பிணைவதற்காகத்தான் இந்தச் சூழ்நிலையே ஏற்பட்டது. எனக்குத் துணையாக வந்து, என்னைக் காப்பாற்றவும் செய்தீர்கள் என்றால் அதன் பொருள் என்ன? தெய்வம் உங்களைத் துணைவராகவே என்னிடம் அனுப்பியது. நான் உங்களிடம் அடைக்கலம் ஆகிவிட்டேன்!''

மான்போல் சிலிர்த்து அவனை மகிழ்வுடன் பார்த்தபடி நின்றாள் ஜம்னா.



மாம்பலம் ரயில்வே ஸ்டேஷனுக்கு அருகே எங்கள் வீடு உள்ளதால், ஜன்னலருகே உட்கார்ந்து கொண்டு சாரிசாரியாக 'சாரி' கட்டிக்கொண்டு வேலைக்குச் செல்லும் இளம் பெண்களையும், கட்டழகு ஆண்களையும் பார்த்துப் பார்த்துப் பெருமூச்சு விடுகிறேன். இதோ வந்து விட்டாள், அடுத்த தெரு பானு. அவளுக்கு 'பாங்க்' ஒன்றில் வேலை. இதோ, யாருடனே சிரித்துப் பேசிக் கொண்டே செல்கிருள். தினம் தினம் விதவிதமான புடவைகளைக் கட்டிச் செல்லும் அவளைப் பார்த்து நான் ஏக்கப் பெருமூச்சு விடாத நாளில்லை. பொறாமையால் என் இதயமே வெடித்து விடும்போல் இருக்கிறது.

ஜோடிஜோடியாக எத்தனை பேர் செல்கிருர்கள் ஆபீஸுக்கு. நான் மட்டும் தனிமையின் கசப்பை விநாடிக்கு விநாடி அனுபவித்துக் கொண்டு இருக்கிறேன். நான் எங்கும் வெளியே செல்லக்கூடாதாம்; நான்கு பேருடன் பழகக்கூடாதாம்; விபரீதம் விளையுமாம். அம்மாவின் கட்டளை இது.

சரி, வெளியில்தான் எங்கும் செல்லக் கூடாது. எங்கள் காம்பவுண்டுக்குள்ளேயே குடி இருப்பவர்களிடம் பேசலாம் என்ருல் அதுவும் கூடாதாம். என் வயதே உள்ள உமா, கௌரி, சீதா போன்றவர்கள் எப்படி ஊர் சுற்றுகிருர்கள் ஜோடியாக.

சினிமா, டிராமா இவற்றிற்குக்கூட நான் அம்மாவுடன்தான் செல்லவேண்டும். அம்மா, புராணப் படத்தைத் தவிர வேறு எதையும் பார்க்கமாட்டாள். சுத்த கர்நாடகம். இந்த விஷயத்தில் மட்டும்தான் கட்டுப்பாடென்றில்லை, நான் படிக்கும் புத்தகங்களிலும் சற்றுக் கவர்ச்சியாகத் தோன்றுவதைப் படிக்க முடியாதபடி செய்து விடுவாள்.

தினம் பக்கத்திலிருக்கும் கோயிலுக்குச் செல்வதற்குள், ஆயிரம் புத்திமதிகளை அள்ளி [illegible]. ''[illegible] வளர்த்துக் கொண்டு, தெருமுனையில் நின்று கொண்டு, பெண்களை முறைத்துப் பார்த்துக் கொண்டிருக்கிருன்கள். நீ அவர்கள் பக்கம்கூடத் திரும்பாதே!'' என்று எச்சரிப்பாள்.

மாம்பலம் ரங்கநாதன் தெரு. அதன் வழியாக சாயங்கால வேளைகளில் செல்ல எந்த இள உள்ளம்தான் விரும்பாது? ஆனால், அதற்கும் தடைதான். சிவ-விஷ்ணு கோயிலுக்குச் செல்வதென்ருல் கூட, அம்மாவுடன் இருட்டடித்துக் கிடக்கும் நடேசய்யர் தெரு வழியாகத் தான் செல்லவேண்டும். 'உம்...என்று தான் நான் வாழ்க்கையை அனுபவிக்க ஆரம்பிக்கப் போகிறேனே?'

மாம்பலம் டைப்ரைட்டிங் இன்ஸ்டிடியூட்டில் 'டைப்' கிளாஸ் சேரும் சமயத்தில்கூட, அம்மா கூடவே வந்தாள். கும்பல் இல்லாத சமயம் எது என்று பார்த்து அதைத் தேர்ந்து எடுத்தாள். அதுவும் கரெக்டாக வீட்டுக்கு வந்து சேர்ந்துவிட வேண்டும். சற்று நேரமானல் அவளே நேராக வந்து விடுவாள்.

''குழந்தைக்கு வயதாகிக் கொண்டே போகிறதே! காலேஜ் படிப்புக்கூட முடிந்துவிட்டது! இன்னும் ஒன்றும் சரியாக அமையவில்லையே'' என்று அம்மா அங்கலாய்ப்பதும், அதற்கு அப்பா, ''எல்லாம் சமயம் வரும்போது நல்லபடியாக நடக்கும்'' என்று பதில் கூறுவதும் காதில் விழுகிறது. என் ஏக்கத்திற்கான காரணம் அவருக்கு எங்கே தெரியப் போகிறது!

'உம்...என்ன செய்வது? எல்லாம் என் தலையெழுத்து! என் நண்பர்களான உமாசங்கர், கௌரிசங்கர், சீதாராமன் போன்றவர்களெல்லாம் கொடுத்து வைத்தவர்கள். அவர்கள் சினிமா போவதையோ, 'டிரஸ்' செய்து கொண்டு ஊர் சுற்றுவதையோ அவர்கள் அம்மாக்கள் தடுப்பதில்லை. எனக்கு மட்டும் இப்படிப்பட்ட அம்மா எங்கிருந்துதான் வந்து வாய்த்தாளோ?'

— ஏ. ஆர். லட்சுமணன்

ஊத்தப்பம் கண் சிமிட்டுகிறது!



அப்போது பரீட்சைக்காக லீவ் விட்டிருந்தார்கள். மூளையில் 'ஈக்வேஷன்' எதுகை மோனையுடன் பாட, ஃபார்முலாக்கள் பரதநாட்டியம் ஆட, கேள்விகள் குரூப் டான்ஸ் குதிக்க, 'ஆன்ஸர்கள்' ஆலவட்டம் சுற்றி, தலை சுற்றிக் கொண்டிருந்த நேரம். போதாக் குறைக்குசனிக்கிழமைவேறு.

ஹாஸ்டலில் இட்டிடிடிலி. பீமன் பிராண்ட். பீரங்கி வைத்து அடித்தாலும் பிளவு படுவது சந்தேகம்.

குண்டு சங்கர் வந்தான். ''டேய்! மண்டை காயுதடா.''

''இவ்விடமும் அப்படியே.''

''சரி கிளம்பு, டவுனுக்கு போவோம். பணம் இருக்கா? படத்துக்குப் போய்ட்டு சாப்டுட்டு வருவோம்.''

வெளியில் வந்தால் மேலும் இரண்டு பாபாத்மாக்கள் எங்களுக்கு 'கம்பெனி' தருவதாகச் சொல்லின. நால்வரும் கூடி 'நிதிநிலைமை'யின் மீது விவாதம் நடத்தினோம். நானும் சந்தானமும் படச் செலவை ஏற்பது; சங்கரும் ராஜசேகரும் ஓட்டல் விவகாரத்தைக் கவனித்துக் கொள்வது. அங்கீகாரம் செய்யப்பட்டது.

படம் பார்த்தப்புறம் ஊத்தப்பம் சாப்பிடுவது என்று தீர்மானித்து ஒரு ஓட்டலில் நுழைந்தோம்.

—சாமி, எங்க ஹாஸ்டல் ஊத்தப்பத்தைப் பற்றி உங்களுக்குத் தெரிய நியாயமில்லை. சாப்பிட்டால் உடனே இனந் தெரியாத மசமசப்பு உடலெங்கும் பரவும்; புத்திமங்கும்; விவரிக்கவொண்ணாத விளைவுகள் பல உண்டாகும். இரண்டு சாப்பிடுவதே எம தண்டனைதான்.—

ஒரு டேபிள். சுற்றி மூன்று சேர். நான்கு பேரும் ஒன்றாக அமர, பக்கத்து டேபிளில் இருந்து ஒரு சேரை எடுத்து வந்தேன். மூவரும் உட்கார விடவில்லை.

''சினிமாலே மாலாகிட்டே தனியாப் போய் பேசின மாதிரி தனியாப் போய் சாப்பிடு'' என்றான் சங்கர், கடு கடுப்புடன்.

'ம்...பேசிப் பிரயோஜனமில்லை.' தனியாய் வந்தமர்ந்தேன், ஊத்தப்பத்திற்கு ஆர்டர் கொடுத்துவிட்டு. நான் படப் போகும் அவஸ்தைகளை நினைத்து பூரித்துப் புளகாங்கிதமடைந்தான் சங்கர். தனக்கு ஒரு கண் போனால் பரவாயில்லை; எதிரிக்கு ரெண்டு கண்ணும் போகணும்னு நினைக்கிற பரோபகாரி!

மூன்று ஊத்தப்பங்கள் வந்தன. ''மீதி ஒண்ணு வருது சார்.''—இது சர்வர். ''டேய், மொதல்ல நீங்க சாப்பிடுங்கடா; அடுத்தாப்பல நான் சாப்பிடுறேன்.'' கொஞ்ச நேரமாவது ஊத்தப்பத்திடமிருந்து தப்பிப்போமே!

திடும் திடும் என சப்தம். அனைவர் கழுத்தும் 120 டிகிரி திரும்பின. ஒரு தாயும் மகளும் போல இருவர் நடந்து (?) வந்து கொண்டிருந்தனர். சங்கரைப் போலவே 'கிரேனில்' தூக்கி எடை பார்க்கப்பட வேண்டிய கேஸ்கள். தாய்க்கும் மகளுக்கும் 'Expanding competition' (உடம்புதான்) போலிருக்கு. இடுப்பளவு சுமார் 2 அடி டயாமீட்டர். நான் அமர்ந்திருந்த டேபிளைத் தவிர வேறு காலியில்லை. எனவே இங்கே வந்தனர். அருகில் வந்ததும் நான் எழுந்தேன், சங்கர் டேபிளிலேயே அமரலாம் என்று.

''தம்பி, நீங்க இங்கேயே உட்காருங்க, பரவாயில்லை!'' நானும் அமர்ந்தேன். காரணம் இருக்கிறது. ஒரு சந்தேகம் கேட்க வேண்டும். அவர்கள் சாப்பிடும் அரிசி எந்தக் கடையில் வாங்குகிறார்கள்? நானும் நாலு வருஷமா ட்ரை பண்றேன்.

ஹாஸ்டல், காலேஜ் கேன்டீன், பேக்கரி- ஒன்று விடாமல் சாப்பிட்டுப் பாக்க றேன். உடம்பு ஒரு மி.மீ.கூட கூடமாட் டேங்குது.

'What a pity!' அந்தப் பெண் (மகள்) ஊத்தப்பத்திற்கு ஆர்டர் பண்ணினாள். (சரிதான், ஊத்தப்பம் தின்னே ஊதிப் போனது போலிருக்கு).

அம்மா என்னைப் பார்க்கிறாள். (பார்க் குது என்பதுதான் பொருந்தும். உடம்பு நாலு கால் ஜாதியை ஞாபகப் படுத்துது.)

''தம்பி, நீங்க என்ன வேலை பாக்க றீங்க?''

''இல்லிங்க, நான் படிக்கிறேங்க.''

''எங்க படிக்கிறீங்க?''

(சனி பிடிக்கும்னு பேப்பர்ல போட் டிருக்கான். சரியாய் பிடிச்சுடுத்து.)

ரொம்பப் பொறுமையா சந்தேக மெல்லாம் தீர்த்தேன். நானும் தீர்த்துக் கொண்டேன். சங்கர் கண்கள் சிரித்தன.

(அர்த்தம்: 'வசமா மாட்டிக்கிட் டியா?')

''சார், ஒரே ஒரு ஊத்தப்பம்தான் இருக்கு, மாவு தீர்ந்து போச்சு..''

உடனே அது (மகள் மட்டும் என்ன வாழ்ந்தாள். அவளும் 'அது' தான்) வருத்தப்பட ஆரம்பித்தது. 'அழுது விடலாம்' என்று முகம் வானிலை அறிக்கை வாசித்தது. பார்த்தேன். இதுதான் தப்பிக்க சான்ஸ். பசங்களைப் பார்த் தேன். ஒருவரும் கவனிக்கலே.



செந்தாமரைக் கண்ணன்
(செந்தாமரை)
பி.ஈ.(ஐந்தாவதுவருடம்)
பி. எஸ். ஜி. கல்லூரி.
கோயமுத்தூர்.

''நீங்க வேணும்னா இந்த ஊத்தப் பத்தை சாப்பிடுங்க. நான் சப்பாத்தி சாப்பிடறேன்.'' - (கவனியுங்கள், நான் கூட தியாகம் செய்கிறேன்.)அதுமுகத்தில் மலர்ச்சி. கனிவோடு என்னைப் பார்க்க ஆரம்பித்தாள்.(ஐயோ,பயமாயிருக்கே!)

சகஜமாக இருவருடனும் பேச ஆரம் பித்தேன்.

''தம்பி,நம்ம வீட்டுக்கு வாங்களேன்''

''ஆமாங்க, அவசியம், வாங்க.''— இது சின்ன ரோலர்!

''நம்ம பொண்ணுக்கு ஊத்தப்பம்னா ரொம்பப் பிடிக்கும். (இது இரண்டாவது தடவை).





''அஹிம்சை செருப்பு ஒரு ஜோடி கொடு!''
''என்ன சொல்றீங்க..?''
''போன தடவை உன்கிட்டே வாங்கின செருப்பு காலைக் கடிச்சி ரொம்ப ஹிம்சை பண்ணிடுச்சு..!''

—பி. மகேஷ்

''நான் சொல்றேன்னு கோவிச்சுக் காதீங்க. இவ்வளவு ஒடம்பை வச்சிகினு அரிசி விஷயம் சாப்பிடக் கூடாது. Pa: icular.ஆ ஊத்தப்பம் சாப்பிடக் கூட து.'' (உடம்பைப் பார் உடம்பை. தண்ணியில போட்ட புண்ணாக்கு மாதிரி 'பொத பொத'ன்னு)

''ஒடம்பு குறைஞ்சாத்தான் பாக்க லட்சணமாய் இருக்கும்.''

இரண்டு முகங்களும் சுருங்கின.

சப்பாத்தி வந்தது. சாப்பிட்டேன். விடை பெற்றேன்.

வெளியில் வந்தோம். சங்கர் எகத்தாள மாய்ச் சிரித்தான். ''ஒனக்கென்னடா, ரெண்டு 'பெரிய' மனுஷிங்க சிநேகிதம், ம்..! குஷிதான்.''

நானும் விடவில்லை. ''பிறத்தியாரைப் பார்த்துச் சொல்றதுக்கு ஒரு அந்தஸ்து வேணும். இவன் 'சரீரத்தைத் தூக்கி நடந்து வரும்போது பார்த்தா' எந்த directionல நடக்கருன்னுகூடத் தெரி யாது. அவ்வளவு சின்ன ஒடம்பு! (90 கிலோ பஞ்சமில்லாமல் தேறும்)

''பேசாம நான் சொல்றபடி கேளு. உடம்பு கனப் பொருத்தம். பாண்டிக்கு உங்க அப்பாவுக்கு உடனே லெட்டர் போடறேன். ஓட்டல்ல பாத்த பொண்ணு நான் சொன்னு கேப்பா. இந்த செமஸ்டர் முடிஞ்சதும் கல்யாணத்தை நடத்திடலாம். என்ன சொல்றே?'' — நான் கேட்கக் கேட்க சங்கரைப் பார்த்து சந்தானமும் ராஜ சேகரும் சிரிக்க ஆரம்பிக்க, சங்கர் என்னைத் துரத்தி வர, ஒரு வழியாய் தப்பித்தேன் நான்.

ஒன்றரை மாதம் கழிந்தது. பரீட்சை எல்லாம் முடிந்தன. சாவகாசமாய் அரட்டை.

ஆபீஸ் பாய வந்தான்: ''சார் ஒங்க ளுக்கு யாரோ 'கெஸ்ட்' வந்திருக் காங்க.''

''அப்பிடியா, யாரு?''

''தெரியலே சார்...யாரோ 'லேடி' கெஸ்ட்.''

'யாராயிருக்கும்?' நம்மைத்தேடி யாரும் வரமாட்டாங்களே. வீட்லேயிருந்தும் வரமாட்டாங்க.'— ஆபீஸ் ரூம் சென்று பார்த்தேன்.

அழகான உடல், அளவான வயஸ். யார் இந்த அப்ஸரஸ்? எங்கேயோ பார்த்த ஞாபகம் (?)

''Are you able to recognize me?''

''Excuse me Miss. I am not?''

''ஒன்றரை மாதத்திற்கு முன்பு ஒட்டல் — ஊத்தப்பம் — ஞாபகம் இல்லேயா?'' — தந்தி பாஷையில் கேட் டாள்.

''அடடா! நீங்களா, நம்ப முடிய லியே, சௌக்கியமா?''

(கடல் நீரும் சர்க்கரையாகலாம்! அவள் ஒல்லியானது எப்படி உண்மை யாகலாம்!)

''வீட்டுக்கு வாங்க...அம்மா ஏதோ பேசணுமாம்.''

''என்னையா, இல்லே வேற யாரையா வதா?..நல்லாத் தெரியுமா?''

''ஒங்களேயேதான்.'' (ஏன் விதம் விதமாய்ச் சிரிக்கிருள்?)

''நான் நாளைக்கு வர்றேனே.''

—இன்னைக்கு 'Tent'க்கு போகலாம்னு பிளான். படம் - 'விடாக்கண்டன் கொடாக்கண்டன்.'—

''இல்லேங்க, கையோட அழைச்சு வரச் சொன்னுங்க.''—கையைத் தொட வர்ரு (?) நான் மறுக்க, அவள் அழைக்க அந்தப் பக்கம் வந்த எங்கள் 'வார்டன்'



மதுரைப் பல்கலைக் கழகத்தின் 11-வது ஆண்டு பட்டமளிப்பு விழா, பல்கலை நகரில் உள்ள டாக்டர் மு. வரதராசனார் அரங்கில் நடைபெற்றது.

கடந்த ஏப்ரல் தேர்வுகளில் முதன்மையாகத் தேறிய மாணவர்களுக்கு தமிழக ஆளுநர் பிரபுதாஸ் பட்வாரி பரிசுகள் வழங்கினார்.

அன்று மாலை பட்டம் பெற்ற மதுரை தியாகராசர் பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கு, பழைய மாணவர் சங்கத்தின் சார்பில் மேல மாசி வீதியில் உள்ள ஒரு ஹோட்டலில் பாராட்டு விழா நடந்தது.

ஒவ்வொருவரும் ஒலிபெருக்கி முன் வந்து பெயர், பட்டம் பெற்ற ஆண்டு, செய்யும் வேலை இவற்றைச் சொல்லித் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டனர். இவ்வாண்டு பட்டம் பெற்ற கந்தசாமி என்னும் மாணவர் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளும் போது J.E., அதாவது (Jobless Engineer) என்று கூறினார். வந்திருந்த அனைவரும் 'கொல்'லென்று சிரித்தனர்.

—பா. இராமச்சந்திரன்

ஒரு மாதிரி பார்க்க, வேற வழியின்றி காரில் ஏறினேன்.

வீடு வந்தது. அவள் காரை ஷெட்டில் விட்டு விட்டு வருவதற்குள் நான் உள்ளே சென்றேன்.

''வாங்க தம்பி, வாங்க!''

''வர்றங்க. சௌக்கியந்தானுங்களே. கொஞ்சம் இளைச்சு போன மாதிரி இருக்கிங்களே. (குண்டா இருக்கும் யாரைப் பார்த்தாலும் நான் பாடற வழக்கமான பாட்டு.) நான் அன்னைக்கி ஓட்டல்ல அது மாதிரி பேசினதப் பத்தி ஏதாவது வருத்தப்பட்டீங்களா?''

''அதெல்லாம் எந்த வருத்தமும் இல்லீங்க. அது நல்லதுக்குத்தாங்க.''

''இளைச்சது நான் இல்லிங்க; என் பொண்ணுதாங்க. ராதாவைப் பாத்தீங்களா? எப்படியிருக்கா இப்ப? என் கண்ணே பட்டுடும் போலிருக்கு. எல்லாம் ஒங்களாலதான்.''

''என்னாலயா?'' (ஏதோ குண்டு போடறாங்களே!)

''ஆமாங்க, நீங்க ஓட்டல்ல பாத்து கிண்டல் பண்ணதுக்கப்புறம் அவ சரியா சாப்பிடலைங்க. கிண்டல் பண்ணாங்கன்னு அழுதபடி இருந்தா. அப்படியே கொஞ்சங் கொஞ்சமா உடம்பைக் கொறைச்சுட்டா. மொதல்ல இவளை வேணாம்னு சொன்ன அத்தை மகன்கள் எல்லாம் இப்ப கட்டிக்கிறேன்னு வந்தானுங்க. இவதான் அடாவடியா வேணாம்னு சொல்லிட்டா. அது கிடக்கட்டும். ஒரு முக்கியமான விஷயம் பேசணுமே, பேசலாமா?''

''ஓ, பேசலாமே!'' (காலண்டரில் ஸ்ரீப்ரியா அட்டகாசமாய் சிரிக்கிறாள்)

''இவ இளைக்கிறதுக்கு நீங்கதான் காரணம்னு சொல்லி ஒங்க மேலேயே எம்பொண்ணு பிரியமா இருக்கா! (இதென்னடா வம்பு!) 'கட்டிக்கினா ஒங்களைத்தான் கட்டிக்குவேன்; இல்லேன்னா மறுபடி குண்டாயிடுவேன்' அப்படின்னு பயங் காட்றா. அதனாலே யோசனை செய்து நல்ல முடிவா சொல்லுங்க. இதோ, நான் வெளியே போய் வரேன்.''

'இவளையேகூட கட்டிகிடலாம். ம்.. பரவாயில்லை; ஆனால் திடீரென்று ஊத்தப்ப ஆசை வந்தால் நம்ம பாடு திண்டாட்டம்தான். இருந்தாலும் பரவாயில்லை.'

இதற்குள் அவள் நாணிக்கோணி உள்ளே வருகிறாள். டிபன் சாப்பிடச் சொல்கிறாள். சம்மதம் சொல்கிறேன். வந்தாள் திரும்பி,டிபன் தட்டுடன்.

''அத்தான் (அதுக்குள்ளேயா?) நம் காதல்? (கிலோ என்ன விலைக்கு வாங்கினாள்?) தோன்றி, முழுமை பெற உதவிய இந்த ஊத்தப்பத்தை என்றும் மறவேன். இந்த வெற்றியைக் கொண்டாட என் கையாலேயே செய்த ஊத்தப்பத்தை நீங்கள் சாப்பிட வேண்டும்.''

புலிகிட்டே யிருந்து தப்பிச்சு முதலை கிட்டே மாட்டிக்கிட்டேன். என்ன செய்வது? பூர்வஜென்ம பாவம்.

சார் சார்! யாராவது வந்து 'ஹெல்ப்' பண்ணுங்க சார். இதோ பாருங்க; தட்லேயிருந்து என்னைப் பார்த்து ஒரு ஊத்தப்பம் கண் சிமிட்டுகிறது.

இல்லாதது

கே.சுந்தரேசன்

"செல்லிப் பொண்ணுக்கு கல்யாணமாம்; கிழவி வந்து சொன்னுள்'' என்ருள் என் மனைவி சரோ; என் முக மாறுதலைப் பார்த்துக் கொண்டே. இச்செய்தியில் நான் பரபரப்பு அடைந்து விட்டேன்.

''என்னடி சொல்கிருய்? எவண்டி அவளைக் கட்டிக்கிருன்?''

''இதென்ன கேள்வி? 'லவ் மேரேஜ்!' 'இவளைத்தான் கட்டிப்பேன்'னு கட்டிக்கிருன்'' என்ருள் சரோ, குறும்புச் சிரிப்போடு.

''அப்போ.. அந்தப் பையன்கிட்டே ஏதாவதொரு குறை இருக்கணும்.... இல்லாட்டா இது நட்க்கவே நடக்காதுன்னேன்.''

''அதெல்லாம் ஒண்ணுமில்லே! பையன் நல்ல லட்சணம். படிச்சவன். வேலையில் சேர்ந்து நல்ல சம்பளம் வாங்கப் போகிருன். ஒரு குறைவுமில்லே அவனுக்குங் கறேன்'' என்ருள் சரோ அழுத்தமாக.

''இவகிட்டே என்ன இருக்குன்னு இவளைஅந்த மன்மதன் 'லவ்' பண்ணிஞன். ஒரு 'அது.. இது' இருக்க வேண்டாமா? பல்லும் பவிசுமா.. கன்னங் கரேல்னு துடைச்சுவிட்ட மரமாட்டம் நிக்கரு. சுத்த அநாகரிகம். இல்லாததையும் இருக்குன்னு காட்டிக்கிட்டு எத்தினி பேரில்லே. கறுப்பை சிவப்பாக்கும் வித்தை! இவளைப் போய் எவன் பார்ப்பான்? அவனுக்கு என்ன இவகிட்டே ஒரு 'இது' இருக்க முடியும்?''

''வாயை மூடுங்கோ.. 'அது இது'ன்னு சுத்த பேத்தல். அவகிட்டே என்ன இல்லே? இந்தக் காலத்து ஹிப்பிக்குப் புடவை கலர் பார்த்தா போதும்... 'லவ்' வந்துடும்....என்னமோ அது.. இது....'' — சரோ கோபமாகச் சொல்லிக்கொண்டே உள்ளே போகிருள்.

'மரம் வைச்சவன் தண்ணி ஊத்தாமலா போவான்?'—பெருமூச்சு விடுகிறேன்.

எச்சுமி கிழவியின் பேத்தி இந்த [illegible] பெற்றவர்களை அனுப்பிவிட்டு, தனிக்கட்டையாகி விட்டாள். இந்தப் பெண்ணுக்காகவே உயிரை வைத்திருப்பவள் போல், உறவு என்று சொல்ல ஒரு கிழவி.

''இவளை எவன்கிட்டேயாவது ஒப்படைச்சிட்டுத்தான் நான் கண்ணை மூடணும். வயசு இருபது ஆகுது. பாக்க இருபது வயசு வளர்த்தியா இருக்கு! கறிவேப்பிலைக் கட்டையாட்டம். நான் என்ன செய்யுறது? உறவு — வேண்டியவங்கன்னு எத்தினி பேரு இல்லே! ஒத்தன்கூட கண்ணு தூக்கிப் பாக்க மாட்டேங்கருனுகளே! இந்தக் காலத்துப் புள்ளேங்களாட்டமா இது இருக்கு. அழகுன்னு ஒண்ணு வைக்கல்லியே தவிர கொணம் நல்ல கொண்ணம். வாயைத் தொறந்து ஒண்ணு கேக்காது. ஆம்பிளே பசங்களைப் பாத்துகினு நிக்காது. ஆஞ நின்ஞத்தான் என்ன? இவளை யாரு சீந்தருங்க.

''என்னமோ சாமி! இவ அப்பன்காரன் இருந்தானே, அவன் லாரி டிரைவர். எவளையோ சேத்து வைச்சிகினு இவளைப் பெத்தெடுத்து என் தலையிலே கட்டிட்டு கண்ணை மூடிட்டான். நான் கெடந்து அவதிப்படறேன். என்ன செய்யுறது?''

பாவம், அவள் என்ன செய்ய முடியும்? புலம்பிஞள். தெருவில் இருக்கும் நாகரிகங்கள் அடிக்கடி அந்தப் பெண்ணைக் கேலி பேசுவார்கள். எனக்கு பரிதாபமாகத்தான் இருக்கிறது. [illegible] சித்திரங்களை எழுதும் ஓவியன் [illegible] அனுப்பி விட்டான். 'பல்' ஒன்றைத் தவிர எது மேடாக—வளைவாக— உருவாக இருக்கிறது? இது விலைபோவது கஷ்டம்தான் என்று நான் எண்ணினேன்.

ஒரு வாரத்துக்கு முன் கிழவி அவசர அவசரமாக ஒரு கடிதத்தை எடுத்து வந்து என்னிடம் கொடுத்துப் படிக்கச் சொன்னுள். செங்கோட்டையிலிருந்து வந்திருக்கும் அக்கடிதத்தில் சின்னய்யன் என்பவன் சென்னைக்கு வருவதாகவும் வேலைக்காக ஒரு கம்பெனி பேட்டிக்கு வருவதால் இரு தினங்கள் இவர்கள் வீட்டில் தங்குவதாகவும் தெரிவித்திருந் தான்.

இச்செய்தியைக் கிழவியிடம் சொன்னதும் அவள் வெகு நேரம் சிந்தித்தாள்.

''யாரோ என் பிள்ளைக்கு வேண்டிய வங்க. அவன் காலமாயிட்டது தெரியாமே எழுதியிருக்கான். வந்துட்டுப் போவட்டும். அவன் இருக்கும்போது இப்படித்தான் வருவானுக! எவன் வந்தா என்ன?—எவன் போனு என்ன? இந்தப் பொண்ணுக்கு ஒத்தன் வரல்லே.'' —கிழவி மனம் வெறுத்துக் கூறினுள்.


சரோ வந்து விஷயத்தைக் கேட்டாள்:

''என்ன, வீட்டுக்கு விருந்தாளி வருதா? அவனை நல்லா கவனிச்சு அனுப்பு.. ஒருவேளை அவனே மாப்பிள்ளையானலும் ஆவான்'' என்ருள்.

''ஆமா .. அது ஒண்ணு தான் பாக்கி! .. நீங்க ஒண்ணு ..!'' என்ருள் கிழவி.

''ஏன், என்ன வந்தது? இதோ பாரு, அதிர்ஷ்டம்ங்கறது சொல்லாமலேயே வரும். வருபவனுக்கு வேலை கிடைச் சிடுச்சின்னு இந்த வூட்டு அதிர்ஷ்டம் தான். தோ.. பாரு! செல்லியை எங்கிட்டே அனுப்பு. நான் சொல்றேன். அவளை இப்படியே ஒட்டடைக் குச்சியா நிறுத்தியிருந்தா இந்த ஜன்மாவிலே கல்யாணம் ஆகாது. ஆமா ..அனுப்பு.. மத்ததை நான் கவனிச்சுக்கறேன்'' என்ருள் சரோ..

அவள் ஏதோ திட்டம் போட்டு விட்டாள். இவளுக்கு என்ன தெரியும்? நான் எதைப் பார்த்து இவளை மணந்து கொண்டேன்..? என் பார்வை இப்பவும் வெளியேதானே போகிறது? மனசுக்குள் சிரித்துக் கொண்டேன். எனக்கெதற்கு இந்த வம்பு. நான் என் அலுவலக விஷயமாக வெளியூர் சென்று விட்டேன்.



செல்லி, சரோவைப் பார்க்க வந்தாள். கிழவி, வருகிறவனை வரவேற்பதில் முனைந் தாள்.

''லாரி டிரைவர் மருது இல்லீங்களா? அவர் வீடு தானே இது..? எங்க அப்பாரு அவருக்குச் சிநேகம்'' என்ருன் வந்தவன்.

''வா தம்பி! அவன் இல்லே. நான் அவன் தாய்தான். நீ இங்கேயிருந்து உன் ஜோலிங் களை முடிச்சுட்டு போவ லாம்'' என்ருள் கிழவி.

செல்லிக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது.

''இது என்ன இது? எதை எதையெல்லாமோ போட்டு ஐயர் வூட்டு அம்மா நிறுத்திப்புட் டாங்க! புடவை உடம் புலே நிக்கிறேங்குதா? நான் மாட்டேன்.. யார் முன்னலேயும் போவமாட்டேன்..



இன்னிக்கு ஒரு நாளும் இப்படி சிங்காரிச்சு வைச்சு — மினுக்கிகிறு நான் நின்னு. எப்பவும் இப்படி நிக்க முடியுமா? பாவம், கஷ்டப்பட்டு சேத்து வைச்ச காசெல்லாம் வயசான காலத்துலே 'இதுக்கு' செலவு செய்ய றேங்கிறியே! உனக்கேன் இந்த வீண் கஷ்டம்? ஐயர் ஆட்டு அம்மாகிட்டே சொல்லி எனக்கு 'யார் வீட்டிலேனும் ஒரு வேலையைப் பார்த்துக் கொடு. கல்யாணமும் வேணும் .... ஒண்ணும் வேணும். எனக்கிருக்கிற இந்த அழுக்குப் புடவையைப் பார்த்து எவனாவது என்னைக் கட்டிக்க வந்தா [illegible], இல்லாங்காட்டி வேணாம்.'' — அவள் குரல் கரகரத்தது. அதில் தொனித்த ஆவேசத்தின் சூடு கிழவியின் நெஞ்சைத் தொட்டது.

''இந்தா பாரு... நல்லா தான்னடீ பேசறே! கொணத்தை வச்ச கடவுளு அழகை வைக்கல்லே... அது இருந்திச் சுன்னு நீ எதைவேணு சுத்திக்கலாம். என்னு செய்யுறது? என் தலையெழுத்து! உன்னை வைச்சகிட்டு நான் எவ்வளவு நாளைக்கு உயிரோடு இருக்க முடியும்? இது போலல்லாம் பேசிகிட்டு குறுகிக் கோணிக்கிட்டு இருக்கிறதையும் கெடுத் துக்காமே நீபாட்டுக்கு இரு'' என்று செல்லியைப் பிடித்துத் தள்ளினள் கிழவி.

செல்லி வேண்டா வெறுப்பாக அவன் முன்னல் சென்று சென்று வந்தாள். அவனும் அவளை வெறித்து வெறித்துப் பார்த்தான்.

செங்கோட்டை தம்பி வேலை விஷய மாக வெளியே சென்று வந்தான்.

சரோ, 'மாட்சாக' வேறொரு கலர் புடவை— இத்யாதிகளை அனுப்பினள். கிழவி நாசூக்காக சரோவிடம் [illegible] வந்து விட்டாள்.

செல்லியை, தம்பி சில கணங்கள் வியப்போடு பார்த்தான். அப்பார்வை அவளை நிலைதடுமாற வைத்தது.

''இந்தா... உன்னைப் பத்தி ஆயா அடிக்கடி சொல்லுது. உன்மேலே அது உசிரையே வைச்சிருக்குது—இல்லையா?'' என்று ஆரம்பித்தான் அவன்.

அவள் தலையசைத்தாள்.

''எங்கே அவங்களைக் காணேம்?'' என்ருன் மீண்டும் அவன்.

அவள், 'இல்லே' என்று தலையசைப் பில் புரிய வைத்தாள்.

உரிமையோடு அவன் அவளருகே நெருங்கி [illegible]. [illegible] குள் படபடப்பு. எட்டாக் கனி என நினைத்தது கைக்கு எட்டும் போல் வந்த தும் பரவசப்பட்டாலும் ஏதோ ஓர் இடத்தில் தேக்கம் கண்டு நின்றது. நெஞ்சிலே ஒரு சுமை; நெருடல் அவளை ஆட்கொண்டது.

'அவனை நீ கவர வேண்டும்.'— ஐயர் வீட்டு அம்மா சொன்னது அவள் நினைவுக்கு வந்தது. மானசீக ஏக்கம் எல்லாம் ஓர் உண்மைக்குக் கட்டுப்பட்டு [illegible].

'ஐயர் ஊட்டு அம்மாவை என்ன செய் தால் தேவலை? என்ன கலம் கனக்கிறது, [illegible]! [illegible] — [illegible]. உடம்பு உஷ்ணமாகி வியர்த்தது. அவன்

பரிசம் தந்த கிளுகிளுப்பில் அவள் அழுத தொடங்கி விட்டாள்.

''ஏன் செல்லி இப்படி பயப்படறே! இப்போ என்ன நடந்து விட்டது'' — அவன் வேட்கையுடன் கேட்டான்.

''யோவ்.... என்னய்யா நடக்கணும்? என்ன ஆம்புளேயா நீ! நீ என்ன செய்வே? உன்னைச் சொல்லித் தப்பில்லே! எல்லாம் இந்த.. இது.. இது.. இந்தச் சேலை — இந்தக் கவர்ச்சி — இதெல்லாம் என்னுது இல்லேய்யா! என் மானத்தைக் காக்க கட்டிக்கின சேலை இல்லே இது..மானம் போவப் போவுது. எனக்கிருக்கிற பழிசப் புடவையைக் கட்டிகினு யிருந்தா நீ என்னை நெருங்குவியா? எல்லாம் வெளி வேஷம்! 'இந்தக் காலத் துக்கேத்தாப்போலே இப்படித்தான் சிங்காரிச்சுக் கோணும்'னு செய்வி புலம்பினா. அது எங்கே கொண்டு போயி நிறுத்தும்னு அவளுக்குத் தெரியுதா? நீ என்னை களங்கப்படுத்தி நிறுத்திட்டினா செய்வி செத்துடும். அவகூட நானும் போயிடுவேன்! போய்யா.. போ! இந்தச் சேலையை நம்பிக்கினு வீணா நிக்காதே! நான் உனக்கு ஏத்தவ இல்லே!'' — அவள் குரல் கரகரத்தது. அதில் தொனித்த ஆவேசச் சூடு அவன் நெஞ்சைச் சுட்டது. தலையைத் தாழ்த்திக் கொண்டான்.

''செல்லி! உன்னை இந்த நிமிடம் முதல் என்னுடைய வளாக ஏற்றுக் கொள்கிறேன். அந்தத் துணிவு எனக்கு வந்து விட்டது. 'இக்காலத்துப் பெண்களுக்கு நீ ஒரு மாதிரியானவள்'னு நான் தெரிஞ்சுகிட்டேன். உன் மனநிலையை உணரத்தான் நான் உன்னை நெருங்கினேன். என்னை மன்னிச்சுடு! நீ ரொம்ப உயர்ந்தவ. என்னை நம்பு'' என்றான் அவன்.

''இதெ அந்த செய்விகிட்டே சொல்லு'' என்றாள்.

கிழவிக்குத் தன் காதுகளை நம்ப முடியவில்லை.

'என்ன இருந்தாலும் செல்லி அதிர்ஷ்டக்காரி!' — புளகாங்கிதமடைந்து சரோஜாவைச் சந்திக்க ஓடி வந்தாள்.

''சரோ...சரோ...என்னடி செஞ்சே நீ.. மந்திரம் மாயம்? இது எப்படி முடிஞ்சுது!'' — ஆச்சரியத்துடன் கேட்டேன் நான்.

''எல்லாம் முடியும். நைலக்ஸ் புடவை என்ன..'கட்' சோளி என்ன..தலையிலே கொண்டை என்ன..என்ன என்ன! அது மட்டுமா? ஆறேமுக்கால் ரூபாயாக்கும் 'பிரேஸியர்'! இன்னும் என்ன வேண்டும்?'' என்று சிரித்தாள்.

''பசங்களை நல்லா புரிஞ்சு வெச்சிருக்கேடி நீ.... எல்லாம் நாகரிகம்'' என்றேன் நான்.

''அந்தப் புள்ளே சம்மதிச்சுட்டான். நான் மட்டும் 'இந்தப் பொண்ணுக்கு சொத்து கொஞ்சம் இருக்கு'ன்னு பைத்தா பையன்கிட்டே சொல்லி அவன் காதிலே போடாட்டா அவன் சம்மதித்து இருப்பானா'' என்று கிழவி நிம்மதிப் பெருமூச்சு விட்டாள்.

''பட்டணத்திலே வாழறவளானு, நான் நெருங்கித் தொட்டப்போ அழுது மறுக்காமே — அந்தக் கோணத் துக்காகத்தான் நான் கட்டிக்கிறேன். 'இந்தக் கவர்ச்சி' எனக்கு வேணும்னு உண்மையைச் சொல்லிச்சே! அது என் மனசைத் தொட்டுச்சு'' என்று பைத்தாவிடம் சொல்லி மகிழ்ந்தான் சின்னய்யன்.

ஒரு விசனக் கவிதை

ஒன்று!
போதும்.
இரண்டு!
போதுமே
மூன்று!
கேட்கவில்லையா நான்
சொல்வது?


நான்கு!
இரக்கமில்லையா உனக்கு?
ஐந்து!
உன் நெஞ்சம் கல்லா?
ஆறு!
உன் காலில் விழுந்து
கெஞ்சுகிறேன்.

ஏழு!
அட பாழாய்ப் போன
கடிகாரமே!
சொல்லச் சொல்ல
அடித்துத் தொலைத்து
விட்டாயே ஏழு!

எழுந்து தொலைக்கிறேன்
படுக்கையிலிருந்து!

—போர்த்திக் கொண்டு
படுத்திருந்த ஒருவரின்
விசனக் கவிதை

—ஜி. ராஜாராம்



அப்பா கேட் பணம்



கணேஷின் ஸ்கூட்டர் மூன்று முறை ஹாரன் கொடுத்து அழைத்தது. சிந்தனு கற்சிலே போலவே நின்றிருந்தாள்.

கணேஷ் ஸ்கூட்டர் எஞ்சினைச் சமாதானப் படுத்திவிட்டு, ஸ்டாண்ட் போட்டுத் தூக்கி நிலே நிறுத்திவிட்டு சிந்தனுவை நெருங்கினுன்.

''உங்கப்பா வெச்ச பேரு சரிதான்'' என்று காதருகில் சென்று கிசுகிசுக்கவும், சிந்தனு துணுக்குற்றுத் திரும்பி, ''ஓ! நீங்களா.... வந்துட்டீங்களா?'' என்று கேட்டவாறே ஓடிச் சென்று ஸ்கூட்டரிடம் நின்ருள்.

உத்யோக புருஷிகளின் 'மூட்ஸ்' பற்றி உணர்ந்தவனுன கணேஷ் வேறு ஒன்றும் பேசாமல் அவளேத் தொடர்ந்து சென்று ஸ்கூட்டரில் ஏறிக் கொள்ளவும், பின் சீட்டில் சிந்தனு அமர்ந்து கொள்ளவும் ஸ்கூட்டர் சீறிக் கொண்டு பாய்ந்தது, அவர்கள் மனம் போல.

இன்று சிந்தனுவின் 'மூட்ஸ்!'

ஏதாவது கவலேயா?

கச்சேரிப் படி தாண்டி எம். ஜி. ரோடில் திரும்பி ஓடிக் கொண்டிருந்தது ஸ்கூட்டர். ஸ்கூட்டரின் எஞ்சின் ஒலியைத் தவிர இருவரிடமும் பேச்சு மூச்சு இல்லே.

ஹோட்டல் உட்லண்ட்ஸின் வாசலில் ஸ்கூட்டர் நின்று, கணேஷ் காலே ஊன்றிக் கொண்டு, சிந்தனுவை இறங்கச் சொன்னுன்.

''ஏன்..?''

''சும்மா எறங்கு..ஒரு சேஞ்ச்....''

''வீட்டிலே..''

''அட, சும்மா எறங்கு மாடம்! உட்லண்ட்ஸ் காபிதான் எப்படி இருக்குன்னு பார்க்க வேணுமா...?''

—இருவரும் உள்ளே சென்று அமர்ந்தார்கள். கணேஷ் வெயிட்டரிடம் ஆர்டர் கொடுத்தான்.

''ஏது.. இன்னிக்கு இத்தனே குஷி! ஏதாவது ப்ரமோஷனு?''

''சேச்சே..! எங்க ஃபாக்டரியிலே அத்தனே கருணே உள்ளவங்க இன்னும் பொறக்கலே... சும்மா ஒரு இதுக்குத் தான்..''

சிந்தனுவுக்கு கணேஷின் போக்கு புரிந்தது. தன் மனம் படும் கவலேயை உணர்ந்து கொண்டு விட்டார்... 'ஐயையோ..!'

'இப்படி வெளிப்படையாகத் தெரியும் படி நடந்துகொண்டு விட்டோமே' என்று துணுக்குற்ருள். 'என்ன கவலே?' என்று கேட்காமல் விடமாட்டார். கேட்டால் என்னவென்று சொல்வது?



''சாந்தியடைய வழியென்ன சுவாமி?''

''25, 25B, 17C ஆகிய பஸ்களில் ஏறி, அண்ணா சாலையில் போஸ்டாபீசுக்கு எதிரே இறங்கினால், 'சாந்தி'யை அடையலாம் சீடனே!''

—ந. ரவிச்சந்திரன்

●

ஆனால் சொல்லாமலும் விட்டுவிட முடியாதே..! இந்த அப்பா...

அப்பாவானால் எஸ். டி. டி-யில் காதோடு சொல்லிவிட்டார், 'இது உனக்கு மட்டும்தான்' என்று. கல்யாணம் ஆகி வாழும் இந்தச் சின்னக் காலத் துண்டிற்குள் அவள் கணேஷை இன்னும் நூற்றுக்கு நூறு புரிந்து கொள்ளவில்லை. ஏதோ அன்பானவன், நல்லவன்...

இருவருக்குள்ளும் 'டிஃபரன்ஸ்' வந்து விடக்கூடாது என்றே அவளும் ஜாக்கிரதையாகவே இருந்து வருகிறாள். சம்பாதிக்கும் பெண்ணாக இருந்தாலும் அவள் பணியின் பயன் பூராவும் கணேஷுக்குக் கிடைக்கவில்லை இன்னும். அவள் தன் சம்பளத்தில் கட்டுவதாகக் கடன் வாங்கியே கல்யாணம் செய்து கொண்டாள். சம்பளத்தில் கிரஹணம் பிடிப்பதை ஒப்புக்கொண்டுதான் கணேஷ், சிந்தனாவைத் திருமணம் செய்து கொண்டான். அவனுடைய பெரிய மனதை எண்ணி வியந்து கொண்டிருக்கும் அதே சமயம், முழுச் சம்பளமான ரூபாய் ஐநூற்று சொச்சம் மூளியாவதை என்றைக்கு சொல்லிக் காட்டிவிடக் கூடுமோ என்ற பயமும் சிந்தனாவின் சிந்தனையைத் தூண்டிக் கொண்டிருந்தது.

'அப்பா ரொம்ப கஷ்டத்தில் இருக்கிறாராம்' என்று ஆரம்பிக்கலாமா என்ற வாறு எண்ணியபடியே ஸ்வீட்டைச் சாப்பிட்டாள். தலையை இருபுறமும் ஆட்டி விட்டு அந்த எண்ணத்தை ரப்பரால் அழிப்பது போல எண்ணி, 'இன்னிக்கி அப்பா எஸ்.டி.டி-யிலே பேசினார்' என்று பீடிகை போடலாம். 'என்ன சமாசாரம்?' என்று அவரைக் கேட்க வைத்துப் பின் சொல்லலாம் என்று எண்ணியபடியே காரம் சாப்பிட்டாள். கையலம்பிவிட்டு வந்து காபி ஒரு 'ஸிப்' உறிஞ்சிய சமயம் ஒரு 'ஐடியா' உதிக்கவும், சிந்தனா தன் உடலைக் குலுக்கிக் கொண்டு, அகன்ற கண்களால் கணேஷைப் பார்த்தாள். காபியின் மணமும் சுவையும் உடலுள் கலக்கவும் அவள் புன்னகைத்தாள்.

அடிக்கடி சிந்தனாவின் முகத்தையே ஊடுருவிக் கொண்டிருந்தன கணேஷின் கண்கள்... ''அப்பா! இத்தனை நாழி ஆயிற்று சிந்தனை வருவதற்கு? உட்லண்ட்ஸ் காபிதான் மருந்து போலிருக்கிறது'' என்று சொல்லிச் சிரித்தான்.

நோட்டைத் தட்டில் வீசிவிட்டு இருவரும் வெளியே வரும்போது ஒரு சகஜமான கலகலப்பு அவர்களிடையே காணப்பட்டது. ஸ்கூட்டர் ஸ்டார்ட் ஆகிக் கிளம்பியது. ஜோஸ் ஜங்ஷனைக் கடந்தவுடன் மீண்டும் 'பார்த்தாஸ்' வாசலில் நின்றது.

மீண்டும் ''ஏன்?''—சிந்தனாவிடமிருந்து.

''உஷ்..!'' -கணேஷிடமிருந்து. அந்த 'உஷ்'ஷும் ஒரு கோணல் புன்னகை, கண்ணடிப்புடன் வந்தது. சிந்தனா சிரித்து விட்டாள்.

இருவரும் கடைக்குள் நுழைந்தார்கள்.

'ஏதுக்காம்....?' என்று கண்களாலேயே கேள்விக் கொக்கி போட்டாள் சிந்தனா.

அதற்குப் பதிலும் கண்கள் சிரித்தது தான். நேரே ஃபாரின் ஸாரீஸ் பகுதிக்குப் போய், புதிதாகத் தெரு விளக்குக் கம்பங்களில் எல்லாம் வரிசையாக விளம்பரம் செய்யப்பட்டிருந்த சார்மிஷன் கிஷ்கிஷ் புடவையின் கொத்துகளை மலர்விக்கச் செய்தான்.

''ஐயையே...!'' என்றாள் சிந்தனா.

''நீதானே பத்து நாட்களுக்கு முன்னே சொன்னே?''

''நான் என்ன சொன்னேன்? 'பார்க்கவி கட்டிக்கிட்டிருந்தா... அவ புருஷன் ஆசையா வாங்கிக் குடுத்தானும்' என்று... அதுகூட உங்க கண்ணை உறுத்திச்சே கொஞ்ச நேரம்.. அதற்காகச் சொன்னேன்...''

''அப்ப உனக்கு வேண்டாமாக்கும்?''

''வாங்க, வீட்டுக்குப் போகலாம்..'' —சிந்தனாவின் இந்தத் திடீர் மாறுதல்

கணேஷுக்குப் புரியவில்லை. ''இரு இரு... புடவை நன்றாக இருக்கிறது'' என்று சொல்லிவிட்டு, 'வேண்டாம் என்கிறாயா...?' என்று உள்ளுக்குள் செல்லமாகக் கறுவிக் கொண்டான் கணேஷ். 'அப்படியானால் புடவை வர்ணனை ஒரு இதுக்காகவா...?' கணேஷும் இன்னும் மனைவியைப் பாதாதிகேசம் புரிந்துகொள்ள முடியவில்லை. அழகாக இருந்தாள். இனிக்கிறாள். வெளிச்சம் இருட்டு எல்லாம் ஒரே அன்பாக நடந்து கொள்கிறாள். சம்பாதிக்கிறாள்.. இதற்கு மேல்..? மனம் குணம்..இவற்றை அறிய எந்த 'கோப்' பும்...'ரே'யும் இன்னம் கண்டுபிடிக்கப் படவில்லையே!

கடைச் சிப்பந்தியிடம் மன்னிப்புக் கேட்டுவிட்டு, அவனுடைய பரிசாகக் கண் சிமிட்டலை ஜீரணித்துக் கொண்டு நாணத்துடன் ஸ்கூட்டரை உதைத்தான். அவனுடைய கோபம் உதைப்பில் தெரிந்தது. அதை ஸ்கூட்டர் பிரதிபலித்தது. சிந்தனா பேசாமல் சலனமில்லாமல் வந்து பின்சீட்டில் அமர்ந்து கொண்டாள்.

ஸ்கூட்டர் பள்ளிமுக்குத் திரும்பி வளஞ்சம்பலம் வழியாக ஓவர்-பிரிட்ஜை அடைந்தது.

சிந்தனா - கணேஷ் எர்ணாகுளத்தில் தான் பணியாற்றி வந்தார்கள். சிந்தனாவுக்கு ஏதோ ஒரு போர்டில் வேலை. கணேஷுக்கு களமஸ்ஸேரியில் ஒரு ஃபாக்டரியில் வேலை. வீடு எர்ணாகுளம் ஓவர் -பிரிட்ஜின் அடியில் ஒரு புதுப்புரத்தில் புதிய மாடல் வீட்டில். அவர்கள் புதுக் குடித்தனம் நடத்தி வந்தார்கள்.

சிந்தனாவின் தந்தை சென்னையில் ஒரு பெயர் தெரியாத கம்பெனியில், வெளியில் சொல்லக் கூச்சப்படும் சம்பளத்துடன் ஐந்து குழந்தைகளைப் படிக்க வைத்துப் பசி போக்கிக் கொண்டிருந்தார். மூத்த பெண் சிந்தனாவுக்குக் கேரளத்தில் வேலை கிடைத்து ஹாஸ்டல் ஒன்றில் தங்கியிருந்தாள்.

கணேஷும் களமஸ்ஸேரியில் வேலை கிடைக்கவும், தமிழ்நாட்டை விட்டு



எர்ணுகுளம் வந்து ரவிபுரத்தில் ஒரு பிரம்மச்சாரி லாட்ஜில் ரூம் எடுத்து வசித்து வந்தான். காதல்...கத்தரிக்காய் என்பதற்கு வழியில்லே. ஏதோ ஒரு விபத்துகூட அவர்களேச் சேர்க்கவில்லே. முறைப்படி ஜாதகம் பார்த்துக் கல்யாணம் நடந்தது.

வீட்டிற்கு வந்தவுடன் காபி போட வேண்டிய வேலே யில்லாததால், சிந்தனு சற்று சாவகாசமாகவே உடை மாற்றிக் கொண்டு இரவு சமையலுக்கு ஆரம்பித்தாள். கணேஷ் வெளியே சென்று காய்கறி வாங்கி வந்து வைத்து அதை நறுக்கத் துவங்கினன். சிந்தனுவின் சிந்தனே வேலே செய்துகொண்டே யிருந்தது. காஸ் எரியும் நீலத்தில் இருந்து அப்பாவின் வாடிய முகம் தெரிந்து கொண்டே யிருந்தது.

அப்பாவின் விண்ணப்பத்தை எப்படியும் பூர்த்தி செய்துவிடத்தான் அவள் மனம் துடித்தது. ஆனல் இன்று அவள் தனித்து ஏதும் செய்துவிட முடியாத சிந்தனு கணேஷ் ஆயிற்றே.

''த்சொ..'' என்று வாயால் சூள் கொட்டிக் கொண்டாள்.

''என்ன சிந்தனு? இன்னிக்கு எல்லாம் புதுச்சாவே இருக்குதே..! மனசுக்குள்ளே எண்ணங்களேப் போட்டுத் திணிச்சிக்கிட்டு ஏன் திண்டாடறே? டேக் இட் ஈஸி. என்னண்ட சொல்லக் கூடியதானு எதையும் சொல்லு! எல்லாத்தையும் சொல்லலாம்... தட்ஸ் ஆல்...''

''உங்ககிட்ட சொல்லாததுன்னு எனக்குன்னு ஒண்ணுமில்லே. இந்த அப்பாதான்....எஸ். டி. டி. கெடச்சதுன்னு இன்னமும் தொண தொணக்கறுரு...''

''பொண்ணுமேலே அத்தினி அன்பு... பிரியம்.. பிரிய மனமில்லாதெ, கொரலே யாவது கேட்டுக்கிட்டு இருக்காங்க..''

''கொரலேக் கேக்க மட்டும் இல்லே; இன்னமும் பாருங்க.. மழை விட்டும் தூவானம் விடாமெ...''

''நீ என்ன சொல்ல நெனேக்கறே... ஒங்கப்பா ஏதாவது திட்டினுரா?''

''திட்டினு இனி யாரு கவலேப்படறுங்க..வந்து.. பொண்ணேச் சம்பாதிக்க விட்டாலே இப்பிடித்தான் போல இருக்குது.. ஒட்டக் கறக்கற சுபாவம். வெல்லப் பிள்ளேயாரைக் கிள்ளியே அவருக்கு நைவேத்தியம் பண்ருப்பலேயே... எங்க ஆபீசிலே மேரேஜ் லோன் வாங்கிக் கல்யாணம் பண்ணி, அந்தக் கடனே நம்மையே கட்ட வெச்சார். நீங்களும் சம்மதிச்சீங்க. அந்தக் கடனே நாம்ப இன்னம் எத்தினி வருஷம் கட்டணுமோ தெரியலே... இன்னமும் கஷ்டமாம்..''

''அப்பாவைத் திட்டிப்பிட்டேன்னு தெரியறது.. விஷயத்துக்கு வா..''

''விஷயம் என்ன? இப்ப அவருக்கு திடீர்னு ஐநூறு ரூபாய் வேணுமாம்! ரொம்ப அவசரமாம். தலே போறதாம். மாப்பிள்ளேக்குத் தெரிஞ்சா கேவலமாம்... நீங்க அவரைக் கொறச்சு மதிப்பேளாம்...கெஞ்சரூர்..''

''நீ என்ன சொன்னே..?''



எங்கள் தொழிற்சாலேயில் காலே ஷிஃப்ட் பார்த்துக் கொண்டிருந்தேன். இயந்திரங்கள் மும்முரமாக வேகமாய் இயங்கிக் கொண்டிருந்தன. நல்ல குளிராதலால் தொழிலாளிகள் கம்பளிச்சட்டை, காது மூடின முண்டாசு சகிதம் வேலே பார்த்துக் கொண்டிருந்தனர். நான் மேற்பார்வையாளனுக அங்குமிங்கும் சரிபார்த்துக் கொண்டிருந்தேன். திடீரென்று ஓர் இளேய வயது தொழிலாளி 'அவுட் அவுட்' என்று சந்தோஷமாகக் கத்தினுர். 'என்ன அவுட், யார் அவுட்' ஒன்றும் புரியவில்லே. எல்லாரும் அந்தத் தொழிலாளியின் அருகில் ''என்ன? என்ன?'' என்று கேட்டவாறு ஓடினேம். கத்தின அந்தத் தொழிலாளிக்கும் சட்டென்று ஒன்றும் புரியவில்லே. ஆனல் ''கானன் அவுட். இன்னெரு பிளேயர் அவுட்'' என்ருர் சந்தோஷமாக! ''எப்படிய்யா உனக்குத் தெரியும்?'' என்று கேட்ட பிறகு, வேறு வழியில்லாமல் காதோடு சேர்த்து முண்டாசுக்குள் வைத்துக் கட்டியிருந்த பாக்கெட் டிரான்சிஸ்டரை எடுத்துக் காட்டினுர்.

—கே. நடராஜன்



கத்தினேன் காய்கறிக்காரரிடம்:
''ஏனய்யா இந்த ஏமாற்று வேலே?
மூணு ரூபாய் முழுசாய்க் கொடுத்து
முந்தா நாள் வாங்கினேனே உம்மிடம்!
அதை அரிவாள்மணையில் அரிந்து
பார்த்தேன்
ஒன்றுமே உள்ளே இல்லேயே?''
பதருமல் பதில் தந்தார் மனிதர்:
''எத்தன் இல்லே நான், ஏமாற்றவில்லே
சொல்லித்தானே கொடுத்தேன்
'காலி' ப்ளவர் என்று!''

—ஜி. ராஜாராம்

''நான் என்னத்தெ சொல்றது...? "இங்கயும் ரொம்ப கஷ்டம். என்னை நம்பவாண்டாம்'னு நாசூக்கா சொல்லிட்டேன்.''

''என்ன இருந்தாலும் நீ ரொம்ப மோசம். உன்னை வளர்த்து ஆளாக்கி படிக்க வெச்சு நல்ல சம்பளத்துலே உத்யோகம் பண்ணி வெசசு, முழுசாக்கி எனக்குக் குடுத்திருக்காரே, அவருக்கு சொல்ற பதிலா இது! நீ வழக்கமான சராசரிப் பொண்ணு மாதிரிகூட நடந்துக்கல்லியே... சீ...! நன்றி யில்லாத...''

''ஏன் நிறுத்திப்பிட்டீங்க? நன்றி யில்லாத...ஆமாம்! எந்தப் பொண்ணும் கல்யாணம் ஆறவரைக்கும்தான் பிறந்த வீட்டுக்குச் சொந்தம். அப்புறம் எங்க வீடுங்கறது இதுதான். இங்கே உள்ள சுகதுக்கம்தான் பாதிக்கும்..''

''என்ன இருந்தாலும் நீ இப்படி மூஞ்சிலே அடிச்சாப்பலே சொல்லி யிருக்கக்கூடாது. 'பாக்கறேன்'னு சொல் லிப்புட்டு எங்கிட்டே கேட்டுக்கிட்டு சொல்லியிருக்கலாம். ஆல் ரைட்... துப்பின வார்த்தையை மீட்க முடியாது. பாவம்! அவர் என்ன பாடுபடுறாரோ? சக்திக்கு மீறி நம்ப கல்யாணத்தை நடத் தினரு. ம்ஹ்.. பெண்கள் பெண்கள் தான்! சுத்த ஒட்டுவாரொட்டிகள்..''

—கணேஷின் மனம் சிந்தனுவை, அவளு டைய நன்றியின்மையை, கருணையின்மை யைச் சபித்தது. அன்றையப்போது இந்தச் சிந்தனையிலேயே கழிந்தது.

மறு நாள் காலேயில் வழக்கம் போல சமைத்துச் சாப்பிட்டு ஆபீசுக்குக் கொண்டு இறக்கிவிட்ட கையுடன் கணேஷ், சிந்தனுவின் கையில் ஒரு கவரைக் கொடுத்தான்.

''இந்தா சிந்தனு! இதிலே ரூபாய் ஐநூறு இருக்கு... நீ அந்தப் புது மோஸ்தர் புடவைக்கு ஆசைப்பட்டியே, வாங்கித் தரலாம்னு தயாராக்கிக் கொண்டு வந்தேன். இதை நீ உன் இஷ்டப்படி செய்யலாம். புடவை வேணுமின்னு பார்த்தாஸில் வாங் கிக்கோ! இல்லே, அப்பாவுக்குக் கஷ்டம்னு கேட்டுட்டார். நாம்ப ஒரு மனுஷாள் இருக்கோம்னு தைரியத்துலே கேட்டிருக் காரு; அனுப்பறதுன்னு அனுப்பு; எனக்கு ஆட்சேபணை யில்லே...'' என்று ஸ்கூட்டரை உதைத்துக் கொண்டு புறப்பட்டு விட்டான் கணேஷ்.

சிந்தனுவின் நிலே இருதலேக்கொள்ளி எறும்பு ஆகிவிட்டது. அவள் தன் கணவனின் நோக்கம் என்ன என்பதை நோட்டம் விட இப்படி ஒரு வெறுப்பு நாடகம் ஆடினுள் என்பதாக கணேஷ் தப்பாகப் புரிந்துகொண்டு, இப்படி தன்னையே ஒரு 'டைலமா'வில் நிறுத்தி விட்டாரோ என்று சந்தேகித்தாள்.

கணேஷ் இப்படிச் செய்து விட்டதன் மூலம் தனது முகமூடியை இன்னும் இறுகப் போர்த்துக் கொண்டு விட்ட தாக அவளுக்குப் பட்டது. திணறினுள். ஒரு முடிவுக்கும் வரக்கூடவில்லே.

அன்றைக்கே அப்பா கணக்குக்கு மெயில் டிரான்ஸ்ஃபர் செய்துவிடத் துடித்தாள். 'அப்படிச் செய்தால் கணவருக்குத் தன் வேஷம் புரிந்து போய் விடும். இல்லே, நேரே சென்று நேத்து பார்த்த அந்தப் புடவையை வாங்கி வந்து கட்டிக் கொண்டு பார்க்கவி போன்ற பெண்களின் பாராட்டுதல் களைப் பெறலாம் என்றாலும்..கணேஷ் முன்னரே தன்னை ஒரு நன்றியில்லாத ஜன்மமாகக் கருதிவிட்டால்...?' சிந்தனு வின் சிந்தனை அவளுக்கு நல்ல முடிவு காட்டவில்லே. திணறினுள்.. 'பாவம்! அப்பாவுக்கு என்ன கஷ்டமோ?'

மூன்ருவது நாள் டெலிபோன் ஆபரேட்டர், ''மிஸ் சிந்தனு...நிங்கள்கு ஃபோன். நிங்கள்ட அச்சனுண.. எஸ். டி. டி.'' என்று விளிக்கவும், சிந்தனு

நூற்றாண்டு விழா காணும் கவிஞர்

''உங்களுக்கு 'ஸர்' பட்டம் வழங்க பிரிட்டிஷ் அரசாங்கம் விரும்புகிறது.'' இவ்வாறு பஞ்சாப் கவர்னர் கூறினதும் அந்தக் கவியரசரின் முகத்தில் புன்னகை அரும்பிற்று.

''ஐயா, ஒரு நிபந்தனை. எனக்கு பாரசிகமும் அரபுமொழியும் கற்றுக் கொடுத்த ஆசான் ஒருவர் இருக்கிறார். மௌல்வி மீர்ஹஸன் என்று அவருக்குப் பெயர். அவருக்கு 'ஷம்சுல் உலமா' என்ற விருதை முதலில் வழங்குவதாக இருந்தால் நான் 'ஸர்' பட்டத்தை ஏற்றுக் கொள்கிறேன்'' என்றார் கவிஞர் இக்பால்.

''அப்படியா! உங்கள் குருதேவரின் திறனை விளக்க முடியுமா? அவர் ஏதாவது புத்தகம் எழுதி இருக்கிறாரா?'' என்று கவர்னர் கேட்டார்.

''எழுதி யிருக்கிறார். அது உயிருள்ள புத்தகம். முகம்மது இக்பால் என்று அதற்குப் பெயர்'' என்று அடக்கமாகக் கூறி, தம்மை உருவாக்கியவருக்கு நன்றி செலுத்தினார் இக்பால்.

தேச விடுதலை இயக்கம் நடந்து கொண்டிருந்த காலத்தில் கவி இக்பாலின் 'ஸாரே ஜஹா(ன்)ஸே அச்சா இந்துஸ்தான் ஹமாரா' என்ற பாடல் முழங்காத வடபாரத மேடையே கிடையாது. இந்த வரியை அப்படியே தமிழாக்கம் செய்ததுபோல் பாரதியார் 'பாருக்குள்ளே நல்லநாடு; எங்கள் பாரத நாடு' என்று பாடியிருக்கிறார். இரண்டு கவிஞர்களும் ஒரே மாதிரி சொற்களைப் பயன்படுத்தியிருப்பது அதிசயம்தானே!



கவி இக்பால் மரணப் படுக்கையிலிருந்தபோது, தம்மை அன்புடன் வரவேற்று மகிழ்ச்சியுடன் உரையாடியதை நேருஜி தம் 'டிஸ்கவரி ஆஃப் இந்தியா'வில் நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டிருக்கிறார்.

—தி. சா. ராஜு

விழித்தாள். 'அப்பா விடமாட்டார் போலிருக்கிறதே! கேட்டால் என்ன சொல்வது? என்ன அவசரம் இருந்தால் மீண்டும் மீண்டும் இப்படித் தொடர்ந்து கூப்பிடுவார்...' என்று எண்ணியபடியே, ''ஹலோ'' என்றாள்.

''நீ அனுப்பிச்ச டி. எம். ஓ. ஐநூறு ரூவா கெடச்சதும்மா.. இது கடன் தாம்மா. சீக்கிரம் அனுப்பிச்சுடறேன். நீயும் மாப்பிள்ளையும் தீர்க்காயுசா..'' —எஸ்.டி.டி. 'கட்' ஆகி போன் முணுமுணுத்தது. சிந்தனுவுக்கு ஏதும் புரியவில்லை.

சில கணங்களுக்குப் பிறகு தன் நிலையடைந்தபோது, இது கணேஷின் வேலையாயிருக்கும் என்பதை அறிந்தாள். கண்களில் நீர் வந்தது. தனக்கு வாய்த்த கணவன் மனிதர் இல்லை, தெய்வம் என்று நினைத்துக் கொண்டாள். 'நீங்கள் அனுப்பினீர்களா?' என்று எப்படிக் கேட்பது? கேட்காவிட்டால் அப்பாவின் இமேஜ் பாதிக்கப்படும். இதிலும் ஒரு 'டைலமா?'

மாலையில் சீட்டை விட்டு எழும்போது ஒரு போன். ''நிங்கள்ட ஹஸ்பண்ட்'' என்று கண்ணைச் சிமிட்டினாள் ஆபரேட்டர் விஜயலட்சுமி.

கணேஷ் உற்சாகமாகப் பேசினான்:

''நீ பஸ்ஸிலேயே வீட்டுக்குப்போயிடு, இங்கே ஒரு பார்ட்டி.. வராத பாக்கி போனஸ் மொத்தமா வந்ததை ஒட்டி. ராத்திரி வர நாழியாகும்....''

''சரி.''

''பை த பை.. போறச்சே பார்த்தாஸ்லே அந்தப் பொடவையை வாங்கிண்டு போயிடு. மூணு நாளா பணத்தை அடைகாத்தது போதும்!''

....

''என்ன..! எதுக்கா....? எல்லாம் உனக்குத்தான். உங்க அப்பாவுக்கு உன் பேராலே டி.எம்.ஓ. போயிட்டுது.''

'.........'

''யாரு.... நான்தான்.... எங்க அப்பான்னா என்ன? ஓங்க அப்பான்னா என்ன? சரிதானே... டாடா...பை.''

ஹார்லிக்ஸ்



ஒவ்வொரு நாளும் ஆரோக்கியத்தைப் பாதுகாத்து, எதிர்ப்புச் சக்தியை வளர்க்கும் ஊட்டச் சக்தி.


ஒவ்வொரு நாளும் ஹார்லிக்ஸ் அருந்தினால், அது உங்கள் குடும்பத்தினருக்கு எதிர்ப்புச் சக்தியை வளர்க்கும் ஊட்டச் சக்தியை அளித்து, அவர்களை பூரண ஆரோக்கியத்துடன் விளங்கச் செய்கிறது.

உலகமெங்கிலும் டாக்டர்களால் சிபாரிசு செய்யப்படுவது ஹார்லிக்ஸ் ஒன்றுதான். தனிச்சிறப்பு மிக்க ஹார்லிக்ஸ் செய்முறை, ஹார்லிக்ஸில் அடங்கியுள்ள சத்துமிக்க, சுத்தமான பொருள்களை கலக்கும்பொழுது, அவற்றிலுள்ள இயற்கையான, நல்ல தன்மைகளை நிறுத்தி, அவற்றை எளிதில் ஜீரணிக்க வகை செய்கிறது. அதனால், மிகுந்த அளவில் ஊட்டச்சக்தியை அளிப்பதும் ஹார்லிக்ஸ் ஒன்றுதான்.

அதனாலேயே, சுசித்ரா ஹார்லிக்ஸை தனது குடும்பத்தினரது வாழ்க்கையின் ஒரு அம்சமாக்கி இருக்கிறாள்.

சுசித்ராவைப் போன்றே, உங்கள் குடும்பத்தினருக்கும் ஒவ்வொரு நாளும் ஹார்லிக்ஸ் அளித்து, அவர்கள் ஆரோக்கியமாகவும், வலுவுடனும் வளருவதைக் கவனியுங்கள்.

"ஊட்டச்சத்திக்கு ஹார்லிக்ஸ் ஒரு முக்கியமான மூலப்பொருள். உங்களுடைய குடும்பத்தினரின் எதிர்ப்புச் சக்தியை வளர்க்கவும், அவர்களை ஒவ்வொரு நாளும் ஆரோக்கியமாக வைத்திருக்கவும் நான் ஹார்லிக்ஸையே சிபாரிசு செய்கிறேன்"



ஹார்லிக்ஸ்

முழுமையான ஊட்டம்பெற

ஹார்லிக்ஸ் ஒரு பதிவு பெற்ற ட்ரேட் மார்க்

"எங்க சொர்ணத்துக்கு நீங்க ஒண்ணும் வாங்கித் தரவேணும். நகை நட்டு புடவை மேலேயெல்லாம் அவளுக்கு ஆசையே இல்லே...வாரத்துக்கு ஒரு சினிமாவுக்குக் கூட்டிக்கிட்டுப் போயிடுங்க..அது போதும்..அவளுக்கு வயிறு கூடப் பசிக்காது... வஞ்சகமில்லாமெ நீங்க சொல்றபடி யெல்லாம் கேப்பா..'' என்று கூறிய கிழவி—

பொக்கை வாய் நிறையச் சிரித்தாள். பிறகு இடது பக்கமாகத் திரும்பிப் பார்த்தாள்.

ஈச்சம்பாய் தட்டிக்குப் பின்னல் தன் முகத்தைத் தவிர உடல் முழுவதையும் மறைத்துக் கொண்டு நின்றிருந்த சொர்ணம்—

இப்போது முகத்தையும் பின்னுக்கு இழுத்துக் கொண்டு 'கலகல'வென்று சிரித்தாள்.

அந்தச் சிரிப்பு, குப்பண்ணனின் செவிகளில் தேன் மழையாகப் பெய்தது. இதற்கு ஈடாக ஒரு கோடி ரூபாயே தரலாம்...கேவலம் வாரத்துக்கு ஒரு சினிமாதானு பிரமாதம்...!

ஆனாலும் சொர்ணத்துக்குக் கொஞ்சம் போக்குக்காட்டி விளையாட வேண்டும் என்று ஆசைப்பட்டான்.

''பாட்டி, எங்க கிராமத்திலே சினிமா கொட்டாய் கிடையாது. அப்பறம் வாரத்துக்கு ஒரு சினிமா எப்பிடிப் பார்க்கிறதாம்..?'' என்று கேட்டபடி ஈச்சம்பாயின் பக்கமாகப் பார்த்து அழகு காட்டினன்.

கிழவிக்கும் குஷி..?''கேட்டியாடி பொண்ணே...ஒன் புருஷன் ஊர்லே சினிமா கொட்டாய் இல்லியாம்...'' என்ருள்.

''அங்கே இல்லாட்டி என்ன...? பக்கத்து ஊர்லே—பள்ளபட்டியிலே— போன மாசம்தானே டெண்ட் போட்டிருக்காக...அவுக ஊர்லேயிருந்து சைக்கிள்லே ஒருமிதி.'' என்று சொர்ணத்திடமிருந்து பதில் வந்தது.

''அடி என் ராசாத்தி மவளே....உன் கிட்டேயா பேசி ஜெயிக்க முடியும்?'' என்று தன் பேத்தியின் சாமர்த்தியத்தைப் புகழ்ந்தவாறே

வாரத்துக்கு ஒரு சினிமா

டி.கே.டி.துரைராசன்



குப்பண்ணனைப் பார்த்தாள் அந்தப் பொக்கை வாய்க் கிழவி.

குப்பண்ணனே கிளுகிளுப்பின் உச்சியில் இருந்தான். மனைவியாக வரப் போகும் சொர்ணத்தின் சிரிப்பில் ஒரு போதை...பேச்சில் ஒரு மயக்க வெறி... அப்படியே ஓடிப் போய் சொர்ணத்தை அள்ளி அணைத்துக் கொள்ளவேண்டும் என்று மனசு துடித்தது.

ஆனல் பக்கத்தில் அவனுடைய அம்மா இருக்கிறாளே...!

இருட்டி விட்டது. எதிர் காற்று வேறு. ஓடிசலான பாதையின் நெடுக மேடும்-பள்ளங்களும்.

சைக்கிள் கேரியரில் சொர்ணத்தை வைத்துக் கொண்டு மிதிப்பது குப்பண்ணனுக்குச் சிரமமாக இருந்தது. மூச்சு வாங்கியது.

ஆனல் சொர்ணத்துக்கு அதைப்பற்றிய சிந்தனையே இல்லை. அவள் கவலையெல்லாம் 'சைக்கிள் மெதுவாகப் போகிறதே' என்பதுதான்.



''கொஞ்சம் வேகமா போ மச்சான்'' என்றாள்.

குப்பண்ணன் மெதுவாகவே மிதித்தான். அவனுக்குச் சரியான கோபம். எரிச்சல். 'சினிமா சினிமா' என்று உயிரை வாங்குகிறாள்.

அவர்களுக்குக் கல்யாணம் நடந்து இரண்டு மாதங்கள் ஓடி விட்டன. கல்யாணமான ஜோரில் முதல் ஓரிரு வாரங்களுக்கு சொர்ணத்தை மகிழ்ச்சியோடு சினிமாவுக்கு அழைத்துக் கொண்டு போனன் குப்பண்ணன். பிறகு 'அந்த வேலை... இந்த வேலை...' என்று சால்ஜாப்பு சொல்லத் தொடங்கினன். ஆனலும் சொர்ணத்தின் வற்புறுத்தலுக்காக முக்கி முனகிக் கொண்டு அழைத்துச் சென்றான். இன்றோ உடம்பு சொல்லமுடியாத அசதி. ஆனலும் சொர்ணம் விடவில்லை. ஒரேயடியாக, சினிமாவுக்குப் போய்த்தான் தீர வேண்டுமென்று ஒற்றைக் காலில் நின்று விட்டாள்.

ஏரிக்கரை மேட்டில் சைக்கிள் ஏறியதும் தூரத்தில் சினிமாக் கொட்டகையின் விளக்குகள் தெரிந்தன. அந்த வெளிச்சத்தில் கூட்டம் சற்று அதிகமாக இருப்பதும் தென்பட்டது.

ரிலீஸான ஓரிரு மாதங்களுக்குள்ளேயே ஒரு புதுப்படம் வந்து விட்டிருக்கிறது.

''மச்சான் .. மச்சான் .. கூட்டம் ஜாஸ்தியா இருக்கும் போலே இருக்கு..'' என்று



கூச்சலிட்டாள் சொர்ணம். அந்தக் கூச்சலில் அலாதியான ஒரு மகிழ்ச்சியும் இருந்தது. ஏனெனில் அவளுக்கு மிகவும் பிடித்த ஹீரோவும்—ஹீரோயினும் நடித்திருக்கும் படம் அது. அதைப் பார்க்கப் பெருங் கூட்டம் கூடுவதில் சொர்ணத்துக்கு ஒரு பெருமை.

''மச்சான்.. கொஞ்சம் சீக்கிரமாப் போயேன் ....'' என்று துரிதப் படுத்தினாள்.

''ஏண்டி இப்பிடிப் பறக்கிறே...? அதான் மிதிக்கிறேனே .. சினிமா ஓடியா போயிடும்...?'' என்று சீறினான் குப்பண்ணன். 'புஸ் புஸ்' என்று மூச்சு இரைத்தது.

''நாம ஆடி அசைஞ்சி போறதுக் குள்ளே எல்லாரும் டிக்கெட் வாங்கிக் கிட்டு உள்ளே போயிடுவாங்க..''

''போகட்டும்....''

''அப்பறம் உக்கார்றதுக்கு வாகான எடம் கிடைக்காது....''

''நின்னுக்கிட்டே பார்ப்போம்.... பேசாமெ வாடி...''

அந்த சமயம் பார்த்து 'சரக்'கென்று ஒரு சத்தம். குப்பண்ணன் சைக்கிளை நிறுத்தினான்.

''என்ன ஆச்சி?'' என்று பதறியபடி இறங்கினாள் சொர்ணம்.

''செயின் அவுந்திரிச்சி..'' என்று குப்பண்ணன் இறங்கி ஸ்டாண்ட் போட்டுவிட்டு சைக்கிள் செயினைப் பார்த்தான்.

அது அவிழ்ந்து விட்டிருக்கவில்லை. அறுந்து விட்டிருந்தது.

''போச்சிடா... செயின் அறுந்து போச்சி....'' என்றான் குப்பண்ணன்.

சொர்ணத்துக்கு உயிரே போய் விட்டாற் போலிருந்தது.

''நீயும் உன் சைக்கிளும்.... பத்து அம்பது கடன்பட்டாவது புதுசா ஒரு சைக்கிள் வாங்கித் தொலைக்கிறது தானே.. ஒட்டை சைக்கிளைக் கட்டிக் கிட்டு மாரடிக்கிறே..'' என்று சாடினாள். குரல், அழுகையில் கரைந்து கொண்டு வந்தது.

குப்பண்ணனுக்கு இப்போது இரண்டு பக்கத்தில் கோபம். ஒன்று சொர்ணத் தின் மீது—மற்றொன்று சைக்கிளின்மீது.

சைக்கிள்கூடப் பரவாயில்லை. வெறும் இரும்பாலானது. அவனுடைய அவஸ்தை அதற்குத் தெரியாது.

ஆனால் இந்த சொர்ணம்... தொட்டுத் தாலி கட்டிய மனைவி..? ஒட்டை சைக்கிளைக் கட்டிக்கொண்டு மாரடிக்கிற புருஷனுக்காக அனுதாபப் படாமல் என்னமாய் எரிந்து விழுகிறாள்..!

''வாயை மூடுடி கழுதே.... பாதி வழியிலே செயின் அறுந்துக்கும்னு எனக் கென்ன ஜோஸ்யமா தெரியும்..?''

''யார் கண்டா..? இன்னைக்கி இவளை சினிமாப் பார்க்க விடறதாவதுன்னு புறப்படறதுக்கு முந்தியே செயினை ஏதாவது பண்ணி வச்சிருப்பே..''

எவ்வளவு பெரிய அபாண்டம்!

பளீரென்று சொர்ணத்தின் கன்னத் தில் ஓர் அறை விழுந்தது.

''அறிவு கெட்ட மூதேவி.. தோட்டத் திலேருந்து வந்தவன் ஒடம்பு அசதிக் காக ரெண்டு செம்பு வெந்நியைக்கூட ஊத்திக்காமெ கூட்டிக்கிட்டு வர்றேன்.. என்னைப் பார்த்தா இப்படிப்பேசறே..?'' என்று வலது கையை மடக்கி—

சொர்ணத்தின் இடது கன்னத்தில் அறையப் போனவன் 'சடக்'கென்று நிறுத்திக் கொண்டான்.

எதிரில் வருகிற சைக்கிள் மணி சப்தம். அது அருகில் வரவுமேதான் தெரிந்தது சைக்கிள்கடை வெள்ளைச் சாமி என்று.


விவரத்தை அறிந்த வெள்ளைச்சாமி தன் சைக்கிளை குப்பண்ணனிடம் கொடுத் தான்.

''தங்கச்சியைக் கூட்டிக்கிட்டு சினிமா வுக்குப்போ குப்பண்ண.. செயினை ஏதா வது பண்ணி சைக்கிளை நான் ஊருக்குக் கொண்டு போயிடறேன்..''

சினிமா தொடங்கி விட்டது.

வேருெரு பெண்ணுய் இருந்தால் என்ன செய்திருப்பாள்? புருஷன் அடித்ததற்கு 'சினிமா வேண்டாம்' என்று ஊருக்குத் திரும்பி யிருப்பாள்; அல்லது சினிமா கொட்டகைக்குள் வந்து படத்தைப் பார்க்காமல் அழுது வடிந்து கொண்டிருப்பாள்.

ஆனல் சொர்ணத்துக்கு அந்த சொரணையே இல்லை.



எதுவுமே நடக்காததைப் போல் மகிழ்ச்சியோடு படத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். குப்பண்ணன் அடித்ததும் கன்னத்தைத் துடைத்து விட்டுக் கொண்டாளே.. அதோடு எல்லாம் போய்விட்ட மாதிரி இருந்தது. சினிமாவின்மேல் அவ்வளவு மோகம்.

இவளை எப்படித் திருத்துவது? இப்போதே குப்பண்ணனின் தாய் திட்ட ஆரம்பித்து விட்டாள். சொர்ணம் அதை லட்சியமே செய்வதில்லை. இதே நிலைமை நீடித்து தாய்க்கும்—மனைவிக்கும் சண்டை வந்தால் அப்போது குப்பண்ணனின் நிலைமை....?

குப்பண்ணன் தீர்மானித்து விட்டான். 'இனிமேல் மாதத்துக்கு ஒரு முறைதான் சொர்ணத்தை சினிமாவுக்கு அழைத்து வரவேண்டும்; அவள் வீம்பு பிடித்தால் அடித்து உதைத்துவிட வேண்டும்.'

இந்தத் தீர்மானத்தோடு அவன் சொர்ணத்தைப் பார்த்தான். அவள் திறந்த வாய் மூடாமல் திரையைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

கலர் படம். காதல் ஜோடியின் டூயட் அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தது.

பதினைந்து நாட்களாகி விட்டன.

சூரியன் மேற்கே உதித்தால் எப்படி அதிசயமாய் இருக்குமோ — அப்படி இருந்தது குப்பண்ணனுக்கு.

'சினிமாவுக்குப் போக வேண்டும்' என்று சொர்ணம் வாயே திறக்கவில்லை. அது மட்டுமல்ல.. அந்த நினைவே இல்லாதவள்போல் அவள் நடந்துகொண்டாள்.

'எப்படி ஏற்பட்டது இந்த மாற்றம்? ஒருவேளை நாம் அன்று அடித்தது காரணமாக இருக்குமோ....? அல்லது அம்மா ஏதாவது சொல்லி சொர்ணத்தை அடக்கி வைத்திருக்கிருளா?'

அம்மாவிடம் தனிமையில் கேட்டான் குப்பண்ணன்.

''நான் ஏண்டா சொல்லப் போறேன்.. ஒன்பாடு.. ஒன் பொஞ்சாதிபாடு.. எப்படியாவது போங்க..'' என்று சொல்லி விட்டாள் அவள்.

அப்படியானல் சொர்ணம் இப்படி மாறியதற்குக் காரணம்..?

காணி நிலத்தில் நெல் அறுவடை முடிந்து கைநிறைய பணம் வந்ததும் குப்பண்ணனுக்கு முதன் முதலில் நினைவுக்கு வந்தது சினிமாதான்.

சொர்ணம் சினிமா பார்த்து ஒரு மாதமாகி விட்டதே.. வீட்டு வேலை... கழனி வேலை என்று மாடாய் உழைத்தாளே.. அந்த உழைப்புக்கு மத்தியில் ஆசை ஆசையாய் அவனுக்குப் பணிவிடைகள் செய்தாளே..!

இன்று அவளை சினிமாவுக்கு அழைத்துச் சென்று விட்டுத்தான் மறுவேலை. அதற்கேற்ற மாதிரி அம்மாவும் வெளியூரில் ஒரு விசேஷத்துக்காகப் போயிருந்தாள்.

''என்ன ஆட்டோ 'எங்கேஜா?'''
''இல்லீங்க ஒல்டு ஏஜ்..!''
—விஸ்வநாதன்



உலகக் குத்துச் சண்டை சாம்பியன் முகம்மது அலி தமது மனைவியிடமிருந்து பிரிந்து வாழ்கிறார். அவர் மனைவி கலீலா புகைப்பட நிபுணர். புகைப்பட நிபுணரானதற்குக் காரணம் முகம்மது அலி விலையுயர்ந்த காமிராவைப் பரிசளித்ததுதான்! கலீலா அலிக்குக் கராத்தே சண்டை தெரியும். அவருக்கு நான்கு குழந்தைகள். எட்டு வருஷம் முகம்மது அலியோடு வாழ்ந்தவர் கலீலா. அலி, வெரோனிகா என்ற பெண்ணை இப்பொழுது மணந்து கொண்டிருக்கிறார்.

—பி. எஸ். எம்.



கழனியிலிருந்து வீடு திரும்பியதும் சொர்ணத்தின் கையில் பணத்தைத் திணித்தான். பிறகு, ''புறப்படு....'' என்றான்.

''எங்கே....?''

''எங்கே போனா உனக்குப் பிடிக்குமோ, அங்கே....''

சொர்ணம் விளங்காமல் வினாக்குறியாகப் பார்த்தாள்.

''ஒண்ணுந் தெரியாத பாப்பா.... சினிமாவுக்குத்தாண்டி,''

''சினிமாவுக்கா..?'' என்று உயிரில்லாமல் கேட்டாள் சொர்ணம்.

''என்னடி..... சினிமாவுக்கான்னு இழுக்கறே?''

''வேணாம் மச்சான்.. சினிமாவுக்கு நான் வரலே.. இனிமே அந்த சனியனே எனக்கு வேணாம்..''என்றாள் சொர்ணம். அவள் கண்கள் கலங்கி, தொண்டைக்குள் ஏதோ அடைப்பது போல் இருந்தது.

அதைப் பார்க்க குப்பண்ணனுக்குப் பரிதாபமாக இருந்தது. அன்று அவள் கன்னத்தில் அவன் அடித்த அடி அவள் நெஞ்சத்தில் விழுந்திருக்க வேண்டும். அதுதான் இப்படி மனம் வெறுத்துப் பேசுகிறாள்.

''இந்தா பாரு புள்ளே...அண்ணைக்கி ஏதோ ஒரு கோபத்திலே அடிச்சிட்டேன்..அதை மனசிலே வச்சிக்காதே.''

''சேச்சே! அதை நான் அப்பவே மறந்துட்டேன்....''

''பின்னே ஏன் சினிமாவுக்கு வர மாட்டேங்கிறே..?''

''பிடிக்கலே....''

''அதான் ஏன் பிடிக்கலே..? வாரத்துக்கு ஒரு சினிமா பார்க்கிறவளாச்சே..''

''அதெல்லாம் முந்தி.....'' என்று நழுவப் பார்த்தாள் சொர்ணம். ஆனால் குப்பண்ணன் விடவில்லை.

''முந்தியோ — பிந்தியோ.. நான் அடிச்சதுக்குக் கோபம் இல்லேன்னா ஏன் சினிமாவுக்கு வரமாட்டேங்கிறே..?''

சொர்ணம் தன் கணவனை ஏறிட்டு அவனது கண்களில் பார்த்தாள். இப்போது அவள் கண்களில் கண்ணீர் திரண்டு நின்றது.

குப்பண்ணன் பதறிப் போனான் ''என்ன புள்ளே...ஏன் அழறே..? என்ன சொல்லிட்டேன் இப்ப..'' என்று அவளை அருகில் இழுத்தான்.

''உண்மையான காரணத்தைச் சொல்றதுக்கு எனக்கு வாய் வரலே தான்.. இருந்தாலும் சொல்லிடுறேன் நாம கடைசியா பார்த்தது காதல் கதை தானே....?''

''ஆமா....''

''அதிலே அந்தப் பொண்ணும் — பையனும் ஒருத்தருக்கொருத்தர் உசிரு குசிரா காதலிச்சி கடைசியிலே கண்ணால கட்டிக்கிட்டாங்க.... அதுக்கப்பறம் சந்தோஷமா இருக்காங்க இல்லே....

''ஆமா....''

''அந்தப் படத்தைப் பார்த்துட்டு திரும்பி வர்றப்ப என் மனசுக்குள்ளே ஒரு நினைப்பு .. 'நாமும் அந்த பொண்ணை மாதிரி ஒருத்தரைக் கா லிச்சு கண்ணாலம் பண்ணிக்கிட்டிருந்தா அந்தப் புருஷன் நம்மளை இப்படி அடி பானா'ன்னு ஒரு நினைப்பு....'' என் சொல்ல வந்ததைச் சொல்லி முடிக் முடியாமல் விம்மி விட்டாள் சொர்ண

குப்பண்ணன் விக்கித்துப் போனான்.

''வேணாம் மச்சான் .. இனிமே சினிமாவுக்கே நான் போக மா டேன்..'' என்று முகத்தை மூடியபடி

தன் மனத்தில் தோன்றிய அந்த ம படிந்த எண்ணத்தைக் கண்ணீரா கழுவிச் சுத்தம் செய்பவளைப்போ அழத் தொடங்கினாள் சொர்ணம்.

புத்தி



தெருவில் தரையில் வரைந்திருந்த சித்திரத்தில் தங்க நிறத்தில் காட்சி யளித்துக் கொண்டிருந்தார் வெங்கடா ஜலபதி. காசைப் போட என் மனம் இணங்கா விட்டாலும் அந்த சித்திரத்தில் உள்ள காசுகளை எண்ணியது. சுமார் நான்கைந்து ரூபாய் இருக்கும். சித்திரக் காரர்களுக்குப் பணத்தை வசூல் செய்து தரும் ஏஜண்டாக அல்லவா தெய்வத்தை மாற்றி விடுகிறார்கள்.

ஓட்டலில் காபி சாப்பிட்டுவிட்டு வந்த என் பாக்கெட்டில், மீதி மூன்று காசு இருந்தது. நான் மாம்பலம் போக வேண்டும்.

இப்போது இரவு எட்டு மணியாக இருந்ததால் அந்தத் தெருவில் ஜன நடமாட்டம் குறைந்திருந்தது. சித்திரக்காரன் எங்கு போயிருப்பானோ, எப்போது வருவானோ தெரியாது. அந்தச் சித்திரத்தின்மீது போடப் பட்டிருந்த காசுகளை நாம் எடுத்துக் கொண்டால் என்ன என்று தோன்றி யது. எவன் எவனோ போட்ட காசுக்கு நாம் சொந்தம் கொண்டாடு வதா என்றது என் மனசாட்சி. எங்கிருந்து வந்தாலும் பணம் பணம் தானே என்று கூறியது இன்னொரு மனம். இந்தக் காசுகளை எடுத்துக் கொண்டு போவதற்குள் சித்திரக்காரன் வந்து விடக் கூடாது என்று அங்கிருந்த சித்திர வெங்கடாஜலபதியிடமே வேண் டிக் கொண்டேன். காசை எடுத்துக் கொண்டு கிளம்பிய நான் மீண்டும் ஒரு முறை அந்த வெங்கடாஜலபதியைப் பார்த்தேன். அவர் வலது கையை நீட்டிக் கொண்டிருந்தார். குற்றமுள்ள என் நெஞ்சுக்கு 'இந்த புத்தி உனக்கு வேண்டாம், காசைக் கொடுத்து விடு' என்று அவர் கேட்பது போல் இருந்தது.


பஸ்ஸில் மாம்பலத்தை அடைந்த போது அங்கு மழை அதிகமாகப் பெய்து கொண்டிருந்தது. பஸ்ஸில் இருந்து இறங்கி எதிரில் இருந்த ஓட்டலுக்குள் சென்றேன். சர்வரை அதிகாரம் செய்து மூக்குப் பிடிக்கச் சாப்பிட்டேன்.

ஓட்டல் வாசலில் நின்று கொண்டு கையை நீட்டிப் பார்த்தேன். இலேசாகத் தூறிக் கொண்டிருந்தது. வீட்டிற்குச் சென்று விடலாம் என்று கிளம்பினேன். பாதி தூரம் வந்ததும் மீண்டும் மழை பெய்ய ஆரம்பித்தது. அருகில் மூடப் பட்டிருந்த கடையின் கீழ் நின்று கொண் டேன். அங்கு வேறு சிலரும் நின்று கொண்டிருந்தார்கள். சாலையைப் பார்த்த எனக்குத் திக்கென்றது. கார ணம், அங்கு வரையப்பட்டிருந்த அதே வெங்கடாஜலபதி உருவம் இங்கு மழை யில் கரைந்து கொண்டிருந்தது.


அங்கு நின்று கொண்டிருந்தவர்களில் ஒருவன், ''அந்தப் பணத்தை எடுத்தவன் உருப்பட மாட்டானுங்க. முதல்லே திருவல்லிக்கேணியிலே படம் வரைஞ் சுட்டு, அங்கே மழை பெய்தா என்ன செய்யறதுன்னு, இங்கே வந்து படம் வரைஞ்சேனுங்க. இதை முடிச்சுட்டு அங்கே போய் பார்த்தா, படத்துல ஒரு பைசா கூட காணுமுங்க. முதல்லே நான் போட்ட நாலணாவைக்கூட காணுமுங்க. அங்கிருந்து வருத்தமா இங்கே வந்தா என் மனசைப்பாத்து வெங்கடாஜலபதிக்கு துக்கம்தாளலையோ என்னமோ தெரியலை, அப்படியே மழை யிலே கரைஞ்சுட்டாருங்க. அதை நம்பி யிருந்த என் குடும்பம் இன்று பட்டினி தான்'' என்று கலங்கிய கண்களுடன் என்னிடமே கூறினான்.

வயிற்றில் இருந்த ஓட்டல் டிபன் எனக்கு குமட்டிக் கொண்டு வந்தது. இரவு முழுவதும் எனக்கு ஒரே வயிற்று வலி. மறு நாள் டாக்டரிடம் இருபது ரூபாய் பழுத்து விட்டது!

—ஜெயகோபால்



ஞ. ஜெயகோபால்,
பத்தாம் வகுப்பு,
இந்து உயர்நிலைப் பள்ளி,
சென்னை - 5.


இதென்ன பிரமாதம்!.. மெட்ராஸ்லே ரோடுங்கள்லே நாலு நாளைக்கு கார்லே போனா நான் கூடத்தான் இது மாதிரி தாண்டுவேன்!..
இதோ, இந்த சர்க்கஸைப் பாரு!....
இது, வாயைத் திறக்கறதைப் பார்த்தா உங்கப்பா தூங்கறமாதிரியே இருக்குடா!..

முதலிரவு. நள்ளிரவைத் தாண்டி வெகு நேரம் கழித்துத்தான் கண் மூடினன் ரவி. ஆடைகளைச் சீர் செய்து கொண்டு சற்றே புரண்டு படுத்தாள் ரம்யா. ரவி சொன்னது அவள் காதில் ரீங்காரமிட்டது.

''பெண்கள் வேலைக்குப் போறது எனக்குப் பிடிக்காத விஷயம்தான் ரம்யா. அதுவும் கல்யாணமான பிறகு போவது என்பது கொஞ்சம்கூடப் பிடிக்காத ஒன்று.''

''வந்து... ரெண்டு பேருமா சம்பாதித்தால் குடும்பச் செலவுக்குச் சௌகரியமாக இருக்குமில்லையா?...''

''அதெல்லாம் சரிதான். எவ்வளவு பணம் வந்தாலும் அதுக்கேற்ற மாதிரி செலவுகள் வரத்தான் செய்யும்.''

''அதுக்கில்லே. அடிப்படைத் தேவைகளுக்கு...'' — ரம்யா இழுத்தாள்.

தொட்டில்

''ரம்யா, நீயோ வசதியான குடும்பத்திலே இருந்தவள்தான். அப்படியிருக்கும் பொழுது நீ வேலைக்குப் போனது தப்புதான். உன் வேலே, ரொம்ப தேவையான ஒரு ஆணுக்கு, அவனுல் அவன் குடும்பத்திற்கு எவ்வளவோ உதவியாக இருந்திருக்கக்கூடும். உனக்கு ஒரு கண்டிஷன்'

முதல் குழந்தை உருவான உடனே நீ வேலையை விட்டுவிட வேண்டும்!''

''சரிங்க. நம்ம முதல் இரவிலேயே இதைப் பற்றிப் பேச வேணுமா?''-அவன் மார்பில் அவள் செல்லமாகக் குத்தினுள்.

அவளுக்குச் சிரிப்பு வந்தது. 'இந்த ஆண்கள் எவ்வளவு சுயநலக்காரர்கள்? தங்கள் கருத்தை வலியுறுத்த எப்படியெல்லாம் நிபந்தனைகள் போடுகிறுர்கள்? சுளையாக நானூறு ரூபாய் இருந்தால் எவ்வளவு வசதிகளைப் பெருக்கிக்கொள்ள முடியும்?''

கற்பனை சிறகடிக்க, கண்களை மூடிக் கொண்டாள்.

தேனிலவு முடிந்து, ஆபீஸுக்கு இருவரும் செல்ல ஆரம்பித்து விட்டனர்.

பத்து மாதங்களில் ஸேல்ஸ்மேன் ரவி, ஏரியா மானேஜர் ரவியாகிறுன்.

''என்னடா ரவி, இப்போ 'ஏரியா மானேஜர்' ஆயிட்டே. உனக்கென்னப்பா ஒய்ஃபும் சம்பாதிக்கிறுள். சம்பாதிக்கிற பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளமாட்டேன்னு சொல்லிண்டிருந்தே. ம்...கடைசியிலே அவள் அழகிலே மயங்கி..!''—நண்பன் நாகு கேலி செய்தான்.

''நாகு..பெண்களை எல்லாம் அவங்க போக்கிலே விட்டுப் பிடிக்கணும்ப்பா. நீ பிரம்மச்சாரி. உனக்கு எப்படித் தெரியும்...'' —கண் சிமிட்டினுன் ரவி.

''வேறே ஸ்பெஷல் நியூஸ் ஒண்ணுமில்லையா?''

சற்று கூச்சத்துடன் ரவி, ''நாகு.... வந்து... இப்ப என்னப்பா அவசரம்? இன்னும் கொஞ்ச நாள் ஜாலியா இருக்கலாமே?'' என்றுன்.

''உன் கல்லூரி தோழி காஞ்சனு உன்னிடம் என்னமோ பேசிட்டுப் போனுளே

பாமா கோபாலன்—

என்ன சொன்னு?'' என்று மனைவியிடம் கேட்டான் ரவி.

ரம்யா மெதுவான, அழுத்தமான குரலில் சொன்னுள்: ''அவளுக்குத் திருமண ஆண்டு நிறைவான நாளும், முதல் குழந்தை பெயர் சூட்டு விழாவும் ஒன்று அமைந்துவிட்ட பொருத்தத்தை சொல்லிவிட்டுப் போனுள்!''

''பம்பாயில் எத்தனை நாளாம்?'' 'வேண்டுமென்றே ஒயிலா சோபாவில் சாய்ந்துகொண்டு கேட்டா ரம்யா.

''பத்து நாள் ரம்யா... ஒ குட்டி குட் நியூஸ்... எனக்கு ஜோன மானேஜராக பதவி உயரலாம்....''

''கங்கிராட்ஸ்...'' என்றபடி அவ முதுகுப் பக்கம் சென்று அணைத்து, அவ புறங் கழுத்தில் முத்தமிட்டாள்.

சட்டென்று அவளை முன் பக்கத்திற்கு சரித்து, ''ரம்யா... தாங்க்யூ வெரிமச்'' என்றபடியே அவள் கண்களில் முத்தமிட்டான்.

அவள் பரவச நிலையிலிருந்தாள்.

''ஓ! மை காட்!...டயமாயிடுத்து.. மறுபடியும் கம்பெனிக்குப் போயிட்டுப் போகணும்... ப்ளீஸ் ஹெல்ப்.. டார்லிங்...''

ரம்யா நொறுங்கிப் போனாள். வழக்கம் போல் வெளியே காண்பித்துக் கொள்ளாமல், வேலையில் இறங்கினாள். அவன் டையைக் கட்டிக் கொண்டிருந்தான். அவனை, ஆவலோடு பார்க்காமல், அழுத்தமாகப் பார்த்தாள் ரம்யா.

''பம்பாயில் பத்து நாள் தங்கலா.?''

ரம்யாவின் குரலில் இருந்த நிதானமும், உக்கிரமும் அவனைத் திகைக்க வைத்தன.

''என்ன பண்றது? தலைமை ஆபீஸிலிருந்து உத்தரவு வந்தால் தவிர்க்க முடியுமா என்ன?'' ஷு—லேஸை இறுகக் கட்டியபடி பேசினான் ரவி.

''ஆமாமா... கை நீட்டி சம்பளம் வாங்கறோமே.. தவிர்க்க முடியாதது தான்...'' — சொல்லிவிட்டு சரேலென உள்ளே போய்விட்டாள், விபூதி டப்பாவை எடுத்து வர.

'என்னைத் தவிர்க்க இப்படியொரு வாய்ப்பு!...' — மனதுள் சொல்லிக் கொண்டாள். கண்களில் நீர் பள பளத்தது.

விபூதியை நெற்றியில் இட்டுக் கொண்டே, ''ரம்யா, சீ...! இதுக் கெல்லாம் கண் கலங்கலாமா? பத்து





'பணத்தை வெறுக்கும் ஞானியா நடிக்கணும்... சின்ன ரோல்தான்... என்ன கேட்கறீங்க...?''

''ஒயிட்லே ஒரு லட்சம்... பிளாக்லே ஒரு லட்சம்... அப்புறம் சிடி ரிலீஸ் ரைட்ஸ்!''

— கே. குஞ்சான்

நாள் முடிந்தவுடனே பறந்து வந்துடுவேன்... ஓகே!''

அவள் கண்ணீருக்குக் காரணம் வேறாக இருக்கிறது என்பதை அவன் அறியப் போகிறானா என்ன!

ஆபீஸுக்குப் போய்விட்டு வந்தால், தனிமை அவளை வாட்டிற்று. இரவில் பலவித எண்ணங்களுடன் கட்டிலில் புரண்டு கொண்டிருந்தாள் ரம்யா. தொலைபேசி அழைத்தது. எடுத்தாள். ட்ரங்கால். பம்பாய்.

ஆவலுடன் ரிஸீவரைக் காதுடன் அழுத்திக் கொண்டே பேசினாள். பேசுவது கணவனாயிற்றே!

''...புறப்படற அவசரத்துலே உன்கிட்டே சொல்ல மறந்துட்டேன்... 'வோல்டாஸ் ஓபல்'... நூறு லிட்டர் கபாஸிடி... விலையை, வந்து சொல்றேன்.. தவணைமுறைதான்...''

''ஏங்க...அது ரொம்ப அவசியமா இப்ப?''— ரம்யா கேட்டாள்.

''ஆமாம் ரம்யா..... ரொம்ப யூஸ்ஃபுல்லா இருக்கும்...வந்து நேரிலே சொல்றேனே...''

''..................''

''என்ன பேச்சையே காணோம்? கற்பனையிலே இருக்கிறயா?''

''ஆமாம்... கற்பனையிலே வாழ்ந்துகிட்டிருக்கேன்!''-ரிஸீவரை வைத்தாள்.

பம்பாயிலிருந்து ரவி வந்த பிறகும், ரம்யா கலகலப்பாக இல்லை. அவனும் அவளிடம் அதிகமாகப் பேச்சுக் கொடுக்க அஞ்சினான்.

சமாதானப் பேச்சுகளுக்காக இரவில் ரவி, அவளிடம் நெருங்கும்போதெல்லாம் வசதியைப் பெருக்கும் வேறொரு சாதனத்தையோ, இயந்திரத்தைப்பற்றியோ பேசினானே தவிர.....

ரம்யா தன் குழந்தை ஆசையை எவ்வளவோ முறை நாசூக்காகத் தெரிவித்த போதும் அவன் அதை ஊக்கப்படுத்துவதாகத் தெரியவில்லை.

ரேடியோகிராம், ராலி-மிக்ஸ், 'ஃபிரிஜ்', கெய்ஸர்... வீட்டுத் தரைகளில் லினோலியம்.....

இப்படி வசதிகள் பெருகப் பெருக, தன் அடிப்படைத் தேவையாக, வாழ்க்கையின் பூரணத்துவமாக, பெண்மையின் முழுமையாகத் திகழ ஒரு மழலை....

ஏமாற்றங்கள், ஏக்கங்கள்,..

காசிக்குப் போய்விட்டுத் திரும்பிய ரவியின் பெற்றோர், மருமகளிடத்தில் எந்தவிதமான 'மாற்றமும்' இல்லாமலிருப்பதைக் கண்டு ஏமாற்றமடைந்தனர். அதன் எதிரொலியாக—

ஒரு நாள், கோயிலுக்குப் போய்விட்டு வந்த ரம்யா, வாசற்படியருகே நின்றுவிட்டாள். ஹாலில் கேட்கும் உரையாடலில் அவளே கதாநாயகி.

''ஏண்டாப்பா ரவி...என்ன ஆச்சு உங்களுக்கு? கல்யாணம் ஆகி கிட்டத்தட்ட ரெண்டு வருஷம் முடியப் போறது. ம்...நாங்க கண் மூடறதுக்குள்ளே பேரப்பிள்ளையைப் பார்க்க மாட்டோமான்னு இருக்கு...வாரிசு இல்லாத குலமான்னு நாலு பேர் வாயிலே புகுந்து வரணுமா?''

—மாமியார் பேசியது தெளிவாகக் கேட்டது. தொடர்ந்தவர் மாமனார். ''ரவி, உங்களுக்குள்ளே ஏதாவது மனஸ்தாபமா, என்ன? அவளுக்கு சௌகரியமா இருக்கத்தானே இவ்வளவு மெஷின்களும் வாங்கிப் போட்டிருக்கே. ஒண்ணு புரிஞ்சுக்கணும் ரவி...இந்த மாதிரியான வெளிச் சாதனங்களாலே மட்டும் மனசுக்கு நிம்மதியோ



சென்னை சைதாப்பேட்டையில் உள்ள ஆசிரியர் கல்லூரியையொட்டி அமைந்துள்ள அரசு ஊழியர் குடியிருப்புக் காலனிக்குப் பல்வேறு பெயர்கள் வழங்கி வருகின்றன: டாடண்டர் நகர், டாடுகண்டு நகர், தாஷ்கண்டு நகர், தாடண்டர் நகர், டோடண்டர் நகர், தாடிக் கவுண்டர் நகர் என்று வாய்க்குள் நுழையாத பெயர்களால் அழைக்கப்படும் இந்த நகரின் உண்மையான பெயர் TOD HUNTER NAGAR என்பதாகும்.

ஆங்கில அரசால், தமிழ்நாட்டிலேயே முதன் முறையாக, பட்டதாரி ஆசிரியர் பயிற்சி, தமிழ்ப் பண்டிதர் ஆசிரியர் பயிற்சிகளுக்காகத் தோற்றுவிக்கப்பட்டதுதான் சைதாப்பேட்டை ஆசிரியர் கல்லூரி. முதலாவது கல்லூரி முதல்வராகப் பணியாற்றிய வெள்ளைக்காரர் கல்லூரியை ஒட்டியவாறு ஓடிக்கொண்டிருக்கும் அடையாறு—ஆற்றங்கரையில் தினமும் மாலை நேரங்களில் தவளை வேட்டையாடுவார். TOD HUNTER—தவளை வேட்டைக்காரர் என்ற பெயருடன் விளங்கினுர் அவர்.

அவருடைய முயற்சியால் கல்லூரியில் பணியாற்றும் பேராசிரியர்கள், ஊழியர்கள் குடி இருக்கவும் பயிற்சி பெறும் ஆசிரிய மாணவர்கள் தங்கும் விடுதியமைக்கவும் தோன்றிய இந்தக் காலனி அவருடைய பெயரால் TOD HUNTER NAGAR என்றே அழைக்கப்படுகிறது.

—நெல்லை ஆ. கணபதி

சந்தோஷமோ ஏற்பட்டுடாது. அப்படி காண்பிச்சுக்கறவா போலிகள்...''

''அப்பா..ஏம்ப்பா இப்ப..இப்படி.''

''ரவி....உனக்குத் தெரியாது..... பணமோ, பேச்சோ சாதிக்க முடியாத காரியத்தை குழந்தை முடிச்சுக் கொடுத்துடும்...கணவன் மனைவிக்கு குழந்தை தானே பாலம் மாதிரி...ஏண்டாப்பா... ஒரு வேளை குழந்தை பிறந்துட்டால் அழகு குறைஞ்சுடுமேன்னு கவலைப் படறாளோ?... இல்லே குழந்தை பிறந்த பிறகு வேலைக்குப் போக முடியாதுன்னு நினைக்கிறாளோ?''—மாமியார் சமயத்தில் சூடு போட்டாள்.

ரம்யாவிற்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. 'இவர்களுக்கு மட்டும் உண்மை தெரிந்தால்...'

அப்பொழுதுதான் உள்ளே நுழைபவள் போல நுழைந்தாள். காலடி யோசை கேட்டுத் திரும்பினர்.

''அஷ்டலட்சுமி கோயில்லே ஏகக் கூட்டம். நல்ல வேளை சந்தான லட்சுமி சந்நிதியிலே எனக்குக் குங்குமம் கிடைச்சுது''—பேசிக்கொண்டே ஓரக் கண்களால் கணவனைப் பார்த்தாள்.

அவன் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

''நான் இன்னிக்கு ஆபீஸ் போகல்லே. உடம்பு ஒய்ச்சலா இருக்கு'' என்றாள் ரம்யா.

''சரி.. அப்போ.. உன் சினேகிதியின் கல்யாணத்திற்கு என்ன பரிசு வாங்கலாம்னு யோசிச்சு வை. நான் ஆபீஸுக்கு புறப்படறேன்...''

''எவ்வளவு பட்ஜெட்?''—டிபன் பாக்ஸை அழுத்தி மூடி கணவனிடம் கொடுத்தபடி கேட்டாள் ரம்யா.

''வாட் பட்ஜெட்? உனக்குத்தான், எடுக்காத லீவு நாட்களை 'காஷ்' பண்ற வசதியிருக்கே. அதை எடுத்துக் கொள். உன் பணத்தைத்தானே செலவழிக்கப் போறே?''—முகத்தில் சலனமில்லாமல் 'நாளை ஞாயிற்றுக்கிழமை' என்று சொல்வது போல் பேசினான் ரவி.

ரம்யாவிற்கு உதடு துடித்தது. சூடாக சொற்கள் வெளிவர முயற்சித்தன. அடக்கிக் கொண்டாள்.

ஸ்கூட்டரில் ஏறிக் கொண்டவன், ''ரம்யா, ஜூன் மாசம் கடைசி வாரத்திலே எங்க கம்பெனி சேர்மன் பேரனை வாசிக்க வைக்கப் போறாராம். அதுக்கும் சேர்த்து ஒரு அன்பளிப்பு வாங்கிண்டு வந்துடு!...அந்த மாசக் கடைசியிலே கையிலே பணம் இருக்குமோ இல்லையோ?'' என்றான். ஸ்கூட்டர் மறைந்தது.

''ஹூம்...எல்லா உபரி செலவுகளுக்கும் என் சம்பளப் பணம்...பேரனை வாசிக்க வைக்கப் போறாராம். பிரசன்டேஷனாம்! இங்கே பிள்ளைக்கு வழியைக் காணோம்.......''—வெறுப்புடன்

முணுமுணுத்தவாறு விட்டு வாசல் கதவைத் தாழிட்டுவிட்டு வந்தாள்.

மாமனும் மாமியாரும் சொந்த ஊருக்குச் சென்றிருந்தனர்.

ரம்யாவிற்கு என்னவோ போலிருந்தது. தலை சுற்றலும், வயிற்றில் ஒருவிதமான இடைஞ்சலும் அவளை எங்கோ இழுத்துச் சென்றன.

வாஷ் பேசின் அருகே சென்று குனிந்தாள். நிமிர்ந்தவள், கண்ணடியில் முகத்தைப் பார்த்தாள். கண்களின் கீழ் கருவளையங்கள். கண்களில் அநியாயச் சோர்வு.

நாட்கள் செல்லச் செல்ல புளிப்பு மாங்காயும், ஊறுகாயும், சாம்பலும் தனிச் சுவையோடு இருந்தன. தாய் வீடு சென்று, அம்மாவின் மடியில் முகம் புதைக்க வேண்டும் என்று அவள் மனம் தவித்தது. உடலில் மெருகு ஏற ஏற ரவியின் முகத்தில் கடுகடுப்பு அதிகமாகிறது... ரம்யாவின் முகத்தில் விஷமப் புன்னகை. ஒரு நாள் மாலை ரவி நேரங் கழித்து வருகிறான்.

''ஸ்டுபிட் ஃபெல்லோ... நாலாவது பிரசவமாம். பணம் வேண்டுமாம். அறிவு கெட்ட ஜென்மம்...'' — திட்டிக் கொண்டே வருகிறான்.

''என்ன ஆச்சு?...யார் ஸ்டுப்பிட்?'' -காபியை ஆற்றியபடிகேட்கிறாள் ரம்யா.

''ஹுக்கும்...வேற யாரு...ஆபீஸ் பியூன் ஆறுமுகம்தான். மனைவிக்கு நாலாவது பிரசவமாம்.. ஹாஸ்பிடலுக் குப்போய்கருவைக்கலைச்சுடுடா..ரெண்டு மாதம்தானே ஆவுதுன்னேன்...''

''ஐயையோ!...ஏன் இப்படி சொன்னீங்க?''...ரம்யா தன் வயிற்றைப் பிடித்துக் கொள்கிறாள்.

ரம்யாவுக்குத் திக்கென்கிறது..... 'வளருவதைக் கலைத்துவிட்டு, இது என்ன சினிமா மேக்கப்பா... கலைப்பதற்கு ஓ! எனக்குத் தாய் வேஷமே வராதா...?'

''நோ...நோ...நான் மாட்டேன். 'அபார்ஷ'னுக்கு ஒப்புக்கொள்ள மாட்டேன்'' என்று அலறுகிறாள் ரம்யா.

தொப்பென்று ஸோபாவிலிருந்து சாய்ந்து விட்டாள்.

''ஓ! சே...கனவுதானே?''

வாசல்கதவு தட்டப்படும் ஓசை. எழுந்தாள். உடையைச் சீர் செய்து கொண்டாள். கதவைத் திறந்தாள். போஸ்ட்மேன்.

ஒரு இன்லாண்ட் லெட்டர்.



''மதுரை சோமு பாடும் போது பரமசிவனுக்கு முருகன் உபதேசம் செய்வது பற்றிய பாடலில் 'சோம சுந்தரத்துக்கு உபதேசித்த (சித்தூர்)சுப்ரமண்யா' என்று சேர்த்துப் பாடுவார். மதுரை சோமு சித்தூர் சுப்ரமண்ய பிள்ளையின் சீடர்.

இன்னும் ஒரு வாரம் கழித்து வருகிறேன் என்று எழுதியிருந்தாள் மாமியார்.

அலுத்துக் கொண்ட அவள் ஸோபாவில் அமர அஞ்சினாள். 'அந்தக் கனவு பலித்து விடுமோ...!'

நிஜ வாழ்க்கையைவிடக் கற்பனை வாழ்க்கை மிகவும் சுகமாக இருக்கும் போலும் என்று நினைத்துக் கொண்டாள். வயிறு சங்கடப்படுத்த, 'டாய்லெட்'டுக்குப் போய்விட்டு வந்தவள், கனவு பலிக்கவில்லை என்று உணர்ந்து கொண்டாள்.

'நல்ல வேளை. கல்யாணத்திற்குப் போக முடியும்!.. என்ன பரிசு வாங்கலாம்?' என்று முனகியபடி யோசிக்க ஆரம்பித்தாள்.

வெள்ளிக்கிழமை. காலை.

ஸ்கூட்டர் சவாரி. லாயிட்ஸ் ரோடு. பெரிய மண மண்டபம். ஏராளமான கார்கள்.

''பிரசென்டேஷனை எடுத்துட்டு வரலியா ரம்யா....?''

''பக்கத்துலே ஒரு ஃபிரண்டு வீடு இருக்கு. அவ வீட்டுலே முன்னடியே வாங்கி வைத்து விட்டேன். அவளே கொண்டு வந்திருப்பாள். ஸ்கூட்டர்லே கொண்டு வர்றது சிரமம்....''

கிசுகிசு குரல்களிலே பேசிக் கொண்டே நீட்டப்பட்ட ட்ரேயில் இருந்து சந்தனம், கல்கண்டு, ரோஜாப்பூ எடுத்துக் கொண்டனர் இருவரும்.

ரம்யா, கல்யாணப் பெண்ணான, லதாவின் அருகில் போய் அமர்ந்து கொண்டாள். செல்லமாக அவள் கன்னத்தைக் கிள்ளினாள்.

''குழந்தை கிடையாது. அதுதான் கட்டுக்குலேயாமல் இருக்கு!...''—தன் பின்னாடி யாரோ பேசுவதைக் கேட்டாள் ரம்யா. தொண்டையில் ஏதோ ஒன்று வந்து அடைத்தது. விழிகளில் ஈரம் பளபளத்தது.

அன்பளிப்பு வைபவம்... ரவி கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''பெண்ணுக்குப் பரிசு.. சினேகிதி திருமதி ரம்யா — ரவி....''

கல்யாணப் பந்தலில் அமர்ந்திருந்தவர்கள் எல்லோரும் சிரித்தனர்.

அழகான, தொட்டில். ஸ்டீல் தொட்டில்.

ரம்யா, கணவனைத் தீர்க்கமாகப் பார்த்தாள். ரவி, நாற்காலியில் நெளிந்தான்... பளிச்சென்று வெளிச்சம் போட்டுக் காண்பிக்கிறாளா? கையிலிருந்த ஸ்கூட்டர் சாவியை இறுகப் பிடித்தான் ரவி. அந்தச் சாவியை ரம்யா என்று நினைத்தானோ?

சாப்பிட்ட பிறகு, இரு கலர் பைகளுடன் ரவியும், ரம்யாவும் கிளம்பி விட்டனர்.

''ஏய் லதா.. நாளைக் காலையிலே வர்றேன்...எனக்கு லீவ்தான்..எல்லாம் பேசலாம்..ஓகே.. பெஸ்ட் ஆஃ ப்லக்..''—உள்ளங்கையில் அழுத்திப் பிடித்துத் தோழியிடமிருந்து விடை பெற்றாள்.

லதாவிற்கு, தோழியின் அழுத்தமான கை குலுக்கல், தனி அர்த்தத்தைக் கொடுத்தது!

ஸ்கூட்டரில் போகும் பொழுது, கணவனின் தோள்களில் கை வைத்துப் பற்றிக் கொண்டாள். சாதாரணமாக மிருதுவாக இருக்கும் தோள்கள் சற்றுக் கடினமாக இருப்பதுபோல உணர்ந்தாள். சற்று அழுத்தினாள்.

''..ப்ச்..சும்மா..வா..''—திரும்பாமலே பேசினான் ரவி. குரலில் சூடு. ரம்யாவின் முகத்தில் புன்னகை.

கல்யாணப் பரிசு வேலை செய்கிறது என்று நினைத்துக் கொண்டாள். உறைத்தால் சரிதான் என்றும் எண்ணிக் கொண்டாள்.

மறுநாள் மாலை. சற்று சீக்கிரமாகவே வந்துவிட்டான் ரவி.

''உன் சினேகிதியின் வீட்டுக்கு இன்னிக்குக் காலையிலே போயிட்டு வந்தயா?.... என்ன சொல்றா?''—கண்ணைச் சிமிட்டியபடி கேட்டான் ரவி.

''ஆஹா.. போயிருந்தேனே.. சரியான பைத்தியம்..... என்னை மாதிரி..''

''ஏய், என்ன ஆச்சு....?''

''ஆகிறது என்ன..... இவளோட தம்பி ஒருவன் சற்று பலவீனமானவன், ஹார்ட் பேஷண்ட். அவனை, இவள் தன்னோடு வைத்துக்கொள்ள முதல் இரவிலேயே கணவனிடம் அனுமதி கேட்டாளாம்... அவரும், 'ஓ! பேஷா வைத்துக் கொள்ளலாமே'ன்னு சொல்லிட்டாராம்! ..அதைச் சொல்லி மகிழ்ந்து போகிறாள்....''

''நல்லதுதானே..... இதில் நீ அலுத்துக் கொள்ளும்படியா என்ன இருக்கு?....''— சட்டைக் காலரைச் சரிசெய்துகொண்டே கேட்டான் ரவி.

''....ஹுக்கும்.. நீங்களும் அதே இனம்தானே? என் சினேகிதிகிட்டே அழுத்தமாச் சொல்லிட்டு வந்தேன்.... முதல் இரவிலே பிரச்னைக்குப் புலப்படற வழி, சொல்லப்படும் உறுதிமொழிகள் எல்லாம் நீர்மேல் எழுத்துக்கள்தான்.. அதை நம்பி மண்கோட்டைதான் கட்ட முடியும்னு....''

''ஏன் நிறுத்திட்டே.... இன்னும் வேற ஏதாவது சொல்லலேயா?....''—டை முடிச்சைச் சீர்செய்தபடி கேட்டான் ரவி.

''...சொன்னேனே. முதல் இரவிலே பல பிரச்னைகளுக்குத் தீர்வு காண முடியும். தீர்வு பெற முடியாத பல பிரச்னைகள் உருவாகவும் அதே இரவு அஸ்திவாரமிடுகிறது....''

''போதும்...போதும்... ஒரு பார்ட்டிக்குப் போகணும், சீக்கிரம் கிளம்பு''—அவன் அவசரப்படுத்தினான்.

''இந்த மாதிரி விழாக்களுக்கு'' போறதுக்கும், ஆசி வழங்கறதுக்குப் ஒரு தகுதி இருக்கணும். அங்கே வந்தும் சிறுமைப்பட எனக்கு வலு இல்லே..து—திக்கித் திக்கிப் பேசிய ரம்யா, விம்மி விம்மி அழ ஆரம்பித்துவிட்டதை, ரவி கலக்கத்துடன் பார்த்தான்.

துணைவி

'ஆனந்தி'

சஞ்சிகையில் ஆழ்ந்திருந்த கணவன் சந்திரனிடம் வந்து நின்ற விமலா, ''உங்களுக்கு தட்டில் சாதம் போட்டிருக்கேன்...'' என்று இரங்கிய தொனியில் சொன்னாள்.

அவளை ஒரு முறை சுரத்தின்றி ஏறிட்டு நோக்கிய பிறகு, ''பசியில்லை..'' என வெறுப்போடு சொன்னான். இந்த பதில் அவள் எதிர்பார்த்ததுதான். கடந்த சில வாரங்களாகவே அவன் வீட்டில் சரியாகச் சாப்பிடுவதில்லை; சில சமயங்களில் சாப்பிடுவதாகப் பெயர் பண்ணுவதோடு சரி.

வாடிப்போன முகத்தோடு உள்ளே சென்றுவிட்டாள் விமலா. அவன் சாப்பிடவில்லை என்பது கவலையளித்த போதிலும், அவள் வெகுவாக எதிர்பார்த்த அந்த வார்த்தைகள்.... 'நீ போய் சாப்பிடு..' என்று அவன் சொல்லாதது — இதுதான் அவளுக்குப் பெருங்கவலை.

உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து கொந்தளித்து எழுந்து கொண்டிருந்த மன வெதும்பல்களைக் கட்டுப்படுத்த முடியாமல் சில நாட்களாகவே தவித்துக் கொண்டிருக்கிறாள். அவளுடைய அந்த மன உளைச்சல்களின் மூலப் பிரதிநிதியாக உருவெடுத்திருப்பவள் அண்டை வீட்டுப் பெண் சித்ரா. விமலாவைவிட இளையவளான அவளுக்கு இன்னமும் கழுத்தில் நாணேறவில்லை.

விமலாவும் சந்திரனும் அங்கு குடி வந்ததிலிருந்து போக வர இருந்தவள், குறுகிய காலத்திலேயே அச்சிறிய குடும்பத்தில் ஒருத்தியாக மதிக்கத்தக்க அளவிற்கு உறவுபூண்டு விட்டாள்.

மனைவியின் பலவீனங்களைப் பயன்படுத்தி சந்திரன் சித்ராவை அடிக்கடி 'கோட்டா' செய்வான். முதலில் தன்னுடைய உயிர்த் தோழிக்காகப் பரிந்து வந்தாலும், பின்னர் சற்றே பின்வாங்கி அவனுடன் கலந்து கொண்டு வெண்கலமணியாகச் சிரிப்பாள் சித்ரா.

தன் கணவனுடன் பழகும் தோழியின் விஷமத்தனங்களையோ, குழைவுகளையோ விமலா பெரிதுபடுத்திக் கொள்ளமாட்டாள்; சகஜமாகவே எடுத்துக் கொள்வாள். ஆனால், அவற்றில் ஆழ்ந்திருந்த நெளிவு சுளிவுகளை உணர்ந்துகொள்ள அவளுக்கு அதிக காலம் தேவைப்படவில்லை. சித்ராவைத் தன் கணவனுடன் பழகவிட்ட ஒவ்வொரு நொடியும், தன் எதிர்கால வாழ்வின் சுகமான சுவடுகளை எந்த அளவிற்கு அழித்து வந்திருக்கின்றது என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொண்டாள்.

சந்திரனுக்கு இப்பொழுதெல்லாம் தன் மனைவியின் மீதோ, குழந்தை பாபுவின் மீதோ அத்துணை நாட்டமில்லை. சித்ராவை நேசிக்கின்றானாம். விரைவிலேயே மங்கலச் சரமேற்றப் போகின்றானாம் அவளுடைய கழுத்தில்! நேரடியாகவே மனைவியிடம் ஒரு நாள் விஷயங்களை விண்டு விட்டான்.

துடிதுடித்துப் போனாள் விமலா. இருளத் துவங்கியிருக்கும் தன்னுடைய எதிர்காலத்தை நினைத்து விக்கித்துப் போனாள். சந்திரனுக்கு ஏற்பட்டிருப்பது ஒருதலைக் காதலோ என்ற ஐயம் முளைவிடவே, ''சித்ரா சம்மதிச்சுட்டாளா?'' என்று கேட்டாள்.

''அவளுடைய சம்மதமெல்லாம் என்றைக்கோ முடிஞ்ச கதை. உன்னுடையது ஒன்றுதான் மீதம்..''

''என்னை ஒதுக்கிட்டு அவளைக் கட்டிக்கற அளவுக்கு அப்படி என்ன தேவை ஏற்பட்டுவிட்டது? என்கிட்டே சகல அம்சங்களும் வாய்ச்சிருக்குங்கறதுனாலேத் தானே கல்யாணம் செஞ்சுக்கிட்டிங்க? சொல்லுங்க, ஏன் மௌனம் சாதிக்கறிங்க...? ஒரு பெண் கணவனுக்குச் செய்யவேண்டிய பணிவிடையிலோ, அல்லது சுகத்திலோ குறை வச்சுட்டேனா...?''

''இதோ பாரு, நீ சும்மா ஒப்பாரி வெக்கறதுனாலே ஒரு பிரயோஜனமும் இல்லை, புரியறதா..? பேசாமல் போய் ஆக வேண்டிய வேலையைப் பாரு..'' என்று உறுதியோடு சொல்லிவிட்டு உள்ளே சென்று விட்டான்.

இதற்கு மேலும் தன் வாழ்வில் புயல் ஓயப் போவதில்லை என்பது அவளுக்குத் தெளிவாகப்பட்டது. தன்னுடைய சம்மதமில்லாமல் அவர்களுடைய வைபோகம் நடக்காது; நடந்தாலும் ஆபத்தைத் தன்னால் உருவாக்க இயலும்

என்பதை அவள் உணர்ந்திருந்தபோதிலும், மேற்கொண்டு தனது பெற்றோரிடமோ, சித்ராவின் பெற்றோரிடமோ சென்று பேசி வாழ்க்கைப் பயணத்தைத் தனக்குச் சாதகமாக்கிக் கொள்ள விரும்பவில்லை.

ஆயிரம் வாதங்கள் நடத்தினாலும் இனி தனக்குத் தேவையான அன்பையோ, பரிவையோ கணவனிடமிருந்து எதிர்பார்ப்பதில் எள்ளளவும் பயனில்லை என்பதை நன்கு தெரிந்து கொண்டாள். அடுத்து செய்யவேண்டியது, செய்யக்கூடியது எல்லாம் அந்த ஒன்றுதான் — விவாகரத்திற்கு ஒப்புதல் அளிப்பதுதான்.

விமலா தன்னுடைய முடிவைத் தெரியப்படுத்துவதற்கு முன்னரே, சித்ராவே அவளைத் தேடி வந்து விட்டாள். எவ்வளவோ பிரயத்தனப் பட்ட போதிலும் தன் மனத் துயரை வெளிக்காட்டாமல் இருக்க முடியவில்லை விமலாவினால்.

''சித்ரா, நம்முடைய தோழமையினால் கூட உன் முடிவினைத் தொட முடியவில்லை என்பதனை எண்ணி வெட்கப்படுகிறேன். இவை எல்லாவற்றையும் விட அவருக்கு பாபுங்கற இரண்டு வயசுக் குழந்தை இருப்பதுகூடவா மறந்து போய்விட்டது?''— மூச்சிரைக்கப் புலம்பி முடித்தாள்.

அவள் பதட்டமின்றி சொன்னாள்: ''விமலா, நீ சொன்னது எல்லாமே எனக்குத் தெரியும். குழந்தை பாபுவை ஆளாக்க ஒரு அப்பா இல்லாவிட்டாலும், அம்மா இருக்காங்கறதும் நல்லாத் தெரியும். சீக்கிரம் முடிவு வரட்டும்..''

அவள் சென்று விட்டாள். விமலாவின் மனது ஸ்திரத்தன்மையை இழந்து நிலைகொள்ளாது தவித்தது. உயிருக்குயிராக அவளால் நேசிக்கப்பட்ட சித்ராதான் கூறுகிறாள். பிறந்த வீட்டிற்கு வாழாவெட்டியாகப் போக ஆயத்தமாவதாம். நெஞ்சழுத்தக்காரி!

இதற்குப் பிறகு பத்து நாட்கள் நகர்ந்து விட்டன. அன்று போன சித்ராவை இன்னமும் காண முடியவில்லை.

அவளுடைய வியப்பிற்கு சித்ரா வராதது மட்டும் காரணமல்ல; சந்திரன்



அலுவல் நேரம் தவிர மற்ற நேரங்களில் வீட்டை விட்டு எங்கும் நகராததும், சரிவர முகம் கொடுத்துப் பேசாவிட்டாலும் வீட்டிலேயே வேளாவேளைக்குச் சாப்பிடத் துவங்கியிருப்பதும்கூடத் தான்.

குழந்தை பாபுவிற்கு உணவூட்டிய படி சிந்தனை வயப்பட்டிருந்தவள், வாயிற் கதவினை யாரோ அறையவே எழுந்து சென்று திறந்தாள். அங்கே ஜானகி—சித்ராவின் அக்கா—நின்றிருந்தாள். முகமன், சம்பிரதாய விசாரணைகளெல்லாம் முடிந்த பிறகு ஜானகி, தான் அவளை நாடிவந்ததன் காரணத்தைச் சொன்னாள்.

விமலாவினால் நம்ப முடியவில்லை அவ்வளவு எளிதில். ஜானகி சொல்வதெல்லாம் உண்மையா!'

''ஜானு, நீ சொல்றது எல்லாம்..?''

''சந்தேகமே வேண்டாம் விமலா—அத்தனையும் மெய்தான். சில பெண்களுக்கு மற்றொருவரின் மனைவியை வாழாவெட்டியாக்குவதில் என்னதான் மோகமோ தெரியவில்லை! தன் இனத்தையே சேர்ந்த ஒருத்தியை, மனக் கட்டுப்பாடின்றி படுகுழியில் தள்ள என்னதான் ஆர்வமோ! ஒருத்தரை வாழ விடாமல் செய்வது எத்தனை அநாகரிகமான செயல். இந்த வகையிலேதான் புத்தி பேதலித்திருந்த சித்ராவுக்கு

தமிழ்நாடு சர்வீஸ் கமிஷன் சிறப்புத் தேர்வு எழுதச் சென்றிருந்தேன், எனக்குப் பக்கத்தில் தேர்வு எழுதிக் கொண்டிருந்த நண்பர் ஒருவர் ஏதோ தொலைத்து விட்டவரபோல் இங்குமங்கும் பார்த்துக் கொண்டிருந்தார். பின்பு புதையலைக் கண்டுவிட்டவர் போல், தரையில் மேய்ந்து கொண்டிருந்த கட்டெறும்பைப் பிடித்து மேஜைமேல் போட்டுப் பார்த்து விட்டு, சிரித்துக் கொண்டே தொடர்ந்து தேர்வு எழுதினர். எனக்கு முதலில் காரணம் புரியவில்லை. சற்று நேரத்தில் மற்றும் சிலர் எறும்பைத் தேட ஆரம்பித்துவிட்டார்கள். நான் கேள்வித்தாளை மீண்டும் கவனமாகப் பார்த்த பின்புதான் விவரம் புரிந்தது. கேள்வித்தாளில் ''எறும்புக்கு எத்தனை கால்கள்?'' என்று ஒரு கேள்வி கேட்கப்பட்டிருந்தது! கடைசியில் நானும் எறும்பைத் தேட ஆரம்பித்து விட்டேன்!



—. பழனி

''விமலா, சித்ரா உன் முகத்தில் விழிக்க வெட்கப்பட்டு அவளுடைய சார்பா என்னையே.. 'மன்னிப்பு' கேட்டு வரச் சொன்னாள்.''

''மன்னிப்பா..? ஒண்ணும் புரியலையே ஜானு....!''

''ஆமா விமலா. சித்ரா எல்லா விஷயங்களையும் என்னிடம் சொல்லி விட்டாள். இனி அவளுடைய பாதங்கள் உன் பாதையில் பதியாது. அதோடு மட்டுமில்லாமல் உன் கணவரையும் பழைய பாதையிலேயே முடுக்கியும் விட்டாள் சித்ரா.... அதனாலே, இனி உனக்கு....!''

இப்பொழுதுதான்.. அதுவும் இந்த..—மெல்ல மெல்ல சுரமிழந்து வந் குரலையடுத்து ஜானகி தேம்பி அழுதாள்.

ஒன்றும் விளங்காமல் பதறிய விமலா ''ஜானு, ஏன் அழறே..? என்ன ஆச் உனக்கு..? சொல்லு ஜானு..!'' என் படபடத்துப் போனாள்.

சற்றே பிரயத்தனப்பட்டு விக்க அடக்கிய ஜானகி, ''விமலா, எ அன்புத் தங்கையின் பேதலித்த புத்தி-இந்த வாழாவெட்டி அக்காவை வேற்ற பிறகுதான்..''—முடிக்க முடிய மல் தொண்டையை ஏதோ அடைத்த

அதிர்ந்து போன விமலா சிலையா ஸ்தம்பித்து நின்றாள்.



வாழ நினைத்தால் வாழலாம்

இந்தப் படத்தின் மானத்தை ஓரளவு காப்பாற்றுவது மனோரமாவின் நகைச் சுவையே. ஊமையாக நடிக்கும் இடங்களில் சிறப்பாகச் செய்கிறார் அவர். குறிப்பாக, தேங்காய் சீனிவாசனுக்கு கதை சொல்கிறேன் என்று ஆரம்பித்து அவரை எரிச்சல் மூட்டும் இடங்கள் படுஜோர்! கொட்டகையே அதிருகிறது.

மற்றபடி கதையில் பிரமாதமாக எதுவுமே இல்லை. திருப்பித் திருப்பி பண்பாடு, கலாசாரம், சம்பிரதாயம் என்று பேசப்படுகிறதே தவிர, தர்க்கரீதியாக நியாயம் கற்பிக்க கதாசிரியர் முயன்றிருப்பதாகவே தெரியவில்லை.

படம் முடியும் தறுவாயில் ஜெயதேவியின் வீட்டுக்கு யதேச்சையாகப் போகிறார் ஸ்ரீப்ரியா. அங்கு ஜெய்சங்கருடன் ஜெயதேவி இணைந்திருக்கும் ஒரு படத்தைப் பார்க்கிறார். உடனே மனம் மாறி பீச்சு மணற் பரப்பில் 'தியாக' டயலாக் அடித்து விட்டு, காதலனுக்கு டாட்டா சொல்லிவிட்டுப் போய்விடுகிறார். இந்த புகைப் படத்தை ஸ்ரீப்ரியா முதலிலேயே பார்த்திருந்தால் நமக்கு இரண்டரை மணி நேரம் மிச்சமாகி யிருக்கும்!

சாந்தியின் கதாபாத்திரம் அழுத்தமானது. அதில் ஜெயதேவி என்று யாரையோ போட்டு அந்த காரெக்டரைச் சிதைத்துச் சின்னாபின்னமாக்கி யிருக்கிறார்கள்.

இளையராஜாவின் இசைகூட இந்தப் படத்தில் எடுபடவில்லை.

ஓர் இடத்தில் 'ஊமைக்குக் காது கேட்காது' என்று மனோரமா கூறுகிறாரே, அது எப்படி சார்? பிறவிச் செவிடனுக்குத்தான் பேச வராது. ஆனால், பிறவி ஊமைக்குக் காது நன்றாகக் கேட்க முடியும்.

முக்கியமான கட்டங்களில்—உதாரணமாக, ஜெயதேவி ஜெய்சங்கர் தர்க்கம் செய்யும் இடத்தில் காமிரா அனாவசியமாக இங்கும் அங்கும் அலைந்து திரிந்து கண்களைக் கஷ்டப்படுத்துவதுடன், மனத்தில் பதிய வேண்டிய எண்ணங்களையும் பதிய விடாமல் தடுக்கிறது. இப்படத்தில் இப்படிப்பட்ட காட்சிகளை உன்னிப்பாகக் கவனித்தால் எப்படியெல்லாம் படம் எடுக்கக் கூடாது என்பதை நன்றாகக் கற்றுக் கொள்ளலாம்!



விகடன் 29-1-1950

வாசன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெடுக்காக ஆனந்த விகடன் அச்சகத்தில் அச்சிட்



மதுரையை மீட்ட
சுந்தரபாண்டியன்

		100-க்கு
டைரக்ஷன் :	எம். ஜி. ஆர். ...	50
நடிப்பு :	...	35
கதை :	அகிலன் ...	55
திரைக்கதை :	ப. நீலகண்டன் ...	25
வசனம் :	ப. நீலகண்டன் ...	35
காமிரா :	ஏ. சண்முகம் ...	50
எடிட்டிங் :	சுந்தரம் ...	60
இசை :	எம். எஸ். விஸ்வநாதன் ...	60
தயாரிப்பு :	சோளீஸ்வர் கம்பைன்ஸ் ...	70
வண்ணம் :	ஜெமினி கலர் லாபரேட்டரி ...	65
		505

505/100

(அடுத்த பக்கத்தில் சில எண்ணங்கள்...)

சில எண்ணங்கள்

ஒளிப்பதிவாளருக்கு: சோழ நாட்டிலிருந்து அழைப்பு வந்ததும், போகலாமா வேண்டாமா என்று எம். ஜி. ஆரும் லதாவும் தர்க்கம் செய்து கொண்டிருக்கும் காட்சியில், எம். ஜி. ஆரின் தனி குளோஸப் ஷாட்டுகளில் பின்னுலிருந்து வரும் ஒளிகளை (Back Light) சற்று கவனமாக அமைத்திருக்க வேண்டும். பின்னுலிருந்து வரும் ஒளி, எம். ஜி. ஆரின் ஒரு பகுதி தாடியில்பட்டு நரை விழுந்தது போல் காட்சியளிக்கிறது.

இது பன்னிரண்டாவது நூற்றுண்டில் நடைபெற்ற கதை. முடிந்தவரை மின்சார விளக்குகளைக் காட்சிகளில் வராமல் தடுத்திருக்க வேண்டும். அப்படியே வந்தாலும் அதை எரிய வைக்காமல் இருந்திருந்தால் மெழுகுவத்திகள் வைக்கக் கூடிய லஸ்தர் போல் இருந்திருக்கும்.

ஜெய்ப்பூர் மாளிகையைப் பிரமாதமாகப் படமாக்கியிருக்கிறீர்கள். ஆனுல் பல இடங்களில் உங்கள் காமிரா ஷாடோ கண்களை உறுத்துகிறது.

எடிட்டருக்கு: யானைக்கு மதம் பிடி கும் காட்சியில் ஒன்றுமில்லாமலே தங்கள் கட்டிங்கில் ஒரு விறுவிறு ஏற்படுத்தியிருக்கிறீர்கள். ஆ ஒரே ஒரு ஷாட்டில் யானைப்பாக கூடவே நின்று யானையை இயக்கியிரு பது நன்றுகத் தெரிகிறதே! ஏன், அ ஷாட்டின் நீளத்தைக் குறைத்தே அல்லது அந்த ஷாட்டைப் போடாமலே இருந்திருக்கலாமே?

ஒலிப்பதிவாளருக்கு: சோழ நாட்டி கோசல நாட்டு மன்னனின் வரவே புக்குப் பிறகு மன்னர்கள் மண்டபத்தி உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கு காட்சியில் எம். என். நம்பியாரின் குர மட்டும் ஏன் 'டப்' செய்யாமல் விட் விட்டீர்கள்? நம்பியாரின் குரல் அ மண்டபத்தின் எதிரொலியுடன் சேர்ந் அசிங்கமாகக் கேட்கிறதே!

வசனகர்த்தாவுக்கு: இயக்குந பதவியிலிருந்து புதுப் பதவி ஏற்றிரு கிறீர்கள். அண்ணு - தம்பி வசன ரசிகர்களுக்கு அமிர்தமாகத்தான் இரு கும். ஆனுல் அளவுக்கு மிஞ்சினுல்...

—விகடன் விமரிசனக் குழு



எதற்காக?

''இந்தாங்க கடைக்காரரே ஒரு ரூபாய்..என்னை நல்லா பார்த்துக்கிட்டீங்களா, என் பேரு ராமலிங்கம்...''

''சரிங்க..''

''அட்ரஸ் 360,மூக்காத்தான் தெரு.''

''அப்படீங்களா?''

''எப்பவும் வலது பக்கம்தான் வகிடு எடுப்பேன். வலது கையிலேதான் வாட்ச் கட்டுவேன்.. ஆனு கையெழுத்து மட்டும் இடது கையாலே போடுவேன்...''

''ஓகோ!''

''இதைப் பாருங்க..கழுத்துச் சங்கிலியிலே புலிநகம்.''

''இருக்கட்டும்ங்க..''

''வலது மணிக்கட்டிலே ஒரு முண் இருக்குது பாருங்க..''

''ஆமாங்க..''

''இதோ, இடது கையிலே பெரிச தேள் படம் பச்சை குத்தியிருக்கேன். அதுக்குக் கீழே 'ஆர். எஸ். ஆர்.' எழுத்துங்க வேறே இருக்குது..... இந்தாங்க! என் போட்டோவையு உங்ககிட்டே கொடுத்து வெக்கிறேன்.''

''அது சரிங்க.. எதுக்காக என்கிட் வந்து இதையெல்லாம் காட்டறீங்க?''

''வேறே ஒண்ணும் இல்லே..இப்பே நான் உங்ககிட்டே வாங்கியிருக்கிற இந் பரிசுச் சீட்டுக்கு லட்ச ரூபாய் பிரை விழுந்ததுன்னு வச்சுக்குங்க.. சீட்டை நான் தொலைச்சு அது வேறே யார் கை லேயாவது கிடைச்சுடுச்சுன்னு வச்சு குங்க.. அப்போ, 'இவர்தான் என் கிட்டே சீட்டு வாங்கினவர்'னு நீங் வந்து என்னை அடையாளம் காட்ட வேணுமா...அதுக்காகத்தான்..!''

—எஸ். வீ...

போராட்டம் புதியதல்ல



பேப்பர் வெயிட்டின் கனத்தைத் தாங்க முடியாதது போல் காற்றில் படபடத்தது அந்த 'மெமோ.'

மாணிக்கத்தின் இதயமும்தான்.

கல்வித்துறை ஆய்வாளர் அனுப்பிய எச்சரிக்கைக் கடிதம் அது.

அதைப் பிறப்பித்த ஆய்வாளருக்கோ அதை உருவாக்கிய உதவியாளருக்கோ அதற்கு எழுத்து வடிவம் தந்த டைப்பிஸ்டுக்கோ அதன் வாசகங்களுடன் நிச்சயமாக உடன்பாடு இருந்திருக்காது.

'சே! பள்ளிப் பிள்ளைகளுக்குச் சோறு போடும்போது ஒரு குருட்டுப் பிச்சைக்காரி வந்து எதிரே நின்ருல் வாத்தியார் என்ன அவளை விரட்டவா முடியும்?' — எண்ணியிருப்பார்கள். ஆனல், அவர்களின் கடமை?

—இந்தக் கடிதம்.

'ஏழை மாணவர்களுக்காக மதிய வேளைகளில் பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்திலிருந்து அனுப்பப்படும் கோதுமை உணவு, வேறு சிலருக்கும் வினியோகிக்கப்படுவதாக அறிகிருேம். இனியும் அவ்வாறு நடக்காதிருக்க எச்சரிக்கப்படுகிறீர்கள்.'

கடிதம் நூருவது முறை டைப்ரைட்டரின் நீல எழுத்துக்களில் எச்சரித்தது.

கீழே ஆய்வாளரின் சிகரெட் புகைக் கையெழுத்து — பச்சை நிறத்தில்.

கண்களிரண்டையும் இழந்து, மாணிக்கத்தின் ஈரநெஞ்சு இரக்கத்தின்மேல் மட்டும் நம்பிக்கை இழக்காது, மதிய வேளை கோதுமை

ணவை 'மலை'யாய நம்பிக் கொண் டிருக்கும் குருட்டுப் பிச்சைக்காரி இந்திராணியின் பாவத்தில்தானு இந்த ராமமூர்த்தி பயல் கையை வைக்க வேண்டும்?

ஊரின் பெரிய தனக்காரரின் சீமந்த புத்திரன்— அரட்டை சிகாமணிகளின் அசைக்க முடியாத அரசன் — ராம மூர்த்தி.

ஒரு நாள் ஆசிரியர் மாணிக்கத்திடம் சைக்கிள் இரவல் கேட்டான்.

அவனது சகாக்கள் மூன்று அல்லது நான்கு பேரைச் சுமந்து கொண்டு அவரது பதினைந்து வருட சைக்கிள் 'குய்யோ முறையோ' என்று அலறு வதை அவரால் எப்படி சகிக்க முடியும்?

மறுத்துவிட்டார் மாணிக்கம்.

ராமமூர்த்தி கறுவிக் கொண்டான். ''பார்த்துக் கொள்கிறேன் இந்த வாத்தியை!''

உடனே மொட்டைப் பெட்டிஷன்.

'குழந்தைகள் உணவு பிச்சைக்காரிக் குக் கொட்டித் தரப்படுகிறது....'

அதன் விளைவுதான் இந்த மெமோ.

''சார்!''

நிமிர்ந்தார் மாணிக்கம்.

''கேன் வந்திருக்கு....''

வேனிலிருந்து மதிய உணவு கேன் இறக்கப்பட்டது.

மணி அடித்ததும் ஏழை மாணவர்கள் வரிசையாய் நின்றனர் — கையில் அலுமினியத் தட்டுகளுடன்.

இந்திராணியும் தட்டுத்தடுமாறி வழக்கம்போல வந்துவிட்டாள்.

கையில் பழைய தகரப் பாத்திரம்.

மாணிக்கம் தூரத்தே நோக்கினுர். குளத்தங்கரை ஆலமரத்து வேரில் ராமமூர்த்தியும் அரட்டைக் குழாமும்.

''பெட்டிஷன் போய் மெமோவும் வந்துவிட்டது. வாத்தியார், இந்திரா ணிக்குச் சோறு போட்டால் உத்தியோ கத்துக்கு வேட்டு. அவரால் தாங்க முடியாதது. போடாவிட்டால் பிச்சைக் காரி பட்டினி. அவரால் சகிக்க முடியா தது. என்ன பண்ணுகிறுர் பார்ப் போமே!''

மாணிக்கம் ஒவ்வொரு மாணவனின் கிண்ணத்திலும் கோதுமைச் சோற்றைக் கரண்டியால் அள்ளிப் போட்டார்.

இந்திராணி வறுபடும் வத்தலானுள். வயிறு ஏங்கிக் கொண்டிருந்தது.

'எப்போது வாத்தியார் நமக்குப் போடுவார்?'



''1953 பேர் வேலை செய்கிறுர்கள். ஒரு கோடி சதுர மீட்டர் பிலிம்கள் தயாராகின் றன. இந்தியா முழு மைக்கும் தேவை யான சினி பாசிடிவ், சினிசவுண்ட்நெகடிவ், எக்ஸ்ரே பிலிம், போட்டோ பிலிம், கிராபிக் பேப்பர்ஸ், டாகுமெண்ட் காபியிங் பேப்பர்ஸ் தயாரிக் கிறேம். ரூ. 25,00,000 லாபம் சம்பா திப்பதோடு வெளிநாடுகட்கும் ஏற்றுமதி யாகின்றன'' என்று ஊட்டி ஹிந்துஸ் தான் போட்டோ பிலிம் தொழிற்சாலை யைப்பற்றி அதன் மானேஜிங் டைரக்டர் பி. ஆர். எஸ். ராவ் கூறுகிறுர்.

இந்தியாவின் ஒரே போட்டோ பிலிம் பாக்டரி இதுவே.

—மனசை சிதம்பரம்.

●

மாணவர்கள் உணவுடன் விலகினர்.

இந்திராணி பதைபதைப்புடன் நின்றுள்.

''இந்திராணி! உனக்கு இன்றைக்கு 'கேன்' சோறு இல்லை'' என்றுர் மாணிக்கம்.

அவ்வளவுதான்.

வயிற்றில் பசி என்பது போய் உடலே பசியின் களனுய் மாறிவிட, இந்திராணி தளர்ந்து திரும்பினுள்.

ராமமூர்த்தி கும்பல் ஆவலுடன் நோட்டமிட்டது.

மாணிக்கம் தனது மதிய உணவு டிபன் பாக்சைத் திறந்தார். தயிர்சாதமும் மாவடுவும் மணத்துடன் அழைத்தன.

''இந்தா, இந்திராணி! இது என் சாதம். இன்றைக்கு மட்டுமல்ல; என்றைக்கும் இனி இது உனக்குத்தான். இதை யாராலும் தடுக்க முடியாது.'' —உரக்கவே சொன்னுர் மாணிக்கம்.

இந்திராணி மகிழ்வுடன் திரும்பினுள். இதயம் நன்றியால் விம்மியது.

மாணிக்கம் திரும்பிப் பார்த்தார்.

ராமமூர்த்தி கும்பலைக் காணும்.

பானைத் தண்ணீரை ஆவலுடன் பருகி விட்டு நாற்காலியில் சாய்ந்தார்.

வயிறு காலிதான்.

ஆனுல் மனம் நிறைந்திருந்தது.

சட்டத்திற்கும் தர்மத்திற்கும் இடையே நடக்கும் போராட்டம் புதியதல்லவே....!


கோத்ரெஜ்
அளிக்கும் புதிய
அதிக சக்தியுள்ள
கீ
நீலநிற டிடர்ஜெண்ட்
சலவைப் பவுடர்
அதிக செயல்திறனுள்ள
பளபளப்பாக்கும்
பொருளைக் கொண்டது
New Super Action
KEY
FREE! Turkish Bath SOAP
30%
அதிகப்படியான
சுத்தம் செய்யும் சக்தி
துணிகளை அதிக
வெண்மையாக்குகிறது
பளபளப்பாக்குகிறது
அதிக பளபளப்பான டிடர்ஜெண்டுகளைவிட
இருந்தும் தரமான டிடர்ஜெண்டுகளைவிட
விலையில் 30% குறைவு
GODREJ SOAPS LIMITED

கண்கூடான நிரூபணம்

ஆய்வுக்கூட பரிசோதனைகள் புதிய அதிக சக்தியுள்ள **கீ** துணிகளை அதிக வெண்மையாகவும் அதிக பளபளப்பாகவும் சலவை செய்கிறது என்று நிரூபித்துள்ளன. ஏனெனில் **கீ** எட்ட இயலாத இடத்தை சுத்தம் செய்து, விடாப்பிடியான அழுக்கையும் அறவே போக்குகிறது. அது விசேஷமான அதிக செயல்திறனுள்ள பளபளப்பாக்கும் பொருளைக் கொண்டது.

புத்துணர்ச்சி தரும் மனம் கவரும் நறுமணங் கொண்டது.

உங்கள் வீட்டுச் சலவைக்கு நறுமணங் கொண்ட **கீ**யை உபயோகியுங்கள். **கீ** வெந்நீரிலோ அல்லது குளிர்நீரிலோ உடனடியாகக் கரைகிறது, உப்புநீரில் கூட வளமான நுரையை உண்டாக்குகிறது.

உங்கள் துணிகளுக்கு பத்திரமானது, கைகளுக்குக் கனிவானது.

நுரைவளம் செறிந்த **கீ** துவைப்பதை எளிதாக்குகிறது. உங்கள் கைகளுக்குக் கனிவானது. துணிகளை துவைக்கத் துவைக்க அதிக வெண்மையாகவும் அதிக பளபளப்பாகவும் கறை எதுவுமின்றி தூய்மையாக சுத்தம் செய்கிறது.

50 கி. மற்றும் 200 கி. அட்டைப் பெட்டிகளிலும் 500 கி. மற்றும் 1 கிலோ போலிபாக்குகளிலும் கிடைக்கிறது.

இலவசம்
டர்கிஷ் பாத்
சோப்
[illegible]
[illegible]
இருப்புள்ளவரை

கோத்ரெஜ்
தயாரிப்பு

CHAITRA-G-59 TAM



ஓர் அழுகையின் ஆரம்பம்

சர்ச் மணி, இரவு மணி 12 என்று அறிவித்து ஓய்ந்தது. சிஸ்டர் ஏஞ்சல் மேரி கட்டிலில் புரண்டு புரண்டு படுத்தாள். அவளுக்குத் தூக்கமே வரவில்லை. தூங்க முயன்று கண்களை இறுக மூடி ஸ்தோத்திரம் சொன்னாள். ஆனால் தோற்றுத் தான் போனாள். கண்களுக்குள்ளும் அந்தக் கடிதம் விசுவரூபம் எடுத்துக் காட்சியளித்தது. நினைக்க நினைக்க உடலும் உள்ளமும் கொதித்துச் சூடேறியது. நெற்றியிலும் கழுத்திலும் கை வைத்துத் தொட்டுப் பார்த்தாள். டெம்பரேச்சர் கொஞ்சம் அதிகமாகவே இருந்தது. குளிக்கலாமா என்று ஒரு கணம் யோசித்தாள். ஆனால் யாரேனும் இந்நேரத்தில் குளிப்பதைப் பார்த்தால்?

காலையில் நடந்த அந்த நிகழ்ச்சி... அப்பப்பா! நினைத்தாலே நெஞ்சம் நடுங்கியது. 'ம்ம்! எப்படிக் கேட்டு விட்டார்! இந்த வெள்ளை அங்கியைப் பார்த்தும், கழுத்தில் தொங்கும் தடித்த சிலுவையைப் பார்த்தும், தலையில் மூடிய முக்காட்டைப் பார்த்தும் ....அவருக்கு ஏன் இந்த நினைப்பு வந்தது? ஒருவேளை அவர் இப்படிக் கேட்டதற்குத் தானும் ஒரு காரணமாக அமைந்து விட்டோமோ?' ஏஞ்சல் மேரிக்கு இதயம் கனத்தது. வராந்தாவில் வந்து நாற்காலியில் அமர்ந்து தலையைக் கவிழ்த்துக் கொண்டிருந்தாள். அந்தக் கடிதம்..., அந்த வரிகள்...




'நீ இல்லையென்றால் சோகச் சிலுவைகளை நெஞ்சில் நான் சுமப்பவனாகி விடுவேன்.' மேலே நிமிர்ந்து பார்த்தாள். அவளுக்கெதிரே சுவரில் ஆளுயரச் சிலுவை தொங்கியது..'சோகச் சிலுவைகளை'....மீண்டும் அவள் மனம் அந்த வரிகளிலேயே லயித்தது.

சிஸ்டர் ஏஞ்சல் மேரியின் இரவுத் தூக்கத்தையும் இதய நிம்மதியையும் கெடுத்தது ராஜன் கொடுத்த ஒரு கடிதம் தான். ராஜன் அவளோடு கல்லூரியில் படிப்பவன். கன்னியாகச் சேர்ந்த அவளைப் படிப்பதற்காகக் கல்லூரிக்கு அனுப்பி வைத்திருந்தார்கள். ராஜனும் அவளும் ஒரே வகுப்பு. ராஜன் அந்தக் கல்லூரியிலேயே குறிப்பிடத் தகுந்த சிறந்த மாணவன். நன்றாகப் பாடுவான். நல்ல கவிதைகள் எழுதுவான். அழகாகச் சித்திரம் தீட்டுவான். இவை எல்லாவற்றிலுமே அவன் பல பரிசுகளை வாங்கி, கல்லூரிக்கே பெருமை சேர்த்தவன். ஆனால் கொஞ்சம் பிடிவாத குணம் உள்ளவன். சிஸ்டர் ஏஞ்சல் மேரி அவனோடு அன்பு கொண்டு பழகி வருவாள்.

என்றுமே இல்லாமல், ''ஏஞ்சல்! இந்த கடிதத்தைப் படித்துவிட்டு அதற்கான பதிலை என்னிடம் கொடு'' என்று அவளை ஒருமையில் அழைத்துக் கடிதத்தையும் கொடுத்துவிட்டுப் போய் விட்டான். என்றைக்குமே அவன் அவளைப் பெயர் சொல்லி அழைத்ததில்லை. இன்றைக்கு அழைத்து விட்டானே! கடிதமும் வேறு கொடுத்து விட்டானே! ஏஞ்சலின் இதயம் படபடத்தது. ஒருவாறு ஊகிக்க முடிந்தது அவளால். 'ஓ மை

லார்ட்! அப்படி இருக்கவே கூடாது!' என்று அவள் மனம் வேண்டியது. பிரித்தாள். —'ஏஞ்சல்! உன் கண்கள் ஏதோ என்னிடம் சொல்லத் துடிக்கின்றன என்று எனக்குத் தெரிகிறது. ஆனால் உன் கடமை அதைச் சொல்லவிடாமல் தடுப்பதும் எனக்குப் புரிகிறது. தடையை உடைத்து வா! என் இதயக் கோவிலை உனக்காகவே திறந்து வைத்துவிட்டேன். நீ இல்லையென்றால் சோகச் சிலுவைகளை நெஞ்சில் சுமப்பவனாகி விடுவேன்'—படித்து முடித்தாள். அவள் விழிகளில் முத்துக்கள் உருவாகி கன்னக் கால்வாயில் உருண்டோடியது. 'நானும் ஒரு காரணமாகி விட்டேனா?' ஏஞ்சல் தன்னைத்தானே கேட்டுக் கொண்டாள்.

எந்நேரம் தன்னை மறந்து தூங்கினோம் என்று தெரியாமலே அதிகாலை 5 மணிக்கு எழுந்தாள். மற்ற சிஸ்டர்கள் எல்லோரும் குளித்துவிட்டு 6 மணி பூஜைக்கு சர்ச்சிக்குச் செல்லப் புறப்பட்டுக் கொண்டிருந்தார்கள். ஏஞ்சல் மேரி தன் நிலைக்காக வெட்கப்பட்டவளாய் நைட் கவுனைக் கழற்றிப் போட்டுவிட்டு பாத்ரூம் சென்றாள். 15 நிமிடங்களில் குளித்து முடித்தாள். தலையைத் துவட்டிக் கொண்டாள். அறைக்கு வந்து தோய்த்து வைத்த அங்கியை எடுத்து உடுத்தினாள். கோயிலுக்குச் செல்ல எல்லோருடனும் புறப்பட்டாள்.



''பிதா சுதன் பரிசுத்த ஆவி உங்களை ஆசீர்வதிப்பாராக!'' ''ஆண்டவர் உம்மோடும் இருப்பாராக!'' ''சென்று வாருங்கள்! பூஜை முடிந்தது.'' பாதிரியார் அந்தோணி பூஜையை முடித்தார். சர்ச் காலியாகிக் கொண்டிருந்தது. சிஸ்டர் ஏஞ்சல் மேரி, மண்டியிட்டவள் இன்னும் எழுந்திருக்கவேயில்லை. 'பரலோகத்திலிருக்கின்ற எங்கள் பிதாவே'... மீண்டும் மீண்டும் அவள் ஸ்தோத்திரம் சொல்லி நெஞ்சில் சிலுவைக் குறியிட்டுக் கொண்டு தலையைக் குனிந்து வணங்கி புறப்பட எழுந்தாள். எழுந்தவளின் பார்வை வாசலிலேயே நின்றுவிட்டது. அங்கே... ராஜன் நின்று கொண்டிருந்தான். அவளுக்கு இதயம் படபடத்தது. இருந்தாலும் வலுக் கட்டாயமாக, ''வாருங்கள் ராஜன்! ஏது இந்துக்களெல்லாம் சர்ச்சிக்கு வர ஆரம்பித்து விட்டீர்களே! ஏசுவை வணங்கவா?'' என்றாள். ''இந்துக்கள் சர்ச்சிக்கு வரக்கூடாதா? அப்படியே இருந்தாலும் நான் ஏசுவைத் தரிசிக்க வரவில்லையே! என் ஏஞ்சலைத்தானே தரிசிக்க வந்தேன்'' என்ற ராஜனின் பதில் அவளை மீண்டும் நிலைகுலைய வைத்தது. அவன் பார்வையே அவள் கன்னிமையைக் கெடுப்பது போல ஓர் உணர்வு அவளுக்கு!

''ப்ளீஸ் மிஸ்டர் ராஜன்! தயவு செய்து இங்கிருந்து போய் விடுங்கள்! இனிமேல் இப்படித் தத்துப்பித்தென்று உளறுதீர்கள். நடக்காத ஒன்றிற்காக நாட்களைச் செலவிடாமல் நல்ல பிள்ளையாய் போய்ப் படித்து முன்னேறப் பாருங்கள்.'' எப்படியோ வார்த்தைகளை ஒவ்வொன்ருய் வரவழைத்துச் சொல்லி முடித்துவிட்டுப் போய் விட்டாள். இனி போய், கல்லூரிக்கு வேறு செல்ல வேண்டும், கான்வென்ட்டிற்குள் போய்ப் புறப்படுவதற்கு ஆயத்தம் செய்தாள்.

9-45-க்கு கல்லூரிக்குச் சென்றவளின் கண்கள் அவனையே தேடின. 'சீச்சீ! இந்தக் கண்ணுக்கும் மனத்திற்கும் கட்டுப்பாடே இல்லையோ?' தன் இடத்தில் சென்று அமர்ந்தாள். அவன் இன்னும் வரவில்லை. 'ஏன் இன்னும் காணேம். எப்போதும் முன்னுடியே வந்து விடுவாரே?' அவள் மனம் இப்படிக் கேட்டுக் கொண்டிருந்தது. கண்கள் வாசலையே நோக்கிக் கொண்டிருந்தன. முதல் மணி அடித்து இரண்டாவது மணியும் அடித்து வகுப்பும் தொடங்கி விட்டது. இன்னும் அவனைக் காணேம்! 'வகுப்பிற்கு ஒரு நாளும் வராமலிருந்ததில்லையே! இன்று மட்டும் ஏன்?... ஒருவேளை காலையில் தான் கூறியதற்காகத் தான்..' ஏஞ்சலுக்கு மனதில் ஏதோ பிசைந்தது போலிருந்தது. 'வர வர ஏன் அவர்மேல் ஓர் அனுதாபம் வருகிறது? ஒருவேளை அவர் சொன்னது மாதிரி இதனைத் தன் கடமைதான் தடுக்கிறதோ...? காட் ஒன்லி நோஸ்..ம்...'



எகிப்து ஜனதிபதியின் இஸ்ரேல் விஜயத்தை கெய்ரோவில் டெலிவிஷனில் பார்த்த ஒருவர் கூறியது: 'சந்திரனில் முதல் மனிதன் நடந்ததைப் பார்த்ததுபோல இருந்தது. நம்பவே முடியவில்லை.'

—நியூஸ் வீக்.

ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டாள்.

கொஞ்சநேரம் ஆகியிருக்கும். ராஜனின் நண்பர் இராமநாதன் வகுப்பறைக்கு வெளியே நின்று, பேராசிரியரிடம் ஏதோ மெதுவாகப் பேசினர். பின்னர் அந்த வகுப்பு மாணவர்களை எல்லாம் வெளியில் அழைத்துப் பேசினர். பின் எல்லோரும் வகுப்பை விட்டு ஏதோ சோக மயக்கத்தில் வெளியேறினர். பேராசிரியர் வகுப்பிற்குள் நுழைந்தார். மாணவிகள் மட்டுமே வகுப்பிலிருந்தனர். ''இத்துடன் இன்றைக்குப் பாடத்தை முடித்துக் கொள்வோம். ஒரு துக்கமான செய்தி! மிஸ்டர் ராஜன் தற்கொலை செய்ய முயன்று, தற்போது மருத்துவமனையில் இருக்கிருராம். அவருக்காகப்பிரார்த்தனைசெய்யுங்கள்.'' ஏஞ்சல் மேரியின் தலையில் இடி இறங்கியது போலிருந்தது. கண்களில் கண்ணீர் முட்டியது. எல்லோருக்கும் முன்னுல் அழக் கூடாதே. 'ஓ! அழுவதற்குக் கூட உரிமையில்லாத வாழ்க்கையில் தான்'.. முதல் முறையாகத் தன் துறவு வாழ்வின் மேல் வெறுப்பு வந்தது. 'இன்பத்தில் பங்குபெற முடியாவிட்டாலும், துன்பங்களில்கூடப் பங்குபெற முடியாத இந்த வாழ்வும் ஒரு....'

நீர் முட்டிய விழிகளைக் குனிந்து துடைத்துக் கொண்டாள். வகுப்பில் இருக்கவே முடியவில்லை. 'ஆஸ்பத்திரிக்கு போகலாமா? அதற்குக்கூட கான்வென்ட்டில் அனுமதி கேட்க வேண்டும்ம்! எப்படியாவது இன்று போய் விட வேண்டும்' என்ற முடிவுடன் கல்லூரிக்கு அரை நாள் லீவ் போட்டுவிட்டு கான்வென்ட்டிற்கு வந்தாள்.

ஏஞ்சல் மேரி ராஜனின் செயலை எண்ணிக் கலங்கினுள். 'அவர் ஏன் இப்படிச் செய்து கொண்டார்? தன்னை விட எத்தனையோ அழகான பெண்கள் இவரை அடைய தவம் செய்துகொண்டிருக்கும்போது.. வெள்ளை அங்கியும் மூடிய தலையும், மங்கலமில்லாத தோற்றமும் கொண்ட தன்னை ஏன் விரும்புகிருர்? இறைவனின் சோதனையில் இதுவும் ஒன்றுதானே?' அவளால் விடை காண முடியவில்லை.

ஆஸ்பத்திரிக்குள் சென்றவள் 115-வது வார்டுக்குள் நுழைந்தாள். ராஜனின் கட்டிலருகே அவன் அன்னை கண்ணீருடன்.. தந்தை ஒரு மூலையில், பெஞ்சில் தலை கவிழ்ந்து....ஏஞ்சலைப் பார்த்த ராஜனின் தாய் கட்டிலை விட்டுச் சற்று விலகிக் கொண்டாள். ராஜன் கிழித்துப் போட்ட வாழைத்தண்டு போல வாடி

வதங்கி, கண்கள் திறக்காமல்.. இலேசாக மூச்சு மட்டும் வந்து கொண்டிருப்பதை அவன்மேல் போட்டிருந்த போர்வை ஏறி இறங்கிக் காட்டிக் கொண்டிருந்தது. பக்கத்தில் ஒரு ஸ்டாண்டில் 'சலைன்' பாட்டில் சொட்டுச் சொட்டாகக் கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தது. ஏஞ்சல் மேரியின் இதயம் விம்மியது. இமைச் சிறகில் நீர் துளிர்த்தது. துடைத்துக் கொண்டாள். அவள்தான் அழக் கூடாதே!

மனிதக் கரங்களால் தொட முடியாத எல்லைக்குப் போய்விட்ட அவனை, மரணத்தின் வேளையில் மன்றாடிக் கொண்டிருக்கும் ஓர் உயிர் தொட்டிழுத்து விட்டது. தன்னை வளர்த்துப் படிக்க வைத்த மதமும், மடாலயமும் ஒருபுறம்.... தன்னையே எண்ணித் தனக்காகவே உயிரைத் தத்தம் செய்த ராஜன் ஒருபுறம்.... மரணப் பிடியில் வளைக்கப்பட்டிருக்கும் அவன் உயிர் தன் மனதையும் பிடித்திழுப்பதை அவளால் உணர முடிந்தது. கடிகார முள் போல திரும்பத் திரும்ப கன்னியர், கான்வென்ட், சர்ச், ஜெபம், பிரார்த்தனை. எந்திர மயமான இந்த வாழ்வு எங்கே? வசந்த காலத் தளிர்களோடும் வண்ணவண்ண மலர்களோடும், தான் உதறி வந்த வாழ்வே மீண்டும் தன்னை வரவேற்கும் நிலை எங்கே? ஆம்! அவள் மெல்ல.... மெல்ல.... மெல்ல.... ராஜன் போட்ட வட்டத்திற்குள் வந்து விட்டாள்.

ராஜனின் உதடுகள் ஏதோ அசைந்தன. ஆனால் கண்கள் திறக்கவில்லை.. ''ஏஞ்சல்..ஏஞ்சல்..'' 'ஐயோ! இந்த நிலையில்கூட என் பெயரினைத்தானே கூப்பிடுகிறார்!' ஏஞ்சல் முழுவதுமாய் நுழைந்து விட்டாள். நர்ஸ் வந்து டெம்பரேச்சர் பார்த்து, சார்ட்டில் ஏதோ கிறுக்கிக் கொண்டிருக்கும்போது ''எப்படியிருக்கிறது'' என்று ஏஞ்சல் கேட்டாள். ''நாளை சென்ற பின்தான் நிச்சயம்.'' நர்ஸ் கூறிவிட்டுப் போய் விட்டாள். அவளுக்கென்ன கவலை. ஒரு நாளில் நூறு பிறப்புக்களைச் சந்தித்து நூறு இறப்புக்களையும் பார்ப்பவளாயிற்றே! ஏஞ்சலின் துடிப்பு அவளுக்குத் தெரியவா போகிறது?

கான்வென்ட் திரும்பும்போது மணி ஆறாகி விட்டது. வரும்போதே ஏஞ்சல் ஒரு முடிவெடுத்துக் கொண்டே வந்தாள். 'நாளை பார்க்கும்போது தன் சம்மதத்தைக் கூறிவிட வேண்டும். பின் அவர் குணமான பின்னர் கான்வென்ட்டை



''என்னய்யா இது? 1978-ம் வருஷத்து அப்ளிகேஷனை இப்ப கொண்டு வந்து நீட்டறே? இத்தனை நாளா என்ன பண்ணிக்கிட்டு இருந்தே..?''

''இதே க்யூவிலேதான் சார் நின்னுக்கிட்டே இருந்தேன்!''

—த. எத்திராசன்

உதறி விட்டு, அங்கியைக் களைந்துவிட்டு, சேலையைக் கட்டிக் கொண்டு அவருடன் அவருடன்....'மணி அடித்தது.

மாலை ஜபம்.

இரண்டு மூன்று தினங்களாகவே அழுது வடிந்து கொண்டிருந்தவள் அன்று மிகவும் மகிழ்ச்சியோடிருந்தாள். மாலையில் ஆஸ்பத்திரி சென்று அவர் கண் விழிக்கும்வரை காத்திருந்து கூறிவிட வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள். கல்லூரிக்கு லீவ் போட்டுவிட்டுக் கட்டிலிலேயே படுத்துக் கொண்டிருந்தாள். மாலை 3 மணிக்குப் புறப்பட்டு சுபீரியரிடம் அனுமதிக்காக நின்றாள். நிற்கும்போதே அவள் மனம் 'இனிமேல் இப்படி அனுமதிக்காக சுபீரியரிடம் தவமாய் நிற்க வேண்டியதில்லை. இன்றோ நாளையோ இதை விட்டுப் போய் விடுவோம்' என்று நினைத்துக் கொண்டது. சுபீரியர் வந்ததும் அனுமதி பெற்று மருத்துவமனைக்கு விரைந்தாள்.

ராஜனின் கட்டிலருகே ஒரே கூட்டம். ''என் வயிற்றில் மண் அள்ளிப் போட்டுப் போய் விட்டாயே'' என்ற கதறல். நாலேயெட்டில் வார்டைத் தாண்டிச் சென்றாள். அங்கே ராஜன் நிம்மதியாகக் கண்களை மூடிக் கொண்டிருந்தான். மேலே போர்த்தியிருந்த போர்வை ஆடாமல் அசையாமல் சலனமில்லாமலிருந்தது. சலைன் பாட்டில் சொட்டுச் சொட்டாகக் கண்ணீரை விட்டது நின்று போயிருந்தது. சிஸ்டர் ஏஞ்சல் மேரியின் கண்கள் அதற்குப் பதிலாகச் சொட்டுச் சொட்டாய்.... சொட்டுச் சொட்டாய்.. ஆம்! அவள் அழத் தொடங்கிவிட்டாள்!

பாண்டியன் எக்ஸ்பிரஸில் டிக்கெட் ரிசர்வ் செய்த பெட்டியைத் தேடிக் கொண்டு பிளாட்பாரத்தின் முழு நீளத்தையும் நடந்தேன் என் மனைவியுடன். வண்டியில் இருந்தவர்களைவிட நான்கு மடங்கு கூட்டம் பிளாட்பாரத்தில். கைதட்டல்களும் கை குலுக்கல்களும். ஒவ்வொருவரும் யாரிடமோ அப்படிப் பேசிக் கொண்டும் சிரித்துக் கொண்டும் இருந்தார்கள். அரசு ஊழியர் சங்கத் தலைவர் ஒருவர் மறு நாள் சென்னையில் முதல்வரைச் சந்திக்கப் போகிறார். அவரை வழியனுப்ப கூட்டம். திரைப்பட நடிகர் ஒருவர் ஏறியிருந்த முதல் வகுப்புப் பெட்டி அருகே ஆர்வம் மிக்க மக்கள் நெருக்கம். ஓர் இளைஞன் ஐ.ஏ.எஸ். பாஸ் செய்துவிட்டுப் பயிற்சிக்கு வடக்கே போகிறான். அவனுடைய உறவினர்கள், நண்பர்கள்.. நான் இந்த மதுரை ஜங்ஷனில் பாண்டியன் எக்ஸ்பிரஸ் கூட்டக் கலகலப்பைப் போல் எங்கும் கண்டதில்லை. அத்துணை உணர்ச்சிக் குவியல்கள், நெகிழ்ச்சிக் காட்சிகள், பேசும் சித்திரங்கள்.



என் பெட்டியைக் கண்டு பிடித்து ஜன்னல் ஓரமாக என் இருக்கையில் அமர்ந்தேன். என் எதிரே புத்தம் புது மலரென பெண் ஒருத்தி அமர்ந்திருந்தாள். அவளது வட்ட முகத்தில் கரு விழிகள் ஜொலித்தன. இயற்கையாகவே செந்நிறம் கொண்ட அவளது ஒளிரும் அதரங்கள்... கழுத்தில் மஞ்சள் கயிற்றுடன் இணைந்த தங்கச் சங்கிலி. கைகளில் தங்க வளையல்கள். அம்பிகையின் திரு உருவம் போல் அழகுச் சித்திரமாய் அமர்ந்திருந்த அவள், ஜன்னலுக்கு அப்பால் வெளியே பார்த்துக் கொண்டிருந்தாள். சில வினாடிகளில் வசீகரம்மிக்க இளைஞன் ஒருவன் சில பத்திரிகைகள், பிஸ்கட் பாக்கெட்டுகளுடன் வந்து பிளாட்பாரத்தில் நின்றவாறே அவளிடம் கொடுத்தான். மென் சிரிப்புடன் அவற்றைப் பெற்றுக் கொண்ட அவள், அருகிலிருந்த தன் பையிலிருந்து ஒரு நோட்டை எடுத்து அதில் ஏதோ எழுதி அவனிடம் நீட்டினாள். அதைப் படித்த அவன் இலேசாகச் சிரித்தான். அவளிடமிருந்து பேனாவைப் பெற்று அவனும் ஏதோ எழுதிக் கொடுத்தான். அவள் தன் முகத்தில் சிறு நாணத்தைத் தோற்றுவித்தவளாய் அவன் கையிலிருந்த பேனாவை அன்புடன் பிடுங்கி ஏதோ எழுதினாள்.

திடீரென்று பிளாட்பாரத்தில் போலீஸார் முன்னே செல்ல ஓர் அரசியல் தலைவர் கைகூப்பியவண்ணம்... அவர் தம் கட்சிக்காரர்கள் 'வாழ்க.. வாழ்க...' என்று எழுப்பும் ஒலிக் கூடாரத்தில் கம்பீரமாகச் சென்றார்.

அந்தத் தம்பதி இருவரும் இதைக் கவனித்ததாகவே தெரியவில்லை. அந்த



நோட் புத்தகத்தில் நான்கு பக்கங்களுக்கு மேல் எழுதி விட்டனர்.

இந்த சமயத்தில் அந்தப் பெட்டியின் கண்டக்டர் ரிஸர்வேஷன் டிக்கெட்டுகளைப் பரிசோதிக்க வந்தார். அந்தப் பெண்ணை நோக்கி 'டிக்கெட்...டிக்கெட்' என்று கேட்டார். உரத்துக் கேட்டார். அவள் சுவாரஸ்யமாக எழுதுவதும், அவன் எழுதுவதைப் படிப்பதுமாக இருந்தாள். நான், 'டிக்கெட் கேட்கிறார்' என்று கை அசைவை அவர்களிடையே ஏற்படுத்தியவுடன் அவள் கண்டக்டரைப் பார்த்துவிட்டுக் கைப் பையிலிருந்த டிக்கெட்டை எடுத்துக் காண்பித்தாள். பின், மீண்டும் அந்த எழுத்துத் தொடரை இருவரும் ஆரம்பித்தனர்.

இந்த இரைச்சல்மிக்க பிளாட்பாரத்தில்,பேச்சு பேச்சு என்று எங்கும் நிறைந்திருக்கும் இந்தச் சந்தடியில் இவர்கள் இருவரும் பேசாச் சித்திரங்களாக...

என் மனைவியிடம்,''இவள் ஓர் ஊமைச் செவிடு என்று நினைக்கிறேன். கண்டக்

பார்த்தாயா? அதனால் எழுதியே தன் கணவனிடம் பேசுகிறாள். ஊமையாயிருந்தாலும் கெட்டிக்காரிதான்.;'' என்றேன்.

''இவ்வளவு அழகான பெண், ஊமை என்று நினைக்கவே பாவமாயிருக்கு... அந்தப் பையனும் ராஜா மாதிரிதான் இருக்கான். இவள் அழகுக்காக, ஊமையாயிருந்தாலும் பரவாயில்லை என்று கல்யாணம் பண்ணிக் கொண்டிருப்பான்'' என்றாள் என் மனைவி.

எங்கள் இருவரின் மென் குரலில் பேசிய பேச்சு வெளியில் நிற்கும் அவள் கணவனுக்குக் கேட்டிருக்க முடியாது. அவளோ எங்களை நேருக்கு நேர் பார்க்கவே இல்லை. அந்த ஒரு குயர் நோட்டையே காலி பண்ணிவிடுவார்கள் போலிருக்கிறது.

மணி ஏழரை. வண்டி கிளம்ப மணி அடித்தவுடன் பிளாட்பாரத்தில் ஒரு பரபரப்பு..அந்த இளைஞன் நிதானமாகப் பதில் எழுதிக் கொண்டிருந்தான். அந்த டீசல் இன்ஜினின் நீண்ட ஊளைகூட அவர்களின் கவனத்தைத் திருப்பவில்லை. வண்டி மெதுவாக நகரத் தலைப்பட்டதும் அவன் வண்டியுடன் நடந்தவாறே அவளது நீட்டிய வலக்கரத்தில் முத்தமிட்டு விடை கொடுத்தான்.

அந்தப் பெண் அவன் கடைசியாக எழுதியதைப் படித்துவிட்டுப் புன்முறுவலுடன் அந்த நோட்டைப் பையில் வைத்துவிட்டு வாரப் பத்திரிகை ஒன்றைப் படிப்பதில் முனைந்தாள்.

நான் பேசாமல் அவளையே ரசித்துக் கொண்டு, இறைவனின் ஒர வஞ்சகத்தை எண்ணி அவ்விறைவனைக் கடிந்து கொண்டேன்.

கொடைக்கானல் ரோடு ஸ்டேஷனில் வண்டி நின்றதும் நான் ஒரு பாக்கெட் திராட்சைப் பழம் வாங்கி என் மனைவிக்குக் கொஞ்சம் கொடுத்துவிட்டு ஒரு கொத்தை அவளிடம் நீட்டினேன்.

''தேங்க்யூ...ஸார்!'' என்று இனிய குரலில் கூறியவாறு அந்தப் பழத்தைப் பெற்று ஒன்றை வாயில் போட்டுக் கொண்டு ''வெரி ஸ்வீட்..'' என்று



மாசிலாமணித் தங்கம் என்பவர் எங்கள் பாங்கிற்கு வந்து நகையை அடகு வைத்துப் பணம் வாங்கிச் சென்றார். அன்று மாலையில் புரோநோட்டைச் சரி பார்த்த மானேஜர், கடன் வாங்கியவர் 'மாசிலாமணித் தங்கம்' என்று முழுக் கையெழுத்துப் போடாமல் மாசிலாமணி என்று மட்டும் கையெழுத்திட்டிருப்பதைக் கண்டார்! சம்பந்தப்பட்ட அதிகாரியை அழைத்து, 'மாசிலாமணி என்று மட்டும் கையெழுத்துப் போட்டிருக்கிறாரே, தங்கம் எங்கே?' என்றார். 'அதைத்தான் நம்மிடம் அடகுவைத்து விட்டாரே' என்று ஆபீசர் நகைச்சுவையுடன் சொன்னதும் அனைவரும் குபீரென்று சிரித்து விட்டோம்!

—எஸ். மோகன்

நான் திடுக்கிட்டுப் போனேன்.

இவள் எவ்வளவு இனிமையாகப் பேசுகிறாள்!

''மதுரை ஸ்டேஷன்லே வந்தது உங்க கணவனா?''

''ஆமாம்.''

''ஸ்டேஷன்லே ஒரே இரைச்சலாக இருக்கு. .பேசினா எல்லாரும் கேட்பார்களே என்று, எழுதியே நீங்க இரண்டு பேரும் சம்பாஷித்துக் கொண்டது ரொம்ப வேடிக்கையாக இருந்தது'' என்றேன்.

''நோ. .நோ. . அதில்லே. அவருக்கு ஒரு ஜுரத்திலே பேசும் சக்தியும் கேட்கும் சக்தியும் போயிட்டுது. என் முன்னாலே அவர் இருக்கும்போதெல்லாம் நான் அவர் மாதிரிதான் இருப்பேன். உலகத்து ஒலிகள் எதுவும் என் காதில் விழாது. அந்த நிச்சலமான மன நிலையிலேதான் அவர் முகத்தின் உணர்ச்சிகள் பேசுவதை நான் கேட்க முடியும். அவர் முன்னிலையில் என் வாய் அசையாது.''

''மெட்ராஸில் சொந்தக்காரர்கள் இருக்கிறார்களா?''

''என் அப்பாவும் அம்மாவும் அங்கேதான் இருக்கிறார்கள். ஆல் இந்தியா ரேடியோவிலே இறந்தவெளி அரங்கிலே நாளை சாயந்திரம் பாடப் போறேன். நாளை மறு நாள் 'வைகை' யிலே திரும்பி வந்து விடுவேன்!'' என்றாள்.

அவள் பெயரைக் கேட்டவுடன் முன்னணிக்கு வந்து கொண்டிருக்கும் பாடகி இவள்தானா என்று வியந்தேன். அவர்களுடைய மண வாழ்க்கை எத்தனை உயர்ந்தது!

''எல்லாரும் பாராட்டும் உங்கள் இனிய சங்கீதத்தை உங்கள் அன்புக் கணவர் மட்டும் கேட்க இயலவில்லை.... விசித்திரமான தம்பதி நீங்கள். .'' என்றேன்.

''விசித்திரம் இல்லை ஸார்! நாங்கள் சித்திரங்கள். நாங்கள் கண் வழி பேசும் மௌன மொழிக்கு முன்னர் எந்த இன்னிசையும் எங்களுக்கு மிகச் சாதாரணமானது. . இதில் அபஸ்வரத்திற்கே வாய்ப்பில்லை. நாங்கள் ஒருவருக்கொருவர் ராகங்கள். . தாளங்கள். .''


அவள்தான் எவ்வளவு கம்பீரமாகப் பெருமையுடன் பேசுகிறாள்!

பலதரப்பட்ட உணர்ச்சிச் சித்திரங்களைத் தாங்கிக் கொண்டு அந்த ரயில் ஒரு தாளகதியுடன் விரைகிறது. அந்த ரயிலுக்குப் பேசும் சக்தியா இருக்கிறது?

A to Z வரையுள்ள 26 ஆங்கில எழுத்துக்கள் அனைத்தும் அடங்கிய வாக்கியம் அமைக்கத் தெரியுமா?

இதோ—

QUICK BROWN FOX JUMPS OVER THE LAZY DOG.



—அ. முஸாதிக்


'ஒளிரும்' வெண் சலவைக்கே
Weight when Packed 135 gm net
Supreme
det
detergent washing cake
for whiteness that 'Glows'
சுப்ரீம் டெட் டிடர்ஜெண்ட் சலவைக் கட்டி

யூனிஃபார்ம்

பச்சை - வெள்ளை யூனிஃபார்மில் லட்சுமி பளிச்சென்றிருக்கிறாள்.

இன்றைக்கு ஸ்கூல் இல்லை. ஆகையால் நிதானமாய்ப் போகலாம்.


நிறையப் பெண்கள் ஸ்கூலுக்குக் கார்களில் வருவார்கள், பின் ஸீட்டில் பணக்காரத்தனமாய்ச் சரிந்துகொண்டு; சம்பிரதாயத்துக்கு ஒரு புஸ்தகத்தைப் பிரித்து மடியில் பரப்பிக்கொண்டு.

சில பெண்கள், அண்ணன்களுக்கும் சித்தப்பாக்களுக்கும் பின்னால் ஸ்கூட்டர்களில், முன்னால் போகும் வாகனங்களையெல்லாம் ஓவர்டேக் செய்யத் தூண்டிக்கொண்டு; தாங்கள் முந்தப்படும்போது வேறு பக்கம் கவனமாய் முகத்தைத் திருப்பிக் கொண்டு.

இன்னும் சிலர் பஸ்களில், ஸ்டாண்டிங்கில் வரும் ஸைட் பர்ன்ஸ்களையும் தொங்கு மீசைகளையும் தணிந்த குரலில் விமரிசித்துக் கொண்டு; ரிஷிகபூர், கமலஹாசனின் ஒற்றுமைவேற்றுமைகளை அக்கறையாய் சர்ச்சை செய்துகொண்டு; கூர்மையான சிரிப்புக்களால் பஸ்ஸை இரண்டாகப் பிளந்துகொண்டு.

லட்சுமிக்கு இவையெல்லாம்அந்நியம். அவள் ஸ்கூலுக்குப் போவது கனவுகளில் ஆரோகணித்து; எதிர்காலத்து இனிய கனவுகள்.

நிகழ்காலச் சகதியை மிதித்துக் கொண்டு எம்பி எம்பி இவள் எட்டிப் பார்க்கும் தூரத்து எதிர்காலக் கனவுகள்.



லட்சுமியின் கனவுகளில் அவள் ஒரு திறமைமிக்க கல்லூரி ஆசிரியை. மிஸ் லட்சுமியின் வகுப்பைக் கட் பண்ண எந்த மாணவிக்குமே மனசு வருவதில்லை. தம்பி, ஐ.ஏ.எஸ். பாஸ் பண்ணிவிட்டு ட்ரெய்னிங்கில் இருக்கிறான். அம்மா, மாடி பால்கனியில் ஈஸிச் சேரில் சரிந்து கொண்டு கீதை வாசித்துக் கொண்டிருக்கிறாள், கண்ணாடி அணிந்து கொண்டு, மேலே ஒரு சால்வையைப் போர்த்திக் கொண்டு; அது போல அம்மாக்களை, முன்பு அப்பா கூட்டிக் கொண்டுபோன சினிமாக்களில் பார்த்திருக்கிறாள் லட்சுமி. அப்பாவின் நினைப்பு வரும்போது லட்சுமியின் கனவுகள் கரையும். கனவுகள் கரைந்து மங்குகிறபோது, பாதி விலைக்கு வாங்கின பாடப் புஸ்தகங்களின் சுமையின் அழுத்தம் நெஞ்சில் உணரப்படும்.

இன்றைக்குப் புஸ்தகச் சுமை இல்லை. அதனால் கனவுகளைக் கொஞ்சம் தாராளமாகவே சுமந்து கொண்டு ஸ்கூல் காம்பவுண்டுக்குள் பிரவேசித்தாள் லட்சுமி.

குழந்தைகள் தினத்துக்காக ஸ்கூலில் விசேஷ நிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டிகள், பரிசுகள், சந்தோஷங்கள்.

தீபாவளியையொட்டி வரும் குழந்தைகள் தினமாதலால் தீபாவளிப் பகட்டு மாணவிகளின் ஆடைகளில் பளபளத்துக் கொண்டிருந்தது. ஒவ்வொருத்தியும் மற்றவர்களுடைய தாவணியையும் மாக்ஸியையும் பெல்பாட்டத்தையும் விரல்களாலும் பார்வையாலும்உணர்ந்து கொண்டு, கடையையும் விலையையும் விசாரித்துக் கொண்டு, வியந்துகொண்டு, பொறாமைப்பட்டுக்கொண்டு....

லட்சுமியை விசாரிக்கவோ வியக்கவோ பொறாமைப்படவோ யாருமில்லை. தன்னை நெருடும் பார்வைகளைத்தான் உணர்ந்தாள் லட்சுமி. அநுதாபப் பார்வைகள் சில, அலட்சியப் பார்வைகள் சில, அர்த்தமில்லாத பார்வைகள் சில, கேலிப் பார்வைகள் சில....

புதுச் சரசரப்போடு கலர் கலராய் பூத்துக் குலுங்கும் பட்டுத் தோட்டத்துக்கிடையில் பச்சைப் பாவாடை, வெள்ளை பிளவுஸ், வெள்ளைத் தாவணி, கறுப்பு ரிப்பன், செருப்பில்லாத கால்கள். நெருப்பின் மேலே நிற்பது போல உணர்வு.

இன்றைக்கு வராமலிருந்திருக்கலாமோ?

இன்றைக்கும் அட்டெண்டன்ஸ் எடுப்பார்களென்று ராதா பயங்காட்டாமல் இருந்திருந்தால் ஸ்கூலுக்கு வராமலே இருந்திருப்பாள்....

பின்னுலிருந்து ஒரு சிநேகிதிக் கும்பல் வந்தது, ஸோபனு தலைமையில்.

லட்சுமி அச்சத்துடன் எதிர்பார்த்திருந்த சமாசாரத்தை ஸோபனுவே ஆரம்பித்தாள்.

''இங்க பாருப்பா, இவ இன்னிக்கும் யூனிஃபார்ம்ல வந்திருக்கிரு! ஏன் லட்சுமி, ஸர்க்குலர் வந்தது ஒனக்குத் தெரியாதா? ஐயோ, இன்னிக்கு லீவ் தானே, சும்மா கலர் டிரெஸ் போட்டுட்டு வரலாமே.''

''ஸர்க்குலர் போட்டாங்களா? எனக்கு எப்படித் தெரியாமப் போச்சு! நீங்க யாரும் என்ட்ட சொல்லக்கூட செய்யலப்பா.''- லட்சுமி 'கோபித்து'க் கொண்டாள் சிநேகிதிகளை.

இத்தனை இயல்பாய் தனக்கு எப்படி நடிக்க வருகிறது என்று அவளுக்கு ஆச்சரியம் ஒரு பக்கம்.

''அவளோட தீபாவளி டிரஸ்ஸ நாமெல்லாம் பாக்கக் கூடாதுன்னு தான் இன்னிக்கும் யூனிஃபார்ம் போட்டுட்டு வந்திருக்கா. பொல்லாதவம்மா இவ!''

—ராதாவின் கேலி சிநேகப்பூர்வமானதா அல்லது விஷமத்தனமானதா என்று லட்சுமிக்குப் புரியவில்லை; புரிந்து கொள்ள அக்கறையுமில்லை.

ஸோபனு,லட்சுமியின் கையைப் பற்றி அழுத்தினுள்.

''யேய், இன்னும் டைம் இருக்கு; வீட்டுக்குப் போய் சீக்கிரமா சேஞ்ஜ் பண்ணிக்கிட்டு வந்திடேன்.. எங்க கார்ல போய்ட்டு வந்துடலாம்; டிரைவர்ட்ட சொல்றேன், இல்லாட்டி நானும்கூட வரணும்னுலும் வர்றேன்,. என்ன?''

ஸோபனுவுக்குத் தன்மேலே உள்ள பிரியம் லட்சுமிக்குத் தெரிந்ததுதான். ஆனுல் அதுவே இப்போது அவளைச் சங்கடப்படுத்தியது.

''வேண்டாம் ஸோபனு. வந்தது வந்தாச்சு. இதனுல என்ன கெட்டுப் போச்சு இப்போ? தீபாவளிக்கி அவங்க அவங்க வீட்ல என்னென்ன செஞ்சீங்க, அதச் சொல்லுங்க கேப்போம்.''

இதுதான் சான்ஸ் என்று ஒவ்வொருத்தியும் அவளவள் வீட்டுத் தீபாவளியைப் பிரஸ்தாபிக்க ஆரம்பித்தாள், 'ஏன் கேட்டோம்' என்று லட்சுமி நினைக்குமளவுக்கு.

லட்சுமியும் தீபாவளிகளில் பட்சணங்கள் ருசித்திருக்கிருள், பட்டாசு வெடித்திருக்கிருள். அதெல்லாம் அப்பா



எண்பது லட்சம் ஜனத்தொகை கொண்ட நியூயார்க் நகரில்கூட மூன்றே மூன்று தினசரி செய்தித் தாள்கள்தான் உண்டு. ஆனால், புது டெல்லியில் பத்து தினசரிப் பத்திரிகைகள் வெளியாகின்றன.



உயிரோடிருந்த காலத்தில். இந்தத் தீபாவளிக்கும் அம்மா ஒரு பழைய நியூஸ் பேப்பரில் சுற்றி சில பட்சணங் களும் இரண்டு மத்தாப்புப் பெட்டிகளும் கொண்டு வந்தாள் எஜமானியம்மா கொடுத்ததாக.

சிநேகிதிகளுக்குள் உரையாடல் உற்சாகமாய் நடந்து கொண்டிருந்தது. லட்சுமிக்கு இருப்புக் கொள்ளவில்லை. அந்தச் சூழ்நிலையில் இவள் உடைந்து போனாலும் போவாள். அதற்கு முன்னால் நழுவிவிட வேண்டும் அங்கேயிருந்து. ஸோபனாவிடங்கூட சொல்லிக் கொள் ளாமல் மெல்ல வெளியேறினாள்.

விலகி விலகி மேலே சென்றுவிட யத்தனிக்கும் ஹீ லியம்பலூனை நூலால் இழுத்துப் பிடித்திருப்பது போல தன் கனவுகள் விலகிப் போய்விடாமல் இழுத்துப் பிடித்துக் கொண்டு வீடு நோக்கி நடந்தாள்.

தாவணிபோடும் பெண்ணாய் வளர்ந்து விட்ட நிலையில் செருப்பில்லாமல் வெறுங்காலோடு ரோட்டில் நடப்பது என்னவோ போலத்தான் இருந்தது. இவளுக்கு செருப்பு வாங்கிக் கொடுப்ப தற்காகப் போன மாசம் அம்மா சேர்த்து வைத்திருந்த துட்டு, அடம் பிடித்த தம்பிக்கு புரூஸ் லீ பனியன் வாங்கச் செலவாகிவிட்டது.

'ரெண்டு மூணு மாசம் பொறுத்துக்க மகளே' என்றாள் அம்மா.

இன்றைய நிகழ்ச்சிகள் பொறுத்துக் கொள்ள முடியாததாய் இருந்தது லட்சுமிக்கு. உடனடியாய் இவளுக்கு ஒரு மாற்றுடை வேண்டும். ஸ்கூலுக்குப் போடும் யூனிஃபார்ம்தான் லீவ் நாட்க ளிலும். வெளியிலும் அதுதான், வீட்டுக் குள்ளேயும் அதுதான். இருபத்துநாலு மணி நேரமும் பச்சையும் வெள்ளை யும்.. குறைந்த பட்சம் ஒரேயொரு கலர் தாவணி மட்டுமாவது....

'..அம்மா அம்மா, எப்படியாச்சும் இந்த மாசம்.. ப்ளீஸ்ம்மா, எனக்கு வெக்கமாயிருக்கு....'

வீட்டுக்குள்ளே லட்சுமி நுழைந்த

புகையோடு போராடிக் கொண்டிருந் தாள். தம்பி, பாயில் படுத்திருந் தான். மார்பில் புரூஸ் லீ. அவனுக்குப் பக்கத்தில் மடித்து வைக்கப்பட்டிருந்த துணியைக் கையிலெடுத்துப் பார்த்தாள் லட்சுமி.

இரண்டு தாவணிகள்.

தீபாவளிக்கு எஜமானியம்மா தனக்கு எடுத்துத் தந்ததாக அம்மா காட்டின சேலை இப்போது இரண்டாகக் கிழிக்கப் பட்டு லட்சுமிக்காக இரண்டு தாவணி களாய் மாறியிருந்தது.

லட்சுமி அம்மாவைப் பார்த்தாள். இப்போது அம்மா கட்டியிருக்கும் அந்த ஒரு சேலைதான் அம்மாவுக்கு. ஊதாக் கலர் சேலையில் கிழிசல்கள் வெள்ளை நூலால் அங்கிங்கெனாதபடி எங்கும் தைக்கப்பட்டிருந்தது.

லட்சுமிக்காகவாவது யூனிஃபார்ம் இரண்டு செட் உண்டு. அம்மாவுக்கு 'யூனிஃபார்ம்' ஒன்றே யொன்றுதானே!

லட்சுமி,ஊசி நூலையும் அந்த இரண்டு 'தாவணி'களையும் எடுத்துக் கொண்டு தம்பிக்குப் பக்கத்தில் உட்கார்ந்தாள்.

''லட்சுமி, அடுப்புல ரஸம் இருக்கு. எறக்கி வச்சிரு. தம்பி எந்திரிச்சான்னா சோறு வச்சுக் குடு, நாம்போய் அங்கே தலையக் காட்டிட்டு வந்துடறேன். தொவைக்கிறதுக்குத் துணி போட்டிருக் காங்க..ஆமா, அதுல என்னத்தப் போட்டுத் தச்சிட்டிருக்கே நீ, லட்சுமி?''

''ஒங்களுக்கு சேலை தக்கிறேம்மா.''

அம்மா லட்சுமியை ஆழமாய்ப் பார்க் கிறாள். லட்சுமி அமைதியாய்த் தன் இணைப்பு வேலையைச் செய்துகொண் டிருக்கிறாள்.


அம்மாவின் இரண்டாம் சேலையின் மேல் லட்சுமியின் கனவுத் திரைப்படம் ஓடுகிறது, 'இந்த அம்மா, இன்னும் சில வருஷங்கள் கழித்து மாடியில் பால்கனி யில் ஈஸிச்சேரில் கைகளில் கீதையும் கண்களில் கண்ணாடியும் மேலே ஒரு சால்வையுமாய்..'

இப்போது பச்சை வெள்ளை யூனி

அனுபவமுள்ள விவசாயிகளின் பேச்சு:

பாயர் பூச்சிமருந்துகளின் அபார வீச்சு — நெற் பயிர்ப் பூச்சிகள் மாயமாய்ப் போச்சு.





நெற் களஞ்சியங்கள் நிரம்ப வேண்டுமெனில், நிலத்திலே பூச்சித் தொல்லையைத் திறம்படத் தீர்த்துக்கட்ட வேண்டும். பாரெங்கும் கொடி நாட்டிய பாயர் பூச்சி மருந்துகள் இதோ. பயன்படுத்திப் பாருங்கள், பழுதில்லாத பயிர்வளம் பறைசாற்றுமே பாயர் சாதனையை.

மிகச் சிக்கனமான முறையில் நெற்பயிர்ப் பூச்சிகள் எல்லாவற்றையும் வன்மையாக அடக்குவதற்கு

மெட்டாஸிட் (Metacid® 50)

அல்லது

லெபேய்ஸிட் (Lebaycid® 1000)

அல்லது


ஃபாலிதையான் (Folithion®)

கொள்ளை நோயினாலும் இலைப்புள்ளி நோயினாலும் சேதம் விளைவதைத் தடுத்திட உங்களுக்கு உறுதுணை :

ஹினோஸான் (Hinosan®)

ஒவ்வொரு அடைப்புடனும் இணைக்கப்பட்டிருக்கும் குறிப்பேட்டிலுள்ள உபயோக முறைகளின் படியும், தற்காப்பு விதிகளின் படியும், நெற்பயிருக்கான இப் பூச்சி மருந்துகளை உரிய காலத்தில் உபயோகியுங்கள். நெற்பயிர் செழிக்கக் காண்பீர். மேல் விபரங்களுக்கு, அருகிலுள்ள எங்கள் விற்பனையாளரை அணுகுங்கள்.

நான்...



ஜன்னல் வழியே பார்வையை ஓட்டுகிறேன். அருவி 'ஓ'வென்று இரைச்சலுடன் மின்னலைப் போல் விழுந்து கொண்டிருக்கிறது. பள்ளத்தாக்கில் தகதகவென்று மின்னுகின்ற மாலைச் சூரியன் மரங்களுக்கிடையே தெரிகிறது.

மரகதப் பச்சைக் கம்பளம் விரித்தது போல் பள்ளத்தாக்கில் விரிந்து கிடக்கும் அடர்ந்த காடுகளின் இடையிடையே சிவப்புமலர்கள்பூத்துச் சிரிக்கின்ற 'ஃபயர் ஆப் த ஃபாரஸ்ட்' மரங்கள். தூரத்தில் மலைமுகடுகளில் தவழ்கின்ற மஞ்சுக் கூட்டங்கள் கண்ணுக்கு விருந்தளிக்கின்றன.

ஐயாயிரம் அடிகள் உயரத்திற்கு மேலிருப்பதால் மாலைச் சூரியனின் வெப்பம் தெரியாதவாறு மலைக் குளிர் காற்று வீசிக் கொண்டிருக்கிறது. உடலுக்கு இதமாக இருக்கிறது.

ஜன நடமாட்டமே இல்லாத காடு. தூரத்திலிருந்து காட்டு மிருகங்களின் பிளிறல்களும், உறுமல்களும் லேசாகக் கேட்டுக் கொண்டிருக்கின்றன. பறவைகளின் குரல்களோடு, சில்வண்டுகளின் இரைச்சல் விட்டுவிட்டுக் கேட்கின்றது.

அருவியில் குளிக்கப் போன அஜிதா இன்னும் திரும்பி வரவில்லை. கன்னத்தைத் தடவிப் பார்த்துக் கொள்கிறேன். அடர்த்தியாக முசுமுசுவென்று வளர்ந்த தாடி கையில் குத்துகிறது. கன்னங்கள் ஒட்டிப்போய் கிடக்கின்றன. கண்கள் குழி விழுந்துபோய் கிடப்பதை உணருகிறேன். குச்சி குச்சியாக இருக்கும் கைகளையும் கால்களையும் பார்க்கும் போது நான் மிகவும் இளைத்துப் போய் விட்டது தெரிகிறது.



உள்ளே சென்று டிரான்சிஸ்டரை எடுத்துத் திருப்புகிறேன். கோழிக்கோடு ஸ்டேஷன். செய்தி வாசிக்கும் நேரம். அறிவிப்பாளர் செய்தி வாசித்துக் கொண்டிருக்கிறார்:

'மீண்டும் தலைப்புச் செய்திகள்..

நடிகர்கள் பேரைச் சொல்லி மோசடி. மூணாறில் ஆறு பேர் கைது.

கேரள கவர்னர் ஜோதி அம்மாள் 61-வது பிறந்த நாளை முளகுமூடு கான்வென்ட் பள்ளிக் கூடத்தில் கொண்டாடினர்.

தேவிகுளம் அருகில் காட்டு யானைக் குட்டி உயிருடன் பிடிபட்டது. குட்டியைத் தேடி 12 காட்டு யானைகள் படையெடுத்து வந்தன. தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் தீப்பந்தங்களைக் காட்டி யானைக் கூட்டத்தை விரட்டினார்கள்.

இத்துடன் கேரள மாநில பிராந்தியச் செய்திகள் முடிவடைந்தன.

ஒரு முக்கிய அறிவிப்பு: சாந்தாம்பாரா, நெடுங்கண்டம், வண்டன்மெட்டு, வண்டிப் பெரியார், குமுளி, இடுக்கி பகுதிகளில் கொள்ளையடித்தும், பல கொலைகள் செய்தும் தலைமறைவாய்த் திரிந்த நக்ஸலைட் ஆலப்புழா சுகுமாரன் கைது செய்யப்பட்டு மூவாத்துப்புழா போலீஸ் நிலையத்தில் காவலில் வைக்கப்பட்டிருந்தபோது போலீஸ்காரர்களைத் தாக்கிவிட்டுத் தப்பித்துத் தலைமறைவாகி விட்டார். இவரைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு அல்லது இவர் இருக்கும் இடம் குறித்துத் துப்புக் கொடுப்பவர்களுக்குத் தக்க சன்மானம் அளிக்கப்படும்.'

டக்கென்று டிரான்சிஸ்டரை நிறுத்துகிறேன். அதே நேரத்தில் தடதடவென்று

திரும்பியிருப்பான் என்றுஎண்ணுகிறேன். எழுந்து சென்று கதவைத் திறக்கிறேன்.

வெளியே—

ஆறடி உயரமும் ஆஜானுபாகு போன்ற தோற்றமும் உடைய ஒருவன். நல்ல கறுப்பு நிறம். பெரிய முறுக்கு மீசை. தலையெல்லாம் எண்ணெய் பசையில்லாமல் பரட்டையாகத் தொங்கிக் கொண்டிருக்கிறது. கண்கள், குடிகாரன் கண்களைப் போல சிவந்திருக்கின்றன. சிரிப்பு என்றால் என்னவென்றே அறியாததைப் போல முகம் இறுகிப் போய் கொடூரமாய் இருக்கிறது.

''நீங்கள் யார்? யாரைப் பார்க்கணும்?'' என்கிறேன்.

''நான்.... நான்தான் நக்ஸலைட் சுகுமாரன். கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி டிரான்சிஸ்டரில் கேட்டுக்கிட்டிருந்தீங்களே ஒரு அறிவிப்பு, அந்த ஆலப்புழா சுகுமாரன் நான்தான்...''

'நான் செய்தி கேட்டுக் கொண்டிருந்த போது இவனும் வெளியில் நின்று அதைக் கேட்டுக் கொண்டிருந்திருக்க வேண்டும்' என்று நினைத்துக் கொள்கிறேன்.

பதட்டத்தைக் காட்டிக் கொள்ளாமல் கேட்கிறேன்: ''உங்களுக்கு என்ன வேண்டும்?''

சாப்பிடவே இல்லை...ஏதாவது சாப்பிடுவதற்கு இருந்தால் கொடுங்கள்.''

அவனுடைய பசிக் கிறக்கம் முகத்தில் தெரிகிறது.

''உள்ளே வந்து உட்காருங்கள்'' என்று கூறிக் கொண்டே அடுத்த அறைக்குள் சென்று பார்க்கிறேன். அஜிதா சக்கப் பிரதமன் செய்து வைத்திருக்கிறாள். அடுப்பில் ஈயப்பாத்திரத்தில் தணலில் வரச்சாயா (பால் கலக்காதது) கொதிப்படங்கிக் கிடக்கிறது. ஒரு ஈயத் தட்டில் கொஞ்சம் சக்கப் பிரதமன் எடுத்து வைத்துக் கொண்டு, சுவர் ஓரத்தில் கட்டித் தொங்கவிட்டிருந்த நேந்திரன் வாழைக் குலையிலிருந்து நான்கு வாழைப்பழங்களைப் பிய்த்துக் கொண்டு முன்னறைக்கு வருகிறேன்.

அவன் தரையில் சப்பணமிட்டு உட்கார்ந்திருக்கிறான். தட்டையும், பழங்களையும் அவன் முன்னால் வைத்துவிட்டுத் திரும்பி வந்து ஒரு டம்ளரில் சாயாவையும், இன்னொரு டம்ளரில் தண்ணீரும் எடுத்துக் கொண்டுபோய் வைக்கிறேன்.

எதுவும் பேசாமல் அமைதியாகச் சாப்பிடுகிறான். தண்ணீரையும் சாயாவையும் 'மடக்மடக்'கென்று ஒரே மூச்சில் குடித்துவிட்டுக் கைகளைக் கழுவாமல் அப்படியே அழுக்கு வேஷ்டியில் துடைத்துக் கொண்டே எழுந்து கொள்கிறான்.

''வெள்ளம் வேண்டுமா?'' என்கிறேன்.





கல்யாணத் தரகர்: இது உங்க பெண்ணுன்னு ஏங்க முன்னாலேயே சொல்லலே? இது பையன்னு நினைச்சிக்கிட்டு பெண் தேடிக்கிட்டு இருந்தேன்!

—ஜி. குசைராஜ்

''வேண்டாம்..'' என்று சொல்லிக் கொண்டே ஒருக்களித்துச் சாத்தி வைக்கப்பட்டிருந்த கதவைத் தள்ளிக் கொண்டே நன்றிகூடச் சொல்லாமல் வெளியே இறங்கி ஒற்றையடிப் பாதையில் மெல்ல நடக்கிறான்.

மரங்களுக்கிடையில் செல்கின்ற ஒற்றையடிப்பாதை நேரே அருவிக்குப் போகின்றது. வாசலில் வந்து நின்று கொண்டு பார்க்கிறேன். அருவி கண்ணுக்குத் தெரிகிறது. அருவியிலிருந்து அஜிதா கரையேறி வருகிறாள். முண்டும் ஜாக்கெட்டும் அணிந்திருக்கிறாள். இரண்டும் தண்ணீரில் நனைந்து உடலோடு ஒட்டிக் கொண்டிருக்கின்றன.

துவைத்த துணிகளை முறுக்கிப் பிழிந்து தோளில் போட்டுக் கொண்டே அழகாக ஒரு தேவதையைப் போல நடந்து வருகிறாள்.

அருவியை நோக்கிப் போய்க் கொண்டிருக்கும் அவனை எதிரில் பார்த்ததும் அவள் கண்கள், 'யார் இவன்?' என்பதைப் போல, கேள்விக்குறியோடு விரிகின்றன.

இரண்டு பேர் ஒரே நேரத்தில் நடக்க முடியாத குறுகலான பாதை. அவள் வழிவிடுவது போல் சற்று ஒதுங்கி நிற்கிறாள்.

அவன் அவள் அருகே சென்றதும் அவளைத் தாண்டிச் செல்லாமல் அவளைக் குறுகுறுவென்று பார்த்துக் கொண்டே வழியை மறித்துக்கொண்டு நிற்கிறான்.

அவனுடைய கண்களில் மிருக வெறி சுடர் விடுகிறது.

அவள் கூச்சத்தோடு கைகளை மார்புக்குக் குறுக்கே கட்டிக் கொண்டு, ''வழி விடு'' என்று கோபத்துடன் கூறுகிறாள். நகராமல் அவன் அப்படியே நிற்கிறான். அவள் கண்கள் கோபத்தால் மேலும் சிவக்கின்றன.

அவளுடைய கையை எட்டிப் பிடிக்கின்றான்.

அடுத்த விநாடி ''ஐயோ!'' என்று அலறிக்கொண்டு குனிந்த அவன், தலை குப்புறச் சுருண்டு விழுகின்றான். கண் இமைக்கும் நேரத்தில் அஜிதா அவனுடைய அடிவயிற்றில் ஒரு 'கராத்தே' உதை கொடுத்து விட்டாள். கீழே விழுந்தவனை மீண்டும் நெற்றிப் பொட்டிலும் நெஞ்சிலும் மின்னல் வேகத்தில் உதைத்து உருட்டித் தள்ளுகிறாள். கால்களையும் கைகளையும் பரப்பிக் கொண்டு மூச்சு இல்லாதவனைப் போல கீழே கிடக்கிறான். அவனைக் காலால் உருட்டி அருவியில் கொண்டு போய்த் தள்ளிவிட்டு ஒன்றும் நடவாதவளைப் போல அமைதியாய்த் திரும்பி வருகிறாள்.

கதவைப் பிடித்துக் கொண்டு நிற்கும் என்னைப் பார்த்து, ''சுகுமார்... யார் அவன்?'' என்று அஜிதா அமைதியாகக் கேட்கிறாள்.

''யாரோ தெரியவில்லை. அவன் ஒரு வழிப்போக்கனாக இருக்கக்கூடும். பசியோடு வந்திருக்கிறான். கதவைத் தட்டினான். திறந்தவுடன் 'நீங்கள் யார்?' என்று கேட்டேன்.

உடனேயே 'ஆலப்புழா சுகுமாரன்' என்று கூறினான்.


'பசிக்குது, சாப்பிடுவதற்கு ஏதாவது இருந்தால் கொடுங்கள்' என்று கேட்டான்.

''ஆலப்புழா சுகுமாரன் என்றால் நான் பயந்து கொண்டு ஏதாவது உணவு கொடுப்பேன்'' என்று நினைத்திருப்பான் போலிருக்கிறது.

''நான்தான் நிஜமான நக்ஸலைட் ஆலப்புழா சுகுமாரன் என்பது அவனுக்குத் தெரிந்திருந்தால் நிச்சயம் அப்படிக் கூறி இருக்கமாட்டான்'' என்று சிரிக்கிறேன்.

அஜிதாவும் சிரித்துக்கொண்டே உள்ளே வருகிறாள்.


விருந்தினர் காப்பி
அருந்திடும் நேரம்
பொருந்திடத் தாரீர்
பிரிட்டானியா
மாரி!
காப்பியோடு துணைசேர : பிரிட்டானியா மாரி. கலகலப்பூட்டும் பானத்தோடு கரகரப்பான பிஸ்கட். விருந்தினர்களை உபசரிக்க வேறென்ன வேண்டும்! காப்பி, தேநீர் பருகும் வாய்க்கு, கொரித்திட லேசான சிற்றுண்டி. கட்டாயம் கைவசம் வைத்திருப்பீர் பிரிட்டானியா மாரி.
BRITANNIA Marie
பிரிட்டானியா
மாரி பிஸ்கட்
காப்பி நேரக் கரகரா-தின்பண்டம்
பிரிட்டானியா
பிரிட்டானியா
பிஸ்கட்டுகள் மிகச் சிறந்தவை
லின்டாஸ்—BBC. M. 4-1710 TM




ராமனுதன் வீட்டில் மறுநாள் தீபாவளி. அது என்ன ஒருவர் வீட்டில் மட்டும் தீபாவளி? ஊர் உலகமெல்லாம் ஒரு குறிப்பிட்ட நாளில்தானே தீபாவளிப் பண்டிகை! அதுதான் இல்லே. ஒவ்வோர் ஆண்டும் மே மாதம் பத்தாம் தேதி அவர் வீட்டில் மட்டும் கொண்டாடப்படும் ஓர் அபூர்வ தீபாவளி.

ராமனுதன் அலுவலகம் சென்றிருந்தார். அவர் மனைவி லலிதா, மறுநாள் தீபாவளிக்கான பட்சணங்கள் தயாரித்துக் கொண்டிருந்தாள். மூத்த பெண் சந்திராவும் அவள் தம்பி ராஜூவும் அம்மாவுக்கு உதவி செய்து கொண்டு இருந்தனர்.

''ஏம்மா? அப்பா ஏன் மே மாதம் பத்தாம் தேதி தீபாவளி கொண்டாடுகிருர்? என் காலேஜ் தோழி'இதென்னடி லூஸ்தனமா இருக்கு'ன்னு கிண்டல் பண்ருள். எனக்கு இந்த வருஷம் காரணம் தெரிஞ்சாகணும்!'' என்ருள் சந்திரா.

''ஆமாம்மா.. இப்படி பெக்யூலியரா நம்ப குடும்பத்தில் மட்டும் தீபாவளி கொண்டாடறது ஏன் என்று எனக்கும் புரியலே..'' என்ருன் ராஜூ.

ரவா உருண்டையைப் பிடித்துக் கொண்டிருந்த லலிதா, ''உன் அப்பாவுக்கும் எனக்கும் கல்யாணம் ஆன பிறகு நடந்த தலேதீபாவளியே இந்த மாதிரி ஒரு டென்த் மே அன்னிக்குத்தான். ஆரம்பத்திலே மூன்று நான்கு வருஷம் 'ஊரோடு ஒக்கோடு' தீபாவளி கொண்டாடாமல், இது என்ன 'டென்த் மே



தீபாவளி'ன்னு காரணம் கேட்டேன். சண்டைகூடப் பிடிச்சேன். உங்க அப்பா வாயைத் திறக்காமல் ஒரு குறும்புச் சிரிப்பு மட்டும் சிரித்தார். எனக்கு இன்னமும் காரணம் தெரியாது'' என்ருள் லலிதா.

ராமனுதன் தன் அலுவலக ஊழியர்களில் நெருக்கமானவர்களே மறுநாள் தன் வீட்டில் நடக்கும் தீபாவளிப் பண்டிகையில் கலந்துகொள்ள அழைப்பு விடுத்தார். பிற்பகல் அரை நாள் விடுப்பு போட்டுவிட்டு அவருடைய மிக நெருங்கிய நண்பரும் உயர் நீதி மன்ற வக்கீலுமான ரத்தினவேலுவின் வீட்டிற்குச் சென்று அவரையும் அழைத்தார்.

''மிஸ்டர் ராமனுதன்.. இப்படி நீர் தீபாவளி கொண்டாடுவதற்கான காரணத்தைப் பலமுறை கேட்டும் சொல்ல மாட்டேன் என்கிறீர்.. பொது விதிமுறையை மாற்றி தனி ஒருவர் மட்டும் இப்படி தீபாவளி கொண்டாடுவது சட்டப்படி குற்றம்னு உம்மீது நடவடிக்கை எடுக்க எவனேயாவது கிளப்பிவிட்டு ஹை கோர்ட்டிலே தடை உத்தரவு வாங்க ஏற்பாடு பண்ணப் போறேன்..!'' என்ருர் ரத்தினவேலு, சிரித்துக் கொண்டே.

''ஒரு தனி மனிதன் சுதந்திரத்திலே தலேயிடுவதாகும் இது... கான்ஸ்டிட்யூஷன்படி இந்தத் தடை செல்லாதுன்னு சுப்ரீம் கோர்ட்டிலே பெடிஷன் 'பைல்' பண்ணுவேனுக்கும்.. சரி சரி, நாளேக்குக் காலேயில் உமது சகதர்மிணியுடன் கட்டாயம் வீட்டிற்கு வந்து சேருங்கள்..'' என்று கூறி விடை பெற்ருர் ராமனுதன்.

ராமனுதன் வீட்டிற்குள் நுழைந்ததும் சமையலறையிலிருந்து நெற்றி வியர்வையைத் துடைத்தவாறு வெளியே வந்த லலிதாவைப் பார்த்து,

''என்ன லலிதா,பசங்க இரண்டும் ஒன்றும் பேசாமல் சீரியஸாக முகத்தை வைத்துக் கொண்டிருக்கிருர்கள்? அவர்களுக்கு எடுத்த 'டிரஸ்' திருப்தியளிக்கவில்லேயா?'' என்ருர் ராமநாதன்.

''உங்கள் 'டென்த் மே தீபாவளி'க்குக் காரணத்தை அவங்க தெரிஞ்சுக்கணுமாம்.''

''சொல்லாட்டா என்ன செய்வார்களாம்?''

''நானும்தான் கேட்கிறேன். எனக்கே தெரிந்து கொள்ளணும்னு ஆர்வமாக

இருக்கு.. பசங்க ரெண்டு பேரும் பெரிய வாளா ஆயிட்டா.... கேட்கறு.... சொன்னுத்தான் என்னவாம்?''

''என்னடீது? அங்கே என்னடான்னு ரத்தினவேல் ஹைகோர்ட்டிலே தடை வாங்கப் போறேன் என்கிறுன். இந்த ஆகஸ்ட்லே ரிடையராகப் போறேன். ஓல்டாயிட்டேன் என்று என்னை கார்னர் பண்றீங்களோ?'' என்றுர் ராமனுதன், குறும்பாகச் சிரித்தவண்ணம்.

''உங்கள் பாடு.. உங்கள் பிள்ளைகள் பாடு.. எனக்கு அடுப்பிலே வேலை இருக்கு'' என்று உள்ளே சென்றுள் லலிதா.

மே பத்து! விடியற்காலை நாலு மணி. டேப் ரிக்கார்டரில் எம்.பி.என். சேதுராமனின் நகுமோமு ஒலித்தது...

கோலமிட்ட மணைகளில் தன் கணவன் குழந்தைகள் சந்திரா,ராஜு ஆகியோரை வரிசையாக அமர்த்தி அவர்களுக்குத் தாம்பூலம் அளித்து,நெற்றியில் குங்குமம் இட்டு, ஆரத்தி எடுத்து ஜெயமங்களா... சுபமங் களா... பாட்டுப் பாடிய வண்ணம் ஒவ்வொருவரு டைய சிரசிலும் மணக்கக் காய்ச்சிய நல்லெண்ணெ யைத் தேய்த்து விட்டாள் லலிதா.

காலை மணி ஐந்து. புதிய ஆடைகள் அணிந்து தெரு வாசலில் ராஜுவும் சந்திராவும் வேட்டுகளையும் கலசங்களையும் கொளுத்தி அமர்க்களப் படுத்தினர். உள்ளே லைட் போட்டு வெளியே கலர் எழுத்துக்களில் தெரிந்த 'ஹாப்பி தீபாவளி'யை அந்த விடியற் காலை நேரத்தில் ரயில் நிலையம் சென்று கொண்டிருந்த ஒருவன் படித்துவிட்டு அருகிலிருந்த தன் நண்பனிடம்''சரியான கிறுக்கன்'' என்று வாய்விட்டுக் கூறிச் சிரித்துச் சென்றுன். இதை தற்செயலா கக் கேட்ட சந்திராவுக்கு அவன் முகத்தில் ஒரு வெடியைக் கொளுத்திப் போட லாமா என்று ஆத்திரம் வந்தது.

அட்வகேட் ரத்தினவேல் காலை எட்டு மணிக்குத் தன் மனைவியுடன் காரில் வந்து இறங்கினுர். ''தீபாவளி வாழ்த் துக்கள்'' என்று கூறிக் கொண்டே வந்த வரை ராமனுதன் வரவேற்றுர்.

அனைவரும் சுவைமிகு சிற்றுண்டி உண்ட பிறகு, கூடத்து சோபாக்களில் அமர்ந்தனர்.

''தீபாவளி மலர்கள்.... விசேட பத்திரிகைகள் இல்லையே என்கிற குறை





''ஏங்க... இந்த எண்ணை கிலோ என்ன விலை?''

—சாந்தா கருணாகரன்

யைத் தவிர...இன்னிக்கு அப்படியே ஒரு தீபாவளி அட்மாஸ்பியர் உண்டாக் கிட்டீங்க ராமனாதன். ஆனா, காரணத்தை மட்டும் கூற மாட்டேன் என்கிறீங்க..'' என்றார் ரத்தினவேலு.

தெருவில் சென்ற யாரோ ஒருவன் தன் தந்தையை 'கிறுக்கன்' என்று வர்ணித்ததை எண்ணிப் பொருமிய சந்திரா, தன் தந்தையிடம் அணுகி, ''வீ வான்ட் டு நோ த ரீஸன்'' என்றாள்.

''ஆமாம் அப்பா.. ப்ளீஸ் டெல்.. இங்கே இருப்பவர்கள் நம் குடும்ப நண்பரும், குடும்பத்தினரும்தான்.. சொல்லுங்க அப்பா'' என்று ராஜுவும் எழுந்து தன் தந்தையிடம் நெருங்கினான்.

''சொல்லுங்களேன்! அப்படி என்னதான் ரகசியம்? என்ன ரகசியமானாலும் அதை நாங்கள் காப்பாத்தறோம்!'' என்றாள் லலிதா.

ராமனாதன் ஒரு விநாடி தன்னை 'கேரோ' செய்பவர்களைப் போலச் சூழ்ந்துள்ள தன்மீது அன்பும், மதிப்பும் மரியாதையும் வைத்துள்ள பாசம் தெறிக்கும் முகங்களைப் பார்த்தார். அவர் மனதில் ஏதோ பழைய நினைவுகள் பவனி வந்திருக்க வேண்டும். சில விநாடிகள் கண்களை மூடினார். பின்னர் பிரகாசமாகக் கண்களைத் திறந்து ''யெஸ்..'' என்று கூறலானார்.

''எனக்குத் தெரிந்த பெரிய மனிதர் ஒருவர் இறந்துபோன நாள் இந்த மே மாதம் பத்தாம் தேதி. சிறு குழந்தையாயிருந்தபோது தாயை இழந்த நான் அந்தப் பெரிய மனிதர் வீட்டில் அவர் மனைவியின் பராமரிப்பில் வளர்ந்தேன். அந்த அம்மாள் என்னை ஓர் அடிமையைப் போல வளர்த்தாள். அந்த அம்மாளின் பேச்சைக் கேட்டு அந்த மனிதர் என்னை அடித்த அடி, படுத்திய கொடுமைகள்.. ஒரு தீபாவளியின்போது அவர் பட்டு வேஷ்டி அங்க வஸ்திரம் அணிய, அந்த அம்மாள் பட்டுப் புடவை நகைகளுடன் ஜொலிக்க, அவர்களது மகளுக்கு சில்க் கவுன் போட்டு சீராட்டிக் குதூகலமாயிருக்க, என்னை அன்று ஒரு கோவணத்துடன் நிற்க வைத்து பழைய சோற்றைப் போட்டார்கள். என் அம்மாவை அவருக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்காதாம். அதுதான் காரணமாம். அந்த பயங்கரமான அடிமை வாழ்க்கையிலிருந்து ஒருநாள் எனக்கு விடுதலை கிடைத்தது. அப்பொழுது எனக்கு வயது பன்னிரண்டு. ஒரு மே மாதம் பத்தாம் தேதி காலையில் அந்தப் பெரிய மனிதர் திடுமென செத்துப் போனார். வீடே அலறியது. ஊரே அழுதது. எனக்கு ரொம்ப சந்தோஷம். அவர் உடலை மாலை போட்டுப் படுக்க வைத்திருந்தார்கள். என்னைக்கூட அவருடைய வாயில் கொஞ்சம் அரிசியைப் போடச் சொன்னார்கள். நெருங்கும்போது அரிசி போடற கையை இழுத்துத் திருகி உடைச்சுடுவாரோன்னு பயந்து எட்ட இருந்தே அரிசியைத் தூக்கி எறிந்தேன். ஒரு கொடுமைக்கார நரகாசுரன் மறைந்தநாள்தான் தீபாவளி என்கிற கதையை யாரோ என்னிடம் சொல்லி நான் தெரிந்திருந்தேன். அந்தப் பெரிய மனிதர் எனக்கு நரகாசுரன் மாதிரி இருந்தார். நான் உழைச்சு முன்னுக்கு வந்து ஓர் அந்தஸ்தை அடைந்த பிறகு அந்த மே மாதம் பத்தாம் தேதியையே என் தீபாவளியாக்கிக் கொண்டு விட்டேன்!''

ராமனாதனின் இளம் பிராயத்து வறுமைக் கோலக் கதையைக் கேட்டு எல்லாரும் மனம் நெகிழ்ந்தனர்.

''உங்கள் அம்மாதான் இறந்து போயிட்டா... அந்த ராட்சஸப் பெரிய மனிதன் கிட்டேர்ந்து தப்பிச்சு உங்க அப்பாகிட்டே ஏன் நீங்க போகலே? உங்க அப்பாவும் இறந்து போயிட்டாரா?'' என்று கேட்டாள் சந்திரா.

தன் மகளையே உற்றுப் பார்த்தார் ராமனாதன்.

''அந்தப் பெரிய மனிதர்தானம்மா என் அப்பா.. அவருக்கு நான் செய்யும் கோலாகலத் திதிதானம்மா இன்றைய 'டென்த் மே தீபாவளி..'' என்றார் ராமனாதன் நிதானமாக.



daCunha/Nutra/1 I

கல் தெய்வங்கள்

கண்களை இறுக மூடிக்கொள்கிறாள் கிளாரா. ஆனாலும் கண்ணில் பட்டு விட்ட காட்சியை மனதிலிருந்து அகற்ற முடியவில்லை. மொத்து மொத்தென்று அடி விழுந்த சப்தமும், 'ம்மா' என்று மாடு அலறிய ஓலமும் காதில் விழாமல் தடுக்க முடியவில்லை. 'கேட்'டைப் போட்டுவிட்டு ஆத்திரத்துடன் துரத்தித்துரத்திஅடிக்கிறார்வீட்டுக்காரர். இப்போது சாத்திய கேட்டை முன்பே சாத்தியிருந்தால்... மாட்டுக்குத் தெரியுமா, இது வீடு.. நுழைந்து தோட்டத்தில் மேயக்கூடாது என்று... நமக்குத் தோன்றுவது மாட்டுக்குத் தோன்ற வேண்டுமென்று எப்படி எதிர்பார்க்கலாம்?

அமெரிக்காவிலிருந்து வரும்போது எத்தனை ஆவலுடன் வந்தாள் கிளாரா. வசான் - ஸ்ரீநிவாசன் என்ற பெயர் அமெரிக்காவில் மருவிய விதம் அது — எவ்வளவெல்லாம் சொல்லி அவளுடைய ஆர்வத்தைத் தூண்டி விட்டிருந்தார். லாஸ் ஏஞ்சல்ஸில் யூ.சி.எல்.ஏ.-யூனிவர்சிடி ஆஃப் கலிபோர்னியாவில் வசான் ஒரு புரொபசர். கிளாராவின் அம்மாவுக்கு சீட்டாட்ட பார்ட்னர். ஓய்வு நேரத்தில் கிளாராவுக்கு விளையாட்டாகத் தமிழ் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். அத்துடன் இந்தியாவைப் பற்றிப் பல விஷயங்களைத் துண்டுகளாகத் துணுக்குகளாகப் புகட்டி இருந்தார்.



ஒருநாள் பசுவதைத் தடுப்புப் போராட்டம் பற்றி அங்கே சின்னதாக ஒரு நியூஸ் வந்திருந்தது. கிளாராவின் தாய் கேட்டாள்:

''இப்படிப் பசுவையெல்லாம் கொல்லாமல் விட்டுவிட்டால், அவை ஏகமாய்ப் பெருகிவிடாதா? இந்தியாவில் மனிதர்களுக்கே சாப்பாடு போதாமலிருக்கையில் அத்தனை கால்நடைகளுக்கும் எப்படி தீனி போடுவீர்கள்?''

ஸ்ரீநிவாசன் சிரித்துவிட்டுப் பசுக்களைத் தெய்வமாய் மதிக்கும் பண்பாட்டை விவரித்தார்: ''பசுவின் வாலில் லட்சுமி குடியிருப்பதாக ஐதீகம். வெள்ளிக்கிழமைகளில் பசுவுக்கு மஞ்சள் குங்குமமிட்டு எங்கள் பெண்கள் கோ பூஜை செய்வார்கள். மாட்டுப்

பொங்கல் பார்க்கவேண்டுமே! கொம்பு களுக்கு வர்ணம் பூசி, மாலேயிட்டு, ஜோராக அலங்கரித்துக் கொண்டாடு வார்கள். நந்தி சிவனுக்கு வாகனமாய் பெருமை பெற்றது..''

''ஓ! அம்மா, எனக்கு இந்தியாவுக்குப் போக வேண்டும். மாடுகளுக்கு டிரெஸ் பண்ணி ஊர்வலம் வருவதைப் பார்க்க வேண்டும்.''—கண்களில் ஆவல் மின்ன கேட்டாள் கிளாரா. ஆர்வத்துடன் அடிக்கடி மேலும் சொன்ஞர் வசான்.
குரங்கு அனுமாஞனதையும், சிங்கம் துர்க்கையின் வாகனமானதையும், மனிதனேக் கடிக்கும் பாம்புக்குக்கூட நாகபூஜை செய்வதையும் விவரித்திருக் கிருர். இதன் பின்ஞல் உள்ள தத்து வங்களே நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று விளக்கியிருக்கிருர்.

''இறைவன் படைப்பில் அத்தனே ஜீவராசிகளும் நம் மதிப்பிற்குரியவை என்ற எண்ணத்திற்கு இது ஒரு வெளியீடு.

''அத்தனே மிருகங்களுக்கும் பசுவை ஒரு ரெப்ரசென்டேடிவாய் வைத்துக் கொள்ளலாம். எத்தனேயோ வீடுகளில் பசு கிழமாகி, கறவை மரத்துப் போஞ லும் அடி மாட்டுக்கு விற்கமாட்டார்கள்; சிரமத்துக்கிடையில் காப்பாற்று வார்கள்.''

''வாவ்!'' என்று வாயைப் பிளந் திருக்கிருள் கிளாரா. 'எத்தனே பெரிய கலாசாரம், எவ்வளவு உயர்ந்த பண்பாடு!' என்று வியந்திருக்கிருள்.

''அன்று நம்மூர் டி.வி-யிலும் காட்டி ஞர்களே, அம்மா. மாட்டுத் தீனி விலே ஏறிவிட்டதற்குக் கண்டனம் தெரிவிக்க, பண்ணேச் சொந்தக்காரர்கள் கன்றுக் குட்டிகளேயெல்லாம் நிர்தாட்சண்யமாய் சுட்டுத் தள்ளியதை. எவ்வளவு வித்தியா சம் பார்த்தாயா!.. எனக்கு இப்போதே இந்தியா போக வேண்டும்..''

குழந்தை போல் கூறிய கிளாராவைத் தட்டிக் கொடுத்துச் சிரித்தாள் தாய்.

வசானின் வர்ணனேகளும் தத்துவ விளக்கங்களும் அவள் மனத்தில் என் னென்னவோ கற்பனேகளே எழுப்பின. வாகாக ஒரு சந்தர்ப்பம் வந்தது. ஒரு வருடம் வெளிநாடுபோய் மாற்றுக் கலா சாரத்தை நேரில் கற்க அவள் யூனிவர் சிடியில் ஸ்காலர்ஷிப் கிடைத்தது. அம்மாவின் தயக்கத்தையும் மீறி, அதே சாக்காக இந்தியாவுக்கு வந்துவிட்டாள். ஸ்ரீநிவாசன் மூலம் மதுரையில் அவள் தங்க ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. அவள் வந்தபோது பொங்கல் சமயம். நாலு நாட்கள் போனது தெரியவில்லே. மாட்டுப் பொங்கல், கோ பூஜை, ஜல்லிக் கட்டு எல்லாம் அலுக்க சலிக்கப் பார்த்



தாயிற்று. அறுவடையாகிக் குவிந்திருந்த செந்நெல்லும், கரும்பும், பண்டிகைக் கோலாகலமும் இதுவா ஏழை நாடு என்று திகைக்க வைத்தன. அப்புறம் மெள்ள மெள்ள, அவள் கற்பனைக்கும் நடைமுறை விவகாரங்களுக்கும் உள்ள வித்தியாசம் தெரிய வந்தது. பலமான அதிர்ச்சிக்குள்ளானுள் கிளாரா.

முதல்அதிர்ச்சி அழகர்மலைக்குப் போய் விட்டு வருகையில் நேர்ந்தது. மந்தை மந்தையாய் கால்நடைகள் திரும்பிக்கொண்டிருந்தன. சில துடுக்குக்கார மாடுகள் அதிக தூரம் ஓடாமலிருக்க, கழுத்தையும் முன்னங்காலையும் ஒரு சின்ன கயிற்றால் கொஞ்சம் விட்டுக் கட்டியிருந்தது. அவை கழுத்தைக் குனிந்து கொண்டு நொண்டி போல் விந்தி விந்தி சென்றன. தூக்கி வாரிப் போட்டது கிளாராவுக்கு. 'ஐயோ! என்ன கொடுமை?' என்று உருகிப்போனுள். அதற்கப்புறம்வெளியே போகும்போதெல்லாம் சின்ன பேனுக் கத்தியையும் எடுத்துக் கொண்டு போவாள். இப்படிக் கட்டிய மாடோ, கழுதையோ தென்பட்டால் ரோடிலேயே உட்கார்ந்து பொறுமையாகக் கட்டை அறுத்து விடுவாள். அவை உதறிக் கொண்டு துள்ளி ஓடும். வெள்ளைக்காரி ரோடில் உட்கார்ந்து மாடுகளைக் கட்ட விழ்க்கும் அதிசயம் பேப்பரில் போடாத செய்தியாகப் பரபரவென்று பரவியது. ஒரு மாட்டுக்காரன் சண்டைக்குக்கூட வந்து விட்டானே! தெரிந்த தமிழில் அவனிடம் விவாதிக்க முயன்று அவள் எப்படி கேலிக்கிடமானுள்.

அப்புறமெல்லாம் கண்ணையும் காதையும் நன்முகத் திறந்து வைத்துக் கொண்டாள் கிளாரா. உறுத்தும்படி எத்தனை விஷயங்கள் பட்டன!

ஒருபக்கம் பசுவை வலம் வருவதும், வாலைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொள்வதும், மறுபக்கம் வைக்கோல் கன்றுக்குட்டியை நக்கிக் கொண்டு அவை பால் சுரக்கும் பரிதாபமும், பார வண்டி இழுக்கும் மாடுகள் படும் அடியும் அவஸ்தையும்-எத்தனை முரண்பட்டதாய் தோன்றியது. 'ஏன் இந்த நாட்டில் இப்படி, எங்கே கோளாறு?' என்று யோசித்தாள்; புரியவில்லை.


திடீரென்று தான் இந்தச் சூழ்நிலையில் ஒட்டாமல் தனித்து நிற்பது போல் தோன்றுகிறது கிளாராவுக்கு. அவள் மனதில் எழுதிக்கொண்டு வந்திருந்தது எழில்கோலம். இங்கே கண்டதோ அலங்கோலம், கண்ட அவஸ்தைக்குள்ளாக்கி மாடுகளை எலும்புந்தோலுமாய் வாட்டுவதைவிட அமெரிக்க டி.வி-யில் காட்டியதைப் போல் சட்பட்டென்று சுட்டுவிடுவதே மேலென்று இப்போது தோன்றுகிறது. அதைப்போய் யாரிடம் சொல்ல முடியும்...?

'ம்! இப்படி ஒரு வருஷ ஸ்காலர்ஷிப்பில் வந்திருக்க வேண்டாம். மூன்று மாதந்தானே ஆகியிருக்கிறது' என்று வருத்தத்தோடு எழுந்திருக்கிருள் கிளாரா. காற்ருட வெளியே போய் வந்தால் தேவலை போல் இருக்கிறது. கதவைப் பூட்டிக் கொண்டு கிளம்புகிருள்.

குளக்கரையை யொட்டிய தெரு. அருகில் படல் போட்டு அடைத்த திறந்தவெளி. அங்கே வரிசையாக பத்து பதினைந்து மாடுகள். திடீரென்று எழுந்த சலசலப்பும் 'ம்மா.. ம்மா..'வென்ற ஓலமும் கிளாராவை ப்ரேக் போட்டாற் போல் நின்று கவனிக்க வைக்கின்றன. பழுக்கக் காய்ச்சிய சூட்டுக்கோலால் ஒரு மாட்டுக்கு சூடு வைத்திருக்கிருர்கள். இப்படி அப்படித் திரும்ப முடியாமல் இறுகக் கட்டப்பட்டிருந்த மாடு, இருந்த இடத்திலேயே திமிறுகிறது. ஈனமாய் கத்துகிறது. கிளாராவுக்கு உடம்பெல்லாம் பதறுகிறது; பொங்கி வருகிறது. 'வாயில்லா ஜீவனை இப்படிச் சுடுகிருனே, என்ன அக்கிரமம்?'


படலைத் தள்ளிக் கொண்டு உள்ளே ஓடுகிருள்.

''ஏய், நிறுத்து.. ஸ்டாப் இட்..'' அடுத்த மாட்டுக்கு சூட்டுக்கோலைக் காய்ச்சிக் கொண்டிருந்தவனும், கூட இருந்த நாலைந்து பேரும் திரும்பிப் பார்க்கிருர்கள். அதில் ஒருவன் அவளை அடையாளம் கண்டு கொள்கிருன்.



சென்னைப் பல்கலைக் கழக நூலகத்தில் சிவப்பு நிறத் துணியில் மட்டுமே 'பைண்டு' செய்கிருர்கள். இதற்குக் காரணம் இருக்கிறது. சிவப்பு நிறத் துணியில் கலக்கப்பட்டுள்ள சிவப்பு வர்ணத்தில் உள்ள ரசாயனப் பொருட்களில் கிருமிநாசினியின் சக்தி இருப்பதால் நூல்களைப் பூச்சிகள் அரிப்பதில்லை.

— இராஜம்



நான் சமீபத்தில் கோவில்பட்டியிலிருந்து சங்கரன்கோயிலுக்கு பஸ்ஸில் சென்று கொண்டிருந்தேன். பஸ்ஸை ஓர் இடத்தில் நிறுத்திவிட்டு கண்டக்டர் டிரைவரிடம், 5 வானரம், 8 கல்லு, 5 காக்கா, 8 கழுகு, 10 குருவி, 10 சங்கு என்று டிக்கெட்டு எண்ணிக்கையைக் கூறிக் கொண்டிருந்தார். வேறொன்றுமில்லை, இவை அனைத்தும் கோவில்பட்டி - சங்கரன்கோயில் இடையில் வரும் ஊர்களான வானரமுட்டி, கல்லூரணி, காக்காதோப்பு, கழுகுமலை, குருவிகுளம், சங்கரன்கோயில் என்பதையே கண்டக்டர் சுருக்கமாகச் சொன்னார்.

—நடேஷ்கன்னு, கழுகுமலை.

''சரித்தான், இங்கேயும் வந்துடிச்சா இந்த பேஜார் பிடிச்ச பொம்பளை. கத்தியை வெச்சுக்கிட்டு மாட்டு கட்டையெல்லாம் அறுத்து ஓட விடுமே.. ஊரிலே அல்லா மாட்டுக்காரங்கிட்டவும் சண்டை..''

''ஏன், இதெல்லாம் நம்ம ஊரிலே வழக்கம்னு தெரியாதாமா?'' என்கிறான் மாடுகளுக்குச் சொந்தக்காரன்.

''தெரியுமோ தெரியாதோ.. தஸ்ஸு புஸ்ஸுனு தமிழ்லே பேசிக்கிட்டு சரியான தலைவேதனை..லேசிலே வுடாது இப்போ. வேடிக்கையைப் பாரேன்..!''—தமாஷ் பார்க்கும் ஆர்வம் இருந்தது மற்றவன் குரலில்.

''அப்போ அதுக்கும் போட்டுடுவமா ஒரு சூடு...?''—துடுக்காகக் கேட்டான் சொந்தக்காரன், கிளாராவின் பக்கம் கண்ணைக் காட்டி.

கொல்லென்ற சிரிப்பு.

அந்த ஏளனம் கிளாராவின் எரிச்சலைக் கிளப்பியது. 'வாயற்ற ஜீவன்களின் அவஸ்தை மனதில் கொஞ்சங்கூடப் படாதது மட்டுமின்றி, நையாண்டி வேறு.. இவர்களுக்கெல்லாம் உணர்ச்சிகளே இருக்காதோ!..'

அடுத்தகணம் யாரும் எதிர்பாராத விதமாய் அந்தச் சம்பவம் நொடியில் நிகழ்ந்து விட்டது. காய்ந்து கொண்டிருந்த சூட்டுக்கோல்களில் ஒன்றைஉருவியெடுத்த கிளாரா, இன்னது செய்கிறோமென்றறியாத நிலையில் சட்டென்று அதை மாட்டுச் சொந்தக்காரன்மேல் பதித்து விட்டாள்: ''மாட்டுக்கெல்லாம் போட்றியே, எப்படிருக்கு பார்..?''—அவள் கண்களில் ஆவேசம்.

சிரிப்பு கப்பென்று நிற்க, சூடுபட்டவன் அலறுகிறான். ஸ்தம்பித்த மற்றவர்கள் சுதாரித்துக் கொண்டு கிளாராவைப் பிடித்துக் கொள்கிறார்கள். நிமிடத்தில் அங்கு கும்பல் கூடி விடுகிறது.

''என்ன ஆச்சு, என்ன ஆச்சு..?''

''அடிடா அதை..''

''இதுங்கள்லாம் நம்ம ஊருக்கு வந்து நம்ம பிராணனை ஏன் எடுக்குதுங்க.''

அத்தனை சலசலப்புக்கும் மேலே—

''பசுவாம், தெய்வமாம்! எல்லாம் பொய்.. உங்க தெய்வமெல்லாம் கல். மாடுகூட கல்லிலே இருக்கும்போதுதான் உங்களுக்கு தெய்வம், நந்தி! உயிரும் சதையுமா உடம்போடு நேரிலே நடமாடும்போது இல்லை..''—கிளாரா வெறி பிடித்தவள் போல் கத்துவதன் பின்னணி சுற்றியிருப்பவர்களுக்கு எப்படித் தெரியும்?

''என்ன மிஸ்டர்! ஆபீஸ்லே வேலை செய்யும்போது பத்திரிகை எல்லாம் படிக்கக்கூடாது என்பது உனக்குத் தெரியாதா?''

''தெரியும் ஸார்! அதனாலேதான் வேலையைக் கொஞ்சம் நிறுத்தி வைத்துவிட்டுப் படிக்கிறேன்!''

—என். வைத்தியநாதன்



இன்றைக்குப் பூராவும் இப்படித் தான். கட்டிப் போட்டிருந்த நாய்க் குட்டிக்கு கழுத்துச் சங்கிலியை அவிழ்த்து விட்ட சந்தோஷம் அவருக்கு. மாடிப்படி ஏறிப்போய் 'ஸ்பெக்ஸை'த் தேடி எடுத்துட்டு அவராவே பேப்பர் படிக்கறார்—ஒன்பது மணிக்குமேல், சமையலை முடிச்சுட்டு நான் படிச்சுக் காட்டற வரைக்கும் இருக்கும் பொறுமையை இன்றைக்குக் காணோம்.

மேஜை டிராயரைக் குடைந்து, பழைய லெட்டரை யெல்லாம் கிளர்ற மாதிரி நடிச்சு, பத்துப் பைசாவை எடுத்து பானு கையிலே கொடுத்து.. கடலை மிட்டாய் வாங்கிவரச் சொல்றார். நல்லவேளை அது வந்து என்கிட்டே கொடுத்தது. போனாப் போறதேன்னு இத்துனூண்டு நுணுக்கி அவர் கையிலே கொடுத்துட்டு, மீதியை பானு கையிலேயே கொடுத்து அனுப்பி, இவர்கிட்டே சாபம் வாங்கிக்கறேன். இவருக்கென்ன தின்னுடுவார், ராத்திரிக்கு 'கொல்லு.. கொல்லு'ன்னு இருமினா, நான்தானே 'கொரட்டு.... கொரட்டு'ன்னு முழிச்சுகிட்டிருக்கணும்.

னிக்கு இவர் இதைத் தொட்டாலே எரிஞ்சு விழறேன். எவ்வளவு மாற்றங்கள்? எத்தனை சுயநலங்கள்?

—அவர் வேணும். என் பூவும் பொட்டும் நிலைச்சு இருக்கணுங்கற ஒரே காரணத்துக்காக அவரது அற்ப ஆசைகளைக் கூட நிறைவேற விடாமல்.... இது நிஜமாவே சுயநலந்தானோ?


என் கண்ணே பட்டுடுச்சோ என்னவோ? ராத்திரி திடீர்னு இரும ஆரம்பிச்சவர் தொடர்ந்து கஷ்டப் பட்டுப் போய்ட்டார். இந்த இருட்லேயும் ஓடி, எதிர் வீட்டு டாக்டரைத் தட்டி எழுப்பிட்டு வர்றேன். வந்தவர் சொல்றார்: ''சார் இன்னிக்கு ஏதோ ஸ்வீட் சாப்பிட்டிருக்கிறார்....''

—ஓடிப்போய் சர்க்கரை டப்பாவைப் பார்க்கிறேன். குழந்தை சாப்பிட்ட மாதிரி டப்பாவைச் சுத்தி சர்க்கரை இறைஞ்சு கிடக்கு.

பறவைகள் மீன்களாகின்றன

சாயந்திரமா மூலையிலே கிடந்த 'கிட்டாரை' எடுத்து வச்சுகிட்டு, ஜன்னல் விளிம்பிலே உட்கார்ந்துட்டு, நடுங்குகிற விரலில் 'ட்ரை' பண்ணறார். அங்கேயிருந்து விழுந்து வச்சா என்ன பண்ணுவேன்? சிலு சிலுன்னு மழைக் காத்து வேறே.. கிட்டாரைப் பிடுங்கி மூலையில் வீசிவிட்டு அவரைப் படுக்கையில் தள்ளறேன்.

அன்றைக்கு இவர் இந்த மாதிரிதான் மாடி ஜன்னல்லே உட்கார்ந்துட்டு வாசிப்பார். நான் அந்த வாசிப்பில் மயங்கிப் போய் 'ஹோம் ஒர்க்'கூட போடாமல், ஸ்கூலில், அடுத்த நாள் அடி வாங்கியிருக்கிறேன். இந்த வாசிப்புக்காகவே அப்பாகிட்டே அடம்பிடித்து இவரையே கல்யாணம் பண்ணிட்டேன். ஆனா, இன்



எப்போ சாப்பிட்டார்? இது என்ன ஆசை?

டாக்டர் ஏதோ எழுதிக் கொடுத்தார். ''நீங்கதான் வாங்கிட்டு வரணும். பையனா பெத்து வச்சிருக்கேன்? மூணும் பொண்ணு.. உதவிக்கு ஒண்ணுகூட இல்லே''ங்கறேன். அவர் வாங்கிட்டுப் போய்ட்டார்.

எனக்கு இந்த மாதிரி சமயங்களில் தான் அந்த மாதிரி ஏக்கங்கள் வரும். அன்றைக்கு மூணாவது பொண்ணு பிறந்ததும் அழறேன். அவர், ''ஆபரேஷன் பண்ணிக்கோடி மண்டு.. பொண்ணுதான் எனக்குப் பிடிக்கும். நான் பையனா பொறந்து எங்க அப்பா அம்மாவுக்கு என்ன பண்ணிட்டேன்..பொண்ணு மட்டும் பண்ணாமப் போய்டுவாளா?''ன்னு ஏதோ சொல்லி ஆபரேஷன் தியேட்டருக்கு அனுப்பி வச்சுட்டார்.

இன்றைக்கு மருந்து வாங்கித் தரக் கூட ஒருத்தன் இல்லே. ஒண்ணுக்கு மூணு பொண்ணு பெத்து என்ன லாபம்? அவ அவ கல்யாணமாகி ஆளுக்கொரு பக்கமா ஓடிட்டா..

அடுத்த நாளைக்குள்ளே இவருக்கு இவ்வளவு சீரியஸ்ஸா ஆகும்னு எதிர் பார்க்கலே. கொஞ்சமா சாப்பிட்டிருக்கார்?—கால் கிலோ சர்க்கரை இருக்கும். கடவுளே! இது என்ன வெறி..? இப்போ நான் என்ன பண்ணட்டும்?

மூணு பொண்ணுக்கும் 'டெலிகிராம்' அடிச்சுட்டேன். அதுகளாவது வந்து கூடமாட உதவி பண்ணட்டும். தனியா இவரோடு இருந்தா இனி பைத்தியம்தான் பிடிக்கும்.

'புறப்பட்டுட்டேன்'ன்னு தந்தி அடிச்சுட்டு சின்னவள் வர்ருள். இங்கே யார் இருக்கா இவளைப் போய் அழைச்சுட்டு வர? ஆட்டோவில் இருந்து இறங்கினவள், அப்பாவைப் பத்தி விசாரிக்கறத்துக்கு முன்னடி, ''அக்காவெல்லாம் வந்தாச்சா?''ங்ரு. எனக்கு ஒரே எரிச்சல். அடக்கிக் கறேன்.

உள்ளே வந்து ஒரு மூச்சு அழருள். இவ அழுது முடிச்சதும் மத்தவங்க ரெண்டு பேரும் ஒண்ணு டாக்சியிலிருந்து இறங்குருளுக. திரும்ப ஒரு அஞ்சு நிமிஷ அழுகை. அப்பாவுக்குத் தைரியம் சொல்ருள் ஒருத்தி. ''நாங்க இருக்கோம், மனசு விடாதீங்கப்பா.''ஒருத்தி ஆப்பிளை நறுக்கி தோலைச் சீவிக் கொடுக்கருள், ஒருத்தி ஹார்லிக்ஸ் தர்ருள், ஒருத்தி எனக்குப் பதிலா பேப்பர் படிச்சுக் காட்டருள். விக்ஸ் தடவ ஒரு கை, மாத்திரையுடன் இன்னெரு கை, கால் பிடிச்சுவிட இன்னெரு கை.. அவர் திக்குமுக்காடிப் போயிட்டார். 'பார்டி எம் பொண்ணுகளை. எந்த மகன் செய்வான் இப்படி'ங்கற மாதிரி ஒரு பார்வை.

அப்புறம் கூடி உட்கார்ந்துட்டு அவங்களுக்குள்ளே பேச ஆரம்பிச்சுட்டாளுக. அன்னிக்கு ராத்திரி அவர் இருமினதும் மூணுபேருமா ஓடி வந்தார்கள். அடுத்த நாள் ஒருத்தி மட்டும் எட்டிப் பார்த்தாள். மறுநாள் அவர்களின் அரட்டை அவர் இருமின சில விநாடிகள் தடைபட்டுத் தொடர்ந்தது. அடுத்த நாள் அதுகூட இல்லே. இவர்கள் எவ்வளவு சீக்கிரமாய், சுலபமாய் இதைச் சாதாரணமாக ஏற்றுக்கொண்டு விட்டார்கள். ஆனல் எனக்கு மட்டும் தினம் தினம் பதறுகிறதே..! அதுதான் சுயநலமோ?



அவர்கள் ஆர்ப்பாட்டமெல்லாம் ஒரே வாரம்தான். சின்னவளுக்கு அதற்குள்ளே டெலிகிராமே வந்து விட்டது. அவ வீட்டுக்காரனுக்கு உடம்பு சரியில்லையாம். அதை நானும் நம்பணு மாம். இந்த ஒரு வாரம் இவளை விட்டு இருந்ததே குதிரைக்குக் கொம்பு முளைச்ச அதிசயம்தான். அப்பா காலைத் தொட்டுக் கும்பிட்டுட்டு, அவ புருஷனுக்குப் புடிக்கும்னு, தோட்டத்துக் கீரையை யெல்லாம் கிள்ளி எடுத்துட்டுப் புறப் பட்டுட்டாள் அவள்.

அடுத்தவளுக்கு ஆர்டினரி லெட்டர் தான் வந்தது. ஆனாலும் அவசரமாய்ப் புறப்பட்டாள். புருஷன் டூர் போறானாம், அத்தைக்கிழவிக்குக் கண் ஆபரேஷனாம்; இவதான் போய் ஆபரேட் பண்ணப் போறாளாக்கும்? எல்லாத்தையும் எடுத்து வச்சுட்டு, ''புறப்படட்டாம்மா?''ங் கறாள். ''போடி''ங்கறேன், மனசுக் குள்ளே எல்லாத்தையும் அடக்கி வச்சுட்டு. அப்பாவைவிட அத்தை பெரிசாப் போய்ட்டாள் அவளுக்கு.

பெரியவளுக்கு அரட்டைக்கு ஆள் இல்லாமல் போரடித்துப்போய் என்னோடு கொஞ்சம் பேசினாள். மாடியில் சுருண்டு படுத்துக்கொண்டுஅரைமணிக்கு ஒரு நாவல் படித்துத் தள்ளினாள். ஊரில் சீகைக்காய் கிடைக்கா தென்று, இங்கே வாங்கி காயவைத்து அரைத்து வைத்துக் கொண்டாள். எதிர் வீட்டுப் பொடிசோடு கோவிலுக்குப் போய்ட்டு, அப்படியே பை நிறைய பச்சைக் காய்கறி வாங்கி வருகிறாள்—''அம்மா, இந்த 'காலிஃப்ளவர்' நாளைக் குள்ளே கெட்டுடாதே?''

''அப்படீன்னு நீயும் போறயாடீ. . .?''

''நான் வந்து எட்டு நாளாச்சேம்மா. எல்லாத்தையும் போட்டது போட்டபடி வந்திருக்கேன். பிள்ளைகளுக்கு நாளைக்கு ஸ்கூல் திறக்கறு. பெரியவளுக்குத் தலை பின்னிவிடறதிலேருந்து எல்லாம் நான் தான் பார்த்துக்கணும். அவருக்குக் காபிகூடப் போடத் தெரியாது. . . . நீ மறக்காமெ வாரம் ரெண்டு லெட்டர் போடும்மா—அப்பாவைப் பத்தி. . .''

''போடறேன்டி, போடறேன். . . உன்னைச் சொல்லிக் குத்தமில்லே. அன்னிக்கே ஒரு பையனை தத்து எடுத்தாவது வளர்த்திருக்கணும். எல்லாம் பொண்ணு களே பண்ணணும்னு நம்பினார். என்னதான் சொல்லு நீங்களெல்லாம் பறவைகள்தாண்டீ. இங்கே இருக்கிற வரை குஷியா இருந்துட்டு இன்னிக்குச் சிறகடிச்சுப் பறந்து போய்ட்டீங்கோ. ஆனா நான் மட்டும் என்னைக்கும் இந்தக் குளத்து மீன்தான். சுகமோ துக்கமோ, வாழ்வோ சாவோ எல்லாமே எனக்கு இந்தக் குளத்தில்தான். . . .''

ஒண்ணும் பேசாமல் புறப்பட்டாள். நான் சமையற்கட்டில் அழுதேன். பையும் கையுமாக வந்து நின்றவள், நிதானமாய்ச் சொன்னாள்:

''அம்மா, நீ கொஞ்சம் நிதானமாய் இதைப் புரிஞ்சுக்கணும். நாங்க எல்லாம் இந்தக் குளத்தில் பறவைகளாய்ச் சிறகடித்து வாழ்ந்தது நிஜம்தான். ஆனா இன்னிக்குச் சிறகடிச்சுப் பறந்துபோய் நாங்க இறங்கின குளத்துலே நாங்க பறவைகளாகவே வாழ முடியலே. அந்தக் குளத்து வரைக்கும் நான் மீன்தான். இப்போ எனக்குன்னு ஒரு குடும்பம் இருக்கு. நீ சொன்ன மாதிரி என் வாழ்வோ சாவோ எல்லாம் அங்கே தான். இந்தக் குளத்துப் பறவைகள் தான் அடுத்த குளத்தில் மீன்களாக இருக்கு. நீகூட ஒரு நாள் பறவை தானேம்மா? இதை நீ கோபப்படாமெ யோசிச்சுப் பார்க்கணும்.''

ஒரு நிமிஷம் ஸ்தம்பிச்சுப் போயிட் டேன். அவருக்காகப் போட்ட காபியை அவளுக்குத் தர்றேன். குடிச்சதும், ''போய்ட்டு வரட்டாம்மா'' என்கிறாள்-கொஞ்சமும் சலனமில்லாமல் ''வாடி''ங் கறேன்.

அவர் இருமினார். நான் ஓடறேன். இவளும் அப்படித்தான் ஓடுவாளோ?


''ஏண்டா, என்ன அது? மறைச்சி எடுத்துக்கிட்டு போறே. .?''

''எங்கம்மா மிஷின்லே மாவு அரைச் சிக்கிட்டு வரச் சொன்னாங்க. .!''

''அதுக்கு ஏன் ஒளிஞ்சி ஒளிஞ்சி போறே?''

''எங்கம்மா நைஸா அரைச்சிக்கிட்டு வரச் சொன்னாங்க. .!''

—கே. ஆர். சியாமளா



இவள் மகள் அவள் தாய்



''சுமித்ரா! 'ட்யூட்டி'க்குக் கிளம் பிட்டியா?''


''ஆமாம்மா!..''

''சரி.. உன் கல்யாணத்தைப் பத்தி முடிவாய் என்ன சொல்றே?''

''அம்மா! நான் உன்கிட்டே எத்தனை தடவை சொல்லிட்டேன்? என் கல்யாணத்துக்கு இப்போ ஒண்ணும் அவசரமில்லே; தம்பிகளை யெல்லாம் நல்லா படிக்கவச்சு முன்னேற்றிய பிறகுதான் எனக்குக் கல்யாணம்.''

''என்னடி உளர்றே? வயசெல்லாம் போய் கிழவியான பிறகு, யார் உன்னைக் கல்யாணம் பண்ணிக்குவாங்க?''

''எனக்குக் கல்யாணமே ஆகாட்டாலும் பரவாயில்லேம்மா... குடிப் பழக்கத்துக்கும் சூதாட்டத்துக்கும் அடிமையாயிட்ட கணவரைக் கட்டிக்கிட்டு, அவரோடேயும் வறுமையோடேயும் நீ எப்படிப் போராடி வாழ்ந்துக்கிட்டிருந்தேன்னு எனக்குத் தெரியும்.. 'ராதா ரொம்பப் பொறுமைசாலி'னு அக்கம்பக்கத்திலே உள்ளவங்கெல்லாம் உன்னைப் பாராட்டுவாங்க. அந்தப் பொறுமையையும் சோதிக்கிற அளவுக்கு அப்பா உனக்குக் கொடுமைகள் செய்த போதும், எங்களுக்காக நீ எவ்வளவோ தியாகம் செய்திருக்கே! இப்போ நீ விதவையாயிட்டாலும், வாழ்க்கையிலே நிம்மதியாய், கஷ்டமில்லாம வாழற சூழ்நிலை ஏற்பட்டிருக்கு. இனிமேலாவது நீ சந்தோஷமாக வாழும்படி செய்கிறது என் பொறுப்பு. உன்னோடு எப்போதும் கூடவே இருந்து உனக்குப் பாதுகாப்பாக இருப்பேம்மா!''



''சீ! அசடு! வயசு வந்த ஒரு மகள், தாய்க்குப் பாதுகாப்பு இல்லே; பாரம்.''

''அம்மா! உலகத்திலே உனக்கு வேறு யார் உறவு, துணை இருக்காங்க? நான் இருந்தால்தான் உனக்கும் குடும்பத்துக்கும் ஆதரவாயிருக்கும்...''

''சுமித்ரா! மரத்தை வேர்தான் தாங்க வேண்டும். கிளை தாங்க முடியாது. என் குடும்பத்தை நான் கவனிச்சுக்க முடியும்.''

''அம்மா! 'திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன' என்று நீ சொல்லுவியே, அப்படி சொர்க்கத்திலே திருமணம் நிச்சயமாகி என் தலைமேலே வந்து விழுகிறபோது பார்த்துக் கொள்ளலாம்; ப்ளீஸ், இப்போ அவசரப்படாதேம்மா!''

*

''ப்ளீஸ்... இப்போ அவசரப்படாதீங்க.''

''நோ.. நான் ஒண்ணும் அவசரப் படலே.. திருச்சியிலே காலேஜிலே படிக்கிறபோது, காவிரிக்கரை மணலிலே உட்கார்ந்து எத்தனை காதல் கதைகள் பேசினோம்? எல்லாம் கனவுகளாகப்போய் நீ ஒரு குடிகாரனையும் நான் ஒரு நோயாளியையும் மணந்து கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு, வாழ்க்கையின் ஒவ்வொரு மூலைக்கு ஒதுக்கித் தள்ளப்பட்ட நாம், போன வருஷம் நான் இங்கே 'ட்ரான்ஸ்பர்' ஆகிவந்தபோது தற்செயலாய் மவுண்ட் ரோடில் சந்தித்துக் கொண்டோமே—''

''ஆமாங்க.. அதிலும், நான் விதவையாகவும் நீங்க மனைவியை இழந்தவ

ராகவும் ஆன பிறகு, சந்திக்கிற நிலைமை ஏற்பட்டது ஆச்சரியமில்லையா?''

''ராதா! கல்லூரியிலேயே நம்மை நண்பர்களெல்லாம் 'ராதாவும் கிருஷ்ணனும் ராதாகிருஷ்ணனுவது எப்போது?' என்று கேலி செய்வார்களே, அந்த ராதா-கிருஷ்ணன் இணைப்பு நடக்க எத்தனை வருஷங்களாகி விட்டன, பார்த்தாயா?''

''என் மகள் கல்யாணம் நடந்த பிறகு தான், நம்ம மறுமணம் நடக்க முடியும். ஏன்னு, தாய் விதவா விவாகம் செஞ்சுக்கிட்டாள்னு மகளுக்கு நல்ல இடத்திலே சம்பந்தம் கிடைக்காமப் போயிடும்.''

''எஸ்.. பையன்களா யிருந்தால் பரவாயில்லை; பொண்ணு விஷயம் — ரொம்ப ஜாக்கிரதையா யிருக்கணும்.. உன் பெண் கல்யாணம் முடிஞ்சதும், நம்ம 'லவ் மேரேஜை' வச்சுக்கலாம். என்ன சிரிக்கிறே, ராதா? நம்ம 'மேரேஜ்' 'லவ் மேரேஜ்'தானே?''

''லவ் மேரேஜ்' பண்ணிக்க சுமித்ரா! உன் அழகுக்காகவும் குணத்துக்காகவும் நம்ம டாக்டர் கண்ணன் உன்னைக் காதலிக்கிறுர்னு எனக்குத் தெரியும். அவர் இன்னும் ரெண்டு மாதத்திலே அமெரிக்காவுக்குப் போகப் போகிறுர். அங்கே போறதுக்கு முன்னலே உன் கல்யாணத்தை முடிச்சுக்கிறது நல்லதுன்னு எனக்குத் தோணுது..''

''டாக்டரைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா அவரோடே அமெரிக்கா போய் 'ஸெட்டிலா'யிடணுமே? இங்கே என் அம்மாவை விட்டுட்டு, அமெரிக்காவிலே போய் வாழ எனக்குப் பிடிக்கலே ராஜி!''

''என்னடி சொல்றே? இந்த நாட்டிலே ஒவ்வொருத்தியும் 'அமெரிக்கா அமெரிக்கா'னு குதிச்சிக்கிட்டிருக்கா! இவ்வளவு நல்ல டாக்டரோட மனைவியாய் அமெரிக்கா போய் வாழறதுக்கு நீ முடியாது என்கிறியே?''

''ராஜி! டாக்டர் ரொம்ப நல்லவர் தான்; அமெரிக்காவும் ரொம்ப நல்ல



நாடுதான். ஆனல் என் அம்மா அதை விட ரொம்ப நல்லவங்க!''

*

''உன் அம்மா ரொம்ப நல்லவங்கனு சொல்லுவியே, சுமித்ரா! அவங்களைப் பற்றி ஒரு அதிர்ச்சியான விஷயம் சொல்லப் போறேன்.''

''ஸ்டெல்லா!''

''நேற்று மவுண்ட் ரோட் ஹோட்டல் மாடியிலே, உங்கம்மாவும் யாரோ நாற்பது வயதைத் தாண்டின ஒரு ஆளும், டிபன் சாப்பிட்டுப் பேசிக்கிட்டு இருந்தாங்க. அவங்க பேச்சிலேருந்து, அவருக்கும் குழந்தைகள் இருக்குனு புரிஞ்சுக்கிட்டேன். நான் பின்னலிருந்ததை உங்க அம்மா கவனிக்கலே..''

''என்னடி பேசிக்கிட்டாங்க?''

''அவங்க ரெண்டு பேரும், காலேஜிலே படிக்கிற காலத்திலே காதலர்களாய் இருந்தவங்களாம். இப்போ மறுமணம் செய்துகொள்றதுனு அவங்க முடிவு பண்ணிட்டாங்க....''

''நோ.. நோ.. நீ யாரையோ பார்த்திட்டு, என் அம்மானு நினைச்சுட்டே, ஸ்டெல்லா!''

''பதருதே சுமி! நான் உன்னேடு வேலே செய்கிற நர்ஸ் ஸ்டெல்லா என்பதும் நீ என் தோழி சுமித்ரா என்பதும் எவ்வளவு நிஜமோ அவ்வளவு நிஜம், அவங்க உன் அம்மா ராதா என்பதும்! 'என் மகள் கல்யாணம் முடிந்த பிறகுதான் நான் கல்யாணம் செஞ்சுக்க முடியும். ஏன்ஞ, நான் முதலிலே கல்யாணம் பண்ணிக்கிட்டேன்ஞ, இந்த சமுதாயத்திலே என் மகளுக்கு நல்ல சம்பந்தம் கிடைக்காமப் போயிடும்'னு உங்கம்மா சொன்னதை நான் கேட்டேன். என்ன சுமி, என்ன யோசிக்கிறே?''

''ஸ்டெல்லா! நானே முழு மனசோட அவங்க கல்யாணத்தை நடத்தி வைக்கப் போகிறேன்..''

''வெரி குட், மை ஃப்ரண்ட்! உன் கிட்டே இந்த மனப்பக்குவத்தை நான் எதிர்பார்க்கவேயில்லேடி... இந்தக் காலத்திலே வயதானவர்களும் விதவைகளும் மறுமணம் செய்து கொள்வதை வெறும் 'ஸெக்ஸ்' பிரச்னேயாகக் கருதக் கூடாது. அதை 'ஸெக்யூரிட்டி' பிரச்னேயாகக் கருதணும். வயசான காலத்திலே, வாழ்க்கையிலே, சமூகத்திலே தனக்கு ஒரு ஆதரவு கிடைப்பதற்காக மறுமணம் செஞ்சுக்கிறதை, ஏன் பாவம்னு கேவலமாய்ப் பேசணும்?''

''அது மட்டுமில்லே ஸ்டெல்லா! என் அம்மா, இல்லற வாழ்க்கையிலே இதுவரை ஒண்ணும் பிரமாதமாய் அனுபவிச்சுமகிழ்ச்சியடைந்திடலேனு எனக்குத் தெரியும். இனிமேலாவது அவங்களுக்கு ஓர் இனிமையான இல்லற வாழ்க்கை அமையட்டும்..''

''நீ முதல்லே கல்யாணம் பண்ணிக்கிட்டேன்ஞ, அவங்க மறுமணம் நடக்க லேன் க்ளியராயிடும்...''

''ஆல்ரைட்... நான் உடனே டாக்டர் கண்ணனைப் பார்த்து, 'நான் கல்யாணத்துக்கு ரெடி'னு சொல்லிடறேன்.''

''நில்லுடி. டாக்டர் இப்போ சொந்த ஊருக்குப் போயிருக்கிருருங்கிறதை மறந்திட்டியா? அவர் திரும்பி வந்ததும், அவர் மடியிலே விழுந்து கொஞ்சி உன் சம்மதத்தைச் சொல்லிடு.''

''ஹாய் ஸ்டெல்லா! ஹாய் சுமி..! என்ன ஒரே குஷியா யிருக்கீங்க? நியூஸ் உங்களுக்குத் தெரியுமா?''

''வா, மேரி! இப்போதுதான் வர்றியா? என்ன நியூஸ்?''

''நம்ம டாக்டர் ஊருக்குப் போயிருந்தார் இல்லியா, அங்கே அவருக்குக் கல்யாணம் நிச்சயமாயிடுச்சாம். இப்போ தான் போனிலே நர்ஸிங் சூப்பரின்டெண்டுக்குத் தகவல் சொன்ஞராம். அடுத்த மாதம் பத்தாம் தேதி காலேயிலே மேரேஜ்.''

''மேரி! இந்த நியூஸை உள்ளே எல்லோருக்கும் சொல்லு, போ!''

''ஓகே. ஸ்டெல்லா! நான் வர்றேன்.''

''சுமித்ரா! கவலேப்படாதேம்மா... 'காட் இஸ் க்ரேட்...' உன்னே மனப்பூர்வமாகக் காதலிக்கிற இன்னெருத்தர், இந்த ஆஸ்பிட்டலிலே இருக்கார். ஆனல் டாக்டர் உன்னே விரும்புகிருர்னு தெரிஞ்சதும், தன் காதலே வெளியிடாமல், என்னிடம் மட்டும் சொல்லிப் பெருமூச்சு விட்டிருக்கார்...''

''யாரது?''

''எக்ஸ்-ரே டெக்னிஷியன்' மிஸ்டர் பாஸ்கர்.. சுமி! 'தான் காதலிக்கிறவனேக் கல்யாணம் செய்து கொள்கிறவள் அதிர்ஷ்டசாலி; தன்னேக் காதலிக்கிறவனேக் கல்யாணம் செய்து கொள்கிறவள் புத்திசாலி' என்று இங்கிலிஷிலே சொல்வாங்க.. அதுமாதிரி உன்னேக் காதலிக்கிற மிஸ்டர் பாஸ்கரை நீ

கல்யாணம் பண்ணிக்கலாம்.. என்ன சொல்றே?''

''ஒகே... உன் அட்வைஸை நான் அப்படியே ஏத்துக்கிடறேன், ஸ்டெல்லா! என் அம்மா கல்யாணம் சீக்கிரமே நடக்கணும். அதுதான் இப்போ முக்கியம்.''

''வெரி குட்.. இன்னிக்கே மிஸ்டர் பாஸ்கரைப் பார்த்து விவரமெல்லாம் விசாரிச்சிடறேன். அடுத்த நல்ல நாளிலே உங்க வீட்டுக்குப் பெண் பார்க்க வருவாங்க.''

✱

''நாளை மறுநாள், நம்ம வீட்டுக்குப் பெண் பார்க்க வர்றாங்கம்மா!''

''என்னது? என்ன சொல்றே சுமித்ரா...?

''ஆமாம்மா.. மாப்பிள்ளை வீட்டார் இங்கே என்னைப் பெண் பார்க்க வர்றாங்க; எல்லாம் என் ஃப்ரண்ட் ஸ்டெல்லா ஏற்பாடு,..''

''வெரி குட், சுமி! உன் பிடிவாதத்தையெல்லாம் விட்டுட்டு, புத்திசாலித்தனமாய் கல்யாணத்துக்குச் சம்மதிச்சியே, ரொம்ப சந்தோஷம்! சரி, மாப்பிள்ளை யார்?''

''எங்க ஆஸ்பிட்டலிலே எக்ஸ்-ரே டெக்னிஷியன் வேலை பார்க்கிறார்.. ரொம்ப நல்லவர்..''

''ஓ! நீ அவரை விரும்புகிறாயா? ஈஸ் இட் எ லவ்-அஃபேர்?''

''எஸ்.. அப்படித்தாம்மா!..''

''சரி, மாப்பிள்ளையின் குடும்பம்?''

''அவருக்கு அம்மா இல்லை. அப்பா மட்டும்தான். சொந்த ஊர் திருச்சி. அப்பா பி.ஏ. படிச்சவர்; இங்கே மவுண்ட் ரோடு அருணா பாங்கிலே காஷியர் வேலை; போன வருஷம்தான் திருச்சிலேருந்து இங்கே ட்ரான்ஸ்ஃபராகி வந்திருக்கிறார்.''

''அவர் பெயர் என்ன சுமி?''

''மிஸ்டர் கிருஷ்ணன்.. என்னம்மா அப்படிப் பார்க்கிறே? நீங்க பிறந்த ஊரும் திருச்சிதானே? அவங்களைத் தெரியுமா?''

''ஓ! அவரைத் தெரியும், சுமித்ரா! மிஸ்டர் கிருஷ்ணனை நானே நேரில் சந்தித்து இதுபற்றிப் பேசுறேன்..''

✱

''உங்களை நேரில் சந்தித்துப் பேச வேண்டிய அவசரம் ஏற்பட்டுடுச்சுங்க. என் பெண் சுமித்ரா கடைசியிலே கல்யாணத்துக்குச் சம்மதிச்சிட்டா.''

''வெரி குட், ராதா!''

''அந்தக் கல்யாணத்தை நடத்தி வைக்க நீங்க தடையாயிருக்கக்கூடாதுனு தான் இப்போ உங்ககிட்டே பேச வந்திருக்கேன்...''

''வாட்?.. நான் ஏன் தடையா யிருக்கப் போறேன்? உண்மையில் இது சந்தோஷப்பட வேண்டிய விஷயமாயிற்றே?''

''ஒரு தந்தை என்ற முறையில் சந்தோஷப்படலாம். ஆனால் ஒரு காதலன் என்ற முறையில்—?''

''என்ன ராதா சொல்றே?''

''திடுக்கிடாதீங்க.. என் மகள் காதலிக்கிறது உங்க மகன் பாஸ்கரை.''

''என்ன?''

''ஆமாங்க. உங்க மகனுடைய காதலை நிறைவேற்றி வைக்க வேண்டியது உங்க பொறுப்புனு சொல்லிட்டுப் போகத்தான் வந்தேன்...''

''ராதா!''

''எஸ்.. மிஸ்டர் கிருஷ்ணன்! திருமணங்கள், நமக்கு மேலே, சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன—ஆனால் மறுமணங்கள், நம்மால் இங்கே நிச்சயிக்கப்படுகின்றன. மேலே யிருந்து வருகிற உத்தரவுகளுக்குக் கீழே இருக்கிற நாம் கட்டுப்பட்டுத்தானே ஆகணும்.''



''உண்டியலைக் கையிலே வெச்சுகிட்டிருக்காரே, அவர்தான் பெண்ணின் அப்பா! வரதட்சிணை அதிகமா கொடுத்திட்டாராம்!''

—கே. ரகுபதி

விஷமற்ற பாம்புகள்

அந்தச் சிறிய ரயில்வே ஸ்டேஷனில் பரக்கப் பரக்க விழித்துக் கொண்டே அவள் இறங்கினுள். பயம் திரண்டெழுந்த சிறிய கண்களைச் சுழற்றி, சுற்றியிருந்த அடர்ந்த கருவ மரங்களையும், ஸ்டேஷன் வேலியோரம் நின்றிருந்த ஓநாய் போன்ற மதுரைவீரனையும் பார்த்தாள்.

கடம்பங்குளம் என்று ஸ்டேஷன் அடர்ந்த கருவ மர—களிமண்— கண்மாயூடே தீவு போன்று நின்றது.

''என்ன விசயமா இங்க இறங்கினே?'' என்று மதுரைவீரன் அவளிடம் கேட்டான்.

''டீட்டியாரு இறக்கிப்புட்டாரு. நாங்க பஞ்சம் புழைக்கப் பொறப்பட்டவுக.''

''ரெண்டு நாளா மழை கொட்டோ கொட்டுண்ணு கொட்டுது.. கம்மாயெல்லாம் தண்ணி... பாரு, ரயில் பாதை பூரா ஒடப்பு எடுத்து ஆளுங்க ரவ்வும் பகலும் லிப்பேரு பாக்குருக.''

''இஞ்சே ஊரு எவ்வள தூரம்?''

''ஊரா!''—வீரன் குணுக்கென்று சிரித்தான். ''கம்மாக்கரையோரமா மூணு மைலு போனு கிராமம் வரும். கம்மா ரொம்பிடுச்சி. பாதையிலே தண்ணி கட்டிடுச்சி.''

''ஐயோ!''

''பயப்படாதே. நாங்க ஆட்டுக்கிடை வைச்சிருக்கோம். தீ மூட்டம் போடுவம். குளிராம இருக்கும்.''—ஓநாய் மாதிரி மதுரைவீரன் மறுபடி பார்த்தான்.

''ஒம் பேரு?''

''கிருஷ்ணம்மா! எதிர்க்க போறதுக்கும் டிரெயின் கிடையாதா?''

''சாமத்திலே இருக்கு. நீ ஏம் பயப்படறே?''

தண்ணீர் கட்டாத மேடு ஒன்றைத் தேர்ந்தெடுத்து அவன் நடந்தான்.

''வானம் வெறிச்சிடுச்சி. தண்ணிக்குள்ளாற சும்மா நடந்து வா.''

பூ மாதிரிக் களிமண். அதில் புதையுண்ட முள்ளுக்கொப்புகள், மாலைப் பொன் நிரவி ஓடிய வானம்.

''ஷ்.. இரு. சத்தம் போடாதே. அதா முள்ளுச் செடியிலே கருஞ் சாரை நெளியுது. ஏ, அம்மா! கொழுத்த சாரையா யிருக்கே!''


''பயம்மாயிருக்கே!''— அவள் விதிர் விதிர்த்து அவனண்டை ஒண்டிக் கொண்டாள். கொழுப்பு மினுமினுக்க மொண்ணை மண்டையைத் தூக்கி ஒரு எஸ் வளைவு போட்டது சாரை. வீரன் பம்மிக் கொண்டான். கிருஷ்ணம்மாள் ஜலத்தைத் தாண்டி மேடிறங்கி நின்று கொண்டாள்.

''அடடா! தோலை ஆறு ரூபாய்க்கு விக்கலாம். ஏ, பொண்ணு! காலடியிலே கிடக்கிற தொறட்டியை எடுத்துப் போடு!''

பாம்பின் கழுத்தில் தொறட்டியால் அமுக்கி அதை உயிரோடு பிடித்துக் கொண்டான்.

''வா, தொறட்டியை அமுக்கிக்கோ. இதென்ன, சாரைதானே? நல்லபாம்புத் தோலை அது ஓடும் போதே உரிப்பேன். பயப்படாதே!''

கம்பை அமுத்தும் போது அவளது சுவாசமும் சூடும் அவனது மார்பில் பட்டன. வாலிலிருந்து ஆரம்பித்து நீளமாய்க் கீறினுன். பாம்பை அடித்திருந்தால் தோல் நசிந்திருக்கும். கையால் லாவகமாக நீளமாய் உரித்துக் கொழுப்பு மினுமினுப்பை நீளமாய்க் குவித்தான். பாதி ஜீரணம் முடிந்து போன தவளை வெளியே விழுந்தது. கொழுப்பை எடுத்து இலையில் சுருட்டிக் கொண்டான். அப்புறமும் பாம்பு நெளிந்து துடித்தது. தலைவரை தொலியைக் கழற்றி நறக்கென்று பிய்த்த



போது மாமிசப் பிண்டமான அந்தப் பாம்பு சுருண்டெழுந்து வாயை 'ஆ'வெனப் பிளந்தது. கிருஷ்ணம்மாள் அப்படியே முழுதாக வீரனிடம் ஒட்டிக் கொண்டாள்.

கிடையை இந்த மேட்டிலிருந்து பார்க்க முடிந்தது. சிறிய ஓலைக் கோளங்கள் கவிழ்க்கப்பட்டு சமையலுக்குப் பொட்டலில் தீ மூட்டப்பட்டது.

''அங்கே போயிடுவமே! ஆளுங்க நெறைய இருக்காங்க!''— எஸ்கிமோ வீடுகள் போன்ற அந்த வரிசையைப் பார்த்துக் கொண்டே கேட்டாள்.

''சாரைத் தைலம் கெடைக்காது பெண்ணே! மழைக்கு இன்னும்கூட வரும். நல்லபாம்புகூட வரலாம். ஒரு சாரை புடிச்சா நாளைச் சாப்பாட்டுக்கு ஆச்சுது.''

''அப்படியானா நாம் போறேன் அங்கே... இங்க தனியா இருக்க பயம்மாயிருக்கு.''

வீரன் வறட் வறட்டென்று நெஞ்சைச் சொறிந்தான். சட்டையில்லாத அவன் உடம்பில் வெள்ளை வெள்ளையாய் என்னமோ தேமல், சிரங்கு.

''இரு.என்னமோ போறேன் போறேன்றியே! நாளைச் சாப்பாட்டுக்கு இந்தத் தோலை நரிக்குறவங்கிட்ட வித்து உனக்குப் பாதி தர்றேங்கிறேனே! சாயங்காலமா மொசலு பிடிக்கப் போனோம். நரிக்குடிக்காரங்க நிறைய வந்திருந்தாங்க. கூடமாட ஒழைச்சதுதான் மிச்சம். மொசலுக் கறிகூடக் குடுக்கலே. அதான் இன்னொரு பாம்பு கிடைச்சுதானா நல்லா இருக்கும். ஒண்டியா எப்படிப் பாம்பைப் புடிக்கிறது?''

வானம் ஒளியிறைந்திருந்தது. ஊதா டாலடித்த நட்சத்திரங்கள். வெள்ளை மொந்தையான சந்திர வெளிச்சம் பழுப்புவண்ணக் கண்மாய் நீரிலெல்லாம் நீக்கமறக் கலந்திருந்தது.

நீளமான ரயில்வே பாலத்தடியில் அவன் படுத்துவிட்டான். 'கிறீச் கிறீச்' சென்று காட்டு ஒலிகள். சமீபத்திய மழையின் தவளைகள்.

''..அப்போ உங்க அப்பா அம்மால்லாம் வேதாரண்யத்திலே இருக்காக.''

''ஆமா! குதிரை பிடிப்பாங்க. கோடிக்கரைவரை அடிக்கடி போவாங்க. பிழைப்புத்தான் போயிடுச்சி. இந்த மழை இப்போத்தானே பெஞ்சிருக்கு..''—மதுரைவீரன் ஓநாய் போல அவளைப் பார்த்தான். பனைமரம் போல அவள் பரட்டையாயும் கருமையாயும் நின்றாள்.





ரேடியோவுக்குப் பிறகு டிரான்சிஸ்டர் வந்ததைப்போல டி.வி'-க்குப் பிறகு 'மைக்ரோ டி.வி.' வந்துவிட்டது. இரண்டு அங்குல நீள ஸ்கிரீன் உள்ள இந்த மைக்ரோ டி. வி-யை உருவாக்கியவர் 32 வயதான பிரிட்டிஷ் விஞ்ஞானி க்ளைவ் ஸிங்ளேர். விலை சுமார் 4000 ரூபாய். நம் நாட்டில் இந்த டி. வி. வந்தால் அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் தொந்தரவு இருக்காது. யாராவது வந்தால் 'டக்' கென்று பாக்கெட்டில் போட்டுக் கொண்டு விடலாம்!

—டைம்

''பாம்பு கேம்பு வந்தா எழுப்பு. நெலா இருக்கு. எங்கே ஓடினாலும் பிடிச்சிடலாம்.'' அவன் தூங்கவில்லை. சுவாசம் மட்டும் ஏறுகதியில் இருந்தது. கொல்லன் பட்டரை ஊது உலைபோல நுரையீரல் வேலை செய்கிறது.

''ஏ, பொண்ணு! இங்கே யாரும் வரமாட்டாக!'' என்றான்.

அவளுக்குப் பயம் மண்டைக்கூட்டைத் துழாவியது. இவனிடமிருந்து தப்பிப் போமா என மிக அஞ்சினாள். எலும்புச் சட்டங்கள் போன்ற அவளது மார்பு பயத்தில் படபடத்தது. என்ன சொன்னால் அவனது கவனம் மாறும்? ஆ!

''இந்தாய்யா.. கல்லுக் குவியல்லே சரசரண்ணு ஒண்ணு நெளிஞ்சுது..அதா, ரயிலு பாலத்து மேலே ஓடுது பாரு!''

அவன் இரைக்காக ஓடும் புலி போலப் பாலத்தில் ஏறினான். அது நீளமான பாலம். 'அப்படியும் இப்படியும் அலைக் கழிய வைத்து.. ரயில் வந்ததானால் தப்பிக்க முடியாமல் செய்துவிடலாம்.

ஆனால் அவள் எண்ணம் ஈடேறவில்லை.

பளிச்சென்று கீழே குதித்தவன், ''பாம்பைக் காணும் புள்ளே'' என்றான்.

பிறகு அவளுடைய மிக அருகாமைக்கு வந்தான். அவள் சிலிர்த்துக் கொண்டாள். அவனது கண்கள் பூனையினுடையது போல மின்னிற்று. ஓநாய் போன்ற அவனது பார்வை அவள் அங்கமெல்லாம் ஓடி அவளது கையில் முடிந்தது.

''ஏ, பொண்ணு..... உங்கிட்டே ஒண்ணு கேப்பேன். கேட்கவே கூச்சமாயிருக்கு!''

''ஒண்ணும் வேண்டாம். நான் போறேன். வழியை விடு!''

''கையிலே வைச்சிருக்கியே தூக்குச் சட்டி, அதிலே சோறு இருந்ததைப் பார்த்தேன். ரெண்டு பேருமா சாப்பிடுவமே! நேற்றே புடிச்சி ஒண்ணும் சாப்பிடலே. கிடைக்காரங்க கூலி கொடுக்கலே. நீ சோறு குடு.. இந்தப் பாம்புத் தோலே வித்து உனக்கு நாளிக்குத் துட்டுக் குடுக்கிறேன்..'' —ஆவலாய்க் குத்த வைத்து அமர்ந்து கைகளை நீட்டினான்.

அவள் வியப்புடனும் மகிழ்வுடனும் தாங்க முடியாத இரக்கத்துடனும் அப்படியே சோற்றுச் சட்டியை அவனிடம் கொடுத்தாள். ஏனோ அவள் கண்கள் பனித்தன.

''பூராவும் வேணும் பெண்ணே! நீ என்ன செய்வே? ரெண்டு பேருமா சாப்பிடுவம்!''

''..............''

''ஏனேக்குத்தான் ஏனே கஷ்டம் தெரியும், இல்லியா?''

''உன்னே என்னமோன்னு நினேச்சுப் பிட்டேன். வவுறு பசிக்கும்போது 'அதெல்லாம்' தோணுமா?'' என்று நினேத்துச் சிரித்த அவள், ஆவலுடன் அவன் உண்பதையே பார்த்தாள்.



பெங்களூரிலிருந்து ஒரு ரூபாய்க்கு ஒருவர் 'Alice in wonder Land' என்ற புத்தகத்தை வாங்கினார். அதனை லண்டனில் ஏலம் விட்டபோது 880 பவுன்—அதாவது 11,440 ரூபாய் கிடைத்தது.

— எம். எம்.

இதோ! நீங்கள் துடிதுடிப்புடனும், ஊக்கத்துடனும் விளங்க சக்தியளிக்கும் எரிபொருள்.



பூஸ்ட்

மால்ட் சாக்லெட் மில்க் ட்ரிங்க்

ரயிலைப் போன்றே ஒவவொரு நாளும உங்களுககும் நல்ல துவககததிறகு எரிபொருள தேவை ஆகையினால தான ஒவ்வொரு காலையும உங்களுககு பூஸ்ட் தேவை.

உயா சுறுசுறுபபுடன் உங்களை இயங்கச செயயும சகதிப் பொருள். வேலையிலும விளையாடடிலும அதிகச் சகதியைச செலவிடும உங்கள குழநதைகளுக்கு இது முக்கியமாகத் தேவை.

அவர்களுககு பூஸ்ட்-மால்ட சாகலேட பால பானமளியுங்கள். ஊடடததைப் பற்றி குறைவற அறிந்த ஹார்லிக்ஸ் செய்வோர் தருவது

சகதி வளமான ஏடு நிறைந்த பூஸ்ட உங்களுககு அதிகப் படியான ஊட்டமளிக்கிறது.

ஆடை நிறைந்த பால, கோதுமை, பாாலி மாலட், கோக்கோ ஆகியவறறினால் செயயப் பட்டிருப்பதே இதற்குக் காரணம்.

பூஸ்டின் ஆடை நிறைநத மால்ட சாக்லேட சுவையை உங்கள் குடும்பத்தினர் மிகவும் விருமபுவார்கள்.

பூஸ்ட், ஒரு நாளைத துவக்குவதற்கு மிகச் சிறப்பான முறை—ஒவ்வொரு நாளும. இரணடு அளவுகளில் கிடைக்கும்.

'ஹார்லிக்ஸ்' தயாரிப்பாளர்கள் அளிப்பது.

B-4575 TAM 3



சுகம்

கோணபட்டு சித. சுப. சிதம்பரஞ் செட்டியாரின் இரண்டாவது மகளுக்குக் கல்யாணம். பத்தரை மணிக்கு முகூர்த்தம். இன்னும் அரை மணி நேரம் இருந்தது.

சுற்றுக்கட்டு வளவின் நான்கு புறங்களிலும் சுற்றமும் நட்பும் சூழ்ந்திருந்தது.

கதிரேசன் ஒரு மூலையில், உட்கார்ந்திருந்தான். அவன் கண்கள் பெண்கள் கூட்டத்தை அலசிக் கொண்டிருந்தன. வைரங்களும் பட்டுக்களும் பகட்டின. அவனது முத்துவைத்தான் காணவில்லை.

வடக்குப் பக்கமாக ஒரு கதவு. பந்திக் கட்டுக்குப் போகும் வழி.

இடுப்பில் பெரிய ஆச்சியின் இரண்டு வயதுப் பையனை 'இடுக்கிக்' கொண்டு வந்த முத்தாத்தா, ''அழுகாம வாடா. வாதா மரத்திலே காக்கா ஒக்காந்திருக்கும். பாத்துக்கிட்டே சோறுங்கலாம்'' என்று தாஜா பண்ணிக்கொண்டு போனாள்.

கதிரேசன் மனசுக்குள் சிரித்துக் கொண்டான். அழவே செய்யாமல் 'சமத்தனாக' உட்கார்ந்திருக்கும் அந்தக் குழந்தைக்குச் சம்பந்தமில்லாத வார்த்தைகள் அவை. அவன் தேடுவதைப் புரிந்துகொண்டு அவனுக்காகச் சொல்லும் ஜாடை வார்த்தைகள்.

அவள் போய் இரண்டு நிமிஷங்கள் கழித்து மெதுவாக எழுந்து சென்றான் அவன்.

பந்திக்கட்டில், தாமதமாக வந்த சிலர் இன்னும் பலகாரம் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். தாற்காலிகச் சமையல்கட்டில் மதிய விருந்து தயாராகி, குருமாவும் பாயசமும் கதம்பமாக மணத்தன. இன்னும் ஐந்து நிமிஷங்களில் இலை போட்டு விடுவார்கள். பத்து மணியாகி விட்டதே!



சமையல்கட்டை அடுத்துக் கொல்லைக் கேணி. உயரமான கிணற்று மேடையின் சரிவில் முத்தாத்தா நின்று கொண்டிருந்தாள். அருகே இருந்த வாதா மரத்துக் கிளையில் அவள் எதிர்பார்த்தபடியே இரண்டு காக்கைகள் உட்கார்ந்திருந்தன.

கதிரேசன் அவளையே பார்த்தான்.

அவனுக்கு அம்மான் மகள் அவள். மற்ற உறவினர்களைப் போல் செல்வச் செழிப்போடு கிழங்கு கிழங்காக இல்லாமல், வளப்பம் குறைந்த மேனி. கறுப்பு நிறந்தான். ஆச்சியின் கல்யாணத்துக்காகப் புதிதாய்த் தைத்திருந்த நைலக்ஸ் பாவாடையும் தாவணியும் உடலில் பொருந்தாமல் தனியாக நின்றன. ஆனாலும் அவனுக்குப் பிரியமானவள் அவள் ஒருத்திதான்.

அவன் தன்னையே உறுத்துப் பார்ப்பதை உணர்ந்த முத்தாத்தா நாணத்தோடு திரும்பிக் கொண்டு, ''பாக்கறதைப் பாரு, கொத்திக்கிட்டுப் போற மாதிரி!'' என்றாள்.

''ஏஞ்சே, நான் அப்படியா பாக்கிறேன்?''

''உங்களையா சொன்னேன்? அந்தக் காக்காயச் சொன்னேன். கந்தரப்பத்தைக் கொத்திக்கிட்டுப் போற மாதிரி கழுத்தைச் சாச்சுப் பாக்குது!'' என்று சிரித்தாள் அவள்.

''நீ யாரைச் சொன்னாலும் சரி. இந்தா உங்க ஆச்சி கழுத்திலே தாலி ஏறப் போகுது. அடுத்து உன் கல்யாணந்தானே?''

'''மேலைக்குக் கல்யாணம், கழுத்தே சொகமாறுன்னாளாம்!' உங்களுக்கென்ன, சுளுவாச் சொல்லிட்டீக. இந்தக் கல்யாணத்தை முடிக்க அப்பச்சி பட்டபாடு எனக்கல்ல தெரியும்! சீதனப் பணம் எட்டாயிரம், மாமியா சாமானுக்கு ஐயாயிரம், அது இதுன்னு இருபதாயிரம் வந்துடுச்சு. அப்பச்சி வீட்டை அடமானம் வச்சுட்டாக. இந்தக் கடனை அடைக்கவே எத்தனை வருஷமாகப் போகுதோ! அதுக்கப்பறமுல்ல என்

கல்யாணம்!'' என்று பெருமூச்சு விட்ட முத்தாத்தா, ''அதனாலேதான் நான் நர்ஸ் டிரெய்னிங் போகப் போறேன். நானும் நாலு காசு சம்பாரிச்சாத்தான் ஏதாச்சும் நல்லது நடக்கும். வெறுங் கை முழம் போடுமா?'' என்று கேட்டாள்.

''எனக்குப் பணம் காசு ஒண்ணும் வேணாம் முத்து. நீ மட்டும் போதும்!''

''உங்களுக்கு என்மேலே பிரியம்; எனக்காக எதையும் விட்டுக் குடுப்பீக. உங்காத்தா விட்டுக் குடுப்பாகளா? 'பையன் பாங்கிலே சேந்துட்டான்; அறநூறு ரூபா சம்பளம்! மாமியா சாமானுக்கு ஆறாயிரத்துக்குப் பைசா குறைஞ்சாலும் வாங்க மாட்டேன்'னு செத்த மிந்திக்கூட நம்ம கடியாபட்டி கனகு அயித்தையாண்டிக்கிட்ட சொல்லிக் கிட்டிருந்தாகளே!''

''அதையெல்லாம் நீ காதிலே போட்டுக்காதேஞ்சே! எல்லாத்தையும் நான் பாத்துக்கிறேன்.''

''வேணாம், அயித்தான். என் ஆசைய வளக்காதிக. நடக்க முடியாததுக்கு ஆசைப்பட்டா வீணா ஏமாந்து போகணும்.''

''ஏன் நடக்க முடியாது? நானும் ஏழை, நீனும் ஏழை. ஏழைக்கேத்த எள்ளுருண்டை. நமக்குள்ளே ஆயிரங்கள் புரள வேணும். அன்பு இருக்கு. போதும்.''

''இல்லே அயித்தான். நம்ம சமூகம் இன்னும் அவ்வளவு பக்குவப்படலை. என்னதான் ஏழைன்னாலும் ஏழு வகைப் பலகாரமில்லாம இலை போடாத ஜாதி! ஒரு பொண்ணை பெத்ததுக்காக நாப்பது ஆயிரம் ஐம்பதாயிரம் தண்டம் குடுக்கிற ஜாதி! இதிலே பொறந்துட்டு உங்களாலே ஒண்ணும் சாதிக்க முடியாது.''

கதிரேசனுக்கு ரோஷம் வந்துவிட்டது. ''ஏஞ்சே, என்னை என்ன வெத்து வேட்டுன்னு நினைச்சியா? சீதனமும் வேணாம், விருந்தும் வேணாம்னுட்டு உன்னை உடனே கூட்டிக்கிட்டுப் போய்க் குன்னக்குடியிலே வச்சுத் தாலி கட்ட எனக்குத் துணிச்சலிருக்கு! ஆனா, துணிச்சலிருக்குங்கிறதுக்காகத் தேவையில்லாம கெட்ட பேர் வாங்கப்படாது. ஒண்ணு சொல்றேன், கேட்டுக்க. உன் கழுத்திலே நான் திருப்பூட்டலை, எங்கப்பச்சி பேர் வள்ளியப்ப செட்டியாரில்லை!'' என்று சபதம் போட்டான்.

முத்தாத்தாளின் நெஞ்சம் பெருமையில் பூரித்தது. ''ரோஷம் ரொம்பத்தான் இருக்கு! அந்த இரணியூரான்தான் நிறைவேத்தி வைக்கணும்!'' — அவள் இப்போதே அவனுடைய குல தெய்வத்தைச் சரணடைந்து விட்டாள்.

''இந்தாங்க, அயித்தான். உங்களுக்காகக் கொண்டாந்தேன்'' என்று ஓர் அதிரசத்தை எடுத்து அவனிடம் நீட்டினாள்.






''உங்களுக்கு இடைவேளை
வேணுமா வேண்டாமான்னு
ஆபரேட்டர் கேட்கச் சொன்னர்.''

—சாந்தா கருணைகரன்

''இது என்னன்னு சொன்னுத்தான் திம்பேன்!''

''க்கும். நான் மாட்டேன்!'' என்று தலே குனிந்தாள் அவள்.

அதிரசம் என்பதை 'அதிரேசன்' என்பார்கள். அது 'கதிரேசன்' என்பது போல் ஒலிக்குமாம். அது அவர் பெயராம். அவள் சொல்லமாட்டாளாம்!

மறுமுறை அவர்கள் சந்தித்துக் கொண்டது அடுத்த வருஷம் கதிரேசன் 'பிள்ளே போன' போதுதான்.

கண்ராம்பட்டி கா.கி.நா.சொ.காசி விஸ்வநாதஞ் செட்டியார் பல லட்சங்களுக்கு அதிபதி. ஆனுலும், பிள்ளேயில்லே. எனவே, அழகும் திறமையுமுள்ள கதிரேசனேப்பிள்ளே கூட்டிக்கொண்டார்.

கதிரேசன் எதற்கோ பின்கட்டுக்குப் போனபோது அங்கே முத்தாத்தா தனியாக நின்று கொண்டிருந்தாள்.

''அயித்தான் லட்சாதிபதியாயிட்டீக! இனிமே இந்த ஏழை முத்தாத்தா நினேப்பு எங்கே வரப் போகுது? எஸ்டேட் நினேப்பும் வட்டிக் கடை நினேப்பும் தான் வரும்!'' என்று அவன் வாயைக் கிண்டினுள்.

''நக்கல் பண்றியா! கிள்ளேன்னுத் தெரியுமா?'' என்று கையை ஓங்கினுனே தவிர தொடவில்லே, தொட்டதில்லே. பிறகு, ''நான் சொன்னதிலே நம்பிக்கையில்லாம நர்ஸ் டிரெய்னிங் சேந்தியே; இப்ப வீணுப் போகப் போகுது, பார்! அந்த இரணியூரான் நமக்கு வழி காட்டிட்டான். முன்னேயாவது எங்காத்தா ஆருயிரத்திலே குறியாயிருந்தா. இப்ப நான் இடம் மாறிட்டேன். கண்ராம்பட்டிக்காரவுகளுக்கு என்ன குறைச்சல்? செல்வம் கொழிக்குது! உங்க ஆருயிரத்தையா எதிர்பார்க்கப் போருக? வர்ற தையிலே முடிச்சுப்புடலாம்!'' என்று நம்பிக்கையோடு சொன்னுன்.

அவன் பேச்சைக் கேட்டு முத்தாத்தா புளகித்துப் போனுள். அவனுக்காக அயித்தான் என்னென்ன யோசனேகள் செய்கிருன்!

''கை குடுக்கும்னு நம்பித்தான் தெய்வத்தைக் கையெடுக்கிருேம். கை குடுத்தாலும் சரி, கை விட்டாலும் சரி!'' —அவனேத் தெய்வமாக்கி, பாரத்தை அவன்மீது சுமத்தி விட்டுப் போனுள் முத்தாத்தா.

சொன்னபடி, அடுத்த தையில் கதிரேசனின் திருமணம் நடந்தேறியது. கண்ராம்பட்டிக் காசி விஸ்வநாதஞ் செட்டியார் வீட்டுக் கல்யாணமென்ருல் தடபுடலுக்குக் கேட்கவா வேண்டும்? பணம் வெள்ளமாய்ச் செலவழிந்தது.

தெருவையே அடைத்துக் காவணம் போட்டார்கள். தெருவோரங்களில் பர்லாங் நீளத்துக்குப் பெஞ்சுகள் போட்டார்கள். பக்கத்து மைதானத்தில் கார்கள் இறைந்து கிடந்தன. வாண வேடிக்கைக்கே ஆயிரம் ரூபாய் ஆகியிருக்குமென்று ஊரில் பேசிக் கொண்டார்கள்.

தெருவை அடைத்துப் போடப்பட்ட மேடையில் நாதஸ்வரக் கச்சேரி நடந்து கொண்டிருந்தது. உள்ளே 'பெண்



பிரெஞ்சுப் புரட்சியின்போது புரட்சிக்காரர்கள் அரண்மனையை முற்றுகையிடவே, அரசர் பதினாறும் லூயியும் அவர் மனைவி மேரி ஆன்டாய்னெட்டும் தப்பிச் செல்ல முயன்றனர். ஆனால் வழியில் அரண்மனை வாசலில் இருவரும் புரட்சிக்காரர்களின் கையில் சிக்கிக் கொண்டனர். அப்போது பயத்தினால் அரசியின் தலை முடி அத்தனையும் திடீரென்று நரைத்து வெளுத்துவிட்டதாம்.

— மங்களம்

அழைத்த வீட்டு விருந்து' நடந்து கொண்டிருந்தது.

'கால் மோதிர'மும் புத்தாடைகளுமாகத் தனது அறையில் அடைந்து கிடந்த கதிரேசன் நெடுநேரத் தவிப்பைத் தாளாமல், ஒரு சிகரெட்டும் தீப்பெட்டியும் எடுத்துக்கொண்டு தோட்டப் பக்கம் சென்றான்.

கேணி மேட்டருகே நின்று கொண்டு, வானத்திலே மேகக் கூட்டங்களிடையே உல்லாசமாகப் பவனி வந்து கொண்டிருந்த நிலவையே பார்த்தபடி இருந்தாள் முத்தாத்தா.

அவளைக் கண்டதும் கதிரேசன் துணுக்குற்று நின்றான்.

''நாங்க போய்ட்டு வாரோம், அயித்தான்.''

அவன் சில கணங்கள் பேச முடியாமல் நின்றான். ''நான் எவ்வளவோ வாதாடிப் பார்த்தேன், முத்து. சொத்தை ஆளப் பிள்ளை இல்லேன்னு என்னைத் தத்து எடுத்துக்கிறாகன்னு நினைச்சேன். ஆனா, தங்கச்சி மகளைக் கட்டிக்கிட்டு அவ்வளவு சொத்தையும் வாங்கித் தருவேன்-னு என்னை விலைக்கு வாங்கியிருக்காக. யாருக்கோ சொத்து சேத்துக் குடுத்தேன்; உலகத்திலே எனக்குன்னு இருந்த ஒரே சொத்தை இழந்துட்டேன்! என்னை மன்னிச்சுடு முத்து!'' என்று தழுதழுத்த குரலில் சொன்னான்.

''பரவால்லே, அயித்தான். இவ்வளவு நேரமும் அந்த லாவாண்டையையே பாத்துக்கிட்டிருந்தேன். அது அழகா இருந்துச்சு. அதை எடுத்து விளையாட ஆசைப்பட்டேன். ஆனா, அது நடக்கிற காரியமா? அது எவ்வளவு உசரத்திலே இருக்கு; நான் எவ்வளவு பள்ளத்திலே இருக்கேன்!'' விர்ரென்று உயர்ந்து சென்று 'பட்'டென்று வெடித்த அவுட்வாணத்தின் மத்தாப்பு ஒளியில் அவள் விழிக் கடைகளில் திரண்டு நின்ற நீர், முத்துக்களாய் ஜொலித்தது.

''இந்தக் கண்ணீருக்கு நான்தான் பொறுப்பு!''

''இல்லே, நான்தான் பொறுப்பு. இருபது வருஷமா எதுக்கும் ஆசைப்படாம என்னை அடக்கிக்கிட்டவ இந்த விஷயத்திலே ஆசைப்பட்டுட்டேன். தகுதிக்கு மீறி ஆசைப்பட்ட பலன் இது!''

''நர்ஸ் டிரெயினிங்கை நிறுத்திட்டியாமே, ஏன்?''

''உங்க ஆத்தா கேட்ட ஆறாயிரத்தைச் சேர்க்கணும்னு நான் வேலைக்குப் போக ஆசைப்பட்டேன். இனிமே அதுக்கு அவசியமில்லேயே!''

''அப்புறம் எப்படித்தான் உன் கல்யாணம் நடக்கும்?''

அவள் விரக்தியாகச் சொன்னாள்: ''இனி அது நடக்காது, அயித்தான். நிலாவைத் தொட முடியலேன்னாலும் தூர இருந்தே பாத்துக்கலாம்'' அவள் குரல் உடைந்திருந்தது.

பளீர் பளீரென்று முகத்தில் அறைந்து கொண்டான் கதிரேசன். ''நான் ஒரு கோழை. நான் போட்ட சபதத்திலே தோத்துப் போயிட்டேன்!''

''நீங்க தோத்துப் போகலே அயித்தான். என்னைக் கல்யாணம் பண்ணிக்கலேன்னா உங்க அப்பச்சி பெயர் வள்ளியப்ப செட்டியார் இல்லேன்னீக. இப்ப, உங்க அப்பச்சி பெயர் காசி விஸ்வநாதஞ் செட்டியார்தானே? நடந்தது நடந்து போச்சு. நீங்களாவது நல்லாயிருங்க!'' என்று வாழ்த்திவிட்டு வேகமாகச் சென்றாள் அந்த முத்து.

"ஹலோ!"

—குரல் கேட்டுத் திரும்பின சாந்தி, ஒரு கணம் ஸ்தம்பித்துப் போனாள். எதிரே மூர்த்தி.


"ஓ, ஹலோ!"—பதிலுக்குச் சொன்னாளே தவிர, குரலில் உற்சாகம் இல்லை. உணர்ச்சிகள் குப்பென்று பொங்கி இதயத்தைப் பெரும் சுமையாக அழுத்தின. மூர்த்தி அவளுடைய முன்னாள் கணவன். சட்டபூர்வமாகப் பிரிந்து வந்து பத்தாண்டுகளுக்குமேல் கழிந்து விட்டாலும், எதிர்பாராத விதமாக அவனை இங்கே சந்தித்ததில் அவள் அதிர்ந்துதான் போனாள்.

"துணி வாங்க வந்தாயா?" என்று அவன் சர்வசாதாரணமாகக் கேட்டான்.

'துணிக்கடையில் பின் என்னதான் வாங்குவார்கள்?' என்று அவள் நினைத்துக் கொண்டாலும், "ஆமாம்!" என்றாள்.

மூர்த்தி தன்னோடு வந்திருந்த எட்டு வயதுச் சிறுமியைப் பார்த்து, "லாவண்யா! இந்த 'ஆன்ட்டி'க்கு நமஸ்தே சொல்லு!" என்றான். வார்த்தைகளில் நயம் இருந்தாலும் அவனுடைய முகத்திலும் குரலிலும் பெருமையும் ஆர்வமும் நிறைந்திருந்தன. 'ஆன்ட்டி' என்று அவனை அழுத்தமாகக் குறிப்பிட்ட விதத்தில் அவள் மனத்தை நோகச் செய்யவேண்டும் என்ற அவன் எண்ணம் ஸ்பஷ்டமாகத் தெரிந்தது.

"நமஸ்தே, ஆன்ட்டி!" என்றாள் சிறுமி.



பொறுமையின் எல்லையில்...

"நமஸ்தே!" என்ற சாந்தி, மூர்த்தியைப் பார்த்து, "உங்கள் மகளா?" என்றாள்.

"ஆமாம். இவளைத் தவிர, நாலு வயதில் இன்னொரு மகளும், இரண்டு வயதில் ஒரு மகனும் இருக்கிறார்கள்!"

"வெரி நைஸ்!"

"அடுத்த கவுன்ட்டரில் அருமையான ரெடிமேட் துணிகள் விற்கிறார்கள். அதாவது, 'சில்ரென்ஸ் கார்மென்ட்ஸ்.' அங்கே இரண்டு கவுனும் ஒரு சின்ன 'பாபா ஸூட்டும்' வாங்கினேன்!" என்றான் மூர்த்தி.

"ஓ!" என்ற சாந்தி, ஏதாவது சொல்ல வேண்டுமே என்பதற்காக, "லாவண்யா மிகவும் அழகாக இருக்கிறாள்!" என்றாள்.

"ஆமாம். தன் அம்மாவைப் போல்."

வார்த்தைகளைச் சாட்டையாக்கி இரக்கமில்லாமல் அடிக்க எப்படித்தான் அவனால் அத்தனை சுலபமாக முடிகிறதோ?



கடந்த கால நிகழ்ச்சிகளை அவள் நினைத்துப் பார்த்தாள்.

பெரும் தனவந்தரின் ஒரே வாரிசு அவள். மூர்த்தி ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவன். ஆனால் வசீகரத் தோற்றம் கொண்டவன். வேலையில் கெட்டிக்காரன்.

திருமணமாகி ஓராண்டுவரை வாழ்க்கை தேனாக இனித்தது.

சாந்தியின் தந்தை திடீரென்று மாரடைப்பினால் காலமானபோது, மூர்த்தி உற்சாகமடைந்தான். மாமனாரின் ஐசுவரியம் முழுவதும் மனைவியைச் சேரும், அதை மூலதனமாக வைத்து பிஸினஸ் ஆரம்பிக்கலாம்!

தன்னை அவன் மணந்தது பணத்துக்காக மட்டும்தான் என்ற உண்மையை அப்போதுதான் புரிந்துகொண்டாள் சாந்தி.

ஆனால், மூர்த்தி எதிர்பார்த்தபடி நடக்கவில்லை. சாந்தியின் தந்தையின் நிஜமான செல்வநிலை அவர் இறந்த பிறகுதான் தெரிய வந்தது. பல இடங்களில் கடன் வாங்கி, அதை அடைப்பதற்காகத் தன் நிலபுலன்களையும் வீடுகளையும் விற்றிருந்தார். கடைசியில் சாந்தியின் பெயருக்கு மிஞ்சியது கணிசமாக ஒன்றுமேயில்லை.

அவ்வளவுதான். இன்சொல்லும் அன்புமே உருவாயிருந்த மூர்த்தி, அடியோடு மாறிப் போனான். கசப்பும் வெறுப்புமாக வார்த்தைகளை அள்ளி அள்ளி வீசினான். அவள் பளிச்சென்று உடுத்திக் கொண்டால், ''பிச்சைக்காரனின் பெண்ணுக்கு அலங்காரத்தைப் பார்!'' என்றான். ''உன் அப்பா ஏமாற்று வித்தையில் கெட்டிக்காரர். தான் 'பாப்பர்' என்பதை மூடி மறைத்து உன்னை என் தலையில் கட்டிவிட்டார்!'' என்றான்.

அவன் வார்த்தைகளைப் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தாள் சாந்தி. ஆனால் பொறுமைக்கும் ஓர் எல்லை இருக்கிறதே!

அந்த எல்லையைக் கடந்துவிட்டபோது அவள், ''சரி, அப்பா உங்களை ஏமாற்றியதாகவே இருக்கட்டும். நான் என்னதான் செய்யவேண்டும் என்கிறீர்கள்?'' என்றாள்.

''சொல்லட்டுமா?''

''சொல்லுங்கள்!''

''ஒருவருக்கொருவர் எந்த விதத்திலும் ஒத்துக்கொள்ளவில்லை என்று நான் உன்மீது விவாகரத்து கேஸ் போடுகிறேன். நீ கேஸை எதிர்க்காமல், என் வாழ்க்கையை விட்டு விலகிப் போய் விடு!''

அவள் அப்படியே ஒடிந்து போனாள்.

அதன்பின், எத்தனையோ முறைகள் அவள் அவனிடம் கெஞ்சி, மன்றாடிப் பார்த்தாள். தான் அவன்மேல் கொண்டிருக்கும் அன்பின் ஆழத்தை எடுத்துச் சொன்னாள்.... நியாயம் வழங்கும்படி கேட்டாள்.

அவன் எதற்குமே செவி சாய்க்கவில்லை.



குட்மார்னிங் !

நம்மிலும் மேலானவர்களுக்கு
நாம் செலுத்த வேண்டிய
வட்டி யில்லாக் கடன்
நம்மிலும் குறைந்தவர்களிடம்
நாம் எதிர்பார்க்கும்
'காம்ப்ளிமெண்ட்ரி!'

— எஸ். என். ராஜாராம்

விவாகரத்து நடந்தது.

அவனைப் பிரிந்து வருமுன் அவள், துயரத்தின் சுமை தாங்காமல், ''எனக்கு நீங்கள் ஜீவனாம்சம் தரவேண்டாம். எதற்கு வீண் செலவு? அந்தப் பணத்தை மிச்சப்படுத்தி மாளிகை கட்டிக் கொள்ளுங்கள்!'' என்றாள்.

அந்த வார்த்தைகளை அவன் இன்னும் மறக்கவில்லையா? பத்து வருடங்களுக்குப் பிறகும், அவளை நாவினால் சுடுவதில் சுகம் காண்கின்றானே!

விவாகரத்து நடந்த மறுவருடமே அவன் வேறொரு பெண்ணை — ஆம், பணக்காரியை மணந்து கொண்டான். திருமணத்துக்குப் பிறகு, ஜோடியாக மனைவியோடு எடுத்துக் கொண்ட புகைப்படம் ஒன்றைச் சாந்திக்கு அனுப்பி வைத்தான்!

சாந்தி வேலையில் அமர்ந்தாள். சமூகம் எத்தனை இரக்கமற்றது என்பதை விரைவிலேயே புரிந்து கொண்டாள். 'விவாகரத்து ஆனவள்' என்ற வார்த்தைக்கு ஆடவர்கள் புரிந்துகொண்ட அர்த்தம், அவள் நேர்மையுடையவளாக இருக்க முடியாது என்பது. பெண்கள் புரிந்துகொண்ட அர்த்தமோ, அவள் தங்கள் கணவன்மார்களை வசீகரப்படுத்தக் கூடியவள் என்பது!

இவற்றுக்கு நடுவே அவள் வாழ்ந்தாள், நேர்மையாக சலனமேயில்லாமல். ஒவ்வொரு நாளும் அக்னிப் பரீட்சையாகத்தான் கழிந்தது.

அவள் மறுமணம் செய்துகொள்ளவில்லை.. அந்த ஆசையே அவள் மனத்தில் தோன்றவில்லை. மூர்த்தியை மறக்கக் கற்றுக் கொண்டாலும், தன் துறவு வாழ்க்கையைப் பொக்கிஷம் போல் காத்து வந்தாள்.

துணிக் கடையில் சாந்தியைப் பார்த்து மூர்த்தி குத்தலாக, ''மிக சந்தோஷமா யிருக்கிறாய் போலிருக்கு! முன்பு இருந்ததைவிட நன்றாகப் பருத்திருக்கிறாயே!'' என்றான்.

என்ன வார்த்தைகள்! அவளை அனுப்பிவிட்டுத் தன் வாழ்க்கையை அவன் வளமாக அமைத்துக் கொள்ளவில்லையா? அவள் யாரோ, அவன் யாரோ என்று ஆகிவிட்ட பின்னும் இதென்ன மனவிகாரம்?

''மிகவும் சந்தோஷமாயிருக்கிறேன்'' என்றாள் சாந்தி.

''ஆனால் பாவம், தனிமை உன்னை வாட்டிக் கொண்டிருக்கும்!''

இதற்கு அவள் பதில் சொல்லவில்லை. இதயத்தில் வேதனை குமுறிற்று. கண்ணீர் குப்பென்று பொங்கிற்று. வேர்வையைத் துடைக்கும் பாவனையில், முகத்தோடு கண்களையும் துடைத்துக் கொண்டாள்.

''ஓகே! நான் வரட்டுமா? என் ஒய்ஃப் எனக்காகக் காத்திருப்பாள். இன்று ஒரு 'டின்னர் எங்கேஜ்மெண்ட்' '' என்று முறுவலித்தான் மூர்த்தி. பின், நிதானமாக அவளைப் பார்த்து, அந்த ஆணவம் பொங்கும் முறுவல் மாறாமலேயே, ''பஸ்ஸில்தானே போவாய்? பஸ் ஸ்டாண்ட் வரை லிஃப்ட் தரட்டுமா?'' என்றான்.

சட்டென்று அவளுள் ஏதோ ஆவேசம் தோன்றி விசுவரூபமெடுத்தது. நிரபராதியான அவளுக்கு ஆயுள் தண்டனை விதித்துவிட்டு, என்னமாய் முறுவலிக்கிறான் மூர்த்தி! இந்த முறுவல் மறைந்து விட வேண்டும்.

அதற்காகப் பொய் சொன்னாலும் குற்றமில்லை.

அவனைப் பார்த்து நிதானமாகச் சொன்னாள் சாந்தி: ''அடுத்த கவுண்ட்டரில் அருமையான ரெடிமேட் துணிகள் இருப்பதாகச் சொன்னீர்களே! அங்கு போய், என் ஐந்து வயது மகனுக்காக ஒரு ஸூட் வாங்க வேண்டும். அதனால், நீங்கள் எனக்காகக் காத்திருக்க வேண்டாம். லிஃப்ட் தருவதாகச் சொன்னதற்கு தாங்க்ஸ்!''

அவன் முகம் வெளுத்துக் களையிழந்து போயிற்று. மறு வார்த்தையில்லாமல் மகள் பின்தொடர, கடையைவிட்டு வெளியேறினான்.. நடையில் தளர்ச்சி.

அவன் போவதையே பார்த்துக் கொண்டு நின்றாள் சாந்தி. அவன் கண்களிலிருந்து மறைந்ததும், கண நேரம் அவள் கற்பனையில் பிறந்து அவளுடைய ஐந்து வயது மகனும் மடிந்து போனான்.



dCA/GL/518 TAM

வைர விலங்கு



''டேய், சோமாலே - கலப்பையை இன்னும் கொஞ்சம் விட்டுக் கட்டு.. டேய் குச்சான், மாட்டுக்கும் உனக்கும் நோவப் போவுது....சீ! நீயெல்லாம் ஏண்டா ஏர் ஓட்டிக்கிட்டு வரீங்க? துலுக்காணம் கழுதை, உன் அப்பன் எங்கே தொலேஞ்சான், நீ ஏர் பிடிச்சுக்கிட்டே?..சேர ஓட்டுடா, சேர ஓட்டு!'' —பொன்மேனி வரப்பில் நின்று அதட்டினுள்.

ஏனேதானே என்று ஏரோட்டியவர்கள் எல்லாம் திரும்பிப் பார்த்து- 'இந்த ராட்சசி எப்போ வந்துது?' என முணுமுணுத்தபடி பயத்தோடு செயல்படலாயினர்.

''காலேயிலிருந்து — இந்தத் தலேயிலேயே குழப்பிக்கிட்டிருக்கிங்களே! மூணு சால் வர, இவ்வளவு நேரமா? இதை ஓட்டிட்டு - அந்தக் கோணேத் துண்டையும் உழுதுட்டு வாங்க!'' என இரைந்தபடியே, அங்கிருந்து குரங்கன்மேட்டுக் கழனி வெளிப்பக்கம் நடந்தாள், பொன்மேனி.

அண்மையில் பெய்த மழையால், வரப்புக்கள் சிதைந்து - சேறும், சகதியுமாய் இருந்தன. எனவே, ஓர் இடத்தில் அவள் சறுக்கி விழப்போனுள். சமாளித்துக்கொண்டு — புடவையைச் சற்றே தூக்கிப் பிடித்தவாறு எரிச்சலோடு நடந்தாள்.

ஆங்காங்கே ஏரோட்டுவதும், பரம்பு அடிப்பதும், நாற்றெடுப்பதுமாக — வேலேகள் மும்முரப்பட்டுக் கொண்டு இருந்தன.

சில இடங்களில் உழவை நிறுத்தி விட்டு— மனேவியோ, சகோதரியோ, தாயோ கொண்டு வந்த 'எளப்புத் தண்ணி'யைக் குடித்தபடி சாவகாசமாகவும், சுவாரசியமாகவும் பேசிச் சிரித்த காட்சியை-ஆரம்ப காலம் போல், பொன்மேனியால் ரசிக்க முடியவில்லே.

'அனுவசியமாக — இப்படிச் சம்சாரிகளின் வேலேயைக் கெடுக்கிருர்களே' என்கிற ஆற்ருமையோடு, அவள் மேலே நடந்தாள்.

கழனி வெளியைச் சுற்றி வருகையில்- வான வெளியின் அழகுகளேயும், அங்கே மிதக்கும் பறவைகளேயும் இப்போதெல்லாம் பொருட்படுத்தவே தோன்றுவதில்லே!

எதிரே - இள வெயிலுக்குக் குடை பிடித்தபடி வந்த செங்கல்வராயன், ''அப்பன் குத்துக்கல் போல் இருக்க, உனக்கு இந்தத் தலேவிதியாம்மா?'' என்றவாறு ஒதுங்கி வழி விட்டார்.

நாலு கழனிக்கு அப்பால் நின்ற வெங்கடசுப்பு, ''கதிரேசன் - பொண்டாட்டியையும் சுகப்பட விடல்லே, பொண்ணேயும் சுகப்பட விடல்லே!'' என அவருக்குப் பதில் சொல்லி— பொன்மேனிக்காக அனுதாபம் தெரிவித்தார்.

மோட்டார் ஷெட் வாசலிலிருந்து எட்டிப் பார்த்த சம்பத்து, ஏக்கமும் வருத்தமுமாகப் பெருமூச்சு விட்டான்.

'இவளுடைய அழகும், இளமையும் இப்படியே வெயிலிலும் காத்திலும் மழையிலும் அலஞ்சி அலஞ்சிப் பாழாக வேண்டியதுதானு?'

அவனிடம், அவள் பிடித்தமாகவே பேசிக்கொண்டிருந்தாள். ஆனுல், அவன் தன் எண்ணத்தைப் புலப்படுத்தியதிலிருந்து மிகவும் ஒதுங்கி விட்டாள்!

படுக்கையில் கிடக்கும் அவளுடைய அம்மாகூட, ''சம்பத்துக்கு என்னம்மா குறைச்சல்? அவனே மணந்துகிட்டா நீ சந்தோஷமா இருக்கலாம்! நாலு காணி பூமியானலும், நல்லாப் பாடுபட்டு அம்சமா இருக்கிறவன். சுறுசுறுப்பான பாட்டாளி. நம்ம நிலம் போல, இன்னும் நாலு மடங்கு இருந்தாக்கூட அவன் அனுயாசமா கம்பத்தம் செய்வான். என்னைப்போல, நீ காலம் பூரா சிரமப்பட வேண்டியிருக்காது!'' என்று எவ்வளவோ சொன்னாள்.

காணியாவது கம்பத்தமாவது?.. பொன்மேனி, இங்கிருந்து வெகு தூரம் போயாக வேண்டும்! 'மழை பெய்ய வில்லையே' என ஏங்காத தூரத்துக்கு— 'புரட்டாசிக்குள் உழுது நடவு போட்டா கணுமே' என்று கவலைப்படத் தேவையில்லாத தூரத்துக்கு - இன்னும், 'அதிகமாய் மழை பெய்யுதே' என்றே, 'இப்படிக் காஞ்சித் தொலையுதே' என்றே அவதிப்பட வேண்டாத தூரத்துக்கு— 'களையெடுக்கப் போதுமான கூலியாள் வராமெ தவக்கம் ஆவுதே..காலத்தில் களையெடுத்து மருந்து போட்டாத்தானே ஏதோ நாலு மணி கிடைக்கிறேன் என்கிறது?' என்றும், 'அறுவடை செய்ய இவ்வளவு கூலி கேட்கிறுங்களே! கட்டுக்களை இத்தனை நிதானமாய்ச் சுமந்து வராங்களே! இந்தச் சோமாறி ஆளுங்களை வச்சி, 'ஒப்பிடி' பண்ணி மாளல்லியே! வைக்கோல் போர் போட்டா கல்லையே! 'மரக்கா'ங்கிற பேர்லே — தகர டின்னுங்களைத் தூக்கி வந்து, அநியாய விலைக்குத் தானியங்களை அள்ளிக்கிட்டுப் போருங்களே!' என்றும் அல்லல்பட அவசியமில்லாத தூரத்துக்கு....

அம்மா படுத்த படுக்கையான இந்த இரண்டு வருடங்களில், அவள் படுகிற பாடுகள் போதும். ''பொன்மேனி— அவள் தாயாரை மிஞ்சிட்டா. ஆம்பிளே கூட, இம்மாம் ஊக்கமாய் விவசாயம்



செய்யல்லே!'' என்று ஊரே பாராட்டு கையில், ஏனோ அவளால் உற்சாகம் கொள்ள முடியவில்லை.


கதிரேசனை அவள் மனத்துள் பழித்தாள். கையால் ஆகாத அப்பா! சோம்பேறி அப்பா! சூதாடுகிற அப்பா! ஊர் சுற்றுகிற அப்பா! குடிக்கிற அப்பா! எப்போதும் - குளிர் கால நாயாய் அலைகிற அப்பா!

அம்மா இல்லையென்றால், அந்தக் குடும்பமே இருந்திருக்காது. ஆணாக உழைத்தாள். பொன்மேனியைக் கல்லூரிக்கு அனுப்பினாள். இவளுடைய துரதிர்ஷ்டம்—இவள் பி. எஸ்ஸியில் சேர்ந்தபோது, அம்மா பாரிச வாயுவால் பாதிக்கப்பட்டாள்.

அப்போதும் கதிரேசனுக்குக் கருணையோ, சுரணையோ பிறக்கவில்லை. மகளின் உழைப்பால், மானமில்லாமல் பசியாறி இன்னும் விளையாடியபடியே தான் இருக்கிறார், அவர்.

-பொன்மேனி, சலிப்போடு விரைந்து குரங்கன்மேட்டை அடைந்தாள்.

அஞ்செழுத்து - கஞ்சி கொண்டு வந்த தன் மனைவியோடு அரட்டை அடித்துக் கொண்டிருந்தான். பொன்மேனியின் பார்வை, தங்கள் கழனியின்மேல் மோதியது. ஆத்திரத்துடன், ''அறிவு கெட்ட எருமை..''என்று அதட்டினாள், அவள்.



கணவன்: என்னது இது.. ஹெல்மெட்டுக்குள்ளே 'கீச் கீச்'னு சப்தம் வருது..?

மனைவி: பரண் மேலே ஹெல்மெட்டை வெக்காதீங்கன்னேன்... கேட்டீங்களா? குருவி கூடு கட்டியிருக்கும்!

—நளினி பாலன்

அவன் - எழுந்து, பரபரப்பு அடைந்தான். ''ஏய், கொஞ்சம் வெத்திலை-பொயலை குடு. நான் போவணும்..'' என்று கையேந்தினான்.

அவன் மனைவி, ''உக்கும்..எங்கிட்ட ஏது?'' என முறுக்கிக் கொண்டு, பாதி வெற்றிலையும்,சிறு கிள்ளுப்புகையிலையும், ஒரு துண்டுப் பாக்கும், துளிச் சுண்ணாம்பும் கொடுத்தாள்.

''திராபைங்க.. இவ்வளவு நேரம் சும்மாதானே பேசிக்கிட்டு இருந்தீங்க? வேலைக்குப் போகிறப்பதான் வெத்திலை கேக்கிறது; பாக்குக் கேக்கிறது. தூ.. வேலையில் அக்கறை கிடையாது; உப்பைத் தின்கிறோமே, சத்தியமாய்ப் பாடு படணுமேங்கிற நன்றி கிடையாது. காலையிலே இருந்து—ரெண்டு வரப்பு 'அண்டை' ஆகல்லே!..''

அஞ்செழுத்து - கையிலிருந்த பொருள்களை எல்லாம் அவசரமாக வாயில் திணித்துக்கொண்டு மண்வெட்டியோடு கழனியில் இறங்கினான்.

ஆவணியில் நட்ட 'பொன்னி'க்குக் களை எடுக்க—இருபது பேரை வரச் சொல்லியிருந்ததால், பொன்மேனியின் 'சுற்றுலா' மதகடிக் கழனிகள் வரை நீண்டது.

தன் திருமணம் இவ்வளவு விரைவில் வாய்க்கும் என்று—பொன்மேனி கனவு கூடக் காணவில்லை! ஒரு தரகரால்—ஒரே வாரத்தில் இது ஏற்பாடாகி இருக்கிறது! அவள்விரும்பியபடியே—படித்த, சென்னையில் பெரிய உத்தியோகம் பார்க்கிற மாப்பிள்ளை!

பெண் பார்க்க வந்த சமயம், ''பொன்மேனியை, எனக்கு ரொம்பவும் பிடிக்குது!'' என்று அவன் அங்கேயே, அப்போதே, அனைவர் முன்னாலே சொல்லி விட்டதை — நினைத்து நினைத்துப் பூரித்தாள் அவள்.

அடுத்த தெருவிலிருந்து தற்செயலாய் இருவர் வரவே — அவர்களுக்குச் சிற்றுண்டி தரலாம் என்று வாழையிலை நறுக்கி வரப் போனபோது, மணவாளன் சிகரெட் புகைத்துக் கொண்டிருந்தான். 'இதெல்லாம் கூடாதுன்னு தடுக்கணும்' என நினைத்தவள், சற்றுத் தயங்கினாள்.

''என்னம்மா?....'' என அவன் செல்லமாக வினவினான்.

ஆனந்தத்தால் அவள் சிலிர்த்துப் போனாள். ''ஒண்ணுமில்லே.. எங்க அம்மாவை, நம்ம வீட்டிலே வச்சுக்க நீங்க அனுமதிக்கணும்....''

''அதுக்கென்ன? தாராளமாய்—உன் அப்பாவை வேண்ணாலும் அழைச்சுக்க லாமே!'' என்ருன் மணவாளன்.

''வேணும்.... வேணும்.... அவர் இங்கேயே இருந்து பயிரிட்டுச் சாப்பிடட் டும். இல்லேன்ஞ, வாரத்துக்கோ, குத்தகைக்கோ விட்டு — எப்படியோ இருக்கட்டும்!'' என மொழிந்துவிட்டு, வாழை இலேயோடு உள்ளே ஓடி விட்டாள், பொன்மேனி.

திருமணம் கோலாகலமாக நடந்தது..

அன்றே முதலிரவுக்கும் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

மணவாளனின் கை, பொன்மேனியை அன்போடு வளேத்திருந்தது. அவன் இங்கிதமாக அவள் கன்னத்தில் இதழ் களேப் பதித்தான்.

அவள் எங்....கோ மிதந்தாள்....

''பொன்மேனீ!..தரகர் சொன்னப்ப நான் அவ்வளவு நம்பல்லே.... ஆஞ, ஊரில் விசாரிக்கையிலே, அவர் விவரிச்சதைவிடவும் உன்னே அதிகம் புகழ்ந்தாங்க! நான் ரொம்ப அதிர்ஷ்ட சாலிதான்!'' என்று பெருமையோடு பேசிஞன் மணவாளன்.

''உண்மையில் நான்தான் அதிர்ஷ்ட சாலி!'' என மகிழ்ச்சியால் நெகிழ்ந் தாள் பொன்மேனி.


''என் ஃபிரெண்டு ஒருத்தனுக்கு —நாலே ஏக்கர். செலவெல்லாம் போக, வருஷத்தில் ஏழெட்டாயிரம் மிச்சம் பிடிச்சிடருன்! நமக்கு இருக்கிறதோ நஞ்சையும், புஞ்சையுமாய் நாப்பது காணிக்கும்மேலே; அதுவும் ஒரே இடத் திலே—ஒரு எஸ்டேட் மாதிரி....''

அவளுக்கு அந்த விஷயம் ஒன்றும் சுவாரசியமாக இல்லே....

''என் அப்பாவும் — உன் அப்பா போலத்தான். அம்மாவுக்கோ, வகை போதாது. இவ்வளவு பூமி இருந்தும் நான் சம்பாதிக்கிறதுகூட கிராமத்துக்கே தான் போகுது!''

அவள், அவன் சொற்களேச் செவி மடுத்ததாகவே தெரியவில்லே; ஆசை யோடு அவன் மடியில் சாய்ந்து கொண்டாள்.

''எதிர்பாராத விதமாய் எனக்கு நல்ல வேலே கிடைச்சுடுத்து.கை நிறையச் சம்பளம் என்கிறதோடு, அதிகாரம் நிறைஞ்ச வேலே. அதனுலே, வேலேயை விட்டுட்டு விவசாயத்துக்குப் போக மனசில்லே!'' என்ருன் மணவாளன்.



கண்டது இரண்டு!

எடுப்பான அழகான மூக்கு!
வடிவமைப்பான மேலாடை!
எந்தக் கலேஞன் படைத்தான்
இந்த எழில் வடிவை!
அதை அகற்றுகிறேன்!
உள்ளே—
அழகான, செழிப்பான
நன்கு அமைந்து
உருண்டு திரண்டு
கண்ணேக் கவரும்
இரண்டு
நிலக்கடலேப் பருப்புகள்!

—சிவ. இருட்டிணன்.

''அப்படின்ஞ அதை விட்டுடப் போறீங்களா?'' என்று பதறியபடி எழுந்தாள் பொன்மேனி.

''நான் என்ன முட்டாளா? அது தான் — புத்திசாலித்தனமாய், விவ சாயம் செய்றதிலே கெட்டிக்காரியான உன்னே செலக்ட் பண்ணி இருக்கேனே!'' என்ருன் அவன் பூரிப்பாக.

''நீங்க என்ன சொல்றீங்க?'' என்று அதிர்ச்சியுடன் கேட்டாள் அவள்.

''என் ஆசைக் கிளியைப் பாக்க, சனிக்கிழமை சாய்ங்காலம் நான் மெட்ரு சிலே இருந்து ஓடி வருவேன்; ஞாயித்திக் கிழமை பூரா கிராமத்திலேயே இருப் பேன்!'' என்றவாறு மணவாளன் அவளே அணேத்தபோது, பொன்மேனியின் கற்பனேக் கோட்டை இடிந்து நொறுங்கிற்று.

சற்று முன் அவளுள் ஒரு சிலிர்ப்பை யும், இனிமையையும் ஏற்படுத்தி — அவளே எங்கோ மிதக்கவிட்ட அவன் முத்தம், இப்போது சத்திழந்து போன துடன், ஒரு கசப்பையும் உண்டு பண்ணு கிற மாதிரி இருந்தது.



சிக்கனம்

''சிக்கனம்....

சிக்கனம்..மனுஷாளுக்கு இங்கிதம் தெரிய வேணும்..., எதுலெ வேணும், எதுலே வேணுங்கிறது...?''

''என்னம்மா.. காலங் காத்தாலெ அப்பாவுக்கு அர்ச்சனையா?''

''வேறென்னடா.... விடிஞ்சதும், விடியாதுமா 'மளிகை சாமான் வாங்கி வந்த பேப்பரல்லாம் பத்ரமா அடுக்கி வச்சையா? அதைச் சுத்தியிருந்த நூலை சிக்குப்படாம பழசாகிப் போன டூத்பிரஷ்லெ சுத்தி வச்சையா?' இதுதானு கேள்வி?''

''நூல் ஏனும்?.... கண்ணுடிலெ கட்டிண்டிருக்கிறது அறுந்து போயிட்டா மறுபடியும் முறுக்கிப் போட்டுக்கிறதுக்கா?''

''என்ன எழவோ? பட்டம் விடுறதுக்குக் கோபு அதை எடுத்துடுவானும்...''

''என்னவோ! பெரிய ஏஜண்ட் உத்யோகம் பாத்துட்டாராம். அதுவும் ஸ்டேட் பாங்கிலே.. வெளித் திண்ணையிலே நூல் கட்டிய கண்ணுடியை மாட்டிண்டு, அடுத்தாத்து 'ஹிந்து' பேப்பரை வாசிச்சுண்டுருக்கிற அழகைப் பாத்தா என்னோட டிக்னிட்டியே கொறஞ்சது போலத் தோன்றது.''

''என்ன பண்ணித் தொலைக்கிறது, அவரை நாம மாத்த முடியுமா?''

''அம்மா.... ஓடியா.... அப்பா மூர்ச்சையா விழுந்துட்டா!''

—கடைக்குட்டி கோபுவின் குரல்.

கூட்டம் கூடியது. முடிவு?

''இப்படியெல்லாம் மிச்சப்படுத்தி மனுஷா என்னத்தைக் கொண்டு போனு?''

ஊராரது விமர்சனம் கூடுதலாகவே இருந்தது.

மூன்றும் நாள்.. யாரோ ஒரு புது உருவம். தந்தையைத் தேடி வந்தவர் மூத்த மகன் சங்கரிடந்தான் உரையாட முடிந்தது. தொடக்கமே அவலமாக இருக்கும் என்று எதிர் பார்க்கவில்லை. சங்கர் சொல்லிக் கொண்டே



இடையே இருவர் கண்களும் கண்ணீரால் உரையாடிக் கொண்டன.

''நோயைக் குணப்படுத்திக் கொள்வதில்கூடவா சிக்கனம்? ஸிம்டம்ஸ் இருந்தது. ஹார்ட் வீக் என்று டாக்டர் சொல்லி வைத்து விட்டால் செலவு செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விடுமாம்.... அப்படி என்ன வாரிக் கொண்டு போய் விட்டார்? நோயை மிகைப்படுத்திக் கூறுவது டாக்டர்களின் புது டெக்னிக்காம். லேசானதை அதிகமாக்கிப் பணத்தைக் கறந்து பிழைப்பது அவர்கள் இயல்பாம். அவர்கள் பாவச் சுமைக்குக் கருவியாக இருக்கக் கூடாதாம்....''

''எப்படியோ? நமக்குக் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்.''

வழக்கமாகக் கூறப்படும் ஆறுதல் மொழிகள் வந்தவர் வாயிலிருந்தும் தப்பி விடவில்லை.

தொடக்கத்திலேயே கேட்டிருக்க வேண்டிய ஒன்றை மறந்துவிட்ட குறை சங்கர் நினைவிற்கு வந்தது.

''எக்ஸ்க்யூஸ் மீ சார்..டு லேட்.... முன்னுலே கேட்டிருக்கணும், நீங்க யாருன்னு தெரியலையே....?''

''நானே சொல்லிருக்கணும்..கல்கத்தாவை ஒட்டிய ஒரு கிராமத்துலெ சுவாமி பவானந்தர் பேருலெ ஆஸ்ரமம் ஒன்று நடத்திக்கிட்டு வர்றேன்..சுமார் பத்து வருஷமா ஒங்கப்பாவை லெட்டர் மூலமாத் தெரியும். இந்தப் பக்கம் வர்ற சந்தர்ப்பம் இப்போத்தான் கெடச்சுது. அவரு மனசுப்படியே அவரை நான் தெரிஞ்சுக்கக் கூடாதுங்கிறது கடவுள் சித்தம் போலேருக்கு.''

''ஒண்ணும் பிடிபடலையே?''


''பிடிபடாதுதான். ஒரு பதினைந்த

டேட்டா இது. அவரைப் புரிஞ்சுக்க இது போதும்.''

கடிதத்தின் மீது சங்கரின் கண்கள் பதிந்தன.

'ஸ்ரீமான் சுவாமி பவானந்தர் ஆஸ்ரம நிர்வாகி அவர்களுக்கு பஞ்சாட்சரம் அநேக நமஸ்காரம் கூறி எழுதியது. பெரிய கடிதம் எழுதுவதற்கு மிகவும் சஞ்சலப் படுகிறேன். அனாதை ஆஸ்ரமங்கள் என்றாலே எனக்குத் தனி அக்கறை உண்டு. நான் அது மாதிரி ஓர் ஆஸ்ரமத்திலே படித்து முன்னுக்கு வந்தவன்தான். பல சிநேகிதர்களிடம் தானம் வாங்கி உங்களுக்கு சமயா சமயங்களில் அனுப்பி வருவதால் எழுதுவது குற்றமில்லை. உங்கள் ஸ்தாபனத்திற்குப் பணம் தருகிறவர்கள் எல்லாம் நிறைய சம்பாத்யம் உள்ளதால் தருகிறார்கள் என்று நினைக்க வேண்டாம். குடும்பப் பொதுச் செலவுக்குரிய பணத்திலே கை வைக்காமல், தமக்கு உரிய தனித் தேவைகளைக் குறைத்து, அந்த வகையில் மீதப்படுவதை உதவினால், அதுவே உண்மையான தர்மம். நான் வாங்கியனுப்பிய தொகை எல்லாம் அப்படிப்பட்டவையே. என் சிநேகிதர் ஒருவர் வருஷம் முழுவதும் நியூஸ் பேப்பர் வாங்காமல் இரவலாகவும் லைப்ரரிகளிலேயும் படித்துக் கொண்டு மிச்சப்படுத்தி அறுபது ரூபாய் சேர்த்தார். அத்தோடு மளிகை சாமான் வாங்கி வந்த பழைய பேப்பர்களைச் சேர்த்து வைத்து ஐந்து ரூபாய்க்குப் போட்டார். ஆக மொத்தம் அறுபத்தைந்து ரூபாய் தந்ததை டிராப்ட் மூலம் ஒரு தடவை அனுப்பி வைத்தேன். இன்னொரு முறை முப்பது ரூபாய் மணியார்டர் செய்திருந்தேன். நண்பர் ஒருவர் போட்டிருந்த கண்ணாடி பிரேமின் காதுப் பகுதி உடைந்து போய்விட்டது. பிரேமிற்கு முப்பது ரூபாய் ஆகும் எனத் தெரிந்தது. நூலையே பிரேமாகக் கட்டிக் கொண்டு அதற்குரிய தொகை முப்பது ரூபாயைத் தந்து விட்டார். இப்படிப் பல விஷயங்கள். தர்மம் செய்தவர்களின் பெயர்களைத் திரும்பத் திரும்பக் கேட்டு எழுதாதீர்கள். பெயர் தெரியக் கூடாது என்பதற்குத்தானே இங்குள்ள ஸ்தாபனங்களை விட்டு விட்டுத் தூரமாக உள்ள உங்கள் ஸ்தாபனத்துக்கு உதவி செய்கிறார்கள்....'

இதற்குமேல் படிக்க முடியாதபடி கண்ணீர் மறைத்துவிட்டது.





திசைப் பெண் புலம்பும் மாலை

சீதை தன்னுடைய மாளிகையில் இராமன் நினைவினால் துன்பத்தில் மூழ்கி இரவைக் கழிக்க, இராமனும் சீதையின் நினைவினால் காம வேதனைக்காளாகி இரவைக் கழிக்க, இரவு முடிய சந்திரன் அஸ்தமிக்கிறது. சூரியன் உதயமாகிறான். இவ்விரண்டையும் கவிஞன் வருணிக்கிறான். சந்திராத்தமன வருணனையும் சூரியோதய வருணனையும் காப்பியத்தில் பல கட்டங்களில் இடம் பெறுகின்றன. இவை நாட்கள் கடந்து செல்ல, இயற்கையாக நிகழும் நிகழ்ச்சிகள்.

இந்த இயற்கை நிகழ்ச்சிகளை ஒரு கவிஞன் திரும்பத் திரும்ப வருணித்துக் கொண்டே போவானேயானால் அது யாருக்கும் அலுப்பையும் சலிப்பையும் உண்டாக்கத்தான் செய்யும். ஆனால் ஒரு கவிஞனின் திறமை இவ்வாறு அலுப்போ சலிப்போ இல்லாமல் வருணிப்பதில் ஒளிர் விடுகிறது. இதனை ஒரு கவிஞனே எப்படிச் சாதிக்கிறான்? இந்த இயற்கை நிகழ்ச்சிகளை கதையோடு ஒத்துப் போகும்படி வருணிப்பதாலும், கதாபாத்திரங்களின் இன்ப துன்பங்களை இந்த இயற்கை நிகழ்ச்சிகளின் மேல் ஏற்றிப் பாடுவதாலும், கதையின் சூழ்நிலைக்கேற்ப இந்த இயற்கை நிகழ்ச்சிகளைக் கற்பனையோடு விவரிப்பதாலும் இதனைச் சாதிக்கிறான். இத்தகைய சாதனைக்குக் கம்பன் காப்பியத்தில் கிடைக்கும் சான்றுகள் எண்ணிலடங்காதவை. இதே திறமையுடனேயே இப்பொழுது நிகழும் சந்திராத்தமனத்தையும் சூரியோதயத்தையும் கவிஞன் வருணிக்கிறான்.

இரவை ஓர் அரசனாகவும், திங்களை அந்த அரசனுடைய வெண்கொற்றக் குடையாகவும், இரவு கழிய சந்திரன் மறைவதை மேற்குத் திசையான மங்கை யொருத்தியுடைய ஒளி பொருந்தியதும் நெற்றியில் அணிந்ததுமான சுட்டியானது கெட்டொழிந்ததாகவும் கூறுவான். இதில் என்ன சிறப்பு இருக்கிறது என்று கேட்க முடியும். அற்புதமான தற்குறிப்பேற்றவணியாக, இதைக் கூறும் கம்பனின் பாட்டு அமைந்து விடுகிறது.

> 'கழிந்த கங்குல் அரசன் கதிர்க்குடை
> விழுந்தது என்னவும், மேல்
> திசையாள் சுடர்க்
> கொழுந்து சேர் நுதற் கோது அறு
> சுட்டி போய்
> அழிந்தது என்னவும்; ஆழ்ந்தது-
> திங்களே.'
>
> (மிதிலைக் காட்சிப் படலம்-148.)

கவிஞன் கூறும் நிகழ்ச்சி, 'ஆழ்ந்தது திங்களே' என்பதுதான். அதாவது 'சந்திரன் மேற்குத் திசையில் மூழ்கியது' என்பதாகும். ஆனால் இந்த நிகழ்ச்சிக்கு எத்தனை அலங்காரங்களைக் கவிஞன் செய்து விடுகிறான். இரவை அரசனாகக் கூறும் கவிஞன் அந்த இரவின் கழிவை அரசனுடைய அழிவாகக் கொள்கிறான். இரவு கழிவதும் திங்கள் மறைவதும் ஒருசேர நடக்கும் நிகழ்ச்சிகள். திங்களை வெண்கொற்றக் குடையாகக் கொள்ளும்போது அதன் மறைவை அந்த வெண்கொற்றக்

நீதிபதி மு.மு. இஸ்மாயில்

குடையின் வீழ்ச்சியாகக் கவிஞன் கொள்ளுகிறான்.

ஆக அரசனுடைய அழிவு, வெண் கொற்றக் குடையின் வீழ்ச்சி ஆகிய இரண்டும் துயர நிகழ்ச்சிகள். இந்த துயர நிகழ்ச்சியின் அடிப்படையில் மேல் திசையை ஒரு பெண்ணாகக் கொண்டு மேற்றிசையில் திங்கள் முழுகுவதை அந்தப் பெண்ணின் நெற்றிச் சுட்டி அழிந்து போனதாக அதாவது கழற்றி எறியப் பட்டதாகக் கூறுவான். திலகமிடாமை யும், நெற்றிச் சுட்டி அணியாமையும் கணவனையிழந்த விதவைக்கு உரியவை. இரவை அரசனாகக் கொண்டது போலவே மேற்குத் திசையை ஒரு பெண்ணாக அதாவது ஓர் அரசியாகக் கவிஞன் கொள்கிறான். 'கதிர்க்குடை' என்ற சொல் ஒளி பொருந்திய வெண்கொற்றக் குடை என்ற பொருளைக் குறிக்கும். மேற்குத் திசையை ஒரு பெண்ணாகக் கொள்ளும் போது 'மேற்றிசையாள்' என்றே கவிஞன் கூறி விடுகிறான். மேற்றிசையைப் பெண்ணாக உருவகிப்பது கம்பன் முதலாகச் செய்துவிட்ட சாதனை என்று சொல்ல முடியாது. நம்மாழ்வார் திருவிருத்தம் 35-வது பாசுரத்தில்,

'பால்வாய்ப் பிறைப்பிள்ளை, ஒக்கலைக்
கொண்டு பகலிழந்த
மேல்பால் திசைப் பெண் புலம்புறு
மாலை.'

என்று காணப்படுகிறது. இந்த வரிகளுக்கு —அமிர்த கிரணத்தை வெளியுமிழ்கிற தன்மையுடைய இளம் பிறைச் சந்திரனாகிய பால் மாறாத வாயையுடைய (தனது) இளங் குழந்தையை, தனது இடைப்புறத்திலே அதாவது ஒரு பக்கத்திலே வைத்துக் கொண்டு, சூரியனாகிய கணவனை யிழந்த மேற்றிசையாகிய பெண் வருந்தி அழும் மாலைப் பொழுது—என்று வைணவப் பெரியார்கள் உரை கூறுவார்கள். இதில் நோக்கத்தக்க தென்னவென்றால் மேற்கு திசையை ஒரு பெண்ணாக உருவகித்திருப்பதே.

இந்த சந்திராத்தமனத்தை ஒரு துயரச் சூழ்நிலையில் கம்பன் ஏன் வருணிக்கிறான் என்ற கேள்வி எழத்தான் செய்யும். அதற்கு ஓரிரு காரணங்களை ஊகிக்க முடியும். சீதையும் இராமனும் காமத்தினாலுண்டான வேதனைக் கடலில் மூழ்கி தத்தளித்துக் கொண்டுதான் இரவைக் கழிக்கிறார்கள். அந்த வேதனையைக் குறிக்கும் வகையில் இந்தத் துயரச் சூழ்நிலையில் சந்திராத்தமனத்தைக் கவிஞன் வருணிக்கிறான் என்று ஒரு பொருத்தத்தைக் காண முடியும். அப்படியிருந்தும்கூட ஓர் அரசன் அழிவதாகவும் அவன் வெண் கொற்றக் குடை வீழ்வதாகவும் பெண்ணொருத்தி நெற்றிச்சுட்டியை இழப்பதாகவும் கூற வேண்டியது தேவையா? என்ற கேள்வியும் எழக்கூடும். இதற்கும் கூட காரணத்தைக் காட்ட முடியும். இராமனைக் கண்ணிற்கண்டு அறிந்து உயிரிழக்கும் வாய்ப்பாவது கிட்டுமோ என்று சீதை வருந்தியதைக் கண்டோம். தான் காதல் கொண்டுவிட்ட இராமனைப்பற்றி நினைத்துக் கொண்டிருக்கும்போது உயிரிழக்கும் எண்ணம் சீதைக்கு ஏன் வருகிறது என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா? சீதைக்கு அந்த எண்ணம் வருமானால் அதற்குப் பொருத்தமாகவே கவிஞன் சந்திராத்தமனத்தைத் துயரச் சூழ்நிலையில் வருணிக்கிறான் என்று கொள்ள முடியும். மேலும், பின்னால் வரப்போகிற இரு நிகழ்ச்சிகளை முன்கூட்டியே அறிவிக்கிறவகையில் கவிஞன் துயரச் சூழ்நிலையைக் குறிப்பிடுகிறான் என்று கொள்ளவும் முடியும். பின்னால் வரப்போகிற ஒரு நிகழ்ச்சியாவது, இராமனுடைய பிரிவினால் தசரதன் இறக்க தாய்மார்கள் மாங்கல்யத்தை இழப்பது. இரண்டாவது நிகழ்ச்சி, கானகத்திலே இராவணன் சீதையை எடுத்துச் செல்ல அந்தப் பிரிவினால் சீதைக்கும் இராமனுக்கும் உண்டான துன்பங்கள். இவ்வாறு பின்னால் வரக்கூடிய கதை நிகழ்ச்சிகளை முன்னதாகவே காப்பியாசிரியன் குறிப்பாக உணர்த்துவது புதிதல்ல.

அடுத்து இப் பாட்டிலிருக்கும் நயம் 'மேல் திசையாள் சுடர்க் கொழுந்து சேர்நுதற் கோது அறுசுட்டி போய் அழிந்தது என்னவும்' என்ற சொற்றொடரின் அமைப்பாகும். 'கதிர்க்குடை' என்பதும் 'சுட்டி' என்பதும் சந்திரனையே குறிக்கின்றன. குடை என்ற சொல்லோடு கதிர் என்ற சொல் இடம் பெற்றிருக்கும் போது அந்தக் குடையினுடைய ஒளி அதாவது சந்திரனுடைய பிரகாசம் வெளிப்படுகிறது. கதிர் என்ற சொல்லுக்குக் கிரணம், ஒளி என்று பொருள். இங்கு குடை அரசனுடைய வெண்கொற்றக் குடையைக் குறிப்பதால் கதிர் என்ற சொல், அந்த வெண்கொற்றக் குடையினுடைய ஒளியைக் குறிக்கும். அதே தொனியிலேயே நெற்றிச்சுட்டியும் வருணிக்கப்படுகிறது. 'சுட்டி' என்ற சொல்லே குழந்தைகளும் மகளிரும் அணிந்து கொள்ளும் நெற்றி அணியையும், நெற்றிப் பட்டத்தையும் குறிக்கும் என்றாலும் ஐயத்துக்கிடமின்றி 'நுதல்' என்ற சொல்லையும் கவிஞன் ஆண்டுவிடுகிறான்.

மஞ்சள் மகிமை

அந்த சிவப்பு நிற டெலிபோனிலிருந்து என் காதில் செந்தமிழ் பாய்ந்தது.

பெண் குரல்.

''நீங்கள்தானே திரு. ஆனந்த்? பாரிஜாதம் பத்திரிகையின் உதவி ஆசிரியர்?''

''சரியாகச் சொன்னீர்கள் மிஸ்..''

''பூர்ணிமா.''

''பூர்ணிமா! எக்ஸலென்ட். என்னால் உங்களுக்கு உதவ முடியுமா?''

''என்னால் முடியும், உங்களுக்கு உதவ.''

''புரியவில்லை'' என்றேன். ஏதோ நெருடுகிறது.

''நான் தனியாகப் பேசவேண்டும்.''

''தனியாகப் பேசாதீர்கள். யாராவது தவருக நினைப்பார்கள்.''

ரெக்கார்டரிலிருந்து எஜெக்ட் செய்த 'காஸெட்' போல் அவள் அதிர்ந்து சிரித்தாள்.

''குட் ஜோக்! நாமிருவரும் தனியாகப் பேசவேண்டும்; பிரதாப்குமாரும் வீணாவும் எப்படி இறந்தார்கள் என்பதைப் பற்றி..''

நான் உதறிக் கொண்டேன்—உடம்பை.

''பார்டன்.''

டெலிபோன் டயல்டோனை உமிழ்ந்தது. அட கடவுளே! ஒரு சுவாரஸ்யமான ஸ்டிரிப்டீஸின் கடைசிக் காட்சியில் போலீஸ் நுழைந்தது போல்....

*

நான் பாரிஜாதம் பத்திரிகையில் நடிகைகளுக்குப் பிடித்த ஊறுகாய் முதல் அவர்களைப் 'பிடிக்கும்' நபர்கள் வரை சராசரி பத்துப் பக்கங்களை நிரப்பும் ஜர்னலிஸ்ட். நடிகை உஷாதேவியின் பின் பக்கத்தை முதல் பக்கம் ஆக்கிரமிக்கும். அவள் யாரை அணைக்கிருள் என்ற நாற்பத்தெட்டாம் பக்கத்திற்கு விரட்டல். அங்கு அவள் மெழுகுவத்தி ஒன்றை அணைப்பதுபோல் படம். பப்ளிஷர் என் மூளைக்காக ஆயிரம் ரூபாய் கொடுக்கிருர். நான் விசுவாசமாக மஞ்சள் செய்திகளை வெளியிட்டு வரும் ஒரு 'ஜான்டிஸ் ஜர்னலிஸ்ட்.' அரிய வரும் அசரீரி போன்கால் மூலம் அறிய வரும் உண்மைகள். வதந்தி தாகம்.

இப்போது இந்தப் பூர்ணிமா குரல் சொன்ன பிரதாப்குமார் — வீணா மரணம் சமீபத்திய சென்சேஷன். இடையில் நிறைய சமாசாரங்கள். (சிலேடை அல்ல) ஒரு கார் விபத்தில் ஜோடியாக மூச்சை விட்டவர்கள்.

டெலிபோன் அடித்தது. மீண்டும் அவளே. அவள் ஒரு ஹோட்டல் பெயரைச் சொல்லி அங்கு வருமாறு பணித்தாள்.

நான் நாற்பத்தெட்டாம் பக்கம் போகும் என் வாசகன் போல் ஆர்வத்துடன் ஸ்கூட்டரைக் கிளப்பிக் கொண்டு போனேன்.

அவள் அந்த அறையின் அரையிருட்டில் அரை அபரிமிதமாக அசைய அழகாக அமைதியாக அமர்ந்தாள் (எதுகையைக் கவனிக்க)

''என்ன சாப்பிடலாம்?''

''எனக்கு அவல்'' என்றேன்.

சிரித்தாள். ஏதோ ஆர்டர் செய்தாள்.

ஒரு பாண்ட்டும் அதற்கு மேலே புல் ஓவரும் அணிந்து அட்டகாசமாக இருந்தாள். (பாண்ட்டுக்குக் கீழே புல்ஓவர் அணிய முடியாது) அவள் அங்கங்களைப் பற்றி அங்கங்கே விவரிப்பேன். வார்த்தைகளைப் பறிக்கும் அழகு.

சிரித்தாள். உருவத்துக்குப் பொருந்தாத ஓரத்தில் கோரைப் பல், டிராகுலா போல். கஷ்டப்படுத்தியது.

''விஷயத்திற்கு வருவோமா?''

''என்ன விஷயம்?'' என்ருள்.

''வீணாவின் மரணம், வீணை மரணம்'' என்று சொல்லிவிட்டு மேல் பகுதியைப் பார்த்துப் பேச்சிழந்தேன்.

''வீணா! பைத்தியம். சக நடிகனைச்



''தற்கொலேயா?'' என்றேன், ஸீட்டி லிருந்து கொஞ்சம் எகிறி.

''பரபரப்பு அடையாதீர்கள்.''

நான் அவளேக் கூர்மையாகப் பார்த் தேன்.

''மேலே என்ன?''

''மெய்டன் ஃபார்ம்.''

''ஸில்லி. கதையில் மேலே என்ன?'' என்றேன்.

அவள் கோரைப் பல் தெரியச் சிரித்து விட்டு என் கால்களேத் துழாவினுள். அவள் கால்களில் மென்மைக்கும் மேலாக ஒரு தொய்வு.

''விஷயத்தை முதலில் சொல். நீ எப்படி சம்பந்தப்படுகிருய்?''

''இந்த சினிமாக்காரப் பசங்களின் மானத்தை வாங்க முடிவு செய்தேன். என்னே என்ன பாடுபடுத்திஞர்கள். லர் என்ருர்கள், கதாநாயகி ன்ருர்கள். நல்ல டாக்டரிடம் ரீட்மெண்ட் எடுத்துக் கொண்டேன்.''

''பிறகு?'' என்றேன்.

''குணமாகிவிட்டது.''

முகம் சுளித்தேன்.

''ஈஸி'' என்ருள்.

''பிரதாப்குமார் - வீணு காதல் ணுவின் கணவனேச் சுட்டது. கொலே சய்வதாக மிரட்டினுன். டிவோர்ஸ் டைக்கவில்லே. பிரச்னே. அவுட்டோர்

வரும் முன்பே, விபத்து என்று காரில் வைத்து உருட்டிவிட்டான் வீணுவின் கணவன். சுனவான், விஷயம் சாதாரண மாகி விட்டது.''

''இது சாதா ரணமில்லே. பெரிய ரணம். என் பத்திரிகையில் ஸீரியலாக ஸீரியஸாக வரும். இரண்டு இன்க்ரி மென்ட்.''

உள்ளே ஏதோ என்னே எச்சரித்தது.

''உனக்கு எப்படித் தெரியும் இதெல்லாம்?''

''தெரியும்.''

''எப்படி?''

''தனியறையில் விஸ்கியில் ஸயனேட் கலந்து..''

வெட்டினேன். ''தனியறை என்றுல் நீ எப்படி அறிவாய்?''


''தெரியும்'' என்று சொல்லிச் சிரித் தாள். ஓரத்திலிருந்த கோரைப் பல் மின்னியது.

''மிஸ் பூர்ணிமா! எனக்குப் பூ வைக்காதே. ஒன்று நீ சொல்வது பொய். அல்லது நீ வீணுவின் ஆவி.''

''இரண்டாவது சரி. அப்படியே இருங்கள்.''

குனிந்தாள். நெருங்கிஞள். வளேத் தாள். கழுத்தை நெறித்தாள்.

''கையில் வந்தபடி என்னேப் பற்றி


உன்னத வேளைகளில்
உன்னத ஆடைகள்
தம்ஃபேப்®
வண்ண எழில் காஜி சில்க் ஒளிரும் வகைகளிலே ப்ளெய்ன், டைட் மற்றும் ப்ரின்டெட். ஃபாரி பாலியெஸ்டர் சூட்டிங் மற்றும் ஷர்ட்டிங்ஸ் வென்றூலும் ஷேடுகள் மற்றும் பலவித டெக்ஸ்சர்களிலே.
பிற வகைகள்:
க்ரிம்ப்ட் நைலான் புடவைகள்
ஷாமோ சாடின்
டிரஸ் மெட்டீரியல்ஸ்
பாலியெஸ்டர் ஷர்ட்டிங்ஸ்
& சூட்டிங்ஸ்
தம்ஃபேப்®
எப்பொழுதும்
அணிந்திட
நீங்கள்
விழைவது!
RATAN BATRA/DSM/TAM/03-C

கிளினிக்

கே.சுந்தரம்

புதிதாகத் திறக்கப்பட்ட அந்த கிளினிக்கின் வாசலில் நாலைந்து பேர் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

டாக்டர் ராஜேந்திரன் அம்மாவின் காலில் விழுந்து வணங்கினான்.

''உங்க தாத்தா கைராசியுள்ளவர்னு நல்ல பேர் வாங்கினவர்.. நீயும் அது மாதிரி பேர் எடுக்கணும்...'' என்று வாழ்த்திவிட்டு விடைபெற்றாள் அம்மா.

தனக்கு உதவியாக இருந்த கந்தனிடம் மட்டும் ஏதாவது கேஸ் வந்தால் அனுப்பும்படி சொல்லிவிட்டு உள்ளே சென்று விட்டான். செல்வதற்கு முன் வாசலில் நின்ற ஒரு பச்சைப் புடவைக்காரி கண்ணில் பட்டாள்.

''கந்தா.. இன்னும் ஒரு கேஸ்கூட வரல்லே.. அதுக்குள்ளே பிச்சை கேட்க வந்துட்டாப் போலிருக்கு.. முதல்லே போகச் சொல்லு!'' என்று சிடுசிடுத்துவிட்டு பிரிட்டிஷ் மெடிகல் ஜர்னல் ஒன்றைப் புரட்ட ஆரம்பித்தான் ராஜேந்திரன்.

வாசலில் திடீரென்று ஒரு பரபரப்பு! நீண்ட பெரிய அகலக் கரை வேட்டி துண்டுடன் ஒருவர் அவசரமாக உள்ளே நுழைந்தார். அவர் பின்னால் நாலைந்து பேர், நெற்றியில் வழிந்த ரத்தத்துடன் ஒருவனை கைத்தாங்கலாக அழைத்து வந்தார்கள்.

''ஐயா, மருத்துவரே! எங்கள் கட்சியின் இளவலாம், இந்த இளமுருகனை எதிர்க்கட்சித் தொண்டர்கள் சைக்கிள் செயினால் அடித்துக் காயப்படுத்தியிருக்கிறார்கள். 'உயிர் ஊசலாடும் நிலையில் இருக்கிறது' என்று இப்பொழுதுதான் ஜனாதிபதிக்குத் தந்தி கொடுத்துவிட்டு வந்திருக்கிறோம். புகைப்படங்களும் எடுக்க வேண்டும். ஆகவே அதற்கேற்றவாறு பெரிய கட்டு ஒன்றைப் போடுங்கள் என்ற கூறவே நான் நேரில் வந்தேன்..''

ராஜேந்திரன் விழித்தான்.

''ஓ! நான் என்னை அறிமுகப்படுத்திக் கொள்ளவில்லையா.. நான்தான் இந்தத் தொகுதி எம். எல். ஏ.,''



அடிபட்டவனைச் சோதித்துப் பார்த்தான் ராஜேந்திரன். ஒரு சிறு கல் பட்டிருக்கும் போலிருக்கிறது. சின்ன பிளாஸ்திரி ஒன்றை நெற்றியில் போட்டு விட்டான்.

''என்னங்க இது... பெரிய கட்டா போடுங்க.... போட்டோ எடுக்க ணும்ணு...''

ராஜேந்திரனுக்கு வந்த ஆத்திரத்தில் தான் புதிதாக வாங்கி வைத்திருந்த பாண்டேஜ் துணி ரோலை அவன் தலையைச் சுற்றித் தலைப்பாகை போல கட்டி விட்டான்.

''ஆமா! இந்தத் தொகுதியிலே, எனக்குத் தெரியாம எப்படி ஒரு திறப்பு விழா நடந்தது?''

''ஐயா.. என்னுடைய கிளினிக்கை எங்க அம்மாதான் திறந்து வைச்சாங்க!''

''ஓ! தாய்க்குலமா! நான் தாய்க்குலத்தை வழிபடுகிறவன்... வாழ்க... நான் வருகிறேன்... அடிக்கடி இது மாதிரி வந்து போவேன். கவனித்துக் கொள்ளுங்கள் டாக்டர்!...''— பீஸ் கொடுக்காமல் போகும்போது 'பென்' டார்ச்சை வேறு தன் பையில் போட்டுக் கொண்டு போய்விட்டார்!

வாசலில் எட்டிப் பார்த்தான்! பிளாட்பாரத்தில் அந்தப் பச்சைப் புடவைக்காரி இன்னும் உட்கார்ந்து கொண்டிருந்தாள். அவள் பக்கத்தில் அரை நிக்கருடன் சில பையன்கள் மூக்கை உறிஞ்சிய வண்ணம் சுவாரசியமாக அவனையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவனுக்கு எரிச்சலாக இருந்தது. 'சே! என்ன ஜனங்களோ! என்ன மூஞ்சிகளோ! முதல் கேஸே போணியாகலே.' என்று அலுத்துக் கொண்டு இருக்கும்போது யாரோ ஒருவர் ஏறி வருவது தெரிந்தது.

''ஐ ஆம் வாசுதேவன்.. இங்கேதான் பக்கத்துலே இருக்கேன். இன்னிக்குத் தான் கிளினிக் ஓபன் பண்ணியிருக்காப் பலே இருக்கு...''

''ஆமாம்... உங்களுக்கு என்ன உடம்பு?''

''நோ.. நோ.. என் உடம்புக்கு ஒண்ணுமில்லே.... நான்....! இந்த ஏரியாவிலே யார் புதுசா வந்தாலும் என்னைக் கண்டுப்பாங்க..... இதுக்கு முன்னாடி இங்கே இருந்த டாக்டர்கூட தனக்கு வர்ற சாம்ப்பிள் மருந்தை யெல்லாம் என் விட்டுக்கு அனுப்பிடறது வழக்கம். பக்கத்திலே இருக்கிற தியேட்டர்லே புதுப் படம் ரிலீசானு முதல் ஷோவுக்கே டிக்கெட் வந்துடும்.. எனக்கு பிளட்பிரஷர் உண்டு. எங்கப்பா டயபடீஸ் பேஷண்ட். அம்மா ஆஸ்துமா... அடிக்கடி கிளினிக் வருவோம்...பார்த்து கவனிச்சுக்குங்க...

''அடடே, எம்டோபா டாப் லெட்ஸா.... இது மார்க்கெட்டிலே கிடைக்கவே மாட்டேங்குது...'' என்றபடியே மேஜை மேல் இருந்த சாம்பிள்களை பாக்கெட்டில் திணித்துக் கொண்டு கிளம்பி விட்டார்.

ராஜேந்திரனுக்கு வந்த ஆத்திரத்திற்கு அளவே இல்லை.

''கந்தா... கேஸ் வந்தது போதும்... உடனே கதவை எல்லாம் சாத்து...''

பூட்டை இழுத்து சரிபார்த்த ராஜேந்திரன் கிளம்பும்போது ''ஐயா'' என்ற குரல் கேட்டது! திரும்பிப் பார்த்தான்!

பச்சைப் புடவைக்காரி!

''ஏம்மா இன்னும் இங்கேயே நின்னுக்கிட்டு இருக்கீங்க! நிக்காதே, தள்ளிப் போன்னு எத்தனை தடவை சொல்றது?'' என்று எரிந்து விழுந்தான்.

''ஐயா மன்னிச்சுடுங்க... நான் பக்கத்திலே கோட்டூர்புரம் குப்பத்துலே இருக்கிறவ... ரெண்டு நாளா இந்தப் பாழாப் போன நெஞ்சு வலி வந்து உசிரை வாங்குது..... ஐயாகிட்டே காட்டி மருந்து வாங்கலாம்னுதான் வந்தேன். பெரிய பெரிய மனுஷாளெல்லாம் வந்துக்கிட்டிருந்தாங்க. நாம உள்ளே வரக்கூடாதுன்னுதான் ஓரமா வெளியே நின்னேன்'' என்றாள்.

ராஜேந்திரனுக்கு அவளைப் பார்க்கவே வெட்கமாக இருந்தது.

அவளை ஸ்டூலில் அமரச் சொல்லி 'கம்ப்ளீட் செக்-அப்' பண்ணிவிட்டு, பிரிஸ்கிருப்ஷன் எழுதினான்.

பிரிஸ்கிருப்ஷனைக் கையில் வாங்கிக் கொண்ட அவள், கசங்கிப் போயிருந்த ஒரு ஐந்து ரூபாய் நோட்டை எடுத்து, ''ஐயா இதை வச்சுக்குங்க..''— டேபிளின் மீது வைத்தாள்.

இரண்டு ரூபாய்கள் மட்டும் எடுத்துக் கொண்டு மீதி மூன்று ரூபாயை அவளிடம் நீட்டினான்.

''பரவாயில்லே! அஞ்சு ரூவாவையுமே வெச்சுக்குங்க சாமி! பாவம்! இன்னிக்குத்தான் திறந்திருக்கீங்க! எனக்கு கை ராசி உண்டு. நல்ல மனசோட கொடுக்கறேன்..சாமி புண்ணியத்திலே இந்த இடத்திலே நல்ல பேர் எடுப்பீங்க... போய் வரேன் சாமி!''

ஒரு சிலிர்ப்புடன் அந்த அழுக்கு நோட்டை கண்களில் ஒற்றிக் கொண்டான் ராஜேந்திரன்.



அந்தமான் காதலி

				100-க்கு
டைரக்ஷன்	:	வி. சீனிவாசன்	..	50
நடிப்பு	:	சிவாஜி 70 சுஜாதா 70 மனோரமா 60 கவிதா 20	..	55
கதை	:	ஏ. எஸ். பிரகாசம்	..	50
வசனம்	:	ஏ. எஸ். பிரகாசம்	..	35
காமிரா	:	ஆர். சம்பத்	..	60
எடிட்டிங்	:	வி. பி. கிருஷ்ணன்	..	50
இசை	:	எம். எஸ். விஸ்வநாதன்	..	55
தயாரிப்பு	:	வி. ராமசாமி	..	55
வண்ணம்	:	ஜெமினி கலர் லாபரேட்டரி	..	70
				480

செயற்கையாக இருந்தபோதிலும் ஒரு விறுவிறுப்பை ஏற்படுத்திய க்ளைமாக்ஸ் காட்சிக்காக (போனஸ்) + 15

495

55/100

(அடுத்த பக்கத்தில் சில எண்ணங்கள்..)

சில எண்ணங்கள்

● அந்தமான் தெருக்களில் சிவாஜிக்காக 'டூப்' ஓடுவது நன்றாகத் தெரிகிறது. சிரிப்பு வருகிறது.

● சுஜாதாவுக்கு நடிக்கத்தான் தெரியும். 'படகு' ஓட்டத் தெரியாது. யாராவது கற்றுக் கொடுத்திருக்க வேண்டும். 'படகு' போவதற்கு எதிர் திசையில் அல்லவா துடுப்புப் போட்டுக் கொண்டிருக்கிறார்!

● சென்ஸஸ் ஆபீசர், மரகதம் என்ற பெயரில் ஒருவர் பாக்டரியில் இருப்பதாகச் சொல்லிய பிறகும் சிவாஜிக்கு ஏன் அந்த மெத்தனமான நடை? நடையில் ஒரு விறுவிறுப்பே இல்லையே?

● சிவாஜி முதலில் காதலிக்கும் போதெல்லாம் வெவ்வேறு கலர் டிரஸ்களில் காட்டுகிறார்கள். திடீரென்று மனைவிக்கு உடம்பு சரியில்லை என்றவுடன் காக்கி பாண்ட், சட்டையுடன் ஒரு தொழிலாளி மாதிரி வந்து கையில் பணம் இல்லை என்கிறார். ஆனால் மனைவிக்கு அவர் அடையாளமாக விட்டுச் சென்ற பாதரட்சையோ, 'மந்திரி குமாரி'யில் ராஜகுரு நம்பியாரின் பாதரட்சை போல் ஆடம்பரமாகக் காட்சியளிக்கிறது! ஒன்றுமே புரியவில்லை!

● தபாலாபீசிலிருந்து திரும்பும் சுஜாதாவை சிவாஜி கண்ட பிறகு, 'அம்மா, உங்களுக்கு கடிதம் வந்திருக்கு' என்று சொல்லும் இடம் பிரமாதம். (அவ்வளவு ZOOM ஷாட்டுகளை போட்டுக் கண்களை கஷ்டப்படுத்தியிருக்க வேண்டாம்!) இந்த இடத்திலிருந்து கடைசிவரை கதை தொய்யவுமில்லை. அதோடு படத்தைப் பிரமாதமாக காப்பாற்றுகிறது என்றும் சொல்லலாம். சிவாஜி - சுஜாதாவின் அன்பின் பிணைப்பும், அதில் ஏற்படும் போட்டியும் உண்மையிலேயே யார் ஜெயிக்கப் போகிறார்கள் என்று அறிய ஆவலைத் தூண்டுகிறது. சிவாஜியும் சுஜாதாவும் நடிப்பில் ஒருவரையொருவர் மிஞ்ச போட்டியே போடுகிறார்கள்.

● ஒளிப்பதிவாளர் அந்தமானை அலசி எடுத்திருக்கிறார். வண்ணம் கண்களைக் கவருகிறது.

● ஜேசுதாஸ், வாணிஜெயராம் பாடும் ஒரு பாட்டில் பல்லவியின் போது சில இடங்களில் ஜேசுதாஸின் குரலில் 'திருக்'கோயில் 'தெருக்'கோயிலாக ஒலிக்கிறதே!

● கவிதா செட்டுக்கு வருவதற்கு முன் மேக்கப் போட்டுக் கொண்டு, டிரஸ் அணிந்து கொண்டு வந்தால் மட்டும் போதாது. அப்படியே பள்ளிக்கூடத்துக்குப் போய் தமிழும் கற்றுக் கொண்டு வரவேண்டும். இல்லாவிட்டால் அவருக்கு 'தமிழ் கொலை அரசி' என்ற பட்டத்தைக் கொடுத்து விடுவார்கள்!

—**விகடன் விமரிசனக் குழு**



''பெண்ணுக்கு, தலைப் பின்னல் ரொம்ப நீளம்னு நான்தான் அப்பவே


பிரச்னைகள் தீர
ஸ்டேன்ஸ்டயர்
ஸ்டேன்ஸ் டயர்
சீட்ரெடுகள் மிகவும்
நம்பகமானவை.
ஸ்டேன்ஸ் டயர், புகழ்
வாய்ந்த டயர்ஸோல்ஸ்
பிரத்தியேக அம்சங்களை
வழங்குகிறது —
தன்னிகரற்ற நீண்ட
உழைப்பு.
ஸ்டேன்ஸ் டயர் சிக்கன
மானதும் கூட — ஒரு
டயரை பலமுறை
ரீட்ரெட் செய்ய, கூடுதல்
வாய்ப்பு—மிகக்
குறைவான செலவில்
பல்லாயிரம் மைல்கள்.
தாமதமின்றி, சேவை
பெற உடனே
அணுகவும்.
STANES TYRE
ஸ்டேன்ஸ்டயர்
தொழிற்சாலைகள்:
சென்னை, வேலூர்,
திருச்சி, சேலம், மதுரை,
தூத்துக்குடி, பெங்களூர்,
மங்களூர், விஜயவாடா,
செகந்திராபாத், எர்ணா
குளம், கோட்டயம்,
கன்னிக்கோட்டை,
திருச்சூர்.


அவன் ஒருவித வெறியுடன், தாங்க முடியாத தாகத்துடன் அந்தச் சூழலைப் பார்த்தான். தூரத்தில் தெரிந்த மலையடிவாரம், அடக்கமாக ஓடும் அந்த ஆறு, பச்சைப் பசேலென்ற வயல்வெளி —இதையெல்லாம் விட்டுவிட்டு ஓடிப் போக அவனுக்கு மனசு எப்படி வந்தது?

இருக்கும். முன்னும் பின்னும் இருக்கும் இடத்தில் அரளியும் துளஸியும் கத்தரியும் வாழையும் இருக்கும்.

கொல்லையில் கிணறு. ஜில்லென்றிருக்கும் கிணற்று ஜலத்தை மொண்டு மொண்டு ஊற்றிக் கொண்ட ஞாபகம் வந்தது அவனுக்கு. இந்த வீட்டைவிட்டுப்

வீடு

வாஸந்தி



எத்தனை வருஷங்கள் ஆயிற்று? அவன் நெற்றியைச் சுருக்கிக் கொண்டு மலையடி வாரத்தில் ஒரு பெரிய ஆரஞ்சுப் பழத்தைப்போல் இறங்கும் சூரியனைப் பார்த்தபடி நின்றான். அவனுக்கு நினைவில்லை. இவற்றையெல்லாம் பார்க்கும்போது ஏற்படும் தாகத்திலிருந்து நிறைய வருஷங்கள் ஆகியிருக்க வேண்டும் என்று தெரிகிறது. முழங்காலைக் குத்திட்டுக் கீழே உட்கார்ந்து கொண்டு அவன் ஓடும் ஆற்று நீரைக் கையில் எடுத்துப் பருகினான். அப்பா! என்னமாய் தித்திக்கிறது? இதன் ருசியை மறந்து பம்பாயில் அவனால் எப்படி இருக்க முடிகிறது?

சரசரவென்று இருள் விரிந்து விட்டது. குளிர்ந்த காற்றை அனுபவித்த வாறே மெல்ல நடந்தான். இன்னும் கொஞ்ச தூரம் நடந்தால் ஊர் வந்து விடும். ஊருக்குள் நுழைந்து நாற்சந்தியை அடைந்து வலப்பக்கம் திரும்பினால் மேலத் தெரு. தெருவின் கோடியில் அவனது வீடு.

வீடு.

அவனுக்கு உடம்பெல்லாம் சிலிர்த்தது. வீட்டைச் சுற்றி ஒரு முள் வேலி

போக எப்படி மனசு வந்தது? பம்பாயில் காற்று உள்ளே வரப் பயப்படும் அந்தச் சிறிய அறையில் தண்ணிக்கு 'க்யூ'விலும், பாத்ரூமுக்கு 'க்யூ'விலும் நிற்க வேண்டிய அவல நிலையில் இந்த வீட்டை நினைக்காமல் எப்படி வாழ முடிகிறது?


தெருவில் யாரோ எதிரில் வந்து கொண்டு இருந்தார்கள். அவன் சட்டென்று இருட்டில் நகர்ந்து கொண்டான்.

இவ்வளவு வருஷங்கள் கழித்து யார் இனங் கண்டு கொள்ளப் போகிறார்கள்?

'ஓஹோ! கிட்டாவா? எப்படா வந்தே? எங்கேடா போனே சொல்லாமெ கொள்ளாமே?' என்று யாராவது கேட்டால் என்ன பதில் சொல்வது? அவனுக்கே எவ்வளவோ விஷயங்கள் மறந்து விட்டிருக்கும்போது அவனை யார் நினைவில் வைத்துக் கொண்டிருக்கப் போகிறார்கள்? அந்த ஊர் சரித்திரத்தில் அவன் காணமற் போய்விட்ட ஓர் ஏடு. அதைப் புரட்டிப் பார்க்க யாருக்குப் பொறுமையிருக்கப் போகிறது?

ரோடுகளிலெல்லாம் இன்னும் அதே அழுது வடியும் விளக்குக் கம்பங்கள் தான். இருந்தும் அந்த மங்கிய வெளிச்சம் அவனுக்கு சௌகரியமாக இருந்தது.

பத்து வருஷங்களுக்கு முன்பு எப்படி இருந்ததோ அப்படியேதான் ஒவ்வொரு கூரையும் தெரிந்தது. 'பிராம்மணாள் காபி ஓட்டல்' அப்படியேதான் முன்பும் இருக்கும். பழைய மேஜை நாற்காலிகள் இன்னும் பழையதாய் சர்வர்களின் வேஷ்டி இன்னும் சற்று அழுக்காய்... கல்லாவில் உட்கார்ந் திருப்பது சாம்பசிவ ஐயரே தான்.. முன்னே தளதளவென்றிருக்கும் உடம்பு... இப்பொழுது கொஞ்சம் சுருங்கியிருக்கிறது.



''யாரு? கிட்டாவா?''

அவன் தூக்கிவாரிப் போட்டவனாய் திரும்பிப் பார்த்தான்.

எதிரே பரிச்சயமான முகம் மாதிரி இருந்தது. அட சோமு! அவனுடன் கூடப் படித்த சோமு.

''சோமு!''—அவன் இத்தனை வருஷங்களாக அடக்கி வைத்திருந்த உணர்வுகள் விழித்துக் கொண்ட மாதிரி அவனைத் தழுவிக் கொண்டான்.

சோமு அவனை ஏற இறங்கப் பார்த்தான்.

''அடப்பாவி, எங்கேடா இத்தனை வருஷம் போனே?''இப்படித்தான் சொல்லாமெ கொள்ளாமே ஓடறதா? யாரும் பரீட்சையில் பெயிலாகறதில்லையா?''

அவன் பதில் பேசாமல் நின்றான்.

சோமு அவன் முதுகில் தட்டியபடி கேட்டான்: ''சொல்லு, இப்ப எங்கே இருக்கே?''

''பம்பாயிலே!''

''பலே! நீ போனதும் நல்லதுக்குத் தான். இந்த ஊர்லே உட்கார்ந்து இருந்தா யாரும் உருப்பட முடியாது. இருப்பியோ, இல்லையோ?''

''உம்.. இருப்பேன்.''

''அப்ப நாளைக்குப் பார்க்கலாமா? நான் அவசரமா போயிண்டிருக்கேன். நாளைக்கு மத்தியானம் வந்துடுவேன். ரயிலுக்கு நேரமாச்சு, வரட்டுமா?''

அவன் அரைகுறையாகத் தலையை ஆட்டிக் கொண்டிருக்கையிலேயே சோமு போய்விட்டான். அவனுக்கு ஏமாற்றமாக இருந்தது. சோமுவிடம் எவ்வளவோ விஷயங்கள் கேட்க வேண்டும் போல் இருந்தது. ஐந்து நிமிஷம் நின்று பேசக்கூட முடியாத அளவுக்கு அவனது வாழ்க்கையில் ஒரு பிடிப்பும் வேகமும் இருக்கிறது. அவனுக்கு? அவனது வாழ்க்கையை இதுவரை நிரப்பியிருப்பது ஏக்கங்கள். இங்கு வந்த பிறகு ஏதும் திசை திரும்புமா?

நாற்சந்தி வந்துவிட்டது.

வலப்பக்கம் திரும்பினால் மேலத் தெரு. இடப் பக்கம் திரும்பினால் கீழத் தெரு.



இண்டர்வியூவில்...

''கங்கை நதி எங்கே ஓடுகிறது..?''

''தென் அமெரிக்காவில்..!''

''ஹி... ஹி... ஹி...!''

''ஏன் சார் சிரிக்கிறீங்க..? கங்கை இந்தியாவில் ஓடுதுன்னு ரைட்டா சொன்ன எனக்கு, உடனே வேலே கொடுத்துடப் போறீங்களா? ஏற்கனவே யாருக்கோ இந்த வேலையைக் கொடுக்க ணும்னு முடிவு செய்துட்டுதானே எங்களே இங்கே கூப்பிட்டு ஒப்புக்கு கேள்வி கேட்கறீங்க..''

—சிவ. மணிகண்டராமன்

கிழத் தெருவின் கோடியில் போஸ்ட் மாஸ்டரின் வீடு. அதைவிட கோமதியின் வீடு என்றுதான் அவனது உணர்வில் நிற்கும் நினேவு. அந்த வீட்டின் ஜன்னல் ஒன்றுதான் அவனுக்கு நினேவில் நிற் கிறது. ஏனென்ருல் அதன் வழியாகத் தான் அவள் அவனேப் பள்ளிக்குப் போகும் சமயத்தில் தனது அழகிய கண்களால் தூண்டில் போட்டு இழுக்கிற மாதிரி இழுப்பாள். அந்தத் தூண்டிலில் அகப் பட்டுத்தானே, படிப்பில்கூட கவனம் செலுத்த முடியாமல்...கடைசியில்...

ஓ, அதெல்லாம் இப்பொழுது ஒரு பழைய கதை! நினேவில் நிற்கக்கூடாத பைத்தியக்காரத்தனமான கதை! அந்தப் பைத்தியக்காரத்தனம்தான் இப்பொழுது அவனே இந்த நாற்சந்தியில் பார்த்துக் கைகொட்டிச் சிரிக்கிறது. அன்று அந்த கோமதியின் உடம்பும் கண்ணும்தான் அவனேப் பைத்தியமாக்கிற்று. அதற்குத் தான் எத்தனே சக்தி! படிப்பில் இருந்த தீவிரத்தையெல்லாம் திசை திருப்பிவிட் டதே! அதன் விளேவு—ஒரு விரயமாகிப் போன வாலிபம்—கடைத்தேற முடியாத ஒரு வாழ்வு. அவனுக்குக் கண்களில் நீர்முட்டி நின்றது.

அவனே அசடாக்கிய அந்தக் கோமதி இப்பொழுது எப்படி யிருப்பாள்? அவனே நினேத்துக் கொண்டு இன்னும் திருமணம் ஆகாமல் உட்கார்ந்து இருப்பாளா? அந்த மாதிரி ஒரு பெண்ணே இந்த கிரா மம் விட்டு வைத்திருக்குமா? எவனுக்கு அவளேயடைய அதிர்ஷ்டம் கிடைத்

ஒரு வேண்டாத நினேவை உசுப்பித் தள்ளுகிற மாதிரி அவன் தலேயை உலுக்கிக் கொண்டு மேலத் தெருவுக்கு நடந்தான்.

தெருவில் ஜன நடமாட்டமே இல்லே. நன்ருக இருட்டி விட்டது. கோடியில் தெரிந்தது அவனது வீடு. அவனுக்கு மனம் திக்திக்கென்றது, ஏதோ திருட்டுத் தனம் பண்ணின மாதிரி. இன்னும் சற்று அருகில் சென்றதும் முள் வேலி தெரிந் தது. அவனுள் ஏதோ திடீரென்று ஒரு நிராசை படர்ந்த மாதிரி இருந்தது. இன்னும் அந்த முள் வேலிதானு? பாதியெல்லாம் அறுந்து உடைந்து தொங் கிக் கொண்டிருந்தது. மாடத்தில் ஓர் அகல் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. வெகு தாகத்தோடு வந்தவனுக்கு இன்னும் நெஞ்சு உலர்ந்து போன மாதிரி இருந்தது. வீட்டைப் பார்த்ததும் திடீரென்று பழைய நினேவுகளெல்லாம், கசப்பான எண்ணங்களெல்லாம், அதன் அசிங்கங்களெல்லாம் மனத்தை நிறைக் கிற மாதிரி இருந்தது. ஓர் அன்னியனுய் அவன் அதைச் சற்று நேரம் வெறித்துப் பார்த்தான். உள்ளே செல்ல கால்கள் மறுத்தன.

அவன் மெல்ல கொல்லேப் பக்கம் சென்ருன். இருளடைந்து கிடந்த மாமரத்தின் அடியில் போய் நின்ருன். எந்த மூலேயிலாவது நின்றபடி அம்மா வைப் பார்த்துவிட வேண்டும். அப்பா வைப் பார்க்க இன்னமும் தென்பில்லே. அப்பாவை நினேத்ததும் பழசெல்லாம் பிரவாகமாகப் பொங்கி யெழுந்தது.

பஞ்சகச்சமும் பட்டை பட்டையாய் விபூதியும் முகத்தில் ஒரு சிடுசிடுப்பும்.... பார்க்கும் தொழில் வைதிகம்...சொல் லும் வேதங்களெல்லாம் உச்சரிக்கும் மந்திரங்களெல்லாம் வயிற்றைக் கழுவத் தான். மனத்தைக் கழுவ இல்லே என்று அப்பொழுதெல்லாம் மனத்தில் தோன் றும் ஆத்திரம் இப்பவும் தோன்றிற்று. வாயில் நல்ல வார்த்தையே வராத, முகத்தில் பிரசன்னமே இல்லாத, வளர்க்க முடியாத பிள்ளேகளேப் பெற்று, அது பிள்ளேகளின் குற்றமே என்று நினேக்கிற மாதிரி அடித்து உதைக்கும்.. அப்பாவைப் பற்றி இப்படித்தான் ஞாப கம் இருக்கிறது. அந்த ஞாபகம் இப்பவும் ஒரு சீற்றத்தை எழுப்பிற்று.

'பெரிசா படிச்சுக் கிழிச்சு சர்க்கார் உத்தியோகம் பார்க்கப் போறியா? பரீட்சைக்குப் பணம் கட்ட கால் காசு கொடுக்க முடியாது...!'

அந்த இரக்கமற்ற குரல் இப்பவும் கேட்கிறது. அவன் மேனி சிலிர்த்தது.

எங்கெங்கோ பணத்தைக் கெஞ்சிக்



கி. ஆ. பெ.

எங்கு வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் நினைத்த மாத்திரத்தில் புறப்படுவார் கி. ஆ. பெ. விசுவநாதம். ஒரு பயணம் போய் வந்த உடனேயே அடுத்த பயணத்திற்குத் தேவையான துணிமணிகள், மருந்து, விசிறி, குடை எல்லாம் எடுத்து வைத்து விடுகிறார். அதனால் எப்போதும் பயணம் செய்ய அவர் தயார்.

அந்த கோமதியின் விழிகள் மட்டும் தன்னைப் பார்த்து அலைக்கழித்திருக்காவிட்டால் பரீட்சை பாஸ் பண்ணியிருப்பானோ? இல்லை, இப்படியெல்லாம் நாயாய் அலைய வேண்டும் என்கிற தலைவிதியா?

பரீட்சை பெயில் என்று தெரிந்ததும் அப்பாவின் கோபத்தை நினைத்து நடுங்கிய நடுக்கமும் இனிமேல் பணம் கட்டி பாஸ் செய்ய வழியே இல்லை என்கிற உணர்வுடன் அம்மாவின் கண்ணீரின் பரிதாபமும் அவனைச் சொல்லாமல் கொள்ளாமல் விரட்டியது இப்பவும் பசுமையாக இருக்கிறது. கோமதியின் விழிகளும் உடம்பும் மறந்து போயிற்று அவனது அவமான உணர்வில். பம்பாயில் பட்டினி கிடக்க வேண்டிய தினங்களிலெல்லாம் அம்மாவின் வற்றல் குழம்பும் கத்தரிக்காய் வதக்கலும்தான் ஞாபகத்திற்கு வரும்.

'இத்தனை அவல வாழ்வில் சில ரம்யமான நினைவுகளுக்குக் காரணமாயிருக்கும் அம்மாவை மட்டும் பார்த்துவிட வேண்டும். அப்பாவுக்குத் தெரியாமல் ஒரு கவளம் உன் கையால் போட்டுச் சாப்பிட்டுவிட்டுப் போக வேண்டும்—மறுபடியும் அங்கு பட்டினி கிடக்கும் நாட்களில் ஞாபகம் வைத்துக் கொள்ள....'

கொல்லைக் கிணற்றடிக்கு யாரோ வருவது தெரிந்தது. அவன் சரேலென்று இன்னும் இருட்டில் நகர்ந்து கொண்டான்.

யாரது, அப்பாவா?

அவரைக் காணும்போதெல்லாம் முன்பு நெஞ்சு அடித்துக்கொண்ட மாதிரி இப்பவும் அடித்துக் கொண்டது. அவன் சற்று கூர்ந்து பார்த்தான். அவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. அப்பா இல்லை இது. அவனுடைய தம்பி ராஜு! அதே பஞ்சக்கச்சம், பட்டை விபூதி, அதே சிடுசிடுப்பு.....

அவன் நெஞ்சுலர்ந்து போய் பார்த்துக் கொண்டிருந்தான்.

''சந்தி பண்ணணும். பஞ்சாத்திரம் உத்தரணி கொண்டு வா மூதேவி...!''

அப்பாவின் அதே அச்சு.

உள்ளேயிருந்து ஒரு பெண் வருவது தெரிந்தது. மடிசார்கட்டில் புடவையும்.. அவன் விழிகள் தெறிக்கப் பார்த்தான்.

அது கோமதியல்லவா?

மேனியின் தளதளப்பெல்லாம் போய் உடம்பில் சதை போட்டு இவளா அவனை அன்று பைத்தியமாக்கினாள்?

''அம்மாவோட திவசம் நாளைக்குத் தெரியுமோ இல்லையோ? கார்த்தாலே அமாவாசைத் தர்ப்பணம் வேறே....''

''தெரியும்!''


''என்ன தெரியும்? பீடைக்கு ஜன்னலண்டை உட்கார்ந்துண்டு வெளியே போறவா வரவாளைப் பார்க்கறத்துக்குத் தான் தெரியும்.''

அவனுக்கு மேற்கொண்டு எதுவும் காதில் விழவில்லை. விடுவிடுவென்று திரும்பி நடந்தான். ஆற்றங்கரை வரும் வரை நடையை நிறுத்தவேயில்லை.

பிறகு ஆற்று மணலில் உட்கார்ந்து கொண்டு விசித்து விசித்து அழுதான்... ஆற்று மணலாய் சரிந்து விழுந்துவிட்ட தன் வீட்டை நினைத்து.....

மாறவே மாறாத மனிதர்களை நினைத்து... அவன் அழுதான்.

கேர்ஃப்ரீ* பாதுகாப்பு



அதாவது இது முழுமையான பாதுகாப்பு அளிக்கிறது. இதற்காக நீங்கள் கொடுக்கும் பணத்தைவிட மிக அதிக மதிப்பு வாய்ந்தது.

மாதத்தில் அந்த ஐந்து நாட்கள், பெண்களின் உடலுக்கு முழுவதும் நம்பகமான, தனிப்பட்ட பாதுகாப்பு தேவைப்படுகிறது: அதாவது கேர்ஃப்ரீ பாதுகாப்பு. சானிடரி பாதுகாப்பு சாதனங்களை உருவாக்கும் உலகின் தலையாய நிறுவனமான ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன் இதைத் தயாரிக்கிறார்கள். ஒரு பெண்மணி பாதுகாப்பையும் காப்புறுதியையும் உணருவதற்குத் தேவையான சிறந்த அம்சங்களைக் கொண்டுள்ளது கேர்ஃப்ரீ.



ஹைஜாக்.....

அஜாத சத்ரு

துல்யமான அந்த இளங் காலைப் பொழுதில் விமான நிலையம் அன்றைய தினத்திற்குத் தயாராகிக் கொண்டிருந்தது. முதல் ஃப்ளைட் ஷெட்யூல் காலை 7 மணிக்கு. டெல்லிக்குச் செல்லும் விமானம் அது.

கையில் இருந்த இன்ஸ்பெக்ஷன் சார்ட்டுடன் ஃப்ளைட் இன்ஜினியர் கிரீஷ், காக்பிட்டில் நுழைந்த போது அது வெறுமையாகக் காணப்பட்டது. விமானம் புறப்படுவதற்கு முன்பு செக் செய்யப்பட வேண்டிய விஷயங்களை நிதானமாக, ஆனால் மிகுந்த கவனத்துடன் ஒவ்வொன்றாக செக் செய்து, கையிலிருந்த சார்ட்டில் பென்சிலால் டிக் செய்து கொள்ள ஆரம்பித்தான். எல்லாவற்றையும் பார்த்து முடிக்க நாற்பது நிமிடங்களுக்கு மேல் ஆகும். இப்போது மணி 6-15...

*

காலையில் எழுந்தவுடன் ராஜன் முதலில் மணியைப் பார்த்தான். டைம்-பீஸ் 6-15 காட்டியது. ஹாஸ்டல் பேப்பர் பையன் எறிந்துவிட்டுப் போயிருந்த பேப்பர், அறையில் அனாதையாகக் குப்புற விழுந்து கிடந்தது. அதை அசிரத்தையாக எடுத்து, ஸ்போர்ட்ஸ் பக்கத்தை ஒரு தரம் மேய்ந்துவிட்டு, அதைக் கட்டிலில் எறிந்துவிட்டுக் கிளம்பினான். பல் தேய்த்து, முகம் கழுவி ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு அவன் திரும்பிவந்த போது கட்டிலில் ரமேஷ் உட்கார்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்தான். ராஜனைப் பார்த்ததும், ''குட் மார்னிங் மை டியர் ஃபூல்! இன்னிக்கு என்ன ப்ரோக்ராம்?'' என்று கேட்டான் ரமேஷ்.


''குட் மார்னிங்!'' — ராஜனுக்கு அப்போதுதான் நினைவுக்கு வந்தது. ''ஓ, இன்றைக்கு லீவா? நான் வேஸ்ட் பண்ண முடியாது. ஸெமஸ்டருக்கு ஒன்றுமே படிக்கவில்லை.''

''நீதான், ஒரே நாளில் ஏரோடைனமிக்ஸையும், ஸ்டாடிஸ்டிக்ஸையும் கரைச்சுக் குடிச்சுடுவியே. உன்னை மாதிரி ஆசாமிகளைத் தொலைச்சுக் கட்டினாத்தான் நாடு உருப்படும். எப்படியாவது தொலை'' என்றான் ரமேஷ்.

''அது சரி... கோட் லாங்க்வேஜ் (Code language) புஸ்தகம் வாங்கிண்டு போனியே, கொண்டு வந்தியாடா....?'' என்று கேட்டான் ராஜன்.

''ஐ ஆம் சாரி.. நான் மறந்து போயிட்டேன்..! இதோ கொண்டு வந்துடறேன்.....'' என்று திரும்பிப் போனான் ரமேஷ்.

ஒருவாறு ரமேஷ் தொலைந்ததும் ராஜன் நிம்மதிப் பெருமூச்சு விட்டான். இந்த ஹாஸ்டலில் இருக்கும் எல்லா மாணவர்களிலும் கழுத்தறுப்பு நம்பர் ஒன் ரமேஷ் என்று எந்தக் கோவிலிலேயும் சத்தியம் செய்ய அவன் தயார். இவனோடு ஒரே கிளாசில் படித்துக் கொண்டு, கல்லூரி ஹாஸ்டலில் ஒரே பிளாக்கில் இருந்து கொண்டு, சே! என்ன கஷ்டம்.... சத்தம்



பி. ராஜாராமன்
(அஜாதசத்ரு)
எம்.எஸ்ஸி., (கணிதம்)
இரண்டாவது வருடம்
விவேகானந்தா கல்லூரி
சென்னை-4

கேட்டுத் திரும்பியபோது ஏதோ ஒரு ஹிந்திப் பாட்டை முணுமுணுத்துக் கொண்டு கையில் புஸ்தகத்துடன் ரமேஷ் உள்ளே நுழைந்து கொண்டிருந்தான்.

அறிவிப்பைத் தொடர்ந்து விமானத்துக்குச் சென்று கொண்டிருந்த பயணிகளைப் பார்த்தபடி விஸ்வாஸ் ரெஸ்ட்டாரண்டில் காபியைப் பருகிக் கொண்டிருந்தான். கண்ட்ரோல் டவரில் தன்னுடைய வேலையைத் தாற்காலிகமாக சக ஊழியர் ஒருவரிடம் ஒப்படைத்துவிட்டு வந்திருந்தான் அவன். காபியை ஒரு வாய் பருகிவிட்டு நிமிர்ந்தபோது, கையில் ஃப்ளைட் ப்ளான் கத்தை பேப்பர்களில் தெரிய கோ பைலட் ரமணி விரைவாக வந்து கொண்டிருந்தான்.

''ஹலோ, டெல்லி ஃப்ளைட்டா? யார் காப்டன்?''

''முகர்ஜி.''

சொன்ன விதத்தில் ரமணியின் அவசரம் தெளிவாகப் புலப்பட்டது. ''ஏற்கெனவே மனுஷன் நல்ல மூடில் இல்லை. கிளியரென்ஸ் ட்ரபிள்... டெல்லி வெதர் வேறே அவ்வளவு திருப்தியாக இல்லையாம்.''

''டோண்ட் வொரி. யு வில் லாண்ட் ஆல்ரைட். குட்லக் எனிவே.''

ரமணி சிரித்துக் கொண்டே போய் விட்டான்.

அசுவாரசியமாக மீண்டும் பயணிகளைப் பார்க்க ஆரம்பித்தான் விஸ்வாஸ். என்ன ஒரு விநோதமான சேர்க்கை—பிஸினஸ் விஷயமாகச் செல்லும் கோட்-ஸூட் அணிந்த பெரும் புள்ளிகள், கான்பரென்சில் கலந்து கொள்ளச் செல்லும் கல்லூரிப் பேராசிரியர், ஸ்காலர்ஷிப்பில் படிக்கச் செல்லும் மாணவன், லீவு முடிந்து திரும்பிக் கொண்டிருக்கும் சோல்ஜர், வெளிநாட்டு டூரிஸ்டுகள் இரண்டு மூன்று பேர்.. எழுந்து கைக் குட்டையை எடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்டு கிளம்ப யத்தனித்தபோது மேஜையின் காலுக்கடியில் சிக்கிக் கொண்டு விடுதலை பெறத் துடித்துக் கொண்டிருந்த அந்த துண்டுக் காகிதம் அவன் கண்ணில் பட்டது. அதைக் கையில் எடுத்துப் பிரித்தான்.

அதிலிருந்த குறி எழுத்துக்களைப் பார்த்துத் திடுக்கிட்டான். அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து ஒரு முறை தனக்குள் சொல்லிக் கொண்டான். அதன் பொருள்:

டெல்லி விமானத்தைக் கடத்திச் செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ரமேஷிடமிருந்து நமக்கு விடுதலையே கிடையாது என்று ராஜன் நினைத்தான். என்ன மனிதன் இவன்? பிறருடைய உணர்ச்சிகளை மதிக்காமல்—பிறருடைய தனிமையைக் குலைப்பது அநாகரிகம் என்று அறியாமல்—அவனுக்கு வந்த கோபத்தில் அப்படியே அவன் மேல் பாய்ந்து, கழுத்தைப் பிடித்து நெரித்துக் கொன்று, மாலைப் பேப்பரில் 'மாணவர் கொலை! சக மாணவர் போலீசில் சரண்!' என்று பெரிய எழுத்துக்களில்...

''யு வாண்ட் சம் ஃபன்'' என்றான் ரமேஷ்.

''என்ன வேடிக்கை?''

''நேரே ஏர்போர்ட் போகலாம். பத்து நிமிட வாக்தான். அங்கே போனதும் உனக்கு எல்லாம் புரியும்.''

ராஜன் அவனையே பார்த்துக் கொண்டிருக்கையில் அவன் சொன்ன வாக்கியத்தின் உண்மை விச்வரூபமெடுத்து அவன் மூளையில் பதிய...

''அடப்பாவி, நேற்று ஒரு 'கோட்' மெஸேஜ் எழுதினாயே, அந்தக் காகிதத்தை ஏர்போர்ட்டிலேயே விட்டுவிட்டு வந்து விட்டாயா?''

''ஆமாம்'' என்று சிரித்தான் ரமேஷ். அதுவும் எவன் கண்ணிலாவது நிச்சயம் படுகிற மாதிரி ஒரு இடம். சீக்கிரம் கிளம்பு. இப்போ ஏர்போர்ட் ரொம்ப ஜாலியாகஇருக்கும்.''

ராஜனால் தன் கோபத்தை அடக்க முடியவில்லை. ''அட, பொறுப்பற்ற இடியட்! அந்த ஃப்ளைட் கான்சல் ஆனால் எவ்வளவு பேருக்கு எவ்வளவு கஷ்டம் தெரியுமா? தவிர, இந்த விஷயம் தெரிந்து நாம் மாட்டிக் கொண்டால் என்ன கதி? எல்லாம் உன் முட்டாள்தனத்தினால். படுபாவி... உடனே



கிளம்பு. அதைத் தடுக்க ஏதேனும் செய்ய முடியுமான்னு பார்ப்போம். கம் ஆன், க்விக்.''

தோளைக் குலுக்கிக் கொண்டு ராஜ னோடு கிளம்பினான் ரமேஷ்.

போயிங் விமானத்தின் உட்புறத்தில் ஃப்ளைட் டெக்கில் யாருமே பேசவில்லை. ஜெட்டின் சக்தி வாய்ந்த நான்கு இன்ஜின்களின் இரைச்சலிலிருந்து பாதுகாக்க அவர்கள் காதுகளில் 'இயர் கேப்' அணிந்திருந்தார்கள். காக்பிட்டில் முன்னே இருந்த இடது புற ஸீட்டில் காப்டன் முகர்ஜி.

டவரிலிருந்து கிளியரென்சுக்காக ரன்வேயில் காத்துக் கொண்டிருந்தது அந்த போயிங்........


*

ராஜனும் ரமேஷும் விமான நிலையத்தில் நுழைந்தபோது ஃப்ளைட் அறிவிக்கப்பட்டு விமானம் புறப்படத் தயாராக நின்று கொண்டிருந்தது. வழியனுப்ப வந்திருந்த அந்தக் குறைந்த கூட்டத்தின் நடுவே வழியைக் கண்டு பிடித்து ரெஸ்டாரண்டுக்குள் நுழைந்த போது அந்த டேபிளில் இருந்த விஸ்வாஸைக் கவனித்தார்கள் இருவரும். ராஜனின் இதயத் துடிப்பு 80-ஐத் தாண்டியது—விஸ்வாஸின் கையில் அந்தக் காகிதம்! ரமேஷும் ராஜனும் அவனை நெருங்கும் முன்பே அவன் பாய்ந்து கிளம்பி இவர்களை வலிமையுடன் விலக்கிக் கொண்டு அவசரமாக ஓட, பின்னாலேயே தொடர்ந்து...

''எக்ஸ்க்யூஸ் மி ஸார்'' என்றான் ராஜன்.

அதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் விரைந்து சென்ற விஸ்வாஸ், பின்னால் ரமேஷ், ராஜன் இருவரும் டிரெயிலர் மாதிரி ஒட்டிக் கொண்டு வருவதைப் பார்த்து 'என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் இந்த மடையர்கள்' என்று கோபத்துடன் திரும்பினான்.

''லுக் யங்மென். அந்த ப்ளேனை யாரோ ஹைஜாக் செய்யப் போகிறார்கள். நான் ஓடிப் போய் இந்த ஃப்ளைட் பயணத்தை நிறுத்தியாக





நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன்

கடந்த இருபது ஆண்டுகளுக்கும் மேலாக நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன் இராசிபுரத்திற்கு அருகிலுள்ள சேந்த மங்கலம் என்ற ஊரிலேயே வசித்து வருகிறார். நாமகிரிப்பேட்டையில் பிறந்தாலும் அவர் வாழ்ந்து வருவது சேந்தமங்கலத்தில்தான். அவரை 'சேந்தமங்கலம் கிருஷ்ணன்' என்று ஏன் அழைப்பதில்லை?

வேண்டும். இப்பவே போனால்தான் ஏதாவது செய்ய முடியும் என்னால்.''

''அதற்கு அவசியமேயில்லை'' என்று கூறிய ராஜன், விளையாட்டுக்காக ரமேஷ் அந்த 'கோட் மெஸேஜை' எழுதி ரெஸ்டாரண்டில் வைத்ததைப் பற்றிச் சொன்னான். எல்லாவற்றையும் விளக்கமாகக் கூறினான்.

போயிங் மெதுவாகத் தரையில் நகர ஆரம்பித்தது. அது ரன்வேயில் மெதுவாகத் தன்னுடைய வேகத்தைக் கூட்டி, புறப்பட்ட சில விநாடிகளிலேயே 150 நாட் வேகம் பெற்று, பாயிண்ட் ஆஃப் நோ ரிடர்னைத் தாண்டி தனது மூக்கைச் சற்று உயர்த்தி, ரன்வேயை உதறிவிட்டு, ஏராளமான எரிவாயுவைப் பின்னால் தள்ளிக் கொண்டு ஆகாயத்தில் நுழைந்தது.


அதைப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு ஒரு நிம்மதிப் பெருமூச்சு விட்டுக்கொண்டே திரும்பினான் விஸ்வாஸ். ''தேங்க்ஸ் எ லாட். நல்லவேளை ப்ரதர்ஸ், நீங்க இந்த உண்மையைச் சொல்லியிருக்காவிட்டால் நான் அந்த பிளேனை நிறுத்திவிட்டு, முட்டாள் பட்டத்தை வாங்கிக் கட்டிக் கொண்டிருப்பேன்..''

''ஐயாம் வெரி ஸாரி..இது என்னோடை தப்பு... இனிமே இப்படியெல்லாம் விளையாட்டுக்குக்கூட செய்யமாட்டேன். ஐ ப்ராமிஸ்..'' என்றான் ரமேஷ்.

விஸ்வாஸிடம் கை குலுக்கி விடை பெற்றுக் கொண்டு ரமேஷும் ராஜனும் ஹாஸ்டலை நோக்கி நடந்தனர். அப்பொழுது மணி 7-05.

சரியாக 7-15 மணிக்கு பிரயாணிகள் டெக்கில் சொல்லி வைத்தாற் போன்று மூவர் சட்டென்று எழுந்து கொண்டார்கள். இருவர் காக்பிட்டை நோக்கிச் செல்ல, மூன்றாவது ஆசாமி கையில் சப்மெஷின் கன்னுடன் பிரயாணிகளைப் பார்த்துப் பேச ஆரம்பித்தான்: ''நண்பர்களே, இந்த ப்ளேன் இப்போது 'ஹைஜாக்' செய்யப்படுகிறது..!''

இரவுப் பாடகன்!



முடி முதல் அடி வரை
மூடி யிருக்கும்
போர்வைக்கு வெளியே
இன்னிசை எழுப்பும்
இரவுப் பாடகர்களே!
நீங்கள்
இப்பொழுது பாடும்
இந்தப் பாடலின்
ராகத்தின் பெயர்
மலேரியாவா?
மஞ்சள் காமாலையா?

— ச. சிவராமன்

6. Mr. R. R. COWSIK	316/F 9A, Main Road, Jayanagar, V Block, Bangalore - 560 041.	Retd. Executive
7. Mr. T. JAYARAMAN	Adamangalam, Tanjore Dist.	Business
8. Mr. J. P. GANDHI	Regent Chambers. II Floor, 208, Ceremonial Bounlevard, Nariman Point, Bombay-400 021	Stock & Share Broker.
9. Mr. A. VENKATAKRISHNAN	50, Ellango Nagar, Pondicherry-605 011.	Business
10. Mrs. USHA NAIR	38, Hira Chand Road, Cox Town, Bangalore - 560 005.	Stock & Share Broker.
11. Mrs. RM. SOLAICHI	1/B, Sir C. P. Ramasamy Iyer Road, Madras - 600 018.	Stock & Share Broker

(f) Profits and Dividends:

Year	Profit Before Taxation	Profit After Taxation	Dividend
*1975-76	Rs. 1,32,817.00	Rs. 46.485.00	5%

(g) * Financial position of the Company as on 31 - 12 - 1976.

	Rs.		Rs.
Share Capital	6,63,000.00	Fixed Assets	2,60,531.00
Reserves & Surplus	13,334.92	Investments	43,803.60
Secured Loans	2,50,000.00	Current Assets	8,790.00
Unsecured Loans	20,76,256.17	Loans & Advances	32,30,956.96
Current Liabilities	4,33,462.47	Miscellaneous	
& Provisions	1,19,482.00	Expenditure	11,454.00
		Profits & Loss A/c.	—
TOTAL	35,55,535.56	TOTAL	35,55,535.56

* The Company started functioning as a Public Limited Company only from 10th September 1975.

(h) **We can raise by way of deposits under the directions Rs. 67,63,349.20 and our deposits as on 31st Dec. 1976 are only Rs. 20,25,927.00**

(i) **As on this date, we have no overdue deposits.**

(j) (i) **We have complied with the provisions of the directions applicable to us.**

(ii) **Mere compliance with the directions does not imply that the repayment of deposits is guaranteed by the Reserve Bank of India.**

(iii) **Deposits accepted by us are unsecured and rank PARI PASSU with other unsecured liabilities.**

This advertisement is issued under the authority of and in the name of the Board of Directors of the Company who approved the above text by a resolution dated 30-12-1977 and copies of the same has been delivered to the Registrar of Companies, Madras and Reserve Bank of India, Bangalore.

By Order of the Board,

P. V. SIVAN NAIR,

Chief Executive.

சவேரியார் கொடுத்த கூலி



"எட்டணவுக்கு ஆப்பம் வேணும்."

— குரலின் இனிமையும் புதுமையும் ஆப்பக்கடை மரியம்மாளை நிமிர்ந்து பார்க்க வைத்தது. குரலைப் போன்றே உருவமும் பளிச்சென்றிருந்தது.

ஆப்பம் வாங்கிக் கொண்டு திரும்பியவளின் பின்னல் கால்வரை நீண்டு கிடந்தது. மரியம்மாள் தன் மகள் பக்கம் திரும்பினாள்: "ஏக்கி! யாரது? ஆள் புதுசா இருக்கே!" என்றாள்.

"அடுத்த தெருவிலே புதுசா நாலு குடிசை கட்டியிருக்கே! அதுலே முத வீட்டிலே குடி வந்திருக்காங்களாம். கோட்டாத்துக்காரங்க போல!" என்றாள்.

அடுத்த சில நாட்களும் அதே நேரத்தில் அந்தப் பெண் வருவது வாடிக்கை ஆயிற்று. வேண்டுமென்றே சில இளவட்டங்களும் ஆப்பக்கடையை முற்றுகையிடுவது மரியம்மாளின் கண்களுக்குத் தப்பவில்லை.

அன்று மரியம்மாளின் காலில் வலி. முனகியவாறே ஆப்பக்கடையைப் பரப்பினாள். எதுவும் பேசாமல் மௌனமாக வாங்கிச் செல்லும் அமலி, அன்று பரிவுடன் கேட்டாள்: "காலிலே என்ன சின்னாத்தா?"

"என்னன்னே தெரியலே! ஒரே வீக்கமா இருக்கு. வலி உயிர் போகுது."

"மருந்து போட்டீங்களா?"

"ஆமா! மஞ்சளை அரைச்சுப் போட்டேன்! கேக்கலியே."

"யானைப் பல்லை உரசிப் போட்டா உடனே கேக்கும்."

"அதுக்கு நான் எங்கே போறது?"

"என்கிட்டே இருக்கு. வாங்க தரேன்."

"நல்லாயிருப்பே! இதோ, இன்னும் ரெண்டு ஆப்பம்தான்; முடிச்சுட்டு வாரேன்."

—நொண்டி நொண்டி நடந்தவாறே அவள் வீட்டை நோக்கிச் சென்றாள்.

குடிசையின் உள்ளேயிருந்து வந்த கடுமையான சப்தம் கேட்டு வெளியிலேயே சிறிது நின்றாள். "ஏக்கீ! கஞ்சி எடுத்து வைக்க இவ்வளவு நேரமா?"

"இதோ, ஒரு நிமிசத்திலே வச்சிடறேன்" என்றவள், "அண்ணே, கொஞ்சம் ரூவா இருக்கா?"

"ஆமா! உனக்கு தினம் அழணுமோ! அஞ்சு ரூவா கொடுத்து ரெண்டு நாள் தானே ஆச்சு?" என்ற அதட்டலுக்குப் பதிலே இல்லை. தூக்குச்சட்டியுடன் ஒரு முரட்டு ஆள் வெளியேறுவதையே பார்த்துக் கொண்டிருந்தவள், குடிசையின் வாயிலில் நின்று உள்ளே பார்த்தாள். உள்ளே அவள் நீராகாரத்தை ஒரு தம்ளரில் ஊற்றிக் குடித்துக் கொண்டிருந்தாள். வாசலில் நிழலாடியதைக் கண்டு திரும்பினாள்.

"வாங்க சின்னாத்தா!" என்றாள்.

"நீ குடிம்மா! இருந்த கஞ்சி அவ்வளவையும் அண்ணனுக்குக் கொடுத்தனுப்பிட்டு நீ வெறும் தண்ணியோடே கிடக்கிறியே!" என்றாள் வியப்புடன்.

"அவுங்க உழைச்சுப் பாடுபடறவங்க! நாம வீட்டிலே சும்மாதானே இருக்கோம்" என்றவாறே, யானைப் பல்லை எடுத்து வந்தாள்.

இரண்டு நாட்கள் கழித்து யானைப் பல்லைத் திரும்பக் கொடுக்க வந்தவள், சிறிது நேரம் உட்கார்ந்து அமலியைப் பற்றி விசாரித்தாள். தூரத்தில் நீல நிறக் கடலும் அதில் செல்லும் வள்ளங்களும் தெரிந்தன. "ஆமா, சின்னம்மா, இங்கே அலையே இல்லையே! ஏன்? எங்க ஊரிலே கடலைப் பார்த்தாலே பயம்மா இருக்கும்" என்றாள்.

"இங்கே தீவு இருக்குதில்லே. தீவுக்கு அங்கிட்டுத்தான் ஆழம். அங்கிட்டுத்தான் அலை இருக்கும்."

மேலும் இரண்டு நாட்கள் கடந்தன. இரவு மணி ஒன்பது இருக்கும்.

''சின்னாத்தா! சின்னாத்தா'' என்ற பதட்டமான குரலைக் கேட்டு மரியம்மாள் கதவைத் திறந்தாள்.

''என்னம்மா அமலி? ஏது இந்த நேரத்திலே?''

''எனக்கு பயம்மா இருக்கு சின்னாத்தா! மத்தியானமே வழக்கமா எங்கண்ணே வள்ளம் திரும்பிடும். இன்னைக்கு இன்னும் வரலே! தனியா படுக்கப் பயமா இருக்கு சின்னாத்தா!''

பாயை விரித்துப் படுத்து அரைத் தூக்கத்தில் இருந்த மகள் ஜேனம்மாவை எழுப்பி அமலிக்குத் துணையாக அனுப்பினாள்.

விடிந்ததும்கூட வள்ளம் திரும்பவில்லை. அமலி மௌனமாகக் கண்ணீர் வடித்தாள்.

அன்று மாலையில் மரியம்மாளின் குரல் கேட்டுக் கண்ணீரைத் துடைத்துவிட்டு கதவைத் திறந்தாள். அவள் கூட யாரோ ஓர் இளைஞன்!


''இவுங்க வள்ள முதலாளி! இவுங்க வள்ளத்திலேதான் உன் அண்ணன் போவுது'' என்றாள்.

''என்னம்மா, அழுதுகிட்டே இருக்கியாமே! ஏன் இப்படி சுணங்கிட்டதுன்னு எனக்கும் புரியலை. மீன்பிடித்துறை லாஞ்ச் தேடப் போயிருக்கு. எப்படியும் பத்திரமா வந்திடுவாங்க! செலவுக்கு வேண்டுமானா வச்சிக்கோம்மா'' என்றவாறே இருபது ரூபாய் தாள்களை நீட்டினான். அமலி வாங்க மறுத்து விட்டாள்.

அன்று நடு இரவில் அவள் அண்ணன் வந்த பிறகுதான் அமலிக்கு உயிர் திரும்பியது. ''வள்ளம் புயல்லே அகப்பட்டு பாய்மரம் முறிஞ்சிட்டு'' என்ற அண்ணனின் சமாதானமான குரலால் நிம்மதியடைந்தாள்.

அதற்கடுத்த நாள் அமலி தண்ணீர் கொண்டு திரும்பும்போது அந்த வள்ள முதலாளி சைக்கிளை உருட்டிக் கொண்டு யாருடனோ பேசிக் கொண்டு நடப்பதைக் கவனித்தாள். அவன் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதை உணர்ந்தவள் சடாரென்று உள்ளே நுழைந்து விட்டாள்.

அடுத்த நாள் அவன் அமலியின் எதிரேயே வந்து விட்டான். லேசாக அறிமுகமான புன்னகையைச் சிந்தினான். அவள் தலையைக் குனிந்து கொண்டே விரைந்து நடந்தாள்.



கொஞ்ச நாட்களாக அண்ணனின் போக்கு மாறியிருப்பதை உணர்ந்தாள். தாராளமாகச் செலவு செய்வதைக் கண்டாள். ஓர் அழுக்குச் சட்டையைத் துவைப்பதற்காக எடுத்தவள், பையினுள்ளே இருந்த பொருட்களைக் கண்டு திடுக்கிட்டாள்.

'அண்ணனுக்கு இந்தப் புத்தி எப்போ வந்தது? சொந்த ஊரிலேயும் ஒழுங்கா இல்லாததால்தானே ஊரை விட்டு விலக்கி வச்சாங்க' என்ற கவலையில் உருக ஆரம்பித்தாள்.

அன்றும் வள்ளம் இருட்டும்வரை திரும்பவில்லை. ஜேனம்மா துணைக்கு வந்து படுத்தாள். காலையில் அந்த வள்ள முதலாளி

வந்தான். ''அண்ணன் வள்ளம் இன்னேக்கும் திரும்பலேயேன்னு கவலேப்பட்டுக்கிட்டு இருக்கியா? செலவுக்கு எதுவும் வேணுமா?'' என்முன். அமலிக்குச் சினம் பொங்கியது.

''நீங்களே அனுப்பிட்டு தெரியாத மாதிரி வந்து விசாரிக்கிறீங்களே? உங்களுக்கும் பங்கு இல்லாமலா அனுப்புறீங்க? உங்களுக்கு அந்த கோட்டாத்து சவரியாருதான் கூலி கொடுக்கணும்'' என்று பொரிந்தாள்.

''எனக்கும் ஏதோ பங்குன்னு சொல்றியே! என்ன பங்கு? எனக்கு எதுக்கு சவரியாரு கூலி கொடுக்கணும்?'' என சாந்தமாகவே கேட்டான். அண்ணன் பையிலிருந்து மீண்டும் அப்பொருட்களே எடுத்து எரிச்சலுடன் நீட்டினுள். ''உங்களுக்கு இதிலே பங்கு இல்லேயா? தெரியாதது போல ஏன் நடிக்கிறீங்க?''

அவற்றைக் கையில் வாங்கியவன் திருப்பித் திருப்பிப் பார்த்தான். பரபரப்பாக வெளியேறினுன்.

அன்று மாலே ஆப்பக்கடை மரியம்மா பதறியவாறே ஓடி வந்தாள்:

''அமலி! மோசம் போயிட்டியே! உன் அண்ணனே போலீஸ் பிடிச்சிட்டுப் போயிட்டாம்! கடல்லே அவுக வள்ளத்தைச் சுத்தி வளேச்சு நாலஞ்சு போலீஸ் லாஞ்ச் பிடிச்சுட்டாம்! உள்ளே கடத்தல் சாமான்கள் இருந்ததாம்'' என்றபோது அமலி பதறவில்லே.

மெளனமாக ஒரு பையில் துணி மணிகளே அடுக்கிக் கொண்டிருந்தாள். ''என்ன அமலி, எங்கே புறப்படுறே?'' என்முள் கவலேயுடன்.

''என்னே மாதிரி அநாதைங்களுக்கு வேறு புகலிடம் ஏது? கான்வென்ட்டுத் தாயாருகிட்டே முன்னுலேயே என் நிலேமையைச் சொல்லி வேலே கேட்டு வச்சிருந்தேன்'' என்றவாறு அமலி திரும்பியபோது வள்ள முதலாளி நின்றிருந்தான்.

அமலி நின்ற கோலத்தைக் கண்டு திடுக்கிட்டவனுக மரியம்மாவிடம் விசாரித்தான்.

சில விநாடிகள் யோசித்தவன் அமலிக்குக் கேட்கும்படி தணிந்த குரலில் மரியம்மாவிடம் பேசினுன்:

''சின்னம்மா, அமலியின் அண்ணனுக்கு நான் வள்ளம் கொடுத்தது உண்மை. ஆனுல் அந்த வள்ளத்தைத் தவருன காரியத்துக்கு அவன் பயன்படுத்தியது எனக்குத் தெரியாது. அமலி சொன்ன பிறகு தான் அது தெரியும். நானே அவனேப் பிடிச்சுக் கொடுத்திடலாம். அதனுலே அமலிக்கு ஏற்படற கஷ்டத்தை நினேச்சு தவிச்சேன். சவேரியாரா பார்த்து இதுக்கு வழி செய்திட்டார்'' என்முன்.

பிறகு அவன் மெதுவாக எதையோ சொல்லச் சொல்ல, மரியம்மாவின் முகம் மலர்ந்தது. கடைசியாக, ''கேட்டுச் சொல்லுங்க சின்னம்மா!'' என்முன் ஆவலுடன்.

''அமலி! நீ எங்கேயும் போக வேண்டாமாம்! இவரு உன்னேயே கல்யாணம் கட்டிக்கிட சம்மதம் கேக்கிருரு. என்ன சொல்றே?'' என்முள் உற்சாகமாக.

''கோட்டாத்து சவரியாரு நல்ல கூலி கொடுத்திட்டாருன்னு சொல்லுங்க சின்னம்மா'' என புன்முறுவலுடன் அவன் சொல்லவும் சற்றே முகம் சிவந்தாள் அமலி.

கோவை செழியன் இப்போது புதிய ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிருர். அந்த ஆராய்ச்சி மன்ருடியார்களேப் பற்றியது. இரண்டு ஆராய்ச்சிக் கட்டுரைகளே எழுதி கேம்பிரிட்ஜ் பல்கலேக் கழகத்தில் சமர்ப்பித்து டாக்டர் பட்டம் பெற இருக்கிருராம் அவர்.

கோவை செழியன்



ஏட்டு

பி. ரங்கநாயகி

போஸ்ட் கிராஜுவேட் மாணவிகளின் ஹாஸ்டல்.

பத்மினி கண் விழித்தாள்.

அதற்குள் காலைமணி ஏழரை.

அவளையும் மீறிக் கொண்டு வந்த சோம்பலில் இரு கைகளையும் பின்னிக் கொண்டு, உடலை ஒரு முறுக்கு முறுக்கிக் கொண்டாள். கலைந்திருந்த மேலாக்கை சரிசெய்து கொண்டு கண்ணாடியில் முகத்தைப் பார்த்து தலைமயிரின் ஆர்ப்பாட்டத்தை அடக்கிவிட்டு வகிடைச் சரி செய்து கொண்டாள்.

அப்போதுதான் அவளுள் சுறுசுறுப்பு தோன்றவும் அவசர அவசரமாகத் தூங்கிக் கொண்டிருந்த மற்ற தோழிகளை எழுப்பினாள்.

ஹாஸ்டல் வார்டனின் அனுமதி பெற்று முந்திய தினம் இரவுக் காட்சிக்குப் போய் விட்டுக் கூட்டமாகத் திரும்பிய ஏழு தோழிகளும் பத்மினியின் அறையிலேயே படுத்து விட்டனர்.

பத்து அடி நீளத்திற்கு எட்டு அடி அகலமான அந்த அறையில் தாறுமாறாக உருண்டு கொண்டிருந்தனர். விமலாவின் வலது கால் சங்கீதாவின் மார்பில் கிடந்தது. சங்கீதா தலையணையென்று எண்ணி நளினியின் வயிற்றில் தலையை வைத்துக்கொண்டு தூங்கிக் கொண்டிருந்தாள். கீதா கிருஷ்ணாவின் முகம் சுவரில் முட்டிக் கொண்டிருந்தது.

உமாவும் சாயாவும் தங்களுடைய இளமைத் துடிப்பைக் குறைத்துக் கொள்ளவோ என்னவோ மிருதுவாக அணைத்தபடி படுத்துக் கிடந்தனர்.

''ஏய் கீதா, விமலா, உமா . . . சீக்கிரம் எழுந்திருங்கடி . . .'' — பத்மினி தட்டி எழுப்பினாள்.

''ஏண்டி பத்மினி! உனக்குத் தூக்கம் வரலேன்னா எங்க உயிரை ஏண்டி வாங்கறே? இன்னிக்கு 'ஸண்டே' தானேடீ!'' —சங்கீதா உடலை முறுக்கிக் கொண்டாள். ஆனால் எழுந்திருக்கவில்லை.

''ஏய் பத்மினி, இப்போ நீ ஏதாவது தகராறு பண்ணினா உன்னைக் குண்டுக் கட்டாக் கட்டி வெளிலே போட்டு விட்டுக் கதவை உள்புறமா தாழ்ப்பாள் போட்டு நாங்க எல்லோரும் தூங்க





''கவலையேபடாதீங்க... சுப்ரீம் கோர்ட் வரைக்கும் போய் ஒரு கை பார்த்துடறேன்... கடைசி நயா பைசா வரைக்கும் விடமாட்டேன்...''

●

ஆரம்பிச்சுடுவோம்.. ஜாக்கிரதை...!'' —கீதா கிருஷ்ணராவின் எச்சரிக்கை.

''ப்ளீஸ்...ப்ளீஸ்...! தயவு பண்ணி எழுந்திருங்கடீ...குழந்தைக்குப் பாடம் சொல்லித் தர்ற மாதிரி நேற்றைக்கு எத்தனை தடவை உங்ககிட்டே 'ரிக்வெஸ்ட்' பண்ணிண்டேன். இன்னிக்கு எலெக்ஷன் இறதை மறந்துட்டுப் பேசறீங்களே! போலிங் இன்னும் கொஞ்ச நாழிலே ஆரம்பமாயிடும். சீக்கிரமா போனா கும்பல் இல்லாம இருக்கும். 'லேட்' ஆகி கும்பல் வந்துட்டா, 'யார்டீ க்யூலே நின்னு ஓட்டுப் போடறது? நெறைய வேலை இருக்கு'ன்னு நீங்க வெளியிலே கிளம்பிடுவீங்க..ப்ளீஸ்! எனக்காக அரை மணி நேரம் தூக்கத்தைத் தியாகம் பண்ணுங்கடீ! ஓட்டு போட்டுட்டு வந்து மறுபடியும் வேணா தூங்குங்களேன்!'' —பத்மினி கெஞ்சினாள்.

''ஏண்டி பத்மினி.. நாங்க ஓட்டுப் போடறதுலே உனக்கு என்னடி இவ்வளவு அக்கறை?'' இது விமலாவின் கேள்வி. ஹாஸ்டலில் சேர்ந்து இந்த கோஷ்டியில் ஒரு நபராக விமலா சேர்த்துக் கொள்ளப் பட்டு சில தினங்களே ஆகியிருந்தன. அதோடு முன் தினம் மாலை தன் உறவினர் வீட்டுக்கு அவள் சென்றிருந்ததால் விஷயம் அவளுக்கு சரியாகத் தெரியாது.

''அடேடே, உனக்கு விஷயம் தெரியாதா? ஜூனியர் மெம்பர்னு இவ்வளவு 'ட்யூப் லைட்'டாவா இருக்கிறது? நம்ப பத்தொன்பதாவது வார்ட்லே கவுன்சிலரா போட்டியிடுறாரே ஸ்டுடன்ட்ஸ் லீடர் சுதாகர், அவர் யாருன்னு நெனைச்சே? நம்ப பத்மினியோட 'லவர்' ஆக்கும்! அதான் மேடம் குதியா குதிக்கிறா!''—இது நளினியின் கிண்டல்.


''அப்படியா விஷயம்...எனக்கு இது வரை தெரியாதே! ஏய், எல்லோரும் எழுந்திருங்கடீ. மெஸ்லே காப்பி சாப்பிட்டுட்டு முதல் வேலையா மிஸ்டர் சுதாகருக்கு ஓட்டு போட்டுட்டு வந்துடுவோம். இதுகூட நாம்ப செய்யலைன்னா என்னடீ பிரண்ட்ஷிப் வேண்டியிருக்கு?''—விமலா, பத்மினிக்காகப் பரிந்துகொண்டு வந்தாள்.

''ஐயையோ! நீங்க யாரும் அவருக்கு ஓட்டு போடக் கூடாதுடீ.. அதுதான் என் ரிக்வெஸ்ட்..'' — பத்மினி பதறினாள்.

''என்னடீ சொல்றே?...உன் லவர் எலெக்ஷன்லே நிக்கறார் என்கறே! அதோட ஓட்டு போடக் கூடாதுன்னும் சொல்றே. ஒரே புதிரா இருக்கு.'' —விமலா.

''ஆமாண்டீ விமலா. அவர் இந்த எலெக்ஷன்லே ஜெயிச்சுட்டார்னா என் எதிர்காலம் கெட்டுடும்டீ, எங்கப்பாவுக்கு பாலிடிக்ஸ்னா எந்த அளவுக்கு 'வெறுப்போ' அந்த அளவுக்கு சுதாகருக்கு பாலிடிக்ஸ்னா 'உயிர்.' எங்கப்பா நான் சுதாகரைக் கல்யாணம் பண்ணிக்க விரும்புறதை எதிர்க்கலை. ஆனா சுதாகர் பாலிடிக்ஸுக்கு ஒரு முழுக்கு போட்டுவிட்டு, தன் பிஸினெஸைக் கூட இருந்து கவனிச்சுக்கறத்துக்கு வந்தால் உடனே கல்யாணம் பண்ணித் தரேன் என்கிறார். சுதாகரோ பாலிடிக்ஸை விட மாட்டேன்னு அடம் பிடிக்கிறார். இவங்க ரெண்டு பேர் பிடிவாதத்துக்கும் நடுவுலே மாட்டிண்டு நான் அவஸ்தைப் படறேன். கடைசியா சுதாகர்கிட்டே கெஞ்சிக் கூத்தாடி ஒரு பிராமிஸ் வாங்கிட்டேன்.

இந்த எலெக்ஷன்லே தான் தோத்துப் போயிட்டா பாலிடிக்ஸுக்கு ஒரு கும்பிடு போட்டுட்டு தலை முழுகிடறேன்னு வாக்குக் கொடுத்திருக்கிறார். ஒருவேளை அவர் ஜெயிச்சுட்டா அப்பாவை விரோதிச்சுகிட்டு அவரை நான் கல்யாணம் பண்ணிக்கணும். எனக்கு அப்பாவும் வேண்டும். இவரையும் கல்யாணம் பண்ணிக்கணும். இதுக்கு சுதாகர் எலெக்ஷன்லே தோக்கறதுதான் ஒரே வழி. அதனாலே நீங்க எல்லோரும் வந்து அவசியம் அவரை எதிர்த்து நிக்கற பெருமாள் சாமிக்கு ஓட்டுப் போடுங்கடீ!''



ஸ்டோரி டிஸ்கஷன்!

படமுதலாளி:— சினிமாவுக்கு ஏற்ற மாதிரி ஒரு கதை சொல்லுங்க.

எழுத்தாளர்:— என்ன மாதிரி சப்ஜெக்ட்? சமூகக் கதையா, சரித்திரக் கதையா?

ப. மு. :— சரி, சமூகக் கதையே சொல்லுங்க...

எ:— லவ் ஸ்டோரியா? இல்லே, குடும்பப் பாங்கானதா?

ப.மு.:— படம் பூராவும் சண்டை, கிளப் டான்ஸ், ரேப்பிங் சீன், சஸ்பென்ஸ் இது மாதிரியெல்லாம் வர்ற குடும்பப் பாங்கான கதையா சொல்லுங்களேன்...

எ:— அதனலென்ன, ஒரு ரியலிஸக் கதையே சொல்லிடறேன். ஆமா, சாதாரணப் படமா, இல்லே கலர்ப் படமா?

ப.மு.:— கலர்லதான் எடுக்கணும்னு என் கொழுந்தியா சொன்னு.

எ:— யாரு, காலேஜ்லே படிக்குதே அந்தப் பொண்ணு?

ப.மு.:— அதேதான். கதையைச் சொல்லுங்க.

எ:— நான் சொல்லப் போற கதை, ரொம்ப ரொம்ப சீரியஸான சப்ஜெக்ட். ஆனைப்பட்ட டைரக்டர் பாலசந்தர்கூட இந்தக் கதையைக் கேட்டுட்டு, ''அடேங்கப்பா, இந்த மாதிரி சப்ஜெக்டெல்லாம் டைரக்ட் பண்ணுகிற அளவுக்கு எனக்கு சாமர்த்தியம் இல்லேப்பா''ன்னு ரொம்ப கவுரவமா ஒத்துக்கிட்டாரு. ஏன் சொல்றேன்னு, இந்த மாதிரி கதைக்கு நல்ல டைரக்டரா அமையணும், என்ன நான் சொல்றது?

ப.மு.:— (குறுக்கிட்டு) அந்த மாதிரி கதையெல்லாம் வேண்டாம். சின்ன டைரக்டருங்களுக்கு ஏத்த மாதிரி ஒரு கதை சொல்லுங்க.

எ:— பம்பாய்லே ஃபாரின் ஃபிலிம் ஒண்ணு பார்த்தேன். அதைச் சொல்லட்டுமா?

ப. மு.:—சொல்லுங்க... சொல்லுங்க.

எ:— நான் பார்த்த ஃபாரின் ஃபிலிம்லே ஸ்பெஷல் எஃபெக்ட் எப்படி இருந்ததுன்னு மாதிரிக்கு அதுலே ஒரு சீன் சொல்றேன் கேளுங்க... அழகான ஹீரோயின், நாலு முரடனுங்க, ரேப்பிங் சீன் — அவ்வளவுதான். ஆனு ஹீரோயின் சத்தமே போடலே.

ப. மு.:—ஏன், மறந்துட்டாளா?

எ: — இல்லே.

ப. மு. — தொலேயருனுங்க.. போனுப் போறதுன்னு வுட்டுட்டாளா?

எ: — இல்லே.

ப.மு.—ஏன், வாயில வெத்தல புகையிலேயை அடக்கியிருந்தாளா?

எ:—இல்லே இல்லே. இதுஃபாரின் ஃபிலிமுங்க, வெத்திலே பாக்கு எப்படிங்க வரும்? கேளுங்களேன்.. அந்த இடத்துலே கத்தி என்ன பிரயோஜனம்?

வி. ஜே. செல்வராஜ்

சங்கீத விஷயமு...

திருமதி டி. கே. பட்டம்மாளின் மகன் சிவா, பாலக்காடு மணியிடம் மிருதங்கம் பயின்றவர். பின்னர் மணியின் மாப்பிள்ளையாகி விட்டார்!



அமெரிக்காவைச் சேர்ந்த ஹிக்கின்ஸ் பாகவதர் கர்நாடக சங்கீதத்தை முறையாகப் பயின்று கச்சேரி செய்யத் துவங்கியபோது, ஒவ்வொரு கச்சேரியிலும் நாட்டைக் குறிஞ்சிராகப் பாடலான 'எங்கள் நாட்டைகுறிஞ்சி என்பார்' என்ற பாட்டைப் பாடுவார். அதிலும் குறிப்பாக கடைசி அடி வரும்போது 'எங்கள் நாட்டை அமெரிக்கா என்பார்' என்று மறக்காமல் பாடுவார்.



பாடகர் ஜேசுதாஸ் தன் மகனுக்கு 'ஐயப்ப தாஸ்' என்று பெயர் வைத்திருக்கிறார். தான் சபரிமலை ஐயப்பன் சந்நிதிக்குப் போய் வந்த பிறகு அவன் பிறந்தான் என்பது தான் காரணமாம்.



லால்குடி ஜெயராமனின் தங்கை திருமதி பத்மாவதி, சிங்கப்பூர் ஃபைன் ஆர்ட்ஸ் ஆதரவில் நடைபெறும் இசைக் கல்லூரியில் வீணை, பாட்டு சொல்லிக் கொடுக்கப் போயிருக்கிறார்.



அதனாலே சும்மா இருந்துடறா. ஆனா அந்த தடியனுங்க போனவுடனே போலீஸ் ஸ்டேஷனுக்கு நேரா ஓடிப் போயி 'ஓ'ன்னு கத்தறா. அதக் கேட்டவுடனே இன்ஸ்பெக்டரும் 'ஓ'ன்னு கத்தறாரு. அதப் பாத்துட்டு போலீஸ் காரங்களும் 'ஓ'ன்னு கத்தறாங்க... வெளியே வானம் குமுறிக் குமுறி 'ஓ'ன்னு மின்னல் மின்னி, 'ஓ'ன்னு இடி இடிச்சு, 'ஓ'ன்னு மழை பெய்யும்.

ப.மு.:—அப்புறம் முடிவு என்ன?

எ:—எல்லாரும் சத்தம் போடறாங்களா.. அந்த சத்தம் அவுங்க நாட்டு தேசிய கீதம் மாதிரி இருக்குது. உடனே எல்லாரும் எழுந்திரிச்சு அமைதியா நிக்கறாங்க... படம் முடிஞ்சிடுச்சி.

அரியக்குடியின் கச்சேரி ஒன்றில் ஒரு குழந்தை ஓயாமல் அழுது கொண்டேயிருந்தது. அதன் அம்மா, மற்றவர்களுக்குத் தொந்தரவாக இருக்குமோ என்று கருதி அடிக்கடி வெளியே எடுத்துக் கொண்டு போய் வந்தார். அம்மையாருக்கு கச்சேரியை விடவும் மனமில்லை; குழந்தை அழுவதும் பொறுக்க வில்லை. இதைக் கவனித்த அரியக்குடி அந்த அம்மையாரிடம் கையசைத்து அமரச் சொல்லிவிட்டு ஒரு கீர்த்தனை பாடினார். சில நிமிடங்களில் குழந்தை அயர்ந்து தூங்கி விட்டது. பாடி முடித்த அரியக்குடி கேட்டார்: ''குழந்தை தூங்கியாச்சா?'' அம்மையார் மகிழ்ச்சியுடன் தலையசைத்தார். அரியக்குடி பாடிய ராகம்: நீலாம்புரி.

மாலி ஒருமுறை பெரம்பூர் சங்கீத சபாவில் கச்சேரி செய்தார். முதல் ஒரு மணி நேரம் அவர் ஏனோதானோவென்று வாசித்தார். என்னவெல்லாமோ கோணங்கிகள், கோனஷ்டைகள்... அமர்ந்து கேட்ட ரசிகர்களில் ஒருவருக்குத் தாங்கவில்லை. சட்டென்று எழுந்தார். ''ஏய், நீ ஒழுங்கா வாசிக்கப் போறியா, இல்லையா?'' என்று கோபத்துடன் கத்தினார். கப்சிப். சில விநாடிகள் பயங்கரமான மௌனம். பிறகு மாலி புல்லாங்குழலைப் பிடித்தார். ஒரு மணி நேரத்திற்கும் மேலாக கான மழைதான். யாருமே அதுவரை அப்படிப்பட்ட அபூர்வ வாசிப்பைக் கேட்டதில்லை. வாசித்து முடித்தவுடன் மாலி மைக்கில் கேட்டார்: ''யாரய்யா என்னை ஒழுங்கா வாசிக்கச் சொன்னது? எங்கே அவர்?'' அந்த ரசிகர் எழுந்தார். இப்போ 'திருப்தியா?' என்று கேட்டார் மாலி. ''அற்புதமாய் வாசிச்சேப்பா. ரொம்ப சந்தோஷம். நன்னா இரு'' என்று வாழ்த்தினார் அவர்.

—ஆரெம்.





ப. மு.:—சத்தம் போட்டா தேசிய கீதமா?

எ:—ஆமாங்க.... அது ஆப்பிரிக்க நாட்டுப் படம்.

ப.மு.:—சரி, மேலே கதையைச் சொல்லுங்க.

எ:—[யோசிக்கிறார்] ஆமா..எதுல கடைசியா நிறுத்தினேன்? ம்..வந்து.. ம்... 'ஹீரோயின் 'கிழிஞ்ச துணியை உடம்புலே சுத்திக்கிட்டு சரக்-சரக், சரக்-சரக்,சரக்-சரக்'னு வரபோது... செடி கொடிகளுக்கிடையில் 'சரக்'குனு பாம்பு ஒண்ணு வருது.

ப. மு.:—பாம்பா? நல்ல பாம்பா?

எ:—இல்லீங்க, கெட்ட பாம்புங்க.. ஹீரோயினை கடிக்க வர்ற பாம்பு எப்படிங்க நல்ல பாம்பா இருக்கும்?

ப. மு:—எனக்கு எப்படிய்யா தெரியும்? நான் என்ன தேவரா? நல்லா ஓடுமா, கையைக் கடிக்காமல்?

எ:— பல்லைப் பிடுங்கின பாம்பு தானுங்களே... கையையும் கடிக்காது, காலையும் கடிக்காது.

ப. மு.:— பாம்புன்னாலே எனக்கு பயம். வேறே சொல்லுங்க.

எ:—அப்போ ஒண்ணு செய்வோம். நட்டுவாக்கிளியை ஆக்ட் பண்ண வைப்போம்.

ப. மு.— ஐயோ, எனக்கு நட்டுவாக் கிளின்னு பாம்பைவிட பயம். வேறே ஏதாவது....

எ:— கலர் படமாச்சே, ஒரு பஞ்சவர்ணகிளியைக் காட்டிடுவோமே.

ப.மு.:—வெரிகுட் ஐடியா, ஹீரோ யின் கையிலே கிளியை வைச்சுக்கிட்டு, 'பஞ்சவர்ணக்கிளியே, பஞ்சவர்ணக் கிளியே, பாலும் பழமும் திங்கற பஞ்ச வர்ணக்கிளியே'ன்னு ஒரு பாட்டை ஒகேனக்கலில் பாடற மாதிரி எடுத்துடு வோமா? என் கொழுந்தியாளுக்கு ஒகேனக்கல் போகணும்னு ரொம்ப நாளா ஆசை...

எ.:— ஆஹா, அப்படியே எடுத்துட லாம். ஏங்க, இந்த 'பாலும் பழமுங்'கற வரியை மாத்தி, புதுமையா 'பன்னும், பர்பியும் திங்கற பஞ்சவர்ணக்கிளி யே'ன்னு மாத்திடுவோமா?

ப.மு.:— அடடே, இந்த வரியே நல்லா இருக்கு. இன்னைக்கு ஜனங்கள் இது மாதிரி புதுமையைத்தான் வர வேற்கறுங்க. ஜனங்களைப் புரிஞ்சிகிட்டுப் படமெடுத்தால் நிச்சயமா வெற்றி கிடைக்கும். இது மாதிரி வரிகள் 'டக்' குன்னு அவங்க மனசிலே பதியும், என்ன சொல்றீங்க?

எ:— கரெக்ட்டுங்க. ஏங்க, இன்னொரு புதுமையான 'சேஞ்ச்' செய்வோமே.

ப.மு.:— எப்படி?

எ:— 'பஞ்சவர்ணக் கிளியே'ன்னு திரும்பத் திரும்பச் சொல்றதுன்னு, பேரு பெரிசா இருக்கே..அதை மாத்தி, சுருக்கமா 'ப. கிளியே, ப. கிளியே'ன்னு மாத்திட்டா?

ப.மு.:— வெரிகுட். அப்போ நானே இந்தப் பாட்டை—'ப. கிளியே, ப. கிளியே, பன்னும் பர்பியும் திங்கற ப. கிளியே..'ன்னு மாற்றி முழுசா பாட்டு எழுதிடறேன். என்ன? நான் நல்லா பாட்டு எழுதுவேங்க. அஞ்சாங் கிளாஸ் படிக்கும் பொழுதே பாட்டு எழுதியிருக்கேன்.

எ:— சரிங்க, ஒரு சந்தேகம். ப. கிளி யேன்னு நாம சொன்னல், அது பச்சைக் கிளியைக் குறிக்குமா, பஞ்சவர்ணக் கிளியைக் குறிக்குமா?



''நான் என்ன தப்பு செய்தாலும் எங்கம்மா கண்டிக்கவே மாட்டாங்க!''

''நீ என்ன பெரிய சஞ்சய் காந்தியோ?''

ப. மு.:— அதான் ஹீரோயின் கையிலேயே கிளி இருக்கே. மேலும் கலர்ப் படமாச்சே, அதனுலே ஜனங்க புரிஞ்சுக்குவாங்க..

எ:— சார், உங்களுக்கு அபாரமான ஐடியா இருக்குங்க... என்னைக் கேட் டால் நீங்களே டைரக்ட் செய்யலாம்.

ப. மு.:— அப்படியா? அதுவும் நல்ல ஐடியாதான். அடுத்த அமாவாசை அன்னிக்கு பூஜை போட்டுடலாம்... அன்னிக்கே உங்களுக்கு அட்வான்சும் கொடுத்துடறேன்.

எ:— ஹி, ஹி..வரட்டுங்களா? (புறப்படுகிருர்)

(வீட்டிற்குள்ளிருந்து பட முதலாளி மனைவியின் குரல் கேட்கிறது.)

குரல்:— அங்கே என்ன பேசிட்டு இருக்கீங்க?

ப.மு.:—'ஸ்டோரி டிஸ்கஷன்.' இரு, இதோ வர்றேன் (போகிருர்).

பின் குறிப்பு:—

(ப. கிளியே பாட்டு 'ஹிட்'டா கிறது. அந்தப் பாடலினுலேயே அந்தப் படம் பெரிய வெற்றி அடைகிறது. படத்தின் கதா நாயகியான தயாரிப்பாளரின் 'கொழுந்தியா' அவரை ஏமாற்றி விட்டு, கதாசிரியரை மூன்ரும் தாரமாக ரகசியத் திருமணம் செய்து கொள்கிருள்.)



மார்டி கிரா 78

தொகுப் ஜானி முகர்ஜீ

சென்னை சினிமா ரசிகர்களை பிலிமோத்ஸவ் 78-கலகலப்பூட்டியது போல் கல்லூரி இளைஞர்களை மார்டிகிரா 78 என்கிற இளைஞர் விழா மகிழச் செய்தது. சென்னை ஐ.ஐ.டி. கல்லூரியில் நடைபெற்ற இந்தவிழாவில் இந்தியாவின் பல மாநிலங்களைச் சேர்ந்த கல்லூரி மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர். 'மார்டிகிரா என்பது ஸ்பெயின் நாட்டில்ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி மாதம் நடைபெறும் வசந்த உற்சவம். அன்று மக்கள் அனைவரும் ஆடிப்பாடி மகிழ்ச்சிகரமாக இருப்பார்கள். அப்பெயரை மாணவ மாணவிகள் தங்கள் கவலைகளை மறந்து மகிழ்ச்சியுடன் கூடும் இந்த விழாவிற்கும் சூட்டினோம்' என்கிறார் இதன் அமைப்பாளர்களில் ஒருவரான நான்காம் ஆண்டு மெடலர்ஜிகல் மாணவர் வெங்கடகிருஷ்ணன்.

ஐந்தாண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்ட இவ்விழாவில் இந்த ஆண்டு 35 கல்லூரி மாணவமணிகள் கலந்து கொண்டனர். அவர்களது திறமைகள், ஆற்றல்கள், சக்திகள் விழாவில் வெளிக்கொணரப்பட்டன. பல மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் ஒருவரையொருவர் அணுகிச் சந்தித்துப்பேசி எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ளவும் உள்ளங்களைப் புரிந்து கொள்ளவும் முடிந்தது. இவ்விழாவில் மனதை மகிழ்விக்கும் இசை உண்டு! தூரிகை ஏந்திப் படம் வரையும் காரிகைகளையும் மைக்கைப் பிடித்து விளாசும் மங்கையரையும் பார்க்க முடிந்தது. மாணவர்கள் சுதந்திரப் பறவைகள் போல் பறந்து திரிந்தார்கள். ஒவ்வொரு நாளும் சென்னையைச் சேர்ந்த மாணவர்கள் பெருமளவில் கலந்து கொண்டு உற்சாகப்படுத்தினர். இதில் நடைபெற்ற போட்டிகளில்



அதிக பாயிண்ட்கள் பெற்று சென்னை ஐ.ஐ.டி. முதலாவதாக வந்தது.

மார்டிகிராவிற்கு வந்திருந்த பல நகரங்களைச் சேர்ந்த மாணவர்கள் சிலரின் கருத்துக்கள்:

''மார்டிகிராவுக்கு நான் வருவது இதுதான் முதல் தடவை. மிகவும் நல்ல முறையில் ஏற்பாடுகள் செய்து இருக்கிறார்கள். ஐ. ஐ. டி. காம்ப்பஸ் காம்பவுண்டில் மான்கள் துள்ளி விளையாடுவது இயற்கைச் சூழலை ரம்மியமாக்கிக் காட்டுகிறது'' என்றார் பம்பாய் சைடன்ஹாம் கல்லூரியைச் சேர்ந்த ராஜீவ் போதிராஜா.

வசந்த விழாவில் கல்லூரி மாணவ மாணவிகள்...



மாப்பிள்ளை வந்தார்!

கோமதி சுவாமிநாதன்

"இன்றைக்கு சாயங்கால ரயிலிலே மாப்பிள்ளை வரப் போகிறார் என்ற விஷயம் நினைவிலே இருக்கா?"

லோகநாதன் முகவாய்க்கட்டை தடவிக் கொண்டார். "ஆமா! நினைவு இருக்கு! இப்பத்தான் இரண்டு மணி ஆகிறது. இப்பவே ஸ்டேஷனுக்குப் போகச் சொல்றியா? ஐந்து அம்பதுக்கு வர்ற வண்டி நிச்சயமா ஆறு அம்பதுக்காவது வந்துவிடும்!"

"நீங்க ஸ்டேஷனுக்குப் போவதைப் பற்றிச் சொல்லவில்லை! இரவுச் சாப்பாட்டுக்கு மாப்பிள்ளைக்குப் பிடித்தமான காய்கறிகள் வாங்கிக் கொடுத்தால் தேவலை" என்று அம்புஜம் நீட்டினாள்.

"மாப்பிள்ளைக்கு என்னவெல்லாம் பிடிக்கும்?"

"உருளைக் கிழங்கு, பீன்ஸ், காரட்"— அம்புஜத்திடமிருந்து மூணும் கிளாஸ் பையன் உற்சாகமாக வாய்ப்பாடு ஒப்புவிப்பது போலப் பதில் வந்தது.

"முருங்கைக் கீரை, முருங்கைக் கீரை, முருங்கைக் கீரை!" என்று மூன்று தட்வை வேகமாகச் சொல்லிவிட்டு லோகநாதன் துண்டை உதறிக் கொண்டு எழுந்தார்.

"என்னது, முருங்கைக் கீரையா? மூணு நாளாக வீட்டில் அதைத்தானே சமைக்கிறேன்! மாப்பிள்ளை வர்ற நாளையிலும் நீங்கள் அந்த முருங்கை மரத்திலே ஏறுதீங்க!"

"மிஸஸ் வேதாளம்! உனக்கு ஊர் நடப்பு கொஞ்சமாவது தெரியுமா? பிளாட்பாரத்திலே எதை எடுத்தாலும் நாலணான்னு பிளாஸ்டிக் தட்டு, பொம்மை, பந்து வைத்திருக்கிறானே! அது மாதிரி கறிகாய்க் கடையிலே எதை எடுத்தாலும் கிலோ நாலு ரூபாய் சொல்லுகிறான்... முற்றி விறகுக்கட்டை மாதிரி இருக்கிற வெண்டைக்காய் கிலோ நாலு ரூபாய்.. இன்னும் இரண்டு வருஷத்திலே கறிகாய் கொஞ்சம் மலியும்! அப்போ மாப்பிள்ளை வர்றபோது காரட், பீட்ரூட், முட்டைக்கோஸ்னு ஜமாய்க்கலாம்! பொறு! இன்றைக்கு முருங்கைக் கீரை தான்! இந்தா, சொல்ல மறந்து விட்டேனே! பக்கத்துத் தெரு பையன் வருவான்.."

"அந்த முருங்கை மர கண்ட்ராக்டர் தானே! பிழைக்கத் தெரிந்த பையன். தன் வீட்டு முழு மரத்தையும், பத்துப் பத்துப் பைசாவிற்கு உடைத்துக் கட்டி அதையும் உங்கள் தலையிலேயே கட்டுகிறான்! நமக்கு வழக்கமாக வாங்குகிற மூன்று கட்டுகளுடன் மாப்பிள்ளைக்கு என்று கூட இரண்டு கட்டுகளையும் வாங்கிப் போட வேண்டும். அவ்வளவுதானே?" என்றாள் அம்புஜம்.

*

மாலை ஆறு மணிக்கு மாமனாரும் மாப்பிள்ளையும் ஆட்டோ ரிக்ஷாவில்





'மாண்புமிகு ரயில்வே அமைச்சர் அவர்களுக்கு...

சமீப காலமாக நிறைய ரயில் விபத்துக்கள் நடப்பதைப் பார்க்க வருத்தமா யிருக்கிறது. இது மாதிரி விபத்துக்களை எளிதாகத் தடுக்க நான் சில யோசனைகளை தங்கள் முன் வைக்கிறேன். ஆவன செய்யவும்.

இனிமேல் எதிரும் புதிருமாக ரயில்கள் ஓடாமல் இருக்க ஏற்பாடு செய்யவும்.

ஒரு ரயில் இன்னொரு ரயிலுடன் மோதுகின்ற நேரத்தில் இடிக்கப்படும் ரயில் சட்டென்று குனிந்து பூமிக்கடியில் போய்விட்டுப் பிறகு வெளியே வரவேண்டும். இது மாதிரி ஒரு புது 'டிவைஸ்' கண்டுபிடிக்க ரயில்வே என்சினீயர்கள் மகாநாடு ஒன்றைக் கூட்டுங்கள்.

எல்லா ரயில்களிலும் முதல் மூன்று பெட்டிகளைக் காலியாக விடுங்கள். அதற்குப் பிறகுதான் என்ஜினும் மற்ற கம்பார்ட்மென்ட்களும் வரவேண்டும். இரு ரயில்கள் மோதிக் கொண்டால்கூட ஆள் சேதம் எதுவும் இல்லாமல் தடுக்க இந்த ஏற்பாடு உதவும்.

இப்போதெல்லாம் உங்கள் சிக்னல்களை நம்பவே முடிவதில்லை. இனி ஸ்டேஷன் களுக்கு அருகில் டிராஃபிக் கான்ஸ்டேபிள்களை நிற்க வைக்க வேண்டும். கையில் 'ஸ்டாப்' பலகையோடு தண்டவாளத்தின் நடுவில் இவர்கள் நின்றால் விபத்துக்கள் பெரும் அளவு தவிர்க்கப்படலாம்.

மேற்சொன்ன யோசனைகள் எதுவுமே பிராக்டிகலாக இல்லையென்றால் மிஞ்சி யிருப்பது ஒரே ஒரு வழிதான். பொதுமக்கள் யாரையும் ரயிலில் பயணம் செய்ய வேண்டாம் என்று வானொலி மூலம் கேட்டுக் கொள்ளுங்கள். இதனால், ஆக்ஸிடென்ட் நடந்தாலும் ரயிலுக்குத்தான் சேதம் இருக்கும்; உயிருக்குச் சேதம் இருக்காது.

இப்படிக்கு,
உயிரைப் பணயம் வைத்து ரயிலில் பயணம் செய்யும்
இந்தியக் குடிமகன்.

வந்து இறங்கினார்கள். அவர்கள் கூட ஒரு பெரிய கூடையும் வந்து இறங்கியது. கறிகாய்க் கூடை மாதிரி இருந்தது. அம்புஜத்திற்கு மாப்பிள்ளையைப் பார்த் ததை விட அந்தக் கூடையைப் பார்த்த தில் பரம ஆனந்தம். ஊரிலிருக்கும் தன் பெண்ணின் சமர்த்தைப் பற்றிப் பெரு மிதப்பட்டுக் கொண்டாள்.

''என்னவோ சொன்னீர்களே? நம்ம பெண் கெட்டிக்காரிதான்! பட்டணத் தில் கறிகாய் விலைகளின் போக்கைத் தெரிந்து கொண்டு, தோட்டத்துக் கறி காய்களாக ஒரு கூடை அனுப்பி வைத் திருக்கிறாள் பாருங்கள்!''

''இரண்டு ரூபாய் எழுபது பைசா செலவழித்து எதற்கு ஆட்டோ ரிக்ஷா வைத்தேன் என்று நினைக்கிறாய்?..அந் தக் கூடைக்காகத்தான்!''

''கூடையைத் திறந்து பாருங் களேன்!'' பொறுமையை இழந்தாள் அம்புஜம்.

''சே..சே!.. மாப்பிள்ளையே வந்து திறந்தால்தான் மரியாதை! வழிப்பறிக் காரன்கள் மாதிரி அவசரப்படுகிறாயே! போ! போ! காப்பியைக் கொண்டு வா!


கைகால்களைக் கழுவிக் கொண்டு வந்து மாப்பிள்ளை திடீரென்று, ''அடேடே! மறந்தே போயிட்டேன்! உங்க பெண் உங்களுக்கு ரொம்பப் பிடிக்கும் என்று ஒரு சாமான் கொடுத் தனுப்பியிருக்கிறாள்'' என்று சொல்லிக் கொண்டே கூடையை அணுகினார்.

கூடையைக் கட்டியிருந்த கயிற்றை நறுக்க அம்புஜம் அவசரம் அவசரமாக அரிவாள்மணையைக் கொண்டு வந்து கொடுத்தாள்.

கயிற்றை அகற்றிக்கொண்டே மாப் பிள்ளை சொன்னார்: ''முந்தா நாள் அடித்த பலத்த காற்றில், தோட்டத்தி லிருந்த ஒரு முருங்கை மரம் விழுந்து விட்டது! நல்ல இளம் கீரை. உங்க பெண் ராஜம் தன் கைப்பட நிறைய கீரையைப் பறித்து அனுப்பியிருக்கிறாள். கீரை தளதளவென்று இருக்கிறது..''

லோகநாதன் வாசற்பக்கம் பார்த் தார். அம்புஜம் பின்கட்டுப் பக்கம் பார்வையைத் திருப்பினாள்.

மாப்பிள்ளை முருங்கைக்கீரைக் கட்டு களை எடுத்துக் கூடத்தில் அழகாக



நர்மதை எங்கே போகிறாள்?

- ஏ.கே.சரஸ்வதி -

நாக்கைச் சப்புக் கொட்டிக்கொண்டு கேட்க வேண்டாம் — ஹாஸ்டலுக்கு சலவைத் துணிகளைக் கொண்டு வந்த யங் ஃபேலொவைக் குற்றுயிரும் கொலை உயிருமாய் வெளியே அனுப்பித்த கதையோ, இல்லை, பாய் ஃப்ரெண்டை நம்பி மோசம்போய் மூன்றாவது மாடியிலிருந்து தற்கொலை செய்து கொண்டவள் கதையோ—என்று. இந்தக் கதை வேறு விதமானது.

என் பெயர் நர்மதா. அது என்னவோ லட்சுமி, சரஸ்வதி என்கிற சாதாரணப் பெயர்கள் என் அப்பாவுக்குப் பிடிக்கவில்லையாம். போன தீபாவளிக்குப் பாட்டியை நமஸ்காரம் பண்ணிவிட்டு எழுந்திருந்தபோது அவள் கண்ணாடியைத் துடைத்து மாட்டிக்கொண்டு என்னையே உற்றுப் பார்த்துவிட்டு, 'உம்... நன்னாத் தான் பேரு வச்சிருக்கான் உங்க அப்பன்-நர்மதான்னு. மதமதன்னு பிரவாகம் எடுத்து ஓடற அந்த நர்மதா நதி மாதிரித் தாண்டி இருக்கே நீயும். ஓட்டமா ஓடி கடல்லே போய்ச் சேர்றது அது. உங்க அப்பன் உன்னை எவங்கிட்டே ஒப்படைக்கப் போறான்?' என்றாள். 'போ பாட்டீ, உனக்கு வேறே வேலையில்லே.' நான் சிணுங்கினேன். அந்தப் பக்கமாய் அப்பா வந்தார். 'அம்மா, உனக்கு வேறே வேலை இல்லியா? சின்னஞ் சிறுசுகள்கிட்டே எதைப் பேசறது, எதைப் பேசக் கூடாதுங்கிறதுன்னு கிடையாது உனக்கு. இந்தக் காலம் என்ன உன் காலம் மாதிரின்னு நினைச்சியா? நீ இத்துனூண்டு பொண்ணா இருந்தப்போ உன் கையிலே வாழைப் பழத்தைக் குடுத்து உனக்குத் தாலி கட்டினாளே அந்த மாதிரி நினைச்சியா? சும்மா இரும்மா நீ!'-உரத்த குரலில் பாட்டியை அடக்கினார்.


என் மனக் கண் முன்னால் பிரவாகமாக ஓடுகிற நர்மதை தெரிந்தது. 'நுங்கும் நுரையுமாய்ப் புதுவெள்ளம்; படபட வென்று அடியோடு சாய்கிற மரங்கள்; இத்தனை வேகமாக எங்கே போகிறாள் நர்மதா? கம்பீரமாக சமுத்திர ராஜன் தன் கரங்களை அகல விரித்து அவளை வரவேற்கிறான். அவள் அவனுக்குள் சங்கமமாகிறாள்'. சின்ன வயசில் பாட்டி எனக்கு எத்தனையோ கதைகள் சொல்லியிருக்கிறாள். வெள்ளப் பெருக்கின்போது நர்மதை நதிக்கரையிலிருந்த ஏதோ ஒரு புண்ணிய தலத்தில் அவளும் சக யாத்திரிகர்களும் அகப்பட்டுக்கொண்டு தவித்ததைக் கதையாக வர்ணித்திருக்கிறாள். இந்தியா முழுவதும் புனித யாத்திரை செய்திருக்கிறவள் எங்கள் பாட்டி.

'நர்மதை கிழக்குக் கரையிலா மேற்குக் கரையிலா?'-சட்டென்று எனக்குச் சிரிப்பு வந்தது. என் கூடப் படிக்கிற தோழி ஒருத்தி அடிக்கடி சொல்லுவாள். 'மனித உடம்பின் ஜியாகரபியை விடவாடீ மண்ணின் ஜியாகரபி முக்கியம்?' 'அது ஜியாகரபி இல்லையடீ அசடு, ஃபிஸியாலஜி' என்று சுற்றியிருக்கிற நாங்கள் கிண்டல் பண்ணுவோம். 'ஜியாகரபி இல்லையா?' என்று கேட்டுவிட்டு அங்கம் அங்கமா வெளிப்படையாக வர்ணிக்க ஆரம்பித்து விடுவாள் அவள். நிறுத்துவதற்குள் போதும் போதுமென்று ஆகிவிடும்.

நான் பள்ளியிறுதிப் படிப்பை முடித்த வருஷம்தான் அக்கா மீனாவுக்குக் கல்யாணம். பட்டுப்பாவாடை, தாவணி, மருதாணி, ஸ்வீட், காஸ் லைட்டில் ஊர்வலம், கெக்கேபிக்கே என்ற சிரிப்பு இவையெல்லாம்தான் கல்யாணம் என்று எண்ணிக் கொண்டிருந்த அந்த வயதில்



மீனு அக்காவைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிற அவரைப் பார்த்ததும் என் மனசில் சட்டென்று ஒரு குறுகுறுப்பு. ஆள் 'ஜம்' என்று மாப்பிள்ளை மாதிரித்தான் இருந்தார். ஆமாம் மாப்பிள்ளைதானே? கல்யாணத்துக்கு மறுநாள். அக்காவும் புது மாப்பிள்ளையும் மாடியில் இருந்தார்கள். 'அக்காவைக் கூப்பிட்டுக் கொண்டு வாடி' என்று அம்மா சொன்னாளே யென்று நான் மாடிக்குப் போனேன். மூடியிருந்த அறைக் கதவைத் தட்டாமல் தள்ளியதும் சட்டென்று திறந்து கொண்டது. 'திக்' என்றது எனக்கு. புது மாப்பிள்ளையும் பெண்ணும்.... அக்கா சமாளித்துக் கொண்டாள். சட்டென்று திரும்பிக் கொண்டு 'அக்கா, அம்மா கூப்பிடறா' என்று சொல்லிவிட்டு நகர இருந்த என்னைக் கையைப் பிடித்து இழுத்து அக்கா, 'நில்லுடி' என்று, மாப்பிள்ளைக்கு அறிமுகப்படுத்தினாள். 'இவள்தான் நர்மதா. எங்க குடும்பத்திலேயே வெரி இன்ட்டலிஜென்ட் கேர்ல். எப்பவும் எதிலும் ஃபஸ்ட்' என்றாள். மாப்பிள்ளை என் கன்னத்தில் செல்லமாகத் தட்டி, 'ஸ்வீட் கேர்ல்' என்றார். எனக்கு ஷாக் அடித்த மாதிரி இருந்தது. அக்கா அவரைப் பார்த்து முறைத்ததைக் கவனித்துக்கொண்டே கிடுகிடுவென்று மாடிப்படி இறங்கி வந்துவிட்டேன்.



நூற்றுக்கு மேற்பட்ட விகடன் வாசகர்கள் எழுதி அனுப்பியது இது:

PACK MY BOX WITH FIVE DOZEN LIQUOR JUGS.

டைப்ரைட்டிங் கற்றுக்கொள்பவர்களின் பயிற்சிக்காக அளிக்கப்படும் வாக்கியமாம் இது.

ஏனோ அன்று முதல் அவர் என் ஹீரோ ஆகிவிட்டார். 'ஸ்வீட் கேர்ல்' என்ற அவருடைய வார்த்தைகள் அடிக்கடி என் காதில் ஒலித்துக் கொண்டிருந்தன. அக்கா மீனு டில்லியில் இருக்கிறாள். எப்போதாவது தான் இங்கே வருவாள் அவருடன். ஆனால், எதனாலோ அவள் என்னை அவர் அருகே போக விடுவதே இல்லை.

அவருடைய உருவம் கொஞ்சங் கொஞ்சமாக மங்க ஆரம்பித்தது. எனக்குள் ஏதோ ஒன்று என் சொந்த ஹீரோவை இனங்காட்ட முயன்று கொண்டிருந்தது. தோழிகள், சொந்தக்காரர்கள் கல்யாணத்துக்குப்போனால்அங்குவரும் இளைஞர்களைக் கண்ணால் அளப்பேன். ஊஹூம்.. என் ஹீரோ அகப்படவில்லை. பருத்த உதடுகள் அல்லது நோஞ்சான் உடம்பு. கோழி முட்டைக் கண், இல்லாவிட்டால் முன் மண்டை வழுக்கை. தவறிப்போய் அங்க லட்சணங்கள் அமைந்துவிட்டால் கொத்தித் தின்னுகிற பார்வை.


ஒரு நாள் என் ஹீரோவைப் பார்க்கத்தான் செய்வேன். பாட்டி அடிக்கடி புலம்புவது என் காதில் விழும். 'காலா காலத்திலே இவளை எவன் கையிலானா பிடிச்சுக் குடேண்டா' என்று அப்பாவை நச்சரிப்பாள். நான் என் மனத்துக்குள் சொல்லிக் கொள்வேன், 'எவன் கையிலாவது இல்லை பாட்டி; என் மனசுக்குப் பிடிச்ச என் ஹீரோவின் கையிலேதான்.' இதைச் சொல்லும்போது எனக்கே வெட்கம் வந்துவிடும். என் ஹீரோ யார்?

எனக்குத் தெரியாது. ஒருவேளை எனக்கு ஹீரோவே இல்லாமல் ஆகிவிடுமோ?

பாட்டி ஒவ்வொரு சமயம் சொல்லும்போதும் அப்பா குறுக்கிட்டுச் சொல்லுவார்: 'நீ சும்மா இரும்மா. நர்மதா நன்னா படிக்கறா. யூனிவர்ஸிடி யிலே ராங்க் வருவான்னு நான் பார்த்திண்டிருக்கேன். நீ ஏதாவது குட்டையைக் குழப்பிண்டிருக்காதே.'

யூனிவர்ஸிடி ராங்க்! ஆண்டவன் என்னை ஏன் புத்திசாலியாகப் படைத்தான்? நான் வாங்கியிருக்கிற கோப்பைகள், மெடல்கள் ஏராளம் ஏராளம். ஆனால் எவுதும் உபயோகமில்லாததாகத்தான் எனக்குத் தோன்றியது. என் அறிவு எல்லா வகையிலும் வளர்ந்து கொண்டுதான் வந்தது. சிநேகிதிகளின் பாய் ஃபிரண்ட்ஸ்,





தைரியசாலிகளான பெண்கள் வாழுகிற வாழ்க்கை, குடிகாரக் கணவனோடு சண்டை போட்டுக் கொண்டும் பிரியாமல் வாழ்கிற வேலைக்காரி முத்தாயியின் கதை — எல்லாம் எனக்குத் தெரியும். இதிலெல்லாம் எனக்கு இன்ட்ரெஸ்ட் இல்லை. நான் என் ஹீரோவைத் தேடிக் கொண்டிருந்தேன்.

பரீட்சைக்கு ஒரு வாரம் முன்னால் அந்த சம்பவம் நடந்தது. பஸ்ஸில் எப்போதுமே கூட்டம். முண்டியடித்துக் கொண்டு ஏறி, புத்தகத்தின் நடுவில் இருந்து பஸ் பாஸை எடுத்தபோது சட்டென்று ஒரு புத்தகம் விழுந்து விட்டது. எடுக்க நான் குனிந்தபோது அவனும் குனிந்தான். எங்கள் தலை இடித்தது. ஒரே சமயத்தில் இரண்டு பேரும் 'ஸாரி' என்றோம். எனக்கு முன்னால் அவன் புத்தகத்தை எடுத்து விட்டான். 'தாங்க்ஸ்!'—நான் அவனை நிமிர்ந்து பார்த்தேன். அப்பா... என்ன உயரம்! நான் இறங்க வேண்டிய ஸ்டாப்பிங் வருவதற்குள் தற்செயலாக இரண்டு மூன்று முறை தலையைத் திருப்பிப் பார்த்தேன். அவன் என்னையே பார்த்துக் கொண்டிருந்தான். மனதுக்குள் ஒரு கிளுகிளுப்பு.

அதற்கப்புறம் இரண்டு மூன்று முறை அவனை நேரில் பார்த்தேன். என்னைப் பார்த்து அடையாளம் தெரிந்துகொண்டு புன்முறுவல் பூக்கிற மாதிரி இருந்தது. ஆனால் நான் 'என்க்கரேஜ்' பண்ணவில்லை. அவனை அப்புறம் நான் பார்க்கவில்லை. இரண்டு மூன்று முறை கனவில் வந்தான், அவ்வளவுதான்.

பரீட்சை வந்தது. ராப்பகலாய்ப் படித்தேன். எழுதினேன்.

ரிஸல்ட் வந்தது. அப்பா நினைத்த மாதிரியே யூனிவர்ஸிடியில் ஃபஸ்ட் ராங்க். தங்கப் பதக்கம் பரிசு. அடுத்தது? 'இனிமே என்னடா? கல்யாணத்தைப் பண்ணி வையேன். இவ இன்னும் படிச்சுட்டு இவளுக்குமேலே படிச்ச இன்னொருத்தனைத் தேடணுமா என்ன?'

அப்பா என்ன பதில் சொல்கிறார் என்று காதைத் தீட்டிக் கொண்டு கேட்டேன்.

'நீ என்னம்மா தொண தொணன்னு சதா கல்யாணத்தைப் பத்தியே பேசிண்டு. நர்மதா எம். எஸ்ஸி., படிக்கணும்; பி. எச்., டி., பண்ணணும்; வெளிநாடெல்லாம் போகணும்..... இன்னும் எவ்வளவோ இருக்கு.'

கண்ணாடியில் தெரிந்த என் உருவத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். நர்மதை நதி பிரவாகம் எடுத்து ஓடிக் கொண்டிருக்கிறது. அது சஹாராவைப் போய் அடைகிறது. அடைந்ததும், காய்ந்த தோசைக்கல்லில் விழுந்த நீர்த் திவலைகள் இருந்த இடம் தெரியாமல் போவதுபோல் நர்மதை வற்றிப் போய் மறைந்து விடுகிறது.


அறைக்குள் அப்பா நுழைகிறார். அவர் கையில் இருப்பது மஞ்சள் தடவிய ஜாதகக்கட்டு அல்ல. எம். எஸ். ஸி., அப்ளிகேஷன் ஃபாரம்.

'யூனிவர்ஸிடி ஃபஸ்டுக்கு ஸீட் இல்லாமலா போய்விடும்?' என்று மகிழ்ச்சியுடன் என்னைப் பார்க்கிறார். என் உள்ளம் அழுகிறது.

எங்கள் வீட்டில் நான் மட்டும் ஏன் இத்தனை புத்திசாலியாகப் பிறந்தேன்?


விமல் தொழில்நுட்பம்
எங்கள் 379 நவீன இயந்திரங்கள்
என்றும் தயார். அவற்றை இயக்குவதோ
தகுதிவாய்ந்த எங்கள் 1500 நிபுணர்.
எங்கள் விமல் துணியின்
தரத்திற்கு எதுவும் இல்லை நிகர்.
VIMAL
A RELIANCE PRODUCT
சூட்டிங்ஸ்

கடல் நீர்



குமாரி பீ.கீதா

மோட்டார் 'ஹார்ன்' சப்தத்தைக் கேட்டு அவள் பால்கனிக்கு ஓடி வந்தாள். மறுபடியும் ஏமாற்றம்தான். ஒரு டாக்ஸி கேட்டைத் தாண்டி வெளியேறிக் கொண்டிருந்தது. அவள் கைக் கடிகாரத்தைப் பார்த்தாள். மணி ஐந்து. டாக்டர் மூன்றரைக்கு வருவதாகச் சொல்லியிருந்தார். அவள் மனத்தில் கவலை நிழலாடியது. இந்தத் தடவை உள்ளே போகாமல் அவள் அங்கேயே பால்கனி சுவரின் மீது சாய்ந்து நின்றாள்.

கீழே அந்த ஐந்து கட்டடங்களுக்கு நடுவிலிருக்கும் காம்பவுண்டுக்குள் 'இ-5' வீட்டு பாமா, காலனியின் மற்ற சில குழந்தைகளுடன் பந்து விளையாடிக் கொண்டிருந்தாள். பக்கத்து 'டி-6' பால்கனியில் ரவியின் அம்மா கொடியிலிருந்து காய்ந்த துணிகளை எடுத்துக் கொண்டிருந்தாள். தற்செயலாக அவள் பார்வை அங்கு திரும்பியது. அவளைப் பார்த்ததும் ரவியின் அம்மா பாக்கித் துணிகளை அப்படியே விட்டுவிட்டு அவசர அவசரமாக அவளைப் பார்க்காதது போல் உள்ளே ஓடினாள். ரவியின் அம்மாவின் பதட்டத்தைக் கண்டு அவள் இதழோரத்தில் ஒரு சிறு கேலிப் புன்னகை நெளிந்து மறைந்தது. மற்றபடி அவள் முகத்தில் எந்த விதமான மாறுதலும் ஏற்படவில்லை. அவளுக்கு இப்போது இதெல்லாம் பழகிப் போயிருந்தது. அவள் வறண்ட பார்வை மறுபடியும் கேட்டை நோக்கி டாக்டரின் காரைத் தேட ஆரம்பித்தது.

கேட்டின் பக்கத்திலிருக்கும் கார்ப்பொரேஷன் குழாயிலிருந்து நூலைப்போல் தண்ணீர் ஒழுகிக்கொண்டிருந்தது. சற்று முன்பு அதைச் சுற்றியிருந்த கூட்டம் இப்போது அங்கே காணோம். திடீரென்று அவள் பார்வை ரோட்டையொட்டியிருக்கும் நீண்ட திடலைத் தாண்டி கடலின் மீது பதிந்தது. அவள் இரண்டொரு முறை முடிவே இல்லாத அந்த விசாலமான நீல நிறத் தண்ணீர்-விரிப்பையும், கார்ப்பொரேஷன் குழாயிலிருந்து நூலிழைபோல் ஒழுகிக் கொண்டிருந்த தண்ணீரைக் கண்டு ஏமாற்றம் அடைந்து கலைந்து கொண்டிருக்கும் கூட்டத்தையும் மாறிமாறிப் பார்த்தாள். அவள் புருவங்களுக்கிடையில் சோகமும் விரக்தியும் கலந்த ஒரு சிறு சுருக்கம் தோன்றியது. கடலில் எத்தனை நீர் இருக்கிறது...... ஆனால் தாகம் எடுக்கும்போது..?

அவள் மீண்டும் தன் பார்வையை கேட்டின் பக்கம் திருப்பினாள். 'ஏ-2'ல் இருக்கும் மோகன்ராவின் ஸ்கூட்டர் விர்ரென்று உள்ளே நுழைந்து கொண்டிருந்தது. அவரைப்



குமாரி பீ.கீதா, கர்நாடக பல்கலைக் கழகத்தில், குல்பர்கா பி.ஜி. சென்டரில் ஹிந்தி எம்.ஏ. இறுதி ஆண்டு படிக்கும் முதல் தமிழ்ப் பெண். மராட்டியமாநிலத்தில் மராட்டிய மொழியிலேயே பி.யூ.சி. வரை படித்தவர். ஆங்கிலம், மராட்டி, ஹிந்தி, சமஸ்கிருதம், ஜெர்மன் ஆகிய மொழிகளில் கதை, கவிதை எழுதியிருக்கும் இவர், விகடன் 'மாணவர் ஸ்பெஷலை'ப் பார்த்து, ஆவேசம் பிறந்து, அதே வேகத்தில் தமிழில் தன்னுடைய முதல் கதையை எழுதி அனுப்பியிருக்கிறார்.

பார்த்தவுடன் அவள் மனத்தில் மின்னலைப் போல் ஒரு யோசனை பளிச்சிட்டது. அவள் கண்களில் ஒரு சிறு ஒளி சுடர்விட்டது. கையைத் தட்டி பாமாவை மேலே வரச் சொன்னாள். பிறகு தானே அகற்ற கதவருகே சென்றாள்.

இரண்டு நிமிடங்களுக்குள் பாமா மூச்சு இரைக்க வீட்டிற்குள் நுழைந்தாள். அவள் குனிந்து பாமாவின் பூக் கன்னங்களைத் தடவினாள்... ''பாமாக் கண்ணு! எனக்கு கொஞ்சம் ஏ-2 வீட்டுக்குப் போகணும். ஐந்தே நிமிஷத்திலே வந்துடுவேன். அதுவரைக்கும் இங்கே உட்கார்ந்திருப்பாயா?'' பாமா மூச்சு வாங்கியபடியே 'சரி' என்பதுபோல் தலையாட்டிவிட்டு பந்தையெடுத்து 'டொக் டொக்' என்று விளையாட ஆரம்பித்தாள். அவள் பாமாவிடமிருந்து பந்தைப் பிடுங்கிக் கொண்டாள். ''ஊம்...... அம்மாக்கு உடம்பு சரியா இல்லே. தூங்கறா. சப்தம் போடக் கூடாது. சமத்தோன்னோ?''...... பாமா அசடு வழிய தலையாட்டி பக்கத்திலிருக்கும் ஸ்டூலின்மேல் ஏறி உட்கார்ந்தாள். அவள் பந்தை பாமாவிடம் திருப்பிக் கொடுத்தாள். தன்னை அறியாமலேயே பாமாவின் குட்டிக் கால்கள் ஊஞ்சலாட ஆரம்பித்தன.

''கதவு திறந்தே இருக்கட்டும், என்ன?''— அவள் மெள்ள பாமாவிடம் சொன்னாள். ''யாராவது வந்தா நான் டாக்டருக்கு ஃபோன் பண்ணப் போயிருக்கேன்னு சொல்லு!....''—அவள் செருப்பை மாட்டிக் கொண்டே பாமாவின் கன்னங்களைத் தட்டிக் கொடுத்துவிட்டுக் கீழே இறங்கி ஓடினாள்.

அங்கும் இங்கும் ஓடிக்கொண்டிருக்கும் குழந்தைகளின் பந்தடியிலிருந்து தப்பித்துக் கொண்டு வேகமாக அவள் 'ஏ பிளாக்'கை நோக்கி நடந்தாள்.

''எக்ஸ்க்யூஸ் மீ....''

'இ-2' மானேஜர் மாமா அவளை நிறுத்தினார். அவர் ஒரு கம்பெனியில் ஜெனரல் மானேஜர். இந்தக் காலனி வாசிகளின் சங்கத்திற்கு பிரஸிடெண்டும் கூட.

''நீ நம்ப காலனி வாச்மேனை உன் 'பர்ஸனல்' வேலைக்காக அடிக்கடி அங்கே இங்கே அனுப்புவதாக எல்லாரும் 'கம்ப்ளெயின்ட்' பண்ணிண்டிருக்கா.''

''நானா..?'' அவள் சற்று வியப்படைந்தாள். ''அடிக்கடி இல்லையே ஸார்..! அம்மாவுக்கு உடம்பு ரொம்ப மோசமாக இருந்தது. அதனால் நேத்து மட்டும்...''

''நோ.. நோ..!''—அவளை மேலும் பேச விடாமல் அவர் 'கட்' பண்ணினார்... ''ரூல்ஸ்னா ரூல்ஸ்தான்... எப்பேர்ப்பட்ட 'எமர்ஜன்ஸி' ஆனாலும் நீ வாட்ச்மேனை வெளியே அனுப்பக் கூடாது...''

''.......... நாளைக்கு அசோஸியேஷன் மீட்டிங் இருக்கு. நீ வந்து 'எக்ஸ்ப்ளெயின்' பண்ணணும்... பை தி வே, அம்மாவுக்கு இப்போ எப்படி இருக்கு?''

''ஸோ..ஸோ..'' என்று கூறிவிட்டு அவள் 'ஏ பிளாக்' பக்கம் ஓடினாள்.

காலிங் பெல்லை அழுத்தினதுமே 'ஏ-2' கதவு திறந்தது. இந்தக் காலனியில் அவளுக்காக இப்படித் திறக்கப்படும் கதவு இது ஒன்றுதான்!

''ஹல்லோ..!'' சற்றும் மாறுதல் இல்லாத அதே அன்புக் குரல்! முன்பின் யோசனை செய்யாமல் சட்டென்று பூக்கும் புன்னகை! அதே கனிவு!.. ஏன் எல்லோருமே இப்படி இருப்பதில்லை? மோகன்ராவ் கதவருகே நின்று கொண்டிருந்தார்.

''.... கொஞ்சம் டெலிஃபோன்..''

''ஓ யெஸ்...'' என்று கூறிவிட்டு பக்கத்து பெட்ரூமுக்குப் போய்விட்டார். அவர் ஒரு ஜென்டில்மேன்.

அவள் உள்ளே காலெடுத்து வைத்ததும் 'டைனிங்' டேபிளின்மீது துணிகளை 'ப்ரஸ்' செய்து கொண்டிருந்த மோகன்ராவின் மனைவி உடனே டெலிஃபோனுக்கு முதுகு காட்டியபடி நின்று 'பிரஸ்' செய்ய ஆரம்பித்தாள், வந்தவளின் முகத்தைப் பார்க்க விரும்பாதவள் போல்.

அவள் பேசாமல் ஃபோனருகே போய் எண்களை ஒவ்வொன்றாகத் திருப்பினாள். நம்பர் கிடைக்கவில்லை. சற்று கழித்து மறுபடியும் முயன்றாள். கிடைக்கவில்லை.

''நம்பரே கிடைக்கவில்லை மாமி..'' அவள் கிளம்பினாள்.

''ஊம்..'' மிஸஸ் மோகன்ராவ் ஒரே 'பிஸி!' தலையைத் தூக்கிப் பார்க்கக்கூட நேரமில்லை.

''தாங்க் யூ!'' — அவள் மெள்ள அங்கிருந்து நழுவினாள்.

கட்டடத்துக்கு வெளியே வந்தவுடன் அவள் ஞாபகத்திற்கு வந்தது. அவள் ஸைக்கிள் லைட் எத்தனையோ நாட்களாக மோகன்ராவிடமே இருக்கிறது. அவள் திரும்பி மாடிப் படிகளில் அதை வாங்கி வர ஏறலானாள்.

''உளறுதே! அக்கம்பக்கத்து வீட்டுக் காராள்னு நமக்கு சில கடமைகள் உண்டு..'' மோகன்ராவ் உரத்த குரலில் பேசிக் கொண்டிருந்தார். அவள் கால்கள் தயங்கவே, வெளியிலேயே நின்று விட்டாள்.

''ஆமாம்! யாருக்குமில்லாமல் உங்களுக்கு மட்டும் என்ன கரிசனம்?''

''மத்தவாளைப் பத்தி எனக்குத் தெரியாது. என்னைப் பொறுத்தவரை பாவம், அந்தப் பொண்ணு ஒரு நோயாளி அம்மாவை வச்சிண்டு தனியா திண்டாடறுளேன்னுதான்....வயத்துப் பொழப்புக்காக ஆயிரம் மைல் அன்னண்ட போய்ச் சம்பாதிக்கிற ஒரு அண்ணன்.. எந்த நிமிஷமும் என்ன வானுலும் ஆகும் என்கிற மாதிரி ஒரு அம்மா....சொந்தக்காரர்களும் யாரும் எட்டிப் பார்ப்பதாகத் தெரியலே.''

''அதனுலேதான் ஜாஸ்தி தலையைக் கொடுத்து மாட்டிக்காதேங்கோன்னு சொல்றேன். நீங்க இருக்கிறபோது ஏதாவது ஆயிடுத்துன்னு? எல்லாம் உங்க தலையிலேதான் வந்து விடியும்..''

மோகன்ராவ் மௌனம் சாதித்தார்.





இளமைப் பருவத்தில் ஏற்படும் பற்சிதைவு, நிரந்தரப் பற்கள் தெற்றுப் பற்களாக வளர்ந்து, என்றென்றும் சிரிக்கவே முடியாத நிலைக்கு உங்களை ஆளாக்கிவிடக் கூடும்—நீங்கள் உங்கள் பற்களுக்குப் பினகா ஃப்ளோரைட்* பாதுகாப்பு அளிக்காத வரையில்.

உலகெங்கும் நடத்திய சோதனைகளின் மூலம், பற்பசையில் அடங்கிய பொருட்களில் ஃப்ளோரைட் மட்டுமே, பல் எனமலோடு <u>உண்மையிலேயே கலந்து</u>, அதற்குப் பற்சிதைவை எதிர்க்கும் வலிமையை ஊட்டுகிறது என்று நிரூபணமாகி உள்ளது. பினகா ஃப்ளோரைடின் நீடித்துநிற்கும் ஆற்றல், பற்களைச் சிதைக்கும் கிருமிகளின் வளர்ச்சியையும் வலிதரும் சொத்தையையும் தடுக்கிறது.

*தீவிர ஃப்ளோரைட் கலவையான ஸோடியம் மோனோஃப்ளோரோபாஸ்பேட் அடங்கியது.



பல்லுக்கு உறுதி,
பற்சிதைவுக்கு எதிரி—

பினகா ஃப்ளோரைட்

இந்தியாவின் முதன்முதல் சக்திவாய்ந்த ஃப்ளோரைட் பற்பசை

U-BF 7/7 tam

''இங்கே அறுபது ஃபாமிலிஸ் இருக்கா.. எல்லாருமே இவளை 'அவாய்ட்' பண்ணிண்டிருக்கா. இது புரிய வேண்டாமா? உங்களுக்கு மட்டும் என்ன வேத்து வடியறது?''

அவள் மலைத்துப் போனாள். பலவீன மடைந்த அவள் கால்கள் படிகளில் இறங்க ஆரம்பித்தன. இரண்டு முறை படி தவறி விழப் பார்த்தாள்... இனி மேல் தப்பித் தவறிக்கூட அவள் மோகன் ராவ் வீட்டுப் பக்கம் வரமாட்டாள். கடைசி நம்பிக்கையிலும் மண் விழுந்து விட்டது!

''சித்த நில்லுடீ..''—'பி-1' பாட்டி பூசனிக்காய்க்குக் கால் வைத்த மாதிரி வந்து கொண்டிருந்தாள்.

''திருப்பதி போயிருந்தோம். ஆத்துக்கு வா, பிரசாதம் தரேன்....''

''இப்போ வாண்டாம் பாட்டி..''

''ஏண்டீ? சாமி பிரசாதத்தை வாண்டாம்னு சொல்லுவாளோ..?''

''அதுக்கில்லே பாட்டீ. அம்மாவைத் தனியா விட்டுட்டு வந்திருக்கேன்..''

''ஏன்? முனியம்மா இல்லையா?..''

''அவ பேத்திக்குக் கல்யாணம்னு நாலு நாளா மட்டம் போட்டிருக்கா..''

''அடப் பாவமே! சரி, வா; ஒரே நிமிஷம்தான். அம்மா இப்படி படுத்த படுக்கையா கிடக்கா. சாமி பிரசாதத்தை வாண்டாங்காதே..''

அவள் இஷ்டமே இல்லாமல் பாட்டியைப் பின்தொடர்ந்தாள்.

''உங்கம்மாவ பாக்கணும் பாக்கணும்னு நெனைச்சிண்டிருக்கேன். நீயோ வந்து ஒண்ணும் கேக்கவும் மாட்டேங்கறே.. உங்காத்துக்கு வரலாம்னு நீ மாடீலே போய் உட்கார்ந்திருக்கே. எனக்கு இப்போல்லாம் தள்ளலேடீ. மாடி ஏறினா மூச்சு முட்றது..'' பாட்டி முணுமுணுத்துக் கொண்டே போனாள். அவள் ஒன்றும் பேசாமல் பின்னாலே நடந்து சென்று 'பி-1'க்குள் நுழைந்தாள்.

பாட்டி உள்ளே போய் ஒரு பொட்டலத்தில் பிரசாதத்தைக் கட்டிக் கொண்டு வந்தாள். அவள் கையை நீட்டினாள். பிரசாதத்தை அவளிடம் கொடுக்காமலே பாட்டி, ''ஏண்டீ! நீங்க இந்த வீட்டைக் காலி பண்ணிண்டு உங்க அண்ணாகிட்ட போகப் போறதா எல்லாரும் பேசிக்கறாளே, நெஜம் தானா?''

''ஆமாம் பாட்டி.. அம்மாவுக்கு உடம்பு இப்படி இருக்கு. அண்ணா எங்கேயோ இருக்கான். இப்போ பிரொபேஷன்லே இருக்கான். நெனச்சா லீவு கிடைக்காது. அவனுக்கு அங்கே 'குவாட்டர்ஸ்'கொடுத்திருக்கா. அம்மாவுக்குக் கொஞ்சம் தேவலையானவுடனே நாங்க போயிடுவோம்..''

''அப்போ உன் வேலை? விட்டுட்டா போகப் போறே?''

''ஆமாம். வேறு வழி?''

''அப்படின்னா அந்த வேலையை என் பேத்திக்குக் குடுத்துட்டுப் போடீ..'' —பாட்டி அவள் கையைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினாள்.

''அது என் கையிலே இல்லே பாட்டீ. நான் வேணா சொல்லிப் பாக்கறேன்..'' அவள் மெள்ளத் தன் கையை விடுவித்துக் கொண்டாள்.

''என் பேத்திகூட டெலிஃபோன் ஆபரேட்டர்- பாஸ் பண்ணிருக்கா. பாவம், கஷ்டப்படறா, கேட்டுப் பாரேன்..''

''வரேளா பாட்டி?''

பட்டுப் புடவையணிந்த சுமார் பத்து பதினைந்து பெண்மணிகள் உள்ளே எட்டிப் பார்த்தனர்..

''இதோ..''— பாட்டிஅவள் கையில் பொட்டலத்தை கொடுத்துவிட்டு அவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டாள். அவளும் வெளியே வந்தாள்.

''இன்னிக்கு 'பி-9'லே சௌந்தர்ய லஹரி. முடிஞ்சா வா..'' என்று சொல்லிவிட்டு, பாட்டி அந்தக் கூட்டத்துடன் மாடி ஏற ஆரம்பித்தாள்.

அவளுக்குச் சிரிப்பு வந்தது. அவள் வீடு முதல் மாடி. 'பி-9' மூன்றும் மாடி. பாவம்! பாட்டியால் முதல் மாடி ஏற முடியாதாம். மூச்சு முட்டுமாம்!

அவள் தன் பிளாக் பக்கம் ஓடினாள். பாமா, வாசலில் மற்ற குழந்தைகளுடன் பந்து விளையாடிக் கொண்டிருந்தாள். அவள் திடுக்கிட்டாள்.

''பாமா.. நீ கீழே வந்துட்டேயா?''

''ஏன்.. நான்தான் வரச் சொன்னேன்..''— பின்னாலிருந்து ஒரு கடுமையான குரல் காதில் விழுந்தது. அவள் திரும்பிப் பார்த்தாள். பாமாவின் அம்மா. முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க, ''இதோ பாரு, நீ படிச்சவ! இப்படி ஒரு ஸீரியஸ் வியாதிக்காரிகிட்டே ஒரு அஞ்சு வயசுக் குழந்தையை உட்கார வச்சுட்டுப் போறியே, உனக்குத் தெரிய

வேண்டாம்? இங்கே எத்தனே பேர் இருக்கா? காவலுக்கு உனக்கு பாமா தான் கிடைச்சாளா..?''

அவளுக்கு என்ன பதில் சொல்வ தென்றே புரியவில்லே. ''ஸாரி மாமி..'' —சோர்வடைந்த குரலில் பலவீனமாகக் கூறிவிட்டு மடமடவென்று மாடி ஏறிச் சென்ருள்.

வீட்டுக் கதவு அப்படியே திறந்து கிடந்தது. அவள் விர்ரென்று பெட் ரூமுக்குள் விரைந்தாள். கட்டில் காலி. சுவரோரமாக உருண்டு கிடந்த அம்மாவை டாக்டரும் அவர் அஸிஸ்டன் டுமாகச் சேர்ந்து தூக்கிப் படுக்கை யில் படுக்க வைக்க முயன்று கொண் டிருந்தார்கள்.

அவள் ஓடிப் போய் தலேயணையை சரிப்படுத்திஞள். அம்மா வாயிலிருந்து நுரை வழிந்து கொண்டிருந்தது. அவள் கொடியிலிருந்து ஒரு துண்டை இழுத்து வாயைத் துடைத்தாள்.

''இப்படியா பேஷண்ட்டை தனியா விட்டுட்டுப் போறது?''-டாக்டர் ஸ்டெ தாஸ்கோப்பை அம்மா நெஞ்சில் அழுத் தியபடி கேட்டார். அவள் வாயடைத்து நின்ருள். அஸிஸ்டன்ட் தயார் செய்து கொடுத்த இஞ்ஜெக்‌ஷனே கையில் குத்தி விட்டுப் பஞ்சால் அந்த இடத்தை தேய்த்துக் கொண்டே டாக்டர், ''நான் வந்தபோது கதவு திறந்திருந்தது... யாருமே இல்லே'' என்ருர்.

''நான் உங்களுக்குத்தான் ஃபோன் செய்யப் போயிருந்தேன். ஜஸ்ட் ஃபார் டென் மினிட்ஸ்..''

''அம்மாவை ஒரு நிமிஷம்கூட தனியா விட்டுட்டுப் போகக் கூடாதுன்னு சொல்லியிருந்தேனே..பக்கத்து வீட்டுக் காரர் யாரையாவது ஃபோன் பண்ணச் சொல்லக் கூடாதா!''

மேஜைக்கடியிலிருந்த கூடைக்குள் பஞ்சை விட்டெறிந்துவிட்டு பேஷண்ட் கையை மறுபடியும் போர்த்திவிட்டு டாக்டர் வாசல் ரூமுக்கு வந்தார். அவள் அவரைப் பின் தொடர்ந்தாள்.

டாக்டரின் புருவங்களுக்கிடையே நாமத்தைப் போல் கவலேயைக் குறிக்கும் ஒரு நீண்ட சுருக்கம்.. உதட்டைக் கடித்தபடி. ''உன் பிரதர் இப்பத்தான் வந்துட்டுப் போனரில்லேயா?''

''ஆமாம்..''

''இப்போ மறுபடியும் அவர் வர முடியாது இல்லியா? உங்களுக்கு உறவுக் காரா இருக்காளா?'' அவள் மிடறு விழுங்கிஞள். ''நிறைய பேர் இருக்கா. ஆனு, அவாளேத் தொந்தரவு பண்ண வேண்டான்னு பார்க்கிறேன்.''

டாக்டர் சிரித்தார்: ''புரியறது... அவா சமயத்துக்கு பிரயோஜனப்பட மாட்டா, அப்படித்தானே...?''

அவள் ஒன்றும் பதில் கூறவில்லே.

அஸிஸ்டன்ட் ஒரு பேப்பரை நீட்டி ஞன். பேனவை எடுத்து மருந்துப் பட்டியல் எழுதி அவளிடம் கொடுத் தார் டாக்டர்.

''இந்த மருந்துகளே உடனே வாங்கி யாகணும்.. நானே போய் வாங்கிண்டு வரட்டுமா?.''

''வேண்டாம் டாக்டர். நான் பார்த் துக்கிறேன்.''- அவள் 'ப்ரஸ்கிருப்ஷ'னே வாங்கிக் கொண்டாள். இவ்வளவு பெரிய டாக்டர் பணத்தைப் பார்க்காமல் வீட்டுக்கு வந்ததே ஜாஸ்தி. அவரை விட்டு மருந்து வாங்கச் சொல்வதா?

''தாங்க் யூ வெரி மச் டாக்டர்.''

''நாளேக்கு ஃபோன் பண்ணு...... இனிமே அம்மாவைத் தனியா விட்டுட் டுப் போகாதே.''

டாக்டரும் அஸிஸ்டன்டும் படியிறங்க லாஞர்கள். அவள் கதவருகே வந்து நின்ருள்.

சற்று நேரம் யோசித்த பிறகு எதிர் வீட்டின் மணியை அழுத்திஞள். கதவை அரைகுறையாகத் திறந்து ரவி யின் அம்மா தலேயை நீட்டிஞள்.

''என்ன வேணும்?''— கடுகடுத்த முகம். வெறுப்படைந்த குரல்.



''எமதர்மா! ஏன் நடந்து வரு கிறீர்? உமது வாகனம் எங்கே..?''

''சர்வீஸுக்கு அனுப்பி யுள்ளேன்.''

—ஏ. விமலநாதன்

''ரவி இருக்கானா மாமீ? எனக்கு கொஞ்சம் மருந்து வாங்கப் போகணும்.''

''அவன் சினிமாவுக்குப் போறானே'' என்று இழுத்தாள். எங்கே உள்ளே நுழைந்து விடுவாளோ என்கிற படி ரவியின் அம்மா வழி மறைத்தபடி நின்றிருந்தாள்.

''என்ன விஷயம்?''



ரவி ஷர்ட் பொத்தான்களை மாட்டிக் கொண்டே அம்மா பின்னால் வந்து நின்றான்.

''ரவி, நான் கொஞ்சம் பார்மஸிக்குப் போகணும். ஒரு பத்து நிமிஷம் அம்மாவோட உட்கார்ந்திருக்க முடியுமா?''

''ஸாரி... எனக்கு சினிமாவுக்கு இப்பவே லேட் ஆயிடுத்து...?''

அமாவாசை கும்மிருட்டு. கேட்டருகே நின்று வாட்ச்மேன் டார்ச் வெளிச்சத்தில் கைக் கடிகாரத்தை நோக்கினான். இரண்டு முப்பத்தைந்து. அவனுக்கு இன்று காலை ஐந்து மணி பஸ் பிடித்து ஊருக்குப் போக வேண்டும். பகல் ட்யூட்டி வாட்ச்மேனை நாலு மணிக்குள் வரச் சொல்லியிருக்கிறான்.

தாகம் அவன் தொண்டையை வறட்டியது. ஸ்டூலின் மீது வைத்திருந்த பானையும் வறண்டு கிடந்தது. அவன் எரிச்சலுடன் எதிரே ஓலமிட்டுக் கொண்டிருக்கும் கடலலைகளைப் பார்த்தான். கடல் நிறைய உப்புத் தண்ணீர்! தாகம் தணிய உதவுமா?

''க்ரீச்.. க்ரீச்..'' சப்தத்தைக் கேட்டு அவன் சட்டென்று திரும்பினான். அந்தக் கும்மிருட்டில் ஐந்து கட்டடங்களுக்கு நடுவில் இருக்கும் காம்பவுண்டில் ஓர் உருவம் மெள்ள மெள்ள அவனை நெருங்கிக் கொண்டிருந்தது. அவன் கையில் இருக்கும் கம்பை கெட்டியாகப் பிடித்து உற்றுப் பார்த்தான்.

''வாட்ச்மேன்..!'' சோர்வடைந்த ஈனசுரத்தில் ஓர் அழைப்பு!

''சத்தியமா இது நீர் யானை தாங்க... நாலு கால் தெரியுது பாருங்க.. காலாலே யோகாசனம் செஞ்சுகிட்டிருக்கு!''

அவன் அருகே போனான்.

''கொஞ்சம் கேட்டைத் திறக்கிறாயா?''-கையில் ஸைக்கிள் ஹாண்டிலைப் பிடித்தவாறு கேட்டாள் அவள்.

''இந்த நேரத்திலே எங்கே போறீங்கம்மா... டாக்டர் வீட்டுக்குத்தானே? நான் போய் வரவா...''— அவன் இரக்கத்துடன் கேட்டான்.

''வேண்டாம்பா! நானே போறேன். பிரஸிடன்ட் கோவிச்சுப்பார்.. நல்ல மாட்டுக்கு ஒரு சூடு போறாதா? கொஞ்சம் டார்ச் தர முடியுமா? ஸைக்கிள் லைட் இல்லை...''— அவள் குரல் கம்மியது.

''அம்மா.. அது வந்து.. எனக்கு இன்னிக்கு நாலு மணிக்கே போகணும்'' என்று தயங்கினான்.

''இதோ நான் பத்து நிமிஷத்திலே வந்துடுவேன்..''— அவள் தவித்தாள்.

''டாக்டர் வீடு ரொம்ப தூரமாச்சேம்மா..'' என்றான் கூர்க்கா, கேட்டைத் திறந்தபடி.

''நான் டாக்டர் வீட்டுக்குப் போகலே; அண்ணாவுக்குத் தந்தி கொடுக்கப் போகிறேன்..''

புடவைத் தலைப்பால் கண்களைத் துடைத்தபடி மற்றொரு கையில் வாச்மேனிடமிருந்து டார்ச்சை வாங்கிக் கொண்டு அவள் சைக்கிளில் ஏறிக் கொண்டாள்.

வாட்ச்மேன் வாயடைத்துப்போய் சற்று நேரம் அப்படியே கல்லாய் சமைந்து நின்றான். தாகம் அவன் நாக்கை வறட்டியது. அவன் அந்த ஐந்து கட்டடங்களைத் திரும்பிப் பார்த்தான். அறுபது கதவுகளும் நூற்றிருபது சாளரங்களும் முகத்தைத் திருப்பிக் கொண்டது போல் மூடியிருந்தன. அறுபது குடும்பங்களும் சுகமாக ஆழ்ந்த உறக்கத்தில் முழுகியிருந்தன.

எதிரே கடல் 'ஓ'வென்று ஓலமிட்டுக் கொண்டிருந்தது.



அனுபவம்

அன்று முதல் தேதி. பஸ் நிரம்பி வழிந்தது. மனித உடல்களின் நடுவில் மிக லாவகமாகத் தன்னை நுழைத்துக் கொண்டு முன்னேறி டிக்கெட் வழங்கிக் கொண்டிருந்தார் கண்டக்டர். அவ்விதம் அவர் நடந்து சென்றது சிறிய இரும்பு வளையத்தில் உடம்பை நுழைக்கும் தெருக்கூத்தாடியை நினைவுபடுத்தியது.

''யோவ், நீ மனுசனா மாடாய்யா? காலைப் போட்டு இப்படி மிதிக்கிறியே.''

''யோவ், மரியாதையா பேசு; ஏதோ கூட்டத்துலே கால் பட்டுடுச்சுங்கறதுக்காக வாயிலே வந்தபடி திட்டுறியே.''

''நானும் கொஞ்ச நேரமா பாத்துட்டுத்தான்யா சொன்னேன். இதோடு நீ மூணுவது வாட்டி மிதிச்சே.''

''என்னய்யா பெரிசா அல்டிக்கிறே, அதான் சொல்லியாச்சே தெரியாமே பட்டுடுச்சுன்னு. வுடவேண்டியதுதானே, பேசிட்டே போறியே.'' இதற்குள் ஒரு நடுத்தர வயதுக்காரர் சமரச முயற்சியில் இறங்கினார். ''சார், கூட்டத்துலே கால் கை படறது சகஜம். எல்லாத்தையும் அனுசரிச்சுத்தான் சார் போகணும். விடுங்க சார்'' என்றார். ''நீ என்னய்யா அந்த ஆளுக்கு வக்காலத்து. அந்த ஆள் மிதிச்ச மிதியிலே உயிரே போவுது. உனக்கென்ன தெரியும்?'' என்றான் மிதிபட்டவன். உடனே சிலிர்த்தெழுந்தான் இரண்டாமவன். ''பார்த்தீங்களா சார், இந்த மாதிரி 'இடியட்'டுங்களைப் போய்ச் சமாதானப் படுத்துறீங்களே. யோவ், நான் தெரியாமே மிதிச்சதுக்கே இப்படி அலர்றியே. வேணும்னு மிதிச்சா உன் காலே நசுங்கிடும். வாயை மூடிட்டு வா'' என்றான். நெரிசல் சிக்கலில் மாட்டிக் கொண்டு மூச்சுத் திணறிய மற்றவர்களுக்கு இந்தச் சண்டை ஒரு நல்ல என்டர்டெய்ன்மென்டாக இருந்தது. ''இந்தாப்பா, ரெண்டு பேரும் பஸ்ஸை விட்டு இறங்கிச் சண்டை போடுங்க. இல்லேன்னா நான் நேரா பஸ்ஸை போலீஸ் ஸ்டேஷன்லே கொண்டு போய் நிறுத்திடுவேன்'' என்று கண்டக்டர் கண்டிப்பாகக் கூறினார். இதை ஆமோதிப்பதைப்போல சில குரல்கள், ''ஆமாப்பா, சண்டையை நிறுத்துங்க. இல்லே, இறங்கிக்குங்க'' என்று ஒட்டுமொத்தமாக எழுந்தன. ஆனால் சம்பந்தப்பட்ட இருவரும் அடங்குவதாகத் தெரியவில்லை. இருவரும் சண்டைக் கோழிகளைப்போல் விரைப்பாகவே முறைத்துக் கொண்டும் திட்டிக் கொண்டும் இருந்தனர். அவர்கள் உபயோகித்த மொழி அங்கு உட்கார்ந்திருந்த பெண்களை சங்கடத்துக்குள்ளாக்கியது.

கடைசியில் கூட்டத்தினர் உதவியுடன் கண்டக்டர் அவர்களை வெளியில் இறக்கிவிட்டார். பஸ்ஸூம் ஒருவாறாக நகர்ந்தது.

''போஸ்டாபீஸ் யார் சார் இறங்கணும்.... முன்னாலே ஏறாதே. பின்னாலே வந்து ஏறு.... லேடீஸ் ஸீட்டை காலி பண்ணு குடு...'' என்ற கண்டக்டர் குரலைக் கேட்டுவிட்டு, ''நான் இறங்கணும் சார், வர்றேன்'' என்று சண்டை போட்டவர்களைச் சமரசம் செய்ய முயன்ற ஆசாமி திடீரென்று தேள் கொட்டியவர் போல் ''ஐயையோ'' என்று கத்திவிட்டு இரண்டு கைகளால் சட்டைப் பையையும் பேன்ட் பைகளையும் பரபரவென்று தடவியவாறு தேடினார். நான் உடனே, ''ஏன் சார், என்ன ஆச்சு?'' என்று கேட்டேன். ''ஐயோ போச்சு சார், என் பர்ஸ் போச்சு சார். சுளையா சம்பளப் பணம் 650 ரூபா அப்படியே போச்சு சார். இப்போ நான் என்ன செய்வேன் கடவுளே ....'' என்று வாய்விட்டு அழவே ஆரம்பித்து விட்டார். அவருடனிருந்த எனக்கு அவரை எப்படிச் சமாதானப்படுத்துவதென்றே தெரியவில்லை. ''ஐயோ! மோசம் போனேனே. அந்த ரெண்டு பேர் சண்டை போட்டபோது ஒருத்தன் என்னைத் தள்ளற மாதிரி இடித்து விட்டான். நான் தடுமாறி அடுத்தவன் மேல் விழுந்தேன். நல்லா கவனமிருக்கு. என் இடுப்பை வளைச்சுத் தாங்கற மாதிரி பிடிச்சான் சார். அப்போதான் பிக்பாக்கெட் அடிச்சிருக்கான். என் மரமண்டைக்கு இப்போதான் சார் புரியுது. வீட்டுலே போய் எப்படி மூஞ்சியைக் காட்டுவேன்'' என்று கதறிக் கொண்டே பஸ்ஸிலேருந்து இறங்கிச் சென்றார், பாவம்!

பிக்பாக்கெட்டில் இது ஒரு புது ரகம் போலிருக்கிறது என்று நினைத்துக் கொண்டேன்.

— காந்த்



இதோ 8 காரணங்கள்:
இந்தியாவின் முதலாவது
பிரஷர் குக்கர்
இன்னமும் வெகுவாக
பயன் படுத்தப்படுகிறது
Prestige
ப்ரஸ்டிஜ் டி டி. (பிரைவேட்) லிட்., பெங்களூர்-560016.

MCA/TT/50-Tam



வாழ்க்கையில் சிலருக்கு திடீரென்று பலத்த அதிர்ச்சி ஏற்படுகின்றது. அது எப்படியெல்லாம் பாதித்து விடுகிறது! அடோல்ஃப் பிரிக்கன் என்கிற ஓர் அமெரிக்கர் 1921-ம் ஆண்டில், பங்கு மார்க்கெட் விவகாரத்தில் திடீரென்று தனது சொத்து அனைத்தையும் இழந்தார். அவர் அடைந்த அதிர்ச்சி, அவருடைய வியர்வைக் கோளங்களைப் பாதித்து அவற்றைச் செயலற்றவைகளாக்கி விட்டது. அவ்வளவுதான். அவருடைய உடம்பு வியர்க்கும் சக்தியை இழந்தது! உடலின் வெப்பத்தை வெளியேற்ற உதவுவது வியர்வைதான். அது நின்றுவிட்டால் என்ன ஆவது? அவர் தனது ஆயுள் முழுவதும் ஒரு நாளைக்கு பத்து தடவை — உடல் அதிக வெப்பமடையும் போதெல்லாம், பனிக் கட்டிகள் நிறைந்த குளிர் நீரில் குளித்துக் கொண்டிருந்தார் - உடல் வெப்பத்தை வெளியேற்ற!

லண்டன் நகரில் ஒரு பாதிரி இருந்தார். மாதா கோயிலிலிருந்து மெழுகு வத்திகளை வாயால் ஊதி இவர் அணைக்க முயன்றபோதெல்லாம், இவர் வாயிலிருந்து வரும் காற்றே தீப்பற்றிக் கொள்வது வழக்கம். எல்லோருக்கும் இது பெரிய அதிசயமாயிருந்தது. காரணம் என்ன என்பது யாருக்கும் தெரியவில்லை. கடைசியில் டாக்டர்கள் பல தடவை பரிசோதித்துப் பார்த்த பிறகு காரணத்தைக் கண்டுபிடித்தார்கள். அவர் வயிற்றில் ஒரு புண் இருந்த காரணத்தால் அவர் வயிற்றில் ஒரு வித வாயு உருவாகிக் கொண்டிருந்தது. அது எரியும் தன்மையுடையது. அவர் வயிற்றை அறுவை செய்து புண் இருந்த பகுதியை வெட்டி எடுத்த பிறகு அந்த அதிசய நிகழ்ச்சி நின்று போயிற்று.

சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு ஜப்பானில் கோஸோ ஒஹிஷி என்பவர் விபத்து ஒன்றிற்கு உள்ளானர். வயிறு கிழிந்து குடல் வெளியே வந்துவிட்டது. உடனே இவருக்கு அறுவை சிகிச்சை செய்து குடல் உள்ளே தள்ளப்பட்டு வயிறு மூடப்பட்டது. உயிர் பிழைத்தாலும் இவரைஓர் அதிசய வியாதி பீடித்துக் கொண்டது. சாப்பிட்ட சில மணி நேரங்களுக்கெல்லாம் மது உண்டவனைப்போல இவர் தடுமாற ஆரம்பித்து விடுவார். பொதுவாக உருளைக்கிழங்கும் ரொட்டியும் சாப்பிட்டால்இவர் நிதானம் இழந்து தடுமாறுவார்.

இருபது ஆண்டுகளுக்கு மேல் இப்படி இவர் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார். கடைசியில் ஒரு நாள் ஒரு பெரிய மருத்துவமனைக்குச் சென்று தன்னைப் பரிசோதித்துக் கொண்டார். அங்கும் டாக்டர்கள் இவர் சொன்னதை நம்பவில்லை. இவரை மேற்கொண்டு பரிசோதித்து ஓர் அதிசயத்தைக் கண்டுபிடித்தார்கள். இவருடைய குடலில் ஒருவித பூஞ்சணம் - ஃபங்கஸ் நிறைய இருப்பதைக் கண்டார்கள். சாதாரணமாக இந்த ஃபங்கஸ், குடலில் மிகக் குறைந்த அளவில்தான் காணப்படுமாம். ஆனல், விபத்தில் வெளியே வந்த இவர் குடலை உள்ளே தள்ளி வயிற்றில் தையல் போட்ட பிறகு, இந்த ஃபங்கஸ் மிக அதிக அளவில் பெருகி நிலைத்து விட்டன. இந்த ஃபங்கஸுக்கு மாவுப் பொருளை சாராயமாக மாற்றும் தன்மை உண்டு. அதனல்தான் இவர் சாப்பிட்டவுடன் அதுவும் உருளைக்கிழங்கு போன்ற மாவுப் பொருட்களைச் சாப்பிட்டால் ஒருவித போதைக்கு உள்ளாகிக் கொண்டிருந்தார். அந்த ஃபங்கஸ் அதிகமாயிருந்த குடல் பகுதியை அறுவை செய்து எடுத்த பிறகு இவருக்கு போதை ஏற்படுவது நின்று விட்டது!

—கனகா ராமதுரை

●



''இது ஷார்ட் வேவ்! இது மீடியம் வேவ்!''

''நியூ லேவ் [illegible]!''

—சம்[illegible]மாரி

மனம் மாறியது ஏனோ!

பி.வி.ஆர்

எந்த நிலையிலும் நிதானத்தை இழந்தறியாத் அமிர்தம் அன்று தன்னையும் அறியாமல் மகள் மீனுவிடம் கத்தி விட்டாள்.

மீனு சளைக்கவில்லை. மௌனசொரூபியாக என்றும் இருக்கும்அம்மா—அதுவும் அப்பா, இரண்டு வருடங்களுக்கு முன் போனபிறகு யாரிடமும் அவசியத்துக்கும் பேசாதவள்– அன்று அவ்வளவு தூரம் பேசுகிறாளே என்று மீனு திகைத்துப் போய்த் தன் பிடியைத் தளர்த்தவுமில்லை. திருமணம் தன் பிரத்யேக உரிமை என்று வாதாடினாள்.

''கடைசியா அப்ப நீ என்னதான் சொல்றே?''

''ஆரம்பத்திலே சொன்னது கடைசி வரை மாறுது, அம்மா.''

''ஆரம்பத்திலே நீ என்ன சொன்னேடி? என் அண்ணன் மகனைக் கலியாணம் கட்டிக்கிறேன்னு நீ சொல்லலை.:?''

''நாலு வருஷத்துக்கு முன்னாலே சொன்னதையே நீ ஆரம்பமா எடுத்துக்கிறியாம்மா?''

''பின்னே?''

''அப்போ டாக்டர் படிப்பிலே கவனம் இருந்தது. அதிலேயே பிடிவாதமாக இருந்தேன்....,. இப்ப டாக்டர் படிப்பு தான் முடிந்து விட்டதே . . .. இப்பத் தானே கலியாணப் பிரச்னையே பிறக்கிறது.''

''இதைப் பாரு மீனு...நீ இன்னிக்குக் கழுத்திலே ஸ்டெதாஸ்கோப்பைப் போட்டுட்டு நிக்கறேன்னு.... அதுக்கு ஆதார சக்தி யாருன்னு ஒரு வினாடி யோசனை செய்ஞ்சு பாரு . . . என் அண்ணன் என்ன சொல்லி உன்னை மெடிகல் காலேஜிலே சேர்த்தார்?''

''அம்மா, அன்னிக்கு எனக்கு வயசு பதினெட்டு. இன்னிக்கு இருபத்து மூணு நிறைஞ்சாச்சு . . அன்னிக்கு முதிர்ச்சியில்லா மூளையிலே என்னமோ யோசித்திருப்பேன்

''கோபால் உனக்காகக் காத்திட்டிருக்கான்.''

''அதுக்கு நான் என்ன செய்ய முடியும்?''

''ஆயிரக் கணக்கிலே பணத்தைக் கொட்டிப் படிக்க வைச்சிருக்கார் என் அண்ணன். எதுக்கு? நீ டாக்டரா வந்தா, கிராமத்திலே தொழில் நடத்தலாம்னு! மகள் டாக்டராக இருந்தா மனம் கோணும கிராமத்திலே இருப்பாளேன்னு நீ இப்ப அவருடைய ஆசையைக் குழி தோண்டிப் புதைக்கப் பார்க்கிறே!''

''அம்மா, நான் சொல்றதைக் கவனமாகக் கேளு. எனக்குக் கோபாலைப் பிடிக்கலை. மெட்ராஸை விட்டு என்னாலே கிராமத்துக்குப் போய்த் தொழில் நடத்த முடியாது ... உன் அண்ணன் என் படிப்புக்குச் செலவு செய்த பணத்தை அஞ்சாறு வருஷத்திலே திருப்பிக் கொடுத்துவிடறேன். நான் யாரை, எப்போ – எப்படிக் கலியாணம் செய்துக்கறதுன்னு எனக்கு நல்லாத் தெரியும்.''

''இதுதான் உன் முடிவா?''

''ஆமாம்.''

''அப்போ இனிமேல் எனக்கு இங்கே இடமில்லை. நான் இன்னிக்கே ஊருக்குப் போயிடறேன்.

''உன் இஷ்டம்.''.

''எனக்கும் உனக்கும் இனிமேல் எந்த உறவும் கிடையாது.''


''சரி.''

''நீ மகா அழுத்தக்காரி.''

''இருந்துட்டுப் போறேன்.''

''நன்றி கெட்டவள்!''

அமிர்தம் தளர்ந்துபோனாள். இனிமேல் மகளிடம் பேசிப் பயன் இல்லை என்றே தோன்றியது. மீனுவிடம் சவால் விட்டாளே தவிர, அன்றே ஊருக்குப் புறப்பட்டு, பெண்ணோடு உறவை அறுத்துக்கொண்டு அண்ணன் வீட்டில் வாழ அவள் முற்படவில்லை. இங்கேயே இருந்துகொண்டு மெல்ல மெல்ல மீனுவைத் தன் வழிக்குத் திருப்ப வேண்டும் என்றுதான் அமிர்தம் கருதினாள்.



என்ன பேச்சு?

சமையல்காரர் :
ரசமான பேச்சு !
தையற்காரர் :
வெட்டிப் பேச்சு !
தூக்குமேடையாள் :
சுருக்கமான பேச்சு !
இரும்பு கடைக்காரர் :
ஆணித்தரமான பேச்சு !
இருதய நிபுணர் :
துடி துடிப்பான பேச்சு !

"அமிர்தம், உன் பெண் இப்படிச் செய்வாள்னு நான் நெனைக்கவே இல்லே!'' என்றார் கைலாசம்.

''அண்ணா, நான் அவகிட்டே அழுது புலம்பியாச்சு. திட்டியும் தீர்த்தாச்சு . . அவ ஒரே பிடிவாதமா இருக்கா'' என்றாள் அமிர்தம்.

''நான் பெரிய முட்டாள்.''

''இவ்வளவு பணத்தைச் செலவு செய்து மீனாவை டாக்டராக்கியதைச் சொல்றியா?''

''இல்லே அமிர்தம். அவ கழுத்திலே அன்னிக்கே தாலியைக் கட்ட நான் ஏற்பாடு செய்திருக்கணும். நம்ம தங்கச்சி பொண்தானேன்னு இருந் துட்டேன்.''

''கோபால் இப்ப என்ன சொல் றான்?''

''அவனுக்கு நின்னு கேட்டுப் பதில் சொல்ல எங்கே நேரம்? வயல்லேயும் தோப்பிலேயும் பம்பரமாச் சுத்திகிட் டிருக்கான். வேளை கெட்ட வேளைக்கு வர்றான். போறான்.''

''உடம்பைப் பார்த்துக்கச் சொல்லு, அண்ணா.''

''இனிமே அதை டாக்டர்தான் பார்த்துக்கணும். அது சரி அமிர்தம், திடீர்னு மீனா ஏன் இப்பப் போய்த் தன் முடிவை மாத்திக்கிட்டா?''

''இப்பத்தான் அண்ணா அதையே வெளியே சொல்லியிருக்கா. எனக்குத் தோணறது, அவ எப்பவோ இப்படி ஒரு முடிவை எடுத்திருக்கான்னு.''

''ஏன்?''

''கிராமம் பிடிக்கலியாம்.''

''இந்தக் காரணத்தை நீ நம்பறி யா? அவன் டாக்டருக்குப் படிக்கலேயே, அமிர்தம்...! ஒரு டாக்டர் பொண்ணு எப்படி ஒரு பட்டிக்காட்டான் பி. ஏ. யைக் கலியாணம் செய்ஞ்சுக்குவா?''

திடீரென்று மீனா வீட்டினுள் பிரவே சித்தாள்.

கைலாசம் திடுக்கிட்டு நின்றார். அமிர்தம் தன் பெண்ணையே பார்த்தாள்.

''என்ன மாமா, ஏன் அப்படித் திகைச்சுப் போயிட்டீங்க? எப்ப ஊர்லேந்து வந்தீங்க? மாமியும், கோபா லும் எல்லாரும் சௌக்கியந்தானே?''

''உன் முடிவு என்னன்னு அமிர்தம் சொன்னா. கேட்கவே ரொம்ப வேதனையா இருந்தது.''

''எனக்குக்கூட இப்படி ஒரு முடிவு எடுக்கிறோமேன்னு வேதனையாத்தான் இருக்கு, மாமா . . . ஆனா என்ன செய் யறது? உங்க பெண்ணை அவளுக்குப் பிடிக்காத இடத்திலே கலியாணம் செய்ஞ்சு கொடுப்பீங்களா?''

''மாட்டேன்.''

''நானும் உங்க பெண் மாதிரிதானே மாமா?''

''ஆனா என் பிள்ளைக்கும் உனக்கும் உன் படிப்பு முடிஞ்சதும் கலியாணம் நடக்கணும்னு முன்னமே முடிவு பண்ணி யிருக்கோமே?''

''இவ டாக்டருக்குப் படிக்கலேன்னா அன்னிக்கே கலியாணம் நடந்திருக்கும்.'' என்றாள் அமிர்தம் குறுக்கிட்டு.

''கோபாலை என் புருஷன்னு நான் என் மனசாலே கூட நினைச்சுப் பார்க்க முடியலையே மாமா.''

''ஏன்டீ, ஏன் ?''

''நான் ஒரு எம். பி. பி. எஸ். மெட் ராஸ்லே தொழிலை நடத்திகிட்டே மேலே மேலே படிப்பைத் தொடர இருக் கேன். அமெரிக்கா போகக்கூட சான்ஸ் கிடைக்கும். எனக்குப் புருஷனா வர்ற வன் வேட்டியைத் தூக்கிக்கட்டிக்கிட்டு, மாட்டு வண்டியை ஓட்டிக்கிட்டுப் போறதை என்னாலே எப்படிச் சகிச்சுக்க முடியும்? வயல் — வயக் காட்டிலே நாள் பூரா உழைக்கிறவன் எப்படி எனக்குப் புருஷனா வர முடியும்?''

''அப்படி உழைச்சுக் கிடைச்ச பணத்திலேதானே நீயும் டாக்டர் பட்டத்தை வாங்கினே? '' என்றாள் அமிர்தம்.

''மாமா.''

''என்ன மீனா?''

''எனக்காக நீங்க எவ்வளவு செலவு செய்ஞ்சிருக்கீங்க?''

''உனக்காக நான் கணக்குப் பார்த்துச் செலவு செய்யலே, குழந்தே!''

''தயவு பண்ணி, ஊருக்குப் போன தும் கணக்குப் பார்த்து எழுதுங்க . . அஞ்சாறு வருஷத்திலே கொஞ்சம் கொஞ்சமாக் கடனைத் தீர்த்துடறேன்.''

கைலாசம் சிரித்தார்.

''ஏம்மா, என்னை லேவாதேவிக் காரன்னு எடை போட்டுட்டியா? என் புள்ளைதான் டாக்டருக்குப் படிக்கலே. வரப்போற மருமகளாவது படிக்கட்டு மேன்னு படிக்கவைச்சேன். நீயா இப்ப மனசு மாறினதுக்காக நான் கேவலமாப் போயிடுவேனா?''

மீனாவுக்கு என்ன சொல்லுவது என்றே புரியவில்லை.

''சீக்கிரமே கோபாலுக்குக் கலி யாணத்தை நடத்திடுங்க, மாமா.''

''உத்தரவு, குழந்தே!''

மாமாவின் பரிகாசத்தைப் பொருட் படுத்தாமல் மீனா தொடர்ந்தாள்:

''ஒருவேளை இந்த அஞ்சு வருஷத்தில் அவன் மனசும் மாறிப்போயிருக்கலாம் இல்லையா, மாமா. உங்க கிட்டே வெளி யிடப் பயந்து நெஞ்சுக்குள்ளேயே தன் ஆசைகளை மூடி வைச்சிருக்கலாமே? அத னாலே,தான் சொன்னேன்!''

''என் புள்ளை நான் வரைஞ்ச கோட் டைத் தாண்டமாட்டான், மீனா!''

''அஞ்சு வருஷத்துக்கு முன்னாலே வரை ஞ்சகோடு.. இப்ப அது அழிஞ்சுகூடப் போயிருக்கலாம், இல்லியா?''

அன்று கோபால் திடீரென்று வந் தது அமிர்தத்துக்குத் திகைப்பையும், கூடவே பயத்தையும் அளித்தது.

''மீனா எங்கே, அத்தை!''

''இதோ வந்துவிடுவாள்!''
என்ற அமிர்தம், ''கோபால்!'' என்று மெதுவாக இழுத்தாள்.

''என்ன அத்தே?''

''அவள் உனக்கு எப்படிப்பட்ட துரோகம் பண்ணியிருக்கான்னு எனக்குத் தெரியும். அதுக்காக அவளைப் பழி வாங்கி விடாதே. என்ன இருந்தாலும் அவ என்னோட பெண்!''

''இப்ப நான் பழி வாங்க வரலே அத்தே . . எனக்குக் கலியாணம் நிச்சய



சிரி சிரி

ரங்கு : ஒரே ஒரு மு... கொடுக்க மாட்டியா ராஜி...?
ராஜி : அதெல்லாம் கிடையாது! ஒரே ஒரு முறுக்கு என்று முழுக்கச் சொல்லிக் கேட்டால்தான் தருவேன்...!

★

இவர் : நான் மனைவிக்குப் பயந்து நடக்கிற ஆசாமி அல்ல...
அவர் : பின்னே...?
இவர் : ஓடுகிற ஆசாமி...!

★

கிட்டு : பிரம்மாண்டமான நாட்சகர்களைப் பத்தி உனக்கு ஏதாவது தெரியுமாடா?
ராமு : ஓ! அவங்க கண்ணிலே விழுந்த தூசியை எடுத்து, நம்மவீட்டுக்கு உத்தரமாப் போட்டுடலாம்!

★

— வாழைப்பழம் தின்கிற பந்தயத்திலே ஐம்பது வாழைப்பழம் தின்று முந்தின சாதனையை முறியடிச்சவர் இவர்தான்...
— முந்தின தடவையும் ஐம்பது பழம்தானே தின்றதாக ஞாபகம் இருக்கு...?
— இந்தத் தடவை தோலோடே தின்கிற பந்தயம் ஆச்சே...!

பெ. கலாசாமி.



மாயிடுத்துன்னு சொல்லத்தான் ரெ லேறி வந்திருக்கேன்.''

''அப்படியா? யார் பெண்? நட குள்ளேயா? இல்லே வேறெ இடம ஏன் அண்ணன் எனக்கு லெட்ட போடலே?''

''நேத்து தான் நிச்சயமே ஆச் அதோ மீனுவே வர்ருளே... ஹலே மீனு, குட்மார்னிங்!''

''குட்மார்னிங் கோபால்! கங்க்ராஜு லேஷன்ஸ்! அம்மா, கோபால் கலிய ணம் நேத்துதான் நிச்சயமாச்சு!''

''உனக்கு எப்படியடி தெரியும்?''

''அவளுக்குத் தெரியாதது ஒண்

மில்லே. இவ இல்லேன்னு இந்தக் க யாணமே நிச்சயமாயிருக்காது, அத்தே.

''எனக்குத் தலே சுத்தறது!'' என்ரு அமிர்தம்.

''நான் எல்லாவற்றையும் வி மாகச் சொல்றேன் அத்தே . . . படிச்ச பொண்ணு இருக்கா, மீனுவை விட ரெண்டு வயசு அதிகம்'' என்ரு கோபால்.

மீனு தொடர்ந்தாள்:

''அவளும் நம்ம கோபாலும் ரொம் நெருங்கின ஃப்ரண்ட்ஸ்! ஊர்லே இ லீஷ்லே பேசத் தெரிஞ்சவன் கோபா ஒருத்தன்தான்னு கமலா அவன் கிட்டே பேச ஆரம்பிச்சா. பேச்சோடு கல்லே.''

''என் நிலைமையை மீனு கிட் விளக்கிச் சொன்னேன் அத்தே! எ அப்பா வார்த்தையை மீற என்னு முடியாதுன்னுதான் தெரியுமே! அவ எப்படி என் வழிக்குக் கொண் வர்றது? மீனு தான் வழிசொல்லி, அ செயல்படுத்தியும் காட்டிஞள். அவளு ரொம்ப தாங்க்ஸ்!''

''சாதாரணக் கலியாணத்திலே இ கிறதைவிடக் காதல் கலியாணத்தி ஒரு 'த்ரில்' இருக்கு! நீ என்ன சொல் கோபால்!'' மீனு கேட்டாள்.

''சரிடா கோபால். காதலி பெண்ணை மாமா ஏத்துண்டாரா குதிகுதின்னு குதிச்சிருப்பாரே!'' ருள் அமிர்தம். ''அந்தப் பெண்ணே தான் அப்பாவுக்கும் ஏற்கனவே யுமே!''

''அப்படியா?''

''ஆமாம் அத்தே! அவளும் டாக்டர்தான் அத்தை. அப்பாவு வைத்தியம் பார்க்கிற டாக்டர்!''

அமிர்தம் அதிர்ந்து போய் நின்ருள்

ஒய், ஒய் என்று கணவனைக் கேள்வி கேட்பதால், மனைவியை 'ஒய்ஃப்' என்று சொல்கிருர்களோ?





மாமியார் ஜோக்ஸ்!

என் மாமியார் கோபமாக ஒரு வார்த்தையை வாயால் சொல்லிக் கேட்டதில்லை. ஒருக்கால் அவள் மூக்கால் பேசுவது இதற்குக் காரணமாக இருக்குமோ!

''என் மாமியாரைச் சந்திப்பதற்குமுன்பு மோட்சம், நரகம் எல்லாம் சுத்த ஹம்பக் என்று சொல்லிக் கொண்டிருந்தேன்.''

''அப்புறம் என்ன ஆயிற்று?''

''மோட்சம் பற்றித்தான் சந்தேகம் இன்னும் இருக்கிறது!''

''அம்மா. என் கணவர் ரொம்ப நல்லவர். நான் கேட்பதெல்லாம் வாங்கிக்கொடுக்கிறார்.''

''போடி, பைத்தியம். இதிலிருந்து என்ன தெரிகிறது. மாப்பிள்ளையிடம் நீ அதிகம் கேட்பதில்லை என்று.''

'என் மாமியாரைப் போல் பேராசை பிடித்தவளைப் பார்த்தது கிடையாது.''

''அப்படியா?''

''பாரேன், 'மாமியார் உடைத்தால் மண்குடம், மருமகள் உடைத்தால் பொன்குடம்' என்று யாரோ சொன்னார்கள். அதைக் கேட்டு இதுவரை நூறு குடத்தை என் மனைவியிடம் கொடுத்து உடைக்கச் சொல்லிவிட்டாள்! ஒன்றும் லாபமில்லை!''

என் மாமியார் சினிமா, டிராமா, புடவைக்கடை என்று ஓடமாட்டாள். ஓடினால் மூச்சு இரைக்கிறதே!

''என் மாமியார்தான் எனக்குப் பொய் சொல்லும் பழக்கத்தை ஏற்படுத்திவிட்டாள்.''

''எப்படி?''

''குடைந்து குடைந்து கேள்விகள் கேட்டு!''

என் மாமியார் தாடகை என்று சிலர் நினைக்கலாம். நான் அப்படிச் சொல்லவே மாட்டேன்— அவளுக்கு எதிரில்.

''புது வீடு கட்டினேன். கிரகப்பிரவேசத்திற்கு என் மாமியாரால் கொஞ்சம் செலவு குறைந்தது.''

''நல்ல மாமியார்தான்.''

''திருஷ்டி பூஷணிக்காய் வாங்கும் செலவுதான் குறைந்தது. என் மாமியார் வாசலிலேயே நின்று கொண்டிருந்தாள்.''

'என் மாமியாருடன் இதுவரை ஒரே ஒருதரம்தான் சண்டைபோட்டிருக்கிறேன்.''

''பரவாயில்லையே.''

''கலியாணத்தன்று ஆரம்பித்த முதல் சண்டையை அவள் இன்னும் முடித்தபாடில்லையே!''

கழுதையை

நான் ஒரு லட்சாதிபதி. என்னுடைய பங்களாவின் எல்லா அறைகளும் A. C. லண்டனுக்கும், நியூயார்க்குக்கும் மாதம் ஒரு முறை பறக்கிறேன். பிஸினஸ். ஸ்விட்ஜர்லாந்தில் ஒரு மாதம் டேரா போடுகிறேன். சம்மர். காலையில் கோல்ஃப்; மாலையில் பிரிட்ஜ். தமிழ் சினிமா பார்த்து ஏழு வருஷங்களாச்சு. ஒரு மாதிரியான ஆசாமி. தமாஷ். எந்த விஷயமானாலும்.

இது நடந்தது ஒரு மாதத்திற்கு முன்பு. 'ஹோட்டல் சோழா' விலிருந்து புறப்பட்டு, அண்ணா மேம்பாலத்தைக் கடந்து, அண்ணாசாலை வழியாக வந்து கொண்டிருந்தபோது, ஸ்பென்ஸர் அருகே சிக்னலுக்காகக் காரை நிறுத்த வேண்டியதாய்ப் போச்சு. அப்போது; ப்ளாட்பாரத்தில் நின்று கொண்டு, ''சாமி...!'' என்று ஒரு நெளிந்து போன தகர டப்பாவை என்னிடம் அவன் நீட்டினான்.

இருபத்தைந்து வயதிருக்கும். அல்லது முப்பத்தைந்து. முகத்தைப் பார்த்துக் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆயிரம் கிழிசல்களான வேஷ்டி. சட்டை போடவில்லை. நாகப்பட்டினத்தில் சுழித்த காற்று இங்கே அடித்திருந்தால் அவனை அந்தரத்தில் தூக்கிக் கொண்டு போய், ஒரு மைலுக்கு அப்பால் பூப்போல, சேதாரமில்லாமல், கீழே தள்ளியிருக்கும்.

''கெட். இன்'' என்றேன்.

''சாமி...''

''கார்ல ஏறப்பா.''

கார் கதவைத் திறந்துவிட்டேன். இன்னும் பயந்துகொண்டிருந்தான். அவன் கையைப் பிடித்து இழுத்து ஏற்றி விட்டேன்.

''தூக்கி எறி அதை.''

டப்பாவைத் தூக்கி எறிந்தான்.

''சிகரெட்...''

'சாமி! பசிக்குது.''

பாக்கெட்டை அவனிடம் நீட்டினேன். ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக்கொண்டு, 'குப்கு'வென்று ரயில் எஞ்சின்போல் புகை விட்டான். ''சாமி! ரி.''

'புஹாரி'யில் அவனைச் சாப்பிடச் செய்தேன். கண்ட்ரி சிக்கனைப் பல்லைக்கொண்டு கடித்து, இழுத்துத் தின்று கொண்டிருந்தபோது, 'ஆதி மனித'னாகவே தோற்றமளித்தான்.

'இந்தியா சில்க் ஹவு' ஸில் முந்நூறு ரூபாய்க்கு 'ரெடிமேட்' ஆடைகள் வாங்கிக் கொடுத்தேன். அணிந்து கொண்டதும், தொளதொளப்பான அவ்வுடைகளில் அவன் தோற்றம் மேலும் பரிதாபமாயிற்று!

''உன் பெயர்...?''

''சாமி...''

சாமி...சாமி! இந்த மாதிரி ஆசாமிகளோடு இது ஒரு பெரிய 'ந்யூசென்ஸ்.'

''உன் பெயரென்ன?''

பாடாவதியான ஒரு பெயரைச் சொன்னான்.

''அது வேண்டாம். இன்று முதல் உன் பெயர் ஷ்யாம்! என்ன?''

''சயாம்...''

''ஷ்யாம்! ஷ்...யா...ம்...

'கழுதையைக் குதிரையாக்கும் வேலை இது' என்று எனக்குப் பட்டது. என்னால் முடியும். பணத்தினால் முடியாதது என்ன இருக்கிறது?

என் செலவில், ''த்ரீ ஸ்டார் ஹோட்டல்' ஒன்றில் அவன் தங்கியிருந்தான். முதல் மாதம் முழுவதும், எப்போது பார்த்தாலும் சாப்பிட்டுக் கொண்டேயிருந்தான். நினைத்துப் பார்த்தேன்: ஆச்சரியமில்லை. இன்றுவரை ஒருவேளை உணவு என்பது, அட்லாண்டிக் கடலை



குதிரையாக்கினேன்

நீந்திக் கடப்பது போல, அவ்வளவு பிர யாசையாக அவனுக்கிருந்தது.

அச்சம்,கூச்சம், தாழ்வு மனப்பான்மை நிறைந்தவனுதலால், தனிமையிலிருக்கவே விரும்பினுன். காட்ரெஜ் கட்டில்; எம். எம். ஃபோம் மெத்தை; தலைக்கும், காலுக்கும் தலையணைகள்; உல்லன் போர்வை—வெகு சுகமான நித்திரை! குறட்டைச் சப்தம் 'ரிஸெப்ஷன்' அறை வரை கேட்டது. அப்பாடா! பசியும், குளிரும், துன்பமும் மிகுந்த இரவுகள் எதிர் பாராமல் நீங்கின. (பழைய ஆளாக இருந்திருந்தால், 'நீ மகாராசனு இருக்கணும் சாமி!' என்று என்னை வாழ்த்தியிருப்பான்.) இதற்காகவே, என்னிடம் அளவுக்கு மீறிய மரியாதை காட்டினுன்.

ஒரு மாதத்திலேயே அவனிடம் மாறுதல்கள் தென்பட்டன. உடம்பில் கொஞ்சம் சதைப் பிடிப்பு; முகத்தில் கொஞ்சம் பளபளப்பு; பேச்சில் கொஞ்சம் நாகரிகம். நடத்தையில் கொஞ்சம் முன்னேற்றம். எனது எல்லா நண்பர்களுக்கும் அவனை அறிமுகப்படுத்தினேன். அவர்கள், அவன் இல்லாத நேரத்தில், என்னிடம் சொன்னுர்கள்: ''அந்த மனிதனின் வாழ்வில் துக்கமான ஏதோ ஒன்று நடந்திருக்கிறது சோகம் அவன் கண்களில் மிதக்கிறது.''

அதை அகற்றுவதற்கு அடுத்த வேலைகள் தொடங்கின.

அவனது ஒவ்வொரு ஆசையும் நிறைவேற்றப்பட்டது. மிகச் சாதாரணமான—விநோதமான— ஆசைகள்...பணியாரம் கேட்டான். 'த்ரீ ஸ்டார்' ஹோட்டலில் பணியாரம்...? ஏரோப்ளேனில் ஏற வேண்டுமென்றுன். பீச்சில் ஒட்டகச் சவாரி செய்தான். ட்ரைவிங் கற்க வேண்டுமென்றுன். ஒரு வாரத்தில் கற்றுக்கொண்டான். அது அவனை ஆஸ்பத்திரியில் கொண்டுபோய்ப் போட்டது!

சொல்கிறேன்...

முதன் முதலில், அவன் தனியாகக் கார் ஓட்டிக்கொண்டு சென்றபோது, காலேஜ் விட்டுச் சின்னக் குட்டிகள் போய்க் கொண்டிருந்தார்கள். அவன் பார்வை திருட்டுத்தனமாக அவர்கள் மீது பாய்ந்தது; மேய்ந்தது; ரசித்தது. பஸ் ஸ்டாப் ஒன்றில் நின்ற இரண்டு குட்டிகள் இவன் காரை நிறுத்தி லிஃப்ட் கேட்டார்களாம்! ஏற்றிக்கொண்டான். உற்சாகம்.

நூறு கிலோ மீட்டர் வேகத்தில், ஒற்றைக் கையால் ஸ்டீரியங்கைப் பிடித்துக் கொண்டு, மறு கையில் 555 சிக்ரெட் புகைய, முன்னுல் போகிற வண்டிகளையெல்லாம் ஐயா 'ஓவர் டேக்' பண்ணினு ராம். பின்னுல் வருகிறவர்களுக்கு வழி விடவில்லை. ரோட் இவருக்கு மட்டுமா சொந்தம்? எதிரே லாரிகள்; பஸ்கள். ஒரு பாதசாரி ரோட்டை 'க்ராஸ்' பண்ணினுர். ஆசாமிக்கு ஆட்டம் கண்டுவிட்டது. கண்ணை மூடிக் கொண்டாராம். அப்படியிருந்தும், நேராகப் போய், எவ்வளவு கச்சிதமாக அந்த விளக்குக் கம்பத்தில் ஒரே மோதலில் காரை முட்டி, அதை வளைத்துவிட்டான்! திறமையே திறமை!

எனக்குப் பிடிக்காதவை:

காலி பர்ஸ்.

அழும் குழந்தை.

மழை பெய்து சொதசொதப்பான தரை.

தூங்கும்போது அலறும் டெலிபோன்.

....

தூங்கிக் கொண்டிருந்தேன். போன் அலறியது. பத்து நிமிஷத்திற்குப் பின் மறுபடியும். ஐந்து நிமிஷத்திற்குப் பின் மறுபடியும். படுத்துக்கொண்டே ரிசீவரை எடுத்துக்கோபமாக,''ஹலோ...'' என்றேன்.

''சென்னையில்தான் இருக்கிறீர்களா? என்றது மனேவின் குரல்.

''ஆமாம்.'

''லண்டனுக்குப் பறந்து விட்டீர்களோன்னு நினைத்தேன்...''

''மனே! அடுத்த தடவை நான் லண்டனுக்கு மேலே பறக்கும்போது, நீயும் என்கூடப் பறக்கிறுய்!''

''இருபது நாட்களாச்சு உங்களைப் பார்த்து!'

''ஐந்து மணிக்குத் தயாராக இரு, வருகிறேன். இப்போது கொஞ்சம் என்னைத் தூங்கவிடு.''

''எங்கே போகிறேம்?''

''காரில் போய்க்கொண்டே யோசிப்போம்.''

''மனே! மனேஹரி! மனேன்மணி! மனேரமா!...'' என்று அவள் தோளில் சாய்ந்தேன்.

டி. நமசிவாயம்

''ஐயே...நடு ரோடில்...'' என்றாள்: ''..இது 'ஹைட் பார்க்' இல்லே.''

''நீ அருகிலிருக்கும்போது, எனக்கு எல்லாமே மறந்துவிடுகிறது மனோ!''

''நான் அருகிலில்லாவிட்டால் என்னையும் மறந்துவிடுகிறீர்கள்...இருபது.. நாட்கள்...''

''அறுபது நாட்கள் அதையே சொல்லிக் கொண்டிருப்பாய்.''

ஸ்டீரிங்கைப் பிடித்திருந்த அவள் கை மேல் கையை வைத்தேன்.

''பேசாமலிருங்கள். எங்கே போகணும்?''

''உன் இஷ்டம்.''

அது என்னவென்று எனக்குத் தெரியும். சினிமா. ஏதாவதொரு தியேட்டரில் காரை நிறுத்துவாள். திடீரென்று எனக் அவன் நினைவு வந்தது! போகிற வழியி அவனையும் பார்த்த மாதிரிஇருக்கட்டுமே

''இடது பக்கம் திருப்பு. எம். எ ஹாஸ்பிடல்.'

''அங்கு யாரைப் பார்க்கணும்?''

''ஒரு நண்பரை.'

எம். எம். ஹாஸ்பிடலில் அவனிருந் இடத்திற்கு நாங்கள் போனபோது படுக்கையில் உட்கார்ந்திருந்தான் கையில் பாதி எரிந்த சிகரெட்.

''என்ன, சுகமா?'' என்றேன்.

''ஓ...'' என்றான். ''..ஒரே ஓட்ட ஹோட்டலில்தான் நிற்பேன். அவ்வள சுகம்.''

''என் எதிர்கால மனைவி!'' என் மனோவை அவனுக்கு அறிமுகப்படுத் னேன்.

காரில் போய்க் கொண்டிருந்தபோது மனோ சொன்னாள்: ''இதற்கு முன் இவரைப் பார்த்திருக்கிறேனே...

''ஸ்பென்ஸருக்குப் பக்கத்திலா?''

''இல்லே.''

தியேட்டரை அடைந்துவிட்டோ 'ஆம். இங்குதான். இதே தியேட்டரி





தான். லதாவோடு இவரைப் பார்த்தேன்'' என்றாள் மனோ.

மனோ சொன்னது உண்மையாக இருக்குமா?

டிட்—பிட்ஸ், வீக் என்ட், டெபொனேர், ஆன் லுக்கர் இதழ்கள் அவன் அறையில் இறைந்து கிடந்தன. ரேடியோ மெல்லப் பாடிக் கொண்டிருந்தது. எழுந்து, அதை நிறுத்தினேன். அவனிடம் கேட்டேன்: ''ஷ்யாம், உன்னுடைய அந்த லீலா யார்?''

''லதா'' என்றான் வெட்கத்தோடு.

''அவளும் உன்னை....''

''சந்தேகமில்லாமல் விரும்புகிறாள்!''

''அவள் யாரென்று உனக்குத் தெரியுமா?''


''பெரிய பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவள் என்பது மட்டும் தெரியும். ஒனாஸிஸ் மகளாகவே இருக்கட்டுமே! நீங்கள் எனக்குத் துணை நிற்கும் போது...''

''அவளை நான் ஒரு தடவை பார்க்க முடியுமா?''

''இப்போதே போகலாமே?''

அவன் வழி காட்டிக்கொண்டே வர, நான் காரை ஓட்டிக் கொண்டே சென்றேன.

அமெரிக்கக் கவர்ச்சி இதழான 'ப்ளேபாய்' பத்திரிகையில் செக்ஸ் புகைப்படங்கள் நிறைய இருக்கும். இதைச் சுட்டிக்காட்டும் வகையில் அந்தப் பத்திரிகையின் பெயரை இப்படி எழுதினால் என்ன ?



''அதோ, அதுதான்... அவளுடைய பங்களா!''

''அதுவே தானா?''

''அதுதான். ஒரே தரம் அவளோடு வந்திருக்கிறேன். உள்ளே போவோமா?''

''வேண்டாம்; திரும்பலாம்.''

நாங்கள் அவன் அறைக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது, நான்சிந்தித்தேன். ஒருபோதும் அவனுடைய பழைய வாழ்க்கையைப் பற்றி நான் நினைத்தவனல்ல. அது சபிக்கப்பட்டது; வெறுக்கத்தக்கது. கொடூரமானது; இழிவானது இப்போது நினைத்தேன். ஸ்பென்ஸர் அருகே, ''சாமி தரும தொரையே...'' என்று பிச்சை எடுத்துக் கொண்டிருந்தவனா என் தங்கையின் காதலன்? இதை அனுமதிக்கலாமா? முடியுமா? முடியாது! இதை எப்படித் தடுப்பது? வேரறுப்பது?

அவன் சொன்னான்: ''நீங்கள் என்னை மனிதனாக மாற்றினீர்கள்! வாழ்க்கையின் எல்லா ஆனந்தங்களையும், அனுபவங்களையும், சுகங்களையும் வழங்கினீர்கள்! கடைசியாக, இந்த ஒரே ஒரு உதவி. நீங்கள் நினைத்தால், அவளை எனக்குக் கல்யாணம் செய்து வைக்க முடியும்.''

''நான் தயார். ஆனால் நீ ஒன்று செய்ய வேண்டும்.''

''சொல்லுங்கள், என்ன செய்ய வேண்டும்?''

''நாளை, ஒரே ஒரு நாள், வேண்டாம்...ஒரே ஒரு மணி நேரம், காலை பத்திலிருந்து பதினொன்றுவரை. அதாவது ஒரு மணி நேரம், நீ பழைய மனிதனாக மாற வேண்டும்.''

''எனக்குப் புரியும்படியாகச் சொல்லுங்கள்.''

''ஒரு மணி நேரம் நீ பழைய வாழ்க்கை வாழவேண்டும். ஸ்பென்ஸர் அருகில், உன் பழைய கோலத்தில்...ஒரு மணி நேரம் நீ பழைய பிச்சை...அதாவது, நீ ஷ்யாம் இல்லை.''



போலீஸ் :

நீ தான் எனக்குப் பெண் கொடுத்த மாமனார்னு அங்கே ஸ்டேஷன்லே யாருக்கும் தெரியவேண்டாம் தெரிஞ்சுதானா, என்னோட நேர்மையைப் பாராட்டி தடபுடலா ஒரு விழாவுக்கே ஏற்பாடு பண்ணி, அநாவசியமா விளம்பரப்படுத்திவிடுவாங்க! அப்புறம் ரொம்பக் கேவலமாப்போயிடும்! தெரிஞ்சுதா?

முதலில் மறுத்தான். ''இது அவசியமா?'' என்றான்.

''அவசியமா, அவசியமில்லையா என்பதிருக்கட்டும். இந்த ஏற்பாட்டுக்கு நீ சம்மதிக்காவிட்டால். நான் உனக்காக எதுவுமே செய்வதற்கில்லை.''

புறப்பட்டேன்.

''நில்லுங்கள்.''

நின்றேன்.

''ஒரு மணி நேரம்.''

''அவ்வளவே.''

''லதாவை எனக்குக் கல்யாணம் செய்து வைப்பீர்கள்.''

''கல்யாணம் நடக்கும்.''

''சரி, சம்மதிக்கிறேன்.''

அந்த வேகத்தோடு எங்கள் பங்களாவுக்கு வந்தேன். லதாவின் அறைக்குப் போனேன்.

எங்கள் கார், சரியாகப் பத்து மணி இருபத்தைந்து நிமிஷத்திற்கு ஸ்பென்ஸர் அருகே, சிக்னலுக்காக நிறுத்தப்பட்டது. அந்தப் பிச்சைக்காரன், ''சாமி! தரும தொரையே...'' என்று நெளிந்துபோன ஒரு தகர டப்பாவை லதாவிடம் நீட்டினான்.

'' ஜூலியட்! பார் உன் காதலனை... நன்றாகப் பார்...ஸ்பென்ஸர் சாம்ராயத்து மகாராஜாவைப் பார்..விருப்பமிருந்தால், இந்த ஐந்து பைசாவை அவருக்கு நீயே தருமம் செய்...''

லதா அவனைப் பார்த்தாள். அவனும் அவளைப் பார்த்தான். தகர டப்பாவைத் தூரத் தூக்கி எறிந்துவிட்டு ஓட்டமாய் ஓடினான்.

''ஜூலியட்! உன் ரோமியோவை நன்றாகப் பார்த்துக் கொண்டாயா?'' என்று சிரித்தேன்.

என் கேள்வியும், சிரிப்பும் லதாவுக்குக் கேட்டிராது. அவள்தான் மயக்கம் போட்டு விழுந்துவிட்டாளே!

அதன் பிறகு அவனை எங்கும் நான் காணவில்லை. ஹோட்டலில் விசாரித்ததில், அங்கு வரவேயில்லை என்றார்கள். இந்த நகரத்தை விட்டே போய்விட்டானோ? நானும் தேடவில்லை.

ஸ்காட்லாந்து குட்டிக் கதை

ஒரு ஸ்காட்லாந்துக்காரர் காரை வேகமாக ஓட்டி வந்தார். அச்சமயம் எதிரே ஒரு கார் வந்தது. வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாது போகவே, எதிர்க் காரின்மேல் மோதி விட்டார். அந்தக் காருக்குப் பலத்த சேதம்.

ஸ்காட்லாந்துக்காரர் காரைவிட்டு இறங்கி, எதிர்க்கார் ஆசாமியிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

''கொஞ்சம் ஆசுவாசப்படுத்திக் கொள்ளுங்கள். என் காரில் விஸ்கி இருக்கிறது. சிறிது சாப்பிடுங்கள்'' என்று சொல்லி ஒரு பெக் கொடுத்தார்.

ஆசாமி அதைக் குடித்ததும் மற்றொரு 'பெக்' கொடுத்தார். அதற்குப் பிறகு மேலும் இரண்டு 'பெக்' கொடுத்தார்.

''ஆமாம் சார். எனக்கே கொடுத்துக் கொண்டு இருக்கிறீர்களே... நீங்களும் சாப்பிடுங்களேன்'' என்றார்.

''நான் சாப்பிடத்தான் போகிறேன்; போலீஸ் வந்து விசாரித்து விட்டுப் போனதும்!'' என்றார் ஸ்காட்லாந்துக்காரர்!

தினம்

டாக்டர் கூப்பிடும் வரை காலால் காலைத் தேய்த்துக் கொண்டே இருந்தான் சாமிநாதன். தாகம் எடுத்தது. ஆசைதீர எதிர்க்கடையில் கலர் கலராக இருக்கும் பானங்கள் அத்தனையையும் ஐஸ் போட்டுக் குடித்துவிட்டு வரலாம் என்று தீர்மானித்த உடனே டாக்டர் அவனைக் கூப்பிட்டு விட்டார்.

அலமாரி முழுக்க ஒசி மருந்துகள் அடுக்கியிருந்தன. 'விஜயா மெடிக்கல்ஸ்' காலண்டர் ஒன்றில் ஹேமா நாட் காட்டினாள். சீனிவாசர் படத்துக்குப் போன சனிக்கிழமை மாலை போட்டிருந்தது. இன்ஜெக்ஷனுக்குத் தயாராக வெந்நீர் ஸ்பிரிட் வாசனையுடன் கொதித்துக்கொண்டிருந்தது.

''என்ன சாமிநாதன், எப்படி இருக்கீங்க.''

''இந்தக் கால் எரிச்சல்தான் தாங்கலே டாக்டர்.''

''அதுக்கு ஒரு ந்யூரோ பயான் போட்டுட்டா போவுது.'' டாக்டர் சுடச்சுட இன்ஜெக்ஷன் ஸிரிஞ்சை எவர் சில்வர் இடுக்கியால் எடுத்து ''போன தடவை நாப்பது தானே போட்டுக்கிட்டீங்க'' என்றார்.

'ஆமாம் டாக்டர்.''

''எந்தக் கைலே போட்டுக்கிட்டீங்க?''

''இடது கைலே.''

வலது கையில் ஸ்பிரிட் பூசி அந்த மெல்லிய ஊசி முதல் எதிர்ப்புக்குப் பின் உட்சென்று சாமிநாதன் சரீரத்துக்குள் இன்ஸுலின் லெண்ட்டே ஏற ''பேசாம நீங்களே தொடையிலே போட்டுக்கக் கத்துக்கிடலாம். தினம் இப்படி டவுன் பஸ் பிடிச்சு வர்ரதுக்கு பதிலா,'' என்றார் டாக்டர்.

''எனக்கு என்னமோ தயக்கமா இருக்கு டாக்டர். எனக்கே நான் ஊசி குத்திக்க தைரியம் வரும்னு தோணலே.''

''லட்சம் ஜனங்க பண்ணிக்கிடறாங்க. ஒரு வாழைத்தண்டிலே குத்தி ரெண்டு நா பழகினா தானா வந்துடுது. கால் எரிச்சலுக்கு ஒண்ணு தொடையிலே போட்டுடலாமா?''

''பெரிய ஊசியா?''

''ஆமா''

''வேண்டாம் டாக்டர், வலி பிராணன் போறது, நாளைக்கு வெச்சுக்கலாம்.''

''ஊசி குத்தறவலிக்கு எரிச்சலே தேவலைன்னு நாளைக்குப் பார்த்துக்கிடலாம்.''

''எத்தனை நாள் டாக்டர்! எத்தனை ஊசி போட்டுக்கறது! என் உடம்பே சல்லடையாப் போயிடும் போல இருக்கு டாக்டர்.''

''என்ன செய்யறது! உங்க நோய் அப்படி!''

''கொஞ்ச நாள் மாத்திரை சாப்பிட்டுப் பார்க்கறேனே, ஊசி வேண்டாமே!''

''காலையில் மூத்திரம் காச்சிப் பாத்தீங்களா?''

''பார்த்தேன்''

''என்ன கலர் இருந்தது''

''பழுப்பு!''

''பழுப்பு! அப்ப மாத்திரையும் சாப்பிடணும். ஊசியும் குத்திக்கிடணும்.''

''சரிதான்'' என்று அலுத்துக்கொண்டு கையைத் தடவிக்கொண்டு எழுந்து நின்றான் சாமிநாதன்.

''டயபட்டீஸ்னா அப்படித் தான். அலோபதியிலே வேறு ட்ரீட்மெண்ட் கிடையாது! பழுப்பாவா இருந்ததுங்க நீங்க! நேத்திக்கு ஏதாவது வீட்டிலே விசேஷமா? விருந்து சாப்பாடு ஏதாவது?'

''இல்லே டாக்டர்! ஆபீஸ்லே ஒரு

சுஜாதா

பார்ட்டி!''

''என்ன சாப்ட்டீங்க''

''ஒரே ஒரு மசாலா தோசை''

''அப்புறம்?''

''ஒரு ஜாங்கிரி''

''ஐஸ்க்ரீம் இருந்திருக்குமே?''

''இருந்தது''

''காப்பிலே சர்க்கரையா?''

''ஒரேஒரு நாள் தானே!''

டாக்டரின் முகம் சிவந்தது!'' ஏனயா நீங்கள்ளெல்லாம் படிச்சவங்கனனு பேரு. எத்தனை தடவை எத்தனை அழுத்தமா சொல்லியிருக்கிறேன். இந்த மாதிரி வர்ஜ்யா வர்ஜ்யமில்லாம தின்னுறீங்க. டயட்டைக் கட்டுப்படுத்துங்கன்னு. உங்க உடம்பைப் பத்தி உங்களுக்கே கவலை இல்லேன்னா. நாக்கை அடக்க முடியாம ஆயிரம் ஆயிரம் காலரியா முழுங்கினீங்கன்னா நான் உங்களுக்கு வைத்தியம் பண்ணறதிலே என்னய்யா பிரயோசனம்? நீங்க உங்க இஷ்டத்திலே சர்க்கரையைக் கட்டுப்படுத்தாம ஒரு லெவலுக்குமேலே போயிடுச்சுன்னா எவ்வளவு காம்ப்ளிகேஷன்ஸ் தெரியுமா? ஏன்யா இப்படி

மழைககு முன்பு எங்க 'ஏரியா' ரொம்ப நன்றாக இருந்தது. மழைக்கு அப்புறம் பார்த்தால், '' இது என்ன ஏரியா?—குளமா?'' என்று கேட்கிறபடி ஆகி விட்டது!

உங்களையே அறிவுகெட்டதனமா அழிச்சுக்கப்பாக்கறிங்க! நீங்க போகலாம், நெக்ஸ்ட்!''

சட்டையை ஆணியில் மாட்டி விட்டு ''இந்த டாக்டர் கோவிந்தராசன்ரொம்ப முசுடுடி!'' என்றான்.

''ஏன்?''

''ஏதோ நேத்திக்கு ஒரு மசால்தோசை தின்னுட்டேனும். ஊரே கொள்ளை போய்ட்டமாதிரி காச்சு காச்சுன்னு கத்தறான். எல்லாம் அரைகுறைப் பசங்க. எங்க ஆபீசிலே டி. கே. வெங்கடாசலம்னு ஒத்தன் இருக்கான். அவனுக்கும் டயாபடிஸ். மாத்திரை மட்டும்தான் சாப்பிடறான். ரெண்டு வேளையும் அரிசி தான் சாப்பிடறான். டிஃபன் சாப்பிடறான்.காப்பிலே சர்க்கரைதான் போட்டுக்கறான். நன்...னு சம்பிரமமா திங்கறான்.''

''அவருக்கு உங்களைப் போல ஜாஸ்தி இருக்காதோ என்னவோ.''

''என்ன ஜாஸ்தி! என்னடி ஜாஸ்தி. உனக்கு என்ன தெரியும். எது ஜாஸ்தி? எது கம்மின்னு... சொல்லு பார்க்கலாம்!''

''எனக்குத் தெரியாதுன்னு!''

''பின்ன ஏன் ஜாஸ்திங்கறே!''

''சரி, கம்மி! போங்களேன்!''

''முதல்லே ஜாஸ்தின்னுப்புட்டு அப்புறம் கம்மியாம்! ஏண்டி! என்னைப் பார்த்தா உனக்கு கேலியா இருக்கு.எப்ப ஒழியப்போறான், இன்ஷூரன்ஸ்பணத்தை வசூலிக்கலாம்னு காத்திண்டிருக்கே.''

''ஏன் இப்படி அர்த்தமில்லாம பேசறேள்.''

''நீ பேசறதிலே ரொம்ப அர்த்தம் இருக்கு பாரு.. ஜாஸ்தியாம்!''

''உங்களோட புதுசா சண்டை ஆரம்பிக்கிறதுக்கு எனக்குத் திராணியில்லே.''

''பின்னே என்ன!... தினம் ஒரு மனுஷன் ஊசிமேலே ஊசியாப்போட்டுண்டு சா...கறான். நீ பாட்டுக்கு வீட்டிலே- கையைத் தேச்சுண்டு உக்காந்து வகையா சாப்ட்டுண்டு வாதாடறயா?''

''சரி இப்ப சாப்பிட வரேளா இல்லையா?''

''எனக்கு ஒரு இழவும் வேண்டாம். நீங்களே கொட்டிக்கோங்கோ.''

''சப்பாத்தி வேணும்னு சப்பாத்தி இருக்கு. அப்புறம் மத்யானத்து சாதம் நிறைய இருக்கு. கீரை. வெந்தியக்குழம்பு உருளைக்கிழங்கை வேற வதக்கி வெச்சிருக்கேன்.''

பதுங்கியிருந்த புலிபோல் அவனுள் வெவ்வேறு சுரப்பிகள் கிளம்பி வேலை செய்தன.

''சரி சரி. தட்டைப் போடு. சீக்கிரம் சாப்டுட்டுப் படுத்துண்டுடலாம்.''

மறுதினம் லக்ஷ்மியின் ஒன்றுவிட்ட மாமா வந்திருந்தார். குழந்தைக்கு பிஸ்கெட் பொட்டலமும் கொண்டு வந்திருந்தார். 'கடலூர் போயிருந்தேன்' என்று ஒரு பெரிய பலாப்பழம் கொண்டு வந்திருந்தார்.

''பலாச்சுளையெல்லாம் மாமா இவர் சாப்பிடக்கூடாது'' என்றாள் லக்ஷ்மி.

''ஏன் மாப்பிளே?''

''எனக்கு டயாபடீஸ்'' என்றான் சாமிநாதன். பலாப்பழம் அப்போதே போஸ்டு ஆபீஸ் வரை வாசனையடித்தது.

''மருந்து சாப்பிடறேளோல்லியோ?''

''தினம் ஊசி குத்திக்கறேன்'' என்றான் கையைத் தடவிக்கொண்டே.

''சரிதான். உங்களுக்கு 'தன்வந்திரி ராமு'வைப்பத்தித் தெரியாதா?

''தெரியாது! யாரு?''

''புதுசா வந்திருக்கார். பழைய ஏட்டுச்சுவடிகள்ளே இருக்கற அத்தனை வைத்திய ரகசியங்களையும் கரைச்சுக் குடிச்சவர். அதுக்கு மேலே அவர் ஒரு யோகி. ஒரு ஞானி. அவர் கை பட்டாலே ஜிவ்வுனு ஜுரம் எறங்கறது. இப்படித்தான் ஒரு கான்ஸர் கேஸ் மாப்பிளே! இந்தக் கத்துக்குட்டி டாக்டர்கள் எல்லாம் ஆபரேஷன் பண்றேன்டா, ஆப



ரேஷன் பண்றேன்டான்னு அவன் உள்ளுக்குள்ளே இருக்கிற அத்தனை சிறு குடலையும் வெட்டி வெட்டி நாலு இன்ச்சுக்குக் கொண்டு வந்துட்டாங்க. கடைசிலேமுடியாதுடா, வீட்டுக்குப்போடா, மூனு மாசத்திலே செத்துப் போடான்னு அனுப்பிச்சுட்டாங்க. அவன் ராமுகிட்ட போய் கால்லே விழுந்திருக்கான். எட்டு வேளை சூரணம் கொடுத்தார். ஒரு தைலம் கொடுத்தார். ஒரு தாயத்துக் கட்டினுர். பயல் எழுந்து நின்னு நடந்து இப்ப ஃபுட்பால் ஆடருன். இந்தமாதிரி எத்தனையோ கேஸ்''

''ஏன்னு!'' என்ருள் லக்ஷ்மி.

''டவுன்லே ராஜா டாக்கீஸ்க்கு எதிர்த்தாப்பலே க்ளினிக் வெச்சிருக்கார். அவரைப் பார்த்தாலே பாதி வியாதி போயிடும். நீங்க நிச்சயம்அவரைப்போய்ப் பாருங்கோ. ஊசியும் வேண்டாம். ஒண்ணும் வேண்டாம்.''

''டயபட்டீஸை க்யூர் பண்ணியிருக்காரா?''

''டயபடீஸ் என்ன சுண்டைக்காய்!''


''ஃபீஸ் நிறையக் கேப்பாரா?''

''ஒத்தைக்காசு வாங்க மாட்டார். மருந்துக்கு மட்டும் நிகர விலை ஒரு ரூபா, ரெண்டு ரூபா வாங்கிப்பார். எப்படி தேஜஸ்வியா இருப்பார் தெரியுமா? தன்வந்திரிங்கறது பட்டப்பேரு. வட தேசத்திலே... காசியிலே..''

ராஜா டாக்கீஸ் எதிரே அந்த சந்தில் அந்த வீட்டின்முன் ஒரு பழைய ஆஸ்டின் கார் நின்று கொண்டிருந்தது, ஓம் என்று போட்டு சந்தனம், குங்குமம் இட்டு.

''பண்டித ரத்தின வைத்திய சிகாமணி தன்வந்திரி ராமுவின் இலவச வைத்திய சாலை'' என்று எழுதி அதன்கீழ் சம்ஸ்கிருத சுலோகம் ஒன்றும் எழுதியிருந்தது. வாசலில் பெஞ்சு போடப்பட்டு நிறையப் பேர் காத்திருந்தார்கள். சிறு குழந்தைகள் குல்லாய் போட்டுக் கொண்டிருந்தன. வயதானவர்களும், பெண்களும் காத்திருந்தார்கள். பழைய மர பீரோக்களில் ஒரே சைஸில் பலப் பல பாட்டில்





"டேய் கிட்டு ஸ்கூலுக்குப் போறப்ப ஏணியையும் எடுத்துட்டு போறானே... எதுக்கு?"
"அவன் இப்போ ஹை-ஸ்கூலுக்குப் போறானாம்!"

களில் பலப்பல நிறங்களில பொடிகள ஊத்திருந்தன. எல்லாவற்றிலும் சம்ஸ் கிருதத்தில் பெயர் எழுதிய வில்லைகள் ஒட்டியிருந்தன. பனியன் அணிந்த ஒரு ஆசாமி தோன்றி 'வாங்க தாத்தா' என்று ஒரு கிழவரை அழைத்துச் செல்ல அவர் விட்டுச்சென்ற சூடான இடத்தில் சாமி நாதன் உட்கார்ந்து கொண்டான். பக் கத்தில் இருந்தவர் பொடி போட்டுக் கொண்டு கர்ச்சீப்பால் மூக்கை இடம் வலமாக வருடி விட்டு சாமிநாதனைப் பார்த்துச் சிரித்தார். சன்னமான குரலில் "கில்லாடி இந்த டாக்டர்" என்றார். சுவரில் ஒரு போட்டோவில் ஏகப்பட்ட மெடல்களும் கருப்புக் கோட்டும் தலைப் பாகையுமாக 'வைத்திய சிகாமணி'. சிரிக் காமல் பார்த்தான் சாமிநாதன். எதிரே இருந்த குழந்தை ஒரு தடவை சிரித்து விட்டு, சென்ற அரை மணிக்கு முன் புகட் டியதில் கொஞ்சத்தைக் கக்கியது.

தன்வந்திரி ராமுவுக்கு ஐம்பது வயசு இருக்கும். அவரைப் பார்த்த உடன், சாமிநாதனுக்கு உடம்பில் ஒரு தெம்பு பிறந்தது. நெற்றியில் ஒற்றை இட்டுக் கொண்டு பட்டுச் சால்வை போர்த்தி யிருந்தார். முன் அறையில் இருக்கும் போட்டோவுக்குப் பிறகு தாடி வளர்த் திருக்க வேண்டும். தீர்க்கமான மூக்கு. கழுத்தில் கொட்டை கொட்டை மாலை சால்வையின் ஊடே தெரிந்தது. கை விரல்களில் பலப்பல மோதிரங்கள் ஜொலித்தன. அந்த இடத்து வாசனை யிலேயே சிகிச்சை இருக்கிறமாதிரிதோன் றியது.

"உக்காருங்கோ. ஏய், பையா, இந்த விசிறியை சித்தப் போடு... என்ன உங் களுக்கு."

"டயபடீஸ்.. சர்க்கரை வியாதி

"எத்தனை நாளா?"

"ரெண்டு வருஷமாச்சு ஸார். இருக் குன்னு கண்டுபிடிச்சு!"

"என்னை ஸார்னு கூப்பிடாதீங்கோ. தமிழ்லே வேற நிறைய வார்த்தைஇருக்கு ஊசி போட்டுக்கறேளா?"

"போட்டுக்கறேன்"

"எத்தனை நாளா?".

"ஒரு வருஷமா"

"ச் ச் ச் ச் ... ஒரு வருஷமா ஊசி போட்டுண்டு பலன் இல்லே. என் கிட்ட வந்திருக்கேள், இல்லியா?"

"உங்களைப்பத்தி இப்பத்தான் கேள் விப்பட்டேன்."

"அப்படியா. தினப்பத்திரிகைகள், சஞ்சிகைகள் எல்லாம் விளம்பரம் கொடுத்திருக்கமே பார்த்ததில்லையா?"

"நான் விளம்பரம் எல்லாம் கவனமா படிக்கறதில்லே."

"படிக்கணும். உங்களுக்கு வயசு என்ன?"

"நாப்பத்திரண்டு."

"நாப்பத்திரண்டு வயசிலே சர்க்கரை வியாதி! மூலம் பவுத்திரம் வாயுவு ஏதா வது உண்டா?"

"இல்லே. டயாபட்டீஸ் ஒண்ணே போறும்னு நினைக்கிறேன்."

அவர் கொஞ்சம் அதிகமாகவே சிரித் தார்.

"கால் எரிச்சல் இருக்கா?"

"நிறைய"

"கண்ணைப் பார்த்தாலே தெரியறது. தாகம் நிறைய இருக்குமே?"

"நிறைய"

"மூத்திரம் பெட்ரோல் மாதிரி போகுமே?"

"ஆம்"

"நீங்க எந்த மாசம் பொறந்தீங்க."

"ஏப்ரல்"

"ஏப்ரல்னா பங்குனிலேயா, சித்திரை லேயா."

"பங்குனி"

"நினைச்சேன். கொஞ்சம் கையைக் கொடுங்கோ."

அந்தத் தொடுகையில் கொஞ்சம் புல் லரிப்பு ஏற்பட்டது சாமிநாதனுக்கு. நிறைய நேரம் அவனைத் துணி மூலம் தொட்டுக் கொண்டிருந்தார். அவனு டைய நாடி மூலம் அவனுள் ஆழத்தில் இருக்கும் அவன் வியாதியுடன் மனசுக் குள் பேச்சுவார்த்தைகள் நடத்துவது போல இருந்தது.

"உங்களுக்கு எத்தனை குழந்தை?"

"ஒரு பையன்."

"ஆம்டையா வந்திருக்காளா?"

"இல்லே."

"அடுத்த தடவை அழைச்சுண்டு, வாங்கோ. அவளோடயும் பேசணும். நான் குடிக்கப்போற மருந்தை நீங்க ஒரு மண்டலம் சாப்பிடணும். மூணேநாள்ல பலன் தெரியும். அதுக்காக மூணுநாள்லே விட்டுடக்கூடாது. நான் சொல்ற வைத் தியம் வெறும் மருந்து மட்டும் இல்லே. அனுஷ்டானம். நாப்பத்தெட்டு நாளும் ஸ்த்ரீ சம்போகம் கூடாது. தீட்சை பண்

ணிக்கக்கூடாது. கார்த்தால ஏந்து குளிச்சட்டு வைத்தீஸ்வரன் மேலே எட்டுசுலோசம் சொல்றேன். அதை நூத்தி எட்டு தடவை சொல்லணும். சினிமா கினிமா கண்றாவியை எல்லாம் பார்க்கக்கூடாது. அப்புறம் ஒரு சூரணம் கொடுப்பேன். அதை ஒவ்வொரு பொட்டலத்தையும் பேர்பாதியாக்கி ஒரு பாதியைத் தேன்லே குழைச்சுச் சாப்பிடணும். மறு பாதியை வெந்நீர் ஜலத்திலே கலந்து கால்ல எரியறதே அங்கே பத்துப் போடறுப்பலே போட்டுக்கணும். ஒரு லேகியம் தரேன். அதை தினம் ஒரு எலுமிச்சங்காஅளவு... ஒரு பன்னிரண்டு பதிமூணு வயசுப் பொண்ணுக்கு இருக்குமே அந்த அளவுக்குச் சாப்பிடணும்.''

''சாப்பாடு?''

''சாப்பாடு எல்லாம் சாதாரணமா சாப்பிடலாம். வெங்காயம், இங்கிலீஷ் காய்கறி மட்டும் வேண்டாம். சாதம் எல்லாம் சாப்பிடலாம். கோதுமை, கீதுமை எதுவும் வேண்டாம்.''

''இங்கிலீஷ் வைத்தியத்துக்கு முழுக்க எதிரா இருக்கீக''என்று பயத்துடன் சிரித்தான் சாமிநாதன்.

''ஸ்வாமி! நான் உங்களுக்குச் சொல்ற வைத்தியம் என் வைத்தியமில்லே. தேவ காலத்திலேருந்தே தேவ பாஷையிலே எழுதி வைச்சிருக்கா. ராமாயணத்திலே சர்க்கரை வியாதியைப்பத்திச் சொல்லியிருக்கு. தன்வந்திரி ஒரு சர்கம் எழுதியிருக்கார். நான் இதுவரைக்கும் இருநூறு பேருக்கு இதே சர்க்கரை வியாதியைக் குணப்படுத்தி இருக்கேன். முதல்லே நம்பிக்கை வேணும். நம்பிக்கையில்லாம ஒண்ணுமே நடக்காது.''

அந்தச் சூரணத்தையும் லேகியத்தையும் வாங்கிக்கொண்டு சுலோகங்களைத் தமிழில் எழுதிக்கொண்டு தன் பர்ஸை எடுத்துத் திறந்து அவரைப் பார்த்தான்.

''வெளிலே பையன் கிட்ட குடுங்கோ. என் கண் முன்னாலே 'அர்த்த'த்தை காட்டாதீங்கோ. எனக்கு அதைப் பார்த்தாலே வெறுப்பு.''

வெளியில் அந்தப் பையன் இரண்டரை ரூபாய் வாங்கிக்கொண்டான். அதன்பின் ஒரு நீண்ட அச்சடித்த புத்தகத்தை எடுத்து அதிலிருந்து ஒரு பக்கத்தைக் கிழித்துக் கொடுத்தான். அதில் சமஸ்கிருதத்தில் எழுதியிருந்தது. ''ஒருகாலேஜ் ஒரு இலவச வைத்தியசாலே ஆரம்பிக்கிறார். அதுக்கு பில்டிங் ஃபண்டுக்கு டொனேஷன். கட்டாயம் எதுவும்இல்லே. எல்லாம் உங்க இஷ்டப்படி. ஒரு டிக்கட் போறுமா?''

''போறும்.''

மேலே பத்து ரூபாய் கொடுத்துவிட்டு புறப்பட்டான்.

நான்காவது தினம் அவன் கால் எரிச்சல் குறைந்தது. முன்னைப்போல அத்தனை தாகமும் இல்லே. கொஞ்சம் தெம்பாக் கூட இருக்கு.

''என்னதான் சொன்னாலும் நம்ப பழயநாள் சாஸ்திரத்திலே மகிமை இல்லாம இருக்குமா?''

அந்த கிராதகப்பய கிட்ட போய்ச் சொல்லப்போறேன்.''

''யாரு''

''அதான் டாக்டர் கோவிந்தராஜு. சிடுமூஞ்சி.''

''இன்னும் எத்தனை நாள் இப்படி தனி ரூம்லே படுத்திண்டிருக்கணும்?'' என்றாள் லக்ஷ்மி.


''நாப்பத்து நாலு நாள் வேதத்திலே சொல்லியிருக்கு. பல்லேக் கடிச்சுண்டு கொஞ்சம் கட்டுப்பாடா இருந்துட்டா முழுக்க சரியாப் போயிடும். என்னவோ அரைகுறைப் படிப்புப் படிச்சுட்டு, தலை கனத்துப்போய் பேஷண்டுகள் கிட்ட பொறுமையாகூடப் பேசத் தெரியலே. எப்ப பார் எரிஞ்சு விழுந்துண்டு. அதை சாப்பிடாதே, இதைச் சாப்பிடாதேன்னு! உயிரை வாங்கினான். அப்பா! இன்னிக்கு என்ன சமையல்.''

''பண்டிகை நாளோல்லியோ, ஜவ்வரிசிப் பாயசம் வைக்கலாம்னு இருக்கேன்.''

''ஜமாய். அந்த மனுஷன் நிஜமாகவே மஹான்தான்டி. தொட்டாலே உடம்பெல்லாம் பரபரங்கிறது! அவர் பேச்சிலே இருக்கிற ஞானம், முகத்திலே இருக்கிற தேஜஸ். உன்னேக்கூட வரச்சொல்லியிருக்கார். உனக்குக்கூட ஒத்தைத் தலைவலின்னுவியே...''

உலகப் புகழ்பெற்ற டைரக்டர் சத்ய ஜித் ரே வெற்றிப் படங்களைவிடத் தோல்விப் படங்களைத் தான் அதிகமாகப் பார்ப்பது வழக்கம். காரணம்?

''தோல்விப் படங்களைப் பலமுறை பார்த்தால் எதனால் அது தோல்வியடைந்திருக்கிறது; எப்படி அந்தத் தவறை நாம் செய்யாமலிருக்க முடியும் என்றுதான் போரடித்தால் கூட மீண்டும் மீண்டும் அந்த தோல்விப் படத்தையே பார்க்கிறேன்''



ராத்திரி எட்டு மணி சுமாருக்கு டவுனுக்கு வந்து முனிசிபல் மார்க்கெட்டில் கறிகாய் வாங்கிக் கொண்டு போகும் போது சாமிநாதன் டாக்டர் கோவிந்தராஜுவின் கிளினிக் வழியாகச் சென்றான். திடீர் என்று தீர்மானித்து மாடிக்குச்சென்றான். கூட்டம் இல்லை. 'இந்த முரடனுக்கு யார் வருவா.'

''வாங்க சாமிநாதன்! என்ன நாலு நாளாக் காணோம். தாடி கீடி எல்லாம் வளர்த்திருக்கீங்க.

''டாக்டர், எனக்குச் சரியாப் போயிடுத்து.''

''என்ன சரியாப் போயிடுச்சு.''

''டயபட்டீஸ்''

''என்னது?''

''ஆமாம். சரியாயிடுத்து.''

''என்னய்யா சொல்றீங்க? டயாபட்டீஸாவது சரியாப் போறதாவது!''

''எனக்கு சரியாப் போயிடுத்து உங்க வைத்தியத்திலே அதுக்கு மருந்து இல்லே. வேற வைத்தியத்திலே இருக்கு.''

''நீங்க என்ன சொல்றீங்க! நாலு நாளா இன்ஜெக்ஷன், வேற டாக்டர் கிட்ட கூட எடுத்துக்கலையா?''

''இல்லே. அதுக்கு பதிலா மருந்து சாப்பிடறேன். நல்ல குணம் இருக்கு. நீங்க மாத்தி மாத்தி என் கையிலேயும் தொடையிலேயும் ஊசி குத்தினேள். என் கால் எரிச்சல் போகலே. நாலு நாள் சூரணத்திலே கம்ப்ளீட்டா போய்டுத்து.''

''சூரணமா!என்னய்யா கேனத்தனமா பேசறீங்க. டயப்பட்டீஸ் என்கிறது, என்ன தெரியுமா? நம்ம உடம்பிலே இன்ஸுலின்னு ஒரு பொருள் இயற்கையா சுரக்கணும். டயாபடீஸ் உள்ளவங்களுக்கு அது இல்லே. அதுக்குப் பதிலா வெளியிலேருந்து இன்ஜெக்ஷன் வழியா தேவையான இன்ஸுலின் கொடுக்கறோம். அவ்வளவுதான். ஒரு ஆளுக்குக் கை இல்லே. ஒரு ஆளுக்குக் கால் இல்லே. அதுமாதிரி ஒரு ஆளுக்கு இன்ஸுலின் இல்லே. இது ஒரு குறை. டெஃபிஷன்ஸி அது இல்லேன்னு நம்ம உடம்பிலே சேர்ற சர்க்கரையை, கார்போ ஹைட்ரேட்டை சமாளிக்க முடியாது. அதனாலே பல காம்ப்ளிகேஷன்ஸ்வரும். கண்ணைப்பாதிக்கும். இருதயத்தைப் பாதிக்கும்.ஆளேயே பாதிக்கும்...''

''அதெல்லாம் சரிதான் டாக்டர். இப்ப எனக்கு எரிச்சல் போய்டுத்தே, அதுக்கு என்ன சொல்றேள்.''

''இது ஏதோ டெம்பரரியாஆயிருக்கு. லுக். சாப்பாட்டையாவது கட்டுப்படுத்திக்கிட்டு இருக்கீங்களா அல்லது அதுக்குக் கூட சூரணம் பார்த்துக்கறதா?''

''டயட் கண்ட்ரோல் எதுவும் தேவையில்லே டாக்டர். நார்மலாத்தான் சாப்பிட்டுக்கிட்டிருக்கேன்!''


''நார்மலா? அரிசி, மசால் தோசை! ஓ காட்! என்னய்யா சாமிநாதன்! நான் எப்படிய்யா சொல்றது உங்களுக்கு? ஏன் இந்த மாதிரி இவ்வளவு பெரிய ரிஸ்க் எடுத்துக்கறீங்க'' ஸ்தம்பித்து நின்றார் டாக்டர்.

''வரேன் டாக்டர். உங்க கிட்டசொல்லிட்டுப் போகலாம்னுதான் வந்தேன். நீங்க படிச்சது மட்டும்தான் வைத்தியம்னு உங்க சிஸ்டம்மட்டும் தான் உசத்தின்னு நினைச்சுக்காதீங்க.கொஞ்சம் விஷயம் தெரிஞ்சவங்க வேற ஃபீல்டிலேயும் இருக்காங்க. அதைத்தான் சொல்ல வந்தேன்''என்று சொல்லி விட்டுத் திருப்தியுடனும் அமைதியுடனும் நம்பிக்கையுடனும் வெளியே வந்த சாமிநாதன் பாரிஜாதா கபேயில் அகாலமாக டிபன் சாப்பிட்டு விட்டு ஸ்வீட் சாப்பிட்டு விட்டு காப்பி சாப்பிட்டு விட்டுப் பல பழங்கள் வாங்கிக்கொண்டு வீட்டுக்குப் போன போது மணி ஒன்பது இருக்கும்.

டாக்டர் கோவிந்தராஜு க்ளினிக்கை மூடத் துவங்கிய சமயம் அது. அப்போது ஒரு கடைசி நிமிஷ பேஷண்ட் வந்தார். அவர் நன்றாகப் போர்த்தியிருந்தார். பக்கத்தில் ஒருவரும் இல்லை என்று தெரிந்ததும் தம் போர்வையை நீக்கிக்கொண்டார்.

''மூடப் போற சமயத்திலே வரீங்களே! என்ன உடம்புக்கு. உள்ளே வாங்க!'' என்றார் கோவிந்தராஜு.

பண்டித ரத்ன வைத்திய சிகாமணி தன்வந்திரி ராமு உள்ளே சென்றார்.



ஆவாரை

(Cassia Auriculata)

நாடி, நரம்புத் தளர்ச்சியைப் போக்கும். உடலுக்கு உரம் சேர்க்கும்.

அளவிற்கு மீறிய நீரை உடலிலிருந்து வெளியேற்றாமல் தடுக்கும். இரத்தத்திலும், சிறு நீரிலும் ஏற்படும் சர்க்கரையை ஒடுக்கும்.

உடல் நாற்றம் விலக்கும். உடல் நிறம் துலக்கும்.

தாது இழப்பு, பல ஹீனம், மயக்கம், தூக்கமின்மை, மூச்சுத்திணறல், உடல் எரிச்சல், நா வறட்சி ஆகியவற்றை ஒழிக்கும்.

'ஆவாரை பூத்திருக்கச் சாவாரைக் கண்டதுண்டோ?' என்று ஒரு பழமொழி உண்டு.

—மூலிகைமணி



[illegible] சிட்டுக்குருவிகள்

அகஸ்தியன்

குளுகுளுவென்று முழுதும் ஏர் கண்டிஷன் செய்யப்பட்டிருந்த அமெரிக்கன் லைப்ரரிக்குள் செல்லும்போது சிவாவுக்கு எப்போதும் கிளுகிளுவென்று இருக்கும். காரணம், அந்த லைப்ரரியில் பணியாற்றும் பல அழகிய பெண்களில் ஒருத்தி அவனது மனத்தைக் கவர்ந்தவள். அதாவது, அவனுக்கு அவள் மேல் ஒரு 'இது!' இத்தனைக்கும் அவளுடன் பேசியதுகூடக் கிடையாது. அந்தப் புத்தகசாலைக்கு வரும் பல புத்தகப் புழுக்களில் அவனும் ஒரு புழு — அவனைப் பொறுத்தவரை.

அவளது கவனத்தைக் கவருவதற்கு அவன் பல முயற்சிகள் செய்திருக்கிறான். அவள் ரெஃபரன்ஸ் டெஸ்க்கில் இருக்கும்போது வேண்டுமென்றே ''எஸ்கொயர் ஏப்ரல்

இஷ்டு வேண்டுமே என பான். அல்லது ''வில்லியம் ஹாஸ் விட் அப்கன்'' என்ற அமெரிக்க எழுத்தாளரின் விலாசத்தைக் கண்டு பிடித்துத் தரமுடியுமா?'' என்று கேட்பான்! இதுமாதிரி எத்தனையோ என்கொயரிகள் வருவது சகஜமாதலால், அவள் பதில் சொல்லி விட்டுப் போவாளே தவிர, அவனை இரண்டாம் தடவையாகத் திரும்பிப் பார்த்ததில்லை.

சிவாவுக்கு அன்றைய தினம் லைப்ரரி மாடிப்படி ஏறும்போது வழக்கமான கிளுகிளுப்புடன் சிறிது குறுகுறுப்பும் சேர்ந்து கொண்டது. ஏனெனில், அவன் கையிலிருந்த புத்தகத்தைப் பத்து நாட்களுக்கு முன்பே திருப்பி இருக்கவேண்டும்! கவுண்டரில் 'அவள்' இருந்தாள். (ஆமாம், 'அவள்' பெயர் என்ன?)

இரண்டடி இடைவெளியில் அவளை நெருக்கமாகப் பார்க்க — அதாவது அவள் புத்தகத்தின் டிக்கட்டுகளை எடுத்துக் கொண்டிருக்கும்போது — அவளைக் கண்களால் ரசிக்க வாய்ப்பு கிடைக்கிறதே என்ற மகிழ்ச்சி வேறு உள்ளத்தில் ஊறியது.

''ஐ யம் சாரி...டூர் போய்விட்டேன். அதனால்தான் லேட்டாகி விட்டது..'' என்று குழைந்துகொண்டே சொன்னான், புத்தகத்தைத் திருப்பிக் கொடுக்கும்போது.

தட ஈஸ் ஆலரைட்... டூர் போகும் முன்பு புத்தகத்தின் ட்யூ-டேட்டைப் பார்த்துக் கொடுத்துவிட்டுப்போவது நல்லது.''

அவனது லைப்ரரி டிக்கட்டைக் கொடுத்துவிட்டு, புத்தகங்களை அடுக்கும் வேலையில் அவள் ஈடுபட்டாள்.

'எந்த ஊருக்கு டூர்? என்ன வேலை உங்களுக்கு?' என்பது போன்ற கேள்விகளுக்குப் பதில் சொல்லத் தயாராக இருந்தான் சிவா. ஆனால் அவள் கேட்டால் தானே!

லைப்ரரியில் அரைமணி நேரம் இருந்துவிட்டு ஒரு பிரம்மாண்டமான புத்தகத்தை எடுத்தான். அதன் தலைப்புகூட அவனுக்குப் புரியவில்லை. சும்மா அவளை 'இம்ப்ரெஸ்' செவதற்காகத்தான்! கவுண்ட்டரில் அவன் போனபோது, அவள் மற்றொரு பெண்ணுடன் பேசிக்கொண்டிருந்தாள்.

''சண்டே 'சைலண்ட் மூவிக்கு' ராஜுவுடன் போகிறேன். நெக்ஸ்ட் வீக் ராஜுவுடன் வருகிறேன்'' என்றாள்.

''சித்ரா.. இதுவரை எத்தனையோ தடவை இப்படிச் சொல்லிவிட்டே. அடுத்த வாரம் வாவில்லை யென்றால் அப்புறம் பாரேன்..''

ஆ! அவள் பெயர் சித்ரா. சித்திரம் மாதிரி, வடித்தெடுத்த சிலை மாதிரி, அழகான காவியம் மாதிரி சேச்சே, இப்படியெல்லாம் அவளை மனதிற்குள் வர்ணித்துக்கொண்டு, அதிக நேரம் நின்றால் நன்றாக இருக்காது. சிவா புத்தகத்தை நீட்டியபடியே கனைத்துக் கொண்டான்.

சித்ரா, புத்தகத்தில் தேதியை முத்திரையிட்டுக் கொடுத்தாள்.

புத்தகத்தை எடுத்துக்கொண்டு, சித்ராவைக் கடைக்கண்ணால் விழுங்கிச் சுவைத்துக்கொண்டே லைப்ரரியை விட்டு வெளியே வரும்போது சிவாவின் மனத்தை ஒரு பெரிய கேள்விக்குறி '70 எம்.எம்.'மில் ஆக்கிரமித்துக்கொண்டிருந்தது. யார் அந்த ராஜு? வில்லனா? 'சைலன்ட் மூவி' ஸுக்குத்தானே போகிறாள், நாமும் அர்ச்சனா தியேட்டருக்குப் போனால் என்ன? எந்த ஷோவுக்குப்போவாள்?

சைலன்ட் மூவி' மாட்டினி ஷோவைப் பார்த்து ஏமாற்றத்துடன் வெளியே வந்தான். காரணம் சித்ராவையோ அந்தப் பயல் ராஜுவையோ காணோம்! ராஜு சுத்த போக்கிரியாக இருப்பான். சினிமா அது இது என்று பொய் சொல்லி அவளை 'புத்த ஜயந்தி பார்க்'கிற்கு அழைத்துக்கொண்டுபோய் 'கெக்கே பிக்கே' என்று ஏதாவது பேசிக் கொண்டிருப்பான். முகம் பார்த்தறியாத ராஜுவின் மேல் சிவா

வுக்கு ஒரே கோபமாக வந்தது!

ஆறு மணிக் காட்சிக்கும் டிக்கெட் வாங்கிக் கொண்டிருந்தான். காதல் என்பது எத்தனையோ ஹார்ஸ்பவர் கொண்டது! சித்ராவைப் பார்க்கத் தொடர்ந்து எத்தனை ஷோ வேண்டுமானாலும் அலுக்காமல் பார்ப்பான்!

திடீரென்று அவன் கண்முன்னே குளிர்ந்த கிரணங்களுடன் ஒரு வனதேவதை தோன்றினாள். ("மன்மதா, நீ எங்கிருந்தாலும் வாழ்க!") சித்ரா... சித்ராவேதான். சாதாரணக் காட்டன் புடவைதான். அதுவே அவளுக்கு என்ன கவர்ச்சியாக இருக்கிறது. கூட வருவதுதான் ராஜுவோ? அடப்பாவமே, இவனும் பார்ப்பதற்குச் சுமாராக இருக்கிறானே!... சட், இந்தச் சித்ராவை நினைத்து ஏங்கிக் கொண்டிருக்க முடியாது. ஊரில் இருக்கும் அம்மாவுக்குக் கடிதம் எழுதி ஏதாவது அலமேலுவையோ அம்புஜத்தையோ பார்க்கச் சொல்லவேண்டியதுதான். குறைந்தபட்சம் அம்மாவாவது திருப்திப்படுவாள். அந்த அலமேலுவை இந்த டில்லிப் பட்டணத்திற்குக் கொண்டு வந்து நாலு இடம் அழைத்துக்கொண்டு போய் என் ஒய்ஃப் என்று அறிமுகம் பண்ணுவதைவிட... பாவம், கிராமத்துப் பெண். அவளை எதற்குக் கரிக்க



"கல்யாணத்துக்கு ஆயிரம் அழைப்பிதழ்கள் அச்சடிச்சோம். உன்னைப் பார்த்தவுடன்தான் ஆயிரத்து ஒன்றாக அடிக்கவில்லையே என்று நினைப்பு வருது...!"

வேண்டும்?

"சார்... ஒன் ருபீக்குச் சேஞ்ச் இருக்கிறதா?" யாரோ தன்னிடம் கேட்க, மளமளவென்று அலமேலு வீடமிருந்து 'அர்ச்சனா' தியேட்டருக்கு வந்தான், சிவா.

திரும்பிப் பார்த்தான். அந்த மர்ம மனிதன் ராஜுதான். அவனருகில் சித்ரா!

"ஸ்கூட்டர் ஸ்டாண்ட்காரனுக்கு முப்பது பைசா தர வேண்டும். சில்லறை இருந்தால் கொடுங்கள்."

"யெஸ். இதோ" என்று பரபரப்புடன் சொல்லிக் கொண்டே பர்ஸைத் திறந்து காசுகளை எண்ணிக்கொடுத்தான்.

"தாங்க் யூ" என்றான் ராஜு.

இங்குள்ள நூற்றுக்கணக்கான பேர்களைவிட்டுவிட்டு என்னிடம் சில்லறை கேட்டீர்களே உங்களுக்கு நான்தான் தாங்க்ஸ் சொல்லவேண்டும்!— மனதுக்குள் சொல்லிக்கொண்டே, "ஓ. கே.." என்றான். உடனே தொடர்ந்து சித்ராவைப் பார்த்து, "நீங்கள் அமெரிக்கன் லைப்ரரியில் இருக்கிறீர்கள் இல்லையா?" என்று கேட்டான்.

"ஆமாம்... நாலைந்து நாட்களுக்கு முன்பு 'ஹார்வார்ட் லாம்பூன்' என்ற புஸ்தகத்தை நீங்கள் தானே ரிடர்ன் பண்ணினீர்கள்."

"ஆமாம்...ஏன்?"

"ஒன்றுமில்லை. அதில் ஒரு லெட்டர் இருந்தது. லேடீஸ் ஹாண்ட் ரைட்டிங்...எடுத்து வைத்திருக்கிறேன். தேவையானால் வந்து வாங்கிக் கொள்ளுங்கள்."

"ஓ! அதுவா! எங்கம்மா எழுதியது. நாளைக்கு வருகிறேன்" என்றான். 'என் பெயர் சிவா' என்று சொல்லியபடியே ராஜுவிடம் கையைநீட்டினான். "ஐயம் ராஜு—இவளுடைய பிரதர்" என்றான்.



"ஐயேம் சாரி! டூர் போ
விட்டேன்...அதனுல்தான் லே
டாகி விட்டது...!" என்று குழைந்
கொண்டே சொன்னுன்.



பிரதர்! பிரதர்!! இந்த ஒரு சொல்லுக்கு இவ்வளவு மகத்தான சக்தி இருக்கிறது! அவன் மனத்தில் ஒரு உற்சாக வெள்ளத்தையே மடை திறந்துவிட்டது அந்தச் சொல்!

ராஜு சார். நீங்கள் ரொம்ப நல்லவர். உங்களை வில்லன் என்று சொன்னேனே. நான் சரியான முட்டாள்.. என்னை மன்னித்துக் கொள்ளுங்கள், சித்ரா போன்ற அழகான பெண் கன்னுபின்னுவென்று ஒருவனைக் காதலித்து அவனுடன் சினிமா, டிராமா என்று சுற்றுவாள் என்று நினைத்தேனே அது எத்தனை பெரிய ஹிமாலயத் தப்பு? தப்பா..? இல்லை. மகாபாவம்!— மனத்தில் எண்ணங்கள் டெலிபிரிண்ட்டராக ஓடிக்கொண்டிருந்தன.

ராஜுவிடம் கையைக் குலுக்கிய படியே ''ப்ரைமா ஃபார்மா கம்பெ டேடிவ் நான்'' என்றான்.

''இவள் என் சிஸ்டர்... இந் தப்பா தம்பி உன் முப்பதுபைசா... ஆமாம், மிஸ்டர் சிவா... நீங்கள் மெடிகல் ரெப்ரசென்டேடிவ் என்பதால் ஒன்று கேட்க விரும்புகிறேன். வென்டாலின் என்ற மருந்து சுலப மாகக் கிடைக்கவில்லை..''

'யாருக்கு ஆஸ்துமா?' (சித்ராவுக்கா? இருக்காது. ஆண்டவனே இருக்கக்கூடாது)

''எங்க அங்கிளுக்கு. இந்த மருந்துதான் கொஞ்சம் கேட்கிறது?''

''என்ன கேட்கிறது? ஆஸ்துமா மருந்தைக் கேட்கிறது. மருந்து ஆஸ்துமாவைக் கேட்கிறது'' என்று சொல்லித் தானே சிரித்தான் சிவா.

களுக்கென்று சித்ராவும் சிரித்தாள். பளீர் என்று ஆயிரம் மத்தாப்புகளை யார் சிதறினார்கள்? இத்தனை முல்லைப் பூக்களை யார் சொரிந்தார்கள்? சித்ராவின் ஒரு சின்னஞ் சிரிப்புக்கா இத்தனை கவர்ச்சி! அது சிரிப்பு அல்ல. அது சிரிப் பூ!

ராஜுவும் அரைமில்லி மீட்டர் புன்னகையுடன், ''உண்மையில், தான் கேட்கிறேன். வென்டாலின் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது'' என்றான்.

''பம்பாயில் என் கலீக்ஸ் இருக்கிறார்கள். அவர்களிடம்வாங்கி அனுப்பும்படி சொல்கிறேன். அது ஃபாரினிலிருந்துதான் வருகிறது... கிடைத்தால் நான் உங்களுக்குத் தரேன்.''

''கஷ்டமில்லையென்றால் சித்ராவிடம் கொடுத்து விடுங்கள். ஷி வில்

'காண்ட்'டில் மிலிடரி பாரக்ஸில் இருக்கிறேன். அதனால்தான்.. அப்படி நீங்க கொடுக்க டைம் இல்லே என்றால் சித்ராவுக்கோ எனக்கோ ஃபோன் பண்ணி..''

''சார்.. தட் ஈஸ் மை லுக் அவுட்... மருந்து முதலில் கிடைக்கட்டும்.. ஹௌ அபவுட் ஏ ட்ரிங்? கோல்ட் ஸ்பாட், கேம்பா..?'

அவளது குவிந்த உதடுகளையும், ஸ்ட்ராவால் பானத்தை அவள் உறிஞ்சும் அழகையும் அவன் தன் கண்களால் பருகினான்.

அவள் தலை முடியைச் சற்று லேசாக வெட்டிக் கொண்டிருப்பதால் முன்பக்கம் அவை அழகாக வளைந்து விழுந்து... எத்தனை மழமழப்பான உதடுகள்? இயற்கையிலேயே இவ்வளவு வளைந்த புருவங்களா?

படம் பார்க்க உள்ளே சென்றார்கள். அவர்களுக்கு வெவ்வேறு வரிசையில் சீட் இருந்ததால் பிரிந்து போய் உட்கார்ந்தனர். பாவம், சிவா படத்தைக் கொஞ்சம் கூட ரசிக்கவில்லை. தூரத்தில் இருளில் ஒரு உருவம்–சித்ரா– விழுந்து விழுந்து சிரித்துப்படத்தை ரசித்துக் கொண்டிருந்ததைத்தான் அவன் பார்த்துக்கொண்டிருந்தான்!

''ஹலோ...நமஸ்தே..ஐ மீன், குட்மார்னிங்...மிஸ்.. சித்ரா'' என்



வாழைப்பழம் தின்கிற பந்தயத்திலே ஐம்பது வாழைப்பழம் தின்னு முந்தின சாதனையை முறியடிச்சவர் இவர்தான்...

முந்தின தடவையும் ஐம்பது பழம் தானே தின்றதாக ஞாபகம் இருக்கு...?

இந்தத் தடவை தோலோடே தின்கிற பந்தயம் ஆச்சே...!

றான் சிவா, லைப்ரரி 'இஷ்யூ' டெஸ்க்கில் இருந்த சித்ராவைப் பார்த்து.

''உஷ்...உரக்கப் பேசக்கூடாது.. இது லைப்ரரி...நமஸ்காரம். அன்றைக்குப் படம் முடிந்த பிறகு உங்களைப் பார்க்க முடியவில்லையே. உங்கள் போன் நம்பரைக் கேட்க வேண்டும் என்று அண்ணா சொன்னார்''–கிசுகிசு குரலில் சித்ரா சொன்னாள்.

''மருந்து தானே? சொல்லியிருக்கிறேன். கிடைத்தவுடன் கொண்டு வந்து தருகிறேன்.''

பேசுகிறீர்கள்.''

'ஸாரி... 'சைலன்ட் மூவி'யில் பேசுகிற மாதிரி பேச வேண்டுமா?.. ஒன்றுமில்லை, அந்த லெட்டர்...''

''இதோ வைத்திருக்கிறேன்'' என்று சொல்லிச் சித்ரா டிராயரைத் திறந்து எடுத்துக் கொடுத்தாள்.

''தாங்க்ஸ்...''

அச்சமயம் வேறொரு பெண் அங்கு வந்து ''சித்ரா, நீ லஞ்சுக்குப்போ. நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்றாள்.

கைப் பையை எடுத்துக்கொண்டு சித்ரா புறப்பட்டாள். சிவா தயங்கியபடியே லைப்ரரியை விட்டு வெளியே வந்தான். சித்ராவும் வெளியே வருவதைப் பார்த்த, சிவா, பைத்தியக்கார இளிப்பை இளித்து வைத்தான்.

''ஒன்றுமில்லை. அம்மா எழுதியிருந்த கடிதத்தை நினைச்சுப்பார்த்தேன். சிரிப்பா வந்தது'' என்றான்.

''உம்.''

''நானும் லஞ்சுக்குத் தான் போகிறேன். 'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' கான்டீனுக்கு, இஃப் யூ டோண்ட் மைண்ட், நீங்களும் வரலாம்'' கான்டீனில் போய் உட்கார்ந்து பேசலாம். ரொம்ப இன்டரஸ்டிங்காகப் பேசறீங்க..''

அடுத்த அரைமணி நேரம். இரு

என்ன சொர்க்க லோகம்! அவளைப் பொறுத்த வரை—பல விஷயங்களைப் பேசினார்கள்.

''அம்மாவுக்கு ஊரைவிட்டுவரு வதற்கு இஷ்டமில்லை. நான் இங்கே தனியாக ஹோட்டலில் சாப்பிட்டு உடம்பைக் கெடுத்துக் கொள்கிறேனும்''

''உம்''

''இந்துடன் பத்து லெட்டர் போட்டு விட்டாள்.''

''கல்யாணம் செய்துகொள்ளச் சொல்லியா?''

''ஆமாம்''

''செய்துகொள்வது தானே?''

''நான் தயார். அவள்?''

''அவள் யார்? உங்களுக்கென்ன குறை. மெடிகல் ரெப்ரசென்டேடிவ். சம்பளம், டி.ஏ., அது இது என்று வரும். முக்கியமானது ஒன்னு சொல்ல மறந்துட்டேனே, வென்டாலினுக்காக எவ்வளவு பணம் தரணும்?''

''இப்போது பணம் வேண்டாம். மருந்து கிடைச்சதும் கேட்டு வாங்கிக்கொள்கிறேன். உங்கள் மாமாவுடன் தான் இருக்கீங்களா?''

''மாமா கிராமத்தில் இருக்கிறார். நானும் அண்ணாவும் தனியாகத் தான் இருக்கிறோம்.''

''அப்படியா? காலையில் சமை

பாவம் ரொம்ப எக்ஸாஸ்டிங்!''

''அதெல்லாம் ஒன்றுமில்லை. இப்போது ஒரு பெரிய பிராப்ளம் வந்திருக்கிறது''—சித்ராவின் முகத்தில் கவலையின் ரேகைகள் ஓடின.

''என்ன விஷயம், சித்ரா?''

''எங்க அண்ணாவுக்கு நேபாளத்திற்கு டிரான்ஸ்பர் ஆகி விட்டது.''

''உங்க அம்மா, அப்பா யாராவது இங்கு வரமாட்டார்களா?''

''இங்கு எப்படி வர முடியும்? இந்த உலகத்திலேயே அவங்க இல்லேயே!''—சித்ராவின் கண்களில் இரண்டு முத்துக்கள்.

''மை காட்... உங்க மனசை வருத்தப்படச் செய்துட்டேன்... உங்கள் பிரதர் நேபாளா போய் விட்டால்?''

''என்ன செய்வது என்று தெரிய வில்லை.''

''யார் வீட்டிலாவது பேயிங்—கெஸ்ட்டாக இருக்கலாமே.''

''நல்லவங்களாக இருக்கணும். நம்பிக்கையானவங்களாக இருக்கணும். எங்க அண்ணாவும் ஒரு சிலர் கிட்டே சொல்லியிருக்கிறார்.''

''நானும், யாராவது இருந்தால் சொல்கிறேன்.''

அடுத்த பத்து தினங்கள் சிவா தனக்குத் தெரிந்த பலரைக் கேட்டான். ஒவ்வொருவரும் ஒவ்வொரு

பேயிங்—கெஸ்ட்டாக வைத்துக் கொள்ள மறுத்து விட்டார்கள். ஜப்பான் எம்பசியில் சிவாவின் நண்பர் பாலாஜி இருந்தார். நல்ல மனிதர். அவரிடம் போய்க்கேட்டான்.

''சார். உங்க டாட்டர் அனுஜா, வனஜா மாதிரி அந்தப் பெண்ணும் இருப்பாள். நல்ல பெண். அவள் ப்ரதருக்கு திடீர் என்று டிரான்ஸ்பர் ஆகிவிட்டது.''

''அது சரியப்பா. அவளுக்காக நீ ஏன் உருகறே... ஏதாவது இதுவா?''

''அப்படியொண்ணும் இல்லை என்று சொல்ல முடியாது. ஏதோ கொஞ்சம் பழக்கம். அவளுடைய அண்ணன் எனக்குப் ஃப்ரண்டு... 'சிவா' நீ தான் என் சிஸ்டரைக் கவனிச்சுக்கணும்'னு சொன்னான்.''—சிவா கூசாமல் கயிறு திரித்தான்.


''அமெரிக்கன் லைப்ரரியில் இருக்கிறுள் என்று தானே சொன்னே. அவள் பிரதர் பேரு ராஜு தானே... செங்கல்பட்டுப் பையன்!... என்னையே அவனுக்குத் தெரியுமே'' என்றார் பாலாஜி.

''அப்படியானால் ராஜுவையே உங்களை வந்து பார்க்கச் சொல்கிறேன். நீங்கள் தான் இந்தச் சமயத்தில் ஹெல்ப் பண்ணணும்.''

''அண்ணா உங்க கம்பெனிக்கு


இந்தாங்கம்மா, நான் வீடு கூட்டும் போது கீழே ஒரு செல்லாத நாலணா கிடந்தது. அதை எடுத்துக்கிட்டு வேறு ஒண்ணு நல்லதாக் கொடுங்க!


உலகத்திலேயே மேலான பதவியை எனக்குக் கொடுப்பதாக இருந்தால் நான் ஏற்றுக் கொள்ளவே மாட்டேன்.
ஏன்?
அப்புறம் பிரமோஷனுக்கு வழி இருக்காதே!


மணி ஒன்பதாகப் போகிறது. இன்னும் பேப்பர் போடற பையனைக் காணுமே!


சோமு என்னைக் 'கழுதை'ன்னு சொன்னான்டா?
நீ என்ன பண்ணினே!
ஒரு உதை கொடுத்துட்டு வந்தேன்


ஒரு முன்னேற்பா
வேட்டி, சட்டை, பனியன் எல்லாம் அழுக்கு. குளித்து விட்டுச் சுத்தமான வேறு உடை அணிந்து கொண்டு வா!
தரையைப் பெரு விட்டுப் பாயை விரித்துக் கொ


அழகாயில்லேன்னு அபிப்ராயப்பட்டு நிறுத்திட்டேன்...
அப்புறம்...?
இப்போ 'மெனிதிங்' தான் வாங்கறது!


உன் பெண்ணை 'உனக்கு எந்த வாத்தியம் ரொம்பப் பிடிக்கும்' என்று கேட்டேன்!
என்ன சொன்னாள்?
கெட்டிமேளமாம்!


நம்ம சேது கன்னியாகுமரியில் ரயில்வே ஸ்டேஷன் மாஸ்டராக இருக்கிறானாமே!
என்ன உளறுகிறாய்? கன்னியாகுமரியில் ஏது ரயில்வே ஸ்டேஷன்? மைசூர் ஹார்பரில் அல்லவா வேலை பார்க்கிறான்!


விரித்துவிட்டேன்.
...பரப்பிவிட்டேன்.
இதோ "குங்குமம்" தருகிறேன். அப்படியே புரட்டிப் பார்த்து விட்டு, ஐந்து நிமிஷத்தில் திருப்பித் தந்து விட வேண்டும். ஆமாம்!

ஞர். நீங்கள் இருந்தால்தானே?''

''எனக்கு அவுட்டோர் வேலை பார்ச்சே, சித்ரா! பாலாஜி சார் சரி என்று சொல்லிவிட்டார். நீங்கள் சண்டே அன்றைக்குப் பெட்டி, படுக்கையுடன் வந்துவிடுங்கள். நானும் வருகிறேன். அண்ணு ஞாயிற்றுக்கிழமை ஈவினிங் கிளம்ப ஞர் இல்லையா?''

''ஆமாம்... எனக்கு பாலாஜி சார் வீட்டில் இருக்கிறதுக்குக் கொஞ்சம் தயக்கமாக இருக்கிறது.''

''தயக்கம் மயக்கம் எல்லாம் வேண்டாம். நான் இருக்கிறேன்.''

பாலாஜி விட்டிற்குச் சித்ரா சென்ற பிறகு அடிக்கடி சிவா அங்கு விஜயம் செய்தான். சில சமயம் அங்கேயே சாப்பிடுவான். பாலாஜி சற்று வயதானவராக இருந்தாலும் இந்தச் சிட்டுக்குருவிகளின் காதலுக்குக் குறுக்கே வரவில்லை. பார்க்கப்போனால், அவரே தூப தீபம் போட்டு வளர்த்தார்! சில சமயம் [illegible] அவர்கள் திருமணத்தைப் பற்றிப் பேசுவார். ஒருசமயம் ட்யூட்டியில் ராஜு டில்லி வந்திருந்தபோது பாலாஜி ஜாடைமாடையாகச் சொன்னர்.

''சார்... கல்யாணம் பண்ணுவதற்குப் பணம் இல்லையே என்னிடம்'' என்றுன் ராஜு.

''[illegible]

ஒன்றும் டிமாண்ட் பண்ண மாட்டான். உனக்கு இஷ்டமானதை நீ கொடு'' என்ருர். சிவாவிடமும் பேசினர்.

''மாமா, நீங்கள் சொன்னல் சரி தான். பணம் இன்னிக்கு வரும். நாளைக்குப் போகும். காசு முக்கியமில்லை. நீங்கள் எப்படிச் சொல்கிறீர்களோ அப்படிச் செய்கிறேன்'' என்றன் சிவா.

''அடாடா! என்ன தங்கமான பிள்ளை! நான் சொல்கிறபடி செய்வாராம்.... உங்க கம்பெனியிலே காதல் பித்து தெளிய ஏதாவது மருந்து தயாரிக்கிருர்களா?''

''போங்க சார்.. அப்படி ஒரு மருந்து இருந்தாலும் நான் ஏன் சாப்பிடணும்?''

பாலாஜி சித்ராவைத் தனியாகக் கூப்பிட்டு கேட்டார்.

''பெரியவர்கள் நீங்களும், அண்ணுவும் எடுக்கிற முடிவு எதுவும் எனக்குச் சம்மதம்'' என்றுள் சித்ரா.

''இல்லேடி. குழந்தை. நீ ரகசியமாக எடுத்த முடிவிற்கு நான் நாங்கள் 'ததாஸ்து' என்கிறோம்.''

சித்ரா லேசான நாணத்துடன் சிணுங்கினள்.

சித்ரா—சிவா கல்யாணம முருகன் கோவிலில் [illegible]

கரோல்பாக் 'பர்ஸாத்தி' ஒன்றில் தனிக் குடித்தனம் வைத்தார்கள்.

பாலாஜிக்கு பம்பாய்க்கு மாற்றல் உத்தரவு வரவே அவர் குடும்பத்துடன் கிளம்பிப் போய் விட்டார்.

''என்னங்க.. இப்படியே இருந்தால் எப்படி?'' கட்டிலில் உட்கார்ந்திருந்த சிவாவை அணைத்தபடி சித்ரா கேட்டாள்.

''நாலு நாளைக்கு ஒரு தரம் இப்படிக் கேட்டால் எப்படி?' என்று சொல்லிச் சிரித்தான் சிவா.

''லேபாரிடரியில் கேலிசெய்கிருர்கள். சாலினிகூட லீவில் போகிருள்... நாலு மாசம் ஆச்சுடி. யூஸ்லெஸ்டி என்று என்னைப் பார்த்து சொல்கிருர்கள்.''

''சித்ரா, உன் வேலையோ டெம்பரரி. நானும் இன்னும் கன்ஃபர்ம் ஆகவில்லை. கலியாணத்திற்காகவும் ரிசப்ஷனுக்காகவும் குடித்தனம் வைப்பதற்காகவும்...''

''போதும். எத்தனை தடவை சொல்வீர்கள்? இந்த ஏழாயிரம ரூபாய் கடனைச் சீக்கிரம் அடைத்துவிடலாம்... எல்லாரும் என்னைக் கேலி பண்ணுகிருர்கள்.''

''எல்லாருமா? கியூவில் வந்து நின்று கொண்டு, 'சித்ரா, சித்ரா. என்ன இப்படி இருக்கிருய்' என்று கேட்கிருர்கள்? என்னணி ஈமன் [illegible]

வந்துவிட்டதுமாதிரி சொல்கிறாய்!''

''எப்பவும் விளையாட்டுத்தான்!''

''ஆமாம்.. கட்டிலில் இருக்கும் போதுகூட விளையாடக்கூடாது... சித்ரா குட்டி...நாம் இரண்டு பேரும் இருப்பதற்கே இந்த 'பர்ஸாத்தி'யில் இடம் போதவில்லை..''

''தாராவுக்குப் போன மாதம் தான் கல்யாணம். இப்போது பேமலி வேயில் இருக்கிறாள்.''

''சமத்துக் குட்டி, நம்ம கடன் கரையட்டும். வேலை நிரந்தரமாகட்டும். குழந்தை என்றால் எவ்வளவு செலவு தெரியுமா? முதலில் இதைவிடப் பெரிய இடத்திற்குக் குடி போக வேண்டும். நம் கல்யாணம் ஆகி நாலுமாதம் கூட ஆகவில்லை. அதற்குள்..''

''உங்களுடன் பேச எனக்குச் சாமர்த்தியமோ திறமையோ கிடையாது. என் ஆசையைப் பூர்த்தி செய்யமாட்டேன் என்றால்....?'' கண்களில் நீர் திரையிட்டது. ஒரு குழந்தைக்குத் தாயாக வேண்டும் என்ற ஆதங்கம் அவளைப் பிடித்திருந்தது!

''சித்ரா கண்ணே..இப்படி என்னைப்பார். இந்தக் காலத்தில் பெண்கள் எல்லாரும் கணவனிடம் வேறு விதமான கண்டிஷனைப் போடுகிறார்கள்...நீயோ நேர் எதிராக இருக்கிறாய்...நாம் இரண்டு பேரும் டெம்பரரி வேலையில் இருக்கிறோம்.....

குழந்தை என்று வந்து விட்டால் நீ வேலையை விட்டாக வேண்டும்..''

''உங்களைவிடக் குறைவாகச் சம்பாதிப்பவர்கள் குழந்தை, குட்டிகளுடன் குடித்தனம் நடத்தவில்லையா.''

''அசடு....அசடு'' என்று சித்ராவை ஒரு கன்றுக்குட்டியை அணைத்துக்கொள்வதுபோல் இறுக்கிக் கட்டிக்கொண்டான். அவள் கழுத்தில் தன் மோவாயைஅழுத்தி, ஒரு கையால் அவள் கன்னத்திலே வழிந்திருந்த கண்ணீரைத்துடைத்து விட்டு அவளது உதடுகளைச் செல்லமாக வருடினான்.

மேலும் நான்கு மாதங்கள் ஓடிவிட்டன. சித்ராவின் ஏக்கம் தீருகிற மாதிரியே இல்லை.

''எங்க லைப்ரரியில் மாத்யூ என்று ஒரு அம்மா இருக்காங்க. அவங்க ஒரு லேடி டாக்டரிடம் போகச் சொன்னாங்க.. போகட்டுமா?'' என்று கேட்டாள் சித்ரா.

''நானும் ஒரு டாக்டரிடம் போய்விட்டு வருகிறேன்..சித்ராக் குட்டி...இதெல்லாம் நம் கையில் இல்லை.''

''போறும். டாக்டரிடம் போக வேண்டாம் என்றால் நேராகச் சொல்லி விடுங்களேன்'' என்று சித்ரா சற்றுச் சிணுங்கலாகக் கூறினாள்.

மெல்லிய பூவிதழ் போன்ற அவளது கன்னத்தை லேசாகத் தட்டிக் கொடுத்து விட்டு, சிவா சொன்னான்: ''நாளைக்குக் காலையில் போகிறோம், டாக்டரிடம்.''

மறக்க முடியாத காலையாக அது அமைந்துவிட்டது.

சுகமாக உறங்கிக் கொண்டிருந்த சிவாவைச் சித்ரா உலுக்கி எழுப்பினாள். அவன்மேல் விழுந்து கட்டி ஆசையுடன் முத்தமிட்டாள். 'குட் நியூஸ்...குட் நியூஸ்'' என்றாள்.

''என்னடி கண்ணு '... மூச்சு திணறுகிறதே.''

''பின் என்ன? என் குஷிக்குக் காரணம் என்ன தெரியுமா? காலையில் லேசாகக் குமட்டல், வாந்தி..

''ஹாஹ்ஹா..தி கிரேட்டஸ்ட் நியூஸ் ஆஃப் தி செஞ்சுரி... ஏதாவது கூரைமேல் ஏறிக் கூவலாம் போல் இருக்கிறது... ஹாய், சித்ரா.. யூ ஆர் கோயிங் டு பி எ மதர்!''


''ஷ்...ஷ்.. ஏன் இப்படிக் கூச்சல் போடுகிறீர்கள்? அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள் என்ன நினைத்துக்கொள்வார்கள்?''

''வெட்கம் வந்து விட்டதோ, வெட்கம்!... உன் லைப்ரரி ஃப்ரண்டிடம் சொல்லும் போதும் உனக்கு வெட்கமாக இருக்குமா?''—சின்னக் குழந்தையைக் ...



''உஹூம். நீங்க ஒரு ராஜா எனக்கு இருக்கிற போது, இன்னொரு ராஜா கூடாது. துரை என்று வைக்கலாம்.''

''ஓ. கே... ஓ. கே...''



அலக்காகத் தூக்கி நானைந்து நடவை சுற்றி வந்து தொப்பென்று கட்டிலில் போட்டான்.

''ஆமாம், ஏன் சித்ரா கண்ணு.. அப்படியானால் லாஸ்ட் மன்த்... அது ஃபால்ஸ் தானா?''

'அது ஃபால்ஸாகஇருக்கவே தான் இது ட்ரூ' என்று தன் வயிற்றைச் சுட்டிக்காட்டிச் சொன்னாள்!

''ப்ரெக்னன்ஸி கன்ஃபர்ம்டு'' என்று லேடி டாக்டர் கூறினார்.

''நம் வேலையும் 'கன்பர்ம்டு' ஆகி விட்டால் கவலையில்லாமல் இருக்கலாம் சித்ரா.''

''பாப்பாவுக்கு என்ன பெயர் வைக்கலாம்?'

''பாப்பா! நல்ல பெயர்தானே?'

''எனக்கு என்னவோ நமக்குப் பையன்தான் பிறக்கும் என்று தோன்றுகிறது.''

''பையனோ, பெண்ணோ, ஒவ்வொரு பெயர் செலக்ட் பண்ணி வைக்கலாம்.''

''இரட்டையாகி விட்டால்?''

''இரண்டு பேரையும் வெச்சுடலாம். இரண்டும் பெண் அல்லது இரண்டும் பிள்ளை என்று ஆகிவிட்டால்தான் வம்பு!''

''சீ, பைத்தியம். ஒண்ணே ஒண்ணு போதும்.''

''பெண் என்றால் பாரதி.''

''பிள்ளை என்றால் ராஜா.''

சித்ராவுக்கு டானிக், வைட்டமின் என்று பலவற்றை வாங்கி வந்தான் சிவா.

ஆஸ்பத்திரியில் பெயரை ரிஜிஸ்டர் பண்ணிவிட்டு வந்தாள் சித்ரா.

பேபி பவுடர், ஃபீடிங் பாட்டில், நாப்கின் என்று பல பொருள்களை வாங்கினார்கள்.

''தொட்டில் வாங்க வேண்டாமா?''

''சித்ரா, தொட்டில் போட இடம் இல்லையே.''

''தூளியில் போட்டால் என் செல்ல ராஜா நன்றாகப் புரண்டு தூங்க முடியாதே!''

''செல்லராஜா இல்லை. செல்ல துரை.''

''ஆமாம்... திடீர் என்று ராத்திரியில் நோவு எடுத்தால் எப்படிஆஸ்பத்திரிக்குப் போகிறது?''

''தெருக்கோடி டாக்ஸிஸ்டாண்டு சர்தார்ஜியிடம் சொன்னேன். அவன் வீட்டு அட்ரஸையும் வாங்கி வந்திருக்கிறேன். நல்ல மனிதன். 'நீ எப்போது வந்து குரல் கொடுத்தாலும் வண்டியை எடுத்துக் கொண்டு வரேன்' என்று சொல்லி இருக்கிறான்.. ஆமாம்.. சித்ரா... உன்வாய்க்குப்பிடிச்சதைப்பண்ணிப் போட ஆள் இல்லையே!''

''நீங்க ஒருவர் அன்பாக இருக்கிறபோது எனக்கு வேறு எதுவுமே வேண்டாம்! அண்ணாவுக்கு லீவு கிடைக்கலியாம்.''

''சித்ரா. நான் அடுத்த வாரத்திலிருந்து லீவு போட்டு விடுகிறேன். உனக்கு ஹெல்ப் பண்ண''

''இன்னும் இரண்டு மாசம் கழிச்சுதான் ருவா, ருவா. அதற்கப்புறம் இரண்டு மூன்று மாசம் தான் முக்கியம். அப்போது லீவு போட்டால் நல்லது.. அம்மாடி... பாருங்களேன், வயிற்றில் உதைக்கிறான் உங்கள் செல்வம்.''

''ஏண்டா, சுட்டிப் பயலே. அம்மாவைத்தொந்தரவாபண்றே?'' என்று சித்ராவின் வயிற்றைப் பார்த்துச்சொல்லி, மெள்ளமாகத் தட்டினான்.

''அவனை ஏதாவது அடித்தீர்கள் என்றால் எனக்கு ரொம்பக் கோவம் வரும்!''

''சித்ரா. உனக்குக் கோபம் வந்தே நான் பார்த்ததில்லை'' என்று கூறியபடியே அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டான்.

செலவுகள் ஏறிக்கொண்டே போயின. ஒரு குழந்தையை வரவேற்க வேண்டுமானால் எத்தனை செலவுகள்!

கல்யாணத்திற்கு வாங்கிய கடன் அப்படியே நின்று கொண்டிருந்தது. சம்பளம் இல்லாத லீவில் சித்ரா இருந்தாள். இச்சமயத்தில் சிவாவுக்கு ஒரு மாபெரும் அதிர்ச்சி ஏற்பட்டது.

ஒருநாள் காலை அவன் ஆபீசுக்குப்போனபோது, சின்னக் கவர் ஒன்றை உதவி மானேஜர் கொடுத்தார்.

''... நிர்வாகச் செலவைக்குறைக்க வேண்டி இருப்பதாலும், தொடர்ந்து நஷ்டமேற்பட்டு வருவதாலும்...''

ஏதோ ஒரு காரணம். சிவா தன் மனைவியின் பிரசவத்திற்கு லீவு எடுக்கத் தேவையில்லாதபடிசெய்து விட்டார்கள். அவனை வேலையிலிருந்து அனுப்பி விட்டார்கள்!

அந்தச் சின்னக் கவரில் அந்த மாதத்திற்கான சம்பளத்தைப் பைசாக்கணக்குடன் கொடுத்து விட்டிருந்தார்கள்.

சின்னக் கவர்; பெரிய அதிர்ச்சி. சிவா மனதிற்குள்ளேயே அழுது கொண்டு வீட்டிற்கு வந்தான். வரும் போதே தீர்மானித்து விட்டான், சித்ராவிடம் சொல்லக் கூடாது என்று.

''டெலிவரியை ஒரு கிளினிக்கில் வைத்துக் கொள்ளலாம். நாள் ஆக ஆக எனக்கு ஒருவித பயம் ஏற்படுகிறது'' என்றாள் சித்ரா.

''பயம் என்ன இருக்கிறது? சித்ரா, ஆஸ்பத்திரியில் செய்கிறதற்கும் குறைவு இருக்காது... அப்புறம், நர்ஸிங் ஹோம் என்றால் மூவாயிரம், நாலாயிரம் ஆகிவிடும்'' என்றான் சிவா.

''பரவாயில்லை. செலவைப் பார்க்காதீங்க. நாலு மாசத்திற்குப் பிறகு பாப்பாவை க்ரீஷ்ஷில் விட்டு விட்டு நான் வேலைக்குப் போக ஆரம்பிக்கிறேன்.. எல்லாக் கடனையும் அடைச்சுடலாம்.. என் செயினை விற்று விடுங்கள்...''

''பைத்தியக்காரி. உன் நகையை எதற்கு விற்க வேண்டும்? ஆபீசில் நான் லோன் போடுகிறேன்'' என்று சிவா சொல்லும்போதே, கள்ளங் கபடமற்ற சித்ராவிடம் பொய் சொல்லுகிறோமே என்று உள்ளே

லாவது, மேலாவது!

''அப்புறம் ஒரு மாசத்திற்கு வீட்டு வேலைக்கு ஆள் வைத்துக் கொள்ளலாம். குழந்தையையும் கவனித்துக் கொள்ள உதவியாக இருக்கும்.

''உம்''

''என்ன, சுரத்தில்லாமல் 'உம்' என்கிறீர்கள்?

''இல்லையடி என் கண்ணே. இந்தப் பரந்த உலகில் எப்படி நாம் இரண்டு பேரும் உறவு, சுற்றம் எதுவுமின்றித் தனித்து இருக்கிறோம்.''

''சட், என் ராஜா இதற்காக ஏன் கண் கலங்குணும்? எனக்கு நீங்களும் உங்களுக்கு நானும் இருக்கும்போது வேறு யார் உறவும் வேண்டாம். கொஞ்ச நாளில் ஒரு பட்டுப் பாப்பாவும் வந்து விடும்'' என்று ஒரு சின்னக்குழந்தை மாதிரி கூறினாள் சித்ரா.

ஓர் இரவு அவள் 'அம்மா, வலிக்கிறதே என்று பாதி மகிழ்ச்சியுடன் பாதி கஷ்டத்துடன் சொன்னாள்.

''சித்ரா, டாக்டர் சொன்ன தேதியும் தாண்டியாகிவிட்டதால் இது லேபர்பெயின்தான்... இரு... நான் போய் டாக்சியைக் கூப்பிட்டுக்கொண்டு வருகிறேன்.''

டாக்சியை அழைத்து வந்தான் கிளைச் சித்ரா எடுத்துக்கொண்டாள். ஹோலி ஃபேமலி ஆஸ்பத்திரிக்கு சித்ராவை அழைத்துப் போனான்.

''என் செல்லக்குட்டி, சித்ரா, ஒண்ணும் பயப்படாதே. உன்னுடைய சிவா வெளியே வார்டிலேயே காத்திருப்பேன். குவா குவா என்று சப்தம் கேட்டதும் எனக்குத் தெரிந்துவிடும். பாப்பாவுக்கு முதல் முத்தம் என் சார்பில் நீயே கொடுத்து விடு'' என்றான் சிவா.

''அம்மா...வலி. இரண்டிரண்டு நிமிஷத்திற்கு வருகிறதே..குழந்தை பிறந்ததும் அவனுக்குத் தந்தி கொடுத்து விடுங்கள்.''

அன்று காலை சித்ரா தாயானாள். கொழுகொழுவென்று எழுபவுண்டு ராஜா பிறந்தான். டெலிவரி ரூமிலிருந்து நர்ஸ் வெளியே வந்து சிவாவிடம் சொன்னபோது மகிழ்ச்சி தங்கவில்லை. சித்ராவையும் குழந்தையும் இறுக அணைத்து முத்தமாரி பொழிய வேண்டும் போலிருந்தது.

ஒரு வாரம் கழித்து சித்ரா – ராஜாவை வீட்டிற்கு அழைத்து வந்தான். எங்கெங்கோ அலைந்து கடன் வாங்கி ஆஸ்பத்திரி பில்களைச் செலுத்தினான். ரூபாய் தண்ணீராகக் கரைவதை அவனால் தவிர்க்க முடியவில்லை.

மூக்கு உன் மூக்கு மாதிரியேயிருக்கு. அய்யய்யோ, எவ்வளவு குட்டி விரல்கள்! பாதத்தைப் பாரேன். சில்க் கெட்டது, அவ்வளவு மழமழப்பு!''

''ரொம்ப அழுத்தாதீங்க.வலிக்கப்போகிறது.. ஏண்டா துரை, அப்பா தொந்தரவு பண்ணுகிறாரா?''

''இல்லேயேடா என் செல்லமே? நீ அம்மா பக்கமா? என் பக்கமா?''

''அவன் அம்மா பக்கம். ஆனால் நான் உங்கள் பக்கம்'' என்றாள் சித்ரா.

அன்றலர்ந்த புதுமலர் மாதிரி இருந்தாள் சித்ரா. தாய்மை அவளுக்கு ஒரு சோபிதத்தையும் மென்மையான கவர்ச்சியையும் தந்திருந்தது.

''உங்கள் லீவு நாளைக்கு முடியப் போகிறது, இல்லையா?'

''ஆம்... வந்து, சித்ரா... சித்ரா''

''உங்கள் பக்கத்தில் தானே இருக்கிறேன். எத்தனை தடவை சித்ரா, சித்ரா என்று கூப்பிடுவீர்கள்?''

''வந்து... சித்ரா...''–அவன் குரல் கரகரத்தது. கண்களில் நீர் திரண்டது.

''என்ன? இது என்ன? என் கண்ணை கண்ணான் எதுக்குப் பச்சைக்

குழந்தை மாதிரி?...என்ன நடந்து விட்டது'' — சித்ரா ஒருவிதப் பர பரப்புடன் கேட்டாள்.

''சித்ரா..என் மேல் வருத்தப் படவோ கோபப்படவோக்கூடாது. நான் ஒரு விஷயம் சொல்லப்போகி றேன்.''

''இது என்ன இத்தனை நாள் இல்லாமல் இப்படியெல்லாம் பேசு கிறீர்கள்? உங்கள் மேல் நான் ஏன் கோபப்படப் போகிறேன். எனக்கு நீங்கள்தானே எல்லாம்....? நீங்கள் தயங்கித் தயங்கிப் பேசு வதைப் பார்த்தால் எனக்கு திகில் ஏற்படுகிறது.''

''சிச்சி...திகிலான விஷயம் இல்லை. சித்ரா கண்ணு. உன்னிடம் ஒரு விஷயத்தை மறைச்சு வெச்சிருந்தேன்.. எனக்கு எப்போதோ வேலை போய்விட்டது...உன் சிவாவிற்கு வேலை போய்விட்டது'' என்றான்.

''இதற்கு ஏன் கவலைப்பட வேண்டும். உலகம் அஸ்தமித்தா போய்விட்டது? நான் உங்களுக்குப் பக்கபலமாக இருக்கும் போது ஒரு கவலையும் வேண்டாம். ...முன்னமேயே என்னிடம் சொல்லி யிருக்கலாம்.. என் ராஜா..எதுக்கும் வருத்தப்படவேண்டாம்.... இதோ பாருங்க நம்ப துரை என்ன மாய் சிரிக்கிறான்? டேய், துரைக் கண்ணு, அப்பாவை அழாதேன்னு சொல்லுடா'' என்று சற்றுப் பொய் யான உற்சாகத்துடன் சித்ரா அவனைத் தேற்றினாள்.

அச்சமயம், ''சார்! போஸ்ட்'' என்று சொல்லியபடி கீழ்வீட்டு வேலைக்காரன் ஒரு கவரை ஜன்னல் வழியாகப் போட்டுவிட்டுப் போனான்.

''ரிலையன்ஸ் கம்பெனிக்கு அப்ளை பண்ணியிருந்தேன். வேலைக்கு ஆர்டராக இருக்கவேண்டுமே'' என்று சொல்லிக்கொண்டே, அந்தக் கவரை எடுத்தான் சிவா.

சிவா—சித்ரா வாழ்க்கை சினிமாவோ நாடகமோ அல்ல. ஆகவே அந்த கவரில் வேலைக்கான உத்தரவு வரவில்லை. ''தற்சமயம் வேலை காலி இல்லை'' என்ற ஒற்றை வரிக் கடிதம்தான் இருந்தது!

''சித்ரா..தலைக்கு மேல் கடன் ஏறிவிட்டது. வேலையும் கிடைத்த பாடில்லை. நீயும் வேலைக்குப் போக முடியாது.''

''ஏன் இடிந்து போகிறீர்கள்? கூரையில் சிட்டுக்குருவிக் கூட்டை ஒட்டடை அடிக்கும்போது எடுத்துப்போட்டு விடுகிறீர்கள். அதைக் கண்டு அவை கலங்கிப்போய்விடு கின்றனவா? நீங்கள் என்ன குழந்தையா? இதோ பாருங்கள் நம் துரைக்கண்ணனை. அவன் குட்டிக் கையால் எப்படி என் விரலைப் பிடித்திருக்கிறான்..உங்கள் விரலைக் கொடுங்கள்..எப்படிக் கெட்டியாகப் பிடித்துக்கொள்கிறான்...அவனுக்கு நம் பேரில் எவ்வளவு நம்பிக்கை!'' — சித்ரா சொல்லும் போதே அவள் கண்களிலிருந்து இரண்டு சொட்டுக் கண்ணீர் குழந்தையின் முகத்தில் விழுந்தது.

சிவாவின் கண்ணீரும் துரையின் மேல் விழுந்து தெறித்தது.

குழந்தை ஏதோ வேடிக்கை பார்ப்பதுபோல்பொக்கைவாயைத்திறந்து கைகாலை ஆட்டிச் சிரித்தது.

அவனது சின்னக் கையின் இறுக்கமான பிடிப்பில் இருந்த நம்பிக்கை அவர்களையும் பற்றிக் கொண்டது! ★

மழைக்கு முன்பு எங்க 'ஏரியா' ரொம்ப நன்றாக இருந்தது. மழைக்கு அப்புறம் பார்த்தால், "இது என்ன ஏரியா?—குளமா?" என்று கேட்கிறபடி ஆகி விட்டது!

எங்களில் யாரும் ஒல்யாவுடன நடன மாடப் போவதில்லை என்பதைக் கண்ட பின், ஒரிளைஞர் தயக்கத்தோடு எங்கள் மேசைக்கு வந்து ஒல்யாவைத் தம்மோடு நடனமாடும்படி அழைத்தார். ஒல்யா மறுத்துவிட்டார். குன்றிவிட்ட உற்சா கத்தோடு அங்கிருந்து திரும்பினர்.

எந்தப் பெண்ணையும் எந்த ஆணும் நடனத்துக்கு அழைப்பதை அந்த நாட்டில் தவறாகக் கருதமாட்டார்கள். விருப்ப மிருந்தால் பெண் அந்த அழைப்பை ஏற்றுக்கொள்ளலாம். இல்லாவிட்டால் மறுத்துவிடலாம்.

எனக்கு ஒல்யா நடனமாடுவதைப் பார்க்கவேண்டும்போலிருந்தது. ''ஏன் ஒல்யா, போய் நடனத்தில் பங்குகொள் ளுங்களேன்?'' என்றேன்.

''எங்கள் நாட்டுக்காரர்களுடன் நடன மாட எனக்குப் பிடிக்கவில்லை; வெளி நாட்டுக்காரராக இருந்தால் மறுத்திருக்க மாட்டேன்'' என்றூர், புன்சிரிப்போடு.

'வெளிநாட்டுக்காரனை' நான் பேசா திருந்துவிட்டேன்.

ஒல்யாவுக்கு இளைஞர்களிடமிருந்து அழைப்புக்கள் வந்த வண்ணமாக இருந்தன. அவர் மறுத்துக் கொண்டே இருந்தார். என்பாடு தர்ம சங்கடமாகி விட்டது.



அந்த ஓட்டலுக்குச் சுற்றுலாப்பயணி களாகச் சில அமெரிக்கர்கள் வந்திருந் தார்கள். அவர்களில் ஒரிளைஞர் என்னி டம் வந்து, ''தயவு செய்து இந்தப்பெண் ணுக்கு அனுமதி தாருங்கள்'' என்று மன் றாடினர். நான் ஒல்யாவிடம் திரும்பி, ''நானும் உங்கள் நடனத்தைப்பார்க்க வேண்டாமா?.... எங்கே?'' என்று கேட் டுக்கொண்டேன். ஒல்யாவின் மனம் இளகிவிட்டது போலும்.

ஒல்யாவும் அந்த இளைஞரும் நடன மாடுவதைக் கவனித்தேன். ஒல்யா அழ காக ஆடினர். அவருடைய நடனத்தில் நளினமிருந்தது.

அடுத்து இந்திய எழுத்தாளர்களுக் காக–ஆர்மேனிய எழுத்தாளர்கள் நடத் திய பிரிவுபசார விருந்தைப் பற்றியும் குறிப்பிடவேண்டும். நாங்கள் ஆர்மேனி யாவை விட்டுப் புறப்படுவதற்கு முதல் நாள் இரவு.

சரியாக எட்டரை மணிக்கு நாங்கள் அனைவரும் மேசைகளுக்கு முன்னல் அமர்ந் தோம். ஏற்கனவே உணவு எங்களுக்கு முன் வைக்கப்பட்டிருந்தது. மென்மேலும் வந்து பரிமாறிக்கொண்டுமிருந்தார்கள். பாட்டில்களில் பிராந்தி, திராட்சை ரசம் போன்றவை தயாராக இருந்தன.

ஆர்மேனிய எழுத்தாளர் சங்கத்தின் செயலாளர் கையில் மதுக் கிண்ணத் துடன் எழுந்து இந்திய எழுத்தாளர்களா கிய எங்களை வாழ்த்தி உற்சாகத்துடன் ஒரு சொற்பொழிவு நடத்தலானர். தமது பேச்சின் முடிவில அந்த விருந்து நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கி நடத்தும் படி அங்கிருந்த மற்றொரு கவிஞரை வேண்டிக்கொண்டார். பிறகு அனைவரும் எழுந்து அவருடைய மதுக் கிண்ணத்தில் தங்கள் கிண்ணங்களையும் மோதியவாறு மது அருந்தலானர்கள். நானும் அவ் வாறே செய்து விட்டுக் குடிப்பது போல் பாவனை செய்தேன். அடுத்தாற் போல் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கிய கவிஞரும் அவ்வாறே ஒரு குட்டிச் சொற் பொழிவு நிகழ்த்தினர். மதுக் கிண்ணங் கள் மீண்டும் உயர்த்தப்பட்டன. அடுத் தாற்போல் இந்திய எழுத்தாளர்களின் சார்பில் அவர்களை வாழ்த்திப் பேசவேண் டிய முறை என்னுடையது. நானும் எழுந்து நின்று சிறிது நேரம் பேசினேன். அவர்களுடைய விருந்தோம்பும் பண்பை மனந்திறந்து பாராட்டி, அவர்களுக்கு இந்திய எழுத்தாளர்கள் சார்பில் வாழ்த் துத் தெரிவித்தேன். அருகிலிருந்த ஒல்யா அதை அவர்களுக்கு மொழி பெயர்த்துக் கூறினர். உடனே மீண்டும் மதுக் கிண் ணங்கள் உயர்த்தப்பட்டு காலி செய்யப் பட்டன.

இவ்வாறே அங்கிருந்த ஏழெட்டு எழுத்தாளர்கள் இடையிடையே எழுந்து எங்களுக்கு, எங்கள் நாட்டு எழுத்தாளர் களுக்கு, எங்கள் குடும்பத்தினருக்கு, உலக எழுத்தாளர்களுக்கு என்றெல்லாம் வாழ்த்துக்களைப் பொழிந்து தள்ள லானர்கள்.

அடுத்தாற்போல் என்னையும் அவர்கள் விடவில்லை. தமிழ்க் கவிதைகளைப்பாடச் சொன்னர்கள். நான் பாரதியின் கவிதை ஒன்றைப் பாடி விட்டு அதன் பொருளைச் சொன்னேன். ஒரே கைதட்டல்!

கடிகாரத்தில் மணியைப் பார்த்தேன். நள்ளிரவைத் தாண்டி மணி ஒன்றாகிவிட் டது. ஆனல் விருந்தினர்கள் அனைவரும் நேரம் போவதே தெரியாமல் ஆனந்தக் கடலில் ஆழ்ந்திருந்தனர்.

நான் சிறிதும் களைப்படையவில்லை. எனக்கு அது ஒரு புதிய அனுபவம்.

சோற்றுக் கவலைகள் போன்ற 'சின்னக் கவலைகள் தின்ன முடியாத' நாட்டில் தான் மனிதர்கள் இப்படியெல்லாம் குதூகலத்தோடு வாழமுடியும் போலும் என்று நான் நினைத்துக்கொண்டேன்.

தெப்பக் குளம்

சிவசங்கரி

''பெரிய குளம, அதன் நடுவிலே ஒரு மண்டபம். அதைச் சுற்றிலுமா மரங்கள். அதுலே நிறைய புறாக்கள்... மண்டபத்துக்கு மாடி கூட உண்டு.... சின்ன, அகலமில்லாத படிக்கட்டுகள்.. இந்த மாதிரி ஒரு இடத்தை நீங்க பார்த்திருக்கேளா, மாமா?''

'ஓ! அதுவா, தெரியுமே' என்று மாமா சொல்ல மாட்டாரா என்று நெஞ்சு எதிர் பார்க்கிறது.

ம்ஹூம்... இல்லை.

''புரியலையேம்மா...நீ இன்னும்கொஞ்சம் தெளிவாச்சொன்னா புரியும்...அந்தக் குளத்தின் பேராவது தெரியுமா?''—

எனக்கு அந்த விவரமெல்லாம் ஞாபகம் இல்லை.

அழகான பச்சைக்குளம்... நட்ட நடுவில் ஒரு திட்டு அதில் சோலையாய் இருந்த மரங்கள்—கொலுவில் இருக்கும் மாடிக் கட்டிடம் போல நேர்த்தியான மாடி மண்டபம்...ஓடத்தில் ஏறிச் சென்று, மண்டபத்தை அடைந்ததும், பிக்னிக் போலத் தினுசு தினுசாய் உணவுகளைக் கொணர்ந்து சாப்பிட்டதும், பின்னர் மண்டபத்தின் மாடிக்குப் போக ஆசைப்பட்ட என்னை அப்பா கையைப் பிடித்து அந்தச் சின்னப் படிக்கட்டுகளில், ஏற்றி அழைத்துப் போனதும் நெஞ்சில் தோன்றுகின்றன. 'பார்த்து வா, கல்பனா... மெள்ள மெள்ள'' என்று அப்பா சொன்னதுகூட நினைவில் தங்கி இருக்கிறது... ஆனால் அந்தக் குளத்தின் பெயர்? அது எந்த ஊரில் இருக்கிறது? ஊஹூம். தெரியவில்லை.

அப்பாவும், அம்மாவும் கார் விபத்தில் மரணமடைந்தபோது எனக்கு எட்டு வயசு.. அப்படியென்றால் இந்தத் தெப்பக் குளம், மற்றும் பல இடங்களுக்கெல்லாம் அப்பா, அம்மாவின் செல்லப்பெண்ணாய்க் கையைப் பிடித்துக்கொண்டு ஜோராய் நான் போனதெல்லாம் எட்டு வயசுக்குள் தானே?

அப்பாவுக்கு ஊர் ஊராய்ச் சுற்றிப் பார்க்க ரொம்பப் பிடிக்குமாம்— வருஷம் தப்பினாலும் தப்புமாம், அப்பா லீவு எடுத்துக்கொண்டு புது புது ஊர் போவது மட்டும் தப்பாதாம்.

அம்மாவும் அப்பா ரகம்தான்.

சனி, ஞாயிறுகளில் மகாபலிபுரம், திருக்கழுக்குன்றம் போனதும், பள்ளியில் வருஷ விடுமுறை விட்டதும் இந்த முறை அப்பா எங்கு அழைத்துப் போகப் போகிறார் என்று துடித்ததும் எனக்கு நன்றாய் ஞாபகம் இருக்கிறது.

எனக்கு எட்டு வயசாகும்போது அப்பாவுக்குபம்பாய்க்கு மாற்றலாயிற்று பள்ளிப் படிப்பைப்பாதியில் விடக்கூடாது என்று சித்தி வீட்டில் என்னை விட்டுவிட்டு அப்பாவும், அம்மாவும் காரிலேயே பம்பாய்க்குப் போனார்கள்.

வெள்ளை நிற அம்பாஸிடர் காரில் வெளுத்த க்ரீம் கலர் சட்டையோடு கையை ஆட்டிக்கொண்டே அப்பாவும் பிங்க் நிறப் புடவை உடுத்தி, அழகாய்ச் சிரித்துக்கொண்டு அம்மாவும் போனது இன்று கண்ட மாதிரி என் கண்களுக்குள் உறைந்திருக்கிறது.

இரண்டாம் நாள்—தூங்கிக் கொண்டிருந்தவளை உலுக்கி எழுப்பி 'ஹோ' என்று அழுது கட்டிக் கொண்டாள் சித்தி.

லோனவ்லா மலைச் சரிவில் கார் போகும்போது பிசாசாய் எதிரில் வந்த லாரிக்கு அப்பா, அம்மா இரையாகிப் போனார்களாம்.

இந்தக் கதை நடந்து இப்போது பதினைந்து வருஷங்களாகி விட்டன—

நான் சித்தியின் அரவணைப்பில்வளர்ந்தேன்.

பள்ளி முடிந்து, பி. ஏ., எம். ஏ. பட்டப் படிப்புகளையும் சுமந்ததும் போன வருஷம் எனக்கு கல்யாணமும் நடந்து விட்டது. என் கணவருக்குக் கல்கத்தாவில் வேலை.

அப்பா, அம்மாவின் இழப்பு என்னை எத்தனை தூரத்துக்குச் தாக்கி,என் வாழ்க்கையைச் சூன்யமாக ஆக்கியது என்பது எனக்கு மட்டும்தான் தெரியும்—

திடமான மனம் இருநததால் எப்படியோ தாங்கிப் பிழைத்தேன்--

மனசில் ஒரு உலகத்தைச் சிருஷ்டிசெய்து கொண்டு வாழ்ந்து வந்தவள் கொஞ்சம் பெரியவளானதும் சம்பந்தப்பட்ட இடங்களுக்குப் போய் அந்தச் சூழ்நிலையில் நான் ஒரு சமயம் அனுபவித்த வாழ்க்கையோடு என்னை ஐக்கியப்படுத்திக்கொள்ள முனைந்தபோது அது எனக்குப் பெரும் இன்பத்தைத் தந்தது.

கல்யாணமானதும் கணவரோடு கொடைக்கானலுக்கு போனேன். தினமும் இரண்டுவேளையும் மலைகளின் சரிவில் இறங்கிக் கைகொள்ளாமல் மஞ்சள் காகித மலர்களும், லேக்கிலிருந்து சிவப்பு லில்லிப் பூக்களும் கொண்டு வருவேன்.

அப்பா, அம்மாவைப் பறிகொடுத்ததிலிருந்து யாரிடமும் என் மன வேதனையை அதிகம் காட்டாத நான் அந்தத் தேன் நிலவில் என் கணவரின் மடியில் படுத்துக் கொண்டு என் நெஞ்சில் நிழலாடின சம்பவங்களைச் சொல்லி, ''திரும்ப அந்தந்த ஊருக்கெல்லா்ம் போனு, அப்பா அம்மாவையே பார்த்தமாதிரி மனசுக்குத் திருப்தியாய் இருக்கு'' என்று கூறி அழுதேன்!

ஓரளவுக்கு எல்லா இடங்களையும்



பார்தது விட்டாலும், அந்தத் தெப்பக் குளத்தை மட்டும் காணுதது எனக்குத் தனி வேதனைதான்.

இப்போதுகூட என்னை வளர்த்த சித்தியின் பெண் திருமணத்துக்காக, கல்கத்தாவிலிருந்து நாங்கள் வந்திருக்கும் சமயத்தில்—கல்யாணத்தில் பார்க்கும் உறவினர்களிடமெல்லாம் அந்தத் தெப்பக் குளத்தைப் பற்றி விசாரித்துக்கொண்டுதான் இருக்கிறேன். பலன்தான் இல்லே.

''ஆக உங்களுக்குத் தெரியாதா மாமா? ஸவுத்முழுவதும் நீங்க நன்ருய்ச் சுற்றினவர் ஆயிற்றே.. தெரியலேயா?''

மாமா இல்லே என்று தலையை ஆட்டி விட்டார்.

''கல்பனு, சம்பந்தி வீட்டுக்கென திரட்டுப்பால் காய்ச்சி வைத்தது உக்கிராண அறையில் இருக்கு... கொஞ்சம் எடுத்துண்டு வாம்மா..' சித்தி என்னைப் பணித்தாள்.

நான் உள்ளே போனேன்.

வெள்ளிபேலாவைக் கையில் எடுத்துக் கொண்டு திரும்புகையில் அறையின் மூலேயில் படுத்துக் கிடந்த பெரியம்மாவை—என் அம்மாவின் பெரிய அக்காவைப் பார்த்தேன்.

''என்ன பெரியம்மா— இங்கே படுத்து விட்டால் எப்படி? பந்தலுக்கு வரலே?''

''யாரு, கல்பனுவா? கிட்டவாம்மா..'

பெரியம்மா மெல்ல எழுந்து உட்கார்ந்தாள். பெரியப்பா காலமாகிப் பத்து வருஷம் ஆகிறது. அந்த அதிர்ச்சியில் பெரியம்மா படுத்தவள்தான். புதுக்கோட்டையில் இருக்கும் பிள்ளை வீட்டைவிட்டு வெளியே கிளம்பாதவள் இந்தக் கல்யாணத்துக்காக அதிசயமாய்வந்திருக்கிருள். முதல்நாள் ஊரிலிருந்து வந்த என்னைக் கட்டிப்பிடித்துக் கொண்டு ''கமலியை நேரிலேபார்த்தமாதிரியேஇருக்கு'' என்று அழுதாள்.

''அப்படியேஎன் கமலிதான்..''என்று சொல்லி என் கன்னத்தைத் தடவின பெரியம்மா மேலும் மெதுவாய்ச் சொன்னுள். 'நீ அப்போ சின்னக் குழந்தை... உங்கப்பாவும், அம்மாவும் கோவிலெல்லாம் பார்க்கணும்னு மதுரைக்கு வந்திருந்தா. உங்க பெரியப்பாவுக்குஅப்போ மதுரையில்தான்வேலே. எல்லாருமா சேர்ந்துண்டு ஒரு வேளைக்கு ஒரு கோவிலாகப் போனேம். அப்புறம் கட்டுச் சாதம் எடுத்துண்டு மாரியம்மன் தெப்பக்குளத்துக்குப் போயிருந்தோம்.. உனக்கு அதெல்லாம் ஞாபகம் இருக்கோ?.. அதுக்குப் பிறகு நான் கமலியை உசிரோட பார்க்கலே... நான் போய் அவ இருக்கக்கூடாதா?''

சற்றும் எதிர்பாராமல் அவள்'கட்டுச் சாதம் எடுத்துண்டு மாரியம்மன் தெப்பக்குளத்துக்குப் போனேம்' என்று சொல்லுவாள் என்று நான் எதிர்பார்க்கவில்லே.



இசை ஸ்காலர்ஷிப்பிற்காகப் பல மாணவர்களைப் பேட்டிக் கண்ட தேர்வுக் குழுவில் லால்குடி ஜெயராமனும் மற்ருெருவரும் இருந்தனர்.

அந்த நண்பரோ பேட்டிக்கு வந்த மாணவர்களைக் கேள்விக் கணைகளால் குடைந்து எடுத்துவிட்டார். இசை ஞானம், ஆர்வம் ஆகியவற்றைக் கண்டறியத்தானே பேட்டி. ஆனல் அவரோ பெரிய ஐ. ஏ. எஸ். உத்தியோகப் பேட்டி மாதிரி அது என்ன, இது என்ன என்று சரமாரியாகக் கேள்விகளைக் கேட்டுத் திணற வைத்துவிட்டார். அதன் காரணமாக ஒருவர் கூடத் தேர்ந்தெடுக்கம்படவில்லே.

"ஒரு மாணவன் கூடத் தேறவில்லேயே" என்ருர் நண்பர் லால்குடியைப் பார்த்து.

"எப்படித் தேறுவார்கள்? நீங்கள்தான் வாட், வாட் (What, What) என்று வாட்டி எடுத்துவிட்டீர்களே!" என்ருர் லால்குடி.

—நந்தி

நான் தேடும் தெப்பக்குளம் இது தானு?

''பச்சையாய்ப் பெரிய குளம்... நடுவிலே மண்டபம். மேலே போகப் படிகூட உண்டு—இதைத்தானு பெரியம்மா நீங்க சொல்றேள்?'' எனக்குப் படபடப்பாக இருந்தது.

''ஆமாண்டிம்மா... அதேதான்.... எத்தனை அழகான குளம் தெரியுமா?... உனக்கு ஞாபகம் இருக்கா என்ன?'' எனக்குத் திடீரென்று சந்தோஷம் தாங்க முடியாமல் போய்விட்டது.

உடனே கிளம்பிப் போய் அந்த ரம்மியமான தெப்பக்குளத்தில் ஒரு நாள் கழித்து, என் பெற்ருேரைப் பற்றின அந்த நாள் நினைவுகளில் அமிழ்ந்து போக வேண்டும் என்று தோன்றியது— பெரியம்மாவிடம் மேற்கொண்டு சில விவரங்களைக் கேட்டவள் என் கணவரிடம் ஓடினேன்.

என் மனசின் ஆதங்கம் புரிந்த என் கணவரும் மறுநாளே நாங்கள் காரில் மதுரை போக ஏற்பாடு பண்ணினர்.

விடியற்காலே கிளம்பி மணி இரண்டை நெருங்குகையில் நாங்கள் மதுரையில் இருந்தோம்.

ஹோட்டலில் காபி சாப்பிட்டு விட்டு மண்டபத்தில் அமர்ந்து உண்பதற்காக இட்லி, பூரி பொட்டலங்களும், புருக்களுக்கு கொடுப்பதற்காக நிறையப்

பொரி, கடலையும் வாங்கிக் கொண்டு வழியை விசாரித்துக்கொண்டு தெப்பக் குளத்துக்குப் போனோம்.

பத்து நிமிஷத்தில் தெப்பக்குளம் கண்ணில் தெரிந்துவிட்டது.

கார் ஒரு பக்கமாய் நின்றதும் கதவைத் திறந்து கொண்டு இறங்கக்கூட முடியாதபடி என்னுள் பரபரப்பு.

மெல்லக் குளத்தின் விளிம்புக்குப் போனேன்.

கத்திரி வெயில் மண்டையைப் பிளந்தது.

தெப்பக்குளத்தில் ஒரு சொட்டு ஜலம் இல்லை. ஒரு காலத்தில் ஆழமாய் இருந்த குளத்தின் தரையில் காய்ந்த புல்லும், நெருஞ்சி முட்களும் மண்டிக் கிடந்தன. ஐந்தாறு எருமை மாடுகள் படிக்கட்டுகளில் இறங்கி அந்தப் புற்களை மேய்ந்து கொண்டிருந்தன.

மண்டபம் பழசாய், தூரத்தில் உட்கார்ந்திருந்தது. எந்த ஜன்மத்திலோ அடித்தது போல வெள்ளைச் சுண்ணும்பு திட்டுத் திட்டாய் வெளுத்து அடியில் செங்கல் தெரிந்தது. மண்டபத்தைச் சுற்றி நின்ற மரங்களில் பாதி காய்ந்து, இலைகள் இல்லாமல் பார்க்கப் பரிதாபமாய் மொட்டையாய் இருந்தன. பேருக்கு ஒரு புறுவைக்கூடக் காணோம்.

இதுவா? இந்த வற்றிப்போன குளமா? காய்ந்த மரங்களா? எருமை மேயும், இந்தக் குளத்திலா நான் ஓடத்தில் போயிருக்கிறேன்.? அதோ அந்த மண்டபத்தின் படிக்கட்டுகளிலா புறுக்கள் படபடக்க, என் அப்பாவின் கையைப் பிடித்துக் கொண்டு ஏறினேன்?

என் நினைவைக் குளிர்வித்த பச்சை, அழகான குளம் எங்கே? இதுவா? இடமும் குளமும் நான் இது நாட்கள் தேடியவைதான்— ஆனால்?... காலத்தின் கண்ணாமூச்சி ஆட்டத்தில் எல்லாமே மாறிவிட்டன.

காரிலிருந்து உணவு, பொரிப்பொட்டலங்களுடன் இறங்கி வந்த என் கணவர் என்னையே பார்த்துக் கொண்டிருப்பது புரிந்தது.

பேசாமல் திரும்பிச் சாலையைக் கடந்து வண்டியில் ஏறி உட்கார்ந்தேன்.

''படிக்கட்டில் இறங்கி | புல்வெளியில் நடந்து, மண்டபத்துக்குப் போகலாமா?''

அவர் கையிலிருந்த பொட்டலங்களைக் காரைச் சுற்றி நின்றிருந்த கோவணாண்டிப் பையன்களுக்குக் கொடுத்துவிட்டு, ''ஹோட்டலுக்குப் போகலாம்—காரிலே உட்கார்ந்துண்டேவந்தது களைப்பா இருக்கு''—என்று சொன்னபோது என் கண்களிலிருந்து நீர் பெருகிக் கன்னத்தில் வழிவதை நான் உணர்ந்தேன்.

அந்த இனிய நாள்!

''மறுபடியும் அப்படி ஒரு இனிய நாள் நம் வாழ்க்கையில் வருமா?' என்று ஏங்கும்படியான நிகழ்ச்சி ஏதேனும் உங்கள் வாழ்நாளில் நடந்திருக்கிறதா?'' என்று சிலரிடம் கேட்டோம். அந்த வரிசையில், புகழ்மிக்க எழுத்தாளர் திருமதி லட்சுமி முதலில் பதில் கூறுகிறார்.

அடுத்த இதழில்: ரமணிபாய், ஜனதா கட்சி.



அப்போது ப்ரீ-மெடிகல் கோர்ஸ் படித்துக் கொண்டிருந்தேன். 1939-ம் வருடம். பள்ளியில் படிக்கும் போதிலிருந்தே எழுதுவதில் ஆர்வம் அதிகம்.

சென்னைக்கு மெடிகல் கோர்ஸ் படிப்பதற்கு வந்தவுடன், பத்திரிகைகளில் எழுதினுல் என்ன என்ற எண்ணம் வந்தது. டாக்டர் தொழிலை மையமாக வைத்து, 'தகுந்த தண்டனையா?' என்ற கதையை எழுதினேன். 'ஆனந்தவிகட'னில் கல்கி இருந்தார். நேரில் அவரைச் சந்தித்துக் கதையைக் கொடுத்து விட்டு வந்தேன்- அவ்வளவு பெரிய எழுத்தாளரிடம் கொடுத்து விட்டு வந்திருக்கிறேமே, எப்படித் தேறப் போகிறது என்ற எண்ணத்துடன்.

ஆனுல் டிசம்பர் மாத இறுதியில் கொடுத்த அந்தக் கதை ஜனவரியில் பிரசுரமாகப் போவதாக கல்கிக் தம் கைப்படக் கடிதம் எழுதியிருந்தார். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. கடிதத்தை மறுபடியும் மறுபடியும் படித்தபடி என் ஹாஸ்டல் அறைக்குச் சென்றேன். மகிழ்ச்சிப் பெருக்கில் கண்ணில் என்னை அறியாமலேயே நீர் வந்துவிட்டது. கடிதத்தை வைத்துக் கொண்டு கண்ணீர் விடுவதைப் பார்த்த என் ரூம் மேட் கௌசல்யா அருகில் வந்து ஏதோ துக்கச் செய்தி என்று எண்ணி ஆறுதல் கூற முற்பட்டாள். நான் அந்தக் கடிதத்தை அவளிடம்தந்து, ஆனந்தக் கண்ணீர் என்று சொன்னவுடன்தான் அவளும் மகிழ்ந்தாள்.

இன்னும் அந்தக் கடிதத்தைப் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறேன். அந்த மகிழ்ச்சியான நாளைப்போல் இன்னெரு நாள் எப்படி வர முடியும்?

பேட்டி: கபிலன்

புகைப்படம்: பிரவீன் குமார்

இனி அவன் காதலிக்க முடியாது

விறுவிறு என்று நோட்ஸ் எடுத்துக் கொண்டிருந்தேன். (என் பெயர் ஜான். வயது பதினேழு என்றால் உடனே நம்ப மாட்டீர்கள். என் மனம் வளர்ச்சி பெற்ற அளவுக்கு என் உடல் வளரவில்லை.)

மடித்து வைத்த இடது கை மணிக் கட்டில் வாட்சைப் பார்த்தேன். நேரம் நான்கு இருபத்தைந்து. அடுத்த பத்தாவது நிமிஷம் வாட்ச் வலது கைக்கு மாறி விடும். பள்ளிக்கூட சட்டம்: 'வாட்ச் இருக்க வேண்டிய இடம் இடது மணிக் கட்டு' என்கிறது.

பொதுவாகவே எனக்குச் சட்டங்கள் பிடிப்பதில்லை. என்ன சட்டங்கள் வேண்டி இருக்கிறது? நினைத்தால் போக வர, வகுப்பிலேயே சிகரெட் பிடிக்க அனுமதித்தால் என்ன கெட்டு விடுமாம்?

நோட்ஸுகளை நானே தான் குறிப் பெடுக்க வேண்டுமா? டாடியைப் போல எனக்கும் ழுழு ஸ்டெனோ (அழகான பெண்) இருந்தால் என்ன தப்பு? போனில் பேசும்போது கவனித்திருக்கிறேன். போன் வாயைச் சரியாகப்



ராஜேந்திரகுமார்



பொத்தாமலேயே ''நோ ஸ்வீட்டி. நாட் நௌ'! என்கிறார் டாடி.

நாலரை மணிக்கு ஸ்கூல் விட்டதுமே நான் புறப்பட்டாக வேண்டும். கார் வரும். டிரைவரை ஏமாற்றும் வரை என் பிரண்ட் ஜார்ஜின் உதவி வேண்டும். ('ஜார்ஜூம் நானும் ஸ்விம்மிங் போகிறோம்' என்றால் டிரைவர் நம்பிவிடுவான். டிரைவர் சொன்னால் மம்மியும் நம்பி விடும்.)


ஜார்ஜின் ஸ்போர்ட்ஸ் மாடல் சைக்கிளை வாங்கிக் கொண்டு அவசர அவசரமாக மிதித்து, துன் பில்டிங்ஸ் வாசல் பஸ் ஸ்டாண்டுக்கு வருவேன். அங்கே ஐந்து மணிக்கு— சரியாக ஐந்தாவது மணிக்கே—எனக்கு வேலை இருக்கிறது.

அப்போதுதான்— அந்த மிலியண்டா வருவாள். ஏதோ ஆபீஸில் வேலைக்குப் போகிறாள் போலிருக்கிறது. செம்பட்டைத் தலைமயிர். சிரித்தால் முன் வரிசைப் பற்களில் முழுந்தெற்றுத் தெரியும். அழகாக. மிக அழகாக

இப்போதுதான் புதிதாகப் பெண்களை ரஸித்துப் பார்க்க ஆரம்பித்திருக்கிறேன். உணர்வுகள் உயிர்பெற்று எழுச்சி பெறும் அனுபவம் எனக்கு முற்றிலும் புதியது.

அன்றைக்கும் அப்படித்தான்.

ஜார்ஜும் நானும் சினிமாவுக்கு வந்தோம். டிக்கெட் கிடைக்கவில்லை என்



றதும் ஜார்ஜ் சைக்கிளை மிதித்துக் கொண்டு போய் விட்டான். சினிமா இல்லை என்றதும் அடுத்த ஆசைக்குத் தாவினேன். பஸ்ஸிலே போனால் என்ன?

பஸ்ஸில் அவள் பக்கத்தில் உட்கார்ந்தேன். டிக்கெட் வாங்கப் பையைத் துழாவியபோதுதான் தெரிந்தது. பணம் ஜார்ஜோடு போய்விட்டிருந்தது.

அவள் கொடுத்தாள் பிரியத்துடன். ''எந்த கிளாஸ் படிக்கிறே?'' என்றாள்.

சொன்னேன். வியந்தாள். என்தோற்றம் அப்படி. சின்னப் பையன்மாதிரி.

என் கன்னத்தைத் தட்டிக் கொடுத்து ''லவ்லீ பாய்'' என்றாள். உடனே அடுத்த ஆசைக்குத்தாவினேன். இவளைக் காதலித்தால் என்ன? நிச்சயம் அவள் என்னைவிடப் பெரியவள். (அது தெரியாமலில்லை. இருந்தாலும் ஒரு கிரேஸ்.)

அதுமுதல், வாரத்தில்இரண்டுதடவை யாவது அவளைச் சந்திப்பேன். பார்த்ததும் அழகாகச் சிரிப்பாள். ரசிப்பேன். பார்லரில் ஐஸ்க்ரீம் வாங்கித் தருவாள். தின்பேன். நிறையப் பேசுவாள். நானும் பேசுவேன்.

பேசுவதோடு சரி.

முடிவு செய்து விட்டேன். இன்றைக்கு இருட்டில் ரகசியமாக, மிக அந்தரங்கமாக அவளைத் தொட்டுப் பார்க்க வேண்டும். சினிமா டிக்கெட்டுகள்கூட வாங்கிவிட்டேன்.

அவள் வந்தாள். பூரித்துப் போன அதே வேகத்தில் வாடியும் போய் விட்டேன். அவளோடு ஒரு 'அவனும்' வருகிறான். அருகில்... மிக அருகில் அவர்களின் சிரிப்பில் ஓர் அந்தரங்கம் மிகவும் துல்லியமாகத் தெரிகிறது.

அவர்களுக்குள் இருப்பது வெறும் பிரண்ட்ஷிப் மட்டும் என்றால் அந்த ஆள் தொடுமிடமெல்லாம் தப்பான இடம்.

''ஹாய்!'' என்றாள் என்னைப்பார்த்து. அவனை அறிமுகப்படுத்தினாள்.

அந்த ஆளின் சிரிப்பு இயற்கையாக இல்லை. அவனை எங்கோ பார்த்த மாதிரி இருந்தது. எங்கே? புரியவில்லை.

''சினிமாவுக்குப் போகிறோம்.'' அவள் கேட்டாள் ''நீயும் வருகிறாயா?''

''நோ டியர்'' அவசரமாக அவன் மறுத்தான்.''..அது அடல்ட்ஸ் ஒன்லி படம். சின்னப் பையன்களை அனுமதிக்கமாட்டார்கள்.''

இது.... இந்தக் குரலும் கேட்ட மாதிரி இருக்கிறதே! எங்கே?

அவர்கள் போனதும் எனக்குள் ஏதுவோ எரிந்தது. இரண்டு டிக்கெட்டுகளில் ஒன்றை எடுத்துக் கிழிக்கப்போனபோது, உடனே ''கிழிக்காதே'' என்றான் ஒரு ஆள். ரொம்ப நேரமாகவே அவனைப் பார்க்கிறேன். பார்வையே அருவருப்பாக இருக்கிறது.

''டிக்கெட்டை எனக்குக் கொடு. பணம் தருகிறேன்'' என்றான்.

கொடுத்தேன். விறு விறு வென்று



நடந்து தியேட்டருக்குள் போய் விட்டேன். தியேட்டர் ஆளை ஏமாற்றிவிட்டேன், சுத்தமாக.

அவர்களுக்குப் பின் வரிசையில் மூலையில் கடைசி ஸீட் என்னுடையது. இருட்டுக்கும் தனிமைக்கும் ஆசைப்பட்டு நானே தேர்ந்தெடுத்த ஸீட். எரிச்சல் வந்தது.

அவர்கள் என்னையும் பார்க்கவில்லை. படத்தையும் பார்க்கவில்லை. நான்தான் அவர்களைப் பார்த்தேன் பொறுமையாக.

பக்கத்து ஆளின் கை என்தொடையில்பட்டது தற்செயலாக. நகர்ந்து கொண்டேன். அவன் கை மீண்டும் பட்டதும்தான் அது 'தற்செயல்' இல்லை என்று புரிந்தது. அவன்... என்னிடம் டிக்கெட் வாங்கிய ஆள்! முறைத்தேன். பயந்துவிட்டான். அவன் கையைத் தட்டிவிட்டுச் சட்டையை இறுக்கி உலுக்கியதும் நடுங்கிப் போனான்.

''தம்பி. சத்தம் போட்டு விடாதே'' என்று ரகசியமாய்க் கெஞ்சினான்.

''நீ செய்தது தப்பு'' என்றேன் காட்டமாக.

''சட்டப்படியே தப்பு. போலீஸுக்குத் தெரிந்தால் என்னை உள்ளே தள்ளிவிடுவார்கள். என்னை மன்னிச்சிடு'' என்றான். அதன் பிறகு இண்டர்வெல் வரை வாலைச் சுருட்டிக் கொண்டு கம்மென்றிருந்தான்.

கூல் டிரிங் சாப்பிட வெளியே வந்த போதுதான் கவனித்தேன். மிலியண்டாவின் பாய் பிரண்டு தியேட்டர் மானேஜரிடம் என்னமோ பேசுவது தெரிந்தது. நேரே வந்த மானேஜர், என் வயதைக் கேட்டார். பதினேழு என்றதும் வெளியே போகச் சொல்லிவிட்டார். அந்த 'அவனை' முறைத்துப் பார்த்தவாறே படியிறங்கிப் போய் விட்டேன். ''இரு இரு'' என்று கறுவினேன்.

மறு நாள்... அதற்கு அடுத்தநாள்...

அந்த மிலியண்டா வரும்போதே அவனோடு வந்தாள். அவன் பார்வையாலேயே அவளைக் கொஞ்சினான். என்னைப் பார்க்கும்போதெல்லாம் அவன் பார்வையில் ஏதோ சவால் இருப்பது போலத் தெரிந்தது. காரணமில்லாமல் அவளை இடுப்பில் வளைத்தான். காதில் ரகசியம் பேசினான். வெறுத்தேன். அவனை அடியோடு வெறுத்தேன்.

டாடியோடு ஷாப்பிங் போயிருந்த போதும் அவளைப் பார்த்தேன். அந்த தெற்றுப் பல் தெரியச் சிரித்தாள். முகத்தைத்திருப்பிக் கொண்டேன்.

''ஹே யூ'' என்று நெருங்கி வந்தாள். ''..மகாபலிபுரம் பிக்னிக் போகிறேன். வருகிறாயா ?'' என்றாள்.

''இல்லே'' என்றேன். ''ஸ்டடீஸ் இருக்கு.''

அவள் போனதும் டாடி ''யாரு அந்தப் பெண்?'' என்றார். அவர் கண்

களில் பல்ப் எரிவது தெளிவாகவே தெரிந்தது.

''நோ டாடி. ஷீ இஸ் ஆல் ரெடி எங்கேஜ்ட். உங்கள் ஆபீஸில் ஸ்டெனோவாக வரமாட்டாள்'' என்றேன் அர்த்தத்துடன்.

சிரித்தவாறு ஒரு டிராகன் ஷர்ட்டை என் மார்பிலே பொருத்திப்பார்த்தார் டாடி. ''ப்யூட்டி ஃபுல்''என்றார் அவளை விழுங்கியவாறு.

''கொஞ்சம்கூட நல்லாயில்லே'' என்றேன்.

''நான் ஷர்ட்டைச் சொன்னேன்'' என்றார் திடுக்கிட்டவராக.

''நான் உங்க பார்வையைச் சொன்னேன்'' என்றேன் காட்டமாக.

டாடி முகம் ஆயிரம் கோணலாயிற்று.

மறுநாள்... ஸ் வி ம் மி ங்.

வெள்ளை நிக்கருடன் குளிப்பதை நிர்வாகி ஆட்சேபித்தார். கறுப்பு ஜட்டி ஒன்றை எடுத்துக் கொடுத்தார். (விலைக்குத்தான். சைடு பிஸினஸ்.)

பெண்கள் யாருமில்லாவிட்டாலுங்கூட வெளியிலேயே மாற்றிக் கொள்ள கூச்சமாயிருந்தது.

குளியலறைக்குள் போனேன். சின்னச் சின்ன தடுப்புகளுக்குள்ளே ஷவர்கள்... இரண்டில் யாரோ உரக்கப் பேசியவாறு கு ளி த் து க் கொண்டிருந்தார்கள். ''ஞாயிற்றுக்கிழமை பந்தயப் பணத்தை ரெடி பண்ணு'' என்றான்.

மூன்றாவது அறைக்குள் நு ழை ந் து மாற்ற ஆரம்பித்த நான் முதலில் கவனிக்கவில்லை. அது... அந்தக்குரல்... கேட்டிருக்கிறேனே! எங்கே?

''அந்த மிலியண்டா ரொம்பவும் எச்சரிக்கையானவள்! உன் ரோமியோத் தனமெல்லாம் அவளிடம் செல்லாது.''

''ஒய் நாட்? இப்பவே என் கை கணிசமாக முன்னேறி வருகிறது. தெரியுமா? ஞாயிற்றுக்கிழமை மகாபலிபுரம் பிக்னிக்கில் எனக்கு முழு வெற்றி கிடைத்துவிடும்.''

புரிந்துவிட்டது. அவன் தான், அந்த அயோக்கியன்தான். ஜட்டியை மாட்டிக் கொண்ட அதே வேகத்தில் வெளியே வந்து கதவைத் திறந்தேன்.

அந்தரங்கத்தை இரண்டு கைகளாலும் பொத்திக் கொண்டு, ''யாரது'' என்று விறிட்டான். முகத்தில் சோப் இருந்ததால் கண்திறக்க முடியவில்லை.

அவனேதான்! குரலை மாற்றி 'ஸாரி' சொல்லி விட்டு வெளியேறினேன்.

அவளோடு அவனைப் பார்த்த போது புரியாதது இப்போது புரிந்தது. இவனை அடிக்கடி நீச்சல் குளத்தில் சந்தித்திருக்கிறேன். பச்சை அயோக்கியன். குளிக்க வரும் பெண்களை கேலி பண்ணுவதும், 'டைவ்' என்ற பெயரில் மேலேவிழுவதும் நீச்சல் சாக்கில் தொடுவதும்.....சே!

நேர்க்கோடாக, குளத்தில் பாய்ந்தேன்.

''வா வா... உன்னைத் தான் எதிர் பார்த்தேன்'' என்றாள் அவசரமாக. ''உன்னால் எனக்கொரு காரியம் ஆகவேண்டும்.''

''எனக்கும் உன்னிடம் ஒரு விஷயம் சொல்லவேண்டும்.''

''என்ன அது?'' என்றாள். அவசரமாகத் தெரிந்தாள். இவ்வளவு பெரிய விஷயத்தை எப்படி நின்ற நிலையில் புரிய வைப்பது? நம்புவாளா?

''என்ன அது, சீக்கிரம் சொல். எனக்குப் போகணும்'' என்றாள்.

''ஒண்ணுமில்லை'' என்றேன்.

''சரிசரி. ஒரு சின்ன வேலை செய். அவசரமாகச் சிநேகிதியைப் பார்க்க ஆஸ்பத்திரிக்குப் போகிறேன். நேப்பியர்ஸ் பார்க்கில் அவர்எனக்காகக் காத்திருப்பார். நான் ஆறு மணிக்கு வருகிறேன் என்று சொல். சொல்கிறாயா?''

''யார், அந்த ஆளா?'' என்றேன் இளப்பமாக.

''ஆமாம்''

''அவனை நம்பாதே அவன் ஒரு அயோக்கியன்.''


''ஸில்லி'' என் கன்னத்தைத் தட்டினாள். ''இப்படியெல்லாம் பொறாமைப் படக்கூடாது. தப்பு.''

'நான் பொறாமைப்படவில்லை. அறிவு கெட்ட பெண்ணே. நான் பொறாமைப் படவில்லை. இது உண்மை' என்று தான் கத்த நினைத்தேன். ''தப்பு இல்லை. நிஜம்'' என்று மட்டுமே சொன்னேன்.

அவள் அதை சீரியஸாக எடுத்துக் கொள்ளவேயில்லை. ''சொல்லிடு'' என்றவள் ஆட்டோவில் தொற்றிக்கொண்டு போய்விட்டாள்.

நேப்பியர் பூங்காவில் மறைவான இடத்தில் மரத்தில் சாய்ந்தவாறு கடலை நின்றுக் கொண்டிருந்த அவன் என்னைப் பார்த்ததும் நிமிர்ந்தான். ''எங்கே

மிஸ்டர் முணு முணு



வந்தே!'' என்றான்.

''கார்ப்பரேஷன் பூங்கா. யாரும் வரலாம்!'' கட்டை விரலால் புருவத்தைத் தடவிக் கொண்டேன். ''யூ நோ, உன்னுடை பந்தயம் தோற்கத்தான் போகிறது. அதைச் சொலத்தான் வந்தேன்.''

''என்ன சொல்றே''!

''நீ மகாபலிபுரம் போகப் போகிறதில்லே. அந்த மிலியண்டா விஷயத்தில் உனக்கு ஒரு வெற்றியும் கிடைக்காது. பந்தயத்தில் நீதான் தோற்பாய்?''

எழுந்தேவிட்டான். ''எப்படித் தெரியும்?''

''ஸ்விம்மிங் பூல் குளியலறையில் பேசினால் மூன்றாவது தடுப்புக்குள்ளேயும் கேட்கும். குளிக்கும்போது தாள் போடாமல் குளிப்பதுரொம்பவும் தப்பு.''

''நீ தானா அது? நீதானா?'' என்றான் என் சட்டையை பிடித்து உலுக்கியவாறு. ''தேவைக்கு மேலே விஷயத்தைத் தெரிஞ்சுவைச்சிருக்கே. உன்னை...''

''ஒண்ணும் செய் முடியாது. அவள் ஆஸ்பத்திரியில் சினேகிதியைப் பார்க்கப் போயிருக்கிறாள். அரைமணியில் வருவாள். வந்ததும் விஷயத்தைப் போட்டு படீலென்று உடைப்பேன் என்ன பந்தயம் கட்டி இருக்கிறாய் அம்பதா? ஐந்நூறா? எவ்வளவு நஷ்டப்படப் போகிறாய்?''

''டேய்!'' பூனைக் குட்டியைத் தூக்குவதுபோல என்னை அலக்காகத் தூக்கிப் பேரட்டான். நான் விழுந்த இடத்தில் புல் அதிகமாக இருந்ததினால் அதிகமாக அடிபடாமல் தப்பினேன்.

என் மார்பில் ஏறி உட்கார்ந்து ஏதேதோ திட்டிக்கொண்டு இருந்தான்.

என் மனத்துக்குள் ஏனோ தெரியவில்லே. சட்டென்று தியேட்டரில் என் அருகில் அமர்ந்த ஆளின் ஞாபகம் வந்தது. 'தப்பு மட்டுமில்லே, சடடப்படியே கூடத்தப்பு. போலீஸுக்குத் தெரிந்தால் என்னைத் தள்ளிக்கொண்டு போய் விடுவார்கள்...' என்றானே...

அவ்வளவுதான். கத்த ஆரம்பித்து விட்டேன், அவனே மிரண்டு போகுமளவுக்கு. கும்பல் சேர்ந்துவிட்டது. ரோடில் நின்றிருந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரும் ஓடிவந்தார். அழுதுகொண்டே அவரிடம் சொன்னேன்: ''நான்பாட்டுக்குப் பாடம் படிச்சிகிட்டிருந்தேன் சார். இந்த ஆள் என்னென்னமோ அசிங்கமெல்லாம் பேசறான். எங்கெல்லாமோ தொடறான்.''

இன்ஸ்பெக்டர் கேட்டபோது வேண்டுமென்றே வயது பதினைந்து என்றேன். என்னைக் கட்டிப் புரண்டதைப் பார்த்ததாகக் கும்பலும் சாட்சி சொன்னது.

அவன் அலறினான். சண்டைக்குப் போனான்.

'இளம் மனத்தைக் கெடுக்க' முயன்றதாகக் குற்றம் சாட்டிய இன்ஸ்பெக்டர் அவனைத்தள்ளிக்கொண்டு போகலானார்.

''மிலியண்டா, ப்ளீஸ்! இதை நம்பாதேயேன்'' என்று அவன் அலறுவது கேட்டுத் திரும்பினேன். அவள் உதடுகள் கோணி இருந்தன. அருவருப்புடன் பார்த்தாள். இனிமேல் அவள் மட்டுமல்ல. எந்தப் பெண்ணுமே அவனை விரும்பமாட்டாள்.

எஸ்! இனி அவன் காதலிக்க முடியாது.

பணக்காரப் பாடகர்!



உலகப் புகழ்பெற்ற பாடகர் எல்விஸ் ப்ரெஸ்லியின் மறைவால் லாஸ்வேகாஸ் நகரம் உயிரற்ற இடமாகி விட்டது.

எல்விஸ் மிகவும் விரும்பிய மூவர் - தாய், மனைவி, மகள். இறப்பதற்கு இரண்டு மாதங்களுக்கு முன் அவா தன் மகளுக்கு வாங்கிக் கொடுத்தவை : ஒரு விலையுயர்ந்த கார்.

தன் மகளும் அவள் நண்பர்களும் உல்லாசப் பொழுதுபோக்கிற்காக டிஸ்னிலேண்ட் பூராவையும் ஒரு நாளைக்கு (24 மணி நேரம்) வாடகைக்கு வாங்கிக் கொடுத்தார்.

இதுவரை இவர் பாடிய ரிகார்டுகள் ஐம்பது லடசம் விற்பனையாகியுள்ளன.

அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர் இவரைப் பற்றிச் சொன்னது:

"இதுவரை 38 அமெரிக்க ஜனாதிபதிகள் இருந்திருக்கிறார்கள். ஆனால் ஒரே ஒரு எல்விஸ் ப்ரெஸ்லிதான் இருக்க முடியும்.''

எங்கள் வீட்டில் ஃப்ரிஜ்

ரேவதிரமணி

பிற்பகல். பெருமாள் புரத்திலிருந்து பஸ்ஸைப்பிடித்து டவுனுக்குப்போனேன்.

பின்னே என்ன? ''சாயந்திரம் ஆபீசிலிருந்து சீக்கிரம் வந்து விடுகிறேன். ஆபீஸ் 'ஜீப்'பில் மார்க்கெட் போய் வரலாம்'' என்று சொல்லிப் போனவர், 'இன்று வேலை அதிகம், லேட்டாகத்தான் வருவேன்' என்று மத்தியானம் ஆபீஸ் பியூனிடம் தகவல் அனுப்புகிறாரே!

டவுனுக்குப் போனால் பழத்தோடு நிறுத்திவிட முடிகிறதா? என் பெண் சோபனாவுக்கும் எனக்கும் வளையல்; வீட்டிற்கு பிஸ்கோத்து அது, இது என்று ஒவ்வொரு கடையிலும்.

பெரிய பையும் கையுமாக ஆயாசத்துடன் வீடு திரும்பினேன். வீட்டினுள்ளே ஏதோ மகிழ்ச்சி ஆரவாரம். பெண் சோபனா பாட்டுமெட்டும், பேச்சுமாக எட்டு கட்டைச் சுருதியில் குதூகலித்துக்கொண்டிருந்தாள். கடைக்குட்டி ஈசு குதித்துக் கும்மாளமடித்து ஓடி வந்தான்.

'என்னடி அமர்க்களம்?' என்று எரிச்சலுடன் கூடத்திற்கு வந்தவள் பிரமித்தேன். ஜன்னலருகில் 'ஜம்'மென்று ''ரிஃப்ரிஜிரேடர்'' வெண்மைப் பளபளப்புடன் நின்றிருந்தது! என் ஒன்றுவிட்ட தம்பி, தன் கம்பெனி ஆட்கள் மூவருடன் அக்குளிர்ப்பெட்டிக்கு வேண்டிய உபகரணங்களை அமைத்துக்கொண்டிருந்தான். அக்கம்பக்கத்து வாண்டுகள் வேறு சூழ்ந்துகொண்டு கல்யாணக் கூடமாக ஜே ஜே என்று காட்சியளித்தது.

என் கணவர் முன்கூட்டிச் சொல்லாமல் இப்படி திடீரென்று 'பிரிஜ்' ஒன்றை வாங்கி என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது எனக்கும் பெருமையாகத் தானிருந்தது.

இத்தனைக்கும் 'பிரிஜ்' வேண்டுமென்று நான் ஒன்றும் தொந்தரவு செய்யவில்லை. காலேஜில் சேர்ந்திருக்கிறாளே என் அருமைப் புதல்வி—சோபனா—அவள்தான் அவள் அப்பாவை அரித்துக்கொண்டிருந்தாள். அதற்குத் தகுந்தாற்போல் என் ஒன்றுவிட்ட தம்பி திருநெல்வேலியிலிருந்து வந்து சேர்ந்தான். பிரிஜ், மிக்ஸி, மின்சார விசிறி முதலியவை விநியோகிக்கும் ஒரு கம்பெனியில் புதிதாக விற்பனைப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டிருந்தான். ''என்ன அத்திம்பேரே ஒரு ஃபிரிஜ்' வாங்க இவ்வளவு யோசிக்கிறீர்கள்? இப்போதுதான் எல்லா பாங்குகளிலும் 'லோன்' வேறு கொடுக்கிறார்களே. ஒரு வார்த்தை சொன்னால் ஒரே நாளில் 'ஏ' கிளாஸ் 'ஃபிரிஜ்' கொண்டு வந்து தள்ளி விடுகிறேன். நீங்கள் பணத்தைப் பற்றி யோசிக்கவே வேண்டாம். மெதுவாகத் தவணையில் கொடுத்தால் போதும்'' என்று இவரிடம் அடிக்கடி ஆசை காட்டிக் கொண்டிருந்தான். ''நீயும் உன் பெண்ணும் போடுகிற தூபத்தில் உன் தம்பி தன் விற்பனைத் திறமையை என்னிடமே ரீல் விடுகிறானே!'' என்று இவர் என்னை இடித்துக் காட்டியிருக்கிறார். நானா பிடிவாதம் பிடித்தேன்? சோபனா ஏதோ ஆசைப்படுகிறாள். 'பிரிஜ்' இருந்தால் உபயோகமாகவும் இருக்கும். ஆனால் நான் எதற்கு அனாவசியமாய் வாக்குவாதம் பண்ணவேண்டும் என்று வாயை மூடிக் கொண்டுவிட்டேன். இப்படி இன்று திடுதிப்பென்று ஆபீஸிலிருந்து என் தம்பிக்கு 'போன்' செய்து 'பிரிஜ்'ஜை அனுப்பி வைத்து இவ்வளவு சீக்கிரம் நல்ல பட்டம் கட்டிக்கொள்வார் என்று நானே எதிர்பார்க்கவில்லை.

நல்லநாளும் கிழமையுமாக வீட்டில் 'பிரிஜ்' வந்திருக்கிறது. மளமளவென்று பால் பாயசம் வைத்தேன். பிறகு அதை 'பிரிஜ்'ஜில் அடக்கி, அவர் இரவுச் சாப்பாட்டிற்கு ஜில்லென்று டம்ளர் நிறைய வைத்தேன். 'ஃபிரிஜ்' வாங்கியதற்காக ஐஸ் வைக்கிறேனாம்! எப்படி அவர் இடக்கு?

மறுநாளே சோபனா டவுனுக்குப்போய் ஏகப்பட்ட பழங்களை எக்கச்சக்க விலை கொடுத்து வாங்கி, தான் சமீபத்தில் செய்யக் கற்றுக்கொண்ட பழ ரச பானங்களை பாட்டில் பாட்டிலாகத் தயார் செய்து 'பிரிஜ்'ஜை நிரப்பி விட்டாள். கையிருப்புக்கு இரட்டிப்பு விலைகொடுத்து வாங்கி வைத்திருந்த பத்துக் கிலோ சர்க்கரையைக் காலி செய்துவிட்ட பெண்ணரசியைக் கோபிப்பதா, கையில் கொஞ்



சம் சர்க்கரை வேண்டுமே வாங்கி வருகிறீர்களா என்று கேட்கப்போய் முகத்தைக் கடுக்கும் கணவனைச் சமாளிப்பதா?

ஆமாம், 'பிரிஜ்'ஜை வாங்கி விட்டு காலியாகவா வைத்திருப்பார்கள்?.... சரி, இனிமேல் ஈசுவின் ஐஸ்கிரீமுக்காகக் காசைச்செலவழிக்க வேண்டாம். வீட்டிலேயே அடிக்கடி பண்ணி எல்லாருமாச் சாப்பிடலாம்'' என்று பதிலளிக்கிறாள் சோபனா. ''ஏதோ ஐஸ்கிரீம் வீட்டில் இலவசமாகக் கிடைக்கிறது போலிருக்கிறது'' என்று பேப்பரில் முகத்தைத் திணித்துக் கொண்டே முணுமுணுக்கிறார் இவர்.

மாத முடிவில் பால் பில் இவ்வளவு ஜாஸ்தியா என்றால் நான் என்ன செய்வேன்? ''ஏன்னா, நீங்கள் திடீர் திடீர்னு வேளைகெட்ட வேளையில் ஆபீஸ்காரர்களைக் கூட்டிக்கொண்டு வந்து 'காப்பி இருக்குமா' என்கிறீர்கள். முன்பு மாதிரி பால்காரன் வந்துதான் காப்பி என்று சொல்லி விடமுடியுமா? 'பிரிஜ்' இருப்பதால் எதற்கும் தயாராக ரெண்டு லிட்டர் பால் வாங்கி வைக்கிறேன். இரண்டு நாளானாலும் கெடுவதில்லையே'' என்ற என் சமாதானம் எனக்கே சரியாகத் தோன்றவில்லை.

ஆனால் 'பிரிஜ்'ஜின் மாபெரும் உபயோகத்தை முழுதும் தெரிந்து கொள்ள மேலும் இரண்டு வாரம் பிடித்தது. ஊரிலிருந்து என் கணவரின் உறவினர் ஒருவர் குடும்பத்தோடு ராமேசுவரம் போகும் வழியில் அன்றிரவு வருவதாக முதல்நாளே கடிதம் போட்டிருந்தார். சாம்பார், அவியல் என்று சாங்கோபாங்கமாய்ச் சமைத்திருந்தேன். ஆனால் அவர் பிரயாணத்தை ஒத்திப் போட்டுவிட்டதாக இரவு தந்தி வந்து நின்றது. விலைவாசி இருக்கிற நிலையில் இவ்வளவு பேருக்கு ஏகமாகச் சமைத்ததை என்ன செய்வது? எனக்குக் கோபமாக வந்தது.

''என்னம்மா நீ, ஒன்றும் தெரியாதவளாக இருக்கிறாய்? 'பிரிஜ்'ஜோ இருக்கு. சமைத்ததை அப்படியே அதனுள் தூக்கி வை. இரண்டு நாளைக்கு வைத்து நாமே சாப்பிடலாம்'' என்று ஐடியா கொடுத்தாள் சோபனா. இன்று சமைத்ததை, நாளை சாப்பிடுவதா என்று நான் முதலில் தயங்கினாலும் பிறகு சம்மதித்தேன்.

மறுநாள் காலை வெறும் சாதம் மட்டும் வடித்தேன். சாம்பார், அவியல், உருளைக்கிழங்கு கறி எல்லாவற்றையும் சோபனா சுடவைத்துப் போட்டாள்.

அம்மா, நீ புதிதாகப் பண்ணுவதை விட இப்போதான் ரொம்ப ருசியாக இருக்கு!'' என்று சர்ட்டிபிகேட் கொடுத்தான் ஒன்பதாவது படிக்கும் என் நடுப்பையன். நானும் சாப்பிட்ட போது ரொம்ப வித்தியாசம் தெரியவில்லை போலிருந்தது. 'ஒரே டெம்பரேச்சரில் இருப்பதால் கெட்டுப் போவதற்கு என்ன இருக்கிறது?' என்று என் கணவரும் ஆமோதித்து விடவே அந்தப் பழக்கமே பிடித்துக்கொண்டுவிட்டது

வாரங்கள் நகர நகர வருகிறவர்போகிறவர்களுக்கெல்லாம் ஜூஸ், ரோஸ்–மில்க் பிரவாகமாக ஓடியது. பால் கணக்கு எகிறியது. ஒன்பதாவது படிக்கும் என் பையன் ஸ்ரீவத்ஸன் மாலை கிரிக்கெட் ஆடிவிட்டுத் தன் நண்பர் பட்டாளத்தையே கூட்டி வந்து பாட்டில் பாட்டிலாக தினம் ஐஸ் வாட்டர் சப்ளை செய்ய ஆரம்பித்துவிட்டான்.

கோடை போய்க் குளிர் காலம் வந்துவிட்டது. வீட்டில் எல்லாருக்கும் இருமல் அல்லது ஜலதோஷம். சுடச்சுட வெந்நீர்தான் தொண்டைக்கு வேண்டியிருந்தது. 'பிரிஜ்'ஜை சீண்டுவாரில்லை. 'பிரிஜ்'ஜின்மீது புது மோகமும் கரைந்துவிட்டது ☆

பிராம்மணனை பேஷ்வா பாஜிராவ் சந்திபுரிய வேண்டிய அந்தி வேளையில் தனது வளைவு வாளிலிருந்த ரத்தத்தையும் சதைப் பற்றுகளையும் இடது கையால் துடைத்து, ஜெயித்பூர் கோட்டைக்குப் பின்னால் மறைந்து கொண்டிருந்த மாலைக் கதிரவனின் செவ்விய கிரணங்களை நோக்கி விட்டெறிந்தான். அர்க்கியம் விட்டு பூமியை நனைக்க வேண்டிய அந்தணனை தான் குருதியை உதிர்த்து நிலத்தை நனைத்து விட்டதை எண்ணி, 'பிறப்புக்கும் வாழ்வுக்கும் எத்தனை வேற்றுமை!' என்று தனக்குள் சொல்லியும் கொண்டான்.

அப்படி அவன் க்ஷத்திரிய வாழ்க்கையை மேற்கொண்டதைப் பற்றிய சீற்றத்தினாலோ என்னவோ சூரியன் அன்று அளவுக்கதிகமாகச் சிவந்து அந்த அந்தணன் மீது ரத்தக் கிரணங்களைப் பாய்ச்சி அவன் வீர முகத்தையும் ரத்த மயமாக்கினான். அந்த முகத்தில், சுற்றிலும் எதிரி வீரர்கள் மாண்டு போயும், மாண்டு கொண்டும் இருந்த அந்தக்கோர போர்க்களத்தையுங் கண்டதால் ஏற்பட வேண்டிய வெறுப்புக்கும் துன்பத்துக்கும் பதிலாக, முறுவலொன்று தவழ்ந்து விளையாடியதைக் கண்டு பாஜிராவின் வெண்புரவியின் பக்கத்தில் நின்று கொண்டிருந்த ராஜபுத்ரனும் பண்டுல்கண்ட் மன்னனுமான சத்ரஸால் பெரிதும் வியப்படைந்ததன்றி ''இவன் எப்படி பிராம்மண குலத்தில் பிறந்தான்?'' என்று உள்ளூற ஒரு வினவையும் எழுப்பிக் கொண்டான். ஆனால் சத்ரஸாலின் வாயிலிருந்துவந்த சொற்களில் அந்த வினா இல்லை. நன்றி தம்பும் சொற்களே வெளி வந்தன. ''பேஷ்வா! உங்கள் வீரம் இன்று ஹிந்து மதத்தைக் காத்து விட்டது. எனது ராஜ்யம் மெகலாயர் கைக்குப் போகாமல் காக்கப்பட்டது'' என்று கூறினான் சத்ரஸால், ஜெயித்பூர் போர்க்களத்தில் நின்றவண்ணம்.

பேஷ்வா பாஜிராவின் வாளினும் கூரிய கண்கள் சத்ரஸாலை ஒரு விநாடி கூர்ந்து நோக்கின. அவர் அழகிய உதடுகள் ஏதும் பேசவில்லை. கை அவர் கச்சையை நாடிச் சென்று ஒரு கடிதத்தை எடுத்து சத்ரஸாலிடம் நீட்டிற்று. அது என்னவென்பது சத்ரஸாலுக்கு ஏற்கனவே தெரிந்திருந்தாலும் பயபக்தியுடன் கைநீட்டி வாங்கிக் கொண்டான். அது அவன் அனுப்பியிருந்த ஓலைதான். அவன் எழுப்பிய வேதனைக் குரல்தான். அவன் எழுதியிருந்தான்: ''பேஷ்வா! முதலை காலைப் பற்றிய யானையின் நிலையில் நானிருக்கிறேன். உடனே நீங்கள் வராவிட்டால் அழிந்து போவேன்!''

ஓலையைக் கையில் வாங்கிய சத்ரஸால் ''பேஷ்வா! என்னை நான் யானையென்று குறிப்பிட்டது தவறு என்று நினைக்கிறேன்'' என்று அடக்கத்துடன் சொன்னான்.

''இல்லை. ஹிந்து மதமே யானைபோன்றது. அதன் சக்தி அதற்குத் தெரியாது' என்றார் பாஜிராவ்.

அது உண்மை என்பதற்கு அறிகுறியாகத் தலையசைத்த சத்ரஸால் ''முதலை ஓடி விட்டது'' என்று பாராட்டினான் பேஷ்வாவை.

இல்லையென்பதற்கு அறிகுறியாகத் தலையசைத்த பாஜிராவ், ''சத்ரஸால் மொகலாயப்படைத் தலைவர்களில் மகமத்கான் பங்காஷ் மகாவீரன். ஓட மாட்டான். இந்தப் போர் முடிந்து விட்டதாக எண்ணுவது தவறு'' என்று கூறியவர் சரேலென்று எதையோ நினைத்துக் கொண்டு ''சத்ரஸால்! கஜேந்திர மோட்

மஸ்தானி





சத்தின் உவமையை உன் கடிதத்தில் காட்டினாய். ஆனால் உவமை பூர்த்தியாகவில்லை'' என்று கூறி லேசாக நகைக்கவும் செய்தார்.

''எப்படி பேஷ்வா?'' என்று வணக்கத்துடன் கேட்டான் சத்ரஸால்.

''யானை ஒரு தாமரை மலரை மகா விஷ்ணுவுக்கு அளித்ததே. நீ ஏதும அளிக்கவில்லையே'' எனறு வினவினார் பாஜிராவ்.

சத்ரஸால் பதில் சொல்லவில்லை. 'தாமரை மலர்! தாமரை மலர்!' என்று முணுமுணுத்துக் கொண்டான். அத்துடன் அவ்விடத்தைவிட்டு அகன்று தனது படைத்

மனையைச் சுத்தம் செய்யுமாறும் பேஷ்வாவை அழைக்க ஏற்பாடு செய்யுமாறும் பணித் தான்

அன்றிரவு ஜெயித்பூர் கோட்டைக்குள் மகாராஷ்டிர சரித்திரத்தின் மாவீரரான பேஷ்வா பாஜி ராவ், தமது வெண் புரவி மீது ஆரோகணித்த வண்ணம் நுழைந்தார், தமது படைத் தலைவனை பிலாஜி ஜாதவுடன். அரசனுக்கு அளிக்கப்படும் வரவேற்பு பேஷ்வாவுக்குஅளிக்கப்பட்டது. மங்கள வாத்யங்கள் முழங்கின; வேதியர் ஜய விஜயீபவ கோஷம் எழுப்பினர். முக்காடிட்ட ராஜபுதனப் பெண்கள் மங்கல ஆரத்தி எடுத்தனர். தெரு மாடிகளிலிருந்து புஷ்பங்கள் தூவப்பட்டன, அந்த இணையற்ற வீரர் மீது.

பாஜிராவ் மிகுந்த வியப்புடன் தமது புரவியை நடத்திச் சென்றார். ''இத்தனை விரைவில் இத்தனை ஏற்பாடுகளைச் சத்ரஸால் எப்படிச் செய்தான்?'' என்று உள்ளூற வினவிக் கொண்டார். ஆனால் அரண்மனையில் நடந்த உபசாரம் கோட்டை வாசல் வரவேற்பையும் வீதி வல விழாவையும் தோற்கடிக்கச் செய்தது.

பேஷ்வா தங்கிய அரண்மனை அறையே மண்டபம் போலிருந்தது. வாலிப வயதுள்ள பேஷ்வாவுக்குப் பணிப்பெண்கள் வாசனைத் திரவியங்கள் கலந்த நீரால் மங்களஸ்நானம் செய்வித்தார்கள். அவர் மெல்லிய உடலுக்குத் தகுந்த துல்லிய வெண்மை ஆடைகள் அணிவிக்கப்பட்டன. அப்படி ஆடை அணிந்து எப்பொழுதும் தற்காப்புக்கு வைத்திருக்கும்



நவரத்தினப்பிடி வைத்த பிச்சுவாவைக் கச்சையில் செருகிய பேஷ்வாவுக்கு அந்த அறையிலேயே உணவும் அளிக்கப்பட்டது. அடுத்தபடி சத்ரஸாலே வந்து பேஷ்வாவை மாளிகையின் கேளிக்கை மண்டபத்துக் அழைத்துச் சென்றான். அங்கு பேஷ்வாவைப் பட்டுத் திண்டுஆசனத்தில் சாய்ந்து உட்காரச் செய்து தானும் உட்கார்ந்ததும் எதிரே தலைதூக்கிப் பார்த்தான் சத்ரஸால்.

எதிரே எட்ட இருந்த தபேலாக்களிடம் இரண்டு தபேலாக்காரர்கள் உட்கார்ந்திருந்தார்கள். தரையில் படுக்கவைக்கப்பட்டிருந்த மீரட் தம்பூராவை ஒருவன் எடுத்து மீட்டினான். அடுத்த நிமிடம் சதங்கை ஒலி கேட்க வெண்ணிற முக்காடிட்ட நடன மாது ஒருத்தி வந்து நடனத்தைத் துவக்கினாள். மீரட் தம்புரா தனது நாதத்தால் அந்த மண்டபத்தை நிரப்ப முயன்றது. தபேலாக்களும் திதிங்கிணத்தோம் எனச் சுருதியுடன் கலந்து முழங்கின. ஒ வயனத்தையும் பேஷ்வா கவனிக்கவில்லை. எதிரே வெண்மேகத்திடை ஊரும் சரத் காலச் சந்திரனைப் போலும், நடை தரையில் பாவாத அப்ஸரஸ் போலும் சுழன்ற மோகினியையே நோக்கிக் கொண்டிருந்தார். அவள் முகத்தை மறைத்திருந்த மஸ்லின் துணி முகத்தை மறைக்க முடியாமல் திணறியது. உள்ளிருந்து அபிநய பாவத்துக்கு அசைந்த இருவேல் விழிகள் மஸ்லினைக் கிழித்திருக்க வேண்டும். துவண்ட இடையில் ஏன் அந்த மேலாடை இழைந்து இழைந்து விலக வேண்டும்? கவனிக்க கவனிக்க பேஷ்வா வியந்தார். மெய்மறந்தார். அவள் ஒவ்வொரு அசைவும் பேஷ்வாவின் இதயத்தில் கலந்தது. அவள் உருவமே தன்னுடன் ஒன்றுவதாகத் தோன்றியது, பேஷ்வாவுக்கு.

அவள் நடனத்தை முடித்த பின்பும் பேஷ்வா அவளையே உற்று நோக்கிக் கொண்டிருந்தார். சத்ரஸாலின் சைகைக்கு இணங்க அவள் பேஷ்வாவை நோக்கி வந்தாள். ''பெண்ணே! முகத்திரையை எடுத்து விடு'' என்றான் பண்டோலா ராஜபுத்ரனான சத்ரஸால்.

அவள் முகத்திரையை நீக்கினாள். பெரிய இரு பங்கஜங்கள் பேஷ்வாவின் வண்டுக் கண்களை மூடின. ''பேஷ்வா! இதோ தாமரை, ஏற்றுக் கொள்ளுங்கள்' என்றான் சத்ரஸால்.

''தாமரையா?'' பேஷ்வாவின் உதடுகள் முணுமுணுத்தன.

''ஆம். யானை அளிக்கிறது பரிசு'' என்ற சத்ரஸால் அவள் கைகளிரண்டையும் பிடித்து பேஷ்வாவின் கைகளில் திணித்தான்.

பேஷ்வாவின் வாள் பிடித்த முரட்டுக் கரத்தில் அவள் மலர்க் கரங்கள் மென்மை

''என் மகள்'' என்றான் சத்ரஸால்.
''பெயர்?''
''மஸ்தானி.''
''மஸ்தானியா!'' பேஷ்வாவின் குரலில் வியப்பு ஒலித்தது.
''ஆம்'' என்றான் சத்ரஸால்.
''மஸ்தானி! முஸ்லிம் பெயரல்லவா?
''ஆம். இவள் முஸ்லிம்தான்.''

''முஸ்லிம் எப்படி ஹிந்துவுக்குப்பெண்ணாக முடியும்?''
''என் வளர்ப்பு மகள்.''
''அதுவும் ராஜபுதனத்தில் சாத்தியமல்லவே.''
இதைக் கேட்ட சத்ரஸால் முறுவல் கொண்டான். ''பேஷ்வா!'' என்று மெள்ள அழைத்தான்.
''என்ன சத்ரஸால்?'' என்றான் பேஷ்வா.
''உங்கள் மனத்தை இவளிடம் பறி கொடுத்து விட்டீர்களல்லவா?'' என்று வினவினான் சத்ரஸால்.
பேஷ்வா இதற்குப் பதில் சொல்லவில்லை. ''நீங்கள் ஹிந்து. அதுவும் அந்தணர். உங்கள் உள்ளத்தை ஒரு முஸ்லிம் பெண் பறிக்கலாமா?'' என்று சத்ரஸால் கேட்டான்.
பேஷ்வா மேலும் மௌனம் சாதித்தார் சத்ரஸால் அவரை நோக்கிக் கூறினான், ''பேஷ்வா! அன்பு பெருகும் போது சாதி மறைந்து விடுகிறது'' என்று.
அது எத்தனை உண்மை என்பதை பேஷ்வா வாழ்நாள் முழுதும் உணர்ந்தார். அன்றிரவு அவர் பள்ளியறையில் ஆரம்பித்தது அந்த அன்பு உறவு. அந்தணன் ஆசாரம் அன்று கலைந்தது. அவள் மோகனப் புன்னகையுடன் நீட்டிய மதுவை உண்டார் பேஷ்வா. அவள் இதழ்களில் துளிர்த்த மதுவை மாத்திரம் விட்டாரா என்ன? அன்பின் சோதி சாதியைத் துடைத்து விட்டது.

பாஜிராவ் — மஸ்தானி காதல் பெருங்கதையாகப் பரவியது மகாராஷ்டிரத்தில். அவர் குடும்பத்தில் அது கலகவித்தை விதைத்தது. மஸ்தானியுடன் அவர் பூனாவுக்குள் நுழைந்த போது சம்பிரதாய வரவேற்பு நடந்தது. அவர் மொகலாயர் மீது அடைந்த வெற்றியை முன்னிட்டு வெற்றித் தாரைகள் ஊதப்பட்டன. ஆனால் அந்தணர் யாரும் அவரை நோக்கி வேதம் ஓதவில்லை. ஜெயவிஜயீபவ சொல்லவில்லை. திரும்பி வரும் கணவனை எதிர் கொள்ளும் பாஜிராவின் மனைவி காசிபாய் அவரை எதிர் கொள்ளவில்லை. வெற்றித் திலகம் இடவில்லை.
பேஷ்வா இதையெல்லாம் கவனிக்கவே செய்தார். ஆனால் அவர் இரும்பு மனம் எதையும் லட்சியம் செய்யாததால் மஸ்தானியை அவள் புரவியிலிருந்து அவரே கைலாகு கொடுத்து இறக்கி அழைத்துச் சென்றார். அன்றிரவு மனைவி மக்கள் இருந்த இடத்துக்குச் செல்லவில்லை அவர். தன் சொந்த அறைக்கு மஸ்தானியுடன் சென்றார். அவளுக்கு ஒரு தனி அறையை அந்த மாளிகையிலேயே ஏற்பாடு செய்ய உத்தரவிட்டார். அவர் வந்த மறுநாள் கணபதி பூஜை அன்று தம் குடும்பத்துடன் பூஜை மண்டபத்தில் நின்றார். பூஜை முடிந்ததும் யாரையும் மண்டபத்தை விட்டு அகலக் கூடாதென உத்தரவிட்டார். மஸ்தானியை அழைத்து வந்து கணபதிக்கு முன்பு நடனமாடச் செய்தார். அதன் முடிவில் ''மஸ்தானி! என் உணவு தயாராயிருக்கிறதா?'' என்று வினவினார்.
மஸ்தானி நடுங்கினாள், பதில் சொல்ல. ''சொல்! யாருக்கும் அஞ்சாதே'' என்றார் பேஷ்வா.
''தயார்'' என்றாள் மஸ்தானி, நடுங்கும் குரலில். பேஷ்வாவுக்குச் சற்று எட்ட உட்கார்ந்திருந்த காசிபாயையும் நோக்கினாள்.
''மாம்ஸம் வைத்திருக்கிறாயா?''
''வைத்திருக்கிறேன்.''
''மது.''
''அதுவும் இருக்கிறது.''
''சரி வா போவோம்'' என்று கூறிய பேஷ்வா அனைவரையும் ஒரு முறை சுற்றிப் பார்த்துவிட்டு மஸ்தானியின் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு சென்றார்.

காசிபாய் சிலையென உட்கார்ந்திருந்தாள், தனது புதல்வர்களுடன். பேஷ்வாவின் பிடிவாதம் அவளுக்கு நன்ருகத் தெரியும். இது பெரும் விபரீதத்தில் கொண்டு போய் விடும் என்பதையும் அவள் உணர்ந்திருந்தாள்.

மஸ்தானிக்கும் அது விளங்கித்தானிருந்தது. அன்று பள்ளியறையில் அவள் மதுவை அவருக்குக்கொடுக்க மறுத்தாள். ''நீங்கள் செய்வது சரியல்ல'' என்று கூறினுள்.

பேஷ்வா முரட்டுத்தனமாக மதுக் குப்பியைத் தாமே எடுத்துக் குடித்தார். அவளை முரட்டுத்தனமாகத் தூக்கிப் பஞ்சணைக்கு எடுத்துச் சென்ருர். அவர் விவகாரம் எல்லாவற்றிலும் அன்று முரட்டுத்தனமும் வெறியுமே விரவிக் கிடந்தது. அந்த முரட்டுத்தனமும் வெறியும் மஸ்தானிக்குத் தேவையாகத் தானிருந்தது. காலத்தில் பேஷ்வாவின் முரட்டுத்தனம் அவளுக்கு ஒரு மகனையும் அளித்தது.

பேஷ்வாவை யாரும் எதிர்த்து எதுவும் சொல்ல முடியவில்லை. அவர் மகாராஷ்டிரத்துக்குச் சம்பாதித்துக் கொடுத்த வெற்றிகள் மன்னர் ஷாஹூவின் வாயைக் கூடக் கட்டியிருந்தது. ஆனல் மதம் அவரை மன்னிக்கவில்லை. அவர் வந்தால் அவர் தம்பிகளுக்குப் பூணூல் போட்டு வைக்க முடியாதென்று வேதியர் மறுத்தனர். இதை பேஷ்வாவின் காதில் மெள்ளப் போட்டாள் மஸ்தானி. ''பேஷ்வா! என்னையும் என் மகனையும் என் தந்தையிடம் அனுப்பி விடுங்கள். என்னல் உங்கள் குடும்பம் பிளக்கக் கூடாது'' என்று கெஞ்சினுள்.

பதிலுக்குப் பேஷ்வா அவளை அணைத்துக் கொண்டார். ''மஸ்தானி! என் உயிர் போன பின்பு நீ போகலாம்'' என்று சொன்னுர்.

மஸ்தானி சிந்தித்தாள். ''உங்கள் தம்பிகள் உபநயனம்?'' என்று கேட்டாள்.

''நாளை நான் மீண்டும் போர்க்களம் செல்கிறேன். அந்தச் சாக்கை வைத்துக் கொண்டு உபநயனம் நடத்தலாம். வேதியர் வருவார்கள்'' என்ருர் பேஷ்வா.

மறுநாளே போர்முரசும் கொட்டினுர். நிஜாம் நாட்டை நோக்கி அன்று பேஷ்வா புறப்பட்டபோது யாரும் வழியனுப்பவில்லை. மஸ்தானியைத் தம் அறையில் கட்டியணைத்து மகிழ்ச்சியுடன் பயணமானுர் பேஷ்வா.

நிஜாம் நாஸர்ஜங் முறியடிக்கப்பட்டார். மகாராஷ்டிரம் கோலாகலத்தில் அமிழ்ந்தது. ஆனல் நர்மதைக் கரையில் பாசறையிலிருந்த பாஜிராவ் மரணத்தின் பிடியிலிருந்தார். செய்தி பறந்தது பூனுவுக்கு.

அவர் பாசறைக்கு விரைந்து வந்தாள், மனைவி காசிபாய், தனது கடைசி மகன் ஜனுர்த்தனனுடன்.

கணவன் மரணப் படுக்கைக்கு அருகே நின்ற காசிபாயின் இதயம் வெடித்து விடும்போலிருந்தது. — ''இதோ பாருங்கள்! காசிபாய் வந்திருக்கிறேன்'' என்ருள் நீர்கரந்த கண்களுடன்.

சுரவேகத்திலிருந்த பாஜிராவ் மெள்ளக் கண்விழித்தார். கண்ணில் காசிபாய் தெரியவில்லை. ''யார்? மஸ்தானியா?'' என்ருர்.

''உங்கள் மனைவி'' என்ருள் காசிபாய்.

''மனைவியா!'' என்று வருத்தங் கலந்த புன்முறுவலொன்றைப் படரவிட்டார் பாஜிராவ்.

''இதோ குழந்தை ஜனுர்த்தனன்'' என்று விக்கினுள் காசிபாய்.

''குழந்தையா!'' என்ருர் மயக்கத்தில் பாஜிராவ். ''மஸ்தானி குழந்தை தான். இல்லை. நான் அவளுக்குக் குழந்தை. அவள் மடியில் எத்தனை முறை தூங்கியிருக்கிறேன். மஸ்தானி! தலை இடிக்கிறது. மடியைக் காட்டு. சிறிது நேரம் படுக்கிறேன்'' என்று தட்டுத் தடுமாறிப் பேசினுர் பேஷ்வா.

பிறகு பேசவில்லை. தலை ஒருபுறம் சாய்ந்தது.

காசிபாய் கதறினுள். மகாராஷ்டிரமே கதறியது.



மொரார்ஜி தேசாய் திரைப்படம் ஒன்றுக்கு ஸ்கிரிப்ட் எழுதப்போகிருர். உண்மையான சேதி தான். ராமானந்த சாகர் டைரக்ட் செய்யப் போகும் 'மகாபாரதம்' படத்திற்குத்தான் மொரார்ஜி எழுதப்போகிருர்.

இதில் சசிகபூர் கிருஷ்ணனுகவும், ஹேமமாலினி திரௌபதியாகவும், தர்மேந்திரா அர்ஜுனனுகவும் நடிப்பார்கள்.

—தகவல்: மார்னிங் எக்கோ



''நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதீங்க. யோசித்துப் பாருங்க. எவ்வளவு சொத்து இருந்தது நமக்கு? இப்போது எள் ஊன்றக் கூட நிலம் கிடையாது. அவ்வளவையும் விற்றுச் சூறையாடி விட்டீர்கள். வீடுதான் பாக்கி. அதையும் விலை பேசுகிறீர்கள். அந்தக் காலத்து வீடு. அரண்மனை போல விசாலமான பங்களா. இரண்டு லட்சம் பெறும். இருபதாயிரம் கிடைத்தாலும் விற்று விடத் தயாராயிருக்கிறீர்கள். போட்டி போட்டுக் கொண்டு நன்செய், புன்செய், காடு கழனிகளையெல்லாம் நம்மிடமிருந்து வாங்கியவர்கள் வீட்டை வாங்குவதற்குத் தயங்குகிறார்கள். இத்தனைக்கும் கொள்ளை மலிவாக விலை சொல்கிறீர்கள்.

''மாமாவுக்கு இப்படி ஆகும்னு தெரிஞ்சிருக்கு. எல்லாத்தையும் வித்திட்டு நடுத்தெருவிலே நிற்பீங்கனு தெரிஞ்சிருக்கு. குடியிருக்கிற வீட்டைக் கூட வித்துத் திங்கத் தயாரா இருப்பீங்கன்னு தெரிஞ்சிருக்கு.''

அவள் குரலில் சூடு ஏறிற்று: துணிந்தாயிற்று. சொல்லவேண்டியதை என்றைக்காவது சொல்லித்தானே ஆக வேண்டும்? ''பி.ஈ. வரை படிக்க வச்சிருக்கிருரே என்ன பிரயோசனம். ஒரு ஆண் பிள்ளையாய் முதுகை நிமிர்த்தி உழைக்கப் பயப்பட்டுகிட்டு இப்ப வீட்டையும் விற்கப் புறப்பட்டா எப்படி? குடியிருக்கிற இடத்தைக்கூட விற்று விட்டு நிற்க இடமில்லாம தவிக்கக் கூடாதேங்கறதுக்காக....இப்ப அவர் இங்கே காவலாய் சமாதி கொண்டிருக்கிருர்.''

அவள் இப்படி என்றைக்கும் பேசியதே இல்லை. அவன் திகைத்துப் போய் உட்கார்ந்திருந்தான். பிறகு எழுந்தான். மிகவும் பக்தியோடு அவரது சமாதியறையை நோக்கி நடந்தான்.

அவன் வாழ்க்கையில் ஒரு நல்ல திருப்பம் ஏற்படப் போகிறது என்பதை அவன் முகம் காட்டிற்று. அவள் கண்களைத் துடைத்துக்கொண்டாள்.

ஞாண

ஜெபம் பவதாரிணி

'குமுதம்' நடத்தும் உலகச் சிறு கதைப் போட்டியில் இலங்கையில் இருந்து நான் கலந்து கொள்கிறேன். கதை, யாழ்ப்பாணத்தில் உள்ள கிராமமொன்றைச் சுற்றி வலம் வருவதால், பேச்சு வழக்கு யாழ்ப்பாணத்துப் பேச்சு வழக்கை அடிப்படையாகக் கொண்டுள்ளது. படித்துப் புரிந்துகொள்வதற்குக் கஷ்டமாக இருக்குமென்று நினைக்கிறேன். உங்கள் திண்டாட்டத்தை இங்கிருந்தே மனக் கண்ணால் பார்த்து ரசிக்கிறேன். —ஜெபம்.பவதாரிணி

வீட்டுக்குள் நுழையப் போன ஞானம்— ஞானேஸ்வரி— அப்புவின் கோபமான குரலைக் கேட்டு வெளியிலேயே தயங்கி நின்றாள். ''இவள் ஞானம் எங்கே...? வரவர வீட்டிலை காணவே முடியறதில்லை...பொம்பிளைப் பிள்ளையெண்டால் அடக்கமா வீட்டுக்குள்ளை இருக்க வேணும்...''

அம்மா அப்புவை அடக்கும் தொனியில் கூறுகிறாள். ''சும்மா ஏன் இப்ப கத்துறியள்? அவள் ஒண்டும் ஊருலாத்தப் போகல்லை... நெசவுக்குத்தான் போயிருக்கிறாள்...இப்ப வந்திடுவாள்..''

அப்பு அவ்வளவு சுலபத்தில் சமாதானமடைந்து போபவராக இல்லை. ''நெசவுக்குப் போனா நேரகாலத்தோடை வீட்டுக்கு வரவேண்டாமே...? ஆறு மணியாகப் போகுது...இன்னும் இவளைக் காணேல்லை...பார்க்கிற அட்கள் என்னத்தை நினைப்பினம்....? சின்னையன் பெட்டையைக் கொண்டு உழைப்பிச்சுச் சாப்பிடுறான் என்று ஊரே சிரிக்குது...'' அவள் நெசவுக்குப் போவதைப் பற்றி யாரோ அப்புவிடம் கண்டித்திருக்கிறார்கள் என்று நினைத்துக் கொண்டாள்.

''இருபத்தஞ்சு வயதாகியும் பிள்ளையை இன்னும் வீட்டிலை வைச்சிருக்கினம் என்டு சிரிக்கிறது மட்டும் உங்கடை காதிலை விழேல்லையே?''— அம்மாவின் குரல் கூடாகவே ஒலிக்கிறது.

''அதுக்கு என்னை என்ன செய்யச் சொல்லுறாய்...? நானென்ன வர்ற மாப்பிள்ளைகளை படலையடியிலே நின்டு கலைக்கிறனே?''—அப்பு உரக்கக் கேட்டாலும் அவரது குரலின் சுருதி அடங்கியிருப்பது புரிந்தது.

''படலையடியில நின்டு கலைச்சாத்தானே...? ஒரு மாப்பிள்ளை எடுக்கிறதுக்கு ஒரு முயற்சியும் செய்யாம இருந்தா கலியாணம் நடக்குமே? நாலு இடத்துக்குப் போக வேணும்..அஞ்சு பத்து மனிதரைக் காணவேணும்... ஏதாவது நடக்கும். அதை விட்டுட்டு வீட்டுக்குள்ளை இருந்து கொண்டு நான் என்ன செய்ய...நான் என்ன செய்ய என்டு கொண்டு இருந்தா மாப்பிள்ளை ஓடிவந்து கையில விழுமனே...?''—அம்மா உஷ்ணமாகவே கேட்கிறாள். ஞானத்தின் கல்யாணப் பேச்சு வந்தாலே போதும், இப்படித்தான். வீட்டில் அம்மாவின் அதிகாரமும் பேச்சும் கொடிகட்டிப் பறக்கும். ஞானம் சலித்துக் கொண்டாள். எவ்வளவு நேரமென்றுதான் வாசலிலேயே நிற்பது? ஆனால் உள்ளே அவள் கல்யாணப் பேச்சு நடந்து கொண்டிருக்கும்போது, உள்ளே போகவும் முடியாது. அருகிலிருந்த தூணில் நகத்தால் கீறிக் கொண்டே நின்றாள்.

ரூபாய்
500
பரிசு பெறும்
இலங்கைக்
கதை

(மூன்றில் முதல் பகுதி)

''அறிவில்லாமல் பேசுருய் தங்கம்...கையில அஞ்சுசதக் காசில்லாம மாப்பிள்ளே எடுக்க வெளிக்கிட்டா பேயனெண்டு சொல்ல மாட்டாங்களே...?''

''காசில்லே... காசில்லே...? என்டு சொல்லிக்கொண்டிருந்தா கல்யாணம் நடக்குமே?... கடனே உடனேப் பட்டாவது பிள்ளேயை ஒருத்தன கையில பிடிச்சுக் குடுக்காமல் ஏலுமே...?''

''அதுதான் தம்பி வேலே யாயிட்டான்தானே...? இனிமேயென்ன கவலே...? வர்ற தையுக்குள்ளே ஒரு மாப்பிள்ளேயைப் பார்த்து முடிச்சிடலாம்...தம்பியும் ஓமெண்டால் மாத்துக்குமாரு செய்து வைச்சிடலாம்... அது சுகம்...'' அப்பு குரலில் உற்சாகம் கொப்புளிக்கக் கூறினர். வெளியே இருள் சூழ்ந்து வருவதைப் பார்த்துவிட்டு ஞானம் அப்போதுதான் வருபவளேப்போல உள்ளே சென்ருள்.

''வா பிள்ளே...இப்பதான் வர்றியோ...? கொஞ்சம் வெள்ளன வரக்கூடாதோ...? இருட்டானப் பிறகு வர்றது பார்க்க அவ்வளவு அழகாயில்லே...'' சொற்கள் கடுமையாக இருந்தாலும் குரல் தணிவாக ஒலிக்கிறது. அப்பு எப்போதும் இப்படித்தான். அவள் இல்லாத நேரங்களில்தான் அவருடைய கோபமும், அதிகாரமும். அவளேக் கண்டால் தணிந்து போய் விடுவார்.

''இல்லே அப்பு...இன்டைக்கு ரெண்டு பிள்ளேகள் புதுசா வந்தவையள்... அவையளுக்குப் பழக்கிக் குடுத்தாப்போல நேரமாச்சுது.'' அவளும் மெதுவாகவே சொன்னுள்.

''என்னமோ...இனிமே நீ வேலேக்குப் போறது அவ்வளவு நல்லாயில்லே...வயது வந்த பிள்ளேயைக் கொண்டு சம்பாதிச்சுச் சாப்பிடுருன் என்டுதானே ஊர்ச்சனம் என்னேப் பற்றிச் சொல்லும்? தம்பியும் வேலேயாயிட்டான்...இனிமே அவன் பார்ப்பான்தானே? என்ன...நான் சொல்லுறது?''—அப்பு அபிப்பிராயம் கேட்பது போலத் தம் கருத்தைச் சொல்லி விட்டார்.

இவ்வளவு நாளும் அவள் வேலே செய்தபோது தெரியாத வயது, இப்போதுதான் அவருக்குத் தெரிந்திருக்கிறது. ஞானம் தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டாள். ஆனுல் அப்புவையும் குறை சொல்ல முடியாது. இந்த 68 வருஷமாக அவர், அவர்




களுக்காகத் தானே உழைத்திருக்கிறார்? இப்போது வயது போய், உடல் நலம் குன்றிய நிலையில் அவள் வேலைக்குப் போவதையோ, உழைத்துத் தருவதையோ வேண்டாமென்று சொல்ல முடியுமா? இரண்டு மாதங்களுக்கு முன்புதான் அவள் தம்பி தவராஜன் ஒரு வேலையில் சேர்ந்தான். அவன் கொழும்பிலே இருந்தாலும்கூட, ஒவ்வொரு 23'ம் திகதியும் டாணென்று முந்நூறு ரூபா மணியோடரில் வந்துவிடும். அவள் நெசவுக்குப் போவதனால் மிஞ்சி மிஞ்சிப் போனால் நூறு ரூபாதான் கிடைக்கும். தம்பி அனுப்பும் பணத்துடன் ஒரு காய்கறித் தோட்டமும், நூறு கோழிகளும், ஒரு தையல் மெஷினும் சேர்ந்து சம்பாதித்துத் தருவதையும் சேர்ந்தால் ஐந்து பேர் கொண்ட அந்தக் குடும்ப வண்டி ஓடப் போதாதா என்ன? அந்த நிலையில் அவள் நெசவுக்குப் போவதனால் கிடைக்கும் நூறு ரூபா முக்கியத்துவம் அற்றதுதானே?

அவள் பேசாமல் நிற்பதைப் பார்த்ததும் அப்பு அருகில் வந்து அன்பும், ஆதரவுமாகச் சொல்கிறார்: "எப்பிடியும் வர்ற தையுக்குள்ளை உன்ரை கல்யாணத்தை முடிச்சிட வேணுமெண்டு கொம்மா விரும்புறா... இன்மை... கல்யாணப் பேச்செண்டு வெளிக்கிடேக்குள்ளை பொம்பிளை இரவு பகலா நெசவுக்குப் போய் வர்றது என்டு ஆக்கள் கதைக்கிறதுக்கு நாங்கள் இடம் வைக்கப்படாதுதானே பிள்ளை? உன்ரை நன்மைக்குத்தான் சொல்லுறன்... பார்க்கிறதுக்கு அது அவ்வளவு நல்லா இருக்காது... இல்லையோ?"

ஞானம் நிமிர்ந்து தந்தையைப் பார்த்தாள். "இல்லையப்பு... உங்கடை விருப்பத்துக்கு விரோதமா நான் ஒன்டும் செய்யமாட்டன்... நான் இனிமே நெசவுக்குப் போகல்லை. நாளைக்கு ரெத்தினட்டைச் சொல்லி அனுப்பறன்..." அவளது பதிலால் உண்டான திருப்தி அவர் முகத்தில் பிரகாசிக்கிறது.

ஞானம் சோர்ந்திருக்கும் விரல்களைப் பின்னிக்கொண்டு சமையலறைக்குச் சென்றாள். "என்னவாம் கொப்பர்...?"—அம்மா தேநீரைக் கோப்பையில் ஊற்றி நீட்டியவாறே கேட்டாள். தேநீரை ஒரு தடவை உறிஞ்சிவிட்டு ஞானம் அம்மாவைப் பார்த்தாள். பிறகு மெதுவான குரலில் சொன்னாள்: "நெசவுக்கு இனிமேல் போகவேண்டாமாம்..."



குறைந்தபட்சம் ஆறு வித்தியாசங்கள் (36'ம் பக்கம்)

உருப்படியான காரியம்



சேலம் சிவாஜி நகரில் உள்ள வித்தியா மந்திர் பள்ளியில் ஒரு வகுப்பில் 40 பிள்ளைகள் உட்காருவதற்கு ஏற்றவாறு (ஒரு பெஞ்சிற்கு நான்கு பிள்ளைகள் வீதம்) 10 டெஸ்க் டேபிள்கள் அமைக்கும் முயற்சி இறைவன் திருவருளால் இனிது நிறைவேறியது.

மோசனை கூறிய மாணவர்—டி. சுந்தரமூர்த்தி.

''அதுக்கு நீ என்ன சொன் னாய்...?''

''நான் என்னத்தைச் சொல் லுறது? ஓமெண்டிட்டன்...—''ஞானம் அம்மாவைப் பார்க்கப் பயந்து தேநீரைப் பார்த்தவாறு சொன்னாள்.

''அவருக்குத்தான் விசரெண் டால் உனக்குமே...?''— அம்மாவின் கேள்வி சூடாக வந்தது. ஞானம் கீழே சிந்திய தேநீரை இடது கை ஆள்காட்டி விரலால் கோடுகளாக இழுத்துக் கொண்டு பேசாமல் இருந்தாள்.

''நூறு ரூபாயெண்டால் சும்மாவே...? புதுக்கப் புதுக்க வண் ணன் பறைதட்டி வெளுப்பான் என்டு கொப்பர் தம்பிக்கு வேலை கிடைச்ச உடனே துள்ளுறார். அந்த நூறு ரூபாவை வச்சு என்னென்ன எல்லாம் செய்யலாம்? சரி, வேறை ஒண்டுக்கும் நான் வேண்டாம் என்டால் உன்ரை பேரிலை பாங்கில சேர்க்கவும் கூடாதே..? கொப்பு ஆடுறார்...நீங்கள் தாளம் போடுங்கோ...'' அம்மா திட்டிக் கொண்டே பிட்டுக்கு மாவைக் குழைக் கத் தொடங்கினாள்.

''என்னை என்னம்மா செய் யச் சொல்லுறீங்கள்? அப்பு சொல் லேக்குள்ளை மறுக்க ஏலுமே...?'' ஞானம் மெதுவாகக் கேட்டாள்.

அம்மா ஒன்றும் பேசவில்லை. ஞானம் எழுந்து வெளியே வந்தாள். தென்னை மரத்தின் கீழேயிருந்த வாளித் தண்ணீரில் கோப்பையைக் கழுவி, சமை யலறையில் வைத்துவிட்டுத் திரும்பிய வள், ஏதோ நினைத்துக் கொண்ட வளாகக் கேட்டாள்.

''ஏனம்மா...ராசன் தேத் தண்ணி குடிச்சிட்டானே...?''

''அவன் இன்னும் நித்திரை யாலே எழும்பேல்லை. விளக்கு வைக்கிற நேரமாயிட்டுது...அவனை எழுப்பித் தேத்தண்ணியைக் குடுத்திட்டு வா.'' ஞானம் அம்மாவிடமிருந்து தேநீரை வாங்கிக்கொண்டு அறைக்குள் வந்தாள். ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த செல்வ ராசனின் அருகே தேநீர்க் கோப்பையை வைத்துவிட்டு, மண்டியிட்டு அமர்ந்த வாறே அவனை எழுப்பினாள்.

''ராசன்...ராசன்...எழும் பையா...இன்னும் என்ன நித்திரை?

விளக்கு வைக்கிற நேரமாயிட்டுது... எழும்பு...ராசன்..." மெதுவாக அவனை உலுக்கி எழுப்பினள்.

"ஆ...வ்..." கொட்டாவி விட்டபடியே எழுந்து உட்கார்ந்தான் ராசன். உறக்கத்தின் ஆழ்ந்த தன்மையைக் காட்டுவது போலக் கண்கள் சிவந்து கிடந்தன. வலது கன்னத்தில் குறுக்கும் நெடுக்குமாகப் பாய் பட்ட அடையாளங்கள்.

"ஒரு பக்கமாகவே படுத்தனீ...? பார், கன்னமெல்லாம் எப்பிடிச் சிவந்து போச்சென்டு...?" ஞானம் ஆதரவாக அவன் கன்னத்தை வருடிக் கொடுத்தாள்.

"அக்கா, எனக்கு பை பின்னுற வயர் வாங்கி வந்திங்களோ?" ராசன் தேநீரை உறிஞ்சிக் கொண்டு கேட்டான்.

"இல்லை ராசா...பூரணியக்கா சொன்னவ வயர் முடிஞ்சு போயிட்டுதாம்...இரவுக்குள்ளை வந்திருமாம்..எப்பிடியும் தான் நாளைக்குக் காலையில அனுப்பி விடுறனம் என்டு. பின்னே வந்திட்டேன்..." அவள் பரிவோடு சொன்னாள். ராசன் தேநீர்க் கோப்பையைக் கீழே வைத்துவிட்டுக் கைகளை உயரத் தூக்கினான்.

"அக்கா, என்னை முன் பக்கம் கூட்டிக்கொண்டு போங்கோ..."

ஞானம் எழுந்து, அவனையும் மெதுவாகத் தூக்கி நிறுத்தினாள். அவன் தனது இரண்டு கைகளாலும் அவளது இடையைச் சுற்றி அணைத்துக் கொண்டான். அவள் அவனது தோள்களைப் பிடித்தவாறே மெதுவாக நடத்திச் சென்றாள். அவன் சூம்பிப் போயிருந்த வலது காலை மெதுவாக ஊன்றி, சோர்ந்து தொங்கும் இடது காலை இழுத்தவாறே அவளோடு சேர்ந்து மெதுவாக நடந்து வாசல்புறம் சென்றான். வாசல் திண்ணையில் அவனை உட்கார வைத்துவிட்டு, அவது முகத்தைக் கழுவி, தலையை வாரி விட்டாள். குடுவையிலிருந்த திருநீற்றை எடுத்து வந்து பூசிவிட்டாள்.

"சாமியை நல்லாக் கும்பிடு ராசன்...ஒரு நல்ல வாழ்க்கையைக் காட்டச் சொல்லி..."

"நீங்கள் இருக்கிற வரைக்கும் எனக்கென்னக்கா குறை? நான் எப்பிடிச் சாமி கும்பிடப் போறன் தெரியுமே...? கடவுளே...எங்களட அக்காவுக்கு கெதியிலை கல்யாணம் நடக்க வேணும்...அக்கா எப்பவும் சந்தோஷமா இருக்க வேணும் என்டுதான்..." அவன் சிரித்தான். அவள் முகத்திலும் சிரிப்புப் பளிச்சிட்டது.

"போடா...வாய்க்கு மட்டும் குறைச்சலில்லை..." செல்லமாக அவன் தலையை ஆட்டிவிட்டு உள்ளே சென்றாள்.

டிரிங்...ட்ரிங்... .. ..டிரிங்...படலையருகே சைக்கிள் மணியோசை கேட்டது. திண்ணையில் பை பின்னிக் கொண்டிருந்த செல்வராசன் தலையை நிமிர்த்திப் பார்த்தான். "ஆரது...? தபால்காரரோ...?"

"இல்லை ராசன்...அது நான்..." படலையைத் திறந்து கொண்டு குலேந்திரன் உள்ளே வந்தான். செல்வராசனின் மாமன் மகன்—தங்கம்மாவின் அண்ணன் மகன்.

"குலம் அத்தானே...? வாங்கோ...வாங்கோ...என்ன விசேஷம்..." செல்வராசன் புன்னகையுடன் உற்சாகமாக வரவேற்றான்.

"விசேஷம் ஒன்டுமில்லை...தவம் வந்துட்டானோ என்டு பார்க்க வந்தனான்...இன்னும் வரேல்லையோ?" என்று கேட்டபடி திண்ணையில் ராசனின் அருகே உட்கார்ந்து கொள்கிறான் குலம்.

"அண்ணை நாளைக்கு இரவுதான் வருவாராம்...நேற்றுத் தவால் வந்தது..." ராசன் சிரித்துக்கொண்டே சொன்னான்.

"பையெல்லாம் நல்ல வடிவா இருக்குது...." சொல்லியபடியே, ராசனின் கையிலிருந்த பையை வாங்கிப் பார்த்தான்.

ஆறு வித்தியாசங்கள் விடை



1. பூந்தோட்டியில் பூ
2. மரம்
3. நாயின் வால்
4. மாடி ஜன்னல்
5. சுவரில் பதித்த கற்கள்
6. தபால்காரர் கோட்

''அக்காதான் சொல்லித் தந்தவ.... ஒரு பை இருபத்து மூன்டு ரூபா. இதெல்லாம் பின்னிக் கடைக்குக் குடுக்கிறனான்....'' ராசன் பெருமையுடன் சொன்னான்.

''வீட்டிலே ஒருத்தரும் இல்லையோ....?'' கேட்டுக் கொண்டே குலம், வீட்டின் உட்புறத்தைத் துழாவினான்.

''அப்புவும் அம்மாவும் சந்தைக்குப் போயிட்டினம்...நேற்றுத்தான் காய்கறி ஆய்ஞ்சவையள்... வர்றதுக்கு ரெண்டு, மூன்டு மணியாகும்...சின்னக்கா பள்ளிக்கூடத்துக்குப் போயிட்டா...''

''அப்ப வீட்டிலே ஒருத்தரும் இல்லை.....''

''ஏனில்லை....? பெரியக்கா இருக்கிறா.'' ராசன் முடிக்கு முன்பே ஞானத்தின் குரல் கேட்கிறது.

''ஆரோடை ராசன் கதைச்சுக்........'' குலத்தைப் பார்த்ததும் அவள் கேள்வி பாதியிலேயே நின்றுவிடுகிறது. தலையைக் குனிந்து கொண்டு கதவுக்குப் பின்னால் மறைந்து கொள்கிறாள்.

''உள்ளே..வரலாமோ..?'' அவன் அவளையே பார்த்தபடி கேட்டான். அவள் அவனுக்கு வழி விடுபவள் போல நகர்ந்து கொண்டாள். அவன் உள்ளே சென்றான். அவள் கதவைப் பிடித்தபடி தலையைக் குனிந்து கொண்டு நின்றாள்.

''ஏன் ராசன்.... வீட்டுக்கு வந்தவையளை இருங்கோ என்டு கூடச் சொல்ல மாட்டினமே?'' வெளியே இருந்த ராசனை இழுத்துப் பேசினான் அவன்.

''இருங்கோ....'' ஒற்றைச் சொல்லாய் அவள் பதில் உதிர்ந்தது. அவன் உட்கார்ந்து கொண்டான். அவள் இன்னும் கதவைப் பிடித்தபடியே நின்று கொண்டிருந்தாள்.

''ஏன்...நீ...ங்களும் இருக்கலாமே...?''

அவள் அப்பொழுதும் பேசாமலேயே நின்றாள்.

''என்ன விஷயத்துக்கு வந்திருக்கிறீங்கள் என்டாவது கேட்கக் கூடாதோ?'' அவன் அவளை விடுவதாக இல்லை.

''தம்பி கொழும்பிலே இருந்து இன்னும் வரேல்லை...'' அவள் மெது



கண்மூடித்தனம்

வேலைதேடி வந்தவர்: சார், நீங்க எந்த வேலை கொடுத்தாலும் கண்ணை மூடிக்கொண்டு செய்வேன்?

முதலாளி: இங்கு, வாட்ச்மேன் வேலைதான் காலியா இருக்கு. அது உனக்குச் சரிப்பட்டு வராது.

—அசனல்லி மணியன்

வாகப் பேசினாள். அவள் பேசியதனால் ஏற்பட்ட திருப்தி அவன் முகத்தில் புன்னகையாக விரிந்தது. அந்தப் புன்னகையுடனே சொன்னான்.

''தெரியும்...''

அவள் ஒரு நிமிடம் பேசாமல் இருந்தாள். பிறகு ''அப்புவும், அம்மாவும் வீட்டிலே இல்லை... சந்தைக்குப் போயிருக்கினம்...'' என்றாள்.

''அதுவும் தெரியும்...''

''ரெத்தினாவும் பள்ளிக்குப் போயிட்டாள்...''

அவன் இதழ்களில் ஒரு இளநகையுடன் சொன்னான். ''மாமாவும், மாமியும் சந்தைக்குப் போறதைப் பாத்துட்டு, வீட்டிலே ஒருத்தரும் இருக்க மாட்டினம் என்டு தெரிஞ்சுதான் வந்தனான்...''

அவள் சடாரென்று அவனை நிமிர்ந்து பார்த்தாள். அவன் அவள் பார்வையை ஊடுருவியவாறே சொன்னான்: ''உம்மைப் பார்க்கிறதுக்குத்தான் வந்தனான்...''

எந்த வேகத்தில் அவள் தலை நிமிர்ந்ததோ, அதைவிட அதிகமான வேகத்தில் கவிழ்ந்து கொண்டது.

''ஏன் ஞானம்...நான் உம்மைப் பார்க்க வரக்கூடாதே...?'' அவன் மென்மையான—இதயத்தைத் தொடும் கனிவான குரலில் கேட்டான். அவள் பேசவில்லை. உடலெல்லாம் வியர்த்தது. கால்கள் நிற்க முடியாமல் நடுங்கின. கதவை இறுகப் பற்றிக் கொண்டாள். அவன் சில நிமிஷங்கள் மௌனமாக இருந்தான். பிறகு ''ஏன்

இப்ப நாலைஞ்சு நாளா நெசவுக்கு போறேல்லே...?'' என்று கேட்டான். அவளுக்கு இன்னும் நடுக்கம் நின்ற பாடில்லை. இதயம் வேகமாக அடித்துக் கொண்டது. நாக்கு அசைய மறுத்தாற் போன்ற பிரமை.

''ஞானு...உம்மைத்தான்.. ஏன் இப்ப நெசவுக்குப் போறேல்லே..''

'ஞானு'—எவ்வளவு உரிமையுடன், எவ்வளவு அழகாக ஞானு என்று அழைக்கிறான்? மனம் முழுவதிலும் ஏதோ ஒரு நிறைவு ஏற்படுவதை அவளால் உணர முடிந்தது.

''அப்பு போகவேண்டாம் என்டு சொன்னவர்...''—அவள் தலையை நிமிர்த்தாமலேயே சொன்னாள்.

''அப்பிடியே...?'' அவன் ஒரு கணம் யோசனையில் மூழ்கினான். பிறகு, ''என்னவோ...நீர் போகாததாலே எனக்குத்தான் நட்டம்,'' என்றான் சிரித்துக்கொண்டே.

ஞானம் புரியாத பார்வையுடன் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

அவன் தலையைக் குனிந்தவாறு விரல்களைக் கோத்துக் கொண்டிருந்தான். ''நீர் நெசவுக்குப் போகேக்குள்ளை எல்லாம் உம்மைப் பார்க்கிறதுக்காக பின்னேரம் நேரத்தோடை வீட்டுக்கு வாறனான்...இப்ப நாலைஞ்சு நாளா உம்மைப் பார்க்க முடியேல்லை... பார்க்காமல் என்னால இருக்கவும் ஏலேல்லை...அதுதான் வந்தனான்...''

ஞானம் உடலைச் சிலிர்த்துக் கொண்டாள். அவனும் ஒவ்வொரு நாளும் அவளைப் பார்க்கிறானா? அவனது வீட்டைக் கடந்து செல்லும்போதெல்லாம் அவளுள் இனம் தெரியாத ஒரு படபடப்பு எழுந்து அடங்கும். தூரத்தில் வரும்பொழுதே வீட்டு வராந்தாவில் அவன் நிற்பதைப் பார்த்துவிட்டுத் தலையைக் குனிந்தாளானால், அந்த வீட்டைக் கடக்கும் வரை தலை நிமிராது.

அவனுடைய பேச்சு, பார்வை, சிரிப்பு எல்லாமே எதையோ ஒன்றை அவளுக்குத் தெரியப்படுத்திக் கொண்டிருந்தன. மனத்தினுள் எழுந்த பரவசம் வியர்வையாகி, உடலில் கோலமிட்டது.

''கொஞ்சம் தண்ணி தர முடியுமே...?''—அவன் புன்சிரிப்போடு கேட்டான். அவன் வந்து இவ்வளவு நேரமாகியும் ஒன்றுமே கொடுக்காத தன் அறிவீனத்தைக் கடிந்தவாறே அவள் வேகமாகச் சமையலறையை நோக்கி நடந்தாள். அவன் எழுந்து சுவரில் தொங்கிக் கொண்டிருந்த படங்களைப் பார்த்துக் கொண்டிருந்தான். நிமிஷங்கள் வேகமாகப் பறந்து சென்றன.

''இந்தாங்கோ...'' அவன் திரும்பிப் பார்த்தான். அவள் கையில் தேநீர்த் தட்டுடன் நின்று கொண்டிருந்தாள்.

''ஓ...தண்ணி கேட்டவுடனே தேத்தண்ணியே வந்திட்டுதா?'' சிரித்தவன் தொடர்ந்தான். ''ஆனால் நான் இதை எடுக்கமாட்டன்...''

அவள் திகைப்புடன் நிமிர்ந்து பார்த்தாள்.

''என்ரை கேள்வி யொன்டுக்குப் பதில் சொல்லுறவரைக்கும் நான் இதை எடுக்கமாட்டன்...என்ன ...சொல்லுறீரே...?'' அவன் கேள்விக் குறியுடன் நிறுத்தினான்,

நீலகிரிக் குழப்பம்

சென்னை செல்லும் நீலகிரி எக்ஸ்பிரஸுக்கு, கோயம்புத்தூரில் இரண்டு அடுக்கு மூன்றடுக்கு தூங்கும் வசதியுள்ள பெட்டிகளை இணைக்கிறார்கள். இதை ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கும்பொழுது, இப்பெட்டிகள் வண்டியின் பின்புறம் (Rear) இணைக்கப்படுவதாகக் கூறுகிறார்கள்.

ஆனால் மேட்டுப்பாளையத்திலிருந்து கோவை வரும் நீலகிரி எக்ஸ்பிரஸ், கோவை ஸ்டேஷனுக்குள் நுழைந்த வழியாகவே திரும்பவும் சென்னைக்கு தனது பிரயாணத்தைத் துவக்குகிறது. இதைப் பலர், அதிலும் கோவைக்குப் புதிதாக வருகிறவர்கள் அறிவதில்லை. அதோடு இப்பெட்டிகளை வந்த ரயிலோடு இணைக்கும் இஞ்சின் வண்டி செல்லும்வரை அதே இடத்திலேயே நின்று பிரியா விடை கொடுக்கிறது! எனவே குழப்பம் அதிகமாகி, இடத்திற்கு ரிசர்வ் செய்த பிரயாணிகள், பிளாட்பாரத்தின் முன்னும், பின்னும் ஓடுகின்றனர்.

இதைத் தவிர்க்க ரயில்வே நிர்வாகத்தினர் தங்களது அறிவிப்பைச் சற்று தெளிவாக்கலாமே?

—எஸ். ரங்கநாதன்

நீங்கள் முதல் தேத்தண்ணியை எடுங்கோ...'' அவள் மெலிந்த குரலில் சொன்னாள்.

''இல்லே...நீர் சொன்னாத்தான் எடுப்பன்...'' அவன் தீவிரமாக மறுத்தான். அவள், அவன் என்ன கேட்கப் போகிறானோ என்ற தவிப்புடன் நின்று கொண்டிருந்தாள். அவன் நடந்து வந்து அவளுக்கு எதிரே நின்று கொண்டான்.

''எனக்கு சுத்தி வளைச்சுக் கதைக்கத் தெரியாது...நேரவே கேக்கிறன்...என்னை உமக்குப் பிடிச்சிருக்கா?''

அவள் ஒரு கணம் அதிர்ந்து போனாள். தரை பிளந்து தான் எங்கேயோ பாதாளத்துக்குள் போவதைப் போன்ற உணர்ச்சி. நடுங்கும் கரங்கள் சில்லிட்டுப் போயின. பேசவே நா எழாமல் அவனைப் பார்த்தாள். அவன், கண்களில் ஒரு தவிப்புடன் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவள் கைகளின் நடுக்கத்தைத் தவிர்க்க டிரேயைக் கீழே வைத்துவிட்டு நாற்காலியை இறுகப் பிடித்துக் கொண்டாள். அவன் மெதுவாக வந்து அவள் கைகளைப் பிடித்துக் கொண்டான்.

''விடுங்கோ...கையை விடுங்கோ...''—அவள் திமிற முயன்றாள். அவன் விடவில்லை. இன்னும் உறுதியாகப் பிடித்துக் கொண்டான்.

''நீர் சொல்லுறவரைக்கும் நான் விடப் போறதில்லை... ஓமோ இல்லேயோ என்டு சொல்லும்...நான் விட்டிடுறன்...''

இப்போது அவள் கைகளை விடுவிக்க எந்த முயற்சியும் எடுத்துக் கொள்ளாமலேயே பேசாமல் நின்றாள். ''ஞானு, என்ன பேசாமல் நிக்கிறீர்...? மௌனம் சம்மதத்திற்கு அறிகுறி என்டு? நான் எடுக்கட்டுமோ இல்லாட்டி...'' அவன் முடிக்கவில்லை.

அவள் கண்களிலிருந்து உதிர்ந்த கண்ணீர்த் துளி ஒன்று அவன் கையில் விழுந்து தெறித்தது. அவன் நெருப்பைத் தொட்டவன்போல கைகளை எடுத்துக் கொண்டான். முகத்தில் அதிர்ச்சியும், ஏமாற்றமும் நிரம்பியிருந்தன.

(தொடரும்)

பருராங்கத

சனிக்கிழமை 12'ம் தேதி அடித்த புயலால் திருச்சி முழுவதும் பாதிக்கப்பட்டு பல இடங்களில் மரங்கள் வீழ்த்தப்பட்டிருந்தன. மின்சார சப்ளை துண்டிக்கப்பட்டு அன்று இரவு இருட்டில் தடுமாறிக் கொண்டிருந்தோம். மறுநாள் மதியம் 2 மணி அளவில் முன்னுள் புயலின் சேதம் பற்றிக் கூடிப் பேசிக் கொண்டு அடுத்து வரும் புயலைப்பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் பொழுது அம்மா மண்டபம் காவிரி பெருகி வழிகிறது என்று ஜனங்கள் வேடிக்கை பார்க்க சாரி சாரியாகச் சென்றுர்கள். நானும் இதில் சேர்ந்து சென்று பார்த்தேன். உடைப்பெடுத்த (10 அடி அகலம்) இடத்தை ஜனங்கள் முடிந்தவரை அடைக்கப் பாடுபட்டார்கள். ஆனுல் போதுமான கூவிகள் இல்லாததால் பலனளிக்கவில்லை. நீர்ப் பெருக்கு தெருவெல்லாம் வழிந்தோடிக் கரைக்கு அருகாமையிலுள்ள இடமெல்லாம் நிரம்ப ஆரம்பித்தது.

குடிசைவாசிகள் தங்கள் தட்டு முட்டுச் சாமான்களுடன் ஊரிலுள்ள பழைய கால கல் மண்டபங்களின் மேல் தளத்தில் பாதுகாப்பு தேடிக் கொண்டார்கள். ஆனுல் நாங்கள் இதைச் சாதாரணமாக எடுத்துக் கொண்டோம். வேடிக்கை பார்க்கும் விஷயமாகவே கருதி ஒரு நடவடிக்கையும் எடுக்காமல் இருந்தோம்.

மலட்டாற்று வெள்ளம்

மாலை 6.00 மணி அளவில் அருகிலிருக்கும் மலட்டாறில் நீர்மட்டம் விறுவிறு என்று ஏறித் தரை மட்டத்தையும் தாண்டி, காவேரி நீர் பெருக்குடன் சேர்ந்து கொண்டது. நாங்கள் குடியிருக்கும் பகுதிக்கு அடுத்த அரை மணி நேரத்தில் வர ஆரம்பித்தது.

படிகள் மறைந்தன


எங்கள் வீடு மூன்று அடி உயரத்தில் கட்டப்பட்டிருந்ததால் நாங்கள் கவலைப்படாமலிருந்தோம். சிறிது நேரத்தில் வீட்டு வாசற்படிக்கட்டு ஒன்று ஒன்ருக மறைய ஆரம்பித்தது. மேல்படிக்கட்டு மறைந்தவுடன்தான் எனக்கு ஆபத்தின் முழு உருவம் தெரிய ஆரம்பித்தது. அப்பொழுதும் இது இத்துடன் நின்றுவிடும் என்று ஏமாந்திருந்தேன். என் மனைவி அதுவரை என்னை எச்சரித்தபடியே இருந்தவள் போர்க்கோலம் எடுத்து விட்டாள். கீழே இருந்த சில சாமான்கள் துணி மணிகள் எல்லாவற்றையும் பரணில் ஏற்றினேம்.

சிலர் தங்கள் அலட்சிய மனப்பான்மையால் நெல் மூட்டைகள் மளிகைச் சாமான்கள் பாத்திரங்கள் (எவர் சில்வர்) ஆகியவைகளைக் கீழேயே விட்டு வைத்திருந்தார்கள். அவைகள் வெள்ளத்தில் மிதந்து சென்ற காட்சி வருத்தமாக இருந்தது.

மின்சார இணைப்பு, புயலால் துண்டிக்கப்பட்டு விட்டதால்,—அமாவாசைக்கு இரண்டு நாள் பிறகாதலால்—இருட்டில் தடுமாறி மொட்டைமாடிக்குச் சென்றேம். எல்லார் வீட்டிலும் இதே நிலைதான். எல்லோரும் மாடியிலிருந்தவாறே ஒரு வீட்டுடன் இன்னொரு வீட்டவர் பேசிக்கொண்டோம்—கவலையை மறக்க. நல்ல குளிர். அருகாமையில் இருந்த குழந்தைகள், உடல் நலம் குன்றியவர்கள், வயது முதிர்ந்தவர்கள் எல்



நாகபட்டினம் பஸ் நிலையம்



லாரையும் மாடிக்கு ஏற்றுவதற்குள்
ாதும் போதுமென்ருகிவிட்டது.

ரண்டடித் தண்ணீரில் விடிய விடிய

நள்ளிரவிற்குப் பின் 2 மணி ளவில் திடீரென்று மழை கொட்ட ரம்பித்தது. எல்லோரும் அலறிப் டைத்துக்கொண்டு கீழே இறங்கி னோம். இறங்கியதும், வீட்டுக்குள் ரண்டு அடி தண்ணீர் இருப்பதைக் ண்டோம். அதிலேயே விடிய டிய நின்று கொண்டிருந்தோம்.

எங்களைவிட தாழ்வான பகுதி லுள்ளோர் 5 அடி தண்ணீரில் கஷ்டப் ட்டார்கள். குடிசைகள் தண்ணீரில் டிந்து விழுந்துவிட்டன. சிக்கிய ால்நடைகள் பிணமாக இருந்தன.

காலையில் தண்ணீரின் வேகம் றைந்து வெள்ளம் வடிய ஆரம்பித் து. காலை 10 மணி வாக்கில் வீட்டு நீர் டிந்து விட்டது. ஆனால் வெள்ளம் வடிந் ும் வீட்டுக்குள் இருந்து சேற்றை நீக்க ராம்ப சிரமப்பட்டோம். அடுத்த நாள் ாலை தான் தண்ணீர் முழுக்க வடிந்தது.

இரண்டு மணி நேரம் ஆச் ாசப்படுத்திக் கொண்டிருக்கும்போதே ரு கும்பல் பவானி சாகர் அணை டைந்து வெள்ளம் திருச் ியை நெருங்கிக் கொண்டிருக்கிறது, இன்னும் 4 மணி நேரத்தில் ஸ்ரீரங்கம் வந்து விடும் என்று சொல்லி ஓடிக் கொண்டே இருந்தார்கள். இதற்கிடையில் மற்ருெரு கும்பல் காவேரி மேம்பாலமே உடைந்து நீர்ப் பெருக்கு எடுத்து விட்டது என்று ஓடிக்கொண்டே சொன்னார்கள். சிலர் இந்த பீதிக்கு ஆளாகி வெளி யேறினர்கள். மற்றவர்கள் முந்தின அனு பவத்தால் வெள்ளம் வரட்டும் பார்க் கலாம் என்று உறுதியாக இருந்த இடத்திலேயே தங்கிவிட்டார்கள்.

சௌம்யநாராயணன்

சில நிமிஷங்களிலே இது பொய் வதந்தி என்று தெரிந்தது. போலீசார் ஒலி பெருக்கியின் மூலம் இதெல்லாம் வதந்தி என்று அறிவித்தவுடன், கொஞ்சம் கொஞ்ச மாக அடங்கி மக்கள் சாதாரண மாகத் தங்கள் அலுவல்களைக் கவனிக்க ஆரம்பித்தார்கள்.

அரசாங்கமும் தொண்டர் களும் முன் வந்து உணவும், உடையும் பாதுகாப்பும் கொடுத்து உதவி மக் களின் கஷ்டத்திற்கு வெகுவாக நிவாரண மளித்தார்கள்.

புகைப் படங்கள் : 'சி'; திருச்சி ஜமீல்



திருச்சி, தேசிய கல்லூரி வாசல்



திருச்சியில் வெள்ளம்


உங்கள் குழந்தைக்கு அதிக சக்தி
அளித்து முன்னணியில் நிறுத்திட
கோகோ சுவைமிக்க போர்ன்விடா



படிக்கக்கூடாத ஜோக்குகள்

ஜேம்ஸ் புதிதாய் ஒரு அலுவலகம் ஆரம்பித்தான். மூன்று அழகான இளம் பெண்களை வேலைக்கு அமர்த்திக் கொண்டான்.

வந்து பார்த்த ஒரு சிநேகிதன், "மூன்று பெண்களா! எப்படி வேலை நடக்கும்?" என்று ஆச்சரியப்பட்டான்.

"ஏன், என்ன கஷ்டம்? இரண்டு பேருக்கு லீவு கொடுத்து அனுப்பிவிடுவேன்," என்றான் ஜேம்ஸ்.

□□

மானேஜரின் மேஜை மீதிருந்த டம்ளரைக் கைத் தவறுதலாய்த் தள்ளிவிட்டாள் அந்த அழகிய ஸ்டெனோ. கண்ணில் நீர் தளும்ப, "இன்று காலையிலிருந்து நான் எதுவும் செய்தாலும் தப்பாகவே போகிறது," என்றாள்.

மானேஜர் ஆர்வத்துடன் அவள் கைகளைப் பிடித்துக் கொண்டார். "அப்படியா! ராத்திரி நாம் சினிமாவுக்குப் போகலாமா?"

□□

அடுத்த வீட்டில் இருந்த பெண் நல்ல அழகி. லில்லியின் கணவன் ஏதாவது ஒரு சாக்கில் அங்கே போவான். திரும்பி வர ரொம்ப நேரமாகும்.

ஒருமுறை அங்கே சென்றவன் லேசில் திரும்பவில்லை. லில்லி அங்கே போய்க் கதவைத் தட்டினாள். "ஜான்! எத்தனை நேரம் நீ வர!"

உள்ளேயிருந்து பெண்ணின் பதில் வந்தது. "இதோ பார், இப்படி அடிக்கடி குறுக்கிட்டிருந்தேயானால் இன்னும் நேரமாகும்."

இரண்டு ஹாலிவுட் பையன்கள் சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள்.

"உன் அப்பாவைக் காட்டிலும் என் அப்பா உசத்தி!"

"கிடையாது!"

"உன் அண்ணனைக் காட்டிலும் என் அண்ணன் உசத்தி!"

"இல்லை."

"உன் அம்மாவை விட என் அம்மா உசத்தி."

மற்றவன் தயங்கினான்: "இருக்கலாம்...ஏன்னா என் அப்பா கூட அதேதான் சொல்றார்."

□□

அது ஒரு தினுசான இடம். அவனருகே ஓர் அழகி வந்து அவன் மடியில் உட்கார்ந்து கொண்டு கொஞ்சினாள்.

"உன் வயசு என்ன?" என்றான் அவன்.

"பதிமூன்று," என்றாள் அவள்.

"ஆ!" என்று துள்ளியெழுந்தான் அவன். "மடியைவிட்டு இறங்கு!"

"சே! மூட நம்பிக்கை!" என்று அவள் சிணுங்கினாள்.

□□

லிஸ்ஸி மரணப் படுக்கையில் இருந்தாள். கணவனின் கையைப் பிடித்துக்கொண்டு, "என்னை மன்னியுங்க. உங்களுக்கு நான் பலமுறை துரோகம் செய்திருக்கிறேன். எனக்கு மன்னிப்பே கிடையாது," என்று விம்மினாள்.

"அலட்டிக்காதே லிஸ்ஸி. உனக்கு விஷம் வைத்தது நான்தான்," என்றான் அவன்.

ஞான

ஜெபம்

பவதாரிணி

யாழ்ப்பாணம். வளர்ந்துவிட்ட பெண் நெசவுக்குப் போகவேண்டாம் என்று ஞானத்தை நிறுத்திவிடுகிறார் தந்தை. அம்மாவுக்குச் சம்மதம் இல்லைதான். ஞானம் கால் முடமான, பிளாஸ்டிக் பை பின்னி சம்பாதிக்கிற தம்பி ராஜனைக் கவனித்துக் கொண்டு வீட்டில் இருக்கிறாள். பெரிய தம்பிக்குக் கொழும்பில் வேலை கிடைத்திருக்கிறது. அவன் வந்திருக்கிறானா என்று விசாரிக்கும் சாக்கில், ஞானத்தின் அத்தான் குலேந்திரன் ஞானத்தைப் பார்க்க வருகிறான். பெற்றோர் இல்லை. அவள் இதயம் படபடக்கிறது. அவள் தேனீர் கொடுக்க, ''என்னைப் பிடிக்கிறது என்று சொன்னால்தான் குடிப்பேன்,'' என்று குலம் அவள் கையைப் பிடித்து அழுத்துகிறான். அவள் அழுதுவிடுகிறாள்..

—

''என்னை உமக்குப் பிடிக்கேல்லை போலையிருக்கு...அதுதான் எப்பிடிச் சொல்லுறது என்டு தெரியாமல் அழுறிர்...என்ன? பரவாயில்லை... நீர் இப்பிடி விரும்பாமை இருக்கேக்குள்ளை நான் உம்மைக் கட்டாயப் படுத்தமாட்டன்...எனக்கு ஏமாத்தம் தான்..ஆனால் இப்பவாவது உம்மடைமனசு எனக்குத் தெரிஞ்சுதே...இல்லாட்டி இன்னும் இன்னும் கற்பனைக் கோட்டைகளைக் கட்டிக்கொண்டு இருந்திருப்பன்...''

ஒரு நீண்ட பெருமூச்சை விட்டவாறு அவன் அவளை நிமிர்ந்து பார்த்தான்.

''அப்ப..நான்வாறன். உம்முடைய மனசைப் புண்படுத்தியிருந்தனென்டால் மன்னிச்சுக் கொள்ளும்...'' அவன் கைகளைப் பின்னால் கட்டியவாறு, குனிந்த தலையுடன் திரும்பி நடந்தான்.

''நில்லுங்கோ...''—அழுகையின் கரகரப்புடன் ஒலித்த அவள் குரல் அவன் நடையைத் தடைப்படுத்தியது. பின்னால் திரும்பிப் பார்க்காமலே அவன் நின்றான்.



''நீங்க சொன்ன மாதிரி நான் நினைக்கேயில்லை...'' அவன் சட்டென்று திரும்பி அவளைப் பார்த்தான்.

''ஞானு...நீர் என்ன சொல்லுறீர்...?''—குரலில் ஆச்சரியமும், ஆர்வமும் கலந்திருந்தன.

''காச்சட்டையை ஒரு கையால பிடிச்சுக் கொண்டு கிட்டி விளையாடுற நாளிலேயிருந்து உங்களுக்கு எதுக்கெடுத்தாலும் அவசரம்தான்...'' அவள் அந்தக் கண்ணீர்க்கிடையிலும் சிரிக்கிறாள். அவன் இரண்டு எட்டில் அவள் முன் வந்து நிற்கிறான்.



''ஞானு...என்ன சொல்லுறீர்...? சொல்லுறதை விளக்கமாச் சொல்லும்...'' தவிப்பும் கெஞ்சலுமாக அவன் பரபரத்தான்.

''இவ்வளவெல்லாம் படிச்சுப் பெரிய உத்தியோகத்திலே இருக்கிறவருக்கு இதுகூடத் தெரியாட்டி பிறகென்ன? 'எனக்கு உங்களிலே விருப்பம், எனக்கு உங்களிலே விருப்பம்' என்டு எட்டு வீட்டுக்குக் கேட்கிற மாதிரி கத்தினுத்தான் விளங்குமே...?'' ஞானம் நாசூக்காகத் தன் மனத்தை உணர்த்தியபடியே தலையைக் குனிந்து கொள்கிறாள். அவன் பொங்கிவரும் மகிழ்ச்சியிலும், உற்சாகத்திலும் திணறிப் போகிறான். அவள் அவன் திணறலைப் பார்த்து ஒரு மெல்லிய சிரிப்போடு கேட்கிறாள், ''இப்ப தேத்தண்ணியைக் குடிக்கலாம்தானே...?''—அவன் குனிந்து தேநீரை எடுத்து, உதட்டருகே கொண்டு சென்றவன் ஏதோ நினைத்தவனாகத் தேநீரை அவள்முன் நீட்டுகிறான்.

''உமக்கு...?'' அவள் சிரித்துக்கொண்டே வேண்டாம் என்பது போலத் தலையை ஆட்டுகிறாள்.

''அப்ப சரி...''—அவன் தேநீரை உறிஞ்சத் தொடங்கினான்.

''அது சரி...நான் கேட்டவுடனே ஏன் அழுதனீர்...நான் என்னவெல்லாம் நினைச்சுப் பயந்து போனன் தெரியுமா?'' செல்லமான கோபத்துடன் கேட்டான்.

அவள் ஒரு புன்சிரிப்புடன் பேசாமல் நின்றாள். ''சொல்லுமேன்,'' —அவன் கொஞ்சம் அழுத்திக் கேட்டான்.

''வந்து...''

''வந்து...?''

''வந்து....நீங்கள் கையை இறுக்கிப் பிடிச்சிங்கள்..எனக்குநொந்து போச்சுது...அதுதான் அழுதனான்...'' அவள் பொங்கி வந்த சிரிப்பை வாய்க்குள் அடக்கியபடியே கூறினாள்.

உருப்படியான காரியம்

அன்புடையீர்,

வணக்கம்.

தர்மபுரி முனிசிபல் பஸ் ஸ்டாண்டில் குடிநீர் குழாய் ஒன்று அமைத்தால் பயணிகளுக்கு மிகவும் உபயோகமாக இருக்கும். அன்புகூர்ந்து தாங்கள் உதவி செய்ய வேண்டுகிறேன்.

— சி. வடிவேலு,
தர்மபுரி.

(உருப்படியான காரியம் டிசம்பர் மாதத் திட்டமாக இந்த யோசனை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது)

கேட்டவுடன் அவன் முகத்திலும் சிரிப்பு. அது உண்மையான காரணமல்ல என்று தெரிந்தாலும்கூட அதற்குமேல் அவன் அதைப்பற்றிக் கேட்கவில்லை. "அப்பிடியென்டால்... நொந்துபோன கையுக்குத் தடவிவிட்டு, வைத்தியம் செய்யலாமோ?" குறும்பாகக் கேட்டான். அவள் முகத்திலும் கண்களிலும், பார்வையிலும், சிரிப்பிலும் நாணம் படரத் தலையைத் தாழ்த்திக் கொண்டாள்.

"அது சரி...வெள்ளன என்ன சொன்னீர்...கவனமா இருந்து கொள்ளும்...ஓ..." அவள், அவன் எதைப் பற்றிச் சொல்கிறான் என்று புரியாமல் விழித்தாள். அவளது திகைப்பைக் கண்டு அவனே சொன்ஞன்.

"காச்சட்டையை ஒரு கையால பிடிச்சுக்கொண்டு கிட்டி விளையாடுறஞன் என்டு சொன்னீர் என்ன.."

அவள் இப்போது கொஞ்சம் பலமாகவே சிரிக்கிருள். அவனும் சிரித்துக்கொண்டே மணியைப் பார்க்கிருன், "சரி...அப்ப நான் வரட்டே...?" அவன் எழுந்திருக்கிறன்.

"போறீங்களே...?" அவள் குரல் மெல்லிதாக வெளிவருகிறது.

"பின்னே, இங்கேயே இருக்கச் சொல்லுறீரோ...?" என்றவன் அவள் அருகே வந்ததும் குரலைத் தாழ்த்திக் கண்களைச் சிமிட்டிக்கொண்டே கேட்டான். "ஞானு, நான் இங்கேயே இருக்கட்டுமே...?"

அவளுக்கு முகம் சிவந்து போயிற்று. அவன் சிரித்துக்கொண்டே வெளியே சென்ருன்.

"ராசன்... அப்ப நான் வரட்டே...?" அவன் ராசனிடம் விடைபெற்றுக் கொள்வது அவளுக்குக் கேட்டது.

"இனிமேல் ஒவ்வொரு நாளும் வருவீங்களோ...?" ராசன் அவனிடம் கேட்டான்.

"கட்டாயம்..."

"அப்புவும், அம்மாவும் சந்தைக்குப் போயிருக்கிற நேரமாப் பார்த்து வாங்கோ..."

ஞானுவுக்குச் 'சுருக்' கென்றது. ராசனுக்குத் தெரிந்துவிட்டதோ? அவள் மெதுவாகத் தலையை வெளியே நீட்டி, ராசனைப் பார்த்தாள். அவன் குலத்துக்குக் கையை அசைத்து விடை கொடுத்துவிட்டு இவளைப் பார்த்தவன், வாய்க்குள் ஒரு குறும்புச் சிரிப்புடன் தலையைத் தாழ்த்திக் கொண்டான். ஞானுவை வெட்கமும், படபடப்பும், பயமும் ஒருங்கே சேர்ந்து பற்றிக் கொண்டன.

அன்று காலையில் இருந்தே வீட்டில் நிலைமை சரியில்லை.

அப்பு நேற்று மாலை தவறணைக்குப் போகவில்லை. அவரிடம் பணமில்லை. அவரிடம் மட்டுமென்ன? வீட்டில் ஒருவரிடமுமே பணமில்லை. தவறணைக்குப் போகாத கோபம் எரிச்சலாகவும், ஆத்திரமாகவும் மாற, எல்லோருடனும் சீறிக் கொண்டிருந்தார். அம்மாவுக்குச் சீட்டுக்காசு கட்ட வேண்டுமே என்ற கவலை. நாளையுடன் சீட்டுக்குப் பணம் கொடுக்க வேண்டிய தேதி முடிவடைகிறது. பணத்துக்கு வழி தோன்ருமல் குழம்பிக் கொண்டிருந்தாள். அந்தக் குழப்பத்தில் மற்றவர்களுடன் பேசுவதுகூட எரிச்சலாக இருந்தது,

அறையினுள் ராசனுக்கு உணவை ஊட்டிவிட்டுக் கொண்டிருந்தாள் ஞானம். அவனுடைய தேவைகள் எல்லாவற்றையுமே அவள்தான் கவனித்துக் கொள்வாள். பன்னிரண்டு வயதாகியும்கூட அவனுக்கு அவள் ஊட்டித்தான் விடுவாள். அவள் கையால் சாப்பிட்டால்தான் அவனுக்குத் திருப்தி. 'இன்னும் ஒரு வாய்...இன்னும் ஒரு வாய்...' என்று சொல்லிச் சொல்லி உணவை ஊட்டிவிட்டு, அவன் வாயைத் தன் விரலால் துடைத்த பின்னர், ''கெட்டிக்காரன்,'' என்ற சான்றிதழுடன் அவள் எழுந்தால்தான் அவனுக்குச் சாப்பிட்டதுபோல இருக்கும்; அவளுக்கும் நிறைவாக இருக்கும்.

''எத்தினை நாளைக்குத்தான் இப்பிடிச் சாப்பிடப் போறேனோ தெரியாது.'' தன் வாயிலிருந்து நூலாக வெளியே தொங்கிய இடியப்பத்தை நாவால் இழுத்துக்கொண்டே சொன்னான்.

''ஏன் ராசன் அப்பிடிச் சொல்லுறாய்?'' ஞானம் பரிவோடு கேட்டாள்.

''என்னதான் இருந்தாலும் நீங்கள் கலியாணம் பண்ணும் வரைதானே நான் இப்பிடிச் சாப்பிட முடியும்?''

கல்யாணம் என்றதும் ஞானத்தின் நினைவுகள் ஒருதடவை குலத்தை வட்டமிட்டுவிட்டுத் திரும்பி வந்தன.

''நான் கலியாணம் பண்ணினாப்போலை உன்னை விட்டுப் போயிடுவன் என்று நினைக்கிறியோ...? என்டைக்கும் நீ என்னோடைதான் இருப்பாய் ராசன்...!'' அவள் அன்பாக அதே சமயம் அழுத்தமாகச் சொன்னாள்.

''நீங்கள் தேவையென்டால் என்னை வச்சிருக்க ஏலுமென்டலாம்... ஆனா வரப்போறவைய சம்மதிப்பினமே...? எப்பிடித்தான் இருந்தாலும் நான் பாரம்தானே...?'' அவன் குரலில் இருந்த ஏக்கமும், வேதனையும் அவளைத் துடிக்க வைத்துவிட்டன.

''அப்பிடியெல்லாம் சொல்லாதை ராசன்...கால்தான் உனக்கு ஊனமாயிருக்கு...மனமில்லே..,...எஸ். எஸ். சியும், எச். எஸ். சியும் படிச்சுப்போட்டு இருக்கிறவங்களைவிட நீ கூடத்தான் சம்பாதிக்கிறாய்...என்னைக் கல்

சொல்லுங்களேன் பார்க்கலாம்.

''துரோகம்' என்ற சொல்லை முதல் வகுப்புப் பாட நூலில் அச்சிட்டிருக்கிறார்கள்!'' என்று 17.11.77 குமுதத்தில் குறைபட்டுக் கொள்கிறார் ஒரு வாசகர்.

இந்தத் 'துரோகம்' என்ற சொல் 1972 ஜூனில் வெளியான முதல் வகுப்புத் தமிழ் பாட நூலிலேயே உள்ளது.

'பாவி, துரோகி' என்ற சொற்கள் சாதாரணமாக வழங்கும் சொற்களே. துரோகம் என்றால் ஏமாற்றுதல் என்று ஆசிரியர் விளக்கிவிடுவார்; ஆதலால் இச்சொல்லே புதிய பதிப்பிலும் நீடிக்கட்டும் என்று விடப்பட்டது. இது அப்படியொன்றும் புரியாத கடுஞ் சொல் அல்ல.

'ரோ' வுக்குரிய சொற்களுக்குப் பஞ்சமா என்ன? என்று கேட்டுவிட்டு, 'ரோஜாப்பூ' 'ஆராரோ', 'காரோட்டி' என்ற சொற்களைச் சிபாரிசு செய்கிறார் நண்பர். 'ரோ' முதல் எழுத்தாக வருதல் மரபல்ல. அதனுடன் 'ஜா' என்ற எழுத்து, தமிழ் எழுத்துக்களையெல்லாம் கற்பித்த பின்னர் இறுதியாகக் கற்பிக்க வேண்டிய எழுத்து. 'ஆராரோ' என்பது ஆர் ஆர் ஓ என்ற முச்சொல் கூட்டு. 'யார் யாரோ' என்ற தொடரின் மறு உருவம்; அதுவும் கேள்வி. 'கார் ஓட்டி' ஆங்கிலமும் தமிழும் சேர்ந்த —கூடாநட்புச் சொல்! கூடுமான வரை எச்சச் சொற்களும், வினைச் சொற்களும் தவிர்க்கப்பட்டு, பெயர்ச் சொற்களாய் இருப்பதே சிறந்தது என்ற கருத்தோடு சொற்கள் படைக்கப்பட வேண்டும்..

இந்த முறையை மனத்தில் கொண்டு, ''வேறு சொற்களுக்குப் பஞ்சமா?'' என்று கேட்டுச் சவால் விடும் நண்பர், 'துரோக'த்திற்கு வேறு ஓர் எளிய சொல் சொல்லட்டுமே?

—டாக்டர் இ. முத்துக்கண்ணப்பன்

யாணம் பண்ண வர்றவையள் நீயும் என்னோடை இருக்கிறதுக்குச் சம்மதிச்சாத்தான் நானும் கலியாணத்துக்குச் சம்மதிப்பன்...இல்லாட்டி எப்பவும் இப்பிடித்தான் இருப்பன்..." அவள் தீர்மானமான குரலில் சொன்னாள்.

''குலம் அத்தான் ஓமெண்டாட்டில்?'' ராசன் குரலைத் தாழ்த்திக் கொண்டு ரகசியமாகக் கேட்டான். ஞானத்துக்கு வெட்கமாகப் போய்விட்டது. தலையைக் குனிந்து கொண்டு பேசாமல் இருந்தாள். ''அக்கா...என்னோடை கோவமே...?'' சிறிது நேர மௌனத்தின் பின் ராசன் அவள் முகவாயை நிமிர்த்தியபடியே கேட்டான். அவள் அப்பொழுதும் பதில் பேசவில்லை.

''நான் இப்பிடியெல்லாம் கதைக்கக் கூடாதெண்டு எனக்குத் தெரியும்...ஆனா...குலம் அத்தானைப் பற்றி ஆரும் கதைச்சால் உடனே நீங்கள் வடிவா வந்திடுறீங்கள்...முகமெல்லாம் ரோசாப் பூப்போல இருக்குது அக்கா. அப்பிடி உங்களைப் பார்க்கிறதெண்டால் எனக்குச் சரியான விருப்பம்...அது தான்...'' ராசன் கண்களில் ஒரு ஒளியுடனும், குரலில் ஒரு குதூகலத்துடனும் சொன்னான். இது உண்மை தானா...? குலத்தைப் பற்றி யாராவது பேசியவுடனே, அவள் மனத்தின் மகிழ்வு முகத்திலா தெரிகிறதா?



''முடியலே என் வீடு ஞாப கம்! லாக்கப் ரூமில் ஒண்டிக்கிறேன் சார்!''

அவள் மெதுவாக ராசனைப் பார்த்துச் சிரித்தாள்.

''அக்கா...இந்த அப்புவும், அம்மாவும் என்ன நினைச்சுக் கொண்டிருக்கினம்...?'' சிணுங்கிக் கொண்டே வந்து நின்றாள் ரெத்தினா—இரத்தினேஸ்வரி. ராசனைவிட நான்கு வயது பெரியவள். எச். எஸ். சி. முதலாவது வருடத்தில் படித்துக் கொண்டிருந்தாள்.

''ஏன் ரெத்தினா?'' ஞானம் நிமிர்ந்து பார்க்காமலேயே கேட்டாள்.

''பின்னையென்ன... டீச்சர் போன கிழமையே ஃபெசிலிட்டி ஃபீஸ் கொண்டு வரச் சொன்னவ...அண்டைக்கே வந்து அம்மாட்டைச் சொல்லிட்டன்...அவ இன்னும் தரேல்லை... ஒவ்வொரு நாளும் நாளைக்குத் தாறன் நாளைக்குத் தாறன் எண்டு ஏமாத்திறா ...அங்கே பள்ளிக்கூடத்திலேயெண்டால் டீச்சர் பேசுறா. இப்ப போய் அம்மாட்டைக் கேட்கக் காசும் இல்லை ஒரு மண்ணும் இல்லை ஒண்டும் தரேலாது எண்டு திட்டுறா...அப்புவெண்டால் அடிக்காத குறையாக் கத்துறார்...'' ரெத்தினாவுக்குக் கண்களில் நீர் ததும்பி விட்டது. ஞானம் பெருமூச்சு விட்டவாறே தண்ணீரை எடுத்து ராசனிடம் கொடுத்தாள்.

''என்னக்கா. நீங்களும் பேசாமல் இருக்கிறீங்கள்...?'' ரெத்தினா சிறிது கோபத்துடன் கேட்டாள்.

''என்னை என்ன செய்யச் சொல்லுறாய் ரெத்தினா? எங்கடை நிலைமை உனக்குத் தெரிந்திருந்தும் நீ இப்பிடிக் கதைச்சால் நான் என்ன சொல்லுறது? அம்மா வைச்சுக் கொண்டே இல்லையெண்டு சொல்லுறா? இவ்வளவு நாளும் நீ கேட்ட உடனே தரேல்லையே? இப்ப இல்லாதபடியாத் தானே இல்லையெண்டு சொல்லுறா..'' ஞானம் முடிக்கும் முன் ரெத்தினா குறுக்கிட்டாள்.

''அப்ப என்னைமட்டும் என்ன செய்யச் சொல்லுறீங்கள் அக்கா...? பள்ளிக்கூடத்துக்குப் படிக்க எண்டு அனுப்பினா இதையெல்லாம் செய்து தரத்தான் வேணும்...இல்லாட்டிப் படிக்க அனுப்பக்கூடாது...'' ரெத்தினா அழுகையும், ஆத்திரமுமாகக் கத்தினாள். ஞானம் ஒன்றும் பேசவில்லை. காலியான உணவுத் தட்டை எடுத்துக் கொண்டு எழுந்தாள்,

"அக்கா...என்னக்கா. ? ? பேசாமல் போறியள்?" ரெத்தினா எதிரே வந்து மறித்தாற்போல நின்று கொண்டாள்.

"நான் என்ன செய்யிறது ரெத்தினா...? என்னட்டையும் காசு இல்லையே...முட்டை வித்து வந்த காசிலதான் அம்மா நேற்று பெரியாஸ் பத்திரிக்குப் போய் சின்னப்புவைப் பார்த்துட்டு. சாமான்கள் வாங்கி வந்தவ...தையல் காசு வரவேணும் தான்...உனக்கு எவ்வளவு வேணும்?"

"பதினைஞ்சு ரூபா..."

"ஐயோ...பதினைஞ்சு ரூபா வராது ரெத்தினா...எட்டு ரூபாவோ என்னவோதான் வரும்... டீச்சரிட்டை போய்ச் சொல்லிப் பாரன்...இப்ப கொஞ்சம் கஷ்டமாய் இருக்குதாம்... அடுத்த் கிழமை தாறதாம் என்டு..."

ரெத்தினா கோபத்தால் சிவந்த முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டாள். "உங்களுக்கென்ன? நீங்கள் சொல்லுவியள்...அவ பேசுறது என்னைத்தானே..." முணுமுணுத்துக் கொண்டு ஸாக்ஸைப் போட ஆரம்பித்தாள்.

"சின்னக்கா. . . என்னட்டைக் காசு இருக்குது...அதைக் கொண்டு போறிங்களே...?" இதுவரை மௌனமாக இருந்த ராசன் மெதுவாகக் கேட்டான்.

"இல்லை தம்பி...நீ வைச்சிரு... நான் டீச்சரிட்டை அடுத்த கிழமை தர்றன் என்று சொல்லி எப்பிடியாவது சமாளிக்கிறன்..." ரெத்தினா தம்பியை நிமிர்ந்து பார்த்துக் கனிவோடு சொன்னாள்.

"இல்லையக்கா . . அடுத்த கிழமை மட்டும் இவைக்கு வானத்திலை இருந்தே காசுவந்து குதிக்கப் போகுது? என்னட்டை முப்பத்தஞ்சு ரூபாமட்டிலை இருக்குது...நீங்க கொண்டு போங்கோ...உங்களுக்கெல்லாம் தராமல் நான் காசைச் சேர்த்து வச்சிருந்தாப் போலை என்ரை கால் என்ன நேராகவே வரப் போகுது?" ராசன் சிரித்தபடிதான் சொன்னான்.

ஆனால் ரெத்தினா பதறிவிட்டாள். "தம்பி...ஏனடா இப்பிடியெல்லாம் கதைக்கிறாய்?" கேட்கும் போதே கண்ணில் நீர் திரண்டு விட்டது. "அடுத்த கிழமையும் தராட்டில் பிறகு

"உங்கள் பையன் ஏன் அழுகிறான்?"
பையனின் தந்தை: கணக்கில் முட்டை வாங்கியிருக்கிறான். அதை ஆம்லெட் செய்ய வேண்டுமென்கிறான்.
—பி. ஜெயஸ்ரீ

பார்ப்பம்...இப்ப நீயே வைச்சிரு," என்றவள் எழுந்து புத்தகங்களைத் தூக்கிக் கொண்டாள். "அம்மா...அப்பு..!.. அக்கா...எல்லாருக்கும் போயிட்டு வர்றன்..ராசன்..போயிட்டு வர்றன்.." கூவிவிட்டுச் செல்லும் அவளைப் பார்த்தபடியே உட்கார்ந்திருந்தான் ராசன்.

"அம்மா..." சட்னியை அரைத்துக் கொண்டிருந்த ஞானம் மெதுவாக ஆரம்பித்தாள். 'என்ன' என்பதுபோல நிமிர்ந்து பார்த்தாள் தங்கம்மா.

"வந்தம்மா . . .ரெத்தினு போன கிழமையே பள்ளிக் கூடத்துக்குக் காசு கட்ட வேணுமென்டு கேட்டவள்...நான் இந்தக் கிழமை தர்றனென்டு சொல்லிவிட்டனான். இப்பவும் காசு தரேல்லை என்று அழுது போட்டுப் போறாள்." ஞானம் தயங்கியபடியே சொன்னாள். தங்கம்மா எதுவும் பேசவில்லை. ஒரு பெருமூச்சுடன் சுள்ளிகளை அடுப்பினுள் தள்ளி நெருப்பைத் தூண்டிவிட்டாள்.

"இந்த முறை சீட்டுக் காசு கூட ராசனிந்தை மோதிரத்தை அடகு வைச்சுத்தான் கட்டினீங்கள்...கோழிகளுக்கு 'மாஷ்' வாங்க வேணும்... இப்பிடி ஒவ்வொரு நாளும் கையில காசில்லாமல் இருந்து என்னம்மா செய்யிறது? இந்த முறையெண்டு பாத்துப் பெரியதம்பியும் அம்பது ரூபா குறைச்சுத்தான் அனுப்பியிருக்கிறான்...பாவம். அவனுக்கும் என்ன செலவோ?" ஞானம் சொல்லியபடியே தாயின் முகத்தைப் பார்க்கிறாள்.

"இந்த முறை கொப்புவுக்கு வருத்தம் வந்தாலும் வந்தது... கையில கிடந்த காசெல்லாம் செலவழிஞ்சு போட்டுது...இந்த முறையாவது கூரைக்கு ஓடு போடலாம் என்றிருந்தன்...அது ஏலாது போலேயிருக்கு...ஓடுபோடாட்டாலும் கடைசி புதுசாக் கிடுகாவது மேய வேண்டாமே? ஒருக்கால் மழை வந்தால் தெரியும்... வீடு முழுவதும் வெள்ளக்காடாப் போயிரும்...கையில என்டால் ஒரு சதம் காசில்லை...கடைசியில ராசனிந்தை காசில செலவழிக்கிற நிலைமை வந்திட்டுது... பாவம். அது ஏலாத பிள்ளை கஷ்டப்பட்டு சம்பாதிக்கிற காசை எடுத்து நாங்கள் தின்ன வேண்டியிருக்குது...ம்..." ஆற்றாமையும், வேதனையுமாகத் தங்கம்மா நெருப்பைப் பார்த்தவண்ணம் பேசினாள்.


"ஏனம்மா.. நான் திரும்பவும் நெசவுக்குப் போகட்டே...?"

"என்னை ஏன் கேக்கிறாய் பிள்ளை? போய் அப்புவைக் கேள்... அவர்தானே போகவேண்டாம் என்டு நிப்பாட்டினவர்? இனிமே அவர் என்ன சொல்லுறாரோ..."

ஞானம் அன்று மாலையே தயங்கித் தயங்கி, தந்தையிடம் அனுமதி கேட்டாள். சின்னையா சிறிது நேரம் ஒன்றும் சொல்லவில்லை. பிறகு ஒரு நீண்ட பெருமூச்சுடன், "ம்... பொம்பிளைப் பிள்ளை உழைச்சு நான் சாப்பிட வேணுமென்டு விதி இருந்தால், ஆரால அதைத் தடுக்க ஏலும்?" என்று மட்டும் கூறினார். அடுத்த நாள் தொடக்கம் பழையபடி நெசவுக்குப் போகத் தொடங்கிவிட்டாள்.

இரண்டு நாட்களாகப் பெய்து கொண்டிருந்த மழையின் உக்கிரத்தால் ஞானம் நெசவுக்குப் போகவில்லை. அன்று மழை விட்டதும் அவசர அவசரமாகப் புறப்பட்டுவிட்டாள். மழை விட்டாலும்கூட வானம் தெளியவில்லை. ஒரு கையால் புடவையை இலேசாகத் தூக்கிப் பிடித்தவாறே நடந்து கொண்டிருந்தாள். எப்போது மழை வரும் என்று சொல்லத் தெரியாத பயம் அவளை முடுக்கிவிட்டது. மழை வந்தால் குடையும் இல்லை. வீட்டில் இருக்கும் ஒரே குடையும் கம்பிகள் முறிந்து போய்க் கிடந்தது. "நாளைக்கு எப்பிடியும் கம்பிகளைக் குடுத்துக் கட்டுவிக்க வேணும்." இடையில் வந்த அந்த ஒழுங்கையைக் கண்டதும் யோசனையுடன் ஒரு நிமிஷம் நின்றாள். அந்த ஒழுங்கையின் வழியாகப் போனால் சீக்கிரமாகப் போய்விடலாம். ஆனால் ஜனநடமாட்டம் குறைந்த ஒழுங்கை அது. வானம் பயமுறுத்துவதைப் பார்க்கும்போது சீக்கிரமாகப் போவது நல்லது என்ற எண்ணத்துடன் அந்த ஒழுங்கையினுள் இறங்கினாள். 'சும்மாவே இந்த ஒழுங்கைக்குள்ளை ஆக்களைக் காண ஏலாது... இந்த மழைக்குள்ளை கேக்கவும் வேணுமே...?'

(தொடரும்)



daCunha/Nutra/1

நாம

ஜெபம் பவதாரிணி

யாழ்ப்பாணத்தில் ஒரு நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த ஞானு, நெசவாலைக்குப் போகும் வழியில், தன் அத்தை மகன் குலேந்திரனைச் சந்திக்கிறுள்.

"தென்னை மரச் சோலை தன்னில் சிட்டுப் போல போற பெண்மணே; நில்லு கொஞ்சம் நானும் வாறேன்.. சேர்ந்து பேசிப் போவோம் கண்மணே; அன்னம் போல நடைநடந்து சென்றிடும் மயிலே..."

பின்னுலிருந்து பாட்டுக் குரல் கேட்டது. அவளுக்குத் தெரிந்துவிட்டது. குலம்தான். மனத்தினுள் மகிழ்ச்சியும், இன்பமும் வெள்ளமாகப் பொங்கிப் பிரவாகித்தன. இருந்தாலும் அவள் திரும்பிப் பார்க்கவில்லை; நடையின் வேகத்தைத் தளர்த்தவும் இல்லை.

"என்ன.....நான் பாடிக் கொண்டே வர்றன்...நீர் பேசாமல் போய்க் கொண்டே இருக்கிறீரே...?" குலம் சைக்கிளை அவள் அருகே கொண்டு வந்து கேட்டான்.

"ரோட்டிலை ஆரும் ஆருக்கேனும் பாடிக்கொண்டு போனு, நான் திரும்பிப் பார்க்க வேணுமே?" அவள் மெல்லிய குரலில் கூறிக் கொண்டே நடந்தாள்.

"என்ன...பகிடி விடுறீரே? நான் யாரோவே...?" அவன் திரும்பிப் பார்த்துக் கேட்டான்.

"பின்னே?" அவள் எதிர்க் கேள்வி போட்டாள்.

"அப்ப சரி. நான் ஆரும் என்டால் ஏன் உமக்குப் பக்கத்திலே, உம்மோடை வரவேணும்...? நான் போறன்..." அவன் சொல்லிவிட்டு சைக்கிள் பெடலை ஒரு தடவை சுழற்றி ஏறி அமர்ந்து கொண்டான். அவளுக்கு ஏமாற்றமாக இருந்தது. மனத்தில் பொங்கிய உற்சாகமெல்லாம் நிமிஷத்திலே வடிந்து போய்விட்டது போல ஒரு உணர்வு. அவன் சைக்கிளுடன் சில அடி தூரமே சென்றிருப்பான். சைக்கிளை நிறுத்தி, ஒற்றைக் காலை ஊன்றியபடியே தலையைத் திருப்பி அவளைப் பார்த்தான். "போகட்டே?"

அவன் நின்றதைக் கண்டதும் அவளுக்குள் உற்சாகம் பழையபடி குமிழியிடத் தொடங்கியது. கண்கள் சிரிப்பையும், மகிழ்ச்சியையும், நாணத்தையும் கலந்து ஒருங்கே கொட்டின. இருந்தாலும் வீம்புடன் சொன்னுள், "போங்கோவன்..."

"வாய் மட்டும்தான் அப்பிடிச் சொல்லுது..."—அவன் கூறிக் கொண்டே சைக்கிளை அரைவட்டமாகத் திருப்பிக்கொண்டு அவளருகே வந்தான். சைக்கிளைவிட்டு இறங்காமலே மிக மெதுவாகப் பெடல் பண்ணியவாறு வந்தான்.

"அது சரி...என்ன இப்ப கொஞ்ச நாளா திரும்பவும் நெசவுக்குப் போறீர்...?" அவள் பதில் ஒன்றும் சொல்லாமல் வெறுமனே அவனைப் பார்த்துச் சிரித்தாள். அவன் அந்தச் சிரிப்பின் அர்த்தத்தைப் புரிந்து கொண்டான் போலும்.

"மாமா ஓமென்டிட்டாரே?" குனிந்து நிலத்தைப் பார்த்தவாறு கேட்டான்.

"கஷ்டம் என்டு வரேக்குள்ளை ஓமென்டத்தானே வேணும்." அவளும் நிலத்தைப் பார்த்துக்கொண்டே சொன்னுள். "அது சரி...இப்பிடி எனக்குப் பக்கத்திலே வாறீங்களே...ஆரும் பார்த்தால் என்ன சொல்லுவினம்..?" சற்றே அச்சம் கலந்த குரலில் கேட்டாள்.

"என்ன சொல்லுவினம்..? அடே மச்சானும், மச்சாளும் எவ்வளவு

வாரவா, பொருத்தமா இருக்கினம் என்டு சொல்லுவினம்.''—அவன் பதிலைக் கேட்டு அவள் முகம் சிவந்து விட்டது.

''ஏன் இப்ப எல்லாம் வீட்டுப் பக்கம் வர்றேல்லே?''—வெட்கம் தடுத்தாலும்கூடத் துணிந்து கேட்டு விட்டாள்.

''ஏன்...பார்க்காம இருக்க முடியேல்லேயே...?'' அவன் அவள்புறம் திரும்பிச் சிரித்துக்கொண்டே கேட்டு விட்டுத் தொடர்ந்தான். ''என்னென்டு சொல்லி வர்றது ஞானு...? இருக்கிற சாக்கெல்லாம் சொல்லி முடிஞ்சுது... அப்பிடியில்லே என்டு வர்றதா இருந்தா ஞானுவைப் பார்க்க ஆசையாயிருக்கு என்டு சொல்லித்தான் வரவேணும்.'' அவனது பதிலைக் கேட்டதும் அவள் முகத்தில் ஒரு இளநகை.

''ஏன் என்னை ஞானு என்டு கூப்பிடுறீங்கள்...?'' மீண்டும் அவளே கேட்டாள்.

''எனக்கென்னவோ ஞானம் என்டுறது பிடிக்கேல்லே...நீர் என்ன கிழவியே ஞானம் என்டு கூப்பிட...? ஞானு என்ட பெயர் எவ்வளவு வடிவா சொல்லுறதுக்கும், கேட்கிறதுக்கும் நல்லா இருக்குத் தெரியுமே...? ஞானுக் குஞ்சு...ஞானுச் செல்லம்...ஞானுச் சொக்கு...ஞானுக் கண்ணு...''

''இதென்ன... தவமே...?''—அவள் சிரித்தாள்.



''தவம்தான்...! இந்த அம்மனிந்தை அருளைப் பெற எவ்வளவு நாள் தவம் செய்தன் என்டு எனக்கெல்லோ தெரியும்..'' அவன் கண்களில் ஆசையும், பாசமுமாகப் பார்த்தான். ''அது சரி... தம்பி தவம் போன கிழமை ஆரோ சிநேகிதனோடை வந்தான் என்டு கேள்விப்பட்டன்...உண்மையே..? வீட்டுப் பக்கம் ஒருக்காலும் வரல்லே...?'' குலம் சற்று வியப்பான குரலில் கேட்டான்.

''ஓம்...வந்திட்டு ரெண்டாம் நாளே திரும்பிட்டினம்... ஒரு இடத்துக்கும் போகேல்லே...''

''அப்பிடி என்ன அவசரம்? இன்னும் ஒரு ரெண்டு நாள் நின்டிட்டுப் போயிருக்கலாமே? நான்கூடத் தவத்தை ஒரு அலுவலா சந்திக்க வேணுமென்டு இருந்தன்...''

ஞானம் சிறிது நேரம் பேசாமல் இருந்தாள். பிறகு மெல்லிய

குரலில் சொன்னுள்: "என்ரை கலியாண விஷயமா வந்தவையன்..."

"என்னது...! உம்மடை கலியாண விஷயமாவோ...?" குலம் அவளைத் திரும்பிப் பார்த்துக் கேட்டான்.

"பின்னே...உங்கடை கலியாண விஷயமாவே வருவினம்...?"—ஞானம் சட்டென்று கேட்டாள்.

"ஓ...இப்ப மட்டும்தான் வாய்...அன்டைக்கு நான் கேட்கேக்குள்ளை மட்டும் ஏதோ பேய் பிசாசைக் கண்டது போல அழத் தெரியும்."—குலம் சிரித்தான்.

அதை நினைத்துக் கொண்டதும் அவள் முகத்திலும் ஒரு வெட்கச் சிரிப்பு. ஆனாலும் அதை மறைத்துக் கொண்டு கொஞ்சம் கோபமான குரலில் கேட்டாள்.

"இப்ப நான் சொல்லுறதை நீங்கள் கேட்க மாட்டீங்களே...?"

"சொல்லுமேன். . . .நீர் சொல்லுறதைக் கேட்கத்தானே கடவுள் என்னைப் படைச்சு வைச்சிருக்கிறன்..!"

"தம்பியோடை வந்தவர் தம்பியிந்தை சினேகிதனும்...தம்பியை விடப் பெரிய வேலையாம்...தம்பி என்னைப் பத்தி ஓயாமல் கதைப்பானும். அதிலே...என்னைப் பார்த்து...கலியாணம் பற்றி அப்பு அவையளோட கதைக்கலாம் என்டுதானும் வந்தவர்.."

குலம் சிறிது நேரம் மௌனமாக இருந்தான். பிறகு, "நீர் என்ன சொன்னனீர்...?" என்று கேட்டான்.

"என்னட்டை இன்னும் ஒருத்தரும் ஒன்டும் கேக்கேயில்லை..."

"சரி... கேட்டினம் என்டால் என்ன சொல்லுவீர்...?"

"என்னத்தைச் சொல்லுறது...? நெகே நான் வீட்டோடை இருக்கிறது அப்புவுக்கும், அம்மாவுக்கும், முக்கியமாத் தம்பி தவத்துக்கும் சுமைதானே? எதுக்கு அவையளைக் கஷ்டப்படுத்த வேணும்? என்னட்டைக் கேட்டால் ஓமென்டுதான் சொல்லப் போறன்..." அவள் சொல்லிக் கொண்டே கடைக்கண்ணால் கவனித்தாள். அவன் முகம் சிவப்பது தெரிந்தது. பேச்சை நிறுத்தாமலேயே சொல்லிக் கொண்டு போனுள்:

"இனிமே அவரும் நல்ல உத்தியோகத்திலை இருக்கிறர்...என்னைக் கண்கலங்க விடமாட்டார்...சீதனமும் வேண்டாமாம்...அவரை நான் கலியாணம் செய்யிறதாலே எனக்கு மட்டுமில்லை...என்ரை சகோதரங்களுக்கும் எவ்வளவோ உதவி...இல்லாமலும் அப்பு..."




''அறைஞ்சனென்டால் பல்லெல்லாம் கழன்டு விழும்...வாயை மூடிக்கொண்டு பேசாமல் இரு...'' கோபத்துடன் உயர்ந்த அவன் குரல் அவளை அடக்கிவிட்டது. சந்தோஷமும் பெருமிதமும் இன்பமுமாக அவளை உலுக்கி எடுத்தன. சொல்ல முடியாத பூரிப்பு கண்களில் நீராகச் சுரந்து நின்றது. 'நான் பாக்கியசாலி...நான் பாக்கியசாலி...' என்று எல்லோருக்கும் கேட்கும் வண்ணம் கூச்சலிட வேண்டும் போல இருந்தது.

கொஞ்ச நேரம் வரை இருவருமே பேசவில்லை. பிறகு பார்வையை நேராக ஓட்டியவாறு அவன் சொன்னான்: ''நான் இன்டைக்கே தவத்துக்கு ஒரு கடிதம் எழுதிப் போடுறன்...''

''என்ன என்டு...?''

''என்னெண்டு இருந்தாத் தான் உமக்கென்ன...நீர்தான் ஆரையும் கலியாணம் முடிக்கப் போறீரே.'' அவன் குரல் சூடேறியிருந்தது. அவள் தலையைக் கவிழ்த்துக் கொண்டாள். சிறிது நேரத்திற்குப் பின்னர் அவனே சொன்னான்: '' 'உன்ரை அக்காவுக்குக் கலியாணம் பேசுறாய் என்டு கேள்விப் பட்டன்...அதை உடனே நிறுத்தி விடு...ஏனென்றால் அவவை நான் கலியாணம் செய்ய விரும்புறன்; செய்யப் போறன்...' என்டுதான்.''

அதைக் கேட்டதும் அவள் மெதுவாகச் சொன்னாள். ''உங்கடை கடிதத்தைப் பார்த்தால் தம்பி அப்பிடியே திகைச்சுப் போயி



'கால்..ம் ஆடுவது எப்படி?' என்ற புத்தகத்தின் ஆசிரியை. பெட்ஸீ ட் விளம்பரமல்ல.

மக்கள் குரல் படத்தில் பிரமீளா.

பி.பி.ஸி. ஒலிபரப்பில் தினமும் காலை ஏழு மணிக்கு பிரபல செய்தித் தாள்களில் வரும் முக்கிய செய்திகள், தலையங்கங்கள் பற்றிய விமரிசனங்கள் ஆகியவை ஒலிபரப்பப்படுகின்றன.

—'ஸரோ'

டுவான்...''

''ஏன்...?''

''தம்பி எனக்குக் கலியாணம் பேசியிருந்தாலெல்லோ நிப்பாட்டுறதுக்கு...?''

அவன் சட்டென்று திரும்பிப் பார்த்தான். ''அப்பிடியென்டால்...?'' கேள்வியில் உஷ்ணமும், வியப்பும் கலந்திருந்தன.

''எனக்குக் கலியாணம் பேசியினம் என்டு சும்மா சொன்னனான்..'' —அவள் பொங்கிவந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு, கடைக்கண்ணால் அவனைப் பார்த்தவாறு சொன்னாள்: அவளது சிரிப்பும், பார்வையும் தன்னை ஏமாற்றி விட்ட வேடிக்கையை எண்ணி எண்ணிச் சிரித்ததைப் புரிந்து கொண்டான். முகத்திலிருந்த கோபமெல்லாம் நிமிஷத்தில் வடிந்துவிட, அவன் முகத்திலும் இளஞ் சிரிப்புத் தவழ்ந்தது.

''என்னை ஏமாத்திப் போட்டீர் என்ன? இந்தப் பொம்பிளைகளைப் நம்பக் கூடாது...சரியான ஏமாத்துக் காரர்...'' ஒரு நிமிட நிதானத்துக்குப் பிறகு அவனே சொன்னான். ''ஆனால்...நான் தவத்துக்குக் கடிதம் எழுதிப் போடுவன் என்டுறதை உண்மையென்டே நினைச்சீர்...? உமக்கு வேறை ஆரையாவது கலியாணம் பேசினால் அதுதான் சாட்டென்று நான் நைசா நழுவிடுவன்...உம்மைக் கலியாணம் செய்ய எனக்கென்ன விசரே?''

அவன் சொன்னதைக் கேட்டதும் அவளுக்கு முகம் சிவந்து விட்டது: முகத்தைத் திருப்பிக் கொண்டு வேகமாக நடக்கத் தொடங்கினாள்,

''ஞானு...ஞானு... ஏன்

இப்பிடி நடக்கிறீர்...? ஞானு.''அவன் அவசரமாகக் கூப்பிட்டான்.

''நீங்க ஒன்டும் என்னைக் கூப்பிடத் தேவையில்லை...உங்கடை வேலையைப் பார்த்துக் கொண்டு போங்கோ...''—அவள் வெடுக்கென்று கூறினுள்.

''ஓகோ...அம்மாவுக்குக் கோபம் வந்திட்டுதோ...?''—அவன் சைக்கிளைப் பாதைக்குக் குறுக்காக அவளுக்கு நேரே நிறுத்தினுன். அவள் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

''ஞானு...நான் பகிடிக் கெல்லோ சொன்னனுன்...இதுக்குப் போய்.....இஞ்சை....உண்மையாவே கோபமே...? என்னைப் பாரும்... சிரியும்...சொல்லுறன்...''

''மாட்டன்...''

''சிரியுமென்டுறன்....''

''ஏலாது...''

''சரி...சிரிக்க வேண்டாம்.. என்னை ஒருக்கால் திரும்பிப் பாரும்.''

''முடியாது...''

''திரும்பிப் பார்க்காட்டி என்ன செய்வன் தெரியுமே...?''அவன் பயமுறுத்தினுன்.

அவள் பேசாமல் நின்றுள்.



''எனக்கென்னவோ டேபிள் சேரில் அமர்ந்து வேலை செய்தால், ஆண்பிள்ளைத்தனமாய்த் தோணுது கா...''

அவன் அப்படிச் சொன்ன பிறகு மறுத்துப் பேசப் பயமாக இருந்தது.

''திரும்பும்...'' திரும்பினுள்.

''என்னைப் பாரும்...'' பார்த்தாள்.

''சிரியும்...'' அவன் சொல்வதற்கு முன்னுலே சிரித்துவிட்டாள்.

அவன் சைக்கிளை நேராகத் திருப்பினுன். தொலைவில் நெசவு நிலையம் தெரிந்தது.

''நெசவிடம் வந்திட்டுது... இனிமே நீங்கள் போங்கோ...'' அவள் அவசரமாகச் சொன்னுள்.

''மத்தியானமும் வரட்டே?'' அவன் ஆவலோடு கேட்டான்.

''வேண்டாம்...நான் அந்தப் பிள்ளைகளோடதான் வருவன்...'' அவள் மறுத்துவிட்டாள்.

''சரி... இனிமே எப்பப்பவோ...? ஆனு கெதியிலை சந்திக்கப் பார்க்கிறன்...'' சொல்லிவிட்டு சைக்கிளைத் திருப்பினுன். ''டாட்டா!''

அவன் சிறு குழந்தை போல டாட்டா காட்டியது அவளுக்கு வேடிக்கையாக இருந்தது. சிரித்துக் கொண்டே டாட்டா காட்டி விட்டு நடந்தாள்.

இரண்டு முழு வருடங்கள் வேக வேகமாக ஓடி மறைந்துவிட்டன. காலம் மாறிக் கொண்டு போகும் போது மனிதர்கள் மட்டும் மாருமல் இருப்பார்களா? ஞானத்தின் குடும்பத்திலும் எவ்வளவோ மாற்றங்கள்... ஞானம் நெசவுக்குப் போவதை நிறுத்தி நீண்ட காலமாகிறது. தவராஜனுக்குப் பதவியில் கிடைத்த உயர்வுதான் காரணம். ரெத்தினு அட்வான்ஸ் லெவல் பரீட்சையை எழுதிவிட்டு வீட்டோடு இருந்தாள். ராசன் ஞானத்திடமும், ரெத்தினத்திடமும் கேட்டு வீட்டிலேயே படித்து வந்தான். இந்த முறை எஸ். எஸ். சி. பரீட்சைகூட எழுத உத்தேசித்திருக்கிறுன். இப்படி இவர்கள் எல்லோரும் மாறியும்கூட அப்புவும் அம்மாவும் மட்டும் மாறவில்லை. அப்பு தன்னுடைய அதே குணங்களுடன், இப்பொழுதும் எல்லோரையும் அதிகாரம் செய்து கொண்டிருந்தார். அம்மா இன்னும் ஞானுவுக்குக் கல்யாணம் ஆகாததைப்பற்றிக் கவலைப்பட்டு, அந்தக் கவலையில் எல்லோரையும் திட்டிக் கொண்டிருந்தாள்.

ஒருநாள். இரவு நேரம்:

தவராஜன் சமையலறைக்குள் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். அவனையும் ஞானுவையும் தவிர வேறு ஒருவரும் அங்கு இல்லை. சாப்பிட்டுக் கொண்டிருந்தவன் தயங்கிய குரலில் ஞானுவை அழைத்தான்.

''அக்கா...''

''என்ன தம்பி...?''

''வந்து...உங்களிட்டை ஒரு விஷயம் சொல்ல வேணும்...''

ஞானம் நிமிர்ந்து பார்த்துச் சிரித்தாள். ''அதுக்கேன் இப்பிடி யோசிக்கிறாய்...? சொல்லேன்...!''

''வந்து ... இப்போதைக்கு இது அப்பு அம்மாவுக்குத் தெரியக் கூடாது...''

அவனது தயக்கம் ஞானுவுக்கு இன்னும் சிரிப்பை உண்டாக்கியது. ''நீ கொழும்புக்குப் போனாப் பிறகு எதைப் பழகினியோ இல்லையோ...? மூடிமூடிக் கதைக்க மட்டும் பழகி யிருக்கிறாய்,'' என்றாள் சிரித்தபடி.

''மூடிமூடி வைச்சதையெல்லாம் உங்களிட்டைச் சொல்ல வேணுமென்டுதான் இந்தமுறை வந்தனான்..''

ஞானு புரியாமல் பார்த்தாள்.

''வந்து. . . என்ரை சூட்கேசுக்குள்ளே ஒரு கேர்ள்ந்தை போட்டோவைப் பாத்திங்கள்தானே...?ஆனா என்னட்டை அதைப் பற்றி ஒன்டும் நீங்கள் கேட்கேல்லை...எனக்குத் தெரியுமக்கா.. உங்கடை நல்ல குணம், . . எதையுமே வித்தியாசமா நீங்கள் நினைச்சுப் பார்க்க மாட்டிங்கள்...ஆனா... அந்த போட்டோ...அது...வந்து. . . என்னட...நான்...'' தவம் மேற்கொண்டு பேசத் தெரியாமல் தலையைக் குனிந்து கொண்டான்.

ஞானுவுக்குப் புரிந்துவிட்டது. அடுப்பிலிருந்த பிட்டுக் குழலை எடுத்துப் பிட்டைப் பெட்டிக்குள் தள்ளிக் கொண்டே மெதுவாகக் கேட்டாள். ''நீ அந்தப் பிள்ளையை விரும்புறியே..''

அவளுடைய இந்த நேரடியான கேள்வியைத் தவம் எதிர்பார்க்கவில்லைபோலும். சட்டென்று நிமிர்ந்து அவளைப் பார்த்தான். அவள் பார்வையில் இருந்த கனிவும், பாசமும், ஆதரவும், அவனுக்குத் தெம்பையளித்தன.


இத்தனை கடிதம்?

பீஹாரில், பல கொலைகளைச் செய்த கொள்ளைக்காரன் ஒருவனுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது. மறுநாள் காலை ஆறு மணிக்கு அந்தக் கொள்ளைக்காரனைத் தூக்கிலிட வேண்டும்.

'ஒரு பேனாவும், கொஞ்சம் தாட்களும் கொடுங்கள்,'' எனக் கேட்டான்.

அவன் இரவு முழுவதும் தூங்காமல் எழுதிக் கொண்டே இருந்தான். காலையில் அவனைத் தூக்கில் போட வந்த அதிகாரிகளிடம் இரவு முழுவதும் எழுதிய தாட்களைக் கொடுத்தான். ''கிராமத்தில் இருக்கும் வயதான என் தாய்க்கு எழுதிய கடிதங்கள் இதோ இருக்கின்றன. நான் தூக்கிலிடப்பட்டேன் என அறிந்தால் அவள் வேதனைப்பட்டு இறந்துவிடுவாள். என்னைத் தூக்கிலிட்டதைத் தயவு செய்து என் தாயாருக்குத் தெரிவிக்காமல், அடிக்கடி ஒவ்வொரு கடிதமாக அனுப்புங்கள். நான் சிறையில் உயிரோடு இருக்கிறேன் என்ற நம்பிக்கையில் அவளது கடைசிக் காலத்தில் நிம்மதியாக இருப்பாள்.'' என்றான்.

—கற்பகம் ராமன்



"ஓமக்கா..." என்றபடி தலையைத் தாழ்த்திக் கொண்டான். "அவ என்னோடைதான் வேலை பார்க்கிறா...பேர் மகேஸ்வரி...சரியான கஷ்டப்பட்ட குடும்பம்தான்...ஆனால் ஒரு தரம் அவளைப் பார்த்திங்கள் என்டால் பிறகு மறக்கவே மாட்டீங்கள்..." என்றான் உற்சாகத்துடன்.

ஞானா புன்னகை செய்து கொண்டாள். ஏனோ அந்தச் சந்தர்ப்பத்தில் குலத்தின் நினைவு வந்தது. அவனை இப்போதெல்லாம் பார்க்கவே முடிவதில்லை. அபூர்வமாகப் பார்க்கும் சந்தர்ப்பங்களில்கூட அவன் அவளோடு அவ்வளவாகப் பேசுவது இல்லை. ஏதோ ஒரு வேதனை அவனை அரிப்பது, அவன் முகத்திலிருந்தே தெரிந்தது. ஆனால், அவனோடு பேசக்கூட முடியாத நிலையில் அவன் மனக் கவலையை அவள் எவ்வாறு அறிவது...? அந்த எண்ணங்கள் மனத்தில் தோன்றியவுடனேயே அவளையும் அறியாமல் பெருமூச்சு ஒன்று எழுந்து அடங்கியது.

"அக்கா . . .அக்கா . . ."—தவத்தின் குரல் கேட்டதும்தான் திடுக்கிட்டுச் சுய நினைவுக்கு வந்தாள்.

"என்னக்கா...யோசிக்கிறீர்கள்...?"—அவன் ஆதரவாகக் கேட்டான்.

"ஒன்றுமில்லை. நீ சொல்லு."

"வந்து...உங்களுக்குக் கலியாணம் ஆகிறவரைக்கும் எங்கடை கலியாணமும் நடக்காது என்டு மகேசிட்டைச் சொல்லிட்டன். ஆனா... இப்ப புதுசா ஒரு பிரச்சனை...என்னென்றால்...மகேசிந்தை அம்மாவுக்குச் சுகமில்லை. இனிமேல் தப்புவா என்ட நம்பிக்கையும் இல்லை...தான் சாகிறதுக்குள்ளை மகேசிந்தை கலியாணத்தைப் பார்க்க ஆசைப்படுறாளாம்...நினைவு திரும்பற நேரமெல்லாம் மகேசிந்தை கலியாணத்தைப் பார்க்க வேணும் என்டுதானும் சொல்லுறவாம்...மகேஸ் வந்து என்னட்டைச் சொல்லி அழேக்குள்ளை என்னாலை ஒண்டும் செய்ய ஏலாமல் போயிட்டுது...இந்த நிலைமையில கலியாணம் செய்யறதைத் தவிர வேற வழி இல்லை...ஆனா உங்களிட்டைச் சொல்லாமல் செய்யவும் எனக்கு மனமில்லை...உங்களிட்டையாவது சொல்லிப் போடவேணும் என்ட எண்ணத்திலைதான் இன்டைக்கு அவசரமா வந்தனான்..." அவன் நிறுத்திவிட்டு அவளைப் பார்த்தான்.

ஞானா நிதானமாகச் சொன்னாள். "எனக்காக நீ தாமதிக்காதே தம்பி...வேளை வரேக்குள்ளை என்ரை கலியாணம் தானா நடக்கும்...அந்தப் பிள்ளையிந்தை தாய் ஆசைப்படுறதிலேயும் நியாயம் இருக்குது...அதை வீணாக்கக் கூடாது...இப்ப நீ கலியாணம் செய்து கொள்ளுறதுதான் நல்லது..." என்றாள். அவனுடைய கலியாண விஷயம் தெரிந்தவுடன் வீட்டில் நடக்கப் போகும் பிரளயத்தை எண்ணிப் பார்த்தாள். பயத்தால் உடல் ஒருமுறை நடுங்கி, அடங்கியது. அந்தப் பயம் தந்த அவசரத்தில் சொன்னாள். "ஆனா...இப்ப அப்பு, அம்மாவுக்கு ஒண்டும் சொல்லாதை... வேணுமென்டால் கலியாணம் முடிஞ்சாப் பிறகு ஒரு கடிதத்தை எழுதிப் போடு..." என்றவள் ஒரு நிமிடம் நிதானித்த பிறகு சொன்னாள். "நீ கொழும்புக்குப் போனாப்பிறகு எப்ப கலியாணம் என்டு எனக்கொரு கடிதம் போடு...உன்ரை சிநேகிதனிந்தை கலியாணம் என்டு எழுதினால் நான் விளங்கிக் கொள்ளுவன்..." என்றாள்.

"அது ஏனக்கா உங்களுக்கு?" தவம் சற்றே வியப்புடன் கேட்டான்.

(கடைசிப் பகுதி அடுத்த இதழில்)

தேவை:



எல்லா ஆண்களும் சிவப்பு நிறமுள்ள மணமகள் வேண்டும் என்று அலையும் இந்நாட்களில் சண்டே ஸ்டாண்டர்ட் (30-10-77) இதழில் வந்துள்ள விளம்பரம் இதோ! "ஆங்கில விவசாயி தற்சமயம் சென்னையிலுள்ளார். திருமணத்திற்கு விழைகிறார். கறுப்பு நிறம் உடையோருக்கு முதலிடம்."

—எஸ். கௌசல்யா


அறுபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக
இனிமையையும், மகிழ்ச்சியையும் இணைந்துதரும்
Parry's
உங்களுக்காகவே
சிறப்பாகத் தயாரிக்கப்
பட்ட எக்ளேர் வகைகள்:
கோகநட், ஃபிக்,
சாக்லேட்.
Parry's
மிட்டாய்கள் • டாஃபிகள்
பாரீஸ் கன்பெக்ஷனரி லிமிடெட்

PRS/2767

அது, கஷ்டப்படுகிற யாழ்ப்பாணக் குடும்பம். மூத்த பெண் ஞானம். அவள் குலேந்திரன் என்ற முறைப் பையனைக் காதலிக்கிறாள். ஒருநாள் அவள் தம்பி தவராஜன் தான் செய்து கொள்ளப் போகும் காதல் திருமணத்தைப் பற்றி ஞானத்திடம் ரகசியமாகச் சொல்கிறான். தேதியைக் கடிதத்தில் தெரிவிக்குமாறு அவள் கோர, ''ஏன்?'' என்கிறான்.

''நேரில் பார்த்து ஆசிர்வதிக்கத்தான் ஏலாது... கடைசி கோயிலிலே உன்ரை பேருக்கு ஒரு அர்ச்சனை யாவது செய்ய வேண்டாமே...?'' ஞானம் புன்னகையுடன் கேட்டாள்.

தவத்தின் கண்களில் நீர் திரண்டுவிட்டது.

''என்ன இது...? சின்னப் பிள்ளைகள் மாதிரி அழுது கொண்டு? கண்ணைத் துடை...இன்னும் ஒரு புட்டு போடட்டே...?'' —கண்டிப்பும், கனிவுமாகக் கேட்டாள் ஞானு.

''போதுமக்கா. . . . மனம் நிறைஞ்சு போயிருக்கேக்குள்ளே வயித்திலே பசி எடுக்குமே?'' என்றவன் தழுதழுத்த குரலில் சொன் னான். ''உங்களைப் போல ஒரு அக்கா கிடைக்கிறதுக்கு நான் உண் மையில் தவம் செய்திருக்க வேணும்...''

''போடா...போடா . . .சும்மா உளறுமல் போ...மூன் னுக்கு ரெத்தின இருந்தாளென்டால் ஒருக்கால் அனுப்பி விடு.. நான் ராசனுக்குச் சாப்பாடு குடுக்கவேணும்...''

''பிள்ளை ஞானம்... இந்தக் கட கங்களை ஒருக்கால் இறக்கிவிடு பிள்ளை...'' தங்கம்மாவின் குரல் கேட்டு, மாவிடித்துக் கொண்டு நின்ற ஞானம் உலக்கையைச் சாய்த்து வைத்துவிட்டு அவசரமாகப் போனாள்.

''என்னம்மா இது... கூப்பன் எடுக்கிறதுக்கு என்டு போயிட்டு, இவ் வளவு நேரம் சென்டு வாறீங்கள்? சமைக் கிற எண்ணம் இல்லையே...? இன்னும் கொஞ்ச நேரத்தில் அப்பு பசிபசியெண்டு குழறப் போறார்...'' சொல்லிக் கொண்டே தாயின் தலையில் இருந்த கட கங்களை இறக்கி வைத்தாள்.

''உஸ். . .... அப்பா. . ..: என்ன வெய்யில்..... மனிசரைக் கருவாடா ஆக்கிப் போடுது... பிள்ளை ரெத்தினு... சொம்பிலை கொஞ்சம் தண்ண கொண்டுவா...''

''அவள் மா வறுக்கிறாள் அம்மா...நான்கொண்டு வாறன்.

செம்பை வைத்துவிட்டுக் கழுத்து வழியாக வழிந்த நீரை துடைத்தபடியே, ''தம்பியிட்டை இருந்து காகிதம் வந்ததோ...?'' என் விசாரித்தாள் தங்கம்மா.

''ஓமம்மா...விசேசமா ஒன்டும் எழுதேல்லை...ஆரோ சிநே தப் பொடியனுக்கு 19'ம் திகதி கலியாணமாம்...தான் போகவேணு மாம் என்டுதான் எழுதியிருக்கிறான்,'' என்றாள் ஞானு குறுகுறுத் மனத்தை அடக்கியபடியே.

''கலியாணம் என்ட உடனேதான் ஞாபகம் வருது.. குலேந்திரனுக்கெல்லே கலியாணம் முற்றாய்ப் போச்சுதாம்...''

''எ...என்னம்மா. . .என்ன சொல்லுறீங்கள்...?'' ஞான அதிர்ந்துவிட்டாள்.

''குலத்திந்தை தங்கச்சி சித்திராவுக்கெல்லே கலிய ணம் முற்றாகி இருந்தது? அந்த மாப்பிள்ளை பொடியனுக்கும் ஓ

ஜெயம் பவதாரிணி

தங்கச்சி இருக்குதாம்...பின்னே அவையள் மாத்துக்குமாறு முடிக்கச் சொல்லிக் கேட்டிருக்கினம்...அண்ணர் குலத்தட்டைக் கேட்டிருக்கிறார். அவன்தான் யோசிச்சுச் சொல்லூறன் என்டு சொன்னவரும்...போன கிழமை தாயிட்டை—அதான் மச்சாளிட்டை ஓமெண்டு சம்மதம் சொல்லிட்டாரும்...பின்னே உடனேயே கலியாணத்தை முற்றாக்கிட்டினமாம்.. எனக்குச் சங்கக்கடை மனேச்சர்தான் சொன்னார்...எனக்குச் சொல்லாமல் இவ்வளவும் நடந்ததோ என்டு சண்டை போடத்தான் அண்ணரிட்டைப் போனேன்...அவர் என்னட்டை வர வெளிக்கிட்டுக்கொண்டிருந்தார். கண் கலங்காத குறையா எல்லாத்தையும் சொல்லி மன்னிப்புக் கேட்டார்...ம்...இனிமே அவரும் என்ன வேணுமெண்டே செய்தவர்...? போய்க் கதைச்சுக்கொண்டு இருந்தாப்போலே நேரம் போயிட்டுது...'' தங்கம்மா சேலை முடிப்பில் இருந்த பணத்தை அவிழ்த்து எடுத்தவாறே சொன்னாள்.

எதுவுமே ஞானவின் காதில் விழவில்லை. திக்பிரமையடைந்தவளாக நின்றுகொண்டிருந்தாள். என்னவென்று சொல்லமுடியாத உணர்வுகள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து மனத்தையும், நினைவுகளையும் ஏக காலத்தில தாக்கின. பார்வை சூனியத்தில் நிலைகுத்தி நின்றுவிட்டது. இதயத்தை யாரோ பிடுங்கி எடுத்து அவள் முன்னாலேயே இரத்தம் பீறிட்டுப் பாயடிப்பதைப்போல ஒரு பிரமை, ஒரு வேதனை. உலகமே தட்டாமாலை சுற்றுவதைப்போல இருந்தது. உள்ளே போகத் திரும்பிய தங்கம்மா, அவள் நின்ற கோலத்தைக் கண்டுவிட்டு பதற்றத்துடன் அருகே வந்தாள். ''பிள்ளை.. ஞானம்..என்ன செய்யுது...ஞானம்.'' தோள்களைப் பிடித்துக் குலுக்கிய பின்தான் அவள் சுயநினைவை அடைந்தாள்.

''அ. . .எனக்கு . . . எனக்கு ஒன்டுமில்லை... ஒன்டுமில்லை...'' சொற்கள் தெளிவில்லாமல் தனித்தனியாக வெளிவந்தன.

''உனக்கு ஏலேல்லை என்டால் சொல்லு பிள்ளை..மிச்ச அரிசியை நான் இடிக்கிறன்...'' தங்கம்மா பயத்துடன் வினவினாள்.

''இல்லையம்மா ...நான் போட்ட அரிசியை...நான்தான் இடிக்கவேணும்.'' ஞானம் தூக்கத்தில் நடப்பதைப்போல நடந்து உரலின் அருகே சென்றாள். மாவை அரித்துக் கொண்டிருந்த ராசன் கலங்கிய கண்களுடன் சொன்னான். ''அக்கா...நீங்கள் இடிக்கவேண்




டாம் அக்கா...சின்னக்கா இடிக் கட்டும்...நீங்கள் போய்ப் படுங்கோ அக்கா..."

ஞானம் பதிலேதும் சொல்லாமல் உலக்கையைக் கையில் எடுத்தாள். திடீரென்று உடலின் இயக்கங்கள் யாவும் நின்றுவிட்டன போலிருந்தது. ராசனின் முகம் மங்கலாக—மிக மங்கலாகத் தெரிந்தது. "ராசன்... ராசன்...என்னை..." அதற்கு மேல் அவளுக்கு ஒன்றும் தெரியாது. தான் கீழே சாய்ந்து விழுந்ததையோ, ராசன், "ஐயோ அக்கா," என்று கதறியபடி ஊர்ந்து வந்து தன்மேல் விழுந்து கதறியதையோ, ரெத்தினமும், தங்கம்மாவும் பதறியபடியே ஓடி வந்ததையோ அடுத்த இரண்டு நாட்கள் மயக்கம் தெளியாமலேயே தான் கிடந்ததையோ அவள் அறியமாட்டாள்.

அன்று குலம் தனது பெற்றோருடன் கல்யாணத்திற்கு அவர்களை அழைக்க வந்திருந்தான். ஞானத்தையும் ராசனையும் தவிர ஏனைய மூவரும் முன் பக்கத்தில் அவர்களுடன் பேசிக் கொண்டிருந்தார்கள். ஆனால் குலத்தின் கண்கள் காண முடியாத அந்த இருவரையுமே தேடிக் கொண்டிருந்தன. அவர்கள் இருவரது நடமாட்டம்கூடத் தென்படவில்லை.

"என்ன மாமி...ராசனைக் காணவேயில்லை?" தாளமுடியாத தவிப்பின் இறுதியில் வாய்விட்டுக் கேட்டுவிட்டான்.



ஆட்டுக்கார அலமேலு படம் வெளிவந்ததில் யார் மகிழ்ச்சி அடைந்தார்களோ இல்லையோ? அப்படத்தில் நடித்த ஒருவர் நிச்சயம் மற்றவர்களைவிட மகிழ்ந்திருப்பார். யார்?

விடை: 67 'ம் பக்கம்

"அதையேன் தம்பி கேட்கிறாய்...? இப்ப ஒரு கிழமையா ராசனுக்கும், ஞானத்துக்கும் சுகமில்லை.. ராசன் ஏதேதோ கனவெல்லாம் கண்டுட்டு எழும்பி இருந்து ஒவ்வொரு நாளும் அழறான்...இவள் ஞானமும் சரி. பைத்தியக்காரி போல இருக்கிறாள்...ஒரு சிரிப்பில்லை. கதையில்லை சாப்பாடில்லை. நித்திரையில்லை... ரெண்டுக்கும் என்ன வந்ததோ தெரியேல்லை...போன கிழமை புளியடி வைரவருக்குப் பொங்கல் பொங்குகிறது என்று நேர்ந்தனான்...ஆனா... பிறகு காசுக் கஷ்டத்திலே செய்ய ஏலாமல் போயிட்டுது...அதுதான் இதுகளை இப்பிடிப் பிடிச்சிருக்கோ என்னவோ... எப்பிடியும் இந்த மாசம் பொங்கத்தான் வேணும்..."

தங்கம்மாவின் அப்பாவித்தனமான பேச்சு குலத்தைச் சுட்டது. "ராசன்..உள்ளேதான் இருக்கிறானோ?" என்று கேட்டபடி எழுந்து நின்றான்.

"ஓம் தம்பி...போய் பாத்து ஒருக்க தைரியம் சொல்லிப் போட்டு வா...எப்பிடியாவது அவன் தெளிஞ்சால் எனக்கு அது போதும்" என்றாள் வேதனை கலந்த புன்னகையுடன்.

குலம் கனத்த இதயத்தை ஒரு புன்னகையால் மறைத்தபடி உள்ளே நடந்தான். அங்கேயும் அவர்களைக் காணவில்லை. ஓரமாக இருந்த அறைக்குள் மெதுவாக எட்டிப் பார்த்தான். குப்பி விளக்கின் மெல்லிய வெளிச்சத்தில் ராசன் ஏதோ புத்தகத்தை வைத்துக்கொண்டு இருப்பது தெரிந்தது.

"என்ன ராசன்...ஆளைக் காணேல்லை...?" வலிந்து அழைத்த புன்னகையுடன் குலம் அவனை நெருங்கினான். ராசன் சட்டென்று நிமிர்ந்து பார்த்தான். அந்தப் பார்வையில் தெரிந்தது கோபமா, ஆத்திரமா, வெறுப்பா, வேதனையா? இனம் காண முடியவில்லை. ஒரு நிமிடம்தான். மறு நிமிடம், "அக்கா...எனக்கு நித்திரை வருது...நான் படுக்கிறன்..." கூறிக் கொண்டே போர்வையால் முழுவதும் வரை இழுத்துப் போர்த்திக் கொண்டு குப்புறப் படுத்துவிட்டான் ராசன்.

குலம் திகைத்துப் போய் அவனை நின்றான். வேதனை பந்தாக வெடித்து நெஞ்சை அடைத்துக் கொண்டது.



ஆட்டைவிட அதிக மகிழ்ச்சி அடைந்தவர்

விடை: அதிகம் மகிழ்ந்தவர் ஸ்ரீப்ரியா. அவர் பெற்றோர் அவருக்கு வைத்த பெயர் அலமேலு..

—எல். சங்கர்

"அதுக்குள்ளை படுத்திட்டியோ ராசன்? சாப்பிட வேண்டாமே?" நலிந்த குரலைத் தொடர்ந்து ஞானா வரும் ஓசை. குலம் திரும்பிப் பார்த்தான். வாசற்படியில் வந்து நின்ற ஞானா அவனை எதிர்பார்க்கவில்லை போலும். ஒரு நிமிடம் திடுக்கிட்டாற் போல நின்றாள். சட்டென்று தன்னைச் சுதாரித்துக் கொண்டு திரும்பியவளை "ஞானா..." என்ற வேதனை படிந்த அவன் குரல் தடுத்து நிறுத்தியது.

"ஞானா...என்னை மன்னிச்சிடும்..." வேதனையில் உருவாகி, அழுகையிலே தோய்ந்து கரகரத்த குரல் உருத்தெரியாமல் வெளிவந்தது.

"ஞானா...நான் செய்தது.. எப்பிடி உமக்கு விளங்க வைக்கிறதெண்டு...ஞானா...நான்..." அவன் திணறினான்.

கண்ணீர் வெளிவராத கல்லாக இருந்த அவள் இப்போது, பொங்கிவரும் அழுகையை அடக்க முயன்று தோற்றுப் போனாள். அந்தத் தோல்வியின் அறிகுறியாக ஒரு கேவல் பரிதாபமாக எழுந்தது. அதைக் கேட்டதுதான் தாமதம். போர்த்துக் கொண்டு படுத்திருந்த ராசன் சட்டென்று எழுந்து உட்கார்ந்தான்.

"அக்கா...நீங்க உள்ளே போங்கோ." கடுமையும் கண்டிப்புமாக வெளிவந்தது அவன் குரல்.

ஞானா திரும்பிப் பார்த்தாள். அந்த மெல்லிய குப்பி வெளிச்சம்கூட அவளது கண்ணீர் நிறைந்த, பரிதாபமான முகத்தைத் தெளிவாகக் காட்டியது.

"உள்ளே போங்கோ அக்கா." அவன் மீண்டும் அதட்டினான். அந்தப் பதினைந்து வயதுச் சிறுவனின் குரலுக்குக் கட்டுப்பட்டு அவள் பொங்கும் அழுகையைக் கைகளால் பொத்தி அடக்கியவாறே, உள்ளே ஓடிவிட்டாள். ராசனின் பார்வை குலத்தின் பக்கம் திரும்பியது.

"அத்தான்...நீங்கள் கலியாணத்துக்கு அழைக்க வந்தீங்களெண்டால் வாசலிலேயே நின்டு அழைச்சிட்டுப் போங்கோ...இஞ்சை வரத் தேவையில்லை...அக்காவை ஏமாத்தினது போதாதெண்டு, சளாப்பி, மழுப்பவும் வந்திட்டீங்கள் என்ன...உங்களுக்கு இதயம் என்டு ஏதாவது இருக்குதா?" தணலாக வெளிவந்தன அவன் சொற்கள்.

"ராசன்...ஞானாவை. ...? நான்..."

"நீங்கள் கைவிட்டது போலை நாங்கள் விடமாட்டோம். ஆர் விட்டாலும் நான் விடமாட்டேன்...எனக்குக் காலிலதான் ஊனம்...உங்களைப் போல மனசில இல்லை.. என்ரை ரெண்டு கை இருக்கிற வரைக்கும் நான் அக்காவை வைச்சுக் காப்பாத்துவன்.. நீங்கள்...உங்கடை கலியாணத்துக்கு எல்லாரையும் அழைச்சுக் கொண்டு போங்கோ..."

கண்டிப்பான குரலாலும், கடுரமான சொற்களாலும் தாக்கிய ராசன், பழையபடி போர்வையில் மூடிக்கொண்டு படுத்துவிட்டான்.

குனிந்த தலையுடன், கண்களில் நீர் மல்க, வேதனை நெஞ்சைப் பிளக்கக் குலம் மௌனமாக வெளியேறினான்.

அன்று கல்யாணம்:

குலத்துக்கு மட்டுமல்ல; தவராஜனுக்கும்கூடத்தான். வீட்டில் எல்லோரும் குலத்தின் கல்யாணத்துக்குப் போய்விட்டிருந்தார்கள். ராசனும், ஞானாவும் மட்டும் வீட்டில் இருந்தார்கள். கல்யாண வீட்டிலிருந்து நாதஸ்வர ஓசை காற்றில் மிதந்து வந்தது. ஞானா கால்களைக் கட்டிக் கொண்டு, தூணோடு சாய்ந்து கொண்டிருந்தாள், பார்வை நிலைகுத்தி நிற்க.

தூரதர்சனம்



சென்னையின்
உயரங்களின் உயரம்
ஏதோ எழுத
நிலப் பலகை வரை
நீண்டு
விருட்டென்று ஞாபகம் இழந்து
நின்றது—அது
காற்றில் கரைந்து
கம்பிகளில்
ஸ்கலிதமாயிற்று.

ஏவப்படாத ஏவுகணை—
இதன்மேல
முகில் மந்தைகள்
முதுகுத் தினவுக்கு
உராய்ந்து போகும்.
தரை—இம்மொட்டை
மாத்திற்குக் கிளைகளைத்
தரும்போது—
விண்—தன்
'மீன்' குஞ்சுகளுக்குச்
சிறகுகள் தரும்.

இந்த
ஊமைக் கோபுரத்தின்
உதடுகள்
விறைத்த மாடிகளில்
திறக்கப்படுகின்றன.
இறுகிய இமைகள்
பிரிக்கப் படுகின்றன.

ஈரம் வடிந்த
இரும்பு பின்னிய இது...
இல்லாதவர்க்கு—தூரதரிசனம்
இருப்பவர்க்கு—சமீபதரிசனம்.

எந்த நந்தனும்
இந்தக் கோபுரம்
காணலாம்— ஆனால்
கருவறை காட்சிக்கு
அருகதை அவனுக்கில்லை.
சமத்துவம் கேட்கும்
சாமானிய னுக்கு
அச்சம் காட்டவோ
உச்சிக் கொண்டையில்
சிவப்பு விளக்கு!

—தமிழன்பன்

முகம் வெளுத்திருக்க, கேசம் காற்றில்
பறக்க...அவளை அப்படிப் பார்க்க
ராசனுக்குப் பயமாக இருந்தது. கை
களை உந்தி, உந்தி நிலத்தில் ஊர்ந்து
அவளருகே வந்தான்.

"அக்கா . . அக்கா . ."
அவள் அசையவில்லை.

"அ க் க ா...எ ன் னை ப
பாருங்கோ...உங்களுக்கு என்ன வ
தது? அக்கா..." ராசனின் குரலி
பீதி கலந்திருந்தது. ஞானம் கண்க
மட்டும் திருப்பி அவனைப் பார்த்தாள்

"அக்கா...அப்பிடிப் பா
காதீங்கோ...எனக்குப் பயமா இரு
குது...பாக்காதிங்கோ அக்கா..."
ராசன் கலங்கிய குரலில் சொன்னான்

"எனக்கு விசர் பிடிச்சி
டுது என்டு நினைக்கிறியோ ராசன்...?"
அவள் மெதுவாக, உணர்ச்சியற்
குரலில் கேட்டாள்.


"அக்கா..." உதடுக
துடிக்க, கண்கள் கலங்க ராச
அவளைப் பார்த்தான்.

"ஐயோ ராசன்...கடவு
ஏனடா இப்பிடிச் சோதிக்கிறார்...?
அவள் திடீரென்று அவனைக் கட்டி
பிடித்துக்கொண்டு குலுங்கக் குலுங்
அழுதாள். ராசனும் அழுதான். அ
களது கண்களிலே வழிந்த நீ
கொழும்பிலே ஒருவனது நெஞ்சிலு
அதே ஊரில் ஒருவனது நெஞ்சிலு
வழிந்து கொண்டிருந்தது. காற்றி
கலந்து வந்த நாதஸ்வர ஓசை நின்
சமயம், இங்கே அவர்களும் அழு
ஓய்ந்திருந்தார்கள்.

"ஞானம் அக்கா.....இ
தாங்கோ..." பக்கத்து வீட்
பையன் கையில் அர்ச்சனைத் தட்டு
களுடன் நின்று கொண்டிருந்தா
"நீங்கள் சொன்னபடி என்ன
குலம் அண்ணாவிந்தை பேரிலேயு
ஒன்டைத் தவம் அண்ணா விந்
பேரிலேயும் செய்தனான்." ஞா
உணர்ச்சியற்ற பார்வையுடன் அ
றை வாங்கிக் கொண்டாள்.

"மற்றது...வந்து...கு
அண்ணா இதைக் குடுக்கச் சொல்
தந்தவர்..." அவன் தயங்கியபடி
ஒரு கடிதத்தை நீட்டினான். ஞா
அதையும் வாங்கிக் கொண்டாள். "நா
போறனக்கா..."

பபடி டிரெஸ்
ணிந்கொண்டு
் பெண்
ர்மீது உட்கார்ந்
நக்கும்போது
தைக் காருக்குத்
ள ஓட மனசு
நம்?
ம்:
ல்கான்றினக்கி
சிலா'
லயாளம்)



ஞானு கையிலிருந்த கடி தைப் பார்த்தாள். முதலும் கடைசி கக் குலத்திடமிருந்து வந்த கடிதம். தப் பிரித்துப் படித்தாள்.

"என் அன்பு ஞானு,

அன்று என்னைப் புரிய க்காமலேயே திரும்பிவிட்டேன். டிச் சமாதானம் சொன்னாலும், டி மன்னிப்புக் கேட்டாலும் என் ம் திரப் போவதில்லை. ஆனல் ு, என்னை நீர் விளங்கிக் கொண் என்றுல் அதுவே எனது புண்பட்ட நுக்குச் சிறிது ஆறுதலைக் கொடுக் ஞானு, எங்கள் சமூகத்தில் தரிகளுடன் பிறக்கக்கூடாது; அதி மூத்த சகோதரனுகப் பிறக்கவே து. உமக்குத் தெரிந்திருக்கும், ராவின் கல்யாணம் நிச்சயமான ரகு, ஊர் அறிய வீட்டுக்கு சித்திராவுடன் பழகியது. அந்த ில் ரகுவின் தங்கையை நான் க்காவிட்டால் சித்திராவின் கல் ம் நடக்காது என்ற நிலையில் என் என்ன செய்ய முடியும்? உம்மை வாழவைக்காவிட்டாலும், நீர் என்னை மன்னிப்பீர். அது எனக்குத் தெரியும். ஆனல் என் தங்கையை வாழவைக்கா விட்டால் என் பெற்றோர் தொடக்கம் ஊரார் வரை எவருமே மன்னிக்க மாட்டார்கள். இப்போது நான் வாங் கும் சீதனம் சித்திராவை மட்டுமல்ல; இந்திராவையும் வாழவைக்கும். கடைசி யில் பணத்துக்காக நாம் பிரிய வேண்டி யிருக்கிறது என்பதை நினைக்கும்போது தான் என் இதயமே வெடிக்கும் போலி ருக்கிறது. விளையாட்டுக்குக்கூட உம்மை வேறொருவன் திருமணம் செய்வதை நினைத்துப் பார்க்க முடியாத நான், இப்போது உண்மையாகவே உமக்கு அப்படி ஒரு நிலையைத் தந்திருக்கிறேன். ஆனல் என் நிலையில் யார் இருந் தாலும்—ஏன், தவமாக இருந்தால்கூட இப்படித்தான் செய்திருப்பான். என் அன்பு ஞானு, மானசீகமாக உம் கால் களில் விழுந்து மன்னிப்புக் கேட்டு, நிரந்தரமாகப் பிரிகிறேன்.

—குலம்"

ஞானு கடிதத்தை மார் போடு அணைத்துக் கொண்டாள்.

அவள் கண்களிலிருந்து கடைசியாக வெளியேறிய அந்தக் கண்ணீர்த் துளி, கடிதத்தில் விழுந்து, குலத்தை அவள் மன்னித்துவிட்டதைச் சொல்லாமல் சொல்லிற்று. காதலுக்காகச் சீதனத்தை எதிர்த்து, சகோதரியை வாழவைக்காத ஒருவன்.....சகோதரிக்காக, சீதனத்தை வாங்கி, காதலியை வாழவைக்காத ஒருவன்...இவர்களில் யார் நல்லவன்...? யார் கெட்டவன்? இவர்கள் இருவராலும் கைவிடப்பட்ட நெத்தியாக அவள் கடைசியாக அழுது கொண்டிருந்தாள்.

''தபால்...'' வாசலில் தபால்காரரின் குரல் கேட்டது.ஞானம் எழுந்துபோய் வாங்கி வந்தாள். கடிதத்தைப் பார்த்ததுமே அது தவராஜ னிடமிருந்து வந்தது என்பதைப் புரிந்து கொண்டாள். அவன் தனக்கு அன்று கல்யாணம் ஆகும் விஷயத்தை எழுதி, அப்புவினதும், அம்மாவினதும் மன்னிப்பைக் கோரியிருப்பான். ஒரு பெருமூச்சுடன் கடிதத்தை மாடத்தில் வைத்துவிட்டு வந்து உட்கார்ந்து கொண்டாள் ஞானு. இனிமேல்...? இனிமேல் என்ன நடக்கும்...?

பெற்றோர் வந்ததும் கடிதத்தைக் கொடுப்பாள். அவர்கள் முதலில் இடிந்து போவார்கள்; பிறகு அழுவார்கள்; அதன்பின் ஆத்திரத்தால் திட்டுவார்கள். காலத்தின் வே[…] தில் யாருடைய கோபம் மாறினாலு[…] அப்புவின் கோபம் மாருது. அவர் உ[…] ருடன் இருக்கும்வரை அந்த வீட்டு[…] தவராஜனே, அவனது கடிதமோ, ம[…] யாடரோ வர முடியாது. வர[…] விடமாட்டார். தத்தளிக்கும் குடும்ப[…] படகை அவள்தான் ஓட்டுவாள். அ[…] தான் நெசவு வேலை இருக்கவே இ[…] கிறதே? இப்பொழுது ரெத்தினு[…] அவளுக்கு தையல், கோழி வளர்[…] என்று உதவுவாள். ராசன் த்ன் [...] குக்குத் தன்னுல் முடிந்ததைச்செய்வா[…]

''பொம்பிளைப் பிள்[…]யைக் கொண்டு உழைப்பிச்ச[…] சாப்பிடுறன்.........'' என்[…] அப்பு மனதுக்குள் அழுவார். அம்ம[…] இனம் தெரியாத கோபத்துக்கு[…] வெறுப்புக்கும் அடிக்கடி ஆளாவா[…] அவளை யாருமே 'ஞானு' என்[…] அழைக்கமாட்டார்கள். இவ்வளவு முடி[…]களையும் கொண்ட ஆரம்பமாக அந்த[…] கடிதம் மாடத்தில் கிடக்கிறது.

வெளியிலே படலை திறந்[…] சத்தம் கேட்கிறது. அப்புவும், அம்ம[…]வும், ரெத்தினுவும் கல்யாண வீட்[…]லிருந்து திரும்பிக் கொண்டிருந்தார்கள். ஞானு முகத்தை அழுந்தத் துடைத்து[…] கொண்டாள்.

முற்றும்

பல்தேவின் எருமை உடல் நலமில்லாது படுத்துவிட்டது. அவனுக்கு ஒரே வருத்தம். கால்நடை வைத்தியரிடம் ஓடினுன். அவர் எருமைக்குக் கொடுக்கச் சொல்லி மருந்து கொடுத்தார்.

''இதை எப்படி எருமைக்கு[…] ஊட்டுவது?'' என்று கேட்டான்.


''இந்த மூங்கில் குழாயை[…] அதன் வாயில் வைத்து, இதன் வழி[…]யாக மருந்தை ஊதிவிடு,'' என்று[…] மருத்துவர் விளக்கினுர்.

சிறிது நேரத்தில், ''ஐயோ[…] டாக்டர், மோசம் போனேனே,'' என்று கதறி[…]படி ஓடிவந்தான் பல்தேவ்.

வைத்தியருக்கோ அதிர்ச்சி[…] ''அடடா, என்னவாயிற்று?'' என்ருர்.

''ஐயோ சாமி, எருமை முந்திக்[…] கொண்டுவிட்டதே. நான் ஊதுவதற்குள் என்[…] வாயில் அது ஊதிவிட்டதே, என்ன செய்வேன், ஐயோ!'' அலறினுன் அவன்.

—டி. எஸ்;



எஸ். டில்லி

ஏர் இந்தியாவின் ஸாம்ராட் அசோக் 747 ஜம்போவினுல் இந்தியாவுக்கு நல்ல அந்நிய செலாவணி என்று நினைக்கிறேன். மத்தியக் கிழக்கு நாடுகளில் பறக்கும் எல்லா விமானப் போக்குவரத்துக்கும் இந்தக் 'கறுப்புத் தங்க' யுகத்தில் கணிசமான லாபம் இருந்தாக வேண்டும். குறிப்பாக இந்தத் துபாய் இன்டர்நேஷனல் ஏர்போர்ட் ஒரு கமர்ஷியல் ரூட். எல்லா ஃப்ளைட்டுகளுமே நிறைந்த பயணிகளைக் கொண்டிருக்கும். ஸாம்ராட் அசோக் 747– ஐப் பற்றிச் சொல்லத் தேவையில்லை. ஈசல் புற்றுப்போல் அப்படியொரு கூட்டம்.

விமானத்தை விட்டுக் கஸ்டம்ஸ் கிளியரன்ஸுக்காகப் போய்க் கொண்டிருக்கும்போது ஒரு வட நாட்டவர் ஹிந்தியில் என்னிடம் முணுமுணுத்தார். "நம்ம ஆளுங்களே நம்மை மதிக்கறதில்லே. வெள்ளைக்காரனுடைய மயக்கம் இன்னமும் நமக்குத் தீரலே..."

"யாரைச் சொல்றீங்க...? எதைக் குறிப்பிடறீங்க...?"

"நம்ம ஏர் ஸர்வீஸைத் தான். சரியான உபசரிப்பே இல்லே. ஹெனிகேன் பியருக்கு ஆர்டர் கொடுத்து ஒரு மணி கழிச்சும் வரலே. லஞ்ச் எல்லாம் முடிஞ்சப்புறம் கொண்டு வர்ருங்க. என் பக்கத்திலே ஒரு பையன் ரெண்டு மூணு தடவை குடிக்கத் தண்ணீர் கேட்டுத் தொந்தரவு பண்ணிட்டான். அந்த ஹோஸ்டஸ் முகத்தைப் பார்க்க சகிக்கலே, போங்களேன்..."

"பாவம்... அவங்க என்ன செய்ய முடியும்? கூட்டம் அப்படி. ஜனங்களும் இம்மாதிரி பயணங்களுக்கு இன்னமும் பக்குவப்படாதவங்க. பிரயாணிகளும் அவங்களுக்கு ஒத்துழைச்சா சரிப்பட்டுப் போயிடும்."

"நோ.....நோ......இதே கூட்டம், இதே ஜனங்கள் மத்த ஏர் வேய்ஸ்லேயும் போகலேயா என்ன! நானும் எல்லா சர்வீஸ்லேயும் போயிருக்கேன்."

நானும்தான் போய் வந்திருக்கிறேன். ஆனல் அவருடைய அனுபவத்திற்கும் என்னுடைய நோக்குக்கும் வேறுபாடுகள் இருந்தன. இவை எங்கும் வியாபித்துள்ள வியாபார ஏற்றத் தாழ்வுகள்.

அரைமணிக்குள் கஸ்டம்ஸ் கிளியரன்ஸ் முடிந்து வெளியே வந்தேன். நல்ல வெய்யில். புழுக்கம் அதைவிட அதிகம். இந்த அறுபத்தைந்து எழுபத்தைந்து சதவிகித ஹுமிடிட்டியினுல்தான் பேரீச்சம் பழங்கள் பழுக்க முடியும். பேரீச்சம் பழங்கள் மட்டும்தானு? மனிதர்கள் கூடத்தான். ஏர்போர்ட் டாக்ஸியின் டிக்கிக்குள் என் ஸூட்கேஸைப் போட்டுவிட்டு உள்ளே ஸீட்டில் அமர்ந்தேன். டிரைவர் மேலும் இரண்டு மூன்று பயணிகளுக்காக "பஜார், பஜார்" என்று கூவிக் கொண்டிருந்தார். பழக்கப்பட்டவர்களுக்குத் தெரியும், இந்த ஏர் போர்ட் டாக்ஸியில் போனுல் அநியாய சார்ஜ் என்று. எனவே இரண்டு மூன்று ஆட்கள் சேருவதற்கே பெரு நேரம் பிடித்தது. போரடித்தது எனக்கு. சிகரெட்டை எடுத்துப் பற்ற வைக்கப் போனேன். கூவிக் கொண்டிருந்த அரபி டிரைவர் சிரித்தவாறே,

ரூ 500 பரிசு பெறும் மத்தியக் கிழக்குக் கதை



"ரஃபீக்...அதா ரமதான்..." என்றார். பிறகுதான் எனக்கு ஞாபகம் வந்தது: தற்பொழுது ரமதான் (ரம்ஜான்) நோன்பு நேரம் என்று. பொது இடங்களில் நோன்பு காலங்களில் புகை பிடிப்பதோ சாப்பிடுவதோ கூடாது. சில சமயங்களில் தண்டனைக்கு ஆளாவதும் உண்டு. முஸ்லிம் அல்லாத மற்றவர்கள் வசதிக்காக இரண்டொரு உணவு விடுதிகள் திறந்து வைக்கப்பட்டிருக்கும்.

இரண்டு மலையாளிகள் டாக்ஸியில் ஏறியதும் டிரைவர் காரை ஓட்டத் தொடங்கினர்.

ஒவ்வொரு முறையும் நான் இந்தியாவுக்குச் சென்று திரும்புகையில் ஒரு மாற்றத்தைக் காண முடிகிறது இந்த துபாயில். வளர்ச்சியில் அத்தனை வேகம். வெறும் மணல் பிரதேசமாக இருந்த இடங்களில் எல்லாம் லக்ஸரி வில்லாக்களும் இன்டர்நேஷனல் ஓட்டல்களும் ஷோ ரூம்களும் முளைத்திருந்தன. நாடு கடத்தப்பட்டவனைப் போல் நான் இங்கு வந்திறங்கியதும், துபாய் என்னை அரவணைத்துக் கொண்டதும், இதற்கு நான் செய்துள்ள உழைப்பும் என் மனதில் பசுமையாக இருந்தது. துபாய் ஏர்போர்ட்டிலிருந்து தொடங்கி ஜபல் அலிகாஸ் ப்லான்ட் வரை இதன் ஒவ்வொரு மைல் விஸ்தீரணத்திலும் என் வியர்வை சிந்தியிருக்கிறது. இந்த உழைப்பை நான் என் நாட்டுக்குச் செய்திருந்தால்.....?

வேண்டாம், இதன் பலன்

லன்களை விமரிசிக்க வேண்டாம். தர்க்கத்திற்குரிய விவாதமாகிவிடும். வேலை முடிந்து வரும் ஒவ்வொரு முன்னிரவிலும் நண்பர்களோடும் மற்ற ரூம் மேட்களுடனும் இந்த விவாதங்களுக்கு முடிவில்லாமல் பேசிக் களைத்துப் போவதுதான் மிச்சம். உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்கிறது. ஆனால் வாழ்க்கைத் தரம் உயர்ந்துவிட்டது என்று சொல்வதற்கில்லை. தஞ்சை மாவட்டத்தில் ஒரு புளிய மரத்தடியில் சாக்குப் பாயை விரித்துத் தூங்குவதும் சரி; இங்கே ஏ ஸி ரூமில் நைலான் பாயை விரித்துப் படுப்பதும் சரி. அங்கு வசதிக்குப் போராடுகிறோம். இங்கு தரத்திற்குப் போராடுகிறோம்.

டாக்ஸி டிரைவர் ஏஸியை ஆன் செய்து விட்டுக் கேஸட்டையும் போட்டார். அரபு-நாட்டுப் பாடல்கள் ஒலித்தன. சாலையில் அத்தனை சுறுசுறுப்பு இல்லை. நான் இறங்க வேண்டிய இடம் வந்ததும் பத்து திர்ஹம் பணத்தை டிரைவரிடம் நீட்டினேன். இருபது வேண்டும் என்று கேட்டார். நான் ஒருவன் மட்டும் டாக்ஸியை எங்கேஜ் பண்ணியிருந்தால் இருபத்தைந்து கூடக் கொடுக்கலாம். காரணம் அது ஏர்போர்ட் டாக்ஸி. மற்ற இருவர் இன்னும் சற்று தொலைவு சென்று இறங்கக் கூடியவர்கள். அவர்களிடமும் அவர் வசூலிப்பார். மேலும் அதிகம் கேட்பது நியாயமில்லை என்றேன்.

''ஷூர்த்தாவிடம் போகலாம் வா,'' என்றார். இதற்குள் டிராஃபிக் போலீஸாரே பென்ஸ் காரில் வந்து விசாரித்தார்கள். தலைக்குப் பத்து திர்ஹம் கொடுக்க வேண்டும் என்று சொல்லி விட்டுப் போய்விட்டனர். டாக்ஸி டிரைவரும் கறுவிக் கொண்டு போய்விட்டார்.

என் ரூமை வந்தடைந்த போது மணி பிற்பகல் ஒன்று இருக்கும். ரூமில் யாரும் இல்லை. ஏ. ஸி.யை ஆன் செய்து விட்டு அக்கடா என்று கட்டிலில் விழுந்தேன். தாகமாயிருந்தது. நண்பர்கள் ஃப்ரிட்ஜில் வைத்திருந்த ஆரஞ்சு ஜூஸ் டப்பி இரண்டை எடுத்துக் குடிக்கும்போது பாலு வந்தான்.

''நீ இந்நேரம் வந்திருப்பேன்னுதான் வேலையிலிருந்து சீக்கிரமா வந்தேன். ஊர்லே அம்மா எல்லாரும் சுகமா?...'' என்றான்.

ஒரு டப்பியை நீட்டினேன். ''எல்லாரும் ஓகே...! உன் வீட்டிலும் நல்ல சுகம். உனக்காக முறுக்கு, அதிரசம், ஊறுகாய் எல்லாம் கொடுத்தாங்க. உன் தம்பி இப்போ எங்கே...?''

''அபுதபியிலே இருக்கான். ரொம்ப கழிச்சு இப்பத்தான் அவனுக்கு நல்ல வேலை கிடைச்சிருக்கு.''

''அவனை உடனே உங்க வீட்டிலே வரச்சொன்னாங்க. நல்ல வரன் வந்திருக்காம். கண்டமான டௌரி கிடைக்குமாம். பொண்ணும் நல்லா இருக்காளாம்...''

பாலு சிணுங்கினான். ''எனக்கும் ரெண்டு மூணு லெட்டர் எழுதியிருக்காங்க. இப்ப அவசரம் ஒண்ணுமில்லே, ரெண்டு வருஷம் போனப்புறம் பார்க்கலாம்னு பதில் எழுதியிருக்கேன்.''

''அது சரி. உனக்கு ஃபாமிலி ரூம் கிடைச்சுதா? உன் பெண்டாட்டி உன்னைக் கண்டதும் உண்டு இல்லேன்னு ஆக்கப் போறாளாம். ரெண்டு வருஷமாவா நீ ஃபாமிலி ரூமை தேடிக்கிட்டிருக்கேன்னு கேட்கிறாங்க.''

''கேள்வி கேக்கறவங்க சுலபமா கேட்டுட்டாங்க. நம்ம பிரச்சினை அவங்களுக்குத் தெரியுமா? வீட்டுக்காரன் ஆறு மாசத்துக்கொரு தரம் வருஷத்துக்கு ஒரு தரம் வாடகையை ஐநூறு ஆயிரம்னு ஏத்திகிட்டுப் போறான். அந்த அளவுக்கு நமக்கும் சம்பளம் உயர்ந்தால் நம்பி வீட்டை எடுக்கலாம். நிலைமை சீரா இல்லையேடா...!''

''அப்படியிருக்கப்போ நீ ஏன் பிராமிஸ் பண்ணிட்டு வந்தே..? கல்யாணமாகி மூணு மாசத்துக்குள்ளே மனைவியைக் கூட்டிக்கிறதா சொன்னதாலேதான் உனக்குப் பொண்ணைக் கொடுத்தாங்களாம். உனக்குப் பணம் பிரதானம்னு கல்யாணம் செஞ்சுகிட்டிருக்கக் கூடாது. அந்தப் பெண்ணோட வாழ்க்கைதானே பாழாவுது!''

''டேய் மடையா!'' என்றான் பாலு கோபத்தோடு. ''இங்கே நாம வந்தது எதுக்காகடா...? ஆணி அடிச்சுக் குந்திக்கிட்டிருக்கவா...? பணத்தை எவ்வளவு சேர்க்க முடியுமோ அவ்வளவு சேர்த்துகிட்டு ஊரைப் போய் சேராம சொகுசா வாழ்க்கை நடத்தவா...? பணத்தைத் தவிர இங்கே என்னடா

கேர்ஃப்ரீ* பாதுகாப்பு



அதாவது இது <u>முழுமையான</u> பாதுகாப்பு அளிக்கிறது. இதற்காக நீங்கள் கொடுக்கும் பணத்தைவிட மிக அதிக மதிப்பு வாய்ந்தது.

மாதத்தில் அந்த ஐந்து நாட்கள், பெண்களின் உடலுக்கு முழுவதும் நம்பகமான, தனிப்பட்ட பாதுகாப்பு தேவைப்படுகிறது: அதாவது கேர்ஃப்ரீ பாதுகாப்பு. சானிடரி பாதுகா ்பு சாதனங்களை உருவாக்கும் உலகின் தலையாய நிறுவனமான ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன் இதைத் தயாரிக்கிறார்கள். ஒரு பெண்மணி பாதுகாப்பையும் காப்புறுதியையும் உணருவதற்குத் தேவையான சிறந்த அம்சங்களைக் கொண்டுள்ளது கேர்ஃப்ரீ.

இருக்கு? ஒரு காவிரி இருக்கா:..? ஒரு ஒட்டஞ் சத்திரம் இருக்கா...? தோப்புத் தொரவு இருக்கா...? சம்பாதிக்கிற பணத்தைக் கரியாக்கச் சொல்றியே!'' குளுமையான அறையிலேயே அவனுக்கு வியர்த்துக் கொட்டிவிட்டது ஆவேசத்தினுல்.

''உனக்குக் காவிரியும் ஒட்டஞ்சத்திரமும்தான் வாழ்க்கை. மத்தவங்களுக்கும் அப்படி இருக்கணும்னு என்னடா நியாயம்? குடும்பத்தை நடத்தறவங்கல்லாம் இங்கே இல்லையா என்ன?''

''ஏராளமா இருக்காங்க. அதைப் பற்றி எனக்குக் கவலையில்லே. என் நியாயத்தை நான் சொல்றேன். பணத்துக்காக வந்தோம். அதை ஏன் வேஸ்ட் பண்ணணும்?''

''சரி. இப்போ எனக்குப் பசி. எங்கே சாப்பாடு கிடைக்கும்?'' என்றேன்.

''சாதனு ரெஸ்ட்டாரண்டில் கிடைக்கும். வா போகலாம். இந்த ரமதானில் ஒட்டல்காரனும் கொள்ளை அடிக்க ஆரம்பிச்சுட்டான். ஒரு லஞ்ச் எட்டு திர்ஹம்,'' என்ருன் நண்பன்.

அன்று மாலை நானும் பாலுவும் ஷார்ஜாவுக்குக் கிளம்பினோம். துபாயிலிருந்து பதினைந்து கிலோமீட்டர் தொலைவிலுள்ள யு. ஏ. ஈ. யின்



கி. வா. ஜ. விரல் விட்டு எண்ணக்கூடிய அளவுக்குத்தான் இதுவரை சினிமாக்கள் பார்த்திருக்கிருர். அண்மையில் அவர் பம்பாய் சென்று வந்தார். ரிஷிகேஷ் முகர்ஜி, தபன் சின்ஹா முதலிய டைரக்டர்களைச் சந்தித்து உரையாடி விட்டு வந்தவர். காரணம்? மத்திய பிலிம் சென்சார் போர்டில் கி. வா. ஜ. வை உறுப்பினராக நியமித்திருக்கிருர்கள்.

மற்றொரு ஸ்டேட்: அதற்கென்று த ராஜபரிபாலனம் உண்டு. யு. ஏ. யின் பொதுவான கூட்டுக் கொள் களைத் தவிர ராஜ்ய பரிபாலனத் ராஜ்யத்துக்கு ராஜ்யம் சில வே பாடுகளைக் காண முடிகிறது.

டாக்ஸி டிரைவர் ஒரு ட டாணியர். லதா மங்கேஷ்கரின் பழை பாடல்களைக் காஸட்டில் ஒலிபரப்பின பாகிஸ்தான் கவாலி பாடல்களை ஒ கத் தொடங்கிய போது பாலு வே டான் என்னிடம், ''எங்கே...? பையா வீட்டுக்குப் போறேமா?''

''ஆமாம். ஊருக்குப் போற போது சில குடும்ப விவகார களைச் சொல்லி அனுப்பியிருந்தார்'' என்றேன்.

''அவர் பெண்ணை நீ டிக்கப் போறதா கேள்விப்பட்டே நிஜம்தானு?''

''எல்லாம் சரிப்பட்டு தால் நடக்கும். சுப்பையாவோட விரு பம் அது.''

''நீ விரும்பலையாக்கும்?''

''பெண்ணோட மனசு படியோ?'' என்றேன்.

அவன் சொன்னுன்:

''அது எனக்குத் தெரியா பட்..பெண் நல்லாத்தான் இருக்கா வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டுன் பேசுவாள். நீ அவளுக்கு சரிப்பட் வரணும்னு உன்னைத் தான் நீ அ ஜஸ்ட் பண்ணிக்கணும். ஒட்டுமா கனி அவள்.''

''அப்படீன்னு...?''

''ஓ...!'' என்று சிரி தான் பாலு. ''தெரியாத மாதிரியில்லே கேட்கிறே!''

சுப்பையாவுக்குப் பூர்வீக கோயம்புத்தூர் காளப்பட்டி. ஆ வருஷங்களுக்கு முன்பு சென்னை வ திருந்தபோது என் நண்பன் ஒருவனை பார்க்கக் காளப்பட்டி போயிருந்தேன். நண்பன் மூலம் அறிமுகமானவர் இந் சுப்பையா. குடும்ப பாரம் அதிகம். வருமானம் வறுமை. நான்கு பிள்ளை செல்வங்கள். அரசாங்க ஆஸ்பத்தி யில் லாப் டெக்னிஷியனுக இருந்து கட்டுப்படி ஆகவில்லை. அரசாங் சொத்தில் கை வைத்துவிட்டார். வேலை நீக்கம். பிரயத்தனப்பட்டு ஒ டாக்ஸ் போர்ட்டுக்கு ஏற்பாடு செய் விட்டார், எப்படியாவது பாரச்

வளைகுடாவுக்கோ அரேபியாவுக்கோ போய்விட வேண்டும் என்று சில தரகர்களையும் நண்பர்களையும் நம்பி சொத்துக்களைச் செலவிட்டதுதான் மிச்சம். என் உதவியை நாடினார்.

துபாய்க்கு வந்த பிறகு ஒரு அரபு வியாபாரியின் துணையை நாடினேன். சுப்பையா வந்து சேர்ந்தார். அவருடைய நல்ல காலம், வந்தவுடன் அரசாங்க ஆஸ்பத்திரியில் வேலை கிடைத்துவிட்டது. அவர் ஒரு வகையில் காலூன்றிய பிறகு குடும்பத்தையும் அழைத்துக் கொண்டார். இரண்டு பையன்களை ஊரில் தாயாரின் பார்வையில் விட்டு விட்டு மனைவியுடனும் இரு பெண்களுடனும் வாழ்க்கையை ஆரம்பித்தார். அவருடைய மனைவி கேரளத்தைச் சேர்ந்தவர். அவரையும் ஒரு வேலையில் சேர்த்தார். பெரிய பெண் லட்சுமி படித்தவள் ஆதலால் அவளும் சம்பாதிக்க முடிந்தது.

காலிங் பெல்லை இரண்டு மூன்று முறை அழுத்தினேன். வீட்டின் வெளியே சுப்பையாவினுடைய டாட்ஸன் கார் நின்றிருந்தது.

திருமதி சுப்பையாதான் கதவைத் திறந்தார். "வாங்க. உங்களைப் பத்தித்தான் ரெண்டு நாளா அவர் ஓயாம பேசிக்கிட்டிருக்கார்," என்று வரவேற்றார். வார்த்தைகளில் மலையாளத் தழுவல் இருந்தது. அவருக்காகக் கொண்டு வந்த நேந்திரம் சிப்ஸைக் கொடுத்துவிட்டு உள்ளே சென்றேன். பாலுவும் வந்தான்.

சுப்பையா கட்டிலில் படுத்திருந்தார். நோய்வாய்ப்பட்டிருப்பது நன்கு தெரிந்தது. என்னைக் கண்டதும், 'அடடே... சுந்தரமா? வா...வா," என்று பதட்டத்துடன் எழுந்து உட்கார்ந்தார். "எப்போ ஊர்லேருந்து வந்தே?"

"மத்தியானம்தான். உங்க அம்மா பிள்ளைகள் எல்லாம் சவுக்கியம். நீங்க சொன்ன பிரகாரம் காளப்பட்டியிலே நாலு ஏக்கரா நன்செய் வாங்கிப் போட்டிருக்காங்க."

லக்ஷ்மி உள்ளே வந்தாள். பாலுவின் முன்னால் விஸ்கியையும் ஸெவன்–அப் பானத்தையும் வைத்தாள். என்னிடம் மாஸா மேங்கோவை நீட்டினாள். நான் மது குடிப்பதில்லை என்பது அவளுக்குத் தெரியும்.



நீதிபதி மகராஜன் இலக்கியக் கூட்டங்களுக்குச் ஜரிகை அங்கவஸ்திரத்தை மாலை போல அணிந்துகொண்டு செல்லுவார். குங்குமப் பொட்டு பெரிதாக இட்டுக் கொண்டிருப்பார்.

நல்ல வறுத்த பிஸ்தாவையும் கொண்டு வந்து வைத்தாள்.

"சுந்தரம், நீ விரும்பினா நான் உன் கல்யாண விஷயத்தைப் பத்தி பேசறேன். ஊருக்குப் போய் வந்தியே... எதாவது குதிர்ந்ததா?" என்றார் சுப்பையா. லக்ஷ்மி வெளியே தமிழ் வாரப்பத்திரிகையுடன் எங்கள் சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

"பொறுப்பேத்துக்கிறவங்க இல்லாததாலே ஒண்ணும் நடக்கலே. அம்மாவுக்கு வயசாச்சு. அவங்களாலே எடுத்துக் கட்டிகிட்டு வேலை செய்ய முடியாது," என்றேன்.

"லக்ஷ்மியை உனக்குக் கொடுக்கிறதிலே எனக்கு மனப்பூர்வம். உனக்கு எந்தவிதத்திலாவது நான் உபயோகமா இருந்தாகணும். நீ என்ன சொல்றே...?"

"அக்காவை கலந்தாலோசிச்சீங்களா?" என்றேன். அக்கா என்றது திருமதி சுப்பையாவை "லக்ஷ்மி என்ன சொல்றாள்? ஒருதலைப் பட்சம் கூடாது."

"இதிலே மறுப்பு சொல்ல யாருக்கும் தகுதியில்லேன்னுதான் சொல்வேன். உனக்கு விருப்பமா?"

"நான் படிக்காதவன்; பாரம்பரியத்திலும் குறிப்பிடும்படியானவன் இல்லே. நீங்கதான் நல்லா யோசனை செய்யணும். காரணம் நீங்க பொறுப்பான குடும்பத் தலைவர்."

"நம்ம ஊர்லேதான் படிப்பு, பணம் பாரம்பரியம்னு பார்த்தோம்! இப்படியேதான் நம்ம சமூகம், சூழ்நிலை சீரழிஞ்சு போச்சு. இங்கே வந்தப்புறம் கூடவா அதைப் பத்தி பேசணும்? சமூகப் பிரச்சினையே இல்லாம, பாரம்பரிய பெருமையே இல்லாம, எந்தச் சடங்கும் நடத்தாம, நான் எனக்குப் பிடிச்ச ஒரு வாலிபனிடம்

கன்னிகாதானம் பற்றிப் பேசறதிலே சுதந்திரத்தைக் காண முடியுது. சுந்தரம்... இங்கேயுள்ள ஆயிரக் கணக்கான இந்தியர்களுடைய நிலைமையைப் பார்த்தியா...? படிப்புக்கும் சம்பாத்தியத்துக்கும் சம்பந்தமே இல்லே. படிப்புக்கும் குணத்துக்கும் பொருத்தமே இல்லே. ஊதியம் நிறைய கிடைக்குதுன்னு பட்டதாரி மண்ணைச் சுமக்கவும் தயார். நம்ம ஊர்லே படிப்பையும் பதவியையும் பார்த்து கௌரவம் கொடுக்கிறோம். எனக்கு இந்த சூழ்நிலைதான் பிடிக்கிறது,'' என்றவர் சிறிது நேரம் நிறுத்தினர். ''கொஞ்சம் காப்பி கலந்துகிட்டு வாம்மா லக்ஷ்மி,'' என்றார் லக்ஷ்மியைப் பார்த்து.

''உங்க உடம்பு தேறட்டும். அப்புறம் சாவகாசமா பேசலாம்,'' என்றேன்.

''இல்லே சுந்தரம். நான் நல்லாத்தான் இருக்கேன். இது விஷயமா ஒரு முடிவுக்கு வந்த பிறகுதான் என் உடல்நிலே தேறும்.''

''லக்ஷ்மியை மணக்கிறதிலே எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லே. லக்ஷ்மிக்கு இருக்கலாம் இல்லையா...?''

''சுந்தரம்... லக்ஷ்மி என் பொண்ணு...''

''அக்காவுக்கும் பொண்ணு தான்.''

''இது என்னுடைய ராஜாங்கம். நான் இட்டதுதான் சட்டம்.''

''இந்தத் திருமணத்தில் உங்களுக்கும் அக்காவுக்கும் லக்ஷ்மிக்கும் இடையே கருத்து வேறுபாடு இருக்குன்னு நினைக்கிறேன். நீங்க மூணு பேரும் சம்மதிச்சா நான் தயார். இந்தப் பேச்சுவார்த்தையை இத்தோட நிறுத்திக்கிட்டா நல்லது,'' என்றேன்.

''தம்பி... இப்படிக் கொஞ்சம் வந்திட்டுப் போ...'' என்று வெளியிலிருந்தே குரல் கொடுத்தார் திருமதி சுப்பையா.

நான் வராண்டாவுக்கு வந்தேன். ''லக்ஷ்மி உங்கிட்டே தனியா பேசணும்னு சொல்ரு. சமையலறைக்குப் போ...''

சமையலறையில் நின்றிருந்தாள் அவள். அரபுநாட்டு அழகி மாதிரி நிறம். வேலே செய்கிற ஆபீஸிலும் வீட்டிலும் ஏஸி. காரில் வரும்போது காரிலும் ஏஸி. சூரியன் அவள்மீது பட்டால் தானே? செதுக்கி வைத்த மாதிரி உட பாகங்கள். உணவின் செழுமையு செல்வத்தின் வனப்பும் அவள் உட பைத் தங்கக் கலசமாக்கியிருந்தன.

''என்ன லக்ஷ்மி... என் விஷயம்...?'' என்றேன்.

சில நிமிடங்கள் மௌனமா இருந்தாள். பிறகு கண்ணீர் விட்டா துடைத்துக்கொண்டு, ''சுந்தரம்... இ தக் குடும்பத்திலே உங்களுக்குப் பெர் பங்கு இருக்கு. உரிமையும் இருக் நானும் உங்களை மணக்கறதா முடி செஞ்சிருந்தேன். அந்த நம்பிக்கையி தான் அப்பாவும் இவ்வளவு வாதாடி பேசினர். ஆனு திடீர்னு நிலைமை வே விதமா ஆயிடுச்சு. இதிலே யாருக்கு பிடிப்பு இல்லே. நீங்க மனசு வச் எல்லாம் நடக்கும்,'' என்று பிடி போட்டாள்.

''என்ன லக்ஷ்மி?''

''கோயம்புத்தூரிலே பட கும்போது எனக்கும் சசிதரனுக்கு தொடர்பு இருந்தது. இங்கே வ பிறகு அதையெல்லாம் விட்டொ சுட்டேன். மறந்துதான் இருந்தே இப்போ சசிதரன் அஜ்மான் சிமெண் ஃபாக்டரியிலே ப்ராஜக்ட் சூபர் ஸராக இருக்கார். என் ஆஃபீஸுக் கடிதம் எழுதியிருந்தார். அம்மா அப் வுக்கு விவரத்தைச் சொன்னேன். யா

உருப்படியான காரியம்

8

தர்மபுரி முனிசிபல் ப ஸ்டாண்டில் குடிநீர்க் குழா மேல்நிலே நீர்த் தேக்க தொட் அமைப்பதற்கு, சுற்றுப்புறத் தூ கள் எழுப்பப்பட்டு வருகின்ற பணி நடைபெற்று வருகிறது.

டி கொடுத்துப் பேசலே,'' என்றாள் நயங்கியவாறு.

''அப்பா பரவாயில்லே, அம்மா என்ன சொல்றாங்க?''

''அம்மாவுக்கு எதுவும் பிடிக் லே. பாலக்காட்லே ஒரு தம்பி இருக் றாராம். அவருக்குக் கட்டிக் கொடுத்து அவரை ஒப்பேற்றி வைக்கணும்னு ஆசை.''

''மூணு பேரும் மூணு காணம். வாழ்க்கை உன்னுடையது. தான் இப்போ கூர்மையா இருக் ணும். நான் விலகிடறேன். நன்றி சுவாசம்னு எனக்கு உன்னே அர்ப் ணிச்சா அதை நான் ஏத்துக்கிறதா ல்லே. உனக்கு நான் தகுதின்னு மட் ம் ஒரு நற்சான்று கிடைச்சா அது வறே விஷயம். அப்பா கட்சி அடிபட் ச்சுன்னு வச்சுக்கோ. இப்போ உனக் ம் உன் அம்மாவுக்கும்தான் போட் ன்னு வச்சுக்குவோம். லக்ஷ்மி...ஒன்னு கக்கறேன்... சசிதரன் உன் அப்பாவுக் ப்பிறகு இந்தக் குடும்பத்தை பொறுப் பத்துக்குவாரா?''

''அவருக்கும் பெரிய குடும் ம் இருக்கு, சுந்தரம். இது விஷயமா வரை எப்படி நம்பியிருக்க முடியும்? , நான் பொறுப்பேத்துக்கறேன்.''

''அப்படியில்லே. ஒரு அண் ணை வேண்டும். உன்னால் முடியற ாது உன் அம்மாவுக்கு அது இன்ன ம் சுலபம். இந்தக் குடும்பத்தின் திர்கால பாதுகாப்புக்கு நம்பியே உன் ம்மா உன் மாமனை சிபாரிசு செய் நக்கலாம் இல்லையா?''

திருமதி சுப்பையா அங்கே ந்தார். ''தம்பி...அந்தக் கழிசடை கேடு கெட்டாலும் கெடட்டும். ான்னு கேக்காத ஜன்மம். இவ வய ல நானிருக்கும்போ நான் கேட் று என்ன...எல்லாம் வயசுக் ாளாறு. நீ வா, இப்படி...'' என்று ஷ்மியைக் கறுவிக்கொண்டே என்னை ளியேற்றினர்.

மீண்டும் சுப்பையாவின் றைக்குள் நுழைந்தேன். பாலு விஸ் ய குடித்துவிட்டு திரிசங்கு சொர்க் திில் இருந்தான். ''லக்ஷ்மி என்ன ''ாஸ்னுள் சுந்தரம்?'' என்றார் பையா.

''நீங்க கோபப்படக்கூடாது. மிக்குத்தான் நீங்க முதல் முக்கியத்



'ஙஞணநமன' என்ற மெல் லெழுத்துக்களுக்கு காவல்போல முன்னும் பின்னும் கசடதபற' என்ற வல்லின எழுத்துக்கள் வரும்.
கஙசஞடண, தநபமறன என்று இடையில் தங்கை. முன்னே தந்தை;பின்னால் அண்ணன். தங்கையை யாராவது நெருங்க முடியுமா?

—மனசை ப. கீரன்

துவம் கொடுக்கணும். அவள் விரும்பி மணக்கிற வாழ்க்கையிலேதான் ஏற்றத் தாழ்வுகளை சகிக்கிற மனப்பக்குவம் அவளுக்கு வரும்.''

''முடியாது...முடியாது, '' என்று அவர் கத்த ஆரம்பித்துவிட் டார்.


''பிறகு உங்க இஷ்டம். ரெண்டு நாள் கழிச்சு வர்றேன்,'' என்று சொல்லிவிட்டுக் கிளம்பினேன். பாலுவும் தள்ளாடிக் கொண்டு எல்லா ரையும் வேடிக்கை பார்த்தான். 'போய்ட்டு வர்றேன்' என்று சொல் லத் தெரியவில்லை அப்போது. லக்ஷ்மி யின் தங்கைக்கு மட்டும் ஒரு கும்பிடு போட்டுவிட்டு, ''யூ ஸில்லி. ஏண்டா இவ்வளவு நேரமா கழுத்தறுத்தே...?'' என்றான் என்னிடம்.

மறுநாள் மாலே.

நண்பன் இப்ரஹிமைப் பார்க் கக் கிளம்பினேன். அவன் மனைவி அவனுக்கு ஆசையாசையாய்ப் பின்னிக் கொடுத்த பனியன்களையும், பொரி விளாங்காய் உருண்டைகளையும், கடிதத் தையும் எடுத்துச் சென்றேன். வீட்டி லிருப்பதைவிட பாகிஸ்தான் பஜாரில் தான் அவனும் அவன் சகாக்களும் அதிக நேரத்தை ஒழிப்பார்கள்.

(தொடரும்)





நாடகம்: "நலம்தானா?"
காட்சி: புது மாப்பிள்ளை—மாமனார் உரையாடல். அன்று மாப்பிள்ளை யாய் நடித்தவர் அவசரத்துக்காகப் போடப்பட்ட ஸப்ஸ்டிட்யூட். மாமனா ராக நடிக்கும் ஒய். ஜி. பி.யைக் கண்ட வுடன் பயத்தில் டிபனுக்குப் பதிலாக டயலாக்கையே முழுங்க ஆரம்பித்தார்.

பக்கத்தில் இருந்த நான் அவருக்கு டயலாக்கை ஞாபகப்படுத்தும் நோக்கத்துடன் அவர் காதில் லேசாக, "தேதி .தேதி. ." என்று சொன்னேன். உடனே அவர் முகம் மலர்ந்தது. "ஆமாம் மாமா, தேதி தேதி!" என்று கிளிப்பிள்ளைபோல நான் சொன்ன தையே சொல்லிவிட்டார். என் தந்தை கோபத்தில் நெற்றிக் கண்ணையே திறந்து விட்டார். அவ்வளவுதான். அந்த நடிகர் வேர்த்து விறுவிறுத்து ஓடி விட்டார்.

அவருக்கு ஏன் பிராம்ப்டிங் வைக்கவில்லை என்று நீங்கள் கேட்கலாம். எங்கள் குழுவில் எப்போதுமே அதை நாங்கள் அனுமதிப்பதில்லை. ஏனென் றால் நடிகர்கள் அதையே எதிர்பார்த்து நடிப்பில் கோட்டை விட்டுவிடுகிறார் கள். எனது 10'வது வயதில் என் தந்தை யின் "Hot chup chup" என்ற நாடகத்தில் நான் பிராம்ப்டராக இருந்து காட்சியைக் கெடுத்தது நினை வுக்கு வருகிறது. அது ஒரு ஹிஸ்டாரி கல் டிராமா. அந்தக் குறிப்பிட்ட காட்சி யில் ஒரு ராஜாவுக்கும் மந்திரவாதிக்கும் (என் சித்தப்பா ஒய். ஜி. எஸ்.ஸுக்கும்) உரையாடல். ராஜா, 'பசுத் தோல் போர்த்திய புலி'யைப் பற்றி ஒரு வசனம் சொல்ல வேண்டும்;

பிறகு என் சித்தப்பாவிற்கு 'மனோகர
பாணியில் இரண்டு பக்கம் டயலா
ராஜா, "பச்சைக் கிளியிடம் பழத்
நாடலாமா?" என்று சொல்வா
உடனே உள்ளிருந்து வில்லன் மேடை
வந்து மந்திரவாதியை (சித்தப்பா
குத்திக் கொலை செய்ய வேண்டும்.
நடக்க வேண்டிய காட்சி.

எங்கள் பிராம்ப்டர் ஆர்
சாரி, ஜாலியாக நாடகம் பார்க்க வ
ருந்த என்னிடம் ஸ்கிரிப்டைக் கொடு
விட்டு, அவசரமாக 'யூரின் தெரபி
ஓடிவிட்டார். ராஜாவாக நடித்
அன்று புதிது. அமர்க்களமாக, "
தோல் போர்த்திய புலி," எ
ஆரம்பித்தவர், ஸ்டார்ட்டிங் டிரபி
முதல் கியரிலேயே நின்று விட்ட
பரிதாபமாக உள்ளே பார்த்
அங்கே ஸ்கிரிப்டைத் தலைகீழாக
துக்கொண்டு நான் பேந்தப் பே
முழித்துக் கொண்டிருந்தேன். என்
மிருந்து ஒன்றும் பெயராது எ
தெரிந்தவுடன் அவர் முகத்தில் ஒரு
ணக் களை. ஆண்டவன் மீது பாரத்
போட்டுவிட்டு, போட்டார் ஒரு 'கு
"பசுத்தோல் போர்த்திய புலியிட
புல்... தின்னச் சொன்னால்...பச்
கிளியிடம் பால் நாடலாமா?"

பச்சைக் கிளி என்ற
தையைக் கேட்டவுடன் வில்லன்
அரங்கத்துக்குள் பாய்ந்தார். "ஓ
போ துரோகி!"என்று கர்ஜனையுட
திரவாதியைச் 'சதக்' என்று குத்தி
டார். மந்திரவாதியான ஒய். ஜி.
ஸுக்கு ஒன்றும் புரியவில்லை. ஒரு
திகைப்பு; மறுபக்கம் இரண்டுபக்க
லாக் போய்விட்டதே என்ற து
ஆனால் அவர் சளைக்கவில்லை. கத்
வயிற்றில் பிடித்துக்கொண்டே இ
பக்க வசனத்தையும் கொட்டிவி
பிறகு சாவகாசமாகக் கீழே வி
உயிரை விட்டார்.

இந்தச் சம்பவத்
பிறகு, Hot chup chup நாடக
'கப் சிப் சிப்' என்று நிறுத்
டோம்.

—ம

இன் துணை



சென்ற இதழ் தொடர்ச்சி...

தெருவெல்லாம் ஜன சமுத்திரம். சுலபமாக நடக்கவே முடியவில்லை. பம்பாய் விக்டோரியா டெர்மினஸ் கெட்டது போங்கள். வெள்ளிக் கிழமை என்றால் கேட்கவே வேண்டாம். கபாலீஸ்வரர் கோயில் தேர்விழா எவ்வளவோ தேவலே. வெள்ளிக் கிழமைதான் இங்கு வார விடுமுறை.

ஷேக்னார் கோவிலைத்தான் தாண்டி வந்தேன். சிந்திப் பெண்களும் குஜராத்திப் பெண்களும் கோவிலுக்குப் போய் வந்து கொண்டிருந்தனர். நடு நடுவே மலையாளப் பெண்கள். இந்த ஷேக் எல்லோருக்கும் பொதுவானவர்.

தோணித் துறைக்கு வந்து, கூட்டத்தில் இடிபட்டு, தோணி ஒன்றில் இடம் பிடித்துக் கொண்டேன். இருபத்தைந்து ஃபில்ஸ் கொடுத்தால் என்னை 'கராஜு'க்குக் கொண்டுபோய் விடுவான்.

க்ரீக் (ஊருக்குள் செல்லும் சமுத்திர நீர்க் கால்வாய்)கின் இரு மருங்கிலும் வளர்ச்சியுற்று வரும் வானளாவிய கட்டிடங்களைப் பார்த்து 'நியூஸ் வீக்' அலறியிருந்தது ஒரு தடவை. கரையோரங்களில் வியாபாரத் தோணிகளும் கப்பல்களும் நின்றிருந்தன. விசைத் தோணியில் க்ரீக்கைக் கடந்து செல்வது வேடிக்கையாக இருக்கும்.

பஜாரில் கூட்டம் அவ்வளவாக இல்லை. இப்ராஹிம் தன்னுடைய

எஸ். டில்லி

ாக்களுடன் ஒரு சரக்கு லாரியைக் லி செய்து கொண்டிருந்தான். க்குகளைத் தோளில் சுமந்து எதிரே ள்ள கோடவுனில் போட்டுவிட்டு ரும் அவசரத்தில் நான் நின்றிருப் தைக் கவனிக்கவில்லை அவன். நானும் வனைத் தொந்தரவு செய்யக் கூடாது ன்று நினைக்கும்போது என்னைப் ார்த்துவிட்டு, ''அட, சுந்தரமா? தோ நொடியிலே வந்துட்டேன்,'' ன்று காரியத்தில் இறங்கினான்.

இவன் ஒரு தனிப் பிறவி ன்றுதான் சொல்ல வேண்டும். ஆறு ருடங்களாகிவிட்டன அவன் இங்கு ந்து. ஒருமுறையேனும் தன் மனைவி க்களைப் பார்த்துவிட்டு வரவில்லை;

ரூ. 500 பரிசு பெறும் மத்திய கிழக்குக் கதை

இதன் பின்னணியில் சோகக் கதை ஒன்று இருக்கிறதை எனக்கு மட்டும் தான் சொல்லியிருந்தான். புனிதக் குரானில் சில கோட்பாடுகளில் அசையாத நம்பிக்கை வைத்து அதைக் கடைப் பிடிப்பவனும்கூட. மாயவரம் கொள்ளுமாங்குடி அவனுடைய ஊர். இவனது நண்பன் ஒருவனுக்கும் அவனுடைய பகைவன் ஒருவனுக்கும் காதல் விஷயமாகத் தகராறு. அந்தப் பகைவன் நண்பனின் வலது கையை வெட்டி



விட்டு ஓடிவிட்டான். கேள்வியுற்ற இப்ராஹிம் பகைவனைக் கண்டுபிடித்துப் பழிக்குப் பழி தீர்த்துக்கொண்டான். அதே வலது கையை வாங்கினன். இது போலிஸ் கேஸாகி விபரீதமான பிறகு பம்பாய்க்கு ஓடினன். அச்சமயங்களில் துபாய்க்குக் கள்ளத் தோணி போக்குவரத்து அதிகம். இதைக் கேள்வியுற்றுப் பணத்தை எப்படியோ புரட்டினன். பஸீன் கடற்கரையோரத்திலிருந்து முன்னூறு பேர் அடங்கிய தோணி புறப்பட்டது.

இந்தப் பயணத்தில்தான் இப்ராஹிம் எனக்கு அறிமுகமானன். வேலையில்லாக் கொடுமையினல் நானும் துபாய் செல்வது என்று முடிவு செய்து கள்ளத் தோணிப் பயணத்தை மேற்கொண்டேன். அந்தப் பயணத்தை 'ஹாரிபிள்' என்றும் சொல்லலாம். 'அட்வென்ச்சர்' என்றும் சொல்லலாம். மூன்று வேளை சாப்பிட்டுப் பழக்கப்பட்ட எனக்கு ஒருவேளைச் சோற்றுடன் இருக்க முடியவில்லை. பத்து நாள் பயணம் முடிவதற்குள் முக்கால்வாசி ஜீவன் செத்தது. அவ்வப்போது இப்ராஹிம் தன் பங்கு உணவை எனக்குக் கொடுத்திராவிட்டால் நான் செத்துப் போய் என் பிணத்தை அப்படியே கடலில் தூக்கிப் போட்டிருப்பார்கள். ஆட்டு மந்தையைவிடக் கேவலமான நெருக்கம்.

தோணிக்காரன் கடலோரம் வந்து நிறுத்தவில்லை. துபாய்க்குச் சம்பந்தப்படாத ஓர் இடத்தில் நிறுத்தி, எல்லோரும் குதித்து நீந்திச் செல்ல வேண்டும் என்றான். இடம் ராஸ்—அல்—கைமா என்று நினைக்கிறேன். கரைக்கும் தோணிக்கும் இருநூறு அடி தூரம் இருக்கும். ஆழமில்லாத பகுதி என்றாலும் நீந்தாமல் போக முடியாது. எனக்கோ நீச்சல் தெரியாது. இப்ராஹிம்தான் என்னைத் தன் முதுகில் ஏற்றிக்கொண்டு கரையேறினன். கரையேறிய நாள் முதல் ஒன்றாகத்தான் தங்கினேம். ஒன்றாகவே வேலை செய்து சாப்பிட்டோம். நான் ஓரளவுக்கு முன்னேறிவிட்டேன். வேலை, சம்பாத்தியம் எல்லாம் தேவலையாக இருந்தன. இப்ராஹிம் தன்னிச்சைப்படி இருக்கக்கூடியவன். அவனுடைய முக்கியமான குணதிசயம் என்னவென்றால் ஒருவரையொருவர் அடித்துக் கொள்ளக் கூடாது. ஆனல் முதல் கை ஓங்குபவனை எப்படியும் இப்ராஹிம் தண்டித்துவிடுவான். அமெரிக்கன் கம்பெனி ஒன்றில் ஒரு சமயம் வொர்க்ஷாப் உதவியாளனகப் பணி புரியும் போது, கோபமடைந்த அமெரிக்க அபரேட்டர் ஒருவன் தன்னுடைய 'உஸ்தா'தை அடிப்பதைக் கண்டான். அவ்வளவுதான். அந்த அமெரிக்கனை ஒரு கை பார்த்துவிட்டான். அதன் பலனக அவனை வேலை நீக்கம் செய்தது கம்பெனி. இதுபோல் எத்தனையோ சம்பவங்கள். போலிஸில் ஏகப்பட்ட தடவை அபராதம் கட்டியிருக்கிறன்.

ஊரில் அவன் மீது தொடங்கப்பட்ட வழக்குக்கு உயிருள்ள வரைக்கும் தான் இங்கிருப்பதே நல்லது என்ற முடிவில்தான் தன் மனைவி மக்களைப் பார்க்காமலேயே இருக்கிறன். ஒவ்வொரு விதமான கேஸுக்கும் ஒவ்வொருவிதமான காலகெடு உண்டாம். அதுவரைக்கும் இவன் தலைமறைவாக இருக்க நினைக்கிறனும். இவனுடைய அபிப்பிராயப்படி இன்னும் மூன்று வருடங்கள் கழித்துப் போவதாக உத்தேசம்.

சுப்பையா குடும்பத்தினர் ஊருக்குக் கிளம்ப ஏற்பாடுகள் நடக்க வாரம்பித்தன. சசிதரனைச் சந்தித்து விட்டு வந்தாள் லக்ஷ்மி. நானும் உடன் போயிருந்தேன். அவள் அம்மாவுக்குத் தெரியாது.

சாமான்களை டாக்ஸியில் ஏற்றியான பிறகு திருமதி சுப்பையாவும் கடைசிப் பெண்ணும் அமர்ந்தனர்



திருப்பூர் கொங்கு நகரின் நுழை வாயிலில் 'இரட்டைக் கண் பாலம்' என்ற ஒன்று இருக்கிறது. இரவு எட்டு மணிக்கு மேல் பெண்கள் அவ்வழியே வர அஞ்சுகிறர்கள். ஒரே கும்மிருட்டு. பாலத்தின் அருகில் துளி வெளிச்சம் இருக்க வேண்டுமே. மூச்! ஒரு 'லைட்' போடக் கூடாதா?

—ஆர். எஸ். லட்சுமி

சுதந்திரப் போராட்டத்தில் பெரும் பங்கு ஏற்ருர் ஒரு தமிழ் வழக்கறிஞர். அதற்குப் பரிசாக அவரை ஒரு சதி வழக்கில் சிக்க வைத்து ஆறு ஆண்டு கடுங்காவல் தண்டனை வழங்கிற்று பிரிட்டிஷ் ஆட்சி. தண்டனை முடிந்து வெளியே வந்தபோது, அவருக்காக மேலும் சோதனைகள் காத்திருந்தன. அவரது 'சன்னது' ரத்து செய்யப்பட்டுவிட்டதால், வழக்கறிஞர் தொழிலைத் தொடர்ந்து நடத்த இயலவில்லை. வேறு வருமானமோ கிடையாது. சென்னையில் தங்கி, சில மாணவர்களுக்கு ட்யூஷன் சொல்லிக் கொடுத்தார். ஒரு மளிகைக் கடை கூட வைத்துப் பார்த்தார். குடும்பம் நடத்துவது பெரிய பிரசினை யாகிவிட்டது. அச்சமயம் அயல்நாடு ஒன்றில் போராட்டம் நடத்திக் கொண்டிருந்த ஓர் இந்திய பாரிஸ்டர் தமிழ் வழக்கறிஞரது கஷ்டங் களைப் பற்றிக் கேள்விப்பட்டார். பெரிதும் வருந்திஞர். உதவி நிதி யொன்று திரட்டி அன்போடு அனுப்பி வைத்தார். வழக்கறிஞரின் உள்ளம் நன்றியால் நெகிழ்ந்தது. ''உதவி செய்த அன்பர்களின் பெயர்களைத் தயவுசெய்து தாருங்கள். நன்றியறிதலுக்கு அடையாளமாக எளியேன் இயற்றிய தமிழ் நூல்களை அவர்களுக்கு அனுப்பி வைக் கிறேன்,'' என்று எழுதினுர்.

நன்றி தெரிவித்த வழக்கறிஞர், வ. உ. சிதம்பரம் பிள்ளை. நிதி திரட்டி அனுப்பியவர், மகாத்மா காந்தி.

ஆதாரம்: ரா. அ. பத்மநாபன் எழுதிய வ.உ.சி. வரலாறு (ஆங்கிலம்)

...ளே. லக்ஷ்மியிடம் ஒரு வார்த்தை ...ச வேண்டும் போலிருந்தது. ''லக்ஷ்மி ...வீட்டுக்கு இனி நீதான் பெரிய ...ள்ளை மாதிரி. அம்மா சொல்கிற ஏற் ...ாட்டில் அர்த்தம் இருக்கும். சசிதர ...ரப் பார்த்த பிறகு எனக்கு என்னவோ ...வர் மீது நல்லபிப்பிராயம் ஏற் ...டலே,'' என்றேன். லக்ஷ்மி ஒன்றும் ...சால்லவில்லை.

இந்தச் சம்பவங்களுக்கு மத்தி ...ல் ஒருநாள் பாலு கண்ணைக் கசக்கிக் ...காண்டு வந்தான் என்னிடம் மனைவி ...ரணத் தருவாயில் இருப்பதாக டெலெ ...ம் வந்திருந்தது. அன்றைய தினமே ...வன் எவனையோ பிடித்துப் பம்பாய் ...ப்ளேட்டில் இடம் வாங்கிக் ...காடுத்து அனுப்பினேன். பாவம், ...னுபவிக்காத ஒரு பெண்ணை வீணுக ...ரணத்தின் வாயிலில் தள்ளிவிட் ...டானே! அவன் சென்று ஒரு செய்தி ...யையும் அனுப்பவில்லை.

ஆறு மாதத்திற்குப் பிறகு.

அதுவரை கடிதத் தொடர்பு ...ர்துவும் இல்லாமலிருந்து லக்ஷ்மியிட ...ிருந்து ஒரு கடிதம் வந்தது.

'அன்புள்ள சுந்தரம்,

நலம். உங்கள் நலம் அறிய ஆவல். இதுநாள் வரை கடிதம் எழு தாமல் இருந்ததற்காக வருந்துகிறேம். குடும்பத்தில் சில சிக்கல்கள். என் விருப்பப்படி சசிதரனின் வீட்டுக்குச் சென்று அவர் பெற்றேரைச் சந்தித்தார் கள். அவர்கள் அதிர்ச்சியுற்ருர்கள்; காரணம் சசிதரன் ஏற்கனவே திருமணம் ஆனவர். அத்தாட்சிகளுடன் நிருபிக் கப்பட்டதால் நானும் அவரை நிரா கரிக்க வேண்டியுள்ளது. அம்மா வின் தம்பிக்கு என்னை மணமுடிக்கப் பேச்சுவார்த்தைகள் நடந்தன. பணத் தில் உள்ள ஏற்றத் தாழ்வு காரணமாகத் தன் கௌரவத்தை விட்டுக் கொடுக்க மனமின்றி என் மாமன் என்னை மணக்க முன்வரவில்லை. அம்மாவுக்கு இது ஏமாற்றமாகப் போய்விட்டது. இக்கடி தம் கண்டதும் புறப்பட்டு வரும்படி அம்மா எழுதச் சொன்ஞர்கள். உடன் பதில்.

இப்படிக்கு,
லக்ஷ்மி.'

கம்பெனியில் விடுமுறைக்கு எழுதிக் கேட்டேன். வேலை அதிகம்

இல்லாததால் உடனே கொடுக்கச் சம்ம
தித்தார்கள்.

ஹோம்... ஸ்வீட் ஹோம்.

எத்தனை முறை வந்து இறங்கினாலும் சலிப்பதில்லை. நீண்ட காலம் தங்கியிருந்தால் இனிப்பதும் இல்லை.

சென்னையில் பாலுவைப் பார்த்தேன். நோய்வாய்ப்பட்டிருந்தான். என்னைப் பார்த்தவுடன் ஆச்சரியமாக இருந்தது. ஆதரவு பெற்றவனாகவும் எழுந்து உட்கார்ந்து கொண்டான்.

''என்னடா இது! உன் மனைவிக்கு சீரியஸ்னு சொல்லிட்டு வந்து இங்கே நீ சீரியஸா விழுந்து கிடக்கிறே! என்ன ஆச்சு உனக்கு?''


''அவ நல்லாத்தான் இருக்கா. டைவர்ஸ் கொடுத்திட்டேன்.''

''என்ன சொல்றே நீ?''

''[illegible]
குப் பணம் பெரிசு. அவளுக்கு
கை பெரிசு. அவ வாழ்க்கையை ஏன் கெடுக்கணும்...?''

''நீ ஒரு முட்டாள். சம்பாதிச்ச பணம் ஒரு வியாபாரத் தொடங்கப் போதுமானதா
ருமே?''

''நீ எல்லாம் பேசுவே
வியாபாரத்துக்கு என்னிடம்
யோக்கியதை இருக்கு? நாலாம்
லாஸாயிட்டு ஈரத் துணியைப் போ
கச் சொல்றியா? வேலைக்கு
நான் லாட்டரி அடிச்சப்போ சி
டீக்குப் பத்து பைசா இல்லாம
வளவு கஷ்டப்பட்டிருப்பேன்!.
நாளெல்லாம் எனக்கு நல்லா
இருக்குடா, நல்லா நெனவு இருக்



ராஜபாளையத்தில் ஓர் இலக்கிய விழாவில் கலந்து கொள்ள முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் ஒப்புதல் தெரிவித்து எழுதிய கடிதத்தில் விதித்திருந்த நிபந்தனை இது:

'இரயிலுக்கு வண்டி, அழைக்க ஆள், தங்க இடம், துணைக்கு ஆள், குளிக்க வெந்நீர், உணவு, சிற்றுண்டி, காபி, சோடா, வெற்றிலை பாக்கு, புகையிலை, சிகரெட் முதலியன எனக்கு மட்டும் தேவையில்லை.'

—என். எஸ். எம். ராஜா

❋

சிரிக்கிறேன். ஏனென்றால் நான் அழக் கூடாது. அவ்வளவுதான். அவ்வளவுதான்.

—ஏபிரகாம் லிங்கன்

நான் சிரிக்கிறேன், ஏனென்றால் எனக்குச் சிரிப்பு வருகிறது. உயிர் வாழ அந்த ஒரு காரணம் போதும். நம் சிரிப்புக்கு எல்லையே இல்லை.

—சார்லி சாப்ளின்

''டைவர்ஸ் செ
ததுக்கு என்னதான்
ணம் பின்னே?''

பாலுவின் த
டீ போட்டுக் கொ
வந்தார்கள். வீ
அவன் வாங்கி
திருந்த அக்காய்
ரியோவிலிருந்து
டாவனிஸின் ஸ்க
ஃபேர் இழைந்து
டிருந்தது. பாலு
ளான்.

''ஒரு முடி
வரணும்னுதான்
மனைவி வீட்டார் அ
தந்தி கொடுத்
ளாம். நான் சண்டு
சொல்லிட்டேன்.
ஷத்துக்கு ஒரு த
ஒரு மாச லீவில்
போவேன். துபா
என்னால் குடு
நடத்த முடியாது

''அதுக்கு
சொன்னாங்க?''

''நீ எங்கிருப்ப
தெரியாது, உன்
உன் மனைவியை
குடும்பம் நடத்து.
வாழ்க்கை ப
துன்னு சொன்
முடியாதுன்னு
லிட்டேன்.''



கங்கா யமுனா காவேரியில,
ஸ்ரீ தேவி.

வாக்ஸிநேஷன் குத்திக் கொள்வது என்றால் ஏன் பயந்து மாட்டார்கள்? இடது புறத்தில் எவ்வளவு பெரிய தழும்பு?

பெண்ணின் தரப்பில் அவர் ர் விவாக ரத்து கேட்டிருக்கிறார்கள். பண் படித்தவள். சம்பாதிக்கத் தரிந்தவள். பணமும் பழங்காலப் டிதாண்டாப் பத்தினி விரதமும் அவ ்க்குப் பெரிதாகப் படவில்லை. வாழ்ந் ாக வேண்டும். வறுமை எந்தக் காலத் லும் இருக்கத்தான் செய்கிறது. அதற் ாகத் திருமணங்களும், தாம்பத்திய ாழ்க்கையும் பிள்ளை பேறுகளும் இல் ாமல் ஸ்தம்பித்தா போய்விடுகின்றன?

பாலுவின் தாயார் கண் ரீர் வடித்தாள். ''இந்தக் காலத்துப் ள்ளைகளைப் புரிஞ்சிக்கவே முடியலே ம்பீ. ஒருத்தருக்கொருத்தர் விட்டுக் காடுக்கிற மனப்பான்மையே இல்லை. டைவர்ஸ் கொடுத்திட்டாலும் வாங்கிக் ட்டாலும் பிரசினை தீர்ந்து போயி ம்னு இவங்க நினைக்கிறாங்க. அதுக்கப் றமும் பிரசினைகள் முளைக்கும்னு ாரும் நினைக்கிறதில்லே. பணத்தை ட்டும் இவன் பெரிசா நினைக்கிறதில்லே ந்தோஷம் வந்திடப் போறது கிடை து... பணத்தை உதறிட்டுப் போற ிலே அவளுக்கும் சந்தோஷம் கிடைக் கப் போறதில்லே. எந்தப் பிள்ளையும் முன்பின் யோசிக்கிறது போதாது...'' என்றார். ''இவன் திருமணம் முறிஞ் சிட்டதாலே இவன் தம்பிக்கு வரன் பேசவே தயக்கமா இருக்கு. பெண் வீட்டார் முன்னெல்லாம் அடிக்கடி ஏறது தொந்தரவு கொடுத்துக் கொண்டி ருந்தாங்க. இப்போ என்னடான்னு ஆகட் டும் பார்க்கலாம்னு சொல்றாங்க...''

எத்தனையோ விபரீதமான சம்பவங்கள் நடந்திருக்கின்றன. மலை யாளி ஒருவன் நாளெல்லாம் மாடாய் உழைத்துச் சம்பாதித்த பணத்தை அப்படியே ஊருக்கு மனைவியின் பெய ருக்கு அனுப்பிக் கொண்டிருந்தான் மனைவி சந்தோஷப்படுவாள் என்று. கணிசமான தொகை சேர்ந்த பிறகு அவள் தன் கள்ளக் காதலனுடன் எங்கோ வடக்கே ஓடிவிட்டதாகச் செய்தி கிடைத்தது அவனுக்கு. அவ் வளவுதான், மனம் உடைந்து ஒரு கால் கடிதம் எழுதி வைத்துவிட்டுத் தூக்கில் தொங்கி உயிரை விட்டான்.

பணம் செய்கிற நல்லது கெட்டதுகளை முன்னதாக யோசித்து

வைத்துக் கொள்கிற திறமை எத்தனை பேர்களிடம் இருக்கிறது? பணத்தை மட்டுமே குறியாகக் கொண்டு மணம் பேசுகிறவர்கள் எந்த விதத்திலாவது பலமான அடி வாங்கிக் கொள்வதற்குத் தயாராகத்தான் இருக்க வேண்டும்.

பாலுவின் விஷயத்தில் அவன் கொள்கைதான் வலுவானது. அவனை அசைக்க முடியாது. பேசிப் பயன் இல்லை. மத்தியக் கிழக்கில் ஆயிரமாயிரமாய்ச் சம்பாதிக்கிறார்கள் என்பதால் மற்றப் பிரசினைகளை அலசாமல் பெண் கொடுக்க முன் வருபவர்கள் நன்றாக யோசித்துச் செயல் பட்டால் தேவலை என்று தோன்றுகிறது. இங்கே பணம் இருக்கிறது; வாழ்க்கை இல்லை.

காளப்பட்டிக்குப் புறப்பட்டேன்.

குடும்பத் தலைவன் இல்லாத வீடு என்றாலும் குழந்தை குட்டிகளுடன் சந்தோஷமாக இருந்தனர், லக்ஷ்மியும் அவள் தாயாரும். சுப்பையாவின் தாயார் கண்ணீர் விட்டார். அடுத்த நிமிடமே தன்னைத் தேற்றிக் கொண்டார். "கடைசியா அவன் முகத்தைப் பார்க்கலியேங்கற கவலைதான். மற்றப்படி ஒண்ணும் இல்லே. பெண்டாட்டி பிள்ளைகளுக்குத் தேவையானதைச் சம்பாதிச்சுக் கொடுத்திட்டுத்தான் போனான். எல்லாரும் சந்தோஷமாத்தான் இருக்காங்க. உன்னைக் கல்யாண விஷயமாப் பேசத்தான் சீக்கிரம் வரச் சொல்லிக் கடிதம் எழுதியிருந்தா லக்ஷ்மி."

குளிர்ந்த மோரைக் கொண்டு வந்து கொடுத்த லக்ஷ்மி என்றைக்கும் இல்லாமல் சற்று சங்கோஜத்துடன் உள்ளே போய்விட்டாள். சிறிய பெண்



"மூச்சை மெள்ள விடுப்பா! எனக்கு மூச்சு இரைக்குது."

என்னிடம் வந்து ஒட்டிக் கொண்ட லக்ஷ்மியின் தாயார் பேசத் தெ கினார்.

"லக்ஷ்மிக்கு எந்த இட சரியாக் குதிரலே தம்பி. மு பின்னே தெரியாத இடத்தில் சம்ப பேசவே பயமாயிருக்கு. இதெல் சித்தம்னுதான் விடவேண்டியி லக்ஷ்மியோட அப்பா விருப்ப வர்ற தை மாச முதல் முகூர்த்தத் உனக்கும் லக்ஷ்மிக்கும் கல்யா நடத்திடலாம்னு நினைக்கிறோம். என்ன சொல்றே?"

ஒரு குடும்பத் தலைவனு முதல் பொறுப்பு என்னவாக த்தோ அதை அப்போதைக்கு கரித்துவிட்டு, தத்தம் குறிக்கோ முக்கியத்துவம் கொடுத்து, பார்த்த பிறகு புளிக்கிறது தெரிந்தவுடன்தானே இவர்கள் 'விருப்பத்'தில் இருந்து பழம் பா பார்க்கிறார்கள்! நரிக்கும் இவர்களு என்ன ஒரு பெரிய வித்தியாசம் ருல், இவர்கள் தத்தம் சுவைக் சுவைக்கத் தெரியாதவர்கள். களுடைய சுவைக்கு நான் ஒரு மூ தரத் தேர்வாக இருக்க விரும்பவி

"சொல்றேன்னு தவறா கக்கூடாது. லக்ஷ்மிக்கு என்னைவிட வரன் கிடைக்கும். லக்ஷ்மியோட அ உயிரோடு இருந்து இந்தக் கல்யா நடப்பதாக இருந்தா நான் திருக்க மாட்டேன்..."

"தம்பி... நாங்க உ அலட்சியம் செய்துட்டதா நினை கூடாது..."

"நோ... நோ. யோட அப்பாவைத்தான் நீங்க சியம் செஞ்சிங்க. உங்களைவிட எ அவரைத்தான் நல்லாத் தெரியும்." மதி சுப்பையாவின் முகம் வாட எனக்கு அந்த நிலைமையை நீடிக்க மனமில்லை. "அக்கா... நினைக்காதீங்க. உங்க குடும்பத் எனக்கு இன்னமும் பெரிய பங்கு இ லக்ஷ்மியை மணக்கிறதாலே ம தான் அந்த உரிமையை நீடிக்க யும்னு இல்லே. எப்பவும் என் இருக்கும்..."

லக்ஷ்மியின் அறை கடந்துதான் வெளியேறினேன். உ அவள் விம்முகிற ஒலி என் விழாமல் இல்லை.

கருணைக்குத் திரை

''பார்வதி...! பார்வதி!'' அம்மா கூப்பிடுகி து கேட்கிறது.

''பார்வதி! சீக்கிரம் அடுப் பப் பத்தவைச்சு தேத்தண்ணி போட் த் தாடி...'' அம்மாவுக்கு தேநீர் தாகம்.

பார்வதி சமையலறைக்குப் பாய் அடுப்பைப் பற்ற வைத்து 'கேற்றிலை' வைத்துவிட்டுக் கூட்டு மாறோடு முற்றத்துக்கு வருகிறாள். அப்பா வெளித்திண்டிலிருந்து வேப் பங்குச்சியால் பல்லைத் தேய்ப்பது தெரிகிறது.

இருள் விலகி நிலவு வெளுக்க அருத்துவிட்டது. காகங்கள் படர்ந்து பறந்து உட்காருவதால் வேப்பம் பூங் கள் பட்பட்டென்று தலையில் தெறித்து விழுகின்றன. முற்றத்தைக் கூட்டி ஒதுக்கிவிட்டுத் திரும்பும்போது சரஸ்வதி அக்கா வீட்டுச் சேவல் இவள் வீட்டுப் பேட்டுக் கோழியை துரத்திக் கொண் டோடிப் போய் வேலி மூலைக்குள் ஒதுக்குவது பார்வதிக்குத் தெரிகின்றது. அவளின் நெஞ்சில் ஒரு வினாடி ஏக்கப் பரவி ஓய்கின்றது.

எத்தனை சுதந்திரமான வாழ்க்கை இதுகளுக்கு! இவளைப்போல் ஒரு சில நிமிஷ நேரத்துக்குத் தன்னை மறந்துவிட்டு வயிற்றில் நெருப்பைச் கட்டிக்கொண்டா இருக்குதுகள்...

அம்மாவுக்குத் தேனீர் போட் டுக் கொடுத்துவிட்டுச் சமையலறைக்குள் வந்து தானும் இரண்டு வாயை ஊற் றிக் கொள்கிறாள்.

'' ஹூப்!'' குடல்களெல்லா வற்றையும் வாரிச் சுருட்டிக் கொண்டு வருவதுபோல் குமட்டுகிறது. டக்கென்று வாயை மூடிக்கொள்கிறாள்.

இடது கையை ஊன்றியபடி கூடத்தில் உட்கார்ந்திருந்த அம்மா அவளின் அவஸ்தையைக் கவனித்து விடுகிறாள்.

''என்னடி அது?''

''ஒன்றுமில்லேயம்மா . . . வந்து. . . ஹூப்!'' அதற்குமேல் அவளால் கதைக்க முடியவில்லை. வாயைப் பொத்தியபடி பின்புறம் ஓடிப்போய்க் கிணற் றுக்கட்டான் மறைவில் உட்கார்ந்து கொள்கிறாள்.

''பார்வதி!'' அம்மா அழைத் துக்கொண்டே பின்பக்க வாசல் கத வருகே வந்துவிடுகிறாள்.

''அது. . .வந்தம்மா பித்தம் போலையிருக்கு. சத்தியெடுக்க வாற மாதிரி இருந்தது. . .''

''நீ கிழமைக்குக் கிழமை சரியா முழுகிறனில்தானே? இன்றைக்குத் தேசிக்காய் வைச்சு முழுகு. எல்லாம் சரியாப்போம்.''

அம்மா திரும்பிப் போன தன் பின்தான் பார்வதியின் நடுக்கம் குறைகிறது.

மெல்ல உள்ளே வந்து சுவாமி அறைக்குள் போய்க் கதவை மூடிக் கொண்டு நிற்கிறாள். நெஞ்சு சேவி அழுவதுபோல் கெஞ்சுகிறது.

''முருகா! இந்த ஒரு தடவை மட்டும் என்னை நீ காப்பாற்ற மாட் டாயா? இனி என் வாழ்க்கையிலேயே பிழை நடக்காது.'' கடவுளுக்கு அவ ளின் பிரச்சனை புரிந்ததோ இல்லையோ, அவர் வழமையான புன்னகையோடு தான் எதிரே படத்தினுள் உட்கார்ந் திருக்கிறார்.

யோசனைக்கிடையிலேயே . . . எல்லா வேலைகளும் முடிந்து விடுகின்

பொ. பத்மநாதன் (சிறிலங்கா)

றன. இனிச் சமையலறையைக் கூட்டித் துப்புரவாக்க வேண்டியதுதான் பாக்கி. சேலைத் தலைப்பால் நெற்றியில் அரும்பியிருந்த வியர்வையைத் துடைத்துவிட்டுச் கூட்டுமாறை எடுத்துக் கொள்கிருள்.

அப்பா வெளித் திண்டிலிருந்து காத்தான் கூத்துப் பாடலொன்றை இராகத்தோடு பாடுவது கேட்கிறது.

வாசலில் காரொன்று நிற்கும் ஓசை கேட்கிறது. டாக்டர் சித்தப்பா. கூட்டுமாறை மூலையில் போட்டுவிட்டு சமையலறைக் கதவுக்கு வெளியே தலையை நீட்டிப் பார்க்கிருள். கந்தசாமிதான் வந்திருக்கிருன். சின்னம்மாவின் மகன். கொழும்பில் பெரிய டாக்டராக இருக்கிருன்.

''வா தம்பி,'' என்று எழுந்து அவனை வரவேற்கிருர் அப்பா. ''எப்போ வந்தாய் இங்கே? வீட்டிலே பிள்ளையளெல்லாம் சௌக்கியமா?''

''எல்லாரும் சௌக்கியம் தான் பெரியப்பா. நான் காலையிலே தான் வந்தேன்.'' அப்பாவோடு பேசியபடியே கூடத்துக்கு வருகிருன் அவன். கோழித் தூக்கம் தூங்கிக் கொண்டிருக்கிற அம்மாவுக்கு இந்தச் சத்தத்தில் விழிப்பு வந்துவிடுகிறது.

''கந்தசாமியா?'' என்றவள் எழுந்து இடுப்பைப் பிடித்தபடி முனங்குகிருள்.

கந்தசாமி அருகேயிருந்த கதிரையை இழுத்து அவளருகே போட்டுக்கொண்டு உட்காருகிருன். கையைப் பிடித்து நாடியைப் பார்க்கிருன். அப்போது அவன் கண்ணில் பார்வதி படுகிருள்

''என்ன பார்வதி! பாதியா மெலிந்துவிட்டாயே?''

''அப்படியொன்னண்ணு. . . நல்லாத்தானே இருக்கிறேன். . .''

''ஏதோ பித்தமென்றிவே,'' என்று அம்மாவும் குறுக்கிடுகிருள்.

''அது சரியாப் சம்மா.''

''ஹூப்!'' பாழும் டல் இப்போதுதான வரவேண்

''நில் பார்வதி பாப்

கந்தசாமி எழுந்து அருகே வந் கிருன். அங்கிருந்து ஓடிவிடும்படி துடித்தாலும், பார்வதியால் அ கூட முடியாமல் இருக்கிறது.

''என்ன தம்பி?'' அவ முகத்தைப் பார்த்துவிட்டுச் சந் தோடு கேட்கிருள் அம்மா.

''வந்து. . .பெரியம்மா.

பார்வதி மெல்ல எ யிருந்த தன்னுடைய அறைக்குள் பே புகுந்து கொள்கிருள். இருதயம் வேகமாகத் துடிக்கிறது.

''ஐயோ! என்னடா கிருய்?'' அம்மாவின் ஓலம் கா அடைக்கிறது. எல்லாத் துடிப்பு அப்படியே ஓய்ந்துவிட்டாற்போல் வதிக்கு இருக்கின்றது. சாதாரண கும் கீழ். . .சட்டென்று சூனியமெ றிற்குள் புகுந்துவிட்டாற் போன்ற உணர்ச்சி. . .வெளியே ஏதேதோ கள். . .அம்மாவின் குரல். . .அப்பா அதட்டல். . .

பார்வதி அருகேயிருந்த பே யைப் பிடித்தபடி மெல்ல எழு நிற்கிருள். சுவர் ஓரமாகப் பொரு யிருந்த நிலைக் கண்ணடியில் முகம் ப கரமாகத் தெரிகிறது. மூக்குடைந்து உதடுகள் கிழிந்து வீங்கி. . .அவளு ஏனே வாய்விட்டுச் சிரிக்க வே மென்றுதான் ஆசையாக இருக்கி உதடுகள் வலிக்கிறது. அப்பாவுக்கும் வலிக்குமோ? மெல்ல அருகேயிரு கட்டிலில் சாய்ந்து கொள்கிருள்.

நேரம் போய்க் கொண் யிருக்கிறது. அதை உணர்ந்து கொள் நிலையில் அவளில்லை.

அம்மா வரும்போது அவ கைகளில் ஒரு தண்ணீர்க் கோப்பைய ஒரு சிறு போத்தலும் இருக்கின்ற போத்தலுக்குள் பத்துப் பதினேந்து சிறு மாத்திரைகள். . . ''இதைப் யடி.'' தண்ணீர்க் கோப்பையை ப வதியின் கைகளில் திணித்துவிட்டு போ தலுக்குள்ளிருந்து மாத்திரையொன் வெளியே எடுக்கிருள்.

பார்வதியின் வயிற்றிலு எதுவோ வேகமாகப் புரள்வதுபே

இருக்கிறது. கையிலிருந்த கோப்பை நடுங்கி நீர் சிந்துகிறது.

''அம்மா! வேண்டாமம்மா இது.''

அம்மாவின் முகத்தில் எந்தக் கனிவுமில்லை. பாறையாக வார்த்தைகள் வெடிக்கின்றன. ''நீ வேண்டாமென்றால் விடு. நானும் கொப்பாவும் உன்னைப் பெத்த பாவத்துக்கு தூக்குப் போட்டுக் கொண்டு சாகிறம்...''

பார்வதி நடுங்கும் கரத்தால் அந்த மாத்திரையை வாங்கி வாய்க்குள் போட்டு விழுங்கிவிட்டு கோப்பையை மேசைமீது வைக்கிறாள். போத்தலை மேசையின் மீதே வைத்துவிட்டு அம்மா வெளியே போய்விடுகிறாள்.

போத்தலைப் பார்வதி வெறித்துப் பார்க்கிறாள்.

'அணு அணுவாக அந்தச் சிறு உயிரைப் போக்குவானேன்? பெரிய உயிரும் ஒரேயடியாகப் போய்த் தொலையட்டுமே...'

மாத்திரைப் போத்தலை எடுத்து அப்படியே வாயில் கொட்டி விழுங்குகிறாள். வேதனைக்குள்ளும் அமைதியானதொரு அமைதி. கோப்பையிலிருந்த தண்ணீரையும் முற்றாக அப்படியே குடித்துவிட்டு கட்டிலில் படுத்துக் கொள்கிறாள்.

நேரம் போய்க் கொண்டிருக்கிறது. சுடு நீரைக் கொட்டிக் கொண்டதுபோல் அடி வயிற்றினுள் எரிந்து பொங்குகிறது. மெல்ல மெல்ல அந்த வேதனை உடலிலுள்ள ஒவ்வொரு அணுக்களிலுமே பரவுவது போன்ற உணர்ச்சி...

அவளுக்கு மூச்சு வேகமாக இரைக்கிறது. நாக்கு வரண்டு ஒட்டு



கிறது... கண்கள் இரண்டையும் இராட்சதக் கரம்பொன்று பிடித்து அழுத்துவது போன்ற பிரமை... வேதனை தாங்காமல் பார்வதி புரண்டு படுக்கிறாள். கட்டிலில் இரத்தம் சேறாகக் குழம்புகிறது.

"ஐயோ...!" அறைக்குள் வந்த அம்மா அடிவயிற்றிலிருந்து வீரிட்டலறுவது அவளுக்கு இலேசாகக் கேட்கிறது. பார்வதி வலுக்கட்டாயமாகக் கண்களைத் திறந்து பார்க்கிறாள்.

"ஓடிப்போய் கந்தசாமியைக் கூட்டிக்கொண்டு வாருங்கோ!" அம்மா அலறுகிறாள்.

"வேண்டாம். அவர் வர வேண்டாம்..." பார்வதிக்கு வாய் குழறுகிறது.

அம்மா அப்பாவையும் இழுத்துக் கொண்டு உடல் நிலையையும் பார்க்காமல் வெளியே ஓடுகிறாள்.

பார்வதி தள்ளாடியபடி மெல்ல மெல்லப் போய்க் கதவை உ புறமாகத் தாழிட்டுக் கொள்கிறாள் பழங் காலத்துக் கதவு. உடைப்பத யிருந்தாலும் இலேசில் முடியாது.

அவள் அப்படியே ச வோடு சரிந்து சரிந்து நிலத்தி சுருண்டு படுத்துக் கொள்கிறாள்.

அப்பாவைக் கந்தசாமியிட அனுப்பிவிட்டு ஓடிவந்து கதவைக் சு கத்தோடு இடிக்கிறாள் அம்மா. "பா வதீ! பார்வதீ! கதவைத் திறவடி.

பார்வதி தலையைத் தூக் முயற்சிக்கிறாள். மூச்சைப் பிடித்து கொண்டு சொல்ல விரும்புகிறாள்.

"அம்மா! நான் வாழ்ந்த போதுமம்மா!" வாய் கோணி உத கள் துடிக்கின்றதேயல்லாது வார்த்தை களெதுவும் வெளியே வரவில்லை.

அம்மா கைகள் வலிக்க கதவை இடித்துக் கொண்டிருக்கிறாள்

A:	2	9	1	4	8	7	5	6	3	9	4	6	7	8	8	3	1	2	3	4	5	6	7	8	9	8	7	6	5	4	3
B:	9	8	7	6	5	4	3	2	1	9	8	7	6	5	4	3	1	4	2	1	5	2	1	6	2	1	7	2	8	1	9
C:	1	2	3	4	5	6	7	8	9	1	2	3	4	5	6	7	1	5	2	1	6	3	1	7	4	6	1	3	5	1	2
D:	3	3	4	6	7	3	8	2	9	1	4	5	6	7	3	4	9	1	2	9	1	2	3	1	9	8	7	6	5	1	9
E:	5	3	9	8	2	7	7	4	6	7	5	3	7	0	9	8	8	0	2	8	3	8	2	0	8	2	4	6	5	9	3
F:	2	0	5	6	3	7	7	0	8	9	5	7	4	9	7	4	5	5	0	5	5	3	3	5	5	4	4	6	5	5	0
G:	6	4	3	2	8	9	7	6	3	7	8	2	0	9	3	8	2	4	5	7	8	6	4	0	1	8	2	5	8	6	4
H:	7	6	5	5	4	7	4	4	4	6	6	6	8	8	8	3	1	3	4	5	1	7	8	9	1	3	1	4	1	5	6
I:	3	2	1	3	2	1	1	2	3	1	2	3	5	4	3	7	8	2	3	9	2	3	7	2	3	6	3	2	4	3	7
J:	9	8	7	9	8	7	8	7	6	8	2	6	7	6	5	7	0	1	9	8	6	8	4	7	4	3	2	8	9	6	1
K:	1	9	8	7	3	8	2	6	4	5	5	9	1	0	8	8	4	2	3	4	5	6	8	3	4	5	6	7	9	4	6
L:	2	4	6	8	2	4	6	8	3	6	9	1	1	8	1	9	4	4	5	5	5	6	6	6	6	7	7	7	7	7	3
M:	8	3	6	5	9	1	7	2	3	7	5	9	4	3	7	6	7	7	6	6	5	5	4	4	3	3	2	2	1	1	9
N:	9	1	8	2	7	3	6	4	5	5	8	1	8	3	7	2	9	1	0	8	2	0	7	4	5	6	7	8	9	2	3
O:	2	7	3	4	8	5	5	6	4	7	2	3	7	8	0	2	6	7	7	5	6	7	5	6	7	5	6	4	5	7	6
P:	6	3	8	6	0	9	1	8	7	6	4	3	8	2	9	2	8	7	6	5	4	6	5	4	3	5	4	3	2	3	2
Q:	9	7	5	4	3	3	5	4	6	8	2	2	5	4	6	6	8	5	7	4	6	3	5	2	9	6	6	4	5	3	4
R:	4	0	4	3	9	3	4	7	3	6	8	2	4	7	4	6	3	6	4	7	5	8	6	9	7	2	8	3	7	2	8
S:	9	0	1	6	1	9	8	4	6	3	2	8	7	6	4	2	8	4	8	7	6	5	9	0	7	1	1	5	1	6	8
T:	8	3	6	5	4	2	8	9	6	6	1	0	3	6	8	2	6	7	5	4	6	9	8	4	5	7	3	4	2	8	9
U:	4	8	6	5	4	8	7	6	9	8	3	4	7	3	8	9	6	4	7	4	6	7	6	4	7	6	4	7	3	4	6
V:	8	9	5	7	3	8	6	9	0	1	0	2	8	5	3	7	8	2	3	2	8	1	8	1	7	1	6	1	5	6	4
W:	6	4	2	8	6	4	9	7	6	2	8	0	1	8	3	6	5	2	8	3	6	6	7	7	8	8	9	9	1	1	2
X:	4	8	2	9	5	1	6	3	8	3	7	8	4	6	7	5	2	2	6	6	3	3	7	7	4	4	8	8	5	5	9
Y:	6	2	4	8	2	7	4	6	3	8	9	6	1	9	8	4	8	3	2	8	4	5	5	9	1	8	2	6	4	3	7

மொத்த நேரம்: 7 நிமிடம். அதற்குள், ஒவ்வொரு வரிசையாகப் பார்த்து, கூட்டினால் பத்து வரக்கூடிய (அதாவது 9,1; 3,7; போன்ற) ஜோடி எண்களைக் கண்டு பிடித்து, கீழே பென்ஸிலால் கோடு இடுங்கள். தொண்ணூறு ஜோடிக்கு மேல் கண்டுபிடித்துவிட்டால் நீங்கள் கெட்டிக்காரர்தான். நினைவிருக்கட்டும். 7 நிமிடம்தான் அவகாசம்.



படம் எடுப்பதிலே பரவசம் அடையுங்கள்... க்ளிக்...
க்ளிக்...
MERRY X-MAS
க்ளிக்...
உங்கள் வியூ:ஃபைண்டரில படத்தைச
சரிபார்த்ததும் உடனே பொத்தானை
அமுக்குங்கள். அவ்வளவுதான்,
எவ்வளவு எளிது பாருங்கள்.
அவ்வளவும் குதூகலம்!
உங்கள் அருகிலுள்ள வியாபாரி
யிடம் சென்று ஆக்ஃபா க்ளிக்III
ஒன்றை வாங்கிச்செல்லுங்கள்.
கடந்த காலத்தை சற்றே
நினைவு கூறுங்கள். அதற்காகும்
செலவு நீங்கள் நினைப்பதை
விட குறைவே!
Agfa
க்ளிக்III
காமெராவினுல்!
சுலபமாக குறிதவறாது படம்
பிடிக்கும் காமெரா
இதுதான்.
AGI
ஆக்பா-கேவார்ட் இந்தியா லிமிடெட்
SIMOES/AG/110C/77 Tam

சுப்பராயன் வளர்த்து வரும் வெள்ளாட்டுக் குட்டியைக் கொல்வதற்காக எமன் திண்டிவனம் டவுனிலிருந்து பஸ்ஸின் பின் சக்கரத்தில் உட்கார்ந்து வருவான் என்று யாருக்குத் தெரியும்?

அரவமில்லாமல் 'சங்கதியை' முடித்துக் கொண்டு வந்த பஸ்ஸிலேயே திரும்பிவிட்டான் எமன்.

ஐந்து நிமிஷத்துக்குப் பிறகுதான் சுப்பராயன் ஓடிவந்து பார்த்தான்.

ரத்தத்தில் தோய்ந்து கிடந்தது ஆடு.

பீரிட்டு வந்த ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு வீட்டுக்கு ஓடினான். பச்சை நெல் குத்திக் கொண்டிருந்த தன் தாயாரிடம் விஷயத்தைக் கூறிவிட்டு ஒரு பெரிய கூடையுடன் வந்தான்.


தாயும் மகனும் ஆட்டின் உடலை வழித்தெடுத்துக் கூடையில் போட்டுக் கொண்டு நியாயம் கேட்பதற்காகப் பஞ்சாயத்திடம்போனார்கள்.

ஐந்தே நிமிஷத்தில் தலைவரும் பாவாடைக் கவுண்டரும், ரெட்டியாரும் புது வீட்டுக்கு வந்துவிட்டார்கள். மூன்று பேரும் தெருவைப்பார்க்கத் திண்ணையில் உட்கார்ந்து கொண்டார்கள். சிறிசும் பெரிசுமாகத் தெருவில் கூட்டம் கூடிவிட்டது.

பொன்னம்மாள் கூடைக்குப் பக்கத்தில் குத்துக்கால் போட்டு உட்கார்ந்து கொண்டு பஸ்காரனை சபித்துப் புலம்பிக் கொண்டிருந்தாள். கூடையிலிருந்ததைக் கீழே கொட்டி மூவரின் பார்வையும்படும்படியாக வைத்துவிட்டுக் கைகளைக் கட்டிக்கொண்டு அழாக்குறையாக நின்றான் சுப்பராயன்.

"இப்படியே விடப்புடாது தலைவரே. இன்னைக்கு ஆட்டுக்குட்டி, நாளைக்கி புள்ளே..." என்றார் பாவாடை.

"பேமானிப் பசங்க. அடிச்சதுதான் அடிச்சாங்க, ஒரு வார்த்தை இன்ன மாதிரின்னு சொல்லிட்டுப்



போகக்கூடாதா? அவனுட்டுக்கு பஸ்ஸை எடுத்துட்டுப் போயிட்டான்னு என்ன அர்த்தம்...?" ரெட்டியார்.

"ஆட்டுக்குட்டி கிரயத்துக்கும் மேலே ஐம்பது ரூபாய் அபராதம் கட்டிட்டு அப்புறமா வண்டியை எடுக்கடாங்க வேண்டியதுதான்...என்ன சொல்றீங்க..." என்றார் தலைவர்.

பொன்னம்மாள் மனசுக்குள்ளேயே கணக்குப் போட்டுப் பார்த்தாள். இப்போ ஆட்டை வித்தாகூட எழுபது எண்பதுதான் போகும். கூட ஐம்பது கிடைக்கும்போது பரவாயில்லை; தரமா ரெண்டு குட்டிக வாங்கி வளர்த்தா பொங்கலுக்கு நல்ல காசு.

மாலை பஸ் வரவில்லை.

பஸ்ஸை எதிர்பார்த்துக் கொண்டிருந்த சுப்பராயன் வீட்டுக்குத் திரும்பினான். பின்னாலேயே பாவாடை

'சத்தியப்பிரியா'



மூன்று பேர் கமிஷன்

வந்தார். அவனைத் தனியாக அழைத்துப் போய்ச் சொன்னார்:

''ஊரிலேயிருந்து நம்ம மருமகப் புள்ளே வந்திருக்கு; ஆட்டுக் குடல்னு, அதுவும் வெள்ளாட்டங் குடல்னு ரொம்ப பிரியமா சாப்பிடுவாரு...அதான் வந்தேன்...''

''சொல்லியனுப்பிச்சா நானே கொண்டாந்து குடுத்திருப்பேனே... நீங்க போங்க. நான் எடுத்துகிட்டு வர்றேன்...'' என்றான் சுப்பராயன்.

வீட்டில் குடலை வாங்கிக் கொண்ட பாவாடை சொன்னார்: ''பஸ்காரனைச் சும்மா விடப்புடாது சுப்பராயன். அப்புறம் ஒரு 'இது' இல்லாமப் போயிடும்...''

''ஆமாங்க.''

வீடு திரும்பும்போது பாவாடைக் கவுண்டரை நன்றியுடன் நினைத்துக் கொண்டான் சுப்பராயன். பஸ்காரனிடம் பணம் வசூல் செய்யும் விஷயத்தில் அவர் அவனுக்கு எவ்வளவு ஆதரவு காட்டுகிறார்!

பொழுது சாயும் நேரம்.

ஒரு சிறுவன் வந்தான். ரெட்டியார் கொடுத்தனுப்பினதாக ஒரு துண்டுக் காகிதத்தை சுப்பராயனிடம் கொடுத்தான்.

''வரும் பையன் வசம் கால்கள் நாலையும் கொடுத்தனுப்பவும்; —இப்படிக்கு ரெட்டியார்,'' என்று அதில் எழுதியிருந்தது.

ரெட்டியார் பேச்சுக்கு மறுபேச்சு சொல்ல முடியுமா? அவருக்கு அவன் கடமைப் பட்டவன் அல்லவா?

கால்களைப் பழைய பேப்பரில் கட்டிப் பையனிடம் கொடுத்தனுப்பினான்,

காலை வந்தது.

பஸ் வரவில்லை.

சுப்பராயன் தலைவர் வீட்டுக்குப் போகுன்.

''காலையிலேயும் பஸ் வரலே போலிருக்கே?'' என்றார் தலைவர்.

''ஆமாங்க,'' என்றான் விரக்தியாக.

''அதுக்காக நீ எம்பா வருத்தப்படுறே...இப்ப இல்லேன்னு சாயந்தரம் வரப்போறான்... சாயந்தரம் வரலேன்னு நாளைக்கு வரப் போறான்; எப்படியோ அவன் தாலியை அறுத்து உன் கையிலே கொடுக்காம விடப் போறதில்லே... ஆமா, இன்னைக்கு என்ன கிழமை?''

''[illegible]...''

''மறந்தே போச்சு, தலைக்கு ஊத்திக்கணும்; உடம்பெல்லாம் ஒரே எரிச்சலா எரியுது...ஒண்ணு செய்யேன், அந்த ஆட்டோட தலையை மட்டும் கொண்டாந்து கொடேன்...''

அடுத்த பத்தாவது நிமிஷத்தில் தலைவர் வீட்டில் 'தலை' வாட்டுப்பட்டுக் கொண்டிருந்தது தீயில்.

சாயங்காலம் வந்தது.

பஸ்ஸும் வந்தது.

சுப்பராயனுக்கு வேண்டியவர்கள் டிரைவரையும் கண்டக்டரையும் அடிக்காத குறையாக இழுத்துக்கொண்டு வந்தார்கள் பஞ்சாயத்துக்கு.

தனக்கு வந்த தலை போக [illegible]தம் இருக்கும் என்ற எண்ணத்தில் கூடையில் வைத்திருந்த ஆட்டைக் கொண்டுவந்து காட்டச் சொன்னார் தலைவர்.

சுப்பராயன் கூடையைக் கொண்டு வந்தான். ரெட்டியாருக்குக் கால். தலைவருக்குத் தலை. மற்றதை யார் சுவீகரித்துக் கொண்டார்களோ? தோல் தான் மீதம் இருந்தது.

பஸ் டிரைவர் சுத்தினான்: ''[illegible]! எத்தனை பேரு இந்த மாதிரி கிளம்பியிருக்கீங்க? ஏதோ [illegible] அறுத்து 'மஜா' பண்ணிட்டு தோலைக் காட்டி எங்களை மரட்டப் பாக்கிங்களா? நாங்க ஒண்ணும் பொட்டச் சிங்க இல்லே, நீங்க சொ[illegible] நம்புறதுக்கு...''

பஸ்ஸை எடுத்துக் கொண்டு டிரைவரும் கண்டக்டரும் போய்க் கொண்டிருப்பதை எல்லோரும் பார்த்துக் கொண்டிருந்தனர். சுப்பராயனும் கூடத்தான்.



நீங்கள் சொல்லித்தான் தெரிகிறது!

தமிழ்நாட்டில் யாரையா ஜனதார்வைக் கவனிக்கிறுர்கள்? சரண் சிங் தமிழ்நாட்டின் மூலமாகக் கொழும்பு சென்ருர் என்று நீர் கார்ட்டூனில் சொல்லித்தான் தெரிகிறது. . .

கும்பகோணம் வி. எஸ். அனந்தராமன்

எத்தனை வாங்கினீர்கள்?

மதுரை ஜனதா ஊழியர் கூட்டத்தில் நடந்த நிகழ்ச்சியைப் பெரிது படுத்தி எங்கள் தலைவரின் படத்தை அலங்கோலமாகக் கார்ட்டூன் போட்டிருக்கும் கேடு கெட்ட குமுதமே, அன்று ஸ்ரீவில்லிபுத்தூரில் ஒரு அமைச்சரை வரவேற்பதற்காக அ.தி.மு. கவின் இரண்டு கோஷ்டிகள் அடித்துக் கொண்டபோது கார்ட்டூன் போடாமல் இருந்ததற்காக உனக்கு நடிகர் கொடுத்தது என்ன?

திண்டுக்கல் எஸ். முகம்மது யாகூப்

சியாமளியை வெறுப்பதா?

'கெட்டாலும் ஆண்மக்கள்' கதை உள்ளத்தை உலுப்பி விட்டது. சியாமளியை வெறுப்பதா அல்லது அவளுக்காகப் பரிதாபப்படுவதா? மௌனமான மன உணர்ச்சிகள் மனச்சாட்சியின் கீழ் அடங்கிவிட்டன.

திருச்சி-2 கூ. நாராயணன்

கதை மிகவும் அற்புதம். குமுதம் ஒரு 'மெச்சூர் மேகஸைன்.'

ஆம்பூர் ஜெ. சத்தியமூர்த்தி

பல வருடங்களாகக் குமுதம் படிக்கும் எனக்கு ஏன் குமுதம் வாங்கினோம், ஏன் படித்தோம் என்ருகிவிட்டது. எவ்வளவுதான் பெண்களைக் கேவலப்படுத்துவது என்றில்லாமல் ஒரு குடும்பப் பெண்ணை வைத்துக் கதை ஆசிரியர் தம் கற்பனையைக் கொடி கட்டிப் பறக்க விட்டிருக்கிறுர் என்ருல்— விட்டேன் இத்துடன் குமுதம் படிப்பதை.

மேலட்டூர் பேபி

ஆண்களுக்குத் தலைக் குனிவையும், பெண்களுக்கு அவமானத்தையும் ஏற்படுத்திவிட்டார் ஆசிரியர் பாலகுமாரன். ஏதோ மஞ்சள் பத்திரிகைக் கதைபோல் அல்லவா இருந்தது?

வருச்சுக்குடி பி. எ. அலீம்

கதை ஆபாசத்தின் எல்லை கடந்து நிற்கிறது.

கொச்சி —2 எஸ். ராஜேந்திரன்

புஷ்பத்துறை

அட்டைப் படம் அருமையிலும் அருமை, அழகிலும் அழகு, கண்களே கூசும்படி அமைந்து விட்டது. அடிக்கடி திருச்சி சென்று சிந்தாமணியில் கண்ட பகுதிதான். ஆனுல் நேரில் பார்த்தபோது தெரியாத அழகை அட்டை மூலம் கண்டு ஆச்சரியமும் ஆனந்தமும் அடைந்தேன்.

சென்னை-17 செல்வம்

புஷ்பத்துறை சுப்பிரமணியம் ஒரு புஷ்பத் துறையையே ஜோராகப் படம் பிடித்துவிட்டார். பாராட்டுக்கள்.

கடலூர்-2 தங்க குஞ்சிதபாதம்

எப்படி, லாலா!

கிண்டலும் கேலியும் செய்துவிட்டு, மதுரையை மீட்ட சுந்தர பாண்டியனுக்கு ஒன்றரைப் புள்ளி கொடுத்திருக்கிறுர்களே! (''எனி ஸ்பெஷல் கமெண்ட் லாலா?'' ''எம். ஜி. ஆர். இஸ் தி சீஃப் மினிஸ்ட்டர் ஆஃப் டமில் நாடு.'' ''தாங்க்யூ லாலா'')

சென்னை-15 சாம் மாணிக்கவாசகம்

குமுதத்தின் சினிமா விமரிசனம் தனிச் சிறப்புடன் இருந்து வந்தது. ஆனுல், தாங்கள் பழைய பாணியினின்று மாறுபட்டுப் 'புதுமை' என்ற பெயரில் என்ன வெல்லாமோ எழுதிக் குமுதத்தின் இமேஜை குறைத்துக் கொண்டீர்கள். மதுரையை மீட்ட சுந்தர பாண்டியனைப் பற்றி மொத்தத்தில் என்னதான் சொல்ல விழைகிறீர்? புரியவில்லை!

பெருந்துறை உ.மு.ந. ராசன் கலாமணி

காற்றினிலே வரும் கீதம்

மெர்க்காராவுக்குப் போன இடத்தில் காற்றில் வருகிறது ஒரு கீதம். மோகினியா? கீதத்தின் தடத்தைப் பின்பற்றிச் சென்று இளைஞனான எஸ்டேட் ஓனர் கண்டு கொள்கிறான்—அது ஒரு மலைவாசிப் பெண் என்று. காதல் முகிழ்க்கிறது. பெண்ணின் தந்தை முரட்டுத்தனமான சாதி வெறி கொண்டவன். காதல் விஷயம் அறிந்ததும் மகள் மார்பில் கட்டாரியைப் பாய்ச்சி விடுகிறான். பட்டணத்துக்குத் திரும்பிய இளைஞன், முன்னவளைப் போலவே உள்ள இன்னொருத்தியைக் காதலித்து, அவளும் துர்மரணம் அடைய, மூன்றாவதாக ஒருத்தியை அதே சாடையில் கண்டதும் பயந்து ஒதுங்குகிறான். ஒரு கொலைக் கேசில் வேறு சிக்கிக் கொள்கிறான். மூன்றாமவள் ஒரு போலீஸ் ஸி.ஐ.டி. அவனையும் காப்பாற்றி, காதலையும் காப்பாற்றுகிறாள்.

(ஆரம்பக் காட்சியில் நவநவமான பிரயோகங்கள். மறைந்தும் மறையாமலுமிருக்கிற பங்களா, தெரிந்தும் தெரியாமலும் இருக்கிற தோட்



காலட்சேபக்காரர்: நாளைக்கும் இதோ கல்யாண உத்சவம். அவசியம் எல்லோரும் நேரில் வரணும். வீட்டிலிருந்து கொண்டு டாம் நம்பர் தந்தியோ பதினொரும் நம்பர் தந்தியோ அடித்துவிட்டுப் பேசாமல் இருந்திடாதீங்க.''

டப் பாதை, குத்துப் பட்டு விழுந்து கிடக்கிற பெண், கத்தியும் கையுமாய் திகைக்கிற முத்துராமன்—பிர்காக்களில் ஒரு பிரமிப்பு. இத்தனைக்கு நடுவே கோர்வைகளும் மோராக்கமாக சுநாதத்தோடு வரும் போலீஸ் வண்டி. ஜொலிப்புதான் போங்கள்.

போதாக் குறைக்குப் பொன்னியம்மா வந்தாளாம் என்கிற மாதிரி மெர்க்காராவின் எட்டுப் பக்கத்திலேயும் ஒரு கீதம் ஒலிக்கிறதாம். தேடிப் போனால் பாடறவளைக் காணோமாம். ஏதோ குறை சொல்லணும் என்பதற்காகச் சொல்வதாக வாசகர்கள் எண்ணிவிடக் கூடாது. கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை கேஸ் இது. (பிசாசு வரணும், படத்தையும் நம்பணும் என்றால், கேட்பாரில்லையா ஸ்வாமி?)

போலீஸ் கவிதாவிடம் நல்ல சுறுசுறுப்பு. காரை மறிக்கும் ரௌடிகளை அவர் சமாளிக்கும் விதம்—ரொம்ப ஸின்ஸியராகத்தான் உருண்டு புரண்டு உதைத்து, சண்டை போடுகிறார்.

(எடுத்த எடுப்பிலேயே கவிதாவின் குரல் அபிவாதயே சொல்லி விடுகிறது—நானில்லை, நானில்லை என்று. அடுத்த வீட்டிலேயிருந்து இரவல் வாங்கி வந்ததோ என்னவோ. போலீஸ் வேலை பார்க்கிற பெண்ணும். கராத்தே காட்சியில் கைவீச்சும் கால் வீச்சும் சர்வ லகுப் பின்னல்கள். பார்க்கப் பார்க்கப் பெண்களுக்கெல்லாம் ஒரே புளகாங்கிதம்—நம்ம புடவைக் கோத்திரத்திலே இப்படியொருத்தி பிய்த்து பிரியைக் கட்டி இழுக்கிறாளே என்று. அப்புறம் அந்த மெர்க்காரா காதல் நல்ல நகாசு வேலை. ஆமாம், மெர்க்காராக்காரர்கள் இப்படியா டிரெஸ் பண்ணிக் கொள்கிறார்கள்?)

துவக்கத்தில் காதல் காட்சிகள் சுவாரசியமாக இருக்கின்றன. பின்னர் அலுப்புத் தட்டுகிறது.

(சில படங்களில் காமெடி என்கிற பெயரில், அண்ணா நகர் நம்பரில்லாமல் வீட்டைத் தேடுவது மாதிரி தடவிக்கொண்டிருப்பார்கள். அப்படி நேரவில்லை. அந்தச் சூரணத்தைக் குடிக்க வைக்கிற இடமும் அப்படி

காள்—பரஸ்பரம் நல்ல அனுசரணை. னூலுல் அசோகன் அரிவாளைத் தூக்கிக் கொண்டு புறப்படுகிறவரையில் திருவா ரூர்த் தேர்வடம்தான். பொறுமை பஸ்பம்.)

முத்துராமனுக்கு ஒருதளர்ச்சி காணப்பட்டாலும் காதலனுக்குரிய கவர்ச்சி அகன்றுவிடவில்லை.


(முத்துராமனைப் பழி வாங்கியவர் இன்னாரென்று ஸ்டாம்ப் அடிக்க முடியாது. தலையில் ஒரு விக்கை மாட்டி விட்டு, உன் பாடு காமெராமேன் பாடு என்று மேக்கப்காரர் கம்பி நீட்டி விட்டார் இந்தப் பக்கம். அந்தப் பக்கம் காமெராமேன் காமெராவோடு மெர்க்காரா மலையுச்சியிலிருந்து விழுந்து தற்கொலை பண்ணிக்கொண்டு விட்டார். கிராப்பு அட்டாட்டுக்குப் பறக்கிறது. காலப் பிரமாணமும் இல்லை; சுருதியும் இல்லையென்றால் எழில் எங்கேயிருந்தய்யா வரும்? ஆனால் முத்துராமன் ஒரு ஜென்டில்மேன். தெரிந்தவரையில் சிரத்தையாகப் [illegible]. முதல் காதலி ஈசன் திருவடி நிழலை அடைந்ததும் ஊர் ஊராய் அலைகிறார் மனிதர். கேரளத்தை அடைந்து, அந்த ஓட்டலுக்குள் நுழை



இப்போது மனுஷன் முகத்தில் களை கட்டுகிறது. (அல்லது தட்டுகிறது.) செத்துப் போனவள் மாதிரியே இன்னொருத்தியைப் பார்த்தவுடன் பிரயோகங்களில் ஒரு புல்லரிப்பு. பிணக்கில்லாத கணக்காக அவள் பின்னுலேயே போகிருர். அந்த அம்மாளுக்குக் கோபம் வருவதில் ஆச்சரியமில்லை. அரை இடம் கால் இடம் தள்ளி எடுக்கும் போதெல்லாம் சுள்சுள்ளென்று விழுகிருர். கரெக்ட். ஆனுல், இதுதானம்மா என் கதை என்று அவர் பிட்டு வைத்ததும், ஸ்கர்ட்டைப் பிடித்துக் கொண்டு பின்னேயே வந்து கொண்டிருந்த ஸ்ரீகாந்த் அம்பேல்! அவரை ஒரே உதறலாக உதறிவிட்டு இவர் பக்கமா சாய்ந்து விடுவது? (பாடாந்தரம் போதாது.)

ஸ்ரீகாந்த் பெரும் போக்கான வில்லனுய் வருகிருர். 'முதல்லே நான் லவர் அவள் பிரண்ட்! என்னை விட அவன் வசதியானவன்னு தெரிஞ்சதும் அவன் லவராயிட்டான், நான் பிரண்டாயிட்டேன்,' என்று கவிதாவிடம் பொருமுவது நன்ருயிருக்கிறது.

(நட் தெரிந்த ஆசாமி இந்த ஸ்ரீகாந்த். பொத்தி வாசித்திருக்கிருர். சர்ச்சில் கல்யாணம் நடக்கிறபோது கண்ணீர் விட்டபடி பார்த்துக் கொண்டிருப்பது காவேரியில் அமிழ்ந்து ஸ்நானம் செய்கிற மாதிரியான அ பவம்.)



தட்டுவனுர்: எனக்குத் தெரிந்ததையெல்லாம் குழந்தைக்கு ஏதோ கற்றுக் கொடுத்திருக்கிறேன்.

பெண்ணின் தாயார்: குழந்தையும் தனக்குத் தெரிந்ததை உங்களுக்குக் கற்றுக் கொடுத்துவிட்டான் போலிருக்கு: நகத்தைக் கடிக்கிறீங்க. விரலை எடுங்க.

அந்த மாதா கோவில் கட்டும், பாதிரி வீரராகவன் நடத்து திருமணச் சடங்குகளாகட்டும், கா ராக் கோணங்களாகட்டும் பாங்கா ஒத்துழைப்போடு இயங்கியிருக்கின்ற

(ஒன்று மறந்து போச் அசோகன் ஒரு ஜாம்பவான். வக் சங்கதிகளோடு அவர் வசனம் உச்ச பதைக் கேட்கக் காதுகோடி வேண்டு சில சமயங்களில் ஒநாய் ஓலம வெளிப்படுவதும் உண்டு. தோஷமில் அவருடையது தனி ஆவர்த்தனம் எ பார்கள் சில பேர். இல்லை, தொ ஆவர்த்தனம். ஏன் இவ்வளவும் சொ வேண்டியிருக்கிறதென்ருல், இந்த தடவை அவர் குரலையும் காணு அந்தக் கோதண்டத்தையும் காணு அது சரி. அதென்ன குதிரைச் சவாரிய தபீர் கடைகிற அபிநயமா? பாட்டுக்கு அடவு போடுகிறது. ப நல்லூர் பாணி. இடுப்புக்கு மே மட்டும் தான் காட்டுகிருர்கள் ஹை என்று. ஏன், நிஜமாகவே அ கள் ஏறினுல் குதிரை மண்டைக போட்டு விடுமா என்ன? என்னவே எண்ணெய்க் குளியல். அனுல், மற் குதிரைக்காரர்கள் முத்துராமனை துரத்துகிருர்கள் பாருங்கள், ஜிவு வென்று நல்ல சூடு. கூரை மீது ஏ நின்று கூவத் தயார். உச்சரிப்பு ஒரு சரிப்பு என்று மேஜரும் சுகுமாரிய தெரிந்து கொண்டார்கள் போலிருகிறது. தோளுக்கு மேல் வளர்ந்த மகளை கண்டு தோளைக் குலுக்குகிருர்க கையை விரிக்கிருர்கள். ரம்மியம்தா ஆனுல் மகள் சுடப்பட்டுச் சுருண் விழுகிருளே அப்போது கூடவா? பிசி டைரக்டர்வாள்.)

கிளைமாக்ஸ் என்ற பெ ரில் அந்தப் பொம்மைப் பிளே காட்சியை அத்தனை நீட்டித்திரு வேண்டுமா?

(மேல்கால ஃபைரன்கள் பொ பறக்க, வல்லின மெல்லினப் ப யோகங்களோடு அமர்க்களம் பண் ணிருக்க வேண்டும் அந்த விமா பிரயாணம். அனுல் பிரதோஷ ஹே காரியங்களோடு நின்று விட்ட இடைஞ்சலுக்கு உசிலையும் ஒய்ஜிஎம் வேறே. சிரிப்பும் பயமும் சக்கள கள் ஸ்வாமி! ஒரே படுக்கை விடாதீர்.)

குமுதம்

மதி:31 மலர்:20
2·3·78

இந்தத் தேர்தல்

கர்நாடகம், ஆந்திரா, மகாராஷ்டிரம் உள்ளிட்ட ஆறு மாநிலங்களில் நடக்கவிருக்கும் சட்டசபைத் தேர்தல்களில் எந்த மாநிலத்தில் எந்தக் கட்சி ஜெயிக்கப் போகிறது? இந்திரா காங்கிரஸா? ரெட்டி காங்கிரஸா? ஜனதாவா?—என்பதல்ல பிரசினை.

எந்த மாநிலத்தில் எந்தக் காங்கிரசுக்கு வலு அதிகம்? இரு காங்கிரஸ்களுக்குள் ஏற்பட்டுவிட்ட பாகப் பிரிவினை எந்த அளவுக்கு ஜனதாவுக்கு அனுகூலமாக அமைந்திருக்கிறது? இதுவும் பிரசினை அல்ல.

இந்திரா காந்தியைக் குழி தோண்டிப் புதைத்துவிட வேண்டும் என்ற நோக்கம் கொண்டவர்களின் சூழ்ச்சிக்குப் பலியாகாமல், தொடர்ந்து அவருக்கு மக்கள் ஆதரவு கொடுக்கப் போகிறார்களா? அல்லது, நச்சுத்தன்மையுடன், இடைவிடாமல், பரவலாக நடத்தப்பட்டு வரும் திட்டமிட்ட துஷ்பிரசாரத்தினால் மனம் குழம்பியவர்களாய், இந்திரா காந்தியை மக்கள் விட்டுக் கொடுத்து விடப் போகிறார்களா? ஜனநாயகத்தை நிலை நிறுத்தி விட்டதாகப் பெயர் பண்ணிக் கொண்டு, அதே நேரத்தில் மாற்றுக் கட்சி அரசுகளுக்கு எதிராக விசாரணைக் கமிஷன் அமைத்து வெடி வைக்கும் ஜனதாவின் அரசியல் தந்திரத்தை மக்கள் புரிந்துகொண்டு தங்கள் ஆட்சேபத்தைத் தெரிவிக்கப் போகிறார்களா? அல்லது, நியாயமோ அநியாயமோ, ஜனதாவின் கையில் மையமான அதிகாரங்கள் எல்லாம் முடங்கியிருப்பதால் அதை எதிர்த்துப் பயனில்லை என்று விரக்தியோடு ஒதுங்கிக் கொண்டு விடப் போகிறார்களா?—இதுதான் இந்தத் தேர்தல்களில் தீர்மானம் ஆகப்போகிற விஷயம்.

இந்திரா காங்கிரசுக்குப் பெரும் வெற்றி கிடைக்குமானால்—குறைந்த பட்சம் பலமுள்ள கட்சியாக அது உருவாவதற்கான வாய்ப்புக்கள் கிடைக்குமேயானால்—நாட்டின் எதிர்காலத்தைப் பற்றி நம்பிக்கையோடு இருக்க வாய்ப்பு உண்டு.

அவன் கேட்கணுமனு காத்திருக்கணுமா?

ஹேமா ஆனந்ததீர்த்தன்

கணேசன் இரவு எட்டு அடித்த பிறகுதான் வீட்டுக்குத் திரும்பி வந்தான்.

''என்ன இவ்வளவு நாழி?'' என்ற கேள்வியோடு மாலதி கதவைத் திறந்தாள்.

''வாசல்லேயே குறுக்கு விசாரணையா? உள்ளே வர விட்டுத்தான் ஆரம்பியேன்,'' என்று அலுத்துக் கொண்டே கணேசன் உள்ளே நுழைந்தான்.

கதவைச் சாத்தித் தாளிட்டு விட்டு அவன் பின்னலேயே வந்த மாலதி, ''ஆபீசுலே வேலை ஜாஸ்தியா?'' என்று தன் முதல் கேள்வியையே வேறு வடிவத்தில் மாற்றிக் கேட்டாள்.

''இல்லை, இல்லை. ஆபீசுலே இவ்வளவு நேரம் என்ன வேலை இருக்கு? பத்திலிருந்து ஐந்து வரையில் செய்வதற்கே எங்க ஆபீசுலே வேலை கிடையாது,'' என்று கூறியபடி, பாண்ட் சட்டையைக் கழற்றி விட்டு பனியன், அண்டர்வேரோடு காலையில் அவிழ்த்துப் போட்ட தன் வேட்டியைத் தேடி இங்குமங்குமாக அலைந்தான்.

''நல்லா இருக்கு வேஷம்! கமலஹாசன்னு மனசுலே நினைப்புபோலிருக்கு,'' என்று கூறிச் சிரித்தாள் மாலதி.

''டீகமுதை, அறைஞ்சேன்னு தெரியுமா? கமலஹாசன்னும் நினைச்சுக்கலே, தர்மேந்திரான்னும் நினைச்சுக்கலே. காலையிலே அவிழ்த்துப் போட்டவேட்டி எங்கேன்னு தேடறேன்.''

''அதைத் தேடிட்டு அப்புறம்னு பாண்ட்டை அவிழ்க்கணும்,'' என்று மாலதி வேண்டுமென்றே சீண்டினாள்.

''என் இஷ்டம். நீ என்ன சொல்றது? இதையும் அவிழ்த்துட்டுக் கூடத் தேடுவேன்,'' என்றான் கணேசன்.

''ஐயையோ. நல்லவேளை. பசங்க தூங்கிட்டாங்க,'' என்று சொல்லிச் சிரித்துக் கொண்டே மாலதி தலையணைக்குக் கீழிருந்து மடித்து வைத்திருந்த அவன் வேட்டியை எடுத்துக் கொடுத்தாள்.

''இதை உடுத்திட்டு அப்புறமா அண்டர்வேரைக் கழட்டுங்கோ,'' என்றாள்.

இருவரும் சிரித்துக் கொண்டனர்.



"ஏன் இவ்வளவு நேரம்? சினிமாவுக்குப் போயிருந்தீர்களா?"

"சினிமாவுக்குப் போயிருந்தா எட்டரை மணிக்கெல்லாம் திரும்பி வர முடியுமா?"

"நீங்க சினிமா நல்லா இல்லேன்னுட்டு பாதியிலேகூட எழுந்து வந்துவிடுவீர்கள்."

"சரி, எனக்குப் பசிக்கிறது.. கை கால் அலம்பிட்டு வரத்துக்குள்ளே தட்டை எடுத்து வை."

கணேசன் வந்து உட்கார்ந்ததும் பரிமாற ஆரம்பித்தாள். மௌனமாகச் சாப்பிட ஆரம்பித்தான்.

"நீங்களாக சொல்லும் வரையில் நான் இனி கேட்கப் போவதில்லே," என்று மாலதி சிணுங்கினாள்.

"இதுக்கென்ன அர்த்தம்? கேட்கலேன்னு அர்த்தமா?" என்று கணேசன் சிரித்தான். "மாதவனுக்கு ஏதாவது ஒரு வழி பண்ணலாமேன்னு தான் மெனக்கெட்டேன். பாவம், அவனுக்கும் வேலே போய் கிட்டத்தட்ட ரெண்டு வருஷம் ஆகப்போறது. நம்மைப்போல ரெண்டே குழந்தையா? அஞ்சு பெத்து வைச்சிருக்கான். நன்றாக வாழ்ந்தவன். இந்த ரெண்டு வருஷமா எவ்வளவு கஷ்டப்பட்டுட்டிருக்கான்?"

அவளுக்கு எரிச்சலாக வந்தது.

"நீங்களும் முயற்சி பண்ணிட்டேதானே இருக்கிறீர்கள்," என்றாள்.

"இன்னிக்கு அவங்க கம்பெனி சேர்மன் மெட்ராசுக்கு வந்திருக்கார். அதிர்ஷ்ட வசமா அவரோட நெருங்கிய சிநேகிதர் ஒருத்தரும் வேறு வேலேயா இன்னிக்கு இங்கே வந்திருக்கார். அந்த சிநேகிதரோட மருமகன் எங்க ஆபீசுலேயே இருக்கான்கறதும் இத்தனை நாள் தெரியலே. இன்னைக்குத் தெரிஞ்சது. அவன் மூலமா அவன் மாமாவைப் பார்த்து சேர்மனோடு போனில் பேசி எல்லாம் ஒரு மாதிரியா நல்லபடியா உருவாயிருக்கு. சேர்மன் கண்டிப்பா மாதவனே வேலேயில் திருப்பி எடுத்துக்கறதாகவும் அப்படி எந்தக் காரணத்தினாலாவது அது முடியாமப் போயிட்டா அவன் பெண் விஜயாவுக்கு அந்தக் கம்பெனியிலேயே ஒரு வேலே போட்டுத் தருவதாகவும் பிராமிஸ் பண்ணியிருக்கார். அந்தப்படி நடந்துட்டால் அவன் கஷ்டம் விடியும். எனக்கும் மனசுக்கு ஆறுதலாயிருக்கும்." ஒரே மூச்சில் கணேசன் சொல்லி முடித்தான்.

"ரசம் போடட்டுமா?" என்றாள் மாலதி.

"போடு. என்ன ஒண்ணும் சொல்லாமல் பேச்சை மாத்தற மாதிரி ரசம் போடட்டுமான்னு கேக்கறியே?"

"நீங்கள்தான் அவருக்கு வேலே தேடி இப்படி அலேகிறீர்கள். அவர் ஒரு தடவை கூட வாயைத் திறந்து உதவி பண்ணச் சொல்லிக் கேட்கலேயே?"

"அவன் கேட்டால்தான் பண்ணணுமா? அவன் மானஸ்தண்டி. அவன் கஷ்டம் நமக்குத் தெரியும். நம்மால் முடிஞ்சா உபகாரம் செய்யணும். அவன் கேட்கணும்னு காத்துட்டிருக்கணுமா?"

"நான் நினேச்சேன், நீங்கள் ஹவுசிங் போர்ட் ஆட்கள் யாரையாவது பார்க்கப் போயிருக்கிங்களோன்னு. யாரையாவது பார்த்துக் கையைக் காலேப் பிடிச்சால்தான் நமக்கு அலாட்மெண்ட் கிடைக்கும்னு சொல்றாங்க. நீங்க அப்ளிகேஷனைப் போட்டுட்டு வாயை மூடிட்டு உட்கார்ந்திருந்தா நாம ஜன்மத்துக்கும் இந்த வாடகை வீட்டிலேயே உட்கார்ந்திருக்க வேண்டியது தான்."

"உட்கார்ந்துட்டுப் போறோம் போயேன். அலாட்மெண்ட் தானக் கிடைச்சா கிடைக்கட்டும். இல்லாட்டி வேண்டாம். என்னால் இதுக்காக அலேயவும் முடியாது. ஊரான் கிட்டயெல்லாம் போய்ப் பல்லேக்காட்டிக் கெஞ்சிட்டிருக்கவும் முடியாது."

"ஆமா, உங்க ப்ரெண்டுக்காக மத்தவா கிட்டப் போய்ப் பல்லேக் காட்ட முடியும் உங்களுக்கு. ஆனால் உங்களுக்காக அலேயறதுக்கு டயம் கிடையாது."

"அப்படித்தான். சாதம் போட்டு மோர் போடு. மாதவன் வேலேயில் இருந்தபோது எனக்கு எவ்வளவு ஹெல்ப் பண்ணியிருக்கான் தெரியுமா?"

"இருக்கட்டுமே. நீங்க அவருக்கு உதவி பண்ண வேண்டாம்னு நான் சொல்லலியே. ஆனா அதுக்கும் ஒரு லிமிட் வேண்டாமா? உங்க காரியத்தை முதலில் பார்த்துட்டு அப்'புறம்தானே இன்னொருத்தருக்கு ஹெல்ப்

பண்ணணும்?''

அவன் அவளுக்குப் பதில் சொல்ல வேண்டி வாயில் வைத்த சோற்றை முழுங்கிக் கொண்டிருந்த போது வாசலில் பஸ்ஸர் ஒலித்தது.

''போய்ப் பார்,'' என்று சைகை காட்டினுன்.

மாலதி சென்று கதவைத் திறந்ததும் அங்கே மாதவன் நிற்பதைக் கண்டாள்.

''வாருங்கள்,'' என்று அவனே வரவேற்றுவிட்டு அவசர அவசரமாக உள்ளே வந்து கணேசனிடம், ''அவரே வந்திருக்கார். உங்க ப்ரெண்ட் மாதவன். விஷயம் தெரிஞ்சுட்டுதான் வந்திருப்பார் போலிருக்கு,'' என்று கிசுகிசுத்தாள்.

''இல்லேயே, அவனிடம் நான் ஒண்ணும் இன்னும் சொல்லலேயே!'' என்று கூறிக் கொண்டே கணேசன் கையை நிலத்தில் ஊன்றி எழுந்தான்.

கையை அலம்பித் துண்டால் துடைத்தபடி கணேசன் ஹாலுக்கு வந்ததும் மாதவன் பரபரப்புடன் எழுந்து வந்து, கணேசனின் கையைப் பிடித்துக் குலுக்கி, ''கங்க்ராட்ஸ் கணேசா, உனக்கு ஹௌஸிங் போர்டிலே ஃப்ளாட் அலாட் ஆயிட்டுது. பர்ஸ்ட் ப்ளோர். தெற்கே பார்த்த ப்ளாக்,'' என்றான்.

''ஐ ஸீ'' என்று கணேசன் பிரமிப்பைத் தெரிவித்தான். ''... கெப்படித் தெரியும்?'' என்று ... டான்.

''எப்படித் தெரியுமா? ... றைக்குப் பூரா எனக்கு வேறு ... வேலே? ஹௌஸிங் போர்டிலே ... லேருந்து சேர்மன் வரை எல்லா... யும் பார்த்துப் பேசி பிடிக்க வேல... ரெகமெண்டேஷனைப் பிடித்து ... வழியா முடிச்சுட்டேன்,'' என்...

''ஆச்சரியமாயிருக்கே. ... உன்னைக் கேட்கக் கூட இல்லே...

''நீ கேட்டாதானு? அ... மெண்ட் கிடைக்கலே, அப்ளிகே... போட்ட மத்தவங்களுக்கெல்லாம்கி... சுட்டுதுன்னு அன்னிக்கு வருத்... சொன்னியே. அது போருதா? ... டிரை பண்ணப் போறதா உங்... சொல்லே. ஒரேயடியா காரிய... முடிச்சுட்டு அப்புறம் சொல்ல... கறதுக்காக பேசாம இருந்தேன்.''

''தாங்க்யூ மாதவா.''

மாலதி முகம் மலர ... வனைப் பார்த்து சொன்னுள்: ''ப்ரெ... ஸுன்னு இப்படித்தான் இருக்கனு... நீங்க எங்களுக்குப் பிளாட் வா... கொடுத்துட்டீங்க. இவர் உங்க... வேலேக்கு ஏற்பாடு பண்ணிட்டா...

''அப்படியா!''

மாதவன் நன்றியுடன் க... சனேயும் மாலதியையும் மாறி ம... பார்த்தான்.



''மானேஜர் பண்ணின ஒரு சின்னத் தப்பினுலே எங்க கம்பெனியில் நாலு பேருக்கு வேலே கிடைத்திருக்கிறது.''

''என்ன தப்பு?''

''மீட்டிங் ஹாலிலே முப்பது பேர் உட்காருகிற சைஸுக்கு டேபிள் ஆர்டர் பண்ணிவிட்டார். நாங்கள் ஸ்டாஃப் இருபத்தாறு பேருதானே? வேறு வழியில்லாமல் இன்னும் நாலு பேரை அப்பாயிண்ட் பண்ணவேண்டியதாகி விட்டது.''

குப்பனுக்கு

கலைச்செழியன்

குப்பன்.

அவனுடைய இடுப்பில் மூன்று முழத்துண்டு. தோளில் நைந்து போன தேங்காய்ப்பூத் துண்டு. . .எண்ணெயைக் கண்டு எவ்வளவு நாள் ஆயிற்றோ. பம்பையாகப் பறந்தது தலைமுடி. . .இரண்டு மாதமாகக் கத்தி படாத முகம்.

எதிரில் ஆண்களும், பெண்களுமாக வந்து கொண்டிருந்தார்கள். புயலால் பட்ட அவதிகளையெல்லாம் மறந்து ஆனந்த புன்னகையான முகம்.

அரசு, வீடு இழந்தவர்களுக்குப் புத்தம்புதிய நூறு ரூபாய்த் தாளாக வழங்கிய உதவிப் பணம், அவர்களுடைய கையிலும், மடியிலும்.

எதிரில் வந்த குப்பனைப் பார்த்த ஒருவன். . "இப்போத்தான் வறியா குப்பா? பள்ளிக்கூடத்திலே ஜீப்பிலே தாசில்தார் வந்து நோட்டை விடுறார். ."

"நீங்கள்ளாம் வாங்கிட்டீங்களா?"

"வாங்காம? தோ பாரு நோட்டை. . . மத்தியானம் போய் கைரேகை வச்சிட்டில்ல?"

குப்பன் சலிப்புடன் கூறினான்.



"எனக்கு நேரமே சரியில்லேப்பா. . .மத்தியானம் வந்து கைரேகை வச்சிட்டேன். ஒரேயடியாய்ப் பணத்தையும் வாங்கிக்கிட்டு போவலாம்னுதான் இருந்தேன். அதுக்குள்ள ஆள் வந்துட்டுது, பேச்சியம்மா அவஸ்தை படருள் என்று. ஒட வேண்டியதாப் போச்சு. பிறக்கப் போற பிள்ளேக்குக் கூட அவசரத்தைப் பாரேன். நாளேய மறுநாள் பிறக்கக் கூடாதா. அப்பன் பணம் வாங்கப் போயிருக்கான். உடனே செலவு வைக்கணுமேன்னு அவசரம். . ."

ஒரு பெண் களுக்கென்று சிரித்தாள்.

"ஏண்ணே பிள்ளையைக் கோய்ச்சுக்கறே? எந்த நிமிஷம் பூமியில் விழணும்னு இருக்கோ அதே நிமிஷம் விழ வேண்டியது தானே? நல்லபடி ஆயிடுச்சா, என்ன பிள்ளே..."

"எங்கே நல்லபடியா ஆகிறது? எந்தப் பிள்ளேயைச் சட்டுண்ணு பெத்தா இதை பெறுவதற்கு? அவஸ்தைப் பட்டுக்கிட்டுத்தான் கிடக்கிருள். மருத்துவச்சி ஒத்தாசையா இருக்கா. பணத்தை வாங்கிக் கொண்டு போயிடலாமுண்ணு ஓடியாந்தேன். . .நீயும் செத்த பார்த்துக்க. . .தோ பணத்தை வாங்கிக்கிட்டு வந்துடறேன். . .முடியாட்டி ஆஸ்பத்திரிக்காவது கொண்டு போகலாம்."

"ஆவுட்டும். நான் போய்ப் பார்த்துக்கறேன். நீங்க பணத்தை வாங்கிகிட்டு சட்டுண்ணு வந்து சேருங்க. . ."

குப்பன் வேகமாக நடந்தான்.

எதிரில் நான்கு சைக்கிளில் நான்கு பேர்கள் பிரேக் போட்டு நின்றார்கள். அவர்களுள் கையில் கடிகாரம், விரல்களில் மோதிரமுமாக இறங்கிய அருமைநாதன் ஒருவர்.

"யாரு, குப்பனு?"

"சாமி. ." உடல் குறுகி, பணிந்து வணங்கினன் குப்பன்.

"பணம் கொடுக்கிற இடத்தில் வந்து சுற்றிப் பார்த்தேன். உன்னேக் காணும். தொப்பளான் நின்றன். அவனிடம் விசாரித்தேன். வீட்டுக்குப் போயிருப்பதாகச் சொன்னுன், வீட்டி

மகாபலிபுரம்
போது முதலைப்
பண்ணையை
பார்க்கத் தவறா

சென்னையிலிருந்து மக புரம் செல்லும் சாலையில் இருக் முதலைப் பண்ணை.

இரண்டு ரூபாய் நுழை கட்டணம்.

முதலைப் பண்ணையின் தப் பரப்பு நாலரை ஏகரா.

உள்ளே சிறியதும் யதுமான தண்ணீர் குட்டைகள் என. இவற்றில் முதலைகள் சா மாகப் பதுங்கிக் கிடக்கும். பா யாளர்கள் மீன், அல்லது பெருச் யைப் போடும்போது கரை ஊர்ந்து வந்து கவ்விக் கொ மீண்டும் தண்ணீருக்குள் பதுங்

இதைத் தவிர சிறிய நீர்த் தொட்டிகளில் முதலைக் களே வளர்க்கிறுர்கள். பண்ணே முகப்பு அறையில் முதலே சம்ப பட்ட போட்டோக்கள், உயிருள் போன்ற அளவாக முதலே வ ஆகியவைகளேக் காணலாம்.

உலகத்திலேயே மிகப் அபூர்வமான வகையாக கருத வது கரியால் முதலேகள். இ பண்ணேயில் 4 கரியால் முதலே உள்ளன. கரியால் முதலேக்கு ரம்பம் மாதிரி நீண்டிருக்கும். களே லாகவமாய்ப் பிடித்துத் தின் கங்கை, பிரம்மபுத்திரா நதிகளில் டுமே இவை காணப்படும். இந் விலேயே நூறுக்கும் குறைவான யால் முதலேகள்தான் உள்ளன. டைப்படத்தில் காணப்படுவது இனத்தைச் சேர்ந்ததுதான்,



கரியால் வகை முதலைக்கு மீன் உணவு அளிப்பவர் திருமதி சகீதா விட்டேகர். அருகில் இருப்பவர்கள் சென்னை மாநகராட்சி கமிஷனரின் மனைவி திருமதி பீமாவும், அவரது புதல்வர்களும்.

வண்ணப்படம்: மாதவி.

இந்தப் பண்ணையின் இயக்னர் ரோமுலஸ் விட்டேகர் (வயது34) ண்டியில் 1970'ம் ஆண்டிலிருந்து ரம்புப் பண்ணை நடத்தி வருகிற தே அமெரிக்கர்தான்.

முதலைப் பண்ணையிலேயே னியாக வீடு கட்டிக்கொண்டு விட்டே சகீதா தம்பதிகள் வசிக்கின்றனர்.

முதலைப் பண்ணையில் முத குட்டிகள் உட்பட சுமார் 150 தலைகள் உள்ளன. 15 வயதுக்கு மற்பட்ட முதலைகள் எண்ணிக்கை: 30. ங்குள்ள கிராமவாசிகள் தினசரி 5, 20 கிலோ மீன் சப்ளை செய்கிறார் ர். முதலைகளுக்கு மெயின் ஆகாரம் ந்த மீன்கள். தவிர பெருச்சாளிகளை ம் முதலைகள் விரும்பி உட்கொள்ளும். தலைகளின் மீன், பெருச்சாளி உண க்காக மாதம் 2,000 ரூபாய் வரை சலவாகிறது என்று கூறுகிறார் விட் டகர். மாதம் 8,000 பார்வையாளர் ள் முதலைப் பண்ணையைப் பார்க்க ருகிறார்கள். ஒரு முதலை சராசரி 100 ஆண்டுகள் வாழுமாம். முதலையின் தால் விலை அதிகம். ஒரு அங்குலம் 0 ரூபாய். ஐரோப்பிய மார்க்கெட்டு ளில் சிறிய முதலைத் தோல் டம்பப் பகள்கூட 4,000 ரூபாய் விலை பாகும்.

இந்தியாவில் முதலைகளைப் டித்து எவரும் விற்க முடியாது. சட் ப்படி அது குற்றம்.

—மங்களம் ஆத்திரேயி.

லேயே போய்ப் பார்த்துவிட்டு வரு வோம் என்று வந்தேன். எதிரில் வந்து விட்டாய். கேரியரில் உட்கார். நான் கொண்டு போய் விடுகிறேன்.''

''எதுக்குங்க?''

''மறந்துவிட்டாயா குப்பா? ஆறுமாதம் ஆயிட்டுது. மறக்காமல் என்ன செய்வாய்?. . .''

''சாமி, நீங்க என்ன சொல் றீங்க?''

''இருநூறு ரூபாய் வாங்கிக் கொண்டு நானூறு ரூபாய்க்குப் பிராமி சரி நோட்டு எழுதிக் கொடுத்தாயே?''

''அதுக்காக முதலும் வட் டியும்தான் கொண்டாந்து கொடுத் துட்டேனே சாமி.''

''பாக்கிப் பணம் என்ன ஆவுறது?''

''பாக்கிப் பணம் ஏது சாமி? ஒரு பண வட்டி போட்டுத்தானே கணக்குத் தீர்த்தேன்?''

''அதுக்கு நான் சம்மதிச் சேனா. . .? சம்மதிச்சிருந்தால் பிராமி சரி நோட்டை உன்னிடம் திருப்பிக் கொடுத்திருப்பேனே. . .மூன்று பண வட்டிக்குப் பணம் கொடுத்துவிட்டு ஒரு பண வட்டி போட்டு எவன் வாங் குவான். . .? சும்மாப் பேச்சை வளர்த் தாதே...புதையல் கிடைச்சதைப் போல் பணம் வருகிறது. . .அதை வாங்கி என் கணக்கைத் தீர்த்துவிட்டு நோட்டை வாங்கிக்கொள். . .''

''சாமி, உங்களுக்கு எம்புட் டுப் பணம் சேரணும்?'' என்றான் குப்பன் தழுதழுத்த குரலில். ஊர் கூட்டம் என்று போனால் அவனுக்காக யார் பேசப் போகிறார்கள்? முதலில் அவனைச் சேர்ந்தவர்கள் வருவார்கள். அவனுக் காகப் பேசவும் செய்வார்கள். கோர்ட் டில் சாட்சி பல்டி அடிப்பதை போன்று இரண்டு கிளாஸ் தண்ணிக்குக் காசு கிடைத்தால் மாறி விடுவார்கள். அப் படியொரு நிலைமை ஏற்பட்ட பிறகு பணிவதை விட இப்போதே பணிந்து போவது எவ்வளவோ மேல்.

''அப்படிக் கேள் சொல் கிறேன்: முள்ளின் மேல் துண்டைப் போட்டு விட்டோம், மெதுவாகப் பார்த்து எடுக்க வேண்டுமே என்றுதான் இவ்வளவு நாட்களாகக் கேட்காமல் இருந்

ஞ்தேன். இல்லாதவனைப் போய் கிட்டியைக் கட்டு என்ன பிரயோசனம் என்று என்னையித்தான் சும்மா யிருந்தேன். இப்போ பணம் வருகிறது. வாங்கி அரையோ, காலோ, பிடித்துக் கொண்டு கொடு. சந்தோஷமாக வாங்கிக் கொள்கிறேன். அதை விட்டுட்டு ஏடா கூடமாப் பேசினால் என்ன அர்த்தம். . . ''

''எதுக்கு சாமி அதையெல்லாம் சொல்றீங்க? எம்புட்டு? அதைச் சொல்லுங்க. . .''

''பாக்கிப் பட்ட பணம் நாற்றுப்பத்து . . . இப்போ வட்டியும் சேர்ந்து நூற்றுத் தொண்ணூற்றென்பது ரூபாய் ஆவுது. . .''

''அம்புட்டு ஆயிடுச்சா?''

''ஆமாம், வா போவலாம்.''

''பரவாயில்லே சாமி. நீங்க போய்க்கிணே இருங்க. தோ. . .பின்னாலே வந்துடறேன்.''

''சும்மா ஏறிக்கடா.''

''வேண்டாம் சாமி.''

அருமைநாதன் கட்டாயப் படுத்தினார். ஏறிக்கொண்டான். மனம் யோசனையில் ஆழ்ந்தது. அவன் ஒரு தீர்மானத்துக்கு வந்தான்.

பஞ்சாயத்து போர்டு வானொலிப் பெட்டி இருக்கும் கட்டிடத்துக்கருகில் இறங்கிக் கொண்டான் குப்பன். அவர்களும் சைக்கிள்களை நிறுத்தி ஸ்டாண்டு போட்டு, பூட்டி விட்டுக் குப்பனுடன் நடந்தார்கள், ஏதோ வேடிக்கை பார்க்க வந்தவர்களைப் போன்று.

பள்ளிக்கெதிரில் ஜீப்பை நிறுத்திக் கொண்டு அதில் இருந்தபடியே பெயரைக் கூப்பிட்டு, நூ ரூபாய் தாள் இரண்டைக் கொடுத் கொண்டிருந்தார்கள் அதிகாரிகள்.

''பரமசிவம் மகன், குப்பன்

''நான், நான்தான் சாரு..

''உன் - பெயர்தான் (பறு?''

''ஆமாங்க சாரு. . .''

''உன் அப்பா பெயர்?'

''ப்ரமசிவங்க. சார் (சேதி. . .''

''என்னப்பா?''

''இந்தப் பணம் என வேண்டாம் சாரு. . .''

''பணம் வேண்டாம ஏன்?''

''என் வீட்டுக்கு நிறை சேதம் இல்லே சாரு... கொஞ்சோன தான் செவுரு விழுந்துட்டுது. அ கூட வைச்சுட்டேன். எதுக்கு தெ டமா அரசாங்க பணத்தை வா அனுவசியமாக. . .''

''நபரே வேண்டாம் எ சொல்லும்போது என்ன செய்வ அந்த இருநாறையும் தனியாக அடுத்துக் கூப்பிடு. . .''

குப்பன் கூட்டத்தை விலக் கொண்டு வெளியில் வந்தான்.

''டேய். ஏண்டா பணத் வேண்டாம் என்று சொல்லிவிட்டா எனக்கு என்னடா சொல்லப்போறே என்று பதறினார் அருமைநாதன்.

''முள்ளின் மீது துணை போட்டுட்டீங்க. இழியாம் பார் எடுங்க சாமி,'' என்று சாவகாசமா குரலில் கூறியபடி நடந்தான் அவ



முள்றியின் சந்தேகங்கள்

☐ ☐ புத்தகக் கடைகளில் பூட்டை உடைத்துப் புத்தகங்கள் திருடியவர் பிடிபட்டார். கெட்டிக்காரத்தனமாகத் திருடுவது எப்படி என்ற புத்தகத்தைத்தான் அவர் ஒவ்வொரு கடையிலும் தேடிக் கொண்டிருந்தாரோ?

☐ ☐ கல்வி அமைச்சர் வர லாததால் ஆசிரியர்கள் மாநாடு ஒ வைக்கப்பட்டது. லேட்டாக வந்ததற்காக ரைப் பெஞ்ச் மேல் நிற்கச் சொல்வார்களே

☐ ☐ ஆபரேஷனின் போது பெண்ணின் வயிற்றுக்குள் துணி வைத்துத் தைத்துவிட்டாரென்று பி பைன்லில் ஒரு டாக்டர் தண்டிக்கப்பட்ட அந்தத் துணி அவளுக்குப் பிடித்த பா னில் இல்லேயோ?



யாகவோ நடிக்க வேண்டியிருந்தால் அதற்கென்று தனியாக ஒரு தொகையைத் தந்தால்தான் அந்தக் காட்சியில் நடிப்பாராம்.

ஜெயமாலினி கூறுகிறார்:

பொறாமைப்படுகிறார்கள்

ஸ்ரீதேவி பார்ப்பதற்குச் சதைப் பிடிப்பில்லாதவராக ஒல்லியாகத் தெரிகிறாரே தவிர தூக்கும் போது ரொம்ப வெயிட்டாக இருப்பாராம். ரஜனிகாந்த் சொன்னார்.. ''எலும்பு ரொம்ப ஸ்ட்ராங்க். ஓய். விஜயாவைத் தூக்கிவிடலாம் போலிருக்கு. இவரைத் தூக்குவது சிரமமாக இருந்தது. இரண்டு நாளும் ஸ்ரீதேவியைக் கையில் தூக்கியவாறு பாடும்படி இருந்ததால் இடுப்பு பிடித்துக் கொண்டுவிட்டது. தினமும் காலையில் எக்ஸர்ஸைஸ் செய்வது என் வழக்கம். இந்த இரண்டு நாட்களும் ஸ்ரீதேவியைத் தூக்குவதே எக்ஸர்ஸைஸாகப் பட்டதால் வேறு எக்ஸர்ஸைஸே நான் செய்யவில்லை. டயலாக் பேசும் போது, ஜோவியலாக ஸ்ரீதேவியிடம், 'இந்த கனம் கனக்கிறாயே! அடேயப்பா, எழுபத்தைஞ்சு கிலோ தேறுவாய் போலிருக்கே!' என்று ஒரு போடு போட்டேன். படத்தில் கூட (வணக்கத்திற்குரிய காதலியே) இந்த டயலாக் வரும்!''

நான் புது வீடு புகுந்ததில் பலருக்குப் பொறாமை.

''ஹீரோயினாக நடிக்கும் நம்ம ஜெயசுதா இன்னும் ஒரு வீடு வாங்கவில்லை. ஜெயப்பிரதாவால் ஒரு வீடு கட்ட முடியவில்லை. இங்கு வந்த இரண்டு வருஷத்திற்குள் நடனம் ஆடியே ஒரு தமிழ் நடிகை வீடு கட்டி விட்டாளே,'' என்று தெலுங்குப் படவுலகைச் சேர்ந்த சிலர் பெருமூச்சு விடுகிறார்கள்.

''எங்களாலும் தனித்துநின்று நாலு பேர் மெச்சும்படி சௌகரியமாக வாழ முடியும் என்று ஒருவருக்கு நிரூபிக்கத்தான் பல சிரமங்களுக்கிடையில் இவ்வளவு வேகமாக வீடு கட்டினோம்.

''இதற்காக கடந்த இரண்டு வருஷமா உழைத்த உழைப்பு எனக்குத்தான் தெரியும். பெரும்பாலான தெலுங்குப் படங்களுக்கு ஒரு மணி நேரம் இரண்டு மணி நேரம் என்று கால்ஷீட்டைப் பிய்த்துக் கொடுத்து, வந்த சந்தர்ப்பங்களை நழுவவிடாமல் சாப்பாடு கூடச் சரியாக சாப்பிடாமல் நடித்து சம்பாதித்தேனாக்கும்.''

—ஜெயமாலினி

வாணிஸ்ரீ நடிக்கும் படத்தில் கொஞ்சம் கிளாமராகவோ அல்லது செக்ஸி

ஆட்டுக்கார அலமேலு படத்தில் பிரபலமாகியிருக்கும் 'பருத்தி எடுக்கையிலே..' என்ற பாடலின் ட்யூனை எப்படிப் போட்டார்களாம்?

இசையமைப்பாளர் சங்கர்-கணேஷைக் கேட்டபோது சொன்னார்:

'இந்திப் படத்தில் வரும் முக்கால்வாசி ட்யூன்களைத் தேவர்தான் சொன்னார். அந்தக் காலத்தில் தான் நாடகத்தில் பாடிய பாட்டெல்லாம் தேவர் பாடிக் காண்பித்தார். அப்போது சில ட்யூன்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு அந்த ட்யூனிற்கேற்ப வேறு பாடல்களைப் பாடும்படி அவரையே கேட்டுக் கொண்டோம். அவர் பாடிய பாடல்களை அப்படியே இசையமைத்துவிட்டோம்.'

—பாரிஜ் ராதா

இரவில துணைவி, துணைவ

வை. சு.

பனகல் பார்க், பாண்டி பஜார் என்று சுற்றிவிட்டுத் திரும்பினான் கோபி. வீடு அங்கிருந்து இரண்டு மைல் தொலைவில் இருந்தது. நடப்பதற்கு அவனுக்குப் பிடிக்கும். நடந்தான்.

அவன் பிரம்மசாரிக்கட்டை. பாங்க் ஒன்றில் எழுநூறு சம்பளம். கிராமத்திலுள்ள பெரியப்பா அவனுக்கு ஒரு கால்கட்டுப் போட எப்பவாவது கடிதம் எழுதுவார். இவனுக்கு ஏனோ கல்யாணமென்றால் கசப்பு. வாடகைக்கு ஒரு வீடு எடுத்துக்கொண்டு தனிக் கட்டையாகப் பொங்கிச் சாப்பிட்டுக் கொண்டு—அவன் ஒரு போக்கு.

ஆள் நடமாட்டம் குறைந்து பஸ், சைக்கிள் ரிக்ஷா, காஸ் ஸிலிண்டர் வண்டி—இவற்றின் ஒலிகள் திசை மாறிய இடத்துக்கு வந்துவிட்டான். இன்னும் அரை மைல் போக வேண்டும்.

பின்னாலிருந்து தன் நிழலுடன் இன்னொரு நிழல் தொடர்வதைப் பார்த்தான் கோபி. ரோடு வெளிச்சத்துக்குத் தக்கபடி இரண்டு நிழல்களும் குறுகுவதும், ஒரேயடியாய் நீள்வதும், பிறகு சிறிது நேரத்துக்குத் தேய்வதுமாக இருந்தன.

திரும்பிப் பார்ப்பதா, வேண்டாமா என்று அவன் யோசித்தான். 'சரி, நாலு விளக்குக் கம்பங்கள் தாண்டுவது வரை பார்ப்போம்' என்று ஒரு கணக்கு வைத்துக் கொண்டான்.

ஐந்தாவது கம்பம் நெருங்கிக் கொண்டிருந்தது. மெதுவாக நடந்தான். அந்தத் துணை நிழலும் அவன் நிழலை ஒட்டி வந்தது. வேகமாக நடந்தான். இரண்டு நிழல்களும் வேகமாக முன்னேறிக் கொண்டிருந்தன.

விளக்குக் கம்பத்தின் அடியில் நின்று திரும்பிப் பார்த்தான்.

ஒரு பெண்! அவளும் நின்றுவிட்டாள். அவனுக்கு வியர்த்து, சட்டையெல்லாம் கசகசவென்றாகி விட்டது. மீண்டும் நடக்கத் தொடங்கினான். அவளும் நடையைத் தொடர்ந்தாள். பத்தடி இடைவெளி இப்போது. சட்டென்று நின்று, "நீங்கள் எங்கே போக வேண்டும்?" என்று நேருக்கு நேர் பார்த்துக் கேட்டான்

அவள் சிறிது தயங்கிக் கொண்டு கூறினாள்: "உங்களை ஒரு துணையாக எண்ணி உங்களுடன் வருகிறேன்."

அவன் உடல் ஜில்லிட்டுவிட்டது. அவளுடைய புதிர் புரியாமல், "நானா? துணையா?" என்று குழறினான்.

"ஆமாம், துணைதான். என்னைத் தவறாக நினைக்காதிங்க...." பேசிக் கொண்டே அவனை நெருங்கி வந்தாள் அவள். "உங்களோடு உங்க வீட்டுக்கு வருகிறேன். காலையில் நான் என் பாட்டுக்குப் போயிடுவேன். தடை சொல்லாதிங்க." அவள் கண்களில் நீர் பளபளத்தது. கொஞ்சம் துணிவு பெற்று அவளை நன்றாகவே பார்த்தான் கோபி. பெண்தான். பேய், அது இது எனப் பயப்பட வேண்டியதில்லை. அந்த விளக்கின்



டியில் அவள் ஒரு வெண்சிலை போல நின்றிருந்தாள். நல்ல அழகு. தோற்றம், இளமை பூரிக்கச் சுடர் விட்டது. கோபி மற்றொரு முறை அவளை நிமிர்ந்து பார்த்தான். மறுவிநாடி அவள் பார்வை தாழ்ந்தது.

அதற்கு அடுத்த விநாடி ரோடு விளக்குகள் அணைந்தன. தொலைவில் வீடுகளிலும் விளக்குகள் அணைந்தன. உலகமே இருளில் ஆழ்ந்தது போலாயிற்று.

கோபி விடுவிடென்று நடக்கத் தொடங்கினான். அவள் பின்னால் வந்தால் வரட்டும்; வழியில் எங்காவது பிரிந்தால் பிரியட்டும் என்று எண்ணினான்.

வீடு வந்தாயிற்று. சரக் என்று வாசல் மரத்தடியில் சருகுகள் மிதிபடுவதிலிருந்து அவளும் வந்திருக்கிறாள் என்று தெரிந்தது அவனுக்கு. பூட்டைத் திறந்து கொண்டு உள்ளே போனான். 'மெழுகு வத்தி வாங்காமல் போனேமே' என்று தோன்றிற்று.

''உள்ளே வா,'' என்று குரல் கொடுத்தான்.

நிதானித்துப் படிகளில் ஏறி உள்ளே வந்தாள் அவள்.

இருளில் துழாவித் துழாவி வத்திப்பெட்டியைத் தேடி எடுத்து, குத்து விளக்கை ஏற்றினான். அந்த சன்னமான வெளிச்சத்தில் அவள் எங்கேயிருக்கிறாள் என்று பார்க்க நிமிர்ந்தான். ஹாலுக்கு வெளியிலேயே வாசல் கதவோரம் அவள் நின்றிருந்தாள்.

அவளை உள்ளே அழைப்பதா வேண்டாமா என்று அவன் குழம்பிக்கொண்டிருந்த போது, வெளிச்சத்தைக் கண்ட தெம்பில் அவளே உள்ளே வந்து விட்டாள்.

''நீ யாரம்மா? ஏன் இப்படித் தனியாக கிளம்பினே? எங்கே போற உத்தேசம்?'' என்று கேட்டுக்கொண்டே அவளுக்கு ஒரு நாற்காலியைக் கொண்டு வந்து போட்டான்.

அவள் உட்கார்ந்தாளோ, இல்லையோ; இருளில் தெரியவில்லை. திடீரென்று அவளிடமிருந்து ஒரு விசும்பல் எழுந்து கேவலில் கரைந்தது.

சில நிமிடங்களில் அழு

கையை அடக்கிக் கொண்டு நிதான மாகவும் தெளிவாகவும் அவள் சொன்னது இது.

அவள் பெயர் தாரிணி. தேனாம்பேட்டை பகுதியில் அவளும் அவள் தாயாரும் ஒரு வீட்டில் குடியிருந்து வந்தார்கள்.

அவள் ஒரு பிரைவேட் ஸ்கூலில் டீச்சராக இருக்கிறாள்.


பத்து நாட்களுக்கு முன் அவள் தாயார் இறந்து விட்டாள். தனிமையும் துயரமும் அவள் நெஞ்சைப் பிழிகிற இந்தச் சமயத்தில் தான் தாயாருக்கு ரேஸ் பழக்கம் உண்டு என்றும் பல ஈட்டிக்காரர்களிடம் ஆயிரம் ரூபாய்க்குமேல் கடன் பட்டிருக்கிறாள் என்பதும் அவளுக்குத் தெரிய வந்தது. ஒரே ஈட்டிக்காரனிடம் வாங்கியிருந்தால்கூட அவன் பொறுத்துக் கொள்வான். இவனுக்குத் தெரியாமல் அவனிடம், அவனுக்குத் தெரியாமல் இவனிடம் என்பதுபோல் இரண்டு மூன்று பேரிடம் மகளின் சம்பளப் பணத்தைக் காட்டி வாங்கியிருந்தாள்.

தாயார் இறந்ததும் கடன்காரர்கள் அவளைப் பிடித்துக் கொண்டனர். அவளும் சால்ஜாப்பு சொல்லிப் பார்த்தாள். கடைசியில் ஒரு தேதி வைத்து விட்டனர். மறுநாள் ஆயிரம் ரூபாயை யும் வட்டியையும் வைக்கவில்லையெ ன்றால் அவளை நடுத்தெருவில் நிறுத்தி மானபங்கம் பண்ணப்போவதாக மிரட்டி விட்டுச் சென்றனர். மறுநாள் அவர்க வருவதற்கு முன் அவள் தப்பித்துவிட விரும்பினாள்.

''இதுதான் நான் அந் வீட்டிலேயே இருக்க வேண்டாம்னு கிளம்பிட்டேன்... இன்னிக்கு ரா திரி மட்டும் நான் இங்கே இரு துட்டு நாளைக் காலையிலே போயி றேன், சார்! தப்பா நினைச்சுக்காதீங்க. கண்ணீர் வழியச் சொன்னாள் தாரிண

''அழாதே, தாரிணி. அ ருக்கட்டும். என் மேலே உனக்கு எ படி நம்பிக்கை வந்தது? என் பின் லேயே வரணும்னு உனக்கு எப்படி தோணிச்சு?''

''அதென்னமோ உங்க முக தைப் பார்த்த உடனே எனக் ரொம்ப ஆறுதலா இருந்தது. நல் வேளையா ஸ்ட்ரீட் லைட்ஸ் ஆஃப் ஆ துக்கு முந்தி உங்க முகத்தைக் க டேன். ஏதோ ஒரு நம்பிக்கை உ களையே பின்தொடரச் சொல்லி விர டினதால் நான் பிழைச்சேன்...உங் வீட்டிலே வேற யாரும் இல்லைய



பிள்ளையார் ஜாக்கிரதை

ஜாக்கிரதை

வருண ஜெபம் செய்தால் மழை பெய்யும் என்பது வைதிகக் கொள்கை. ஆயினும் மழை பெய்யக் குறுக்கு வழியொன்று சில ஊர்களிலே கையாளப்படுகிறது. ஆற்றங்கரையில் அரச மரத்தடியில் அமர்ந்துள்ள பிள்ளையாருடைய மூச்சைப் பிடித்துவிட்டால் மழை பெய்யும் என்பது நம்பிக்கை. அதற்காகப் பிள்ளையாரைச் சுற்றிக் கல மண்ணால் ஒரு கோட்டை கட்டுவர். தண்ணீரைக் கொண்டு போய் அதில் கொட்டுவர். பிள்ளையார் கண் அளவிற்குத் தண்ணீர் நிறைந்தவுடன் மழைக்குறி ஏதேனும் தோன்றுகிறதா என்று விண்ணை நோக்கு வர். கார்மேகம் ஒன்றையும் காணாவிட்டால் அவரைச் சுற்றியுள்ள தண்ணீரில் காரமான மிளகாய்ப் பொடியைக் கரைப்பர். இதற்கு ''மூச்சுப் பிடிவிழா'' என்று பெயர். இந்த விழாவால் மழை பெய் வதும் உண்டு.

—ரா.பி. சேதுப் பிள்ளையின் 'தமிழின்ப'த்திலிருந்து: கே.கே. ராஜன்

பிள்ளையார் ஜாக்கிரதை

சார்?"

"இல்லை. நான் ஒண்டிக் கட்டை."

"விடியற் காலையிலேயே எழுந்து போயிடறேன்."

"சரி...எங்கே போவே?"

"சட்டிக்காரங்ககிட்டேயி ருந்து தப்பினு போதும். மெட்ராஸை விட்டே போயிடப் போறேன் சார். இந்த டீச்சர் வேலை எங்கேயும் கிடைக்கும்."

சில நிமிடங்கள் அங்கே மௌனம். ஒரு தலையணையைக் கொண்டு வந்து சோபா—கம்—பெட் மீது போட்டு விட்டு கோபி சொன்னான்: "படுத்துக்க."

"உங்களுக்கு என்னாலே கஷ்டம்."

நைட் லாம்ப் தவிர எல்லா விளக்குகளையும் அணைத்துவிட்டு கோபி படுத்தான்.

வெகு நேரம் வரை அவனுக்குத் தூக்கம் வரவில்லை.

அவள் தூங்கிவிட்டாளா என்ன? மூச்சு விடும் சத்தம் கேட்டது. விடி விளக்கு வெளிச்சத்தில் அவள் ஒருக்களித்துப் படுத்திருந்தது அழகாகத் தெரிந்தது. களையான முகத்தில் இரண்டொரு வியர்வைத் துளிகள். பாவம்.

அவனுக்குத் தூக்கம் வரவில்லை. ஆபீஸ் லைப்ரரியில் வாங்கிவந்த ஒரு பத்திரிகையைப் பிரித்துப் படிக்கத் துவங்கினான். ஒரு தமிழ்ப்பட விமரிசனம்...

சுரீர் என்று தைத்தது அவனுக்கு. யாரோ ஒரு பெண் இரவில் முன் பின் தெரியாத வாலிபன் வீட்டில் தங்க இடம் கேட்கிறாளாம். அவன் இரக்கப்பட்டுக் கொடுக்கிறானும். காலையில் பார்த்தால் வீடு கொள்ளை போயிருக்கிறதாம்!

அப்படி இருக்குமோ இந்தப் பெண் விவகாரமும்! நினைப்பு தோன்றியவுடன் அவனுடைய நிம்மதி போய்விட்டது.

"இந்தாம்மா பொண்ணு! எழுந்திரு!"

அவள் அப்போதுதான் கண்ணயரத் தொடங்கியிருந்தாள். விருக்கென்று அவள் எழுந்து உட்கார்ந்து பயத்துடன் பார்த்தாள்.

ஒரு டம்ளர் பால் விலை ஆயிரம் ரூபாய்



ஒரு டம்ளர் பாலின் விலை சுமார் 50 காசுதான். ஆனால் இதற்காக ஆயிரம் ரூபாய் செலவு செய்தது மத்தியப் பிரதேச அரசு.

பிரதமர் மொரார்ஜி காலை உணவு அருந்தும் போது ஒரு டம்ளர் பசும்பால் சாப்பிடுவார். அவர் மத்தியப் பிரதேசத்துக்குச் சென்றிருந்தபோது உஜ்ஜெயின் நகரில் தங்கினார்.

பிரதமர் சாப்பிடப் பால் கறப்பதற்கு ஏற்ற பசுவைத் தேடிக் கண்டு பிடிக்கும் வேலையில் அதிகாரிகள் ஈடுபட்டனர்.

நல்ல ஆரோக்கியமான பசுவாக இருக்க வேண்டும் என்பதற்காக அதிகாரிகள் பல ஊர்களுக்குச் சென்று 200 பசுக்களைப் பார்த்தனர். கடைசியாக ஒருவரிடம் வெளிநாட்டுப் பசு ஒன்று இருப்பது தெரிந்து அங்கு அதிகாரிகள் போனார்கள். அந்தப் பசு ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த பசுவாகும்.

அந்தப் பசுவைக் கொண்டு வந்து பிரதமர் வருவதற்கு ஒரு நாள் முன்பிருந்தே கால் நடைத் துறை அதிகாரிகள் பராமரித்து வந்தனர்.

சிறந்த பால் தருவதற்காக அந்தப் பசுவுக்குச் சத்தான உணவு வகைகள் கொடுக்கப்பட்டன. கோதுமை, சோளம், பாதம் மற்றும் வைட்டமின் சத்து உள்ள தீவனங்கள் வழங்கப்பட்டன. பசுவைத் தேட ஆரம்பித்ததிலிருந்து தீவனம் போட்டது வரை அரசுக்கு ரூ.1000க்கு மேல் செலவானது.

மறுநாள் பால் கறந்து அதில் ஒரு டம்ளர் பாலைப் பிரதமரிடம் கொடுத்தனர்.

ஆதாரம்: 'அண்ணா'

—என். ரகுபதி

''கூப்பிட்டீங்களா...''

அவன் கையைச் சொடுக்குப் போட்டான். ''இந்தாம்மா, எழுந்திரு...ஒரு பாயும் தலையணையும் வேணும்னுத் தர்ரேன்...வெளியே அப்படியே திண்ணையிலே படுத்துக்க... உள்ளே வேண்டாம்...''

''சார்... ஈட்டிக்காரங்க பார்த்தாங்கன்னு...''

''வேண்டாம்மா... காலம் கெட்டிருக்கு...ஊர் எதுனு ஒண்ணு சொல்லும். நீ வெளியே படுத்துக் கொள்.''

அவள் பரிதாபமாகப் பாய் தலையணையுடன் வெளியே திண்ணைக்குப் போனபோது அவன் உள்ளத்தை என்னவோ செய்தது. தான் அவளைச் சந்தேகிக்கிறது சரியில்லையோ? பத்திரிகையில் வந்த சினிமாக் கதை ஞாபகம் வந்தது...ஏமாற்ற வர்ரவங்க பின்னே சொல்லிட்டா வருவாங்க?

காலையில் கோபி கண் விழித்தபோது, ''ஐயோ, அம்மா!'' என்று ஈனஸ்வரமும், மிருகத்தனமான சில அதட்டல்களும் ஒருசேர அவன் காதில் விழுந்தன. அவனது தெருவில் எதிர் வீட்டில் ஒரு குடிகாரன் தன் மனைவியை வேளை காலம் தெரியாமல் போட்டுத் துவம்சம் செய்வான். அந்த மாதிரி ரகளையோ என்று நினைத்து, ஜன்னல் வழியே பார்த்தவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

தாரிணியின் கையை ஒரு முரட்டு ஈட்டிக்காரன் பிடித்து அநாகரிகமாகத் தெருவில் நெட்டித் தள்ளிக் கொண்டிருந்தான். அவள் பரிதாபமாக முரண்டிக் கொண்டிருந்தாள். ''எங்களை ஏமாத்திட்டு ஓடியா வந்திட்டே... எங்கே பணம்?''

கோபி வெளியே வந்தான். ''விடுய்யா அந்தப் பெண்ணை!''

ஆயுளில் அப்படி கோபி யாரையும் அதட்டியதில்லை. ஈட்டிக்காரன் அலட்சியமாக, ''இது ஏமாத்து பொம்பிளை,'' என்றான்.

''சீ! விடப்போறியா இல்லையா...?''

ஈட்டிக்காரனுடன் நடந்த சிறிய கைகலப்பில் கோபிக்கு உதடு உடைந்து உப்புக் கரித்தது. அதற்குள் அந்தப் பக்கமாகப் போலீஸ் ஜீப் ஒன்று வரவும் ஈட்டிக்காரன் சத்தம் போடாமல் நழுவிவிட்டான்.

வீட்டுக்குள் தாரிணியை அழைத்துச் சென்றான் கோபி. ''தாரிணி, என்னை மன்னித்துவிடு...உன்னை வீணாகச் சந்தேகப்பட்டு...''

தாரிணி நிலைவாசல்படிக்கு வெளியிலேயே குனிந்த தலையுடன் கண்ணீர் மல்கத் தயக்கத்துடன் நின்று கொண்டிருந்தாள். ''பரவாயில்லை. உள்ளே வா தாரிணி.''

எழுந்து சென்று அவள் தோளை ஆதரவாக அணைத்து உள்ளே கூட்டிச் சென்றான்.

தீடப்பட்டவள்

"அக்கா நாளைக்கு ஜான் கல்யாண த் து க் குப் போ றீங் களா?" என்று கேட்டார் ஜேசுதாஸ்.

எலிஸபெத், "நான் குளோரி பிரசவித்ததற்காக அவர்கள் வீட்டுக்குப் பிரார்த் தனை செய்யப் போகவேண்டும், நீயும் ஜோஸப்பும் கல்யாணத்துக் குப் போய்ட்டு வாங்க," என்றாள்.

"அத்தானும் திருச்சியில யிருந்து கல்யாணத்துக்காக வாரு ராம்."

எலிஸபெத் நிமிர்ந்து பார்த்தாள். உதடுகள் துடித்தன பிக்காரர் அந்த உதடுகள் இதய இயங்குவதைப் புரிந்துகொண்டார்

சிறிது இடைவெளிக்குப் எலிஸபெத், "ஆமாம். ஜான் அ ளுக்கு பெரியம்மா பேரன். ந வாரேன். நீ அத்தான் பக்கத்தி உட்கார்ந்து நான் அவங்கள பார் வரைக்கும் பிடிச்சி வச்சிருக்கனு என்றாள்.

அன்றிரவு அவளுக்குத் கம் வரவில்லை. காலையில் எழுந் "ஜான்ஸி, மாமாவுக்கு இடியா பிடிக்கும். பிரமாதமா செய்து எ என்றாள். "ஏய் பேபி, வீட்டை தமா வைம்மா. ரேடியோ தூசைப் பாரு. ஹேங்கர உள்ளகெ மாட்டு. நாற்காலியில கிட பாவாடய எடு. அவங்க எந்தப் பொருளும் இருக்க டிய இடத்துல இருக்க சிதறிப் போறது பிடிக்



ஜோஸப், நீ என் ராஜா இல்லியா.. ல்லாத்துட்டயும் தமாஷ் பண்றது ாதிரி அவருக்கிட்ட பேசாத. நீ ண்ணு கிடக்க ஒண்ணு சொல்ல, அவங்க' குத்திக்காட்டுறதா நினைக்கப் பாருங்க. தம்பி, இன்னமா டிரஸ் ண்ற? வா நேரம் ஆவுது.''

அக்காளும், தம்பியும் நேரத் ற்கு முன்னதாகவே சர்ச்சுக்குக் கிளம் ப் போய்விட்டார்கள். அங்கிருந்த ரு சிலரில் 'அவங்களை'த் தேடினாள். ல்லே. ''இனிமேல்தான் வருவார். வங்க முந்தியும் வர மாட்டாங்க. ந்தியும் வரமாட்டாங்களே.''

மணமக்கள் அணி திரண்ட ஊர்வலத்துடன் வந்தார்கள். எல்லோ ம் மணமாகப் போகும் ஜோடியைப் ார்த்துக் கொண்டிருந்தபோது, எலிஸ பத் தன் மாஜி ஜோடியைக் கண்களால் தடிக் கொண்டிருந்தாள்.

எலிஸபெத் நடுத்தர குடும் த்தைச் சேர்ந்தவள். ஐம்பது யதுக் காலம் சென்னையில் வள் தந்தை பாதிரியாராக இருந்தவர். வள் இளம் வயதிலேயே அன்னையை ழந்து விட்டாள். எஸ். எஸ். எல். சி. த்துவிட்டு செகண்டரிகிரேட் ஆசி யர் பயிற்சிக்கும் படித்துவிட்டு, சென் னயில் உள்ள ஒரு பள்ளிக்கூடத்தி லயே வேலை பார்த்தாள். திருச்சியில் ாலுகா ஆபீசில் குமாஸ்தாவாக ருந்த அருளய்யாவிற்கும் அவளுக்கும் ிருமணம் நடைபெற்றது.

இருவரும் அன்னியோன்னிய ாகத்தான் வாழ்ந்தார்கள். அருளய் ாவும், அவள் தம்பிகளுக்குத் தன்னால் டிந்த உதவிகளையெல்லாம் அவள் ண்டுதலில்லாமலே செய்தார். ஆசிரியையான அவள், அவரிடம் மாண ியாக நடந்து கொண்டாள். குரு ிஷ்யை உறவு. அது ஒருநாள் கூட, ஆண்டான்—அடிமை உறவாக மாறியது ில்லை.

இப்படி நெருக்கமாகவும், ேசமாகவும் இருந்த அவர்கள் இல் றம், பத்துப் பதினைந்து ஆண்டு ளுக்குப் பிறகு, படிப்படியாக நேசத்தை வைத்துக் கொண்டு, அதன் நெருக்கத்தை அழித்துக் கொண்டிருந் து. இருவருக்கும் இடையே விளை ாடிக் களிப்பதற்கு பிள்ளை இல்லை;

இவ்வளவுக்கும் அருளய்யா அவளிடம் வாய்விட்டு 'ஊம், உன்னால எனக்கு ஒரு குழந்தை தர முடியவில்லையே' என்று நேராகக் கேட்டதில்லை. 'போன வருஷம்... கல்யாணமானவனுக்கு... இந்த வருஷம் பிள்ளை,' என்று சுற்றுப்புறக்காரனைச் சுட்டிக் காட்டுவார். பின்னர் ஒரு நாள், ''நம்ம ஜோஸப் டில்லியில் இருந்து வந்திருக்கான், வழில பாத்தேன். அவனுக்கும் பேர் சொல்ல பிள்ளையில்ல.. என்னப்போல ஆண்மையில்லாதவன் போலிருக்கு,'' என்று அவர் சொன்னதை, அவளால் பொறுக்க முடியவில்லை.

அவள் தூரத்து உறவில், ஏழ்மையில் வாடிய இளம்பெண்ணைத் திருச்சபைக்குத் தெரியாமல், மூன்று வருடத்திற்கு முன்பு, தனது ஐம்பது வயதுக் கணவனுக்கு மணமுடித்து வைத்தாள். அருளய்யாவும், அவளுக்காகப் போனால் போகிறது என்று திருமணம் செய்து கொள்வது போல், அவளை மட்டுமல்ல, தன்னையும் ஏமாற்றிக் கொண்டார்.

ஆரம்ப காலத்தில், கணவனை இன்னொருத்தி பகிர்ந்து கொள்கிறாள் என்பதில் எலிஸபெத்திற்குக் கொஞ்சம் பொறுமைதான். ஆனால் அவள் வந்த வேகத்திலேயே ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்ததும் எலிஸபெத் அந்தக் குழந்தையைத் தான் வைத்துக் கொண்டு, குழந்தைக்காரி கணவனுடன் குதூகலமாய் இருக்க வழி செய்தாள். ஆனால், வழி செய்தவளுக்கு விழி பிதுங்கத் துவங்கியது. 'சக்களத்தி' இரண்டாவது தாரம் மட்டுமல்ல; தரமும் அப்படித்தான் என்பதுபோல் அவளுக்குப் பட்டது. அவள் பட்டாடைகளை வாங்குவதும், அக்கம் பக்கத்திலே போய் அரட்டையடிப்பதும், அடிக்கடி சினிமாவுக்குப் போவதும், 'எடுத்தேன் கவிழ்த்தேன்' என்ற முறையில் பிறரைப் பேசுவதும், கணவனையே அதட்டுவதும், இவளுக்குப் பிடிக்கவில்லை.

தேவாலயப் பள்ளியில் வாங்குகிற சம்பளத்தைக் கணவனிடம் அப்படியே கொடுத்துப் பழகியவள் எலிஸ

சு. சமுத்திரம்

பெத். தம்பி பிள்ளைகளுக்குப் பிறந்த நாட்கள் வரும்போதும், கிறிஸ்துமஸ் போன்ற பண்டிகைகள் வரும்போதும், சுமாரான விலையில் பரிசுகள் வாங்குவதற்காக மட்டுமே கட்டியவரிடம் பணம் கேட்பாள். இப்போதும், கட்டியவரிடம் கேட்டால் அவர் இரண்டாவதாகக் கட்டியவளிடம் கேட்டுக் கொள்ளும்படி கைகாட்டிவிட்டார்.

என்றாலும், எலிஸபெத் அவளிடம் கேட்டாள். அவளோ 'இனிமே இந்த பழக்கமெல்லாம் கூடாது' என்று கைவிரித்தாள். எலிஸபெத் அருளய்யாவிடம், ஜாடைமாடையாகவும் பண்பாகவும் சொன்னாள். "அவள் சொன்னதில் என்ன தப்பு?" என்று திருப்பிக் கேட்டார் அவர்.

மாதச் சம்பளத்தில் ஐம்பது ரூபாயை எடுத்து வைத்துக் கொண்டு, மீதியைக் கொடுத்தாள். இதை இளையவள், மூத்தவளின் அன்பில்லாமைக்கும், அவநம்பிக்கைக்கும் அடையாளம் என்று வாதிட்டாள். அவர், "ஒனக்கு என் மேல நம்பிக்கையில்ல. நான் பெத்த பிள்ளய ஒன் பிள்ளயா நினைக்கல. இன்னும் தம்பி பிள்ளிங்கள்யே நினைச்சிக்கிட்டு இருக்கிற. ஒண்ணு, சம்பளம் முழுதையும் கொடுத்து இரு. இல்லன்னா தனியா இரு. அல்லன்னா தம்பிங்கக் கூடப் போயி சேரு," என்றார்.


எலிஸபெத் துவண்டு போனாள். இருபது ஆண்டுகளுக்கு மேலான பந்தம், கேவலம் ஐம்ப ரூபாயில் பரீட்சிக்கப்படுவது கண் பரிதவித்தாள். அதே சமயம், ப மில்லாமலே, தன்னால் பந்தத்துட வாழமுடியும் என்று நிரூபிப்பவள் போ வேலையை ராஜினாமா செய்துவிட்டு சென்னைக்கு வந்து விட்டாள். தம் களும் சரி, தம்பி பிள்ளைகளும் சர் அவளைக் கண் போல் நேசிக்கிறார்கள் என்றாலும், அவளுக்கு மனம் கேட் வில்லை. அருளய்யாவின் பந்தத்தை அ ளால் விட முடியவில்லை. கடிதம் எ தினாள். மன்னிக்கும்படி மன்றாடி எழு னாள். ஆனால் அருளய்யா பழைய அருள யாவல்ல. அவர் ஆன்மாவை இளையவ ஆட்சி செய்கிற காலம். 'குடும்ப கெட வேண்டும், குழந்தை நல்லமுறை யில் வளர்க்கப்படலாகாது என் வஞ்ச உணர்வில் வேலையை விட் விட்டுப் போனவள், உறவையு விட்டுவிட வேண்டியதுதான்' என் நாலு வரியில் ஒரு கடிதத்தை எழுதி போட்டுவிட்டு, இளையவளிடம் 'சபாஷ் வாங்கிக் கொண்டார். ஆனால் எலி பெத்தின் மனத்தில் இன்னும் ந பிக்கை இருந்தது.

எலிஸபெத்தின் கண்க திருமணக் கூட்டத்தில் கணவனை தேடின. எப்படியோ, அருளய்யாவு அவள் கண்ணில் சிக்கினார். தம் ஜோஸப் அவங்களுடன் பேசிக் கொண் டிருக்கிறான். அவங்க பலமாய்த் தலை பக்கவாட்டில் ஆட்டுறாங்க. ஏன் முக இப்படிக் கோபமா இருக்கு?

எலிஸபெத் அப்போதே எழுந்து அவர் அருகில் போய் உ காரத் துடிப்பவள் போல் தவித்தாள் மணமகன் மணமகளின் வலது கையைப் பிடித்திருந்தான். ஆராதனை செய்யு பாதிரியார் சொல்லச் சொல்ல, அவ திருப்பிச் சொன்னான்.

எலிஸபெத், கணவன் இருந் இடத்தைப் பார்க்கிறாள். அவரையு அவள் தம்பியையும் காணவில்லை. இ வரும் ஆலயத்திற்கு வெளியே நின்ற கள். அருளய்யா தற்செயலாக அவளை பார்த்துவிட்டு முகத்தை வன்முறை கத் திருப்பிக் கொண்டார். அவளா பார்க்க முடியவில்லை. நீர்த் திவலைக பார்வையை மறைத்தன.

17'ம் பக்க விடை



'கர்த்தர், இவர்களை சகல ஆசீர்வாதத்தினாலும், கிருபையினாலும் நிரப்பக்கடவர், ஆமென்' என்று மாங்கல்யம் தரித்து, மணமுடித்த இருவரையும் வாழ்த்தி, பாதிரியார் விவாகத்தைப் பூர்த்தி செய்து வைத்தார். உடனே வேத சங்கீதம் துவங்கியது. எலிஸபெத் மங்கல நன்னாளில், அமங்கலக் கண்ணீரைச் சிந்தக் கூடாது என்ற உறுதியோடு வெளியே வந்தாள். தம்பி மட்டும் அங்கே நின்றார். எலிஸபெத்தைப் பார்த்ததும், அவர் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு பேசினார்.

"நான் எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். அவர் மனசு இளகல. நீ பிள்ள உருப்படக் கூடாதுன்னு நினைக்கிறவளாம். ஒன் வாடையே வேண்டாமாம். வாயில உதைக்கலாமோன்னு நினைச்சேன்."

எலிஸபெத் காதுகளைப் பொத்திக் கொண்டபோது, தம்பி அக்காவின் தலையைக் கோதிவிட்டார்.

"நாங்கல்லாம் இல்லியாக்கா. இந்த மூணு வருஷத்துல, எப்பவாவது ஒன் மனங்கோணும்படியா பேசியிருக்கோமா? அப்படி என்னக்கா பெரிய புருஷன்? அவனுக்கு முன்னாலயே நாம ஒண்ணா பிறந்து ஒண்ணா பழகுனவங்க. ஏக்கா அழுவுற? அட வாக்கா. சனிதான். அந்த மனுஷன் கிடக்கான்."

இருவரும் மௌனமாக வீடு நோக்கி நடந்தார்கள்.

"பெரியம்மா!" அவளை ஒரு குரல் அழைத்தது. பக்கத்து வீட்டிலிருந்து குளோரியின் மகன், "பெரியம்மா! அக்கா உங்களைப் பிரார்த்தனைக்கு அழைச்சிட்டு வரச் சொன்னாங்க. குழந்தைக்கு உடம்பு ஜுரமா கொதிக்குது," என்றான்.

பிரார்த்தனை! ஊராருக்குப் பிரார்த்திக்கும் நிலையிலா கர்த்தர் அவளை வைத்திருக்கிறார்.

அவள் குமுறினாள். "வருவதற்கில்லை. எனக்குக் கொஞ்சம் வேலையிருக்கிறது."

கர்த்தரே... ஊராருக்காகப் பிரார்த்தனை செய்யும் எனக்கு இப்படிப்பட்ட பரிதாப நிலையை ஏற்படுத்திவிட்டீர்களே... கர்த்தரையே கேட்டு விட வேண்டும் தகிப்பு அவளுக்கு...

அவளால், தாங்கவும் முடியவில்லை. தாளவும் முடியவில்லை. முன் அறைக்கு வந்து முழங்காலிட்டாள். ஜெப புத்தகத்தில் நினைவுக்கு வந்த வாக்கியங்களைத் தன் சொந்த வாசகங்களோடு சேர்த்துக் கொண்டு தனக்குள்ளேயே கர்த்தரை முன்னிலைப்படுத்திப் பேசினாள்.


"பரலோகத்தில் இருக்கும் எனது பிதாவே! நான், பலநாள், பல்லாண்டு எனக்கு ஒரு குழந்தை வேண்டுமென்று வேண்டியும், உரக்க சத்தமாய் உமது ஜெபத்தைச் சொல்லியும் தேவ கிருபை கிட்டவில்லை. இதனால், என் பிரியமானவரை, நான் பிரிய வேண்டியதாயிற்று. கர்த்தாவே!

புத்தகத்துக்கு இப்படி ஓர் உபயோக முண்டா?

"...தென்னாப்பிரிக்கச் சிறையில் இருந்த சமயம். சிறையிலிருந்து வழக்கு மன்றத்துக்கு அழைத்துச் சென்றார்கள். அப்போது எனக்கு விலங்கு போடப்பட்டிருந்தது. தலைமைக் காவலாளியிடம் படிப்பதற்காக ஒரு புத்தகம் எடுத்துச் செல்ல அனுமதி கேட்டேன். விலங்கு போட்டிருந்ததால் நான் வெட்கப்படுவதாயும், கை விலங்கை மறைப்பதற்காகவே நான் புத்தகம் கேட்பதாகவும் நினைத்துவிட்டார் அவர். 'கை விலங்கை மறைக்கிற மாதிரிப் புத்தகத்தைப் பிடித்துக் கொள்ளுங்கள்,' என்று அவர் சொன்னபோது எனக்கு சிரிப்புத்தான் வந்தது..."


காந்தியடிகளின் 'சிறை அனுபவங்கள்' என்ற நூலிலிருந்து.

—'மு'



என் இதயம் புல்லைப் போல் வெட்டுண்டு உலர்ந்திருக்கிறது. என் பெருமூச்சின் சத்தத்தினால், என் எலும்புகள் என் மாமிசத்தோடு ஒட்டிக்கொள்கின்றன. நான் நித்திரை இல்லாமல், வீட்டின் மேல் தனித்திருக்கும் குருவிக்கு ஒப்பானேன். நீர் என்னை உயரத் தூக்கி, தாழத் தள்ளியது ஏன்? என் நாட்கள், புகையைப் போல் ஒளியக் காரணமேன்? இதுவரை வருந்தி ஜெபம் செய்த இந்த அடியாள், இப்போது உம்மை வருத்தித் துதிக்கிறேன். நான் உமக்குப் பயந்து உம் வழியில் நடந்து, உம் மகிமையை உணர்ந்து உபதேசம் செய்பவள் என்பது உண்மையானால், இன்னும் அரை மணி நேரத்திற்குள் நீர் என்னைத் திடப்படுத்த வேண்டும். ஆமென்.'

எலிஸபெத் பிரார்த்தனையை முடித்துவிட்டு, நாற்காலியில் உட்கார்ந்தாள். குடும்பத்தினர் அனைவரும் அவளை ஆச்சரியமாகவும், அனுதாபமாகவும் பார்த்துக் கொண்டிருந்த வேளையில், அவர் தம்பி மகன், கல்லூரிக்காரனான அருண் கையில் ஒரு காகித புத்தகத்துடன் வந்தான். அத்தைக்காரி, மனத்தை மறைப்பதற்காக, அவனிடம் பேச்சுக் கொடுத்தாள்.



வயதான கணவர் !

"வாசலிலே நின்னுட்டு ஆபீஸ் போகும்போது டாட்டா டாட்டான்னு கத்தாதேன்னு எத்தனை நாள் சொல்லியிருக்கிறேன். எல்லாருக்கும் 'தாத்தா தாத்தா'ன்னு காதிலே விழுதாம்!"

"கையில என்னது அருண்?"

"நாவல் ஆன்ட்டி."

"பைபிளைப் பார்த்தா, எவ்வளவு சந்தோஷப்பட்டிருப்பேன்!"

"நீங்க நினைச்சது மாதிரி எல்லா நாவலும் மோசமில்ல, ஆன்ட்டி. இது சாமர்ஸெட் மாம் எழுதின '...மன் பான்டேஜ்' என்கிற நாவல். இது... ஒரு அற்புதமான இடத்த சொல்றேன் கேளுங்க. பிலிப்ஸ் ஒரு நொண்டிப் பையன். அங்கவீனமானதுக்காக வருத்தப்படுற அவனை, தலைமையாசிரியர், தன் அறைக்கு வரவழைத்து 'பிலிப்ஸ், நொண்டிக் காலுக்காக நீ வருத்தப்படலாகாது. உலகத்தின் பாவங்களைச் சுமப்பதற்காக கடவுள் சில நல்ல மனிதர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு இந்த மாதிரி உடற்குறைகளையும், இதர கஷ்டங்களையும் பிறரின் பாவ நிவர்த்திக்காக 'கிராஸாக' கொடுக்கிறார். உண்மையில் பிறர் பாவங்களைச் சுமக்க, நீயே தகுதியானவன், வலுவானவன் என்று நினைத்து உன்னைத் தேவன் தேர்ந்தெடுத்ததற்கு, நீ பெருமைப்பட வேண்டும். உன் கால், ஊனமுற்ற பிண்டம் அல்ல, ஆண்டவனின் சிலுவையைச் சுமக்கும் பாவ மரிப்பு அங்கம்' என்று சொல்றார். பாத்திங்களா ஆன்ட்டி, எவ்வளவு அருமையாச் சொல்லியிருக்கிறார். பாருங்க."

எலிஸபெத்திற்கு, திடீரென்று தலையில் ஒரு பொறி விலகி, பிறிதொரு பொறிக்கு வழிவிட்டது போல் தோன்றியது. திரித்துவமாக இருந்தாலும், ஏகத்துவமாக விளங்கும் தேவனும், தேவகுமாரனும், பரிசுத்த ஆவியும், அந்த அருண் மீது படர்ந்து, அரை மணி முடிவதற்குள், தன்னைத் திடப்படுத்தியதை அவள் உணர்ந்தாள்.

"அருண்," என்று தம்பி மகனை அழைத்தாள். "அந்த ஆட்டோ ரிக்ஷாவைக் கூப்பிடு."

"எங்கே போக வேண்டும் ஆன்ட்டி?"

"பக்கத்து ஊருக்கு. .. குளோரியின் குழந்தைக்கு உடம்பு சரியில்லையாம். ."

அருகில் வந்து நின்ற ஆட்டோவில் எலிஸபெத் அமைதியாக ஏறிக் கொண்டாள். தன்னைக் ...தர் திடப்படுத்திவிட்டார் என்ற ... அந்த அமைதியில் தெரிந்தது.



உங்களுக்காகவே
தனிப்பட்ட முறையில்
தயாரிக்கப்பட்டது
சந்திரிகா
ஆயுர்வேதிக் டாய்லட் சோப்
CHANDRIKA
AYURVEDIC SOAP
சந்திரிகா
CHANDRIKA SOAP
AYURVEDIC TOILET
சந்திரிகா பிராடக்ட்ஸ்
கோவை — சென்னை
ARIES/CP 712A

அந்தமான் காதலி

அன்பார்ந்த பத்மாவுக்கு,

நீ எப்பவுமே மக்கு. இப்ப அந்தமான் காதலி கதை பரவாயில்லேன்னு எழுதியிருக்கிறதிலிருந்து அது இன்னும் ப்ரூவ் ஆயிட்டுது. அந்தமானிலே இருந்த ஒருவன்—அவனுக்கு என்ன வேலே, எங்கே இருக்கிறுன், குடும்பம் எப்படி எதுவும் தெரியல்லே—யாரோ ஒரு டாக்டரைக் கொலே பண்ணிட்டதாய் நினேச்சு காதலிகிட்டேகூடச் சொல்லிக்காமல் இந்தியாவுக்கு ஓடி வந்துடருனும். கோடீசுவரனு ஆகிடருனும். ஆனல் அந்தமானிலே அப்புறம் என்னடா ஆச்சுன்னு தெரிஞ்சுக்க ஒரு தபால் கார்டு கூடப் போடல்லே. இருபத்தைஞ்சு வருஷம் கழிச்சுப் போய்ப் பார்த்தால் அந்த டாக்டர், நம்ம பாடனி புரொபசரின் மாமியார் மாதிரி அன்று கண்ட மேனிக்கு அழிவில்லாமல் இருக்கிருராம். கை விட்டுப் போன காதலி என்ன ஆனுள் என்று அதற்கப்புறம்தான் அவர் தேட ஆரம்பிக்கிருராம். இது ஒரு கதையா!

உன் அன்புள்ள
லல்லி

அன்புள்ள லல்லிக்கு,

கதை கொஞ்சம் முன்னே பின்னே இருந்தாலும் தமிழ்நாட்டுக்கும் அந்தமானுக்குமாக இணேத்து ஒரு படம் எடுத்தாங்க என்கிற வகையிலே ஒரு புதுமைதானே? சில சில இடங்கள் தேக்கடி என்கிருங்க. தேக்கடியானல் என்ன, அந்தமானுனல் என்ன? கலரெல்லாம் குளுகுளுன்னு இருக்கு.

சிவாஜி நடிப்பு எப்படின்னு நீ சொல்லலியே?

இப்படிக்கு
பத்மா

அன்புள்ள பத்மாவுக்கு,

வயசான ரோல்லே அவர் கம்பீரமாய்ச் செய்யற மாதிரி யாராலும் செய்ய முடியாது. அதுதான் தெரிஞ்ச சங்கதியாச்சே? அதுவும் தற்கொலே செய்து கொள்கிறேன் பார் என்று சொல்லி, வெடி மருந்து வைத்துப் பாறைகளேப் பிளக்கும் இடத்தில் அவர் பாட்டுக்குக் காயத்துக்கு மேல் காயமாய் வாங்கிக் கொண்டு, துள்ளித் துடித்து விழுந்து எழுந்து போய்க் கொண்டேயிருக்கிருரே, அது உருக்கமாயிருக்குது. ஆனல் யானேத் த... சைஸில் அத்தனே கற்கள் வந்து விழுகி... போது எப்படித் தான் பிழைத்தாரோ...

லல்...

அன்புள்ள லல்லி,

வெடி வைச்சுத் தகர்க்கி...



இடத்தை நீதான் மெச்சணும். ... பென்ஸ் என்று நினேச்சு அபத்தம் ப... ணியிருக்கிருங்க. சிவாஜிக்கும் தனக்கு... என்ன உறவுன்னும், அதை ஏன் இத்தனே... நாள் மறைக்க வேண்டியிருந்ததுன்னு... சுஜாதா லெக்சர் அடிக்கிருரே... அடிக்கிருரோ—அம்மாடி முதல் நம்ப... அறுவை. மனுஷன் ஆபத்திலே போய... மாட்டிக்கிருரே, அவரைப் போய்... காப்பாற்றணுமேன்னு ஒரு பெண்டாட... டிக்கு உடம்பு பதறுது? அட, அவ... தான் போக வேண்டாம், கேட்டு... கிட்டிருக்கிற பிள்ளேயாவது அப்புற... வந்து மிச்சக் கதையைக் கேட்டு... கிறேன்னு சொல்லிட்டு, முதல்லே... தகப்பனுரைக் காப்பாற்ற ஓட மாட்... டான்? அதிருக்கட்டும், சுஜாதா... தேவலேயா?

பத்மா

அன்புள்ள பத்மாவுக்கு,

பாலசந்தர் டைரக்ட் பண்ண... னல் சுஜாதாவை நல்ல இன்டெ... ஜென்ட் பெண்ணுக, படித்தவளாக... செய்வார். மத்தவங்க, எமோஷனலாய்... உணர்ச்சி பூர்வமாய் நடிக்கிற மாதி...



வாங்க. சிவாஜியோடு சேர்ந்து கிறப்போ இரண்டும் இல்லாம பிடறதுன்னு எனக்குத் தோணுது. ஜியைச் சுற்றிச் சுற்றி வருகிறார். ாடு சரி. சிவாஜியின் காலடியில் ந்து அழுகிறாரே, பார்க்கலே? ஒரு ந்தில்—பரவாயில்லையே, இவருக் ஒரு நல்ல கட்டம் இருக்கும் பிருக்கேன்னு நினைச்சேன். 'இவர் என் கணவர்னு நீயே உன் ால் சொல்லுவாய் பார்'னு சொல் யமுறுத்தறார் சிவாஜி. 'அதைச் ல்ல நான் இருந்தால்தானே?' என் சுஜாதா. தேவலையே, நல்ல தல் வரப் போகிறதுன்னு நினைச்சா, சியிலே வெறும் பொசுக்.

லல்லி

ார்ந்த லல்லிக்கு,

இருவருமே காதல் காட்சி நல்லாத்தான் நடிச்சிருக்கிறார் படகிலே சிவாஜி குறும்பு பண் ல் இருக்கணும்குறதுக்காக அவர் யைக் கட்டிப் போடறது; முதுகை ருந்துன்னு சிவாஜி தெளிய, இவர், றிந்து விடுவது, விடுகதை போட றேன் பதில் சொல்லு பார்க்கலாம்னு சுஜாதா சொல்ல, ''உடு'ன்னு அவர் சப்பணம் போட்டு உட்கார்ந்துக்கிறது— இதெல்லாம் மறந்துட்டியே? வயசு தான் கொஞ்சம் அதிகமே தவிர, அந்தக் கவிதா—சின்ன நம்பியார் ஜோடியைக் காட்டிலும் இது தேவ லைன்னு சொல்வேன்.

பத்மா

அன்புள்ள பத்மா,

'பணம், குத்தகை, சந்தை என்று ஒரு அறுவைப் பொன்மொழியை அஞ்சு நிமிஷத்துக் கொரு தரம் உதிர்க்கிறார் சிவாஜி. தன் குழந்தையின் பிராணன் போனாலும் போகட்டும், சுஜாதாவின் மாங்கல்யம் போகக் கூடா தென்று சுகுமாரி சொன்னதும் ஞானக் கண் திறக்குதாம். என்னவோ கூத்து. அந்தமானிலே மனைவியைக் கண்டு பிடிச் சதுமே கதை முடிஞ்சு போச்சு. காதில் வளையமும் கையில் விஷ அம்புமாய்க் காத்திருக்கிற செந்தாமரை ஒரு கப்ஸா. முன் பாதி ஏதோ ஸென்ஸிபிளாய் இருக்கிறதேன்னு நினைச்சா, போகப் போக. . .

லல்லி.



சங்கர் சலீம் சைமன்


சங்கர் சலீம் சைமனின்
அண்ணன்மார்கள்
அமர்—அக்பர்—அன்டனி.
அதிலிருந்து பிய்த்து
இதிலே போட்டாலும்
அது—
விளையாட்டு—உற்சாகம்.
இது
விளையாட்டு—சீரியஸ்.

ஜீன்ஸென்ன, டைட்ஸென்ன,
தலையிலே ஒரு
தொப்பியென்ன—
மஞ்சுளா
படா ஸ்டைல்.
வாயைத் திறந்தால்
மடேல்.
ஆட்டம் பாட்டம்
சிக்ஷா பாஷை
அமர்க்களம் போ, நயினா.

முதலெல்லாம்
பர்தாவில்
முகம் புதைத்திருந்த
புது முகத்துக்கு,
ஜெய்கணேஷின் காதல்
கிட்டிய பிற்பாடு,
பர்தாவும் கிர்தாவும்
பறந்து விடுகிறது
காற்றில்.

மாடிவீட்டு முஸ்லிம்
பீலிசிவம் சுச்சிதம்.
குடிசைக் கோகுல் நாத்தைக்
குல்லா போட வேண்டி,
ஜப்தி நாடகத்தை
ஜரூராய் நடத்தி,
குறுக்கே நுழைந்து
கைகொடுக்கும் திட்டம்.
நல்லதொரு கட்டம்.

மேக்கப்பும் சுகமில்லை,
உச்சரிப்பும் சரியில்லை.
பாத்திரம்கூடப்
பார்த்ததுதான் இ. தே. யில்,
ஒய் அப்படி
வீ. பி.?



ஐயாவை அதட்டுகிற
அ. பிரசங்கி வேலையாள்
அவதாரம் எடுப்பது
வழக்கம்தான் சினிமாவில்;
ஆனாலும் இந்தச்
சுருளி டிரைவர்
செய்வது ஓவர்.

மஞ்சுளாவின் அக்கா
மனோரமா வாயில்
என்னமா துள்ளுது
மின்கார மழலை!

ஊருக்கு நல்லவனாய்
உலவி வந்த ர. காந்த்;
கல்யாணமான
லதாவைக்
கடத்தியது ஏனென்று,
அப்போதே விளக்கி விட்டால்—
அரை மணி முன்னதாய்ப்
படம் முடிந்துவிடும்
என்பதைத் தவிர
என்னய்யா முழுகிவிடும்?

அன்றொரு நாள்
ஒரு பெண்ணை
ராகவனார் கெடுத்தாராம்.
குழந்தை ரஜனிகாந்த்
குமுறினாராம் அப்போது;

பிற்பாடு—
ராகவனார் மகள் லதாவை
ரஜனியார் காதலிக்க—
என்னடா இழவு இந்த
விபரீத உறவென்று
இருக்கையில் வெறுக்கையில்—
அம்மாடி!
அக்கா முறை தெரிந்ததும்
அடிவயிற்றில் பால்.

ரெட்டை விரல் உயர்த்தி,
சிலுவைக் குறி முத்தி,
பரமண்டலத்தில் உள்ள
பிதாவை ஜபித்து,
பாய்கிறார்
எதிரிமீது
பரவாயில்லை ரஜனி.

சிநேகிதனோடு சண்டை,
சத்துருவோடு சண்டை,
கூட்டத்தோடு சண்டை,
குடும்பத்தோடு சண்டை,
ஒர்க்ஷாப்பில் சண்டை,
மெரினாவில் சண்டை—
இத்தனை சண்டை
புகுத்தாமல் போனால்
உடைந்துவிடுமா
மண்டை?



பெண்டா

சு. சமுத்திரம்

கண் சிகிச்சை முகாமுக்கான ஜீப், கிழவர்—கிழவியர் சகிதம், பொன்னம்மா பாட்டியின் வீட்டு முன்னல் வந்து நின்றது. பாட்டியின் மகன் முனுசாமியிடம், கிராம சேவக்கும் சேவிகையும் விளக்கமாக எடுத்துரைத்து, பொன்னம்மாவை ஜீப்பில் ஏற்றினர்கள். மருமகள் காரி வாசல்வரை வந்தாள். மாமியாரை ஜீப்பில் பார்த்ததும், தனக்கும் வயதாகி, கண்ணும் கெட்டிருந்தால், இப்ப ஜீப்பில் ஏறியிருக்கலாமே என்று ஏங்கியவள் மாதிரி, பெருமூச்சுவிட்டாள்.

ஏதோ ஒரு வழியாக, கண் சிகிச்சை முகாம் துவங்கியது. அந்த டிவிஷனைச் சேர்ந்த ஆறு பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்களும், இதர அதிகாரிகளும், டிவிஷன் டெவலப்மென்ட் அதிகாரி தலைமையில், அந்தப் பஞ்சாயத்து யூனியனை முற்றுகை இட்டார்கள். யூனியன் 'கவுன்சில் ஹால்' ஆபரேஷன் தியேட்டராகியது. சென்னையிலிருந்து வந்த கண் டாக்டர்கள், கொண்டு வரப்பட்ட முதியவர்களின் சிலரது கண்கள் 'இன்னும் பழுக்கவில்லை' என்று கூறி, அவர்களைத் தள்ளிவிட்டார்கள். அப்படியும் நூற்றைம்பது கிழவர்—கிழவியர் தேறினர். இவர்கள் அனைவருக்கும் 'கேடராக்ட் ஆபரேஷன்' வெற்றிகரமாக நடந்தது. இது துவங்கியதிலிருந்து முடிவது வரைக்கும் – நான்கு நாட்களும் – நல்ல சாப்பாடும், ஆரஞ்சு, ஆப்பிள், அது இது என்றே ஏக அமர்க்களம். யூனியன் அருகே பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்காக இருந்த 'சென்ட்ரல் கிச்சனில்' சமையல் செய்யப்பட்டது.

அந்த நாளும் வந்தது. அன்று மாலையில் ஒவ்வொருவருக்கும் கலெக்டர், கண்ணாடி வழங்க வேண்டும். டி.வி. வரும். ரேடியோக்காரர்கள் வருவார்கள். மேடையில் பேசுவதற்குச் சொற்பொழிவாளர்கள் வருவார்கள்.

கிராம சேவக் சீனிவாசனை, ஆணையாளர் தம் அறைக்குள் வரவழைத்தார்.

''சபாஷ் சீனி. நாமதான் அதிகமாகப் பிடிச்சிருக்கோம். ஆனு குவான்டிட்டி மட்டும் போதாது, குவாலிட்டி அப் சர்வீஸ் முக்கியம். அதனுல கலெக்டர் ஏதும் கேட்டா நம்ம ஆட்கள் நாம அவங்கள நல்லா கவனிச்சதாச் சொல்லணும். இந்தக் கலெக்டர் ரொம்ப இன்டலிஜன்ட் மேன். பல ஊர் தண்ணிய குடிச்ச மனுஷன். எந்தச் சமயத்துல என்ன கேப்பார்னு தெரியாது. அதனுல கிழடு கெட்டங்கள உஷாரா கவனிச்சுக்கோ. புரியுதா? யாரும் கம்ப்ளெயின்ட் பண்ண மாட்டாங்களே? எதுக்கும் நீ சரிக்கட்டுற விதமாச் சரிகட்டு. போய்யா கண்ணு,'' என்றார்.

சீனிவாசன் 'சரிக்கட்டப்' போனர். ''தாத்தாமாரே, பாட்டிமாரே, கலெக்டர்கிட்ட நாங்க நல்லா கவனிச்சதாச் சொல்லணும்,''என்று மன்ருடினர். அப்படி மன்ருடியது தப்பாய்ப் போயிற்று.

''யோவ்.....நீ கொடுத்த அழுவுன ஆரஞ்சி இங்கதான் இருக்கு. கலெக்டர் கிட்ட காட்டப்போறேன்,'' என்றார் ஒருவர். ''சோறுல.. இருந்த கல்லுங்களப் பொறுக்கி வச்சிருக்கேன். கலெக்டர் கிட்ட காட்டப் போறேன்,'' என்று ஒரு படுகிழவி பல்லவி பாடினள்.

மேற்கொண்டு பேசாமல் சீனிவாசன், வெறுப்போடு வெளியே வந்து முனகினர். கல்லைப் பொறுக்குகிற அளவுக்கு இதுங்களுக்குப் பார்வை கொடுத்தது எவ்வளவு பெரிய தப்பு! அட கடவுளே....

யாரோ தன் கையைப் பிடிப்பதைப் பார்த்து, அவர் திடுக்கிட்டார். பொன்னம்மா பாட்டி வெற்றிலை வாயுடன் அங்கே வந்தாள்.

''ஏண்டாப்பா, அந்தக் கிழடுங்கள விடு. ஒன்னப்பத்தி நான் கலெக்டர் கிட்ட நல்லா சொல்றேன்.. கவலப்படாத ராசா..''

''ரொம்ப ரொம்ப நன்றி

மருமகள்

பாட்டி. ஒனக்காவது நன்றி இருக்கே.''

''ஆனால் ஒண்ணு. நான் அப்படிச் சொல்லணுமுன்னு நீ எனக்கு மூணு ஆப்பிள் தரணும். எட்டணு கையில் கொடுக்கணும்.''

''லஞ்சமா?''

''அப்படித்தான் வச்சிக்கயேன்.''

''பா ட் டி. இது அநியாயம்....''

''எதுடாப்பா அநியாயம்? நீ எத்தன பேருகிட்ட எவ்வளவு லஞ்சம் வாங்கியிருப்பே? அதுலதான் கேக்கேன். இப்பவே கொடுக்கணும். அப்பதான் நல்லபடியாச் சொல்லுவேன். இல்ல......''

சீனிவாசன் மார்பில் அடித்துக்கொண்டே, அதிலிருந்த எட்டணாவை எடுத்துக் கொடுத்தார். டிவிஷனல் ஆபீசருக்கு வைத்திருந்த அத்தனை ஆப்பிள் பழங்களையும் பாட்டியிடம் கொடுத்துவிட்டார். பாட்டி பழங்களை முந்தானைக்குள்ளும், காசை அதன் முனைக்குள்ளும் பத்திரப்படுத்திக் கொண்டாள்.

மாலை வந்தது. கலெக்டர் வந்தார். கண்ணாடிகள் தந்தார். சீனிவாசன் பயந்ததுபோல் அங்கிருந்த எந்த ஒரு கிழவரோ அல்லது கிழவியோ குறை சொல்லவில்லை. பொன்னம்மா கிழவிக்கு அவசரப்பட்டுக் காசையும் ஆப்பிள்களையும் கொடுத்துவிட்டோமே என்று சீனிவாசன் 'பின்யோசனை' செய்தார்.

கண் சிகிச்சை முகாம் ஒரு வழியாக முடிந்தது. கிழவர்-கிழவியரும் யூனியன் ஜீப்களில் ஏற்றப்பட்டு, அன்று இரவே தத்தம் வீடுகளில் இறக்கப்பட்டார்கள். மிகப் பெரிய கல்யாணம் ஒன்று நல்ல விதமாக நடந்து முடிந்த திருப்தி.

மறுநாள். கமிஷனர் எல்லோரையும் கூப்பிட்டார்.

''இந்த முகாம்ல நாமதான் முதல் வந்திருக்கோமாம். கலெக்டர் சொல்லிவிட்டாராம். டிவிஷனல் ஆபீஸ்ல இருந்து சொன்னாங்க. நாலைக்கு ஷீல்டு வருமாம். ஓங்க எல்லோருக்கும் நன்றி. பப்ளிஸிட்டி ஸார், இதைக் கண்டிப்பா பேப்பர்ல போடணும். வாங்கப்பா. இந்தச் சந்தோஷமான சமாசாரத்த கொண்டாடாம விடக் கூடாது. நைட்ல எங்கயாவது போயி டின்னர் சாப்பிடலாம். டி.டி.ஓ. வையும் வரச்சொல்லலாம். சீனி, காசு கலெக்ட் பண்ணுய்யா. ஒனக்கு உண்மையிலேயே மோதிரம் போடணுமய்யா. பித்தளையிலாவது.''

'கலெக்ஷன்' நடந்து கொண்டிருந்தபோது. ஒரு மனிதர் வெளியே இருந்து கத்திக்கொண்டே உள்ளே வந்தார். பொன்னம்மா பாட்டியின் மகன்.

''யோவ், எங்க அம்மா எங்கய்யா? என்னய்யா பண்ணினிங்க? சொல்லுங்கையா. எல்லார் அம்மாவும் வந்தாச்சு. எங்கம்மா வரல.... என்னய்யா பண்ணிங்க?''

கமிஷனர் திடுக்கிட்டார். நழுவப் போன பப்ளிசிடி ஆபீசரைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டே, ''நேத்து நைட்லயே ஜீப்ல அனுப்பிட்டோமே.. என்னய்யா இது, பெரிய இழவாப் போச்சு. சீனி. வாய்யா டிரைவர கூட்டியாய்யா. சீக்கிரமா கூப்பிடுய்யா. கூப்புடு கூப்புடு....'' என்றார்.

டிரைவர் வந்த கையோடு, விளக்கினார். ''ஓ. மஞ்சப் புடவை பாட்டியா? ஜீப்ல ஏறமாட்டேனுட்டு



பேனா போட்டால் பேச வராதா?



ஒருசமயம் மலேயாள எழுத்தாளரான தகழி சிவசங்கரன் பிள்ளை அவர்களை வெளிநாட்டைச் சேர்ந்த இருவர் பேட்டி காண வந்திருந்தனர். வந்தவர்கள் வெளிநாட்டினர் என்பதால் தகழி அவர்கள் ஆடம்பரமாக உடுத்துக்கொண்டு உயர்ந்த நாற்காலியில் அமர்ந்துகொண்டு பேட்டிக்கு ஆயத்தமானுர். அவருக்கு ஒன்றும் ஓடவில்லை. ''என்ன ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள்?'' என்று அவர்கள் வேறு கேட்டுவிட்டனர்.

தகழி உள்ளே போனுர். ஆடம்பர உடைகளைக் கழற்றி எறிந்தார். நாலு முழம் முண்டும், ஒரு பனியனும் அணிந்து கொண்டார். கேரள பாணியில் ஒரு பிடி பற்றவைத்துக் கொண்டார். சாதாரணப் பலகை ஒன்றில் அமர்ந்து பேட்டிக்குப் பதில் அளித்தார். பேட்டி சிறப்பாக அமைந்தது.

(பேராசிரியர் கு. துரைராஜ் கூறியது.)

—'கோவண்ணு'

இந்த ஊர்லயே பொண்ணு வீடு இருக்கதாச் சொல்லி அங்க பூட்றதாச் சொல்லிட்டுப் பிச்சிக்கிட்டு....''

''பிச்சிப்புடுவேன் பிச்சி. எங்கம்மாவுக்கு நான் ஒருத்தன்தான் பிள்ள. பொண்ணுங் கிடையாது, மண்ணுங் கிடயாது. என்னய்யா பண்ணுனிங்க? பாவிங்களா.. கொன்னுட்டீங்களா? லாரிக்குக் குறுக்கே தள்ளிப் பிட்டிங்களா? என்னய்யா பண்ணுனிங்க.? அம்மா..அம்மா.. யோவ், இன்னும் அரை மணி நேரத்துல அம்மாவக் காட்டலன்னு நான் கலெக்டர் கிட்ட போவேன்.. இல்லன்னு அண்ணங்கிட்ட (மந்திரி) போகட்டுமா?''

கமிஷனர் எள்ளுங்கொள்ளுமாகப் பேசினுர். ''நீ யாருகிட்டயும் போகாண்டாம். என்கிட்டயே வா. யோவ் சீனி, சைக்கிள்ல வடக்குப் பக்கமா போ. ஜல்தி.. என்ஜினியர் ஸார், உங்க மோட்டார் சைக்கிள்ள கிழக்கா போங்க. ஒங்க கண்ட்ராக்டர ஸ்கூட்டர்ல தெற்கா போகச் சொல்லுங்க. இந்தாப்பா டிரைவர். நீ ஈசான மூலேக்குப் போ. பப்ளிஸிடி ஸார். ஒங்க காரை கொஞ்சம் குடுக்கிறீங்களா? காமாட்சி, நீ பஜார்ல போயி தேடு. ஒரே பேஜாரு. சீக்கிரம் ..அவசரம்.. போங்க..ஆளோடு வரணும். வெறுங்கையோட வரக்கூடாது. போங்கய்யா. சீக்கிரமா ஜல்தியா குயிக்கா போங்கய்யா. போங்க. இந்தாப்பா, ஏய்யா அழுவுற? ஒம்மா கிடச்சிடும்......நானிருக்கேன்..''

''நீ எதுக்குய்யா? எனக்கு அம்மாதான் வேணும்.''

ஒருமணி நேரம் உருண்டோடியது.

வெறுங்கையோட வர விரும்பாதவர்கள் போல் அத்தனை பேரும் தத்தம் வாகனங்களில் ஆளுக்கொரு கிழவியாகக் கொண்டு வந்தார்கள். அத்தனை கிழவிகளும், 'இந்த அநியாயத்தக் கேக்க ஆளில்லயா? அட கடவுளே, சும்மா போய்க்கிட்டிருந்த எங்கள இழுத்துக்கிட்டு வந்தா என்னடாப்பா அர்த்தம்? நாங்க என்ன தப்பு பண்ணினேம்? அநியாயமா கொண்டாறதுக்கு எத்தனுவது சட்டத்துல இடமிருக்கப்பா?'' என்று கேட்ட போது, அவருக்கு மூளை குழம்பியது.

இந்த அமளிக்குள், சீனிவாசன், திமிறிக்கொண்டிருந்த பொன்னம்மா பாட்டியை, சைக்கிள் கேரியரில் பலவந்தமாய்ப் பிடித்து வைத்துக் கொண்டே, சைக்கிளை உருட்டிக் கொண்டு வந்தார், முனுசாமி, கண்

ணீரைத் துடைத்துக் கொண்டு புன்ன கைத்தான். தாயும் தனயனும், ஒரு வரையொருவர் கட்டித் தழுவிக் கொண்டார்கள். சீக்கிரமாய் வீட்டுக் குப் போக நினைத்து, ஜீப்பில் போகா மல், டிரைவரிடம் அவனை முட்டாள் தனமாக ஒப்படைத்த சீனிவாசனுக்கு நிம்மதி. கமிஷனருக்குச் சந்தோஷம். பப்ளிசிடி ஆசாமிக்குத் தன் கார் திரும்பக் கிடைத்ததில் மகிழ்ச்சி.

இதற்கிடையே, பலவந்த மாகக் கொண்டு வரப்பட்ட கிழவிக ளின் கூக்குரல் அதிகமாகியது. ஒரு பாட்டி, வாயில் அடித்துக் கொண் டாள். இன்னொரு கிழவி வயிற்றில், "அய்யய்யோ.. அம்மம்மோ.. அக்கிர மக்காரங்களக் கேக்க ஆளு இல்லியா? நாசமாப் போற பயலுகளா. எதுக்கு டாப்பா, இப்டி அக்ரமம் பண்றீய? அழிஞ்சிப் போயிடுவிங்கடா அநியாயக் காரப் பாவிங்களா...." என்று அடித்துக் கொண்டாள்.

கமிஷனர் ஆணையிட்டார்.

"யார் யார் எந்தெந்தப் பெரியம்மாக்கள எந்தெந்த இடத்துல பிடிச்சிங்களோ.. அந்தந்த இடத்துல அதுங்கள விட்டுட்டு வாங்க. உம்.. ஜல்தி போம்.. குயிக்.."

கிழவிகள் காரிலும் ஸ்கூட் டரிலும் சைக்கிளிலும் பறந்தார்கள். பொன்னம்மா பாட்டி மட்டும் மக னோடு அங்கே நின்றாள். அவள் முந் தானை கனத்திருந்தது.


"பாட்டி, ஒனக்குக் கொஞ் சமாவது மூளை இருக்கா? பொறுப்பில் லாம நீ பாட்டுக்குப் போயிட்டா என்ன அர்த்தம்? யூஸ்லஸ்....என் ... நியோகத்துக்கு உலை வைக்கப் பாத்து... டியே."

"கோவிச்சுக்காதப்பா. ... மவராசனா இருக்கணும். என்னோ... மருமகள் மசக்கையா இருக்கா. இ... ஆப்பிள் பழத்தைக் கொடுத்... ஆசையோட திம்பா. அதுக்காவத்தா... அடாவடியா பஸ் சார்ச்சிக்கு எட்ட... வாங்கிக் கிட்டுத் தலமறவாயிட்டே... ஆனா எங்க பஸ் நிக்குன்னு... தெ... யாம ராத்திரி முழுதும் சுத்திக்கிட்டே... இருந்துட்டேன். கோவிச்சுக்காதப்பா;

"ஆமா. ஜீப்ல போறது என்ன? எதுக்காவ பஸ்ல போக நினைச்சே?"

"ஜீப்ல இருக்கிறவங்... பழத்த பிடுங்கிக்கிட்டா? மருமக... கிட்ட குடுக்க முடியுமா? டிரைவரே... பழத்தைத் தந்துடுன்னு கேக்கலாம்... கோவிச்சுக்காதப்பா. இந்தா, பழ... சாப்பிடு. முனியா, ஏண்டா அழுவுற... நான்தான் வந்துட்டேனே. அவ... மூளியலங்காரி....மூதேவி சண்டாளி.. உன் பொண்டாட்டி.. எப்படிடா இருக்கா? அவளுக்காவ இம்மாம் பழத்... தயும் ஒளிச்சி வச்சிருந்தேன். வா... போவலாம். அவா தேடிக்கிட்டு இரு... ப்பா. மசக்கக்காரி.. சீக்கிரமாப் பழத்தக் குடுக்கணும்."

கமிஷனர் சிரித்தார். அவர் சிரித்ததைப் பார்த்து, சீனிவாசன் சிரித்தார். காமாட்சியும், சிரித்தாள். விஷயம் சிரிப்பாய்ச் சிரிக்காமல் நல்ல படியாய் முடிந்ததற்காக எல்லோரும் சிரித்தார்கள்.



முன்பு குமுதத்தில் யாரோ ஒருவர் ரண்திர் கபூர் மனை வியின் பெயரை எப்படி உச்சரிக்க வேண்டும் என்று சந்தேகத்துடன் கேட்டிருந்தார்: பபிதா, பபீதா, பா்பிதா, பாபீதா.

இப்பொழுது எனக்கு வந்துள்ள சந்தேகம் இது: எகிப்தின் அதிபர் பெயர் என்ன? சதத், சதாத், சாதத், சாதாத்.

இந்த நான்கு உச்சரிப்பில் எது சரி? யாராவது என் சந்தேகத்தைப் போக்குவார்களா?

—எஸ். ரஷீத் அலி

கஸ்தூரி ஸ்ரீனிவாசன்

புதன் கிழமை

பஸ் கிளம்பப் போகிறது. ஜன்னலோரம் அமர்ந்திருந்த அம்மா
அவசரமாக என்னை அழைத்துக் காதோரம் கிசு கிசுக்கிறாள்..
''இன்னிக்கே உன் வீட்டுக்காரர் கிட்டப் பேசி இந்தப் புதன்கிழமை
பாட்டுச் சமாசாரத்துக்கு ஒரு முடிவு கட்டிவிடு. மசமசவென்று இருக்காதே..''
று கூறுகையிலேயே பஸ் புறப்பட்டு விடுகிறது.

சுமார் இரண்டு மாதங்கள் முன்பு ஒருநாள் – சாயந்தரம் ஆபீஸ் விட்டு
ம்போது இவர் சிறுவன் ஒருவனை அழைத்துக் கொண்டு வந்து நின்றார்.

''ராதா, இவன் பேர் சம்பத். ரொம்ப ஏழை. ஸ்கூல்லே படிக்
துக்காகப் பக்கத்துக் கிராமத்திலேயிருந்து வந்திருக்கானும். யாரோ புண்
பவான் தங்க இடம் கொடுத்திருக்கார். லீவு நாளிலே ஊருக்குப் போயிடு
ன். பாக்கி நாட்களிலே தினம் இரண்டு வேளை சாப்பாட்டுக்கு, தினம் ஒரு
ா நாலஞ்சு வீடுகளிலே ஏற்பாடு ஆயிட்டுதாம். புதன் கிழமைப் பொறு
ப நாம ஏத்துக்க முடியுமான்னு ஹெட்மாஸ்டர் பையன் துரைசாமி
ட லெட்டர் கொடுத்தனுப்பியிருக்கிறார். . .''

''அதற்கென்ன, வாரம் ஒரு நாள்தானே? சாப்பிட்டு விட்டுப்
கட்டும்,'' என்று தலையசைத்தேன்.

சம்பத் புதன்தோறும் வந்து இரண்டு வேளையும் சாப்பிட்டு
டுப் போகிறான். அமைதியான பையன். நான்கைந்து வாரங்கள்
ந்தபின் ஒருநாள் பகல் அவன் சாப்பிட்டு வெளியேறியதும்
தா காரியமாகப் பக்கத்து வீட்டுக்காரி வந்தாள்.

''புதன்கிழமை விருந்தாளி போயிட்டானா? நீங்க
னும் சாப்பிடலே போலேயிருக்கே?'' குரலில் சற்று ஏளனம்
ந்திருப்பதாகப் பிரமை.

ஊரிலிருந்து அம்மா வந்தாள் ஒரு புதன்கிழமை
. அவளும் அதே உபதேசம்.

மறுநாள் பக்குவமான நேரம் பார்த்து அவரிடம்
ல்ல விஷயத்தை ஆரம்பிக்கிறேன்.


''சரி, நாளை சாயந்திரம் நான் ஹெட்மாஸ்ட
ப் பார்த்து இதுபற்றிப் பேசுகிறேன்.'' என்கிறார்.
தபோல் மறுநாள் ஹெட்மாஸ்டருடன் பேசிவிட்டு
து முடிவைத் தெரிவிக்கிறார். சம்பத் இனி புதன்
மை சாப்பிட வரமாட்டான். வேறு இடம்
பாடாகிவிட்டது.

''ஸார் போஸ்ட்!''


தபால்காரரிடமிருந்து தபால் உறை
வாங்கும்போதே அது என் பிள்ளை ராஜே
டமிருந்து என்று தெரிந்துவிடுகிறது.

தன் படிப்பு, பள்ளிக்கூட நிகழ்ச்சி
இவை பற்றிஎழுதிவிட்டுக் கடைசியாக
ன் குறிப்பிட்டிருந்தான்:

''....அம்மா, ஒன்று சொல்ல
ந்துவிட்டேனே! சமீபத்திய புயல்
ள்ளத்திலல் பாதிக்கப்பட்ட வேட
ார் பகுதி மக்களுக்கு உதவ எங்
போர்டிங் ஸ்கூல் மாணவர்கள்
லோரும் கூடி ஒரு முடிவெடுத்
க்கிறோம். அதன்படி, நாங்கள்
த்தில் ஒருநாள் முழு உண்
ிரதமிருந்து அதனால் மிச்
டும் தொகையை நிவாரண
பணிகளுக்காக அனுப்
போகிறோம். அந்த ஏற்
டின்படி நேற்று முழு
நான் பட்டினி...
காலண்டரைப்
க்கிறேன். நேற்று
ர கிழமை,



ஜோடிப் புறாக்கள்



ஜோடிப் புறாக்கள் மாதிரி காதலர்கள் வாழ்ந்தார்கள்.


எழுத்துப் பிறந்த காலத்திலிருந்து வழக்கிலிருக்கும் இந்த உதாரணம் சரிதானா என்று ஆராய்வதே இந்தக் கதையின் நோக்கம். படித்துக் கொண்டிருக்கும் போது சரி என்று தோன்றினாலும் முடிக்கும் போது சரியில்லை என்று நிருபிக்கப் போகிறேன்.

நுங்கம்பாக்கம் ஸ்பர்டாங் ரோடு பக்கம் இருந்த ஒரு சாதாரண விடுதியில் தங்கி, ஆபீஸ் லோனில் ஸ்கூட்டர் வாங்கி வைத்து கொண்டு, காலை பத்திலிருந்து மாலை ஐந்து வரை செகரட்டேரியட்டில் உத்தியோகம் பார்த்து வந்த தயானுக்கு உள்ளூரக் கனன்று கொண்டிருந்த கலையார்வம் போன நவம்பர் மாதம் ஒன்பதாம் தேதி வாக்கில் பீரிட்டுக் கொண்டு கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது.

மறுநாள் அலுவலகம் முடிந்ததும் வழக்கம் போல் தன் லாட்ஜுக்குப் பூந்தமல்லி நெடுஞ்சாலை வழியே போய்க் கொண்டிருந்தவன், காந்தி இர்வின் பாலத் தண்டை ஸிக்னலுக்காக ஸ்கூட்டரை நிறுத்திய போது அடுத்தாற்போலிருந்த ஓவியப் பள்ளிக்குள் இரண்டொருத்தர் நுழைவதைப் பார்த்து அவர்கள் பின்னாலேயே அவனும் போய்ச் சேர்ந்தான். முன்வழுக்கையும் குறுந்தாடியும் தடித்த பிரேம் மூக்குக் கண்ணாடியுமாய் இருந்த நபர் ஒருவரைப் பிடித்து விசாரித்த போது, உத்தியோகம் பார்க்கும் கலையார்வம் கொ டவர்களுக்காகவே அந்த பள்ளியில் மாலை நேர ஓ யப் பள்ளி நடப்பதா விவரம் அறிந்து உடே பாரம் வாங்கிப் பூர்த் செய்து மாணவனாய்ச் சேர் துவிட்டான்.

கிட்டத்தட்ட ஓ வாரம் வரை தான் உன் தன் வேலையுண்டு என் இன்ஸ்ட்ரக்டர் சொ வதைச் சாய்வு மேசையில் அமர்ந்தப செய்துகொண்டிருந்தான். அந்தப் புத கிழமையன்று யாரோ தன்னைப் பார் பதுபோல் உணர்ந்து திரும்பிப் பார்த் போது அவனையே வைத்த கண் வா காமல் வெறித்துப் பார்த்துக் கொண் ருந்த ஒரு ஜார்ஜெட்காரியைக் க டான். எங்கேயோ பார்த்தது போ இருக்கிறதே என்று அவனும் உங்க எனக்குத் தெரியுமே என்று அவளு கண்களால் பேசிக் கொண்டார்கள் பிறகு வாயாலும் பேசிக்கொண்டா கள்.

அவளுக்குக் குறளகத்து வி



ஃனப் பிரிவில் உத்தியோகமாம். வேலை பார்க்கும் பெண்களுக்கான விடுதியில் தங்கிவிடுகிறளாம். இருவருக்கும் உத்தியோக நேரம், கலையார்வம், விடுதி வாழ்க்கை எல்லாம் — எல்லாமே பொழுதாலும் ருசியாலும் ஒத்து வந்தன.

இருவருக்கும் இன்னொரு ஒற்றுமை: அப்பா இல்லை. அம்மா வெளியூரில் இருந்தார்கள். சுமதி வேலூரிலிருக்கும் தன் அம்மாவுக்கு ரூ. 50'ம் தயாள் காஞ்சியிலிருக்கும் தன் தாய்க்கு ரூ. 100'ம் (இவனுக்கு அவளைப் போல் இரண்டு மடங்கு சம்பளம்) மாதா மாதம் அனுப்பிக் கொண்டிருந்தார்கள்.

ஜோடிப் புறாக்கள் போல்



திரிகிறார்கள் என்று சொல்லிச் சொல்லி மாய்ந்து போன அவர்களுடைய சகபாடிகளே ஒன்று சேர்ந்து இருவரையும் ஒருநாள் பஸ்ஸில் தூக்கிப் போட்டுக் கொண்டு போய், திருநீர் மலையில் தாலி கட்டச் சொல்லி சிந்தாதிரிப் பேட்டை நெரிச்சலுக்குள் கூடுமான வரை ஒரு காற்றோட்டமான மாடி போர்ஷனைப் பிடித்துக் குடித்தனமும் வைத்து விட்டார்கள்.

வஞ்சனையில்லாமல் இரண்டு பேரும் தங்கள் தாய்மார்களுக்குத் தாங்கள் கல்யாணம் செய்து கொண்டு விட்ட விஷயத்தை மறக்காமல் எழுதியிருந்தார்கள். எப்போ எப்போ என்று காத்துக் கொண்டிருந்த மூதாட்டிகளுக்குத் தாங்கள் இல்லாமல் கல்யாணம் நடந்ததே என்ற குறை கூட இல்லை. தம்பதியாய் ஒருமுறை வந்து போனாலும் போதும் என்று ஆசீர்வதிக்கக் காத்துக் கொண்டிருந்தார்கள். திடீரென்று சுமதியின் தாய்க்கு ஸீரியஸ் என்று தந்தி வந்தபோது, தயாளுக்குச் சுற்றுலாப் பொருட்காட்சியின் அமைப்பாளர் பொறுப்பில் முக்கியமான வேலை இருந்ததால் சுமதி மட்டுமே புறப்பட்டுச் சென்றாள். போனவள் இரண்டு நாளில் திரும்பிவிட்டாள்.

''ஏன், அதுக்குள்ளே வந்துட்டே? என்ன ஒரு மாதிரியா இருக்கே? அம்மாவுக்கு, ரொம்ப ஸீரியஸா?'' தயாள் தலை பின்னி விடுவது போல் அவள் கலைந்த கேசத்தை ஒதுக்கி விட்டுக் கொண்டே கேட்டான்.

''வழக்கமா வர்ற நெஞ்சு வலிதான். இப்போ தேவலை. ரெண்டொரு நாளிலே வீட்டுக்குத் திரும்பி விடுவாங்க,'' என்றாள் சுமதி, கலைத்துப் போட்டிருந்த துணிகளை மடித்து வைத்துக் கொண்டே. ''இந்த நிர்மலா என்னைக்கேட்டா, எங்கெங்கே ஹனிமூன் போனேன்னு. போகணும்னேன். பக்கத்திலே மகாபலிபுரம் இருக்கே. அதுக்குக் கூடவா உன் ஹஸ்பெண்ட கூட்டிட்டுப் போகலைன்னு. ஆமா, மகாபலிபுரம் நான் இன்னும் பார்த்ததில்லேன்னேன். . .''


''ஸ்டாப் ஸ்டாப்! மகாபலிபுரம் நீ பார்த்ததில்லே?'' ரொம்பத்தான் அவன் அதிர்ச்சியடைந்தவனாய்க் கேட்டுவிட்டு அவள் பரிதாபமாய் உதட்டைப் பிதுக்கியதும், ''ஒகே. நாளைக்கு ஸண்டே. நாம் மகாபலிபுரம் கிளம்பறோம். சௌகரியப்பட்டா நைட்

அந்தி தங்கறோம். நாளைக்குப் பௌர் ணமி வேறே. ராத்திரியெல்லாம் கட லோரமாகவே இருக்கலாம். என்ன?'' என்றான் உற்சாகத்தோடு.

மகாபலிபுரம். இருவரும் சவுக் குத் தோப்பையொட்டியே கடலோர மாய்க் கிழக்கே ரொம்பத் தூரம் வந்து விட்ட பிறகு, மெள்ள மெள்ள இருட்ட ஆரம்பித்துவிட்டது. (இந்த நேரத்தில் கவிஞனைப் போல் ஒரு அந்தி நேர வரு ணனை போட்டால் நன்றாய் இருக்கும்.) ஆக்கிரமிக்கப் போவது யார் என்று பகலுக்கும் இரவுக்கும் நடந்த யுத்தத் தில் சிந்திய ரத்தப் பெருக்குப் போல் வானத்தில் செம்மை பரவியிருந்தது. ரத்த வெள்ளத்தில் கப்பல் மிதப்பது போல் கூடு திரும்பும் பறவைகள் கோலப் புள்ளிகளாய்த் தோன்றின.

சவுக்குத் தோப்புக்கு ஊடே குட்டி மாளிகை போல் தோன்றிய அந்தப் பங்களாவைக் காட்டி, ''அது என்னங்க, ஃபைவ் ஸ்டார் ஓட்டலா?'' என்று அப்பாவித்தனமாய்க் கேட்டாள் சுமதி.

தெரிந்த விஷயத்தையும் தெரியாத மாதிரி கேட்பது பெண் களுக்கு இருக்க வேண்டிய அழகுகளிலே ஒன்று—மடமை என்பார்கள். தயா ளுக்கு அது தெரியாது. ''மெட்ராஸி லேயே ஃபைவ் ஸ்டார் ஓட்டல் கிடை யாது தெரியுமா? இது பினாகபாணி பங்களா. தெரிஞ்சுக்கோ,'' என்றான்.



சென்னையில் எப்போதும் நாத ஒலி கேட்கும் நகர் எது?

'ஷெனாய்'நகர்.

இருமலைப் போக்கும் ரோடு எது?

'ஹால்ஸ்' ரோடு.

சென்னையில் எங்கும் நிழலாக இருக்கும் ரோடு எது?

'உட்ஸ்'ரோடு.

—கே.எஸ்.ஹரி

''என்ன பாணி?''

''பி. பினாகபாணி. பின பாணியைத் தெரியாமே மெட்ராஸில இருந்து என்ன பண்றே? பெரிய பிஸி னஸ் மாக்னட். செயின் ஆஃப் பிஸி னஸ். இது லாட்ஜிங்கான்னுதானே கேட்டே? ஒரு வகையிலே நீ சொன் னது சரிதான். மனுஷன் இதை வ சுத்தான் எல்லா பிஸினஸ்ஸையு பெருக்கிட்டாராம். லைசென்சுக்கு எந் டாப் அஃபிஷியலை வளைக்கணும்னாலு சரி, எந்தக் கம்பெனி ரெப்ர டிவ்ஸைச் சரிக்கட்டணும்னாலும் சா இங்கே பார்ட்டி நடக்கும்..''

சற்று நேரம் அவள் அதையே ஆச்சரியமாகப் பார்த்தாள். ''என்னங் இன்னி ராத்திரி நாம இந்தப் பங்களா விலே தங்கப் போறோம்.''

ஆச்சரியமாக அவளை பார்த்தான் தயாள். ''பைத்தியம உனக்கு? ஜோட்டாலே அடிப்பான் கேட டாலே.''

ஆனால் அவள் பிடிவாதமாக அவனை அழைத்துப் போனாள். கேட்டி லிருப்பவனைக் கேட்டபோது என்னமோ வேண்டாத ஜந்துவை விசித்திரமாய்ப் பார்க்கிற மாதிரி அவர்களைப் பார்த்து விட்டுப் பதிலே சொல்லாமல் அவன் நகர, ''ஐயாவுக்கு ரொம்ப வேண்டி யவங்க நாங்க. அவரண்டை போய் சொல்லலே, அப்புறம் ரொம்ப வருத்தப் படுவே. ஐயா இங்கே வந்திருக்கார்னு தெரிஞ்சுதான் வந்திருக்கோம்,'' என்று அவன் முதுகுக்குப் பின்னால் எச்சரிக்க. அவன் அப்படியே பிரேக் போட்டது போல் நின்று அவர்களை ஒருமுறை திரும்பிப் பார்த்துவிட்டு, ''அந்தா, அப்படி குந்துங்க. கேட்டுட்டு வாரேன்,'' என்று இருமருங்கும் கரை கட்டினாற் போல் அசோக மரம் ஓங்கி நின்ற அந்த ஒரு பர்லாங் பாதையில் ஓட்ட மும் நடையுமாய்ச் சென்றான்.

''போட்டியே ஒரு போடு! ஐயாவுக்கு ரொம்ப வேண்டியவங் களாக்கும் நீ? அவன் போய் அப்படியே சொல்லப் போறான். அவர், 'இளித் தாடா கயிதைங்களை'ங்கப் போறார்!'' என்றான் தயாள்.

''இருங்களேன். என்ன ஆகுதுன்னு பார்ப்போம். தலையா போயிடும்?'' என்றாள் அவள்,

அதற்குப் பிறகு நடந்ததை எஃபெக்ட் கருதிச் சுருக்கமாகவே சொல்ல வேண்டியிருக்கிறது. வருணனையெல்லாம் கொடுத்தால் நீர்ப்பதமாகிவிடும்.


தயாள் பயந்த மாதிரியெல்லாம் ஒன்றும் நடக்கவில்லை. பினாகபாணி கூப்பிடுகிறார் என்று காவல்காரன் வந்து அவர்களைக் கூப்பிட்டுப் போன போதும் சரி, அடைபட்ட புலிபோல் முன் லானில் பௌர்ணமி நிலவின் ஒளியில் அவர் அந்த இருவரையும் திரும்பிப் பார்த்து வெறித்த போதும் சரி, அவ்வளவு கனிவாய்ப் பேசுவார் என்று எதிர்பார்க்கவே இல்லை.

''முனியா!'' வேலைக்காரனை அதட்டுப் போட்டுக் கூப்பிட்டார் அவர். ''அந்தக் கீழ் பெட்ரூம்—ஏர்கண்டிஷன் — தயார் பண்ணு. ஹனிமூன் ஜோடியா? போங்க போங்க. என்ஜாய் யுவர் ஸெல்ஃப். என்ன சாப்பிடறிங்க?''

''தாங்க்ஸ் ஸார். நாங்களே கொண்டு வந்திருக்கோம். வரோம் சார். ஆசீர்வாதம் பண்ணுங்க.'' அவர் காலிலே விழுந்து எழுந்தாள் சுமதி.

அறைக்குள் போய்க் கதவைச் சாத்திக் கொண்டபின், ''சத்தியமாய்ச் சொல்லு. இவர் உனக்குத் தெரிஞ்சவர்தானே?'' என்று அவளைப் பிடித்து உலுக்கினான் தயாள்.

''சத்தியமாய்ச் சொல்றேன், இவரை நான் இப்பத்தான் 'முதல் தடவையாய்ப் பார்க்கிறேன். என்னமோ ஒரு அசட்டுத் தைரியம். கேட்டேன். கிடைச்சுட்டது.



விடுவிங்களா...? எனக்கு ரொம்பப் பசி. உங்களுக்கு?''

''ஓகோ, பசிக்குதாக்கும்?'' அவன் பூடகமாய்ச் சிரித்தான்.

அதைப் பொருட்படுத்தாமலே அவனுக்குப் பரிமாறுவதில் அவசரமானாள் அவள். தோள் பைக்குள்ளிருந்த பெரிய தூக்கிலிருந்து தக்காளி சாதம், தேங்காய்த் துவையல், சிப்ஸ்—ரொம்பச் சிம்பிள் தான். ஆனால் தலைவாழை இலையும் இருபத்தைந்து வகைக் காய்கறி வகையுமாய்ப் பரிமாறும் பெரிய இடத்து விருந்துகூட இந்தச் சந்தர்ப்பத்தில் பிச்சை வாங்க வேண்டாமா? வயிறார உண்டார்கள். பிளாஸ்க்கில் சுடச்சுடப் பால் கலக்கி வைத்திருந்தாள். ஊற்றிக் கொடுத்தாள், தானும் பருகினாள். என்னமோ ஒரு காகிதத்தை — லெட்டர் மாதிரி இருந்தது— டிரெஸ்ஸிங் மேசையின் மேல் வெயிட் வைத்து விட்டு வந்தாள். ஒன்றரை அடி உயரத்தில் அசைவுக்கு ஏற்றாற் போல் ஏந்திக் கொடுக்கும் அந்த நுரை மெத்தை கட்டிலில் படுத்துக் கொண்டாள். தயாளைத் தழுவிக் கொண்டு கொடியாகப் பிணைந்தாள்..

பினாகபாணி அங்கே படுக்கையில் புரண்டு கொண்டிருந்தார்.

பினாகபாணி அந்தக் காலத்தில் ராஜாக்கள் மாதிரி தேசத்துக்கு ஒரு ராணி வைத்துக் கொண்டிருந்தவர். ஒரு பதினைந்து இருபது வருஷமாகத்தான் அவர் வெளியூர் போகவேண்டிய அவசியமில்லாமல் பிஸினஸ் வேரூன்றிக் கொண்டுவிட்டது. அதற்கு முன்னால் அவர் போகாத பெரிய ஊர்

கள் தமிழகத்தில் இல்லை. அவர் போகிற ஊர்களில் அவருக்கென்று ஒரு சின்ன வீடு இல்லாமல் இருந்த தில்லை. பிரமுகர், பெரிய மனிதர் என்ற சமூக அந்தஸ்து வந்துவிட்ட பிறகு அந்தந்த ஊர்த் தொடர்புகளையெல்லாம் கொடுக்க வேண்டியதைக் கொடுத்து அடக்க வேண்டிய விதத்தில் அடக்கி விட்டார். அதற்கு அவர் இறைத்த பணத்தை வைத்துக் கூர்க்கில் ஒரு டீ எஸ்டேட் எளிதாக வாங்கியிருக்கலாம்.

அப்பேர்ப்பட்ட மாபெரும் புள்ளி, நேற்று காவலாள் வந்து. "அடாப்பிடியாய் ஒரு ஜோடி வந்து நம்ப பங்களாவிலே தங்கணும்னு சொல்லுதுங்க, உங்களுக்கு வேண்டிய வங்கண்ணு, என்னை மிரட்டுதுங்க," என்று சொன்னதும் "அடி செருப் பாலே. இஸித்தாடா. கட்டிப் போட்டு உதைக்கலாம்!" என்றுதான் முதலில் கர்ஜித்தார், ஆனால் நேருக்கு நேர் அவர்களைக் கண்டதும் ஏன் அப்படி 'மெல்ட்' ஆகிப் போனேம் என்று புரியாமல் குழம்பிப் போய்ப் படுக்கையிலே புரண்டு கொண்டிருந்தார்.

காலையில் முதல் பஸ்ஸுக்கே திரும்பிப் போய் விடுவதாய் தயாள் சொல்லியிருந்ததால் அவர்களை எழுப்பப் போன வேலைக்கான் கதவை இடி இடி என்று இடித்தான். அந்த ஓசை கேட்டு இறங்கியே வந்துவிட்டரார் பிறைகபாணி.

அவர் உத்திரவுப்படி மாற்று சாவிக் கொத்தை எடுத்து வந்து உர் சாவியைத் தடவிப் பிடித்துத் திறந் உள்ளே நுழைந்தபோது அந்த அ முழுவதுமே ஒரு ஸ்தம்பித நிலை உணர்ந்தார் பி. பாணி. கட்டில் கொடியாய்ப் பின்னிப் பிணைந் கிடந்த அந்த ஜோடியின் அசையா நிலையை ஆதாயமாய்க் கொண் இரண்டு ஈக்கள் அவளது நாசித் து ரத்துக்குள் சரசம் பண்ணிக் கொ டிருந்தன.

சுற்றுமுற்றும் அவர பார்வை சுழன்றபோது மேசை மே இருந்த கடிதம் அவர் கவனத்தை சுண்டியிழுக்க, அதைக் கையிலெடு துப் படித்தார்.

"நாங்கள் காதலித்த பிசகு. கல்யாணம் பண்ணிக் கொ டது அதைவிடத் தவறு. நாங்க தம்பதியாய் வாழக் கூடாதவர்க எங்கள் இறப்புக்கு நாங்களே பொறுப் வேறு எவரும் அல்ல—சுமதி."

வாய்விட்டே அவர் ப தததைக் கேட்டுக் கொண்டிருந்த வேலை காரன் பொருமினன். "சாகணும் சமுத்திரம் இல்லே? இந்த மாதிரி த தனை பேரு மிதந்திருக்கிறுங்க? இங் சாகணும்னு அப்படி என்ன கு டிக்கை?".



1980 'ம் வருடம் ஒலிம் விளையாட்டுகள் மாஸ்கோவில் நடைபெறும் என்று தீர்மானித்தவுடன் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான க தங்கள் வந்து குவிந்தன. பலவகையான சின்னங்கள் சிபாரிசு செய்யப்பட்டன. ஆ அவைகளில் 'மீசா' என்ற கரடிக் குட்டியைச் சிபாரிசு செய்து 40,000 மேற்பட்ட கடிதங்கள் வந்திருந்தன. ரஷ்ய நாட்டுக் காடுகளில் ஒ கோடிக்கும் மேற்பட்ட மீசா கரடிகள் உள்ள வாம், கதைகளிலும், கட்டுக் கதைகளிலு கரடியை நல்ல பண்புள்ள மிருகமாகவும் எளியவர்களுக்கு உதவி செய்யும் நண் ருகவும் உருவகப்படுத்தப்பட்டிருப்பதாலும் கரடிக் குட்டியே ஏற்ற சின்னம் என் முடிவு செய்யப்பட்டுள்ளது.

—சு. முருகேச



எனது நண்பர் ராஜ் குமாரின் வீட்டுக் கொலுவில் இந்த 'ஹார்ன்பி'

பொம்மை ரயில் 20 அடிக்கு 7 அடி அளவில் அமைக்கப்பட்டிருக்கிறது. அமைப்பில் குறிப்பிடத் தக்க அம்சங்கள்: மரக்கட்டைகளை ஏற்றி வரும் வாகன் ஒன்று யார்டில் தானுக அன்லோடு பண்ணுகிறது. ஓடுகிற ஓட்டத்திலேயே தபால் பைகளைஏற்றிக் கொள்ளும் மெயில், இன்னெரு ஸ் டேஷனில் இறக்கிவிட்டுப் போகிறது.

—பிரேம்குமார்

அட்டையில்: தாட்சாயினி, சசிகலா

வண்ணப்படம்: ஈ. வி. ஆர். மோகன்

ஆமாம், அது கும்பிடிக்கை தான். வந்து அது என்ன சமாசாரம் என்று உங்களுக்குப் புரிகிறதா? சாமி ஆண்டவனே, அது உங்களுக்குப் புரியக் கூடாதா? புரிந்துவிட்டால் அப்புறம் விறுவிறுப்பாய்க் கதையைச் சுவாரஸ்யமாய்ச் சொல்லப் போகிறேன் என்று சவால் விட்ட நான் தோற்றுப்போய் விடுவேன். என்ன, புரியவில்லை அல்லவா? அதற்காகத்தான் நடுவிலே நடந்த அந்த சம்பவத்தை வேண்டுமென்றே கதையில் மறைத்திருக்கிறேன்.

எத்தனை அன்னியோன்னியமாய்ப் பழகி, எத்தனை ஆசையோடு காதலித்து, எந்தவித எதிர்ப்போ தடங்கலோ முறுமுறுப்போ இல்லாமல் கல்யாணம் பண்ணிக் குடித்தனமும் போய்விட்ட ஜோடி இது! சொல்லுங்கள் ஜோடிப் புறுப்போல் வாழ்ந்த காதல் ஜோடி என்று. நன்ருய் மூக்குடைபடப் போகிறீர்கள்.

நடுவில் அம்மாவுக்கு உடம்பு சரியில்லையென்று சுமதி மட்டும் புறப்பட்டு போனுள் இல்லையா? அங்கே என்ன நடந்தது என்பதை ரொம்பக் கஷ்டப்பட்டு இதுவரை மறைத்து வந்தேனே அதைச் சொல்லப் போகிறேன்.

நர்ஸ் நிர்மலா சுமதியை இடப் பக்கத்து மூலையில் தனியாகப் போட்டிருந்த கட்டிலண்டை கூட்டிப் போனுள்.

அப்போது யாரோ ஓர் அம்மாள்- ஏறக்குறைய அவளுடைய தாயின் வயதுதான் இருக்கும்— அவளைப் போலவே அந்த அம்மாளும் வாலிபத்தில் ரொம்பக் கவர்ச்சியாய் இருந்ததற்கான அடையாளங்கள் தெரிந்தன— சுமதியின் தாய்க்குப் பக்கத்தில் இரும்பு ஸ்டூலை இழுத்துப் போட்டுக் கொண்டு ஆரஞ்சுப்பழச் சுளையில் தோலை நீக்கிக் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

சுமதியைக் கண்டதும் அவள் அம்மா மரகதம் நோயால் சுருக்கம் விழுந்த முகம் மலர, ''வந்துட்டியாம்மா? வா... அக்கா, இதுதான் என் பொண்ணு. பார்த்துக்கோ,,'' என்று பக்கத்தில் இருந்தவளுக்கு அறிமுகம் பண்ணி வைத்தாள்.

அந்த அம்மாளைப் பற்றிக் கண்களாலேயே விசாரித்தாள் சுமதி, தன் தாயிடம்.

நர்ஸ் நிர்மலா முந்திக் கொண்டாள். ''அம்மா அட்மிட் ஆகி ஒரு வாரம் ஆச்சு. இவங்கதான் கூடவே இருந்து பார்த்துக்கறுங்க. காஞ்சிபுரத்திலே இருந்து வந்திருக்காங்க.'''

''ரொம்பத் தாங்க்ஸ் அம்மா. உங்களை நான் பார்த்ததே இல்லே. இவ்வளவு வேண்டியவங்க காஞ்சிப்புரத்திலே — பக்கத்திலே இருக்காங்கன்னு எனக்குத் தெரியாது. அம்மா சொன்னுந் தானே?'' என்ருள் சுமதி.

''வேண்டியவங்களைப் பற்றியெல்லாம் வெளிப்படையாய்ச் சொல்லுகிறுப்பலே நாங்க வாழலே கண்ணு. எங்க தலைமுறையோடு அதெல்லாம் முடியட்டும். நீ குடியும் குடித்தனமு

மாய் ஒழுங்கா வாழுறாள்னு காமாட்சியம்மாளை வேண்டிக்கறேன்,'' என்று சுமதியின் கன்னத்தை வழித்து நட்டி முறித்தாள் அந்த அம்மாள்.

''அம்மா, இவங்க நமக்குச் சொந்தமா?''

''சொந்தம்தான். பின்னே? எனக்கு அக்கா—உனக்குப் பெரியம்மா.''

''அக்கான்னு? உங்க கூடப் பிறந்தவங்களா?''

''சுமதி, உங்கம்மா சொல்ல மாட்டாம்மா. நான் சொல்றேன்: நானும் உங்கம்மாவும் சக்களத்திங்க. எங்களுக்குள்ளே சக்களத்தி சண்டை இதுவரைக்கும் வந்ததில்லே. ஏன்னு, இங்கே ஒரு வீடு, அங்கே ஒரு வீடு. என்ன சுமதி, புரியலியா? எங்க ரெண்டு பேருக்கும் ஒரே புருஷன். ஆனு க்ளெய்ம் இல்லே. அவரு கோபுரத்திலே இருக்காரு. நாங்க இரண்டு பேரும் குப்பை மேடு.'' அவள் ஓசைப்படாமல் அழுத கண்ணீரை முந்தானையால் துடைத்துக்கொண்டாள்.

''பெரியம்மா, பெரியம்மா. சொல்லுங்க. அவரு யாரு. எங்கப்பா யாரு? அவரைக் காட்டிக் கொடுக்க மாட்டேன். பெயரைச் சொல்லுங்க.'' சுமதி அவள் கையைப் பிடித்துக் கொண்டு பரிதாபமாய்க் கெஞ்சினாள்.

''பிஞகபாணின்னு பேர். மெட்ராஸிலே பெரிய பிஸினஸ் மாக்னட். நீ பொட்டை பொண்ணு. என்ன பண்ணப் போறே? என் பையனுக்கு தெரிஞ்சா சும்மா விட மாட்டான். அவன் செகரட்டரியட்டில் உத்தியோக பார்க்கிறான். என்னைக் கூப்பிடாமலே கல்யாணம் கட்டிட்டான். பொண்ணு யாருன்னு நேரே கூட்டி வாறேன் பார்த்துக்கோன்னு எழுதுறான் . .''

வெடிமருந்து கிடங்குக்கு வேடிக்கைப் பார்க்கப் போனபோது அது திடீரென்று பற்றிக் கொண் அவளைச் சுக்கல் சுக்கலாய்க் குத தூக்கியெறிந்தாற் போலிருந்தது சு திக்கு. ''உங்க பிள்ளை பேரு? . .'' அதள பாதாளத்திலிருந்து எழுந்த அவள் குரல்.

''தயாள். ஏன், அவனை தெரியுமா உனக்கு?''

''தெரியாது.'' விரிட்டு கத்திவிட்டு ஓடிவந்தபோதே அவ மனசுக்குள் அந்தத் திட்டம் உருவா விட்டது. அவள் திட்டமிட்டபடிதா சந்தேகத்துக்கு இடம் தராமல் எ லாம் செய்து முடித்துவிட்டு அவளு முடிந்து போய்விட்டாள்.

எங்கே, இனிமேல் சொ லுங்கள் பார்க்கலாம். ஜோடிப் புறு கள் போல் காதலர்கள் வாழ மு யுமா? சகோதரப் புறுக்கள் தம்பதியா வாழலாம். இது மனித ஜாதி. இங்கே புறாக்கள் மாதிரி வாழ முடியாது. வாழ கூடாது.



என்னுடைய தனி அறையில் மோட்டு வளையைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தேன்.

சில நாட்களுக்கு முன் யாரோ ஒரு புண்ணியவான் புகார்ப் புத்தகத்தில் எழுதிப் போயிருந்தது என் கவனத்திற்கு வந்தது. ஆபீஸ் சமயத்தில் கௌண்ட்டரில் வேலை செய்யும் நபர்கள் பத்திரிகைகளோ, புஸ்தகங்களோ படித்தபடி உட்கார்ந்திருப்பதால் பொதுமக்களுக்குச் சிரமம் ஏற்படுகிறது என்று எழுதி வைத்துவிட்டுப் போயிருந்தார். நான் ஆபீஸ் முழுவதற்கும் ஓர் எச்சரிக்கை விடுத்திருந்தேன். என் எச்சரிக்கைக்கு எத்தனை பலன் இருக்கிறது என்று பார்க்கக் கௌண்ட்டர் ஹாலுக்கு நடந்தேன்.

நான்கு ஐந்து பேரைத் தவிர கூட்டம் அதிகம் இல்லை. ஓர் இளம் குமாஸ்தா மட்டும் மேசைக்கு அடியில் ஒரு புத்தகத்தை வைத்துக்கொண்டு தன்னை மறந்த நிலையில் அதில் லயித்துப் போயிருந்தான்.

''என் அறைக்கு உடனே வா!'' அந்தப் புஸ்தகத்தைப் பறித்துக் கொண்டு திரும்பினேன்.

அறைக்கு வந்ததும், ''ஸார்.. ஸார்!'' என்று கெஞ்சினன்.

''இந்தக் கெஞ்சல் இப்போது எதற்கு? நேற்றுத்தானே பத்திரிகை, புத்தகம் படிக்கக் கூடாது என்று சர்க்குலர் அனுப்பியிருந்தேன்? அதற்குள் மறந்து போய்விட்டதா?'' நான் உறுமினேன். எதிரிலிருப்பவன் ஏமாளியாக இருந்தால் எனக்கு நன்ருகவே கோபம் வரும்.

''தப்புதான் ஸார்!. . . என் ஃப்ரெண்டு கொடுத்தான். . .''

அவன் கை நீண்டது.

''அது இங்கேயே இருக்கட்டும்!'' என்றேன். ''பயப்படாதே! நான் வீட்டுக்கு எடுத்துப் போய்ப் படித்துப் பார்த்துவிட்டு நாளைக்குத் திருப்பித் தருகிறேன்,'' என்றேன்.

''சரி ஸார்,'' என்ருன்.

புத்தகம் மொத்தமும் ஒளிவு மறைவு இல்லாத சங்கதி—படங்களுடன்.

புஸ்தகத்தை எடுத்துக் கைப் பையில் வைத்தேன்.

அன்னம்



இப்போது ஒரு ப்ராப்ளம். இதை எப்படி வீட்டுக்குக் கொண்டு போவது? வாசலில் சின்னப் பிள்ளை காத்துக் கொண்டிருப்பான். கஸ்டம்ஸ் சோதனையின் போது கூட ஏதாவது தவறிப் போகும். அவனிடம் ஓர் அணு கூடத் தப்பாது.

சினிமாவுக்குப் போய்விட்டுத்தான் வீட்டுக்குப் போக வேண்டும். நிச்சயம் அதற்குள் தூங்கிவிடுவான். நினைத்ததைச் செயலாக்கினேன்.

வீடு திரும்பியதும் உடைகளை மாற்றிவிட்டுச் சாப்பிட உட்கார்ந்தேன்.

அவள் சோற்றை என் மடியில் பரிமாற வந்தாள். அத்தனை தூக்கக் கலக்கம். நானே போட்டுக் கொண்டு சாப்பிட்டு முடித்தேன்.

படுக்கையில் உட்கார்ந்தபடி அந்தப் புத்தகத்தைப் பிரித்துப் பக்கம் பக்கமாக ரசித்தேன். "ஏய்! சீதா!...இந்தப் புஸ்தகம் பிரமாதமா.. கொஞ்சம் எழுந்து பாரேன்!" என்று அவளை உசுப்பினேன்.

"காலையில் பார்க்கிறேன்..." என்று ராகம் பாடிவிட்டு அவள் மறுபுறம் திரும்பிப் படுத்துக் கொண்டாள்.


இனி அவளுடன் பேசுவதும் பாறாங்கல்லுடன் மோதுவதும் ஒன்றுதான் என எனக்குத் தெரியும்.

ஆபீசுக்குப் போ(
வரையில் எங்கு இந்தப் புஸ்தகத்
மறைப்பது? எங்கு வைத்தாலும்
துப் பார்த்துவிடுவார்கள். சட்டெ
'ஐடியா' தோன்றியது. அலமார
சௌந்தரியலஹரி புத்தக ஜாக்
அட்டை இந்தப் புத்தகத்தி
கச்சிதமாகப் பொருந்தியது. அட்டை
மாற்றிய பிறகு சௌந்தரியலஹரி
அலமாரிக்கு அடியில் வைத்தேன்.

காலை மணி ஏழு.
கண்விழித்தபோது என் அப்பா வாச
யாருடனோ பேசிக் கொண்டிருந்த
யார்...பக்கத்து வீட்டு ராவுஜித
அவருக்கு எத்தனையோ பிடுங்கல்
கவலைகள்...

"நீங்கள் எதற்கும் கவ
படாதீர்கள் ராவுஜி...நான் செ
தர்யலஹரியிலிருந்து ஒரு சுலோ
எடுத்துத் தரேன். தினமும் அ
பாராயணம் செய்யுங்கள்.. உங்
கவலையெல்லாம் போகும்!" என்
அப்பா. "அம்மா விஜயா!...
சௌந்தர்ய லஹரி புஸ்தகத்தை எடு
வா!"பேத்தியையும் கூப்பிட்டுவிட்ட

நான் மட்டையில்
பட்ட பந்து போல் குதித்து எ
தேன். சௌந்தர்யலஹரி புஸ்தகத்
எடுத்து என் தலையணைக்கு அடி



முதைத்து விட்டுத் தூங்கியவன் போல் நடித்தேன்.

என் பெண் மேலெழுந்த வாரியாகப் பார்த்துவிட்டு, ''காணோம் தாத்தா!'' எனக் கூறிவிட்டுப் போய் விட்டாள்.

அப்பா ராவுஜிக்கு ஏதோ சமாதானம் சொல்லி அனுப்பித்தார்.

அவர் போனதும் புஸ்தகத்தை அலமாரியின் நடுவில் செருகினேன்.

குளித்துவிட்டு ஈரத் துண்டுடன் சுவாமி அலமாரியில் நமஸ்காரம் செய்ய வந்தேன். அம்மா பாராயணம் செய்ய உட்கார்ந்திருந்தாள்.

எனக்கு மறுபடியும் அதிர்ச்சி. அவள் பக்கத்தில், மேல் புத்தகமாக சௌந்தர்யலஹரி உட்கார்ந்திருந்தது. அன்று வெள்ளிக்கிழமை என்பது எனக்கு மறந்துபோய் விட்டிருந்தது.

பஞ்சாட்சர ஜபம் செய்து கொண்டிருந்த அம்மா அதை முடித்தவுடன், ''சிவ சக்தியா யுக்தோ. . .'' என்று சௌந்தர்யலஹரியை ஆரம்பித்துவிடுவாளே.

பக்கத்து ஷெல்பில் மோர் கடைந்து வைத்திருந்தாள். மெதுவாகத் தட்டி விட்டேன். சாய்ந்துபோய் தரதரவென்று கொட்டிற்று. அம்மா பரபரப்புடன் எழுந்தாள்.

''ஐயையோ! மோர் கொட்டிவிட்டதே!'' நான் புத்தகங்கள் நனையாமலிருக்க அத்தனையையும் தூக்கினேன். மேல் புத்தகத்தை மறுபடியும் பத்திரப்படுத்தினேன்.

நான் ஆபீஸ் புறப்படும் வரையில் வேறு ரகளை இல்லை. குழந்தைகள் பள்ளிக்கூடம் புறப்பட்டுப் போய்விட்டார்கள். அந்தப் புத்தகத்தைப் பையில் பத்திரப்படுத்த வேண்டியதுதான்.

அட்டையை மாற்றப் புத்தகத்தைத் திறந்தேன். எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. அது நிஜமாகவே சௌந்தர்யலஹரிதான். . . அப்படியானால் நான் கொண்டு வந்த புத்தகம் எங்கே? . . அந்தக் குமாஸ்தா வந்து கேட்பானே! அவனுக்கு என்ன பதில் சொல்வது?

ஆண்டவா! எனக்கு இந்த வயதில் ஏன் இத்தனை சபலம்?



''மாடர்ன் ஓவியம் மாடர்ன் ஓவியம் என்று உங்க பெண் போடற படத்தையெல்லாம் புகழ்ந்துட்டே இருக்கிங்களே தவிர அதன் மூலமா என்ன சொல்றான்னு கவனியுங்கள்!''

''இருங்கள். . . டிபன் கொண்டு வருகிறேன்!'' என்று குரல் கொடுத்தாள் கீதா உள்ளேயிருந்து.

டிபன்! பெர்ரிய டிபன்! . .

அவள் கையில் இரண்டு பொட்டலங்கள்!

''எதற்கு இரண்டு பொட்டலங்கள்?''

''ஒன்று டிபன். . .இன்னொன்று உங்கள் அருமை புஸ்தகம். . வீட்டில் இரண்டும் கெட்டான் வயதில் ஒரு பெண் இருக்கிறாள் என்ற நினைவு இல்லாமல் இதெல்லாம் என்ன விளையாட்டு?...தினம் அவள் காலையில் சௌந்தர்யலஹரி படிக்கிறாள்—காக்கா சொல்படி. 'என்னம்மா இது. .' என்று அவள் கூறினதும் சட்டென்று பார்த்துப் பறித்துவிட்டேன். உடனே அசல் புத்தகத்தை மாற்றித் தொலைத்தேன்.''

ஓ மைஸ் வீட்டி!. . .மனைவி அமைவதெல்லாம்!. . .என் மனம் பாடியது. புத்தகத்தை என் கைப் பையில் திணித்தேன்.

''ஏய் கள்ளி! நீ பார்த்தாயா?. . .படித்தாயா?'' என்றேன்.

''உம்!'' என்று அழகாகவே வெட்கப்பட்டாள் அவள்.

இப்போது நேரமில்லை; இரவு திரும்பிய பிறகு விவரமாக விசாரிக்க வேண்டும்!

இன்னுமா பகற் கனவு?

பார்த்தீர்களா? படத்திற்கு உயிரோட்டம் தந்துள்ள விஸ்வநாதனின் இசை உங்களிருவரையும் கவராதது ஏனோ?

குரோம்பேட்டை க.கோ. ஜவர்லால்

வேட்டியிலே கறையா?

நட்பின் பெருமையைச் சொல்ல வந்த ஹேமா ஆனந்ததீர்த்தனின் கதையில் அந்த வேட்டி உரையாடல் அவசியம்தானா?

உதகமண்டலம்—2 மா. ஸ்ரீரங்கன்

உதவியிலே கொள்ளையா?

இல்லாத ஏழை பாழைகளிடம் இருக்கிறவர்கள் எப்படிப் பகல் கொள்ளை அடிக்கிறார்கள் என்பதை அருமையாகச் சித்திரித்துக் காட்டியிருக்கிறார் 'உதவிப் பணம் குப்பனுக்கு' என்ற சிறுகதையின் ஆசிரியர்.

மதுரை—9 திசை. முத்து

கார்ட்டூனிலே கண்ணீரா?

அட்டையில் முதலை, நடுப் பக்கத்தில் முதலை பற்றிய செய்தியோடு நிறுத்தி இருக்கலாம். கார்ட்டூனில் வேறு ஜே. பி.க்காக முதலைக் கண்ணீர் வடித்திருக்க வேண்டாம்.

சூலூர் ரீஹான அக்பர் ஷரீப்

பட்ஜெட்டிலே குற்றமா?

சிக்கல் நிறைந்த பொருளாதாரச் சூழ்நிலையில் நடுத்தர ஏழை மக்களுக்குப் பயனளிக்கும் வகையில் சமர்ப்பிக்கபட்டுள்ள ரயில்வே பட்ஜெட்டைப் பாராட்ட மனமின்றி, புகைவண்டி விபத்துக்களைக் காரணம் காட்டிக் குறை கூற முயலும் உமது புத்தியை எந்தச் சோப்பாலும் வெளுக்க முடியாது.

மதுரை—2 வ. நாட்டராயசாமி

விக்கெட்டிலே வீழ்ச்சியா?

சந்திரசேகர் வீழ்த்தித் தள்ளியிருக்கும் விக்கெட்டுக்களின் எண்ணிக்கையை விட்டுவிட்டு அவர் அடித்த 'டக்'குகளை மட்டும் கணக்கெடுத்திருக்கிறீர்களே! அந்தப் பெயரைக் கண்டாலே உங்களுக்கு ஏன் இப்படி?

திருநெல்வேலி பாரத்வாஜன்

2-3-78 தேதி குமுதத்தில் ...ம்முடைய தலையங்கத்தைப் பார்த்துச் ...ரிப்புத்தான் வந்தது. இன்னுமா ...ந்திரா காங்கிரசுக்கு வக்காலத்து வாங்...க் கொண்டிருக்கிறீர்? இனிமேலாவது ...ப்படியொரு பகற் கனவு காண வேண்...ாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கோவை—8 ஆர். நாராயணசாமி

இந்திரா காங்கிரஸ் ஜெயித்தால் ...ட்டின் எதிர்காலத்தைப் பற்றி நம்...க்கையோடு இருக்க வாய்ப்பு உண்டு' ...ன்று எழுதிய வேளை—வாய்ப்பு ...லர்ந்து விட்டதே கர்நாடகத்தில்! ...பாஷ்!

கோவை—9 ஜெரா

இந்திரா காங்கிரசுக்குக் ...டைத்த மாபெரும் வெற்றியில் ...ச்சயம் குமுதத்திற்கும் பெரும் ...ங்கு உண்டு – அன்று முதல் இன்று ...ரை ஒரே மூச்சோடு ஆதரித்த பத்தி...கை என்பதால்.


கோலார் தங்கவயல் பி. சுந்தரமூர்த்தி

...திலே அடைப்பா?

பத்மா, உன்னை மக்கு என்ற ...ற்காக என்னை மன்னி. சிவாஜி படம் ...ன்பதால் வாயைப் பிளந்து கொண்டு ...ன்றரை வட்டம் கொடுத்திருக்கிறாரே ...முதம் ஆசிரியர்! அவர்தான் உன்னை ...டப் பெரிய மக்கு. இப்படிக்கு, லல்லி.

...ண்டி பி. ஹேமா

அன்புள்ள பத்மா, லல்லி! ...அந்தமான் காதலி' படத்தை ரொம்ப ...ன்றாகவே விமரிசித்திருக்கிறீர்கள். ...ாதில் பஞ்சு அடைத்துக் கொண்டு



பூமிகா

படம் முடிந்து மொத்தமாய் [illegible] வாங்கிக் [illegible] பிறகு பெரியதொரு சோகம் வருகிறது.

என்ன செய்ய வேண்டும் இந்தப் பெண்களை!

எப்படி நடத்த வேண்டும் இவர்களை?

இந்த ஆண் பெண் உறவுக்கு எல்லைக்கோடு என்ன?

ஏன் அந்தத் தவிப்பு மனித னுக்கு?

இந்த விஷச் சுழலை எங்கே உடைக்க வேண்டும்?

கேள்விகள் எழு கின்றன.

இதற்கு நான், நீங்கள், ஷியாம் பெனகல் யாரும் பதில் சொல்ல முடி யாது இப்போதைக்கு.

உஷா ஒரு பெண். [illegible] பாடத் தெரிந்ததால் திரைப்பட நாயகை யாகிற பெண். தொட்டதற்கெல்லாம் அம்மாவிடம் அடி வாங் கின பெண். தலைவெதிரே தன் பெற் றோர்கள் அடித்துக் கொள்வதை அருவருப்புடன் பார்க்கிற பெண். [illegible] அம்மா உதுக்குகிறாள்: "சொல்லு, சாமி சத்தியமா நீ கெட்டுப் போகலைன்னு சொல்லு." [illegible] உலுக்குகிறான். "சாமி சத்தியமா நீ அந்த [illegible] பழகலை என்று சொல்லு."—இவை இரண் டையும் வெறுத்து உதறி இந்த அடக்கு முறை அவமானம் தாங்காமல் ஒரு பணக்காரனுக்கு வைப்பாட்டியாய் வாழ ஆரம்பிக்கையில் அவனும் டபீ ரென்று அறைந்து உலுக்குகிறான். "என் பாட்டி, அம்மா, மனைவி யாரும் இந்த வீட்டை விட்டு நகர்ந்ததில்லை. நீயும் இந்தக் காம்பவுண்ட் சுவர் தாண்டக் கூடாது." மறுபடியும் விலங்கு. ஒரு சின்னப் பையனுடன் பள்ளிக்கூடம் வரை [illegible] கடை. [illegible]

திரவு. அவனோடு [illegible] பிடித்துக் கொள்கிற [illegible] [illegible] உஷா மீண்டும் [illegible] வனிடம் திரும்புகி [illegible] நடிகனிடமிருந்து [illegible] வருகிறது. "இன் [illegible] உனக்கு மார்க்கெட் இருக்கிறது. [illegible] வா. நான் ஏற்பாடு செய்கிறே[illegible] இன்னுமொரு ஆண். உஷா நி[illegible] நிற்கிறாள். படம் முடிகிறது.

டைரக்டர் ஷ்யாம் பெ[illegible] காமிராமேனையும், எடிட்டரையும் [illegible] துக் கொண்டு தவிப்பது படம் மு[illegible] தெரிகிறது. திணிக்கப்பட்ட உப[illegible] களுக்கும் எடுக்கவேண்டிய முடி[illegible] நடுவே போராடுகிற பெண்[illegible] [illegible] ஸ்மிதாவுக்கு அழகிய [illegible] பாதாதிகேசமும் பெண்மை. [illegible] வின் எந்தக் கோணத்திலும் [illegible] [illegible] மொத்தமும் விழிகளே சொல்லி[illegible] [illegible] படத்தில் [illegible] [illegible] இசைக்கப்படு[illegible]

இது ஒரு அனுபவம் [illegible] [illegible]யில் படம் பார்க்கப் போகு[illegible] கலாம்.

—[illegible]

கதைகளில் வரும் பெயர்கள், சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே. [illegible]
[illegible] தபால் மூலமே அனுப்ப வேண்டும். [illegible]
[illegible] உரிமை உண்டு [illegible]
[illegible] எ.பி.எ. [illegible]
[illegible] பி.வி. பார்த்தசாரதி [illegible] ஏ.பி. [illegible]
[illegible] 83, [illegible]

[சுமாரான ஒரு லாட்ஜின் ...டியில் சுமாரான ஓர் அறை. சங்கரும் ...ம்ராஜும் கட்டிலில் அமர்ந்திருக்கின் ...ார்.]

சாம்ராஜ்: காலையிலே வந்த ...பப்பரை நான் இன்னும் பிரிச்சே ...ார்க்கலே.

சங்கர் (பேப்பரை அவனி...ம் நீட்டியவாறு): லாட்டிரி முடிவு ...ந்திருக்குது. எந்தெந்தக் கழுதைங் ...ளுக்கோ அடிக்குது...

சாம் (பரபரப்புடன்): ...ங்கர்! அந்தப் பர்ஸை எடு...அதிலே ...ரு லாட்டரி சீட்டு இருக்குது.

சங்கர் (பரபரப்பு அவனுக் ...ம் தொற்றிக்கொள்ள ஆவலோடு ...ட்டை எடுத்து): என்ன நம்பர்?

சாம் (பத்திரிகையில் வெளி...ந்துள்ள பரிசுச் சீட்டு எண்ணைப் ...டிக்கிறான்): ஏஸி முப்பத்தைந்து, எழு...த்தெட்டு, நாற்பத்து ஒண்ணு...

சங்கர்: சே! இது ஏஸி ...ப்பத்தைந்து, எழுபத்தெட்டு, நாற் ...து! சே! சே சே சே! மயிரிழையில் ...பாச்சு! நீ அதிர்ஷ்டக்கட்டை!

சாம் (தன்னைத்தானே சமா...ானம் செய்து கொண்டவனாய்): ...ஸோ. போனால் போகட்டும். விடு. ...டீரென்று முகம் மாறி) அதிர்ஷ்டக் ...ட்டை இல்லேடா, அதிர்ஷ்டசாலி! ...காடு கையை!

சங்கர் (திகைத்து): எதுக்கு?

சாம் (அவனுக்குப் பதி...ளிக்காமல்): சித்ரா! நீ தப்பிச்சிட் ...டேன்னு மனப்பால் குடிச்சிட்டிருந்தே ...ல்லையா?

சங்கர்: அவள்தான் அந்த ...னந்த்தை மாரேஜ் பண்ணிக் கொண்டு ...ட்டாளே?

சாம்: சித்ரா! எனக்கு நீ ...ழுதின கடிதங்களை என்கிட்டேயிருந்து ...மர்த்தியமாத் திரும்ப வாங்கிக் ...காண்டு அதை டெஸ்ட்ராய் பண் ...ணிட்டே இல்லே? ஆனால்....ஆனால்... ...ப்ப ஒரு சான்ஸ் எனக்குக் கிடைச் ...ருக்கு!

சங்கர்: இந்தச் சீட்டை ...ச்சிட்டு என்ன பண்ணப் போறே?

சாம்: இந்தச் சீட்டையில்லே, ...ந்தச் சீட்டை! [புறப்படுகிறான்.]

2

[புத்தக அலமாரியை ஒழித்துக் கரப்பான் பூச்சிகளைத் தட்டிக் கொண்டிருக்கிறாள் சித்ரா.]

சித்ரா: அவர் குறைப்பட்டுக் கொள்கிறதுக்குத் தகுந்த மாதிரிதான் இருக்கிறது. வீட்டிலே வேறு எல்லாத் துக்கும் குறையிருந்தாலும் இந்தக் கரப்பான்களுக்கு மட்டும் குறைச்சலில்லே.

[வேகமாகப் புத்தகங்களைத் தட்டியதில் ஒரு புத்தகம் கீழே விழுந்து பிரிகிறது. அதிலிருந்து ஒரு லாட்டிரிச் சீட்டு வெளியே வந்து விழுகிறது.]

சித்ரா: அட! ஏதோ பரிசுச் சீட்டு. (உற்றுப் பார்க்கிறாள். அருகி லிருக்கும் செய்தித் தாளின் முதல் பக்கத்துக் கொட்டை எழுத்து பரிசு முடிவு அவள் கண்களில் படுகிறது.)

அட! என்ன ஆச்சரியம். (மகிழ்ச்சியோடு கையிலிருந்த பரிசுச் சீட்டு எண்ணையும் பத்திரிகையில் வந்திருந்த முடிவு எண்ணையும் மறுபடி ஒப்பிட்டுப் பார்க்கிறாள்.) பதினாயிரம் ரூபாய்! பதினாயிரம் ரூபாய்! (உவகை பொங்க) அவர் சாயந்தரம் வந்ததும் விஷயத்தைச் சொன்னால் எவ்வளவு சந்தோஷப் படுவார். (பரிசுச் சீட்டைத் திருப்புகிறாள். பின்புறத்தில் அவள் கையெழுத்தில் சில வரிகள் தென்படுகின்றன; அவள் முகம் சரேலென மிரட்சி அடைகிறது. நெஞ்சு படபடக்கிறது) ஓ. இந்தச் சீட்டா? இது அவர் கண்ணில் பட்டால் அவ்வளவுதான். (கண்கள் திகிலுடன் அந்த வரிகளைப் பார்க்கின்றன. ஒரு விநாடி யோசனைக்குப் பின் அவசரமாக ரேடியோ அருகில் சென்று ஒரு ரப்பர் கிடைக்குமா என்று தேடுகிறாள். சைக்கிள்மணி ஒசை கிணுங் என்று கேட்கிறது. அவள் கணவன் ஆனந்த் வருகிறான்.)

சித்ரா (தடுமாற்றத்துடன்): நீங்க, நீங்க...

ஆனந்த்: ஸ்பெக்ஸையும் சிகரெட் பாக்கெட்டையும் மறந்து வைத்து விட்டுப் போய் விட்டேன். என்ன சித்ரா பரிசுச் சீட்டு? பேப்பர்? உற்று உற்றுப் பார்த்திட்டிருக்கியே? ஏதாவது அதிருஷ்டப் பரிசு கிரிசு அடிச்சிட்டியா?

ஐ. ரா. சுந்தரேசன்

சித்ரா (கலவரத்தை மறைத்துக்கொண்டு சிரித்து): பரிசு ஆமாம்.. பரிசு..

ஆனந்த்: நிஜமா? நிஜமாவா சித்ரா! (சீட்டை வாங்கிப் பார்த்து) ஸ்பெக்ஸ் இல்லாமல் சரியாத் தெரியலே. (அவளிடமிருந்த பத்திரிகையையும் சீட்டையும் வாங்கிக் கண்ணருகில் வைத்து ஒப்பிட்டுப் பார்த்து) முப்பத்தைந்து எழுபத்தெட்டு நாற்பத்து ஒண்ணு(குதூகலத்துடன்)சித்ரா! சித்ரா! சித்ரா! நீ எப்போ வாங்கினது இது? என்கிட்டே சொல்லவேயில்லையே!

சித்ரா: வந்து. . .வந்து. . என்க்கே ஞாபகமில்லை. . .

ஆனந்த்: சித்ரா! பத்தாயிரம்! நேற்று சிகரெட் லேட்டர் வாங்கணும்னதுக்கு நாம் பட்ஜெட் விவாதம் அப்படிப் பண்ணிட்டிருந்தோம். . . (கொஞ்சலாக) சிட்ரா! இன்றைக்கு நம்ம வீட்டில் நோ சமையல். பதினாயிரம் பரிசு விழுந்ததைக் கொண்டாட ஓட்டலுக்குச் சாப்பிடப் போகிறோம். அப்படியே சினிமா. (சீட்டைத் திருப்பியவாறு) பின்புறத்தில் ஏதோ போட்டிருக்கிறானே. பொடி எழுத்து. ஒன்றும் தெரியவில்லை. கண்டிஷன் ஏதும் இருக்குமோ? என் ஸ்பெக்ஸை எடு.

சித்ரா (முகம் வெளிற): வந்து. . .வந்து. . .என்ன கேட்டீங்க?

ஆனந்த்: கொஞ்சம் பெரிய எழுத்துக்களிலே நிபந்தனையை அடிக்க மாட்டானோ? ஸ்பெக்ஸ் எங்கே?

[சித்ராவுக்கு வியர்த்துக் கொட்டுகிறது. பக்கத்து அறைக்குச் செல்கிறாள். புத்தக அலமாரியி ஸ்பெக்ஸ் இருக்கிறது. அதை எடுக்கும் போது அவள் கை லேசாக நடுங் கிறது. ஒரு கணம் யோசித்துவிட் ஸ்பெக்ஸைப் படுக்கைக்குப் பின்னா மறைத்து வைக்கிறாள். சுவரிலுள் சுவாமி படத்தைப் பார்த்துக் கும்பிட்டு கொள்கிறாள்.]

ஆனந்த்: அங்கேதானே பு தக அலமாரியில் வைத்தேன். இ னுமா தேடறே. . .

சித்ரா (குரலை உயர்த்தி அலமாரியிலா? இல்லையே. (திரும் வந்துகொண்டே) ரேடியோகிட்டே இ குமோ, அங்கே பார்க்கிறேன் இருங்க

ஆனந்த்: சித்ரா! நா போய் ஒரு வழி வழிச்சிட்டு அப்படி ஒரு குட்டி பாத்தும் எடுத்திட் வந்திடறேன். நீ அதற்குள் ரெடிய யிடணும். .

[கணவன் பாத்ரூம் போ தும் அவன் டீப்பாயின்மீது வைத் விட்டுப்போன பரிசுச் சீட் ஓசைப்படாமல் எடுக்கிறாள். ரேடி அருகில் ஒரு ரப்பர்த் துண்டு இருப் தெரிகிறது. எடுத்துப் பரிசுச் சீட் பின்புறமுள்ள கிறுக்கலை அழிக்கத் து ருகிறாள். அதே சமயம் ஆனந்த் பாத் போனவன் திரும்புகிறான்.]

ஆனந்த்: டவல் எ துக் கொள்ளாமல் போய்விட்டே (சித்ரா பரிசுச் சீட்டை வைத் கொண்டு ஏதோ அழிப்பை பார்த்துத் திடுக்கிட்டுப் ப சித்ரா! ஏய்! எ அது?

சித்ரா (நாக்குழ வந்து.. வந்து.. என்ன பின்பக்கம் கிறுக்கியிருந் அழிக்கப் போனேன்.

ஆனந்த் (ரப்ப பறித்து எறிந்தபடி): அறிவு கெட்டவளாக கிறே! எதையாவது அழி போய்க் கடைசியில் பி கிடையாது போங்கன்னு விடு வாங்க. கிறுக்கல் தால் இருந்துட்டுப் போ டும். (அவள் முகத்



பார்க்கிறான். தான் கோபித்துக்கொண்டதால் அது வாடி விட்டது .. என்று நினைத்து சமாதானம் செய்யும் பொருட்டுக் கொஞ்சலாக அவள் கன்னத்தோடு தன் கன்னத்தை இணைக்க முயலுகிறான்.)

சித்ரா: அய்யே! ஒரே குத்தாய்க் குத்துகிறது. பக்கத்து வீட்டு வாண்டு எப்ப வேணும்னு வந்திடும்.

ஆனந்த் (கொஞ்சலுடன்): ஷேவ் பண்ணிட்டு வந்து உன்னைக் கவனித்துக் கொள்கிறேன்.

(ஒரு சிகரெட் பற்ற வைத்துக் கொண்டு பாத்ரூம் செல்கிறான். கதவு சாத்தப்படும் வரை காத்திருந்த சித்ரா அது சாத்தும் சத்தம் கேட்டதும் ரப்பரைத் தேடுகிறாள்.)

சித்ரா: இங்கேதானே வீசிப் போட்டார். காணோமே.

[பக்கத்துவீட்டு ஆறு வயதுச் சிறுமி அனு கான்வெண்ட் டிரெஸ்ஸில் வருகிறாள்.]

அனு: ஆன்ட்டி...நான் உள்ளே வரலாமா?

சித்ரா (எரிச்சலோடு): அனுவா...

அனு: ஆன்ட்டி...நேற்று இங்கே வந்து ஹோம்வர்க் பண்ணிட்டிருந்





தப்போ ரப்பரை விட்டுட்டுப் போயிட்டேன் போலிருக்கு. (மேஜை மீதிருக்கும் பரிசுச் சீட்டைப் பார்த்து) ஹை! ரேஃபிள் டிக்கெட்!

சித்ரா (பதட்டத்துடன்): அதையெல்லாம் எடுக்காதே. வச்சுடு வச்சுடு.

அனு (சீட்டை இப்படியும் அப்படியும் திருப்பிப் பார்த்து): எந்த ஸ்டேட் லாட்டரி மாமி? டாமில் நாடா? பின்னுலே என்னவோ டாமில்லேயிருக்கு ஆன்ட்டி; நான் படிக்கட்டுமா ஆன்ட்டி:

(படிக்கிருள்)

சாம்ராஜ் டியர்,

இதோ நீங்கள் கேட்ட முத்தம். இனி என்னோடு பேசலாம் இல்லையா?

சித்ரா (தடுமாற்றத்துடன்): ஆமாம், ஆமாம், யாரோ கிறுக்கியிருக்காங்க.

(பாத்ரூம் கதவு திறக்கும் சத்தம் கேட்கிறது)

சித்ரா: அனு! நேரமாகலே உனக்கு ஸ்கூலுக்கு! ஓடு ஓடு! இன்னிக்கு நீ ரொம்ப லேட்! அப்புறம் நான் ரப்பரைத் தேடி வைக்கிறேன். . .

அனு: சரி ஆன்ட்டி. : :

(போகிருள்)

ஆனந்த் (தலை துவட்டியபடி): என்ன நீ இன்னும் தலையைக் கூட வாரிக்கொள்ளாமல்?

சித்ரா: இருங்கள். ஃபேனைப் போடறேன். . .(மின்விசிறியைத் திருகுகிருள். டீபாயிலிருந்த பரிசுச் சீட்டு மெல்லப் பறந்து வாசல் வழியாக வெளியேறுகிறது. அதைச் சித்ரா மட்டும் கவனிக்கிருள். ஆனல் அதை மீ முயலவில்லை.)

ஆனந்த்: சித்ரா! என் மூ சைத் தொட்டுப் பாரேன். வழவழன் எப்படி ஷேவ் பண்ணிட்டு வந்தி கேன் பார். . .(அவளைத் தன் பக் இழுக்கிருன்.)

சித்ரா (விடுவித்து கொண்டு): ஐயா ஒரே குஷியிலிருக்கிங் விடுங்க..

ஆனந்த்: உன்னை விட் லும் உன் அதிர்ஷ்டக் கையை மாட்டேன். பத்தாயிரம் அடி கையாச்சே! சித்ரா, பரிசுச் சீட் எடுத்து முதல்லே சுவாமி படத் கிட்டே வை. . .

சித்ரா (டீபாயின் அரு சென்று தேடியவாறு): சீட்டை இங் தானே வச்சிங்க?

ஆனந்த் (பதறியவா என்ன சித்ரா. . .இங்கேதானே இ ந்தது.

சித்ரா: ஆமாம், நான் ஏதோ கிறுக்கலை அழிக்கப் பார்த்தே என்கிட்டேருந்து பறிச்சு இங் தானே வச்சிங்க. . .

ஆனந்த்: ஆமாம். நல்ல பார். . .(கீழே குனிந்து கவலையுட டீபாயின் அடியிலும் சோபா யிலும் பார்க்கிருன்.)


சித்ரா: பாத்ரூமுக்கே யோடு எடுத்துட்டுப் போயிட்டீங்களே

ஆனந்த்: நோ. . .நோ. என்னடா இது... இப்பப் பார்த் புருந்தேனே. . .

[பஸ்ஸரை யாரோ அழு கிருர்கள். ஆனந்த் எரிச்சலுடன் வைத் திறக்கிருன். சாம்ராஜ் நிற்கிரு



மலையை விழுங்கிய
மகாதேவர்கள்
அப்பளத்தைத் தேடி
ரேசுக்குப் போனர்கள்.
அரசாங்கக் காரில்
அமைச்சர் வரவில்லை.
அம்மாதான்
அகப்பட்டார்.
பாவம்,
பி. டி. சரஸ்வதி
பிடி சரஸ்வதி.



"இவ்விடம் பணம் வைப் ல்லே. ஆகையால் தயவு செய்து கதவு யோ பெட்டிகளேயோ, பூட்டுகளேயோ டக்க வேண்டாம்."

சென்னை— கொத்தவால் சாவடி தியிலுள்ள 'பத்மா அண் கோ' என்ற ண்ணெய்க் கடையில் எழுதி வைத்துள் ர்கள்.

—"காயல் ஷேக்"

ஆனந்த்: சாம்ராஜ்? வாட் ப்ளெஸெண்ட் சர்ப்ரைஸ்! . . .வா.: ர.வா.

சாம்ராஜ்: ஏண்டா, லாட் ரி டிக்கெட் இங்கேதான் உன் வீட் ல் பிரிண்ட் பண்றியா? வாசல் வழி க ஏதோ காகிதம் பறந்து வந் துன்னு பிடித்துப் பார்த்தேன்.. (சித் ாவை ஜாடையாகப் பார்க்கிறன். வள் முகம் பேயறைந்தாற்போல் ஆகி து.)

ஆனந்த் (நண்பனைக் கட்டிப் த்துக் கொண்டு): அதைத்தான் டிட்டேயிருந்தேன். அது பத்தாயிரம் பாய் பரிசு வாங்கியிருக்கிற சீட்டப்பா! தய்வம்தான் உன்னைக் கொண்டுவந்து ர்த்திருக்கிறது.

சாம்ராஜ் (சித்ராவைப் ார்த்தவாறே): ஆமாம். தெய்வம் காண்டு வந்து சேர்த்திருக்கிறது.

ஆனந்த் (சித்ராவிடம்): சித்ரா! இவன் என் சினேகிதன் சாம் ராஜ். காற்றிலே எங்கோ பறந்து போய்விட்ட பரிசுச் சீட்டு எப்படிக் கச்சிதமாக இவன் கையில் கிடைத் திருக்கிறது பார்த்தாயா?

சித்ரா: வணக்கம்.

சாம்ராஜ்: வணக்கம்.

ஆனந்த்: நீங்க பேசிக்கிட் டிருங்க... நான் போய் நம்ம மூணு பேருக்கும் இங்கேயே டிபன் வரவழைக்க ஏற்பாடு பண்றேன். . . இன்றைக்கு சந்தோஷத்துக்கு மேல் சந் தோஷமா வந்திட்டிருக்கு. . .

சாம் (பரிசுச் சீட்டைத் திருப்பிப் பார்த்தவாறு): நீ சீட்டை நல்லா பார்த்தியா ஆனந்த்?

ஆனந்த்: ஸ்பெக்ஸ் இல்லே: ஆனல் நம்பரை நல்லா செக் பண்ணிட்டேன். பேசிட்டிருங்க. டிப னுக்கு ஏற்பாடு பண்றேன்.

(போகிறன்)

சாம்ராஜ்: கடவுள் எவ்வ ளவு நியாயமானவர்னு எனக்கு இப் பத்தான் புரியுது சித்ரா. இல்லையானல் இப்படி ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்திருப்பாரா? சித்ரா, உனக்கு மறந்திருக்கலாம். ஆனல் எனக்கு மறக்கலே. ரெண்டு பேரும் ஒருநாள் பீச்சிலே பேசிட்டிருந்தோம். உன்னை நான் ஒன்று கேட்டேன். நீ மறுத்தாய். கோபித்துக்கொண்டு பேசாமல் இருந் தேன். அதுக்குக் கொஞ்சம் முன்னே தான் ஒரு பரிசுச் சீட்டுப் பையன் வந்து தொந்தரவு பண்ணினன்னு ரெண்டு சீட்டு வாங்கினேம். நீ ஒரு சீட்டு பின்னலே 'இதோ நீங்க கேட்ட முத்தம்: இனி பேசலாம் இல்லேயா?'ன்னு எழுதிக் காட்டினே.. சிரிச்சுட்டேன். அந்த சீட்டு உன்கிட்டேயே இருந்திருக்கு. சித்ரா... அது இப்போ எவ்வளவு உதவியாயிருக் கிறது பார்த்தியா?

சித்ரா: சாம்ராஜ்! என்னை மன்னித்துடுங்க. நான் உங்களை ஏமாத் தணும்னு நினைக்கலே. அப்பா அம்மா வார்த்தையை மீற முடியலே. இவ ருக்குப் பண்ணிக் கொடுத்துட்டாங்க. ஒரு வழியா இவரோடு வாழ்க்கை நல்லா அமைஞ்சு போச்சு.. அதைக் குலைச் சிடாதீங்க.

சாம்ராஜ்: சேசேசே! அதுக்

காகவா நான் வந்திருக்கேன்? நீ சந்தோஷமா இருக்கணும் சித்ரா.

சித்ரா (நிம்மதிப் பெருமூச்சுடன்): சாம்ராஜ். நீங்க ஜென்டில்மன்... அந்தச் சீட்டைக் கொடுங்க. நான் எழுதினதை அழிச்சிடறேன்.

சாம்ராஜ்: ஏன் சித்ரா..? ஜென்டில்மன்னு உன் டிக்ஷனரியிலே இளிச்சவாயன்னு அர்த்தமில்லையே?

சித்ரா (கைகூப்பி): என் வாழ்வைக் கெடுத்திடாதீங்க. உங்க காலிலே விழறேன் சாம்ராஜ்! நடந்ததை யெல்லாம் கெட்ட கனவு மாதிரி மறந்துடுங்க.

சாம்ராஜ்: கெட்ட கனவானால் மறக்கலாம், இன்பக் கனவாச்சே சித்ரா... நான் இப்பவும் சொல்றேன்... உன்னைக் கணவன் கிட்ட காட்டிக் கொடுக்கணும்னு நான் ஆசைப்படலை... ஆனால் நீ என்னைப் புரிஞ்சுக்கணும். (சிரிக்கிறான் லேசாக.)

சித்ரா (ஒதுங்கிக்கொண்டு): புரியுது.

சாம்ராஜ்: ஒவ்வொண்ணுக்கும் ஒரு விலை உண்டு சித்ரா. (அர்த்தத்தோடு அவளைப் பார்க்கிறான்.)

சித்ரா (உறுதியுடன்): அதை நான் கொடுக்கத் தயாரில்லை.

சாம்ராஜ்: கண்டிப்பாக?

சித்ரா: கண்டிப்பாக.

சாம்ராஜ்: விளைவை யோசித்துப் பார்த்தாயா?

சித்ரா: நடக்கிறபடி நடக்கட்டும்..

[ஆனந்த் வரும் ஓசை கேட்கிறது. இருவரும் மௌனமாகிறார்கள்]

ஆனந்த்: ஸாரி சாம்ராஜ். ரொம்பக் காக்க வைத்துவிட்டேன். சித்ரா போரடித்து விட்டாளா?

சாம்ராஜ்: நாட் அட் ஆல். ஆமாம், பரிசுப் பணம் வந்ததும் என்ன பண்ணப் போறே? பிளான்ஸ் இவ்வளவு நேரத்துக்குத் தோணியிருக்கணுமே.


ஆனந்த்: முதலிலே இருக்கிற கடனை எல்லாம் அடைக்கணும்.

சாம்ராஜ்: உன் மிஸஸுக்கு என்ன பிளான்களோ? (சித்ராவைப் பார்க்க அவள் பதிலளிக்காமல் ஜன்னலைத் திறப்பது போல ஜன்னலருகே செல்கிறாள்)

ஆனந்த் (சிரித்து): நேற்று இதே நேரத்துக்கு ஒரு பாக்கெட் சிகரெட் நான் வாங்கினதற்கு இங்கே எங்களுக்குள் ஆயிரம் பட்ஜெட் தர்க்கம். (சிகரெட் பாக்கெட்டிலிருந்து ஒரு சிகரெட்டை எடுத்துத் தன் உதட்டில் வைத்துக் கொண்டு இன்னொன்றை சாம்ராஜிடம் நீட்டியவாறு) சிகரெட்?

சாம்ராஜ் (வாங்கிக்கொண்டே): ஐந்து பைசா சிகரெட்டா?

ஆனந்த்: ஏதோ ஏழைக் கேத்தது... (சிரித்து) பரிசு வந்துட்டதாலே இனிமேல் எப்படியோ... (நெருப்புக் குச்சியைக் கிழித்துத் தன் சிகரெட்டைப் பற்ற வைத்துக்கொள்கிறான். பிறகு இன்னொரு குச்சியைப் பற்ற வைத்து சாம்ராஜின் சிகரெட்டைப் பற்ற வைக்கிறான். சாம்ராஜின் சிகரெட்டை ஆனந்த் பற்ற



அண்மையில் கர்நாடகத்தில் நடந்த சட்டசபை தேர்தலில் ஹம்ருபாத் என்ற ஊரில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிட்டார் அந்த வாலிபர். கொஞ்ச காலத்துக்கு முன் ஏதோ காரணத்துக்காகத் தன் மனைவியைத் தள்ளி வைத்திருந்தவர் அவர். அவளை ஹம்ருபாதிலுள்ள அவருடைய தகப்பனார் வீட்டுக்கு அனுப்பியிருந்தார்.

தேர்தல் பிரசாரத்திற்கு ஹம்ருபாதுக்கு அவர் போன போது அங்குள்ள மக்கள் எல்லோரும் ஏகமனதாக அவரிடம் கூறியது: "உங்கள் மனைவியை நீங்கள் திரும்ப அழைத்துக் கொள்வதானால் நாங்கள் உங்களுக்கு ஓட்டுப் போடுகிறோம்."

இந்த நிபந்தனையை ஏற்றுக் கொண்டார் வேட்பாளர். அவருடைய மாமனாருக்கு ஒரே சந்தோஷம். மாப்பிள்ளையின் தேர்தல் செலவுக்குப் பணம் கொடுத்துப் பிரசாரமும் செய்தார். (ஆனால் வெற்றி பெற்றாரா என்பது தெரியவில்லை.)

ஆதாரம்: 'டெக்கான் ஹெரால்ட்'
தகவல்: அனிதா ராமச்சந்திரன்.

வைக்கும்போது அந்த நெருப்பு சாம்ராஜின் கையிலுள்ள பரிசுச் சீட்டிலும் பற்றிக்கொண்டு விடுகிறது. எல்லோருடைய கண்ணெதிரிலும் சீட்டு எரிந்து விடுகிறது. பூட்ஸால் சாம்ராஜ் அணைக்க முயல்வதற்குள் காரியம் மிஞ்சி விடுகிறது.]

சாம்ராஜ் (பதறியவாறு மன்னிப்புக் கோரும் குரலில்): ஐயையோ! ஆனந்த்!

ஆனந்த் (தலையில் கை வைத்துக் கொண்டு உட்கார்ந்துவிடுகிறான்.). கொடுத்துவைத்தது அவ்வளவு தான்.

சாம்ராஜ்: என்னால் பத்தாயிரம் உனக்கு நஷ்டமாயிட்டுதே.

ஆனந்த்: அது தொலையணும்னே ஏற்பட்ட சீட்டு போலிருக்கு... முதலிலே காற்றிலே அடிச்சிட்டுப் போனது. திரும்பக் கிடைச்சது. இப்போ நெருப்பிலே போயிட்டது! எங்க துரதிருஷ்டத்துக்கு நீ பாவம் என்ன செய்வே?

3

[இரவு சித்ராவும் ஆனந்தும் மௌனமாகப் படுத்திருக்கிறார்கள். சித்ரா தூக்கம் வராமல் புரள்கிறாள்.]

ஆனந்த்: என்ன சித்ரா, அதிருஷ்டம் வர்ராப்பலே வந்து போயிட்டுதேன்னு வருத்தமாயிருக்கா? என்னை மன்னிச்சிடு சித்ரா... நான் அஜாக்கிரதையாப் பற்ற வைத்துட்டேன்.

சித்ரா (மார்பு துக்கத்தால் விம்ம): ஒரு கதை படிச்சது ஞாபகத்துக்கு வருது.

ஆனந்த்: கதையா?

சித்ரா: ஒரு கணவனும் மனைவியும் சந்தோஷமாகக் குடித்தனம் நடத்திக் கொண்டிருந்தார்கள். அவளுக்கு லாட்டிரியிலே ஒரு பரிசு அடிச்சது. ஆனால் சந்தோஷப்பட முடியவில்லை. ஏன்னு (குரல் தழுதழுக்க) அவளை முன்னாலே காதலிச்ச வாலிபன் வில்லனாக வந்துவிட்டான். பரிசுச் சீட்டின் பின்னாலே அவள் அவனுக்கு எழுதின சில வார்த்தைகள் இருந்தது. அதை வச்சிட்டு அவன் அவளைக் கெடுக்கத் திட்டம் பண்ணிட்டிருந்தான். அப்போ அவள் புருஷன் அந்த வில்லனுடைய சிகரெட்டைப் பற்ற வைத்தார். அப்போ பரிசுச் சீட்டும் பற்றிக் கொண்டு விட்டது. அந்த விபத்து தற்செயலாக நடக்கவில்லை. நிலைமையைப் புரிந்துகொண்டு மனைவியின் மானத்தைக் காப்பாற்றுகிறதற்காகப் புருஷன் பதினாயிரம் ரூபாய்ச் சீட்டை வேண்டுமென்றே பற்ற வைத்துவிட்டார். அவர் மனிதரல்ல, தெய்வம். என்ன நினைக்கிறீங்க?

ஆனந்த் (அவளை ஆறுதலாக அணைத்து): தெய்வமல்ல, மனிதன். மனைவியின் பெருமையைப் புரிந்துகொண்ட மனிதன். (அருகிலிருந்த பூவை எடுத்து அவளிடம்தந்து) வந்தது அதிர்ஷ்டச்சீட்டு அல்ல. துரதிருஷ்டச் சீட்டு... அது எரிஞ்சதுக்குக் கடவுளுக்கு நன்றி சொல்லணும். . இந்தா சாமிக்குப் போட்டுட்டு வா. . .

(அவள் குனிந்து அவன் கால்களில் பூவைப் போட்டு விட்டுக் காலைப் பற்றிக் கொண்டு கண்ணீர் வழிய அமர்ந்திருக்கிறாள்.)

வாணியம்பாடியும் கூவமும்

சென்ற 4'ம் தேதியன்று சட்ட மன்றத்தில், லத்தீப் (முஸ்லீம் லீக்) புகார் கூறினார்: "கூவத்தின் நாற்றம், எம். எல். ஏக்கள் விடுதியின் 6—வது மாடியில் இருப்பவர்களுக்குக்கூட தாங்க முடியவில்லை."

சபாநாயகர் மு ஆ ஆதி: "நீங்கள் 6 மாடிக் கட்டிடத்தில் இருந்து கொண்டு நாற்றம் என்கிறீர்கள். ஆனால் நான் கூவம் ஆற்றுக்குப் பக்கத்திலேயே இருக்கிறேனே? எப்படி இருக்கும் யோசியுங்கள்."

அமைச்சர் நாஞ்சில் மனோகரன்: "உறுப்பினர் லத்தீப், ஆம்பூர்—வாணியம்பாடி போன்ற இடங்களில் தோல் பதனிடுதலில் வரும் நாற்றத்தைச் சகித்துக் கொண்டு இருப்பவர். அதேபோல் இதையும் பொறுத்துக்கொள்ள வேண்டும் என்று கூறவில்லை. கூவம் நாற்றத்தைப் போக்க அரசு தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ளும்."



மன்னிக்க மாட்டேன்

"ஏன் இப்படி [illegible] போய் உட்கார்ந்து [illegible]..." பங்கஜத்தின் குரல் [illegible] யிருந்தது.

"பங்கஜம், [illegible]... எவ்வளவு [illegible] வளர்த்த பயல்... ம்... என்னை எதிர்த்துப் பேசிட்டான்... காதலாம் காதல்..."

"போகட்டும். விடுங்க. நீங் [illegible] ஆரம்பிக்கணும்?.. [illegible] கழுவப் போயிட்டான்... கோபத் தோட வேலைக்கும் போயிட்டான்..." தாயின் பாசம், [illegible] அளவு இருந்தது.

"[illegible]... [illegible] கேட்டுட்டேன்... [illegible] டேன்... [illegible] கோபம்... [illegible], என் கிட்டே எதிர்க்கப் போறான்?... பங்கஜம்... உன் அருமைப் பிள்ளை [illegible] என் காலைத் தொட்டு மன்னிப்புக் கேட்கும் வரை [illegible] பேச்சை எடுக்காதே!"

ஈஸிசேரை விட்டு எழுந்த அவர், மேல் துண்டை எடுத்துப் போட்டுக் [illegible] செருப்பை அணிந்து கொண்டார். [illegible] பங்கஜத்தின் கண்ணோர ஈரம் பளபளத்தது.

[illegible] ஒரு சமயம், இவரிடம் சொல்லாம [illegible]

பாமா கோபாலன்

ஒரு மாட்டினி ஷோவுக்குப் ...தற்கே, மூன்று நாட்கள் பேசா ... இருந்த மனத்திண்மை உள்ள ...ஷன். ஆனல் அதே சமயம், மன்னிப் ...க் கேட்டுவிட்டால் மனம் நெகிழ்ந்து பாசம் ஆருகப் பெருக்கெடுத்து ஓடும்.

'இந்தப் பயல் இப்படி வீம்பு பிடிக்க வேணும். வீட்டு நம்பர் சொல்ருன், தெருப்பெயர் சொல்ருன். . . மற்ற விஷயங்களை விவரமா சொன்னல் குறைஞ்சா போயிடுவான்!. . . இவரும் கொஞ்சம் நிதானமா, நல்லதனமா கேட்கப்படாது? . . . எனக்குத்தான் இரண்டு பக்கமும் இடி . . . முருகன் தான் வழிகாட்டணும். . .' அவள் குழம்பினள். பையனும் பிடிவாதக்காரன். அப்பாவிடம் மரியாதை இருந்தாலும், இந்தமாதிரி சந்தர்ப்பத்தில் காலைத் தொட்டுக் கும்பிடச் சம்மதிப்பான? அதுவும் நாலுபேர் முன்னல்? அவள் கையைப் பிசைந்தாள்.

பிள்ளை சொன்ன வீட்டைத் தேடிச் சென்ருள். அந்தப் பெண் ஷீலா மட்டும்தான் இருந்தாள். முகக் களையோடு இருந்தாள். பதவிசாக நடந்து கொண்டாள். பங்கஜம் இன்னரென்று தெரிந்ததும் அவள் காட்டிய பணிவு! 'நம்ம குடும்பத்துக்கு ஏற்ற பெண்.' நினைக்காமலிருக்க முடியவில்லை பங்கஜத்தால். வீட்டு நிலைமையை ஷீலாவிடம் விவரித்துக் கொண்டிருக்கும் போது திடீரென்று பங்கஜத்தின் முகத்தில் தெளிவு உண்டாயிற்று. அந்தச் செருப்பு! கால்வளையம் கிழிந்துபோன செருப்பு!

மாலை. பங்கஜம் நிலைக் கண்ணுடியில் முகத்தைப் பார்த்து நெற்றியில் குங்குமத்தில் பிசிறு நீக்கினள் மோதிர விரலால். மல்லிகைச் சரத்தை வளைவாகக் கொண்டையில் அணிந்து கொண்டாள். கைக்குட்டையால் ஒருமுறை மூக்கின் நுனியில் விழுந்திருந்த குங்குமத் தூளை ஒற்றியெடுத்தாள்.

''வாங்க கோவிலுக்குப் போயிட்டு வந்துடலாம்.''

முக்கால் கை சட்டையை அணிந்து கொண்ட வேதாசலம் வீட்டைப் பூட்டிக் கொண்டு மனைவியுடன் கிளம்பினர்.





இரண்டு படங்களுக்கும் குறைந்தபட்சம் ஆறு வித்தியாசங்கள் உண்டு. விடை: 67 'ம் பக்கம்

மெதுவாகப் பேச்சுக் கொடுத்தாள் பங்கஜம்.

"கிட்டத்துலே தானே இருக்கு, அந்தப் பொண்ணு வீடு? ஒரு நடை அந்தத் தெருப்பக்கமா போயிட்டு வரலாமா?.."

"...நீ பேசாமல் வர மாட்டாயா!..."

காலணிகளை வாசலில் விட்டு விட்டு, கோவிலுக்குள் போனார்கள். பாலாபிஷேகம் முடிந்து, விபூதி அபிஷேக அலங்காரத்தில் முருகன் புன்னகை புரிவதைக் கண்டு மெய்சிலிர்த்தார் வேதாசலம்.

பத்து பைசா நாணயத்தைக் கொடுத்துவிட்டு, காலணிகளை அணிந்து கொண்டார்.

"அட சட்... இந்தச் செருப்பு அறுந்து அறுந்து என் கழுத்தை அறுக்கிறது!"

பங்கஜம் மெதுவாகச் சொன்னாள். "இந்தச் சனியனை தூக்கி யெறிஞ்சுட்டு வேற ஜோடி வாங்குங்க. எவ்வளவு வருஷமா இதையே போட்டு அடிக்கிறீங்க?"

"சரி... சரி...கடைத் தெரு பக்கம் போவோம் வா..."

கடையில் கூட்டம் சற்றுக் குறைவாக இருந்தது.

வேதாசலம் நாற்காலியில் உட்கார்ந்தார். பங்கஜம், ஒரு சுற்றுச் சுற்றிப் பார்த்தாள். கடைக்காரர், உட்பக்கம் திரும்பி, "பிரகாஷ்.. சீக்கிரம் வா. பெரியவர் உட்கார்ந்திருக்கிறார் பாரு. கவனி," என்று உத்தரவிட்டார்.

பிரகாஷ், கண்களாலே அவர் கால் அளவைப் பார்த்துவிட்டு ஓர் அட்டைப் பெட்டியைக் கொண்டு வந்தான். பிரித்தான். அவர் கால்களுக்குப் பொருத்தம் பார்த்தான்.

வேதாசலத்திற்கு மிகவும் இறுக்கமாக இருந்தது. "அடுத்த சைஸ் கொண்டாப்பா."

அவர் உதறிய காலணிகளை அப்படியே சிவப்புக் கம்பளத்தில் போட்டுவிட்டு, உள்ளே சென்று, இன்னொரு அட்டைப் பெட்டியைக் கொண்டு வந்தான். "இந்த ஜோடி சரியா இருக்கு," என்று வேதாசலம்



"இந்த வீட்டுக்கார அலமேலு எங்கே?"

"ஆட்டுக்கார அலமேலு பார்க்கப் போயிருக்காங்க."

"வந்தால் சீட்டுக்கார சிங்காரம் வந்து போனான்னு சொல்லுங்க."

சொல்ல, பங்கஜம் பிரகாஷிடம் பில்லை வாங்கிக்கொண்டு கௌண்டருக்குப் போனாள்.

தெருவுக்கு வந்த வேதாசலம் அட்டைப் பெட்டியை மனைவியின் கையில் கொடுத்துவிட்டுச் சொன்னார்:

"பங்கஜம்...நீ சொல்ற மாதிரியே நம்ம மருமகப் பொண்ணு இருக்கிற தெரு வழியே ஒரு நடை போயிட்டு வந்துடலாம்..." அவர் முகத்தில் மலர்ச்சி.

"...அட!...என்னங்க?.. மனசு மாறிடுச்சா?..." சிரிப்புடன் கேட்டாள் பங்கஜம்.

"பிரகாஷ் என் காலைத் தொட்டு மன்னிப்புக் கேட்டுட்டான், கடையிலே நீ 'பில்'லுக்குப் பணம் கொடுக்கச்சே. இனிமேல் ஆக வேண்டிய காரியத்தை நான் பார்க்க வேண்டாமா?"

பங்கஜம் சிரித்துக்கொண்டாள். தொழில் முறையிலே யார் யார் காலையோ தொட்டுப் பேசுகிற மகனிடம் விலை விசாரிக்கிற சாக்கில் மன்னிப்புக் கேளடா மடையா என்று சொல்லிக் கொடுத்தது நல்லதாகப் போயிற்று!



மின்விசிறிகள். அழகானவை
உழைப்பதில்
NAC 1249



வெட்டு

"என்ன பண்ணுவியோ, எப்படிப் பண்ணுவியோ எனக்குத் தெரியாது. . நீ மானேஜர் பொறுப்பு ஏற்றுக்கொண்டதும் நம்ப கம்பெனியில் நடேசன் இருக்கக் கூடாது.. சென்னை ஆபீஸ் மைனஸ் தட் ஃபெலோ. .. அது தான் எனக்கு வேண்டியது. . டு சம்திங்...''

எங்கோ ஆயிரம் மைலுக்கு அப்பால் இருக்கும் குமாஸ்தா மீது டைரக்டர் ராவுக்கு ஏன் இவ்வளவு கோபம்? அவர் விளக்கினார்.

''. . .நாலு வருஷம் முன்பு மெட்ராஸ் போயிருந்தேன். . .அப்பொழுது ஆபீஸில் ஒருசின்னபார்ட்டி கொடுத்தார்கள். . .கடைசியில் நான் எழுந்து கம்பெனியின் எதிர்காலத் திட்டங்கள் குறித்துப் பேசினேன். பேசி உட்கார்ந்ததும், இந்த நடேசன், எனக்கு ஒரு குறிப்பு அனுப்பினான். . .அதில் என்ன எழுதியிருந்தது தெரியுமா. . .?''

நான் அவர் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

''அதில் 'உங்களுக்கு உடனடியாக ஒரு புத்தகம் தேவைப்படுகிறது. . . .பெயர்—'ஹௌ டு ஸ்பீக் பெட்டர் இங்கிலீஷ்'. . .[illegible]. பம்பாய். .' என்று இருந்தது. . .'' என்றார் ராவ்.

ஜி. நாராயணன்

என்ன அதிகப்பிரசிங்கித்தனம்! டைரக்டர் ராவ் பேசும் இங்கிலீஷ் கொஞ்சம் சுமார்தான். ஆனால் அதற்காக...அவர் கோபம் நியாயமானதுதான் என்று எனக்குத் தோன்ற ஆரம்பித்தது.

இது சென்னை: ? ?

பொறுப்பேற்றுக் கொண்டதும், பழைய மானேஜர் சட்டர்ஜியும் நானும் ஒவ்வொரு டேபிளாகப் போய்க் கை குலுக்கி, அரை நிமிடம் பேசிப் பேசி நகர்ந்து. . .

ஒவ்வொரு 'ஸீட்'டாக நின்று நிதானமாகப் பார்த்து வந்தேன். . . என்னைக் கண்டதும் பல்லைக் காட்டும் முகங்கள். . .எழுந்து நிற்கும் உருவங்கள். . .இவர்களுக்கு மத்தியில். . .

அழுக்கும் பொடிகறையும் ஏறிய வேட்டி. . .அழுத்தமான கலரில் கட்டம் போட்ட சட்டை. . .ஆர். கே. லட்சுமணன் கார்டூன்களில் ஒதுங்கி நின்று வேடிக்கை பார்க்கும் 'பொது ஜனம்' படம் இருக்குமே, அதன் பிரதி மாதிரி ஒரு தோற்றம். .. நான் கை குலுக்கினேன். நடேசன்... இவன்தான் நடேசனா?

சேல்ஸ் டிபார்ட்மெண்ட் 'ஹெட்' ரமேஷை வரச் சொன்னேன்.

". . .உன் பிரிவில் இருக்கும் நடேசன் எப்படி. . .?"

"...ஹி இஸ் எ குட் வொர்க்கர். . .எந்த வருஷம், என்ன ப்ராடக்டில் எவ்வளவு சேல்ஸ் என்றால் கம்ப்யூட்டர் வேண்டாம். . .இவரே போதும். . .ஒரு நிமிஷம் சும்மா உட்கார்த்தி வைக்க முடியாது. . .பிசாசு மாதிரி வேலை செய்யக் கூடியவர். ."

நாற்காலியில் சாய்ந்து கொள்கிறேன். யோசிக்கிறேன்.

"நடேசனுக்கு நாளையிலிருந்து எந்த வேலையும் கொடுக்கக் கூடாது. . . ஒரு துண்டு காகிதம்கூட அவன் டேபிளுக்கு போகக் கூடாது. . . கையில் இருக்கும் வேலை முடிந்தபின் அவன் சும்மா உட்கார்ந்திருக்க வேண்டும். . .அப்படி ஒரு வேலையும் இல்லாமல் அவனை உட்கார்த்தி வைப்பதில்தான் உன் சாமர்த்தியத்தை நான் பார்க்கப் போகிறேன். . ."

". . சார், வந்து. . ."

". . .என் பேச்சைக் கேட்கிறவர்களைத்தான் எனக்குப் பிடிக்கும். . .பத்து நாட்களுக்குப் பின் வந்து சொல்."


டைரியில் ரமேஷ் திரும்பவும் என்னை வந்து பார்க்க வேண்டிய தேதியைக் குறித்துவிட்டு, நான் வேறு வேலைகளில் இறங்கிவிட்டேன். . .

பத்து நாள் கழிந்தது:

". . .சார். . .அவர் ரொம்ப மனசு உடைஞ்சு போயிட்டார். . முதல் ரெண்டு நாள் பக்கத்து ஸீட் வேலையை வாங்கிச் செய்திருந்தார். . எனக்குத் தெரிஞ்சதும் நான் அதை தடுத்துவிட்டேன். நேற்று முழுக்க அவருக்கு வேலை ஒண்ணுமில்லே. . 'இந்த அநியாயத்தை எந்தக் கோவிலிலே போய் முறையிடுவேன்'னு முணுமுணுத்துக்கிட்டேயிருந்தார்."

என் மனத்தில் ஒரு திருப்தி. டைரக்டர் ராவின் வேண்டுகோள் நிறைவேறும் நாள் அதிக தூரத்தில் இல்லை.

ஒரு வாரம் சென்றது. சாயங்காலம் நான்கு மணி இருக்கும். முகம் கழுவிக் கொள்வதற்காக பாத்...





இவர்களில் ஒருவ...
தத் தேர்தலிலும்
போட்டது இல்லையாது.
அவர்? விடை: 19'ம்...

சென்றேன். திகைத்து நின்றுவிட்டேன். நடேசன், டாய்லெட்டைக் கழுவிக் கொண்டிருந்தான்! ''மன்னித்துக்கொள்ளுங்கள். எனக்கு ஏதாவது வேலை செய்துகொண்டே இருக்க வேண்டும்.''

நான் பேசாமல் திரும்பி விட்டேன். மனத்தை என்னவோ செய்தது.

ரமேஷை அழைத்து, நடேசனைக் கண்டிக்கச் சொன்னேன்.

மறுநாள் நடேசன் வந்தான்.

''. . .என்னை வேற டிபார்ட்மெண்டுக்கு மாற்றினால் தேவலாம். . . 'சேல்'ஸில் வேலை இல்லை. .'' என்றான்,

''கொஞ்ச நாள் இங்கேயே 'கண்டின்யு' பண்ணு பார்க்கலாம்... வேற எந்த டிபார்மெண்டில் போடலாம். . .? எங்கேயும் வேலை இல்லையே. இப்ப நம்ப கம்பெனியிலேயே வேலை இல்லை. . .அதற்காக வேற கம்பெனிக்குப் போட முடியுமா?. . .''

அவன் சட்டைப் பையிலிருந்து ஒரு பேப்பரை எடுத்து டேபிளின் மீது வைத்தான். . .எடுத்துப் பிரித்தேன். . .இரண்டே வரிகளில் ஒரு ராஜினமா. . .!

''. . .என் மனசுக்கு மட்டும்தான் நான் பயப்படறேன். . . வேலை செய்யாம சம்பளம் வாங்கறது கொள்ளை அடிக்கிறதுக்கு சமானம்னு அது குத்திட்டே இருக்கு. . .''

நடேசன் எழுந்து கதவை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

என்னுள்ளிருந்து ஏதோ ஒன்று திடீரென்று என்னை உந்திற்று.

''நடேசா.''

அவன் வந்தான். அவனது ராஜினமா கடிதத்தைக் கிழித்துப் போட்டேன். ''நீ போ. பழையபடி வேலை செய்.''

அவன் புரியாமல் விழித்தான். ''போ. ரமேஷை வரச்சொல்.''

இப்போது என் மனத்தில் ஒரு திருப்தி.

டைரக்டர் ராவ் எனக்கு வெடி வைக்கப் பார்ப்பார், வைக்கட்டும், பரவாயில்லை,

ஓட்டுப் போடாதவர்

□□ சென்னையில் இருக்கும்போது எப்படியாவது ஓட்டுப் போட்டுவிடுவார்கள் பானுமதியும் அவர் கணவரும்.

□□ நாகேஷ்: இதுவரை எந்த எலெக்ஷனிலும் ஓட்டு போடாமலிருந்ததில்லை.

□□ கேட்கலாமென்று நான்கைந்து முறை முயன்றும் ஜெயலலிதா அகப்படவில்லை.

□□ ஜனாதிபதியாக இருந்த கிரி ஓட்டுப் போடாமலா இருந்திருப்பார்?

□□ சோ, 1971'ம் தேர்தலில் ஓட்டுப் போட மிகவும் விரும்பினார். அவர் பெயர் பட்டியலில் இல்லை. அடுத்து வந்த 1977 தேர்தலில் பெயர் இருக்குமாறு பார்த்துக் கொண்டார்.

□□ இதுவரை ஓட்டே போடாதவர் வினோபா பவேதான்.

எக்ஸார்ஸிஸ்ட்

அமெரிக்கையான ஒரு தாயும் இரண்டுங்கெட்டான் மகளும். அந்தப் பெண் குழந்தை ரொம்ப அழகு. அந்தக் குழந்தைக்குச் சூனியம் வைத்து விட்டார்களாம். குழந்தை படுத்துக் கொண்டிருந்த கட்டில் எம்பி. எம்பிக் குதிக்கிறது. குழந்தையின் முகம் கோரமாகி ராட்சசத்தனமாய்க் கோணுகிறது. வாயிலிருந்து அசிங்கமாய்ப் பீச்சியடிக்கிறது. பரிதாபம்தான். ஆனால் இங்கே நம் ஊரில் நடக்கிற பில்லி சூனிய சமாசாரங்களை விட அப்படி ஒன்றும் இதில் பெரிதாக நடந்துவிடவில்லை. பூச்சாண்டி காட்டுவது போல் என்னமோ பயம் காட்டியிருக்கிறார்கள்.

—தணிகை

மதுரையில்



நெடுமாறன் கூறுகிறார்

தமிழ்நாட்டு கவர்னர் பிரபுதாஸ் பட்வாரி அவர்களை மத்திய அரசு திரும்ப அழைத்துக் கொள்ள வேண்டும் எனக் கம்யூனிஸ்ட்டுத் தலைவர் கல்யாணசுந்தரம் கூறியிருப்பதை நான் முழுமனதுடன் வரவேற்கிறேன்.


சட்ட மன்ற மேலவைக்கு நியமன உறுப்பினர்கள் நியமிக்கப் படும் விஷயத்தில் மாநில அரசின் சிபாரிசுகளை மீறி கவர்னர் செயல்பட்டார் என்பது உயர் வட்டாரங்களில் பேசப்பட்ட உண்மையாகும். இப்பொழுது மதுரைப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் நியமன விஷயத்திலும் அதே போல் நடந்து கொள்ள முற்பட்டிருக்கிறார்.

பல்கலைக் கழகங்கள் தன்னாட்சி தன்மைப்பு வாய்ந்த ஆடானமஸ் அமைப்புகளாகும்.

பல்கலைக் கழக சிண்டிகேட், செனட் ஆகியவை ஒவ்வொரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்கின்றன. மாநில அரசு தன்னுடைய பிரதிநிதியாக ஒருவரை நியமிக்கிறது.

இந்த மூன்று பேர் கொண்ட குழு கூடி, துணை வேந்தராக நியமிக்கப் படுபவர்களின் பெயர்களைப் பரிசீலித்து மூன்று பேர் கொண்ட ஒரு பட்டியலை கவர்னருக்கு மாநில அரசின் மூலமாக அனுப்பி வைக்கும்.

இந்த மூவரில் ஒருவரை கவர்னர் துணைவேந்தராக நியமிப்பார்.



எழுதும் சினிமா விமரிசனங்களையே
ந்து கொள்ள முடியாமல் எத்
யோ வாசகர்கள் தலை மயிரைப்
த்துக் கொள்கிறார்கள். இந்த லட்
ாத்தில் கவிதையிலே விமரிசனம்
ழுதியிருக்கிறீர்!

தாராபுரம் மல்லிகை மன்னன்

அரைப் பைத்தியம் ஒன்றைக்
மதத்தின் சினிமா விமரிசகராக
'ப்பாய்ண்ட்' செய்திருப்பதாக என்
பர்கள் கூறியபோது நான் அதை
பவில்லை. சங்கர் சலீம் சைமன்
மரிசனத்தைப் படித்த பிறகு என்
பர்கள் கூறியது உண்மை என்
தைப் புரிந்து கொண்டேன்.

திருச்சி-8 எஸ். பி. முருகப்பன்

படியா தாவுவது?

தேர்தல் முடிவுகள் கேட்டு
கள் விட்டத்திற்குத் தாவுவீர்கள்
பது எதிர்பார்த்ததுதான். ஆனல்
லகால் புரியாமல் ஆகாயத்திற்கே
ந்து இருக்கிறீர்கள்.

விசாகப்பட்டினம்-4 எஸ். ஆர். ஷங்கர்

'ஆஹா' 'ஓஹோ' என்று
டிப்பீர் என்று நினைத்திருந்தேன்...
ஞல் இவ்வளவு தன்னடக்கமாக
ருப்பீர்கள் என்று சத்தியமாய் நினைக்
வில்லை.

கூத்தைப்பார் கே. பி. எஸ். மணி

ஓயாது சேற்றை வாரி
றைக்கும் தாக்குதல்களைத்
த்துடன் சகித்து
நிலத் தேர்தல்

டைரக்டர் சீனிவாசனின் கடிதம்
படித்தேன். சினிமாத் துறையில் உள்ள
பெரும்பாலோருக்கு இந்த மாதிரி
மூர்க்கத்தனமான வியாதி இருக்கிறது.
விமரிசனத்தைத் தாங்கிக் கொள்ளாத
அப்பாவிகளால் இந்த நாடு என்ன
கதிக்கு ஆளாகப் போகிறதோ?

திருச்சி-1 என். ஆர். நடராஜன்

அந்தப் படத்திற்கு ஒன்
றரை வட்டமே அதிகம் என்று நாங்
கள் எண்ணிக் கொண்டிருக்கும் நேரத்
தில் இல்லாததைப் புகழ வேண்டும்
என்று எதிர்பார்க்கிறாரா அந்த டைரக்
டர்?

சென்னை-33 கே. ரேவதி

பிடித்த மருமகள்

'வேண்டாத மருமகள்'
அருமை. கண் சிகிச்சை முகாம்களில்
நடக்கும் வேடிக்கைகளை நன்கு சித்
தரித்துக் காட்டியுள்ளார் ஆசிரியர்.

மேலைச்சிவபுரி பழ. நாகப்பன்

'ஜோடிப் புறாக்கள்' கதை
யின் இடையில் 'நான் முதலில் நடந்த
ஒரு நிகழ்ச்சியை உங்களிடமிருந்து
மறைத்துவிட்டேன்' என்று ஆசிரியர்
கூறிய சஸ்பென்ஸைப் பார்த்துவிட்டு,
மேலும் கதையைப் படித்த எனக்கு
விறுவிறுப்பாகவும் கடைசியில் அதிர்ச்சி
யாகவும் இருந்தது.

கப்பியாம்புலியூர்
டி. சேஷாத்திரி

கவிதை வேறேயா?

டசபை தேர்தல்
ில் முழு முதல்
ற்றி யடைந்த
ாது இந்திராகாந்தி
வளவு உவகை
டைந்தாரோ எனக்
தெரியாது. என்
் எழுத்தில் வெளி
முடியாது. குழு
துடன் அவரது
ற்றியின் மகிழ்ச்சி
ப் பகிர்ந்து கொள்
ற்காக இக் கடிதம்
துகிறேன்.

டெல்லி திருமதி பாலா

இப்படி
உச்சரிக்கவும்

எகிப்து அதிபரின்
பெயரை உச்சரிப்பது
பற்றி ஓர் அன்பர் கேட்
டிருந்தார். அன்வர்
சாதாத் என்பதுதான்
சரியான உச்சரிப்பு.
'சாதாத்' என்பது
'சையத்' என்ற சொல்
லில் இருந்து பிறக்
கிறது.

திருச்சி-20 சையத்
முஹாரக் காசிம்

ரெய்ட்

எஸ். கே. மூர்த்தி

அப்பொழுதுதான் பேப்பர் காரன் கொண்டு வந்து போட்டிருந்த சினிமாப் பத்திரிகையில் மகள் ஜெயராதாவின் படம் ஏதாவது வந்திருக்கிறதா என்று அலங்காரத்தம்மாள் ஆவலோடு புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

மிடுக்காய் ஒரு இன்ஸ்பெக்டர், வாட்டசாட்டமாய் இரண்டு கான்ஸ்டபிள்கள்— இவர்கள் பூட்ஸ் ஒலிக்க, சுவாதீனமாக, உள்ளே வருவதைக் கண்ட அவள் வெல வெலத்துப் போனாள்.

ஜெயராதாவுக்கு ஒரு பொஸிஷன் ஏற்பட்டு இப்போதுதான் நாலு காசு வருகிறது. இன்னும் ஒரு கார் வாங்கியாகவில்லை. எப்படியோ இந்தச் சின்ன வீடுதான் கட்டி முடிக்க முடிந்தது. அதற்குள்.... சமையலறை அஞ்சறை பெட்டியில் ஜெயராதாவுக்குக் கூடத் தெரியாமல் பதுக்கி வைத்திருந்த கறுப்பு ஐயாயிரம் நெஞ்சை உறுத்திற்று.

"வீட்டைச் சுற்றிப் பார்க்கணுமே!" என்றார் இன்ஸ்பெக்டர்.

"முதல்லே கூலா ஏதாவது குடியுங்க..." என்று அவள் சொன்னதும் அவர் முகம் சுளித்தார். "ஒண்ணும் வேண்டாம்! நாங்க அவசரமாகப் போகணும்."

அந்த மறுப்பு அவள் வயிற்றில் புளியைக் கரைத்தது. 'இவர்கள் கஜூர் பேர்வழிகள்! மாட்டிக் கொண்டால் அவ்வளவுதான்.'



பத்து நிமிடத்திற்குள் பாத்ரூம் வரை பார்த்துவிட்டு அவர்கள் அலங்காரத்தம்மாள் முன்னே வந்தார்கள்.

அவள் நெஞ்சு தவித்தது. உடம்பெல்லாம் வியர்த்தது.

"அழகான வீடுதான். ஆனால்..."

ஆனால் மொஸைக் தரையில் பள்ளம் பள்ளமாய் தோண்டப் போகிறேன் என்று சொல்ல வருகிறானே?

"ஆனால் காற்றோட்டம் இல்லே. நாங்க வர்றோம்!" அவர்கள் வெளியே நடந்தார்கள். நொடியில் அந்த போலீஸ் ஜீப் கிளம்பிச் சென்றது.

அலங்காரதம்மாளுக்கு ஒன்றும் புரியவில்லை. ஒரு வேளை இவர்கள் போலீஸ் வேஷத்தில் களவாட வந்த பட்டப்பகல் திருடர்களா! பரக்கப் பரக்க அவள் உள்ளே சென்று ஒவ்வொரு அறையிலும் பார்வையிட்டாள். எல்லாம் பத்திரமாய் வைத்த இடத்தில் இருந்தன.

தன் பழைய மோட்டார் பைக்கில் பிலிம் புரோக்கர் அய்யாக்கண்ணு வந்து இறங்கினார்.

"என்ன அலங்காரம்? போர்டு போட்டா ஆள் பிடிக்கணும்? நான் இருக்கனே ஒரு வார்த்தை சொல்லக் கூடாது?" என்றார் அவர்.

திணறினாள் அவள்.

"போர்டா? என்ன சொல்றீங்க?"

"கேட்டிலே மாட்டியிருக்கே?"

அலங்காரம் தன் பருமனையும் மறந்து வாசலுக்கு ஓடினாள். வெளிச் சுவரில் ஒட்டியிருந்த அட்டை அவளைப் பார்த்துச் சிரித்தது.

"இந்த வீடு வாடகைக்கு விடப்படும். உள்ளே விசாரிக்கவும்!"

பளிச்சென்று அவளுக்கு விஷயம் புரிந்தது. எவனோ குறும்புக்காரன் பண்ணிய விஷமம்!

பரபரவென்று அந்த அட்டையைக் கிழித்தெறிந்தாள்,



ஐயா..லோகத்திலே யாராரோ சுய சரிதம் சுய சரிதம்ன்னு எழுதறா. எழுத முடியாதவா பிறத்தியாரை சிரமப்படுத்தி எழுதச் சொல்றா. என்னாலே யாரையும் கட்டாயப்படுத்த முடியாது..ஆகவே நானே எழுதறதா தீர்மானிச்சுட்டேன்.

எந்த சுயசரிதத்தைப் புரட்டினாலும் முதல்லே நாலு அஞ்சு அத்யாயம் பிறப்பு, வளர்ச்சி, பள்ளிப் படிப்புன்னு போட்டு அறுப்பா. என் சுயசரிதத்திலே அதையெல்லாம் எழுதி உங்களை அறுக்க விரும்பலே. 'ஒரு பானைசோத்துக்கு ஒரு சோறு பதம்' கிறாப்பலே நான் படிச்ச படிப்பையும், நான் வளர்ற வளர்ச்சியும் பாத்தூட்டு என் தோப்பனார் 'இவனைவிட இவன் அப்பனே தேவலை'ன்னு பின்னாலே எல்லோரும் சொல்லுவாங்கிற நிம்மதியில் என் பதினாறு வயசிலே கண்ணை மூடிட்டார்.

எனக்கு மூத்த சகோதரிகள் (தமக்கைகள்) மூன்று பேர். ராஜம், சரஸ்வதி, பவானின்னு. ஒரே ஒரு அம்மா. சிவகாமசுந்தரிம்பா. மத்தபடி அண்ணா, தம்பி, சொத்து பத்து விவகாரமெல்லாம் கிடையாது.

உத்யோகம் புருஷ லட்சணமில்லையா? எப்படியோ பெரியவா காலையும் கழுத்தையும் புடுச்சு எனக்கு மதுரையிலே ஒரு வேலையும் கிடைச்சுடுத்து. அம்மாவோடே மதுரையிலே வாசம்.

எனக்கு 25 வயசு நடந்து கொண்டிருக்கு. அம்மா என் கல்யாணத்தைப் பத்தி மூச்சு விடலே. "அம்மா, உனக்கும் அப்பாவுக்கும் கல்யாணமாறச்சே உங்களுக்கு என்ன வயசு?"ன்னு சூசகமா ஒரு கேள்வி கேக்கறேன். அப்பவும் ஏதேதோ சொல்றாளே தவிர என் கஷ்டம் தெரிந்த பதிலாயில்லே.

"அம்மா, உனக்கு வரவர உடம்பு தள்ளலை"ன்னு சொன்னா, "ஆமாண்டா அம்பி. நானே அடுத்தாத்து மாமியை அழச்சுண்டு நல்ல லேடி டாக்ட்ரிடம் போகலாம்னு இருக்கேன்"னு பதில் வரது. 'இனிமே இங்கே சொல்லி விளங்கவைக்க முடியாது'ன்னு தோணித்து. லிக் லீவைப் போட்டுட்டு நேரே மதராசுக்குப் போய் சரஸ்வதி அக்காவைக் கட்டிண்டு ஒன்னு கதறினேன்.

"நீ காதலிச்சுக் கிதலிச்சு பின்னாடி சோகமா வந்தப்புறம் உன் கல்யாணத்தைப் பத்தி யோசிக்கலாம்னு இருக்கோம்"னா கல்நெஞ்சுக்காரி.

அங்கிருந்து கிளம்பி நெய்வேலி போய் என் சின்ன தமக்கையிடம் சோழ ராஜா கதையிலே வர பசு மாடு மாதிரி முறையிட்டேன்.

"நீ ஊருக்குப் போடா அம்பி. நான் அம்மாவுக்குக் கடிதாசு போடறேன்"ன்னு கற்பூரத்தை அணைத்துச் சத்தியம் பண்ணினா.

நான் ஒரு சரித்திரம்

ஒரு வாரம் இடிச்ச புளி மாதிரி இருந்த அம்மா ஒரு நாள், ''ஏண்டா அம்பி! உனக்கு ஒரு கால் கட்டு போட்டா தேவலையே?''ன்னு சந்தேகத்தோடு கேட்டாள்.

''போம்மா. அதுக்கு இப்ப என்ன அவசரம்?''னேன். உள்ளுக்குள்ளே, 'நானும் அப்படித்தான் நெனைச்சேன். சும்மா ஒரு 'இது'க்குக் கேட்டேன்'னு சொல்லி விடுவாளோ என்று பயம்.

நல்லவேளை. ''எனக்கும் வயசாயிடுத்தோல்லியோ''ன்ன. ''என்னம்மா இது ஒரு வயசா...உங்கம்மா சாகும்போது 98 வயசு. உனக்கு இப்பத்தானே அறுபது நடக்கிறது,'' என்று மேலே பரீட்சை பார்த்தேன்.

அம்மாவுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்துடுத்து.

''ஏண்டா தடிமாடு! ஊர் ஊராகப் போய்ப் பிரசாரம் பண்ணிட்டு வந்துட்டு இங்கே வந்து ஊமை வஷமா போடறே...சரி, எக்கேடு கெட்டுப்போ ...உங்கப்பா கொடுத்து வச்சவா. என் திருமங்கல்யத்தைப் பறிச்சிண்டு போயிட்டா...நான் உசிரோட இருந்து உங்கிட்ட இந்த வார்த்தைகளையெல்லாம் கேட்கணும்னு..'' என்று அழ ஆரம்பிச்சா.

ஹைதராபாத்திலே இருக்கிற எங்க குடும்ப தலைவருக்கு, மூத்த அத்திம்பேருக்கு, கடிதாசு எழுதிப் போட்டாள். தந்தி அடிக்கலையேன்னு எனக்கு மனசுக்குள்ளே ரொம்ப ஆதங்கம்.

''அம்பிக்கு முன்னடி பூணூல் போடணும். பின்னடிதான் கல்யாணம்''ன்னு அவா தீர்மானமா எழுதிட்டா.

''அடாடா, நீ பண்ணின கூத்திலே உனக்குப் பூணூல் போடலைங்கறது கூட மறந்து போச்சு. காலா காலத்திலே பூணூலைப் போட்டுண்டு பிதுர்க்களை கரை ஏத்து''ன்னு அம்மா சொன்ன.

ஒரு நல்ல நாளில் பெரியவா அனுக்கிரகத்தோடு, என் தமக்கைகளும் அத்திம்பேர்களுமா சேர்ந்து எனக்குப் பூணூல் போட்டா. ஆசீர்வாதம் நடக்கறச்சே, (விஷயம் தெரியாமல்) எங்க சரஸ்வதி அக்கா ஆத்துக்காரர், ''பழங்காலத்திலே ஆசீர்வாதம் வாங்கும்போது பிரம்மசாரி பையன் கோவணத்தோடுதான் நிற்பான். அந்த வழக்கத்தை விட்டுக் கொடுக்கக்கூடாது'' என்று சபையைப் பார்த்து சொல்லிட்டு துரியோதனன் சபையிலே திரௌபதிக்குத் துகில் உரிச்சாப்பலே, என் வேஷ்டியைப் பற்றி உருவ, அடுத்த கணம் நான் அவதூத் (நிர்வாண) சாமிகள் போல நிற்க, மந்திரம் சொல்லிண்டிருந்த சாஸ்திரிகள் மந்திரத்தை அந்தரத்தில் நிறுத்திவிட்டு, ''போலீஸ்! போலீஸ்!'' என்று கத்த, ஆசீர்வாதம் பண்ண வந்த இஷ்ட மித்திர பந்து ஜனங்கள் நாலா பக்கமும் சிதறி ஓட, ஒரு பாடாக என் பூணூல் கல்யாணம் நடந்து முடிந்தது.

''திருவாரூரிலிருந்து ஒரு ஜாதகம் வந்திருக்கு. நல்ல யோகமான ஜாதகம். அவளைப் பண்ணிக்க அம்பிக்குக் கொடுத்து வச்சிருக்கணு''ணர் அத்திம்பேர்.

''சரி கடுதாசி எழுதிப் போடுங்க. ரெண்டு நாளிலே போய்ப் பெண்ணைப் பார்க்கலாம்''ன்ன ராஜம் அக்கா.

''பெண்ணை என்னடி பார்க்கிறது. பழங்காலத்திலே பெரியவாளா பார்த்து ...''ன்னு ஆரம்பிச்சார் அத்திம்பேர். பூணூல் கல்யாணத்திற்குப் பின்னடி எனக்குப் பழங்காலத்து விஷயங்கள் கசந்து போயிடுத்து.

ஜி. நடராஜன்

எச்சரிக்கை! எச்சரிக்கை! புஸ்!

கடந்த சில வாரங்களாகத் திருச்சி வானொலி நிலையத்தில் காலையிலும் மாலையிலும் ஓர் அறிவிப்பைச் செய்து வருகிறார்கள்.

''மீனவர்களுக்கான விசேஷ வானிலை எச்சரிக்கை'' என்று ஆரம்பிப்பார்கள். ஏதும் பலத்த காற்று அல்லது மழை என்று கூறுவார்களோ என்று எதிர்பார்த்தால் .... ''ஏதுமில்லை'' என்று முடித்து விடுகிறார்கள். தினம் தினம் இப்படியே! ஏதுமில்லை என்றால் எச்சரிக்கை எதற்காம்?

—வி. எஸ். அனந்தராமன்.

கடைசியில் ''புதன்கிழமை நீங்கள்ளாம் போய் பெண்ணைப் பார்த்துட்டு வாங்க. உங்க ரிப்போர்ட்டை பாத்துண்டு நானும் அம்பியும் போறோம்' னு பெரிய அத்திம்பேர்.

ரெண்டு நாள் கழிச்சு, பெண் பார்க்கப் போனவாள்ளாம் திரும்பி வந்து சேர்ந்தா. அவாள் வர்றவரை நான் கண்ட கனவுகள். வாத்தியார் படத்திலே வர்ற சொப்பன காட்சி போல. நானும் கமலாவும் விதம் விதமா கலர் கலரா டிரெஸ்ஸை மாட்டிண்டு...கமலா சாவேரி பாடி என்னைச் சந்தோஷப்படுத்தறா. . .பைரவி பாடி என்னைப் பைத்தியமாக்கி. நீலாம்பரி பாடி என்னை மடியிலே போட்டுண்டு தூங்க வைக்கிறா.

''பெண் எப்படியிருக்கா''ன்னு கேட்டார் சரசு ஆத்துக்காரர்.

''உடம்பிலேயே பல்தான் எடுப்பாக இருக்கு''ன்னா சரசு அக்கா.

''அந்த எடுப்பு மேலே போய், மூக்கிலே இருந்திருந்தா முகம் லட்சணமாக இருந்திருக்கும். சப்பை மூக்கு.'' இது பவானி அக்கா.

''சாதாரணமா அந்த பெண் முழிச்சிண்டு இருக்கா தூங்கறதான்னு தெரியலே. . . . .அப்படி ஒரு தீர்க்கமான கண்,'' இது வருங்கால மாமியார்.

''பொம்மனாட்டி முழிச்சிண்டிருக்காளா, தூங்கறாளான்னு கண்ணைப் பாத்துத்தான் தெரிஞ்சுக்கணுமா? வாயைப் பார்த்தாலே தெரியுமே. முழிச்சுண்டிருக்கிற பொம்மனாட்டி வாயை மூடிண்டிருக்கிறது எங்கயாவது இந்த லோகத்திலே உண்டா?'' இது எங்க நெய்வேலி அத்திம்பேர். சும்மா சொல்லக் கூடாது. மனுஷன் பெரிய மகான். வாயைத் திறக்கவே மாட்டார். அப்படித் தப்பித் தவறி திறந்தா வரதெல்லாம் 'பவுன்'தான்.

''சங்கீத ஞானமெல்லாம் எப்படி?''ன்னு வெட்கத்தை ஒதுக்கிட்டுக் கேட்டேன்.

''அதை ஏண்டா கேக்கிறே அம்பி. நாங்க போய் ஆகாரமெல்லாம் முடிஞ்சவுடன் 'பெண்ணைப் பாடச் சொல்லுங்கோ'ன்னோம், ஏதோ இடி ஓசை கேட்ட நாகம்பாளே அது போல பெண் பயந்து போய் வியர்த்து கொண்டு, 'சித்தே உள்ளே போய்விட்டு வரேன்'னு போய்ட்டா. பத்து நிமிஷம் கழிச்சு அம்மாகாரி வந்து தயங்கித் தயங்கி நின்னா. 'என்ன மாமி?'ன்னா ராஜம். 'ஒன்னுமில்லை. அவ ஆத்திலே இல்லை. பயிஷ்டை. பாட்டை, பின்னாடி நலங்கிலே வச்சுக்கலாம்'ன்னு சொல்லிட்டா. எனக்கு என்னமோ சகுனமே சரியாக படலை''ன்னா அம்மா.

''ஏலே, சங்கீதம் சங்கீதம்னு புலம்பறயே. சங்கீதத்திற்கும் உனக்கும் என்னடா சம்பந்தம்?'' என்றார் பெரிய அத்திம்பேர்.

''என்ன இப்படி சொல்லிட்டேள். ஒரு சமயம் எம். எஸ். ரேடியோவிலே சங்கராபரணத்தைப் பாடறதைக் கேட்டுட்டு நான் உருகிப் போய் விசும்பி விசும்பி அழுது கொண்டிருந்தேன். ஏன் பவானி அக்கா, உனக்கு ஞாபகம் இருக்கா''ன்னு அவளைத் துணைக்கு அழைச்சேன்.

''நல்லா கேட்டே! அதை எப்படிடா மறக்க முடியும்? அன்னிக்குத்தான் உன் எஸ். எஸ். எல். சி. ரிசல்ட் வந்து நீ மூணாம் தடவையா கோட் அடிச்சு அம்மா திட்ட அழுது கொண்டிருந்தே. அதுக்கு பாவம் எம். எஸ். என்னடா பண்ணுவா?'' என்றாள் அந்தப் பழிகாரி.

(47 'ம் பக்கம் பார்க்க)

'ம் பக்கத்
தொடர்ச்சி)

''சரி, திருவா
போய் நாமே
ண்ணைப் பார்த்து
ட்டு வரலாம்''
று பெரிய அத்
பேர்.

அடுத்த புதன்
மை அத்திம்பே
நானுமா
ரிலே புறப்பட்
டாம். அத்திம்பே
த் திருச்சி
கத்திலே மண்
ச்சநல்லூர் கிரா
. அங்கே
ாயிட்டு அப்ப
ய திருவாரூர்
ராவதாகப்
ான்.

என்ன கிரக
மோ தெரியலே.
துரையிலி
து புறப்பட்ட
மணி நேரத்
குள்ளே. என்
து கண் சிவந்து,
கிண்டு, விட்ட
சாரியார் படத்
ல வர ஒத்தைக்
ராட்சசனைப்
ல ஆயிடுத்து.

''அத்திப்
ர, இந்த கண்
டா பெண்ணை
ர்க்கிறது?''ன்
ன். எனக்கு
கை அழுகை
வந்தது.

''அசடு, அழா
கிராமத்துக்குப்
னவுடன் விளக்
ண்ணெயும்
ய்ப்பாலும்
து தடவச்
றேன். ரொம்ப நல்லது''ன்னு
ல்லி சமாதானப் படுத்தப் பார்த்தா.

''ஐஐ! அசிங்கம். எனக்கு
ல்லாம் வெட்கமா இருக்கு.



கல்யாண ரிசெப்ஷன் காட்சி. சென்னை ஆபட்ஸ்பரியில் சாரதிக்கும் ஷீலாவுக்கும் திருமண வரவேற்பு நடந்தபோது, மெல்லிசை நிகழ்ச்சியில், நண்பர்களுடன் சேர்ந்து மணமக்களும் ஆடினார்கள்.

—யோகானந்த்

என்னைக் கண் டாக்டரிடம் அழைச்
சிண்டு போங்க''ன்னேன்.

பக்கன் கஷ்டப்பட ...
வான் சும்மா இருப்பானு? ...

போயிண்டேயிருக்கு. எதிர் சாரியிலே ''டாக்டர் கண்ணுயிரம் இங்கே ''ன்னு அம்புக்குறியோடு போர்டு தெரியறது.

டாக்டர் விட்டிற்குள்ளே நுழைந்தோம். பெயரில்தான் 'ஆயிரம் கண்' டாக்டருக்கு. அப்பத்தான் முதல் முதலா வேத்து கண்ணை பார்க்கறாப் போலே, என் வயத்தை யெல்லாம் தட்டித் தடவிவிட்டுக் கண்ணுக்கு வந்தார்.

''அடாடா.. இவ்வளவு சீரியஸான பின்னுடி வந்தேளே. .. உங்க நல்ல காலம்.என்னிடம் வந்திருக்கேள்'' என்று சொல்லி இளித்துவிட்டு அமிர்தாஞ்சனம் போல எதையோ என் கண்ணில் தடவி விட்டு நான் குய்யோன்னு கதறதைப் பார்க்க பிரியப்படாதவர் போல அடுத்த அறைக்குள் போய்விட்டார்.

''ஒரு வாரத்துக்குக் கண்ணிலே வெளிச்சம், தூசு படக்கூடாது''ன்னு சொல்லிட்டுக் கறுப்புத் துணியால் வலது கண்ணை மறைத்துப் பாவாடை நாடாவால் மண்டையைச் சுற்றிக் கட்டிவிட்டார்.

மறுநாள் மத்தியானம் ஒரு பாடாக எங்க கார் திருவாரூர் அக்ரஹாரத்திலே நின்னது.

''வாங்கோ.. . ....வாங்கோ''ன்னு கையைக் கூப்பிண்டு கட்டுக்குடுமியோடு ஒரு பெரியவர் வரவேற்ருர். . .

அத்திம்பேர் முதல்லே காரிலிருந்து எறங்கி என்னையும் கைத்தாங்கலா எறக்கி, கையிலே வாக்கிங் ஸ்டிக்கைத் தந்தா.

கார் சத்தம் கேட்டு அக்ரஹாரமே மூர்மார்க்கெட்டிலே மோடி மஸ்தானைச் சுத்திண்டு நிற்காப்பலே எங்களை சுத்திண்டுத்து.

''இது என்னடி கண்ருவி'' என்று சித்தானைக் குட்டி போல இருந் ஒரு மடிசார்க்காரி பக்கத்திலே இருந் ஒருத்தியிடம் கேட்டா.

''கமலா தங்கத் தம்பி. ஏதே அந்தத் தியாகேசன் தான் நல்லபடிய வைக்கணும்''ளு ஒரு மாமி.

சொஜ்ஜி, பஜ்ஜி, காப்பியெ லாம் கிரமமா வந்தது. பின்னுடி என் இதயக்கனி, அன்னக்கிளி, கு குயில், 16 வயதினிலே கமலா வந்த

அவளைப் பாடச் சொல்ல கேட்கணும்னு எனக்கு ஆசை. அ குள்ளே பெண் பேஷா இருக்கான் அத்திம்பேரே ஒரு தீர்மானம் ப ணிண்டு என்னைக் கலக்காமே உச் குடுமியைப் பார்த்து, ''டெண்ணை புடிச்சுடுத்து. மேற்கொண்டு வேண்டியதை சட்டுபுட்டுன்னு கவ கோ''ன்னு சொல்லிட்டார்.

கமலா எனக்கு தர்மபத்தி யாளுள். கல்யாணமாகி இப்ப ரொ வருஷமாச்சு. கமலா இதுவரை நாள் கூடத் தன் சங்கீத வித்வத்தை காட்டவில்லை.

''அடியே, சாயரட் நேரம். மாட்டுப்பெண்ணு லட்சண பூஜை உள்ளே விளக்கேத்தி தியாகய்யர்வாள் கீர்த்தனை ரெ சுட்டு பாடு''ம்பா அம்மா.

''உழச்சு உழச்சு என் குர போயிடுத்து. எனக்கு தலைக்கு மே வேலையிருக்கு'' அப்படீன்னு செ லிட்டுக் கமலா உள்ளே போய்டுவா

''அட, பாடத்தான் வே டாம். ரசிக்கக் கூடவா முடியாமே பே டும்''ன்னு அம்மா சொல்ரு. என் ரேடியோவிலே கச்சேரின்னு கம வுக்குத் தூக்கம் எப்படியோ வந்துடு

அதி உத்தம ஜனாதிபதி



ரேடியோ சிலோனில் ஜனாதி ஜெயவர்த்தனேயைக் குறிப்பிடும்போது 'அதி உத்தம ஜனாதிபதி' என்று அ மொழியோடு குறிப்பிடுகிறதே அது எ ஹிஸ் எக்ஸலென்ஸி என்பதன் மொழி பெய 'அதி உத்தமன்' என்பதாக இருக்குமோ

—கதி. இலக்கு



ங்கா யமுனா காவேரி

அடே! சைத்தான் கீ ச்சா. .வா இந்தப் பக்கம். .

வந்தேன். .

நான் கேட்கிற கேள்விக் கல்லாம் பதில் சொல்லுவியா?

என் மேலேருக்கிற தாயத்து கிமையாலே சொல்லுவேன். ..

இப்போ நான் ஒருத்தரைத் தாட்டுகிட்டிருக்கேனே? ஆணா ? பாண்ணா? பேரு என்ன?

கங்கான்னு பேரு!

அடே சைத்தான்! ஆணா, பாண்ணா?

ஆம்பிளேதான். ஆனால் பேரு ான் பொம்பிளேயாட்டம் கீது.

இவரு அசல் பேரு சொல்ல டியுமா உன் மேலிருக்கிற தாயத்து கிமையாலே?

சொல்லுவேன். ஜெய்சங்கர்! பத்தியமா நடிக்கிறாரு! தலேயிலே நாப்பியைக் கவித்திக்கினா பைத்தியமா யிடுவாரா? பைத்தியத்தையே அவரு ார்த்திருக்க மாட்டாரு போலிருக்கு!

அடே! ஓட்டை வாயி! வா ந்தப் பக்கம்.

வந்தேன்.

இந்தப் பொண்ணு இந்த மாடி மஸ்தானேப் பார்த்து இன்னா சய்யறாள்னு சொல்ல முடியுமா ன்னாலே?

ஒன்னேப் பார்த்து கண்ணடிக் ற பட்டா சோக்கா! 'இங்கெதான் ற்கிறு லேலா'ன்னு சுண்டி இழுக்கிறா கண்ணாலே. :

அடே வாந்திபேதி வந்து உன்னே அள்ளிகிட்டு போக! அவள் பேரைச் சொல்லு. .செய்யற தொழி லேச் சொல்லு. .அவ என்னேப் பார்த்துக் கண்ணடிச்சதை மட்டும் சொல்றியே?

அதும் பேரு ஸ்ரீதேவி! செய் யறது திருட்டு வேலே. ஆனால் மாட் டிக்காம கடுக்கா குடுக்கிறதிலே கை தேர்ந்த குட்டி.

அந்த டமாஸெல்லாம் எப் படித் தெரியுது?

இந்த தாயத்து மகிமை யாலே தெரியுது. இன்னொண்ணு தெரியுது. சொல்றேன். : .ரோட்டோ ரமாக் கூட்டாளி வெண்ணிற ஆடை மூர்த்தியைக் குருட்டு வேஷத்திலே குந்த வச்சிட்டு ஜெய் மாடியிலேருந்து வைர நெக்லஸை லவட்டிக் கீழே டப் பாவை ஏந்திட்டிருக்கிற மூர்த்திக்குப் போடறதும் நடுவாந்தரத்திலே ஸ்ரீதேவி நடு மாடியிலே கைநீட்டி லபக்னு அபேஸ் பண்ணிகிட்டு பாம்பைப் புடிச்சி மூர்த்தியின் டப்பாவுக்குள்ளே போடற தும்... இதுவே கண்டி அண்ணன் தங்கச் சியா இல்லாமல் காதல் ஜோடியா இருந் திருந்தா இன்னும் ஷோக்காயிருந்திருக் கும். . .

அடே! ஊத்தை வாயா! இவுங்க புராணமா உன்னேக் கேட் டேன்? இந்தப் பொண்ணு உள்ளங் கைலே என்ன இருக்குது?

சின்ன வயசுலே திருடினதுக் காக காவேரியக்கா தம்பி கங்காவுக்கும்

தங்கச்சி யமுனாவுக்கும் கையிலே இழுத்த சூடு இருக்குது!

எதுக்குடா அது சைத்தானே இருக்குது?

அப்பத்தானே பெரியக்காவுக்குக் கடைசியிலே அடையாளம் தெரியும்? அதுதான் சூடு போட்டதைத் அடிக்கடி காட்டிகினே இருக்காங்க!

வா இந்தப் பக்கம்...

வந்தேன்.

அடே கஸ்மாலம்! யார்ராது இங்கே ஐயோ பாவம்னு அடக்க ஒடுக்கமாக் குந்திகிட்டிருக்கிற பொம்பிளே!

என் மேலிருக்கிற தாயத்து மகிமையாலே சொல்றேன். .கோபிச்சுக்க மாட்டியே?

சொல்லுடா என் முள்ளங்கிக் கீரை!

இவங்கதான் மனோரமா! மேலயிலே இப்படி உம்முனு உட்கார்ந்து வெச்சுட்டியே கையைக் காலே அசைக்காம? வேஸ்ட் பண்ணிட்டியே பாய்?


அடே! சைத்தான் கீ பச்சா! இந்த மஸ்தான் பாயைக்கூட வேஸ்ட்டுனு சொல்லிடுவே போலிருக்குதே!

ஆமாம், அசோக வாத்யாரே? சும்மா ஒட்டுத் தாடி வெச்சினு நீ மஸ்தான் வேசம் கட்டினதோடு சரி. .இன்னா சாதிச்சுப்புட்டே!

அடே! சைத்தான்! கடைசியா ஒரு நல்ல வார்த்தை சொல்லிட்டுப் போ. .. இங்கே இம்மாம் பெரிய கூட்டத்திலே எல்லார் கையிலும் நிறைய வெச்சிருக்காங்களே அது என்ன?

நோட்டீஸ். . கல்யாண நோட்டீஸ். .கவிதாவும் ஜெய்சங்கரும் மெட்ராஸ் பூரா சுற்று சுற்றுனு சுற்றி எங்கே பார்த்தாலும் இறைச்ச கோடிக்கணக்கான கல்யாண நோட்டீஸ்! எட்டு மாடிக் கட்டிடம் பத்து மாடிக் கட்டிடத்து மேலிருந்தெல்லாம் என்னமாக் கொட்டுது! இது மாதிரி ஆயுசிலே கொட்டினதில்லே பாயி!

உருப்படியான காரியம்



10

கோவை நகராட்சி குடும்ப நல மருத்துவ மனையில் உள்ள அறுவை சிகிச்சை ஆபரேஷன் தியேட்டர் பகுதிக்குத் தேவையான வோல்டாஸ் ஓபல் மினி—ரெ·.ப்ரிஜிரேட்டர் வாங்கி வழங்கும்பணி இறைவன் திருவருளால் இனிது நிறைவேறியது.

படத்தில்: கோவை நகராட்சி தனி அதிகாரி ஆதிமூலம், ஆணையாளர் வஜ்ரவேலு, ஆணையாளரின் நேர்முக உதவியாளர் சிவசாமி, டாக்டர் ஆர். சரஸ்வதி, பி. நிர்மலாராணி, சாந்தகுமாரி.

யோசனை கூறியவர் எஸ். வளர்மதி.

...ண்மைதானு ?



இந்துமதி கணபதி

❀ முன்னுள் தி.மு.க அமைச்
க. ராசாராம் தமிழ் சினிமாப்
ம் ஒன்றைத் தயாரிப்பதில் மும்முர
க ஈடுபட்டிருக்கிருராமே, உண்மை
னு?

❀ முத்துவால் முடியாததை
ர் மூலம் சாதிக்கலாம் என்ற நோக்
துடன் நடிகர் ஜெய்சங்கரை அர
ல் கட்சி ஒன்று மிக அணைத்துக்
ாண்டிருப்பதாகப் பேசிக் கொள்கிருர்
. உண்மைதானு?

❀ நடன நிகழ்ச்சிகளைத் தயா
பதில் ஒளி, உடை, இசை ஆகிய
வொரு அம்சத்திலும் கண்ணும்
த்துமாகக் கவனம் செலுத்தும்
மா சுப்பிரமணியம், இப்போது
ல் பருத்துவிட்ட மாதிரி தோற்றம்
ிக்கிருராமே? உண்மைதானு?

❀ இந்திரா காங்கிரஸ் பிரமுகர்
வரின் இல்லத்திற்கு அண்மையில்
சுப்பிரமணியம் சென்றிருந்தபோது,
முகரின் ஐந்து வயது மகன் சி. எஸ்.
பார்த்து, "நீங்க ரெட்டி காங்
ஸ், உங்களோடு நான் பேசமாட்
ன்," என்று கோபித்துக் கொண்டா
ம? உண்மையா?

❀ பம்பாய் ராஜேஸ்வரி கலா
ர் நடன நிகழ்ச்சிகளுக்கு வழக்க
ப் பின்னணி இசை பாடுகிறவர்
இந்துமதி கணபதியாமே (கமலஹாச
னின் வருங்கால மாமியார்)? உண்மை
தானு?

❀ ஒவ்வொரு வியாழக்கிழமை
பிற்பகலிலும் காமராஜர் வசித்துவந்த
திருமலைப்பிள்ளை இல்லத்திற்குச் சென்று
படத்திற்கு மாலை அணிவித்து அன்று
முழுவதும் சாப்பிடாமலேயே விரதம்
இருக்கிருராமே ராஜகோபால் (இந்
திரா காங்கிரஸ் அலுவலக மானேஜர்)?
உண்மைதானு?

❀ கலைஞர் கருணுநிதியின் அர
சியலுக்கு மறைமுகமாக உதவும் வகை
யில் கி. ஆ. பெ விசுவநாதம் விருது
நகர் வி.வி. ராமசாமி போன்றவர்கள்,
'தமிழர் பேரவை' என்கிற புதிய
அமைப்பை உருவாக்கி யிருக்கிருர்
களாமே? உண்மைதானு?

—பால்பூ

அப்புசாமி செய்த கிட்னிதான

பாக்கியம் ராமசா

படிக்கவேண்டிய முக்கிய குறிப்பு.

மனித உடம்பில் இரண்டு சிறுநீரகங்கள் உள்ளன. சிலர் ஒரே ஒரு சிறு நீரகத்துடன் பிறப்பதுண்டு. ஒரு சிறு நீரகத்தை ஆபரேஷன் செய்து எடுத்துவிட்டாலும் மற்றதைக் கொண்டு வாழமுடியும்.

சிறுநீரகங்கள் முதுகெலும் பின் பக்கத்துக்கு ஒன்ருக இடுப்பில் இருக்கும் பெரிய சுரப்பிகளாகும். இவை பெரிய மொச்சைக்கொட்டை போன்ற உருவமுடையன.

——கலைக்களஞ்சியம்.

“சீதே!” அப்புசாமி பல்லை நறநறத்தார். “நீ என்னை ரொம்பக் கேவலப்படுத்தறே! ஒவ்வொருத்தன் தாஜ்மகால் கட்டினுன். நான் கேவலம் ஒரு பாத்ரூம் கட்ட ஆசைப்படறேன்..... அதுக்கு வக்கில்லையா எனக்கு?”

“நத்திங் டூயிங்!” என்ற இரண்டு வார்த்தைகளோடு சீதாப்பாட்டியின் பதில் அமைந்திருந்தால் பரவாயில்லையே, அப்புசாமிக்கு இனிமேல் அவுட் ஹஸிலுள்ள பாத்ரூம்தான் என்று உத்தரவு போட்டு விட்டாள்.

“சீதே! என்னை அழுக்குப் பக்கெட்டைத் தூக்கிட்டு மலேரியாக் கொசுவுக்கு எண்ணெய் அடிக்கிறவன் மாதிரி அவுட் ஹவுஸ் பக்கம் காலையிலே காலையிலே போகச் சொல்றியா? முடியாது; பாத்ரூம் என் பிறப்புரிமை!” என்று வாதாடிப் பார்த்தார்.

சீதாப்பாட்டி வீட்டு பாத்ரூமுக்கு ஒரு பேட்லாக் அடித்து பூட்டு சாவி போட்டுச் சாவியைத் தன்னிடம் வைத்துக் கொண்டு விட்டாள்.

அப்புசாமி தன் விதியை நொந்து கொண்டார்.

ஒரு வாரத்துக்கு முன் நடந்த ஒரு சம்பவம். அப்புசாமிக்கு எவ்வப்பொழுதெல்லாம் பற்ருக் குறை ஏற்படுகிறதோ அவ்வப்பொழுதெல்லாம் அவர் பார்வை பாட்டியின் அலமாரியிலுள்ள ப நியூஸ் பேப்பர் பக்கம் பாயும். ப பேப்பர் கடைக்குப் போடுவத அவர் சில பல பத்திரிகைகளைத் டிய (திருடிய?) போது ஒரு மருத்துவ வெளியீடு அவர் கண் பட்டது. தமிழில் இருந்ததால் ணிப்பட்ட பாடாக அதைப் ப விட்டார். அதிலிருந்த ஒரு ஆரே ரகசிய'க் குறிப்பு அவருக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

அதிலிருந்த குறிப்பு:

தயத்துக்கு எவ்வளவுக்கெவ்வ சிரமம் கொடுக்காமல் இரு றேமோ அவ்வளவுக்கு அவ்வ அது நீடித்து வேலை செய்யும் சில பேர் பாத்ரூம் போகும் போ சிரமப் படுத்திக் கொள்வார்க அதுகூட இதயத்தைப் பாதிக் அப்படிப்பட்டவர்கள் பாத்ரூ பத்திரிகை படித்தால் அவ்வ சிரமம் இருக்காது.

மறுநாளிலிருந்து அப் பாத்ரூமிலேயே பேப்பரும் கையு தன் வாழ்நாளில் பெரும் யைக் கழிக்க ஆரம்பித்தார். ' கள் திறக்கப்படும்' என்ற மொழியை அவர் உதாசீனப்படு விதம் சீதாபாட்டிக்குப் பிரச்னையை உண்டாக்கியது. அவுட் செய்துவிட்டாள்.

அவுட் ஹவுஸ் பாத்ரூம்தான் அவருக்கு என்று சொல்லி விட்டாள். ரம்பி மொகஞ்சதாரோக்காரர்கள் ஆராய வேண்டிய ஓர் இடம் அவுட் ஹவுஸ் பாத்ரூம்.

வசதியான தனி பாத்ரூம் ட்டப் போராட்டம் நடத்தினார். தாப்பாட்டி மசியவில்லை.

படித்துக் கொண்டிருந்த செய்திப் பத்திரிகையை வெறுப்டன் விட்டெறிந்தார் அப்புசாமி. விஸ்வாமித்திரர் முன் மேனகா சாகசத்தாடு விழுந்த மாதிரி பேப்பர் ஒரு லுசாக ஒய்யாரமாக மடங்கி விழுந்து. அதிலிருந்த ஒரு விளம்பரம் அப்புசாமியின் கண்ணில் பட்டது.

ரூபாய் 2,000 உங்களுக்குத் தேவையா?

ஆமாம், ஆமாம்... தேவை தவை என்று அப்புசாமியின் நரம்புகள் அத்தனையும் சேர்ந்து ஒட்டு மொத்த ஓட்டுப் போட்டன.

அப்புசாமி மேற்காண்டு படித்தார். அவர் முகம் அவல் பாயத்தில் அவிசல் பிஸ்தாப் பருப்பைக் கடித்த மாதிரி என்னவோ மாதிரி ஆகிவிட்டது.

தேவை சிறுநீரகம்...


சீரகம் என்று முதலில் படித்துவிட்டு அப்புறம் உற்றுப் பார்த்த பின்தான் சிறுநீரகம் என்று அவருக்குத் தெரிந்தது. விளம்பரத்தின் சாராம்சம் இதுதான்:

புண்ணியகோடி என்ற 45 வயது மில் அதிபர் ஒருத்தர் சிறுநீரகக் கோளாறால் படுத்துக் கொண்டிருக்கிறார். அவருக்கு யாரேனும் மனமுவந்து ஒரு சிறுநீரகம் (கிட்னி) தானம் செய்ய முன் வருவார்களேயானால் நன்றியுடன் ரூ. 2,000 தருவதற்கு அவர் தயாராயிருக்கிறார்.

அப்புசாமி யோசித்தார்.

சிறுநீரகத் தானம்... ரூபாய் இரண்டாயிரம்...

அப்புசாமிக்கு பாத்ரூம் கட்டும் விஷயமாக உடனடியாக இரண்டாயிரம் வேண்டியிருந்தது. ஆகவே தன் நண்பர்களுடன் அவசரமாக ஒரு



கிட்னி மாநாடு கூட்டித் தன் சந்தேகங்களையெல்லாம் அலசினார். ரசகுண்டு தனக்குத் தெரிந்த ஒரு டாக்டரிடம் கேட்டு வந்து தாத்தாவுக்கு சில 'இன்ஸைட் இன்பர்மேஷன்' தந்தான்... அதன் விவரமாவது:

ஒரு சட்னிக்கு இரண்டு இட்லி எப்படி உண்டோ அதுமாதிரி ஒரு மனிதனுக்கு இரண்டு கிட்னி —அதாவது சிறுநீரகப் பை, இரண்டு —உண்டு.

எப்படி சட்னிக்கு ஒரு இட்லி இருந்தாலும் போதுமோ அது போல மனிதனுக்கு ஒரு கிட்னி இருந்தாலும் போதும்.

புண்ணியகோடி (வயது 45) கடகடவென்று அவரது மில்லைப் போலச் சிரித்தார். 'படுத்த படுக்கையிலிருந்தாலும் சிரிப்புக்கொண்ணும் குறைச்சலில்லை' என்று அப்புசாமி எண்ணிக்கொண்டார்.

''விளம்பரத்தைப் பார்த்துட்டு வந்தியா? ஓய்! பெரியவரே! நீங்களா எனக்கு கிட்னி தானம் பண்ண வந்தீங்க?''

அப்புசாமிக்கு ரோஷமாக வந்தது.

சில பேரிடம் பேசிப் புரிய

மேற்கு சி. ஐ. டி. நகரில் ஒரு வீட்டுக் கதவில் Beware of Dog என்பதுபோல—

'Beware of God' என எழுதியிருக்கிறது.

வீட்டுச் சொந்தக்காரர் ஜெயின் கல்லூரி முன்னாள் புரொபஸர் வி.கே. பஞ்சாபகேசன். அவரிடம் இதைப்பற்றி கேட்டபோது:

'எங்கள் வீட்டில் நாய் இல்லை என்றாலும் பிச்சைக்காரர் தொல்லைக்காக இப்படி ஒரு போர்டு எழுதி வைத்தேன். அசப்பில் பார்ப்பவர்கள் Beware of Dog போர்டுதானுக்கும் என்று நினைத்து உள்ளே வராமல் இருப்பார்கள். பார்த்துப் புரிந்துகொள்கிறவர்கள் கடவுளுக்கும் பயப்படுவார்கள்,'' என்றார் அவர்.

—ரத்தினம்

வைப்பதைக் காட்டிலும் காரியமா செய்து காட்டுவது மேல் என்று அ சாமிக்குத் தோன்றியது. அடுத்த டம், ''ஐஸலகும்மா!'' என்று வா விரலை வைத்து ஒரு விஸில் அடித்தவ சக்கர பல்டி ஒன்று போட்டார். அடு நிமிடம் இன்னொரு முதுகு அ அடித்துக் கொபுகடீலென்று புண்ணி கோடியின் அருகே படுக்கையில் பே அமர்ந்தார்.

அசந்து போய்விட்ட புண்ணியகோடி. மூக்கின்மேல் வி வைத்தவர். ''சார்! உங்களை தப்பா எடை போட்டு விட்டே நீங்க அசல் கிழவன்தானா... இல் கிழவர் வேஷம் போட்டுக்கிட்டு ஜெய்சங்கரா?'' என்றார்.

அப்புசாமிக்கு மூச்சு இ தது. இருந்தாலும் சாமர்த்திய மறைத்துக்கொண்டு, ''சும்மா ஸேம்ப்பிள் காமிச்சேன். அந்த னுக்குத் தாவிக் காட்டணுமா?'' றார்.

''வேண்டாங்க, அதிருஷ்டக்காரன். நான் அதிரு காரன். நீங்க நிச்சயம் ஏதோ ப கால சித்தர் மாதிரி இருக்குது... கிட்னி கிடைக்கறதுக்கு நான் பாக்கியம் பண்ணியிருக்கணு கொஞ்சம் ரேட்டை முன்னே பி போட்டுக்கிட்டீங்கன்னா ரெண்டு னியுமா வேணும்னாலும் எடுத் றேன்!'' என்றார் அந்த பிஸ் காரர்.

அப்புசாமி, ''ஒண்ணு தரமுடியும். சீக்கிரம் எடுத்துக் ரூபாயைக் கொடுங்க!'' என்று அ துடன் அவசரப்படுத்தினார்.

அப்புறம்தான் கிட்னி கிற சமாசாரம் கிரிணிப் பழ வி ரம் மாதிரியல்ல, ஆபரேஷன் ப வயிற்றுக்குள்ளிருந்து எடுக்க வே யது என்பதும் அதற்கு ஏகப் ஏற்பாடுகள் இருக்கிறது என் அவருக்கு ஞாபகம் வந்தது.

''நாளைக்கே நர்ஸிங் முக்கு வந்திடறேன்... நம்ப கியாரண்டியான சரக்கு நைனா,'' ஜம்பமாகச் சொல்லிக் கொண்டு யிறங்கி முன் ஹாலுக்கு வந்தார்.

அவர் பிடரியில் ய பளார் என்று ஓர் அறைவிட்ட

இருந்தது: 'பட்டப்பகலில்கூட இப்படி ஒரு எக்ஸார்ஸிஸ்ட் பேயா?' என்று திரும்பிப் பார்த்தார்.

இரண்டு முரட்டுப் பேர்வழிகள்.

''யோவ், பாம்புக்கு நீ பால் வார்க்கறே. தெரியுமா சேதி? நீ கிட்னி தானமா பண்ணவந்தே? உன்னைச் சட்னி பண்ணிடுவோம்...கபர்தார்!''

அந்த ஆள் அப்புசாமியின் வாயை அடைத்துக்கொண்டு அவர் கையை சேவை மிஷின் மாதிரி முறுக்கியதும் அப்புசாமிக்கு உயிரே போவது போலிருந்தது.

அப்புறம்தான் அவருக்கு மெதுவே விஷயம் தெரிந்தது.

தங்கள் எஜமானைப்பற்றி அந்த வீட்டு வேலைக்காரர்களுக்காகட்டும், மில் தொழிலாளிகளுக்காகட்டும் நல்ல அபிப்பிராயம் இல்லையாம். ரொம்பக் கொடுமைக்காரராம் அந்த ஆள். ஆகவே அவருக்கு கிட்னி யாரும் தானம் கொடுத்துவிடாதபடி அவர்கள் சாமர்த்தியமாகத் தடுத்துக் கொண்டிருக்கிறார்களாம். அவர்களையும் மீறி எஜமானர் பத்திரிகை விளம்பரம் தந்துவிட்டாராம்.

அப்புசாமியின் எதிரிலிருந்த ஆள், சுண்ணாம்புக் கரண்டானிலிருந்து சுண்ணாம்பு சுரண்ட ஒரு பெரிய பிச்சுவாவை எடுத்தான். அப்புசாமிக்கு நடுங்கியது.

''உனக்கு உசிர் வேணும்னா அவனுக்குத் தராதே. இல்லியானா... ஒரே சதக்!''

பாத்ரூம் கட்டும் ஆசையை அந்தக் கணம் விட்டுவிட்டு, புண்ணிய கோடியிடம் ஓடினார் அப்புசாமி.

''உன் கிட்னி எனக்குக் கட்டாயம் தேவை. பத்தாயிரம்னாலும் தர்ரேன். அந்தக் கழுதைங்க பேச்சைக் கேட்டுட்டு நீ தர மறுத்தியானால் இதோ பார்க்கியா?'' தலையணைக்கடியிலிருந்து ரிவால்வரை எடுத்தார் புண்ணியகோடி.

''ஐயோ! ஐயோ! இருதலைக் கொள்ளி எறும்புதான் கேள்விப்பட்டிருக்கிறேன்... இந்த கிட்னி எறும்பா இருக்கிறேனே!'' என்று அலறினார் அப்புசாமி. நண்பர்களைச் சரண் புகுந்தார்.

''அம்மாடி! அடேய் ரசம்... வெறும் ரசம் இல்லைடா...கொத்துமல்லி போட்ட பெங்களூர் தக்காளி ரசம்...'' என்று அவனைக் கட்டிக் கொண்டார் அப்புசாமி. அவனுடைய உச்சந் தலையில் சில பல முத்தங்களைக்கூட வழங்கின... ''எத்தனை ஜென்மம் நான் எடுத்... லும் நான் மூளையில்லாமலே பிற... வேண்டும். நீயே என் மூளையாக இ... கணும்டா...''

மலைபோல் அவருக்கு ... பிரசினையை ரசகுண்டு ஒரு யோ... சொல்லி நொடியில் தீர்த்துவிட்ட...

ரசகுண்டுவுக்கு ஒரு டா... ரைத் தெரியும். வால்போல பல ... டங்கள் கொண்டவர்.

ரசகுண்டு அங்கேயும் இ... யும் பிருய்ந்து ஒரு நூறு ரூபாய் ... டிக்கொண்டு அப்புசாமியை அவ... கூட்டிச் சென்று அவருக்கு ஒரு சர்... கேட் வாங்கித் தந்துவிட்டான்.

சர்டிபிகேட் என்றால் ... ஒப்புசப்பு சர்டிபிகேட் இல்லை. ... சாமியின் புகைப்படம் ஒ... ஆணித்தரமான சர்டிபிகேட். ... சர்டிபிகேட்டிலிருந்த வாசகமா...


'அப்புசாமி என்ற இந்த மனி... ருக்கு கிட்னி என்பதே கிடையா... இவர் ஓர் அதிசயப்பிறவி. கிட்... இல்லாமலே இவர் இயங்கி வ... கிறார்.'

அப்புசாமி மில் சொ... காரரிடம் அந்த சர்டிபிகேட்... கொண்டு போய்க் காட்டினார். ... ருக்கு 'சே!' என்று ஆகிவிட்... அவனுடைய எதிரிகளுக்கும் மி... மகிழ்ச்சி.

தந்திரம் பலித்தது. விடு... விடுதலை! விடுதலை!

அந்த மகிழ்ச்சி இர... நாளைக்குள் எதிர்பாராத ஒரு தி... முனையைத் தரும் என்று அவர் ... பார்க்கவில்லை.

இரண்டு நாட்கள் க... அவருக்குப் பிடித்தமான தமிழ்ப்... ரிகையைத் தூக்கிக்கொண்டு ரச... மூச்சிரைக்க ஓடி வந்தான். ''தா... தாத்தா! உங்க போட்டோ ... கையில் வந்திருக்குது!'' என்... அப்புசாமி ''டேய்! நான்... னும் செத்துப் போகலையேடா...



இரிப்பு ஒரு பிளேட்

மனைவி: ''சாம்பார் சாதத்தை அழுத்திப் பிசையாதீர்கள்.''

கணவன்: ''ஏன்?''

மனைவி: ''சாம்பாரைக் கலக்கு கிறபோது என் கண்ணாடி வளையல் உடைந்து பாத்திரத்தில் விழுந்திட்டுது.''

வீட்டுக்கு வந்த விருந்தாளி நாசுக்காகப் பேசுவதில் சமர்த்தர். டிபன் சாப்பிடுமுன் சொன்னார்: 'ஸ்ரீராமஜெயம் என்று சொல்லிவிட்டுத்தான் இட்லி சாப்பிடுவேன்...''

''ஹே கமலா! சாருக்கு 108 இட்லி தயார் செய்!'' என்றார் நயம் புரிந்துகொண்ட வீட்டுக்காரர்.

''பத்துமணிக்கு இண்டர்வியூ என்றால் பதினொரு மணிக்கு வரியே! ஏன் லேட்?''

''வரும் வழியில் எம்.ஜி. ஆரை பார்த்ததில் 30 நிமிஷம், பட்வாரியின் பேச்சைக் கேட்டதில் 20 நிமிஷம், பரமகுருவை சந்தித்ததில் 10 நிமிஷம் ஆகிவிட்டது.''

''அடேயப்பா! நிற்கிறீர்களே! உட்காருங்கள். இப்பவே வேலை போட்டுத்தறேன். ஹி...ஹி...அவங்களோடு தங்களுக்கு எப்படி பழக்கம்?'

''மீனவ நண்பன், ம.மீ.சு. பாண்டியன் போஸ்ட்டர்களை பார்த்து விட்டு, ரேடியோவில் கவர்னர் பேச்சையும் கேட்டுவிட்டு வரும் வழியில் மவுண்ட்ரோடில் பஸ் ஆக்ஸிடெண்ட்டைப் பார்வையிட்ட ஐ.ஜியையும் சந்தித்தபின் ஓடிவறேன்.''

''ஐ ஸே யூ கெட் அவுட்!''

—சுதர்ஸன்

குள்ளேயா வந்துட்டுது?'' என்றவாறு பத்திரிகையை வாங்கி பார்த்தார்,

அதிசய மனிதர்! மருத்துவர்கள் தேடுகிறார்கள்! இந்த அதிசய மனிதரை எங்கேயாவது பார்த்தால் உடனே பிடித்துக் கொண்டு வந்து ஜி ஹெச்சில் ஒப்படையுங்கள். அல்லது தகவல் கொடுங்கள். தகுந்த சன்மானம் உண்டு. —மருத்துவப் பிரிவு.

''என்னடா ரசம்! கிணறு வெட்டப் பூதம் கிளம்பின மாதிரி ஆயிட்டுது!'' என்றார். நான் என்ன திருவான்மியூர் பாங்க் கொள்ளைக்காரனா? இல்லாட்டி லைசென்ஸ் இல்லாத நாயா? என்னை எதுக்குப் பிடிச்சுத் தரணும்?''

''தாத்தா! உங்களை டாக்டர்களெல்லாம் பரிசோதனை பண்ண விரும்பறாங்க போலிருக்கு. உங்களுக்குக் கஷ்டமே இல்லை. ஜாலியா வேளா வேளைக்கு ராஜோபசாரம் பண்ணுவாங்க. கும்பல் கும்பலா கியூ வரிசையிலே வந்து ஜனங்க பார்ப்பாங்க. அமெரிக்கா கூட நீங்க போகலாம் தாத்தா... சான்ஸ் இருக்குது புறப்படுங்க ஜி ஹெச்சுக்கு.''

அப்புசாமிக்குப் பெருமையாயிருந்தது. ''டேய் நான் அமெரிக்கா போனா நீதாண்டா கூட வரணும்.''

அப்புசாமியின் வயிற்றைச் சப்பாத்தி மாவு பிசைவதுபோலக் கும்பலான டாக்டர்கள் உட்கார்ந்து மாறி மாறிப் பிசைந்தார்கள். அப்புசாமி, ''என்னங்க டாக்டர்! என் வயிறென்ன பஸ் ஹாரனா? பூம் பூம்னு சின்னப்பசங்க மாதிரி ஆளாளுக்கு அழுத்திப் பார்க்கறீங்க,'' என்று ஆட்சேபம் தெரிவித்தார்.

''உஸ்!'' என்றார் தலைமை டாக்டர், அவர் முகத்தில் லேசான ஒரு சந்தேகக்குறி. சில நோயாளிகள் ஆஸ்பத்திரியில் சுகமாக இருக்கலாம் என்பதற்கோ அல்லது தனக்கு ஒரு பப்ளிஸிடி வேண்டும் என்பதற்கோ இப்படி அதிசய புருடாக்களை அவ்வப்போது அவிழ்த்துவிடுவது உண்டு என்பது அவர் அனுபவம்.

''ஏய்யா!'' என்றார் அப்புசாமியைப் பார்த்து. ''நிஜமாகவே உமக்கு கிட்னி இல்லையா?''

அப்புசாமி சிரித்தார். அதே சமயம் 'ஆசாமி சந்தேகப்படறதைப்

...ர்க்கால் அமெரிக்கப் பயணம் ...ஹோசப் போலிருக்கிறதே' என்று தோன்றிவிட்டது.

நான் சொன்னால்பொய்யா யிருக்கும்! எங்க ரசம் நூறு ரூபாய் கண்டம் அந்த டாக்டர் சர்டிபிகேட் வாங்கிக் கொடுக்கிறக்கானே...அதுக்கு என்ன அர்த்தம்!'' என்றார்.

தலைமை டாக்டரின் மூளையில் ஒரு சிறு பொறி. 'நூறு ரூபாய் தண்டம் அழுது சர்டிபிகேட்!'

தலைமை டாக்டர் அந்த சர்டிபிகேட்டை இப்போதுதான் நன்றாகப் பார்த்தார்.

டாக்டர் பூர்ணநாத்...

தனது உதவியாளர்களிடம் ஏதோ கூறினார். அவர்கள் உடனே பழைய மருத்துவ கெஜட்டுகளையும் பதிவுப் புத்தகங்களையும் அரை மணி புரட்டினர்.

டாக்டர் பூர்ணநாத் என்ற பெயரில் எந்த டாக்டரும் பதிந்து கொண்டதற்கான சான்றே பதிவேட்டில் இல்லை.

''உங்க டாக்டர், டாக்டரே இல்லை போலிருக்கே!'' என்றார் தலைமை டாக்டர்.

அப்புசாமிக்கு அவரை எதிர்த்துப் பேசினால் ஏதாவது இன்னும் விபரீதம் வந்து தொலையப் போகிறது என்று தோன்றிவிட்டது. ஆகவே தடாலென்று கட்சி மாறிவிட்டார்.

''ஹஹ!'' என்று சிரித்தார். ''டாக்டர் சார்! நீங்க சொன்னது கரெக்ட். எனக்கு அவன் மேலே எப்பவும் சந்தேகம்தான். இவனெல்லாம் ஒரு டாக்டரா இருக்க முடியுமான்னு? நான் இதுக்குன்னே அவனுக்கு ஒரு டெஸ்ட் வைக்கத்தான் போனேன். நான் வரேன் டாக்டர்! என் வேலை முடிஞ்சது!'' தப்பினால் போதும் என்று நழுவி விட்டார்.

ஒரு வாரம் கழித்து...

சீதாப்பாட்டி ஆச்சரியத்துடனும், அதே சமயம் எரிச்சலுடனும், ''ரிஜிஸ்டர்ட் போஸ்ட் ஃபார் யாரிடமாவது கடன் வாங்கித் தொலைத்தீர்கள்? ரிஜிஸ்டர் நோட்டீஸ் வந்திருக்கு! ஐ ஆம் நாட் கோயிங் டு ஹெல்ப் யூ! தட் இஸ் டெஃபனிட்...'' என்றாள்.

அப்புசாமி ஒருகால் தோரசகுண்டுவே நூறு ரூபாய்க்கு நோட்டீஸ் விட்டிருப்பானோ என பயந்து நடுங்கி ஒருவழியாகக் கையெழுத்துப்போட்டு வாங்கிப் படித்தார்.

இரண்டாயிரம் ரூபாய்க்கு ஒரு செக். அவர் பெயருக்கு! அதுடன் சுருக்கமான நன்றி அறிவிப்புக் கடிதம்...

மருத்துவத் துறை பரிந்துரைத்த சிபாரிசுப்படி போலீஸ் இலாகாவிலிருந்து அவருக்கு அந்தத் தொகை வந்திருந்தது.

வாசகம் வருமாறு:

மருத்துவ இலாகாவுக்கு களங்கம் ஏற்படுத்துவதுபோல நீண்ட நாளாக போலி டாக்டராக இருந்த ஒரு குற்றவாளியைப் பிடிக்கத் தாங்கள் உதவியதற்கு எங்கள் நன்றியையும், தாங்கள் மேற்கொண்ட சிரமங்களுக்குச் சிறு அன்பளிப்பாக ரூ. 2000'ம் இத்துடன் அனுப்பியுள்ளோம்.

''சீய்தே!'' என்றார் அப்புசாமி அலட்சியமாக செக்கை பாட்டியின் கண் முன்னே இப்படியும் அப்படியும் ஆட்டியவாறு. ''இதை என்ன பண்ணப் போறேன் தெரியுமா? தனி ஒய்யாவுக்கென்ன பாத்ரூம்! ஏர் கண்டிஷன்ட் பண்ணிக்கப் போறேன் சீதே! என் பாத்ரூம்! என் பேர்... ஹஹ! எத்தனை மணி வேணும்னாலும் சமாதி மாதிரி உள்ளேயே இருப்பேன் புரியுதாடி?''

சீதாப்பாட்டி பல்லைக் கடித்துக்கொண்டாள்.


''டைப் அலமேலுவுக்கும், டெஸ்பாட்ச் சீனுவுக்கும் கொஞ்ச நாளாக மூன்றெழுத்து.''

''ஓ! கா...த...லா?''

''ஊகூம்! சண்டை.''

மின்சாரம் மிச்சப் படுத்துவது எப்படி...

டிஃப்ராஸ்ட் ஆகும்போது ஃப்ரிஜ்ஜுக்கு மின்சாரம் தேவையில்லை. எவ்வளவு அதிகமாக டிஃப்ராஸ்ட் ஆகிறதோ அவ்வளவு மின்சாரம் மிச்சமாகிறது. மற்ற டிஃப்ராஸ்டிங் ஸிஸ்டங்களில் ஞாபகமாக பட்டனை அமுக்கினால்தான் டிஃப்ராஸ்ட் ஆகும், மின்சாரம் மிச்சமாகும்.



வோல்டாஸ் ஓபல் 160 மட்டுமே வருடத்திற்கு $45\frac{1}{2}$ நாட்களின் மின்சாரத்தை மிச்சப்படுத்துகிறது.

வருடம் முழுதும் இரவு ஒன்றுக்கு 3 மணிநேரம் வோல்டாஸ் ஓபல் 160 டிஃப்ராஸ்ட் ஆகிறது. ஒரு வருடத்தில் இவ்வாறு $45\frac{1}{2}$ நாட்களின் மின்சாரம் மிச்சமாகிறது.

ரெஃப்ரிஜரேட்டரைத் தேர்ந்தெடுப்பது எப்படி...

ஒரு நல்ல ரெஃப்ரிஜரேட்டர் என்றால் அதனுள் திறம் வாய்ந்த கம்ப்ரெஸர் இணைந்த முற்றும் சமசீரான ரெஃப்ரிஜரேஷன் ஸிஸ்டம் இருக்க வேண்டும். டிஃப்ராஸ்டிங் செய்ய பட்டன் அமுக்குவது, ட்ரேயைக் காலி செய்வது போன்ற தொல்லைகள் இருக்கக் கூடாது.



வோல்டாஸ் ஓபல் 160— ரெஃப்ரிஜரேஷன் துறையில் 50 ஆண்டு அனுபவத்தைப் பின்பலமாகக் கொண்டது. வோல்டாஸ், தனது 50 ஆண்டு ரெஃப்ரிஜரேஷன் மற்றும் ஏர்கண்டிஷனிங் துறை அனுபவத்தின் விளைவாக திறம் வாய்ந்த கம்ப்ரெஸர் இணைந்த முற்றும் சமசீரான ரெஃப்ரிஜரேஷன் ஸிஸ்டத்தையும் அத்துடன் தானகவே டிஃப்ராஸ்ட் ஆகும் ஆட்டோ-D ஸிஸ்டத்தையும் அளிக்கிறது.

உன்னதமான டிஃப்ராஸ்டிங் ஸிஸ்டம் ஆட்டோ-D இணைந்த வோல்டாஸ் ஓபல் 160 மட்டுமே தானகவே டிஃப்ராஸ்ட் செய்து கொள்கிறது. தானகவே [illegible]



வழங்குவோர்
வோல்டாஸ்:
தரத்தை
தருவதையே
குறிக்கோளாகக்
கொண்டவர்கள்.

ஆட்டோ-D இணைந்த
வோல்டாஸ் ஓபல் 160
மட்டுமே தானகவே டிஃப்ராஸ்ட் ஆகிறது
கதவைக் கூடத் திறக்க அவசியமில்லை

CASV-259-186-TM

தலையை மூன்ருவது தடவை யாகச் சொறிந்தேன். . பெரிய ஹாண்ட்பாக்குடன் அம்மா எங் கேயோ கிளம்பிக் கொண்டிருந்தாள். லேடீஸ் கிளப்போ?

''என்ன பரத்?''

''வந்தும்மா. .'' இன்னும் நாலு வேகச் சொறியல். என் காதலி விஷயத்தைப் பக்குவமாக அம்மா விடம் சொல்ல வாயெடுத்தேன்.

''வந்துமில்லேபோயுமில்லே.'' அம்மா உடன் தெரிந்து கொண்டுவிட் டாள். நான் ஒருநாளும் அனுமதிக்க மாட்டேன். நம்ம குடும்பத்தில அந்த வழக்க மெல்லாம் கிடையாது. .''

என்னென்னவோ அம்மா விடம் வாதாட வாய் வந்தது. ஆனல் தைரியமில்லே. நேரமும் அம்மா தரவில்லே. விருட்டென்று கிளம்பி விட்டாள்.

ரிஸ்ட் வாட்ச்சைத் திருப் பினேன். ஐயோ மணியாச்சு! கடற் கரையில் லதா காத்திருப்பாள். புறப் பட்டேன்.

லதா காத்திருந்தாள்— முகத்தில் ஜிவு ஜிவு கோபம்.

''ஸாரி லதா. லேட்டா யிட்டுது. . .த்சு. . அப்படி கண்ணகி மாதிரி முறைக்காதே. இதற்குத்தான் இந்தச் சிலையருகே வேண்டாம் என் றேன். . .''

''அப்போ. . .ஔவையார் சிலேக்குப் பக்கத்தில் நிற்கட்டுமா? உங்களுக்காக நின்று நின்று நான் கிழவி யாகிப் போய்விடுவேன். .''

அவள் சிணுங்க ஆரம்பித் தாள்.

''லதா. . .நீ கிழவியாளு லும் அழகாகத்தான் இருப்பாய். . .'' என்று சொல்லி மெல்ல அவள் இடுப் பில் கிள்ளினேன். . .

''ப்சு. . .கையை எடுங்க. . . என்னை கிழவியாக்கிட்டீங்களாக்கும்.''

கால்களை மடக்கி, எழ முயற்சித்தா

''அடாடா. . .ஒரு பே சுக்குச் சொன்னேன்.'' உட்கார வை தேன்.

கால்களைச் சௌகரியமா நீட்டிக்கொண்டு அவள் மேல் இடித் மாதிரி உட்கார்ந்தேன்.

''ஹும். .சான்ஸ் கிடைச் பஸ்ஸிலே இடிக்கிற மாதிரி! நகருங்க. கழுத்திலே. தாலி இன்னும் ஏறலே

''ஓ! பாரதப் பண்பாடோ என்று முனகியபடி ஊன்றியிரு கைகளை எடுத்து மணலைத் தட்டினே அவள் மடியிலும் மணல் துகள் விழ, நான் அதைத் தட்ட. . .

''சரி. . .சரி. . .நகருங்க சரியான ஆள்தான். .''

வேறு வழியின்றிச் சற் நகர்ந்தேன்.

''பரத், ஸீரியஸா கே றேன். . மாக்ஸி கிடைச்சுதா?''

காரியக்காரி. நேராக ய த்துக்கு வந்து விட்டாள். கொஞ் அப்படிப்படியென்று இளசாய்ப் பே சிரித்து.. உம். . . அப்புறமாக இ விஷயத்துக்கு வரப்படாதோ?

''அதுலே பாரு லதா. அக்கம் பக்கத்திலே யார்கிட்டேயாவ கேட்டு வாங்கி வரலாம்னு பா தேன்.''

''என்னது! அக்கம் பக்க லேயா? அப்படியெல்லாம் கூடப் பழ முண்டா?''

''லதா. . .கோபத்திலே உ கன்னங்கள்...அந்த அழகான மூக்கு இப்படி. . .கண்களும். .கனவாக .

என் ஆள்காட்டி விர தட்டி விட்டாள் அவள். ''விஷ தைச் சொல்லுங்க. அபபுறமா வர் னைக்கு வரலாம். .''

பாமா கோபாலன்



''சரி....சரி....பரிமளாகிட்ட இருக்கிறதே ஒரே ட்ரெஸ்தான்.''

வாய்க்கு வந்ததைப் புளுகினேன்.

''. .ஏன் இப்படி அவசரமா முடிவுக்கு வர்றே?... மூணும் வீட்டிலே என் சித்தி பெண்—தங்கை முறை—ஒருத்தி இருக்கிருள். அவளிடம் இருக்கிறது ஒரு மாக்ஸி ட்ரெஸ்தான். அதையும் லாண்டிரியிலே போட்டிருக்கிருள்...''

''சும்மா ரீல் விடாதிங்க. . உங்கள் தங்கையாவது லாண்டிரிக்குப் போடமாட்டாளே. . .''

''க ரெ க் ட். அவளா போடல்லே. அவள் ஒரு நாள் லாண்டிரிப் பக்கம் போனபோது, லாண்டிரிப் பையனே சொன்னனம். 'அம்மா. உங்கள் மாக்ஸி ட்ரெஸ்ஸை வாஷுக்குப் போடுங்க. மினிமம் சார்ஜ்தான்'னு. அதனுல்தான் போட்டு விட்டாள். .!''

''வாஷுக்குப் போட்டால், மாக்ஸி ட்ரெஸ் மினிட்ரஸ் ஆயிடும்னு பயப்பட்டிருப்பாள். சரி. வுடுங்க. வேற யாருகிட்டேயாவது. . .''

''கண்ணே லதா. .நான் யார் கிட்டேயும் போறதில்லே, உன்னைத் தவிர. . .!''

''பரத், நீங்க என்ன செய்வீங்களோ எனக்குத் தெரியாது. இன்னும் நாற்பத்தியெட்டு மணி நேரம்தான் இருக்கு. . .''

''ஏன் லதா, நீயே ஒரு மாக்ஸி ட்ரெஸ் தைச்சுக்கப் படாதா? எதுக்கு இந்த இரவல் விவகாரம் ?''

''உங்களுக்கு இரவல் வாங்கித்தர வக்கில்லே. என்னைச் சொந்தமா ஏன் வாங்கிக்கொள்ளவில்லை என்கிறீர்களா? நீங்க என்ன பண்ணுவீங்களோ.. மாக்ஸி ஒண்ணு வேணும்.. நான் அந்த ஃபேன்ஸி டிரெஸ் போட்டியில் ஜெயிக்கிறதாக சவால் விட்டிருக்கிறேன்.''

''சரி. சரி. கோபித்துக் காதே..: கடைசியா ஒரு சான்ஸ். .அந்த ஸ்டெல்லா. .'' என்று இழுத்தேன்.

''யாரு அந்த ஸ்டெல்லா? காலேஜ் பெயரைச் சொன்னீங்களா என்ன?. .''

''ஸ்டெல்லா. எங்க ஆபீஸ் ஸ்டெனோ.''

''ரொம்ப அழகோ?. . .''

அவள் முகம் என் தோள் பட்டையில் இடித்தது. விஷயம் தெரிஞ்சுக்கணும்னு என்னமா குழைகிறாள்?

மெதுவாக அவள் உதடுகளை வருடியபடி (விரலால்), ''அப்படியொண்ணும் பிரமாதமா இல்லே. வித்யாசின்ஹா மாதிரி உடம்பு; ஹேமா மாதிரி முக மண்டலம். . வாணி ஜெயராம் குரல். . அவ்வளவு தான். .''

அவள் மென்மையான தோளினால் என் முதுகை இடித்தாள். ''என்னைப் ப்ரவோக் பண்ணவே இப்படி வர்ணனை. தெரியாதா? சொல்லாட்டி போங்களேன்.'' வெகு வேகமாகத் தலைப் பின்னலைப் பிரிப்பதும், பின்னுவதும். . .

அவள் கோபமாக இருக்கிறாளாம்!

நான் மெதுவாக அவளை நெருங்கி, தோள்களைப் பிடித்துத் திருப்பி, ''லதா டியர். . உன்னை விட அழகியொருத்தி உண்டோ?. . .'' என்றேன்.

அவள் கண்களில் பளபளப்பு; உதடுகளிலும் ஈரத்தின் நிழல். .

''ராஜா. .'' என்றபடி என் காலரைச் சரி செய்தாள். .

''ஸ்டெல்லாவிடம் எப்ப இந்த டெலிகேட் விஷயத்தை உடை கிறது?''

''உடை விஷயம்தானே போட்டு உடையுங்கள்.''

இப்பொழுது என் மடியி அவள்: காதுகளில் குலுங்கிய ஜிமிக் யில் என் விரல்களின் விஷமங்கள். .

'ஈவ்ஸ் வீக்லி'யில் வெ யாகியிருந்த ஃபாஷன் ஆடைகளையெ லாம் கண்களால் மேய்ந்து கொண் டிருந்தாள் ஸ்டெல்லா.

விஷயத்தை நாசூக்கா சொன்னேன்.

''. .வாட்!. .ஃபார் யுவ கேர்ள் ப்ரெண்ட்?'' கன்னங்கள் உப் கண்கள் விரியக் கேட்டாள். ''யூ ஆ லக்கி மேன். இன்னைக்கு அதை எடு துட்டு வந்திருக்கேன் டெய்லர்கிட்டே கொண்டு போக. . . சரி. . நீ எடு துட்டு போ. .. ப்ளீஸ் யுவர் கேர் பிரண்ட்!. . .''

''பரத்! லவ்லி ட்ரெ என் உடம்புக் பொருத்தமா இ குது இல்லையா?. .

பிங்க் நிற ம ஸியைத் தன் உட பின் மேல் வைத் கொண்டு கே டாள் லதா.

'' இதே த சொல்றேன்.. இ 'காலர் போ கிட்டே. . கொ சம். . . .ம்...இ இடுப்புப் பக்கம். என் விரல்கள் வேகத்தில் பர

சட்டென் கையைத் தட்டி டாள் லதா.

சிறுவர் பள்ளி ஆண்டு விழா ஒன்றில் இரு சிறுவர்கள், ''அச்சமில்லை! அச்சமில்லை,'' என்ற பாரதியார் பாடலைப் பாடிக் கொண்டிருந்தனர். விழாவுக்கு வந்திருந்த இரு கேரள பெண்களில் ஒருத்தி, ''அது என்ன பாட்டு?'' என்று கேட்க, மற்றவள் கூறியது: ''பாடிக் கொண்டிருக்கிற இரண்டு சிறுவர்களும் அனாதைக் குழந்தைகள். தங்களுக்கு அப்பா இல்லை என்பதைக் கவலையுடன், 'அச்சனில்லை! அச்சனில்லை,' என்று கூறிக் கடவுளிடம் முறையிடுகிறார்கள்!''

மீ. ப. நாராயணன்.



''உடம்பைத் தொட்டுத் தான் சொல்லனுமா?.. சண்ணுலே பார்த்து வாயாலே சொல்லப் படாதா?'' உதட்டைக் குவித்து, கண் கள் சிரிக்கக் கேட்டாள்.

''ஓ! டாப்கிளாஸ். ஆனல் கீழே தொளதொளன்னு அதிகமாய் புரளுது. தடுக்கி கிடுக்கி விழுந்து வைக்கப்போறே? ஜாக்கிரதை!''

''உங்க வாயிலே நல்லதே வராதா?''

''ஓ! வருமே! அது இருக் கட்டும்... ஃபான்ஸி டிரெஸ் போட் டிக்கு யாரெல்லாம் ஜட்ஜ்?''

''ஏன், முன்னடியே பார்த் துப் பேசி டைரி காலண்டர் கொடுத்து, ஸோப் போட்டு...ஹி..ஹின்னு பல் லிளிச்சு..லதாவை கவனிச்சுக்கோன்னு அசடு வழியறதுக்கா?..''

''ஸில்லி. லதா டியர். மேடையிலே உன்னை ஃபான்ஸி டிரெஸ்லே பார்த்தவுடனே...உனக் குத்தான் ஃபுல் மார்க் கிடைக்கும்! டிரஸ் இல்லாமலே ரொம்ப அழகா யிருப்பேன்னு...''

''நீங்களும் உங்க ஜோக் கும்!'' மூக்கைத் திருகினள்.

''மூக்கைத் திருகி விட்டு எழுந்துவிட்டால் எப்படி? நாளைக்கு நான் உங்க காலெஜுக்கு வந்து நீ ஃபன்ஸி டிரெஸ்ஸில் ஜெயிக்கப் போற துக்குக் கை தட்ட வேண்டாமா? கூர்க்கா வாசலில் என் முதுகைத் தட்டா மல் இருக்கணுமே?''

பெட்டி கைமாறியது. டிக் கெட் மாதிரி ஒன்றைக் கொடுத்தாள்.

''சும்மா ஒப்புக்கு..இதைக் காண்பித்தால்தான் கூர்க்கா உங்களை உள்ளே விடுவான். .சரியா ஐந்து மணி. காலேஜ் உள்ளே நுழைஞ்சதும், பட்டாம் பூச்சி மாதிரி நிறைய பேர் இருப்பாங்க. ஹீரோமாதிரி அப்படியே மயங்கி நிற்காமல் காம்பெடிஷன் நடக்கிற இடத்துக்கு வந்து சேருங்கள். ஓ. கே. ?''

மறுநாள். மாலே மணி ஐந்து.

டாக்ஸி பிடித்துக் கல்லூரியை அடைந்தேன். கூர்க்கா டிக்கட் சீட் டைப் பார்த்தான், உள்ளே தள்ளி விட்டான்.




ஒரு சிறிய பிரச்சனை! எச்.எம்.டி.
அவிஷ்ருஷ், எச்.எம்.டி. விஜய்
இவ்விரண்டில் திருமண அன்பளிப்புக்
கென எது சிறந்தது?
நாங்கள் இதில்
சொல்வதற்கு
என்ன இருக்கிறது?
ஒன்று ஆண்களுக்காகவே படைக்கப்பட்டது!
இனிய துணைவனுக்காக
திருமணம் போன்ற சுப காலங்களில் பரிசாக
அளிக்க உகந்தது —
எச்.எம்.டி கைக் கடியாரங்கள்
hmt
Sista's-HMT-W-148/78TAM

போட்டி தொடங்கிற்று. ்நறத்தியாக ஒருத்தி டால்டா டின் ளில் குச்சியால் சப்தம் செய்து கொண்டு, ''நா. .ங்க. .புதுசா கட்டி கிட்ட ஜோடிதானுங்க. .'' பாடிளுள். தொடர்ந்து ஒரு போலீஸ்காரர். குரங் காட்டி. பாம்பாட்டி. . .

என் கண்கள் ஆவலுடன் லதாவைத் தேடின. மாக்ஸி உடை யில் அவள் எப்போது வரப் போகிருள் என்று எல்லாப் பக்கமும் நோக்கிக் கொண்டிருந்தேன். அதோ சொர்ண தேவதை. பளிச் மின்னல். மேக்ஸியில் மெக்ஸிமம் அழகுடன் வெள்ளைக்காரி போன்ற மேக்கப்புடன் ஆகா! ஏற் னவே சிவந்த ரோஜா. . .அதில் மேக்கப் வேறு. ஃபேன்ஸி டிரெஸ் காம்படிஷன் என்ன, அகில உலக அழகுப் போட்டியாக இது இருந்தா லும் லதாவுக்கே வெற்றி நிச்சயம்.

சுறுசுறுப்பாக ஆனல் அந்த சுறுசுறுப்பில் ஒரு தென்றலின் மிருது தன்மையையும் கலந்து. . .லதா நடந்து வந்த விதம்.

நீதிபதியை நோக்கி அவள் அடிகள் எடுத்து வைத்தாள். ஆ! என் கண்ணே பட்டுவிட்டதா? பாழாய்ப் போன மாக்ஸி தடுக்கி விட்டுத் தடா லென்று கிழே விழுந்து விட்டாள். அவள் நடந்து வந்த மிடுக்கென்ன மாக்ஸி தடுக்கி விட்டுத் தடாலென்று விழுந்த கோரம் என்ன?

பார்வையாளர்கள் அத்தனை பேரும் கொல்லென்று சிரித்துவிட்டார் கள். சில ரெளடிப் பெண்கள் விசில் கூட அடித்தனர்.

அத்தனை பேருடைய சிரிப் பும் ஏனே அடுத்த விநாடி கப் சிப் பென்று அடங்கியது. காரணம் போட்டிக்குத் தலைமை வகித்த நீதிபதி சிரித்தவர்கள் எல்லாரையும் கடுகடு வென்று ஒரு பார்வை பார்த்தது தான். அந்தப் பார்வையைக் கண்டால் யார்தான் நடுங்கமாட்டார்கள்? கப் சிப்பென்று ஆகிவிட்டார்கள்.

போட்டியில் கலந்து கொண்ட பெண்ணைப் பார்த்துக் கேலி யாகச் சிரித்தது எவ்வளவு பண்பாடற்ற செயல் என்று வாயால் உரக்கச் சொல் லாமல் நீதிபதியின் பார்வை அத்தனை பேரையும் கண்டித்தது. அடுத்த கணம் பரிவும் அனுதாபமுமாக லதாவை நோக்கின. நான் கூட ஓடிச் சென்று லதாவைத் தூக்கியிருப்பேன். ஆனல் நீதிபதியே அந்தக் காரியத்தைச் செய்யும்போது நாம் ஒதுங்கிக் கொள் வதுதான் கெளரவம் என்று சும்மா இருந்துவிட்டேன்.

லதா அவமானமும் அடி பட்ட முழங்கை வலியுமாகக் கூச்சத் துடன் முகத்தை அழகிய கை கொஞ் சம் மறைக்க, தலை சற்றே குனிய அவள் நின்றது சோக சித்திரமாக இருந்தது.

''அடிகிடி பட்டுதாம்மா?'' நீதிபதி பரிவுடன் லதாவை விசாரித் தார். லதாவுக்கு வெட்கம் பிடுங்கியது. ''இல்லீங்க.''

''போட்டியில் கலந்து கொள்ளாவிட்டால் பரவாயில்லை. . . இப்படி உட்கார்ந்து கொள்ளம்மா. . . வேறொன்றுமில்லை. . .''

நீதிபதி இவ்வளவு பர்சனலாகப் பேசி



கிரேஸ் கெல்லி

நடிப்புக்கு முழுக்குப் போட்டுவிட்டு மொனேகோ மன்னரின் மனைவியாகிவிட்ட முன்னாள் ஹாலிவுட் நடிகை கிரேஸ்கெல்லி, குழந்தைகளுக்கான செய்தி படமொன்றில் நடிக்கிருர். அவர் கடைசியாக நடித்தது 1956 'ல்.



சாதத்

எகிப்து அதிபர் அன்வர் சாதத் எப்போதும் சிந்தனையில் ஆழ்ந்திருப்பவர்.

ஒரு வார்த்தை கூடப் பேசாமல் இரண்டு மணி நேரம் சும்மாவே அவர் உட்கார்ந்திருப்பதுண்டு என்று அவருடைய நெருங்கிய நண்பர் கூறுகிருர். சின்ன வயதில் வீட்டுக் கூரை மீது ஏறி மணிக்கணக்கில் நட்சத்திரங்களைப் பார்த்தபடி உட்கார்ந்திருப்பாராம் சாதத்.

யது லதாவையும் நெகிழ வைத்துவிட்டது போலும். . . கண்ணீர் மல்க நீதிபதியைப் பார்த்தாள்.

நீதிபதி தன் பக்கத்திலேயே லதாவை உட்கார வைத்துக் கொண்டார். போட்டி முடிந்ததும் தன் காரைக் கிளப்பிய நீதிபதியின் கண்ணில் நான் பட்டுவிட்டேன். எவ்வளவு நேரம்தான் நான் மறைய முடியும்?

''பரத்,'' என்ருள் என் அம்மா. ஆமாம். அவள்தான் நீதிபதி. அம்மா ஒரு சமூக சேவகியாதலால் இந்தமாதிரி கிராக்கிகள் அவ்வப்பொழுது வந்து மாட்டும். ''இங்கே எங்கேடா வந்து நிற்கிறே?''

''ஹி ஹி!'' என்று சமாளித்தேன். ''ஒன்றுமில்லே. சும்மாதான். நீ இங்கே வந்திருக்கிருயென்றுதான்.''

''சரி. .சரி,'' என்று அம்மா என் பேச்சைக் 'கட்' செய்தவள் பக்கத்திலிருந்த லதாவிடம் கனிவாக, ''ஏம்மா. . .நீ எங்கே போகணும். . நான் டிராப் செய்கிறேனே .'' என்ருள்.

''பரவாயில்லே மேடம். உங்களுக்கு எதற்கு சிரமம்''

''ஒரு சிரமமும் இல்லே. . ஏறிக்கொள். . .பரத்! நீ பின்ஸீட்டிலே உட்கார்ந்துக்கலாம். . .'' எனக்கும் கட்டளையிட்டாள்.

கள்ளத்தனமாக லதாவைப் பார்த்தவாறே பின் ஸீட்டில் உட்கார்ந்தேன்.

லதாவின் வீட்டருகிலே வண்டியை நிறுத்தி அம்மா இறக்கிவிட்டாள்.

''மேடம்! கட்டாயம் ஒ நிமிஷமாவது நீங்கள் உள்ளே வந் விட்டுப் போக வேண்டும்,'' என்று லதா கேட்டுக் கொண்டாள்.

அம்மா ஒரு மாதி சிரித்தாள். ''கட்டாயமா வர்ரேன் ஆனுல் இப்ப இல்லே. வருகிற டய தில் முறைப்படி வர்ரேன்மா. உன்னே எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு.''

வீட்டுக்கு வந்ததும் நா தொண்டையைக் கனைத்தேன். . ''வந் . .அம்மா. . .நான் உன்கிட்டே. .''

''பேசாதே . .எனக்கு உ விவகாரம் போக்கு, பேச்சு ஒண்ணுமே பிடிக்கலே. .காதல் கீதல்னு நீ கண் படி யாரையாணும் கூட்டிட்டு வந் நிற்கிறதை நான் ஒருநாளும் அல பண்ணமாட்டேன்.''

''இல்லேம்மா. .வந்து. .''

''பேசாதே. .உனக்கு ஏற் பொண்ணு ஒருத்தியை நான் பார் தாயிற்று. .''

''அம்மா. . . . வந்து. . . .'' இளிப்பை அடக்கிக் கொண்டு த யைச் சொறிந்தேன். .

''நான் சொன்னுல் சொன்ன தான். காரிலே வந்தாளே ஒரு பெ என்ன அடக்கம். .என்ன பதவிசு. அவள்தான் என் மருமகளாக வரணும்.''

''என்னம்மா நீ சர்வா காரியா இருக்கிறே?'' என்றே மனசுக்குள். . .!

பெங்களூர் மாறிவிட்டது!

முன்னெல்லாம் பெங்களூர் ஸிடி ஸ் ஷனில் ரயிலை விட்டிறங்கி வெளியே வந்ததும் வரி யாக ஆட்டோரிக்ஷா நிற்கும். பிரயாணிகள் வரி படி நிற்க டாண் டாணென்று ஆட்டோ கிடைக் அண்மையில் நான் போயிருந்த போது அதிர்ச்சி! டோக்கள் பிரயாணிகளின் பக்கம் வராமல் எங் நிற்கின்றன. ஆளுக்கு ஆள் பேரம், குழப்பம். உ செய்ய ஒரே ஒரு போலீஸ்காரர். அவரும் நம்மை போலவே குழம்பித் தவிக்கிருர்.

— 'அ

ரு ப்ரா பறந்து போகிறது



அவர் ஆபீசிலிருந்து வருகிற நேரம். [illegible] தயாரிக்கலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தேன்.

திடீரென்று காற்று பலமாய் வீசி ஜன்னல் கதவுகளைப் படார் படாரென்று அடித்தது. அப்போதுதான் வெளியே துணிகளை க்ளிப் போடாமல் காயப்போட்டிருந்தது ஞாபகம் வந்தது. பதறிக் கொண்டு வாசல் வராந்தாவுக்கு விரைந்தேன். அதற்குள் காரியம் மிஞ்சி விட்டது. கொடியில் கிடந்த சாரி, சோளி, ஷர்ட், பாண்ட் எல்லாமே தரையில் விழுந்து புரண்டு கொண்டிருந்தன. மீண்டும் ஒரு முறை வாஷ் [illegible] போட வேண்டுமே என்ற [illegible]ப்பில் நெடுமூச்செறிந்தேன்.

அப்போதுதான் அந்த அதிர்ச்சி நிகழ்ந்தது.

என் ப்ரா காற்றின் வேகத்தில் வெளியே பறந்து கொண்டிருந்தது. [illegible] என் கணவர் [illegible] தந்தது. [illegible] முழுமையாக உப[illegible] ப்ரா, ஒரு புறா மாதிரி [illegible]. விக்கித்துப் [illegible] மருண்டு [illegible] ப்ராவைப் பின் தொடர்ந்த[illegible].

எங்கே போவது என்று [illegible]யங்குகிற ஒரு ஜீவனுள்ள பற[illegible] மாதிரி ப்ரா ஒரு விநாடி அந்தரத்[illegible] [illegible]த்தளித்தது. பிறகு ஏதோ மந்திரக் [illegible]க்குக் கட்டுண்ட மாதிரி விர்ரென்று [illegible]ழக்குப் பக்கமாய்ச் சென்றது.

தனித்தனியாகச் சிறு காம்பவுண்ட் முகப்புடன் வரிசையாக ஏழு வீடுகள். அந்த ஏழாவது வீட்டு வாசலில், கொடியில் ஏராளமாய்த் துணிகள் காய்ந்து கொண்டிருந்தன. ஷர்ட், பாண்ட், லுங்கி, பனியன் என்று எல்லாமே ஆண் உடைகள். என் ப்ரா நேரே அந்தக் கொடியில் போய், களைத்துப் போன வெளவால் மாதிரி விழுந்தது.

எனக்குப் பகீரென்றது.

தெருவோடு வேகமாகச் சென்று அங்கே போய்ப் பார்த்தேன்.

இளைஞன் ஒருவன் அந்த வராந்தாவில் நாற்காலியில் கண்களை மூடியபடி சாய்ந்திருந்தான். அவனை உற்று நோக்கினேன். முப்பது வயது இருக்கும். சற்று முரட்டுத்தனம் இருந்தது அவன் தோற்றத்தில்.

நேரே போய் அவனிடம் விஷயத்தைச் சொல்லி என் ப்ராவை எடுத்து வர எனக்குத் தைரியம் இல்லை. அந்த வீட்டில் பெண்கள் யாராவது இருக்கிறார்களா என்றும் தெரியவில்லை.

வீடு திரும்பினேன். அவர் வந்ததும் விஷயத்தை விவரித்து ப்ராவை அங்கிருந்து வாங்கிவரச் சொல்ல வேண்டும்.

ஆனால் வரும்போதே அவர் பரபரப்பாக இருந்தார்.

''மானேஜருடன் எர்ணாகுளம்

எஸ். கே. மூர்த்தி

போகிறேன்..திரும்ப நான்கு நாள் பிடிக்கும்,'' என்றார்.

அந்தச் சமயத்தில் போய் ப்ராவைப் பற்றிச் சொல்ல நான் விரும்பவில்லை. பெட்டியை எடுத்துக் கொண்டு கிளம்பிப் போய்விட்டார்.

அந்த ப்ரா நெஞ்சை நெருடிற்று. வாசலுக்குச் சென்று பார்த்தேன். அவன் இன்னமும் நாற்காலியில்தான் உட்கார்ந்திருந்தான். கொடியில் அந்த ஆண் துணிகளுக் கிடையே கொஞ்சமும் வெட்கமின்றித் தொங்கிக் கொண்டிருந்தது என் ப்ரா...

நான் வானத்தைப் பார்த்தேன். திடீரென்று இன்னொரு பேய்க் காற்று வீசாதா? மறுபடி அந்த ப்ரா காற்றில் பறந்து பூமராங் மாதிரி திரும்பி வந்து சேராதா?

அப்படியெல்லாம் நிகழ்ந்து விடவில்லை. ஆனால் என் கண்ணெதிரே இன்னொரு காரியம் நிகழ்ந்தது. அவன் எழுந்தான். கொடியில் கிடந்த துணிகளையெல்லாம் சுருட்டி யெடுத்துக் கொண்டு வீட்டுக்குள் போனான். அவைகளோடு என் ப்ராவும் வீட்டுக்குள் போய்விட்டது!

சீ! எனக்கு அருவருப்பாயிருந்தது—அதை அவன் தொட்டு எடுத்ததும். அதற்குமேல் பொறுக்க மனமில்லை.

மெதுவாய் அந்த வீட்டை அடைந்தேன். காம்பவுண்டு கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தேன். முன் அறைக் கதவு மூடிக்கிடந்தது. சாவித் துவாரம் வழியே உள்ளே பார்த்தேன்.

அவன் ஒவ்வொரு துணியாக எடுத்து மடித்துக் கொண்டிருந்தான். கட்டில் மீது என் பிரா கிடந்தது. அதை—

எனக்கு உடம்பு கூசியது. அவன் என் ப்ராவைக் கையில் எடுத்துக் கொண்டு நீவிறு தடவித் தடவிப் பார்த்தான்.

கதவை உடைத்து கொண்டு உள்ளே பாய்ந்து விட வே டும் போலிருந்தது எனக்கு. கட்டு படுத்திக் கொண்டு என்ன செய்யலா என்று யோசித்தேன்.

''அம்மா!'' என்று உ புறம் நோக்கி அவன் குரல் கொ தான். நடுத்தர வயதிலிருந்த பெண்மணி வந்தாள். ''என்ன ராஜ கூப்பிட்டியாப்பா?'' என்றாள் வோடு.

''துணியெல்லாம் உள் கொண்டு வந்து வைச்சேம்மா. என்ன டிரெஸ்? . . .புதிசாயிருக்கு. இந்த மாதிரி ஒன்று நான் தொட தேயில்லையே. . .'' அவன் அ தடவிக் கொண்டே கேட்டான்.

அந்த அம்மாள் தன் க களைத் துடைத்துக் கொண்டா ''இது பெண்கள் போடுகிற துணிப் ராஜா. இது எப்படி வந்தது?'' எ கனிவோடு சொல்லி அதை வாங் கொள்ள முயன்றாள்.

''இரும்மா. . .இன்னொ தரம் தொட்டுப் பார்க்கிறேன். .'' அவன் அதைக் கையால் வரு பார்த்தான்.

திடீரென்று எனக்குச் தேகம் வந்தது. உற்றுக் கவ தேன். அவன் முகம். . .கை. . .வி களால் தடவுகிற பரிதாபம். . . ஆம்! அவனுக்குப் பார்வையில்லை.

''இது யாருடையதோ னவோ. . .நமக்கேன். . .'' அ அம்மா என் பிராவை வாங்கிக் கொ டாள்.

அவன் வாசலுக்கு வரு நான் வேகமாய்த் திரும்பி நடந் திரும்பிப் பார்த்தபோது அந்த மாள் அதை வாசலில் கொண்டு எறிவது தெரிந்தது.



ஒரு டாக்டரிடம் வந்த பல தரப்பட்ட நோயாளிகள் தங்கள் நோய்களைப் பற்றிக் கூறியது:

சமையற்காரர்—வயிற்றுவலி
காதல் கதை எழுதுபவர்—இதய நோய்
வக்கீல் —வாதம்
சங்கீத விமரிசகர்—காது வலி



—சுரேஜா ராமச்சந்திர

...ண்டா

ஜே. வி. நாதன்

தாமரைப் பாளைய தெற்கு
வளவுக் கவுண்டர்
..டு வாசல் திண்ணையில் பெரிய
..டம்.

''என்னுங்க மச்சான் இது
..யாயம்? நம்ம பெரிய வளவுலேயே
.. வைக்கறதுன்னு, என்ன ஒரு
..ஞ்சுத் திமிர் இருக்கணும்? இதைச்
..ாம்ம உட்டுடக் கூடாதுங்கோ...''

''அந்தக் காலத்து அண்
..வில்லே? எம்மாங் கனம், என்ன
..த்தமான் சாமான்! அதை ஒத்தன்
..மாணியமாத் தூக்கிற முடியாதுங்
..ள, ரெண்டு மூணு பேர் உடந்
..தயா இல்லாட்டி நடக்குற சமா
..ரமில்லீங்கோ, பாத்துக்குங்க.''

''இந்நேரம் திலுப்பூரோ,
..ங்கயமோ கொண்டு போய் அன்
..வை உருத் தெர்யாம நறுக்கிக்
..சாக்கி யிருப்பானுவளே...''

'தெற்கு வளவு எசமாங்க'
..று மரியாதையாக அளிக்கப்படும்
..கராசுக் கவுண்டர் உத்தரவுகள்
..ப்பித்த வண்ணமிருந்தார்.

''ஆருலேது, சங்கரனு?
.. போய் மாகாளி ஆத்தா கோயில்
பூசாரியை எசமாங்க வரச் சொன்
னுங்கனிட்டுக் கையோட இழுத்துக்
கிட்டு வா!... லேய் மாரீப்பா, நீ
ஊருக்குள்ற சேரிக்குள்ற வெல்லாம்
போய் ஒருத்தர் உடாம இங்க வந்து
கூடச் சொல்லு. வாளப்பட்டை மந்
திரம் போடப் போறுங்க. எல்லாரும்
வந்துரனும், எசமாங்க உத்தரவு—
தவறினு என்ன நடக்கும்னு தெரியா
துன்னு கண்டிச்சுச் சொல்லிப்புரு..''

அண்டா திருடு போன
தறிந்து துக்கம் விசாரிக்க வந்தவர்
களும், வேடிக்கை பார்க்க வந்தவர்
களுமாய் கூட்டம் அதிகரித்துக்கொண்
டிருந்தது.

மாகாளியாத்தா கோவில்
பூசாரி அங்கப்ப பண்டாரம் உடம்பு
முழுவதும் கட்டுக் கட்டாய் விபூதி
யும் நெற்றி நடுவில் பெரிய வட்டக்
குங்குமமுமாக வந்து தெண்டனிட்
டார்.

வாழை மரம் ஒன்று சாய்க்
கப்பட்டு கொண்டு வரப்பட்டது. பட்
டையை உரித்து ஒரு அடி நீளத்
துண்டு ஒன்றை நறுக்கிக் கொண்டார்.

''கோளி ஒண்ணு
வேணுங்களே...''

''லே பண்டாரம், கோளி
எதுக்குடா?''



திருநெல்வேலி மாவட்டத்தில் தவிர
பரவி வருகிறது இந்த அபாயம்...

மூளை ஜுரம் ஜாக்கிரதை...

இப்ராஹிம் ஷா

மூளைக் காய்ச்சல் என்ற பயங்கரமான நோய் திருநெல்வேலி மாவட்டத்தைத் தூக்கிக் கொண்டிருக்கிறது.

ஆறு வயது நிரம்பிய உயிரோவியம் போன்ற என் மகன் முகம்மது அன்வர் பாதுஷாவை இந்தப் பயங்கர ஜுரம் கொள்ளை கொண்டுவிட்டது. முதலில் காய்ச்சல் வந்தது. ஒரு லேடிடாக்டர் பார்வையிட்டு ஊசிபோட்டு மிக்ஸர் மருந்து தந்தார். ஆனல் மருந்தைக் குடிக்கக்கூட முடியாத முறையில் குழந்தையின் பற்கள் கிட்டிப் போயிருந்தன. சுய உணர்வுகளும் அற்றுப்போனது. இந்நிலையில் குடும்ப மருத்துவரின் ஆஸ்பத்திரியில் காண்பித்தேன். அப்போது அவர் சொன்ன தகவல் என்னைத் திடுக்கிட வைத்தது. "இதிலிருந்து மீள்வது கடினம்..."

எனினும் டாக்டர் முயன்றார். உடனடியாக முதுகிலிருந்து நீர் எடுத்துப் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டது. நரம்பு வழியாக குளுகோஸ் செல்ல வரிசை வரிசையாக ஊசிகள் போடப்பட்டன. மாலையில் மூக்கில் குழாயை நுழைத்துப் பால், ஹார்லிக்ஸ் முதலியவை செலுத்தினர். ஆனல் முன்னேற்றம் இல்லை.

இரண்டாம் நாள் பாதுஷா மூச்சு விடத் திணறவே பிராண வாயு (ஆக்ஸிஜன்) செலுத்தப் பட்டது.

மூன்றும் நாள் வேறு பெரிய மருத்துவ மனையில் சேர்த்தோம். பாதுஷாவின் உடல்நிலை தேறத் துவங்கியது. 103 டிகிரியாக இருந்த காய்ச்சல் குறைந்து 99 டிகிரியாக நிதானத்திற்கு வந்தது.

நாலாம்நாள் காலை 5 மணியளவில் பாதுஷா கண் விழித்து முறுவ குளிர்ந்

சூழ்நி நிடிக்க

மணிய டர் வ மிகவுப் எனத் பரிதவ னடிய

"என்னுங்கோ அப்பிடிக் கேட்டுட்டீங்க? வாளப் பட்டையை மந்திரிக்க கோளி அவசியம் வேணு முங்கோ சாமி..."

கோழி ஒன்று வந்தது.

பூசாரி, வாழைப் பட்டையின் நான்கு மூலைகளிலும் நடுவிலும் குங்குமம் வைத்தார். 'ஐக்கம்மா,' என்று கூப்பிட்டார்.

வாழைப் பட்டையைத் தூக்கிப் பிடித்தார்.

"ஒவ்வொருத்தரா வாங்கோ. இங்கு வாளப் பட்டையை ரெண்டு கையால தூக்கிப் பிடிக்கணும். நீள மாட்டா ரெண்டும் வளைஞ்சா அவன் தான் அண்டாவைத் திருடின பய..."


புங்கனூர் கவுண்டர் முன்னுக்கு வந்து. "லே பூசாரி, வாளப் பட்டையைக் பொடுரா. நா புடிக்கிறே" என்றார்.

தெற்கு வளவுக் கவு பதறிப் போனர். "என்னுங்க மச் இது? நாம அதெல்லாம் பு நா நம்மளை சந்தேகப்படறேன் அர்த்தமாவும்? ஒங்கட்டே இல்லாத டாவா, பண்ட பாத்திரமா! ஏனுங்க மச்சான் என்னோட அண்டாவை எடுக்கிறீங்க? லேய் பூ கவனமாச்சா..பட்டையை எச ஆரிட்டயும் கொடுத்துராத என்ன!"

"சரிங்கோ சாமி."

ஆண்களும் பெண்களு எல்லோரும் வாழைப் பட்டை தொட்டு விட்டுப் போனர்கள்.

சீலக்காம்பட்டி வளவு மாதாரி ஆரான் வ



குழந்தை அன்வர் பாதுஷாவுடன்

மூளைக்காய்ச்சல் என்றால் என்ன?

மூளையைச் சுற்றிப் பொதிந்திருக்கும் ஜவ்வு போன்ற இளம் தொலிப் பையில் நீர் கட்டிப் போகிறது என்கிறார்கள். உடனே மூளையின் செயல்திறன் அற்றுப் போய்விடுகிறதாம். உடலின் எந்த உறுப்பும் நரம்பும் வேலை செய்வதில்லையாம்.

இதன் சிகிச்சைக்கான ஊசி மருந்துகள் நாள் ஒன்றுக்கு சுமார் 150 ரூபாய் வீதம் ஒரு வாரத்திற்குத் தொடர்ந்து வாங்க வேண்டும். பிராணவாயு (ஆக்ஸிஜன்) செலுத்த மணி ஒன்றுக்கு 10 ரூபாய் வீதம் நாள் ஒன்றுக்கு 240 ரூபாய் செலுத்த வேண்டும். இது போக டாக்டர் ஃபீஸ் முதலான செலவு இருக்கிறது. எனக்கு 4 நாட்களில் 1800 ரூபாய் செலவாகியது.

ஏழை மக்களால் எப்படி இவ்வளவு செலவு செய்ய முடியும்?

இப்படியொரு பயங்கர நோய் பரவி வருவதை மாநில மத்திய அரசுகள் உடனடியாகக் கவனித்துத் தடுக்க வேண்டும். என் போன்ற பெற்றோரின் எண்ணிக்கை பெருகாமலிருக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்கட்டும்.

பார்த்து
ன் இதயம்

இன்பச்
நேரம்கூட

கல் 9–30
ிற்சி டாக்
டு நிலைமை
இருக்கிறது
னது மனம்
து. உட
ர வைத்திய

நிபுணர் ஒருவரைக் கூட்டிவரச் சென்றேன். ஆனால் அவரை நான் கூட்டி வருவதற்குள் எனது மகனின் உயிர் மூச்சு பிரிந்து விட்டது.

ஒரு பயங்கரத் தொற்று நோயாக இந்த மூளைக்காய்ச்சல் நெல்லை மாவட்ட மேற்குப் பகுதி கிராமங்களில் அதிகமாக உள்ளது.

சேர்மாதேவி ஆஸ்பத்திரியில் தினமும் இருவருக்குக் குறையாமல் இந்த நோயாளிகள் காலமாகிறார்களாம்.

பட்டையைத் தொடும்போது
ப்படித் தொடுவது என்று தெரியாமல்
தாட்டதில் அதன் இரு ஓரங்களும்
ற்கனவே வளைந்திருந்தது, மேலும்
ற்று வளைவாய்ப் பூசாரிக்குத் தோன்றி
து. அதே நேரம், தொட வேண்
ய நபர்கள் இன்னும் அதிகமில்லை
ன்ற ஞாபகமும் அவருக்கு ஏற்பட்
டது. அவருடைய வாழைப்பட்டை
ந்திரத்தில் யாரும் அகப்படவில்லை
ானால் அவர் மதிப்பு என்னவது—
காடுத்த கோழியைப் பிடுங்கி விடு
ார்களோ என்ற பயமும் வந்தது.
ரானைப் பார்த்து ஓர் அதட்டல்
பாட்டார்.

''லேய் மொத்தம் எத்தினி
பருடா கூட்டு?''

ஆரானுக்குக் கேள்வியே புரி
யவில்லை. ''சாமி. . .எதுக்குங்கோ?''

''எதுக்கா? புரிய வைக்கிறேன் இரு. ஒழுங்கா அண்டா இருக்கற இடத்தைச் சொல்லி, கொணந்து குடுத்துட்டா நீ பொளச்சே. இல்லே, எசமாங்க கோவத்து நீ ஆளாவத்தா வேணும்.''

''ஐயோ சாமி, இதென்ன அபாண்டம். நா அண்டாவைத் திருடனேங்கிறீங்களா? ஐயோ. . .அண்டா குண்டாவெல்லாம் எனுக்கு ஏனுங்க சாமி. கன்னியாத்தா கருப்பராயனுக்குப் பொதுவா, அந்த மாகாளியாத்தாவுக்குப் பொதுவா. . .''

வீட்டினுள் பாய்ந்து குதிரைச் சவுக்கை எடுத்துக் கொண்டு ஆக்ரோஷத்துடன் வெளியே வந்தார் தெற்கு வளவுக் கவுண்டர்.

''லேய் மாதாரி, மரியாதையாச் சொல்லிப்பிடு. . அடிச்சே கொன்னுப்பிடுவேன். அண்டா தொலேஞ்

சது பெரிசல்லடா. ஆனு. ஊர்ல பெரிய மனுஷன் நா. எம்மட வீட்டு லயே களவு பண்றதுன்ளு. . அடேய், எனக்கு நெஞ்சு கொதிக்குதடா. . . சொல்றியா இல்லியா—''

'பளீர்' என்று ஒரு சொடுக்கு. ஆராணின் மேலுடம்பில் சவுக்கு வரியாய் இறங்கிற்று. ''ஐயோ அம்மா!. . .'' என்று அவன் கதறினுன்.

''நா இல்ல சாமி, நா இல்ல சாமி!''

''ஜல். ஜல்'' என்று சதங்கைச் சத்தம். வில் வண்டி ஒன்று வந்து வீட்டு முன் நின்றது.

''கெளக்கே பொறந்தவன் வீட்டுக்கு போன கவுண்டச்சி வருது. . . .அண்டா போனது தெரிஞ்சா உசிரையே விட்டுடும்.'' ஒருவர் பக்கத்திலிருந்தவரிடம் கிசுகிசுத்தார்.

''என்னங்க... என்ன...''

கவுண்டரின் சம்சாரம் பதறிக் கொண்டு வண்டியிலிருந்து இறங்கி வந்தாள்.

சவுக்கைக் கீழே எறிந்து விட்டு கவுண்டர் தன் மனைவிக்கு விவரம் சொன்னுர்: ''லேய். பாத்தியால இந்த அக்குருமத்தை. நம்ம பெரிய வெந்நீ அண்ட இல்ல. அதை இவன் திருடிட்டுப் போயிடான்...''

''அடக் கூத்தே. ஊருக்குப் போறமே—நாலு பேர் சண்ணை உறுத் தற மாதிரி அது எதுக்கு வெளியிலே இருக்கணுமின்னு வண்டிக்கார சேசன் கிட்ட சொல்லி, தூக்கி மச்சுல போட்டுட்டுப் போயிருக்கனே— நா வர்றதுக்குள்ள இல்லாத கலாட்டா வெல்லாம் பண்ணிட்டீங்க போல...''

கூட்டத்துக்குப் பூவென்று ஆகிவிட்டது.

''என்னது, அண்டா காண மப் போகலையா?''

கவுண்டர் வீட்டுக்குள் வே மாகப் போனுர். ஏணியைத் தூக்கி போட்டு மச்சில் ஏறினுர். அந் வெந்நீர் அண்டா குத்துக்கல் போ உட்கார்ந்திருந்தது. ''ஆங்...இரு குது...'' என்று குரல் கொடுத்தா

கூட்டம் மெல்லக் கலைந்தது

உடம்பு பூரா ரத்த களரியாகிவிட்ட ஆராணை அவன் மனை தாங்கி நடத்திச் சென்றுள்.

யாரோ சிலர் பே கொண்டுசென்றுர்கள்: ''வாளப்பட்ை சோசியம் பொய் சொல்லுமா. இங் இல்லாட்டி, வேறே வளவிலே, வே ஏதாவது திருடிருப்பான். அதுனை தான் வாளப்பட்டை காட்டி கொடுத்துடுச்சி...''



நோபல் பரிசு பெற்ற அமெரிக்க நாவலா எர்னஸ்ட் ஹெமிங்வேயின் வாழ்க்கையில் விபத்து எத்தனை! அவருடைய மண்டையோடு ஒரு முறை முறி, குறைந்தது பன்னிரண்டு முறை அவருடைய மூளையில் பட்டது; மூன்று முறை கார் விபத்துக்குள்ளானார். இரு விமான விபத்துக்குள்ளானார். கண்பார்வையே சில பழுதடைந்தது. போரின்போது அவருடைய உடம்பி இடங்களில் சுடப்பட்டார்; தலையிலே 6 காயங்கள். 18 வயதில் இத்தாலியில் அவர் சுடப்பட்டபோது மருத்து அவர் உடலிலிருந்து 237 எ..குத் துண்டங்களை எடுத் இவ்வளவுக்கும் பின்னால் ஹெமிங்வே தன் 62 வயதில், 1961 ஜூலை 2 ஆம் நாள், தன்னைத் தானே து பால் சுட்டுக் கொண்டு தற்கொலை செய்துகொண்டார்

—'ஸெவன் மாடர்ன் அமெரிக்க நாவலி என்ற புத்தகத்திலிருந்து: கரு. முத்

ஹெமிங்வே —விபத்துக்களின் தோழர்...

நம்பிக்கைகளை வைத்துத்தான் உல
கம் நடக்கிறது என்பார்கள்.
ஞல் அது நல்ல அடிப்படை கொண்ட, சரி
ன நம்பிக்கையாக இருக்க வேண்டும். தப்பான
பிக்கையாக இருந்தால் நடப்பதே வேறுதான்.
தைத்தான் மூட நம்பிக்கை என்கிருர்கள்.
ந்த அடிப்படையில் காரியம் நடக்கிறபோது
த்தனை விபரீதங்கள்!

ராஜம்மா தன் தங்கை பாரதி மீது
வளவோ பிரியம் வைத்திருந்தாள். அக்கா
தங்கையும் கொண்டிருந்த பாசத்தைக்
ண்டு உலகமே மூக்கில் விரல் வைத்தது. அப்
யிருந்த ராஜம்மா ஒருநாள் தன் தங்கையை
ட்டை விட்டு வெளியே போகச் சொல்லி
ட்டாள். அதுவும் பாரதி மாபெரும் துயரத்
மூழ்கியிருந்த சமயத்தில்.

ஏன் அப்படி நடைபெற்றது என்
க அறிய வேண்டுமாஞல் மூன்று தலை
றைக்கு முன்ஞல் போக வேண்டும்...

குஞ்சிதபாதம் தஞ்சாவூர் ஜில்லாவில்
த நாளில் இருந்த பிரம்மாண்டமான மிராசு
ல் ஒருவர். வெள்ளைக்கார ஆட்சியில் திவான்
தூர் பட்டம் வாங்கிய முதல் அரைடஜன்
வழிகளில் அவரும் ஒருவர்.

சுற்று வட்டாரத்தில் கவர்னர்,
க்டர் யார் எங்கே வந்தாலும் போய்த்
னம் செய்து மரியாதைகள் சேர்ப்பித்து
டு வருவார். அவர்களுடைய உபயோகத்
ாகத் தன் சொந்தக் கோச்சு வண்டியைக்
டுப்பார். வண்டியின் பாலிஷில் முகம்
க்கலாமாம். மூலைக்கு மூலை வெள்ளிப்
டைகள் அடித்திருக்குமாம்.

பொங்கல் சமயத்தில் சென்னையிலி
கவர்னர் துரை தஞ்சாவூருக்கு வந்தி
ார். திருவையாற்றிலிருந்து குஞ்சிதபாதம்
ரைப் பார்க்கப் போஞர். தனது கோச்சு
டி சகிதமாகத்தான். வண்டியையும் குதிரை
யும் பார்த்து மனம் மயங்கி விட்டார் துரை.
ாவூரில் தங்கியிருந்த மூன்று நாளும் அந்த
டியிலேயேதான் காது பவனிகளை வைத்துக்
ண்டார். பிறகு திருச்சிராப்பள்ளிக்குப் புறப்
போய்விட்டார்.

குஞ்சிதபாதம் தன் ஊருக்குத் திரும்
கொண்டிருந்தார். பெரிய வீதியில் ஒரு பிள்
ர் கோவில். வெள்ளிக் கிழமையாதலால்
யில் நல்ல கூட்டம். சூறைத் தேங்காய்கள்

ஆதிசேஷன்

உடைத்துக் கொண்டிருந்தார்கள். கோச்சு வண்டி வந்து கொண்டிருப்பது தெரியாமல் ஓர் ஆள் ஓங்கி உடைத்தான். பெரிய சில்லொன்று தெறித்து கோச்சு வண்டிக் குதிரையின் கண்ணிலே போய் அடித்தது. அது ஒரு திமிறல் திமிறி, வண்டியை இழுத்துக்கொண்டு கூட்டத்தின் மேல் பாய்ந்தது. ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் கிழவர்களும் மூலைக்கொருவராகச் சிதற, ஒரு இருபத்தைந்து வயது வாலிபன் கோச்சு வண்டியின் கனத்த சக்கரத்தின் அடியில் சிக்கிவிட்டான். குதிரையின் குளம்புகள் அவன் மார்பைச் சிதைக்க, சக்கரம் அவன் கழுத்தை முறித்துவிட்டது. விபத்து நடந்த இடத்திலேயே, விபத்து நடந்த இரண்டாவது நிமிடமே அவன் இறந்துவிட்டான்.



குஞ்சிதபாதம் இயற்கையாக இரக்க மனம் உள்ளவர் தான். ஆனால் கூட்டம் மொத்தமும் அவரை நோக்கிக் கோபத்துடன் பாயவே அவருக்குக் கோபம் வந்துவிட்டது. "இப்படி நடு வீதியிலே கூட்டம் போட்டீங்கண்ணு என்னடா அர்த்தம்? கோச்சு வருவதைப் பார்த்ததும் விலகவேணும்? நகருங்கடா!" என்று சீறியவர் அத்தோடு நிற்காமல், உருத்தெரியாமல் கிடந்த அந்த இளைஞனைத் தன் வெல்வெட் செருப் பணிந்த காலினால் கெந்தி அந்தண்டை தள்ளிவிட்டு, "ஓட்டுடா வண்டியை!" என்று உத்தரவுமிட்டார்.

வீதியின் மூலைக்குப் போய் விழுந்த உடம்பைப் பாய்ந்து எடுத்து மடியில் போட்டுக் கொண்டாள் ஒரு பெண். பக்கத்திலேயே மூன்று நாலு வயதில் குழந்தை.

வண்டி புறப்பட்டு விட்டதென்றாலும் அவள் இட்ட சாபம் குஞ்சிதபாதத்துக்குத் தெள்ளத் தெளிவாய் காதில் விழுந்தது. "பாவி! நீ நல்லாவா இருக்கப் போகிறே! நான் துடிக்கிற மாதிரியே உன் வம்சத்திலும் பரம்பரை பரம்பரையாய் இதே போல ஒரு பிள்ளை சாகிறதா இல்லையா பார்!" என்று அவள் கத்தினாள்.

சொரேல் என்றது குஞ்சிதபாதத்துக்கு. அவருக்கு ஒரே ஒரு மகன்,

சீனிவாசலிங்கம். எட்டு வயது ந
கொண்டிருந்தது. தாயில்லாத பி
அவனுக்கு ஏதாவது நேர்ந்துவி
என்று அஞ்சியவர், வெகு காலம்
அவனைத் தன் மாளிகையை
வெளியே அனுப்பாமல் கட்டும்
லுமாகக் கண்ணும் கருத்து
பாதுகாத்து வந்தார். சிறுகச்
அந்தப் பெண்ணின் சாபம் அவர் உ
திலிருந்து மறையலாயிற்று.
எப்போதாவது அவனுக்குத் த
காய்ச்சல் என்று படுத்தானானல்
றிப் போவார். கலெக்டருக்கு
தியம் பார்க்கிற வெள்ளைக்கார
டரை வரவழைத்து மருந்துகள்
கித் தருகிற அளவுக்குத் து
போவார்.

சீனிவாசலிங்கத்துக்கு
வயதாயிற்று. அவனுக்குப் பா
மிட்டாதாரின் மகளைக் கல்
செய்து வைத்தார். இனிமேல்
பெண்ணின் தாலி பாக்கியப்
பிள்ளையைக் காப்பாற்றும் என்
மற்று இருக்கலானார்.

சீனிவாசலிங்கத்
குழந்தை பிறந்து நாலு வயது
கொண்டிருந்த சமயம்.
வாடை கிராமத்திலிருந்த நி



ுவடையை மேற்பார்வை செய்து
-டு இரட்டை மாட்டு வில் வண்டி
ஜல்ஜல்லென்று திரும்பிக் கொண்
ந்தான் சீனிவாசலிங்கம். ஏரிக்கரை
க் தாண்டிக் கொண்டிருந்தபோது
மரத்தில் விளையாடிக் கொண்டிருந்த
ண்டு குரங்குகள் குபீரென்று தாவி
ாடி மாட்டின் கொம்பு மீது
த்தன. முதுகின் மீது ஓடி மறுபுறம்
வதற்குள் மாடுகள் இரண்டும்
ண்டு, வண்டி குடை சாய்ந்
. சாய்ந்த இடம் ஏரிக்கு மிகச்
ம். சீனிவாசலிங்கம் ஏரிக்குள்
ந்தான். அவன் எத்தனையோ வித்தை
கற்றிருந்தவனானாலும் நீச்சல் மட்
தெரிந்துவைத்திருக்கவில்லை. வண்
காரன் ஏரிக்குள் குதித்து அவனைத்
கிப் பிடித்தான். அவன் கிழவன்.
ன் வாலிபன். பெரும் சிரமத்துடன்
க்குக் கொண்டு வந்து போட,
ம் பக்கத்து வயலில் வேலை செய்து
ண்டிருந்தவர்கள் ஓடி வந்து சூழ,
க்கு ஆள் அவனைக் காலைப் பிடித்
கரகரவென்று சுழற்றி முதலுதவி
டுத்தும், சீனிவாசலிங்கத்தின்
ன மூச்சு போனதுதான்.

செய்தி கேட்டுப் பதறி
ந்தார்கள் தந்தை குஞ்சிதபாதமும் மனைவி சீதாலட்சுமியும். உயிரற்றுக் கிடக்கும் கட்டிளங்காளையான மகனை மடியில் இழுத்துப் போட்டுக் கொண்டு கதறிய போது, இதே போல் ஒரு சம்பவம் வெகு காலத்துக்கு முன் நிகழ்ந்த மாதிரி அவருக்குத் தோன்றியது. திடீரெனப் பதறியவராக, "ஓய் கணக்கப்பிள்ளை! இன்னிக்கு என்ன தேதி?" என்றார். எப்படிப்பட்ட சமயத்தில் என்ன கேள்வி என்று நினைத்துக் கொண்டபோதிலும் கணக்கப்பிள்ளை, "தை—மூணுங்க. ஜனவரி பதினெட்டு," என்று தெரிவித்தார்.

"அடிப்பாவி! நீ கொடுத்த சாபம் தேதி பிசகாமல் பலிச்சுப் போச்சே!" என்று தரையில் விழுந்து கதறினார் குஞ்சிதபாதம். தஞ்சாவூர் பெரிய வீதியில் நடந்த அந்த விபத்து, அப்போது கூடவே இருந்த கணக்கப் பிள்ளைக்கும் ஞாபகம் வந்தது. அதே ஜனவரி பதினெட்டு!

குஞ்சிதபாதம் அதற்கப்புறம் அதிக நாள் உயிரோடு இருக்கவில்லை. பேரப் பிள்ளை ராமநாதனை வருடி வருடிக் கண்ணீர் விட்டபடியே இறந்து போனார். இறக்கு முன்பு, மருமகளிடம், "குழந்தையைப் பத்திரமாய்ப் பார்த்துக்கம்மா," என்று குழறக் குழறச் சொல்லி விட்டுக் கண்ணை மூடினார்.

சீனிவாசலிங்கத்தின் மனைவி சீதாலட்சுமி நல்ல மனோதிடமும் சுதந்திரப் பாங்கும் கொண்டவள். இந்தத் தஞ்சாவூர் ஜில்லாவே வேண்டாம் என்று தீர்மானித்து விட்டாள். நில புலன்களையும் வீடு வாசல்களையும் விற்றாள். நகைகளைப் பணமாக்கினாள். லட்சக் கணக்கில் சேர்ந்தது. தன் தாய் வீட்டினரின் சகாயத்துடன் மதறாசில் புது மாம்பலத்துக்கு வந்து குடியேறினாள். அவளுடைய அண்ணன் ஒருவர் ஹைகோர்ட் வக்கீலாக இருந்தார். பணத்தை எப்படி எப்படியெல்லாம் இன்வெஸ்ட்மெண்ட் செய்து

குட்டிபோட வைக்க முடியுமென்ற வித்தைகளைக் கிட்ட இருந்து சொல்லித் தந்தார். மதுரையில் இரண்டு மூன்று பெரிய கம்பெனிகளில் ஷேர்களும், இருபது முப்பது வீடுகளும் வாங்கிப் போட்டாள் சீதாலட்சுமி. மகன் ராமநாதனைக் கான்வெண்ட் பள்ளிக்கூடத்தில் படிக்க வைத்து அருமையும் பெருமையுமாக வளர்த்தாள். பிராக்டிகலான பெண்மணிதான் என்றாலும், தன் கணவன் இறக்க நேர்ந்த விபத்தும், மாமனார் புலம்பிய புலம்பலும் அந்த ஜனவரி பதினெட்டு என்ற குறிப்பிட்ட தேதியும் அவள் நினைவிலிருந்து மறக்கவில்லை. ஆனால் அவனை வண்டி வாகனங்களில் போகக் கூடாதென்று தடுப்பது அபத்தமாயிருந்தது. அவனுடைய அந்தஸ்துக்கு நடந்தா போக முடியும் பள்ளிக்கும் கல்லூரிக்கும்?

ராமநாதன் ராஜதானிக் கல்லூரியில் எஃப். ஏ. படிக்கும்போது முதல் முறையாக அவர்கள் குடும்பத்தில் கார் வாங்கினார்கள். சீதாலட்சுமி எவ்வளவோ தடுத்துப் பார்த்தாள். மகன் கேட்கவில்லை. தினம் அவன் வெளியே கிளம்புகிற போதெல்லாம் வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருப்பாள் சீதாலட்சுமி. முதலில் கொஞ்ச நாள் டிரைவர் போட்டிருந்தான் ராமநாதன். பிறகு தானே மோட்டார் ஓட்டக் கற்றுக்கொண்டு

விட்டான். அம்மாவையும் அழை
துக்கொண்டு சுற்று வட்டார
துள்ள க்ஷேத்திரங்களுக்குப் போ
வந்தான். மெதுவாகவும், எச்சரிக்
யாகவும் அவன் ஓட்டுவதைக் க
சீதாலட்சுமிக்கு ஆறுதல் ஏற்பட்ட

ராமநாதன் பி. ஏ. மு
தான். சும்மா இருக்கக் கூடாதெ
கந்தசாமி கோயிலண்டை ஒரு
தளைப் பாத்திரக் கடை நடத்தி
பிரமாதமாய் முன்னேறியது. ஐ
வியாபாரத்தில் கொட்டி முழ
கொண்டிருந்த சண்முகவேலர்
பெண் ராஜம்மாவை அவனு
கொடுக்க முன் வந்தார். செ
நகரமே திரண்டு வந்தது அந்தத்
மணத்தைப் பார்க்க.

அன்று மாமனார் நி
மாதிரியே இன்று சீதாலட்சு
நினைத்தாள்— இனிமேல் தன்
ளைக்கு எந்த அபாயமும் நே
என்று. காசிக்கு க்ஷேத்ராடனம்
பட்டவள் அங்கேயே ஒரு காய
வந்து காலமாகி விட்டாள். ர
மாவும் ராமநாதனும் காசிக்கு
ஈமக் கடன்களை முடித்து வி
திரும்பினார்கள். அப்போது ரா
கர்ப்பமாக இருந்தாள்.

சீதாலட்சுமியைப்
மனஉறுதி ராஜம்மாவுக்கு கிடை
குடும்பத்திலே துர்மரணம்

பாலைக் காய்ச்சாதே!



ராஜஸ்தானிலிருந்து சமீபத்தில் இங்கு வந்திருந்த எங்களது குடும்ப நண்பர்கள், அங்கு சாதாரணமாகக் காணப்படுவதாகக் கூறிய சில செய்திகள்:

1. நம் ஊரில் குதிரை வண்டிகள் மாட்டு வண்டிகளைப் போன்று, ராஜஸ்தானில் ஒட்டக வண்டிகள் உண்டு; பாலைவனங்க
ளில், மட்டும் செல்ல அல்ல—சாதார
கிராமப் புற வண்டிகளின் உபயோக

2. ஒரு முறை நீர
கிட்டதட்ட 24 நாட்களுக்கு மேல்
தாக்குப் பிடிக்குமாம்.

3. நம் ஊரில் ஆட்டி
கப்படுவது போன்று, அங்கு ஒட்டக
விற்கப்படுகிறது. இதற்குப் பெ
வயதான ஒட்டகத்தையே பயன்படுத்

4. இப்போதும் கிரா
களில் பெண் பார்க்கச் செல்
குடும்பத்தில் எத்தனை ஒட்டகம்
என்று கணக்கெடுப்பார்களாம்.
அக்குடும்பத்தின் பொருளாதா
நிலையை யூகித்துக் கொள்ளலாம்

5. ஒட்டகத்தின் பா
சாமல் பச்சையாகத்தான் குடிக்
மாம்; காய்ச்சினால் பால் மு
தைப் போன்று திரிதிரியாக

—எம். எ. அப்

…பிரிட்டிஷ் பார்லிமெண்டில் ஒரு வேடிக்கை
…ன முறை பாரம்பரையாக அனுசரிக்கப்படுகிறது. ''பட்
…ட் கூட்டம் இன்றுடன் முடிவடைய வேண்டும்'' என
…ானமேயே திட்டமிட்டுவிட்டார்கள் என்றால் அன்று
…வு 12 மணிவரை கூட்டம் நீடிக்கும். அப்போதும்
…டத்தை முடிக்க இயலவில்லை என்றால், பார்லிமெண்ட்
…லில் உள்ள கடிகாரம் சரியாக 12 மணிக்கு நிறுத்
…படும். கூட்டம் முடிந்தபிறகுதான் கடிகாரம் மறுபடி
… இயங்குமாம்! அதாவது பார்லிமெண்ட் ஹால்
…க்குப்படி குறிப்பிட்ட நாளில் முடிந்துவிட்டதாக
…கப்படும்!
…ரம்: லண்டன் டைம்ஸ் —ஆறடியான்.

…டு என்று அவள் பராபரியாகக் …ரவிப் பட்டிருந்தாள். கணவன் …நாதனிடம் கேட்டபோது, ''அதெல் … பாட்டிக் கதை! சும்மா இரு.'' …று சொல்லி விட்டான்.

அவன் ஒரு குஷாலான பேர் . ஒருபக்கம் பாத்திரக் கடையைப் …த்தபடியே இன்னொரு பக்கம் ரேஸ், … என்று புறப்பட்டான். கொஞ்சம் …பானமும் உண்டு என்று கேள்வி. …ல் ராஜம்மா கண்ணால் பார்த்தது …யாது. உள்ளுக்குள் அவளுக்குத் …க்கென்று இருந்தது. வீட்டில் …ாவது மனிதர்கள் கலகலவென்று …ந்து கொண்டேயிருந்தால் தான் …க்கு ஒரு தெம்பு ஏற்படும்போல் …ந்தது. கர்ப்பமாக வேறே இருந்த … இன்னும் பயந்து கொண்டிருந் . இதற்காகவே கோயம்புத்தூரி …ந்து தங்கை பாரதியைத் தன்னு … அழைத்து வைத்துக் கொண்டிருந் . அவள் கணவன் கோயம்புத் … ரொம்ப ஏழ்மை நிலையில் …து வந்தான். தன்னிடம் வந்து …கும்படி ராஜம்மா அவளைக் கூப் …தும் அவளுக்கு ஏகப்பட்ட சந் …தம். அக்காவுக்கு மட்டுமல்ல, …வின் கணவனுக்கும் நாயாய் …த்தாள். ராஜம்மாவும் அவளைத் …குச் சமமான எஜமானி போல …ல் சகல விதமான அந்தஸ்தும் …த்து வைத்துக் கொண்டிருந்

ஒரு நல்ல நாளில் ராஜம்மா … கல்யாணம் பிறந்தான். தங்கை … ஒரு மாதம் வரை ஒத்தாசை … இருந்து விட்டுக் கோயம்புத்தூர் …விட்டாள். அவளைப் பிரிந்த போது ராஜம்மா அழுதே விட்டாள். தங்கைக்குத் திருநாவு என்ற மகன் பிறந்தான். ராஜம்மா ஏராளமாய்ச் சீர் செய்தாள்.

ராமநாதன் சற்று நல்லவனாகி விட்டான். மகன் கல்யாணத்தைப் பெரிய இங்கிலீஷ் பள்ளிக்கூடத்தில் சேர்த்தான். பள்ளிக்கூடம் இல்லாத நாட்களில் தன்னோடு கடைக்கு அழைத்துப் போனான்.

கல்யாணத்துக்கு நாலு வயதாகியிருந்தது. ராமநாதன் தன் சினேகிதருடன் காஞ்சிபுரத்துக்குக் காரில் போயிருந்தான். சினேகிதரின் கார். சினேகிதர்தான் ஓட்டிக் கொண்டு சென்றார். ராமநாதன் தான் கார் ஓட்டுவதில்லை என்று மனைவிக்கு வாக்குக் கொடுத்திருந்தான்.

திரும்பி வரும்போது திடீரென்று அந்தச் சினேகிதருக்குத் தோளில் ஒரு வலி ஏற்பட்டது. ஸ்டியரிங்கை அப்படி இப்படித் திருப்பினால் வலி உயிர் போயிற்று. வண்டியை நிறுத்தி, ''ராமநாதா, இந்தா நீ பிடி,'' என்று சொல்லி இறங்கி வந்து இந்தண்டைப் பக்கம் ஏறிக் கொண்டுவிட்டார். மனைவிக்கு வாக்குக் கொடுத்திருக்கிறோமே என்பது அந்தச் சமயத்தில் ராமநாதனுக்கு ஞாபகம் வரவில்லை. ''நீ பேசாமல் ரெஸ்ட் எடுத்துக்கொள்,'' என்று சொல்லி விட்டு ஓட்டலானான்.


சென்னையை நெருங்கிக் கொண்டிருந்த சமயம் வழியை அடைத்துக்கொண்டு முன்னால் ஒரு லாரி போய்க் கொண்டிருந்தது. ராமநாதன் எவ்வளவோ ஹாரன் பண்ணியும் அவன் ஸைட் கொடுக்கவில்லை. கொஞ்சம் குறுகலான

இடைவெளி கிடைத்ததும் ராமநாதன் ஓவர்டேக் பண்ணினான். எதிரில் வெகு வேகமாய் ஒரு மோட்டார் பைக் வந்து கொண்டிருப்பது அப்புறம்தான் தெரிந்தது. அவன் மீது மோதாதிருப்பதற்காகப் பயங்கரமாய்க் காரை ஒடித்தான். சாலையோரத்தில் இருந்த புளியமரத்தில் மோதி. . .

ஒரு நாள் பூரா ஜெனரல் ஆஸ்பத்திரியில் உயிருக்காகப் போராடிய பின் இறந்து விட்டான் ராமநாதன்.

அவனுடைய ஈமக்கிரியைகளுக்காக வந்திருந்தபோதுதான், மூன்று தலைமுறையாக இருந்து வந்த அந்தச் சாபத்தைப் பற்றி, கிராமத்திலிருந்து வந்திருந்த அருணாசலம் தாத்தா ராஜம்மாவிடம் சொல்லி எச்சரித்தார். ''உன் குழந்தை கல்யாணத்தைக் கண்ணுக்குள் வைச்சுக் காப்பாற்றணும்மா. . .'' என்று ரொம்பவும் புத்தி சொல்லி விட்டுப் போனார்.

ராஜம்மா அந்த ரகசியத்தை யாரிடமும் சொல்லவில்லை. முக்கியமாகப் பிள்ளை கல்யாணத்தின் காதுக்கு எட்டி விடாமல் பார்த்துக் கொண்



சின்சினாட்டி (வட அமெரிக்கா)யில் கென்னர் ப்ராடக்ட்ஸ் என்ற பொம்மைக் கம்பெனி பேபி அலைவ் (Baby Alive) என்ற பொம்மை தயாரித்திருக்கிறது. அமோகமாக விற்பனையாகிறது. இந்த பொம்மைக் குழந்தையின் வாயில் உணவுப் பொருள்களை ஊட்டினால் அரைத்து மென்று விழுங்குகிறதாம். உண்மைக் குழந்தையைப் போலவே குறிப்பிட்ட நேரம் கழித்து மலஜலம் கழிக்கிறதாம். ஆனால் வெறும் புண்டாகாத, நாற்றமற்ற பொருளாக!

—வாஷிங்டன் போஸ்ட்டிலிருந்து
ஜெ. கே. ஜெயகரன்

டாள். 'காரிலே போகாதே,
லிலே போகாதே' என்று ம
எச்சரிக்கை செய்வாள். கல்யா
துக்குச் சிரிப்பு வரும். தன் அப்பா
விபத்தில் காலமானது அவனு
தெரியுமாகையால் அதே போல் த
நேர்ந்து விடக் கூடாது என்று அ
கவலைப்படுகிறாள் என நினைத்துக்
டான். ''எனக்கு எதுவும்
அம்மா. கவலைப்படாதீங்க. . .''
சொல்வான்.

இதற்குள் கோயம்பு
லிருந்த தங்கை பாரதியும் செ
குக் குடியேறிவிட்டாள். அவள்
வன் இறந்து விட்டான்.
பிள்ளை திருநாவு கல்யாணத்தை
வயதில் சின்னவன். ஆனால்
கல்லூரியில் ஒரே வகுப்பில்தான்
துத் தேறினார்கள். இருவரும் நெ
சினேகிதம். ராஜம்மாவுக்கு அது
லாயிருந்தது. கல்யாணம் எங்கே
லும் திருநாவுவும் பாடிகார்ட்
போகுமாறு ஏற்பாடு செய்து
டாள். இருவரும் ஒரே சம
பட்டம் வாங்கினார்கள்.

''அம்மா, நானும் தி
வும் ஒரு பிளாஸ்டிக் தொழி
ஆரம்பிக்கப் போகிறோம்,'' எ
ஒருநாள் கல்யாணம்.

எக்கச்சக்கமான ப
வைத்துக் கொண்டு என்ன
தென்று தெரியாமல் விழித்துக்
டிருந்தாள் ராஜம்மா. ஆகவே
ஷமாய் அனுமதியும் மூல
கொடுத்தாள்.

சின்ன அளவில் ஆர
கிடுகிடுவென்று பெரிதாகி வி
அவர்கள் பாக்டரி. பிளாஸ்
கெட், பொம்மை, டம்ளர்,
கேஸ் இப்படி விதவிதமான
களில் உற்பத்தி செய்து மார்க்
மூழ்க அடித்தார்கள்.

''பெரியம்மா . . .
பக்கெட் எப்படி? நாங்களே
செய்தது. இந்த சூட் கேஸ் எ
என்றெல்லாம் திருநாவு கொண்
காட்டுவான். ''நல்லாயிருங்கட
படியாச்சும்,'' என்று ஆசீர்வா
ணுவாள் ராஜம்மா.

கல்யாணத்துக்கு
தைந்து வயதாகிற சமயம் அ
தப் பழைய சாபம் இருதயத்
யத் தொடங்கியது. 'அந்த

றன், இந்தத் தொழிற்சாலைக்
பாகிறேன்' என்று அவன் புறப்
போதெல்லாம் அவள் மூச்சுத்
வாள். ஒரு திருமணம் பண்ணி
விடலாமா என்று எண்ணு
ஆனால் அவனையும் அவ
மாமியாரையும் போல
பெண்ணும் இளம் வயதில்
விட்டால்... என்ற பயம் அவனை
வைத்தது.

"அம்மா. : .நான் பம்பாய்
றன், நாளைக் காலை ஃப்ளைட்
என்றான் கல்யாணம்.

"எதுக்குடா தம்பி சும்மா
சுத்தறே?" என்றாள் ராஜம்மா.

"ஆல் இண்டியா பிளாஸ்
மானுபாக்சரர்ஸ் அசோசியேஷ
மாநாடு அம்மா. நான் ரிசப்ஷன்
மெம்பராச்சே?"

"என்னவோப்பா. : .உன்
," என்று அப்போதைக்குச்
விட்டாள்.

ராத்திரி சாப்பிட உட்
போது தான் டைனிங்
க்கு எதிரே இருந்த காலண்
கவனித்தாள். ஜனவரி—17.
ஜனவரி பதினெட்டு! அதே
த் தேதி.

"கூடாது. . ..கூடாது. . ."
எழுந்து கொண்டு 'விட்டாள்
ாமலே. கல்யாணம் வெளியே
ந்தான். அப்படியே அவனிடம்
லும் பயனிருக்காது . . .
லாம் என்னம்மா மூட நம்
" என்று சிரிப்பான். . .

டெலிபோன் மணி அடித்

"பெரியம்மா. : .கல்யாணம்
" என்று திருநாவுதான் கேட்

சட்டென்று ஒரு யோசனை
து.

"திருநாவு: : : உன்னிடம்
க்கியமான விஷயம் பேசணும்.
ம் உடனே வரியா. ."

"கட்டாயம் வரேன் பெரி
" என்றவன் பத்து நிமிடத்துக்
ம் வந்துவிட்டான்.

அறைக்குள் கதவைத்
க் கொண்டாள் ராஜம்மா.

"என்ன பெரியம்மா, பதட்
ருக்கீங்க?" என்றான் அவன்.



மூளையைக் கசக்குங்கள்

1. தெரியும் என்பதின் எதிர்ச் சொல் கூறுக.

2. நாலு சக்கர வண்டிகள் ரிவர்ஸில் போகும். இரு சக்கரமுடையவை போகாது.

3. எலுமிச்சம்பழம்; ஊறுகாய்.

4. 'அம்மி' என்றுதான் சொல்வார்கள். அது தப்பு. அப்பா —'அப்மி' என்பதுதான் சரி.

"திருநாவு: : .இந்த வருஷம் கல்யாணத்துக்கு என்னவோ ஒரு கண்டம் இருக்குன்னு ஜோசியர் சொல்லியிருக்கிறார். விமானப் பிரயாணம் வேண்டாம்னு சொன்னார். நாளைக்குப் பம்பாய் போக ஏற்பாடு பண்ணியிருக்கிறான் அவன்.. எனக்கு மனசு தவிக்குது... எப்படியாவது அவனைத் தடுத்து விடேன். . ." என்று கெஞ்சினாள்.

திருநாவு யோசனையில் ஆழ்ந்தான். "ரயில்லே போகலாம்.. . .. ஆனால் நாளை சாயந்தரம் பம்பாயிலே அவன் இருந்தாகணுமே பெரியம்மா. ."

"ஏன் திருநாவு. . . அவன்தான் போகணுமா? நீ போயேன். . . இந்த வருஷம் பூரா அவனுக்குப் பிரயாணம் இல்லாமல் பார்த்துக் கொள்ளப்பா. . ." என்று ராஜம்மா அவன் கைகளைப் பிடித்துக் கொண்டாள். அவள் கண்களில் நீர் வழிந்தது.

"சே, சே. என்ன பெரியம்மா நீங்க... நான் நீங்க வளர்த்த பிள்ளையில்லையா? எனக்குக் கடமை கிடையாதா...நீங்க வருத்தப்படாமல் இருங்க. நான் பார்த்துக்கறேன். கவலைப்படாதீங்க . .." என்று அவன் அவள் கண்களைத் துடைத்துவிட்டான்.

அவன் கல்யாணத்திடம் என்ன வாதாடினானோ, என்ன சண்டை போட்டானோ, ஜெயித்தது அவன்தான். பம்பாய் மாநாட்டுக்குத் திருநாவு

மார்ச் மாதம் (7.3.78) செவ்வாய்க் கிழமையன்று ஜெனரல் ஆஸ்பத்திரிக்குப் போயிருந்தேன். சென்ற மாதம்தான் சிகிச்சை முடிந்து நான் அங்கிருந்து 'டிஸ்சார்ஜ்' ஆகியிருந்தேன். உடம்பு எப்படி இருக்கிறது என 'செக்அப்' செய்து கொள்ள ஒவ்வொரு மாதம் முதல் செவ்வாய்க் கிழமையன்றும் வரச் சொல்லியிருந்தார்கள். அன்று ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்திருந்தார்கள். அப்போது காலை எட்டு மணி.

மெதுவாக நான் மருத்துவமனை வராந்தாக்களில் நடந்து சென்றபோது நோயாளிகள் அத்தனை பேர்களும் காலை ஆகாரம் வராமல் பசியோடும் கவலையோடும் நின்று கொண்டிருந்தார்கள். 6'ம் நம்பர் வார்டு அருகே காலை ஆகாரச் சிற்றுண்டி வண்டிகளை நிறுத்தி வைத்திருந்தார்கள். அதைச் சுற்றி ஒரே கூட்டம். தட்டும் கையுமாக நடமாடக் கூடிய நோயாளிகளின் கூட்டம். நடந்து வர முடியாத சில நோயாளிகளை

'டிராலி'யில் வைத்துத் த
சில நர்சுகள் அவர்களு
ஆகாரம் வாங்கிக் கொ
நடமாடுவதற்குச் சிறிது
நோயாளிகள், ஒரு
ஆகாரத் தட்டுடனும், ப
'டிராலி'யைப் பிடித்துத்
வாறே, நடக்க முடியாத
களுக்கு உதவி செய்தார்க
காட்சியைக் கண்டு மன
போனேன்.

இறந்துபோன ஒ
லத்தை அவரது உறவி
ஸ்ட்ரெச்சரில் வைத்து ஒ
இழுத்துக் கொண்டு போ

''வேலை நிறுத்த
செய்ய ஒருவரும் இல்
என்று கண்கலங்க அவர்க
'மார்ச்சுவரி' அருகே உ
பக்கம் சென்றார்கள்.

இந்தக் காட்சியை
எவருக்கும் தெரியாமல் க
நீரைத் துடைத்துக் (

—

செல்வதென்றும் கல்யாணம் இங்கேயே இருப்பதென்றும் தீர்மானமாயிற்று.

மறுநாள் காலை திருநாவு விமானத்தில் புறப்பட்டான்.

ஆனால் சற்றைக்கெல்லாம் டெலிபோன் மணி அடித்தது.

டெலிபோனை எடுத்துக் கேட்ட பாரதி மறு விநாடி வீடே இடிந்து விழுகிற மாதிரி அலறினாள்; ''என்ன. . .விமான விபத்தா. . .திருநாவு. ...ஆமாம், என் பிள்ளைதான். . . போயிட்டானா? ஐயோ!''

மயங்கி விழுந்தவளைத் தாங்கிப் பிடித்துக் கொண்டாள் ராஜம்மா. நடந்துவிட்ட விபத்தின் பயங்கரம் அவளைக் கலக்கியது. ஒருகணம்தான். மறுகணம் தங்கையைத் தன் அணைப்பிலிருந்து உதறித் தள்ளினாள். ''துரோகி!'' அவள் வாயிலிருந்து சீறிக் கொண்டு கிளம்பிற்று உறுமல்.

''அக்கா. . .''

''சீ, அந்த உறவைச் சொல்லாதேடி, நாயே! கிளம்பு இந்த வீட்டை விட்டு. . .இந்த நிமிடமே போ வெளியே. . .''

''அக்கா. .நான் என்னக்கா செய்தேன்? என் பிள்ளையைப் பறி கொடுத்த மகத்தான துன்பத்தில் நான் இருக்கும்போது. . .''

''பாவத்தில்
ளோடி அவன்! இல்லாவி
இன்றைக்குப் பார்த்து—
னெட்டாம் தேதி அன்
கிறான்? பரம்பரை—
நடக்கிற மாதிரி ஏன் இ
அத்தானுடன் நீ பழகிய
நினைக்கவே எனக்குக் கூ
இருபத்தைந்து வருடங்
பாரதி வந்து தங்கியிருந்த
னுக்கு அவள் உபசா
ததும், அவர்கள் தல
நேரிட்ட சந்தர்ப்பங்களு
களும், பேச்சுக்களும்,
ஒவ்வொன்றும் கத்தை
கதை சொல்லின ராஜ

'போடி வெள
தங்கையின் பெட்டி
எடுத்து வெளியே எறி
னல் அடித்தது. ம
கொண்டிருந்தது. பா
கொண்டே தெருவில் இ

பாரதி உண்
செய்திருந்ததால் சாப
அல்லது சாபம் பலித்தத
புச் செய்துதானிருக்க வே
ராஜம்மா நினைத்தாளா
கும் இடிக்கும் மின்னலு
கும்தான் தெரியும்.